198

CERTIFICATE

Ref. No. E. P. AB/3/889

NATCHINTHANAI Vol. I

By

M. Arunasalam

Approved by the Director General of Education in terms of Section 19(A) of the code of regulations for assisted vernacular and bilingual schools and English schools published in the Ceylon Government Gazette of February 29th, 1952 for use as a library book.

E. P. A. Board
Malay Street
Colombo-2
30-3-1981

(Sgd.) Wilson Karunaratne
Secretary, E. P. A. Board

யா/ சென்ற ஆண்டு ரூ.க.

ST. ANNE'S R. C. SCHOOL
MANIPAY

உ

இந்த நூல்
அமரர் மு. அருணாசலம் அவர்களின்
— நினைவாக —
அன்னாரது அன்புத் துணைவியார்
செல்லம்மா அருணாசலம்
மக்கள்
வெதொண்டன்
நாகேஸ்வரி
உமாகேஸ்வரி
அருணோதயம்
ஆகியோரால் அன்பளிப்பு செய்யப்பட்டது





ANNE'S R. C. SCHOOL
MANIPAY

நற்சிந்தனை

(அரும் பொருள் உரையுடன்)

முதலாம் பாகம்



மு. அருணாசலம்
கொழும்பு

முதற்பதிப்பு 1978

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்

உரிமைபதிவு]

[விலை ரூபா 25-00
கலிக்கோ 30-00



மதிப்புரை

யாழ்ப்பாணம் சிவயோக சுவாமிகளால் உலகுக்கு அருளப்பட்ட நற்சிந்தனை எனும் நல்லமுதில் 'அப்பா பரமசிவம்' அன்று தொட்டு இன்று மட்டும் அடியேனுந் தேவரீரும் அத்துவிதமாயிருந்த விந்தைதனை யாரறிவார்? ''அப்பா பரமசிவம்'' என்னும் வரிகளால் அவரே தந்நிலையை உணர்த்தியுள்ளார். அந்த நிலையை உணர்த்தும் இப்பாக்கள், மணிவாசகனார் திருவாசகமோ மூவர் தேவாரமோ போன்று எம்முள்ளங்களை இறைவன் இணையடிகளில் ஒன்ற வைக்கும் சிறப்பு வாய்ந்தன. அவற்றை ஓதுங்கால் பொருள் தெரிந்து ஓதுதலும், இன்றியமையாதது. சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து ஓதுகின்றவர்கள், இறைவன் திருவடிக்கீழ் சச்சிதானந்தப் பெருங்கடலில் அமிழ்ந்தி இன்புறுவர் என்பது, அருளாளர்களின் ஆணைமொழி, ஆன்றோர் அனுபவமும் அதுவே. அருளாளர் திருவருள் மொழிகளை பொருளுணர்ந்து சொல்லுதல் வாழ்வைத் திருத்திப் பண்படுத்தும். எனவே, இவ்வுரையை உற்று நோக்கி, உணர்ந்துணர்ந்து துருகி, இப்பாடல்களைப் பாடிப் பாடி நம்மை மறந்து சற்று நேரமாகிலும் அவன் நமக்கு ஈந்த அந்தத் திருவடிப் பேற்றை அடைந்து அந்த அறியா அறிவில் ஆழ்ந்து கிடப்போமாக.

சுவாமி பிரேமாத்மானந்தா
தலைவர்
இராமகிருஷ்ண மிஷன்
(ஸ்ரீ லங்காக் கிளை)
கொழும்பு.

சிவமயம்

சிவதொண்டன்சபை

முன்னுள் தலைவரும், என்றென்றும்

சுவாமிகளுடைய மாணாக்கருமாக விளங்குபவரும்

முன்னுள் நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சின் நிரந்தரக்

காரியதரிசியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவருமாகிய

திரு ம. ஸ்ரீகாந்தா அவர்களின்

வாழ்த்துரை

கொழும்புத்துறையில் வாழ்ந்த எங்கள் ஞானப்பொருட் செல்வன்? அவர் முன் சென்ற தாயுமானவர் திருநாவுக்கரசர் போன்றும் தம் ஞானக்கதிரொளி உலகெங்கும் பரவச்செய்தே உலகினில் தொண்டாற்றினார்; அவருடைய ஞானகுரவன் உலகுக்கு ஓர் ஞானசூரியனாக அவருடைய உள்ளங் கவர்ந்த கள்வன். அந்த மாமணி முத்துடன் அளவிலாக் காதலுடன் இணைபிரியாத சிவசக்தி ரூபமாக நின்றே கதிரொளி பேர்ன்ற நற்சிந்தனை என்னும் இப்பாடல்களைப்பாடி ஒப்பற்ற இம் மணி மாலையை அவருடைய பர்தார விந்தத்தே ஒப்படைக்கிறார்; உலகெங்கும் இறைவனுடைய ஒளியைப் பரவச்செய்கிறார்; உருவில் திகழும் உலகியல் வாழ்க்கையை அறிவில் திகழும் ஞானப் பொருட்குவியலாக மெய்யன்பர் உள்ளங் கவரத் தருகிறார்;

ஸ்ரீ மு. அருணாசலம் அவர்கள் தம்மிளம் பராயத்திலிருந்தே எம் செல்வனுடைய தண்ணளிவாய்ந்த சக்தி சொரூபமான இயற்கையிலமர்ந்து வாழ்ந்து வந்தவர். இடைவிடாதே கொழும்புத்துறை ஆச்சிரமத்துக்குச் சென்றும் போதனாசிரியருடைய சிகிச்சையில் மாண்டு கிடந்தும் இறைவனுடைய உலகியல் சித்திரத்தின் ஞானச் சுவையைச் சுவைத்தவர். அந்த இனித்த ஞானப் பொருட்சுவை கொண்டே அறிவே வடிவான இவ்வுரையைத்தருகிறார்; நற்சிந்தனை என்னும் மணி மாலைக்கு இவரே முதன் முறையாக உரைதருகிறார்; உலகுக்கு அறிவே

வடிவான ஞானப் பொருட் சுவையை ஊட்ட எத்தனிக்கிறார்; அதில் தன்னுடைய கல்வி அறிவும் ஞான சூரியனுடன் ஒன்று கூடிச் சுவைத்த ஞானப் பொருட் சுவையும் பொருந்திய வண்ணம் ஞானசூரியனுடனின்றே அருள்புரிய மற்றும் மெய்யன்பரும் தன்னைப்போல் சுவைத்துச் சுவைத்து இன்புறத் துணைபுரிகிறார்.

சுவாமிகளுடைய நற்சிந்தனையை நித்தம் பாடியும் வாசித்தும் சிந்தனை செய்யும் அடியரும் மற்றும் உண்மைக் சுாதலுடன் தம்மிறையை வழிபடும் மெய்யன்பரும் உரையுணர்ந்து இப் பாடல்களைப் பாடியும் வாசித்தும் இன்புறுவர்; மூஷிகவாகனன் ஞானக்கணபதிதுணை நிற்க ஊகித்தறியும் ஞானப் பொருட்களைச் சுவைத்தும் தம்மறிவினால் கண்டும் அவனுடைய பாதஞ்சேர அவனே உடனின்றருள் புரிவானுக. இவற்றை எமக்குத் தந்துதவிய அன்பனுக்கும் எம்மனமார்ந்த அன்பைச் செலுத்துவோம்;

கோண்டாவில்,
25-10-78

ம. ஸ்ரீகாந்தா

ஓம்

நூன்முகம்

சிவயோக சுவாமிகள் திருவடி வணக்கம்

"ஓம்நம சிவாயவென உருவேற்றுவோம்
உருகி யுருகிநாம் உணர்வவிழ்வோம்
வீம்பிடும்பை யகங்காரம் விட்டுவிடுவோம்
வேதாந்த வீட்டிலே குடியிருப்போம்
நாம் நாம் நாமென நடமிடுவோம்"

சிவன் செயலேயாக எல்லா உலகினிலும் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் எனும் ஐந்தொழிலும் மலமகள் அருட்சக்தி விளங்க அவனே உண்ணின்றியக்க இயங்குவன என்னும் உண்மையை நிலைநாட்டுவோம்.

"நல்லவிருளை நல்ல வொளியாக்குவோம்
ஆம்ஆம் நமக்கெல்லாம் ஆயவிடுமென்போம்
பஞ்சவர்ணப் பரிமேலே பவனிசெல்வோம்"

நான் நான் எனும் ஆணவ முனைப்பைத் தரும் ஐம்புலன்களையும் அடக்கி அவள் மலமகள் திருவருட்சக்தியுடன் கட்டியே பஞ்சவர்ணப் பரிமேல் பவனி சென்றே,

"பாரும் விண்ணும் ஒன்றுகப் பண்புசெய்குவோம்
ஆதாரமாறுக்கு மப்பாலே செல்வோம்"

பாரினிலே கூத்தப் பெருமானைப் பாடியுமாடியும் அவனேயாய் நின்று விழிநீர் பெருகப் பெருங்காதலுடன் யோகநாதன் நமக்கருளிய நற்சிந்தனை எனும் நல்லமிர்தை ஆயிரநாமமுடையான் தரும் அப்பொருளாகவே தம்மைக் கண்டு களிப்புறுவோம், நுண்பொருளாகிய நிலம் நீர் நெருப்பு, காற்று ஆகாயமாகிய ஐம் பூதங்களாலுமுண்டாக்கப் பட்ட நுண்வெளியில் 'சிவ சிவ' எனும் மாமறை தரும் 'சிவன் செயல்' எனும் மெய்ப்பொருளான விண்ணுடர் பெருமானை விண்ணவரான மெய்ஞ்ஞானிகள் சாஷி ஆமோதிப்பவன் தாங்குவோன் அநுபவிப்பவன் மகேஸ்வரன் சதாசிவன் எனும் அத்துவா மார்க்கங்களில் சித்தமௌனம் செயல் வாக்கெல்லாம் மௌனஞ் சுத்தமௌனமே அவர்பால் தோன்ற நற்சிந்தனை எனும் நல்லமிர்தம் அருளும் யோகநாதன் பாக்களின் இன்சுவையருந்தி

"அங்கே திருநடனங் கண்டு களிப்போம்
சூதான வெளியிலே சும்மா விருப்போம்
சுகம்சுகம் எந்நாளு முற்றிடாதோ"

"ஒப்பாரும் மிக்காருமில்லா வொருபொருளே
தப்பேது யான்செயினும் அப்பா பொறுத்தருள்வாய்
அப்பாலுக் கப்பாலா யாருமறி யாதவண்ணம்
ஆடுந் திருநடனங் காண வருள்புரிவாய்"

அப்பா பரமசிவமே! என்குருவே!

யோகசுவாமிகள் போன்ற ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், எனும் மூவரும் பாடிய ஏழு திருமுறைகளிலும் உள்ள கனிவையும் திருவருட்சுவையையும் எடுத்து அவை எவ்வாறு உயிர்த்துணையாக நின்றருள்கின்ற தென்று வித்துவான் திரு சொ. சிங்காரவேலன் M. A. கூறிய சிலவற்றை இங்கே தருகிறேம்: "உள்ளம் கனிந்தபோது அக் கனிவைக் கவிதையாக்குவோர் அருளாளர்கள். அக்கவிதைகள் நாம் எவ்விடத்தினின்று 'மலர்ந்தனவோ' அவ்வருட்கனிவோடு கமழ்வன: தம்மைப் பயில்வோர்க்கும் சொல்லிய பொருள் உணர்ந்து சொல்வோர்க்கும் அத்தகைய கனிவை அவைதாமும் வழங்குவன; அக்கவிதைகள் ஆழஉணர்தல் நம்வாழ்விற்கு உறுதுணையாகும் தன்மையுடையன; அவர்களடைந்த அநுபவங்களே நம் மாட்டும் நிகழ்த்தும் பெற்றியன அவ்வுயர் கவிதைகள். வாழ்வெனும் புயலிற் சிக்கி வழி தெரியாது மயங்கும் மனிதகுலத்திற்குக் கிடைக்கும் திசை காட்டிகள் அவை; வாழ்வின் துயரவெயிலால் வாடிக்கருகும் நெஞ்சங்கட்கு உயிர்த்தழைப்பை உண்டாக்கும் வானமழைத் துளிகள் அவை: காணும் உயிர்க்குலங்கள் அனைத்தினூடும் இறைவனைக் காணத் தூண்டும் உயிர் நெறி. ஆம் இந்தநெறியையே இவ்வருளாளர்களின் கவிதைச் செல்வங்கள் எடுத்துக் காட்டுகின்றன. தமிழ்ப் பெருமக்கட்கு இந்தப்பேறு வளமாக வாய்த்திருக்கிறது. பன்னிரு திருமுறைகளும் தமிழ் உலகிற்குக் கிடைத்துள்ள உயிர்க் கருவூலங்கள். ஞான பண்டாரங்கள் சைவத்திற்கு வாய்த்த இம்மூல பண்டாரங்களை அவ்வப்போது தஞ்சம் புகுந்தால் பெறும் பலன்கள் ஏட்டிலும் எழுத்திலும் அடங்காதன; அவை விண்ணின் நீங்கி விளங்கிய அறிவின் முன்னவன் திருவடிகட்கும் அவற்றையடைந்த அருளாளர் திருவடிகட்கும் நம்மையாற்றுப்படுத்துவன; ஆதலின் உயிர்த்துணை என்று நம்மாற் போற்றற ஒழுகத்தக்கன" ஆங்கிலத்தில் சிலர் கூறியவற்றையுந் தருகிறேம்.

"It is not mere emotionalism that we find in the bymns of these saints; It is a religion of universal brotherhood and serrvice. Where god as unified father and mother the lord of Kailas, is not seen on the distant peakbut in the form of every loving conple of living beings barnionising love and service" [Prof: T. P. M. Sixty first commemoration volnme (1961. P. 45)]

If the reality of law connot be appreciated without a study of latin; if science cannot be fathomed without a study of English Frevch and Gernan; if monotheisom cannot be understood without a study of soviet langucaes, if Philoso phy anb grammar cannot be admired without a study of sanskrit the depth of the literature of hymns or soulastirring songs cannot be blumbed except through tamil, when we read the poems of the tamil saints, thanks to their poelry we experience (perhaps it were in a dream their mystie com-munion with god (பக்தி) (Prof T. P. M.)

கைலாசத்தில் வீற்றிருக்கும் அம்மையும் அப்பருமான சிவபெரு மானே, உயிரில் பொருள் உயிரும் பொருள் அத்தனையிலும் சிவசக்தி ஐக்கிய வடிவினராய் நாம் கண்டு அன்பே சிவமெனப் பணியாற்றுவ தால் வளரும் பக்தி [பேராசிரியர் T. P. M. கூறிய பின்பந்தியில் நாமகண்ட] பக்தி தமிழ் தேவாரங்களையும் மற்றும் யோகசுவாமியின் நற்சிந்தனை, திருமூலர் திருமந்திரம் முதலியவற்றையும் உளையுணர்ந்து ஓதுவதால் வரும் பக்தி, மேலிடத் தம்மை மறந்து பொறை நிலை யெய்தி தன்மை ஆண்ட அப்பொருளேயாய் அந்தச் சொற்பநேரமா குதல் தியானத்தில் ஆழ்ந்திருப்பது வழக்கம்; யோகசுவாமிகளும் அவற்றையே கூறுகிறார்: ''சிவபக்தி மாத்திரந்தான் மனிதனைப் பாக் கியவானுக்கும்: மற்றவையனைத்தும் பிரயோசனமற்றவை, ஆகை யால் இடைவிடாது சிவத்தியானம் பண்ணு, பயப்படாதே; வெற்றி புன் சொந்தம்'' அத்தகைய பக்தியே காட்டில் வாழ்ந்த கண்ணப் பரைப் பக்தி சிரேஷ்டனுக்கியது.

யோகசுவாமிகள் தம் பாட்டுக்களை அத்துவித மார்க்கத்தையே சான்று எழுதியுள்ளார், நீதிநூல் இறைநூல் எனும் இருவகைத்தாய்ப் பிரிக்கப்படும் இப்பாட்டுக்களில் இருபகுதியும் அத்துவிதப் பொருளையே யுணர்த்துவன. நீதிநூல் இறைவனை உணர்ந்தறியும் முறையைத் தரும்; இறைநூல் அத்துவிதமாக இறைவனும் அவரும் ஒன்றுபட்ட அந் நிலையில் நின்று பாடியுள்ளார்.

ஆதியந்த மில்லையென்ரு னெங்கள் குருநாதன்
அதுவேநீ பென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சோதிமய மென்று சொன்னு னெங்கள்குரு நாதன்
சுட்டிறந்து நில்லென்ரு னெங்கள்குரு நாதன்
சாதிசமயமில்லா னெங்கள்குரு நாதன்
தானுய் விளங்குகின்ரு னெங்கள்தரு நாதன்
வாதியருங் காணவொண்ணு னெங்கள்குரு நாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தா னெங்கள்குரு நாதன்

[இசில் மற்றும் பாட்டுக்களும் அவையே]

''அத்துவா மார்க்கமாறும் அகற்றியே அடியனேனைத்
தத்துவா தீதனுக்குஞ் சற்குருதாள்கள் வாழ்க (293)
என்னோடு வேருயெண்ணி இடர்ப்பட வேண்டாமென்று
தன்னைத்தந் தாண்டுகொண்ட சற்குருதாள்கள் வாழ்க (312)

அன்பே சிவமெனும் மெய்யடியார் என்பே யுருக வெடுத்தெடுத் தோதியும் ஓதியுணர்ந்த அப்பொருளைத் தாமே தம் வாழ்க்கையில் சிந்தித்தும் அவ்வழி நின்றும் ஈற்றில் அப்பொருளாகவே தம்மைக் காணும் மெய்யன்பர்க்கு அருள் கொடுக்கும் நோக்கே நற்சிந்தனை எனும் நல்லமிர்தமாம் மெய்ப்பொருள்.

வேலைத்தூக்கி விளையாடுந் தெய்வமேயென்
வினைப்பகைதீர் தெய்வமே.

[உரைமழுப்படை வினைதீர்த்தல் 768]

காலைத்தூக்கி யாடும் கண்ணுதல் தந்த
கதிர்காமத் தையனே கழலடி நம்பிவந்தேன். [வேலை]

[உரை;- காட்டில் களியாடலும் நாட்டில் நயனகுருவும். 730]

எங்கெங்குந் திருமுகம் எங்கெங்குந் திருவிழி
எங்கெங்குந் திருச்செவி எங்கெங்குந் திருக்கரம்
எங்கெங்குந் திருவடி எங்கேநீ அங்கே நான்
ஈசனே கதிர்காம வாசனே முருகேசா (வேலை) (384

வேலனைக் கொண்டாடுவோம்
வேறுதெய்வம் நாடிடோம்
காலனைக் காலாலுதைத்தோன்
பாலனுக்கே நாமடியோம். (வேலனைக்)

கோலாகல மயிலின் ஏறும்
குழந்தை வேலன் பாலர் நாங்களே
ஞாலமுள்ள நாளும் யோகநாதன் சொன்ன சொல்லைக் கொண்டு
காலையிலும் மாலையிலும் கழலடியே போற்றிடுவோம். (வேலனைக்)
(385)

பருநிலையில் மாயாகாரியப் பொருட்களாக ஐம்பொறிகள் தரும் நீர்க்குமிழி போலும் நிலையற்ற பொருட்களெல்லாம் இறைவனின் பேதமற்ற ஒரு மொழியெனும் பொருளே. உண்மை முழுதும் எனும் ஓம் எனும் மெய்ப்பொருளே. நுண்பொருளான நிலம், நீர், நெருப்பு, கார்ற்று, ஆகாயம் எனும் ஐம்பூதமும் ஒடுங்கும் நுண்வெளி *Electro-magnelic field SPace*]; யேசுநாதர் ''அ'' எனும் சத்தத்திலிருந்தே

உலகந் தோன்றிற்று என்கிறார். 'அ' எனும் சத்தம் தோன்றுமிடமே நுண்வெளி; பிருதுவி ஆகாசம், சல ஆகாசம் எனும் இரண்டுஞ் சேர்ந்த ஒரே ஆகாசம் விஞ்ஞானிகள் கண்ட இந்த நுண்வெளியை மெய்ஞ்ஞான அறிஞர்கள், பாச புந்தக் கயிறு அற, ஐம்புலன்களும் தம்முள் ஒடுங்கினராய் மௌனமே உருவான அகத்தே மாயா காரியப் பொருட்களனைத்தினையும் ''பேதமில்லதோர் பெருந்துறைப் பெருவெள்ளம்'' என்று மாணிக்கவாசகர் தருவது போல் ஒரே 'சிவன் செயல்' என்னும் ஒரு உண்மைப் பொருள் எனக் கண்டனர்; யோகசுவாமிகள் 'ஒரே பொருள்' என்று தருகிறார் காண்க:

ஏகனநேகனு யுற்றவெம் மீசனைத்
தேகம்போ முன்னர்த் தொழு'' (578)

''ஐயப்படாத வகத்தின ரெல்லார்க்குந்
தெய்வத்தா லெய்துந் திடம்'' (579)

மேலும் சரம், அசரம் எப்பொருளிலும் அம்மையப்பரே நின்றியங்குகின்றார்; 'சிவசக்தி' ஐக்கிய வடிவினராய் விளங்குகின்றார்;

Prof:- T. P. M. ''The unfield Father and Mother the Lord of Kailas is not seen on the distant peakut in the form of every loving conple of living beings..... ... harmonising love and service''

என்று சொல்லும் உண்மையை சுவாமிகள் தருகிறார் காண்க:

அண்ட சராசரம் அவன்திரு மேனி
அண்ட சராசரம் அவன்றிரு ஆடல்
அண்ட சராசரம் அவனே ஆகும்
அண்ட சராசரம் முழுதும் அதிசயம். (105 நற்சிந்தனை)

திருமூலர் சரம், அசரம் இரண்டிலும் ஈசன் இருப்பதைத் தருகிறார்:

அணுவுள் அவனும் அவனுள் அணுவும்
கணுவற நின்று கலப்பதுணரார்
இணையிலி யீச னவனெங்கு மாகித்
தணிவற நின்றுன் சராசரந் தானே. (திருமந்திரம் 2010)

மேலும் யோகசுவாமிகள் தருவதைக் காண்க:

தேங்காயி லிளநீர் சேர்ந்திடுந் தன்மைபோல்
தெய்வ மிருக்குதடி - குதம்பாய்
தெய்வ மிருக்குதடி (நற்சிந்தனை 684)

குரும்பை வெறும் இளநீர் உள்ளது. முற்ற முற்றத் தேங்காய் தோன்றியும் முற்றியும் செத்தலாகி வெறுந் தேங்காயுமாகக் காட்சி தருகிறது; இளநீர் வற்றுது போகில் வெயிலில் காயவிட்டால் வற்றி

விடும்; உபநிடதத்தில் பாலில் நெய்கலந்திருப்பது போன்று இறைவன் சரம் அசரம் எப்பொருளிலும் வியாபித்திருக்கிறான் என்னும் உண்மையை மாணிக்கவாசகர் தருகிறார் காண்க.

"கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்"

(சிவபுராணம் திருவாசகம்) (வரி 46 - 48)

கன்னல் = முலைக்காம்பு "கன்னல் கறந்த பாலொடு" என்று பொருள் கொள்க. "உடன் கறந்த பாலில் நெய்யெங்கேயிருக்கிறதென்று விஞ்ஞானிகளுங் காணலரிது. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரும் பாலைக்காய்ச்சி திரையிட்டுத் தயிராக்கி அதைக்கடைந்து வெண்ணெய்யை எடுத்தால் பின்னர் அந்த வெண்ணெய் நீரில் கரையாது புறம்பாகவே கிடக்கும். அத்தகையதே பாசபந்தக்கயிறு எரிந்த இறைவன் பாதார விந்தஞ் சேர்ந்த ஜீவன் முத்தன்; உலகினில் ஒன்றுகவும் இருவினையுஞ் சேராது வேறுகவும் வாழ்வான். யோகசுவாமிகளும் அத்தகைய ஜீவன் முத்தனே; கர்வியுடித்துப் புறம்பு காட்டாமலும் வெளியே வேட்டியுடனே சாதாரண மானிடர்போல் சீவித்தார். சிவகுரு வேண்டுங்கால் மலைமகள் திருவருட்சக்தியின் வழி தோன்றுவான்; அருவாகவும் அருவுருவாகவும் உருவாகவும் நின்றருள்தருவன்; மலைமகள் திருவருட்சத்தி தரும் பொருளையறிந்த சிவகுரு சாதகனுக்கேற்ற ஒரு மந்திரம், சிவன்செயல், சிவாயநம, என்பது போன்ற ஒரு மந்திரத்தை உபதேசிப்பர். அதைச் சிவகுருவே உண்ணின்று இயக்க அதைச் சாதகன் சாதித்தும் உபாசித்தும் பொறைநிலையெய்தி சமாதியடைவான்;

திருவம்மானை ஒன்றில் [ஆறுபாட்டும் வாசிக்க]

ஆட வெடுத்த அடித்தா மரைபரவி
வேடம் பொலிய விரைந்துவந்த மெய்யடியார்
தாடலைமேற் கொண்டு சற்குருவைப் போற்றி
நாடறிய வென்னை நல்லதொண்டு செய்யவைத்த
கோடறியாத் திருவடியே கிளத்துதுங்காணம்மானாய் (755)

[உரை காண்க] என்று தன்னைப் போன்று சட்டநேர்பட, சிவகுரு உண்ணின்று வழிகாட்ட [ஞானகுரவன் பதிகங்காண்க] யோகசமாதியடைந்தும் சீவன் முத்தனைகப் பிறப்பறுத்ததைக் கூறுகிறார்;

மேலுங் காண்க திருவம்மானை ii இரண்டில் [ஐந்து பாட்டுங் காண்க]

இருவினையின் கட்டழித்து எல்லாஞ் சிவன்செயலாய்க்
கருதும் படிவைத்த கருணைநிறை ஆசான்றன்

திருவடியைப் பாடிநாம் சிந்தித்துச் சிந்தித்து
உருகி யுருகி யுணருவோ மம்மானுய் (762)

முன் இரண்டு பாட்டுக்களையும் அடுத்த நான்காம் பாட்டையும் படித்து உரைகளைக் காண்க; ஐந்தாம் பாட்டு

உன்மத் தங்கொண் டொருவனைப் போற்றுேன்றிச்
சின்னத் தனமான வார்த்தைகளைச் செப்பியென்றன்
கன்மனசை முற்றுய்க் கரைத்த குருநாதன்
என்னத்த னிகினயடியை ஏத்துவோ மம்மானுய் (765)

நாம் கொண்டுள்ள புனித வாழ்வும் நேர்மைக்கும் மாறுக ''நீநெறி கண்டுளம் நின்மலனுகுமே'' எனும் திருமூலர் உண்மை விளங்க ''நீதியோ நீதியோ'' என நாயன்மார்களுடைய சரித்திரத்தில் நாயன் மார்கள் தங்கள் கன்மனங்கரைந்து உருகியழுதலுக் கிடமான நிகழ் ச்சிகளையுங் காண்கிறேம். சின்னத்தனமான வார்த்தைகள்பேசி சிவகுரு அநவாகவும் உருவாகவும் நின்று சிவன் செயல் எனும் உண்மையை (91 இலும் மற்றும் பாட்டுக்களிலும் காண்க) வலியுறுத்தச் சாதகன் உண்மையைக் காண்கிறன். அந்த இனையடிகள், சிவசக்தி வடிவின் உண்மையையே (Prof: T. P. M.) எடுத்துரைத்தார். இந்த உண்மைய உணர்வினுலுணர்ந்தறிந்த ஞானி பின் அறிவே வடிவாய் அது உள்ளங் குடிகொள்ள பொறை நிலையெய்திய சாதகன் சமாதிய டைவன். (திருவம்மானை II முழுதுங் காண்)

ஆயிரமுகமு மொருமுகமாய்க் காணும் முறையிலோ அல்லது எழியனேற்குச் சிவன் செயலின் உண்மையை மேலும் மேலும் போதிப் பதற்கோ சுவாமிகள் தாம் கால் முறிந்து சிகிச்சைக்கு யாழ் அரினர் வைத்தியசாலையில் படுத்திருக்கும் போது எனக்கு உபதேசித்ததைக் கூறுகிறேன் ''உன்னுடைய மகளின் பெயர் என்ன'' என்று வினவினர்: ''சிவன் செயல்'' என்றேன்; அதே இந்த விபத்து; நான் ஒன்றுஞ் செய்யவில்லையே'' என்று சொன்னர் செல்லப்பாச் சாமியார் அருவாக

''உன்மத் தங்கொண் டொருவனைப் போற்றுேன்றிச்
சின்னத் தனமான வார்த்தைகளைச் செப்பியென்றன்
கன்மனசை முற்றுய்க் கரைத்த குருநாதன்''

என்றும் பொருள் கொள்ளலாம்.

மேலும் அவர் நற்சிந்தனையில் பல பல உண்மைகளை எடுத்துப் புகட்டுகிறார்; பொருள் அட்டவணையில் காணலாம்; சிலவற்றை எடுத்துக் காட்டுவோம்.

''இளமை இன்பத்தில் இச்சை வைத்திடில்
எழுமை யுந்துன்பம் எய்துமெய்துமே'' [140 உரைகாண்க]

இளமை என்பதால் அநுபவமில்லாது நிஷ்காமிய கர்மம் செய்யாதும், காமிய கர்மமே புரியும் இளமையையே இங்கு குறிக்கிறார்; காமிய கர்மம் புரிவதால் சிற்றின்பமாகிய நஞ்சை உண்டு, அது வாழ்வில் சீரணித்து இருவினையின் பயனை இன்பதுன்ப மும்மலமும் பிறவிக்கடலுந் தரும், என்றுந் துன்பம் என்கிறார். மாறாக அநுபவ முதிர்ந்த அறிஞன் இன்பந்துன்பம் விளைவிக்தமென உணர்ந்தோன்; ''எல்லாஞ் சிவன் செயல்'' என்றும் சிருஷ்டியின் மாமாயா விளைதத்தின் நுண்ணிய வடிவினை, எண்ணிகள், தாம் எவ்வண்ணம் தோன்றி நம்மை கர்மத்துக்கு ஈடாக்குவதை யுணர்ந்தோன் அவற்றை விலக்குகிறான். நிஷ்காமிய கர்மம் புரிகிறான். சிற்றின்பமாகிய நஞ்சு உட்சென்று சீரணிப்பதில்லை, இறைவன் கறைக்கண்டனாக விளங்குகிறான்.

சீரார் மேனியுடையாய் விடையாய் தில்லைப் பதிக்கரசே
பாரார் விண்ணோர் பரவும் பரனே, பஞ்சாட் சரப்பொருளே
காரார் குழலாள் உமையின் கணவா, கறைசேர் கண்டத்தாய்
நீரா யுருகி நிற்க வருள்வாய், நிமலாவுன்றன் அடைக்கலமே

[நற்சிந்தனை உரை காண்க 796]

''நிஷ்காமிய கர்மம் புரியும் அறிஞர், சரம், அசரம், எப்பொருளிலுமுள்ள அம்மையப்பராம் விண்ணுடார் பெருமானை [820 உரை காண்க] விண்ணோர் பரவியேத்தும் பஞ்சாட்சர சோதியை, ''உமையின் கணவன் கறைசேர் கண்டன்'' என்று பரவி ஏத்தித் தொழுகிறார்,

இலங்கை அரக்கர்கோன் இராவணன் இறைவனை வணங்கிச் சித்திகள் பெற்றவன்; ஆணவமுனைப்புக் கொண்டவன்; கைலாய மலையைப் பெயர்த்தெடுத் திலங்கைக்குக் கொண்டு செல்ல முயன்றனன். இறைவன் பெருவிரலா லூன்றினராம். பத்துத்தலைகளும் நெரிந்து வருத்த முற்று இறைவனை வணங்க ஆணவத்தை அடக்கி அருள் கொடுத்தான் எம்பிரான்:

''இலங்கை வேந்தன் எழில்திகழ் கயிலை
எடுப்ப ஆங்கிம வான்மகள் அஞ்சத்
துலங்கு நீண்முடி ஒருபதுந் தோள்கள்
இருபதுந் நெரித் தின்னிசை கேட்டு
வலங்கை வாளொடு நாமமுங் கொடுத்த
வள்ளலை பிள்ளை மாமதி சடைமேல்''

(சுந்தரர் 7-68-9)

யோகசுவாமிகள் நான் எனும் ஆணவமுனைப்பை மறைத்துக் காட்டியும் இருவினையுஞ் சீரணிப்பதால் வினைப்பய னனுபவித்தும் ஆணவமுனைப்புங் கொண்ட இராவணன் ''இஞ்சி சூழ் இலங்கை இராவணன் ஏத்திப் போற்றித் தொழுத'' என்று பாடுகிறார் காண்க; இஞ்சி சீரணிக்கச் செய்யும் தன்மையுடையது.

அஞ்சும் மூன்றும் அறிந்திட வேண்டுமே
ஆணவத்தை ஒழித்திடல் வேண்டுமே
இஞ்சி சூழும் இலங்கையில் ராவணன்
ஏத்திப் போற்றி இசைத்த முதல்வனே
நஞ்சு கண்டத்தில் கொண்டவ! நம்பனே
நம்மை யாளுவான் நண்ணும் முதல்வனே!
பஞ்சின் மெல்லடிப் பரமகுருபர!
பாவியேனையு மாட்கொண்ட சிங்கமே!

(உரைகாண்க 21)

எங்கள் வளநாடு. புத்தபிரான், ஸ்ரீ இராமகிருஷ்ணர் செல்லப் பாச்சாமியார், யோகசுவாமிகள், ஞானசம்பந்தர், சுந்தரர், திருநாவுக்கரசர் முதலியோர் நிர்விகற்ப சமாதியில் ஆழ்ந்து கிடந்து பின் இரண்டாம் பிறப்பாகப் பிறந்து சீவன் முத்தர்களாக சாயுச்சிய பதவியடைந்து உலகுக்குத் தொண்டு செய்தார்கள். அவர்கள் இரண்டாம் பிறப்பெடுத்து வாழ்ந்த அந்நாடே புவனலோகம். அதையே சுவாமிகள் எங்கள் 'வளநாடு' என்றழைக்கிறார். (Twice born) என்று ஆங்கிலத்தில் கூறுவர். பாட்டுக்கள் 83—87 காண்க.

கட்டுநமன் கிட்டரிய நாடெங்கள் நாடே
கன்றுமன வெப்பொழிக்கும் நாடெங்கள் நாடே
வெட்டவெளி யாரேடும் நாடெங்கள் நாடே
மீதான வெற்புடைய நாடெங்கள் நாடே
பட்டப்பகல் போலொளிரும் நாடெங்கள் நாடே
பகலிரவு தோன்றுத நாடெங்கள் நாடே
மட்டுப்படா மயக்கமெலாந் தீரவெனை ஆண்டான்
மலர்ப்பாதங் காட்டிவைத்த தெங்கள்வள நாடே

(85 உரை காண்க)

தாண்டகம்: திருநாவுக்கரசர் ஆறுந்திருமுறையில் புக்கு திருத்தாண்டகம், நின்ற திருத்தாண்டகம் எனுந் தலைப்பில் பலபதிகங்கள் பாடியுள்ளார். சிவயோக சுவாமிகளும் சில பாட்டுக்கள் புக்கு நின்ற என்னும் இரண்டிலும் பாடியுள்ளார். அவற்றை ஆராய்வோம். புக்க திருத்தாண்டகம் என்பதால் மெய்யன்பன் ஆடல் அம்மை தில்லை நடனத்தில் புகுதலையே குறிக்கிறார். யோகசுவாமிகளே தம்பாட்டில் அவற்றைத் தருகிறார். திருநாவுக்கரசரும் அவ்வாறே தம்பாட்டில் தருகிறார்.

"பூத கணஞ் சூழ வருவார் போலும்
மின்போலும் இடையுமையாள் பாகர்போலும்
விடையேறிப் பணிகொள்ளும் விகிதர்போலும்"

- நற்சிந்தனை -

என (844) இல் ''ஐம்பூதங்களும் ஓசைவடிவின அம்மையப்பரை தில்லைத்தரிசனமாகக் கொடுக்க விடையேறிப் பணிகொள்வர்'' என்று ஆத்மன் தில்லைநடனத்துக்குள் புகுதலைக் கூறுகிறார். அப்பர் சுவாமிகள் தருவதைக் காண்போம்.

''பொங்கு வெண்ணீறணிந்து பூதஞ்சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே'' என்று (6-2-1)

இல் ''அஞ்ஞான இருளைச் சுட்டெரித்து வெண்ணீறணிந்து மோன மெய்திய அகத்தினராய் ஐம்பூதங்களையுமே பேதமற்றதும் பொது நடங்காட்டும் விண்ணுலகாகப் பூதஞ்சூழ நிட்டைகூடித் தில்லைச் சிற்றம்பல தரிசனத்தில் ஆத்மன் புகுவார்'' என்று தருகிறார். [845--உரை காண்க] இருவரும் நின்ற திருத்தாண்டகமும் பாடியுள்ளார். யோகசுவாமிகளின் திருத்தாண்டகம் I ஏழுபாட்டுக்களும் புக்கு திருத்தாண்டகம். திருத்தாண்டகம் II (845) நின்ற திருத்தாண்டகம் என்றே கூறலாம். இங்கே ஆளான புடன் ஒன்றே துரியாதீதத்தில் எஞ்சி மீதானவெற்பாக அந்த ஐந்தெழுத்துச் சோதியில் (85 உரை காண்க) கிடக்கும்; இதில் ஆழ்ந்து கிடக்கும் ஆத்மன் விஞ்ஞானமயகோசத்தில் திரும்பவும் முன்மனத்தில் கிடந்த விண்ணுலக நினைவுகள் ரூபமாகத் தோன்றி அம்மையப்பரான உலகியல் ரூபம் அறிவுப் பெரு வெளியில் தோன்றும். இங்கே தன்னியல்பில் ஒருவனுய் நிற்கின்ற இறைவன் உலகை நோக்கி நிற்கும் பொதுவியல்பில் தானும் தனது சத்தியும் என இரு திறப்பட்டு உலகெலாமாகி நிற்பன்; பிறவுருவுந் தம்முருவுந் தாமேயாகி நிற்பன். இதே நின்ற திருத்தாண்டகம் [845 உரை காண்க] அப்பர் சுவாமிகள் நின்ற திருத்தாண்டகம் தருகிறார் காண்க.

''இருநிலனுய்த் தீயாகி நீருமாகி
இயமான னெயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயிருகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றுகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே'' (6 - 94 - 1)

''உலகியல் வடிவினனுய் இன்றுகி நாளையாகி நிமிர்புன்சடையடிகள்-அறிவுப்பெருவெளியில் நின்றவாறே'' என்கிறார். யோகசுவாமிகளும் இவ்வாறே நின்ற திருத்தாண்டகத்தைத் தம் தாண்டகத்திலேயே தருகிறார் காண்க.

இருநிலனோ டிரவிமதி யாயினான் காண்
என்னிதயம் நீங்காத இறைய வன்காண்
அரும்பொன்காண் அம்மைகாண் அப்பன் றான்காண்
அன்றுமின்று மென்றுமப் படியுள் ளான்காண்
தருமமே யுருவாகச் சமைந்த வன்காண்
தன்னொப்பா ரில்லாத தத்து வன்காண்
அருவன்கா ணுருவன்கா ணருவுருவ மாய
அன்பன்கா ணவனுயிருக் குயிரா னானே

(நற்சிந்தனை 845)

பிணிக்கு நல்ல மருந்து

வறுமைப் பிணிக்கு மருந்தொன் றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே (380)

வினைப்பயனெனும் அம்பலத்தே வினைமுதலாம் முதல்வன் ஆருயிர் தன்னை அவரவர் வினைப்பயனுக் கேற்றவாறு உடலத்தில் பொருத்தி வைத்து அவரவர்க்கேற்ற நிகழ்ச்சிகளை உண்ணின்று இயக்கி வைப்பன்; ஆருயிர்தன்னை வினைத்தன்மையினின்றும் நீக்குவதே முழுமுதல்வனின் நோக்கு; இதே படைப்பு (380) இந்த உண்மையை மோனமெய்திய அகத்தினர் தம்மறிவினால் அறிதலே அம்மருந்து. சிவகுருவின் உதவி கொண்டிறியலாம்; சிவகுருவாக நல்லூர் முருகன் உருத்தாங்கி நின்று கொடுக்கும் மருந்து. கண்ணப்பர் போன்றும் பக்தி சிரேஷ்டர்க்கு திருக்காளத்தி அப்பன் போன்றும் எம்பிரான் அருவாக நின்று அருளினன்; பேதமில்லதோர் கற்பவித்த எம்பெருமானுடைய சிவானந்தப் பெருவெள்ளம், அருள்தர மோனமெய்திய அகத்தினர், பருநிலையில் மாயாகாரியப் பொருட்களில் காணப்படும் பேதம் விட்டொழிய எப்பொருளும் ''அணுவுள் அவனும் அவனுள் அணுவும் கணுவற நின்று கலப்பதுணரார் இணையிலியீக னவனெங்குமாகி'' என்னுமுண்மை விளங்க, நுண்வெளியாகி எங்கும் ஒரேதரத்தாய் விளங்கும் விண்ணார் பெருமானையே எப்பொருளிலுங் காண்பர். தம்மையும் யானாகிய வென்னையும் விழுங்கி வெறுத்தானாய் விளங்குந் தற்பரம்'' எனுமுண்மை விளங்கத் தற்பரனாகவே காண்பன்.

இந்த 'நல்ல அகமுடையானை' நல்லூர் வாசன் நல்லூரில் வந்து மருந்தை அருந்திய மாதவர், மெய்ஞ்ஞான உணர்ச்சியினாலே விண்ணார் பெருமானைக் கண்டு தரிசித்தவர் என்றுங் கூறலாம். (820, 737) உருவாக நல்லூர்ப் பதியில் முருகனைத் தம்பக்தி மேலீட்டினால் கண்டு தரிசித்து களிப்புறும் மண்ணுலகத்தவர்க்கும் அம்மருந்து வறுமைப்

பிணியைத் தீர்க்கும்; இங்கே ''மருந்து'' என்பது வியக்கத்தக்கது; ''நல்லூர்'' என்பதும் வியக்கத்தக்கது; நல்ல அகத்தினர், மோன மெய்திய அகத்தினர் கண்ணப்பர், மார்க்கண்டேயர் போன்றும் மோனமெய்தியோருடைய அகம்மலர்ந்து சிவானந்த வெள்ளம் பெருக முக்கட்பெருமானையே அங்கே காணும் அகத்தினர். இந்த அகமுடையார், பலதுறைகளிலும் 'சிவ சிவ' எனும் மாமறை தரும் 'சிவன்-செயல்'' எனும் மெய்ப்பொருளானவனை [நல்லூரில் வந்து அருந்திய மருந்தை] தாம் முதல் கொண்டுள்ள எண்ணம் பொறை நிலை எய்திய அகத்தே (682) கொழுத்து விளங்கத் தாம் கொண்டுள்ள பொருளுந் தாமும் ஒன்றுபடச் சமாதி எய்துவர். பெரிய புராணத்தில் நாயன்மார் தாம் தாம் கொண்டுள்ள நெறிகளை கடைப்பிடித்து, அதில் சமாதியெய்தி மெய்ப்பொருளானபெருமானைக்கண்டு ஈடேறியதை நாம்வாசித்தறியலாம். ஒவ்வொரு நாயனரும் ஒவ்வொரு கொள்கையைச் சாதித்தே கண்டார்கள்! ஆயிரமுகமுடைய அம்மையின் ஒருமுகம்; உலகினில் பலவீதிகளுள்ளன; அவற்றுள் ஒவ்வொருநாயன்மாருந் தாம் தம்மை மலமகள் திருவருள் சக்தியினாலே கண்டவீதியில் எம்பெருமானின் மெய்ப்பொருளானவனின் வெளிச்சத்தை ஆங்கே கண்டார்கள். மருந்தை அருந்தினர்கள் ஈடேறினர்கள்; வாழ்ந்தார்கள் வாழ்ந்தார்கள் வாழ்ந்தாரே. அடுத்த பாட்டைப் பாருங்கள்

வாசம் பொருந்திய மாமலர்ச் சோலையில்
வந்து குயில் கூவும்
மற்ற மாதரும் நாடக மாதரும்
வந்து மகிழ்ந்து வணங்குவார் (380)

''நல்ல அகமுடையாருடைய அகத்தே கொண்டுள்ள எண்ணம் பொறை நிலையெய்தி மலர்தலையே இறைவனுடைய ஒளி, பாவந்தேய்ந்த ஆன்மா ஆத்மனாக, இறைவனுடைய ஒளியாகிக் குயில்போல் ஞானப்பொருட்களைத்தரும், கூவும். ஆயிரமுகமுடையவள் மாதரும் நாடக மாதரும், கௌரிமனோகரி, லக்ஷ்மி, சரஸ்வதி (470) என்னும் பலதுறை மாதரும், வந்து அருள் தருவர்'' என்கிறார். அடுத்த பாட்டைப் பாருங்கள்

''வீதிக்கு வீதி வெளிச்சமும் அங்கே
வீற்றிருந் தாடவர்கள்
சோதிப்பிரகாச வேலனைக் கொண்டாடித்
துதிப்பதைப் பார்த்திடுவோம்'' (382)

''முன்பாட்டு 380 பொருளில் ஆயிர முகமுடையாளுடைய முகங்களுள் ஒருமுகம்; பல வீதிகளுள்ளன, அவற்றுள் ஒவ்வொரு நாயன்மாருந் தாம் தம்மை மலமகள் திருவருள் சக்தியினால் கண்ட வீதியில், எம் பெருமானின் மெய்ப்பொருளானவனின் வெளிச்சத்தைக் கண்

டார்கள்; மருந்தை அருந்தினார்கள்; ஈடேறினார்கள்; வாழ்ந்தார்கள்; வாழ்ந்தார்கள் வாழ்ந்தாரே'' என்பதைத் தொடர ஒவ்வொரு வீதியிலும் வெளிச்சத்தைக் கண்டவர்கள் களிப்புறுதலை புராணங்களிலும் கதைகளிலும் வாசித்தறியலாம். வேலன் தம் வேலால் இறைவன் மழுப்படையால் குத்திக் குத்தி தாம் உண்ணின்று இயங்கி ஆருயிர்களை வினைத்தன்மையினின்றும் நீக்கி (768) ஈடேற்றுவன், வெளிச்சத்தைக் காட்டுவன். வியக்கத்தக்க பொருள் மாணிக்கவாசக சுவாகளுந் தம் திருவெம்பாவை முதலில்

ஆதியு அந்தமும் இல்லா அரும் பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாளதடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டுஇங்கன
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய் (பாட்டு - 1)

ஆதியுமந்தமுமில்லா எம்பெருமான் வினைத்தன்மையினின்றும் ஆருயிர் தன்னை ஈடேற்ற உண்ணின்று இயக்குவன்: அம்மையின் ஆயிரம்முகங்களில் ஒரு முகமடையும் வழிபில் வீதியில் சாதகன் முன் திருவருட் சக்தியால் தம்மைக் கண்டு, வழி தெரியாதயர்ந்து நின்று, வன்செவியோ! வன்செவியோ'' என்று மூறை கூறி அழுகிறான் மாதே! பிறவிக்கடலில் திரும்பவும் திரும்பவும் என்னைத்தள்ளி பிறவிகள் வளருதே! என்னை நான் நிற்கும் வீதியில் என்னை நீ ஆண்டு என் தோழியே, நான் உன் முகத்தைக் காணலாகாதோ? வீதியில் வெளிச்சத்தை நீ காட்டாயோ? என்று தம் தோழியை, அம்மையைக் கேட்கிறார்.

ஞானசம்பந்தர் ''ஆணவ மூனைப்புக் கொண்ட இராவணனுக்கு ஆணவத்தை நீக்கியாண்டு அருள்புரிதலையும், வீதிதோறும் வெளிச்சத்தைக் கொடுப்பதையும்'' குறித்து முதல் திருமுறையில் பாடுகிறார் காண்க.
(1-47-8)

மலையெடுத்த வாளரக்க னஞ்சவொ ருவிரலால்
நிலையெடுத்த கொள்கையானே நின்மல னேநினைவார்
துலையெடுத்த சொற்பயில்வார் மேதகுவீதிதோறுஞ்
சிலையெடுத்த தோளினனே சிரபுரமேயவனே

தண்டபாணிதேசிகர் உரைதருகையில் ''மேதகு வீதி தோறும் தக்க வீதி; அதாவது அவர்கள் வாழ்கின்ற வீதி தோறும் சிலை எடுத்த வில்லைச் சுமந்து'' என்று வில்லாலே முப்புரமும் சென்று வெளிச்சத்தைக் காண அருள்கின்றனன்'' என்று தருகிறார், மேலும் யோகசுவாமிகள் - நல்லகமுடையான் நல்லூர் வாசன் காணும் ஞான ஸ்வாமி போன்ற வெளிச்சத்தைக் காட்டுகிறான்;

(370) "கானக் குறத்தி மகிழும் பாதா — காக்கும்
கடவுள் துதிக்கும் பாதா"
எனக்கும் உனக்கும் பேதமேனே
எடுத்துச் சொன்னல் போதம் போமோ
மணக்குஞ் சோலை நல்லூர் வாசா
வணங்கும் யோக சுவாமி நேசா" (என்றும்)

(378) அரிமருகா தருணமிதே
தாரும் உமது சரணபாதம்

சரணம்

பரவுவார்க் கருளுவாய் நீ
பரமசுந்தரு பானு
சசியோகவதி தரு புதல்விதனே
மணந்த குமாரசுவாமீ
மனமுவந்து மயிலேறிவா
சிவயோக சுவாமி நீடுவாழ்க வாழ்க வையம் வாழ்க
என்றும்

(379) நல்லூர் வாசனே நமவேலவா
நாராயணன் மருகா வரஸ்ரீ முருகா

அனுபல்லவி

வேத + உபதேச + நீவிபு வேதிய
வித்தியாதர விமலா கந்தாகுமர (நல்லூர்)

சரணம்

சித்திர மயிலேறு சந்திரா சத்தி தருமன்
தந்த்ரா முலே நோகல காரேனு
அந்தமில்லா ஸ்வர ஞானமு நீதரு
யோகசுவாமி வந்தனு சுலோக முவந்தருள் (நல்லூர்)

வீதி என்று பதிபலவான ஞான ப் பொருட்களைத் தருகிறார்; மேலும் (370) இல் கௌரி பாலகன் கானக் குறத்தி மகிழும் பாதன் என் கல்லால் நீழல் தளில் அறம் உரைத்தனைக் குறிக்கிறார்:

[370 உரை காண்க]

மேலும் தாம் அடைந்த பதவிகளையும் ஈற்றில் உடம்பை நீற்ற லையுங் குறிக்கிறார் காண்க

(466) இன்றிருளை நீக்கி யெழுந்த கதிரவன்போல்
அறென் னகவிருளைத் தீர்ப்பதற்குக் — குன்றுபோல்
வந்தா னெருவன் வளஞ்சேரும் நல்லூரில்
தந்தா னருளெனக்குத் தான் (அரு)

விளக்கம் கீழே 488, 489, காண்க

(467) அரும ருந்தொரு குருமருந்து
அடியார் கண்டு களிக்கும் மருந்து
"இருவினையைப் போக்கும் மருந்து
இன்பநிலையில் நிறுத்தும் மருந்து" (அரு)

(விளக்கம் "வறுமைப்பிணிக்கு மருந்து 380 முன்னே காண்க)

(488) "காலன் வலிதொலையக் காலெடுத்தான் றந்தருளும்
பாலன் வாழ்நல்லைப் பழம்பதியில் — கோலமுடன்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரென்றறிவா யடா"

குருவைத் தரிசித்ததையும் திருவருளினால் முன்னரே தம்மூடைய வினைப்பயனாக தாம் அடையப்போகும் பதவிகளையும் பிறப்பறுக்கும் நிர்விகற்ப சமாதியையும் தம் குரு அறிந்திருந்தாராம்.

(489) "உவமை கடந்த வின்பம் மெல்லார்க் குமுண்டு
தவஞ் செய்வார் தாமறிவார் தப்பார் சிவனருளே
நோக நெஞ்சுன் நோக்க நொடியளவி லேயின்பம்
தேக்கிற்றென் சிந்தை தெளிந்து"

மேலும் பாட்டுக்கள் (283 — 286) இல் ஞானகுரவன் செல்லப்பாச் சாமியார் தம்மை எவ்வண்ணம் ஆக்கினன் என்று பாடுகிறார்

"மார்க்கண்டேயரைப் போலே தம்மையுங் குருலிங்கம்
வந்து அடிமை கொண்டு ஆண்டாள்" என்று
"இந்த வளஞ் சேரிலங்கை வந்தலிங்கம்
எனையாண்ட குருலிங்கம் என்றுங்காப்பே" (116)

மேலும் தன்னுடனே இந்த உடம்பெடுத்த காரண சரீரத்தையும் சூக்கும சரீரத்தையும் அவற்றின் பாகங்களான மனமும் மற்றுங் கூடியவர்களும் ஒருங்கே மாண்டே தத்துவாதீதனை புருடன் தோன்றினன். என்னுமுண்மையை விளக்கியே

718 "என்னே டுடன்பிறந்தா ரெல்லாரும் மாண்டார்கள்
உன்னுறவே யல்லாம லோருறவுமில்லையடா"

என்று பாடுகிறார். துரியாதீதத்தில் தன்னுடைய எல்லாம் மாண்டு ஆளாகிய புருடன் ஒன்றே எஞ்சி நிர்விகற்ப சமாதியில் மாண்டு கிடந்தேனென்றும், பின் நின்ற திருத்தாண்டகத்தில் கூறிய வண்ணம் இறைவனே தன்னுருவும் பிறவுருவுமானன், என்று உலகமும் தானும் அவனேயாய் உண்டானதைத் தருகிறார். மேலும் அவர் முக்குணமும்

அழிந்து எண்குணத்தான் என்னையாண்டருளினன், என்று அந்தம் எண்குணங்களுங் கொண்ட அந்தவாணுளாசையான இரண்டாம் பிறப்பாக விளங்கும் இந்த உடம்பும் உயிரும் ஈற்றில் தானே முடிவதால் வாணுளாசையைத் தீக்கிரையாக்கினேன்'' என்றும் பாடுகிறார்காண்க.

(131) வாக்கால் மனத்தால் தொடர்வரி தானவன்
வாக்கால் திடம்பெற்றேன் அன்னே யென்னும்
வாக்கால் திடம்பெற்றேன் வாணுளாசையைத்
தீக்கிரை யாக்கினேன் அன்னே யென்னும்
(நற்சிந்தனை)

முக்குணங்களாலுண்டாக்கப்பட்டதே சூக்கும சரீரமும் ஸ்தூல சரீரமும் அதுமாண்டது (முன்118காண்க) எண்குணத்தானுடைய உடம்பே எஞ்சியது. இரண்டாம் பிறப்பெடுத்த இவ்வுடம்பு தானே அழியுந் தன்மையுடையது. திருமூலர் இவற்றை உணர்த்துகிறார் காண்க:

''வெளியில் வெளிபோய் விரவியவாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கியவாறும்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே (திருமந்திரம் 168)

மேலும் கண்ட பத்து பத்துப் பாட்டுக்களும் அவர் எவ்வாறு இந்த உடம்பை நீற்றினர் எனும் உண்மை தருகின்றன (726 — 735)காண்க; ஈற்றில் தாம் ஏகாந்த வீட்டில் பாடிப் பரவி அவன் பாதார விந்த மடைந்தேன் என்கிறார்.

(735) இரவுபக லற்ற ஏகாந்த வீட்டிலெனைப்
பரவிப் பணிய வைத்த பரமன் குருவாகிச்
சரண கமலமலர் தலைதனிலே வைத்தவனைக்
குரவு மலர்குறையாக் குளிர்நல்லை கண்டேனே

குளிர் நல்லை என்று கங்கைச் சடையான் எனும் அகத்தைக் குறிக்கிறார் காண்க. மேலும் பாவந்தேய்ந்த தன் ஆன்மா ஆத்மலிங்க விளங்க அதைக் குயிலே என்று அழைத்தும், அதுபோலவே சிவபெருமான் ஞானகுரவனை செல்லப்பாச் சாமியாராக உருத்தாங்கி நல்லூரில் போந்தான் என்று பாடுகிறார் காண்க:

(793) காதலாற் பாடிக் கசிந்துருகும் பூங்குயிலே
தீதெலாம் நீங்கச் சிவபெருமான் என்போலும்
பூதலத்தில் நல்லூரில் போந்தான் அவனையிங்கு
நீதேடி எங்கும் நினைத்துவரக் கூவாயே.

மேலும் காதலொடு அவனைத் தொழுவார்க்கு அவன் முத்திக்கு வித் தாகுந் ''தாதுபோலுமிலங்கைத் தலைவனே'' என்று பாடுகிறார் காண்க.

(801) வேத கீதத்தன் விண்ணவர் தம்பிரான்
சாதலொடு பிறத்தலுஞ் சார்கிலான்
காதலாற் றெழுவார் தங்கருத் துளான்
தாது போலுமி லங்கைத் தலைவனே'' என்கிறார். மேலும் அவர் தருவதைக் காண்க.

804 யோக நாதன் உரைத்த விசைத்தமிழ்
தாக மாகவே தான்புகல் வார்தமக்கு
ஆக வேண்டிய யாவுமாம் அந்தியில்
யோக நாதன் அடிமலர் உய்வரே

ஈற்றில் அவனையே நாம் போற்றுவோம்.

தன்னைத்தன்னை லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
எங்குந் தங்கும் உயிர்களுக்கெல்லாம் உயிர்க்குயிராம்
நாதனுக உண்ணின் றியங்கு மிலங்கையீசன்
யோகநாதனுக்கு மங்களம்
விரிபொழில்சூழ் யாழ்ப்பாணங் கோயில்கொண்ட
அத்துவிதப் பொருளுக்கு மங்களம்.

கொழும்பு
25-3-1977

மு. அருணாசலம்
உரையாசிரியர்

பதிக அட்டவணை

அடியர் 86
அடைக்கலம் அடைக்கலம் 154
அத்தன் சேவடி அடைய இன்பமே 105
அபயப் பத்து 429
அபயமைந்து 440
அம்மானே 165
அரியதில் அரியது ஆன்மா 119
அருமையான தெய்வம் 191
அலகில் பேரருள் ஆரறிவாரே 89
அறிமின் தெளிமின் 260
அன்பில்லேன் 506
அன்னைப்பத்து 173
இணையடி வாழ்க 124
இந்த ஆன்மா நித்தியம் 287
இல்வாழ்க்கை 329
இறைஞ்சவா என்மனமே 124
இறைவா உனக்கபயம் 287
இன்பதுன்பம் இவையே மாயை 39
இன்பம் முப்பது 35
ஈசனேநல்லூர் வாசனே 261
ஈசனே நல்லை வாசனே 317
உண்மை முழுதும் 418
உந்தீபற 147
உயிர் வருக்கக் குறள் 348
உய்ய வழி காட்டுவாய் 112
உறுதி மொழியிதனை அறிவீரே 392
உனைக்கூறும் வழியென்னே 409
உன்றன் அடைக்கலமே 453
உன் நினைவல்லால் இல்லை 397
எங்கனையாள் குருநாதா 209
எங்கள் குருநாதன் 1
எங்கள் வளநாடு 71
எங்குந் திருக்கூத்து 309
எல்லாம் அவன் செயலே இனியே 44
எல்லாம் அவன் செயலே 221
எல்லாம் நீயே 499
எழில் நல்லை வாசன் 179
எனக்கின்பமே வா 249
என் குருபர சிங்கமே 19
என்பின் வர் மனமே 113
ஏத்துக பொன்னடி 30
ஏன்றுகொள் ஏழையேனை 465
ஐயனே சற்குருநாதா 171
ஒரு சொல்லால் உளம் தூய்மை ஆச்சே 399
ஒழுக்கம் விழுப்பம் தரும் தம்பிமாரே 19
ஒற்றுமை இந்த ஊரிடை ஓங்குக 456
ஓலாட்டு 300
கடவுள் வாழ்த்து 319
கண்ட பத்து 402
கிழமை வணக்கம் 280
கிளிக்கண்ணி 270
குதம்பாய் I 375
குதம்பாய் II 380
குருபதத்தைக் கும்பிடுவோம் 67
குருபதத்தை மறப்பேனே குதம்பாய் 120
குரு மருந்து 286
குரு லிங்கம் 370
குழந்தை வேலன் 162
கூவாய் குயிலே 448
கூவு குயிலே I 144
கூவு குயிலே II 266
சங்கு 85
சரவண பவ குக 316
சர்வம் பிரம்ம மயம் 24
சற்குரு தாள்கள் வாழ்க 194
சிவதொண்டன் வாழ்த்து I 162
சிவதொண்டன் வாழ்த்து II 365
சிவதொண்டன் சீர் 385

சிவதொண்டன் சீர் தெரிமின் 387
சிவதொண்டனைத் தொழுமின் 388
சிவதொண்டர்க்கு விடுத்த வேண்டுகோள் 389
சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்கள் 141
சிவநாமஞ் சொல்லுவோம் 157
சிவநாமஞ் சொல்லித் தெளியோமோ 216
சிவத்தியானஞ் செய்திடுவோம் 69
சிவத்தைக் கண்டிடர் தீர்வது வீரமே 41
சிவனடிக் கன்பு செய் அனைத்துஞ்சிவமே 91
சும்மா இருந்தேனடி குதம்பாய் 371
சும்மாவிருக்கும் சுகமறிய வேண்டும் 82
செல்வக் குருநாதா 394
செழுமலர்த் திருவடி 313
சேவற்கொடியோன் திருவடியைச் சிந்திப்பீர் 256
சொல்லு சிவமே 231
சொல்லும் பொருளுமற்றுச் சும்மா இருந்திடடா 253
சொல்வாய் எனக்கேற்ற சொல் 166
ஞான குரவன் 181
தன்னையறிந்தால் தவம் வேறில்லை 32
திருத்தாண்டகம் I 478
,, II 487
,, வேறு 493
,, III 495
திருவடிவாழ்க 202
திருவம்மானை I 420
,, II 426
திருவுந்தியார் I 352
,, II 357
,, III 359
,, IV 364
,, V 367
தெய்வம் எல்லோர் சித்தத்திலுமுண்டு 25
தெய்வமிதுதானே 96
தேடி நின் திருவடியே 153
தேறித்தேறித் தெளிவதுந்தன்னையே 61
தொண்டர் நாமிகள் 14
முத்திக்கு வழி 95
முருகா நீ வா 80 A—259
மூனிசொன் மொழி 129
வந்தவல்வினை மாழும் சிவாயவே 47
வருக முருகா 242
வறுமைப் பிணிக்கு மருந்து 244
வாழ்க சிவனடி 390
வீரமாமயில் ஏறும் வேலவ 238
வேலனைக் கொண்டாடு வோம் 250
வேலைத் தூக்கி விளையாடுந் தெய்வம் 248
நடந்து போவோம் 257
ஸ்ரீ நடராசன் 140
நமச்சிவாயப் பதிகம் 459
நமச்சிவாயப் பத்து 467
நமச்சிவாய மாலை 473
நமச்சிவாயவென நாம் வாழ்குவமே 80
நல்ல மலர் 283
நல்ல மருந்து 315
நல்லூர் வீதியில் 264
நல்லூரான் திருவடி 240

நல்லூர் வாசனே 243
நல்லூர் முருகன் 247
நல்லூரான் கிருபை வேண்டும் I) 251
நல்லூரான் கிருபை வேண்டும் II) 296
நல்லூர்த் தேரடியில் நான் கண்டேன் 297
நல்லூரைக் கும்பிடு 258
நல்லைக் குருமணியை போற்றி 228
நல்லைப்பதிக்கரசே 289
நல்வரவு சொல்லு சிறு பல்லி 132
நாம் என்ன செய்ய வேண்டும் 207
நானுமவனே நீயுமவனே 347
நின்றுமிருந்தும் நடந்தும் நினைமின் 79
நீத்தார் பெருமை 326
நீயென்னையாளாயோ 438
நூதனமொன்றுமில்லை 445
பரமனை எங்கும் பார் 311
பார்மீதிலென்ன பயம் 294
பாலர் போலவே பாரில் வாழ்வரே 109
பெருமானைப் பார்த்துநின்றாடு மயிலே 212
பெரியதிற் பெரியது ஆன்மா 318
பொன்னடியைப் போற்றுதுமே 411
போற்றித்தெளி 333
போற்றி போற்றி சிவசிவ போற்றி 116
மரணம் பிறப்பில்லையடி குதம்பாய் 124
மலர் 401
மாலை 103
முத்தன்ன வாழ முயல் 265
வான் சிறப்பு 323
வேண்டில் வேண்டாமை வேண்டிட வேண்டுமே 55
வேல் வேல் 307







தாசனை யோகசுவாமி சாற்றும் பாவைக்
கேட்டுக்கி ருபைகூர்ந்து வாட்டந்தீர்க்க வா வா
ஈசனே நல்லூர் வாசனே வா வா

ஓம்



நற்சிந்தனை

1. எங்கள் குருநாதன்

1 என்னையெனக் கறிவித்தா னெங்கள் குருநாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள் குருநாதன்
அன்னைபிதாக் குருவானு னெங்கள் குருநாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள் குருதாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள் குருநாதன்
மூவருக்கு மறியவொண்ணு னெங்கள் குருநாதன்
நன்மைதீமை யறியாதா னெங்கள் குருநாதன்
நான்தானுய் விளங்குகின்று னெங்கள் குருநாதன்.

[ஒரு சொல்லால், பல சொற்களால் கூற இயலாத பொருள், அறிவே வடிவானது]

இந்த உடம்பை இயக்குவது உயிர், உயிரையறிவிப்பதும் இயக்குவதும் இறைவன், உயிரைக் கலைவடிவாகக் காணும்போது ஆன்மாவென்றும் கலைவடிவினன் மலப்பிணிப்பினின்றும் நீங்கியவன் ஆத்மனுகவும், சித்தாகாசத்தில் தோன்றும்; இவ்வாத்மன் பரவெளி மேற்கொண்டு பரமாகாசத்தில் பரமாத்மனுகவும் காணப்படுவன்; இந்தத் தற்பரன் சிற்பரன், ஆத்மனுகக் காணும் நிலை, 'பரமாத்மனுகக் காணும் அந்நிலை உள்ளங்கவர் கள்வனென்னும் ஜோதியில் கலக்கும் நிலை ஆகிய நிலைகளில், தன்னை, இந்த உடம்பல்ல, உலகினில் 'பரசிவ' வடிவாகத் தோன்றும் முழுதும் உண்மை வடிவான' பரமாத்மனே நீ என்று குருநாதன் அழைத்தான்; [எங்கள் வள நாடு ஞானகுரவன் எனும் பதிகங்களில் முழு விளக்கங் காண்க.] மாணிக்கவாசகர் திருவாசகத்தில் 'நமசிவய' என்று தொடங்குவதைக் காண்க; 'ம' எனும் எழுத்து மும்மலப் பிணிப்பைக் குறிப்பது;

'ந' என்பது சிவகுருவின் உதவி கொண்டு தூய அருளினால் மும் மலப் பிணிப்பை நீக்கும் சிவயோக வாழ்வு; 'ய' என்பதால் மும் மலப் பிணிப்பால் கட்டுண்டு கிடக்கும் உயிரும் 'வ' என்பதால் 'ந' எனும் வாழ்வினால் பாதாரவிந்ததையடைந்த ஆத்மனையும், (ஓசைவடிவினள்) 'சி' என்பதால் பரமாத்மனாக உலகினை அப்பால் பட்டவனாக நின்று இயக்கும் சிவனையும் குறிக்கிறது. 'சிவ சிவ' எனும் பதத்தால் பரமசிவனாக விளங்கும் சிவன், அவன் உலகினை இயக்க அப்பால்பட்டவனாக நின்று தன்னைக் காணும் சத்தி, அம்மை யையும் அவற்றைக் அறிவிக்கும் ஞானக்கண்ணுடன் அறியப்படும் 'ஓம்' எனும் உண்மைப் பொருளைத் தருகிறார். இவற்றையே 'இணையடி' என்தலை வைத்தான் எங்கள் குருநாதன் என்று சுவாமி கள் பாடுகிறார்: அம்மையையும் அப்பனையும், சத்தியும் சிவனுமாக விளங்கும் உலகினை அவற்றைத் தன்னுள் நின்று ஞானக் கண்ணாக விளங்கும் குருநாதனையும் ஒருங்கே ஏத்தி வணங்கி அன்னை பிதாக் குருவானவன் எங்கள் குருநாதன் என்கிறார். 'சி, வ' எனும் வடிவு விளங்கும் எண்குணத்தான் தன்னுள் நின்று இயங்க, புத்தி யாகிய கன்னிகையை பார்வதியாகிய அம்மையுடனின்று உலகினி லியங்கவே தன்னை அந்நிலையில் கண்டு, அவனியெல்லா மாளவைத் தான் எங்கள் குருநாதன் என்கிறார். (முன்விளக்கம்) 'ந' என்ப தால் விளங்கும்தூய சிவயோக வாழ்வால் மும்மலப் பிணிப்பை நீக்கி விட்டான் என் சிவகுரு, எங்கள் குருநாதன். 'நான்' எனும் ஆணவ மலப் பிணிப்பினால் பீடிக்கப்பட்ட மும்மூர்த்திகளும் அகத்தே ஆத் மனைக் காண நினைக்காமல் புறத்தே அகந்தையுடன் அலைந்தும் 'காணுத' பொருளே குருநாதனாக விளங்கும் பரம்பொருள்! பரம் பொருள் அப்பாற்பட்ட வனாக நின்று மூன்று தொழிலையும் புரிபவன், அப்பாற் பட்டவளாக நின்று அவற்றைக் காணு பவள் அம்மை, மும்மூர்த்திகளும் நான் இயங்குகின்றேன் என்று காண் கிறவர்கள். ''நன்மை தீமையற்ற உள்ளத்தே, தில்லைக்கூத்தைத் தரி சிக்கும் உள்ளத்தே, 'நீ நெறிகண்டுளம் நின்மலனாகுமே' என்னும் திரு மூலர் வரி விளங்கவே உள்ளங்கவர் கள்வனாக விளங்கும் இறைவன் யான் தானாய் விளங்குபவன் குடிகொண்டனன்'' என்று முடிக்கிறார்:

திருஞானசம்பந்தர் பரமசிவனாக வணங்கும் அம்மை அப்பரைக் காண்க:

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப் பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் உனை நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானிவனன்றே.

சிவானந்தலஹரியில் ஆதிசங்கரர் கூறுவதைக் காணுங்கள்; (க:க) ''கலிவடிவாகியவர்களும் சந்திரகலையைத் தலையில் அணிந்தவர்களும் ஒருவர்க்கொருவர் தவத்தின் பயன் வடிவாகியவர்களும் அடியார்களிடத்தில் அரும் பயனை விளங்கச் செய்பவர்களும் மூவுலகும் குறைவற்ற மங்களங்களை அருள்பவரும், ஆத்மனுபவத்தால் ஆனந்தக் களிப்புடையவர்களும் ஆகிய ''சிவசக்தி'' ஐக்கிய வடிவினற்கு என்னுடைய இந்த நமஸ்காரம் உரித்தாகட்டும். பரசிவ அம்மை அப்பர் வணக்கமே அது. தாயுமானவரும் இவ்வண்ணமே பரசிவ அம்மை அப்பரை வணங்குகிறார்: (க)

2. தேகம் நீயல்ல வென்று னெங்கள் குருநாதன்
சித்தத்திற் றிகழுகின்று னெங்கள் குருநாதன்
மோகத்தை முனியென்று னெங்கள் குருநாதன்
முத்திக்கு வித்ததென்று னெங்கள் குருநாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள் குருநாதன்
விண்ணும் மண்ணுமாகிநின்று னெங்கள் குருநாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள் குருநாதன்
சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள் குருநாதன்

தேகம் நீயில்லை நீ ஆன்மா (முன்பாட்டு 'என்னையெனக் கறிவித்தான்' விளக்கம் காண்க) சித்தத்திற் றிகழும் பேரின்ப உணர்ச்சிக்கு ஏதுவாய் எல்லாம் அவனேயாம் 'எல்லாம் அவன் செயலே' எனும் சக்தியின் இயல்பான உணர்ச்சியே ஆத்மனின் உண்மை இயல்பு, மற்றும் ஆணவ மலப்பிணிப்பினையே மோகம் செயற்கையே; இயல்பு அல்ல; சித்தத்திற் றிகழ்வது பேரின்ப உணர்ச்சியே, ''தேகம் நீயல்ல..... மோகத்தை முனியென்றுன்..... முத்திக்கு ... குருநாதன்'' என்கிறார் சுவாமிகள், இவ்வுண்மையை சிவஞானசித்தியாரில் காண்க,

நித்தமாய் அருவாய் ஏகநிலையதாய் உலகத்திற்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமலனுக்கோர்
சத்தியாய் புவன போகந்தனுகரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமுஞ் செய்யுமன்றே.

இம்மாயா மோகத்தை ஆன்மாவின் இயல்புக்கு மாறான இம்மாயா மோகத்தை ஒழித்துவிடு என்றே கூறுகிறார். முனிந்தே முத்திக்கு வித்து இடு என்கிறார் உடம்பின் இயற்கை மோகம்; ஆத்மனின் இயற்கை மோகத்தை முனிந்து உண்மையை நாடுதல்;

உயிர்க்குயிராம் நாதனின் அம்சமே ஆத்மன், அந்த ஆத்மன் தன்னைத் தானே அறியும் உண்மையறிவுள்ளது. மாணிக்கவாசகர் தருகிறார் காண்க:

"மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே ....."

என்ற இவ்வுண்மையைத் தருகிறார்: "கலையாக விளங்கும் உலகினை உணர்வினுல் உணர்ந்தறிந்த ஆன்மா, தற்பரன் யானுகிய என்னை விழுங்கி வெறுத்தானுய் நின்ற தற்பரன், திடத்தப் பொருளாக விளங்கும் மண்ணுலகும் எப்பொருளிலும் நாதவொலியாக விளங்கும் விண்ணுலகும் கலா ரூபமாகக் காணப்படும் தாரகையை சொரூபமாக விளங்கும் சைதன்யப் பொருளும் ஒன்றுகத் தோன்றும் பொருளே இறைவன்; எங்கள் குருநாதன் என்கிறார் சுவாமிகள்.

"ஏகனேக னிறைவனடி வாழ்க" என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். எப்பொருளிலும் வியாபியாக கலைவடிவாகவும் மாயை என்னும் கண்ணடிக்குள் பல பொருளாகவும் உலகியற் பொருட்களாக ஊனக்கண்களினுல் காணப்படும் பொருட்கள் தன்னகத்தே உள்ளும், புறம்பும் ஒன்றுக ஐயன் கலையாக தானும் அதனுள்ளே ஒன்றுக தற்பரனுகவும் மனத்தினில் உருவமைக்கிறான். உணர்வினுல் ஒன்றுக உள்ளத்தே தன்வயத்தனுகவே காணும் கலைவடிவான நிலை சுட்டுப்பொருள் சிற்றறிவினுல் காணப்படுவது, அறிவினுல் அந்த அறிவை யறிவதேயது, பேதமில்லதோர் கற்பளித்த பெருந்துறைப் பெருவெள்ளம், அண்டபிண்டங்களனைத்துமாக மாயையின் கண்ணடியில் பல பொருட்களாக விளங்குவன. மோகத்தை முனிந்தவனுடைய அகத்தே சைதன்யப்பொருளாக ஒன்றுக ஒருபொருளாகக் காண்பானுங் காட்சியுமாக விளங்கும் இறைவன்! என்ஞானகுரவனே என்கிறார். "சத்தியத்தைக் 'காண்பானுங் காட்சியுமான இறைவனை' காணவைத்தான்" என்றே இவற்றை முடிக்கிறார்.

இவ்வுண்மையைத் தாயுமானவர் தருகிறார் காண்க.

பாராதியண்ட மெலாம் படர்கானற் சலம்போல்
பார்த்தனையே முடிவில் நின்று பாரேதுதான் நின்ற
தாராலும் அறியாத சத்தன்றே அதுவாய்,
அங்கிருந் தெங்கிருந்தும் அதுவாவை கண்டாய்

பூராயமாகவு நீமற்றொன்றை விரித்துப்,
புலம்பாதே சஞ்சலமாப் புத்தியை நாட்டாதே
ஓராதே ஒன்றையுநீ முன்னிலை வையாதே,
உள்ளபடி முடியுமெலாம் உள்ளபடி காண.

(17 நிலைவொன்று 5)

ஆனவமுதே அயில் வேலரசே
ஞானகரனே நவிலத்தகுமோ
யானுகிய வென்னை விழுங்கி வெறுந்
தானைய நிலை நின்றது தற்பரமே,

மும் மௌனம் சாதித்து திருவருள்வழி நிற்கின் எல்லாம் உள்ள படி செவ்விதின் மோட்சவீடாக முடியும் இதே உண்மை; இதே சத்தியம்.

3. வாசியோகந் தேரென்ரு னெங்கள் குருநாதன்
வகாரநிலை அறியென்ரு னெங்கள் குருநாதன்
காசிதேசம் போவென்ரு னெங்கள் குருநாதன்
கங்குல்பக லில்லையென்ரு னெங்கள் குருநாதன்
நாசிநுனி நோக்கென்ரு னெங்கள் குருநாதன்
நடனந் தெரியுமென்ரு னெங்கள் குருநாதன்
மாசிலோசை கேட்குமென்ரு னெங்கள் குருநாதன்
மற்றுப்பற்றை நீக்கென்ரு னெங்கள் குருநாதன்.

மூன் பாட்டில் கூறிய சைதன்யப் பொருளான மோட்ச வீடு அடையும் வழி. பிராணயாமமெனுந் தேரில் ஏறி எங்கள் வளநாடு (83) எனுமந்த ஊரை அடையுங்கள்.

உரைநடை:

மற்றுப்பற்றை நீக்கென்ரு ன், வகாரநிலை அறியென்ரு ன்
வாசியோகந் தேரென்ரு ன் நாசிநுனி நோக்கென்ரு ன்
மாசில் ஓசை கேட்குமென்ரு ன் நடனந் தெரியுமென்ரு ன்
காசிதேசம் போவென்ரு ன் கங்குல் பகலில்லையென்ரு ன்.

[மட்டுப்படா மயக்கமெலாந் தீர வெனையாண்டான் எனும் பொருளே எங்கள் வளநாடு [பாட்டு (83) இல். காண்க] மற்றுப் பற்றை நீக்க கலை வடிவாக விளங்கும் உலகினைக் காணலாம். முன் பாட்டு ஈற்றில் காண்பானுங் காட்சியும் என்று விளக்கிய உண்மையேயிது. வகாரநிலை என்பதால் சத்திவடிவானரூபம், சிவனுஞ் சத்தியுமாக 'சி' 'வ' எனும் எழுத்துக்களால் அறியத்தரும் ரூபம்

களில் 'ய' என்னும் ஆன்மா மற்றுப்பற்று நீக்கியே தன்னை முன் கூறிய கலைவடிவாக விளங்கும் உலகில் தன்னை ஆத்மஞானக் காணும் பாட்டு (·க) இலும் ஞானகுரவன் பாட்டு (க) முரு கன் எனும் தொடரின் முழு விளக்கம் காண்க) ''வகார நிலையை அறிவினுலறிய மனமடங்க அகஞ் சிவலிங்க வடிவாக விளங்க பிரா ணயாமத்தால் நிட்டை கூடியே நிட்டையில், வகாரநிலையில் கண்ட தடத்தப் பொருளான தாரகையை இங்கு நிட்டையில் சைதன்யப் பொருளான உலகாசக் சாண்'' என்கிறார். இதை மாசில் ஓசை, மோட்ச வீட்டில் அதற்கு அறிகுறியான (775) சின்னங்களும் ஞானஒளி களும் கூடிய சிவரூபத் தரிசனம் தில்லைத்தரிசனம் என்கிறார். 'தில்லை நடனம் என்கிறார். சுவாமி சிற்பவானந்தர் இவற்றை 'சிவநடனம்' என்கிறார். இங்கே 'மயக்கமும் மறைப்பும் வடிவெடுத்து வந்த முய லகன் என்னும் அரக்கனை ஒருகாலால் மிதித்தே சிவதாண்டவம் நடைபெறுகிறது.' அடுத்தபடியாக காளியின் ஆட்டில் சிவபெருமா னையே மிதித்து காளி ஆடுகிறாள். மயக்கமும் மறைப்புமே உரு வெடுத்த மும்மலத்தினுல் கட்டுப்பட்ட ஆன்மா தன்னை உடம்பாக எண்ணிப் புரியுந் தொழில். இந்நிலையை மாற்றியே சிவநடனத்தில் தன்னைத்தானே கண்டு சுவாமிகள் இன்புறும் நிலையை வர்ணிக்கிறார் போலும். 'பகலிரவு' என்பனவற்றை எங்கள் வளநாடு பாட்டு (85) இல். காண்க. பாட்டு (66) விளக்கம்) [பாட்டு (1 - 10) விளக்கம் பின் வரும் பாட்டுக்களிலிருந்தே முழு விளக்கமும் அறியலாம் (3)

4. இருவழியை அடையென்ரு னெங்கள் குருநாதன்
எல்லாம் விளங்கு மென்ரு னெங்கள்குரு நாதன்
கருவழியைக் கடவென்ரு னெங்கள்குரு நாதன்
கட்டுப்படும் மனமென்ரு னெங்கள்குரு நாதன்
ஒருவரு மறியாரென்ரு னெங்கள்குரு நாதன்
ஓங்கார வழியென்ரு னெங்கள்குரு நாதன்
நிருமலனு யிருவென்ரு னெங்கள்குரு நாதன்
நீயேநா னென்றுசொன்னு னெங்கள்குரு நாதன்.

மேல் நோக்கிச் செல்லும் உயிர்க்காற்று கீழ்நோக்கிச் செல்லும். மேலே இருவழியாலுஞ் செல்லும் காற்று நிட்டை கூட மேலே வெளியேறாது நின்று, கீழ்நோக்கிச்சென்று மூலத்தீயை யெழுப்பும். பாசபந்தக்கயிறு அறுந்தமனம் அடங்கி, உள்ளத்தே ஒடுங்கவே நிட்டை கூடும். எழுந்த மூலத்தீ, அறிவுஞ்வாலை, மனத்தில் முன் னிருந்த நுண்வடிவான உலகம், எண்ணில் பலகோடி உயிர்கள் அத் தனையிலும் அருட்கண்ணுக விளங்கும் இறைவன், [தாயுமானவர் பாட்டு (3) இல் தருவதைக் காண்] அந்த அருவுருவாம் சதாசிவனைக்

கரைக்கும்: ''உன்னுமனம் கர்ப்பூரவுண்டை போலே கரைய'' என்னும் வாக்கியத்துக்கிணங்க, அந்த மனம் கரைய, தில்லை நடனம் காண்பான்: ஓங்கார மேடைமீது பாங்காக நிற்றலேயது. ஓங்கார வழியே இருவழியை யடைத்து நிட்டை கூடுவது. காலவெல்லையோ தேசவெல்லையோ யில்லாத உலகியல் நடனத்தை யாரறிவர்: ஒரு வருமறியார். பாசபத்தக் கயிறு எரிந்து விட்டது, திரும்பவும் கட்டுந் தன்மையற்றது, பிறவிக் கடலுக்கு அப்பாற் பட்டான்; கருவழியைக் கட்டிவிட்டான். (4)

5. திக்குத் திகாந்த மெல்லா மெங்கள் குருநாதன்
சித்தத்துள் நிற்கவைத்தா னெங்கள் குருநாதன்
பக்குவமாய்ப் பேணென்ரு னெங்கள் குருநாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்ரு னெங்கள் குருநாதன்
அக்குமணி யணியென்ரு னெங்கள்குரு நாதன்
அஞ்செழுத்தை ஓதென்ரு னெங்கள்குரு நாதன்
நெக்குநெக் குருகென்ரு னெங்கள் குருநாதன்
நித்தியன்நீ யென்றுசொன்னு னெங்கள் குருநாதன்.

அக்குமணி-உருத்திராக்க மாலை. [2-ம் பாட்டில் கருத்து காண்க-பக்கம் (4) இல் 'கலையாக விளங்கும் உலகினே' என்பதில் தொடங்கி பாட்டு முடியும் வரை காண்க] - எங்கள் குருநாதனுகி எழுந்தருளிய இறைவனே அம்மையுமப்பருமாக எத்திக்கிலும் எல்லாப் பொருளிலும் அப்பொருளின் இயல்பான ரூபமாகவே காலவெல்லையற்று 'சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே' யென்று மாணிக்கவாசகரால் அழைக்கப்படுவது போல் செறிந்து விளங்கும் உண்மைப் பொருளேயாவன்: அப்பொருளை உணர்த்தும் உண்மைப் பொருளை, நாதனைச் சித்தத்துள் நின்று தித்திக்க அருளினன் என்கிறார், இங்கே கலைவடிவாகக் காணும் உலகினையே பக்கம் (3) இல் பரசிவ வணக்கம் ஆதிசங்கரர் சிவானந்தலஹரியில் கூறியதைக் காணுங்கள், காண்பானுங் காட்சியுமொன்ருய் விளங்கும் நிலை (திருமூலர் தருவதை பாட்டு (22) இல் காண்க)

சங்கரர் கூறும் அம்மையையுமப்பரையும் அன்புடன் பேணி பாத சேவை புரிந்தும் தோத்திரஞ் செய்தும் உள்ளும் புறம்பும் ஒன்ருகக் காணப்படும் இறைவனை 'நீயே நான்' என்று (4-ம்) பாட்டில் கண்ட இறைவனை வணங்கியும் உருத்திராக்க மாலையை அணிந்தும் ஐந்தெழுத்தை ஓதியும் தன்னுள் 'நானே யவன்' என்று கண்டும் சிற்றறிவின்றி அறிவினுல் கண்டு ''எண்குணத்தான் தன்னுள் நின்று யான் இறைவனுகவே செயல்புரியு முண்மை விளங்க 'உலகினில் நடனம் புரியென்றே' குருநாதன் தன்னகத்தே நின்று செயல் புரிகிறார்'' என்கிறார் சுவாமிகள்.

சங்கரர் இவற்றை ''எங்கும் நிறைந்தவரே; ஜீவர்களின் நாயகரே! பக்தர்களின் பாவத்தைப் போக்குபவரே; நீர் எல்லோருள்ளும் இருக்கின்றீர் அன்றே: நான் அதைக்கண்டு கொண்டேன். அதலைலாவது உமக்கு நான் காப்பாற்றத் தகுந்தவனாக ஆகின்றேன்'' என்று தருகிறார். (சு, 57) திருமூலர் புறத்தில் எப்பொருளிலும் செறிந்து விளங்கும் நாதனே ஞானத்துள் தன்னைத்தே நற்சிவனாக விளங்குவதையும் குறிக்கிறார் காண்க.

தானத்தினுள்ளே சதாசிவனுயிடும்
ஞானத்தினுள்ளே நற்சிவமாதலால்
ஏனைச் சிவமாஞ் சொரூப மறைந்திட்ட
மோனத்து முத்திரை முத்தாந்த முத்தியே

— திருமந்திரம்

நுண்பொருளாய் எங்கும் நுண்வெளியில் விளங்குமிறைவன்

அணுவுள் அவனும் அவனுள் அணுவும்
கணுவற நின்று கலப்ப துணரார்
இணையிலி யீசனவை யெங்குமாகித்
தணிவற நின்றுன் சராசரந்தானே.

(திருமந்திரம் 2010 (5)

6. தேடாமல் தேடென்று னெங்கள் குருநாதன்
சீவன் சிவனென்று னெங்கள் குருநாதன்
நாடாமல் நாடென்று னெங்கள் குருநாதன்
நல்லவழி தோன்று மென்றுனெங்கள் குருநாதன்
பாடாமற் பாடென்று னெங்கள் குருநாதன்
பத்தரினஞ் சேரென்று னெங்கள் குருநாதன்
வாடாமல் வழிபடென்று னெங்கள் குருநாதன்
வையகத்தில் வாழென்று னெங்கள் குருநாதன்

முன்பாட்டில் சங்கரர் கூறியவுண்மையும் திருமூலர் கூறினதும் சீவன் சிவனென்னும் உண்மையை விளக்குகிறது. பாட்டு(3)இல் வகார நிலையை விளக்கும் வரிகளையும் காண்க. உடம்பை இயக்குவது உயிர்; உயிரை யறிவிப்பதும் உயிராக இயங்குவதும் இறைவன்; கி எனும் உயிர் மெய்யெழுத்தில் க் எனும் மெய்யும் இ எனும் உயிரும் அ எனும் ஓசையும் உருவெடுத்தே (கி = க் + இ + அ) கி உயிர் மெய் யியங்குவதை அறிக. அதே உண்மைதான் ஜீவன் சிவனெனு முண்மை; கட்டுப்பொருளாக எண்ணுமலும் சிற்றறிவால் நினை

யாமலும், தன்னையே தானறியும் உண்மை விளங்க புத்தியாகிய கன்னிகையைப் பார்வதியுடன் சிவனுக்குப் பணிபுரியும் வேலையில் ஈடுபடுத்தி பாதசேவை புரிந்து நாடாமல் நாடி தேடாமல் தேடி தோன்றும் நல்ல வழி சென்றால் எண்குணத்தான் தன்னுள் நின்று செயல்புரியு முண்மை விளங்கும், இறைவனுடைய இணையே கண்டு தரிசித்தும் சின்னங்கள் சேட்பச் சிவனென்றே வாய்திறந்து பாடிப் பணிந்து பக்தருடன் சேர்ந்து, இருட்டிலுஞ் சிவனை மறவாது, அயனை யும்மாலையும் போன்று புறத்தே யலைந்து வாடாமல் ''ஞானத்திரளாய் நிற்குமிறைவன் இருட்டில் காணப்படும் ஊனத்திரளை நீக்கும் உண்மைப் பொருள் போல விளங்க'' வையகத்தில் வாழ் என்கிறார் சுவாமி.

இவ்வுண்மையை விளக்க தாயுமானவர் தருவதைக் காண்க: 'அறிவுடைய பொருள்களாகிய ஆருயிர்களும் அறிவில்லாத பொருள்களாகிய உயிரில் பொருள்களும் சிவபெருமானின் திருவருட் டுணையால் இயங்குவன. அவை சிவத்தை விட வேறில்லை எல்லையில்லாப் பிறவித் துன்பம் விட்டு நீங்க 'மோனக்கலை' யெனப்படும் உயர்ந்த நிலை கைவரப் பெற்றோம் எனும் உண்மை விளங்கவே

சித்துஞ் சடமும் சிவத்தை விட இல்லை யென்ற
நித்தன் பரமகுரு நேசத்தான் - சுத்த நிலை
பெற்றோமே நெஞ்சே பெரும் பிறவி சாராமல்
கற்றோமே மோனக் கரு

(28 உடல் பொய்யுறவு 83)

'இருட்டில் வழிதவறி வாடாமல் உயர்ந்த மோன நிலை அருள் புரிவன்' எனும் உண்மையே காண்கிறோம். (6)

7, தித்திக்கும் மொருமொழியா லெங்கள் குருநாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள் குருநாதன்
எத்திக்கு மாகிநின்று னெங்கள் குருநாதன்
எல்லாம்நீ யென்றுரைத்தா னெங்கள் குருநாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள் குருநாதன்
விண்ணவரு மறியவொண்ணு னெங்கள் குருநாதன்
தத்துவா தீதனுனு னெங்கள் குருநாதன்
சகலசம் பத்துந்தந்தா னெங்கள் குருநாதன்.

நாறுதல்=மூளைத்தல் தோன்றுதல், சின்மயம்=ஞானமயம், சிற்பரமானந்தம்; அனைத்திற்கும் தாரகமாம் அத்தனதான என்பதனால் மாயை எனுங் கண்ணடியிற் ரூன்றிய சிந்தையினை திருவருள் வெளியிற் ரூன்றிய தென மொழிவர். தோன்றிய அவ்விடத்தே மனமொடுங்கும். திருமூலர் ''தானத்திலுள்ளே'' எனும் பாட்டும் 'அணுவுள் அவனும்' எனும் பாட்டுக்களால் (முன் 5 ம் பாட்டு உரையில் காண்க) விளங்கும் உண்மையை மாயையில் தோன்றும் பொருட்களில் கலைவடிவினனை இறைவன் ''ஞானத்தினுள்ளே நற்சிவமாதலால் ஏனைச்சிவமாஞ் சொரூபம் மறைந்திட்ட மோனத்து முத்திரையை எனும் அந்த உண்மையை சுவாமிகள் திரும்பவும் சின்மயத்தைக் காண வைத்தான் என்று பாடுகிறார்.

அனைத்திற்கும் 'தாரகமாம் அத்தனதான' என்பதில் 'தற்பரன்' எனும் உண்மையையே காண்க. [பாடடு 1, உரை (தாரகை, தற்பரன்எங்கள் வளநாடு பாட்டு(84) உரையில் காண்க] கலைவடிவினனை இறைவனே தடத்தப் பொருளாகக் காணப்படும் ரூபம்தான் காரணம். இறைவன்பால் சென்று மனமொடுங்க சின்மயமாம் மோனத்து முத்திரையையும் மாயையில் விரியும் பொழுது மாயாகாரியப் பொருட்களையுந் தரும். தித்திக்கும் ஒரு மொழி 'ஓம்' மாயாகாரியப் பொருட் தரும். ''தித்திக்கும் ஒரு மொழி 'ஓம்' ஒரு மொழி தாரக வடிவினின்று தரும் உண்மைகள்'' பல கண்டீர். இதைஉண்டாக்குவது எது? சிந்தையே. இச்சிந்தையே சிந்தித்து சிந்தித்துச் சிந்தனுதீதனுய் விண்ணவருமறிய வொண்ணு தத்துவாதீதனும் நிலை 'மோனத்து முத்திரை' எனும் உண்மை நிலையினைத் தருகின்றது. 513, 514) காண்க.

தாயுமானவர் இவற்றை விளக்கிப் பாடுகிறார் காண்க:

சிந்தை பிறந்ததும் அங்கே — அந்தச்
சிந்தை இறந்து தெளிந்ததும் ஆங்கே
எந்த நிலைகளும் ஆங்கே — கண்ட
யான்ரூன் இரண்டற்றிருந்ததும் ஆங்கே
சங்கர சங்கர சம்போ

(54 ஆனந்தக்களிப்பு 20)

சுவாமிகள்: 'வித்தின்றி நாறு செய்வான், விண்ணவருமறிய வொண்ணு தத்துவாதீதனுய் சகல சம்பத்துந் தந்தான்' என்று பாடுகிறார். மூன் உள்ள எண்ணமே காரணம்; வேறு வித்தில்லை. (7)

8. ஆதியந்த மில்லையென்று னெங்கள் குருநாதன்
அதுவேநீ யென்றுரைத்தா னெங்கள் குருநாதன்
சோதிமய மென்றுசொன்னு னெங்கள் குருநாதன்
சுட்டிறந்து நில்லென்று னெங்கள் குருநாதன்
சாதிசமய மில்லா னெங்கள் குருநாதன்
தானுய் விளங்குகின்று னெங்கள் குருநாதன்
வாதியருங் காணவொண்ணு னெங்கள் குருநாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தா னெங்கள் குருநாதன்.

(எங்கள் வளநாடு பாட்டு (84) ஆதியந்தமில்லா நாடு உரை காண். அதே பாட்டில் சோதிமயம் என்பதன் பொருளையும் காண்க)

முன்னும் பின்னு மறியாததும் எங்கும் கோடி சூரியப்பிரகாசத்துடன் எல்லையற்று ஐந்தெழுத்துச் சோதியானது விளங்குவது என்று இவற்றைக் கூறுவர். இது முன் அம்மையாகிய சத்திவடிவின தாய் தோன்றியே பரவெளியில் ஆதியந்தமில்லாத ஜோதிமயமான தாய் காணப்படுவது, மாணிக்கவாசகர்கூறும் உண்மையினை ஆராயுங்கள். ''பார்பதம் அண்டப் அணைத்துமாய் முளைத்து [தற்பரம் நந்தி] பின் பரந்ததோர் ஜோதியே, படரொளிப் பரப்பே [தில்லை நடனம்] நின்னருள் வெள்ளச் சிந்தை யெழுந்ததோர் தேனே''மேலும் அவரே ''நீயலாற் பிறிதுமற்றின்மை சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றும், அன்றி ஒன்றில்லை இன்றி நீயில்லை.'' ஆராய் ''சுட்டிறந்து இது அது என்று கூறவோ வர்ணிக்கவோ அப்பால் பட்டதாக வாதியருங் காணவொண்ணு தானுய் எங்கும்செறிந்து நின் அருள் வெள்ளச் சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே'' என்றே கூறலாம். [634; 65; 769]

பட்டினத்தார் இவற்றை உணரத்தருகிறார் உணர்ந்தறிக.

பூதங்களற்றுப் பொறியற்றுச் சாரைம்புலன்க ளற்றுப்
பேதங் குணமற்றுப் பேராசை தானற்றுப் பின்முன்னற்று
காதங் கரணங்களு மற்ற ஆனந்தக் காட்சியிலே
ஏதங் களைந்திருப்பேன் இறைவா கச்சியேகம்பனே;''

ஒவ்வொருவரும் தத்தம் கொள்கைகளை நிலைநிறுத்துதற்காக பல மேற்கோள்களுடன் உதாரணங்களுந் தருவர். இவை இறைவனை அடைய உரிமையற்றது. (கட உப) இந்த ஆத்மா ஞானத்தைப் பற்றிய நிர்சய புத்தி தர்க்கத்தால் அடைய வொண்ணாதது.

9. முச்சந்திக் குப்பையிலே எங்கள் குருநாதன்
முடக்கிக் கிடந்திடென்ரு னெங்கள் குருநாதன்
அச்சமொடு கோபமில்லா னெங்கள் குருநாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டா னெங்கள் குருநாதன்
பச்சைப் புரவியிலே எங்கள் குருநாதன்
பாங்காக ஏறென்ரு னெங்கள் குருநாதன்
தச்சன்கட்டா வீட்டிலே எங்கள் குருநாதன்
தாவுபரி கட்டென்ரு னெங்கள் குருநாதன்.

இங்கே சுவாமிகள் 'சிவ சிவ' எனும் நிலையை மறவாது வலமிடமாக மூச்சை இழுப்பதும் பாவசமாதியி லிறங்குவதும் பின் உலகினில் தங்குவதும் கொல்லா விரதியராக எண்குணத்தான் தன்னுள் நின்று செயல்புரியச் செயல் புரிந்தும், உலகுக்கும் பாவ சமாதி நிலைக்கும் நடுவே நில் என்கிறார். இந்நிலையே 'பச்சைப் புரவியிலே பாங்காக நிற்கும் நிலை' தியானத்திலே நிட்டை கூடுவதும் கீழே இறங்குவதுமாக நிற்பர். மாயா உலகம் குப்பை. அவற்றை ஒழிக்காமலும், நிட்டை கூடி அவற்றில் மாளாமலும் இடை நீரில் நிற்கும் நிலை. உலகினில் தாவாமலிருப்பதால் இச்சை, கோபம், அச்சம். மற்றும் தொடர்பான தொன்றுமோ இல்லை; புத்தியும் மனதும் பார்வதியுடன் கூடவே இறைவனுக்குத் தொண்டு புரிய ஆணவ மலமெங்கே? நீயே நானெனும் நிலையில் தச்சன் கட்டா மோட்ச வீட்டில் நிட்டையில் ஆழ்ந்தும் மீண்டு உலகினில் சும்மா இருந்தும் (514) மோட்ச வீடு செல்லும் குதிரையில், ''மகாசமாதியடையும் வழியொன்றையே தாவி நில்' என்கிறார். (449)

சும்மாவிருந்து சுகம்பெற வென்னுளத்
தம்மானளித்த வருட்பெருஞ் செம்பதம்
மெய்ம்மா ளெளிர் கதிர் வீசலும் ஆணவம்
பொய்ம்மா லொழித்துப் புணர்ந்தது சாந்தியே.

முருகனார் ஸ்ரீரமண அனுபூதி (1 - 179) (9)

10. நாமே நாமென்றுரைத்தா னெங்கள் குருநாதன்
நமக்குக்குறை வில்லையென்ரு னெங்கள் குருநாதன்
போமேபோம் வினையென்ரு னெங்கள் குருநாதன்
போக்கு வரவில்லையென்ரு னெங்கள் குருநாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள் குருநாதன்
சங்கற்ப மில்லையென்ரு னெங்கள் குருநாதன்
ஓமென்றுறுதி தந்தா னெங்கள் குருநாதன்
ஊமையெழுத் தறியென்ரு னெங்கள் குருநாதன்

முன் பாட்டு விளக்கம் ''பாவசமாதியில் நிற்பதும் உலகினில் ஈடு படாது சீவிப்பதுமே வீடாக சும்மா இருந்து ''சுகம்பெற வென்னு ளத்து'' எனும் வரிகளால் உணர்ந்தறிய வரும் பேரானந்த நிட் டையில் தங்கின அன்பரே ''நாமே நாமென்றுரைத்தான் நமக்குக் குறையில்லை'' என்று பாடுகிறார். என்றும் (525) பேரானந்த நிட் டையில் சகல சம்பத்தும் உண்டாக'' ஒரு குறைவுமில்லை. ['சும்மா' தானமரும் அன்னிலை] கொல்லா விரதியர் (477) மேற்கொண்ட நிலை ''நீ நெறிகண்டுளம் நிர்மலனுகுமே'' என்னும் நிலை; கர்மம் எங்கே? கர்மம் புரிபவன் யார்? சுவாமிகள் போமே போம் வினை என்றும் மகா சமாதியடையும் வழியில் சீவிப்பதனால் இனிப் பிறப்பில்லை போக்கு வரவில்லை'' யென்றும் பாடுகிறார். தாய் போன்ற திருவருள் பெருக என்றும் பொன்றுதநிலை பெற்றிருக்கின்ற மூதறிவு வள்ளலே ஆன்மா' என்று சொல்லப்படும் எளியேன் உண்மையினை நின்னோடு காணும்படி பெறும் திருவருள் புரிந்த உன்னையே இடையறுது உள் குதலாகிய தியானத்தைச் சும்மா இருந்தே சுகம்பெறும் பேரானந் ததை அடையப் பெற்றேன்; போமே போம் வினை; என்றும் உன் திருவருளினாலே உண்டான தியானம் எங்கே சங்கற்பம் எங்கே வினை எங்கே; 'தாமே தாம்' என்று பாடுகிறார். தியானம், திரு வருள்' மகாசமாதி, எல்லாமே முன்திருவருளினால் உண்டானவை. 'ஓம், எனும் உறுதிவாக்குத் (489) தந்தான் என்றும் மோனத்து முத்தியை முத்தாந்த முத்தியே என்று உண்மை விளங்க ஊமை எழுத்தறி எள்றும் பாடுகிறார்.

தாயுமானவர் தருவதைக் காண்க: திருவருள் வலதாக நாதாந்தசீவியம்

நலமேதும் அறியாத என்னைச் = சுத்த
நாதாந்த மோனமாம் நாட்டந்தந் தேசஞ்
சலமேதும் இல்லாமல் எல்லாம் வல்லான்
தாளால் என் தலைமீது தாக்கினான் தோழி சங்கர

(ஆனந்தக் களிப்பு: 18)

மேலும் ஊமை எழுத்தைத் தருகிறார்:

ஆதி யனுதியுமாகி எனக்
கானந்த மாயறிவாய் நின்றிலங்குஞ்
சோதி மவுனியாய்த் தோன்றி -- அவன்
சொல்லாத வார்த்தையைச் சொன்னான்டி -- தோழி-சங்கர

(ஆனந்தக்களிப்பு 1) (10)

2. தொண்டர் நாங்களே

பல்லவி

தொண்டர் நாங்களே — சிவ
தொண்டர் நாங்களே.

அநுபல்லவி

II அண்டத்திற் பிண்டத்தில்
ஆண்டவனைக் காணும் (தொண்)

சரணம்

மண்டு பிணியால் வருந்த மாட்டோம்
மாதாக் கருப்பையின் மீண்டு வாராத் (தொண்)

பொறுக்க முடியாத உடல் நோயும் நீங்கா வறுமைப் பிணியும் பின் தொடரினும் பொருட்படுத்தாது நின் தூயவருளால் வெளிப்போந்த எங்களை நாதாந்தக் காட்சிப்பேறு (எங்கள் குருநாதன் பாட் 1 காண்க) அடையப் பெற்றோரும் எங்களைத் தேவரீர் எழுந்தருளி வந்து மௌன குருவாக எங்களுள் நின்று தூயவருள் வாரிப் பொழிய பேரானந்தத் தியானத்தில் என்றும் சீவிக்கவும் (எங்கள்குருநாதன் பாட் 10 விளக்கம் காண்க) பிறவிக் கடலுக்கு அப்பால்பட்டவரே நாங்கள் என்று பாடுகிறார்.

(மக்கள் எங்ஙனம் வாழவேண்டும் என்பதையே தருகிறார்.) ''காகம் உறவு கலந்துண்ணக் கண்டார். அகண்டாகார சிவபோக மெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக வுருவாய்க் கிடக்குதையோ இன்புற்றிட நாம் இனி எடுத்த தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாரும் சகத்தீரே'' என்று தாயுமானவர் அழைக்கின்றார். (1)

12 பண்டுசெய் வினையெலாம் பறந்து போச்சு
பாரிலனைத்தும் உறவே யாச்சு (தொண்)

''முன் தொடர்பால் தூயவருள் மழை பொழியப் பெற்றோமே; பாவமாகிய புழுதியைப் போக்குவதாயும் பார்வதியுடன் கூட நம் முடைய தொண்டையே புரியும் புத்தியாகிய வாய்க்கால் வழிகளில் பாய்ந்து செல்லும், பிறவிச் சுழலில் உண்டாகும் பெருந் துன்பத்திற்கு சாந்தியை யளிப்பதாயும் எமது சித்தத்தில் தேங்கிக் கிடக்கும்

சிவானந்த வெள்ளெம் வெற்றியுடன் விளங்க இருவினையும் போச்சே பாரில் அனைவரும் தொண்டு புரியுமன்பர்களாச்சே'' என்று பாடு கிறார். (2)

13 கொண்டுங் கொடுத்துங் குடி குடி யீசற்கு
என்று மாளாகி எப்போதும் வாழும் (தொண்)

முன் வினையின் பயனாக செயல்புரியப் பின் வினை கூடுதே: எனும் உண்மை உணர்ந்து முப்புரங்களையும் ஒரே அம்பால் எய்ய வேணும் என்பதன் உண்மையைக் காண்க.

புராணக் கதை: தாராகாஷன், கமலாஷ்ன், வித்யுன்மாலி என்ற அசுரர்கள் மயனால் நிர்மாணஞ் செய்து கொடுக்கப்பட்ட மூன்று அதிசயமான பட்டணங்களில் வாழ்ந்து வந்தனர். இவை இரும்பாலும், வெள்ளியாலும், பொன்னாலும் ஆக்கப்பட்டு ஆகாயத்தில் பறந்து செல்லக்கூடியவையாக இருந்தன. மூன்றும் ஆயிரம் வருஷத்துக்கு ஒருமுறை ஒன்றுசேரும். அப்போது ஒரே பாணத்தால் அடித்தால் தான் முப்புரங்களை ஜயிக்கலாம். அசுரர்கள் தனித் தனியாகப் பறந்து சென்று பல ஊர்களின் மேலிறங்கி அவற்றைப் பாழாக்கி வந்தனர்; தேவர்கள் பரமசிவனிடம் முறையிட்டனர்: பூமியைத் தேராகவும் சூரிய சந்திரர்களைச் சக்கரமாகவும் நாலு வேதங்களையும் குதிரையாகவும், பிரம்மாவைச் சாரதியாகவும் மேரு மலையை வில்லாகவும், ஆதிசேஷனை நாணாகவும், விஷ்ணுவை அம்பாகவும் கொண்டு பரமசிவன் போருக்குச் சென்றார்; தேர் புதைந்த போது விஷ்ணு விஷ்வரூப உருவங் கொண்டு அதைக் கொம்பால் தூக்கினார். சிவன் குதிரைமேல் ஒரு காலும் விஷ்ணுவின் மேல் ஒரு காலுமாக நின்று முப்புரத்தை நோக்கினார். அப்போது முப்புரமும் ஒன்றுகச் சேரவே சிரித்து ஒரு பாணத்தை விடுத்து அவற்றை எரித்தார்.

வேதத்தில் கண்ட உண்மைகளை அனுஷ்டான முறையில் கொண்டு சீவிக்க - பாதசேவை புரிய - நரம்புகள் வழியே அந்த அனுபவ உணர்ச்சி ததும்ப - போதகம் என்னும் உண்மையை அறிகிறோம். சித்த மௌனம் செயல் வாக்கெல்லாம் மௌனம்; சுத்த மௌனமே என்பால் தோன்ற இறைவனே செயல் புரியுமுண்மை விளங்கும். அதே விமல வாழ்வு தாயுமானவர் இந்நிலையை விளக்க;

'விளங்கவெனக் குள்ளுள்ளே விளங்கா நின்ற
வேதகமே போதகமே விமல வாழ்வே
களங்கரசி தப்பொருளே யென்னை நீங்காக்
கண்ணுதலே நாதாந்தக் காட்சிப் பேறே'

எனப் பாடுகிறார் (கல்லாவின் 10)

சுவாமிகள் இவற்றை விளக்குகிறார். ''ஒரேநேரத்தில் செய்யும் வினையின் பயனை அதேநேரத்தில் அனுபவித்து, அங்கைத்தீயனுய் கொண்டுங் கொடுத்துப் குடி குடி ஈசற்கு என்று மாளாகி நாதாந்தக் காட்சிப் பேறு என்னுமன்னிலையில் ஊமையெழுத்தை உளத்தே கொண்டு வாழும் தொண்டரே நாங்கள் என்று பாடுகிறார். (3)

14 வேதாந்த சித்தாந்தம் வேருகக் காணேும்
வீட்டு நெறியினில் நாட்டம் மிகவுள்ள (தொடர்ச்சி)

[முன்பாட்டு விளக்கம் முப்புரங்கள் எரிக்கும் உண்மையினை உணர்ந்தறிக)

மறைமுடிவாம் வேதாந்தமும் முறைமுடிவாம் சித்தாந்தமு மென்றே கொள்வர்: இவையை ஆராய சொற்பிரகாசத்தின் (சொற் பிரகாசத்தனி) என்பது சிவபெருமான் நேர் நிலைக்கள இருக்கையாகக் கொண்டு திருக்குறிப்பால் எண்ணத்தால் இயைந்தியக்கும் வடிவங்களில் மந்திர வடிவம் முற்பட்டதும். முதன்மையானதும் ஆகும். இவ்வுண்மை வருமாறு காண்க.

மந்திரத்தைச் செபிப்பதால் இறைவன் பாதம் சேரலாம் எனும் உண்மையே இது. ''அத்துவிதவத்துவைத சொற்பிரகாசத்தனியை (முன் விளக்கம் காண்) அருமறைகள் முரசறையவே'' என்றும் ''அறிவினுக்கறிவாகி ஆனத்தமயமான ஆதியை அநாதியேக தத்துவ சொரூபத்தை'' என்றும் தாயுமானவர் கூறுவதைக் காண்க. மறை முடிவாம் இறைவனையும் முறை முடிவாம் தத்துவசொரூபத்தையும் என்றே கூறுகிறார். மேலும் ''செந்நெறியாகிய சித்தாந்த சைவ நன்னெறியாகிய பொன்னுத பேரின்ப நிட்டையினை அருளுவாயே'' என்னும் பொருளுடன் ''நாய்க்குமொரு வழி பெரிய பேரின்ப நிட்டை அருள்வாயே'' என்றும் தாயுமானவர் பாடுகிறார்: இவை முறையே வீட்டு நன்னெறியாம் மோனத்தைக் காட்டும் உண்மை வருமாறு:

நாதமே நாதாந்த வெளியே சுத்த ஞாதுருவே ஞானமே ஞேயமேனல்
வேதமே வேதமுடிவான மோன வித்தேயிங் கென்னையினி விட்டிடாதே'

(பெற்றவட்கே 11)

இதன் முற்பாட்டில்

''வேதகமே போதகமே விமல வாழ்வே ...நாதாந்த காட்சிப்பேறே,' என்ற வேத முடிவும், முறைமுடிவும், விமல வாழ்வாம் நாதாந்தக் காட்சிப்பேற்றை அருள் புரிகிறது என்கிறார். (4)

சுவாமிகளும் இவற்றை 'வீட்டு நெறியினில் நாட்டம் மிகவுள்ள தொண்டர் நாங்கள் வேதாந்தம் சித்தாந்தம் எனும் பிரிவு காணுமே' என்று பாடுகிறார்.

★ என் பாட்டு எண்ணைக் குறிக்கின்றது:

15 சிவசிவ! வென்றெந்த வேளையுஞ் சொல்லிச்
சீவன் சிவனென்று சித்தத்திற் கொள்ளும்
(தொண்டர்)

(முன் பாட்டின் உரை ''மந்திரம் அதனில்'' என்னும் பாட்டை ஆராய்க)

இது பஞ்ச மந்திரத்தின் உருவம்; பஞ்சமந்திரம் என்றும் முதன்மையானது. நம் இதயத்தே விளங்கும் இறை பொருள் பஞ்ச மந்திரத்தை உச்சரிப்பதால் தானே வளர்கிறது. தூய அருள்மழை சொரிய சிவானந்த வெள்ளம் பெருகும். சிவானந்த லஹரி (சு 48) இல் சங்கரர் தருவதைக் காண்க. ''அழிவில்லாத ஆனந்தமாகிற நீர் நிறைந்ததும் தேவரிஷிகளின் இருதயமாகிற தாமரைக் கிருப்பிடமாகியதும் தெளிவானதும் ஸாதுக்களாகிற பக்ஷிகளால் நாடப் பெற்றதும் பாபமாகிய அழுக்கைப் போக்குவதும் புண்ணியமாகிற வாசனையை வெளிப்படுத்துவதும் ஆகிய சிவத்தியானம் எனும் சிறந்த நீர் நிலையை நிலையாக நீ அடைவாயாக'' மனமென்னும் சிறந்த அன்னமே! (மொழி பெயர்ப்பு)

சிவானந்தத்தின் பெறுபேறான சிவானந்த வெள்ளம் புத்தியாகிய வாய்க்கால் வழியோடி ஈற்றில் சீவன் சிவனாகவே மோனத்தைக் கொடுக்கும். மோனமே உள்ளே இருக்கும் சிவத்துக்கு அடையாளம். சித்தத்தே மோனம் குடிகொண்டு வாழும் தொண்டர் நாங்களே என்று சுவாமிகள் பாடுகிறார். (5)

16. இருந்த இடத்தினில் எல்லாம் பார்ப்போம்
பொருந்திய வண்ணம் பூமியில் வாழும் (தொண்டர்)

முன்பொருளைத் தொடர்ந்தே இது பாடுகிறார். மோனநிலையடைந்த உள்ளம் வேறோர் நினைவுமின்றி அவன் நினைவினில் அவனிடமே ஒப்படைக்கப்பட அவனே செயல் புரியுமுண்மை நிலையேயது; அம்மையே அவருள்ளக்கிடக்கையைத் தானென நின்று செயல் புரிய, ''சும்மாவே யிருக்கின்ற சொரூபமே நீயே குருநாதனே'' என்று சுவாமிகள் வேறு இடத்தில் கூறும் பொருள் விளங்க அவர் பாடுகிறார். ''எல்லாம் அவனேயாம் எல்லாமவன் செயலே''

தாயுமானவர் தருவதைக் காண்க:

''இம்மாநிலத்தில் இருந்தபடியே இருந்து
சும்மா அருளைத் தொடருநாளெந்நாளோ''

வேறும் அவரே

நலமேது மறியாது என்னைச் — சுத்த
நாளாந்த மோனமாம் நாட்டந்தந்தேசஞ்
சலமேது மில்லாமல் எல்லாம் — வல்லான்
தாளால் என் தலைமீது தாக்கினன் தோழி — சங்கர (9)

3 என்குருபர புங்கவ சிங்கமே

17. தன்னைத் தன்னுல அறிந்திட வேண்டுமே
தானு யெங்குஞ் செறிந்திட வேண்டுமே
பொன்னை மாதரைப் போக்கிட வேண்டுமே
புவியி னுசையை நீக்கிட வேண்டுமே
கண்ணைப் போலறங் காத்திட வேண்டுமே
கமல பாதந் தொழுதிட வேண்டுமே
எண்ணம் யாவு [மிறந்திட வேண்டுமே
என்கு ருபர புங்கவ சிங்கமே!

முதல்வரி இரண்டையும் ஈற்றில் கொண்டு உரை கொள்ளவும்; வைத்த பொருள், உடல், ஆவி மூன்றும் உன் கைவசம் நான் தந் தால் நீ என் குருபர பரமகுருவே! 'ஆண் சிங்கத்தை' ஒத்த இறை வனே['சிவ சிவ' எனும் ஊமை எழுத்தால் அறியப்படும். மோன நிலையை என் சித்தத்தே நிறைத்த நீர் உம்மை அடையும் வழி நின் ருழுகக் கொடுக்கப்பட்ட இறை, உயிர், சிறை எனும் மூன்று தொன்மையாயுள்ள பொருட்களை வேறு வழியிற் பாவிக்கிறேம். சிறை - மண், பெண், பொன் எனும் மூவாசையினுல் ஆக்கப்பட்ட ஆணவம் கர்மம் மாயையெனப்படும் மும்மலமுமே; ஆத்மனை இறை வழி நிற்க விடாது மயக்கும் சிறை; இச்சிறையில் அகப்படாது தூய அருள் கொண்டு மண், பொன், பெண், எனு மூவாசையையுந் துறக்க வேண்டும். திருமூலர் திருமந்திரத்தில் தருவதை உணர ''ஆசையறு மின்கள் ஆசையறுமின்கள், ஈசனேடாயினும், ஆசையறுமின்கள் ஆசைப்படப்பட ஆய்வருந் துன்பங்கள், ஆசை விட விட ஆனந்த மாமே,' இதை உணர்ந்துணர்ந்து நல்லறம் பூண்டு இறை வழிச் செல்வோமே. வேறும்', 'ஆசையை விட்டு பிறரை நிந்திப்பதை ஒட்டு, பாபத்தை அறவே ஒழித்து மனதை ஒருமுகப்படுத்தி இருதயகமலத்தின் நடுவிலுள்ள பரமேசுவரனுகிற காசி விசுவநாத னைப் பதிப்பாயாக'' என்று (விசுவநாதஷ்ட கவசம்) கூறுவது காண்; இவ்வண்ணம் அறவழி நின்ருழுகி இருதயகமலத்திலுள்ள விசுவநா தனையே என்றுந் தியானித்துப் பேரின்ப நிட்டை கூடு. ''நான் ஆத் மன் உடம்பல்ல; என் இருதயகமலத்தினுள் நான் காணும் இறை வனே, விசுவநாதனே, எல்லாப் பொருள்களிலும் வியாபியாக அப் பால் பட்டவனுக நின்று எல்லாவற்றையும் இயக்குபவன்'' என்ற அறிவினுல் அவற்றை அறியவேண்டும். இதே உண்மை அறிவு. அதே விசுவநாதன், அதனுள் நின்று அதை அறிக.

18. கசடு தீர்த்தறங் கற்றிட வேண்டுமே
கல்வி யாற்பயன் பெற்றிட வேண்டுமே
அசடர் நட்பை அகற்றிட வேண்டுமே
அந்தி சந்தி அடிதொழ வேண்டுமே
நிசசொ ரூபம றிந்திட வேண்டுமே
நீங்கா தென்று மிருந்திட வேண்டுமே
அசலு னக்கிலை யென்ற குருபர!
ஆண்மை விஞ்சிடும் அற்புதச் சிங்கமே!

முன் பாட்டில் ஈற்றில் விளக்கிய உண்மையையே இங்கு விபரிக்கிறார். இந்திர சாலம், களவு, பொய், கொள்ளை, கானல் நீர் போன்ற இன்பம் இவை, மும்மலப் பிணிப்பாம் மாயையினியல்பு இவற்றை ஆராய

அசத்தறியாய் கேள் தீ அறிவறிந்த எல்லாம்
அசத்தாகும் மெய்கண்டானுயின் — அசத்தலாய்
நீரில் எழுத்தும் நிகழ் கனவும் பேய்த்தேரும்
ஓரின் அவை இன்னுமா ரூப்பு.

(சிவஞானபோத்தம் 9, 1—1)

சிவஞான முனிவர்: நீரிலெழுத்துத் தோன்றிய போதே மறைதலும்' கனப்பொருள் முடிவு பெறுதலின்றி இடையே மறைதலும், அருஞ்சுரத்தின் முதுவேனிலில் நண்பகற் கடுமை பற்றித் தோற்றி ஞாயிற்றின் கிரணம் முகிற் படலத்தின் மறைந்த வழித்தானும் மறைந்துபோவதாகிய ''பேய்த்தேர் மறைதலும், இவை உடம்பின் இயல்புஎன்று முனிவர் கூறுகிறார். அதையே கசடு தீர்த்தறவழி, நட்பை அகற்றியறவழி, எனும் நல்லறம் கைக்கொண்டும் நிற்க; அதற்குத்தக என்கிறார்.

''கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

எனும் திருவள்ளுவ நாயனாரால் தருமுண்மை விளக்கக் கல்வி பயின்றும், அந்தி சந்தி இதயத்தே அவனைக் கண்டு ''ஓதி ஓதி யுணர்வதுந் தன்னையே'' எனு முண்மை விளங்க அவனைப் புகழ்ந்து பாடும் நற்சிந்தனை திருமுறைகள் திருவாசகம், தாயுமானவர், பட்டினத்தார் பாடல்களையும் ஓதியுணர்ந்து நிலைத்த நீர் நிலையாகிய இதய கமலத்தே சிவானந்த வெள்ளம் பெருக களை ரூபமாக எப்பொருளிலும் வியாபியாக ஒலி வடிவாக விளங்கும் 'அம்மையையும்' அவற்றை அப்பால்பட்டவனுக நின்றியக்கும் ''சொக்கநாதனையும்'' அவற்றுள் யானுகிய என்னை விழுங்கி வெறுத்தானுய் விளங்கும் தற்

பரன் தன்னையும் கண்டு இவை ஒன்றே உள்ளும் புறம்பும் ஒன்றுகக் காணும் இறைவனே முக்கட் கருணைப் பிராணுக விளங்கும் ஆத்மனே எனும் நிச சொரூபத்தையே உணர்ந்தறிய வேண்டும். நித்திய வாழ்வில் அதனையே காணவேண்டும். சிவிலித்தாயானவள் ஒப்படைக் கப்பட்ட குழந்தையை எவ்வாறு கவனிப்பாளோ அவ்வாறு உல கினைச் சாதகன் கவனிக்க வேண்டும்.

பற்றற்று உலகினைக் காணும் இந்நிலையைத் தாயுமானவர்:

"வடிவிலா வடிவாய் மன நினை வணுகா
மார்க்கமாய் நீக்கருஞ் சுகமாய்
முடிவிலா வீட்டின் வாழ்க்கை வேண்டினர்க்கு
மோனமல்லால் வழியுண்டோ" என்று தருகிறார்.
(19 ஆரணம் 40)

திருமூலர் திருமந்திரத்தில் தருவது;

மலமில்லை மாசில்லை மாயுபிமானுங்
குலமில்லை கொள்ளுங் குணங்களுமில்லை
நலமில்லை நந்தியை ஞானத்தினுலே
பல மன்னியன்பிற் பதித்து வைப்போர்க்கே. (10 - 2917)

அம்மையு மப்பருமான உலகினை களைவடிவான உலகினில் தன்னை உள்ளும் புறமுமாகத் தடத்தப் பொருளாக அறிவினுல் அறியுந் தன்மையை நந்தி தரிசனமென்பார்கள் (2)

19 மூன்று மொன்றுய் முடிந்திட வேண்டுமே
முனையின் வாசல் திறந்திட வேண்டுமே
ஊன்று பாதத் துறங்கிட வேண்டுமே
உள்ளே யானந்தம் பொங்கிட வேண்டுமே
தூண்டு சோதி விழுங்கிட வேண்டுமே
தூய நிர்க்குண அற்புத பொற்பதம்
ஈண்டு தந்த இனிய குருபர!
என்னை யாண்டவ! இங்கித சிங்கமே!

மும்மலமும் மழிந்திட வேண்டும் அம்மையு மப்பருமாகக் களை வடிவாக உருவமைத்ததை அறிவினுல் அறிந்துணர்ந்ததை

"பேசா அனுபூதியை அடியேன்
பெற்றுப் பிழைக்கப் பேரருளால்
தேசோ மயந்தந் தினியொருகால்
சித்தத்திருளுந் தீர்ப்பாயோ"

''வாய் பேசாத மோனமாய் இருப்பதற்குக் காரணமாக திருவடிப்பேற்றினைப் பெற்று உய்யுமாறு நின் பேரறிவுப் பேரொளியினைத் தந்தருளி இன்னுமொருகால் ஆணவ வல்லிருளை நீக்காயோ'' என்னும் தாயுமானவரால் தரப்படும் உண்மை உளத்தே அதிதாகத் துடனெழிப்ப விழி நீர் பெருகச் சித்தாகாசத்தின் கண் அவனைத், தில்லைக்கூத்தனைத் தரிசிக்க வேணுமென்ற ஆவல் மேலெழ அவனும் எதிர்கொள்ள ''சற்றே விலகியிரும் பிள்ளாய்'' என்று நந்திக்குச்சொல்ல, நந்தி விலக, நந்தனுர்க்கு சிதம்பர தரிசனம் கொடுத்தார், மேலே சென்று கொண்டிருந்த வாயு கீழ் நோக்கிச் செல்ல நிட்டை கூட பிராணமய கோசத்தில் களை ரூபமாக நந்தி வடிவாகக் காட்சியளித்தவுலகம் அறிவினின்றும் மறைய, ''உன்னுமனங் கற்பூரவுண்டை போலே கரைய மின்னுமானந்த விளக்கே பராபரமே, ''என்று தாயுமானவரால் தருவது போன்று கலை வடிவினை அம்மை அப்பரைத், தில்லைக்கூத்தனைத் தரிசிக்க வேண்டுமே'' களை வடிவான நந்தி மறைய கற்பூரவுண்டை போலே கரைந்த மனமானது கரைந்த மனத்தின்கண் நின்ற தூய வடிவனைத்தும் உள்ளத்தே தோன்றும் ஜோதியில் அண்டத்திலும், பிண்டத்திலும் நீக்கமற நிறைந்து விளங்கியே தில்லைக்கூத்தனை காண்பானுங் காட்சியு மொன்றுக அகத்தே காண்பதை ஓரளவு தாயுமானவர் விளக்குவதைக் காண்க. ''சிவபெருமான் தேன்முகக் கோலம் கொண்டருளிய இயல்பில் எப்பொருளிலும் நீக்கமற நிற்கும் இயல்பும் தான் தூய்மையான இயல்பு கொண்டவராதலால் தன்னைச் சார்ந்த அனைத்தையும் தூய்மைப்படுத்தித் திகழ்வதால் தூய்மையும் மிகக் குளிர்ந்த அருளுடைமையும் பேரமைதியும் மின்னொளி போன்று விளங்கும் அண்டத்தைத் தன்னகத்தே நிறைவாக நிற்கும் திருவருள் வடிவான பெருநிறைவும் அடியேனைத் தன்னுள் ஒடுக்குதலாகிய விழுங்கியருளுதற்கு அருளிடு வாலறிவே எனும் பொருளுடன்;

''தன்மயஞ் சுபாவஞ் சுத்தந் தன்னருள் வடிவஞ் சாந்தம்
மின்மயமான அண்டவெளி யுருவான பூர்த்தி
என்மயம் எனக்குக் காட்டாதெனை யபகரிக்க வந்த
சின்மயம் அகண்டாகாரந் தட்சிணு திக்க மூர்த்தம்.''

(24 ஆசையெனும் 8 3)

தாயுமானவர் கூறுவதுபோன்று ''தூய்மையடைந்த அகத்தில் தோன்றிய தண்ணளியும் பெருநிறைவுங் கொண்ட மின்னொளிபோன்று நீக்கமற நிறைந்து விளங்கும் அண்டத்தை, தன்னையும் தன்னுள் ஒடுக்குதலாகிய வாலறிவனை, மலர்ந்த மலரின் தேனையுண்ட வண்டுகள் போன்று களிப்புறும் சித்தத்தை தம் ஜோதியில் கண்டின்புற வேண்டுமே. நிர்குணமாம் ஐந்தெழுத்துச் சோதியிலும் தான் காண தன் குருபரசிங்கம் போன்ற ஞானகுரவன் அருள் வேண்டுமே என் இரூர். (3)

20. இருளை நீக்கி இருந்திட வேண்டுமே
எங்குந் தெய்வத்தைக் கண்டிட வேண்டுமே
பொருள றிந்தினிப் போற்றிட வேண்டுமே
பொய்ய ழுக்கா றகற்றிட வேண்டுமே
மருளைத் தந்து மயக்கும் பொருள்களை
மாற்றி யேயரு ளாக்கிட வேண்டுமே
பெருமையிற் பிறர் பேசுங் குருபர!
பெத்த னென்னையும் பேணிய சிங்கமே.

பெத்தம் - பாசபந்தம்; முன் திருவருள் வலதால் எனை ஆண்டவன் முன் திருவருள் வடிவாய் எனையடிமை கொண்ட மெளன குருவே: பெருநேயமாம் காதல் கொள் நெஞ்சமானது, அகம், நின் திருவடியினைத் தன்னகத்தே வைத்து ஜீவன் முத்தன் எனும் நிலையில் இடையறாது தொழும் நிறைவுற்று, நன்றாய் ஆய்ந்து நின்ற நிலையில், தன்வயத்தனையே முன் திருவருளுணர்வால், உணர்ந்தவையை நாடாதே உணர்த்து முனை நாடியே காணப்படும் பொருளுக்கு வேறாய் நின்று, ஒலிவடிவான சத்தியையும், இயக்கும் சொக்கநாதனையும், அம்மையையும் அப்பரையும் காண்பான். 'சிவ சிவ' எனும் மாமறையினால் உணரும் நிலை என்றும் இருளை நீக்கித் தெய்வத்தைக் காணும் அந்நிலை: ரோசா மலரில் நறுமணம் கண்முன் ரோன்றும் மலரின் உரித்தாய் கண்டபின், முடியில் இருக்கும் மலரின் மணத்தை என்று முணர்ந்து இன்புறலாம். அங்ஙனமே ஜீவன் முத்தன் 'சிவ சிவ' எனும் ரூபினையுடைய உலகினை, அம்மையப்பரை; முடியிலிருக்கும் ரோசாவின் நறுமணத்தை இன்புற நுகர்வது போன்று தம்மறிவினால் அறிந்த வண்ணமே களிப்புடன் சிவிப்பான். மருளைத் தந்து மயக்கும் பொருள்களை மாற்றியே யருளாக்கிச், 'சிவ சிவ' எனும நினைவாய், களிப்புடன் காணலாம்.

பண்டுங் காணேன் நான் பழம்பொருளே இன்றும் உன்னைக்
கண்டுங் காணேன் எனவுங் கைகுவிப்பதெந்நாளோ,

என்று தாயுமானவர் இவ்வுணர்வினை எந்நாட் கண்ணி(11), அன்பு நிலை(9) பாட்டில் தருகிறார் காண்

கரைந்து கரைந்துருகிக் கண்ணீராறுக
விரைந்தே நிருவிகற்ப மெய்த — நிரந்தரமும்
நின்னையே சிந்திக்க நீ கொடுத்தாய் மோனை நான்
என்னை முழுதுங் கொடுத்தேனே.

தாயுமானவர் (28 உடல் பொய்யுறவு 36) (1

21 அஞ்சும் மூன்றும் அறிந்திட வேண்டுமே
ஆண வத்தை ஒழித்திடல் வேண்டுமே
இஞ்சி சூழும் இலங்கையில் ராவணன்
ஏத்திப் போற்றி இசைத்த முதல்வனே!

நஞ்சு கண்டத்திற் கொண்டவ! நம்பனே!
நம்மை யாளுவான் நண்ணும் முதல்வனே!
பஞ்சின் மெல்லடிப் பரம குருபர!
பாவி யேனையு மாட்கொண்ட சிங்கமே!

ஓரளவு ஐம்புலன்களு மிறைபால் ஒடுங்க சிவகுருவின் உதவி கொண்டு யோகாப்பியாசத்தால் நிட்டை கூடி தில்லைக் கூத்தனே சிவ குருவாகிய இறையருளே உதவியாய் கண்டார். ஐம்புலன்களையும் ஆணவம், கர்மம் மாயை என்னும் மூன்றையும் அறிய வேண்டும்: இந்நிலையில் ஆணவம் முற்றுமழியவில்லை, அதைத் தழைக்க விடாது சுட்டெரிப்பதே அப்பனின் ஆவல். மாறாக, முக்குணங்களும் ஒன்றுகவே தொழில் புரிய ஆணவம் மேம்படலாம்: சுருங்கச் சொல்லின் சிவ பதமடைந்து, அன்பு பூண்ட ஒருவன், ஆணவமலப் பிணிப்புண்டாக்கும் ஓர் சிற்றின்ப இயல்பை முன் பிறப்புத் தொடர்பால் பெற்றிருக்கலாம். ஆதலின் முன் தொடர்பாகவே அவ்வாழ்க்கையை சாதகன் நாடாதிருக்க வேண்டும், இராவணனை அதற்கே எடுத்துக் காட்டுகிறார்; இராவணனை முன் சென்ம கர்மம் அலைத்தது போலும்; ஓர் பதவியடைந்த நிலையில், இறைவனை ஏத்தித் தொழும் அறிவினை யுணர்விலை அறிந்திருந்த அந்நிலையில், ஆணவ மலப்பிணிப்பால் நிலையை மறந்து சிற்றின்ப வாழ்க்கையில் ஈடுபடுகிறான். முன்னரே அதனையுணர்ந்து முக்குணங்களை ஒருங்கே இறைவனுக்கு அர்ப்பணஞ் செய்து, புத்தியாகிய கன்னிகையைப் பார்வதியுடன் கூடவே சிவனுக்குத் தொண்டு புரிய அர்ப்பணஞ் செய்து 'நான்' 'எனது' எனும் மலப்பிணிப்பு அறவே ஒழியவேண்டும்: அவற்றை விளக்கியே இராவணன் போல் ஏத்தித் தொழுது முக்குணமு மொன்றுக எண்குணத்தானாக மாறவேண்டும் என்றும், சிற்றின்பமாகிய நஞ்சைக் கண்டத்தில் வைத்தும் அது இராவணனை அலைத்தது போல் நம்மையும் அலையாது நம்மை ஆண்ட சிவகுருவின் பதவியாகிய முழு முதல்வனுகவே மாசற்ற நிலையை அடையச்செய்ய வேண்டும், என்கிறார். இஞ்சி செமிக்கச் செய்யும் இயல்புடைய பொருள்; சிற்றின்பத்தை உண்டு செமித்த கர்மபலன் பெற்ற இராவணனை 'இஞ்சிசூழ் இலங்கை 'இராவணன்'' என்று அழைக்கிறார் போலும். முப்புரமும் எரிந்த அந்நிலையுணர்ந்த நால்வர் தாயுமானவர் மற்றும் எல்லோரும் இராவணனை, அவனை மாலை' ஆணவப்பொருட்களாக எடுத்துக் காட்டுகிறார்கள்:

"மாடவீதி மன்னிலங்கை மன்னனை மாண்பழித்துக்
கூடவென்றி வாள் கொடுத்தான் கொள்கையினர்க் கிடமாம்
பாடலோடு மாடலோங்கிப் பன்மணி பொன் கொழித்து
ஓடி நீரால் வைகை சூழ் முயர்திருப் பூவணமே.

சம்பந்தர் (1 - 64 - 8) இலும்

மயங்கு மாயம் வல்லராகி வானிலெடு நீரும்
இயங்குவோருக் கிறைவனுய் விராவணன்றே ணெரித்த
புயங்கராக மாடத்தன் புணர்முலை மாதுமையாள்
முயங்கு மார்பன் முனிவரேத்த மேயது முதுகுன்றே.

(1 - 53 - 8) இலும்

இராவணனுடைய ஆணவத்தை நீக்கி முனிவராக்கியதைக் காண்க.

(5)

4. சர்வம் பிரம மயம்

பல்லவி

சாந்தம் உபசாந்தம்
சர்வம் பிரம மயம் சாந் த

சரணம்

22 சாந்த னேயும் மாந்த ரன்பு
கூர்ந்திதனைக் கூறுவீர் சாந்
சார்ந்த இடமெங்குஞ் சிவசிவ
தங்கும் பரிமளம் பொங்குஞ் சிவ சாந்
தாம் திமிதிமி தரிகிட கிடசெம்
நாம் அதுவென அறிவது கவசம் சாந்
தொதிந்தத் தாதாதா தரிகிட
ஏனிந்தப் பாடெங்குஞ் சிவ சிவ சாந்
அண்ட பிண்ட மெங்கும் அதுவெனக்
கண்டு தொண்டு செய்வது தகுதி சாந்

உபசாந்தம் = ஒழிவு, சமாதானம், தயை, விருப்பு, சாந்தனேயும்-சாமளவும், இறக்குந்தனேயும் தேவரீர் மௌனகுருவாக அருபியாக தன்னுள்ளத்தே எழுந்தருளி தூய அருள் வாரிப் பொழிய பேரானந்தப் பெருவெள்ளம் பெருக்கெடுக்க எங்கும் தெய்வத்தைக் கண்டு (20-ம் பாட்டு விளக்கம்) 'கரைந்து கரைந்துருகி' எனும் தூயுமானவர் தரும் நிலையையும் வேறொன்றுமில்லை, எல்லாம் அதுவே, பிரமமே எனும் சிந்தை கொண்டே புத்தியாகிய கன்னிகை தாய் பார்வதியுடன் கூடியே சிவனுக்குத் தொண்டு புரியும் நிலையில் தாயும் மகனும் ஒன்று கூடியே கூத்தாடும் நிலையைத் தருகிறார், சர்வம் பிரம மயம். எங்கும் தேவரீரே நின்று தாயாக ஆடல் பாடல் புரிகிறீர், என்னை எங்கே காண்க, என்னையே காண்கிலேன். யானும் சர்வம் பிரமமாக எங்கும் எப்பொருளிலும் நீக்கமற நிறைந்து நின்றே ஆதியந்தமற்ற ஜோதி நிலையேயாய் ஆனந்தக் கூத்தாடுவதை யாம் எங்கே காண்கிறேன். திருமூலர் இவற்றைத் தருகிறார் காண்க.

தானும் அழிந்து தனமும் அழிந்து நீடு
ஊனும் அழிந்து உயிரும் அழிந்து உடன்
வானும்ழிந்து மனமுமழிந்து பின்
நானுமழிந்தமை நான் அறியேனன்றே

(திருமந்திரம் 2911)

கால எல்லையற்று எப்பொருளிலுஞ் சார்ந்து நின்றே தூய்மை யுடையோன் அண்டின பொருளையுந் தூய்மையாக்கு மியல்புடை யோன், அண்டின பேரையும் சிவ சிவ எனும் வடிவாக்கி சிவானந்த வெள்ளம் பெருக்கெடுக்க ஒன்று சேர்ந்தே எங்குந் தாயின் சொரூப மாக பேரானந்த வெள்ளம் பெருக்கெடுக்க அம்மையே யாடுகிறுள்: தாம் திமி திமி தரி கிட கிட செம் எனும் நடன ஒலியைத் தந்தே ஆடுகிறுன்.

தொடர்ந்தே தொதிந்தத் தா தா தா தரி கிட என்றே ஆடி தன்னை, உடலை, இடையே காணும் ஆத்மன் களைத்து நின்று ஏனிந் தத் தொந்தரவு, சும்மா இருக்க வேண்டும். திருமூலர் ஆவலான இந்நிலையை உணர்த்துகிறுர் காண்க.

ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிட வேண்டுமே என்கிறுர்.

வெளியில் வெளி போய் விரவியவாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியும் அவரே சிவ சித்தர் தாமே.

அண்ட பிண்ட மனைத்திலும் அதுவே, அதுவே அண்ட பிண்ட மனைத்துமெனும் முன்மையே உருவாகி நின்று, திருமூலர் கூறும் உண்மை கண்டு, பிறப்பை யறுக்க.

5 தெய்வம் எல்லோர் சித்தத்தினுமுண்டு

23 தெய்வம் எல்லோர் சித்தத்தினு முண்டு
உய்யும் மார்க்கம் உணர்ந்தோர்க் குண்டு
பொய்யும் பொருமையும் புன்மையோர்க் குண்டு
ஐயன் அடியினை அன்பர்க் குண்டே.

புன்மை - அற்பம், சிறுமை; புன்மையோர் - புல்லியோர் கீழ் மக்கள், விழுமிய முழுமுதல்வனும் சிவபெருமான் எல்லோர் சித்தத் திலுமுளன். இவற்றைப் புல்லியர் அறிவிலிகள் தம் மனத்திலுல் கண் டும் முன் கொண்டு வரப்பட்ட மலப்பிணிப்பிலுல் மறைக்கப்பட்டு அவருடைய எண் குணங்களையுந் தம் மறிவிலுல் தஞ் சித்தத்தே காணுதே, அவர்தாம்; ஆதமன் இறைவன்பால் செல்லும் இயல்பினை யுடைய ஆத்மன் எனும் உண்மையை மட்டுப்படா மயக்கத்தை

தரும் மாயையினால் மறைக்கப்பட்டு தாம் உடம்பு என்று எண்ணு கிறார்கள் (இதன் முழு விளக்கமும் பாட்டு 2 இல் தேகம் நீயல்ல மோகத்தை முனியென்பதின் பொருளையும் நித்தமாய் என்னுஞ் செய்யுளையுங் காண்க.) அறிவுடனே கூடித் தவழ்வனவும் நடப்பன வும் பறப்பனவும் எனும் தொழில் மேற்கொண்டு இருப்பனவுமாகிய மாயாகாரிய உடம்புகளனைத்தும் முன் வினைத் தொடர்பாகவே புன்மையோர்க்குண்டு! ஆத்மனின் இயற்கை மோகத்தை முனிந்த முழுமுதல்வனுமிறைவனை யடைதலே (விளக்கம் பாட்டு 2 இல் தொடரும் வரிகளையும் 'மாறிநின்றென்னை' திருவாசகத்தையுங் காண்க.) சைவ - முதல்வராய் விளங்கும் அறிவும் அவற்றின் உணர்வாகிய சிவன்மையும் உடைய உன்னைச் சார்ந்தவர் உயர்வர். என்பதை

தெய்வம் வேறுள தென்பவர் சிந்தனை
நைவர் என்பதும் நற்பர தற்பர
சைவ சிற்சிவனை யுனைச் சார்ந்தவர்
உய்வரென்பதும் யானுணர்ந்தேனுற்றே.

தாயுமானவர் (18 பொன்னை மாதரை 76) வடிவுற அமைத் தருள்கிறார் காண்க.

(')

24 கல்லா தார்பாற் கபட முண்டு
எல்லா ரிடத்து மீச னுண்டு
வில்லா ரிடத்தில் வீத்தொழில்° உண்டு
எல்லாச் சத்தியும் இறைபால் உண்டே.

தெரியும்படியாக அடியேனுணர்வினுள்ளே ஒளி வடிவாய் வேண் டுங்கால் வேண்டுவதை யீனுமிறையருள் வடிவாக நின்று நீ அருள புத்தியாகிய கன்னிகையைப் பார்வதியுடன் கூடியே சிவனுக்குத் தொண்டு புரிய எல்லாச் சத்தியும் 'சர்வம்' பிரமமயமாய் விளங்கும். சர்வமும் உலகினில் இறைபால் உண்டே (கல்லாதார் பால் கபடமுண்டு என்பதற்கு முன் பாட்டு பொய்யும் பொறுமையும் என்பதின் பொருள் காண்க 'சர்வம் பிரமமயம் என்பது எல்லோரிடத்திலு மீசனுண்டு என்பதை விளக்கும்'. (22)

''உணர்த்தும் உனை நாடாதுணர்ந்தவையே நாடி இணக்குறு மென் ஏழைமை தான் என்னே. பராபரமே'' என்று தாயுமானவ ரால் தருவதை யார்ராயவே எல்லாவற்றிற்கும் ஆதார மாக எல்லாவற்றையுமியக்குபவன் வில்லாளன் ஒருவனுண்டு; அவன் வினைப்பயன் எனும் அம்பலத்தே வினை முதலாம் முதல்வனுகவே நின்று அருளுபவன்; தொல்லை வல்வினையே அம் முதல்வனின் சக்தி, தொடர்ந்தே ''சித்த மௌனம் செயல் வாக்கெலாமவுனஞ் சுத்த மவுனம் என் பால் தோன்றிற் பராபரமே'' என்ற தாயுமானவர் சர்வதத்துவாதியாகிய இறைவன் எந்நிலையில் [இதயத்தே] தோன்று

கிறார் என்பதைக்காட்டுகிறார். அதுபோலவே சுவாமிகளும் 'வில்லோன், எனும் உண்மையை முன் தந்து பின் சுத்த மவுனம் தோன்ற சும்மா இருந்தே சுகம் பெற 'எல்லாச் சத்தியுமிறைபாலுண்டே' என்கிறார்.

[முப்புரமெரித்த கதை பாட்டு 13 இல் காண்க] (2)

25 தேடுவார் மாட்டுச் செல்வம் உண்டு
தேடுவார் மாட்டுத் தெய்வம் உண்டு
நாடுவார் மாட்டு நன்மை உண்டு
பாடுவார் மாட்டுப் பரமன் உண்டே,

அரிய உணவினை ஆக்கலும் அமைத்தலும் அருந்தலும் சொல்லாலும் செயலாலும் விளக்கக்கூடியன. ஆனால் உண்டதனால் பசித்துன்பம் அகன்றதும் சுவையின்பம் துய்த்தலும் தாமே உணர்ந்தறிவதின்றிச் சொல்லால் உரைக்கப்படுமோ? படாதாம். அவ்வாறே தேடுவார் மாட்டுத் தெய்வமுண்டு என்றே கொள்ள வேண்டும். முதற் பாட்டில் விளக்கிய வண்ணமே ஐயன் எவ்வாறு உணர்வினால் உணர்ந்தறியப்பட்டவனோ அவ்வாறே (பாட்டு 1 விளக்கம் என்னை எனக்கறிவித்தான் (எனும் பொருளும் பாட்டு 13 முப்புரமெரிந்த கதையுங் காண்க) நாடுவார் மாட்டு நன்மையுண்டு பாடுவார் மாட்டு பரமன் உண்டே என்கிறார். எல்லாச்சமய உண்மைகளும் செம்பொருட்டுணிவாம் சித்தாந்த சைவ நன்னெறிக்கண் படிமுறையாக வைத்துக் காட்டப்படும்; தில்லைமன்றின்கண் எல்லா நெறியும் வல்லவாறுள வென்பது பள்ளி வகுப்புப் போன்று வழிபடுவோர் தம் நிலையினை முப்பாலாகக் குறிக்கப்படும்: அவரனைவரும் தத்தம் இயல்புடன் வழிபடும் வாய்ப்புள என்பதாம்; அவை அருவம், அருவுருவம் உருவம் என முத்திறப்படும்:

இம்மூன்றும் அங்கண் காணப்படுவது; பொன்னம்பலமருவம் பொற்றுண் அருவுருவம் பின் உருவம் கூத்தப்பெருமான் என்னும் முறைமையாம்: உருவ வழிபாட்டினர், சாதாரணமானவர். கூத்தப் பெருமானும் அருவுருவ வழிபாட்டினர்க்கு பொற்றூணுமாம். வில்லாளனும் இறைவன் வினைப்பயனென்னு மம்பலத்தே வினை முதலாம் முதல்வனாக நின்று இயக்குபவன்; களை வடிவாக அவனை அமைத்து வணங்கும் அன்பர்கள் அருவுருவான பொற்றூணை அமைத்து வணங்குவார்கள். கூத்தப்பெருமானும் அந்தப் பொற்றூணும் முறையே நினைவுப்பொருளும் உணர்வுப் பொருட்களுமாம். அருவ வழிபாட்டினர் தம் அறிவினால் முன் உணர்ந்தறிந்த பொற்றுணை அறிவுப்பொருளாக' சிற்றறிவுக்கும் சுட்டுப்பொருளுக்கு மப்பால் பட்டதான மெய்ப்பொருளாகத் தஞ்சித்தத்தே கண்டு வழிபடுபவர், நிட்டை கூடி சிவபதமடைந்தவர்களே. இந்தப் பொன்னம்பலத்தை, மோட்ச வீட்டைத் தாங்குவதே பொற்றூண்; நந்தி தரிசனம்; பின் தில்லைத் தரிசனம்: (18 காண்க) (3)

26 சீவன் சிவனெனல் தேறினர்க் குண்டு
ஆவதும் அழிவதும் அசடர்க் குண்டு
ஈவது விலக்கார்க் கெல்லா முண்டு
தேவ தேவன் திருவடி உண்டே.

மும்மலப் பிணிப்பாகிய மாயையே பிரிவுக்குக் காரணம்; பொற்றுண் என முன் பாட்டில் விளக்கிய அருவுருவாம் சதாசிவனைக் களே ரூபமாகத் தரிசித்தால் ஐப்புலன்களு மிறைபால் செலுத்தப் பட்ட உள்ளத்தே ஆவதும் அழிவதுமில்லை. இன்பத்தையும் துன்பத் தையும் உண்டாக்குவதுமில்லை. களைவடிவாக விளங்கும் எண்ணில் பலகோடி உயிர்கள் அத்தனையும் கண்ணிற் கலந்த கற்பகமே. 'சீவன் அத்தனையும் சிவனே' முன்விளக்கிய பிரகாரம் நல்லறம் எனும் இறைவனை நாடி நிற்கும் வழிநிற்பின் பொற்றாணில் கட்டப்படும் பொன்னம்பல தரிசனங் கிடைக்கும், அதே உலகினில் நீக்கமற எல்லாவற்றிலும் நிறைந்து, சீரொடு பொலிந்து விளங்கும் பொருள், அதே தேவரீருடைய திருக்கழல்கள்.

ஐம்புலன்களும் இறைவன்பால் ஒப்படைக்கும் உண்மையை இய மம், நியமம் பொறை (682) காண்.

புலனைந்தும் பொருமயங்கிச் சிந்தை
அலமந்தழலும் அடிமை - நலமிகுந்த
சித்தானை மோன சிவனே நின் சேவடிக்கே
பித்தானால் உண்டோ பிறப்பு.

புத்தியாகிய கன்னிகை இறைபாற் சென்று தொடர்ந்தே அற வழி நிற்போனைப் கற்புறு மாதர் தம் கணவனை நாடுவது போன்று என்று தாயுமானவர் கூறுவதைக் காண்க.

"கற்புறு சிந்தை மாதர் கணவரை அன்றி வேறோர்
இற்புறத் தவரை நாடார் யாங்களும் இன்ப வாழ்வுந்
தற்பொறியாக நல்குந் தலைவ நின்னல தோர் தெய்வம்
பொற்புறக் கருதோம் கண்டாய் பூரண வந்த வாழ்வே"

[கற்புறு சிந்தை - 1]

ஈவது விலக்கார் "கொல்ல விரதியர்" கற்புறு மாதர் போன்று என்று பாடுகிறார்.
(4)

27. அன்பு சிவமெனல் அறிஞர்க் குண்டு
பொன்புரை மேனி புனிதர்க் குண்டு
தன்போற் பிறரெனல் தக்கோர்க் குண்டு
விண்போல் விரிவு மேலோர்க் குண்டே.

வெளிச்செயல் முக்கியமன்று, உள்ளன்புதான் முக்கியம், பக்தனுக்கு ''எண்ணில் பல கோடி உயிர்கள் அத்தனையு மிறைவனே. இறைவனே எங்கும் வியாபியாக நீக்க மற நிறைந்து விளங்குகின்றான்.'' என்று என்றென்றும் அன்பு கூர்வான். கூத்தனைத் தரிசித்துப் பாடுவான்: பின் பொற்றாளை (முன்யாட்டு விளக்கம்) நினைந்துருகிப் பாடுவான் பக்தன்.

திருமூலர் அன்பின் பெருமையை விளக்கி

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே.'

என்று பாடுகிறார்.

கனி ரூபமாக பொற்றாள் என்பதை உணர்வினிற் கண்ட பக்தன் பொன்புரை மேனியாக விளங்கும் இறைவனையே காண்கிறான். பகைவன் துன்புறுத்துதலும் இறைவன் செயல் எனுமுண்மை விளங்கவே தக்கோர் சீவிப்பார்; துன்புறுத்தும் செயலை அங்கே காணாது பொற்றாளை இறைவனையே கண்டு களிப்பார்கள்; அதையே

''தன்போற் பிறரெனல் தக்கோர்க் குண்டு
விண்போல் விரிவு மேலோர்க் குண்டே''

என்று பாடுகிறார்.

அன்பு விரிந்து மூடபக்தியாகக் காட்சியளித்து பின் அன்பே சிவமாய் விண்போல் விரிவாய் அமர்ந்திருந்தார். ஓர் கதை வருமாறு: காளத்தியிலிருந்த கண்ணப்பன் என்ற வேடன் சிவபெருமானிடம் பேரன்பினால் தனக்கு மாமிசம் உவப்பாயிருத்தலால் சுவாமிக்கும் அது உவப்பாகும் என்று எண்ணி ஒரு காட்டுப்பன்றியின் இறைச்சியைப் பதமாக்கிச் சுவைத்துப் பார்த்து அதை ஒரு இலையிலும், பாத்திரமில்லாமையினால் வாயில் அபிஷேகத் தண்ணீரை நிறைய அடைத்துக்கொண்டும் அர்ச்சனைக்குப் பூவைத் தலையில் சொருகிக் கொண்டும் கோவிலையடைந்தான். சாத்தியிருந்த பூவை கால் செருப்பினால் மாற்றி வாய் நீரினால் அபிஷேகித்து இறைச்சியைப் படைத்துத் தமதுதலையில் இருந்த பூவினால் அர்ச்சித்தார். ஊனுக்கு ஊனே வேண்டிச் சோதிக்குமிறைவன், தன் கண்களில் துன்பங் காட்ட கண்ணப்பர்தம் கண்ணை எடுத்து இறைவன் கண்ணில் வைத்தார்; அன்பே சிவமாகி விண்போல் விரிவாயமர்ந்திருந்தார்.

6 ஏத்துக பொன்னடி

எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி
தொழுது வணங்குக தூநீ றணிக
பழுதிலந் தெழுத்தும் பன்னுக பன்முறை
அழுது புலம்புக வாய்விட் டரற்றுக
அன்னை பிதாவின் அடியிணை வணங்குக
தன்னைப் போலச் சகலமும் ஓம்புக
விண்ணைப் போல வியாபகம் ஆதுக
கண்ணைப் போலக் காக்க அறத்தை
செய்வன எல்லாஞ் செவ்வனே செய்க
கையும் மெய்யும் கருத்திற் கிசைக
அழுக்காறு கோபம் அவாஅ ஒழிக்க
விழுப்பம் மிக்க மேன்மக்க டம்மை
ஒருபோதும் மறவா துறவு கொள்ளுக
கருவினில் வாராக் காரணங் காண்க
தன்னை அறிக தானே ஆகுக.

நாவலர் பெருமான் 'நாலு நாளிகை பொழுது புலருமுன் னெழுக எழுந்து, தேகசுத்தியின்பின் தொழுக' என்கிறார். அதே போல சுவாமிகளும் எழுந்து தேகத்தைச் சுத்திசெய்து பின் திருநீறு பூசி இறைவனை வேண்டு, பஞ்சாட்சரத்தை 'உச்சரித்து தியானம் செய்க! பின் அன்னை பிதாவுக்குத் தேவையான வழி நின்றொழுக'' 'பித்ருஞுக்ஞும்' என்றே அதைக் கூறுவர். 'அழுது புலம்புக' என்கிறார் சுவாமிகள்; தாயுமானவர் இன்னிலையில் அழுவதைக் காண்க:

': மண்ணுறங்கும் விண்ணுறங்கும் மற்றுள எலாமுறங்கும்
கண்ணுறங்கேன் எம்மிறைவர் காதலாற் பைங்கிளியே''

(பைங்கிளிக் கண்ணி)

களை ரூபமான உலகினை அம்மையப்பரையுமுணர்ந்து (விளக்கம் பாட்டு 2) (தற்பரன் களைவடிவான உலகினையுணர்தல் காண்க) அழுது புலம்புக; மட்டுப்படத மாயையினின்று மென்னை நீக்கியாண்டருளுக; ஆணவமலப்பிணிப்பினின்றும் என்னை நீக்கிப் புத்தியாகிய கன்னிகையை இயற்கை வடிவான அம்மையை ஆதரித்து அவளுடன் கூடியே சிவனுக்குத் தொண்டு செய்து அடிமை பூணுக,; தன்னைப் போலச் சகலமு ஓம்புக; விண்ணைப்போல வியாபகமாகுக என்கிறார் சுவாமிகள். தாயுமானவர் இவற்றை உணரத் தருவது,

"மட்டுப்படாத மயக்க மெல்லாந்தீர என்னை
வெட்ட வெளி வீட்டில் அண்ணல் மேவுவனே பைங்கிளியே"

(பைங்கிளிக் கண்ணி)

அழுக்காறு கோபம் முதலியன அற்று உண்மைநெறி கடைப் பிடித்து நல்லறம் பூண்டு சித்தாந்த வழி நின்றொழுகி சிவனை அடையவேண்டும் [விளக்கம் நாதாந்தக்காட்சிப் பேறு பாட்டு 13] தற்பரம் எனும் விளக்கம் காண்க. என்னை எனக்கறிவித்தான் பாட்டு 1 இல் காண்க.

மின்னை ஒத்த வாழ்வை வெறுக்க
வறுமை வந்துழி மனந்தள ரற்க
மறுமை இன்பம் மறவாது நாடுக
அடியார் தங்கள் அடியிணை மலர்க்கீழ்
குடியாய் வாழுக குறைவெலாந் தீர்க
ஈசன் அடியிணை ஏத்தி ஏத்தி
வாச மலர்கொடு வாழ்த்தி வாழ்த்தி
மத்தன் இவனென மண்ணவர் பேசவும்
சித்தன் இவனெனத் தேவர் கொண்டாடவும்.

பாட்டு (10) இல. நீரில் எழுத்தும் கலப்பொருளும் ஓரின் அவை வாழ்வை ஓரளவு ஒக்கும் என்னும் பொருளுடன் சிவஞான மூனிவர் தருவதை யங்கே காண்க. தாயுமானவர் (ஆசையெனும் 51) இல. தருவதைக் காண்க.

"கடத்தை மண்ணென லுடைந்தபோ தோவிந்தக் கருமச்
சடத்தை பொய்யெனல் இறந்தபோ தோசொலத் தருமம்
விடத்தை நல்லமிர் தாவுண்டு பொற்பொது வெளிக்கே
நடத்தைக் காட்டிஎவ் வுயிரையும் நடப்பிக்கும் நலத்தோய்"

என்று சட்டியை மண்ணென்றும் நிலையில்லாதது உடல் நிலையில்லா தது என்றும் சிற்றின்பமானது மோட்ச வீட்டை அடையவிடாது நஞ்சு போலத் தடுப்பது, சிற்றின்பம் சீரணித்தால் கர்மம் புரிந்த வன் பிறப்புக்கும் இறப்புக்கும் ஆளாகி இறக்கிறான் என்றும் அப் பாற்பட்டவனை இன்பமுமில்லை துன்பமுமில்லை எனும் உண்மை விளங்கிச் சிவிக்கும் இறைவனை ஒத்த நன்மேனி யுடையார் மற்ற வர்க்கும் பொற்போது வெளிக்கே நன்நடத்தை காட்டியே எனும் பொருளுடன் தருவதைக் காண்க. அத்தகையதே சுவாமிகள் பாட்டு கனவுப் பொருள் போன்றதே. வாழ்வு, இன்பம். துன்பம் இரண் டினையும் ஒத்து நோக்குக. சிற்றின்பமாகிய நஞ்சை கண்டத்தில் வைத்தும் சிவன் செயல் எனும் உணர்வுடன் அவற்றை ஏற்று ஐம்

புலன்களும் அந்தக்கரணங்களுமாகிய ஒன்பது சேதனமுமுடைய இவ்வுடம்பு உத்தமன் கோயில்; இந்த உடம்பிலிருப்பது எப்பொருளிலும் வியாபித்திருக்கும் இறைவன் புத்தியாகிய கன்னிகையை சக்திவடிவான அம்மையுடன் சிவனுக்குத் தொண்டுபுரியும் சித்தன் சர்வதத்துவாதிபதி. இறப் புக்கும் பிறப்புக்கும் அப்பால் பட்டவன், இவ்வண்ணம் உலகம் புகழ எல்லா உயிர்களுடனும் ஒன்று கூடியே அப்பால்பட்டவனையும் ஒன்று கூடிக் கருமம் புரிந்து வினைப் பயனில் ஈடுபடாமலும் வாழுக என்கிறார் சுவாமிகள்.

இவ்வண்ணம்,

ஒத்தன ஒத்தன ஊரவர் பேசிடச்
சித்தந் தெளிந்து சிவாய நமவென
நின்று மிருந்துங் கிடந்தும் நினைந்து
பொன்றும் உடலைப் போற்றுதல் ஒழிந்து
நன்மை தீமை நாடா தொருவி
அன்னை போல அன்பிற் சிறந்து
பின்னை ஒன்றும் பேசா தடங்கி
என்றும் வாழ்ந்தினி திருத்தல் இன்பமே.

ந, ம, சி, வ, ய எனும் எழுத்துக்கள் விளக்கும் பொருளை பாட்டு 1இல் காண்க. எழுத்துக்களில் உள்ள பொருளை தனித்து விளங்கி ஒருங்கே அதனுண்மை உள்ளத்திலுறைய உணர்ந்துணர்ந்து சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனைதனையே மந்திரமதனில் பஞ்சமந்திரம் எனும் உண்மை விளங்க எண்குணமும் உடைய இறைவனே உள்ளத்தில் குடிகொண்டனன். முக்குணமும் பாழாய்ப்போக எண்குணத்தானே செயல்புரிகிறான் எனுமுண்மை தானே காணவும். உலகினர் பேசவும், வாழ்வீர், 'எண்ணில் பல கோடியுயிர்கள் அத்தனைக்குங் கண்ணிற் கலந்த கற்பகமே' எனும் பொருளுடன் விளங்கும் அன்னையே எனும் பொருளாகவே யான் என்றும் விளங்க வேண்டும் என்கிறார். சித்தந் தெளிந்து சிவாய நம என்று சுவாமிகள் கூறுவதை உள்ளத்தினுள்ளே தான் ஊறுஞ் சிவானந்த வெள்ளந் துளைத்து விடாய் தீர்வது எந்நாளோ என்று தாயுமானவர் தருவதைக் காண்க.

'நீக்கி மலைக் கட்டறுத்து நேரே வெளியிலெய்மைத்
தூக்கி வைக்குந் தாளைத் தொழுதிடு நாள் எந்நாளோ''

[எந்நாட்கண்ணி 1 - 3)

7 தன்னை அறிந்தால் தவம்வேறில்லை

29 தன்னை அறிந்தால் தவம்வே றில்லைத்
தன்னை அறிந்தால் தான்வே றில்லைத்
தன்னை அறியச் சகலமு மில்லைத்
தன்னை அறிந்தவர் தாபத ராமே.

பாட்டு 1 விளக்கம் என்னை எனக்கறிவித்தான் காண்க: முன்பாட்டில் 28 ல் தன்னை அறிக தானே ஆகுக என்னும் பாட்டின் பொருளையே தொடருகிறார். ஜீவன் முத்தன் நிலையில் நின்றே எப்பொருளிலும் வியாபியாயிருக்கும் அன்னையையும், இணைபிரியாது விளைப்பயன் என்னும் அம்பலத்தே முதல்வனையும் இயக்கியும் ஆனால் ஈடுபடாது அப்பால் பட்டவனுக நிற்கும் சொக்கநாதனையும், பொற்றூணிலும் பின் பொன்னம்பலத்திலும் (விளக்கம் பாட்டு 25 ல் காண்க) கண்டு தரிசிக்கும் நிலையே இது. இந்நிலையில் இருந்து இன்புற்று வாழும் நிலையைத்தான் 'வேறில்லை, சகமுமில்லை, எல்லாம் பொன்னம்பலத்தின் கண் ஒடுங்குமே' என்பதாகி சிவன் முத்தனுய் சோம்பல் குடி கொள்ள இருந்தார். திருமூலர் கூறுவதைக் காண்க

"இருந்தார் சிவமாகி எங்கும் தாமாகி
இருந்தார் சிவன் செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத்தி யல்பைம் குறித்தங்
கிருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே" (1.71) (1)

பொன்னை யன்றிப் பொற்பணி யில்லை
என்னை யன்றி ஈசன் வேறில்லைத
தன்னை யன்றிச் சகம் வேறில்லைத
தன்னை யறிந்தவர் தத்துவாதீதரே.

சுவாமி சிற் பவானந்தர் பிரம பிரேமை சொரூபமாயிருக்கிற பக்தி யோகத்தால் யார் ஒருவன் அனேத்தையும் நாராயண சொரூபமாகக் கருதி அந்தர் முக திருஷ்டியில் ஆத்மானுபவத்யானம் செய்துகொண்டே இருக்கிறனே அவன் பிரம்ம சொரூபம் ஆகிறன் என்று தருகிறார்.

மாறுத பக்தி யோகத்தால் என்னை யார் உபாசிக்கிறனே அவன் இக்குணங்களை முற்றும் கடந்து பிரம்மம் ஆவதற்குத் தகுதி உடையவனுகிறன். (கீதை 14 – 26)

பக்தனுக்கு ஈஸ்வரன் பல்வேறு உருவங்களில் தோன்றுகிறன்; ஆனால் சமாதியில் பிரம்ம ஞானத்தை அடைந்தவனுக்கு அவன் அகண்ட நிராகர நிற்குணப் பிரம்மமாக இருக்கிறன். இதில் தான் ஞானமும் பக்தியும் சமரசப்படுகின்றன.

[ஸ்ரீ இராமகிருஷ்ணர் உபதேசம்]

யோகத்தின் பயனுகச் சமாதியடைந்த உண்மை ஞான சுப மான பிரம்மமாக விளங்கவே அந்நிலையில் நிற்கும் சுவாமிகள் பிரம்ம ஞான சொரூபமாக விளங்கும் தன்னையே பக்தியுடன் பேணி, வேறேர் பக்தி உலகினிலில்லை என்கிறார்.

31 ஆதியும் இல்லை அந்தமும் இல்லை
நீதியும் இல்லை நெறியும் இல்லை
சாதியும் இல்லைச் சமயமும் இல்லை
ஓதி உணர்ந்தவர் உறுதி மொழியே.

முக்குணங்களால் கட்டுண்டு அஞ்ஞானத்தில் இருப்பவர்களுக்கு மானம், அவமானம் நட்பு, பகை தூநெறி தீநெறி இனியது பொல்லாதது, மண் பொன் கல் எனும் வேறுபாடுகள் உண்டு; ஆனால் பிரம்ம ஞான சொரூபமான தன்னையே கண்டு வித்தியாசமொன்றும் இல்லாமல் சீவிப்பவனே ஜீவன் முத்தன்.

துன்பத்தையும் இன்பத்தையும் சமமாகக் கண்டவன் ஆத்மாவில் நிலைத்தவன். மண், பொன், கல்லை நிகராகக் காண்பவன்; இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றுக ஓர்பவன் பேரறிஞன்; இகழ்ச்சி புகழ்ச்சியை ஒரே பாங்குடன் பார்ப்பவன்; மான அவமானத்தை நிகராக நினைப்பவன். நணபனிடத்தும் பகைவனிடத்தும் ஒரே பாங்குடையவன்; தனக்கெனச் செயல் புரியாதவன் யாரோ அவன் குணாதீதன் எனப்படுகிறான். (கீதை 14 — 24, 25) (3)

32 நன்மையுந் தீமையும் நங்கட் கில்லைத்
தொன்மையும் புதுமையும் தூயோர்க் கில்லை
அன்னையுந் தந்தையும் ஆன்மாவுக் கில்லைச்
சொன்ன சுருதியின் துணிபிது வாமே.

(கீதை 24, 25 முன் பாட்டில் காண்க) அன்னையும் தந்தையும் ஆன்மாவுக்கில்லை யென்று பிரம்ம ஞான சொரூபமான ஆத்மனைத் தன்னைப் பொன்னம்பலத்தில் கண்ட சுவாமிகள் கூறுவதை ஆராயுங்கள். ஆண்டவன் அடிமையாம் அகப்பணியில் இரு பொருளும் முதன்மையெனக் கினைத்து முனைப்பதற்கு ஏது ஏதுமில்லையே; ஆருயிர் தன்னை நானெனவும் உயிர்க்குயிராய் நிற்கும் பேருயிராம் சிவனை நீயெனவும் வேறு நிற்கும் நிலையில் பேசாது நடுவாகிய பொதுநிலையில் பேச்சுறுதியான தான் சும்மா இருக்கும்நிலையதே யது,

"நானெனவும் நீயெனவும் இருதனமை நாடாமல் நடுவே சும்மா
தானமரும் நிலையிதுவே" என்று தாயுமானவர் தருகிறார்.

மறை முடிவாம் வேதாந்தமும் முறை முடிபாம் சித்தாந்தமும் பள்ளி வகுப்புப் போன்றமைந்து ஈற்றில் ஈனும் பிரம்ம ஞான அத்வைத நிலையையே சுருதியில் சொன்ன துணிபிதுவே. (4)

33 காலமு மில்லைக் கட்டு மில்லை
மூலமு மில்லை முடிபு மில்லை
ஞாலமு மில்லை நமனு மில்லைச்
சால அறிந்த தவத்தி னோர்க்கே.

தோற்றமும் இறுதியுமில்லாது எங்ணு முழுநிறைவாய் எண்ணில் கோடி உயிர்கள் அத்தனைக்கும் உயிர்க்குயிராய் எல்லாவற்றிற்கும் முதல் வாழ்வாய், வேறு பிரிக்கப்படாத ஜோதியாந் தன்மையினால் காலமுமில்லை மூலமுமில்லை; ஆதிஅத்தமில்லாத ஜோதியே திருவைந்தெழுத்துச் ஜோதி. அதிற் கலந்தவராதலின் முடிவுமில்லை ஆதியாம் வாழ்வாய் அகண்டிதமாய் நின்ற பரஞ்சோதி நீ என்று தாயுமானவர்

கூறுகிறார்: இருள் சூழ் ஞாலம் என்பர்: நாம் படுந் துன்பமெல்லாம் மும்மலப்பிணிப்பாலுண்டாவன. அவ்விருள் அகன்ற ஆத்மனுக்கு இன்பமுமில்லைத் துன்பமுமில்லை. முன்பாட்டு விளக்கம் கீதை 24, 25, 26 காண்க. பிறவிக்கட்டுமில்லை உலகியல் வாழ்வெனுங் கட்டுமில்லை என்கிறார். பாசத் தொடர்பாக விளங்குவனவெல்லாம் அற்றுப் பஞ்சாகப் பறந்து போகவே உலகியல் வாழ்வின் கட்டினின்றும் விலகியவராவார். மேலும் திருச்சிற்றம்பலமெனுஞ் சித்தாகாச வெளியாய் அருளில் வெருவும் அன்பர் தேகத்துக்கு மாயாகாரிய இயல்பு ஒழிந்தும் திரு அருள் ஒளி நிறைந்தும் விளங்குந் தன்மையினால் சால அறிந்த ஞானிக்கு ஞாலமுமில்லை நலனுமில்லை என்றே முழுப்பாட்டையும் அதனுள் ஒடுக்குகிறார்.

தாயுமானவர் தருவது;

"ஆதியந்தங் காட்டாத கண்டிதமாய் நின்றுணர்த்தும்
போத வடிவாம் அடியைப் போற்றும் நாள் எந்நாளோ"
(எந்நாட் கண்ணி தெய்வ வணக்கம் 8)

"வெளியாய் அருளில் விரவும் அன்பர் தேகம்
ஒளியாய்ப் பிறங்கியதும் உணடோ பராபரமே"
(பராபரக் கண்ணி 190)

"அல்லல் என் செய்யுமருவினை என் செயும்
தொல்லை வல்வினைத தொந்தந்தான் என்செயும்
தில்லைமாநகர்ச் சிற்றம்பலவனுக்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே" (5-1-4) [5]

8. இன்பம் முப்பது

34. வேத சாத்திரம் கற்றிடல் இன்பமே
வீணர் நட்பினை விட்டிடல் இன்பமே
மாதம் மும்மழை பெய்திடல் இன்பமே
மாதராசையை நீக்கிடல் இன்பமே
நாதன் நாமத்தை ஓதுதல் இன்பமே.
நாம் சிவமென நாடுதல் இன்பமே
பேதம் யாவையும் நீங்கு பெரியவ
பெருமை சேர்குரு புங்கவ சிங்கமே.

மறைகளில் கூறிய உண்மைகளை ஆராய்தல் வேண்டும்; ஆராய்ந்தறிந்த உண்மையினை நம் வாழ்வில் பரீஷித்தல் வேண்டும். அவ்வாறு கண்டுள்ள வழியில் நின்று ஒழுகுதலே சித்தாந்த முறை; மறை முடிவாம் வேதாந்தமும் முறைமுடிவாம் சித்தாந்தமுமாக விளங்கும் மலர்ப்பாதமே அவன் இணையடி; அவ்விதம் அவன் பாதத்தை ஏத்தித் தொழவே இறைவனன்பு நம்மைத் தேடி அணுகும்.

திருவள்ளுவ நாயனார் ''நெஞ்சே! யான் காமம் வெட்கம் இவ்விரண்டையும் தாங்கமாட்டாதவளாய் இருத்தலால் அவற்றுள் யாதாயினும் ஒன்றை விட்டுவிடு என்று தலைவி கூறினாள்'' எனும் பொருளுடன்,

''காமம் வீடுஒன்றே நாண்விடு நன்னெஞ்சே
யானே பொறேன் இவ்விரண்டு': (குறள் 1247)

என்றும் ''தலைவரிடம் தவறில்லா விடினும் அவர் அருளும் முறை நமக்கு 'ஊடலை உண்டாக்குகிறது'' எனும் பொருளுடன்

''இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர் அளிக்கும் ஆறு'''

என்று பாடினீர் காண்க. (குறள் 1321)

உண்மை விளங்க மாதராசை வீணர் நட்பு முதலிய மண் பெண் பொன் எனும் மூன்றிலுமுண்டாகும் காம வேட்கையை விட்டொழித்து மாயையின் இயல்பு எனும் மும்மலத்தை அகற்றல் வேண்டும். இறைவனை காதலனிடம் அவற்றை ஒப்பித்தலே சித்தாந்த முறை. அவ்வழி நிற்பின் காதலனின் அன்பு ஆறு சிவானந்த வெள்ளம் இதயத்தே பெருகும் ஐந்தெழுத்தின் கருத்தையும் உபாசிக்கும் முறையையும் பாட்டு (1) இல் காண்க.

பஞ்ச மந்திரத்தை ஓதுதல் இன்பந்தரும்; நாளடைவில் நாம் எப்பொருளிலும் நாத ஒலியாக விளங்கும் உயிர்க்குயிராம் நாதனையே காண்பாய், தற்பரம் எனும் நிலையே அவற்றின் நோக்கு. (1)

35 எங்கும் ஈசனைக் காணுதல் இன்பமே
ஏதி லார்பால் இரங்குதல் இன்பமே
பொங்கு கோபத்தைப் போக்குதல் இன்பமே
புவியின் ஆசையை நீக்குதல் இன்பமே
தங்கும் யோகத் தமருதல் இன்பமே
தானே தானுய்த் தழைத்திடல் இன்பமே
இங்கெ னக்கின்பம் எளிதில் விளக்கிய
என் குருபர புங்கவ சிங்கமே!

முன்பாட்டில் மயக்கத்தைத் தரும் பொருட்களில் இரண்டை எடுத்து முனி என்றார். இங்கும் தொடர்ந்தே காண்க. ஐம்புலன்களும் அந்தக் கரணங்களுமொன்றுசேர்ந்தே மூன்று குணப் பொருட்களை அறம், பொருள், இன்பம் என்னும் முக்குண விகாரத்தையு முண்டாக்குவன. எண்ணங்கள் மூதல் தோன்றுவன. இவ்வெண்ணங்களே மாயையின் வடிவம், இவ்விகார ரூபமனேத்தையும், மாயை எனுங் கண்ணாடியில் தோற்றுவிக்கும் தொழில் மூன்று. படைத்தல், காத்தல், அழித்தல்; இம்மூன்றுக்கும் கர்த்தாவாக விளங்குவோர் பிரமா, விஷ்ணு, உருத்திரன் எனும் மூன்று தேவர்களுமே;

உண்மையில் விகாரமே கிடையாது, மாயையின் கண்ணடிக்கு அப்பால் நின்று பார்க்க வேண்டும். எண்ணில் பல கோடி உயிர்கள் அத்தனையும் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் மூன்று தொழில் களிலும் ஈடுபட்டு மாயை எனும் கண்ணடியில் வேறுபாடுகளுடன் காணப்படுகின்றன. இங்கே தாயுமானவர் தரும் உண்மையை ஆரா யுங்கள்.

"உணர்த்தும் உனை நாடாதுணர்ந்தவையே நாடி
இணக்குறும் என்ஏழமைதான் என்னே பராபரமே'

(பராபராக்கண்ணி 273)

என்பதால் நாம் ஐம்பொறிகளாலும் உணர்ந்தறிந்த பொருட்கள் மாயையின் ரூபங்கள் அப்பால் உண்மைப் பொருளான உயிர்க்குயிராம் நாதன் இவற்றை இயக்குபவனைக் காண வேண்டும் என்கிறார் (380) ஏதிலார் பால் இரங்கி பொங்கும், கோபத்தைக் கலைத்து உயிர்க் குயிராம் நாதனையே மாயையின் தோற்றத்துக்கு அப்பால் அறிவினால் அறிந்து புவியின் ஆசையை நீக்குதல் இன்பம் என்கிறார். உயிர்க்குயிராம் நாதனைக்கண்டும் பேதம் ஏதும் இல்லாத நாதன் எப்பொருளிலும் வியாபியாயிருக்கும் அம்மையையு மப்பரையும் பஞ் சாட்சரத்தை உச்சரித்து துதித்தும் சித்தாந்த முறைப்படி பூசித்தும் பாதசேவை புரிதல் வேண்டும். இவ்வண்ணம் அறிவினால் உயிர்க்குயி ராம் நாதனை அறிந்து பூசிக்கும் யோகத்தில் நிலைக்கவேணும்; மனந்தானே அடங்க வேனும், ''நான், நான்'' எனும் ஆணவம் விட்டு நீங்கியே 'இறைவனுடைய நாடகமேடையில் நடிக்கும் நடிகரே' எனும் எண்ணத்துடன் நாம் எம்மை ஒப்படைக்கவேணும் 'சித்த மௌனம் செயல் வாக்கெலாம் மௌனம் சுத்த மௌனம் என்பால் தோன்ற' நாடகமேடையில் நாடகத்தைத் தரிசித்தும் ஆசிரியரின் வித்தையையும் கண்டு இன்புறுவோமே. (8)

36. அஞ்செ ழுத்தினை யோதுதல் இன்பமே
அறிவால் அஞ்சையும் வென்றிடல் இன்பமே
நெஞ்சில் வஞ்சகம் நீக்குதல் இன்பமே
நியம நிட்டைகள் ஆற்றுதல் இன்பமே
தஞ்சமென்றடி சாருதல் இன்பமே
தன்னைப் போற்பிறர் பாலன்பில் இன்பமே
அஞ்சல் அஞ்சலென் றருளிய ஐயனே
ஆண்மை சேர்குரு புங்கவ சிங்கமே.

சுட்டுப் பொருளாகவும் சிற்றறிவால் அறியும் பொருளாகவும் இறைவனை நாடாதே; ஓர் தாய் தன் சிறு குழந்தையை எவ்வாறு உணர்ந்தறிகிறாளோ அவ்வுண்மையான அன்பு வடிவாக நாடகத்தை யும் ஆசிரியரையும் நேசிப்பதன்றி, நாடகத்தில் ஈடுபட்டு மேடையி லேறி மாயையில் சிக்குண்ணுதலை விடவேண்டும். அந்த அறிவினால் நாதனை உணரும் அறிவு வளர வேண்டும். உனவின் உருவினை

உண்டபின்தான் அறியலாம். அவ்வாறே இறைவன் அன்பும் அறிவும், பஞ்ச மந்திரத்தை, அதனுள் மந்திரந்தருமறிவினுள் நின்று, நினைந்து நினைந்துருகி ஓதவே வளரும். 'உள்ளபடியே யாதுமென' எனும் உணர்வு தோன்றி அங்கே நிற்கும். மனம் அடங்கும் அறிவை அறிவாலறியும் தன்மையைக் காட்டி நிற்பவனே இறைவன். உணவின் ருசியை உண்டவனே அறிவான். மற்றவர்கள் எவ்வாறறிவார்கள்: பாத சேவை புரிந்த மனம் அடங்க, வஞ்சகம், பொறுமை, கோபம். அவா முதலியன தானே அவனே விட்டகலும்; காலையும் ,மாலையும் சந்தியாவந்தனம் செய்யவேண்டும். பஞ்சாட்சரம் ஓத வேண்டும்: தனிச் சரண் சரணமெனுங் காதலுடனே அவனே நாடவேண்டும். அவனும் பன்மடங்கு அன்புடனும் வேகத்துடனும் நம்மை அணுகுவான். (3)

37. ஒன்றி லொன்றி யிருந்திடல் இன்பமே
ஓம் சிவாய நமவெனல் இன்பமே
என்றும் வாழக் கருதுதல் இன்பமே
எல்லாம் ஈசன் செயலெனல் இன்பமே
நன்று தீதை யகற்றுதல் இன்பமே
நல்லோர் பாதத்தை நண்ணுதல் இன்பமே
ஒன்றும் நீயலை யென்றெனக் கோதிய
உண்மை சேர்குரு புங்கவ சிங்கமே.

மூன் பாட்டு விளக்கம் தொடர்ந்தே பாதசேவை புரியுமன்பர்க்கு இயல்பாக உண்டாகும் பெருங்கருணையும் அறிவை அறிவினுலறிந்து இறைவனறிவு (முன்பாட்டு விளக்கம் காண்க) (தாயுமானவர் வெளியாய் எனும் பாட்டை 33-ம் பாட்டு விளக்கம் காண்க) வளர தில்லை மன்றத்தில் தன்னை அறிவினுல் கண்ட அன்பர்க்கு எல்லாம் ஈசன் செயலென உணர, அறிவினுலறிய, தன்னை அதனுள் கண்டு 'தன்னையும் எல்லாமும் ஈசன் செயலே" எனும் அறிவு தன் வயத்தனுகவே மும்மலனமாக விளங்கும் உள்ளத்தே நின்று ஒளிதர, நன்றென்றும் தீதென்றுமில்லாமல் மேடையில் இறைவன் நாடகத்தைத் தரிசித்து அந்த ஒரே ஒளியே எங்கும் 'எண்ணில் பலகோடி உயிர்கள் அத்தனைக்கும் கண்ணிற் கலந்த கற்பகமாக விளங்கும் ஒளி, என்றும் கண்டு இறைவனே உருவெடுத்தால் போன்று எனும் சிவகுருவின் பாதத்தை நண்ணுதல் இன்பமே. இருவர் உள்ளமும் ஒன்று சேர (ஞானகுரவன் பாட்டு 7 இல்; காண்க) இருந்திடல் இன்பமே. (9)

38. சுழிமுனைக்குள் ஒடுங்குதல் இன்பமே
சோதி ரூபத்தைக் காணுதல் இன்பமே
பழியும் பாவமும் நீக்குதல் இன்பமே
பதியி லேயிளைப் பாறுதல் இன்பமே
வெளியி லேயொளி காணுதல் இன்பமே

விண்ணைப் போல விளங்குதல் இன்பமே
ஒழிக உன்பவம் என்ன உரைத்திட்ட
ஒருமை சேர்குரு புங்கவ கிங்கமே.

(முன் பாட்டு விளக்கம்) மனமடங்க மேலே சென்று வெளி யேறும் மூச்சுக்காற்று கீழ்நோக்கிச் சென்றடங்கும், நிட்டை கூடும்: தில்லைத் தரிசனம் காணுதல் இன்பமே.(பாட்டு 19 விளக்கம் காண்க) நாடக மேடையில் இறைவனை ஆசிரியர் எழுதியதும் முன்பழக்கிய நாடகத்தை நடிப்பதில் திறனுடன் நடித்து இன்புற்று தன் நடிப்பில் இன்புற்று இளைப்பாறி நிற்கும் நிலையில் பழியும் பாவமெங்கே? ஒன் றுமே இல்லை. (விளக்கம் பாட்டு 20) சித்தாகாச வெளியும் அவற் றில் முறையே தில்லைத்தரிசனமும் ஐந்தெழுத்துச் ஜோதியும் காணு தல் இன்பமே: இதன மேல் மேன்மையோ வேறு பதவியோ இல்லை என்கிறார். (5)

9. இன்ப துன்பம் இவையே மாயை

இன்ப துன்பம் இவையே மாயை
அன்புசேர் ஆன்ம அறிவே வடிவம்
ஆதலால் நின்னை அவையோ தீண்டா
கானல்நீ ரானிலங் கரைவது முண்டுகொல்
ஞான சற்குரு நற்றிருப் பாதம்
ஆனமட்டும் அகங்குழைந் துருகிப்
போன காரியம் புந்தியில் நினையா
திடைவி டாதுநின் றேத்திப் போற்றி
மடையினீர் பெருகி வழிவது போல
இடையறு தினிய ஏகாந்த ஞகிச்
சங்கற்ப விகற்பந் தவிர்ந்திடு சமாதியிற்
பொங்கிடும் அமிழ்த போனக மருந்தி
இருந்தாங் கினிதே இருந்து
திருந்திய விதேக முத்திசேர் குவமே

மாயை மயக்கத்தைத் தருவது; சுத்த மாயை, அசுத்தமாயை பிரகிருதிமாயை என மூன்று வகைந்தன; சுத்தமாயை, உலக கிருத் தியங்கள் எல்லாம் இறைவனுடைய சங்கற்பத்தின்படி நிகழ்வன; நிகழும் ஒழுங்கே சுத்தமாயை; மாயைப் பிரபஞ்சம் என்பர். பொறி புலன்களால் ஏவப்பட்டுக் கருமம் புரியும் ஆன்மா முக்குணங்களி லீடுபட்டுள்ளது. பிரகிருதியிலிருந்து உண்டான சத்வம் ராஜதம், தாமசம், எனும் முக்குணங்களும் அழிவற்ற தேகியை, ஆன்மாவை. தேகத்தில் பிணிக்கின்றன. இக்குணங்கள், ஆன்மாவை படைப்புக்

கடவுளராகிய பிரமா, முதலியோருடைய ஆளுகையில் கொண்டு சென்று' மாயப் பிரபஞ்சத்தை மேலும் மேலும் உண்டாக்குந் தன்மையன; அவர்கள் பஞ்ச சக்திகளாக விளங்குவர். துர்க்கை, ராதை, லக்ஷ்மி, சரஸ்வதி, சாவித்திரி இவைகளே ஐந்து வகைப் பிரகிருதி என்பர். மேலும் வேறுபாடுகள் விபரீத முண்டாக்கும் மோகம் ஜகத்ரூபத்தைத் தோற்றுவிக்கும் மாயை; ஆன்மாவி னியற்கை உணர் வழிக்கையால் அவித்தை; சிவ சைதன்யத்தை மறைத்தலால் தமம்; சதீது ரூபத்துக்கு அந்நியமாதலால் அநிர்த் தம்; எனுமைந்து பிரிவுகளுண்டு. மேலும் இம்மாயை அஞ்ஞானம் பொய் அயர்வு மோகம் வைசா சூந்நியம், ஆச்சரியம் பயம் இவற் றையு முண்டாக்குவன. மேலும் காலம், நியதி, கலை, வித்தை, இராகம் புருடன் முதலாய வித்யாதத்வ ஆன்ம தத்வங்களையு முண் டாக்குவன; இவற்றின் பலாபலன் இன்பதுன்பம், தேகத்துக்குரியன, ஆத்மாவின் இயல்பு இறைவனை அடையும் வழி நிற்றலே. ஆராயுங்கள்.

உடம்பை இயக்குவது ஆன்மா, ஆன்மாவை அறிவிப்பதும், இயக்குவதும் இறைவன். ஐயன்களே என்று கூறுவர். [பாட்டு 2 ல் விளக்கம் காண்க] இயற்கையை, சக்தியை சொரூபத்தை அறிவிப்பது அறிவு; அந்த அறிவு சுட்டுப்பொருளல்ல; ஜம்புலன்களால் அவற்றை அறிய எண்ணுவது வீண்; அறிவை அறிவாலேயே தானறியலாம். அதே ஆத்ம ஞானம்; அறிவு வளர்ந்து முதிர்தல் பிரம்ம ஞான சொரூபம்; [பாட்டு 30 விளக்கம்] மேலும் ''ஆத்மா ஒன்றிலேடும் பந்தப்பட்டதன்று; இன்பம், துன்பம், பாப புண்ணியம் ஒருபோதும் ஒரு விதத்திலும் ஆத்மாவைச் சார்வதில்லை. ஆனல் அவைகள் சரீரமே நாங்கள் என்று கருதியிருப்போரைச் சார்கின்றன. புகை யானது சுவரைக் கரியாக்குமே தவிர, அதனல் சூழப்பட்டிருக்கும் வெளியிடத்தைக் கரியாக்காது'' [ஸ்ரீ இராமகிருஷ்ணர் உபதேசம்]

அவ்வாறே ஆத்மன் இருக்கும் உடம்பைப் பாதிக்கும் புண் ணியமும், பாபமும் கொல்லுந் தொழிலும், கொல்லப்படுந் தொழி லும், அறிவுப் பெருவெளியாகிய ஆன்மாவை சார்தலில்லை; இது பெருமுண்மை, உலகியல் வாழ்வில் ஈடுபட்டுக்கிடக்கும் மாந்தர் சில விஞடிகள் மட்டுமே இறைவனை நினைவர்; இவையை கானல் நீர் என்கிறார், கானல் நீர் எத்தகையது? தோன்றியபோதே மறையுந் தன்மையது. சிறு பொருளையுங் கரைக்குந் தன்மையற்றது. அது போல் துளி, துளி இறையன்பு பயனற்றது. சற்குரு பாதமடைதல் முன் தோன்ற, அவர் கூறும் வழி நின்றே, மூட பக்தியுடன் இறை வனைத் தொழுது வணங்கவேண்டும்; [இன்பம் முப்பது, என் குருப ரசிங்கமே, ஞானகுரவன் எனும் பதிகங்களின் விளக்கம்] இடை விடாது எந்த நேரமும் பஞ்ச மந்திரமோதியோ அவர் புகழைப் பாடவோ மடையினீர்ப் பெருகி வழிவது போன்ற அறிவே சொரூப நிலையில் நான் எனுமுடம்பை மறந்து சிவத்தியானத்தில் ஈடுபட வேண்டும். பிராணமய கோசத்தில் தோன்றும், அலைகடல் என்னும் இறைவனே அகம் எனும் சிந்தையராகி பாடியோ, பாடலுடன் ஆடல் புரிந்தோ சித்தாந்த முறை நின்று தொழுதேத்தி, ''அலை கடனத னுளே நின்று பொருந்தவா கயிலைபுகுநெறி இதுதான் காண்'' என்று

விழிநீர் பெருகப் போற்றித் துதிக்கவேண்டும். தன்னை மறந்து 'உலகியல் அம்மை அப்பர் முன்னே தன்னை இழந்து நிற்கும் நிலையில், தற்பரன் எனும் நிலையில், நின்று அழுது புலம்பியே அவன் பாதமடைதல் வேண்டும். சமாதியில் தன்னைக் காண வேண்டும். கானல் நீர் கொண்டு கரைக்க இயலாத மலப்பிணிப்பை, மடைநீர் கொண்டு கரைக்க வேண்டும். ஈடேற வேண்டும் என்கிறார்.

10. சிவத்தைக் கண்டிடர் தீர்வது வீரமே

40. சிவத்தைக் கண்டிடர் தீர்வது வீரமே
பவத்தை நீக்கிப் பணிவது வீரமே
தவத்தைச் செய்து சலிப்பறல் வீரமே
உவத்தல் காய்தல் ஒறுத்திடல் வீரமே.

ந, ம, சி, வ, ய என்னும் எழுத்துக்கள் தரும் பொருளை பாட்டு (1) விளக்கத்தில் காண்க; ய எனும் மலப்பிணிப்பினால் பீடிக்கப்பட்டுள்ள ஆன்மா ந என்பதால் விளக்கப்படும் வழிநிற்ப (முன் விளக்கம் (1)! ம என்னும் மலம் நீக்கப்பெற்று வ என்னும் சக்தி வடிவினதாகவும் அப்பால் நின்று இயங்கியும் பீடிக்கப்படாது விளங்கும் சி என்னும் சிவனையும் அறிக. சிவ சிவ என்னும் வடிவாம் உலகினை உண்மையாக அறிவினால் அறிந்து அவ்வுலகினை அம்மையும் அப்பருமாகத் தரிசிக்கும் வடிவம். திருமூலர் தருவதை அறிவினால் ஆராய்ந்து அறிக. [பாட்டு (5) அணுவுள் அவனும்]

''ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள் ஈசனோடாயினும் ஆசையறுமின்கள், ஆசைப் படப்பட ஆய்வருந் துன்பங்கள் ஆசை விட விட ஆனந்தமாமே.'' இவ்வரிகளால் கூறியபடி மண், பெண், பொன் எனும் மூவாசையினையும் ஒறுத்து ஐம்புலன்களும் அந்தக் கரணங்களும் ஒன்று சேர்ந்த உடம்பு ஒடுங்கி சிவ சிவ, எனும் இணையடிமேல் அன்பு பூண்டு பஞ்சமந்திரத்தை ஓதியோ அவன் புகழைப் பாடியோ இடையறாது அவன் தியானத்தில் தவம் கிடந்து தன்னுடைய பெருமையோ ஆணவமோ சற்றுமில்லாது ''ஞாலமே கரியாக உன்னை நச்சி நச்சிடும் காலமே'' என்று மாணிக்கவாசகரால் கருவதை ஒத்த நிலையில் முன் கூறிய சிவ, சிவ எனும் நிலையை தம்மறிவினால் அறிவதே வீரம்.

''பிணிக்கும் கயிறு போன்ற ஆசைகள் குழப்பங்கள் ஆகிய கெட்ட வாசனைகள் முதலியவற்றை போக்குவதில் முனைந்துள்ள தெய்வீக வாசனைகளால் திகம்பரனாக மகேஸ்வரனுடைய திருவடித் தாமரை எனது மனமாகிற பெட்டியில் நல்ல குணமுடையதாகச் செய்யட்டும்'' என்று சங்கரர் சிவானந்த லஹரி சு (74) இல கூறுவதையும் அறிக.

41. பொறுமையைப் புறங் காப்பது வீரமே
வறுமை வந்தால் மகிழ்வது வீரமே
சிறுமை நீக்கிச் சிறந்திடல் வீரமே
மறுமை இன்பத்தை நாடுதல் வீரமே.

ஐம்புலன்களும் புத்தியும் அகங்காரமுமான அந்தக் கரணங்களும் கூடியேயுள்ள புறக்கருவிகள் ஒன்றுபட்டு இறைவன்பால் செல்ல 'எல்லாமவனே எல்லாமவன் செயலே' எனும் உண்மை விளங்கவே புறக்கண் இரண்டு முறங்க அகக்கண் திறக்க, சாத்வீகமே உள்ளத்தில் குடிகொள்ளவும், இராசத குணமும் தாமச குணமும் என்னை விட்டு நீங்க வேண்டும். வறுமைப் பிணிவந்து துன்புற மாட்டேன். அதன்கூட வேறும் சிறுமை வரினும் அவற்றை மறுமை இன்பமாகிய மோட்ச வீட்டுக்கு வித்தென்று பேரின்ப உணர்ச்சி பொங்கி எழ அவனை போற்றி ஏற்றித் தொழுவேன் என்கிறார். தாயுமானவர் ''மிக்க ஏழை மதியினையுடைய இவன் திருவருள் எவ்விடத்து, எவ்விடத்து என்றும் 'மேலுக்கு வித்து' என்றும் சிவஞான சித்தியார் நல்லுரை போன்று தானும் எண்ணும் போதெல்லாம் 'வறுமைப் பிணியோ இகழ்ச்சியோ வந்தணுகும் போதெல்லாம்' அவ்விடத்து, அவ்விடத்து அவனின் பேரமிழ்தூட்டுவான்'' என்னும் பொருளை விளக்குகிறார் காண்க.

எங்கே யெங்கே அருளென்றனை யிரந்தான்
ஏழையிவனன்றி எனவுமெண்ணி யிச்சை கூரும்
அங்கே அங்கே யெளி வந்தெனை ஆண்ட
ஆரமுதே உனைனைக் காண்பான் அலந்து போனேன்.

[கல்லாலின் 7]

முக்குணங்களாலும் ஆள் ஆளப்பட்டு மேலதிகமாய் இராசதமும் தாமசமுமே ஆட்கொண்டு சிற்றின்ப உணர்ச்சியை நாடிய உடம்பு அவற்றை ஒழித்து ''நானெனு மென்னை சிவனே'' வந்து ஆட்கொண்டு அஞ்ஞான இருளை நீக்கி யருள் தந்து, வறுமைப்பிணியும் இகழ்ச்சியும் மேலுக்கு வித்தாகிய திருவருள் வடிவே என்று எண்ணுவது வீரமே'' என்னும் பொருளையே தருகிறார். (5)

42. ஐம்பொறியை யடக்கிடல் வீரமே
வெம்ப கையை விடுவது வீரமே
நம்பன் பாதத்தை நண்ணுதல் வீரமே
தம்மைத் தம்மால் அறிவது வீரமே.

[முன்பாட்டு விளக்கம் காண்க]

''அர்ஜுன இந்திரியங்களை மனத்தால் அடக்கி பற்றற்று கர்மேந்திரியங்களைக் கொண்டு கர்ம யோகம் செய்பவன் மேலானவனே' என்று கீதை 3 ... 6 இல், கிருஷ்ண பகவான் அருச்சுன

னுக்குச் சொன்ன உபதேசத்தையே கூறுகிறார். மண், பெண்; பொன் இம்மூன்றுமே மனிதனுக்கு உண்டாகும் இச்சைக்கும் அவற்றாலுண்டாகும் பகைக்கும் காரணம். ருசியான உணவையும் ரோசா மலரையும் இறைவன் பாதார விந்தத்தில் வைத்துப் பூசிக்க நாளடைவில் ஞானக்கண் திறபட புறக்கண்ணுறங்கும். முக்கட்கருணைப்பிரான் தண்ணார் கருணை வெள்ளம் பெருகும். அவன் பாதார விந்தமே கிட்டியது. போற்றி ஏத்தித் தொழ அம்மையும் அப்பருமாகவே உலகினில் உயிர் உள்ள பொருளையும் உயிரில் பொருளையும் மொன்றுகூடியே 'எல்லாமு மவனே' என்று தொழ தன்னையுமாங்கே தற்பரனுகவே காணலாம். (3)

43 கண்ணைப் போலறங் காப்பது வீரமே
மண்ணைப் பெண்ணை மறப்பது வீரமே
விண்ணைப் போல விளங்குதல் வீரமே
எண்ணம் யாவும் இறப்பது வீரமே.

முன் பாட்டில் விளக்கிய வண்ணமே மண், பெண், பொன் எனும் மூவாசையுந் துறக்க வேண்டும். காம இந்திரியங்களை கர்மயோகம் செய்யப் பாவிக்க வேண்டும். அவ்வுண்மையைச் சாதிக்க வேண்டும். நான் எனுமாணவ மலப்பிணிப்பு விட்டு நீங்கப் புத்தியாகிய கன்னிகையைப் பார்வதியுடன் கூடச் சிவனுக்குத் தொண்டு புரிய அன்பு கொள்ள வேண்டும். கிருஷ்ணர் அர்ச்சுனனுக்குக் கீதையில் ''பிரகிருதியின் குணங்களால் யாண்டும் கர்மங்கள் செய்யப்படுகின்றன. அகங்காரத்தால் மோகமடைந்தவன் நான் கர்த்தா என்று நினைக்கிறான்; ஆனல் பெருந்தோளுடையாய் குணகர்மத்தின் தத்துவ ஞானியோ குணங்கள், குணங்களில் பிரவாதிக்கின்றன என்று அறிந்து பற்று வைப்பதில்லை எல்லாம் காமமெனக் கர்ப்பித்து சித்தத்தைச் சைதன்னியத்தில் வைத்து ஆசையையும் மமகாரத்தையு மகற்றி மனக் கொதிப்பின்றிப் போர் புரிவாயாக'' என்று கூறும் உண்மையினையே அறவழி என்பர் அறிஞர். இறைவன் நாடகமாகிய உலகினில் எமக்குத் தந்த பகுதியை ஆசிரியரான இறைவனுக்குத் திருப்தி தரும் முறையில் நடிப்பதே நல்லறம். நமக்கென ஓர் எண்ணமும் இல்லை. புத்தியுமில்லை எல்லாம் நாடகாசிரியருடையதே; திறம்பட நடிப்பதே எங்கடமை.

44 ஓதி யோதி உணர்வது வீரமே
சாதி பேதந் தவிர்வது வீரமே
நீதி நூல்வழி நிற்பது வீரமே
ஆதி பாதம் அணைவது வீரமே.

நீதி நூல்கள் இறைவனையடையும் நீதி முறைகளை செவ்வனேயே எடுத்துரைக்கும். தகைமையடைந்து முற்றுந்துறந்தஞானிகளுக்கு நெறியில்லையாம்; திருமூலர் ஒருவரியிலுணர்த்துகிறார். ''நீ நெறி கண்டுளம் நின்மலனுகுமே'' இவ்வுண்மையை விளக்கும் நூல் வேறு அன்பினந்திணை எனும் அகப்பொருளிலக்கணங் கூறும் நூல்.

நீதி நூல்வழி நின்று பாதார விந்தத்தை யடைந்து அவனைப் போற்றி ஏத்தித் தொழுது பேரின்ப உணர்வு மேலிட அன்பினைந் திணை என்னும் அகப்பொரு ளிலக்கணங்களை ஓதி ஓதி வேரூர் நினைவுமின்றி எல்லாமவனேயாய் பேரானந்த வெள்ளத்தில் தத்தும்பிக் கிடக்க என்றே முடிக்கிறார்.

11. எல்லாம் அவன் செயலே கிளியே

45 சொல்லால் வருங் குற்றமெல்லாம்
நல்லோர் பொறுத்திடுவார்
எல்லாம் அவன் செயலே –கிளியே
ஏத்திப் பணிவோமே.

பாட்டு 41 விளக்கம் வாசித்துத் தொடருக. ஏழமையும் இகழ்ச்சியும் மறுமையின்பத்தைத் தரும் திருவருள் வடிவெனக் கொள்ள வேண்டும். இகழ்ச்சியும் புகழ்ச்சியும் நாடகத்தில் நடிக்கும் நடிகர்க்குள் பயனென்றுந் தருவதில்லை. அவ்வாறே உலகியலில் ஈடு படாது எல்லாஞ் சிவன் செயலே என்னும் ஒரு உண்மையையே திடனுடன் கொண்டு பற்றற்று நின்று முன் 43இல் விளக்கிய பிர காரம அறவழி நின்று கர்ம பலனை நாடாது ஊமை எழுத்து எனும் 'ஓம்' எனும் உண்மை விளங்க புத்தியெனுங் கன்னிகையை சிவன் செயல் எனும் பெரும் மந்திரத்தை உதவியாகக் கொண்டு எம் பெருமானை ஏற்றிப் போற்றுவோமே,

"எத்தன்மைக் குற்ற மியற்றிடினுந் தாய் பொறுக்கும்
அத்தன்மை நின்னருளும் அன்றே பராபரமே"

என்று தாயுமானவர் (பராபரக்கண்ணி 80) இல் கூறுவதை அறிக.

46 எல்லாஞ் சிவன் செயலே
எப்படியா யிருந்தாலும்
நல்ல மலரெடுத்துக் – கிளியே
நாமேத்திப் பணிவோமே.

எவ்விதமான சம்பவத்திலும் துக்கமோ சந்தோஷமோ மேலி டும் காலமும், பொருமை வஞ்சகம் சூது தலைநிற்கும் போதும் தாமசம் மேலிட்டு நிற்கும் போதும் ஒரு வழித்தாக நின்று தன்னுடைய கருமத்தைச் சாதிக்க வேண்டும். இறைவன் ஐம்பொறி களையும் அந்தக் கரணங்களையும் ஒன்றுக விளக்கும் மூக்கப் பாம்பை தன்னரையிலும் தோழிலுங் கொண்டு சடையில் பிறைச்சந்திரனை யும் கங்கையையும் தரித்துள்ளார் விளங்கவே நல்ல மலரெடுத்துத் தோழியே நா இறைவனை, பார்வதியுடன் கூடிய பரமேஸ்வரனைத் தொழுவோமே. சிவன் செயலே எனும் ஊன்றுகோலுடன் நம் புத்தி யைத் திடப்படுத்தி இகழ்ச்சியிலும் புகழ்ச்சியிலும் கர்மம் புரிந்து

அவன் பாதம் நண்ணுவோம், மாணிக்கவாசகர் வளம் பொருந்திய பெருந்துறையில் இறைவன் பாதம் நண்ணும் தோணி புறப்படும் துறையில், வறுமையையும் இகழ்ச்சியையும் காட்டும் குருந்தமரம் இணலில்லாத மரத்தின் கீழ் இருந்து அருள் புரியும் இறைவனை மலரெடுத்துப் போற்றுவோம் எனும் உண்மை விளங்க மாணிக்க வாசகர் பாடுகிறார். ''முத்தனே முதல்வா முக்கண் முனிவா மொட் டருமலர் பறித்திறைஞ்சிப் பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப் பரகதி கொடுத்தருள் செய்யும் சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில் செழுமலர்க் குருந்த மேவிய சீர் அத்தனே அடியேன் ஆதரித்தழைத்தால் அதெந்துவே என்றருளாயோ.''

47 போக்கு வரவில்லாத
பெரன்னடியை யெப்பொழுதும்
வாக்காலும் மனத்தாலுங் – கிளியே
வாழ்த்தி வணங்குவோமே

வறுமையிலு மிகழ்ச்சியிலு மிறைவனண்மையையே நாடி அவன் பாதம் நண்ணி, போக்கு வரவு எனப்படும் இறத்தல் பிறத்தல்கள் அற்றிருக்கின்ற முழுநிறைவானதும் பெருந்தண்ணளி யுடையதுமான அருட்பெருஞ் ஜோதியை நாம் நிட்டை கூடியடையும் வண்ணம் முன் அவனை நம்மறிவினுலே வெறும் அறிவுப் பொருளென அறிவோம், என் இதயத்தே ஆத்மனுக விளங்குபவனை (44) ம் பாட்டில் அன்பி னைந்திணை எனும் சொரூபலக்கணங்களை மனத்தாலும் வாக்காலுங் குழைந்து குழைந்துருகிப் பாடி அந்நிலையில் அழுந்துவோமாக,

48 காயம் அழிந்து விடும்
காண்பனவும் ஒழிந்துவிடும்
மாயமான வாழ்வைவிட்டுக் – கிளியே
மலரடியைப் பணிவோமே.

அரும்பு மாறுத பூவினை மொட்டு என்பர். ஓர் அன்பன் இறை வன் பாதம் நண்ணி, அவனே யென்னறிவு. அவனே என் இதயத்தே அறிவு சொரூபமாக சைதன்யப் பொருளாக சிவன் செயல் எனும் ஊன்றுகோலுடன் புத்தியையியக்கும் அறிவுப் பொருள் எனும் நிலை யினை அரும்பு மாறுத பூவின், மொட்டை ஒக்கும் என்பர் ஞானிகள். மலர்ந்த மலரே மோனன். மலர்ந்த ஒவ்வோர் இதழிலும் மாணிக் கக் கற்களும், இரத்தினக் கற்களும் போன்ற அருட்செயல்கள் மோனனுக விளங்கும் ஜீவன் முத்தனை அலங்கரிக்கும. அத்தகைய மலரடியாக விளங்கும் பாதத்தைப் பணிவோம். முழுநிறைவு மேலிட்ட போது யாம் அதனுள் அடங்கி விடுவதன்றி உயிரினறிவாய பேதம் தோன்றமாட்டாது; மாயை வடிவானதும், தோன்றியும் அழிந்தும் மாயை என்னும் கண்ணுடியில் காட்சிதரும் பொருட்கள் மாறியே முழுநிறைவாம் முதல்வனுகவே காணப்படும் மலரடி, சும்மா இருக் கும் அகம்.

தாயுமானவர் பேதமில்லாத பூரணமாம் முழுமுதல்வனும் மொட்டை

"பொருளே நின் பூரணமே விட்ட காலம்
போக்கு வரவுண்டோ தற்போத முண்டோ
இருள தானுண்டோ அல்லால் வெளிதான் உண்டோ
இன்பமுண்டோ துன்பமுண்டோ யாமாங்கு முண்டோ"

எனும் வரிகளால் அறியத் தருகிறார். அறிவை அறிவால் அறிந்தறியுங்கள். (8)

49 ஆன்மா அழியாப் பொருள்
அப்பொருளே அறிந்து விட்டால்
வீண்பாவனை யெல்லாம் – கிளியே
வெந்து நீறாய் விடுமே.

முன்பாட்டு விளக்கத்தை அறிவறிந்து, உயிரறிவு எனும் பேத மற்ற, எல்லாம் நிறைந்து விளங்கும் முழுமுதல்வன் எனும் உண்மை அறிவினை அறிந்தே, அதனுள் யானுமடங்கவே தோன்றுவதும் மறைவதுமாங்கில்லை. மாயையெனுங் கண்ணடியில் புறக்கருவிகளும் அந்தக் கரணங்களுமான சேதனங்களை தரும் பேதங்களொழியும், இறைவன் கலையே எங்கும் விளங்கும். இருளாங்களையைக் களைந்து பார்க்கின் ஐயன்களையே எங்கும் தோன்றும்; களைவடிவான உலகினை தானுமதனுள் அடங்கவே கண்டு, சிவன் செயல் எனும் ஊன்று கோல் புத்திவழி நிற்ப பார்வதியின் மைந்தனுகவே தான் செயல் புரியக் காண்பவனே அன்பன், வீண்பாவனை யெல்லாம் விட்டவனே யவன். பேதமில்லதோர் கற்பளித்த சிவானந்த வெள்ளம், எல்லாம் அவன் செயலே என்னும் வெள்ளம்; இதயத்தே தோன்றி அழிவற்ற நீர் நிலையாக நிற்ப அவன் அழியாப் பொருளான ஆன்மா அதனை அவன் அறிந்தே தொழில் புரிகிறவன். அஞ்ஞான இருள் அவனை விட்டு நீங்கியது; இதுவே உண்மை அறிவு; தாயுமானவர் பராபரக் கண்ணி.

ஈனந்தருமுடலம் என்னது யான் என்பதற்கு
ஆனந்தம் வேண்டி அலைந்தேன் பராபரமே

[(20) பராபரக்கண்ணி]

சுத்த அறிவாய்ச் சுகம் பொருந்தின் அல்லால் என்
சித்தம் தெளியாதென் செய்வேன் பராபரமே.

[(22) பராபரக்கண்ணி]

அறிவிதுவே தம்மறிவைக் காணுங்கள்.

50 பொறிவழியே போயலையும்
பொல்லாம னத்தை வென்றுல்
அறிவறி யாமைவிட்டுக் – கிளியே
அரன்பதம் சேர்ந்திட லாம்.

முன்பாட்டு விளக்கம் காண்க: இறைவன் தேவர்களைப் பாது காத்தல் வண்ணம், தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது எழுந்த நஞ்சை தானே உண்டும் தேவர்களுக்கு அமிர்தத் தையுங் கொடுத்தருளினர்.

வாழ்க்கை எனும் கடலில் எழுந்தது சிற்றின்பம் இது கர்ம பலனுண்டாக்கியே பிறவிக் கடலுள் ஆன்மாவைத் தள்ளுமியல் புடையது; மோட்சவீட்டுக்கு நஞ்சாக விளங்குவது. இந்த நஞ்சை உண்டாக்கும் பொறிவழி சென்று அலையாமல் மனதை இறைவன் பால் (முன்பாட்டு விளக்கம்) செலுத்தி பேரின்பமான அமிர்தத்தை உண்டு அரன்பாதம் சேர்வோமே. (9)

12. வந்த வல்வினை மாளுஞ் சிவாயவே

51 அந்தமும் ஆதியும் இல்லான அடியரை
எந்த நேரமும் நீங்கா இறையவன்
கந்த மாமலர்ப் பாதத்தைக் கைதொழ
வந்த வல்வினை மாளுஞ் சிவாயவே.

[பாட்டுக்கள் 48, 49இல் உள்ள விளக்கத்தை அறிக]

'அறிவே ஆன்மா' என்று அறிக ஐம்புலன்களும் அந்தக்கரணங்களு மான மனம் புத்தி இவற்றை மட்டுப்படுத்தவோ அறியவோ முடியாது. பாட்டு 61இல் நரியை நற்பரியாக்கிய விளக்கம் காண்க. மனத்தின் கண் தோன்றும் 'சிவ சிவ' என்னும் உணர்ச்சி மேலிட வேண்டும். முன் கூறியபடி புத்தி 'சிவன் செயல்' எனும் ஊன்று கோலுடன் 'பக்திமலை', 'சிவயோகமலை', ஞானமலையாக விளங்கும் கைலாசமலையில் ஏறிச்சென்றபடியே அம்மை பராசத்தியின் வேலை யைச் செய்ய வேண்டும். எமக்கென ஒரு வேலையுங் கிடையாது. நாடகமேடையில் இறைவனே விணைமுதல்வன், அருவமாக நின்று எழுதிய நாடகத்தில் தாய், தந்தையர் மற்றும் உபாத்தியாயர் வழி நின்று காட்டி வைத்த இந்நாட்டியக்கலையில் திறம்பட நடிப்பதே ஆசிரியருக்குத் திருப்தி தருவது. அம்மையாக விளங்கும் நாட்டியக் 'கலையே' உவப்ப இனிமை தருவது. முடியிலிருக்கும் ரோசாமலர் முன் கண்முன்னிலிருந்தும் பின் மறைந்து முடியிலிருந்தே தரும் நறு மணத்தை நுகர்ந்து உவப்பது போன்று, சிவகுரு காட்டவும் நாட் டியக்கலையில் நறுமணத்தை மனத்தால் கண்டு உவந்து புத்தி எனும் வாய்க்கால் வழி பாய்ந்தோடி சித்தத்தே நோக்கியும்; பின் முடியில் இருக்கும் ரோசாவின் நறுமணம் இன்புறப்பண்ணுவது போன்று, அந்த நாட்டியக்கலை, கந்தமாமலர்ப்பாதம், எந்த நேரமும் நீங்கா அம்மை யப்பர் தரும் அந்தப் பேரானந்தத் தெள்ளமுதமான அமிர்தத்தை உவப்பார்கள். இந்நிலையில் அழுந்திக் கிடக்க வேண்டும். [பாட்டு 48, 49 விளக்கம் காண்க] மறைகள் தரும் ஞானக்கண்ணுரடாக கலைஞனுடைய வித்துவத்தன்மையை உணர்ந்தறிந்தும் பின் உண ராதே உள்ளத்தே கண்டும் அதன் உண்மையைக் காண்பதே முப் புரங்கள் எரிக்கும் இறைவன் மாமறைகளில் ஊன்றியகால் (முப்புர

மெரிக்கும் புராணக் கதையையும் விளக்கத்தையும் பாட்டு 13 இல் காண்க) வறுமையும் இகழ்ச்சியுமாகிய சேத்தில் சில்லுப் புதைய நாடக மேடையருகே நின்று நாடகத்தைத் திருப்திகரமாக நடப் பிக்கும் சிவகுருவாக உலகினில் எழுந்தருளிய விஷ்ணுபிரான் மற்றக் காலுக்கு இருப்பிடமாக அமைவர்.

மறைகளில் ஒரு காலும் விஷ்ணுவில் ஒருகாலுமாக இறைவன் நின்று, நாடகத்தின் தோற்றமும் பலவித உணர்வினையளிக்கும் சித் திரக்கலையும், முடிவில் காணப்படுமுண்மையையும் ஒருங்கே நோக்கு வன் மும்மலத்தில் பிரகிருதி மாயையையும், மாமாயை. இறத்தல் பிறத்தல் என்னும் பாழும் படுசுளி வாழ்க்கையும் நீடுற நிற்குந் திறனையும், சிவானந்த வெள்ளத்தைத் தேக்கியே உயர்ந்த நீர் நிலை யாக விளங்குமுள்ளத்தே, ஐம்புலன்களுந் தரும் கூட்டுப் பொருளாக அறியப் படாததும் சிற்றறிவுக்கு அப்பால் பட்டதுமான 'முழுது முண்மை' எனும் பேரானந்தத் தெள்ளமுதத்தையும் தித்திக்கவே ஒன்றுசேரும முப்புரங்களை. ஒரு அம்பால் எரித்தனர். முழுதுமுண்மை யெனுமுள்ளத்தே மலப்பிணியெங்கே.

உருவில் திகழுமுமையாள் பங்கரிமையோர் பெருமானர்
செருவி லொருகால் வளையவூன்றிச் செந்தீயெழுவித்தார்

ஞானசம்பந்தர் (1-69-5)

'வந்த வல்வினை மாளுஞ் சிவாயவே'

(சுவாமிகள்)

''அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே',

(10 —343) (திருமூலர்) (1)

52. ஆடுபாம் பணிந் தம்பலத் தாடுவான்
பாடுவார் பவந் தீர்க்கும் பராபரன்
தேடுவார் தங்கள் சித்தத் திருந்திடும்
பாடு நீங்கிடும் பற்று சிவாயவே.

மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் வாயில்கள் ஐந்தின் வழியாக முறையே ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை எனும் புலன் களாகிய வேடர்கள் ஐவரும் விடாது தொடர்ந்து வந்து எளியேனை வலிந்திழுத்துக் கொடிய காமத்தீயிலே அழுத்தி உயிரோடு தின்னும் ஐம்புல வேடரைத் தன்னுள் அடக்கி, தம்முள் அடங்கிய அஞ்சும் அடக்கா அறிவு எனும் பாம்பைத் தம் உடம்பைச் சுத்தி ஆடிக் கொண்டிருக்க, அருள் புரிபவன் அவன். உடம்பாகிய உலகியலில் வினைப்பயனென்று மம்பலத்தே வினைமுதலாம் முதல்வன் ஐம்புல

வேடனை பாம்பையணிந்த நடிகனை நட்டம் புரிபவன், அன்புடனே தேடி ஏற்றிப் போற்றித் தொழுது தேடுவார் தங்கள் உள்ளத்தே மண் பொன் பெண் எனும் பற்று நீங்க ஐம்புல வேடர்கள், இறை வனணிந்துள்ள பாம்பு போல், நண்பனை பார்வதியுடன் கூடியிருந்து சிவனுக்குத் தொண்டுசெய்யவும் 'நான் எனது' என்னும் பதவியும் ஆணவமலப்பிணிப்பும் விட்டு நீங்க சிவனென்னும் உருவமாகவே தன்னையறிவான்.

தானே திசையொடு தேவருமாய் நிற்கும்
தானே உடலுயிர் தத்துவமாய் நிற்கும்
தானே கடல் மலை யாதியுமாய் நிற்கும்
தானே உலகில் தலைவனுமாமே. (10 - 366)

(திருமூலர் மந்திரம்) (2)

53 இளமை மூப்பிலான் எம்மிறை எம்பிரான்
களவு செய்யுங் கருமிகள் தங்கட்கும்
அளவி லாவரு ளீயு மளியினை
உளம்பொ ருந்தி யிருக்குஞ் சிவாயவே.

ஆருயிர்கள் உறைவிடத்துறைவியாய் எங்கும் பரந்து எவற் றையுமியக்கும் பெருநிறைவுத் தன்மையில் சிவன் யாண்டும் ஆருயிரை விட்டு நீங்காது அவ்வுயிர்க்குயிராய் பேதமறக் கலந்தோங்குஞ் செறிவு விளங்க 'தானே உலகில் தலைவனுமாமே' (முன்பாட்டு விளக்கம்) எனும் பொருளையுமே தம்மறிவினுலறிய இளமையும், மூப்பும் பேத மும் இல்லாமல் தடத்தப் பொருளான தாரகையைக் காணலாம்: உன்னை நினைக்குமுன் ஐம்புலன்களுக்கு ஆட்பட்டுப் பாழுக்கிறைக்குங் காலமும், நின்னினைவு வந்துய்த காலமும், உனை மறந்து பாழுக் கிறைத்த காலமும், களவு செய்யுங் கருமிகள் தங்கட்கு ஆளாகி பாழுக்கிறைக்குங் காலமும, நின் திருவருளினுல் எவையும் நின் செய லாகவே, இருட்டுங் களவும் தோன்றின உண்மையை உள்ளத்திலுரு வெடுக்க வைத்து, பின் இரவும் பகலும் நீயே நின்று செயல்புரியுந் தன்மையினை உளம்புகுத அவனேயாய் விளங்கினன்;

சிவஞான பாடியம் சூ 2, அதி 2. கால தத்துவம் என்னுஞ் சூத்திரத்தில் அவனது அழியாத இன்பநிலையைப் பெற்றவர்க்கே களவு படாததோர் காலம் அறிக.

கால வரையறையைக் கடந்து
காலத்தினையும் தோற்றித் தொழில் படுத்தும்
கால காலனுகிய முதல்வனுற் செய்யப்படும்
காரியத்திற்குக் காலம் வேண்டா.

(சிவஞான பாடியம் சூ 2. அதி 2)

ஆகையால் பரமபரனைப் பணியாதே பாழுக்கிறைத்த காலம் களவுபட்ட போதிலும் கால காலனுகிய அவனே அதற்கும் ஆதார மாமெனு முண்மையையு முள்ளத்தே கண்டு அளவிலா அருவியு மளி யினுன் உளம் பொருந்தி யிருக்குஞ் சிவாயவேயென்று ஓதவும். (3)

54 ஈர வார்சடை யெந்தை யெமக்கெலாம்
பேர ருள்செயும் பெற்றியன் பேயுடன்
ஆர வாரமாய் ஆடுவன் காட்டினில்
நேர தாயென்மு னிற்குஞ் சிவாயவே.

(முன்பாட்டில்) 'களவுசெய்யுங் கருமிகள்' உண்டாகுந் தன்மைக்குக் காரணம் இருட்டு; வெளிச்சம் வர இருட்டுத்தானே அகலும்; வெளிச்சத்தில் 'இறைவனே' காலத்தினையுந் தோற்றுவித்து, தொழில் புரியும் கால காலனுகிய முதல்வனுகிச் செயல் புரிபவன்''.; 'முழுதும் அவனே' எனுமுண்மையைக் காண இருட்டில் களவு பட்ட உள்ளத்தே தோன்றிய ஆணவம் மாயை கர்மம் என்னும் மும்மலங்களையும், மும்புரங்களையுஞ் சுட்டெரித்த உண்மையைக் கண்டோம், 'ஞானத்திரளாய்' நின்றபெருமான் 'அளவிலா அருளீயு மளியினன்' அருளீந்தனன். மாயையினல் தோன்றினதை அருள் நிறைந்த உள்ளம் படைத்த முதல்வன் நீக்கியருளினன்.

ஆணவத்தின் பொருளாகத் தோன்றிய இருட்டை யகற்ற 'செழு நீர்ப்புனல் கங்கை'யையுடைய சடையை, உள்ளத்தை,உடைய எம்பிரானே அருளுகின்றனன். 'தழைத்த சடையார் விடையொன் றேறித் தரியார் புரமெய்தார்' எனும் ஞானசம்பந்தருடைய வரி பொருள் தருகின்றது:

ஆணவ மலப்பிணிப்பினல் மல மாயை மட்டுப்படா மயக்கத்தைத் தர, பேரிருளினல் உண்டான மயக்கம் கர்மம் புரிய ஆணவப் பேயுடன் கூடியே மாமாயை எனுங் காட்டினில் சிவனின் தலையில் காலூன்றி ஆடிய காளியை யொத்த பாவியேனை; செழுநீர்ப் புனல் கங்கையை உள்ளத்தே கொண்ட எம்பிரான் மனமிரங்கி என்றுங் குறையாத அந்தப் பேரருள் கங்கைவார் சடையான், ஈரவார் சடையெந்தை, அருளீந்து தடுத்தாட்கொண்டனன். என்னையுந் தன்னையும் ஒன்றுகக் கண்டனன். 52ம் பாட்டில் ஆடு பாம்பணிந்தவனையும், அடுத்த பாட்டில் பிறைமதிச் சடையானையும், இந்தப் பாட்டில் ஈரவார் சடையானையும் அடுத்து வரும் பாட்டில் 'உலகம் யாவையும் தரும் அலகிலா விளையாட்டயர் தத்துவன்' தோற்றுவிக்கும் அறிவு வியக்கத்தக்கது. உவந்து உவந்து ஓதியுணர்வோம்.

53ம் பாட்டுக்கும் 54ம் பாட்டுக்கும் முறையே ஒப்பாக ஞான சம்பந்தர் ''அண்ணுமலை'' பாட்டு 3யும் 4யும் காண்க.

ஞானத்திரளாய் நின்ற பெருமானல்ல வடியார்மேல்
ஊனத்திரளை நீக்குமதுவு முண்மைப் பொருள் போலும்
ஏனத்திரளோடின மான் கரடி யிழியு மிரவின் கண்
ஆனத்திரள் வந்தணையுஞ் சாரலண்ணுமலையாரே (1-69-3)

இழைத்த விடையாளுமையாள் பங்க ரிமையோர் பெருமானுர்
தழைத்த சடையார் விடையொன்றேறித் தரியார் புரமெய்தார்
பிழைத்த பிடியைக் காணுதோடிப் பெருங்கைமத வேளம்
அழைத்துத் தரிந்தங்குறங்குஞ் சாரலண்ணு மலையாரே. 1-69-4 (4)

55 உலகம் யாவையுந் தந்திடு முத்தமன்
அலகி லாவினை யாட்டயர் தத்துவன்
பலக லேயெலாம் பாலிக்கும் வித்தகன்
சிலக ணமேனும் பிரியான் சிவாயவே,

52ம் பாட்டில் 'மாயை' எனும் மலப்பிணிப்பை 'ஆடு பாம்பு, என்றும் அதை தன்னுள் அடக்கியும் 53ம் பாட்டில் 'கர்மம், எனும் மலப்பிணிப்பை, 'களவுசெய்யும் கருமிகள்' என்றும் அவற்றை விலக்கும் உண்மையை 'காலத்தினையுந் தோற்றித், தொழில் படுத்தும் காலகாலனுகிய முதல்வனுற் செய்யப்படும் காரியத்திற்குக் காலம் வேண்டா' எனும் சிவஞானபாடிய உண்மையால் அறியத்தந்து, அவனே 'இளமை மூப்பிலான் அளவிலா வருளியுமளியினுன்', என்றுந் தருகிறார். 54ம் பாட்டில் 'ஆணவம்' எனும் மலப்பிணிப்பை 'பேயுடன் ஆரவாரமாய் ஆடுவன் காட்டினில்' என்றும் அவற்றை நீக்குமுண்மையை 'தழைத்த சடையார்' என்று ஞானசம்பந்தர் தரும் செழுநீர்ப் புனல் கங்கை வைத்த 'ஈரவார் சடையெந்தை பேரருள் செய்யும் பெற்றியன், என்று உணர்த்தியும், 'முப்புரங்களையும் வேருகவு மொன்றுகவும் நின்றுவேவச் செய்யுந் தன்மையைத் தந்தனர். மூன்றினையுமொன்றுகவே நாம் நம் முள்ளத்தே கண்டு இந்தப் பாட்டின் பொருள் காண்க.

பல கலைக்கு மாதாரமாக பிரகிருதிமாயை ஆதிசேடன் என்னும் பாம்பு என்பது புராணக்கதை. களவுபடா வாழ்வு, நலியா இன்பம். வேண்டில்அலகிலா முழுநிறைவாம் எம்பெருமானே வேண்டும். 'அலஞ்சுழிக்குமண்ணு கந்தன்னுன் மேய அருமறையோடாறங்கமானூர் கோயில்வீற்றிருக்கும் நம்பன் தன் அடியினைக்கே நவில் வாயாகில்' 'நலஞ் சுழியா இன்பம் உண்டு' என்று அப்பர் பாடுகிறார். (கீழ் காண்க) ஆதிசேடன் வழிபட்ட கோயிலில் வீற்றிருந்த நம்பன் 'ஆறங்கமானூர்' உண்மை வருமாறு.

வேதத்தின் அந்தமும் மிக்க சித்தாந்தமும்
நாதத்தின் அந்தமும் நற்போத அந்தமும்
ஓதத்தகு மெட்டி யோகாந்த அந்தமும்
ஆதிக் கலாந்தமும் ஆறந்தமாமே.

அலஞ் சுழிக்கும் எல்லாப் பொருளும் அடங்க ஆறந்தமு மொன்றுக, ஆறங்கமானூர். பரமபரனை ஆதிசேடன் வழிபட்ட இறைவனூர் நம்மேல் அருள்புரிந்தால் களவுபடா, நலஞ்சுழியா இன்பங் கிடைக்கும் என்கிறார்,

பல கலைக்குமாதாரமானவனும், களவுபடா நலஞ் சுழியா இன்பந்தருபவனுமான அலகிலா விளையாட்டயர்தத்துவன் ஆறங்கமானை ஆதிசேடன் வழிபட்ட நம்பன் முப்புரங்களையு மொன்றுகவே யெரித்தனன்: முழு உலகிலும் களவு படா இன்பந்தந்தவன்; ஒரு கணமேனுமென்னை விட்டுப்பிரியாத முழுமுதல்வனை இறைவன்: என்னையுந்தன்னையு மொன்றுகக் கண்டனன்':

கலஞ் சுழிக்குங் கருங்கடல் சூழ் வையந் தன்னிற்
கள்ளக்கடலிலழுந்தி வாளா
நலஞ் சுழியா எழு நெஞ்சே இன்பம் வேண்டில்
நம்பன்றன் அடியிணைக்கே நவில் வாயாகில்

அலஞ் சுழிக்கு மன்னுகந் தன்னுன் மேய
அருமறையோடாறங்க மானூர் கோயில்
வலஞ் சுழியே வலஞ்சுழியே என்பீராகில்
வல்வினைகள் தீர்ந்து வாளுளலாமே.

[அப்பர் (6-93-6] (5)

56. ஊன்பொ திந்த உடலு முயிரவன்
நான்ப டும்பாடு நன்ரு யறிபவன்
மான் படுங்கையன் மாமலர்ச் சோதியான்
தான்வ திந்தானென் சித்தஞ் சிவாயவே.

உலகிடைக் காணப்படும் உயிருள் பொருள் அனைத்தினுள்ளும் உயிர்க்குயிராம் நாதன் உமாதேவியினுல் தழுவப்பெற்ற உடலைப் படைத்தவராய் விளங்குகிறூர். மெய்யடியார்களுடைய தூய எண்ணங்களை நிறைவேற்றி நிற்கும் அந்த உயிர்க்குயிராம் நாதன். ஆன்மாவானது தன்னையறியும் பொருட்டு பாச ஞானத்தினின்று நீங்கி நின் அறிவினுள் அடங்கி உயிர்க்குயிராம் எண்ணில் கோடி உயிர்கள் அத்தனைக்குங் கண்ணிறைந்த திருவருட் சோதியில் மலர்ந்து நானே அவன் எனும் பூரணமாம் இன்பம் அடையவும்; இவ்வண்ணம் உலக வாயிலாக நிகழும் எல்லா வகையான செயல்களும் நீங்கப்பெற்று எம்மறிவு மூன்னிட்டு எம்மாலறியப் படுதலொழிந்து செயலற்றுச் சும்மா இருக்க தானே அருளினன் எம் இறைவன். (6)

57 எள்ளு மெண்ணெயும் போன்ற இறையவன்
கள்ளு லாவுங் கடிமலர்க் கொன்றையான்
உள்ளு வார்தங்கள் உள்ளத்தி லுள்ளவன்
நள்ளு வார்தமை நாடுஞ் சிவாயவே.

ஏழிசையின் கூட்டமாகிய பண்ணும் அவற்றின் இசையையும் ஒத்ததே உடலும் உயிரும்; எள்ளும் எண்ணெயும் அவ்வாறே; வினை முதலாம் முதல்வனிடத்துப் புணர்ப்பாயிருந்தே தோன்றும் உடலையும் உயிரையும் போன்றது; முதல்வனிடத்துப் புணர்ப்பாயிருக்கு மொற்றுமையே இரண்டும் தருவது. மேலும் உவத்தல் காய்தல் ஒறுத்திடல் வீரமே (40 இல்) சிறுமை நீக்கிச் சிறந்திடல் வீரமே, வறுமை வந்தால் மகிழ்வது வீரமே, மறுமை இன்பத்தை நாடுதல் வீரமே (41) உவத்தல், காய்தல், ஒறுத்தல், வறுமை, சிறுமை எல்லாமே, கானல் பயிராய் விளங்கும் உடம்பே, மறுமை இன்பத்தை

உயிர்க்குத் தரும்; முழுமுதல்வனுக்கே அவை வழி நிற்கும்; அதன் அடையாளமாக விளங்குவதே கொன்றைமாலை. கண்ணிகளை மாலையாக மார்பிலணிந்திருப்பான்; விரிந்த கொன்றைமாலையைத் தலையில் அணிந்திருப்பான். புது மணம் பொருந்திய கண்ணிகளை மாலையாகக் கொண்ட எள்ளுமெண்ணெயும் போன்ற இறையவன் உள்ளத்தைக் குடிகொண்டனன், 'உள்குவார் உள்ளத்தான்' (அப்பர் 731) 'நினைப்பவர் தங்கள் மனதுக்கோர் வித்துமானாய்' (அப்பர் 3022) தம்மை நாடி நின்ற அடியேனுள்ளமே அவன் கோயில் (7)

58 ஏழை பங்கன் எருதில் வருபவன்
தாளை நம்பித் தவஞ்செய்யுந் தாபதர்
நாளை இன்றென நாடி நலிகிலர்
ஏழை யேனெனை யாளுஞ் சிவாயவே.

சிவபெருமான் இராசபோகத்தில் மூழ்கியிருப்பவரல்லர்; நாளைக் கென்று அவர் உணவு ஒன்றும் தேடி வைத்துக் கொள்வதுமில்லை; உடல் அபிமானத்தையும் செல்வச் செருக்கையும் குலம் குடும்பம் ஆகியவைகளினின்று உதிக்கும் செருக்கையும் துறந்தவன். (சித்பவானந்தர்) ஏழைகளுக்கே அவன் அன்பு கொண்டவன் ஆன்மாக்களுக்காக அவர்களை இரட்சிப்பதற்காக எருதில் வருபவன், காளையை வாகனமாக உடையவன்; நாளைக்கு இன்றைக்கென ஒன்றுந்தேடி அலைகிறதில்லை. சிறந்த இதழையுடைய வாசனைபொருந்திய தாமரை மலர்கள் மலர்வது போன்று உயர்ந்த நீர் நிலையாக விளங்கும் இதயத்தே சிவானந்த வெள்ளம் புத்தியாகிய வாய்க்கால் வழி ஓடித் தேங்கு பாதார கமலம் விரியும்; அந்தக் கருணை வெள்ளம் பொங்கும் பாதார கமலமே இறைவனிடம் கொண்டு செல்லும் தோணி; கொண்டு செல்லும் திருத்தாள்கள் என நம்பித் தவஞ்செய்யுந் தாபதர்; என்னையுந் தன்னில் உடையவனே நந்தி வடிவின உலகில் [(18) தற்பரன் என்னும் உண்மை விளங்க பொன்னம்பலம் பொற்றூண் என்னும் பொருட்களும் பாட்டு (25) காண்க.] அருள் தர என்னையும் ஏற்றுக் கொள்வான்; (8)

59 ஐய மில்லா அருந்தவர் நெஞ்சில்வாழ்
தெய்வ மென்னுடைச் சித்தத்தி லும்முளன்
உய்வ முய்வ மொருகுறை யும்மிலை
வைய மெங்கும் வணங்குஞ் சிவாயவே.

யாரிடத்து உறுதிப்பாடு உண்டோ அவர் தக்கார்; யாரிடத்து அது இல்லையோ அவர் தகவிலர் (சித்பவானந்தர்) உவத்தல், காய்தல், ஒறுத்தல் வீரமே, தவத்தைச் செய்து சலிப்பறல் வீரமே(40) தவம் வளர வளர தாமரை மலரும் விரிகின்றது. இருதயம் விரிகின்றது. திருவருள் தரும் கதிரவன் ஒளி கூட தாமரை மலரும் மேலும் மேலும் விரிகின்றது. இதழ்கள் கூடுகின்றது; வாசனையும்

அழகும் கூடுகின்றது. வண்டுகள் வாசனை பொருந்திய இதழ்களில் சேர்வது சகஜம். ஐயமில்லா அருந்தவம் புரிந்த தக்கார் உள்ளத்தே குடிகொள்ளும் இறைவன் எளியேனுடைய அருந்தவப்பயனாக மிக மிக விரிந்த உள்ளத்தே ஞான ஒளியாக விளங்குவோனை வையம் ஆதரிக்கும்; அவனை என்னுள் கண்டேன். (9)

60 ஒருவ னுலே உலகம் உதித்ததே
ஒருவ னுலே உலகம் நிலைத்ததே
ஒருவ னுலே உலகம் ஒடுங்கிற்றே
ஒருவ னேயென் னுறுதி சிவாயவே.

தேகம் முதலிய, அழியுந் தன்மையுடையது, அதிபூதம். இது சைதன்யத்துக்கு அன்னியமானது, சைதன்யப் பொருளை சார்ந்திருக்கின்றவன் புருஷன்; அகிலாண்டத்தையும் இருப்பிடமாகக் கொண்டு அதில் நீக்கமற நிறைந்திருப்பவன்; அதி தெய்வம் எனப்படும் ஹிரண்யகர்ப்பன் எல்லார்க்கும் முதலிலே உடலை எடுத்தவன். ஜீவன் தன்னை அடியோடு இறைவனிடத்து ஆகுதியாகக் கொடுத்து விடும் பொழுது யக்ஞம் உச்சஸ்தானம் பெறுகிறது. தன்னைக் கொடுத்து விடுங்கால் ஜீவபேதமழிகிறது; பரபோகம் தோன்றுகிறது. ஆதியக்ஞம் நடைபெறுகிற இடத்தில் பரமாத்மாவின் சான்னித்தியம் காணப்பெறுகிறது. முதிர்ந்த சாதகர்களிடத்தும் சித்த புருஷர்களிடத்தும் ஈஸ்வர சான்னித்தியம் தென்படுகின்றது. (சித்பவானந்தர்) எல்லார்க்கும் முதல் தோன்றியது அதி தெய்வம்; அழியுந் தன்மையுடைய அதி பூதத்தைக் கண்டு சைதன்யத்தைச் சார்ந்திருக்க, அகிலாண்டத்தையும் தன்னிருப்பிடமாக அதில் நீக்கமற நிறைந்திருக்கும் புருஷன் தோன்றலாம். ஒருவனுலே உலகம் நிலைக்க ஆதியக்ஞம் நடபெற பரபோகம் தோன்ற ஈஸ்வரசான்னித்தியம் தென்படுகிறது. ஒருவனுலே உலகம் ஒடுங்கிற்று பரமஹம்ஸர்கள் பணலக்ஷ்மியை நாடாமல் பக்தி லக்ஷ்மியை நாடுபவர்கள்; பக்திமலியுச்சி சிவயோகமலியுச்சி, ஞானமலியுச்சியிலிருக்கும் ஒருவனேயென்னுறுதி, என்னையுந் தன்னையுமொன்றுகக் காணுமொருவன். (10)

61. ஓங்கா ரத்தி லுதித்த துலகெலாம்
ஓங்கா ரத்தில் நிலைத்த துலகெலாம்
ஓங்கா ரத்தி லொடுங்கு முலகெலாம்
ஓங்கா ரத்தி லுறுதி சிவாயவே.

ஓம்தத்ஸத் என்ற மூன்று பெயர்களால் பிரம்மம் சர்வசாதாரணமாக அழைக்கப்படுகிறது. அது ஓசையாகப் பரிணமிக்கிறது. ஓசையினின்று உலகெலாம் உண்டாகிறது. அது நாதப்பிரமம் எனப்படுகிறது. ஓங்காரத்திலுதித்ததுலகம். ஓம் என்பது அகிலாண்டத்தின் ஓசையின் தொகை; ஓங்கார சொரூபமாக ஓயாது ஒலித்துக் கொண்டிருக்கிறது. பிரணவம் என்றும் அதைப் பகர்வதுண்டு. ஓங்காரத்தில் நிலைத்தது. (சித்பவானந்தர்)

தாயுமானவர் இவ்வுண்மையை விளக்குகிறார் காண்க.

"பாராதி யண்டமெலாம் படர்கானற் சலம்போல்
பார்த்தனேயே முடிவில் நின்று பாரெதுதான் நின்று
தாராலும் அறியாத சத்தன்றே அதுவாய்
அங்கிரு நீ எங்கிருந்தும் அதுவாவை கண்டாய்"

(17 நினைவொன்று 5)

மேலும் 'சிவ சிவ' எனும் திருமாமறையினைச் சிர் பெற ஓதிக் கொண்டிருப்பையாயின் என்னுமோர் கருப்பையில் தோற்றுவை என்னும் கர்மபலனுனக்கில்லை. ஒப்பில்லாத ஓர் உறுதிச் சொல்லாம் அந்த ஒரு மொழி 'ஓம்' அதே திருமாமறையாம் 'சிவ சிவ' என்பதும். அம்மொழியே தொன்மை மலப்பிணிப்பினை "ஒழிக்கு மொழிக்கு மென மொழிந்த அக்குரு மொழியே" மாரு மலக் குறிபோன்று அசையாது நிலை நிற்பது; "ஓங்காரத்தி லொடுக்கு மூலகெலாம் ஓங்காரத்தினுறுதி சிவாயவே"

மேலும் தாயுமானவர் தருவதைக் காண்க:

ஒரு மொழியே பல மொழிக்கும் இடங் கொடுக்கும் அந்த
ஒரு மொழியே மலம் ஒழிக்கும் ஒழிக்குமென மொழிந்த
குருமொழியே மலையிலக்கு மற்றை மொழியெல்லாங்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய்
கருமொழியிங் குனக்கில்லை மொழிக்கு மொழிருசிக்க
கரும்பனைய சொற்கொடுனைக் காட்டவுங் கண்டனைமேல்
தருமொழியிங் குனக்கில்லை யுன்னை விட்டு நீங்காத்
தற்பரமா யானந்தப் பொற்பொதுவாய் நில்லே

(17 நினைவொன்று 8)

பின் நாலு வரிகளாலும் ஓங்காரத்திலுறுதி சிவாயவே என்றே கூறுகிறார்: (11)

13 வேண்டில் வேண்டாமை வேண்டிட வேண்டுமே

62 வேண்டில் வேண்டாமை வேண்டிட வேண்டுமே
மிக்க அன்பருள் வாழ்ந்திட வேண்டுமே
மாண்டு மாண்டு பிறந்திட நேரினும்
மாத வமனம் மற்றொரு பற்றின்றி
ஊன்று பாதத் துறங்கிட வேண்டுமே
ஓம்சி வாய நமவென வேண்டுமே
ஈண்டெ னக்கொரு சொல்லா லுணர்த்திய
என்கு ருபர புங்கவ சிங்கமே.

பூமியில் விதையை நடுகிறோம். பூமி யோனியாகவும் விதை கர்ப்பமாகவும் பரிணமிக்கச் சில உண்டாகிறது. பெண்ணை பிரகிருதி யோனியில் ஆண்பாலான ஆத்மசைதன்யம் வைக்கப்படுகிற பொழுது க்ஷேத்திர க்ஷேத்திரக்ஞனுடைய சம்யோகம் பிரகிருதியில் பிரகாசிக்கும் புருஷன் ஹிரண்யகர்ப்பன், அவனுடைய எண்ணி றந்த கிரணங்கள், உயிர்கள், அவித்தையால் ஏற்பட்ட உபாதிக்கும் காமத்துக்கும் ஏற்ப எண்ணிறந்த ஜீவாத்மாக்கள் உண்டாகின்றன, [கீதை 14-3-4இல் கிருஷ்ணர் தருவதைக் காண்.] பார்த்தா, பெரிய பிரகிருதி எனது கர்ப்பாசயப். அதில் நான் கர்ப்பத்தை வைக்கிறேன். அதினின்று உயிர்களெல்லாம் உற்பத்தியாகின்றன. கீதை (14-3)

''குந்தி புத்ரா கர்ப்பாசயங்கள் எல்லாவற்றிலும் பிறக்கின்ற வடிவங்களுக்குப் பெரிய பிரகிருதி தாயாகின்றாள். கர்ப்பாதானம் செய்யும் தந்தை நான்'' கீதை (14-4) மேலே கண்ட முக்குண விகா ரத்தையும் அவற்றின் தேவர்களையும் அறிந்தால் அவற்றிற்கு மாறான எண்ணங்களையே கொண்டு, அவித்தையால் ஏற்படும் உபாதியும் காம மும் கர்மமும் நிகழாது தடுத்தல் வேண்டும்.

,,எல்லா உலகங்களையும் நின் திருக்குறிப்பால் அசைவித்து அவற்றில் நீ நிறைந்து நின்று, உணர்த்து மூன நின் திருக்குறிப்பால் அறிவித்த முதல்வனே! மேலாம் மெய்ப்பொருளே! ஒரு சொல்லால் அறிவித்த சிவகுருவே! மேலாம் மெய்ப்பொருளே! நின் திருவடியி னைப் பணிந்து வழிபடுதலல்லாமல் வேறு பொருளில் பற்று வையேன்; கண்ணீர் மல்கி ஊனமை எழுத்தாகிய 'சிவ சிவ' எனும் மாமறையை இடைவிடாது ஓதுவேன்; எத்தனை எத்தனை பிறவிகளெடுத்திடினும் உன் அன்பர்களுடன் நின் நினைவு மாறாது வாழ்ந்து 'சிவ சிவ' என் னும் உன் நாமத்தையே தினமும் உபாசிப்பேன்; உபாசித்தே பேரின்ப வெள்ளம் உயர்ந்த நீர் நிலையாகிய உள்ளத்தே தேங்க நந்தியைத் தரிசிக்க வேண்டுமே. நிட்டை கூடவேண்டுமே, ஊன்று பாதத்தூறங் கிட வேண்டுமே.

மன்னும் இருளை மதித்துரந்த வாறன்பின்
மன்னும் அரனே மலந்துரந்து—தன்னின்
வலித்திருமைக் காந்தம் வசஞ் செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் தான்.

சிவஞானபோதம் (11-2-2) (1)

63 மண்ணி னுசை மறந்திட வேண்டுமே
மதியி லேரவி சேர்ந்திட வேண்டுமே
விண்ணி னுசை விளங்கிட வேண்டுமே
வேறொன் றின்றித் துலங்கிட வேண்டுமே
பண்ணும் ஓசையும் போன்ற பரமனைப்
பாடி யாடிப் பணிந்திட வேண்டுமே
என்னு ளேயருள் காட்டிய அண்ணலே
என்கு ருபர புங்கவ சிங்கமே.

[பிரகிருதி, முக்குண விகாரம், கர்ப்பாசயங்கள் முதலியன 62இல்] காண்க. தொடர்ந்தே முக்குணங்களுக்கு ஆதாரமாய் நின்று கர்ப்பத்தையுண்டாக்கும் மண், பொன், பெண் ஆசை மூன்றையும் மறந்திட வேண்டும். சிற்றறிவுடனே அறியாமையும் நீங்கப்பெற தின் உணர்வினில் திருவடியுணர்வாம் முற்றுணர்வு நிறைவு பெற புணர்ப்பு முறையால் பெருநேயமாங் காதல் கொண்டு பண்ணினுள்ள ஏழு ஓசைகளும் பண்ணும் வேறு வேறுகப் பிரித்துக் காணப்படுந் தன்மையற்றிருப்பது போன்று நீனையும் என்னையும் பிரிவின்றிக் காண வேண்டும், புத்தியாகிய கன்னிகை மலப்பிணிப்பினின்று நீங்கியே பார்வதியின் மூத்த மைந்தன் கணபதியை ஒத்து இயற்கை அன்னை பார்வதியுடன் திருவடியுணர்வாம் முற்றுணர்வு நிறைவு பெற பெரு நேயமாங் காதலுடன் மெய்ப்புணர்ப்பு உண்டாகவே சிறந்து விளங்க வேண்டும். விழி நீர் பெருக நின் புகழைப் பாடியாடித் தொழ வேண்டும். தாமரையின் தேனையுண்ட வண்டு போன்று 'நல்லறிவாய் விளங்கும் முழு நிறைவாஞ் ஜோதியே' என்குருபர சிங்கமே! என்று காதலுடன் பாடவேண்டும்.

பெருநிலமா யண்டமா யண்டத்தப்பால்
குரு நிலமாய் நின்ற கொள்கையன் ஈசன்
பரு நிலமாய் நின்று தாங்கிய தாளோன்
அருநிலையாய் நின்ற ஆதிப்பிரானே. (10 –2760)

தில்லைச்சிற்றம்பலமருளும் நீ திருவடியுணர்வு நிறைவு பெற பெரு நேயமாங் காதலுடன் மெய்ப்புணர்ப்பு உண்டாகவே மெய்யில் சிவம் விளங்க மதியிலே ரவி சேர்ந்திட வேண்டுமே என்கிறார். (முன் விளக்கம் புத்தியாகிய கன்னிகை காண்க) (9)

64. நரியை நற்பரி யாக்கிட வேண்டுமே
நானும் நீயுமொன் றாகிட வேண்டுமே
திரிபுரத்தை யெரித்திட வேண்டுமே
தேவ தேவனைக் கண்டிட வேண்டுமே
பெரியர் தம்பணி பேணிட வேண்டுமே
பிறவி யின்பயன் பெற்றிட வேண்டுமே
வறிய னேனையும் வாழ்வித்த அண்ணலே
வாழ்கு ருபர புங்கவ சிங்கமே.

இந்திரியங்களை வெளி விஷயங்களில் செல்லாமல் அடக்கு வதற்குச் செய்யும் முயற்சி பயன்படாது. அவைகளை இறைவனிடஞ் செலுத்தினால் வெளிப்போக்குக்கு இடமில்லை; இதற்றையே திருமூலர் 'அஞ்சும் அடக்கா அறிவு' என்கிறார். சங்கரர் தருவதைக் காண்க: 'பரமசிவனே! மனது உம்முடைய திருவடித்தாமரையிலும் வாக்கு உம்முடைய புகழைப் பேசுவதிலும் இரு கைகளும் உமது அர்ச்சனையி லும், காது உமது கதைகளைக் கேட்பதிலும், புத்தியானது உம்முடைய தியானத்திலும், இரு கண்களும் உமது திருமேனியழகிலும் நிலைபெறட் டும்: அதற்குப்பின்எவ்வாற்றல் மற்ற நூல்களை அறிவேன். (சிவானந்த லஹரி) (7)

இவ்வாறு காட்டு நரிபோன்ற இந்திரயக் கள்வரை நம்மை இறைவனிடங் கொண்டு செல்லுங் குதிரைகளாக்க வேணும், சம்பந்தர் [2-41-3] இல் இவற்றைத் தருகிறார் காண்க.

நீ நாளு நன்னெஞ்சே நினை கண்டா யார் அறிவார்
சா நாளும் வாழ் நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூ நாளுந் தலை சுமப்பப் புகழ் நாமஞ் செவி கேட்ப
நா நாளு நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே

மேலும் திரிபுரமெரித்த கதையை (18 இல்) காண்க. நிலை யாத பொருட்களைத் திருவருட் துணையால் ஒழித்துக் கொண்டே சென்றால் நிலைத்த உண்மை அறிவு, இன்ப வடிவினனை சிவபெரு மான், வெளிப்பட்டருள்வன். ''எண்ணுத எண்ணிய நெஞ்சே துய ரொழி என்னிரண்டு கண்ணே உறங்குக என்னுளை முக்கட் கருணைப் பிரான், தண்ணார் கருணை மவுனத்திலல் முத்தி சாதிக்கலாம். நண் ணுத தொன்றில்லை யெல்லா நலமு நமக்குளவே'' [தாயுமானவர்] புறக்கண்களான இந்திரியங்களை புறத்தே அலையவிடாது முன் கூறிய படியே இறைவனைத் தரிசிக்க, தண்ணளி பொங்கிய மவுனம் நல்க தேவதேவனைக் கண்டிடலாம். சங்கரர் கூறியபடி சிவனடியாரையும் உலகினையும் இறைவனாக மதித்து பணி புரிய வேண்டும். பிறவியின் பயனை முத்தியின்பம் அடையலாம்; எளியனேனையும் ஆண்டு அருள் புரிந்த பெருந்தண்ணளியையுடைய எம் பெருமானே! பெருமை தங்க தம்முலகுக்கு அறத்தைக் காட்டியே சீவித்த எம்ஞானகுரவனே!

(3)

65 வெளியிலே யொளி கண்டிட வேண்டுமே
வீணர் தங்களை விட்டிட வேண்டுமே
சுழியி லேயிருந் தாறிட வேண்டுமே
துரிய வீட்டில் இருந்திட வேண்டுமே
களிகொள் யானையைக் கட்டிட வேண்டுமே
கார ணத்தை யறிந்திட வேண்டுமே
தெளிய வேயருள் காட்டிய தெய்வமே
தேவர் போற்றுங் குருபர சிங்கமே.

முன் பாட்டில் ஐம்புலன்களையும் தன்னுள் அடக்குதலையும், இங்கே அடுத்தபடியாக ஆணவ மலப்பிணிப்பான களி கொள் யானை யைக் கட்டுவதைத் தருகிறார். அஞ்சும் அடக்கா அறிவே உள்ளமாக வும் அதே சிவானந்த வெள்ளந் தேக்கும் உயர்ந்த நீர் நிலையாகிய உள்ளத்தே, தண்ணார் கருணை மவுனத்திலலே முத்தி சாதிக்கலாம். அந்த உள்ளம் அறிவுப் பெருவெளியாக விளங்கும் உள்ளம். அறிவை அறிவால் அறியலாம்; அறிவை சிவகுரு அருளிய தண்ணளி பொருந் திய மதி போன்ற ஒளியிலே தன்னொளி விளங்கவே காணவேண்டும். உயிரில் பொருட்கள் உயிருள் பொருட்கள் எப்பொருளிலும் தான் வியாப்யமாக அகல் நிறைவாக நின்றும் அவை தன்னுள் வியாப்ய

மாக அகல் நிறைவாக அடங்கியும் அஞ்சும் அடக்கா அறிவே வடிவான உள்ளமும் ஒன்றுசேர்ந்த உலகினையும் இறைவனையும் இணை பிரியாத அம்மையப்பராகக் காணவேண்டும். (56, 57, 58 வாசியுங்கள்) மனம் அடங்கிய நிட்டை கூடியே தில்லைத்தரிசனங் காண வேண்டும். வேகத்துடன் சென்றடைந்த தரிசனத்தில் மனம் ஆற வேண்டும். ருசித்தே. அவற்றுல் தோன்றும் சித்துக்களில் மதங் கொண்டும் வேறுவழியில் ஆவல் கொண்டும் அலையாதே வீணர் நட்பினை ஒழித்து களி கொள் மதயானையைக் கட்டவேண்டும். தோன்றுஞ் சித்திகளும், அவற்றுல் முழு மூதல்வனும் இறைவனை மறைக்கும் இன்பமும் நீங்கிட வேண்டும்; இராவணனைப் போல் மதம் பிடித்து உலகினை இம்சிக்கா திருக்க வேண்டும் அறிவுப் பெருவெளியிலே தானே நின்று அகல் நிறைவாய் எப்பொருளிலும் வியாபியாயிருக்கும் இறைவனே தானுகவும், என்னையுந் தன்னையும் ஒன்றுகவே கண்டு குழந்தையுந் தாயு மொன்றுபட்டு நிற்பது போன்று ஒன்றுபட நின்று, வேறு பொருளில்லை யென்று 'அருள் வடிவாகவே நின்று அருள் காட்டிய தெய்வமே!' தம் அறிவுப்பெருவெளியிலேதம்மைக் கண்டு வணங்கும் தேவர்களால் ஏத்திப் போற்றித் தொழப்படும் குருபரசிங்கமே! (4)

66. காலைக் கட்டித் தவஞ்செய்ய வேண்டுமே
காமன் றன்னை யெரித்திட வேண்டுமே
மேலை வாசல் திறந்திட வேண்டுமே
வெளியிலே நடங் கண்டிட வேண்டுமே
மூல மந்திர மோதிட வேண்டுமே
முத்தி சேர விரும்பிட வேண்டுமே
ஞால மெங்கும் புகழ்ந்திடு தெய்வமே
நற்கு ருபர புங்கவ சிங்கமே

கால் = உயிர்க்காற்று

புருவ நடுவாகிய நுதலின்கண் ஆவி நின்று தொழிலுறும்நிலை கனவு நிலை. இந்நிலையில் பொறி புலன்களால் முப்பத்தைந்து கருவிகள் இயங்கும். இரண்டா வது நிலையாகிய கண்டத்தில் நிகழ்வது கனவு; இந்நிலையில் உயிர்க்காற்று முதலிய வாயுக்கள் பத்தும், ஓசை முதலிய அறிதற் புலன்கள் ஐந்தும், செய்தற் புலன்கள் ஐந்தும், அகக்கலன்கள் நான்கு ஆள் ஒன்று கூடியே இருபத்தைந்து கருவிகள் தொழில் புரியும், மூன்றுமிடமாகிய நெஞ்சத்திடமாகச் சுழுத்தியில் உறக்கம் நிகழும். இவ்விடத்தில் உயிர்க்காற்றுகிய பிராணனும் எண்ணமாகிய சித்தமும் ஆளாகிய புருடனும் மூன்றும் ஒன்று கூடியே இத்தொழில் புரியும்; நாலாமிடமாகிய துரியம், கொப்பூழிடமாகப் பேருறக்கம் நிகழும். இவ்விடத்தில் உயிர்க்காற்றும் ஆளுமாகிய இரு கருவிகள் இயங்கும். ஐந்தாமிடமாகிய துரியாதீதத்திற்கு நிலை மூலமாகும். இவ்விடத்தில் ஆளொன்றே இயங்கும்.

இவ்வாறு உயிர்க்காற்றை உள்ளடக்கித் தவம் செய்ய வேண்டும். புறக்கருவிகளும் அகக்கலன்களாகிய மனம் புத்தி சித்தமகங்காரம் முதலியன புருடனுகிய ஆளுடனொடுங்க வேண்டும். (பாட்டு 55, 56, 64 விளக்கம் காண்க) மேலே கூறியவாறே கருவிகள் ஒடுங்கும். விளக்கம் கீழே காண்க. 1. கர்மம் புரியும் கருவிகள் ஒடுங்கவே காமனும் சோமனும், இறைவனே வேண்டித் தவஞ் செய்யுமடியரை, விட்டு நீங்குவர். மூலத்தில் ஒடுங்கிய தத்துவங்களான உயிர்க்காற்று, எண்ணங்கள் கொண்ட சித்தம் முதலியன ஆளாகிய புருடனுடன் மூலத்தியை எழுப்பும்; இம்மூலத்தீ மேலெழுந்து புருவ நடுவில் இருக்கும் திங்கள் மண்டலத்தில் நின்று இயங்கும். மூலத்தீ இயங்கவே காமனும் சோமனும் எரித்திட, தில்லைக் கூத்தையே தனி சித்த வண்ணம் பின் சீவன்முத்தனுகவுலகினில் இராமக்கிருஷ்ணரால் வர்ணிக்கப்படும் நாடக மேடையாகிய உலகியல் வாழ்க்கையைக் கண்டும் நடித்தும் இன்புறலாம். இடைவிடாது பூசைசெய்தும் பஞ்சாட்சரத்தை ஓதியும் காமனும் சோமனுமணுகா வண்ணம் காத்திட வேண்டும். பர முத்தியடைந்திட வேண்டும்; இவற்றை யெல்லாம் நல்கும் எம் ஞான குரவனே! உலகு எங்கும் அறிஞர் போற்றுந் தெய்வமே! தாயுமானவர் நிட்டையின் நிலைகளையுங் கருவிகரணங்களையுந் தருகிறார்:—

சாக்கிரமா நுதலினிலிந்திரியம் பத்துஞ்
சத்தாதி வசனுதி வாயுபத்தும்
நீக்க மிலந் தக்கரணம் புருடனேடு
நின்றமுப் பான் ஐந்து நிலவுங் கண்டத்
தாக்கிய சொப்பன மதனில் வாயு பத்தும்
அடுத்தன சக்தாதி வசனுதி யாக
நோக்குகர ணம்புருடன் உடனே கூட
நுவல்வர் இருபத்தைந்தா நுண்ணியோரே"

[ஆசையெனும் (55)]

1, அறிதற்கருவி ஐந்து:- செவி, மெய், வாய், கண், மூக்கு, முறையே ஓசை, ஊறு சுவை, ஒளி, நாற்றம் எனும் தொழில் புரிவன.

2. தொழில்கருவி ஐந்து:- வாய், கால், கை, எருவாய், கருவாய், முறையே பேசல், நடத்தல், கொடுத்தல், கழித்தல், மகப்பெறல் என்னும் தொழில் புரிவன.

3. காற்றுப் பத்து:- அறிவுவளி, உயிர்க் காற்று, மலக்காற்று, தொழில் காற்று, ஒலிக்காற்று, நிரவுகாற்று எனும் ஐந்து; தொழில் வளி - தும்மல் காற்று, விழிக்காற்று, கொட்டாவிக் காற்று இமைக் காற்று, வீங்கற் காற்று என ஐந்து.

4: அகக்கலன்;- அந்தக் கரணம்; எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு—நாலு, முறையே சித்தம், மனம், ஆங்காரம், புத்தி என்பன.

5. ஆள்: புருடன், உரிய போர்வை ஐந்து உழைப்பு, உணர்வு, உவப்பு (கர்மபலனை அனுபவித்தல்) ஊழி, ஊழ். இவ்வைத்

துமாப்; தூவாமாயையினின்றுந் தோன்றுவன. இவற்றோடு கூடிய வழி ஆவி பொதுமை ஆள் எனப்படும்; முன்கூறிய இருபத்து நான்கு கருவிகளு மொடுங்கிய ஆள், சிறப்பியல்பான ஆள்.

சுழுத்தி இதயந்தனிற் பிராணஞ் சித்தஞ்
சொல்லரிய புருடனுடன் மூன்றதாகும்
வழுத்திய நாபியில் துரியம் பிராணனெடு
மன்னு புருடனுங் கூட வயங்கா நிற்கும்
அழுத்திடு மூலந்தன்னில் துரியா தீதம்
அதனிடையே புருடனென்றி அமரும் ஞானம்
பழுத்திடும்பக் குவரறிவர் அவத்தை ஐந்திற்
பாங்கு பெறக் கருவி நிற்கும் பரிசு தானே.

தாயுமானவர் 24 ஆசையெனும் 26 (5)

14 தேறித் தேறித் தெளிவதுந் தன்னையே

67 ஓதியோதி யுணர்வதுந் தன்னையே
நீதி பேசி நினைவதுந் தன்னையே
சாதி பேசிச் சலிப்பதுந் தன்னையே
ஆதி யாதியென் முய்வதுந் தன்னையே

திருவருளால் தான் திருவடிக்கு நீங்கா அடிமை என்னு முண்மையினை உணர்வதே ஒருவன் தன்னை உணர்தலாம். உள்ளபடியே யாதுமென உணர்ந்தேன். 'நான்" நான் எனும் கள்ள மனம் போ யொளிக்க சித்த மௌனஞ் செயல் வாக்கெலாம் மௌனம் என் பால் தோன்ற, ஆசையற்று முப்பத்தைந்து கருவி கரணங்களும் ஒடுங்கி இறைவனே செயல்புரியு முண்மை விளங்கத் திருவருளால் தான் திருவடிக்கு நீங்கா அடிமை என்னும் உண்மையினை உணர் வதேயது. அது அடியேன் மனத்துடன் கலந்து மெய்மை தெளிவிக்க 'சும்மாயிருக்குஞ் சொரூபமே நீயே'' எனு முண்மைப் பொருளாகவே தன் ஆத்மனைக்கண்டு, எளியேனை ஆட்கொள்ள வேண்டும், ஆட் கொள்ள வேண்டும் எனப் பஞ்சாட்சரத்தை ஓதியோதி யுணர்வது மந்த ஆத்மனையே, தன்னையே.

னினைப்பயன் நுகர்ந்து கழிக்கவேண்டிய முறைமையினால், மருத் துவம் போன்ற மறைப்பாற்றலால், (68) உலகியல் வழக்கத்தாலும் உறுதி நூல்களின் உணர்வாலும் இது தீது, இது நன்று என ஆய்ந்து உணர்ந்தும் உணர்ந்தபடி நன்மை கடைப்பிடித்து ஒழுகாமல் சலிப் புறுதலும் மறைப்பாற்றலாம் இறைவனேயாம், (பாட்டு 53 இல் களவு படாததோர் காலம் என்பதையும் 'காலவரையறை' எனும் பாட் டையும் காண்க). மேலும் தன்னையறிந்து தன்னைத்தாங்கும் நிலைக் களமாக என்றும் நீங்காது உடனாய் நிறைந்து நிற்கும் திருவருளே-

நின் திருவடியினை அறிவிக்கும்; உணர்தற்குத் துணையாய் நிற்கும்; அந்த மெய்ப்பொருளேயது. ஓதியோதி யுணர்வதுந் திருவருளே, நீதிபேசி நினைவதுந் திருவருளே, சாதி பேசிச் சலிப்பதுந் திருவருளே! எல்லாம் முன் ஆற்றல் வடிவாக இறைவனால் கொடுக்கப்பட்ட தூய அருளேயாம். அதையறிவதும் திருவருளே. (1)

68 ஆறி யாறி அறிவதுந் தன்னையே
தேறித் தேறித் தெளிவதுந் தன்னையே
மாறி மாறி நினைவதுந் தன்னையே
கூறிக் கூறிக் குறிப்பதுந் தன்னையே.

துன்பமாகிய மேகம் பொழிகின்ற துன்பக் கடலிலே கிடந்து தழுந்தியுழன்றும் பின் நின் திருவருளால் அல்லல் யாவும் மறைப் பாற்றலாய் மருத்துவனே என உணர்ந்தறிந்தும், திருவருள் கை கூடத் தன்னையறிந்தும், பின் இவற்றை யறிவிப்பதும் திருவருளே யென்றும்; செய்யுஞ் செய்கையும் சிந்திக்குஞ் சிந்தையும் வெய்ய காமமும் மாறி, மாறி மனத்தையலைக்க, மாறி, மாறி நினைந்தும், திருவருட்டுணையால் நீ ய அவற்றை மனத்திலுண்டாக்கிமருத்துவனாக நின்று சிகிச்சை செய்தும் பின் தன்னையறியத் திருவருள் தந்தவன் என்று முணர்ந்து தேறித் தன்னையுணர்ந்தும், எல்லாவழி நின்றுணர்த்தும் பொருள் ஒன்றே, சும்மா இருக்கும் சொரூபமே! நின் திருவருளே! என்றும் உணர்க. (2)

69. சிவத்தை நோக்கித் தெளிவதுந் தன்னையே
பவத்தை நீக்கிப் பணிவதுந் தன்னையே
தவத்தை யாற்றி யறிவதுந் தன்னையே
உவத்தல் காய்த லொழிப்பதுந் தன்னையே.

சிவனை முழுமுதற் கடவுளாகக்கொண்டு வழிபடுவோர் சைவர் எனப் படுவர். சிவன் ரூபம், அருவுருவம், அருவமாகிய மூன்று திருமேனியுடையவர் என்பர். பொன்னம்பலம், பொற்றூண் என்பனவற்றையும் பிறவும் (பாட்டு 25, 61, 62; இல் காண்க.) 'சும்மா இருக்கும் சொரூபமே நீயே' என்று குறிப்பிடுவது அகத்தில் ஒடுங்கிய மனதையே. எம் ஆத்மனே என்றும், எப்பொருளிலும் வியாபியாயிருக்கும் இறைவன் அலகிலாச் சோதியன் என்றும் என்னிலையிலும் எக்கோலத்திலும் அம்மை பார்வதியின் நாதத்தைக் கண்டு இன்புற்று நம் ஆத்மனை அங்கே காண்பதே உண்மை. நான் எனும் ஆணவத்தை நீக்கி (முன் விளக்கம்) பார்வதியின் நாதமாகவே எவற்றையுங்கண்டு மும்மொளனமே ரூபமாகப் பணிந்தேத்துவதும் தன்னையே. தாயுமானவர் (1) ''கல்லாலின் நிழல் தனில் ஒரு நால்வர்க்குங் கடவுள் நீஉணர்த்துவதுங் கைகாட்டென்றல், சொல்லாலே சொல்லப் படுமோ'' என்று ''கல்லால மரத்து நிழலில் வீற்றிருந்து ஒப்பில்லாத சனகர் சனற்குமாரர் சனந்தனர், சனாதனர் என்னும் நால்வர்க்கும் முதல்வனாகிய நீ உண்மையாம் முத்திறப் புணர்ப்பினை உணர்த்தியருளி

யதும் அறிவடையாளக் கைப்புணர்ப்பென்றுல் வாய்ச் சொல்லால் சொல்லப்படுமோ''? என்னும் பொருளுடன் பாடுகிறுர். நால்வகைத் தவத்தினேர்க்கும் தகுந்த வாறே திருக்குறிப்பால் காட்ட அவர்கள் தன்னையே கண்டார்கள். கல்லால மரம் நிழலில்லாத மரம். இன்பம் அனுபவித்தல் கர்மம் புரிதல்; கர்மம் புரியாமலே, இன்ப மனுபவிக்காமலே, இவற்றை ஒழித்து தேகத்தை வாட்டி ஐம்புலன் களையு மொடுக்கித் தாம் தவஞ் செயதறிவதுந் தன்னையே. (3)

70 வாதம் பேசி மதிப்பதுந் தன்னையே
காத மோடியுங் காண்பது தன்னையே
பூத மைந்தனுட் போற்றலுந் தன்னையே
நாதம் விந்தென நவில்வதுந் தன்னையே

இறைவனிடம் பக்தி உண்டானுல் எவ்வண்ணமும் இறைவன் பாதஞ் சேரலாம். இறைவன் 'இவ்வண்ணத்தர்' 'இக்குறிப்பினுல் தாடையலாம்' என்று வெவ்வேறு சமயத்தவர்களும் வாதம் பேசி அடைவது ஒரே சொரூபம். 'சும்மா இருக்கும் சொரூபமே நீயே எனுல் மெய்ப்பொருளேயது. கை, வாய், மூக்கு, செவி, கண், புத்தி முதலியவற்றுல் தொழுது வணங்கும் பொருளுமது (பாட்டு 64 சிவானந்தலஹரி 7 காண்க) பக்தி செய்வதற்குக் காடென்றும் மலை யென்றும் தேடிப்போக வேண்டிய அவசியமில்லை. இருக்கும் இடத் தில் இறைவன் திருவடிகளைப் போற்றியிருந்தால் போதும். 'நாதமே நாதாந்த வெளியே' எனும் நம் எண்ணங்களால் உண்டாகும் இச்சை வினைப்பயன் எனும் அப்பலத்தே ஆற்றல் வடிவெடுக்க, 'சும்மா இருக் கும்சொரூபமே' எனுமுண்மை விளங்க பார்வதியாக உருவெடுக்கும் நாதமே நாதாந்தவெளியே, நாதம்விந்தென நவிலலுந் தன்னையே. (4)

71 ஓடியோடி உவப்பதுந் தன்னையே
தேடித் தேடித் தெளிவதுந் தன்னையே
நாடி நாடி நகைப்பதுந் தன்னையே
கூடிக் கூடிக் குறிப்பதுந் தன்னையே.

சிவத்தினின்று பராசத்தி தோன்றும். பொன்னம்பலத்தே கூற்றி யற்றும். இறைவனும் நாதமாய் விளங்கும் பார்வதியுமினை பிரியாத வர்கள். பண்ணையு மிசையையும் போன்று இணை பிரியாதவர்கள்; அகிலாண்ட ஓசையின் தொகை 'ஓம்', நாதப்பிரம்மம், பிரணவம்; ஓங்கார சொரூபம்; இவ்வுண்மைகளைப் பாட்டு (61) இல் காண்க. எவ்வித ஓசையும் அகிலாண்ட ஓசையின் தொகை 'ஓம்' நாதப்பிரம் மம் அத்மனே; இவ்வுண்மையையே முழுவதிலுங் காண்க.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வேறிருந்துன் திருநாமந்
தரிப்பார் பொன்னம்பலத்தாடுந் தலைவா என்பார் அவர் முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனை நம்பி இனித்தான் நல்காயே.

(திருவாசகம் கோயில் மூத்த பதிகம் 9)

கங்கையாடி லென் காவிரியாடி லென்
கொங்கு தண் குமரித்துறையாடிலென்
ழுங்குமா கடல் ஓத நீராடிலென்
எங்கும் ஈசன் எனுதவர்க்கில்லையே. (அப்பர் 5-99-2) (5)

15 ஒரு சொல்லா லுளந்தூய்மை யாச்சே

72 ஒரு சொல்லா லுளந்தூய்மை யாச்சே – சிவ சிவ
ஒன்றிரண் டென்றிடும் பேதமும் போச்சே
இருவினை யென்பதும் பேச்சே
என்னை அறிந்தேன் இடரற்றுப் போச்சே

அகிலாண்ட ஓசையின் தொகை ஓம் நாதப்பிரமம் பிரணவமே நீயே என் ஆத்மன் 'சிவ சிவ' எனும் மாமறையர்ம் ஒரு சொல். 'அதுவே ஓம்' அறிவை அறிவாலறியும், சும்மா இநக்குஞ் சொரூபமாக விளங்கும் அகம். இவற்றை அறிந்து 'சும்மா இருக்கச் சுக முதயமாகுமே இம்மாயாமோக மேனெடா' எனும் உண்மை விளங்க மும்மௌனமாக விருந்தால் இடரற்றுப் போச்சு; நல்வினை தீவினை யென்பதுங் கிடையாது; வீண் பேச்சு; நான் நீ என்பதுங் கிடையாது; எல்லாம் அவனேயாம; எப்பொருளிலும் நாதமாக விளங்கும் 'பார்' வதியும்' அப்பால் நின்று இயங்கும் 'பரமேஸ்வரனுமே' தென்படுவர். அதே ஒரு சொல்லினுறுதி. (1)

73. எல்லாமென் கைவச மாச்சே – சிவ சிவ
எடுத்த பிறப்பின் பயன் சித்தியாச்சே
உல்லாச மாய்த் திரிவதாச்சே
உலகெலா மெனக்குற வாகிப் போச்சே

பிறவியின் பயன், மலப்பிணிப்பினின்றும் நீங்கப்பெற்று, பின்னும் இறப்பிறப்பென்னு மா கடலில் மாளாது மெய்ப் பொருளாம் தன்னையே தானறிந்து, இடரற்று வாழ்தல்; 'சிவ சிவ' எனும் ஒரு மொழியே அதற்கு வழித்துணை (முன்பாட்டுக்கள் விளக்கம்) மாணிக்கவாசகர் இவற்றைத் தருவதைக் காண்.

பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணி வார்த்தை – பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து. (பண்டாய நான்மறை 7)

சும்மா இருக்கும் சொரூபமாக விளங்கும் அகம்; இதை அடைந்த அன்பர்கள் இறைவன் பாதம் நல்க பெருந்துறை ஏகினர்; ஏகினர் தமக்குப் பேரின்ப உலகம் அவர் கைவசம்; உலகினில்

நடனத்தையே காண்பார்கள். உல்லாசமாக வீற்றிருந்து உலகினை நண்பராகக் கண்டு இன்புறுவர். நடிப்பின் திறமையையும், ஆசிரியரின் வித்வத்தன்மையையும் அவனருளாலே கண்டு பொல்லாப்பில்லா உலகினில் எல்லாம் அவர் உறவு எல்லாம் அவர் இன்பம். (2)

74 சொல்லாலே வாய்த்த சுகத்தை — சிவ சிவ
சுகிப்பதே யல்லாமற் சொல்லவொண் ணுதே
கல்லாதே யாவுங்கற் றேனே
காயத்தை யும்என்றன் கைக்குள்வைத் தேனே.

ஒருசொல் மௌனங் கைகூர சோம்பியாய்ச் சும்மா சுகமுண்டுறங்கிடில் வேறென்ன வேண்டும். சோம்பியாகச் சும்மா இருக்கும் சுகம் உதயமாக, நடிப்பின் திறமையால் நாடக மேடையாகிய உலகில் சிவலோகத்தைத் தம்முள் காண்பார். இன்பம் துன்பம் இரண்டும் அற்ற பேரின்ப உலகினில் சிவயோகமும் சிவபோகமுந் தம்முள் காண்பார். இவ்வின்ப நிலையை சோம்பியாய் நடனத்தைக் கண்டு இன்புறும் நிலையை எவ்வாறு உணர்த்துவது? கல்லாமல் கல்லாலமரத்தடியில் கற்று சொல்லொணு பேரின்ப வுணர்ச்சியை அனுபவத்தாலே அறியலாம்; வேறு வழியில்லை; இறைவன் அருவம்; ஆனல் அவன் நிழலோ நாதப்பிரமமாம், உலகு. கண்டு நிழலில் வீற்றிருந்தின்புறுவோமே.

தூங்கிக் கண்டார் சிவ லோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவ யோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவ போகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் நிலை சொல்வது எவ்வாறே

[திருமூலர் 10-483] (3)

75. அண்ட சராசர மெல்லாம் — சிவ சிவ
அகத்திலே கண்டு தரிசித்துக் கொண்டேன்
முண்டக மலர்ப்பாதங் கண்டேன்
மூவருந் தேவரும் முளைத்ததுங் கண்டேன்.

அகிலாண்ட ஓசையின் தொகை ஓம் ஓங்கார ரூபம்; தமிழ் மாமறை 'சிவசிவ' அவற்றை உணர்த்துவது. (பாட்டு 62) பெரிய பிரகிருதி எனது கர்ப்பாசயம்; அதில் நான் கர்ப்பத்தை வைக்கிறேன் அதினின்று உயிர்களெல்லாம் உற்பத்தியாகின்றன. (கீதை 14-3) பிரகிருதிக்கு மற்றொரு பெயர் பிரம்மா, முக்குணமாயுள்ளது அது, முக்குண விகார உற்பத்தி பிரமா, விஷ்ணு உருத்திரன் எனும் மூன்று தேவர்க்கு முரிய தொழில்; தாமசகுணம் அறிவின்மை பொய் களவு சூது இவற்றை உண்டாக்குவது. ரஜோ குணத்தில் ஏதேனுஞ்செய்து கொண்டே இருக்க வேண்டும். சத்வ குணத்தில் அறிவையும் இன்பத்தையும் வேண்டுகிறுள். சாத்வீக ஞானப்பற்று எளிதில் மனதை விட்டு அகலாது. சத்வ குணத்துக்கு அப்பால் சென்றவனுக்கு விருப்பு வெறுப்பு இல்லை. குணத்தைக் கடந்தவனே மறந்தும் கேடுதரும் கர்மம் செய்ய முடியாது. தோட்டியின் வேலையிலிருந்து தேவாராதனை ஈறுக அவன் பற்றற்றுச் செய்கிறுன்.

ஓம் எனும் உண்மை விளங்கவே 'சிவ சிவ' எனும் மாமறை யோதி சாத்வீக குணத்துக்கு அப்பால் பற்றற்று நின்று மும்மைள னஞ் சாதித்தே 'சும்மா இருக்கும் சொரூபமே' எனும் வடிவான அகத்தினராய் உலகமாம் நாதப் பிரமத்தை, ஐயன்களாயாக விளங் கும் உலகினை அறிவினால் கண்டேன்; முண்டகன், பிரமன், தாமரை யில் வீற்றிருக்கும் பார்வதி இவையின் உண்மை வடிவினை அறிவினால் கண்டுதரிசித்தேன்; முக்குண விகாரமும் அவற்றை உண்டாக்கும் நாட காசிரியரையுங் கண்டேன் (கீதை 4-3) முன் காண்க, குறைதீதனே அவன் ''ஜீவன் முக்தர்கள் மீன் கொத்திப் பறவைகளைப் போன்று உலகில் வாழ்கின்றார்கள். அப்பறவை நீரில் ஆழ மூழ்குகிறது. என் றாலும் அதன் சிறகுகள் தண்ணீரால் நனைவதில்லை. இரண்டொரு துளி நீர் ஒட்டிக் கொண்டிருக்குமானால் சரீரத்தை அசைத்து சுலபமாக அதனை நீக்கி வருகிறது. (ஸ்ரீ இராமகிருஷ்ணர்) (4)

76 உருகி யுருகி உணர்ந்தேன் — சிவசிவ
ஒன்றையுங் காணும மலேங்கிநான் நின்றேன்
மரும மிதுபெரும் மருமம்
மகத்துக்க ளாலும் சொல்லொணு மருமம்.

இறைவன் பாதாரவிந்தத்தை அளிக்கும் பெருந்துறையை யடைந்தேன் (முன்பாட்டு) அவனைக் கண்டேன். முக்குண விகாரத்தை யுண்டாக்குந் தேவர்களையும் தொழில் புரியுந் தன்மையினையும் நாட காசிரியரும் நானும் ஒன்று பட்டே திறமையாக நடிக்கும் பாவனை யில் யான் கண்டேன். அண்ட சராசரம் 'சிவசிவ' எனும் ஓங்கார சொபமா கக் கண்டேன். சிந்தித்தேன்; உருகி யுருகி விழி நீர்மல்கி பேரானந்தம் அருந்தி இன்புற்றேன். பேதமில்லாதோர் கர்ப்பனித்த பெருமான் அருளிய உண்மையினைக் கண்டேன். எங்கும் ஒரே களை சொபம்; நாதப் பிரப்மமே உலகு. வேறு சொபமொன்று மில்லை யே. விளையுஞ் சிவானந்த பூமி ' அந்த வெட்டவெளி நண்ணி துட்ட இருளாங் களை யைக் களைந்து பின் பார்த்தேன் - ஐயன் களையன்றி வேறென்றுங் கண்டிலன் தோழி'' தாயுமானவர்.

இராமாயண நாடகம் நடிக்கும் போது இராமர் வேஷம் போட்டவருக்கு சீதையை இராவணன் தூக்கிச் சென்றால் அதில் என்ன மர்மம். ஆசிரியர் எழுதிய நாடகத்தை நடிப்பதேயல்லாமல் என்ன பேதமிருக்கிறது. ஒரு பேதமும் காணுததே அந்த மர்மம்; மகத்துக்களாலுஞ் சொல்லொணு மர்மம். (5)

16. குருபதத்தைக் கும்பிடுவோம்

77 காலை யெழுந்திருந்து
கைகால் முகங்கழுவி
கோல மலரெடுத்துக் — கிளியே!
குருபதத்தைக் கும்பிடுவோம்

கோபக்ரோத மோகமாதிய
கூடாதகூட்டங் கூடாதே
நாடாதேயென்றுந் தேடாதே
நாமதுவெடி நாமதுவெடி

குரு: பணிந்துங் கேட்டும் பணிவிடை செய்தும் நீ அதை அறிக. உண்மையை அறிந்த ஞானிகள் உனக்கு அந்த ஞானத்தை உபதேசிப்பார்கள் (கீதை 4-34) யாரிடமிருந்து உலகுக்கு இடர் இல்லையோ யார் உலகத்தினின்று இடர்ப்படுவதில்லையோ, இன்னும் யார் களிப்பு கோபம் அச்சம் கலக்கம் இவைகளினின்றும் விடுபட்டவனே அவன் எனக்கு உவந்தவன். (கீதை 12-15)

இன்னல்போன்று தோன்றும் சில செயல்கள் உண்மையில் உசிதமாகவே முடியும். ஆசிரியர் மாணாக்கனைக் கண்டிப்பது, மருத்துவன் ரண வைத்தியத்தில் நோயாளிக்குத் துன்பம் விளைவிப்பது அறப்போரில் வீரன் எதிரியைத் தாக்குவது இவை யாவும் வெளித் தோற்றத்துக்கு இடர் போன்று இருப்பினும் உண்மையில் உலகுக்குச் செய்த நன்மையாகும். (சித்பவானந்தர்)

தனது குருவைக் கேவலம் மனுஷயனாகக் கருதுபவனுக்குப் பிரார்த்தனையாலும் பக்தியாலும் என்ன பலனுண்டாகக் கூடும்? நமது குருவைக் கேவலம் மனுஷயரெனக் கருதக் கூடாது. ஈசுவரனைக் காண்பதற்கு முன்னும் அத்திவ்ய தரிசனத்தின் முதல் அங்கமாகக் குருவைத்தான் சிஷ்யன் காண்கிறான்; பிறகு அந்தக் குருவே ஈசுவரனாக மாறி ஈசுவர சொரூபத்தைக் காட்டுகிறார். அப்பால் ஈசுவரனும் குருவும் ஒருவரேயென்ற விஷயம் தெரிந்துகொள்கிறான்: அவன் விரும்பும் வரங்களை எல்லாம் திவ்விய குரு அருளுவார். இம்மட்டோ! அவனை பிரம்ம நிர்வாணமாகிய பரமானந்த சுகத்துக்கும் அழைத்துச் செல்கிறார் அன்றி பக்தன் ஈசுவரன் என்ற சம்பந்த முள்ள துவைத நிலையில் அவன் இருக்க வேண்டினும் அங்ஙனமே இருக்கலாம். சிஷ்யன் எதைக்கேட்டாலும் குரு அதை நிச்சயமாகத் தருகிறார்' தெய்வ குருவோ ஆத்மாவுக்குள் சைதன்யத்தைச் செலுத்துகிறார். ஈசுவரனுடைய ரகசியங்களை அறிய வேண்டுமென்ற தீவிர புத்தி உனக்கு இருக்குமானால் அவ்வீசுவரனே ஸத்குரு ஒருவரை உன்னிடம் அனுப்புவார். பக்தனே குருவைத்தேட வேண்டிய விஷயத்தில் உனக்குக் கவலையே வேண்டாம் — ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

குருபதத்தைக் கும்பிட்டுப் பக்குவமடைந்தால் ஸத்குரு வந்து தோன்றுவார். (1)

78. பொறிவழியே போயலையும்
பொல்லாம னத்தைவென்றால்
அறிவறி யாமையெல்லாம் — கிளியே!
அப்பொழுதே மாய்ந்துவிடும்

அஞ்சாதேநீ கெஞ்சாதே
அங்குமிங்கு மோடாதே
எங்கும்நாமெடி எங்கும்நாமெடி
எல்லாம்நாமெடி எல்லாம்நாமெடி

''தியான யோகத்தில் முன்னேற விரும்புகிற முனிவனுக்குக் கர்மம் உபாயமாகிறது. தியான சித்தி யடைந்தவனுக்கோ செயலற் றிருப்பது உபாயமாகிறது.'' (கீதை 6-3)

காமிய கர்மத்தைச் செய்பவனுக்கு மனம் ஒடுங்குவதில்லை; ஆதலால் நிஷ்காமிய கர்மத்தைச் செய்யவேண்டும். கர்மபலன் கருதாதே கர்மம் புரியவேண்டும். ஈற்றில் மனம் தெளிவடைகிறது. நாடகாசிரியர் எழுதிய நாடகமே உலகம்; எப்பவோ முடிந்தகாரியம். இயற்கைக்கு மாருக ஒரு போதும் ஒன்றும் நிகழ்வதில்லை, இயற்கையே இந்நாடகம். சித்த மௌனம் செயல் வாக்கெலாம்மௌனம் சுத்த மௌனம் தோன்றும். அஞ்ஞான இருள் விட்டு நீங்கும். எல்லாம் சிவன் செயல் என்னும் உண்மை தெளிந்து விளங்கும். காமத்தில் நாட்டம் இருந்தால் வெற்றி, தோல்வி அச்சம், கோபம் முதலியன தோன்றும். நிஷ்காமிய கர்மம் செய்தால் இவை மறைந்து விடும். தியானங் கைகூட எங்கும் கலை ரூபமாக விளங்கும் இறைவனே காட்சி தருவான். (முன்பாட்டு ஸ்ரீ இராமகிருஷ்ணர் உபதேசம் காண்க) (2)

79. தன்னை யறிந்துவிட்டால்
தானந் தவமதுவே
தனக்குவமை யில்லையெடி — கிளியே!
தாளிரண்டும் பூட்டிவிடு
தங்கமேநீ இங்கேவா
எங்குமவன் சங்கையில்லை
தானதாம் தானதாம்
தனதாம் தனதாம்.

(பாட்டு விளக்கம் 70, 71 காண்க) எங்கும் கலை ரூபமாக விளங்கும் உலகில், மகேஸ்வரனாக விளங்கும் உலகில், தற்பரனை 'தன்னைக்' காணலாம். தவத்தின் பயனை அருவுருவாம் சதாசிவனைக் கண்டு தரிசி. என்னிரண்டு கண்ணை உறங்கு, முக்கட் கருணைப்பிரான்; எப்பொருளிலும் வியாபியாயிருக்கும் பார்வதி சந்திரன்; அவற்றை அப்பால் பட்டவனாக விளம்பப்படுமென்னும் அம்பலத்தே வினை முதலாம் முதல்வன், சூரியன். நின்று இயக்குபவனும்; ஞானக் கண்ணுடனே முக்கட்பிரான்; தண்ணர் கருணை மவுனத்தினாலே முத்தி சாதிக்கலாம். நிட்டை 'சும்மா இருக்கும் சொரூபமே' குருநாதனே, தங்கமே, நீயே இங்கேவா, தாளிரண்டும் பூட்டு = பிரயாணயாமம் (3)

17 சிவத்தியானம் செய்திடுவோம்

80. அன்னேபி தாக்குருவாய்
ஐயனெனே யாண்டுகொண்டான்
என்னேய றிந்தேனடி — கிளியே
இச்சையெல்லாம் போச்சுதடி

இளங்குயிலே நடந்துவாடி
எல்லாஞ்சிவ ரூபமெடி
அளந்தறிய முடியாதெடி
தளர்ந்திடாமல் தொடர்ந்துவாடி
தானதாம் தானதாம்
தானதாம் தானதாம்.

முக்கட் கருணைப்பிரானுன அம்மை அப்பர் ரூபமான சதாசிவனைக் கண்டு தரிசித்தேனே! அவன் எனக்குத் தரிசனந்தந்து ஆட்கொண்டான். அதில் என்னையும் தற்பரனைக்கண்டு கொண்டேன்; அஞ்ஞான இருள் விட்டு நீங்கியது. நிஷ்காமிய கர்மம் புரிகிறேன்; மும்மௌன சீம அருளும்; "சும்மா இருக்கும் சொரூபமே", நீயே குருநாதனே! தற்பரனுக விளங்கும் ஆத்மனே; இளங்குயிலே, தேறித் தேறித் தெளிந்து உண்மைகளை, குருநாதன் வழி நிற்க, ஒன்றென்றாக உணர்ந்தறிக; போதனுசிரியர் சோதனையில் 'சிவன் செயல்' 'ஓம்' என்னும் ஒரு சொல்லின் உண்மை தெளியத் தளராமல் ஞான சொரூபமாக வளர்வாயாக; உலக நடனங் காண்க. (1)

81. பொன்னுசை பெண்ணுசை
மண்ணுசையால் மனிதரெல்லாம்
சின்னபின்ன மானுரெடி — கிளியே
சிவத்தியானம் செய்திடுவோம்

சிங்காரமான பூங்குயிலே
அங்குமிங்கு மலையாதே
கங்குல்பக லற்றகாட்சி
காட்டிவைப்பேன் கண்ணேவாராய்
எங்குமவனெடி எங்குமவனெடி
எல்லாமவனெடி எல்லாமவனெடி.

கல்லாலின் நிழல் தனில் ஒரு நால்வர்க்கு அவன் அருள் கொடுத்தனன் (69); நிழல் ஒன்றுமிலா மரமே கல்லால், புத்தியெனும் வாய்க்கால் வழியே சிவானந்த வெள்ளம் பெருக வேண்டும். மண்ணுசை, பெண்ணுசை, பொன்னுசை காமிய கர்மத்துக்கே ஈடு படுத்தும்; அச்சம் கோபம் மரணபயம் முதலியனவே அதன் பலன்; தியானங்

கைகூடாது; மனம், சிதறும், ஐம்புலன்களும் ஒடுங்க வேண்டும். (சிவானந்தலஹரி 7 பாட்டு 64 காண்க) பற்றற்ற மனம் ஒடுங்கும்; புத்தியானது உம்முடைய தியானத்தில் அசைவற்று நிற்கும். தியானத்தில் உண்மைகளை உணர்ந்தறியவே ஞான அறிவு வளரும். வளர வளர சிவ சின்னங்கள் கூடும். பொன்னகம் தோன்றும், 'சின்னங்கள் கேட்ப சிவனென்றே வாய்திறப்பாய்' என்னும் மாணிக்க வாசகர் வாக்கியத்தின் உண்மை விளங்கும், ஞானத்திரளாய் விளங்கும் பூங்குயில் போன்ற பொன்னகமே வளர்ந்து வளர்ந்து மேகம் போன்று விளங்கும்; பொன்னம்பலத்தைக் கூவியழை [பொற்றூண் பொன்னம்பலம் பாட்டு 25 காண்க.) இரவு பகலற்ற ஜோதிமயமான பொன்னம்பலவாணனைக் கூவு. கடுந்தவத்தின் பயனுலேதான் அவனைக் காணலாம், (2)

பொன்னம்பலம், வினைப்பயன் எனுமம்பலத்தே வினை முதலாம் முதல்வன் உயிரில் பொருள் உயிருள் பொருள் எல்லாவற்றிலும் வியாபியாயிருந்து அவற்றை இயக்குகின்றனன். அதே ஒழுங்கின் வடிவமாக, நாதமாக விளங்கும் அம்மையும் அப்பரும் இணை பிரியாத ரூபமாக, அருவுருவாம் சதாசிவமாக, நாம் கண்டு ஏத்திப் போற்றுகிறோம். இதே இயற்கையின் வடிவம் (62). மனிதன் பிறவி எடுத்ததின் பயன் அறவழி நின்று (43) ஆத்மஞானம் பெறுதற்கே; நிஷ்காமிய கர்மத்தில் ஈடுபடுதல் வேண்டும். பற்றற்ற நிலையில் நின்று தியானத்தில் வளரவேண்டும். (2)

82. விண்ணுணம் பேசியன்றே
வீண்காலம் போக்குகின்றோம்
பொன்னை மேனியரைக் — கிளியே
பூவெடுத்துப் பூசைசெய்வோம்
பூவையேநீ புகலக்கேளாய்
சேவைசெய்தவர் சீவன்முத்தர்
நாவைநீ காத்துக்கொள்ளெடி
நானெனுமாணவம் நீக்கிக்கொள்ளெடி
நாமதுவெடி நாமதுவெடி
நாமதுவெடி நாமதுவெடி

எல்லாம் சிவன் செயலே எங்குஞ் சிவன் செயலே (முன் விளக்கம் பொன்னம்பலம் காண்) செயலை நடத்தும் இறைவன் அழியாப் பொருள். மற்றவை மாயையின் காட்சி; வித்தியாசமாய் தோன்றுவன. வீண் பாவனை. உண்மை ரூபம் அவனே. ஒன்று விண்ணுணம், வீண் பாவனை; வினை முதலாம் முதல்வனே மெய்ப்பொருள்; அறவழி நின்று பொன்னம்பலவாணனை அடைவோமே. நித்தியமும் மறவாது பூசை செய்வோம். நாடகமேடையில் நடிக்கும் நடிகர்க்கு நாடகத்தின் அம்சங்களில் துவேஷங் கிடையாது; மற்றும் நடிகர்களை சமநோக்குடன் கணிப்பர். அவரே ஜீவன் முத்தர்; நான் எனும் ஆணவமலம் எங்கே? அழித்து விட்டோமே நாடகமேடையே உலகம் (ஸ்ரீ இராமகிருஷ்ணர்) (3)

18 எங்கள் வளநாடு

அன்பர் பணிந்தேத்தி, மார்க்கண்டேயரைப் போன்று என்றும் பதினறு வயதுடையோனுய்ப் பிறவிக்கடலுக்கு அப்பாற்பட்டவனுக, சிவலிங்க வடிவான அகமுடையோனுய் அரனுறைதற்கு இடமாக விளங்கும் நந்நாடு; பாசபந்தக் கயிறு எரிந்து இந்திரியக் கள்வரற்ற நந்நாடு; திரையற்ற நீர் போன்ற செஞ்சரண நிலவுவிரி, தில்லை நடனஞ் செய்ய நடங்கண்டு களிக்கும் நந்நாடு: அப்பாலே துரியா தீதத்தில் வெட்டவெளியாரூடும், பகலிரவு தோன்றுத பட்டப் பகல் போலோளிரும் மீதான வெற்புடைய, கோடிசூரியப் பிரகாச வொளியுடன் துலங்கும் ஐந்தெழுத்துச் ஜோதியாம், சிவபெருமான், வீற்றிருக்கும் நந்நாடு; அந்தச் ஜோதியில் ஆழ்ந்து கிடந்து பின் புவனலோகத்தில் இரண்டாம் பிறப்பாக யேசுநாதர், புத்தபிரான், ஸ்ரீ இராமக்கிருஷ்ணர், செல்லப்பாச் சாமியார், யோகசுவாமிகள் மற்றும் நாயன்மாரும் பிறந்து உலகினிற்குத் தொண்டு புரியும்நாடு; புவனலோகம். எரிந்த பாசபந்தக் கயிறு கட்டுந் தன்மையற்றதாய் வெய்ய புவிப்பார்வை யொழிந்து தூயசுகலாரிதி தோய் மேலான பூரணமாம் சாயுச்சிய பதவியில் மேலாம் அறிஞர் வாழும் நந்நாடு; புவனலோகம்.

83. அன்பர்பணிந் தேத்திநிற்கும் நாடெங்கள் நாடே
அரனுறைதற் கிடமான நாடெங்கள் நாடே
துன்பக்களை போக்கி நிற்கும் நாடெங்கள் நாடே
தூயவருள் மழைபொழியும் நாடெங்கள் நாடே
இன்பப்பயிர் ஓங்கிவளர் நாடெங்கள் நாடே
இந்திரியக் கள்வரற்ற நாடெங்கள் நாடே
என்புநனி நெக்குருக என்னைவலிந் தாண்ட
என்குரவன் காட்டிவைத்த தெங்கள்வள நாடே

உரைநடை:- அன்பர் பணிந்தேத்தி நிற்கும்நாடு; அரனுறை தற்கு இடமான நாடு; தூயவருள்மழை பொழியும் நாடு; துன்பங் களைப் போக்கி நிற்கும் நாடு: இன்பப்பயிர் ஓங்கிவளர் நாடு; இந் திரியக் கள்வரற்ற நாடு என்குரவன் என்புநனி நெக்குருக என்னை வலிந்தாண்டு தன்னைக் காட்டிவைத்த எங்கள் வளநாடு.

கண்ணப்பர் போன்ற மெய்ப்பேரன்புடையார் உள்ளம் உரு கிக் கண்ணீர் ஆருகப் பெருக நிற்பர்; கண்ணப்பநாயனுர் ஒருவரே திண்மைசேர் பேரன்பினர்; அவர் திருவருளால் அன்பே வடிவாய்த் திகழ்ந்தவர்; அவர் தமக்கு அவ்வன்பினையன்றி வேருென்றுந் தோன்ற வில்லை; யதனுல் தம்மை மறந்தார். சிவசிவ எனும் நாமமை தருஞ் 'சிவன் செயல்' எனும் மெய்ப்பொருளுந் தாமும் ஒன்றுபட்ட சமாதி நிலை யெய்தி, அந்த மெய்ப்பொருளுந் தாமும் வேருகக் காணு அந்நிலையில் தம்மை மறந்தார். பொறை நிலை யெய்தி (382) மோனகுருவே அவர் இதயத்தே தோன்ற, அவர் பார்வதியுடன் கூட இறைவனின் தொண்டாக உலகினில் செயலாற்றினர்; அந்நிலை

யில் வாழும் நாடே அன்பர் பணிந்தேத்தி நிற்கும் நாடு; அரனுறை தற்கு இடமான நாடு; அவன் திருவருளே பெருகி கங்காநதிபோன்று அன்பர்க்கு அருள்புரியும் தூயவருள் மழை பொழியும் நாடு; நந்தி தரிசனம் (18) என்புருக அவர் மனத்தே தோன்றி அவர் தம்மை மறந்துநிற்கும் நிலையில் தில்லைநடனங் காண்பார் (84); திருவைந் தெழுத்துச் ஜோதியில் ஆழ்ந்து கிடப்பர் (85); பின் இரண்டாம் பிறப்பாக புவனலோகத்தில் பிறப்பார்; அதே உடம்பொடு, முன் இழுக்கென்றிருந்த அவ்வுடம்பு உத்தமன் கோயிலாக, தும்பையரவு சடையாட (766) ஐம்புலன்களுந் தன்னுள் அடங்கத் தத்துவாதீத னாக, உலகுக்குத் தொண்டாற்றுவர்; அவருக்கு 'நான்,' 'எனுடையது; என்னுஞ் சொற்கள் மறைந்து விட்டது; துன்பங்களைப் போக்கி நிற்கும் நாடு; எரிந்த பாசபந்தக்கயிறு கட்டுந் தன்மையற்றது; இந்திரியக்கள்வரற்ற நாடு; என்றும் அழியாத இன்பந்தரும் பேரா னந்தமே உருவாகச் சமைத்தவர்; இன்பப்பயிர் ஓங்கி வளர்நாடு' எம் ஞானகுரவன், நான் அவரை நல்லையம்பதியில் பரடியில் கண்டு தரிசித்தபோது, 'சிவனருளே நோக்கென்றான்'; நோக்க 'சிந்தை தெளிந்து' ஒரு நொடியளவில் 'அளவுகடந்த வின்பந் தேக்கிற்று' [488; 489] என்குரவன் என்புநனி நெக்குருக என்னை வலிந்தாண்டு காட்டிவைத்த, அந்தப் புவனலோகம், நந்நாடு; முன் இழுக்கென் றிருந்த அந்த உடம்பையே உத்தமன் கோயிலாகக் கொண்டு இரண் டாம் பிறப்பெடுத்த உத்தமர்களே ஸ்ரீ இராமகிருஷ்ணபரமகம்சர், யேசுநாதர், புத்தர்பெருமான், செல்லப்பாச்சாமியார், சிவயோக சுவாமியார் மற்றும் நாயன்மாரும்; இவர்கள் 'இரண்டாம் பிறப் பெடுத்து' தம்முடம்பை உத்தமன் கோயிலாகக் கொண்டு இந்த உலகத்திலேயே, 'எங்கள் வளநாடு' என்று சுவாமிகள் அழைக்கும் புவனத்தில் தொண்டாற்றினர்.

புத்தபெருமான் இறைவனுடைய தரிசனங்கண்டு அந்தச்சமா தியில் ஆழ்ந்து கிடந்தார். பின் பாசபந்தக் கயிறு எரிந்த சந்நியாசி யாக ஊரில் பிச்சையெடுத்து உண்டு வந்தவர்; தம்மூருக்கு வந்த பொழுது ஓர் தர்ம சத்திரத்தில் தங்கியும் ஊரில் பிச்சையெடுத்து உண்டும் வந்தார்; கேள்வியுற்ற அவர் தந்தையாகிய அரசன் ''என் சந்ததியில் ஒருவரும் பிச்சையெடுத்துண்ணவில்லையே'' என்று வைதார். புத்தபிரானும் ''ஆனால் என் சந்ததியில் எல்லோரும் பிச்சையெடுத்தே உண்பார்கள்'', என்று பதிலளித்தார். சமாதியடைய முன்னர் அவர் சூரியவம்சத்தில் பிறந்த இராசகுமாரன். ஆனால் சமாதியிலிருந்து பின் னும் அதே உடம்பை உத்தமன் கோயிலாக இரண்டாம் பிறப் பெடுத்த அவர் புவனலோகத்தில் சந்நியாசியாகப் பிச்சையெடுத் துண்டும் உலகுக்குத் தொண்டு புரிந்தும் வாழ்ந்தார். (Twice born) என்று ஆங்கிலத்தில் இவற்றைக் கூறுவர்.) மாணிக்கவாசக சுவாமி களும் ''புவனியில் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின் றோம் அவமே இந்தப் பூமி'' என்று தாம் சமாதியடைந்து இரண் டாம் பிறப்பாகப் புவனியில் பிறப்பெடுக்காவிடில் இந்தப் பிறப்பு வீணாகப் போய்விடுமே'' என்னும் பொருளுடன் பாடுகிறார்.

84. ஆதியந்த மில்லாத நாடெங்கள் நாடே
அம்பரம்போ லேநிறைந்த நாடெங்கள் நாடே
தீதிலருட் கடல்சூழ்ந்த நாடெங்கள் நாடே
திக்கெட்டும் பெருகிவளர் நாடெங்கள் நாடே
சோதிமய மானவுயர் நாடெங்கள் நாடே
சுருதியெல்லாம் ஓலமிடும் நாடெங்கள் நாடே
ஓதாம லோதுவித்த உயிர்க்குயிராம் நாதன்
ஒண்கழல்கள் காட்டிவைத்த தெங்கள்வள நாடே.

உரைநடை:- சுருதியெல்லாம் ஓலமிடும் நாடு; தீதிலருட்கடல் சூழ்ந்த நாடு; திக்கெட்டும் பெருகிவளர் நாடு; ஓதாமல் ஓதுவித்த உயிர்க்குயிராம் நாதன் ஒண்கழல்கள் காட்டிவைத்த அம்பரம்போலே நிறைந்த ஆதியந்த மில்லாத உயர் ஜோதிமயமான நாடெங்கள் நாடே.

கேள்வி வழியாகப் பயின்று வந்தமையால் வேதம் சுருதியெனப் பட்டது. அத்தகைய சுருதியாகிய 'சிவ சிவ' எனுந் தமிழ் மாமறை தரும் மெய்ப்பொருளானவன் இரண்டாம் பிறப்பெடுத்த (83) தம்மடியாருடைய உடம்பையே உத்தமன் கோயிலாகக் கொண்டு அறம் உரைக்கும் நந்நாடு; தண்ணளி வாய்ந்த அவனுடைய தீதிலருட் கடல், இமயமலையினின்றும் பெருகும் கங்கா நதி கீழேயிருக்கும் நாடுகளுக்குச் செழிப்பைக் கொடுப்பது போன்று, இமயமலை வாசனைகளைக் கொடுக்கும் எம்பெருமானின் திருவருள் பெருகுவதினால் மெய்யன்பன் சாக்ஷி ஆமோதிப்பவன் தாங்குவோன் அனுபவிப்பவன் எனும் அத்துவாமார்க்கமாறின் முதன் நான்கு பாதங்களிலும் (293) முழுமுதல்வனை உணர்ந்தறிகிறான். எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனையிலும் உண்ணின்றியங்கும் அருட்கண்ணே எங்கள் பராபரன்' ஸ்ரீ இராமகிருஷ்ணர் ''உலகமாகிய நாடகமேடையிலே, இறைவன் வினைமுதலாம் முதல்வன் (380) சிருஷ்டித்த நாடகத்தை திறனுடன் நடித்தலே எம் கடனாம்'' என்கிறார். அவன் திருவருளுண்டானால் நாம் பற்றற்று இறைவனுடைய சித்திரத் திறமையையுணர்ந்து ஆனந்தங் கொண்டாடிடலாம், நடிகர்கள் ஒருவர்க் கொருவர் துவேஷமின்றியும் பொருட்களில் அவாவின்றியும் திறமையுடனும் நடிக்கலாம். உள் நின்று இயங்கும் மெய்ப்பொருளானவனையறியலாம்; அவனே திக்கெட்டும் பெருகிவளர் நாடு. எப்பொருளிலும் வியாபித்திருப்பவன்;: செல்லப்பாச் சுவாமியார் நல்லூப்பதித் தேரடியில் யோகசுவாமிகளை முதன்முதல் கண்டபொழுது ''சிவனருளை நோக்கென்றாராம்'' ஒன்று மறியா யோகசுவாமிகள் உள்ளத்தே செல்லப்பாச் சுவாமியாராக உருத்தாங்கிய உயிர்க்குயிராம் நாதனே உண்ணின்றியங்கி' சிவனருளை நோக்க 'அளவு கடந்த விஷயந் தேக்கிற்று'' என் சிந்தை தெளிந்து' (489) என்று கூறுகிறார் காண்க. அதே ஓதாமல் ஓதுவித்த ஒண்கழல்கள் காட்டிவைத்த திருவருட்கடல் சூழ்ந்த பெருந் தோணி; இறைவனிடங் கொண்டு செல்லுந் தோணி [300] எங்கள் வளநாடு; சிவகுரு சாதகனுள்ளத்தே நின்று, பள்ளிக்கூட மாணவனுக்கு உபாத்தியாயர் ஒவ்வொரு உண்மையையும் பல அத்தாட்சிகளால் விளக்கு

வது போல், அந்தச் 'சிவசிவ' எனும் ஒரு மொழியின் உண்மையை பல துறையிலும் உண்ணின்று ஆய்க்கி, முன்கூறிய சாகஷி முதலிய நான்கு பாதங்களிலும், அவனைத் தரிசிக்க அருளுகின்றனன். தாயுமானவர் 'சுருதி எல்லாம் ஓலமிடும் மெய்ப்பொருளை' தருகிறார்.

"ஒருமொழியே பலமொழிகளும் இடங்கொடுக்கும் அந்த
ஒருமொழியே மலம் ஒழிக்கும் ஒழிக்குமென மொழிந்த
குருமொழியே மலையிலக்கு மற்ற மொழியெல்லாங்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய்"

மாணிக்கவாசகர் திருவருட்கடலை வர்ணிக்கிறார் காண்க.

"யானே பொய் என் நெஞ்சம் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உனைப் பெறலாமே தேனே அமுதமே .."

[8 திருச்சதகம், திருவாசகம்](2)

85. கட்டுநமன் கிட்டரிய நாடெங்கள் நாடே
கன்றுமன வெப்பொழிக்கும் நாடெங்கள் நாடே
வெட்டவெளி யாரூடும் நாடெங்கள் நாடே
மீதான வெற்புடைய நாடெங்கள் நாடே
பட்டப்பகல் போலொளிரும் நாடெங்கள் நாடே
பகலிரவு தோன்றுத நாடெங்கள் நாடே
மட்டுப்படா மயக்கமெலாந் தீரவினை ஆண்டான்
மலர்ப்பாதங் காட்டிவைத்த தெங்கள்வள நாடே.

உரைநடை;- மட்டுப்படா மயக்கமெலாந் தீரவினை ஆண்டான்; கட்டுநமன் கிட்டரிய நாடு; வெட்டவெளி யாரூடும் நாடு; பகலிரவு தோன்றுத நாடு; பட்டப்பகல் போலொளிரும் நாடு; கன்று மனம் வெப்பொழிக்கும் நாடு; மீதான வெற்புடைய நாடு; மலர்ப்பாதங் காட்டிவைத்த நாடு.

பிரகிருதி மாயையினால் தொடக்கப்பட்டு தொடர்ந்து வரும் ஏனைய பிறவித் தொடர்களினாலே சேர்க்கப்பட்ட இரு வினையினாலும் மும்மலத்தினாலும் பீடிக்கப்பட்டு பிராரத்துவ வினைக்குமேல் ஆணவ மலப்பிடிப்புடன் கூடிய ஆகாமியமுமொன்று சேர்ந்து உண்டாக்கிய தாமச குணமும் ஆணவமூலப்பும் 'அன்பன் தன்னை ஆத்மன், இந்த உடம்பல்ல' வென்று நினைக்க வொட்டாது மறைக்கின்றது. ஆருயிர்கட்குச் செவ்விவரும்வரை நடப்பாற்றலாகிய திரோதான சத்தி சிவனைக் காட்டாது மறைத்து உலகத்தைக் காட்டிக்கொண்டிருக்கும். செவ்வி வந்ததும் அஃது வனப்பாற்றலாகிய மலைமகளாகத் திகழ்ந்து சிவனைக்காட்டும். [மலைமகள் - திருவருட்சக்தி] இறைவன் திருவருளினால் நான் சிவகுருவை வேண்ட அவன் அருள் தந்து [489] மட்டுப்படாமலப்பிணிப்பால் (Superimpositions of Maya) உண்டாக்கப்பட்ட மயக்கந்தீர்த்துச் செவ்வி வந்ததும் எனை ஆண்டான்; அப்பர் தருவதைக் காண்க.

"அல்லல் என்செயுமருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பல வனூர்க்
கெல்லையில்ல தோர் அடிமைபூண் டேனுக்கே" (5-1-4)

தாயுமானவர் 'கள்ளங் குலாவுவஞ்சகக் கள்வனேன் உள்ளத்தைத் தூய்மையாக்கும் திருவருட் சக்தி' என்கிறார்,

வெள்ளங் குலாவுசடை வெள்ளக் கருணையினன்
கள்ளங் குலாவுவஞ்சக் கள்ளனேன் — உள்ளத்தில்
இல்லனென்றுல் அன்னவன்றன் எங்கும் வியாபகத்தான்
அல்லனென்றுஞ் சொல்ல வழக்காம். (உடல் பொய்யுறவு 28)

பதினாறு வயதுடனும் மலமகளாகிய திருவருட் சக்தியுடனும் பிறவியெடுத்த மார்க்கண்டேயர் நித்தமும் சிவலிங்கத்தை முன்வைத்துச் சிவலிங்க பூஜையிலேயே ஆழ்ந்து கிடப்பார்; அந்தச் சிவலிங்கப் பெருமானை, முக்கட் கருணைப் பிரானே இரவிமதி தீயாக (797(அவர் உள்ளங் குடிகொண்டவராய்ச் சென்றே எழுவித்தார்! முப்புரமுஞ் செற்றனர்; உள்ளங் குடிகொண்ட அந்தச் சிவலிங்க வடிவான ஜோதிப்பிளம்பும் இயமனை அப்பால் படுத்தி அவரைப் பிறப்பிலியாக்கினது. புத்தபிரான், ஸ்ரீ இராமகிருஷ்ணர் போன்று யோகசுவாமிகள் கட்டுநமன் கிட்டாரிய நாட்டில் வாழ்ந்து ஈற்றில் ஸ்தூலத்துள் சூக்கும காரண சரீரங்கள் [394] ஒருங்கே மறைய அவருடைய ஒளி இறைவன் ஒளியுடன் ஒன்று சேர்ந்தது (787) கன்று மனவெப் பொழிக்கும் நாடு அந்த நாடு; பருநிலையில் மாயாகாரியப் பொருட்களாகத் தோன்றுவன நுண்பொருளான நிலம், நீர், தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களாயும் நுண்வெளியில் [Electro - Magnetic field] "அணுவுள் அவனும் அவனுள் அணுவுங் கணுவற நின்று கலப்பதுணர" மலமகளாகிய திருவருட்சக்தி பெருகிவளர, மௌனமே உருவான அகத்தே முக்கட்கருணைப்பிரானை ஜோதி மார்க்கண்டேயருக்குப் போல், தோன்றும். யோகியின் மூன்றும் நிலையாகிய நெஞ்சத்தில் [65] உயிர்க்காற்றாகிய பிராணனும் எண்ணமாகிய சித்தமும் ஆளாகிய புருடனும் ஆகிய மூன்று கருவிகள் இயங்கும்; கொப்பூழிடமாகப் பேருறக்கம் நிகழும் தூரியத்துக்கு, கீழே நோக்கி உயிர்க்காற்றாகிய பிராணன் செல்லும்; எண்ணமாகிய சித்தம் ஒடுங்கி, பிராணனும் ஆளும் ஆகிய இரு கருவிகள் எஞ்சும்; மூலத்தீ எழும் இந்த ஞானத்தீயான அறிவுஸ்வாலையால் முன் நந்தி தரிசனத்தில் கண்ட அருள் ரூபம், நுண்வெளியில் காட்சி தந்த அருவுருவாம் சதாசிவன், கொண்டுள்ள அந்த மனம் "உன்னுமனங் கர்ப்பூரவுண்டை போலே கரைய" என்னுந் தாயுமானவர் வாக்கியத்துக்கிணங்கக் கரைந்து திங்கள் மண்டலத்தில் உச்சியினின்றுறுழுக [788] "மின்னும் ஆனந்த விளக்கே" என்னும் அறிவுஸ்வாலையான தில்லை நடனத்தை விஞ்ஞானமய கோசத்தில் காணலாம். முன் நிசழ்ந்தது மனோமய கோசம். ஆட எடுத்த அடித்தாமரை பரவி வேடம் (755) பொலிய வந்த மீனாட்சியம்பாள் தில்லை நடனத்தில் காட்சி தருவாள், சித்தாசாசத்தில் தோன்றிய அறிவுஸ்வாலை ஆறு, எல்லையற்ற பரமாகா

சத்திரையில் வெட்டவெளியாரூடும் நாடாகி மீனுட்சியம்மாளின் தில்லைநடனங்காட்டும். அப்பாலே செல்ல ஐந்தாம் நிலையாகிய துரியாதீதத்தில் ஆளாகிய புருடன் ஒன்றே கிடக்கும். இது நிகழ்வது ஆனந்தமயகோசத்தில் தோன்றும் திருவைந்தெழுத்துச் ஜோதியிலே ஆதியந்தமற்ற, திரிதல் தோன்றல் மறைதலற்ற, பட்டப்பகல் போலொளிரும் கோடிசூரியப்பிரகாச வொளி போலும் இரவுபகலற்ற ஜோதியே இது. மீதான வெற்புடைய நாடு: ஸ்ரீ இராமகிருஷ்ணரை இந்தச் ஜோதியில் நிர்விகல்ப சமாதியில் புக்க, தேட்டாபுரி (Tota puri) என்னும் ஓர் குரு ஓர் கண்ணுடித்துண்டை அவர் மூக்கு நுனியில், இரண்டு கண்களுக்குமிடையே வைத்து ''உற்றுநோக்கென்ரு ராம்''; ஸ்ரீ இராமகிருஷ்ணரும் ஆழ்ந்த அந்த நிர்விகற்ப சமாதியில் அழுந்தி, இரண்டு நாட்கள் அதில் கழித்தாராம். 'உலகுக்கு ஓர் புது போதஞ்சிரியர். அன்று பிறந்தார்'' என்று அவருடைய சரித்திரங் கூறுகிறது. அவருடைய இரண்டாம் பிறப்பாக 'புவனலோகத்தில் பிறந்தார்' என்றே கருதலாம். புருவ நடுவாகிய நுதலின் கண் ஆவிநின்று தொழில் புரிவது நனவு நிலையாகும்; அன்னமயகோசம். அதற்குரிய கருவிகரணங்கள் முப்பத்தைந்து. (65) இரண்டாம் நிலையாகிய சொப்பனந்தனில் ஆவிநின்று தொழில் புரியும்போது இருபத்தைந்து கருவிகரணங்கள் இயங்கும்; இது நிகழ்வது பிராணமயகோசம். மூன்றாம் நிலையாகிய நெஞ்சத்தில் உயிர்க்காற்ருகிய பிராணன், எண்ணமாகிய சித்தம், ஆளாகிய புருடன் தொழில் புரியும். இது மனோமயகோசம்; துரியத்தில் உயிர்க்காற்ருகிய பிராணனும் ஆளாகிய புருடனும் தொழில் புரியும்; இது விஞ்ஞானமயகோசம்; மீதான வெற்பு ஆனந்தமயகோசம், ஐந்தாமிடம், துரியாதீதம்; இங்கே நிர்விகல்பசமாதியில் ஆளாகிய புருடன் ஒன்றே இயங்கும்; (தாயுமானவர் ஆசையெனும் 25, 26இல் இவற்றைக் காணலாம்) [3]

86. வெய்யபுவிப் பார்வையொழி நாடெங்கள் நாடே
மேலான பூரணமாம் நாடெங்கள் நாடே
துய்யவறி துயில்புரியு நாடெங்கள் நாடே
தூயசுக வாரிதிதோய் நாடெங்கள் நாடே
செய்யநடங் கண்டுகளி நாடெங்கள் நாடே
சிந்தைதெளிந் திட்டதனி நாடெங்கள் நாடே
ஐயனடி யேனறியாப் பருவத்தே வந்து
ஆட்கொண்டு காட்டிவைத்த தெங்கள்வள நாடே

உரைநடை: ஐயனடியேனறியாப் பருவத்தே வந்து ஆட்கொண்டு துய்யவறிதுயில் புரியும் தூயசுகவாரிதி தோய் சிந்தை தெளிந்திட்ட தனிசெய்ய நடங்கண்டு வெய்ய புவிப் பார்வையொழி மேலான பூரணமாம் நாடெங்கள் நாடு.

அண்டமாகிய உலகமும் ஐம்பூதங்களும் ஐம்பொறிகளும் மற்றுங் கருவி கரணங்களாலும் ஆட்கொள்ளப்பட்ட இம்மாயா உலகியல் வாழ்க்கையிலீடுபட்டுச் சிவனை மறந்து மட்டுப்படா மயக்கம்

(விளக்கம் 85 இல் காண்) தாமசகுணம் மேலிட்டு வாழும் அந்நிலையில் என்னை வந்தாட்கொண்டான்; என்ஞானகுரவனாக உருத்தாங்கி (நல்லூரில்) வந்து என்னை ஆண்டு அருள்புரிந்தனன்; காரார் குயில் பாட கார்வண்டு பண்பாட அறிவு எனுஞ் சூரியன் உதயமாக, ஆராத காதலுடன் தன்னைத்தேடும் மெய்யன்பன் அகத்தே, சீரார் பெருந்துறைப் பெருந்தோணி, இறைவன் பாதத்துக்கு நேராகக் கொண்டுசெல்லுந் தோணியை எமக்கு அன்பளிப்பாகக் கொடுத்தனன், எம்பிரான். முதல்தரம் தேரடியில் கண்டபோது 'ஆரென்றறிவாயடா' என்று அருள்காட்டி நின்றனன் (488); துய்யவறிதுயில் புரிய 'சிவனருளே நோக்கென்றுன்'; என்னை மறந்து நிற்கும் நிலையில், உண்ணின்று அவண் இயங்க உற்று அவனை சேர்க்க தூய சுகவாரிதி தோய் தேவாமிர்தம் உச்சியினின்று சொட்டுச் சொட்டாகக் கொட்டுவது போன்றும் உணர்வுடன் குளிர்ச்சிதரும் ''உவமைகடந்தவின்பம் (489) உள்ளத்தே தேக்கிற்று'' சிந்தை தெளிந்து. இவ்வண்ணம் மலைமகள், திருவருட்சக்தி, அருள் மழை பொழிய மெய்யன்பன் நிலை நடங்காண்பான்; கண்டுகளிக்கும் நாடு; பாசபந்தக் கயிறு எரிந்து விடும்; எரிந்த பாசபந்தக்கயிறு கட்டுந் தன்மையற்றதால் சஞ்சல மற்ற சீவன் முத்தன் வெப்பமுடைய இன்பதுன்ப வுணர்ச்சியற்றவனாய் வாழும், வெய்யபுவிப் பார்வையொழி. நாடு; குழந்தையுந் தாயும் போல் மேலான பூரணமாம் சாயுச்சிய பதவியில் தத்துவாதீதனாய் வாழும் நந்நாடு. 514)

[4]

87, விஞ்சுபிறப் பிறப்பறுக்கும் நாடெங்கள் நாடே
மெய்யிற்சிவம் பிறக்கவைக்கும் நாடெங்கள் நாடே
செஞ்சரண நிலவுவிரி நாடெங்கள் நாடே
திரையற்ற நீர்போன்ற நாடெங்கள் நாடே
அஞ்சிமிக வழியறியா தயர்ந்துமனந் துடித்து
ஆருக விழிபெருக அலமந்து வாடித்
தஞ்சமென்ற எளியனேனை அஞ்சலென்று காத்த
தவஞானக் குருவடிவம் காட்டிவைத்த நாடே.

உரைநடை:- வழியறியாதஞ்சி மிகவாடி யயர்ந்து தஞ்சமென்ற எளியனேனை அஞ்சலென்று காத்து திரையற்ற நீர்போன்ற செஞ்சரண நிலவுவிரி நாடு; மெய்யிற் சிவம் பிறக்கவைக்கும் நாடு; விஞ்சு பிறப்பறுக்கும் நாடு; தவஞானக் குருவடிவம் காட்டிவைத்த எங்கள் வளநாடு. விஞ்சுதல் - அதிகமாதல்; மிகுதல், அலமருதல்- அழறுதல், அஞ்சுதல் ஐம்பொறிகளும் மற்றும் கருவிகரணங்களுங் கொண்ட இம்மாயா உலகில் (85 மட்டுப்படா மயக்கம் வினக்கங் காண்) மாண்டு சிவனை மறந்து, அலைந்து திரிந்தேன், நடப்பாற்றல் எனப்படும் மறைப்பாற்றலாகிய வெள்ளப் பெருநீர் விளங்கும் திருச்சடையினையுடைய எம்பெருமான் அருட்பெருங் கடலாவன். களவு கரவு முதலிய குற்றம் நிரம்பிய கள்ளமுடையேன் யான்; அங்ஙனமாயினும், எளியேன் உள்ளத்திலும் அவன் வீற்றிருந்தருளவில்லை

யெனின், அவன் யாண்டும் பரந்து செறிந்து நிறைந்து நின்றரு ளும் மாரு மெய்மையாம் பண்பினுக்கும் அளவுண்டோ. ஏ ளெனின் ஆருயிர்கட்குச் செவ்விவரும்வரை நடப்பாற்றலாகிய இரோதான சத்தி சிவனைக் காட்டாது மறைத்து உலகத்தைக் காட்டிக்கொண்டு நிற்கும்; செவ்வி வந்ததும் அஃது வனப்பாற்றலாகிய மலைமகளாகத் திகழ்ந்து சிவனைக் காட்டும்; அவ்வகைத்தாய் எம்மை அஞ்சலென்று காத்த நாடு: தாயுமானவர் தருவதைக் காண்க.

வெள்ளங் குலாவுசடை வெள்ளக் கருணையினன்
கள்ளங்குலாவுவஞ்சக் கள்ளனேன் — உள்ளத்தில்
இல்லனென்றால் அன்னவன்றான் எங்கும் வியாபகத்தான்
அல்லனென்றுஞ் சொல்லவழக்காம். (உடல் மெய்யுறவு 28)

மௌனமே உருவாய அகந்தோன்ற "அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நெறியாம் நீடருள் என்றுஞ் செறியாச் செறிவே சிவம்" எனும் பொறை நிலையெய்தி [682] நந்தி தரிச னங் காண்பான்; 63); தடத்தப் பொருளாக மனோமயகோசத்தில் தோன்றிய அருள் ரூபம் [120] நந்தி, உன்னுமனங் கர்ப்பூரவண்டை போலே கரைய மின்னும் ஆனந்த விளக்கே" என்னுந் தாயுமான வர் வாக்கியத்துக்கிணங்க விக்ஞானமயகோசத்தில் அறிவுப் பெரு வெளியில் திங்கள் மண்டலத்தில் கரையும்; அறிவுஸ்வாலையான செஞ்சரண நிலவுவிரி 'சந்திரன்' என்று அழைக்கப்படும் ஆடல் அம்மை, தில்லை நடனந் தோன்றும்; ரவிமதி தியாகி விளங்குபவன் முக்கட்கருணைப்பிரான்; [767] பாசபந்தக் கயிறு எரிந்த தன்மை யால் சஞ்சலமற்ற இன்பதுன்பமற்று திரையற்ய நீர்போல் காணப் படும் நார்டு; அப்பால் நிர்விகல்ப சமாதியில் [86] ஐந்தெழுத்துச் ஜோதியில் மாண்டுகிடந்து இவ்வுடம்பிலே சிவன் முத்தனுக இரண் டாம் பிறப்பெடுத்துப் புவனலோகத்தில், மெய்யிற் சிவம் பிறக்கத் தத்துவாதீதனுக வாழ்வான்; உத்தமன் கோயில் கொண்ட உடம்பு; ஸ்தூல உடம்பும் சூக்கும உடம்பும் ஒருமித்தே அழியும்; ஸ்தூல உடம்புள்ளேயே சூக்குமம் கரையும் [394]; விஞ்சு பிறப்பறுக்கும் நாடு; தவஞானக்குருவடிவம் காட்டிவைத்த [488; 489;] நாடு.

கந்தரலங்காரத்தில் அருணகிரிநாதர் 'செஞ்சுரண நிலவுவிரி நாடு" என்பதை விளக்குகிறார் காண்க.

"ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததோர் ஆனந்தத் தேனே" (5)

19 நின்றும் இருந்தும் நடந்தும் நினைமின்

நிலைமண்டில ஆசிரியப்பா

88. சென்றன சென்றன வாழ்நாள் அனைத்தும்
குன்றின குன்றின செல்வமும் இளமையும்
ஒன்றிய வகையால் உளற்றுக அறனைக்
கன்றிய காலன் கணத்தினில் வருவான்
ஆதலின்,

நின்றும் இருந்தும் நடந்தும் நினைமின்
பொன்று முடலைப் பேற்றுத லொழிமின்
நன்றுதீ தென்னும் நாட்டம் விடுமின்
அன்று மின்றும் என்று மான்மா
இருந்த படியே இருக்குஞ் சீரை
அருந்தவ யோக ரறிந்தாங் கறிந்து
தெளிந்து சீவன் முத்தராய் உலகில்
பொருந்தி வாழ்தல் போற்றுந் தகைத்தென்.

உலகம் நிலையற்றது நலம், கேடு இரண்டும் மாறி மாறி விளைவது; வினைப்பயனுக்கேற்றபடி நடக்கிறது மண்ணாலாகிய சட்டியினை-சடத்தை உடைந்த பொழுதோ மண்ணென அறிகிறோம்; இந்தக் கர்மச் சடத்தைப் பொய்யெனல் இறக்கும்போதோ? என்று தாயுமானவர் கூறுகிறார். இளமை போய் வயது முதிர்ந்து உடம்பு தளர செல்வம் குறைய, நோய்பிடித்த உடம்பு தளர மரண பயம் பிடித்த மனங்கலங்க பெண்டிலும் பிள்ளைகளும் அயலோருந் தங்கள் சுகதுக்கங்களால் வயது முதிர்ந்து உடம்பு தளர்ந்தவரைக் கவனிக்காமல் சஞ்சலப்படும் போதோ உலகினை நிலையற்றது என்றுணர்வது. உடம்பு மாயை; மயக்குந் தன்மையுடையது; சிற்றின்ப உணர்வையே நாடுவது. பஞ்சப்புலன்களே அதன் கருவிகள்; ஐம்புலன்களையும் இறைவனிடத்தே ஒடுக்கவேண்டும். [52] சிவானந்தலஹரி 97 (64இல் காண்க) கூறியவண்ணம் இறைவனைச்சேவிக்கவேண்டும். இடைவிடாது புத்தி சிவத்தியானத்தில் ஈடுபடவேண்டும். ''எங்குமவனெடி எங்குமவனெடி எல்லாமவனெடி எல்லாமவனெடி'' எல்லாம் சிவன் செயல் எங்கும் சிவன் செயல்; அன்றி ஒன்றில்லை இன்றி நீயில்லை (81) ஆதலின் இன்பம் விளைவிக்கும் செயலும் துன்பம் விளைவிக்கும் செயலும் எல்லாம் ஒருவனுடைய வேலை; வினை முதலாம் முதல்வனே செயல் புரிபவன். 'எய்தவனிருக்க அம்பை நோவானேன்' எனும் மூத்தோர் வாக்கியத்தை நினைமின்; வினைமுதலாம் முதல்வனையே, எங்குங் காணுங்கள். 'எங்குமவனடி எல்லாமவனடி' நன்றுமில்லை தீதுமில்லை எல்லாம் வினை முதலாம் முதல்வனே! காமிய கர்மத்தை ஒழியுங்கள்.

நிஷ்காமிய கர்மமே புரியுங்கள்; 'எங்கும் சிவன் செயல் எல்லாம் சிவன் செயல்' சிவ சிவ' எனும் மாமறையின் உண்மை வடிவே அது; ஓம் என்னும் ஒரு மொழியாலுணர்ந்தறிவது; அதுவே அழியாப் பொருள் அன்றும் இன்றும் ஒரே ஆன்மா,

எப்பொருளிலும், உயிரில் உயிருள் பொருள்; எப்பொருளிலும் விளங்குவது ஒரே ஆன்மா, எங்கும் நீக்கமற நின்று அகல் நிறை பொருளாம் மெய்ப்பொருளாய் விளங்கும் முதல்வனே! வினை முதலாம் முதல்வனே! எங்கும் அவனெடி! எல்லாம் அவனெடி! நன்றென்றும் தீதென்றும் இல்லாது, இளமையும் மூப்புமில்லாது என்றும் ஒரே தன்மையுடையதாய் உலகினில் அம்மை வடிவாக இயங்கியும் அப்பர் வடிவாக அப்பால் பட்டவனுக நின்று இயக்கி

யும் தூய அருள்புரியும் சீரை அருந்தவம் புரியும் யோகன், சும்மா இருக்கும் சொரூபமே நீயே யென்றும்; அந்த ரூபமாகவே தன்னைக் காணும் யோகன், தன்னறிவாலறிந்து தேறித் தெளிந்து, என்றென்றும் நிலைபெறியாது சீவன் முத்தராய் பொருந்தி வாழுதல் போற்றுந் தகைத்தது.

', உள்ளே (ஹிருகயத்தில்) ஈசுவரனையுணர்பவன் புறத்தேயும் அவனைக் காண்பவன். தன்னுள்ளே ஈசுவரனைக் காணுதவன் தனக்கு வெளியேயும் அவனைக் காணமாட்டான்; ஆகவே தேவாலயத்தில் தெய்வத்தைக் காண்பவன் அகிலாண்டத்திலேயும் அவனைக் காண்பவன். (ரீ இராமகிருஷ்ணர்.)

20. நமச்சி வாயவென நாம் வாழ்குவமே

நேரிசை ஆசிரியப்பா

அன்பே சிவமென ஆன்றோ ரிசைத்த
இன்பந் ததுப்பும் இனியவா சகத்தை
இன்னு மறிந்திலேன் இரவும் பகலும்
பொன்னும் பொருளும் போகமும் வேண்டினேன்.
காக்க வேண்டும் கடைக்கண் ணுலே
நோக்க வேண்டும் நூல்வல் லோனே
சேர்க்க வேண்டுந் திருவடி யதனில்
ஆர்க்கு முணர அரியபெம் மானே
ஐயனே! அரசே! ஆருயிர்க் குயிரே!
வையக நடனஞ் செய்யுமா தவனே!
பொய்யுங் கொலையும் புலையுந் தவிரவும்
சைவ மோங்கவுஞ் சத்தியந் தழைக்கவும்
தெய்வமுண் டென்னுஞ் சித்தந் திகழவும்
கைவினை செய்து கழலடி போற்றவும்
செய்வன எல்லாஞ் செவ்வனே செய்யவும்
மெய்யடி யார்கள் மேன்மேற் கிளைக்கவும்
தையலார் தம்மைத் தாயெனப் பேணவும்
நைந்துநைந் துருகி நைந்து
நமச்சி வாயவென நாம்வாழ் குவமே.

இறைவன் அன்பை ஓர் தாய் தன் பிறந்த குழதையை எவ்வாறு நோக்குவளோ, அதற்கு மேலான தெனக் கூறுவர். அன்பு செலுத்தும் தாயும் அன்புக்குரிய பொருளாய குழந்தையும் ஒன்றுகவே காணப்படுமன்பு'' சங்கரர் 'பக்தியால் குறை வெல்லாம் நிறைவாகும்' என்கிறார் (சிவானந்தலஹரி சு 63) கண்ணப்பரின் வழி நடந்த செருப்பு பரமசிவனுடைய மூர்த்திக்கு அபிஷேகத்துக்கு

முன் சிரசில் வைக்கப்படும் கூர்ச்சம் போலாகிறது. வாயிலிருந்து கொப்பளித்த நீரால் நனைத்தல் திரிபுரஸம்காரஞ் செய்த சிவனுக்கு தெய்வத்தன்மை வாய்ந்த அபிஷேகம் போலாகிறது. கொஞ்சங் கடித்துப் பார்த்த மாமிசத்தின் மீதியான கவளம் புதிதான நைவேத்தியம் போலாகிறது. ஆச்சரியம்! காட்டில் வசிக்கும் வேடன் பக்த சிரேஷ்டனாகிறான். பத்தியானது எதைத்தான் செய்யாது.

இத்தகைய அன்பு தோன்றுமிடம் எத்தகையது? பாட்டு (88) கருத்தைத் திரும்பவும் வாசியுங்கள். ''அருந்தவயோகர் அறிந்தாங் கறிந்து தெளிந்து ஜீவன் முத்தராய்'' என்பதன் அடி எவ்வாறு உண்டானது. ஐயனே! அரசே! ஆருயிர்க்குயிரே! வையக நடனஞ் செய்யும் மாதவனே பொன்னம்பலவாணனே (25) ஆர்க்கு முணர அரிய பெம்மானே! தூய அருள் பொழிந்து காக்க வேண்டும் கடைக்கண்ணாலே! மறைகளில் உணர்ந்த உண்மைகளைச் சித்தாந்த முறை நின்று ஓதியு முணர்ந்தும் தோத்திரஞ் செய்தும் பூசைசெய்தும் நின் திருவடியதனில் நம்மைச் சேர்க்கவேண்டும்; பொன்னும் பொருளும் போகமும் வேண்டா ஹிருதயத்தே நிஷ் காமிய கர்மம் புரிந்தும், முன் கூறிய வண்ணம் ஓதியுமுணர்ந்தும் பூசை செய்தும் 'எங்கும் அவனெடி எல்லாம் அவனெடி', என்னுமுண்மையுடன் ஓம் என்னும் உண்மை விளங்க 'சும்மா இருக்கும் சொரூபமே நீயே குருநாதனே' என்னும் உண்மையுடன் 'நானுமவனே' என்னும் உண்மை விளங்கும்,

தாயும் பிறந்த குழந்தையும் போல, குருநாதனும் சிஷ்யனும், பக்தனும் இறைவனும் ஒன்றாய் விளங்குவர். கண்ணப்பர் அன்பு பெருக தன்னைக்காண அருள் வெள்ளம் பெருகிற்று,

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பு சிவமாவ தாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே. (திருமந்திரம்)

அன்பு செலுத்தும் பக்தனும் அன்புக்குரிய இறைவனும் ஒன்றாக விளங்கினர் — நல்லொழுக்கம் கைப்பிடித்து உண்மையின் உயர் நிலையை அறியவைத்து, சித்தந்திழைக்க, அறிவு சொரூபமாய் விளங்கும் ஹிருதயமே ஆத்மன்; எப்பொருளிலும் நீக்கமற நிறை பொருளாக விளங்குபவன்: அதை உணர்த்தியறியும் சைவசமயம் ஓங்க, பூசை செய்து, ஏத்திப் போற்றுக கழலடி தொழுது என்றுமவனை மறவா உள்ளத்தினராய் மெய்யடியார்கள் மேலும், மேலும் பக்தியிலும் ஞானத்திலும் சிவயோகத்திலும் மேலேறியே கயிலாசமலை புக்கிக்கேறிச் செல்லவும், தையலார் தம்மை உலக மாதாவாகிய அம்மையைப்போலப் பேணியும் ந ம,சி,வ,ய என்னும் முண்மை விளங்க (1) நன்மை கடைப்பிடித்து வாழ்வோமே.

90. கண்ணுக்கு அணிகலம் குருநாதன் பாதம்
விண்ணுக்கு அணிகலம் சந்திரன் விளம்பு
மனத்திற்கு அணிகலம் மாசற்றூர் கேண்மை
தனத்திற்கு அணிகலம் தண்ணருள் தானம்
வனத்திற்கு அணிகலம் மயிலுங் குயிலும்
தினத்திற்கு அணிகலம் தினகரன் சேவடி
பணத்திற்கு அணிகலம் பசித்தோர்க் குணவு.

தன்னுடைய ஒளி கொண்டு விளங்குபவன் சூரியன்; ஆதியந்த மற்ற ஜோதி அவனே; வினை முதலாம் முதல்வனுக உயிரில் பொருட்கள் உயிருள் பொருட்கள், எப்பொருட்களிலும் வியாபியாக நீக்க மற நின்று இயக்குகிறவன்; அப்பொருட்கள் எல்லாவற்றிலும் சூரியன் ஒளிகொண்டு இயங்குபவள் அம்மை; அம்மையும் அப்பரும் இணைபிரியாதவர்கள். இரு கண்களே சூரியனும் சந்திரனும். மூன்றும் கண் ஞானக் கண்; மூக்கண்ணனே சிவலிங்கவடிவாக விளங்கும் காசி விசுவநாதன் பரமாத்மன்.

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்" (குறள் 44.)

"அறத்தின் தன்மையை நன்கறிந்து தன்னையறிந்த அறிவுடையார் நட்பினைக் கொள்ளல் வேண்டும் என்கிறார். சுவாமிகள் மனத்திற்கு அணிகலம் அறிவுடையார் நட்பு என்கிறார். அவ்வாறு அறிவுடையார் நட்புக் கொண்டு தண்ணளி வீசும் நல்லறன் கைக் கொண்டு சிவனை வழிபட ஞானக்கண் தோன்றும். ஒரு மொழி 'ஓம்' எனும் உண்மை விளங்கும். கண்ணுக்கு அணிகலம் குருநாதன் பாதம், பாத சேவை புரியவே 'சிவ சின்னங்கள் தோன்றும். நந்தியைத் தரிசிப்பின் கனி ரூபமான உலகினையும் தன்னையுமதனுட் கண்டும் இன்புறுவான்: குயில் கூவும்; மாணிக்கவாசகர் 'கூவின பூங்குயில் கூவின கோழி குருகுகள் இயம்பின என்கிறார்: மாயைக் காட்டில் குயிலின் சத்தம் ஒளிதரும், பொற்றூண் (25) தரும் ஒளி; அருள், வழி நிற்க 'வனத்திற்கு அணிகலம் மயிலும் குயிலும்' என்கிறார். விண்ணுலகினில் அம்மையையே தரிசிக்க, 'விண்ணுக்கு அணிகலம் சந்திரன்' என்கிறார். தன்னொளி கொண்டு இயக்கும் வினை முதலாம் முதல்வனே ஆதியந்தமற்ற ஜந்தெழுத்துச் ஜோதியாக விளங்க 'தனத்திற்கு அணிகலம்: தினகரன் சூரியன் சேவடி ''பாதசேவை'' என்கிறார்:

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி" (குறள் 226)

'பொருள் இல்லாதவரது எல்லா நன்மையையுமழிக்கும் பசியினைப் போக்குவது பொருளையுடையவனுக்கு அப்பொருள் பின் துணை நிற்பதற்கு வழி''

'பணத்திற்கு அணிகலம் பசித்தோர்க்குணவு' என்கிறார் சுவாமிகள்:

21 சும்மாவிருக்கும் சுகமறிய வேண்டும்

91. திருநீறும் ஜந்தெழுத்தும் வேண்டும் —வேல் வேல்
சிவனே சிவனென்று தெரிந்து கொள்ள வேண்டும்
—வேல் வேல்

"எல்லாம் சிவன் செயல் எங்கும் சிவன்செயல்'' ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள். ஆசை ஒழிமின்கள்; அஞ்ஞான இருள் நம்மை விட்டு நீங்க வேண்டும். சிவன் செயலின் உண்மை

ரூபம் எல்லார் சித்தத்திலும் குடிகொள்ளவேண்டும், நாடக மேடையில் நாடகாசிரியர் எழுதிய நாடகத்தை நடிக்கும் பொழுது நடிகர்களுள் ஒருவர்க்கொருவர் துவேஷமும் கிடையாது நாடகத்தில் வரும் அம்சங்களில் பற்றோ துவேஷமோ, இன்பமோ துன்பமோ உண்டாவதில்லை. வினை முதலாம் முதல்வன் வினைப்பயன் எனும் அம்பலத்தே எழுதிய நாடகமே உலகியல் வாழ்க்கை. அம்சங்களில் வித்தியாசங் காணுதிருப்பதே சிவன் செயலின் உண்மை வடிவம். பேதம் யாதுமில்லை. இறைவன் எழுதிய நாடகம் நாடகாசிரியர், சிவனையே காண்கிறோம். (36) தாயுமானவர் உலகியல் இன்பத்தை இகழ்கிறார்:

உணர்த்தும் உனை நாடாதுணர்ந்தவையே நாடி
இணக்குறு மென் ஏழைமை தான் என்னே பராபரமே

[பராபரக்கண்ணி 274]

உண்டுபோல் இன்றும் உலகைத் திரமெனவுள்
கொண்டு நான் பெற்ற பலன் கூறுய் பராபரமே.

[பராபரக்கண்ணி 274]

அஞ்ஞான இருள் விட்டு நீங்க, மாயையாகிய உலகியலின் பேதங்களையும் இன்பத்தையும் துன்பத்தையும் உண்டாக்கும் அஞ்ஞான இருளைச் சுட்டொரித்த சாம்பலையே தேகம் முழுதும் பூசுவர் இறைவன். மாயையின் சுடுகாட்டில் சாம்பல் பூசிய பொன் மேனி பொலிந்து தோன்றும். ஐந்தெழுத்தின் உண்மை விளக்கம் (1) காண்க; திருநீறும். ஐந்தெழுத்தும் வேண்டும், வேண்டும், வேல் வேல். இறைவன் ஒளியே தன்னொளி; வினைமுதலாம் முதல்வனே யவன்; மூலப் பிரகிருதியிலிருந்து உயிர்கள் தோன்றுவதை (62) இல. காண்க. உயிரில் பொருள் உயிருள் பொருள் எல்லாவற்றிலும் வியாபியாகவே நீக்கமற அகல் நிறைவாக இயங்கியும் இயக்கியும் அருளுபவன்

"எண்ணில் பல கோடி உயிர் எத்தனையோ அத்தனைக்குங்
கண்ணிற் கலந்த அருட்கண்ணே பராபரமே"

[தாயுமானவர் பராபரக்கண்ணி]

"சிவனே சிவனென்று தெரிந்துகொள்ள வேண்டும்." சுவாமிகள்; இதுவே சிவன் செயலின் உண்மை வடிவம். (1)

92, உருவேற வேசெபிக்க வேண்டும் — வேல் வேல்
ஒருவருக்கும் பொல்லாங்கு செய்யாமை வேண்டும்
— வேல் வேல்

'ஓதியோதி உணர்வதுந் தன்னையே' (67) காண்க; பொருளை உணர்ந்தறிந்து அவனருள் நிறைய தன்னை மறந்து மெய்ப்பொருளே தானாக நின்று புகழைப் பாடியோ ஐந்தெழுத்தை ஓதியோ தன்னைக் காணவேண்டும். சும்மா இருக்கும் சுகம் உதயமாக வேண்டும்; தன்னை மறந்து மெய்ப்பொருளே தானாக நின்று பாடும் ரூபம்; அறவழி நிற்கத் தவறின் மனம் ஒடுங்குதலரிது. (2)

93. கருவூரில் வாராமை வேண்டும் — வேல் வேல்
கண்கவரும் மின்னுரை எண்ணுமை வேண்டும்
—வேல் வேல்

(முன் பாட்டுத் தொடர்) சும்மா இருக்கும் சுகம் உதயமாகவே ஐந்தெழுத்தைச் செபித்தால் தில்லைத்தரிசனங்கண்டு பிறப்பை அறுக்கலாம். மண், பெண், பொன்னுசை மூன்றையும் ஒருங்கே தள்ள வேண்டும், பாதந்தொழும் மந்திரம் அஞ்செழுத்தோதிப் பத்திமிகுந்து திருமாமறை முறைப்படி வழிபட்ட மானியாகிய மார்க்கண்டேய முனிவரைக் கொண்டு போதற் பொருட்டு வந்த காலதூதரை உதைத்தருளினன்; என்னுமோர் கருவில் வாராதருளினன்.

பெற்றேரும் பிறவாமை பேசாமையிருக்கக்
கற்றேரும் எனவுரைக்கக் காரியமென — சற்றேனும்
நீக்கற்ற இன்பநிலை பொருந்தி ஏசற்று
வாக்கற்றூற் பேசுமோ வாய்.

வாய் பேசாமை எனும் மௌன நிலை நீங்காதிருக்கக் கற்றுள்ளோம். பிறவாப் பெருநிலை எய்தினேம் (தாயுமானவர் உடல் பொய் யுறவு 42) (3)

94. குருபாதம் மறவாமை வேண்டும்—வேல் வேல்
குறைவொன்று மின்றி நாம் வாழ வேண்டும்
—வேல் வேல்

அறவழி நிற்கும் வாழ்க்கை (43 வாசிக்க) உள்ளம் உயர்ந்த சிவானந்த வெள்ளந் தேக்கும் நீர்நிலை (58 வாசிக்க; 'சும்மா இருக்கும் செரூபமே குருநாதனே' என்று அதன் பொருள் உள்ளத்தே நிலைபெற்று நீங்காதிருக்கச் சிவத்தியானஞ் செய்யவேண்டும். இன்ப துன்பம் இரண்டும் இறைவன் பாதாரவிந்தத்தே படைத்த பிரசாதம், சிற்றின்பத்தை இன்பமாக அனுபவித்தால் அது கர்மபலன்தர பிறவி எடுக்க ஏதுவாய் நிற்கும்; அதை 'நஞ்சு' என்று, கர்மபலன் ஈயா வண்ணம், உடலுக்குச் சென்று செமியா வண்ணம், கண்டத்தில் வைத்திருப்பதே நலம். அதே நீலகண்டனின் செரூபம்; துறவு கொண்டு 'இன்பதுன்பம் இரண்டும் பேரானந்தத் தெள்ளமுதம்' என்றுணர்ந்தறிந்து 'குறைவொன்று மின்றி நாம் வாழ வேண்டும்' (4)

95. கொல்லாமை கள்ளாமை வேண்டும் — வேல் வேல்
கோபம் பொறுமை கொள்ளாமை வேண்டும்
— வேல்வேல்

கொல்லாமை - கர்மம் புரியாதிருத்தல். சும்மா இருக்கும் சுகம் உதயமாக, நாம் வேண்டும் நல்லறத்தை ஈயும் எம்பிரான் அருள்தரதானே எம்முன் நின்று செயல்புரிவான். வள்ளி தன் பஞ்சப்புலன்களுமொடுங்க முருகனையே உள்ளத்தே கண்டு சும்மா இருக்கும் நிலையில், வள்ளி முருகனுகவே செயல் புரிந்தனள்; சகசமாக மறைப்பாற்றலால் இடையிடையே வள்ளி முனைந்து செயல் புரிவாள். களவு

படாததோர் காலம் வேண்டும். (53 வாசிக்க) நலஞ்சுழியா இன்பம் வேண்டும். (55 வாசிக்க) ஈற்றில் களவு படாததோர் காலம் வர நலஞ்சுழியா இன்பம் அனுபவிக்கும் வள்ளி – முருகனே வள்ளியாக செயல்புரியும் உண்மையைக்கண்டு பிறவிக்கடலுக்கு அப்பால் பட்டாள். கோபம் பொருமையற்றுக் கர்மம் புரியாமல் களவு படாத தோர் காலம்-கொல்லாமை - உதயமாகப் பிறவிக்கடலுக்கு அப்பால் படவேண்டும் என்கிறார். சுவாமிகள். (5)

96. எல்லார்க்கும் அன்பு செய்ய வேண்டும் — வேல் வேல்
எனதுயா னென்பதை விட்டுவிட வேண்டும்-வேல்வேல்

களவுபடாததோர் காலம் அடைந்து நலஞ் சுழியா இன்பம் அனுபவிக்கும் உலகில் 'எனது' 'யான்' என்பவைக்கு இடம் எங்கே அவை எப்பவோ மாண்டு மடிந்தன. சும்மா இருக்கும் அகம் அறிந்து, 'சும்மா இருக்கும் சொரூபமே நீயே குருநாதனே' எனும் அகம் விளங்கவே எவ்வுயிருந் தன்னுயிராய்க் கண்டு நிலைபிரியாத பேரானந்த உலகில் வாழவேண்டும். (7)

97. நல்லோரிணக்கமே வேண்டும் – வேல் வேல்
நடுநிலைமை மாறுதிருக்க வேண்டும் — வேல்வேல்

இடையறாது சிவன் திருவடியை உணரும் நெஞ்சம் நன்நெஞ்சம். நன்நெஞ்சத் தன்பர் என்றுந் துணை நின்றருள் அவனுடைய திருவடியை என்றும் தரிசிக்க நலஞ் சுழியா இன்பம் கிட்டும். எவ்வுயிருந் தன்னுயிர் போல் கண்டு நடுநிலைமை மாறாது வாழ்வார்.

''தூ நெறி கண்ட சுவடு நடுவெழும்'' என்று திருமூலர் கூறுகிறார். (8)

88 சொல் போலே சொல்லுறுதி வேண்டும்– வேல் வேல்
சும்மா விருக்கும் சுகமறிய வேண்டும் - வேல் வேல்

ஒரு 'சொல்' 'ஓம்' ஓங்கார ரூபம் (91, 84, 93 வாசிக்க) மௌன நிலையடைந்து உறுதி மொழியாமே ஓம் எனும் உண்மை விளங்கவே நலஞ்சுழியா இன்பம் சும்மா இருக்க வேண்டும். (8)

22. சங்கு

99. எல்லாருள் ளத்திலும் இருந்தூதுஞ் சங்கு
ஏத்துவார் தங்களுக் கருள்கொடுக்குஞ் சங்கு
கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுஞ் சங்கு
கண்ணன்றன் திருக்கரத்தில் விளங்குகின்ற சங்கு
இல்லாத பேர்களும் கேட்டுவக்குஞ் சங்கு
எல்லாரும் எப்போதும் விளிக்கின்ற சங்கு
செல்லாரு மிலங்கையிலே மலிகின்ற சங்கு
செருவிலே முழங்குகின்ற செவிமடுக்குஞ் சங்கு.

சுவாமிகள் 'வனத்திற்கு அணிகலம் மயிலும் குயிலும்' (90 வாசிக்க) மாணிக்கவாசகர் திருப்பள்ளி யெழுச்சி 'கூவின பூங்குயில் குருகுகள் இயம்பின, இயம்பின சங்கம் ஓவின தாரகை ஒளி ஒளி உதய' என்று பாடுகிறார் காண்க.

மாயைக்காட்டில் குயிலும் மயிலும் சிவசின்னங்களாக, ஒளி உதயமாகும்; சும்மா இருக்கும் இதயத்தே, தோன்றுவன; 'சும்மா இருக்கும் சொரூபமே நீயே குருநாதனே' (91 வாசிக்க) என்னும் உயர்ந்த நிலையை அடைந்த ஹிருதயத்தே தோன்றுஞ் சின்னங்கள், தொடக்கத்தில் இறைவன் ஒளி திவலை திவலையாக குருகுகள் இயம்பு கிற வண்ணமும், குயில் கூவுகிற வண்ணமும் இயம்பி பின் தொடர்ந்தே சங்குநாதம் போன்று விட்டுவிட்டு வெளிச்சம் தரும். பக்தர்கள் இன்புற்று ஆறிப்பின் ஆவலுடன் கூவியழைப்பர்.

கர்ணன் இதை ஓர் சித்தாகத் தன் இந்திர போகத்துக்குப் பாவிக்கிறான் இதைக்கச்சாயுதமாகப் பாவிக்கிறான்; அவன் திருக் கரத்தில் கச்சாயுதமாக விளங்கிற்று: இந்தச் சங்கை நாம் கண்முன் கண்டு தரிசிப்பதற்கு கடல்ச் சங்கை எடுத்து வைத்திருப்பது வளக் கம், காலையிலும், வேலைக்குப் புறப்படும்போதும் நற்சகுனத்திற்கு அதை விழித்துப் புறப்படுதல் வழக்கம். அம்மை பராசக்தி தடத் தப் பொருளாக தாரகைவடிவாகத் தன்னைச் சங்கு நாதம் போல் விளங்கும் வெளிச்சத்தில் காண்பிக்கிறாள். இது தூய்மையான உலகம்; தில்லைத்தரிசனத்தின் முன் காணுமுலகம்; 'நந்தி தரிசனம் என்று கூறுவர்; ஆதலாலே சங்கு தூய்மையானதும் அஞ்ஞான இருளை நீங்கிய உலகினைக் காட்டும் உதய ஒளி. கடல் சங்கு இலங்கையைச் சுற்றிக்கிடக்கும் கடலில் அதிகமாகக் காணப்படும் பொருள். காலை யில் சூரியோதயத்தில் செவியை யடைக்கும் சத்தம் போடுஞ் சங்கு; பக்தன் இதயத்தில் நிட்டை கூட தன்னை இழந்து வெளிச்சத்தையே தில்லைத் தரிசனத்தைக் கொடுப்பது சங்கு.

23 அடியார்

100. ஆடுவர் பாடுவர் அந்தியும் சந்தியும்
கூடுவர் குணம்பல பேசிக்கும் பிடுவர்
தேடுவர் செய்வதொன் றறிகிலர் திடமுடன்
நாடுவர் வாடுவர் நம்பர்தம் அடியரே.

பாடசாலைக்குச் சென்ற குழந்தை திரும்பி வாராவிடத்து தாய் ''நேரம் போய்விட்டதே, என்னுடை காணேனே'' என்று அழுது புலம்பி தேடித்திரிவாள் மனங்குழம்பி அலறுவாள். அத்தகைய எண் ணங்களுடனும் அங்கலாய்ப்புடனுமே மெய்யடியார் ''இன்னும் நம் இறைவனைக் காணேமே'' என்று வருந்துவர். மறைப்பாற்றல் கொண்டு மருத்துவனை இறைவன் ஏதுக்களை முன்காட்டுவான். வேறோர் அங்கலாய்ப்பும் அவாவுமில்லாத அன்பர் திவலை திவலையாக வரும் வெளிச்சத்துடன் திடமுடன் தியானத்தில் ஈடுபடுவர். அவருடைய புகழ்களையும் பாடிக் கும்பிடுவர். காலையும் மாலையும் அவருடைய புகழைப் பாடும்போது தோன்றும் வெளிச்சத்துள், அருள் வெள்ளத்

துள் ஏறிச்சென்று தன்னை மறந்து அலைகடல் அதனுள்ளே நின்று ஆடுவர் பாடுவர், இன்னமும் ''இடிமுழக்கம் போல் வரும்'' அந்த வெளிச்ச வீட்டுக்குள் செல்லவில்லையே என்று தயங்கி வாடுவர்,

101. அச்சமும் கோபமும் அறிகிலர் பிரிவிலர்
பிச்சையே நச்சுவார் பிணங்குவார் இணங்குவார்
நிச்சமும் நோயிலர் நேயமே உருவினர்
நச்செழில் மிடறுடை நம்பர்தம் அடியரே.

பஞ்சப்புலன்களுந் தன்னுள் அடங்கவே ஆசைகளற்றுப்போக அவற்றாலுண்டாகும் அங்கலாய்ப்பும் அச்சமுங் கோபமும் அறிகிலர். மோன நிலையைக் கொடுக்கும் 'சிவன் செயலின்' உண்மை ரூபத்தை (91) தியானித்துப் பிச்சையெடுப்பவர் போன்று தன்னை யொறுத்தும் பிச்சை பிச்சை என்று தம் ஹிருதயத்தை வேண்டி, சிவன் செயலின் உண்மை ரூபம் ''எல்லாம் சிவன் செயல்; வினை முதலாம் முதல்வன் இயக்க இயங்கும்,'' கொலையும் வேறொருவனுக்கு முடிசூட்டலும் இரண்டும் ஒரே மதிப்புடைய சிவன் செயல் எனும் உண்மை வடிவமான மோனனையே பிச்சை வேண்டிப் பிணங்கியும் இணங்கியும் சிவன் செயலின் உண்மை வடிவை ஹிருதயத்தே நீங்கா வண்ணஞ் சிந்திப்பர், அழுவர். சிற்றின்பத்தை நஞ்சாகக் கண்டு (94) மிடற்றில் வைத்து எம்பெருமானின் அடியார்கள் தாம் படுந் துன்பத்தை சிவன் செயலென மதித்து துன்புறுது பேரானந்த வெள்ளந்ததும்ப, பகைவனையும் நண்பனாகக் கொண்டு கருணை வெள்ளம் பெருக நோயுந் துன்பமு மற்று வாழ்வார், (2)

102. நீறணி நின்மலா நெற்றியங் கண்ணனே
ஆறணி சடையனே அம்பிகை பாகனே
சீறர வணிதரு செல்வமே எனப்பல
கூறியே குரைகழல் கூடுவர் அடியரே.

ஞானத்திரளாய் விளங்கும் எம்பெருமான், முப்பத்தைந்து கருவிகரணங்களுந் தன்னுள் அடங்கவே புறக்கண்கள் உறங்க நெற்றிக்கண் உதயமாக ''நீறணி நின்மலா, அஞ்ஞான இருளைச் சுட்டெரித்த சாம்பலைப் பூசிய, மலப்பிணிப்பினின்று விடுபட்ட எம்பெருமானே, ஞானக்கண்ணுடன் விளங்குபவனே, இமயமலையினின்று என்றும் குறையாது பெருகும் கங்கையை யொத்த கருணை வெள்ளம் ஆறுகப் பெருகும் கங்கையைச் சடையிலே கொண்டு விளங்குபவனே, பெண்ணை இடப்பாகமாகவுடையானே' என அழைப்பர், இறைவன் உயிரில் பொருள் உயிருள் பொருள் எப்பொருளிலும் வியாபியாக அகல் நிறைவாய் நீக்கமற நிறை பொருளாக விளங்குபவன். சிவன் செயலின் உண்மை வடிவம் விளங்கவே எப்பொருளையும் எச்செயலையும்' 'உணராது செயல்'புரிபவனையே' நினைந்து பேதமில்லாத அப்பொருளையும் அச்செயலையும் நோக்கி அன்பு செலுத்த

அங்கு கண்ணிற் கலந்த கற்பகமாய் விளங்கும் இறைவன் இரண்டு மடங்கு அன்பைத் திருப்பியனுப்பவே ''சீரற வணிதரு செல்வமே'' என்று பாடுகிறார்; எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனையிலும் வினை மூதலாம் முதல்வன் அப்பால்பட்டவனாக நின்று இயக்க நாதமாக விளங்கும சத்தி முதல்வனும் இறைவனுடன் இணைபிரியாதவர்களாக விளங்குபவர் புகழைப் பாடி குரை கழல் கூடுவர் அடியரே என்கிறார். குரை — ஒலி: (4)

103. அந்தமும் ஆதியும் அறியொணா ஒருவனே
எந்தையே ஈசனே எனப்பல சொல்லியே
கந்தமா மலர்கொடு காலையும் மாலையும்
வந்திப்பர் மலரடி வரங்கிளர் அடியரே,

மோன நிலையை யடைந்து அகம் சிவலிங்க வடிவாக விளங்க இடைவிடாது வலிந்து புகழைப் பாடியும் துதித்தும் திருவருள் பெரிதும் அருள்தர பருமாமணிமுத்தம் பிரகாசிக்கும் உள்ளம் தன்னையே அலங்கரிக்க அந்தப் புகழ் தரும் சிவ சின்னங்களைக் கொண்ட பாமாலைகளைக் காலையும் மாலையும் பாடி அந்த ஆதியுமந்தமுமில்லாத பொன்னம்பலவாணனை, என்னப்பனே! அம்மையே யப்பா ஒப்பில் எவ்வுயிர்க்கும் உயிராம் நாதனே! என்று பாடுவர். (3)

104. சந்திரன் தவழ்தரும் சடையனே விடையனே
இந்திரன் முதலியோர் இறைஞ்சிடும் இறைவனே
சுந்தரர்க் கரசமுன் தூதுசெல் சோதியே
எந்தையே எனச்சொலி ஏத்துவார் அடியரே.

என்றென்றும் சாந்தம் விளங்கும் மோன நிலைக்கு அடையாளமான பிறைச்சந்திரனைச் சடையில் தரித்த எம்பிரான் ஆன்மாக்களையே ஊர்தியாகக் கொண்டு ஆன்மாக்களை இரட்சிப்பவர், 'சந்திரன் தவழ்தரும் சடையனே விடையனே' என்கிறார். தன்னை வணங்கித் தன்னையறிந்த தேவர்க்கு அரசனாகிய இந்திரன் முதலியோரும் ''ஆணவ மலப் பிணிப்பினின்றும் நாம் விடுபட்டு என்றும் விட்டுப் பிரியாத ஜோதி நிலையை யடையவேண்டும்'' என்று இருதயத்தைப் பிச்சை கேட்டு இரந்து வணங்கித் துதிக்கும் இறைவன்: பரவையார் திருமணம்:- திருவாரூர் பெருமான் அன்புடைத் தோழராய் நங்கை பரவையாரை வாழ்க்கைத்துணையாக சுந்தரர்க் கீந்தருளியதும் பின் தூதுசென்று இருவரின் சந்து செய்வித்த அருளிப்பாட்டையும் குறிக்குக்கும் சான்றுகள் பல.

''ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும் துரீசுகளுக்கு உடனாகி
மாழையொண் கண் பரவையைத் தந்து ஆண்டானே மதியிலா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்னூரர் இறைவனையே''. (7-51-10)

24 அலகில் பேரருள் ஆரறிவாரே

105. அண்ட சராசரம் அவன்றிரு மேனி
அண்ட சராசரம் அவன்றிரு ஆடல்
அண்ட சராசரம் அவனே யாகும்
அண்ட சராசரம் முழுதும் அதிசயம்.

பெண்பாலான பிரகிருதி யோனியில் ஆண்பாலான் ஆத்ம சைதன்யம் வைக்கப்படுகின்றது. (62) கீதை (14- ;4) இல் கிருஷ்ணர் சொல்கிறார். பெரிய பிரகிருதி தாய்; கிருஷ்ணர் (இறைவன்) ஆத்ம சைதன்யப் பொருளாக நின்று கர்ப்பத்தை வைக்கிறவர் என்கிறார். (62) உடம்பும் உயிரும் தனித்தனி இருப்பது கிடையாது. உயிர் நீங்கிய உடல் வேறு விதமாக மாறிவிடுகிறது, 'ஊன் பொதிந்த உடலுமுயிரவன் (56) உலகினிற் காணப்படும் உயிருள் பொருள் உயிரில் பொருள் அத்தனையுள்ளும் உயிர்க்குயிராம் நாதன் உமா தேவியினுல் தழுவப்பெற்ற உடலைப் படைத்தவராய் (56) விளங்குகிறார். அம்மை அப்பர் இணைபிரியாதவர் எள்ளும் எண்ணெய்யும் போல் விளங்குபவர்; பண்ணும் பண்ணின் இசையும் போன்றவர்கள். அதிசயம் [ஆதிசங்கரர் சிவானந்த லஹரி சு (1) இல்] பார்வதியின் தவப்பயன் பரமசிவன், பரமசிவனுடைய தவப்பயன் பார்வதி அதிசயத்தைக் கொடுக்கு மியற்கை வடிவங்கள் கொண்டதே இயற்கையும் வாழ்க்கையும். (1)

எண்ணில் பலகோடி உயிர் எத்தனையோ அத்தனைக்குங்
கண்ணிற் கலந்த அருட்கண்ணே பராபரமே.
(தாயுமானவர் பராபரக்கண்ணி 277)

106. அஞ்செழுத் தாலே அனைத்தும் ஆயின
அஞ்செழுத் தாலே அனைத்தும் உதித்தன
அஞ்செழுத் தாலே அனைத்தும் நிலைத்தன
அஞ்செழுத் ததிசயம் ஆரறி வாரே.

சி, வ, ய, ந. ம எனும் எழுத்துக்களே பஞ்சாட்சர அஞ்செழுத்துக்கள் ய எனும் உயிர் ம எனும் மலப்பிணிப்பால் பீடிக்கப்பட்டு பிறவிக் கடலில் ஆழ்ந்து கிடக்கும் அதிசயமே உலகம் (105); திருவருள் வலதால் சிவகுரு எழுந்தருளி ந எனும் மலப்பிணிப்பை அகற்றும் வாழ்க்கையில் ஈடுபடுத்துவார்.

ந எனும் வாழ்க்கையால் ம எனும மலப்பிணிப்பினின்றும் விடுபட்ட ய எனுமுயிர் வ எனும் கலாவடிவின் உலகினில் சத்தி வடிவினதாக விளங்கும் உலகினின் தன்னையிழந்தும், பின் ஆணவ மலப்பிணிப்பினின்று ஒருங்கே விடுபட்ட மோன நிலையில் சிவன் முத்தனுக வாழ்ந்து உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டான் எனும் உண்மையைக் காட்டும் சுடவுளாக விளங்கும் மனிதனைக் குறிப்பதே சி எனும் எழுத்து; 'சிவ' இணைபிரியாத அம்மையப்பரைக்

குறிக்கும் தமிழ் மாமறை ''உடனுக்குடன் தோன்றுபவரைப் போற்று கிறேன்' யஜுர் வேதம் சிவானந்த லகரி (1) புணர்ப்பவாப்யாம் நினைக்குந்தோறும் புதிதான மலர்ச்சியுடன் - சிவசின்னங்களுடன் - தோன்றுபவர்கள்-அஞ்செழுத்ததிசயம் ஆரறிவாரே-திருவருளே. (2)

107. அன்பே கடவுள் அன்பே யுலகம்
அன்பே உயிர்கள் அன்பே யனைத்தும்
அன்பே ஆவதும் அழிவதும் போலாம்
அன்பின் அதிசயம் ஆரறி வாரே

(பாட்டு 27 உரை வாசிக்க) 'காட்டில் வசிக்கும் வேடன் (கண்ணப்பர்) பக்தி சிரேஷ்டனுகிறுன்' [சு - 63 சிவானந்த லஹரி பாட்டு 89 வாசிக்க] அன்பின் அதிசயம் ஆரறிவாரே அப்பர்(6-18-11) இல்.

''ஆருருவ உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்'' என்கிறார்.

மேலும் ''புடை மலிந்த 'பூதத்தின் பொலிவு' தோன்றும்" என்பதும் அதே (6- 8-4)

மேலும் வந்த வரவும் செலவுமாகி
மாருதென் னுள்ளத் திருந்தார் போலும்" (6-16-9)
வரவும் செலவும் பிறத்தலும் இறத்தலும்

மேலும் தெரிவாய குணமஞ்சுஞ் சமிதையஞ்சும்
பதமஞ்சுங் கதியஞ்சும் செப்பினு நம
எரியாய தாமரை மேலியங்கினுரும் (6 16-7

தெரிவாய குணம் ஐந்து பஞ்சப் பொறிகளும். மற்றும் பூதம் ஐந்தும் பஞ்சாட்சரம் ஐந்தும் தாமரை போன்ற உள்ளத்தே உருவாகி வினைப்பயனுக் கீடாஇ உண்டாவன உலகம். [3]

108. ஆதியும் அந்தமும் இல்லா ஒருவன்
ஆதியும் அந்தமு மாய்வரு காரணம்
ஆதிதன் அருள்கொண் டறிவதே யன்றி
ஓதி யறிந்தவர் ஒருவரும் இலரே.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் ''ருசியான உணவைச் சமைத்து உண்ட வருக்குத்தான் உணவின் ருசி தெரியும். சொல்லாலுணர்த்த முடியாது'' இறைவன் ஆதியு மந்தமு மில்லான். உலகினிற்கு முன்னே உள்ளவன் பரமாத்மன்; அவனே படைப்புக் கடவுளாகவும், காக்குங் கடவுளாகவும் அழிக்குங் கடவுளாகவும் தானே நின்று அருள் புரிபவன். அருள் புரியுங் காரணத்தை, பரமாத்மனுக விளங்கும் இறைவனருள் கொண்டறிவதே யன்றி, தான் பரமாத்மனை உத்தமன். ஜீவன் முத்தன் என்னும் பதவி யடைந்தறிவதேயன்றி, அவற்றை என்னுமொருவர் சொல்லக் கேட்டு அறியவொண்ணுத அறிவு. அறிவு சொரூபமாக வளர்ந்தே அறியலாம். (4)

109. அலகில் உயிர்களை ஆக்குவா னவனே
அலகில் உயிரென நிற்கும் அதிசயம்
அலகில் வானவர் தானவ ரறியார்
அலகில் பேரருள் ஆரறி வாரே.

எண்ணில் பல கோடி (105 வாசிக்க) உயிர் அத்தனையும் ஒலிவடிவாக அலகுள வடிவம் நீக்கமற எங்கும் வியாபித்திருக்கும் (Cosmic soul and Cosmic Conecious n ss) lவானவர் தானவர் சதா சிவம் வடிவினர் இதையறிவர். அலகில் பரமாத்மனை பேரருளை யறியார் (absolute Conesciousness) முன் பாட்டில் ஜீவன் முத்தன் என்பதை வாசி. மாணிக்கவாசகர் திருப்பள்ளியெழுச்சி (8) இல் தருவதைக் காண்க.

முந்திய முதல் நடு இறுதியுமானாய்
மூவருமறிகிலர் யாவர் மற்றறிவார்
பந்தனை விரலியுர் நீயும் நின அடியார்
பழங் குடி தோறும் எழுந்தருளிய பரனே. (5)

25 சிவனடிக்கன்புசெய் அனைத்துஞ் சிவமே

110. சிவனடிக் கன்பு செய்குவர் பெரியர்
சிவனடிக் கன்பு செய்கிலர் சிறியர்
சிவனடிக் கன்பு சிறப்பினை யளிக்கும்
சிவனடிக் கன்பு சீவன் முத்தியே.

அறிவிலியள் திருவருள் இல்லாமையால் அஞ்ஞான இருளில் எஞ்ஞான்றுங் கிடந்து மலப்பிணிப்பினல் மூடப்பட்டு கடவுளை மறந்து தாமச குணத்திலும் ரஜோ குணத்திலும் உழலு கிறர்கள். இதை உணர்ந்தவர்கள் இறைவன் திருவருள் கிடைக்க, மாயையின் விநோதத்தையும் முக்குண விகார தேவர்கள் செய்யும் தொழிலையும் யுணர்வினல் கண்டு தூய்மையும் சாத்வீக குணமும் வேண்டும், காமிய கர்மம் புரியாதிருக்க வேண்டும், திருவடி நிழலை யடையவேண்டும் என்பர் அறிஞர்கள். சிவனடிக் கன்புடன் நிழலில் வீற்றிருந்து ஏத்திப் போற்றித் தொழுது வணங்கவே ஈற்றில் சிவ பதமடைந்து சீவன் முத்தனாக வாழலாம். (1)

111. சிவனடிக் கன்பு தீவினை யொழிக்கும்
சிவனடிக் கன்பு தெளிவினை யளிக்கும்
சிவனடிக் கன்பு சித்தங் களிக்கும்
சிவனடிக் கன்பு சின்மய மாக்குமே.

யாரும் ஒரு கணப்பொழுதேனும் செயலாற்று திருப்பதில்லை. ஏனென்றல் பிரகிருதியினின்றுதித்த குணங்களால் ஒவ்வொரு உயி ரும் தன்யெமின்றிச் சர்மம் செய்விச்சப்டுகின்றது [கீதை (3 – 5)]

இந்திரியங்களை யடக்கியும் தீவினை செய்யாத போதிலும் மனத்தால் தீக்கர்மங்களை யெண்ணிக் கொண்டிருப்பவன் பின்னு மந்தத் தீக்கர்மங்களைச் செய்ய நேரும். ஆதலால் உயிர் வாழ்க் கைக்கு இன்றியமையாத கர்மங்களைச் செய். உண்பது, உறங்குவது, நீராடுவது நித்திய கர்மங்கள். உணவு வேண்டும். மிருகங்களும் மிருகத்தன்மை யுடையவர்களும் பறித்துண்பார்கள். அறிவு கூடிய வர்கள் பங்கீடு செய்து உண்பார்கள்; சாதாரண மனிதர், உயர்ந்த நிலையிலிருப்பவர்கள் தனக்கென்று தேடாது தன்னிடத்திருப்பதை பிறர்க்கென்றே படைப்பர், இவ்வித தியாக சேவையோடு செய்யும் சேவை ஈசுவர ஆராதனையாக ஆற்றும் வினை, தெளிவினையளிக்கும் சித்தங் களி கூரும் உணவு அருந்தும் போது இறைவனுக்குப் படைத்து உண்பதால் காம வினை ஒழிகிறது' தனக்கெனச் சமைப் பதால் கர்மம் விளைகிறது. ''யாகத்தில் மிஞ்சியதை உண்ணும் நல் லோர் எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுகின்றனர். ஆனால் தங் கள் பொருட்டே சமைக்கும் பாபிகள் பாபத்தை உண்கின்றனர்.'' திருவருள் உளரச் சீவித்தே இறைவனடி சேரலாம்

112. சிவனடிக் கன்பு செய்பவம் போக்கும்
சிவனடிக் கன்பு திருவரு ளாக்கும்
சிவனடிக் கன்பு சிவகதி யாக்கும்
சிவனடிக் கன்பு செப்புந் தகைத்தோ.

பலன் கருதாது கர்மம் புரிவதால் நிஷ்காமிய கர்மம் புரி கிறான் நிஷ்காமிய கர்மம் நல்வினை தீவினை இரண்டுமற்றது. இரு வினையுஞ் சாராது திருவருளே சாரும் இறைவன் திருவருள் சேரவே ''எல்லாஞ் சிவன் செயல் எங்குஞ் சிவன் செயல்'' எல்லாம் அவ னெடி, எங்கும் அவனெடி எனுமுண்மை உதயமாகும். திருவருள் சார உள்ளபடியே உள்ளம் யாவும் சித்த மவுனம் செயல் வாக் கெல்லாம் மௌனம் சுத்த மௌனம் தோன்றும் அகம் உதயமா கும். களைவடிவாக உலகமும் பரசிவ வணக்கமும் உதயமாகும்: சிவனடிக்கன்பு சிவகதியாக்கும், சிவனடிக்கன்பு செப்புந் தகைத்தோ. பரசிவ வணக்கம் உணர்வினுல் அறிவதேயன்றி சொற்களால் பய னற்றது.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. (திருமந்திரம் . 3)

113. சிவனடிக் கன்பே சிவயோக மாகும்
சிவனடிக் கன்பே சிவஞான மாகும்
சிவனடிக் கன்பே சிவபோக மாகும்
சிவனடிக் கன்பே சிவமய மாமே.

நிஷ்காமிய கர்மமே பிரதானம் துன்பங்களையே இன்பமாகக் கொள்ளல் வேண்டும். சிற்றின்பத்தை இறைவனிடம் படைத்தல் வேண்டும். இறைவன் அவற்றை 'நஞ்சு' என்று கண்டத்தில் வைத் திருந்தார். உணவை இறைவனுக்குப் படைத்து பின் அவனுடைய

பிரசாதமாக உண்ணுதல் போலவே மற்றுங் கர்ம இந்திரியங்கள் தொழில் புரிய வேண்டும்; அதே நிஷ்காமிய கர்மம், இன்பங்களை ஒறுத்தல் வேண்டும். சிவனடிக்கன்பு சிவயோகம் ஆகும்.

பர சிவ வணக்கம் அறிவு சொரூபமாக விளங்கும் அகத்தை யுண்டாக்கும்; அம்மையும் அப்பருமாக விளங்கும் உலகினை வணங்குவதே பரசிவ வணக்கம். அறிவு சொரூபமாகவே தன்னை களை ரூபமாக விளங்கும் உலகினில் காணவேண்டும். சிவனடிக்கன்பு சிவஞானமாகும். நந்தி தரிசனம் என்றே தன்னைக் களை ரூபமாக விளங்கும் உலகினில் (58 வாசிக்க) தன்னை இழந்து அறிவு சொரூபமான உலகையே கண்டு ஏத்திப் போற்றிப் பூசைசெய்ய சிவ சின்னங்கள் ஞானத்திரளாய்த் தோன்றும்; சிவயோகமாகும். எல்லாஞ் சிவமயமாகவே விளங்கும் உலகம். [4]

114. சிவனடிக் கன்புசெய் தேகம் பொன்மயம்
சிவனடிக் கன்புசெய் தேகஞ் சின்மயம்
சிவனடிக் கன்புசெய் தேகம் நம்வயம்
சிவனடிக் கன்புசெய் தேகஞ் சிவமயம்.

[முன் பாட்டு வாசிக்க] நந்தி தரிசனமும், தொடர்ந்த தியானத்திலும் பூசையிலுந் தோன்றிய சிவசின்னங்கள் ஞானத்திரளாய் நிற்க, எம் பெருமான் உருவில் திகழ, பொன்னம்பலம் அறிவினில் பருமாமணி முத்தம் போல் தோன்ற செந்தீ எழுவித்தார். உமையாள் பங்கன் பொன்மயமாக விளங்கும் தேகமே மனம் உள்ளத் தொடுங்க, நிட்டை கூடுவன். தில்லைத் தரிசனம் காண்பான். பொன்னம்பலத்தே கூத்தியற்று வானத்தன் உள்ளத்தில் இருப்பானை தம் மறிவால் அறிவான். தேகஞ் சின்மயம் எனும் முத்திரை உடைத்தாய் விளங்குவன். ஜீவன் முத்தனுய் விளங்குவன். தேகம் தன் வயத்தனுகவே இறைவன் வேலையில் ஈடுபடும். தேகம் நம்வயம் தேகஞ் சிவமயம்.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறு பொருள் கண்டேன்.
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை நானிருந் தோம்புகின் றேனே. (திருமந்திரம்) (5)

115. சிவனடிக் கன்பு திரிகால மறியும்
சிவனடிக் கன்பு திரிலோக மறியும்
சிவனடிக் கன்பு திரிமூர்த்தி யறியும்
சிவனடிக் கன்பு திரிதோஷ மிறக்குமே.

[முன்பாட்டு வாசிக்க:] தில்லையம்பல தரிசனங் கண்ட அன்பனுடைய தேகம் உத்தமன் கோயிலாக விளங்க நிட்டையில் விஞ்ஞவிக் கிடைக்கும் உண்மைகளை நிட்டை கலைந்த தேகத்திலிருந்தாராய்ந்தே திரிகால விஷயங்களையும், திரிலோக விஷயங்களையும்றியலாம்.

மாயையும் கடவுளின் கூத்தே. பொய்ப்பத்திரம் தயாரிப்பவர்க்குத் தூய வெளிச்சம் பயன்படுவது போன்று எச்செயலின் எண்ணமுந் தோன்றுமிடம் பிரம்ம முகூர்த்தமே (சித்பவானந்தா) படைத்தல் காத்தல் அழித்தல் மூன்றுக்கும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என மூன்று கடவுள் உண்டு. செயலை விளைவிக்கும் திருமேனி அழகுமூர்த்தமாகும். எண்ணங்கள் தோன்றுமிடத்தை யறியவே மும்மூர்த்திக்கும் மூர்த்தியை அறிகிறான். ஜீவன்முத்தன் திரிகால உணர்ச்சியுடையவன். அதற்குப் பரிகாரமுடைய தியானமும் பூசையும் செய்பவனுக விளங்கியே தோஷம் நீங்கப்படுபவனுகிறான். மறைப்பாற்றல் வடிவாக மருத்துவன் அன்பனைச் சிறிது நேரம் மாயா விகாரத்தில் ஈடுபடுத்திப் பின் மருத்துவன் கூத்து எனத் திருவருளால் அவனுக்கு அறிவித்தும் தூய்மையாக்கியுந் தன்னுடன் என்றும் விட்டு நீங்காத அருளைக் காட்டுபவன்.

பிழைத்த பிடியைக் காணுதொடி பெருங்கை மதவேழம்
அழைத்துத் திரிந்தங் குறங்குஞ் சாரலண்ணுமலையாரே.
திருஞானசம்பந்தர் (1 - 69 - 4.) (9

116. சிவனடிக் கன்புசெய் திரிசிய மிறக்கும்
சிவனடிக் கன்புசெய் திருக்குப் பிறக்கும்
சிவனடிக் கன்புசெய் திரிகுண மிறக்கும்
சிவனடிக் கன்புசெய் சித்தந்தித் திக்குமே

திரிசியம் - காணப்படுவது; திருக்கு கண் காண்பவன் முன்பாட்டு விளக்கம் வாசிக்க திருச்சிற்றம்பல தரிசனங் கிடைக்கப்பட்டுத்திரிகால திரிலோக விஷயங்களுமறிந்த அன்பன் திருமூர்த்தியையுமுணர்ந்து அதன் பரிகாரமாக திரிதோஷ மிறக்க, என்றென்றுமழியா அன்புடன் தன்னையறியும் இயல்புடையோனுய் விளங்குவான். திரிகுணமுமிறந்த அன்பன் எண்குணம் படைத்தோனுய் நானும் நீயுமென்று சொல்ல நாணுவேனென்னு முணர்வுடனே வாழ்வான். அங்கே அவன் திடலில்லை, பள்ளமில்லை, உள்ளமுமில்லை, உருவமில்லை என்றே இறைவனில் கிடப்பான். தில்லைத்தரிசனங் கண்டவன் என விளங்க, இந்நிலையில் காணப்படுங் காட்சியும் காண்பானு மொன்றுகவே தேகத்துடன் அவன் விளங்குவன். மூன் சமாதியில் தன்னை இழந்தான் இன்னிலையில் திரிகுண மிறக்க திரிசிய மிறக்க திருக்குப் பிறக்க தன்னை இழந்தே சித்தந் தித்திக்க உலகினில் வாழ்வான்.

காட்டு வித்தா லாரொருவர் காணுதாரோ
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே — அப்பர் தேவாரம்
உள்ளம் உருவென்றும் உருவம் உளமென்றும்
உள்ள பரிசறிந் தோரு மவர்கட்கு
பள்ளமும் இல்லை திடரில்லை பாழில்லை
உள்ளமுமில்லை உருவில்லை தானன்றே.
(திருமந்திரம் 2461) (7)

117. சிவனடிக் கன்புசெய் தேவரும் இல்லை
சிவனடிக் கன்புசெய் சீவரும் இல்லை
சிவனடிக் கன்புசெய் சித்தரும் இல்லை
சிவனடிக் கன்புசெ யனைத்துஞ் சிவமே.

முன்பாட்டைத் தொடர்ந்தே பாடுகிறார். சீவர் - புத்தர், சீவனுள்ளோர். புத்ததுறவிகள் எல்லாமிறந்து துரியா தீதத்தில் காணும் ஜோதி நிலையில் தன்னையிழந்து ஒன்றுமற்ற நிலையில் நிற்பது, பின்னும் உலகினில் உடம்புடன் உத்தமன் கோயில் கொண்டா னென்று யானென்றும் கடவுளென்றும் ஞானத்திரளாய் விளங்குந் தேவா என்றும், புத்தர் புத்தத் துறவிகளென்றும், சிவ சித்தில் திறமையுடன் விளங்கும் சித்தரென்றும் வேறுபாடுகள் ஒன்றுமே காணாது உலகமனைத்துஞ் சிவசொரூபமாகவே கண்டு வாழ்வான். (8)

26 முத்திக்கு வழி

118. முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ
சத்தியம் பொறுமை சாந்த மடக்கம்
நித்தியா நித்திய வத்து விவேகம்
பத்திசெ யடியரைப் பணிதல் பகலவன்
எழுமுன் எழுதல் இரும்புன லாடல்
வழுவிலந் தெழுத்தும் வரன்முறை பயிலல்
குருபதம் பணிதல் கோலநீ றணிதல்
வரும்பசிக் குண்ணல் வாயுற வாழ்த்தல்
சாத்திரம் பயிறல், தன்போற் பிறரையும்
பார்த்தல்; பணப்பற் றொழித்தல்: பண்புடன்
வார்த்தை யாடல்; வாதனை தீர்த்தல்
கோத்திரங் குலமெனுங் கோட்பா டொழித்தல்
எட்டுணை யேனும்
வேண்டுதல் வேண்டாமை யின்றி யென்றும்
ஆண்டவ னடிக்கீ ழமர்ந்து வாழ்தலே

நல்லொழுக்கம், மெய்யடியாரைப் பணிந்து பணி புரிதல்; சூரியன் எழுமுன் எழுந்து நீராடி சிவனை தொழுதல்; பஞ்சாட்சர செபம் செய்தல்; எழுத்துக்கள் தரும் பொருளை உருவமைத்துச் சிந் தித்தல்; வணங்குந் தேகத்துக்குப் பொடிபூசி என்னும் இறைவன் திருநாமம் விளங்கவே திருநீற்றை அணிந்து வழி நிற்க; சும்மா இருக்கும் சுகம் உதயமாக 'சும்மா இருக்கும் சொரூபமே நீயே குரு நாதனே' என்று குருபதத்தைக் கும்பிடுக; அவ்வண்ணம் ஒழுகி, 'உள்ளபடியே எல்லாம் உள்ளது, எல்லாம் சிவன் செயல், எங்குஞ்

சிவன் செயல், எல்லாமவனெடி எங்குமவனெடி' என்னு முண்மை உள்ளத்தே தோன்ற ஏத்திப் போற்றிக் குருபதம் பணிக; திரு மாமறையில் கூறிய உண்மைகளே யறிந்து சித்தாந்த முறை நின்று இறைவனைப் பூசித்து, மண், பெண், பொன் எனும் மூவாசை ஒழித்து, உண்மை விளங்கவே சாத்திரத்தின் உண்மைகளையும், தான் பணிந்தேத்தி உணர்ந்தறிந்த உண்மைகளையும், மற்றும் மெய்யன்பர் களுடன் கலந்து பேசி ஐயமற நின்றெழுகல்; பசிக்கும்போது கணக் குக்கு உணவு அருந்தல்; கோத்திரம் குலமெனும் ஆணவமலப்பிணிப் புக்கு இடமானவற்றை ஒழித்தல்; மூவாசையும் மாடு மக்கள் செம் பொன் ஆடை வீடு என்று தாயுமானவரால் வர்ணிக்கப்படும் தொடர்புகள் 'மோட்ச வீட்டு வழி' நிற்குமளவுக்குத் தேவையே யல்லாமல், அவற்றை மறைக்க இடமில்லாமல் வாழவேண்டும்'

மாடு மக்கள் சிற்றிடையார் செம்பொன் ஆடை
வைத்த கனதன மேடை மாட கூடம்
வீடு மென்பால் தொடர்ச்சியோ இடைவிடாமல்
மிக்ககதி வீடன்றே விளங்கல் வேண்டும்.

தாயுமானவர் (41 பெற்றவக்கே 9)

27 தெய்வமிது தானே

119 அன்னைபிதாக் குருவாகி யாண்டுகொண்ட தெய்வம்
அடியவர்தம் மனத்திலே ருசிக்கின்ற தெய்வம்
என்னையெனக் கென்னுலே யறிவித்த தெய்வம்
எல்லாமா யல்லவுமா யிருக்கின்ற தெய்வம்
முன்னைவினை யெல்லாம் முடித்தாண்ட தெய்வம்
மூதாதை மாரெனக்குக் காட்டிவைத்த தெய்வம்
தென்னைபனை சேரிலங்கை வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிது தானே,

ஆருயிர்கட்குத் தந்தையாகவும் தாயாகவும் தக்க ஆசானுகவும் தேவரீரையே அனைவரும் எடுத்து மொழிவது வழக்கம். திருஞான சம்பந்தருக்கு மூன்று வயதினில் விடையேறியாகக் காட்சியளித்த உண்மை யாவருமறிவர். மெய்யன்பர் தம்முள்ளத்தே வேண்டுதல் வேண்டாமை யெனு முண்மை விளங்க சிவனடிக்கன்புசெய் சித்தந் தித்திக்கும் எனு முண்மை வழி நின்று (116) வாழ அருள் சொரியுந் தெய்வம். நிட்டை கூடியே ஜோதி நிலையில் தன்னைக் கண்டும் (65) பின் உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டான் எனுமுண்மை (114) விளங்க சீவித்த அறிவான தெய்வம் 'ஜீவன் முத்தனுகச் சீவிக்கும் நிலையில் வினைக்கு இடமேது. களவுபடா இருதயம் (53) விளங்க மேல்வரும் வினையே கிடையாது. திரிகாலமும், திரிலோக மும் மும்மூர்த்தியுமறியவே (115) மூதாதைமாரும் தொடர்ந்த பதவிகளும் ஒருங்கே காட்டிவைத்த தெய்வம்' சிவயோகம் சிவ ஞானம், சிவயோக மறிவிக்கவே (113) எல்லாஞ் சிவமயமாக்குவித்த தெய்வம்

120, கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பளிக்குந் தெய்வம்
காணுத காட்சியெல்லாங் காட்டுகின்ற தெய்வம்
நில்லாத நீர்சடைமேல் நிற்கவைத்த தெய்வம்
நெற்றியின்மே லொற்றைக்கண்நேரவைத்த தெய்
எல்லார்க்குந் தெய்வ மென்னுடைய தெய்வம் [வம்
இதையறிந்து வாழுவார் எல்லாருந் தெய்வம்
செல்லாரு மிலங்கையில் வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிது தானே.

வேதசாத்திரங்களைக் கற்று, பின் சித்தாந்த முறை நின்று அறிந்த அறிஞர்கள், வேதசாஸ்திரங்களைக் கற்றும் அவற்றின் பிரயோசனத்தை யடையாதவர்கள், ஒன்றும் படிக்காதும் அனுபவமில்லாத மூடர்கள், இம்மூன்று தன்மையர்களுள்ளும் குருவின் ஒரு மொழி (13) கொண்டு தன்னையறிந்தவர்க்கு சித்தத்தே தித்திக்கும் தெய்வம்:

ஒரு மொழியே பல மொழிக்குங் இடங்கொடுக்கும் அந்த
ஒரு மொழியே மலம் ஒழிக்கும் ஒழிக்குமென மொழிந்த
குரு மொழியே யலையிலக்கு மற்றை மொழி யெல்லாங்
கோடின்றி யட்டாடல் கொள்வ தொக்குங் கண்டாய்,

[தாயுமானவர் (17) நினைவொன்று (2)]

திருஞானசம்பந்தர் வானோர், மறைமாதவத்தோர் மற்றும் ஏனோர் வழிபட்டடைந்த உண்மை ரூபத்தைத் தன்னையே தான் பூசித்த உண்மையைத் தருகிறார்.

"வானோர் மறை மாதவத்தோர் வழி பட்ட
தேனூர் பொழில் சூழ்மறைக் காட்டுறை செல்வா
ஏனோர் தொழுதேத்த விருந்தீ யென்கொல்
கானூர் கடு வேடுவனை கருத்தே" (2-173-5)

ஏனோர்க்கு கடுவேடுவனாக நின்று அருள் கொடுத்தார். இவ் வண்ணம் தாம், தாம் கண்ட ஆயிரம், ஆயிரம் முகங்கொண்ட அம்மையின் ரூபமாக, காணுத காட்சி தரும் இறைவன் அவரவர்க்கு வேண்டிய வடிவம் காட்டுவன்: பத்தி மலையுச்சி, ஞானமலையுச்சி, யோகமலையுச்சி எனும் இறைவனிருப்பிடமான கயிலாயமலையுச்சியிலிருந்தே கங்காநதி ஊற்றெடுத்து ஓடிச்சென்று கீழிருக்கும் மாந்தர்களுக்கும் மற்று முள்ளோர்க்கும் அன்பளிப்பாக விளங்குகிறது. இறைவன் பகைவரையும் தன் நண்பனைக் கொண்டு அன்பு செலுத்துபவன், "மேனெறி கண்டுளம் வெண்மதிமேதினி" என்று மூலர் குறிக்கிறார்: குறைவில்லாத வெள்ளம், என்றுங் குறையாதே மலையுச்சியினின்றும் பெருகும் வெள்ளம், கருணை வெள்ளம், அந்த நில்லாத நீர் சடைமேல் நிற்கவைத்த தெய்வம் என்கிறார் சுவாமிகள்:

கருணை மழை அமுதத்தை என்றுங் குறைவிலாது பொழியும் மேகம் போன்ற சடையையுடையவர், தாம் விரும்பிய வடிவமாக காட்சியளிப்பவர் என்பதை சிவானந்தலஹரி [சு. 52] "கருணையாகிற அமுதத்தை பொழிபவரும் கடுங்கோடை வெயில் போன்று பொசுக்கும் தாபங்களைப் போக்கும் கருமத்தில் கண்ணுங்கியவரும், வித்தையாகிற பயிர் நல்ல பலனை யளிக்கும் பொருட்டு நன்மனம் படைத்தவர்களால் சேவிக்கப்பட்டவரும், விரும்பிய வண்ணம் வடிவெடுப்பவரும், ஆனந்த நடனம் செய்யும் பக்தர்களாகிற மயில்களையுடையவரும், மலையில் வசிப்பவரும், அசைந்தாடுகிற ஜடா மண்டலத்தை யுடையவரும் ஆகிய மங்கள ஸ்வரூபியே! கரிய கழுத்தை யுடையவரே! எனது மனமாகிற சாதகபக்ஷி உம்மை எப்போதும் ஆவலுடன் விரும்பி நிற்கிறது." [மொழி பெயர்ப்பு]

மூப்புரமெரிக்குங் கதை [13] இலும் தொடர்ந்தே ஞானக் கண் உதயமாவதையும் 'முப்புரமாவது மும்மலகாரியம்' எனும் திருமூலர் பாட்டையும் [52] இலுங் காண்க. இவ்வண்ணமே முப்பத்தைந்து புறக்கருவிகளு மொடுங்கவே - அவற்றிற்கு உதாரணமாக விளங்கும், ஊனக்கண் இரண்டும் உறங்க அதற்கு ஒப்பாக விளங்கும் நேற்றிக்கண் உதயமாகும். தன்னொளி கொண்டு விளங்கும் சூரியன் போன்ற சொக்கனுதனும் சூரியனுடைய ஒளியுடன் இயங்கும்சந்திரன் போன்ற அம்மையாரும் ஒருங்கு கூடியே 'முக்கண்ணன்' என அழைக்கப்படுவர்; தாயுமானவர் 'இரண்டு கண்ணுமுறங்க'

'எண்ணுத தெண்ணிய நெஞ்சே துயரொழி என்னிரண்டு
கண்ணே உறங்குக என்னுணே முக்கட் கருணைப்பிரான்
தண்ணார் கருணை மவுனத்தினுல் முத்தி சாதிக்கலாம்
நண்ணுத தொன்றில்லை யெல்லா நலமு நமக்குளவே"

என்பதால் முக்கட் கருணைப்பிரான் உள்ளத்தே தோன்றுவார் என்கிறார்.
[27 பாயப்புலி 18]

எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் பெரும் பொருள் நீயேயாகும்; மெய்யனுகிய என்னுடைய உள்ளம் நெகிழ அகத்துட் புகுந்து ஞானத்திரளாய் நின்று எங்கும் அவனெடி எல்லாம் அவனெடி எனு முண்மை விளங்கவே உள்ளும் புறமும் ஒன்றுக நிற்கும் என்னுடைய தெய்வம்; இவ்வுண்மை அறிவினுல் விளங்கும் 'அறிவு சொரூபமே நீயே' என்றழைக்கும் மெய்யன்பர் எல்லார் உள்ளத்திலு முறையு மந்தத் தெய்வம், என்னுடைய தெய்வம். தெய்வத்தின் வடிவம்,

"மாடத்துளானலன் மண்டபத்தானலன்
கூடத்துளானலன் கோயிலுள்ளானலன்
வேடத்துளானலன் வேட்கை விட்டார் நெஞ்சில்
மூடத்துளே நின்று முத்தி தந்தானே"

[திருமூலர் திருமந்திரம்

மாணிக்கவாசகர் 'என்தனக்கும் அறிவை அறியு மெல்லார்க்கும் தெய்வம்' என்கிறார்.

"முழு முதலே ஐம்புலனுக்கும் மூவர்க்கும் என்தனக்கும்
வழி முதலே நின் பழவடியார் திரள்வாள் குழுமிக்
கெழுமுதலே யருள் தந்திருக்க இரங்குங் கொல்லோ என்
றழுமுதலே யன்றி மற்றென் செய்வேன் பொன்னம்பலத்தரசே"
(திருவாசகம் கோயில் மூத்த பதிகம்)

'அன்றி ஒன்றில்லை' எனு முண்மை விளங்க, உயிரில் பொருள் உயிருள் பொருள் எங்கு இருப்பின் அவன் அங்கே இருக்கிறான்: சிவன் எனும் நாமம் (91) உள்ள தெய்வம், என்றும் அழியா உருவமான, இலங்கை விட்டு நீங்காத தெய்வம். (2)

121 நம்பினபேர் தமக்கருளே நயந்தளிக்குந் தெய்வம்
நாதாக்கள்போற்றுகின்ற மெய்ஞ்ஞானத் தெய்வம்
வெம்பிணிக்கு மருந்தாக விளங்குகின்ற தெய்வம்
வேதாந்தத் தெய்வமுயர் சித்தாந்தத் தெய்வம்
அம்பிகைதம் பாகமா யமர்ந்திருக்குந் தெய்வம்
அவரவர்க்கு அதுவதுவா யிருக்கின்ற தெய்வம்
தும்பிமுக னறுமுகவன் தோத்திரஞ்செய் தெய்வம்
சோலைசூ ழிலங்கைவாழ் தெய்வமிது தானே.

கொடிய பிறவி கடிய வெயில் வெப்பந் தருவது; துன்பத்துக்கு ஏதுவாயுள்ளது; இக்கொடிய துன்பத்துக்குத் துணைநிற்கும் இவ்வுலக நுகர்பொருளைக் கண்டு அவற்றுக்குக் காவலாக விழித்திருக்கும் வெம்பிணி நம்மை விட்டு நீங்கச் சடத்துயிர் போல் உயிர்க்குயிராம் நாதன் ஞானமருள் தெய்வம்; தயுமானவர் (எந்நாட் கண்ணி 8 அருளியல்பு 17) இல தருவதைக் காண்க:

"சடத்துளுயிர் போலெமக்குத் தானுயிராய் ஞானம்
நடத்து முறை கண்டு பணி நாம்விடுவ தெந்நாளோ"

தொன்மையாக அறிவின்றி என்றும் விளங்கும் பசுத்தன்மையும் பாசத் தன்மையும் திருவருளால் நீங்கவும் இவ்விரண்டிற்கும் மேலாக இன்பக் கூத்தியற்றும் பேரின்பப் பொருளே மெய்ப்பொருளென நம்பிய பேர் தமக்கருளே நயந்தளிக்குந் தெய்வம். இவ்வுண்மைப் பொருளை நம்பி மெய்ஞ்ஞானம் பெற்றுணர்ந்தாருள் நாதாந்தக் காட்சிப் பேறடைந்த (13) நாதாக்கள் போற்றும் மெய்ஞ்ஞானத் தெய்வம். மறைமுடிவாம் வேதாந்தமும் (14) முறை முடிவாம் சித்தாந்தமுங் கொடுக்குந் தெய்வம். (முன் விளக்கம்)

"எங்கும் அவனெடி எல்லாம் அவனெடி" 'சிவன் செயல்' உண்மை ரூபம் (91) பரசிவவணக்கம், அருளுந் தெய்வம்; அம்பிகை தம்பாகமாக அமர்ந்திருக்குந் தெய்வம்.

ஆயிரம் ஆயிரம் முகங்கொண்டவள், நந்தி தரிசனத்தில் நாதாந்தக் காட்சிப் பேறுக, அவர் தம் வாழ்க்கைப் பேறுக உருவமைத்த தாரணகையையே தடத்தப் பொருளாக உருவமைத்த அம்

மையையுமப்பரையுமே—நிட்டையில் மனங்கரைய சைதன்யப் பொருளாகத் தில்லைத்தரிசன அம்மையப்பருமாகக் காண்கின்றோம். அவரவர்க்கு அவரவர் உருவமைத்த தெய்வமே தில்லைத் தரிசனமாகக் காண்பானுங் காட்சியுமாக விளங்குந் தெய்வம்.

குழந்தையுந் தாயுமொன்று பட்ட அன்புடையர். குழந்தையழுதால் தாய்க்கே ஏன் குழந்தையழுகின்ற தென்று தெரியும்; மற்றையோர்க்கு உணர்ந்தறிய இயலாத காரியம். தாயின் இயல்பு கொண்டே குழந்தை செயலும் புரிவான். முருகனுங் குழந்தை வடிவினன். தாயின் இயல்பு கொண்டே செயல் புரிபவன். சிவபக்தன் சும்மா இருக்குஞ் சொரூபமாக குழந்தை முருகன்போல் இயங்குபவன். தாய் பராசத்தியிடந் தன்னை ஒப்புவிக்கிறான். தாய் பராசக்தியே செயல்புரிகிறாள். தற்பரன் நந்தி இவற்றை தரிசிக்கிறான் (முன் விளக்கங்காண்க). பக்திகூட சிவபூசையிலும் தோத்திரஞ் செய்தலிலும் சிவ சின்னங்கள் உதயமாகியே குவிக்கின்றன. ஞானத்திரன் பொலிந்து விளங்க ஞானியின் மனம் ஒடுங்கும். நிட்டை கூடும் தில்லைத் தரிசனங் காண்பான் (முன்விளக்கம்). உமாதேவியின் மூத்த மைந்தன் உருவமையும். தும்பிமுகனேயவன் இன்னிலையை ஞானசம்பந்தர்,

உருவில் திகழும் உமையாள் பங்கன் இமையோர் பெருமானூர்
செருவில் லொருகால் வலையவூன்றிச் செந்தீ யெழுவித்தார்
பருவில் குறவர் புனத்திற் குவித்த பருமாமணி முத்தம்
அருவித் திரளோடிளியுஞ் சார லண்ணுமலையாரே. (1 - 69 - 5)

தும்பி முகன் ஞானத்திரளாய் விளங்குபவன், தந்தையின் ஞானத்தையும் பார்வதியின் செயல்புரியுமாற்றல் வடிவையும் கொண்டே விளங்குபவன் பதவியுயர சிவன் முத்தனாக வாழ்பவன். தும்பி முகனாமுகவன் தோத்திரஞ் செய் தெய்வம், சோலை சூழி லங்கை வாழ் தெய்வம். (3)

122 இம்மைக்கும் மறுமைக்குந் துணையான தெய்வம்
எழிலாருஞ் செஞ்சடையில் மதிவைத்த தெய்வம்
அம்மையா யப்பனு யாதரிக்குந் தெய்வம்
அவனிமே லென்போல வழங்குகின்ற தெய்வம்
பொய்ம்மாயச்செருக்கெல்லாம்புறக்கணிக்குந்தெய்வம்
போதாரும் மலர்தூவிப் போற்றுகின்ற தெய்வம்
செம்மைசே ரிலங்கையிலே வாழுகின்ற தெய்வம்
சித்தத்துட் டித்திக்குந் தெய்வமிது தானே,

எழிலி - மேகம், எழிலாருஞ் செஞ்சடையில் - மேகத்தைப் போன்று ஆடியாடி (கருணைமழை கொட்டுஞ் சித்தாகாசத்தை யொத்து) விளங்கும் சடாமுடியில்; மழைதரும் மேகங் கறுத்திருண்டு

மழை சுரக்கும். அதுபோல் இறைவனுடைய பரமாகாசத்தின் கண்ணும், நாம் தோத்திரங்களாலும் ஆடல் பாடல்களாலும் உள்ளத்தே இன்பந் தரும் பிஞல் அருள் மழை உளங்கசிந்துருக சிவ சின்னங்களாகப் பெருகுவது வழக்கம். மனங்கசிந்து கருணை வெள்ளம் எல்லார் மாட்டும், கீழ் மக்கள் அறிவுடையார், பகைவர், அன்பர்கள் எல்லார் பொருட்டும், கருணை மழை பொழியும். அதன் காரிய மாக சாந்தமே உருவமாகத் திகழ்வர் பக்தர். பிறைச்சந்திரன் குளிர்ச்சியைத் தருவது "எழிலாருஞ் செஞ்சடையில் மதி வைத்த தெய்வம்" ஞானசம்பந்தர்

"இளமதி நுதலியோ டின்னம்பர் மேவிய
வளர்மதி வளர் சடை யீரே
வளர்மதி வளர்சடை யீருமை வாழ்த்துவார்
உளமதி மிகவுடை யோரே" (3 - 95 - 3)

என்றிவற்றைத் தருகிறார்:

கொடிய பிறவிக் கடலில் மாண்டு கிடந்துழலும் அடியேனின் உள்ளத்தே (121) கிடக்கும் மருட் கண்ணை அகற்றி அருட்கண்ணை ஒப்பாக வைத்து அருள் மேனி தாங்கிய (முன் விளக்கம்) இறைவன் இம்மைக்கும் மறுமைக்கும் இன்பந் தரும் சிவபதம் அருளினன்; நிட்டை அகமும் திருவருளும் பொருந்துமிடத்து தேவாமிர்தம் சொட்டுச் சொட்டாக தலையிலிருந்து உள்ளத்தே கொட்டும். இவ்வின்பமழை தில்லைத் தரிசனத்தைக் கொடுக்கும்; பிறப்பை யறுக்கும் இம்மையில் ஜீவன் முத்தநிலை இன்பத்தையும் பிறப்பை யறுத்து மறுமையின்பத்தையும் கொடுப்பது. அம்மையும் அப்பரும் போன்று தூய அருள் கொடுத்து பிறப்பறுக்குந் தெய்வம்.

பார்த்தா! பகட்டும் இறுமாப்பும் தற்பெருமையும் சினமும் கடுமையும் அஞ்ஞானமும் அசுரசம்பத்தை உடையவனுக்குண்டு. கீதை (16 - 4) மேற் கூறிய மாயைச் செருக்கெலாம் அழிக்குந் தெய்வம்; மூப்புரங்களையும் (முன் விளக்கம்) வேகச் செய்தே அருள் மேனி விளங்க வைக்கும் தெய்வம்
(ஞானசம்பந்தர் இவற்றை 3 – 13 (ம்) பதிகத்தில்

"தூருக்கிய திரிபுரத்தவர்கள் தாம் உகப் பெருக்கிய
சிலைதனைப் பிடித்த பெற்றியர்" என்று 3-ம் பாட்டிலும்

"வெள்ளெயிறுடையவன் விரவலார் கனர்
ஒள்ளெரி யூட்டிய வொருவனை யொளிர்" என்று 4 ம் பாட்டிலும்

இவற்றை வர்ணிக்கிறார் காண்க:

அட்டமாமலர் புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை எனுமெட்டுமாம். இவை சிவபூசைக்குரிய மலர்கள். அகத்தூய்மைக்கும் பரசிவ வணக்கத்துக்குரிய அட்டமாமலர்கள் கொல்லாமை, அருள், பொறியடக்கல், பொறை, தவம், வாய்மை, அன்பு, அறிவு எனுமெட்டுமாம்.

மேற் கூறிய அட்டமாமலர் கொண்டு சிவபூசையும் அகம் தூய்மை யாக்கும் பரசிவ வணக்கமும் (40) (சிவானந்தலஹரி சு 74) புரிந்தே ஆதரிக்கும் தெய்வம்.

அவனி - காட்சியுலகம், (புவன லோகம். காட்சியைக் கண்ட போதிலும். மயக்கமுறுது ஜீவன் முத்தனாக வாழுமுலகம்) இம்மாய உலகினில் யான் (சுவாமிகள்) முன்கூறிய அட்டமாமலர் கொண்டு பூசை செய்து, ஜீவன் முத்தனாக வாழ்ந்து உலகினில் கட்டுப்படாது சீவிப்பது போன்று, வினைமுதலாம் முதல்வன் உலகினிலியங்கியும் கட்டுப்படாதே அப்பால் நின்றியங்கியும் உலகுக்கு அருள் புரியும் தெய்வம்; இன்பத்தையும் துன்பத்தையும் வழங்குந் தெய்வம். மோட்ச வீட்டை யளிக்குந் தெய்வம் இலங்கை வாழ் தெய்வம்; சித்தத்துட் டித்திக்குந் தெய்வம். (4)

123. பொறியைந்தும் வென்றவர்பாற் பொருந்துகின்ற தெய்வம்
போக்குவர வில்லாமல் நிறைகின்ற தெய்வம்
அறிவொன்ற நினைப்பவர்பா லமர்ந்திருக்குந் தெய்வம்
அம்புவியில் மாமனுய் வழக்குரைத்த தெய்வம்
குறியொன்று மில்லாமற் கூத்தாடுந் தெய்வம்
குழந்தைவடி வேலவனைக் கொண்டாடுந் தெய்வம்
வெறிகமழுஞ் சோலைசூ ழிலங்கைவாழ் தெய்வம்
விருப்புவெறுப் பில்லாத தெய்வமிது தானே.

"அவன் செவி, கண், வாய், நாசி, மனது ஆகியவைகளைத் தனதாக்கிக் கொண்டு விஷயங்களை அனுபவிக்கிறான். (கீதை 15 - 9)

ஐம்புலன்களையுந் தன்னுளடக்கி அஞ்சு மடக்கா அறிவு (52) உடம்புள் விளங்கத் தேகம் தன்வயமாக (114) விளங்குந் தெய்வம் (முன் பாட்டு விளக்கந் தொடர்) ஜீவன் முத்தனாகவே, பிறத்தல் சாதலற்ற, நிறை வாழ்வளித்த தெய்வம் (என் தெய்வம்). அறிவு சொரூபமே மும்மௌனமாக விளங்கு மகம் நிட்டை கூடும் அகம்; சிவலிங்க வடிவாக விளங்கு மகம்: உள்ளத்தே அறிவே சொரூப மான தெய்வம்: சிவன் செயலின் உண்மை சொரூபம் (91); அறிவை அறிவினாலேதான் அறியலாம். சுட்டுப் பொருளாயுஞ் சிற்றறிவாலு மறியப்படாத பொருள்.

தனபதி எனுமொரு வைசியன் பிள்ளைப்பேறில்லாமையால் தன் தங்கை மகனை யெடுத்து வளர்த்தான். ஊர் மதுரை: தன் சொத்து முழுவதையும் தன் தங்கை மகனுக்கே கொடுத்து விட்ட பின் தவஞ் செய்ய வெளியேறினான். இதையறிந்த தாயத்தார் முழுப் பொருளையுமபகரித்தனர். தாயானவள் சோமசுந்தரக் கட வுள் முன் சென்று முறையிட்டாள். இறைவன் மாமன் தனபதி உருவமாக எழுந்தருளி வந்து தருமசபையில் வழக்குரைத்துப் பொருளை மீண்டும் மருமகனுக்குக் கொடுத்தார். (மாமனுக வழக் குரைத்த படலம் திருவிளையாடல் புராணம்)

குழந்தை வடிவேலன், முருகன் பார்வதியின் இளைய மகன் தாயுங் குழந்தையு மொன்று பட்ட உள்ளத்தை யுடையார்கள்; தாயின் இயல்புகொண்டே குழந்தை வடிவேலன் செயல் புரிவான், அம்மை பார்வதியுங் குழந்தை வடிவேலனு மொன்றுகவே விருப்பு வெறுப்பற்ற உள்ளத்தவராய் உலகத்தில் சித்திகள் விளங்குங் கூத்தியற்றுவர். வேண்டும் வரங்களை மாமனுக வழக்குரைத்தது போல் அன்பர்க்கு அருள் புரிவார்; குழந்தை வடிவேலன் அருளும் சித்திகள் மாமனுக வழக்குரைத்தது போன்று சித்தத்தில் தித்திக்கும்; தேனீக்கள் விரைந்து விரைந்து இன்பத் தேனை பருகிய வண்ணம் விளங்குஞ் சோலைகள் கொண்ட இலங்கையில் கூத்தியற்றும் கூத்தனுடைய சித்துக்களை விருப்பு வெறுப்பு இல்லாத பேரின்ப நிலையளிக்குந் தெய்வம். (5)

28. மாலை

124. வந்திப்பார் எப்பொழுதுந் தொடுக்கின்ற மாலை
வாசமொரு நாளுமே அருகாத மாலை
சிந்திப்பார் கையிலே இருக்குஞ் செபமாலை
தேவர்களும் மூவர்களும் அணிகின்ற மாலை
அந்திநிற மான அழகான மாலை
ஆரணமுந் தேடியின்னு மறியாத மாலை
கொந்தாருங் குழலுமையாள் சூடுகின்ற மாலை
கொள்ளமுடி யாத மாலையிதே மாலை.

"சித்த மௌனஞ் செயல் வாக்கு எல்லாம் மௌனம்
சுத்த மௌனம் என்பால் தோன்றின் பராபரமே"

தாயுமானவர் பராபரக்கண்ணி (276)

என்றும் நினைப்பினும் அப்பால் சித்தத்திலும் பின்னையினன்பு தாயின் உள்ளத்தில் உருவமோ நினைவோ ஒன்றுமில்லாத பொருளாக அமைந்திருப்பதே இறைவன் ரூபம். அறிவு சொரூபம்.

விளையாட்டுப் பொருட்களுடன் விளையாடும் பிள்ளை சில வினாடிகள் தாயை மறந்து கிடப்பது சகஜம். அதுபோல் ஆன்மாவும் தன் தாயாகிய இறைவனை சில வினாடிகள் உலகியல் சிற்றின்ப விளையாட்டில் ஈடுபட்டு மறந்து கிடக்கும். ஐம்புலன் கூடிய முப்பத்தைந்து கருவிகரணங்களால் (665) கொண்டுள்ள மாயை மலமாயையினால் மூடப்பட்டுக் கிடக்கு மான்மா தன் தாயாகிய இறைவனை மறந்துகிடக்கின்றது. மலமாயையாகிய போர்வையை நீக்கிவிட்டால் பிறதேசஞ் சென்ற தாயை அவள் திரும்பி வரும்பொழுது கண்ட பிள்ளை நினைந்து அணைவது போல், மலமாயையினின்று நீக்கம் பெற்ற ஆன்மா, மும்மௌனம் கொண்டுள்ள அகத்தே விளங்கும் ஆன்மா, தன் தாயாகிய இறைவன் பால் செல்லுகிறது.

வழித்துணை நின்று வழிகாட்டும் இறைவனைத் தியானிப்பதற்கு ஒவ்வொரு ரூபமமையும். மனத்தில் தோன்றும் ரூபம் மறைகளின் வடிவாக ஒவ்வோர் தியான மாலையாக விளங்கும். நற்சிந்தனை பல மாலைகளைக் கொண்டுள்ளது:

வணங்குவோர் ஓர் தியானமாலை தொடுத்து தரிசிப் பார், சுவாமிகள், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலியோர் தொடுத்து நமக்கருளிய மாலைகள் ஒரு போதும் அழதும் இன்ப உணர்ச்சியுங் குறையாது விளங்குவன. இறைவனை நினைந்து பாடும் போதும் தியானிக்கும் போதும் ஒரே தொடர்பான மாலைகொண்டே நாம் வணங்குகின்றோம். பஞ்சாட்சர செபம், சிவபூசை முதலியன ஓர் குறிப்பிட்ட முறையின்படி ஈற்றில் சிவன் செயலின் உண்மை ரூபத்தைக் காட்டி நிற்கும். ஞானி ஒருவனே அறிவு சொரூபமான அகம் விளங்க ஞானியாக விளங்குபவன். சும்மாவே இருந்து சுகமனு பவிப்பான். மற்றும் மூவரும் தேவரும் ஒவ்வோர் மாலைகொண்டே தியானிப்பார்கள்.

மணிவாசகர் தருவதைக் காண்க:

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழல் கிணைதுணை மலர்கொண்
டேற்றினின் றிருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டு நின் றிருவடி தொழுகோம்

மோட்ச வீட்டை அழிப்பதால் செந்தீவண்ணமுடையது- அந்தி நிறமான = அழகான மாலை, ஆரணம் = வேதம், ஆரணவாணர் = வேதியர். கொந்து = நெய்வோர்க்கதிர் வேதியர் தொடுக்கும் மாலை; எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனையிலு மோசை வடிவாக, இழைத்து ஒரே ரூபமாக உமையை, கொந்தாரும் குழ லுமையை வணங்குதற்குத் தொடுக்கப்பட்ட மாலை, உமையாளுக்கு அழகு கொடுக்கும் மாலை. தில்லைநடனங் காணுத வேதியராலும் தம் அறிவினுல் அறியவொண்ணு கொந்தாரும் குழலுமை மாலை, விலைபேசி வாங்க முடியாத மாலை. (1)

125. இடையிடையே பலபூக்கள் வைத்திசைத்த மாலை
எளிதாக எல்லார்க்குங் கிடைக்கின்ற மாலை
படைமன்னர் முதலானேர் சூடுகின்ற மாலை
பத்திநெறி நின்றேர்கள் கட்டிவைத்த மாலை
தடையின்றி நறுநாற்றந் தருகின்ற மாலை
சச்சிதா னந்தமெனும் பேருடைய மாலை
இடையீ டின்றியெங்கும் விளங்குகின்ற மாலை
இம்மாலை அணிவோர்க் கில்லை ஒருநரகும் மாலை

பாட்டு (120) தரும் மாலை (1) நில்லாத நீர்சடைமேல் (2 நெற்றிக்கண் (3) எல்லார்க்குந் தெய்வம் எனும் பல மலர்களைத் தொடுத்த மாலை; எல்லாரும் வேண்டிய யளவு இம்மாலைகளை எடுக்க

லாம்: அவை கொண்டு தோத்திரஞ் செய்யலாம், வணங்கலாம்; தன்னைத்தானே அறிந்து இறைவன் பாதமடைந்த படை மன்னர், மூப்புரங்களையுமெரித்த மன்னர், இராமர் போலும் மன்னர், சுந்தரர், ஞானசம்பந்தர், யோகசுவாமிகள் போலுந் தம் வினையைச் சுட்டெரித்த மன்னர் இழைத்திழைத்து தாமும் சூடி எமக்கு மளித்த நற்சிந்தனைபோன்ற மாலை, சுந்தரர் 'படைமன்னர்' கொண்டு தரும் மாலை. 'படையார் மழுவன் பால் வெண்நீற்றன்.'' (7-91-6) இலும் '' படையார் வெண்மழுவா பகலோன்பல் லுகுத்தவனே '' (7-26-3) பத்தி நெறி நின்ற நால்வரும் மற்றும் திருமூலர் முதலானோர் இசைத்து நமக்குதவிய ஏழு திருமுறைகள், திருவாசகம், திருமந்திரம் போன்ற மாலைகள்; அம்மாலைகள் நல்லருளே எமக் கென்னுங் கொடுக்கின்றன. எல்லா மாலைகளுமொருபொருளையே தருவது, சச்சிதானந்த சொரூபமான இறைவனையே தருவது; இழைத்த இடையாள் உமையாள் பங்கனையே தருவது; உருவில் திகழும் உமையாள் பங்கன் எனும் மாலை' '' அலகில் ஜோதியாக'' விளங்கும் மாலை: இம்மாலையை யுடையோரான ஞானிகள் யோகசுவாமிகள் சுந்தரர் போன்றவர்கள் சும்மா இருக்கும் நிலையையுணர்ந்தோர்கள்; மாலையினியில்லை அவர்க்கு. [2]

29 அத்தன் சேவடி அடைய இன்பமே

126. வாச மலரடி பேச வினியது
ஆசை விடுவிடு ஆரு மினையிலர்

பேசவினிய வாச மலரடியை சங்கரர் விளக்குவதைக் காண்க: 'தேவர்களால் ஈசுவரனுடைய நாம மந்திரங்களாகிய சிறந்த பலிகளால் சேவிக்கப்பட்டதும் ஓர்ப்பங்களை ஆபரணங்களாகக் கொண்டதுமாகிய உம்முடைய திருவடியெனும் பக்மநிதியை எவர்கள் மேலே கொண்டு வருகிறார்களோ அவர்கள் இவ்வுலகில் வாழ்க்கைப் பயனை எய்தியவர்கள்.''

இந்தப் பதவியை யடைவதற்கு ''ஆசையறு மின்கள் ஆசையறுமின்கள் ஈசனேடும் ஆசையறுமின்கள்'' என்று தாயுமானவர் கூறுவது போல் சுவாமிகளும் ஆசை 'விடுவிடு ஆரு மினையிலர்' என்கிறார். (1)

127. ஈச னினையடி ஏத்து மடியவர்
நாச மடைகிலர் நாடு திடமுடன்.

இறைவன் திருவடி சேவை புரிந்த உத்தமர்கள் ஒருபோதும் அழியாதவர்கள் திட்டமுடன் ஒப்புக்கொள்.

''உலகம் விரும்பும் முத்தியாகிற சிறந்த மூலிகைகளுக்கு எது வினைநிலமாயுள்ளதோ அந்தப் பரமேசுவரனுடைய திருவடிகளின் சேவையை நாடிப் பெறுவாயாக.'' சங்கரர் (2)

128. எந்த நேரமும் இறைவ னினையடி
சிந்தை செய்பவர் சீவன் முத்தரே.

(முன்பாட்டு விளக்கம் காண்க) திருச்சிற்றம்பலம் எனும் அறிவருட் பெரு வெளியில் இடையறாது நின்றாடியருளும் பேரின்பப் பெருங்கூத்தை சீவன் முத்தனாக இவ்வுலகினில் வாழ்ந்து என்றுங் கண்டும் ஆனந்தங் கொண்டாடும் மெய்யன்பர்கள் வேறென்ன வேண்டுவார்.

"அந்தரத்தே நின்றாடும் ஆனந்தக் கூத்தனுக்கென்
சிந்தை திறை கொடுத்துச் சேவிப்பது எந்நாளோ"

என்று தாயுமானவர் (11) அன்புநிலை (5) இல் பாடுகிறார். (3)

129 ஏறு வாம்பரி யேறுவா னெந்தை
கூறு வார்வினை கோடி தீருமே.

உம்மூடைய திருவடி சேவையை இடையறாது செய்து வரும் மெய்யன்பர்கள் நற்பரியாகிய பெருந்துறைப் பெருந்தோணி பற்றி இறைவன் பாதார விந்தத்தையடைவர். அவர்களைப் பற்றியிருக்குங் கோடாகோடி வினைகளும் தில்லைமாநகர்ச் சிற்றம்பல தரிசனம் அடைந்தவனைச் சேராவே:

சுற்றுவார் தொழுவார் சுடர் வண்ணன் மேல்
தேற்றினர் திரியும் புரம் மூன்றெய்தான்
பற்றினர் வினை தீர்க்கும் பழனனை
ஏற்றினை மறக்கேனெம் பிரானையே. (அப்பர் 5-35-9) (4)

130. நீறு பூசிய நிமல னடியினை
கூறு வார்தமைக் கூடி டாவினை.

அஞ்ஞான இருளைச் சுட்டெரித்தும் மோட்ச வீட்டைக் கொடுக்கும் வெண்மையானதுமாகிய நீற்றினைப் பூசியவனே நம்மிறைவன். அவன் மும்மலமு மற்றவன். முப்புரங்களையுஞ் சுட்டெரித்த நிமலன். அவனுடைய நாமங்களைப் பேசியும் புகழைப் பாடியும் இடையறாது தியானிப்பவர்தமை வினையாவு மணுகாதே: களவுபடாத அகமே அவருடையது. (5)

131. ஆறு சூடிய அழகன் சேவடிப்
பேறு பெற்றவர் பிறப்ப தில்லையே.

கங்காநதி இறைவனுடைய இருப்பிடமாகிய கயிலயங்கிரியினின்றுங் கீழே மாந்தர்க்கு அருள் புரியும் நோக்கமாக என்றுங் குறையாதே பாய்ந்தோடுகிறது. அவனுடைய சடாமுடியிலிருந்தே ஆறு ஓடுகிறது. மும்மௌனமே கொண்ட அகமுடையார் என்றும் 'சும்மா இருக்கும் சொரூபமே எம்பெருமானே' என்றழைப்பார்: 'சும்மா இருக்கும் சொரூபமே முருகா' என்றழைத்த வள்ளியின் இதயத்தே முருகன் நின்று அருள் கொடுத்தனன். 'முருகனே வள்ளியாக' செயல் புரிந்தான். தகைமை வாய்ந்தவர் ஜீவன் முத்தரே: ஆறு சூடிய அழகன் சேவடிப்பேறு பெற்றவர், அவர்க்குப் பிறப்பிறப்பில்லையே: (6)

132. சிறப்புஞ் செல்வமுந் தந்த சேவடி
மறப்பி லாதவர் மாள்வ தில்லையே.

உயர்ச்சியும் சிறப்பும் மதிப்பைக் கொடுக்குஞ் செல்வமுந் தந்த நின் திருவடி சேவையை மறப்பில்லாமல் இடை விடாதே செய்வதால் தொடர்ந்தே மோட்ச வீட்டையடைவதன்றி தளர்ச்சி யடையும் பாவ நெறியில் ஈடுபட எம்மிறை ஈகைநெகிழ விடான் திருவருளியல்பேயிது.

மாடு மக்கள் சிற்றிடையார் செம்பொன் ஆடை
வைத்தகன தன மேடை மாட கூடம்
வீடு மென்பால் தொடர்ச்சியோ இடைவிடாமல்
மிக்க கதி வீடன்றே விளங்கல் வேண்டும்.

(தாயுமானவர் 41 பெற்றவட்கே 9) (7)

133, வீடு சேர்வதில் விருப்ப முள்ளவர்
பாடு வார்தினம் பரமன் பாதமே.

(முன் பாட்டு விளக்கமும் தாயுமானவர் பாட்டும் காண்க) தொடர்ந்தே மோட்ச வீட்டையடைய வேண்டுமென்னும் ஆவலுள் ளோர் தடைகள் நேரினுந் தளராதே திடமுடன் அவன் பாதமே நண்ணி அவன் நாமத்தைச் செபித்தும் புகழைப் பாடியும் பூசை செய்தும் அவனடி சேர்வார்.

முத்தனே முதல்வா முக்கண முனிவா
மொட்டரு மலர் பறித்திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
சித்தனே செல்வத்திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித்தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே.

திருவாசகம் (அருட்பத்து 8) (8)

134. வேண்டு வார்வினை நீக்கு மாண்டவன்
நீண்ட சேவடி நினைக்க முத்தியே.

எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனைக்கும் ஒரை வடிவாகவும் ஒன்று சேர்ந்து நீக்கமற உள்ளத்தே ஜோதியாக விளங்கும் பார்வதியையும் இணை பிரியாதே இவற்றை இயக்கி அப்பாலாக நிற்கும். சொக்கநாதனையும் என்றும் மறவாத பேரின்ப உணர்வாய்ச் சிந்திப்பேன்: அம்மையே அப்பா வென்று அலறி விழுவேன் தேடி அலைவேன் 'சும்மா இருக்குஞ் சொரூபமே நீயே' என்று தேடுவேன் அவனை என் இதயத்தே நின்று செயல் புரிவான்.

பற்றற்ற இதயத்தே. மும்மெளனஞ் சாதிக்கும் இதயத்தே வினை நீக்கு மாண்டவன் அருள் புரிய மும்மலமும் வெந்துபோக, அவனே இதயத்தேநின்று செயல்புரிய(மூன் விளக்கம்)அவன் திருவடிசேரலாம்.

(9)

135. மாண்டு போனவர் என்பு மார்பினில்
பூண்ட அன்பனைப் போற்ற இன்பமே.

மண், பொன், பெண் எனும் மூவாசையும் மாண்டு போனவர் நெஞ்சினில், பேரன்பு கொள்ள, பூணுணூததோர் அன்பு கொள்ள எம்பிரானைத் தனிச் சரண் சரணமெனுங் காதலுடனே போற்றுதல் இன்பமே.

சினந்தனையற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைந்ததுமற்று நினையாமையுமற்று நிர்ச்சிந்தனைத்
தனந்தனி யேயிருந்து ஆனந்த நித்திரை தங்குகின்ற
வனந்தனில் என்றிருப்பேன் அத்தனே கயிலாயத்தனே.

[பட்டினத்தார் 9-3] (10)

136. பித்த னென்றவர் பிறவி நீக்கிய
அத்தன் சேவடி அடைய இன்பமே.

திருஞானசம்பந்தர் முன் ''பித்தா பிறை சூடி'' என்றும்

விண்ணோர் பெருமானே விகிர்தா விடையூர்தி
பெண்ணு ணலியாகும் 'பித்தா' பிறை சூடி (1-8-9)இலும்

சுந்தரர் பெருமானரை முன்னை ஆசிரியர் திருமொழி வழியே நின்று பாடுமாறு இறை கட்டளைப்படி பாடினர் பரகதியடைந்தார்; அவர் பாட்டு

பித்தா பிறை சூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை (7-1-1)

வள்ளியின் இதயத்தே முருகன் 'வேங்கை மரமாக' நின்றான் மாணிக்கவாசகர் 'உன்மத்தம்' பிடித்தவன் இறைவன் என்றுபாடுவார்.

இத்திருமொழிகள் கொண்டு முன் நாயன்மார் சேர்ந்தது போல் நாமும் அத்தன் சேவடி அடைவது இன்பமே என்கிறார் சுவாமிகள்(11)

பொழில்வாழும் பூங்குயிலே பொன்னெடுமா மணிமுத்தும்
ஒழியாமற் கரைசேர்க்கும் ஓங்குகடல் சூழிலங்கை
அளியாளன் எனையாளும் ஆண்டவன்றன் திருநாமம்
தெளிவாக நீயெனக்குத் தீங்குரலால் கூவாயே. 137.

மும்மெளனம் விளங்கும் உளம் அகம்; அகத்தே நிட்டைகூடும்; புருடன் ஜோதியில் தன்னைக் காண்பான், இந்த ஆத்மன் இதள் இதளாக விரியும் மலர்கள் போன்ற ஞான ஒளிகளை ஞானக் கண்

ணல் கண்டு இன்புறுவான். இவற்றிடையே சித்துக்களும் இயற்கை யாக அவன் காண்பான். (நால்வரும் மற்றும் நாயன்மாருடைய சரித்திரமும்) இவையே பூங்குயில் போன்ற புருடன், மனமாகிய அலைகடலில் ஜோதி நிலையிலிருந்து கரை சேர்க்கும் பொன்னும் மாமணி முத்தாம். ஞானசம்பந்தரும் (1-69-5) இல்

"பருவில் குறவர் புனத்திற் குவித்த பருமா மணி முத்தம்
அருவித்திரளோ டிழியுஞ் சார வண்ணமலையாரே"

என்று பாடுகிறார்; இலங்கையில் அருள் கொடுக்கும் பெருமானர் திருநாமத்தை, அவனுடைய சோலை இணலில் வாழும் பூங்குயிலே, பொன்னெடு மாமணி முத்தம் உம்முடைய மனமாகிய அலை கடலில் கரை சேர்க்கும் அளியாளன் பூங்குயிலே, அவனுடயை திருநாமத்தை உம்முடைய இனிய குரலாலே தெளிவாக கூவி அறியப் படுத்தாயோ. சங்குநாதத்துக்கு ஒப்பிடலாம். (99)

30 பாலர் போலவே பாரில் வாழ்வரே

138. மத்த மாமலர் வைத்த வள்ளலை
நித்தம் போற்றுவார் நீடுவாழ்வரே

ஊமத்தம்பூ மிகவும் குளிர்ச்சியுடையது. தலையில் அணிந் திருப்போர்க்கு, ஊமத்தம் பித்தைக் கொடுப்பது. தமிழ் மாமறை, 'சிவசிவ' என்னும் ஒரு சொல், இயற்கையின் வடிவான அம்மை அப் பரை உணர்த்துஞ் சொல், பர சிவ வணக்கத்துக்கு உரிய ஒரு சொல், எண்ணில் பல கோடி உயிர்கள் எத்தனையோ அத்தனைக்கும் ஓசை யாக இயங்கும் அம்மையும், விநாயகனென்னும் அப்பலத்தே விநா முதலாம் முதல்வனுக எப்பொருளிலும் வியாபியாக நீக்கமற நின்று, அவற்றுல் கட்டுப்படாதே, அப்பால் பட்டவனுக இயங்கியும் அருள் புரியும் சொக்கநாதனையும், அம்மையையும் அப்பரையும் ஒன்றுக 'சிவசிவ' என்னும் ஒரு சொல்லால் வணங்குவோம்.

எங்கும் சிவன் செயல், எல்லாஞ் சிவன் செயல், செயலில் வித்தியாசங் காட்டாத சிவானந்த வெள்ளம்; ஆட்டு வித்தால் ஆரொருவர் ஆடாதாரோ; விநாயகமூதலாம் முதல்வன் ஆட்டுவிக் கிற எஜமான்! கொலையும், அன்னதானமும் ஒரே சிவன் செயல் ரூபம்; பேதமில்லை. மாணிக்கவாசகர்; பேதமில்லாததோர் கற்பனித்த பெருந் துறைப் பெரு வெள்ளமே 'என்று கழுக்குன்றப்' பதிகத்தில் தருகிறார்; இந்தப் பேதமேது மில்லாத சிவன் செயல் ரூபமே உண்மை சிவசிவ ரூபம் கூலவடிவாக விளங்கும் அம்மையப்பர் தரும் சிவ சிவ என்னும் ரூபம்; 'பரசிவ' வணக்கம் பிறவியின் பயனையளிக்க அருள் தரும் ரூபம் ஊமத்தம் பித்துப் பிடித்தவர், பித்தின் இயல்பாக, வள்ளி வேங்கை மரமாக நின்ற தன்மை யொத்துத், திடமுடன் பிணக்கிலாத எம்பிரானை இடைவிடாது நித்தம் போற்றுவார், அவர் பிறப்பிறப்பின்றியே, ஒளி போய் ஒளியில் ஒடுங்கிட, நீடு வாழ்வார். (1)

139. மனத்தில் வஞ்சகம் வைத்த பாவிகள்
இனத்தைச் சேர்ந்திடில் ஈனம் ஈனமே.

சிவன் செயலின் உண்மையினை விளக்காதும் மண், பொன், பெண் எனு மூவாசையினலுந் தூண்டப்பட்டு தனக்கென்று ஒரு கருத்துடனும், பிறருக்கு மாருன வேறு கருத்துடனும் ''சிவன் செயல்'' ரூபத்துக்குப் பேதமளிக்கும்; (138) வஞ்சகம் வைத்த இனத்தை சேர்ந்திடில் பாவச்செயலேயே செய்வர். (2)

140. இளமை இன்பத்தில் இச்சை வைத்திடில்
எழுமையுந் துன்பம் எய்து மெய்துமே.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது முன் எழுந்தது நஞ்சு; பாற்கடலாவது உலகியல் வாழ்க்கை. முதல் எழுந்தது சிற்றின்பமாகிய நஞ்சு. சிற்றின்ப மனுபவிக்கும் பாவிகள் (139) நஞ்சையுண்டு மோட்ச வீட்டை யடையாது பிறப்பிறப்பென்னும் படுகுழியில் வீழ்வார். உணவை இறைவனுக் கென்றே அமைத்து அவனுக்குப் படைத்து அப்பிரசாதத்தை உண்பவன் பாபத்தினின்றும் நீங்குகிருன். நிஷ்காமிய கர்மம் புரிபவன் இருவினையின் பயனு மற்று யோகியாகிருன். இறைவன் நஞ்சை எடுத்துண்டு கண்டத்தில் வைத்து தேவர்களைப் பாதுகாத்தார். இதையே நிஷ்காமிய கர்மம் புரியும் தேவர்களான யோகிகள் செய்து சிற்றின்பத்தையுண்ணுது, ''சிவன் செயல்'' எனும் பேதமில்லதோர் ஞான உணர்வு ததும்பும் பேரின்ப வாழ்வில் ஈடுபடுவர். பாற்கடலைக் கடைந்த போது பின் எழுந்தது இந்த அறிவாளர், ஞானிகள் கண்டு புசிக்கும் தேவாமிர்தமான பேரின்ப உணர்வே: முன் எழுந்த சிற்றின்ப நஞ்சில் இச்சை வைத்து சிற்றின்பத்தை யனுபவித்தால் என்றென்றும் துன்பத்தைத் தரும் பிறவிக் கடலில் மாண்டு கிடப்பர். (3)

141. சூல பாணியைத் துதிக்கு மன்பரைக்
காலன் கண்டிடிற் கலங்கி யோடுமே.

சிவபெருமானை துங்கமழு மானுடையாய் சூலப்படை யுடையாய் என்று வணங்குவர். மான் எனும் ஆன்மாக்களை மூடியிருக்கும் மும் மலத்தை, உலகியல் வாழ்க்கையில் குத்தி மலத்தை நீக்குந் தன்மையைக் குறிப்பதும் சிற்றின்பமாகிய நஞ்சைக் குத்தி பேரின்ப ஞான உணர்வு அளிக்கும் (140) சூல பாணியைத் துதிக்கும் மெய்யன்பர்கள் இடைவிடாது பஞ்சாட்சர மோதியும் சிவபூசை செய்தும் ஈறில் என்றுமழியாப் பேரின்ப உணர்ச்சி ததும்பும் வாழ்க்கையில் ஈடுபடுவர். சிவபதம் அடைவார்கள். மார்க்கண்டேயனைப் போல் யமனுக்கு அஞ்சார்கள். பிறவிக் கடலுக்கு அப்பாற்பட்டவர் ஆவர்.

''மார்க்கண்டர்க்காக மறலிபட்ட பாட்டை யுன்னிப்
பார்க்கின் அன்பர்க்கென்ன பயங்காண் பராபரமே''
தாயுமானவர் பராபரக்கண்ணி (128) (4)

142. அம்மை யப்பனை ஆர்வ மாய்த்தொழ
இம்மை நற்பயன் எய்துந் திண்ணமே,

எண்ணில் பலகோடி உயிர்கள் அத்தனைக்கும் அருட்கண்ணுக விளங்கும். (34) அம்மை அப்பனை; ''பேத மில்லாத சிவன் செயல்'' உண்மை வடிவினை (137) களை ரூபமாக ''ஓர்ந்தனன் ஓர்ந்தனன்''

என்னு மார்வத்துடன் வணங்கினால் நிச்சயம் மும்மலனமெய்துவர் "முக்கட் கருணைப் பிரானைத் தரிசிப்பர்" இம்மை நற்பயன் பிறவியின் பயன், எய்துவார் திண்ணமே பிறப்பிலியாவர். (5)

143. வேள்படச் செய்த விமல னைத்தொழ
ஊழ்வி னைப்பயன் ஒன்று மில்லையே.

உணவைத் தனக்கெனச் சமைப்போர் பாபிகள், இறைவனுக்கென்றே சமைத்து இறைவனுக்குப் படைத்தும் பசித்தோர்க்குப் பகிர்ந்து கொடுத்தும் யாகஞ் செய்தும் யாகத்தில் எஞ்சியதை உண்போன் யோகி (111) அவனைப் பாபங்கள் விட்டு நீங்கும். அவன் வாழ்வில் விமலன்; சூலபாணியாக மும்மலத்தையுங் குத்திக் குத்தி முப்புரமும் வேகச் செய்வான். முப்புரமாவது மும்மல காரியம் (71); ஊழ்வினைப் பயன் ஒன்றுமில்லையே. (6)

144 கொச்சை மக்களைக் கூடும் மூடர்கள்
அச்சத் தால்மனம் அலைவர் திண்ணமே.

கொச்சையர் - இளையார், சிறப்பற்றவர்.

மனத்தில் வஞ்சகம் வைத்து வாழும் (139) பாபிகள் இன்பத்தில் இச்சைவைக்கும் மூடர்கள் (149) இவர்கள் ஒருவர்க்கொருவர் துன்பமியற்றுந் தன்மையினால் நித்தம் அச்சம் கோபம பொறுமை எனும் நீங்குகளினால் பீடிக்கப்பட்டலைவர் திண்ணம். (7)

145, தனக்குத் தானிக ரான சங்கரன்
துணைப்ப தத்தினைத் துதிக்க இன்பமே.

வள்ளி முருகனைத் துதித்தாள்; முருகனே வள்ளியாக நின்று செயல் புரிந்தான். முருகனும் வள்ளியும் துணைப் பதவிகள். பிழைத்த பிடியைக் காணு தோடிப் பெருங்கை மத வேழம் அழைத்துத் திரிந்தங் குறங்கும் என்கிறார் ஞானசம்பந்தர். ஆண் யானையும் பெண் யானையும் போல் உறங்கும் சாரல் அண்ணாமலையார். மெய்யன்பர்கள் இறைவனைத் தோழனாகவும், புருஷனாகவும், தோழியாகவும் கண்டே தம்முள்ளத்திலிருக்கு மாத்மனை, புறத்தே காணும் எம் பிரானுடன் ஒன்றுபடக் காண்பார். அதுவே அன்புநிலை. அகில ஜோதி அம்பலவாணனுக்கு அப்பால் வேறொன்று மில்லாதிருக்க அவனுக்கு நிகராவார் யார்? ஒன்றுமில்லை இத்துணைப் பதத்தினைத் துதிக்கும் நிலையை அப்பர் சுவாமிகள் (4 — 3 பதிகத்தில்)

காதன் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன,
கோழி பேடையோடுங் கூடிக் குளிர்ந்து வருவன,
வரிக்குயில் பேடையோடாடி வைகி வருவன,
கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்
பேடைமயிலோடுங் கூடிப்பிணைந்துவருவன கண்டேன்.

பிறையிளங்கண்ணியினானைப் பெய்வளையாளொடும் பாடித்
துறையிளம் பன்மலர் தூவித் தோளுக்குளிரத் தொழுவேன்
அறையிளம் பூங்குயிலாலும் ஐயாறடைகின்ற போது
சிறையிளம் பேடையோ டாடிச் சேவல் வருவன கண்டேன்.

என்று பலவாறும் கூறுகிறார்;

உரை தருகையில் முத்து மாணிக்கவாசக முதலியார் பிடியுங் களிறும் சத்தியும் சிவமுமாகக் கண்டதால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதனவற்றைக் கண்டேன் என்கிறார். (8)

146. நீல கண்டனை நினையு மன்பர்கள்
ஞாலம் மெச்சவே நாளும் வாழ்வரே.

பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடையவே எழுந்த நஞ்சைக் கண்டத்தில் வைத்திருக்கும் இறைவன் நீலகண்டன் ''அவனை நினையு மன்பர்கள் (140) பாபத்தினின்றும் நீங்குவர். இருவினைக் கப்பால் பட்டவர்'' அவனுடைய பாதார விந்தத்தை யடைந்து பேரின்பக் கடலில் என்று மழியாத இன்பக்கடலில் வாழ்வார் ஞாலம் அவரை என்றைக்கும் புகழ்ந்து பாடும். (9)

147. கோல மாமலர் கொண்டு போற்றுவார்
பாலர் போலவே பாரில் வாழ்வரே.

குழந்தையுந் தாயு மன்பு திகழ ஒரு இயல்பினராகவே வாழ்வார். குழந்தை அழுதால் ஏன் அழுகிறது என்பது தாய்க்குத் தெரியும். இளமுருகனும் பார்வதியும் அத்தகைய அன்பு கொண்டவர்கள். அன்பன் முருகனைப்போல், வஞ்சகமற்று (139), இளமை இன்பமாகிய சிற்றின்பத்தை நாடாது (148) பாடித் துதித்து (141) தனக்குத் தான் நிகரில்லாத சங்கரன் துணைப்பதத்தினை துதிக்க (145) வரும் நிலையில் நீல கண்டனைத் துதிக்க, முன்கூறிய மலர் போன்றும் பாக்களையோ புகழ் மாலைகளையோ கொண்டு போற்றித் தொழு மன்பர் பாலராகவே வாழ்வார். (10)

31 உய்ய வழி காட்டுவாய்

148. தெய்வமே யானெனதி னுஞ்செருக் கால்மன
தீயவழி செல்லு தையோ
செய்வதொன் றறிகிலேன் தேவாதி தேவனே
திருவருட் பார்வை சாத்தி
உய்யவழி காட்டுவாய் உன்னையல் லாதுதுணை
யுலகத்தில் எவருமுண்டோ
வையகம் புகழ்நல்லை வாழும்வடி வேலனே
மயிலேறு தம்பிரானே.

வையகம் புகழ் நல்லை வாழ் வடிவேலனே மயிலேறு தம்பிரானே! வேலினுல் குத்திக் குத்தி மும்மலப் பிணிப்பையும் அகற்றும் வாழ்க்கையில், மயிலாடுவது போல் அழகுடன் வாழ்க்கைப் பயனெய்தும் அன்பர் தொழவே, காட்சியளிக்கும் வேல் முருகனே என்னுள்

னத்தே விளங்கும் தெய்வமே (145) யான் எனது எனும் செருக்கு என்னை மயக்கித் தீய வழிகாட்டி வைக்குதே. சிவ வழிபாடு முதலிய நற்றவங்களைச் செய்வோம். வேண்டாத வீண் செயல்களில் விரைந்து செல்கின்றதையோ; என்செய்வதென்றறிகிலேன். தேவர்களுக்குத் தேவனும் அருள் புரிபவனே அங்ஙனம் அந்த மனம் செல்லாது ஒவ் வொரு வினாடியும் நம்மை ஆண்டுகொண்டருள எழுந்தருளி உம்மு டைய அருட் கண்ணால் நோக்காயோ! நோக்கியே உன்னை நித்தமும் வணங்க மோன குருவே எழுத்தருளி நிட்டைகூடியே உன்னைத் தரி சிக்க அருள் தாராயோ! உன்னையல்லாது உலகத்தில் வேறு துணை யுண்டோ.

32. என்பின் வா மனமே

149 அன்பு சிவமென் றருளாளர் சொன்னமொழி
என்புருகச் செய்யுமன்றே என்பின் வாமனமே!

தலைவன் மெய்யன்பர்கட்கு அன்பாகக் காணப்படும் மெய்ப் பொருளானவன், பேரின்ப மவுன அருட்குருவா யெழுந்தருளிய நாதன். அவன் தன் தாமரை மலர்போலும் அருட் பாதங்களைச் சூட்டியருளினால் என்பெலாம் தன்வயமாகவே யுருகி மெய்யன்புடன் முழுமுதலாம் முதல்வனின் பாதார விந்தத்தில் மனம் நிலை பெற்று நிற்கும்: திருமூலர் இவற்றைத் தருகிறார்.

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே

மேலும் தாயுமானவர் மெய்யன்பர்கட்கு அன்பானவன் மோனன் தன் திருவடியன்பினால் அலையும் மனத்தை யடக்கி திருவடியில் நிலை பெற்றிருக்கும் உண்மையைத் தருகிறார்.

அன்பருக்கன்பான மெய்யன் — ஐயன்
ஆனந்த மோனன் அருட்குருநாதன்
என்பாதஞ் சென்னியில் வைத்தான் — என்னைத்
தானறிந் தென்மனந் தானிறந்தேனே. (1)

150. மண்புகுந்த மாலும் மலரோனுங் காணரிய
எண்குணத்தான் பொன்னடியை ஏத்தலன்பின்
வாமனமே!

ஈசுவரன் குணங்கள்:- தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங் களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை எனுமெட்டுமாம்,

எண்குணத்தான் பொன்னடி, மோட்ச வீட்டையளிக்கும் திருவடிசேவை; சிவபூசை, பஞ்சாட்சரமோதுதல் முதலியன செய்ய என் பின் வா மனமே, இயல்பாகவே பாசங்களினீங்கு மியல்புடைய

சுவரன் பேரருளினால், அவன் பாதாரவிந்தத்தை யடையலாம். செல்வச்செருக்குக்கும் கல்விச்செருக்குக்கும் எட்டாதது பரம் பொருள் என்பதை விளக்குவது லக்ஷ்மிநாயகனை விஷ்ணுவும சரஸ்வதி நாயகனை பிரம்மாவும் கூட அடியும் முடியும் காணுமல் அலைந்தே செருக்குடன் புறத்தே அலையாது பற்றற்று தூயவுடம்பினனாய் தன் வயத்தனனுகவே ஒடுங்கும் அகத்தே திருவடிசேவை செய்ய அவனைக் கண்டு பேரானந்தமடையலாம்.

சிவானந்தலஹரி - சு 23: எங்கும் நிறைந்தவரே உம்முடைய பூஜையை செய்கிறேன், உடனே பிரசன்னராகி எனக்கு பேரின்பத்தை அளிப்பவராக நீர் ஆக வேண்டும். பிரம்மாவின் பதவியையோ விஷ்ணுவின் பதவியையோ அந்தப் பூஜையின் பயன் என்று நீர் அளிட்பீரேயானுல் மீண்டும் உம்மை தரிசிப்பதற்கு ஆகாயத்திலும் பூமியிலும் ஹப்ஸப் பறவை வடிவையும் வராக வடிவையும் எடுத்துக்கொண்டு அலைந்து காணுமல் அதனுல ஏற்படும் துன்பத்தை எவ்வாறு இங்கே சகிப்பேன், மங்களத்தைச் செய்பவரே, எங்கும் நிறைந்தவரே! (மொழிபெயர்ப்பு) (2)

151. கண்ணிறைந்த செல்வத்தைக் கங்குல்பகல் காணுமல்
உண்ணிறைந்தபேரன்பால்ஓதவென்பின் வாமனமே!

மண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனைக்கும் அருட்கண்ணே மோட்ச வீட்டின் பேரின்பச் செல்வமே! மூப்பத்தைந்து கருவி சரணங்களும் ஒடுங்கவே (66) கங்குல் பகல் காணுத அந்த ஜோதியில் நான் பேரின்பக் கடலில் ஆழ்ந்து கிடக்க என்பின் வா மனமே.

தாயுமானவர் கண்பேனே என் கண்ணி 29,

"கண்ணிறைந்த மோனக் கருத்தே ஏன் கண்ணே என்
உள் நிறைந்த மாயை ஒழிந்திடவும் காண்பேனே" (3)

152 பொன்போலும் மேனியனைப் பூரணனைப் புண்ணியனை
என்போல நின்ருனை ஏத்தவென்பின் வாமனமே.

பொன்போலும் மேனியன், பொன்னம்பல வாணன் என்பன மோட்ச வீடு, பொன்னை ஒத்தது என்பதே. நிறைகுடமாக விளங்கும் நிலையே பூரணன். நிறைகுடம் மேலே தண்ணீர் கொள்ளாது, அது போல் பூரணன் எனும் நிலை. (சுவாமிகள்) நானும் அந்தப் பூரணமாம் ஜோதியில் கலந்து பின் புவனியில் ஜீவன் முத்தனுக வாழும் நிலையில் அவனைப் பூசித்துத் தொழ என் பின் வா மனமே என்கிருர்: (4)

153. தன்னெப்பா ரில்லாத தத்துவனைத் தண்ணருளைச்
சுண்ணவெண் ணீற்ருனைத் தொழவென்பின்
வா மனமே!

சொற்றெருகுதிக ளெல்லாங் கடந்து நின்ற பேரின்ப வடிவான பெருஞ் சுடரே! தத்துவங்களெல்லாந் தன்னுடைங்க பூரணமாந்

தத்துவாதீதனுக விளங்குபவனே, அஞ்ஞான இருளை நிக்கித் தூயோன் எனக் காட்டும் நீறு பூசிய பொன் மேனி பொலிந்து தோன்ற தாய் போல் தண்ணருளை நிறைய வைத்து எளியேனைக் காப்பாற்றும் பூரணனே, தொழ என்பின் வா மனமே. (5)

154. ஒன்றுய் இரண்டாய் ஒரு மூன்றுய் நின்றுனை
என்றுயாய் நின்றுனை ஏத்தவென்பின் வாமனமே!

விஷ்ணுவுக்கு முன் ஜோதிப்பிளம்பாய் ஒன்றுய் நின்றவன், தத்துவாதீதனுய் ஒன்றுய் நின்ற நிலை உயிரில் பொருள் உயிருள் பொருள் அத்தனையிலும் அதன் ஓசைவடிவாகப் பார்வதியாகவும் அவற்றை அப்பால் பட்டவனுக நின்றியக்குஞ் சொக்கநாதனுமாகவும் இரண்டாயும்; அம்மையாக விளங்குஞ் சந்திரன் ஓர் கண்ணும், சொக்கநாதனுகத் தன்னொளி கொண்டு விளங்கும் சூரியன் எனு மொரு கண்ணும், மற்று ஞானக்கண்ணுகிய நெற்றிக் கண்ணும் கூடியேகாணப்படும் முக்கண்ணன், திரிலோசனன், ஒரு மூன்றுய் நின்றவன் இவ்வண்ணத்தனை, தாய் போல் தண்ணருள் கொண்டு காப்பானை. தொழ என்பின் வா மனமே. (6)

155. உணர்ந்தார்க் குணர்வரிய ஓங்கார மெய்ப்பொருளைக்
கணந்தான் மறவாமல் கைதொழவா என்மனமே!

சும்மா இருக்கும் சொரூபமே நீயே குருநாதனே என்றழைத்த சுவாமிகள் உள்ளத்தே அருட்கண் கொண்டு துணைபுரியுமிறைவன் சர்வ தத்துவாதிபதியான ஓங்கார மெய்ப்பொருளாய் நின்றருளி னன் (138) அவனை ஒரு கணமேனும் மறவாமல் தொழ என்பின் வாமனமே;

நிட்டையில் நிற்போர் (138) இறையுணர்வன்றி வேறெவ் வுணர்வுமற்றுத் தம்மையும் மறந்து தாம் அதுவாய் நிற்றலான் பின்னும் தம் வயத்தனுகவே மறவாதே அவனையே புணர்ந்து நிற் கும் என்று மாணிக்கவாசகர் திருக்கோவையார் 9 ல் கூறு கிறார் 'உணர்ந்தார்க் குணர்வரியோன் நில்லேச்சிற்றம்பலத்தொருத் தன் குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச் செவ்வாயிக் கொடி யிடைதோள் புணர்ந்தாற் புணருந்தோறும் பெரும் போகம் பின்னும் புதிதாய் மணந்தாழ்புரிகுழலாளல்குல் போல வளர்கின்றதே,'' (7)

156. சித்தத்துள் தித்திக்குந் தெள்ளமுதைத் தெய்வத்தை
எத்திக்கும் போற்றுதற்கு என்பின்னே வாமனமே!

அடியேன் உள்ளத்தே ஊறிறெடுத்து பேரின்பங் கொடுத்துக் கொண்டிருக்கும் அழியாத இன்பம் போன்ற எம்பெருமானே, எல்லாத் திசைகளிலும் எப்பொருளிலும் நீக்கமற நிறைந்து நிற்பவனே, நம் முள்ளத்தே உண்மை 'சிவ சிவ' ரூபமாகவே கண்டு (138) கும்பிட என்பின் வா என்மனமே (8)

157. முத்திக்கு வித்தான மூவா முழுமுதலைப்
பத்திக்க என்பின்னே பறந்துவா என்மனமே!

திருவடிப் பேற்றினுக்கு வாயிலாகிய நிட்டை தில்லைச் சிற்றம் பலவாணனை இத்திக்கும் தெள்ளமுதை மறவாதே என்றுந் தொழு தேத்த என்பின் வா மனமே. (9)

158. சத்தி சிவமாகித் தன்னிலையிற் பிரியாத
வித்தகனைப் போற்றுதற்கு விரைந்தென்பின்
வாமனமே !

நிட்டை கூடியே தில்லைச் சிற்றம்பலவாணனைத் தரிசித்து என்றும் மறவாத அவனையே கண்டு உண்மை 'சிவ சிவ' ரூபமாகக் கண்டு (138) அழியா இன்பம் பெருக்கும் வித்தகனைக் கூத்தியற்றுவானை கண்டு வணங்க என்பின் வா மனமே (10)

33. போற்றி போற்றி சிவ சிவ போற்றி

159 அந்தமும் ஆதியும் அகன்றோன் வருக
செந்தண்மை பூண்ட செல்வன் வருக
பந்தமும் வீடும் படைப்போன் வருக
எந்தமை யாளும் இறைவன் வருக
கற்பனை கடந்த கடவுள் வருக
சொற்பதங் கடந்த தொல்லோன் வருக
பாரொடு விண்ணுயப் பரந்தோன் வருக
சீரொடு பொலியுஞ் சிவனவன் வருக
சிந்தா மணியென் தேவன் வருக
நந்தா விளக்கே நலஞ்சுடர் வருக
நீற்றொடு பொலியும் நிமலன் வருக
ஆற்றொடு தோற்றும் அமலன் வருக
அற்புதன் வருக அநேகன் வருக
பொற்புட னடஞ்செய் புனிதன் வருக
விற்பொலி நுதலாள் விமலன் வருக (தொடரும்)(15)

தில்லைச்சிற்றம்பல தரிசனங் கண்டு சிவன் மூத்தனுகவே சிவித்து ஈற்றில் மகாசமாதியில் மனம் கரைய மிதியாயிருக்கும் ஒளி பிறப்பெடுக்காதே பரமாத்மனுன பேரொளியில் ஒடுங்கும்.

வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறுந்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே.

திருமூலர் திருமந்திரம் (168)

தாய் போல் தண்ணளி கொண்டு காப்பாற்றி மேற்சொன்ன பதவியை யடையச் செய்யும் செல்வன் வருக; அவரவர் விணைப்பயனுக்குத் தகுந்தவாறே பிறப்பிறப்பைக் கொடும்பவன்; மாடு மக்கள் சிற்றிடையா ரெனும் பந்தமும், மாறுக வேண்டுவோர்க்கு செந்தண்மை விளங்கும் பேரின்பப் பேறுன திருவடிச் சேவையும் என்றுமழியா மோட்ச வீடும், எங்களையாண்டே யருள் புரிபவன்; வருக; நம விஞ்ஞானமும் அதன் மூலம் கண்டுணரும் பொருள்களும் மிகவும் சொற்பனே. அப்பாலாகவே நம் துயரத்துக்கும் சந்தோஷத்

துக்கும் வழியாக நிற்கும் பல பொருட்களுக்குக் காரணமான ஓர் பொருளுண்டு; விஞ்ஞான உலகம் நிலவுலகம். நிலையற்ற உருவந் தரும் பொருட்களாலானவை. கனவுப் பொருள் போன்றது; எப் பொருளையும் சல ஆகாசம் பிருதிவி ஆகாசம் எனும் ஆகாசமாக (Electro Magnetic field) என்று ஆங்கிலத்திலும் கூறுவர்; ஆக கொண் டதே நிலவுலகம். இந்த நுண் வெளியாய் விளங்குவது அறிவில் வெளி. விஞ்ஞானி தம் அறிவுடைப் பரவெளியில் தான் இவற்றை யறிகி றான்: அறிவுடைப் பரவெளி சிலருக்கு பரந்து விளங்கியும் சிலருக்கு மிகவும் குறைந்தும் நிற்பதன் காரணம் திருவருள். வினைமுதலாம் முதல்வன் 'அருவாம் அப்பலத்தே' அறிவினால் பரவெளியில் காணப் படுபவன். கற்பனை கடந்த கடவுள்.

விஞ்ஞானி எவ்விதம் தன் மனதை புறத்தே அலைய விடாதே தன்னுள் அடக்கி, புலன்கள் மனம் புத்தி எல்லாம் ஒன்றுகவே, ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றானே அவ்வாறே மெய்யன்பர்கள் முப்பத் தைந்து கருவிகரணங்களையும் தன்னுளடக்கி, திருவருள் முன்னிட்டு தம் அறிவுப் பெருவெளியில் தம்மையும் உலகினையும் ஒன்றாக தில் லைச் சிற்றம்பலமாக காண்கிறார்கள் (86). அறிவுப் பெருவெளியுண்மை யினை தில்லைவாழந்தணர் தருகிறார் காண்க (12 தில்லை அந்தணர் 2)

கற்பனை கடந்த ஜோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பரவியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துணின்று
பொற்புடனாடுஞ் செய்கினற பூங்கழல் போற்றி போற்றி"

மாயா காரிய வெளியில் (Magnetic field இல்) நாம் காணும் காட்சியை மாயாகாரியப் பொருள் மனங் கண்டு, தம் சொற்களால் அவற்றை அறிவிக்கும். அப்பால் அறிவுப் பரவெளியாகிய நிட்டை யில் காணும் தில்லைத்தரிசனத்தை அறிவினால் கண்டு தரிசிப்பதே யன்றி மனத்தினால் நினைந்தும் சொற்களால் அவற்றை விளக்கவும் அப்பால் பட்டது. பாரில் மனத்தினால் காணப்படும் நிலவுலகப் பொருளாகவும் விண்ணுலகில் கனவடிவாகவும் பரந்து விளங்கும் பொருள்: ஒவ்வொரு பொருளிலும் அவனில்லாத பகுதி நுண்ணிய தாகவு மில்லாததே. அவன் எப்பொருளிலுஞ் சீரோடு பொலிந்து வியாபியாக விளங்குகின்றான்; மணிபோன்றவன்; வழி நின்றும் ஈற் றில் பெருஞ்சுடர் போன்றும், தம்மறிவுப் பெருவெளியில் காட்சி யளிப்பவன். உண்மை 'சிவன் செயல்' என்பதைவிளக்கவே 'சிவசிவ' (138) எனும் பதவி விளங்க தூய்மையான நீறு பூசிய பொன் மேனியுடையன்; தில்லைத் தரிசனங் கண்டு பின் தத்துவாதீதனாய் சிவன் முத்தனை, விற்பொலி நுதலாள் விமலனைத் தன்னுள் தரி சித்து என்றும் மறவாதே வாழ அருள் புரிபவன். விற்பொலி நுத லாள் = வினைமுதலாம் முதல்வன்; படைப்பு (380) எனும் அம்பை எய்ய அதனுடைய ஒலி ஓசையே அம்மை.

"தொடர்" சொற்றுணை வேதியன்
பொற்றா ளிணைகள் பொலிந்து வாழ்க
கற்றா ரேத்துங் கழலடி வாழ்க
மற்றா ரறியா மலர்ப்பதம் வாழ்க
அற்றார்க் குதவும் அருட்பதம் வாழ்க

தன்னே ரில்லாத் தாளிணை வாழ்க
என்போல் வந்த இணையடி வாழ்க
கண்போற் காக்குங் கழலடி வாழ்க
விண்போல் விளங்கும் மெய்யடி வாழ்க
பெண்பா லுகந்த பித்தன் வாழ்க
மண்மேல் மலரடி வைத்தோன் வாழ்க
தற்பரன் வாழ்க சதாசிவன் வாழ்க
சிற்பரன் வாழ்க சின்மயன் வாழ்க
முழுதுமாய் நின்ற முதல்வன் போற்றி (தொடரும்)

சொல்வடிவானவள் அம்பிகை; சொல் எவ்வாறு பொருளை யறிவிக்குமோ அவ்வாறே ஒசை வடிவாக எப்பொருளிலும் விளங்கும் அம்பிகை அவற்றை இயக்கும் இறைவனை, வினைமுதலாம் முதல் வனை, அறிவுப்பெருவெளியில் அறிவிப்பவள் நிழலைக் காண்கின் றோம், இறைவனை யறிவினுலறிய வேண்டும். சொற்றுணை வேதியன்; வேதமுனுமம்பிகையும் உன்று பாதமும் ஆடிய பாதமுமாக இணை யடிகளாக விளங்குவன; தில்லைத்தரிசனமாய் விளங்கும் மலர்ப்பதம் மற்றோரறியாதது; காணுத அற்றோர்க்கு அருட்பதம், தத்துவங்க ளெல்லாம் தன்னுளடங்கக் காணப்படுவது; உலகினுக்கருள் காட்டும் வண்ணம் நிற்கும் பதம்; பாவசமாதியில் நிற்பவன் கீளே உலகிற்கு அருள்காட்டும் மேனி தாங்கியும், ஜோதியில் தில்லைத்தரிசனங் கண் டும் விளங்குபவன்; தன்னேரில்லாதவன்; (சுவாமிகள்) மேற் கூறிய வாறு உலகினுக்குச் சேவை புரிந்தவர்; கனே ரூபமாக உலகியல்பைக் கண்டு தரிசிக்கும் மெய்யன்பர் உலகினில் தழைத்தோங்க இறை வனைத் தோழியாகவும், கணவனும் மனைவியுமாகவுங் கொண்டு மலர்ப்பாதம் தரிசிக்கு மடியவர். தரிசிப்பார்கள். உதாரணம் துணைப் பதத்தினை (145)இல் காண்க. இறைவன், ஸ்ரீ இராமகிருஷ்ணர், சுவாமிகள் மற்றும் உலகுக்கு அருள் காட்டும் வடிவங்களாக தாம் உருத்தாங்கி நின்று அருள் புரிபவர், அவர்கள் பாவ சமாதியில் அதிகம் தன்னைக்கண்டு அருள்புரிபவர். இறைவனை வேண்டி உலகுக் குக் கொடுப்பவர்.

தற்பரன் (2; 18;) இலும் நந்தி (18) தில்லைத்தரிசனம் (19) பொன்னம்பலம் பொற்றாள் (25) இலும் வாசித்தறிக. தற்பரனை நந்தி தரிசனத்தில் தன்னைக்கண்டு தாரகை வடிவாக மகேஸ்வரனையும் பின் கனே வடிவாம் சதாசிவனையுங்காண்க; சின்மயானந்தனுகவே விளங்கித், தில்லைத் தரிசனங் காண்க, முழுதுமாய் விளங்கும் திரு வைந்தெழுத்துச் சோதியில் ஆழ்ந்துகிடக்கும்முழுமுதல்வன் போற்றி.

(தொடர்) தொழுமடி யார்கள் துணைவா போற்றி
என்றுமெ னுளத்தில் இருப்பாய் போற்றி
மன்று ளாடும் மணியே போற்றி
பொன்று முடலைப் பொறுக்கேன் போற்றி
சென்றடை யாத செல்வா போற்றி

ஆதி போற்றி அரனே போற்றி
சோதி போற்றி சுடரே போற்றி
நீதி போற்றி நிறைவே போற்றி
மாதொரு பாக மலர்ப்பதம் போற்றி
ஏதொரு பற்றிங் கில்லைப் போற்றி
போற்றி போற்றி பொன்னடி யென்றும்
போற்றி போற்றி சிவசிவ போற்றி

விற்பொலி நுதலாள் விமலனே தன்னுள் தரிசித்து (முன் விளக்கம்) தொழு மடியார்கள் துணையாக இருக்கும், தோழியாக விளங்குபவள் துணைப்பதம் (145) போற்றி. பேடை மயிலோடு கூடிப் பிணைந்து வாழ்வதுபோலும். நற்றுணைப் பேடையோடாடி நாரை வாழ்வது போன்றும், சும்மா இருக்கும் சொரூபமாக விளங்கும் என் உள்ளத்தே நீ இருந்து, முருகனே வள்ளியாகச் செயல் புரிந்தது போல் ஓங்கார மெய்ப்பொருளான நீ இருந்து செயல்புரிபவனே போற்றி; ஓங்கார பெய்ப்பொருளானவனே போற்றி; இந்த உடல் குன்றிக்கொண்டே போகிறது; ஈற்றில் முடிந்துபோகுமுடல்; அது முடிவடையுமுன்னமே நானும் நீயும் ஒன்றாகும் அந்நிலையில் பேடை மயிலோடு கூடிப்பிணைந்து வருவது போல் வாழ்தல் வேண்டும்; ஆதிப்பரனாக விளங்கும் ஜோதியே, எங்கும் உண்மை 'சிவசிவ (1 8) என்னும் உண்மை வடிவாக விளங்குபவனே உமை ஒரு பாகமாக விளங்கும் ஜோதி போற்றி, ஏதும் ஒரு பற்றுமே இங்கில்லை. நற்றுணைப் பேடையோடாடி நாரை வாழ்வதுபோல் நீயும் நானும் வாழ்வளிக்கும் பொன்னடி போற்றி சிவசிவ போற்றி.

34 அரியதிலரியது ஆன்மா

அரியதி லரியது ஆன்மா வதுதான்
பெரியதிற் பெரியது பேத மற்றது
கருமைசெம்மை வெண்மையைக் கலந்து நிற்பது
பிரிவறி யாதது பின்முன் அற்றது
பொறிவழி போகாப் புண்ணியர்க் குரியது
நெறியெலாங் கடந்து நிற்கு நெறியது
அறிவுக் கறிவாய் ஆனந்தந் தருவது
குறிகுண மற்றது கூத்தாட வல்லது
துரியா தீதத்தில் தூய்மையா யுள்ளது
மரித்துப் பிறவா மாண்பை யுடையது
திரிபுர மெரித்தது தேவர்சிறை மீட்டது
நரியைக் குதிரையாக்கி நயந்தது
விருப்பும் வெறுப்பும் அற்றவர் பாலது
கருப்போ காதென்னைக் காத்து நிற்பது

ஓர் யந்திரம் பல சில்லுக்களைச் சுற்றும்; ஒவ்வோர் சில்லும் வெவ்வேறு வேலைகள் புரியும்; மிளகாயரைக்கும் நெல்லுக்குத்தும் மா இடிக்கும், தண்ணீரிறைக்கும் என்னும் பல; பலவிதத் தொழிலையும் யந்திரசக்தி செய்கிறது. அவ்வாறே பல பேதமுள்ள ஓசை வடிவாக விளங்கும் பல பேத மாயை வடிவங்களில் இயங்குவது பேதமற்ற ஒரே ஆன்மா. அது அரியதில் அரியது பெரியதில் பெரியது; மாயாகாரிய உலகில் விளங்கும் உயிரிடை பொருள் உயிருள் பொருள் எல்லாவற்றிலும் ஓசை வடிவாக ஒன்றுகவே ஒரே யந்திரம் போல் விளங்குவது; எப்பொருளையும் தன்னுள் அடக்கவே பெரியதிற் பெரியது.

ஆன்மா அழியாப் பொருள். மூப்பத்தைந்து கருவி கரணங்களைத் தன்னுள் அடக்கியே தத்துவாதீதனாய் விளங்குவோனுக்கு தேகம் அவன் வயம். ஆன்மாவே செயல் புரிவது; முருகனே வள்ளியாகச் செயல் புரிந்தான்; பார்வதியே செயல் புரிவது என்றால் அதற்கு நெறி எங்கே? வினைப்பயனென்னும் அம்பலத்தே வினை முதலாம் முதல்வனே செயல்புரிபவன். ''நீ நெறி கண்டுளம் நின் மலனுகுமே ' என்று திருமூலர் தருகிறார். அறிவு சொரூபமாகவே வினங்கும் ஆன்மாவை அறிவுப் பெருவெளியில் அறிவு சொரூபமாகவே அறிந்து ஆனந்தங் கொண்டாடுவதே. மாயாகாரிய ஆகாசத்துக்கு அப்பால் விளங்கும் அறிவு சொரூபம் குறிகுணமற்றது. துரியாதீதத்தில் தூய்மையாய்க் காணப்படுவது (86) பிறத்தல் சாதலற்றது. திரிபுரமெரித்தது. (13) மூப்புரமாவது மும்மல காரியம். (51) தேகம் தன்வய மாக்கியது; நரிபோலும் கருவி கரணங்களைத் தன்வயமாக்கிய உடம்பிலே தத்துவாதீதனை அவனே குதிரை போல் இறைவனிடங் கொண்டு சென்றது. பற்றற்ற இந்நிலையில் இறைவனடி சேர்ந்த ஆன்மா பிறப்பிறப்பற்றது.

35. குருபரனை மறப்பேனே - குதம்பாய்

161 அனைத்துஞ் சிவன் செயலென் றறிந்த பெரியோர்க்கு
மனத்துயர் வந்திடுமோ — குதம்பாய்
மனத்துயர் வந்திடுமோ.

எல்லாஞ் சிவன் செயல், எங்குஞ் சிவன் செயல், (91) எங்கும் அவனெடி, எல்லாம் அவனெடி; கொலை பாதகமும், அன்னதானமும் ஒரே வினைமுதலாம் முதல்வன் செய்யும் செயல்; செயலுக்கும் ஆன்மாவுக்கும் ஒரு தொடர்புமில்லை; செயலால் கட்டுப்படாதே அப்பால் பட்டவனுகவே முதல்வன் வியாபியாக எப்பொருளிலும் நின்று இயக்குகின்றவன். இதை அறிந்தவரே மெய்யன்பர். மாணிக்கவாசகர் தருவதைக் காண்க.

இயக்கி மாறறு பத்துநால்வரை என்குணம் செய்த ஈசனே
மயக்க மாயதோர் மும்மலப்பழ வல்வினைக்குள் அழுந்தவுந்
துயக்க றுத்தெனை ஆண்டுகொண்டுநின் தூய்மலர்க்கழல் தந்தெனைக்
கயக்க வைத்தடி யார்முனே வந்து காட்டினாய் கழுக்குன்றிலே.

(கழுக்குன்றப் பதிகம்)

162. ஆன்மாவே நாமென்னும் அறிவை மறந்ததனால்
வீண்பாவ மாச்சுதடி — குதம்பாய்
வீண்பாவ மாச்சுதடி.

(முன்பாட்டு விளக்கம்) ஆன்மாவுக்கும் செயலுக்கும் ஒரு தொடர்புங் கிடையாது நாம் ஆன்மா தேகமல்ல தென்பதை மறந்தே- தேகம் யாம் என்று நினைப்பதே இந்தத் துயரத்துக்கும் சந்தோசத்துக்கும் இருவினைக்கும் காரணம்.

வைத்த தேகம் வருந்த வருந்திடும்
பித்த ஞனருள் பெற்றுந் தி மிலேன்
சித்தமோன சிவ சின்ம யானந்தம்
வைத்த ஜபஅருட் சொற்பொற் ஜோதியே

தாயுமானவர் (2)

163 இரவும் பகலுமற்ற இன்பநிட்டை பொருந்தினவர்
பரமபதம் பெற்றாரடி — குதம்பாய்
பரமபதம் பெற்றாரடி.

நிஷ்காமிய கர்மம் புரிவதால் பற்றற்ற கருவி கரணங்களும் தன்னுள் அடங்க சித்த மௌனம் செயல் வாக்கெலாம் மௌனம் சுத்த மௌனம் என்பால் தோன்ற அகம் சிவலிங்க வடிவாகத் தோன்ற நிட்டை கூடும்; நெற்றிப் புருவ நடுவின்கண் உறைந்துரு கும் திங்கள் மண்டலத் தீந்தூளி யமிழ்திலை சிறப்புடன் அருந்தவே பாசபந்தமற்றவனாகிறான் தில்லைத்தரிசனத்தில் (3)

164. ஈசன்மேல் நேசமாய் இருக்கின்ற தாசருக்கு
பாசபந்தம் வந்திடுமோ — குதம்பாய்
பாசபந்தம் வந்திடுமோ.

முன்பாட்டு விளக்கம் நிட்டை கூடியே யமிழ்திலைச் சிறப்புடன் உண்ணும் மெய்யன்பர்க்கு தில்லைத்தரிசனங் கண்ட அன்பர்க்கு பாச பந்தக் கயிறு எரிந்துவிட்டது. ஸ்ரீ இராமச்கிருஷ்ணர் 'கட்டுங்கயிறு எரிந்த பின் சாம்பல் கயிறு வடிவமாக இருப்பினும் கட்டுஞ் சக்தி இல்லை'. [4]

165. உண்மை முழுதுமென்ற ஒருமொழியால் இவ்வுலகில்
என்னை மறந்தேனடி — குதம்பாய்
இரவுபக லற்றதடி.

உலகின்கண் நிகழ்வன யாவும் சிவன் திருவருட் செயலே, ஓங்கார மெய்ப்பொருளே 'சிவ சிவ' எனும் மாமறை தரும் ரூபமே (138) அவனே எப்பொருளிலும் கலைவடிவாக வியாபித்திருக்கிறான். ஊனக்கண்ணுக்குக் காட்சி தரும் பொருள் மாயா காரியப் பொருள்; நிலையற்றது. உண்மைப் பொருளான திருவருட் செயலை அவன் திரு

வருளால் உணர்ந்து அவன் திருவருளே நிலைபெற்ற புகலிடமாகக் கொண்டு நிட்டை கூடுவன். (முன் பாட்டு விளக்கம்); இரவு பகலற்ற காட்சியே யது தந்தது. தில்லைச் சிற்றம்பலம் பொற்றாண் பொன்னம்பலம் (25) (5)

166. ஊரும் பேருமில்லா ஒருபொருளைக் கண்டவர்கள்
ஆருக்கு மஞ்சுவரோ — குதம்பாய்
ஆருக்கு மஞ்சுவரோ.

திருதில்லைச்சிற்றம்பலக் காட்சியை, ஊரும்பேருமில்லா ஒரு பொருளைக், கண்டவர் உலகினில் வேறு ஒன்றும் வேண்டார். அவர் பிறவிக்கடலுக்கு அப்பால் பட்டவராக வாழ்கிறார். அவரை முன் கட்டியிருந்த பாசபந்தம் எனும் கயிறு எரிந்து, கயிறு வடிவாகச் சாம்பலாக இருப்பது; கட்டுந் தன்மையற்றது. அவருக்கு என்னதான் பயமுண்டு. [6]

167. எனக்குந் தனக்கும்பிரி வில்லையென்ற என்னைசான்
தனக்குவமை சொல்வதுண்டோ — குதம்பாய்
தனக்குவமை சொல்வதுண்டோ.

தில்லைச்சிற்றம்பல தரிசனத்தில் தன்னையும் அந்தச் ஜோதியில் மறையக்கண்டு பின்னும் சீவன் முத்தனாகவே பாசபந்தமற்று வாழும் நிலையில் தத்துவாதீதனை தனக்கும் இறைவனுக்கும் வேறுபாடில்லாத மெய்ப்புணர்ப்பையே காண்பான். அவனுக்கு நிகராவார் யாருமுண்டோ [55,56,57] வாசிக்க. [7]

168. ஏதும் சிவன்செயலென் றெண்ணும் பெரியோர்க்குத்
தீதுதான் ஆவதுண்டோ — குதம்பாய்
தீதுதான் ஆவதுண்டோ.

தத்துவாதீதனை தானும் முழுமுதல்வனும் ஒன்றாகவே கண்டு செயல் புரிபவன்; எல்லாம் சிவன் செயல்; அன்னதானம், கொலை, முடிசூட்டுவிழா, அனைத்தும் பேதமற்ற செயல்; அவனே எனும் உண்மையினை நன்குணர்ந்தால் தீதுதான் ஆவதுண்டோ? கர்மவினை தானுண்டோ, கர்ம பலனை அனுபவிக்கப் பிறப்புத்தானுண்டோ? ஒன்றுமேயில்லை. [8]

169. ஐயமெல்லாம் நீக்கியென்னை அன்புசெய்ய
வைத்தவனை
வையகத்தில் மறப்பேனே — குதம்பாய்
வையகத்தில் மறப்பேனே,

எண்ணில்லா ஆருயிர்கள் அனைத்திற்கும் தின்னமாக நுண்ணிய தந்தையே, அடியேன் மனத்தினில் பேராப் பேரன்பு நாளும் பெருக அதனால் உள்ளம் உருகி சிவபக்தி செய்து நூல்களால் புகழ்ந்து பாடும்படி பித்தனாகிய அடியேனை வைத்தவனை யான் ஒரு கணப் பொழுதாகிலும் மறப்பேனை. ஒரு கணமேனும் மறவேன். [9]

170. ஒருவனே தெய்வமெனும் உண்மைதனைச்
சொல்லிவைத்த
குருபரனே மறப்பேனே — குதம்பாய்
குருபரனே மறப்பேனே

உள்ளபடியே உள்ளது; எப்பவோ முடிந்த காரியம்; எல்லாஞ் சிவன் செயல்; எங்கும் அவனெடி, எல்லாம் அவனெடி. ஒரு யந்திரம் போல் இயங்கும் வினைமுதலாம் முதல்வன். முழுமுதல்வன் ஒருவனே (மூன் பாட்டு விளக்கம்) ஒருவனே குருபரனாக எழுந்தருளி இந்த உண்மையினைத் தந்தவன் அவனை மறப்பேனே (10)

171. ஓங்கா ரத்திலுள்ளே ஒளிருஞ் சிவனடியை
நீங்கும் நெறியுண்டோ — குதம்பாய்
நீங்கும் நெறியுண்டோ.

ஒப்பில்லாத ஓர் உறுதிச் சொல் 'சிவ சிவ' எனும் மாமறை- எல்லாப அவனெடி எங்கும் அவனெடி, அனைத்துஞ் சிவன் செயல் ஊரும் பேருமில்லா ஒரு பொருளையே; உண்மை முழுதுமென்ற ஒரு மொழி, (மூன்பாட்டுக்கள் விளக்கங்க காண்) அப்பேரின்பமென்னும் பெருநிலையினைத் திருவருளால் அடைந்தவர்கள்; பிறவாமையாகிய பெருஞ் செல்வப் பேற்றினையடைந்தவர்கள். ஒருகால் சிற்றம் பல தரிசனங் கண்டு பாசபந்தக் கயிறு எரிந்தவர்கள் பின் பாசபந்தத்தால் கட்டுண்ணப்படார். (164) (11)

172. ஒள்ளிய மில்லா வறிவுடைய பெரியோர்கள்
திவ்விய பார்வையாலே — குதம்பாய்
சென்மமெல்லாந் தீர்ந்ததடி.

(மூன் விளக்கம்) மெய்ப்புணர்ப்பாம் நிலையில் தத்துவாதீதனாய் விளங்கும் பேரறிஞர்கள் ஓர் பார்வையால் பக்குவமடைந்த சிஷ்யனை பிறப்பிறப்பில்லாப் பேரின்ப வாழ்க்கையில் ஈடுபடுத்துவர். சிவகுருவின் வடிவம்.

சுத்த சிவன் குருவாய் வந்து தூய்மை செய
தத்தனை நல்லருள் காணு அதி மூடர்
பொய்த்தது கண்ணென் நமரென்பர் புண்ணியர்
அத்தனை இவனென் றடிபணி வாரே.

திருமூலர் (10. 1553)

"திருவருள் ஞானஞ் சிறந்தருள் சொழிக்குங்
குருவடிவான குறைவிலா நிறைவே."

(தாயுமானவர் 55 அகவல்) (12)

36. இணையடி வாழ்க

173. திங்களுங் கங்கையும் சென்னியிற் ருங்கிய
எங்கள் பெருமான் இணையடி வாழ்க
ஒருபொல் லாப்பு மில்லையென் ருேதிய
குருபரன் குஞ்சித பாதம் வாழ்க
நாமறி யாமெனும் நல்ல திருமொழி
தாமறி வோனிச் சகத்தினில் வாழ்க
எப்ப வோமுடி வானதென் றெங்கட்குச்
செப்பிய வாசகம் சிறப்புடன் வாழ்க
ஆரறி வாரெனும் அருமைத் திருமொழி
தாரணி தன்னிற் சந்ததம் வாழ்க
முழுதுமுண் மையென முனிவன் சொன்மொழி
தொழுது வாழ்த்துஞ் சுதந்திரம் வாழ்க
இன்ன தன்மைய னிவனென ஏவரும்
என்று மறியா இணையடி வாழ்க
முந்திய பொருட்கெலா முதலா யுள்ளோன்
சிந்தையிற் பூத்த சிவபிரான் வாழ்கவே.

பிறைச்சந்திரனையும் கங்கா நதியையும் சடாமுடியிற் தரித்தவர் அந்தச் சக்தியுஞ் சிவமுமாக விளங்கும் எம்பெருமான் திருவடி வாழ்க. தில்லைச்சிற்றம்பல தரிசனங்கண்டு பின் ஜீவன் முத்தராக வாழும் நிலையில், மற்றவர்கள் அறியாத முழுமுதல்வனை, தன்னுள் காணுபவனைப் போற்றுவோம். ஆணவம் கர்மம் மாயை மூன்றும் முன் வினைப்பயனாக நமக்கு இறைவனால் அருளப்பட்டதையே இங்கே அனுபவிக்கிறோம். உலகில் வாழும் மாந்தர்க்கு, என்ன நடக்கப் போகிறது என்பதொன்றும் தெரியாது. ''எல்லாம் சிவன் செயல்'' முழுமுதல்வனே எல்லாம் செய்பவன். 'என்ன வடிவம் எத்தகைமை யுடையார்', என்பதே ஒருவருமறியார். என்ன நடப்பதென்பதும் தெரியாது. படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய முக்குண விகாரத்துக்கும் கர்த்தாவாக விளங்கும் பிரம்மா விஷ்ணு உருத்திரன் எனும் மும்மூர்த்திகளுக்கும் முந்தியவனாக விளங்கும் முழு முதல்வனே பரமாத்மன். அவன் திருவடி வாழ்க.

37. மரணம் பிறப்பில்லையடி - குதம்பாய்

174. கங்கைச் சடையுடைய கடவுளைக் கும்பிட்டாற்
பங்கந்தான் வந்திடுமோ — குதம்பாய்
பங்கந்தான் வந்திடுமோ.

ஹிமாலயமே இறைவனுடைய இருப்பிடமென ஓர் கொள்கை. மலைச்சாரல்கள் அவன் சடாமுடி. கங்கை ஆறு என்றுங் குறையாதே மலை உச்சியிலிருந்து கீழே வசிக்கும் மாந்தர்க்காக ஓடுவது போல் ஓடுகிறது; நலம் அளிக்கிறது. அதுபோல் இறைவன் சடாமுடியிலிருந்து கருணைவெள்ளம் மெய்யன்பர்க்கு அருள் புரிவதற்கே பெருகுகிறது, அந்தக் கடவுளைக் கும்பிட்டு நற்பயனை யடைவோமாக.

அண்டியவர்க்கு அருள் புரியும் உமது கருணை எவ்வளவு அளவில்லாதது. என்னுடைய ஆசையுந்தான் எவ்வளவு அளவில்லாதது. எப்போது கருணை நிறைந்த பார்வையால் என்னைக் காத்தருள் தலை ஏற்றுக்கொள்வீர்; தாக்ஷிண்யம் (பக்தாபிப்ராய அனுவர்த்தனம்) பக்தர்களின் விருப்பத்திற்கிணங்க நடந்துகொள்ளுதல்; சிவானந்தலஹரி (18) சங்கரர்.

மூவர்களானாலும் ஆசைக்களவில்லை; நீ கொடுப்பதற்கும் எல்லையில்லை; உன் பாதாரவிந்தத்தில் பக்தி நிலைபெறுதவரை ஆசைகள் பொருதிக்கொண்டேதான் இருக்கும். தாக்ஷிண்யம் காட்டாமல் உன் கருணையால் தடுத்தாட்கொண்டு ரக்ஷிப்பாயாக. [1]

175. எங்குஞ் சிவனடியைக் கண்டுறைஞ்சும் மாதவர்க்குக்
கங்குல் பகலுண்டோ — குதம்பாய்
கங்குல் பகலுண்டோ

பேதமில்லாமல் எக்கருமத்திலும் கொலையிலும், தர்மச்செயல் அன்னதானத்திலும், முடிசூட்டு விழாவிலும் வினை முதலாம் முதல்வன் அந்த முதல்வனையே கண்டு; எல்லாஞ் 'சிவன் செயல்' 'எங்கும் அவனடி: எல்லாம் அவனடி' எனும் உண்மையை ஓர்ந்தறிந்தால் மௌனகுருவே உள்ளத்துதிப்பான்; நிட்டை கூடியே இறைவனடி சேர இங்குல் பகல் சூரிய ஜோதியில் கலப்பான். பின் ஆதியந்தமில்லா ஜோதியில் மகாசமாதியில் அவனுடைய உயிர் எனும் ஒளி ஒடுங்கும்.

என்னை விட வேறெருன்றிலும் நாட்டமில்லாதவராய் 'சிவசிவ' எனும் ரூபத்தையே சிந்திப்பவராய் எந்த ஜனங்கள் பரிவுடன் உபாசிக்கின்றார்களோ அந்த நிலை பெற்ற பக்தர்களுடைய யோக சேஷமத்தை நான் தாங்குகின்றேன். (கீதை 9 - 22)

பாய்களைச் செவ்வையாக விரித்து வைத்தவனுடைய படகைக் காற்றுத் தானே தள்ளிச் செல்வது போல் பக்தனுடைய (1) வாழ்க்கைப் படகை இறைவனுடைய கருணைக்காற்று தள்ளிச்செல்லுகிறது ['சிவசிவ' எனும் நாமத்தையே இடைவிடாது உபாசிக்கும் பக்தனுடைய] ஸ்ரீ இராமகிருஷ்ணர் (2)

176. சத்திசிவ மொன்றுன தன்மையைக் கண்டுவிட்டால்
நித்தியவாழ் வாகுமடி — குதம்பாய்
நித்தியவாழ்வாகுமடி.

எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனையிலும் ஓசை வடிவாக விளங்கும சத்தியும் அவற்றை அப்பாற் பட்டவனுக வினை முதலாம் முதல்வன் முழுமுதல்வனுக நின்று இயக்கும் சிவனும் ஒன்றுகவே நெருப்பும் சூடும் போன்றும் பண்ணும் பண்ணின் இசையும் போன்றும் விளங்கும் உண்மை ரூபத்தைக் கண்டுவிட்டால் (எல்லாஞ் சிவன் செயல் 175) அவன் பாதாரவிந்த மடைந்து, மகா சமாதியில் ஒளி போய் ஆதியந்த மற்ற ஜோதியில் ஒடுங்கும்.

சிவ சக்தி வடிவம் சிவானந்தலஹரி பாட்டு (1) இல் காண்க. சிவ சக்தி வடிவாக அப்பர் சுவாமிகள் (4 - 3) பதிகத்தில் திருவையாறு எனுந் திருத்தலத்தில் சத்தியுஞ் சிவமுமாக தாம் கண்டு பதிகம் பாடியதைக் கூறுகிறார். திருவையாற்றுத் திருக்குளத்தில் தோன்றி வந்தெழுந்தார் சொல்லரசர்; இரு கண்ணீரிலும் குளித்தார். நிற்பவும் சரிப்பவும் துணையோடும் பொலியக் கண்டார் இவற்றில் சத்தியும் சிவமும் ஆம் சரிதையைப் பணிந்தார். பாடினர் இப்பதிகம் (148 வாசிக்க) (3)

177. நமனு மணுகுவனே நாதனை நாம்பணிந்தால்
சமனுக நின்றிடடி — குதம்பாய்
சமனுக நின்றிடடி

சிவசக்தி வடிவாக விளங்கும் அவனை (176) 'எல்லாம் அவனெடி எங்கும் அவனெடி எனும் உண்மை விளங்க (178) சமனுக உலகினை உணர்ந்தறிந்த அறிவு சொரூபமாகவே ஞானக் கணபதி போல் விளங்கினுல் பிறப்பிறப்பில்லையடி என்கிறார் (4)

178. விடத்தை மிடற்றில்வைத்த விமலன ருளைப்பெற்றுல்
சடத்தின்மேல் ஆசையுண்டோ —குதம்பாய்
சடத்தின்மேல் ஆசையுண்டோ.

தேவர்களும் அசுரர்களும் அமிருதத்தை அடைவதற்காகப் பாற்கடலைக் கடைந்தபோது அமிர்தம் தோன்றுவதற்கு முன் கொடிய ஹாலாஹல விஷம் தோன்றி விஷ ஸ்வாலையை வீசிற்று. அதைக் கண்டு பயந்து தேவர்கள் பரமசிவனைச் சரண்புகுந்தனர். பரமசிவன் பார்வதியின் ஸம்மதத்தைப் பெற்று விஷத்தை வெண்ணெய் போல் திரட்டி எடுத்து வாயில் போட்டுக் கொண்டு விழுங்கி விடாமல் தம் கழுத்திலேயே என்றும் இருக்கும்படி செய்து விட்டார்.

சிற்றின்பமாகிய நஞ்சை யுண்டு கர்மபலனுக்கு ஆளாஞல் பிறவிச் சுழலில் ஈடுபட வேண்டும். இன்பத்தையும் துன்பத்தையும் சிவன் செயல் எனும் ஞானக்கினியிலை வேவச் செய்து பார்வதியின் ஷம்மதத்துடன் இறை அருளே என்று நாம் பெறும் பேரானந்த வெள்ளத்தில் அதைக்கண்டு இன்புறுகிச் சீவிக்க சடத்தின்மேல் ஓர் ஆசையுமில்லை' சிற்றின்பத்திற் பற்றுமில்லை (140) நாளடைவில் கருமம் தம்வயமான உடம்பில் காணலாம். அதே பேரானந்தப் பேறு. (5)

179 இணக்கமா யிருந்துபார்த்தால் எல்லாம்
சிவன்செயலாம்
பிணக்கைநீ விட்டிடடி — குதம்பாய்
பிணக்கைநீ விட்டிடடி.

எண்ணில் பல கோடி உயிர்கள் அத்தனையிலும் ஓசைவடிவாக விளங்கும் பார்வதியும் அவற்றை அப்பால் நின்று இயக்கும் சிவனுமாக விளங்குபவனே; தன்னுடன், அந்தரான்மாவும் ஒன்றுய் யாஞகிய என்னை விழுங்கி வெறுந்தானுக விளங்குந் தற்பரனுமாக ஒன்றுக ஒரு கலைவடிவின சிவ சத்தி ரூபமாகக் கண்டால் நான் நீ எனது என்னும் பிணக்குகள் ஒன்றுமில்லையே.

உண்டாய பொருளனைத்துக்கும் அந்தரான்மாவும் ஆண்டவனுமாகிய எந்த ஒருவன் ஒன்றேயாகிய தன் வடிவைப் பலவாகச் செய்கிறானே அவனை எந்தத் தீரர்கள் தங்களிடம் உறைபவனுய்க் காண்கிறார்களோ அவர்களுக்கே அழிவிலாச் சுகம் உண்டு. பிறர்க்கில்லை. [கட உபநிஷ 5-12] (6)

180. தன்னை யறிந்தோர்க்குத் தாழ்வுண்டோ வையகத்தில்
பின்னையினிப் பேசுவதென் — குதம்பாய்
பின்னையினிப் பேசுவதென்,

[பாட்டுக்கள் 70, 71, 79 வாசிக்க] மூப்பத்தைந்து கருவி கரணங்களும் தன்னுள் அடங்க நிட்டை கூடி ஜோதியில் தன்னையும் உலகினையும் ஒன்றுகக் கண்டார். அந்தத் தில்லைத் தரிசனங் கண்டோர்க்கு பின் ஐம்புலனும் மற்றும் கருவி கரணங்களும் எரிந்த கயிறு போல் தோன்றும் என்றும் அழியா இன்பமே [66] (7)

181. நாமும் நாமாகி நமக்குள்ளும் நாமாஞல்
போமுன் வினையனைத்தும் — குதம்பாய்
போமுன் வினையனைத்தும்.

அனைத்துயிரிலும் எல்லுமெல்லும் நீக்கமற அகல் நிறைவாக வியாபித்திருக்கும் முழுமுதல்வன், அப்பால் பட்டவனுக விளங்குபவன் கட்புலனுகாத அருவமெனும் நிலையினை யுடையவனுமல்லன்; உள்ளே இருக்கின்றுன் வெளியே இருக்கின்றுன். அங்கே இருக்கின்றுன் இங்கே இருக்கின்றுன் என்பதும் சொல்ல இடமில்லாமல், குறைந்திருந்து நிறைதலும் நிறைந்திருந்து குறைதலுமில்லாமல், ஒழுங்கு முறையில் தவிர்தலில்லாமல் தனக்கெனவோர் குணமில்லாமல், போக்கு வரவு இல்லாமல், திருச்சிற்றம்பல மென்னும் மன்றில் கூத்தியற்றுபவன்: அவனைக்கண்டு தரிசித்து பின் தமக்குள்ளேயும் புறத்தேயுங் காட்சி தருபவன்: இருள் போன்றது மல்லாமல் பூத ஒலி போன்றது மல்லாமல் எத்தகைய பொருட்களும் தம் அகல் நிறைவாகிய பெரு வியாபகத்துள்ளே அறிவு சொரூபமான ஒப்பற்ற தனிமுதற் பொருளென அறிவினுல் இன்புற்றிருக்கும் நிலையில் கர்மம் ஏது வினை ஏது? ஒன்றுமில்லை,

'பாராதி நீயாய் பகர்ந்தால் அகமெனவும்
ஆராயுஞ் சீவனு நீ யாங்காண் பராபரமே"

தாயுமானவர் பராபரக்கண்ணி (104) (8)

182. பண்டுமின்று மென்றும் ஒருபடித்தாய் நிற்பவனைக்
கண்டுதொண்டு நாம்செய்வோம் — குதம்பாய்
கூண்டுதொண்டு நாம்செய்வோம்.

(முன்பாட்டு விளக்கம் காண்க) என்றும் ஒரு படித்தாய், குறைந்திருந்து நிறைந்தும் நிறைந்திருந்து குறைதலுமில்லாமல் அறிவு சொரூபமாக அகல் நிறைவாக இருள்போன்றது மல்லாமல் பூத ஒளி போன்றதுமல்லாமல் எங்கும் வியாபித்து விளங்கும் தனி முதல் வனைக் கண்டு சிவ தொண்டு செய்வோம் நாங்கள், எல்லார்க்கு மன்பு செலுத்துவோம். (9)

183. மங்கையொரு பாகமாய் மருவும் பெருமானை
எங்கள்குல தெய்வமடி — குதம்பாய்
எங்கள்குல தெய்வமடி.

(முன்பாட்டு விளக்கம் சிற்றம்பல தரிசனமும் மற்று ; காண்க) இருள் போன்றது மில்லாமல் பூத ஒளி போன்றதுமில்லாமல் நீக்க மற அகல் நிறைவாக எங்கும் வியாபியாக இருப்பவனை ஓசைவடி வாகவும் இயக்குபவனுமாகவும் விளங்கும் முழுமுதல்வனை மங்கை ஒரு பாகமாய் மருவும் பெருமானை தரிசிப்போம். (பாட்டு 1 சிவா னந்தலஹரி 1 காண்க) ஆத்மானுபவத்தால் ஆனந்தக்களிப்புடைய வர்களுமாகிய சிவசக்தி வடிவினர்க்கு எங்கள் நமஸ்காரம். (10)

184. அயனு மரியு மறியாமல் நின்றவன்றன்
தயவு நமக்குண்டடி — குதம்பாய்
தயவு நமக்குண்டடி.

சரஸ்வதி நாயகனை அயனும் லக்ஷ்மி நாயகனை அரியுந் தம் கல்விச் செருக்கினாலும் செல்வச் செருக்கினாலும்(1,கண்டு கொள்ள இயலாமல் அலைந்தனர் (150) அவனை நாம் பக்தியுடன் பணி வோமே: (170) (11)

185. அரகர வென்றுதினம் அரற்றுஞ்சிவ னடியவர்க்கு
மரணம்பிறப் பில்லையடி — குதம்பாய்
மரணம்பிறப் பில்லையடி.

அரகர 'சிவசிவ' 'சிவசிவ' என்றே தினமும் சிவசக்தி வடி வான அம்மை அப்பரை, களைவடிவினை உலகினைக் கண்டு தரிசித்தால் அவன் பாதார விந்தத்தைச் சேரலாம். (12)

38 முனி சொன்மொழி

கலிவிருத்தம்

186. ஒருபொல் லாப்பு மில்லையென் றுரைத்தவன்
திருவ டிதனைச் சிந்தை மறக்குமோ?
ஒருவடி வன்றி யுள்ள முவக்குமோ?
கருவ ழியினிற் சென்று கலங்குமோ?

ஒருவடிவன்றி: ஒருவடிவமு மில்லாதவன்; ஒருயந்திரம் பல சில் லுக்களை இயக்க ஒவ்வோர் சில்லு ம் மிளகாயரைப்பதும் நெல்லுக் குற்றுவதும் போன்று தனித்தனி வேலைபுரிய (160) யந்திரம் எல்லா வற்றிற்கும் பொதுவாக ஒருதன்மையுமற்ற சக்தி வடிவாக அமைந்தி ருக்கும். அவ்விதமே பரமாத்மன் அப்பால் நின்று இயக்க குறிகுண முள்ளதும ஐம்புலன்களும் மற்றும் தத்துவங்களாலாக்கப்பட்டு மாயா காரியப் பொருளான மனத்திற்கட்டப்பட்டு ஒவ்வோர் உயிரும் இறைவன் ஒளி கொண்டு தத்தம் வினைப்பயன் வழிநின்று தொழில் புரியும். இறைவன் ஒரு வடிவமிலன்; குறி குணமற்றவன்; ஒளி வடிவ மானவன் (பாட்டு விளக்கம் 185) அத்தகைய பெரிய பெருந்தண்ணை ளிய திருவடிதனை, மரணம் பிறப்பில்லை, 'அரகர சிவ சிவ' எனும் சிவனடியார்க்கு என் றும் அருள்தரும் (185) திருவடிதனை, மறந்து கருவழியிற் சென்று மயங்குமோ? கலங்குமோ? ஆதலால் வினைப்பயன் எனும் அப்பலத்தே வினைமுதலாம் முதல்வன் முழுமுதல்வன் அப்பால் நின்று கட்டுப்படாது உலகினை இயக்குகின்றவன் எப்பவோ முடிந்த காரியம் மும் மூர்த்திகளான பிரம்மா விஷ்ணு உருத்திரன் எனும் மூவரும் அருவாம் ரூபமாக தத்தம் சக்திவடிவான சரஸ்வதி லக்ஷ்மி காளி எனும் அருவுருவாம் ரூபங்களாக இயக்கியும் இயங்கியும் காட்சி தருபவர் ''சிவனடிக்கன்பு திரிமூர்த்தியறியும் (115) சிவனடிக்கன்பு திரிதோஷமிறக்கும்'' ''மூந்திய முதல் நடு இறுதியுமாய் மூவருமறி கிலர் யாவர் மற்றறிவார்'' மாணிக்கவாசகர் திருப்பள்ளியெழுச்சி (8) மும்மூர்த்திகளுக்கும் முந்திய பரமாத்மன் தன்னுடைய திரு வருள் கொண்டுள்ள பழவடியார் உள்ளத்தே நின்று ஆற்றல் வடிவான பார் வதியாகிய அம்மைபோன்றும்; இயங்கி அருள்புரிந்து திரிதோஷமிறக்க அருள் புரிபவன் ''பந்தனை விரலியும் நீயும்'' நின் அடியார் பழங்குடில் தோறும் எழுந்தருளிய பரனே'' (அதேதிருப்பள்ளியெழுச்சி, (8)என்று மாணிக்கவாசகர் தருகிறார். திரிதோஷமிறக்க ஒருபொல்லாப்புமில்லை, என்றுரைக்கிறார் சிவகுரு;

187. நாம றியோமெ னச்சொலு நன்மொழி
தாம றிந்தவர் சஞ்சலங் கொள்வரோ?
சாம ளவுமத் தண்ணருள் வாசகம்
சேம நன்னிதி செப்புந் தகையதோ?

(முன் பாட்டு விளக்கம்) சிவனடிக்கன்பு மும்மூர்த்தியறியும் சிவனடிக் கன்புதிரிதோஷ மிறக்கும் என்றவற்றை வாசிக்க,

தில்லைச் சிற்றம்பல தரிசனங் கண்டு சர்வதத்வாதீதனாய் விளங்குவோன், வினவினால் பார்வதியாக இயங்கும் இயற்கை வடிவினை நாம் அறிவினால் காணலாம். அற்றவர்கள் எவ்வாறு அறிவார்கள். உணர்ந்து, தம்மை முழுமையும் திருவடிக்கே அன்பு செய்ய வைத்து, திருமூர்த்திகளையறிவதனால் பின்விளைவது என்ன? வினை செய்யாது தவிர்ப்பார். எண்ணங்கள் யாவும் சிவனடிக்கே உரித்தாகும் சஞ்சலங் கொள்வரோ? சாமளவும் அத்தண்ணருள் தரும் 'சிவனடிக்கன்பு' திரிதோஷ மிறக்க வைக்கும்; சேமநன்னிதி செப்புந் தகையதோ? திரிதோஷமிறக்கவே மும்மூர்த்திகளுமடைய வொண்ணா பதவியே வந்தடையும். சுந்தரர் பொருள் கூறுகிறார்.

நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்
கரையனும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகாப்பானைத்
தொண்ட னேன்அறி யாமை யறிந்து
கல்லியல்மனத் தைக்கசி வித்துக்
கழலடி காட்டிஎன் கலைகளை அறுக்கும்
வல்லியல் வானவர் வணங்க நின்றானை
வலிவ லந்தனில் வந்து கண்டேனே. (2) (7-67-25)

188. ஆர றிபவ ரென்ன வடிக்கடி
வீரமாக நகைத்து விளம்புவார்
ஈர கத்தோடு நின்று வணங்கினும்
வார மற்றவர் போல இகழ்வரே.

(முன்பாட்டு விளக்கம்) சிவகுரு செல்லப்பா சாமியார்) நித்தமும் வினைப்பயனெனுமம்பலத்தே விளை பொருளாக விளையும் களைவடிவின உலகினையும், கர்த்தாவாக அப்பாற் பட்டவனாக தன்னொளிகொண்டு இயங்குபவனும் மும்மூர்த்திகளுக்கும் முந்தியவனுமாக விளங்கும் முழு முதல்வனையும் ஆரறிபவரென்ன வீரமாக நகைத்து அறிவுறுத்தும் மகா முனிவர் போன்றவர். திருவருள் வலதே யாவும் எனும் உண்

மை புலப்படுகிறது. திருவருள் கொண்டு பதறியழுது புலம்பிவேண்டின அன்பர்க்கு உடனே சயும் முனிவர், அற்றூர் ஈரகத்தோடு வணங்கினும் ஒன்றுமறியாதவர் போல் இகழ்ந்து திருவருள் வேண்டுக என்னும் கருத்துடன் நகைப்பார். உள்ளன்பும் பரிசுத்தமான 'அறிவுசொரூபம்' உதயமாகும் இருதயமுமே வேண்டும். ஐம்புலன்களால் ஆக்கப்படும் ஈரகம் முனிவர்க்கு இகழ்ச்சியும், பிள்ளை தாயை யணையும் திருவருளன்பு மகிழ்ச்சிதரும் உறவையு முண்டாக்கும்' என்பதே அதன்கருத்து.

189. எப்ப வோமுடி வானதென் றெங்கட்குச் (3)
செப்பு வரவர் சிந்தை தெளிந்திட
ஒப்பில் லாதபல் வார்த்தைக ளோதுவர்
அப்பில் உப்பென வானதென் சீவனே

[பாட்டு 186உரை காண்க] திருவருள் வடிவாக விளைப்பயனெனும் அம்பலத்தே விளைமுதலாம் முதல்வன் அருள்புரிய எண்ணில் பல கோடி உயிர்கள் அத்தனையிலு ஓசை வடிவினளான அம்மையும் அப்பருமாகக் காட்சியளிக்கும் களவடிவான உலகம், எப்பவோ பிரம்மாவால் சிருஷ்டி காலத்தில் எழுதப்பட்டது என்னும் பொருளுடன் எப்பவோ முடிவானதென எங்கட்கு சிந்தையில் சிவன் செயலின் உண்மை தெளியச் செப்புவார். திருவருள் வடிவாம் சிவனடிக்கன்பு பூணும் வாழ்வே முன்விளைப்பயனுக உள்ள எளியனேனுக்கு, கருணை நிறைந்த ஒப்பில்லாத வார்த்தைகள் பல கூறுவர். அதன் பயனுக எளியனேனின் சீவன் தேவர்க்கு இடும் அவிப்பாகத்துக்கு உப்புப் போன்று கரைந்து 'சிவ சிவ' என்னும் மாமறையால் உணரப்படும் புவன லோகத்தை என்றென்றும் என்னுள்ளத்தே அருளியது. (4)

190. முழுது முண்மையெனமுனி சொன்மொழி
எழுதிக் காட்டிட என்னு லிசையுமோ
அழுது வழுத்தியு மேத்தியு மன்பர்கள்
தொழுது கொள்வதல் லாலென்ன சொல்லுகேன்

(பதிகம் 33 முன் பத்து வரிகளின் உரை காண்க) கற்பனை கடந்த கடவுள் மாயா காரியப் பொருளான மனத்தால் அறியவோ சொற்களால் அறிவிக்கவோ அப்பாற்பட்ட அறிவு சொரூபமான பொருள் உண்மைப் பொருள் என்றும் அழியாப் பொருள் (பாட்டு 60, 61, 62, உரை காண்க) பேரின்பப் பொற்கட்டி போன்றவனை, உலகியலில் ஓடும் மனம் பற்றற்று அசையாது ஒடுங்கி நிற்கும் நிலையில் அறிவு சொரூபமான உள்ளத்தே அறிவுலுல் கண்டு மனம் உருகிக்கசிந்து தொழுதும் புகழைப் பாடியும் அழியா இனபத்தை நுகர்தலல்லால் வேறென்ன சொல்லலாம்.

"திரையில்லாக் கடல்போலச் சலனந் தீர்ந்து
தெளிந்துருகும் பொன்போலச் செகத்தை எல்லாங்
கரையவே கலிந்துருக்கும் முகத்திலே நீ
கனிந்த பரமானந்தக் கட்டி இங்நாள்
வரையிலே வரக்காணேன் எனதுறு கட்டி
வார்த்தை சொன்னுற் சுகம்வருமோ வஞ்சனேனே
இரையிலே இருத்திநிரு விகற்பமான
இன்பநிட்டை கெரடுப்பதையா எந்தநாளோ?

[தாயுமானவர் - 16 பண்மாலை, 9]

உரையற்றவர் எனும் உண்மை வருமாறு

உரையற்ற தொனதை உரைசெய்யு மூமர்காள்
உரையற்ற தொனதைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போல சிந்தை தெளிவார்க்குப்
புரையற்றிருந்தான் புரிசடையோனே (திருமூலர் 10 - 2915)

(5)

39 நல்வரவு சொல்லு சிறு பல்லி

191. எல்லாஞ்செய வல்லபிரான் இங்குவரு மாகில்
ஏத்துவார் மனம்வாழும் ஈசன்வரு மாகில்
கல்லார்க்கும் அருள்புரியுங் கடவுள்வரு மாகில்
களிப்புடனே நல்வரவு சொல்லுசிறு பல்லி!

இறைவன் தொழில்கள்:- படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் என்பனவும் முறையே அவற்றின் தேவர்கள்: பிரம்மா விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சிவன் என்பவர்கள்; ஈசன் குணங்கள்:- தன்வயத்தனதல், தூயவுடம்பினனுதல், இயற்கை யுணர்வினனுதல், முற்றுமுணர்தல் இயல்பாகவே பாசங்களினீங்குதல் பேரருளுடைமை வரம்பலின்பழமைமை எனு மெட்டுமாம். ஈசுவரன் வல்லமைகள் குறிக்கப்பட்டன. பின் அவரை ஏத்தித் தொழும் மனம் தியான நிலையையும் மகிமையையுமே சங்கரர் சிவானந்த லஹரி. சு 72 (மொழி பெயர்ப்பில்) தருவதைக் காண்க "சிவனே! தியானமாகிற மையினால் புதையலிருக்கும் இடத்தை நன்கு தெரிந்து கொண்டு அதை மறைத்துக் கொண்டிருக்கும் இருள் சூழ்ந்த பிரதேசத்தை பிளந்து ஈசுவரனுடைய நாமமந்திரங்களாகிய சிறந்த பலிகளால் தேவர்களால் சேவிக்கப் பட்டதும் ஸர்ப்பங்களே ஆபரணங்களாகக் கொண்டதுமாகிய உம்முடைய திருவடியெனும் பத்ம நிதியை எவர் கள் மேலே கொண்டு வருகிறார்களோ அவர்கள் இவ்வுலகில் வாழ்க் கைப் பயனை எய்தியவர்கள்"

சர்ப்பங்கள் என்பதால் பகைவரையும் ஆபரணங்களாக; ஐம்புலனும் மற்றுங் கருவி கரணங்களும் தன்னுள் அடங்கவே நிட்டை கூடுவர். இருள் சூழ்ந்த ஐம்புலன்களாலாக்கப்பட்ட பிரதேசத்தைப் பிளந்து அப்பால் சென்றே நிட்டை கூடுவர், நிட்டையில் தில்லைத்தரிசனங்கண்டு இன்புறுவர், கற்றுணர்ந்த அறிஞர்கள் சாதனைபுரிவார்கள். கல்லாத மூடர்களுக்கும் (120) ஒரு மொழியாகிய 'சிவ சிவ' எனும் மாமந்திரத்தை சிவகுரு அருளிய 'சிறு பல்லி' எனும் உண்மைஎழுத்தெனுங்குறிப்பால் நன்குணர்ந்து உபாசிக்கவே (சிவானந்த லஹரியில் - குறிப்பிட்ட பிரகாரம்) இருள் சூழ்ந்த பிரதேசத்தை அவர் திருவருளால் பிளந்து சென்று நிட்டைகூடி அவன் பாதத்தை அடையலாம் களிப்புடனே நல்வரவு சொல்லு கும் மா இருக்கும் சொரூபமே நீயே குருநாதனே'' என்றழைக்கிறார். (1)

192. காமாதி குணமெல்லாங் கட்டவிழு மாகில்
கருணையே வடிவான கடவுள்வரு மாகில்
தாமாக எழுந்தருளும் தாணுவரு மாகில்
சடுதியாய் நல்வரவு சொல்லுசிறு பல்லி.

ஐம்புலனும் அந்தக் கரணங்களுங் கொண்ட மூப்பத்தைந்து கருவி கரணங்களுந் தன்னுள் னடங்க முக்குணங்களால் உண்டான கயிறு, ஆறுறு தத்துவங்களுந் தன்னுள் அடங்க வெளியாகிய ஆள், அந்த ஆளைப்பிணித்திருந்த கயிறு அவிளவும், ஆள் வெளியாகுமாகில் நல்வரவுசொல்லு தன்வயத்தனாகவே பாசங்களினீங்குதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல் பேரருளுடைமை முடிவிலாற்றலுடைமை (191) எனும் இறைவன் எண் குணங்களும் தன்னுள் உண்டாக வைக்குங் கருணையே உருவான திருவருள் வருமாகில் (188 உரை கடைசிப் பக்கங் காண்க) நல்வரவு சொல்லு; எண் குணங்கள் (191) காண்க. ஆறுறு தத்துவங்களும் தன்னுளடங்க ஐம்புலக் கயிறு அவிள சும்மா இருக்கும் சொரூபமாய் விளங்கும் இருதயம் உதயமாகும். அகம் சிவலிங்க வடிவாகும் இயற்கையாகவே பாசங்களினின்றும், நீங்கிய அகம் சிவலிங்க வடிவாக விளங்கும், சடுதியாக சும்மா இருக்கும் சொரூபமே நீயே குருநாதனே எனும் பல்லியை கூவு. (2)

193. தத்துவம் ஆறுறும் வெந்துவிடு மாகில்
தானென தன்மை வந்து தலையெடுக்கு மாகில்
பத்தர்களை நீங்காத பரமன்வரு மாகில்
பக்குவமாய் நல்வரவு சொல்லுசிறு பல்லி.

தத்துவங்கள் ஆறுறும் கடப்பதை கீதையில் காண்போம்.
''அர்ச்சுன, வேதங்கள் மூக்குணமான ஸம்ஸாரத்தைப் பற்றியவைகள்

நீ இருமை களினின்றும் விடுபட்டு எப்பொழுதும் நடுவுநின்று யோக க்ஷேமங்கள் அற்று ஆத்ம சொரூபத்தில் நிலைத்திருந்து முக்குணங்களைக் கடந்தவனாகுக. (கீதை 2 - 45)

''வினையாற்றக் கடமைப்பட்டுள்ளாய்; வினைப்பயனில் ஒருபோதும் உரிமை பாராட்டாதே; வினைப்பயன் வினைவிப்பவன் ஆய்விடாதே; வெறுமனே இருப்பதில் விருப்புக்கொள்ளாதே'' (கீதை 2 - 47)

நிஷ்காமிய கருமம் புரிந்தே சும்மா இருக்கும் சொரூபமாக விளங்கும் அகம் உண்டாகும் (192) ஆறாறு தத்துவங்களும் வேகும்; மாமையெழுதது 'ஓம்' எனும் உண்மை வருமாறு.

சரியையின் தொழிலிலைலுஞ் சற்கிரியையினும் யோகம்
புரிதரு முயற்சியானும பொருந்தொணதென்பர் மேலோர்
உரியதே சிகனுரைக்கும் ஒருமொழியுண்மை யாலே
அரிய மெய்ஞ்ஞானவீ டிங்கடைவதுதிண் ணமாமே.

(நிஷ்டானுபூதி 3)

நிட்டை கூடிய அகத்தே சிவலிங்க வடிவான அகத்தே (192) தில்லைச்சிற்றம்பல தரிசனங்காண்பான். தியாகி தன்னையே அந்தச் ஜோதியாக தன்னுள் காண்பான், நீக்கமற வியாபியாக களவடிவாக எப்பொருளிலும் தன்னிலும் ஒன்றுக விளங்கும் அம்மையப்பரைக் காண்பான். அவர்களைக் கட்டியிருந்த மலப்பிணிப்பான கயிறு வெந்து விட்டது, ஆறாறு தத்துவங்களும் வெந்துவிட்டது. வெந்த கயிறு பின் கட்டுந் தன்மை யற்றது; பின்னும் தத்துவங்கள் அவனுக்கு வேறுக நின்று உலகியலில் பற்று வைக்க அவனைத்தூண்டா (155) பத்தர்களை நீங்காத பரமன், சிற்றம்பலதரிசனம், வருமாகில் களவுபடா இதயத்தே (53) நலஞ்சுழியா இன்பமுங்கண்டே (கலஞ்சுழிகுங்கருங் கடல் சூழ் 55) பக்குவமாய் நல்லரவு சொல்லு சிறுபல்லி. (3)

194. ஒளிக்கொளியைக் கொடுக்கின்ற ஒருவன்வரு மாகில்
உண்மைநிலை என்மனத்தில் மெல்லவரு மாகில்
வழியடிமை கொள்கின்ற வள்ளல்வரு மாகில்
வருத்தமின்றி நல்வரவு சொல்லுசிறு பல்லி.

சும்மா இருக்கும் சொரூபமாக விளங்கும் அகம் சிவலிங்மாம் நிட்டைகூடித் தில்லைத்தரிசனங் காண்பான் ஆன்மாவைப் பிணித்திருக்கும் மும்மலப்பிணிப்பு வெந்து போனது. உயிர்க்குயிராம் நாதன் ஒளிக் கொளியைக் கொடுக்கின்றவன், தத்துவாதீதனுக விளங்கும் முழுமுதல் வன்எண்குணமுடையோன் மெல்ல மெல்ல எழுந்தருள்வன் (களவுபடா இருதயம் 53) நலஞ்சுழியா இன்பம் (55) இவற்றை மெல்ல மெல்ல

அனுஷ்டான முறையில் அறிவு சொரூபமான அகம் இயற்கையாகப் பாசங்களினீங்குந்தன்மையாலும் மூடிவிலாற்றலுடைமையாலும் பேரருளுடைமையாலும் மற்றும் எண்குணங்களுடைமையாலும் உண்மை நிலையடையச் செய்வான்.

இவற்றை மூலர் அறியத் தருகிறார் காண்க:

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுள்ளே உறுபொருள் கண்டேன
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை ஞனிருந் தோம்பு கின்றேனே.

'சிவகுரு' வடிவாக எழுந்தருளின சும்மா இருக்கும் சொரூபமே நீயே அகமே" எனும் சிறுபல்லி வழியடிமை கொண்டு உதவி நிற்கவே முன் கூறிய உண்மை நிலை மெல்ல மெல்ல வரும் என்றார். மேற்கூறிய சிறுபல்லியே வழியடிமை கொள்ளும் வள்ளல்?

ஸ்ரீ இராமகிருஷ்ணர்:- பகவானை நோக்கி நாம் ஒரு அடி வைத்தால் அவன் நம்மை நோக்கிப் பத்து அடி வருகிறான். (மேலும்) "பார்த்தா வேறு எண்ணமின்றி யார் என்னை நெடிது இடையறாது ஸ்மரிக்கிறானே அந்த இருநிலைப்பட்ட யோகிக்கு நான் எளிதில் அகப்படுகிறேன்" (கீதை 8-14) முழுமுதல்வனே வழியடிமை கொண்டு நிற்க இலகுவில் அவனையடைய வருத்தமின்றி நல்வரவு சொல்லு. (1)

195. சொல்லமுடி யாதபொருள் சொல்லவரு மாகில்
சும்மா விருக்கின்ற சுகங்கிடைக்கு மாகில்
எல்லாருங் காணவெனைப் பித்தேற்று மாகில்
இன்னுமொருக் கால்வரவு சொல்லுசிறு பல்லி.

(மூன்பாட்டு விளக்கம்) சும்மா இருக்கும் சொரூபமே நீயே குருநாதனே முருகா என்றழைத்த வள்ளியின் அகத்தே முருகனே வள்ளியாக நின்று செயல் புரிந்தான் என்கிறார்கள். வள்ளி கூவ வந்து வள்ளியின் அகத்தே நின்று செயல் புரிந்த முருகனே சிவன், 'சொல்ல முடியாத பொருள்' முருகன் பார்வதியின் இளையமைந்தன். குழந்தை முருகன் தாயின் இயற்கை கொண்டே செயல்புரிவான், அதுவே அதன் உண்மை. இயற்கைவடிவினளாகச் செயல்புரிந்தாள். இந்தச் சொல்ல முடியாத பொருளே திருமூலர் சொல்லுகிறார்:

குறியாக் குறியினில் கூடாத கூட்டத்து
அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய்
நெறியாம் பராநந்தி நீடருள் ஒன்றுஞ்
செறியாச் செறிவே சிவம் எனலாமே. (திருமந்திரம்)

இந்தச் 'சிவம்' எனும் சொரூபம் அறிவு சொரூபம்: களிவடிவாக விளங்கும் உலகினில் தன்னை இழந்து 'யானெகிய வென்னை விழுங்கி வெறுத்தானுய் நிற்பது தற்பரம்'' என்னுந் திருமூலர் வாக்கியத்தால் விளங்குவது போல், தன்னையும் அந்த உலகியல் யந்திரத்தில் சுழலும் ஒரு பொருளாகக் காண்பான் தியாகி அதுவே அறிவு சொரூபம். அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நெறியாம் முருகளே வள்ளி யாகச் செயல் புரிந்த நெறியாய், பராநந்தி முடிவில் ஆற்றல் வடிவாய் நின்று அருள் புரிய ஒன்றும் விளங்கா ஒன்று தோன்றுவதே, சிவகுரு வடிவே, முருகனே; அதுவே சிவனெனலாம்.

''தூசா மணியும் துகிலும் புனைவான் நேசா முருகா''

கந்தர் அனுபூதி (மறுபக்கம்) இந்தச் சும்மா இருக்கின்ற அறிவு சொரூபமே அகமாய் விளங்க அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் பித்தேற நான் தேனென்றும் கோனென்றும் கட்டிக் கரும்பென்றும் அந்த அழியா இன்பத்தேனைப் பருகிநிற்க அருள்புரிவாயாகில் இன்னு மொருக்கால் நல்வரவு சொல்லு சிறு பல்லி.

(6)

196. தேனுந்து கொன்றையணி செல்வன்வரு மாகில்
சிவகாமி பங்கிலுறை தெய்வம்வரு மாகில்
நானும்நீயு ஒன்றுகி நிற்கவரு மாகில்
நல்லகுரல் நல்வரவு சொல்லுசிறு பல்லி.

முன்பாட்டு விளக்கம்: களை ரூபமான உலகில் எளிமை இழந்து நந்தி தரிசனத்தில் தடத்தப் பொருளாகவும், ஜோதி வடிவானசைதன்யப் பொருளாகச் சிற்றம்பல தரிசனத்திலும், நீயும் நானும் ஒன்றுகி உமையோர் பாகமாக விளங்கும் உன்னை, கொன்றை மாலையை யணிந்து விளங்கும் எம்பெருமானைக் கண்டுதரிசிக்கலாமென்றுரைத்து நல்ல குரல் நல்வரவு சொல்லு சிறு பல்லி; மாணிக்கவாசகர் ''கொன்றை மதியமும் கூவிளமத்தமும் துன்றிய சென்னியர் அன்னை யென்னும்'' என்று அன்னைப்பத்தில் தருகிறார்.

தாயுமானவர் நானும் நீயும் ஒன்றுகி பங்கிலுறை தெய்வம் என் பதைத் தருகிறார்:

''அண்டபிண்டங் காணேன் அகமும் புறமும் ஒன்றுகக்
கண்டஎன்னை நீ கலந்த காலம் பராபரமே.

பராபரக்கண்ணி, 279 (6)

197. வேதமறி யாதபொருள் விரைந்துவரு மாகில்
மேவுமிட மெங்குமறி வாகிவரு மாகில்
நாதமுடி மேல்நடனம் நாம்காணு மாகில்
நல்லகுரல் நல்லதிசை சொல்லு சிறு பல்லி!

மறை யெனப்படும் வேதம் நடந்து செல்லும் வழியாகவும் முறை யெனப்படும் ஆகமம் அவ்வழியிற் செல்லுவதற்கு விட்டு நீங்காது தாங்கிச் செல்லும் குதிரையாகவும் அமைந்துள்ளன. நாம் அடையும் பொருள் 'சொல்ல முடியாத பொருள்' வேதமறியாத பொருள்; மேற்குறிப்பிட்ட வண்ணம் நாம் விரைவில் அடைய, அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் (195) நெறியாம் அறிவு சொரூபமாய் விரைவில் நாம் காணும் பொருளனைத்தும் தேவியின் ஓசையாகவும்; அந்த நாதத்தின்மேல் அறிவினால் அறியப்படும் தில்லைக் கூத்தையே நாம் காண வருமாகில் நல்ல குரல் நல்ல திசை சொல்லு; ஆன்மா பேதமற்றது (160) பேதமில்லதோர் கற்பனித்த பெருந்துறைப் பெருவெள்ளமே (சிவானந்த வெள்ளமே) என்கிறார் மாணிக்கவாசகர். மேலும் அவர் பிணக்கிலாத பெருமான் என்றுங் கூறுகிறார். ''எல்லாஞ் சிவன் செயல்'' 'கொலைப்பாதகமும்' 'அன்னதானமும்' 'ஒரே சிவன் செயல்' இரண்டுக்கும் இடையில் பிணக்கு வித்தியாசம் பேதம் இல்லை. இறைவன் நடனம் யாவும் தேவியின் ஓசையின் மேல் அவன் தில்லை நடனம்; காண்பவன் மெய்யன்வன்.

"வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும்
நாதாந்த மோனநலமே பராபரமே"

(தாயுமானவர் பராபரக் கண்ணி 206) (7)

198. தொந்தோமென் றாடுந்திருப் பாதம்வரு மாகில்
சுரிகுழலாள் பாகனார் இங்குவரு மாகில்
வந்தோம்வந் தோமென்னும் அடிகள்வரு மாகில்
வளப்பமுடன் நல்லகுரல் சொல்லுசிறு பல்லி!

பொற்சபையில் தொந்தோமென, நடளம் ஆடும்எம்பெருமான் திருப்பாதம் வருமாகில் (முன்பாட்டு விளக்கம் நாதமுடிமேல் நடனம் நாம் காணுமாகில்' காண்க) நல்ல குரல் சொல்லு சிறுபல்லி. சுரிகுழலாள், ஓசைவடிவாக விளங்குபவள்; ஓசையை இயக்கும் முழு முதல் வனுடன் கூடியே சிவமாம் சொரூபமாக விளங்குந் தன்மையது (195)

அந்தச் சிவமாம் சொரூபம், தொந்தோமென ஆடும் திருப்பாதம், நாம் அழைக்கக் கூடிய வேகத்துடன் (194 உரை ஈற்றில் காண்க) வந்தோம் வந்தோம் என, அந்தச் செறியாச் செறிவெனும் சிவம், (195) எம் சும்மா இருக்கும் சொரூபமாக விளங்கும் அகத்தே அது வந்தேக மாம் நம்மறிவில் நாம்காணவேலுமாகில் அழகுதர நல்ல குரல் சொல்லு சிறு பல்லி. ஓசை வடிவினள் தேவி; நாதமுடி மேல் நடனம் அருளுபவன் முழுமுதல்வன், முழுமுதலவன் பாதமே தொந்தோமென ஆடும் திருப்பாதம். அந்தத் திருப்பாதத்தைத் தரிசித்து அவிழ்ந்தேக சித்தமாய் அதனில் கிடப்பதே மோனத்து முத்திரை. மோனத்து முத்திரையில் தொந் தோமெனும் நடனம் நாம் காணலாம். திருமூலர் தருவதைக் காண்க.

தானத் துள்ளே சதாசிவ னுயிடும்
ஞானத் துள்ளே நற்சிவ மாதலால்
ஏனைச் சிவமாஞ் சொரூபம றைந்திட்ட
மோனத்து முத்திரை முத்தாந்த முத்தியே.

அண்டங்கள் ஏழினுக் கப்புறத் தப்பால்
உண்டென்ற சத்தி சதாசிவத் துச்சி மேல்
கண்டங் கரியான் கருணைதிரு வுருக்
கொண்டங் குமைகாணக் கூத்துகந் தானே. (8)

199. வெள்விடைமேல் உவந்தேறும் விமலன்வருமாகில்
வேதத்தினுட் பொருள் விளங்க வருமாகில்
எல்லவர்க்கும் பொதுவில்நடம் நாம்காணு மாகில்
இன்னுமொருக் கால்வரவு சொல்லுசிறு பல்லி!

எம்பெருமான் அருவாம் சொரூபம். அவனை உயிரில் உயிருள் பொருள் அனைத்திலும் வியாபியாக நீக்கமற நின்று இயங்குந் தன்மையைக் கண்டே 'பூதங்கள் தோறும் நின் ரூய், என்கிறார் மாணிக்கவாசகர். வேறெவ்விடத்துக் காணலாம்? தம்மை இரட்சிக்க வேண்டுமென்ற ஆன்மாக்களிடம் அன்புபூண்டு அருள் புரிவர்; அங்கே விடையேறி என்பர். அப்பர் சுவாமிகள் 'தழைத்த சடையர் விடையொன்றேறிதரியார் புரமெய்தார்' என்று போர் புரிந்து முப்புரங்களையும் எரிக்கும் விடையைக் காண்பிக்கிறார்.. அதைப் 'போர் ஏறு' என்பர். இராமனுக்கு முப்புரங்களையுமெரிக்கும் 'போர் வீரன்' எனப்பெயர், பாசங்களினீங்கும், முக்குணங்களால், முக்குணவிகார தேவர்களால். பிரமா விஷ்ணு உருத்திரன் முதலியோரால் வாழ்வில் அலைக்க அலையும் ஆன்

மாக்கள் வீண் எண்ணங்களாலேகல்விச் செருக்கும் செல்வச் செருக்கும் உண்டாக்கும் எண்ணங்களாலே அலையும் ஆன்மாக்களை அவன் ஊர்தி யாகக் கொண்டு வெள்விடையேறி, வருவான் என்பர். செருக்குகள் அற்ற அறநிலையில் 'பால் பசு' என்று சங்கரர் சிவானந்தலஹரி சு 68 ல் தருகிறார். அது 'முக்தியின்பம்' எனும் பால் கறக்கும் என்கிறார்.

அந்த வெள்விடைமேல் விமலன் உவந்தேறி முக்தி எனும் பாலைக் கறந்து தருவானெனில்—இங்கே பால் பசு என்றே கொள்ளவேண்டும்.—அந்த விமலன், வேதத்தின் அந்தமும் மிக்க சித்தாந்தமும் ...—' எனும் பாட்டால் தரும் ஆறங்கமானுர் என்னும் பொருளுடன் (55) விளங்கும் விமலன் வேதத்தினுட்பொருளாக விளங்குபவன் (191) வருவானெனில் சொல்லு சிறு பல்லி; அன்புசிவம் இரண்டென்பர் (27) எனுந் திருமூலர் திருமந்திரத்தில் அன்பே சிவமாய் அமர்ந்திருக்கும் எம்பெருமான், முழுமுதல்வன், விநாயமுதலாம் முதலவன் விநாயப்பயன் எனும் அம்ப லத்தே அறிவிலிகள் அறிஞர்கண் எல்லார்க்கும் பொதுவில் நடம் புரிபவனை,

கொலைபாதகம், அன்னதானம் மற்றும் எத்தொழிலையும் பேத மிலா பொதுநடம் நாம் காண அருள் புரிபவனை, சிறுபல்லி சும் மா இருக்கும் சொரூபமாகவே விளங்கும் அகம், 'செறியாச் செறிவு என் னும் சிவம்' அருள் தருமாகில் நல்வரவு சொல்லு சிறுபல்லி. (9)

200. பூதங்கள் ஐந்தான புனிதன்வரு மாகில்
புன்னெறியிற் செல்லாத சிந்தைவரு மாகில்
தாதவிழும் சடையப்பன் இங்குவரு மாகில்
தண்மையுடன் நல்வரவு சொல்லுசிறு பல்லி!

ஐம்பூதங்களும்கொண்ட முப்பத்தைந்து கருவிகரணங்களுந் தன்னு ளடங்கவே ஆள்தத்துவாதீதனை எம்பெருமான் கோயிலாக விளங்குப வன் (65) மாணிக்கவாசகர் ஐம்பூதங்களுமாக பாரில் காணப்படுபவள் அறிவுப் பெருவெளியில் ஒன்றுய் விளங்குகிறுள் என்கிறார்

"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றுய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றுய் விளைந்தாய போற்றி

(போற்றித் திருவகவல்-வரி 137 - 141)

(முன்விளக்கம்) 'பொது நடம் நாம் காண, [199 வாசிக்க] பேத மில்லாத சிவன் செயலையும், வினைப்பயன் எனும் அம்பலத்தே பொது நடம் புரியும் எம்பெருமானையும் நாம் கண்டும், தாயுமானவர் இவற்றை ''உணர்த்து முன் நாடா துணர்ந்தவையே நாடி இணக்குறு மென் ஏழமைதான் என்னே என்னே'' என்று பேதந்தரும் செயல்களை நாடி இணக்குறும் ஏழமையைக் குறிக்கிறார்; புனிதம் தரும் அன்ன தானமும் சிவன் செயலாகப் பாரதப்போரில் துரியோதனாதிகள் கொலை யுண்டு இறந்த துன்பம் தரும் போரும் ஒரே தன்மையுடையது; எனும் பொருள் தரும் பொதுநடம் நாம் கண்டு புன்னெறியிற் செல்லாத சிந்தை, 'சும்மா இருக்கும் சொரூபமே நீயே குருநாதனே' எனும் அகத்தினராய் செறியாச் செறிவு எனும் சிவம் கண்டு, அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் 'கற்கண்டே இன்பத்தேனே, என்னும் உள் ளத்தே நாம் காணும் தாதவிழும் சடையப்பன், கருணை பெருகும் உளமுடையோனிங்கு வருமாகில் கருணைபுரிய நல்வரவு சொல்லு நீ நெறி கண்டுளம் நின்மலனுகுமே'' என்று திருமூலர் தருகிறார். (10)

201. பாடல்பத்தும்படிப்போர்கள் கேட்போர்கள் எல்லாம்
பங்கமின்றி வாழ்ந்துபின் பரமனரு ளாலே
வீடகத்தே புகுந்திடுவர் மெய்மையிது வாகும்
விட்டுவிட்டு நல்லகுரல் சொல்லுசிறு பல்லி
ஜிவன் முத்தனுக வாழ்வான் பிறப்பையறுப்பான் (11)

40 ஸ்ரீ நடராஜன்

இராகம் ஸருட்டி தாளம்-ஆதி

பல்லவி

இராஜாதி ராஜன் ஸ்ரீ நடராஜன்

அனுபல்லவி

ஆசாபா சமகற்றும் அன்பு விலாசன் (இராஜா)

சரணம்

202. மாசில்லா மாதவர்தம் மனத்திற்பிர காசன்
மறுமைக்கும் இம்மைக்கும் இவனென் சினேகன்
(இராஜா)

தேசம் புகழுந்திரு வண்ணையில் வாசன்
சிவகாமி யம்மை சேவிக்கும் நேசன் (இராஜா)

உரை:- நிட்டை கூடின அகத்தே திருத்தில்லைச் சிற்றம்பல தரிசனங் கண்டே அதை வர்ணித்தல்; மூவாசை ஆகிய மண், பெண் பொன் எனும் மூன்றையுந் துறந்து, ''வைத்த உடல் பொருள் ஆவி மூன்றும் உன்கைவசந் தந்தேன் என அவனிடம் ஒப்புவித்தால் அவன் என்பெலாம் நெக்குடைய ரோமஞ் சிலிர்ப்ப உடல் இளகமனது அழலின் மெழுகாய் இடையருதுருக இரங்கியே மழைபோல் இருவிழிகள் நீர் பெருக அன்பிஞல் மூர்ச்சித்த அன்பருள்ளத்தே அமிர்த சஞ்சீவிபோல் வந்தான் அந்தச் 'சிவ சிவ' எனும் மாமறையால் உணர்வு தரும் பொருளான கோடி சூரியவொளி கொண்டு பிரகாசிக்கும் நேசன் தில்லை வாசன். மறுமைக்கும் இம்மைக்கும் இவன் எனக்கு இனபந்தருபவன்

வண்ணையில் உள்ள கோயிலில் வீற்றிருக்கும் எம் பெருமானே! பண்ணீனேர் மொழியாள் பாகனே பஞ்சின் மெல்லடியாள் பாகனே உருவில் திகழும் உமையாள் பங்கனே, ஓசைவடிவாக நின்று பண்ணின் இசை போன்று, சுருகுழலாள் உம்மை இணைபிரியாதே, பேரொளியுடன் பிரகாசிக்கும் உம்முடைய பாகமாக அலங்கரிக்கிறுள்; நீங்கள் ஒளியைக் கொடுத்தால் அவளே அந்த ஒளியைக் கொண்டு உலகுக்கு பிரகாசத்தை அளிப்பவள். நீங்கள் கொடுக்கும் ஒளியுடன் அவள் பிரகாசிக்க, நிழலைக் கண்டே உமமைத் தரிசிக்கிறோம். வண்ணையில் வாழும் ஸ்ரீ நடராஜனுக்கு எங்கள் வணக்கம்.

41 சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்

203. சிவதொண்டுசெய்வார்க்குச் செல்வமுண்டுகல்வியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சீருமுண்டு பேருமுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சிந்தைத் தெளிவுமுண்டு
சிவதொண்டு செய்வார்கள் சேருவரோ தீநெறியில்

மேலேவேருள்ளதும்கீழேகிளைகளுள்ளதும் ஆகிய ஆலமரம் போன்ற சம்சாரத்தை அழிவற்றது என்கின்றனர். வேதங்கள் அதன் இலைகள் அதை அறிபவனே வேதத்தை அறிபவன் ஆகிறுன். (கீதை 15-1)

ஆலம்விழுது மேலே சத்தை வாங்கிக் கொண்டு கீழ் இறங்குவது மாயப்பிரபஞ்சம் மேலே பரம்பொருளிடமிருந்து (1) * சத்தை வாங்கி வாங்கிக் கீழே பிரகிருதியாகப் பரிணமிப்பது. நலம்கேடு ஆகிய இரண்டையும் பெறுதற்கான வழிகளை வேதம் விளக்குகிறது. பிரம்மஞானம் அடையும் வரையில் இப்பிரபஞ்ச வாழ்க்கைக்கு முடிவில்லை. 'சந்தைக்கு புறத்தே (மஹா) என்ற சத்தத்தையே கேட்கிறோம். உள்ளே நுழைந்தவுடன் உருளைக்கிழங்கு விலையும் கத்தரிக்காய் விலையும் பேரம் பண்ணு

தலைக் கேட்கிறேரும். அவ்வண்ணமே ஈசுவரனுக்கு தூரத்தே காரண காரியத்திலும், நெருங்கியதும் தெய்வீக ரகசியங்களை ஸ்பஷ்டமாகவும் அறிகிறுன்' (ஸ்ரீ இராமகிருஷ்ணர்)

தரையின் மீது நிற்கும் மஹிஷாசுரனை மேலே நிற்கும் அம்பிகை மர்த்தனம் புரிகின்றுள் மஹிஷாசுரன் தமோகுணப் பிரதிநிதி; துர்க்கை ரஜோகுணப் பிரதிநிதி; அம்பிகைக்குமேல் நின்று ஒளி கொடுப்பவன் தூவெண் சதாசிவன் ஆத்ம நிஷ்டையில் இருக்கிறுர். வெண்மை நிறம் சத்வ குணத்தைக் காட்டுவது. பிரம்ம ஞானத்துக்கு இடம். கர்மத்தின் போராட்டம் தமோ குணத்தாலும் ரஜோ குணத்தாலு முண்டாவன. தமோ குணத்தை அழித்து ரஜோகுணத்தையும் நன்கு குறைத்து வெறும் சத்வ குணத்தில் வாழ்வதே பிரம்மஞானமடையும் வழி. (சித்பவானந்தர்)

கல்வியும் செல்வமும் தானமும் தருமமும் சீரும் பேரும் தமோ குணத்தை ஒழிக்கும், ரஜோ குணத்தைக் குறைத்தும் சத்வகுணத்தை உண்டாக்கி தமோ குணத்தில் உண்டாகும் தீ நெறிகள் விட்டகல தெளிந்த சிந்தை பிரம்ம ஞானத்துக்கிடமாகும்.

* பரம்பொருள் விநைமுதலாம் முதல்வன். (1)

204, சிவதொண்டு செய்வார்கள் திசையெட்டு மாளுவார்
சிவதொண்டு செய்வார்கள் சென்மமல நீங்குவார்
சிவதொண்டுசெய்வசார்கள்தேவரையுமேவல்கெசள்வார்
சிவதொண்டு செய்வார்கள் செத்துப் பிறவார்கள்

ஓசைவடிவான அம்பிகை பாகமாகக்கொண்டசதாசிவன் திசையெட்டுமாகவிளங்குபவன் ஓமெனும் ஓங்காரத்து உண்மையை தானமளிப்பர் தானத்துள்ளே சதாசிவனையிடும் என்று மூலர் குறிக்கிறுர். பிரம்மஞானம் உதிக்க சென்மமலம் நீங்கும். பிரம்மஞான மடைந்த ஞானியை தெய்வீக ரகசியங்கள் தாமே வந்தணைந்து ஏவல்புரிய சாதல் பிறத்தல் எனும் படுசுழி ஸம்சார வாழ்க்கைக்கு அப்பாலாகிறுன். (2)

205. சிவதொண்டு செய்து திருமாலுல காண்டான்
சிவதொண்டு செய்துதிரு வாரூரன் சிவமானன்
சிவதொண்டு செய்தரசன் சேர்ந்தான் கழல்முன்னுள்
சிவதொண்டுசெய்வசர்க்குமுண்டோகுறைசொல்வாய்

திருமாலவதாரம்; தசாவதாரம் சனசுன், சனந்தனன், சனற்குமாரன், நரநாராயணன், தத்தாத்திரேயன், மோகினி வேள்வியின் பதி, வியாதன், தன்வந்திரி, புத்தன் என்ற அம்சாவதாரங்கள் திருமால் நிலை; பரம், வியூகம், விபவம், அந்தரியாமித்வம், அர்ச்சை என்ற ஐந்துமாம்,

சிவனுடைய பத்தினியாயிருப்பதும், திரிபுரஸம்காரத்தில் விஷ்ணுவே சிவன் கையில் பாணமுமானர். சிவதொண்டு செய்தே அந்தரியாமித்துவ நிலையில் ஹரிகரவடிவாகிய உடலிலும் பங்கு கொண்டுள்ளார்; உலகாண்டான் 'வாதவூரினில் வந்தினிதருளிப் பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்' 'மாசின் மணியின் மணிவார்த்தை பேசி' என்னும் திருவாதவூரனின் வார்த்தைகளால் அவன் தொண்டு புரிந்து சிவகாமியம்மைபாதச் சிலம்பொலி காட்டிய தரிசனங் கண்டார். மணிவார்த்தைகளால் அவற்றைப் பாடினர். ஜனகமகாராசன்; சிவதொண்டாகவே அரசு புரிந்த மிதிலையரசன் சிவபதமடைந்தார். (3)

206. சிவதொண்டு செய்வார்க்குச் சினமில்லை அச்சமில்லை
சிவதொண்டு செய்வார்க்குத் தீயவகங் காரமில்லை
சிவதொண்டு செய்வார்க் கிரவும் பகலுமில்லை
சிவதொண்டு செய்வார்க்குப் பழியூ ணுணவுமில்லை!

சிவதொண்டு புரிந்து பாசபந்தக் கயிறு எரித்தவர்கட்கு மூவாசையினால் உண்டாகும் அச்சம் கோபம் மற்றும்தீய அகங்காரம் சந்தோஷம் துக்கம் நல்ல காலம் கூடாத காலம் கிடையா. ஆற்றல் வடிவான அகங்காரமுண்டு; கிடைத்ததை கிடைக்கும் நேரம் இறைவன் அனுக்கிரகமென்றே உண்பதால், தனக்கெனச் சமைத்து உண்ணுமையால் பசியூணுணவுமில்லை. என்கிறார். முடிவிலாற்றலுடைமையால் இறைவனேயடையும் ஆற்றல் அகங்காரமும் உன்மத்தகுணமும் உண்டு: உடம்பின் நயத்துக்காக மனம் ஐம்புலன்களால் தூண்டப்படும் அகங்காரங் கிடையா என்கிறார். இரவில் துன்பமும் துக்கமும் அடைவார், பகலில் இன்பமும் சந்தோஷமும் அடைவார். இரண்டு மற்றவர்க்கு இரவு பகலில்லை. (4)

207. சிவதொண்டு செய்வார்க்குச் சாந்தம்பொறுமையுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் திரிகாலவுணர்ச்சியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் தீயபிணி நோயில்லை.
சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போலிவார்.

(முன் விளக்கம் தொடர்) பாச பந்தக் கயிறு எரிந்தவர்கட்கு மூவாசை யால் உண்டாகும் அச்சம் கோபம் ஒழியச் சாந்தம் பொறுமையுண்டு; தில்லைத்தரிசனங் கண்டு, உலகமாகிய அன்னையப்பனும், தாமும் ஒன் றாகக் கண்ட தன்மையினால் வேண்டும் நேரம் வேண்டும் அறிவை அம் மையப்பர் கொடுப்பார்கள்; திரிகால வுணர்ச்சியுண்டு; சிற்றின்பமா கிய நஞ்சைக் கண்டத்தில் வைத்தும்; உண்டு அதன்பயனை கர்மபல னும் இறப்பும் பிறப்பும் நேராமல், இறைவன் போல் தம்மைப் பாதுகாப்பார்கள், சிவதொண்டு செய்து பாச பந்தக் கயிறு எரித்த பக்தர்கள். ஆனபடியால் இன்பம் துன்பம் இரண்டும் ஒன்றாகவே, பேரின்பம் தரும் சிவானந்த வெள்ளம் என்றும் கருணை வெள்ளம் பெருகவும் சாந்தம் விளங்கவும் கங்கையும் பிறையுமணிந்தவர் போன் றும் நீலகண்டன் போன்றும் ஐம்புலன்களாகிய பாம்பைத் தன்னுள டக்கி பகை வரையுமுற வோராக புஜங்கப் பூஜனாகவும் தெய்வம் போல் வாழ்வார். (5)

42 கூவு குயிலே

208. கூவுகுயிலே பறந்து கூவுகுயிலே
கும்பிடுவார் மனத்தானைக் கூவுகுயிலே

குயில், குயிலின் ஓசை, இறைவனுடையஒளி, ஒளிதரும்ஞானப் பொ ருள் ஞான உணர்ச்சி, இவையே இங்கு குறிக்கிறார் மாணிக்கவாசகர் திருப்பள்ளி எழுச்சி எனும் பதிகத்தில் போற்றி என் வாழ் முதலாகிய பொருளே புலர்ந்தது என்று முதல் பாட்டிலும், அருளால் அருணன் இந்திரன் திசை யணுகினன், என்று இரண்டாம் பாட்டிலும், அதிகா லையில் வெளிச்சம் தென்படுவதும், சிறிது நேரத்தால் கிழக்குத் திசை யில் சூரியன் உதயமானான் எனும் பொருளுடன் பாடுகிறார். ஞான ஒளி, இறைவன் ஒளியே அவர் கூறும் ஒளி, மூன்றும் பாட்டில் 'கூவின பூங்குயில் கூவின கோழி குருகுகள் இயம்பின, என்றும் பாடுகிறார்.

அறிவுப் பெருவெளியாகிய சித்தாகாசத்தின் கண் பறந்து ஒளியைப் பெருக்கு; கும்பிடுவார் மனத்தினில் உள்ளத்தே தோன்றும் ஒளிப் பெருக்கை ஞான உணர்ச்சியாக, இறைவனுடைய நிழல் ஓசை வடி வங்களாகக் காட்டு.

209. நாவுக் கினியவனே நல்லகுயிலே
நம்பனே யிங்குவரக் கூவுகுயிலே

(முன்பாட்டு தொடர) அறிவுப் பெரு வெளியாகிய சித்தாகாசத்தின் கண் ஒளி பெருகப் பெருக அவனுடைய புகழைப் பாடி பணிந்தேத்தி

அறிவுப் பெருவெளி முழுவதும் இறைவனுடைய ஒளியும் ஞானமுமாக விளங்கவே சிவலிங்க வடிவாக விளங்கும் அகம் நிட்டை கூடியே தில் லைத்தரிசனம் காணும். (2)

210. சிவன்சிவ னென்றுசொல்லுஞ் சித்தர்குழாம்
தேடும் பொருளேவரக் கூவுகுயிலே

சும்மா இருக்குஞ் சொரூபமே நீயே என்று தம் அகத்தே வளரும் குயிலோசையைக்கூவியழை. ''அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம்'' என்று திருமூலர் கூறினர்[(195) (சூறியாக்குறியினில்)]வேறோர் நிலையுமின்றி குயிலோசை வடிவாக தம் மகத்தே தோன்றிய ஒளியை பாடலுடன் ஆடல் பயின்றும் பணிந் தேத்தியும் கூவி அழையுங்கள். (3)

211. நாவலரும் பாவலரும் பணிந்தேத்தும்
நல்லசிவ லிங்குவரக் கூவுகுயிலே.

திருவள்ளுவநாயனார் போன்றநாவலரும் அப்பர் ஞானசம்பந்தன் மாணிக்கவாசகர் போன்ற பாவலரும் பணிந்தேத்திச் சிவபதமடைந் தார்கள். அவர்கள் பணிந்தேத்தியும் புகழைப்பாடியும் சென்ற அவ் வழி நின்றுநாமும் அவ்வாறே அகம் சிவலிங்க வடிவாக எழுந்தருள நம் குயிலோசையே கூவாய். (4)

212. தேன்சொரியுஞ் சோலையில்வாழ் தெய்வக்குயிலே
தேவாதி தேவன் வரக் கூவுகுயிலே

பாசபந்தக் கயிறு எரிந்து சும்மா இருக்குஞ் சொரூபமே நீயேஎன்று அழைக்கவே (முன் தொடர்பு) நல்ல சிவன் அகத்தே எழுந்தருள(210) பாவலர் தரும் இனிய பாட்டுக்களால் அவன் புகழைப் பாடப் பாட விரியாத மொட்டும் தேன் சொட்டும் பூக்களும் போன்று, ஞானப் பொருள் உதயமாகும். அருள் மாலைகள் (124) பல காலையும் மாலையும் அகத்தே நாம் தொடுக்க, அகம் அருள் மாலை நிறைந்த சொரூபமாக விளங்க, மும்பொழுதும் தேன்சொரியும் மாலையாக விளங்கும் அகத்தே தேவாதி தேவன், அழியா இன்பந் தரும் முழுமுதல்வன், அங்கே வரக் கூவு குயிலே. (5)

213. நன்படும் பாடனைத்தும் நயந்துசொல்லி
நாதனை இங்குவரக் கூவுகுயிலே

சிறுமையுற்று இழிவெய்தும் மனமே! இந்நிலவுலகை வாழ்விலேதிலை யில்லாத சிற்றின்பத்தை நாடி அலைகிறீரே; நொடிப் பொழுது கூட அமைதியில்லாமல் காட்டிலும் மேட்டிலும் ஓய்வின்றி ஓடியுழலும் குரங்கையொத்த மனத்தைப் பின்பற்றி நாமும் ஓடும் தொழிலால் பெறும் பயன் ஏதுமில்லை. ஓர் குரங்கு ஓர் பலாமரத்திலேறி அங்கு முட்டியிலிருந்த கள்ளுச் சொற்பன் அருந்திப்பின் இறங்கும்போது தேன் கொட்டியது. அக்குரங்கையொத்த என் மனமே அகில வாழ்வத்தனையுஞ் சொற்பனம் கண்டாய். ஆகையால் பாசபந்தக் கயிற்றை எரித்து என்றும் அழியாத இன்பத்திற்கு எம் பெருமான் பொன்னடியைப் போற்றி அவனை எம் அகத்தே ஏகும் வண்ணம் கூவி யழைப்பாய். (6)

214. இளமையு மூப்புமில்லா எம்பிரானை
இங்கேயெனைத் தேடிவரக் கூவுகுயிலே

ஆன்மா வேறு, தேகம் வேறு. நான் தேகம் என்பது மாயையின் கூத்து மாயையின் கட்டினின்று விடுபட்டவன் 'தான் ஆன்மா' என்றே என்றும் நினைக்கிறான். தேகத்துக்கே இளமையும் மூப்பும்பிணியும் உள்ளன. ஆன்மாவுக்கு தீயவகங்காரமில்லை, பழி யூணவுமில்லை, இரவு பகலில்லை (206) எம்பிரானுக்கு எங்கே பழியூண் இரவு பகல் இளமை மூப்பு? ஆதியுமந்தமுமவனே, எம்பிரான். தேன் சொரியுஞ் சோலையில் வாழ்பவன், இரவு பகல் பழி இளமை மூப்பு அடையும் இவ்வுடலத்தால் தான் அனுபவிக்கும் பாடனைத்தையும் அந்தக் குயிலுக்குச் சொல்லு, பாசபந்தகக் கயிறு எரிந்து விட்டது, கட்டுந் தன்மையற்றது: ஆதலால் சர்வதத்துவாதிதனுய் விளங்கும் எம்பிரானே என்றும் இந்தச் சிறு குடிலில் எழுந்தருளியிருப்பான் என்று கூவுகுயிலே

"முந்தும் நடுவும் முடிவுமாகிய மூவரறியாச்
சிந்துரச் சேவடியானைச் சேவகனை வரக் கூவாய்

குயிற் பத்து ஐந்தில் மாணிக்கவாசகர் தருவதைக் காண்க:

(7)

215. இளம்பிறை அணிந்தபிரா னிங்கேவர
எழிலுடன் பறந்துபோய்க் கூவுகுயிலே,

மாணிக்கவாசகமுதலியார்திருமுறையுரைதருகையில்இளமதிவளருந் தன்மையும் முழுமதி தேயுந் தன்மையும் உடையதால் இளம் பிறை யணிந்த பிரான் என்று கூறுகிறார். சாந்தமும் பொறுமையும் என்றென்றும் உடையார், முடிவிலாற்றலுடைமையும், முற்றுமுணர்ந்த தன்மையும்இயல்பாகவே பாசங்களினீங்குந்தன்மையுமுடைய எம்பிரானையும் அடையுந் தன்மை எழிலுடைத்தாய் விளங்குகிறது. (8)

216. ஓயாமலி உள்குவார்தம் உள்ளத்தானே
உத்தமனே இங்கேவரக் கூவுகுயிலே

எத்திசையிலும்நீக்கமறநிறைந்து கல்லால நிழலின்கீழ் நீங்காதுறைந்து (சனகர் முதலிய நால்வர்க்கு அறமுரைத்து அவர்களுடன்) வாழ்ந்த ருளுகின்ற உத்தமனே என்னுள்ளத்தே உளம்நெடுத்து பேரின்பங் கொ டுத்துக் கொண்டிருக்கும் தெவிட்டாத தெள்ளமுதை குறையா இன் பத்தேனே இங்குவரக் கூவு குயிலே,

எத்திக்கும் தானுகி என்னிதயத்தே யூறித்
தித்திக்கும் ஆனந்தத் தேவே பராபரமே.
(தாயுமானவர் பராபரக்கண்ணி 1)

"உன்னேயுகப்பன் குயிலே உன்துணைத் தோழியுமானவள்
பொன்னே அளித்த நன் மேனிப் புகழில் திகழும் அழகன்"
(மாணிக்கவாசகர் குயில் பத்து 7) (9)

217. வசயாரப் பாடுவசார்தம் மனத்தானே
வள்ளலே யிங்குவரக் கூவுகுயிலே

விழிநீர் பெருக மனங்கலங்க நாம்பாட உணர்வில் நேர்பெறவரும் சிவபோகத்தை ஐம்பொறி அளவிலும் ஒளிவந்தணைந்து ஒழிவின்றி உருவின் கண் எழுந்தருளிய போகத்தை யிங்கு வரக்கூவுகுயிலே!

"செய்யும் தவஞ் சற்று மில்லாத நான் உன் திருவடிக்கே
கொய்யும் புதுமலரிட்டு மெய்யன்பர் குழாத்துடனே
கையுஞ் சிரமிசைக் கூப்பி நின்றுடிக் கசிந்துருகி
உய்யும் படிக்கருள் செய்வதன்றே புலியூரத்தனே.
(தாயுமானவர் பாயப்புலி 3) (10)

43 உந்தீபற

218. மானும் மழுவுங் கரந்து மண்மிசைக்
கானும்படி வந்தனனென் றுந்தீபற
கவலே ஒழிந்ததென் றுந்தீபற

உமாதேவியினால் தழுவப்பெற்றஉடலிலப்படைத்தவராய்விளங்கும் ரூபம், எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனைக்கும் அருட் கண்ணுக விளங்கும் ரூபம், மான் எண்ணில் பல கோடி உயிரையும்,

மழுஅவ்வுயிரத்தனையும்பிடித்திருக்கும் மும்மலப்பிணிப் பைக்குத்திக் குத்திப் பார்வதி தேவியின் ஓசைவழிவையும் நாதத்தின் மேல் பொது நடம் புரியுமிறைவனையுங் காட்டி அருட்கண்ணுல் நோக்கி வழிநின்று அருள்புரிய அனுக்கிரகஞ் செய்யும் சூலாயுதமும்; இவ்வுருத்தாங்கி உலகில் எழுந்தருளினன் என்றுந்தீபற: சுவலையொழிந்தது வழி நின்று அருள் புரிவான். சிவானந்தலஹரி சு (25) ''கொழுத்து விளங்கும் பெரிய காளையின் திமிலின்மேல் வீற்றிருப்பவராயும் கறுத்த கழுத்தை யுடையவராயும் உமாதேவியினுல் தழுவப் பெற்ற உடலைப் படைத்த வராயும் மானுங் கண்ட கோடாரியும் ஏந்திய கைகளையுடையவராயும் உள்ள உம்மை எப்போது பார்ப்பேன்;'' (மொழிபெயர்ப்பு)

துங்கமழு மானுடையாய் சூலப்படையுடையாய்
திங்களணி செஞ்சடையாய் சேவுடையாய் — மங்கையொரு
பாலுடையாய் செங்கட் பணியாய் என் சென்னியின்மேல்
காலுடையாய் நீயே கதி

(தாயுமானவர் உடல் பொய் 48) (1)

219. சிந்தையில் வெந்துயர் தீர வெனக்கொரு
மந்திரந் தந்தானென் றுந்தீபற
மாயை அழிந்ததென் றுந்தீபற

(பதி 307 இல் சுவாமிகளே கூறுகிறார் இதன் கருத்தை)

ஒரு பொல்லாப்பு மில்லையென்பான் ஆசான் - அவன்
உன்மத்தன் போற்றிரிவான் கூசான் (பாடடு 1)

அப்படியே யுள்ள தென்பான் ஆசான் சொல்லி
ஆரறிவா ரென்று நகை செய்வாள். (பாட்டு 5)

எல்லாஞ் சிவன் செயல் எங்குஞ் சிவன் செயல் ஒரு பொல்லாப்புமில்லை அப்படியே உள்ளது எப்பவோ முடிந்த காரியம்.

இம்மந்திரத்தைச் செபித்தே வினைமுதலாம் முதல்வன் எப்பவோ? உண்டாக்கிய காரியங்கள் நிகழ்வன இனிமேல் இந்தப்பாழும் பிறப்பை ஒழிக்கக் கர்மம் புரியாதிருக்க வேண்டும். திரிதோஷமிறக்கும் (115) மாயை அழிந்த தென்றுந் தீபற. (2)

220 மன்னவனுகி மதுரையை ஆண்டவன்
பொன்னம் பலவனென் றுந்தீபற
பூரண னேனென் றுந்தீபற

மன்னவனுகி மதுரையை ஆண்டவன் என்பதைக்குறிக்கும்புராணக் கதை: கருணைநிதியாகிய சோமசுந்தரக்கடவுள் பூமண்டலத்திலே தம் திருவடி நிழல் போல் ஒற்றை வெண்குடை நிழல் செய்து செங்கோல் நடாத்தினர். மெய்யன்பிற் சிறந்த மலயத்துவச பாண்டியனுக்கும் மனைவி காஞ்சனமாலைக்கும் உமாதேவியைப் புத்திரியாகக் கொடுத்து அதற்கு இசைய தாமும் மருமகனுகி பூமி முற்றையும் அரசு செய்தார்; அதனல் தமிழ் நாட்டு மூவேந்தருள்ளும் பாண்டியனுடைய குடியே மேன்மை பெற்றது. வேறுங்கதைகள் உண்டு.

(திருவிளையாடற் புராணம்)

தடாதகைப் பிராட்டியார் பக்குவமடைந்ததும் கைலாசமலையை யடைந்து போர் புரிந்தாளாம், நந்திதேவர் சிவபெருமானுக்கு முறையிட அவர் எதிர்கொண்டு தம் முள் இடப்பாகங் கண்டும் தாடகை அவருடைய இடப்பாகமாகத் தம்மையுங் கண்டாளாம். மதுரை திரும்பிய இருவரும் மணம் புரிந்து மதுரையில் அரசு புரிந்தார்கள்.

நந்தி தரிசனங் கண்ட தாடகை தில்லைத் தரிசனங் கண்டாள் பொன்னம்பலவனே மணம் புரிந்தாள். பூரணனை தத்துவாதீதனை ரூபமே கொண்டு அவள் வாழ்ந்தாள்; தாமும் அவ்வாறே நந்தி தரிசனங்கண்டுதில்லைத்தரிசனங்கண்டுபூரணனேனென்றுந்தீபற என்கிறார்; (3)

221. திக்குத் திகாந்தமுங் கைவச மாய்வரப்
பக்குவ மானேனென் றுந்தீபற
பரமான்மா நானென் றுந்தீபற

எண்ணில் பல கோடி உயிர்கள் அத்தனையும் எத்திக்கும் பரவி நிற்க அவ்வுயிர்கள் அத்தனையிலும் அருட்கண்ணுக விளங்கும் இறைவனுடன் நான் இன்றுபட்டு அவற்றை வினைப்பயனென்னு மம்பலத்தே நின்று இயக்குவோனுகி திக்குத் திகாந்தமுங் கைவசமாய்வரப் பக்குவமானேன் என்றுந்தீபற, முழுமுதல்வனும் பரமான்மா நானென்றுந்தீபற என்கிறார்;

எத்திக்கும் தானுகி என்னிதயத்தே யூறித்
தித்திக்கும் ஆனந்தத்தேவே பராபரமே.

(தாயுமானவர் பராபரக் கண்ணி. 7 (4)

222. அஞ்செழுத் துள்ளே அனைத்தையுங் காட்டியென்
நெஞ்சகத்துள் நின்றுனென் றுந்தீபற
நீயேநா னேனென்ன் றுந்தீபற.

'ந ம சி வ ய' எனும் ஐந்தெழுத்தும், சிவகுரு திருவருள் வடிவாக எழுந்தருளி வழிநிற்க, 'ந' என்பதால தரும் சிவோக வாழ்க்கையில் ஈடுபட 'ய' என்னும் உயிரை மூடியிருக்கும் 'ம' என்னும் மும்மலப் பிணிப்பை நீக்கும் வழி அருளும்; கருணையே உருவான சொல்வடிவானவள், ஒசைவடிவான பார்வதி தரிசனங் கண்டு 'சிவ' என்னும் இணைபிரியா இறைவனையும் பார்வதியையும் குறிக்கின்றன:

நந்தி தரிசனங் கண்டு மும்மலமும் நீங்க, தில்லைத்தரிசனம் நிட்டை கூடித் தரிசித்து, உலகின் அம்மையப்பரைத் தரிசித்துச் 'சிவ' வடிவ மேயாகி, உள்ளும் புறமும் தம்மையே கண்டு பின் ஆனந்தமய கோசத்தில் திருவைந்தெழுத்துச் ஜோதி, ஆதியந்தமற்ற ஜோதியில் என்னை யிழந்தேன் (122) என்றுந்தீபற என்கிறார்.

'அரகர' ஒலியும் அறிஞர் உணர்வுடன் ஓதும் ஒலியும் வேதாகமங்களின்ஒலியும் ஆகாசம் நிறைந்தொலிக்க மேன்மைகொள் பூதகணத்தலைவன் வழிநிற்ப என்னைக் கைலைக்குக் கொண்டு செலலும் யானையை முழுமுதல்வன் எனக்களித்தனன் என்கிறார் (சுந்தரர் 7-100-8) இல்

"அரவொலி ஆகமங்கள் அறிவார் அறிதோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெலாம் வந்தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன் வந்துவழி தந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித்தான் மலைஉத்தமனே"

223. திங்களுங் கங்கையுஞ் சென்னியில் வைத்தவன் (5)
மங்கை மணாளனென் றுந்தீபற
மறுபிறப் பில்லையென் றுந்தீபற

தில்லைத் தரிசனமும் ஐந்தெழுத்துச் ஜோதியிலுந் தன்னை இழந்து புவியினில் உத்தமனைப் பிறந்து தத்துவாதீதனை அவனும்நானும் ஒன்றுகி, திங்களும் கங்கையும் சென்னியில் வைத்தவன் உமையம்மையை இடப்பாகமாகக் கொண்டவனை விளங்குகிறேன் என்றுந்தீபற பிறப் பிறப்பில்லை யென்றுந்தீபற.

திங்கள் தங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங்கடல் வளரும்
சங்கவெண் குழைக்காது டையானைக்
சாமவேதம் பெரிதுகப்பானை

மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பன் எம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே.

கந்தரர் (7-61-6) (6)

224 தத்துவம் யாவுஞ் சடமென்று காட்டியென்
சித்தத்துள் நின்றுனென் றுந்தீபற
தேவாதி தேவனென் றுந்தீபற.

மெய்யெனப்படும் தத்துவங்களின் காரியமான தாத்துவிகங்கள் அறுபதும் புறக்கருவிகள் எனப்படும் தத்துவங்கள் முப்பத்தாறு என்பனவும் ஆகத் தொண்ணூற்றுறுந் நம் உடம்புடனே சேர்ந்தவை; இவையாவும் மறைந்து செயலற்று என்னுளடங்கவே தத்துவாதீதனுகவே நான் விளங்குகிறேன் என்றுந்தீபற தேவர்க்கெலாம் தேவன் என்றுந்தீபற:

ஆறு தத்துவத் தப்புறத் தப்பரங்
கூறுவு பதேசங் கூறிற் சிவபரம்
வேறுய் வெளிப்பட்ட வேதப் பகவனூர்
பேருக ஆனந்தம் பேணும் பெருகவே

– திருமந்திரம்— (7)

225 ஆதாரத் தாலே நிராதாரஞ் சென்றபின்
பாதார விந்தமென் றுந்தீபற
பலித்தது பூசையென் றுந்தீபற.

நிஷ்காமிய கர்மம் புரிந்தே மலப்பிணிப்பை நீக்கலாம்; அவ்வாறு நிஷ்காமிய கர்மம் புரிய உதவிய ஆறுறு தத்துவங்களே, கருவி கரணங்களையும் நாளடைவில் தன்னுளடங்கச் செய்து, மும் மௌனஞ் சாதித்து சும்மா இருக்குஞ் சொரூபமே நீயே, என்று மும்மௌனமாக விளங்கும் அகத்தையழைக்க, முருகனே வள்ளியாக நின்று செயல் புரிந்தான் என்று கந்தபுராணத்தில் கூறுவதுபோல், எம்பெருமானே இதயத்தே நின்று செயல்புரிவான்: நிஷ்காமிய கருமம் புரிய ஆதாரமாய்க்கொண்ட ஆறுறு தத்துவங்களும்தன்னுள் அடங்கத் தத்துவங்களுக்கு அப்பாற்பட்டவனை நிராதாரஞ் சென்றபின் தத்துவாதீதனுகப் பாதாரவிந்த மடைந்தேனென்றுந்தீபற, எனது சிவபூசையும் ஞான பூசையும் பலனளித்தது என்றுந்தீபற. (8)

226. அல்லும் பகலும் அறிவாகி நிற்கவோர்
சொல்லைத் தந்தானென் றுந்தீபற
தோன்றுத் துணைவனென் றுந்தீபற.

மும்மொனம் இதயத்தே தோன்ற சும்மா இருக்குஞ் சொரூபமே குருநாதனே, யென்றழைக்க அறிவு சொரூபமாகவே விளங்கும் இருதயம் ஒடுங்கும் (159 வரி 5) எப்பவோ மூடிந்த காரியம் (உரை 219) ஒரு பொல்லாப்புமில்லை எல்லாம் சிவன் செயல் எங்குஞ் சிவன் செயல் எல்லாமுணர்த்தும் ஒரு சொல் 'ஓம்' 'சிவ சிவ' எனும் தமிழ் மாமறையே ஒருமொழியே பலமொழிக்கும் இடங்கொடுக்கும் அந்த ஒரு மொழியே மலமொழிக்கும் (61) சுவாமிகள் ஒரு சொல் ஊமையெழுத்தென்பர் (136) திருமூலர் குறியாக் குறியினில் எனுந் திருமந்திரம் (195) 'சொல்லால் உணர்த்திய் அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்த மாய ஒன்றுஞ் செறியாச் செறிவில் அல்லும் பகலும் நான் நிற்க ஓர் சொல்லைத் தந்தான் என்றுந்தீபற அவனே 'சிவம்' தோன்றுத்துணை என்றுந்தீபற.

ஒருமொழி யாலே சுருதியா கமநூ
லுயர்புரா ணமுமெலா மொழியும்
ஒருமொழி யாலே சரிதைநற் கிரியா
யோகபா வனையெலா மொழியும்
ஒருமொழி யாலே யண்டபூ தங்க
ளொடுங்கிடும் தன்னிலை தோன்றும்
ஒருமொழி சும்மா விருத்தலாம் அதனில்
ஒப்பிலாச் சிவபதமடைவார்.

தன்னிலை அறிவு சொரூபமாய் விளங்கும் அகம் நிஷ்டானுபூதி 21] (9)

227 சிவன் சிவனென்று தேறித் தெளிந்தார்க்கு
அபாய மில்லையென் றுந்தீபற
அன்பே சிவமென் றுந்தீபற

நான் ஆன்மா உடம்பல்ல என்றறிவதே [ஒருமொழிதருமுண்மை திருவுண்ணர் கீதை (7—10) கூறுகிறார்: ''பார்த்தா எல்லா உயிர்களின் நிலைபேறுடைய வித்து என்று என்னை அறிக. அறிவாளர்களுடைய அறிவாகவும், தேஜஸ்விகளுடைய தேஜஸ் ஆகவும்நான் இருக்கிறேன்.

கிருஷ்ணர் முழுமுதல்வனும் ஜோதியிலிருந்தே 'உயிர்' தோன்றின தென்கிறார். மேலும் பிருஹதாரணிய உபநிடதம் (4-4-22) இல்: ''இந்த ஆத்மா பெரிது பிறப்பில்லாதது. பிராணன்களிடையில் விஞ்ஞானமயமாயிருப்பது. இருதய ஆகாசத்தினுள் உறைவது அனைத்தையும் தன்வசம் கொண்டது அனைத்தையும் ஆள்வது, அனைத்துக்கும் அதிபதி: நல்ல காமத்தில் பெருமை யடைவதில்லை; அவ்வாறே கெட்ட கர்மத்தால் சிறுமையடைவதில்லை; இந்த ஆத்மாவே ஸர்வேஸ்வரன், உண்டாயவற்றிற்கெல்லாம் அதிபதி. எல்லாப்பொருள்களையும் பரிபாலிப்பவர். இவ்வுலகங்கள் பிரிந்து போகாமல் சேர்த்துப் பிடிக்கும் கரைபோன்றிருப்பவர். இந்த ஆத்மாவை வேதாப்பியாசத்தாலும் பிரம்ம நாட்டமுடையார்கள் யக்ஞத்தாலும் தானத்தாலும் தவத்தாலும் உபவாஸத்தாலும் நாடுகிறார்கள் .... அழிவில்லாதது; அழிக்கப்படுவதில்லை; கட்டுப்படாதது ஆதலால் துன்பத்திற் குட்படுவதுமில்லை. துன்புறுவதுமில்லை. இங்ஙனம் அறிந்த இவனை இதற்காக நான் பாவஞ் செய்தேன், இதற்காக நான் புண்ணியஞ் செய்தேன்'' என்று இவை தாண்டுவதில்லை; இவ்விரண்டையும் இவன் தாண்டுகிறான். செய்தனவும் செய்யாதனவும் இவனைத் துன்புறுத்தமாட்டா. (முழுவதையும் உபநிடதத்தில் காண்க) இந்த ஆத்மா ஸர்வேஸ்வரன். சிவனே சிவனென்று பிரம்மநாட்டமுடைய யான் யக்ஞத்தாலும் தானத்தாலும் தவத்தாலும் உபவாஸத்தாலும் நாடிச் சிவனென்று தேறித்தெளிந்தேன்; சிவன் அழிவில்லாதது அழிக்கப்படுவதில்லை துன்பத்திற்குட் படுவதுமில்லை துன்புறுவதுமில்லை; அபாயமில்லை யென்றுந்தீபற, அன்பே சிவமென்றுந் (149) தீபற. (10)

228 பத்துப் பாட்டும் படிப்பவர் கேட்பவர்
வித்தக ராவரென் றுந்தீபற
வீடு நமக்கென் றுந்தீபற

பத்துப்பாட்டும் பொருள் விளங்கிக் கற்று அதுவழி ஒழுகிப்படிப்பவர் ஆகமங்களிற் கூறிய பிரகாரம் பத்துப் பாட்டும் தரும வழி நின்று யக்ஞத்தாலும், தானத்தாலும், தவத்தாலும், உபவாஸத்தாலும் நாடித் தேடித் தேறித் தெளிந்தார் வித்தகராவர் என்றுந்தீபற, பிறப்பிறப்பில்லா மோட்ச வீடு நமக்கென்றுந் தீபற: (11)

44 தேடி நின் திருவடியே

இராகம் - உசேனி தாளம் - ஆதி

பல்லவி

229 தேடிநின் திருவடியே செல்வமென நாடிவந்தேன்
திருவருள் தந்தாளும் தேவா — சற்குருநாதா

அனுபல்லவி

பாடி மகிழுஞ்சிவ பாக்யம்பர தினில்தேட
மூடிய மாயவிருள் ஓட அருள் குருவே (தேடி)

சரணம்

அடியேனைக் கைவிடுதல் ஆகுமோ இது தகுமோ
அன்பிலா திருப்பது அடிகளுக் கழகாமோ
அரசேநல் லூரில்வாசா ஆரறிவா ரென்றுசொன்ன
அருந்தவனே ஒப்பில்லானே அப்பனே செல்லப்பனே
(தேடி)

உரை:

நம்மை மூடியிருக்கும் மும்மலப்பிணிப்பு எம்மை விட்டு நீங்க உமது புகழைப்பாடிப்பாடி என்றும் (அறிவு சொரூபமாகவே விளங்க) இன்பம் துன்பம் இயலாதே (சும்மா இருக்க) மகிழ்ச்சியைத்தருந் திருவடிதனைத் தந்தருளும் எங்கள் குருநாதா.

ஆரறிவார் என்று சொன்ன (187) செல்லப்பனே நல்லூர்வாசனே அடியேனைக் கைவிடுதல் கூடாது. குழந்தையாகிய யான் அன்னை போல் எனை ஆதரித்த உம்மை வேண்டியழுதால் பாடினுல் நீ அன்பி லாதிருப்பாயோ? என்னைக் கைவிடுதல் கூடாது.

திருமூலர் திருவடி சூட்டுந்திறன் தருகிறார்

திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்
பெருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்
குருவடி விற்கண்ட கோனையெங் கோவைக்
கருவழி வாற்றிடக் கண்டு கொண்டேனே. (10 – 1571)

45 அடைக்கலம் அடைக்கலம்

இரர்கம் - ஆரபி. தாளம் - ஆதி

பல்லவி

பாரையனே - கடைக்கண்ணுல் - பாரையனே

சரணங்கள்

230 பாரைய னேமனம் பதையாம லடியேனைச்
சேரைய னேயுன் செழுங்கழற் கடைக்கலம்

அடியேன் உன்னையே தஞ்சமென்று நாடிவந்தேன்; உன்னைக்காணுமல் பணதக்கும் மனம் தளராமல் உம்மருட்கண்ணுல் என்னை நோக்கினுல் அன்பு ததும்ப (பாச பந்தக் கயிறு எரிய) உன்னுடைய பொன் போலும் கழல்களுக் கடைக்கலம் புகுவேன். (1)

231 ஆரைய னேதுணை அடியேற் குனையல்லால்
திரைய னேமிடி திருவடிக் கடைக்கலம்

என்ஞான குரவனே எனக்கு யார் துணை. உன்னையடையாது அடியேன் படுந்துன்பம் மிகக் கொடியது. அந்த வறுமைப் பிணியை நீக்கி யெனையாண்டருளல் வேண்டும். (2)

232 ஊருந் துணையில்லை உற்றூர் துணையில்லை
ஆருந் துணையில்லை அடியே னடைக்கலம்

திருவடிக்கே அடைக்கலம் வேறுதுணையில்லை. (3)

233 சீருந் துணையில்லைச் செல்வந் துணையில்லை
சீரார் திருவடிக் கடியே னடைக்கலம்.

கல்வியறிவும் மேல் உண்டான கிரும சிறப்பும் துணையில்லை; உன்னுடைய திருவடிகளில் பேரன்புக்கும் என்றுமழியாப் பேரானந்தத்துக்குமடைக்கலம். (4)

234 சிந்தையி லன்பு பொருந்த வடியேற்குத்
தந்திடு நின்னருள் தாளிணைக் கடைக்கலம்

சும்மா இருக்கும் சொரூபமாக, அறிவு சொரூபமாக (195) விளங்கும் இருதயம் பொன்னம்பலமாக விளங்கத் தெளிந்த சிந்தையில் அன்பு பொருந்த உன்னுடைய அருள் கொடுக்கும், சத்தியுஞ் சிவமுமாக, விளங்கும் இருப்பதத்திற் கடைக்கலம். (5)

235 எந்தையே எம்பெரு மானேயென் றடியார்கள்
வந்தனை செய்யும் மலரடிக் கடைக்கலம்.

நிலவுத்தரிசனம் தந்த மலர்ப்பாதத்தை அம்மையும் அப்பருமென்றும் முழு முதல்வனென்றும் மெய்யன்பர்கள் வணங்கும் பெருங்கருணை நிறைந்த திருவடிகளுக் கடைக்கலம். (6)

236 கொத்தார் குழலுமை கொண்டாடு மையனே
செத்தா ரெலும்பணி செல்வநிற் கடைக்கலம்

முழுமுதல்வனும் இறைவன் நீ திருவருளினால் உலகு உடல்களை வினை முதலாம் முதல் வனாய், மாயாகாரிய மாகப் படைத்தருளவும் எண்ணிறந்த உயிர்களை வினைக்கீடாக அவ்வுலகுடல்களோடு பொருத்தி வைத்தருளவும் பலதிருக்கோலத் திருவுருவங்களாகி இசைந்தருள எண்ணிறந்த உயிர்களத்தனையும், ஓசைவடிவாக உன்னுடைய ஒளி கொண்டே இயங்கும் பலதிருக் கோலத் திருவுருவங்களத்தனையிலும் நீக்கமற வியாபித்து விளங்குபவனுமாக பாதி உடலங் கொண்ட குழலுமையும் நீயுமொன்றாக விளங்குபவனே! எனது அளவிலா அன்புக்கு உரித்தானவனே! உலகத்தார் விரும்பாத அழித்தலாகிய செயலைக் குறிக்கும்; செத்தார் எலும்பு மாலையை யணிந்த செல்வனே! உனக் கடைக்கலம்;

அப்பர் சுவாமிகள் ''பிச்சையெடுப்பதற்கு 'உலர்ந்த தலையோடு, கொண்டு'' எனும் பொருளுடன்.

''வாடல் தலையொன்று கையிற் கண்டேன்'' 77–1

(என்றும்)

''உலகத்தார் விரும்பாத சாம்பல் பூசுதல், எலும்பும் தலைமாலையுமணிதல், தலை ஓட்டி லிரத்தல், நஞ்சை உண்ணுதல் முதலிய செயல்கள் பொலிய'' எனும் பொருளுடன்.

''பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்'' 77—8

இவ்வாக்கை நிலையற்றது

என்றும் பாடுகிறார் (7)

237 வித்தார விடையேறி வெளியில் நடம்புரி
அத்தாவுன் பொன்னடிக் கடியே னடைக்கலம்

உன்னையே சரணடைந்து பொது நடம் கண்டு தில்லைச்சிற்றம்பலவனின் உண்மை வடிவினையறிந்து நீயே நானென்னும் மெய்யன்பினையே வாகனமாகக் கொண்டு அறிவுப் பெருவெளியிலே நடம் புரியும் என்னப்பனே உன்னுடைய பொன்னடிக் கடைக்கலம்; மோட்சவீடாக விளங்கும் அடிகள்

ஆழித்தேர் வித்தகருந் தாமே போலும்
அடைந்தவர் கட்கன்பாய் நின்றூர் போலும் (6—89—2

அப்பர் (8)

238 தத்தாதித் தோம்திமி தாந்தோமென் றாடிடும்
கத்தாவே யுன்னுடைக் கழலடிக் கடைக்கலம்.

நீ ஒளி கொடுப்ப, திருவுருவங்களாக ஓசைவிளங்க, காட்சிதரும் பொதுநடம் அறிவிக்கும் தத்தா தித் தோம் திமி தாம் தோமெனும் நடம் காண எம் அறிவுப் பெரு வெளியில் வித்தகனர் நின்று அருளு கிறார். அவருடை கழலடிக் கடைக்கலம் (9)

239 நெடியமா லயன்தேடிக் காணுமல் நின்றிடும்
நிமலனே நின்னடிக் கடைக்கல மடைக்கலம்.

மாலும் அயனும் அகங்காரங் கொண்டு யார் பெரிது என்று வா திக்கும் பொழுது லிங்கவடிவமான ஒரு ஒளிப்பிழம்பு ஆகாயத்தை யும் பூமியையும் அளாவியதாய் அவர்கள் முன் தோன்றிற்று. அடி யையும் முடியையுந் தேடிக் காணுது திரும்பினர்கள் புராணக் கதை (150) அவர்கள் இருவருங் காணுது நின்ற எம்பெருமானின் திருவடிக் கடைக்கலம். (10)

46 சிவநாமஞ் சொல்லுவோம்

இராகம் - நாட்டை தாளம் - ரூபகம்

பல்லவி

நாமஞ் சொல்லுவோம் — சிவ
நாமஞ் சொல்லுவோம்

சரணங்கள்

240 நாமஞ் சொல்லுவோம் நமனை வெல்லுவோம்
நாமே அவனென்று நடந்து செல்லுவோம்.

சுட்டியுணரப்படும் இவ்வுலகம் மாயாகாரியப் பொருள் தோன்றி யொடுங்குந் தொழிலுடையது, அதைப் பொய்யெனக் கூறுவர். நீரி லெழுதும் எழுத்துப்போல் நிலையாமையை யுடையது. இன்ப துன்பமே நிலையாமை எனும் உண்மைக்குட்பட்டது. அதைக்கொள்ளாது தள ராமல் இம்மையிலும் மறுமையிலும் அழியா இன்பம் தரும் நிட்டை யும் நில்லாத் தரிசனமுங் கண்டு மார்க்கண்டேயனைப் போல் நமனை வென்று முழுமுதலவனும் இறைவனும் நானும் ஒன்று (பாட்டுக்கள் 222, 223, 224...உரை காண்) என்று ஆறாறு தத்துவங்களும் என் னுள் அடங்கவே தத்துவாதீதமாக நடந்து அவன் வழி நின்று பாரி னில் வாழ்வோம்,

தாயுமானவர் இவ்வுண்மைகளைத் தருகிறார் காண்க

கேட்டலுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமரு வுற்பவநோய் மாறுமோ — நாட்டமுற்று
மெய்யான நிட்டையினை மேவினர்கட் கன்றேதான்
பொய்யாம் பிறப்பிறப்புப் போம். (உடல் பொய்யுறவு 8)

''அப்பர் சுவாமிகள் இவ்வுண்மையைத் தருகிறார் காண்க: இருவினையாகிய பாசத்தால் முன்றுமலமாகிய கல்லோடு கட்டியிருத்தலின் பிறவிப் பெருங் கடலினின்று நீக்கியருளும் திருவைந்தெழுத்து

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. (4-11-1) (1)

241 சோம சுந்தரன் பாதங் காணுவோம்
சும்மா விருக்கின்ற சூட்சம் பேணுவோம்

நெறி நூல்களாகிய மறைகள் கொண்டு முறைநூல்களாகிய ஆகமங்கள் தரும் வழி நின்று சித்தாந்த முறைப்படி பூசையும் திருவைந்தெழுத்தோதியும் இடைவிடாது அவனையே தழுவி பாச பந்தக் கயிறு எரிய, மும்மௌனஞ் சாதித்த சும்மா 'இருக்கும் சொரூபமே நீயே யென்று சோமசுந்தரன் பாதம் நண்ணி சிவலிங்க வடிவாக விளங்கும் அகம் நிட்டை கூடும்; சத்திசிவமாக விளங்கும் சோமசுந்தரர் மீனாட்சியம்மையை அருவுருவாம் சதாசிவனையிடும் பொருள் மோனத்தினுள்ளே நற்சிவனையிடும் சோமசுந்தரராய் சிற்றம்பல தரிசனத்தில் நாம் காணுவோம்.

தாயுமானவர் நூல்கள் யாவும் உற்றுய்ந்து உணர்தலும் அவ்வுண்மையினைப் புணர்தலுஞ் செய்து நோக்காயோ என்னும் பொருள் கொண்டு,

ஆரணங்கள் ஆகமங்கள் யாவுமே ஆனந்த
பூரணமே உண்மைப் பொருளென்னுங் — காரணத்தை
ஓராயோ உள்ளுள்ளே உற்றுணர்ந்தவ் வுண்மையினைப்
பாராயோ நெஞ்சே பகர். (உடல் பொய்யுறவு 11)

அப்பர் சுவாமிகள் தருவதைக் காண்க:

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே. (2)

242 சினத்தைக் கொல்லுவோம் மனத்தை வெல்லுவோம்
அனைத்து மவனென்று அகத்தி லெண்ணுவோம்

சிறுமையுற்று இழி வெய்தும் மனமே! நீரில் எழுதின எழுத்துப் போன்ற வாழ்வை (240) மெய்யென்று எண்ணி ஆர்வத்துடன் ஐம்

புலனிச்சையில் ஈடுபட்டால் கடுந்துன்பமும் சினமும் நேரிடும் அவ்வாறு நேரிடாமல் உடல்போகம் நில்லாத கனவு போன்றதென்று கொள்வாயாக. அனைத்தும் ஸர்வேஸ்வரனே; (பிருஹரண உபநி (4. 4. 22 பாட்டு 227) எல்லாப் பொருள்களையும் பரிபாலிப்பவரே, உண்டான பொருளனைத்திற்கும் அதிபதி, புண்ணிய பாவம் அவனைத்தாண்டுவதில்லை அவன் இவ்விரண்டையுந் தாண்டுகிறான். இவ் வுண்மைகளை நாம் எம்மகத்தில் எண்ணுவோம் சினத்தைக் கொல்லுவோம் குரங்கையொத்த மனத்தை வெல்லுவோம் சிவநாமஞ் சொல்லுவோம்.

திருமூலர் அனைத்தும் அவனேயாம் எனும் உண்மை தருகிறார்:

இருந்தார் சிவமாகி எங்கும் தாமாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்தங்
கிருந்தார் இழவுவந்து எய்திய சோம்பே. (3)
(திருமந்திரம் 171)

அப்பர் சுவாமிகள் "உலகப்பற்றினை விடுதலும் அமரர்கள் தொழும் நாயகனைக் கண்டதும் அவரை நாடினர் ஐந்தெழுத்தை ஓதி அதன் பொருளைக் கண்டார் எனும் பொருளுடன்

வீடினு ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினு ரந்நெறி கூடச் சென்றலும்
ஓடினே னுய்ச்சென் றுருவங் காண்டலும்
நாடினே னுடிற்று நமசிவாயவே

243. கையில் மலர்கொண்டு காலுமாலையும்
செய்ய மேனியன் அடியில் வீழ்வோம் (நாமம்)

அகங்குழைந்து மெய்யரும்ப இயல்பாகவே பாசங்களை நீங்கும் தன்மையும் முடிவிலாற்றலுடைமையும் பேரருளுடைமை முதலிய எண் குணங்களுடன் விளங்கும் எம்பெருமான் மூவராலும் பாடப்பெற்று செம்மேனியுடன் விளங்குபவன் தம்முடைய பெருங் கருணையுடன் மெய்யன்பர்களை வந்தெதிர்கொள்ளும் நிலையில் மாணிக்கவாசகர் "முத்தனே, முதல்வா முக்கண முனிவா மொட்டரு மலர் பறித்தி றைஞ்சிப் பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்பரகதி கொடுத்த ருள் செய்யுஞ் சித்தனே (153) என்று பாடுவது போல் சுவாமிகளும் "கையில் மலர் கொண்டு காலையும் மாலையும் செய்யமேனியன் அடியில் வீழுவோம் நாமம் சொல்லுவோம்" என்று பாடுகிறார்; (4)

244. என்பு பூண்டவன் என்னை யாண்டவன்
இவனை வேண்டினுல் என்று மின்பமே.

சொல்லுதற்கரிய குளிர்ந்த கருணையுடன் கூடிய பேரறிவுப் பேரின்ப வடிவினனை எம்பெருமானை இடையறு அன்புடன் புகழைப் பாடியும் பூசை செய்தும் ஞானப் பூசைக்குரிய அட்டமாமலரு டன் பணிந்தேத்தியும் வேண்டினால் அவன் அந்த முழு முதல்வன் எம்மை யாண்டு அருள்புரிபவன் என்றும் குறையாத பேரின்பமான முத்தி இன்பத்தை நல்குவன் நாமஞ் சொல்லுவோம்

அட்டமாமலர்:- அவை புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியா வர்த்தம், பாதிரி, நீலோற்பலம், அலரி, செந்தாமரை என்பன ஞானப் பூசைக்குரியன: கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை அருள், அறிவு, வாய்மை, தவம், இன்பு எனும் எட்டுக்குணங்களு மாம்.

தாயும் குழந்தையும் போன்ற அன்பை சிவானந்தலஹரி சு 52இல் "மகாதேவரே! பக்தி யெனும் தாய் ஆனந்தக் கண்ணீரால் குளிப் பாட்டி மயிர்க்கால் தோறும் மகிழ்ச்சியையும் களங்கமற்ற மனதால் ஆடையையும் வாக்கென்னும் வாயிலுள்ள உனது கதையாகிற அமு தத்தால் வயிற்றுக்குப் பூரணமான உணவையும் ருத்திராக்ஷத்தாலும் விபூதியினாலும் உடலுக்கு இரக்ஷையையும் கல்பிக்கிறாள். உமது தியான மாகிற தொட்டிலில் படுக்க வைத்து பக்தனாகிற குழந்தையை காப் பாற்றுகிறாள்.

(மொழிபெயர்ப்பு)

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாம நமச்சிவாயவே.

(சம்பந்தர் தேவாரம்) (5)

245. சிரித்து முப்புர மெரித்த தேவனை
சிந்தை செய்குவோர் தேவ ராவரே.

முப்புரமெரித்த புராணக் கதையை (13) இலும் அப்பணி செஞ் சடை....." எனும் மூலர் திருமந்திரத்தையும் முப்புரமெரித்ததின் விளக்கத்தையும் (51) இலும் காண்க] சிவன் மறைகளாகிய குதிரை யின் மேல் ஒரு காலும், விருஷபமாய் நின்ற விஷ்ணுவின் மேல் ஒரு காலுமாக முப்புரத்தை நோக்க முப்புரமு மொன்றுய்ச் சேரவே சிரித்து ஒரு பாணத்தை விடுத்து அவற்றை யெரித்தார்,

மும் மௌனங் கைவந்த மெய்ஞ்ஞான சும்மா இருக்குஞ் சொரூ பமாக விளங்கும் அகழுடையவனாகிறான். அறிவு சொரூபமே அவனு டைய் அகம். அத்தகைய அறிவுடைய வள்ளியின் அகத்தே முருகன்

நின்று முருகனே வள்ளியாகச் செயல் புரிந்தான் என்பது கந்தபுராணக் கதை. இயற்கை வடிவினளே பார்வதி. பார்வதியே அங்கு நின்று செயல் புரிபவள். மூலர் அந்நிலையை ''அறியா அறிவில் அவிழ்ந்தே கித்தமாய் நெறியாம் பராநந்தி நீடருள் ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம்'' என்று தருகிறார். அந்தச் சிவம் எனலும் நிலையில் நின்றால் பஞ்சப்புலன்களுமொடுங்க பார்வதியின் செயல் நடக்கும் மலப் பிணிப்பும் விட்டு நீங்கும் (195) ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம் ஆகிய மூன்று தேகங்களையும் அழித்து விதேஹமுத்தியை அளிப்பவர் இறைவன். (சிவானந்த லஹரி. சு 3. தரீபுரஹ்ரம்)

மூலர் கூறிய நிலையை அடைந்து நிட்டை கூடி சிற்றம்பல தரிசனமும் தரிசித்து தேவதேவனு மாவாரே. (6)

246. கமல நான்முகன் கண்ணன் காண்கிலான்
எமது நாயகன் என்பர் பெரியரே (நா)

[மாலும் மலரோனும் எனுங் கதை (150) சிவானந்தலஹரி (23)]

லக்ஷ்மி நாயகனை விஷ்ணுவும், சரஸ்வதி நாயகனை பிரம்மாவும் செல்வச் செருக்கினாலும் கல்விச் செருக்கினாலும் அகங்காரங் கூடியே புறத்தே அலைந்தனர். ஆனால் நாராயண ரூபமாக பிச்சை எடுத்துத் தம்முடைய அகங்காரத்தைச் சுட்டெரித்த தவத்தினோர்க்கு அவன் எளிதில் வந்தருள் புரிபவன்.

புள்ளானும் நான்முகனும் புக்கும் போந்துங்
காணார் பொறியழலாய் நின்றுள் தன்னை
உள்ளானை யொன்றுலா உருவிலானை
உலகுக் கொருவிளக்காய் நின்றுள் தன்னைக்
கள்ளோந்து கொன்றை தூய்க் காலை மூன்றும்
ஓவாமே நின்று தவங்கள் செய்த
வெள்ளானை வேண்டும் வரங்கொடுப்பார்
வெண்காடு மேவிய விகிர்தனரே. (6-35-9) 7

247. வழிகள் இரண்டையு மடைக்க வல்லவர்
ஒழியா இன்பத்தி லுற்று வாழ்வரே. (நா)

''புறத்தவம் அகத்தவம் இரண்டும் உள்ளோரே பேரின்பப்பேறு அடைவர்'' தாயுமானவர்.

புரமூன்றும் வேவச் செய்து சிவவுலகம் சிவனண்மை சிவவடிவம் எனும் ஒப்பிலாத் மூன்றினையும் திருவருளால் கடந்த திருவடியுணர்வு கைவந்த நற்றதவத்தோர்க்கு அடுத்துவரும் முதறிவும் பெருவாழ்வின்

மேலாம் இயல்பினைக் காட்டி பற்றுக் கோடில்லாததாகி ஆணவமலப் பிணிப்பை யகற்றி தண்ணளியுடன் விளங்க அருளுவன் என்றும் அழியாப் பேரின்ப வாழ்வே தருவன்:

இல்லக விளக்கது விருள கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே. (4-11-8) (8)

248. தேனும் பாலினு மினிய தெய்வத்தை
நானும் நீயுமாய் நாளும் போற்றுவோம் (நா)

ஆனஞ்சு நல்கும் தம்பாவின் நலத்தையும் வென்று மொழியும் ஆருயிர் தளிர்க்கும் இனிய மொழியினை யுடைய பச்சிளங் கிள்ளையா கிய உமையம்மையார் கண்டு களிக்கும்படி தில்லைத் திருச்சிற்றம்பலத் தின் கண் திருக்கூத்தியற்றும் பொன்னம்பலவாணனே தம் திருவரு ளால் மெய்யுணர்வு கைவரப் பெற்றவர் அழியா இன்பத்தேனைப் பருக அவற்றை வற்ருது பெருகிக் கொண்டேயிருக்கும் திங்களும் கங்கையும் சடையுடையோனே என்று நான் என்னை அங்கே இழந்தேன்:

தானும் அழிந்து தனமும் அழிந்து நீடு
ஊனும் அழிந்து உயிருங் அழிந்துடன்
வானும் அழிந்து மனமும் அழிந்தபின்
நானும் அழிந்தமை நான் அறியேன் அன்றே

(திருமந்திரம் 2911)

என்று திருமூல நாயனர் இவ்வுண்மையைத் தருகிறார்.
மாணிக்கவாசகர் இவ்வுண்மையைத் தருகிறார் காண்க.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்வாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண்ணீருடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம உய்ந்தொழிந்தோம்,
எய்யாமற் காப்பாய் எமைபேலோர் எம்பாவாய், (9)

47 சிவதொண்டன் வாழ்த்து

வெண்பா

249. சிவதொண்ட னென்னுந் திருநாமம் பூண்டே
சிவதொண்ட நுங்கடிரு முன்னிற் — சிவதொண்டு
செய்ய வருஞ்சிறுவன் சிந்தை களிகூரச்
செய்தல் கடனமை தெரி.

நேரிசையாசிரியப்பா

சிவனடி யாரைச் சிவனென வணங்கும்
சிவதொண்ட னென்னுஞ் செல்வச் சிறுவன்
பலவரு டத்துப் பன்னுமாண் கழிமதி
எவரும் மகிழ இந்நிலம் போந்தனன்
இவனே
சிறுபிள்ளை யாயினுஞ் செய்தவப் பயனால்
அறிவு மிகுந்த ஆண்டகை யாவான்
தினைத்துணை நன்றி செய்யினு மதனைப்
பனைத்துணை யாக்கொள்ளும் பயனைத் தெரிபவன்
அனைத்துஞ் சிவன்செய லாமென அறிபவன்
சினத்தைக் செற்ற திருவினை யுடையான்
சத்தியம் பொறுமை சாந்தம் நிறைந்தவன்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணன்
அத்துவா மார்க்கம் ஆறையு மகற்றித்
தத்துவா தீதத் தன்மையை யுணர்ந்தோன்
வறுமையிற் கலங்கான் செல்வத்தின் மகிழான்
பொறுமை மிக்குடைப் புண்ணிய புருடன்
தருமநன்னெறியிற் சற்றும் வழுவான்
கருமத்திற் கையுங் கடவுளிற் கருத்துமா
யிருநிலம் மதிக்க வாழு மியல்பினன்
குருபரன் கூறிய நெறியே செல்பவன்

[கடைசி நாலு வரிக்கும் பொருள் முன்கொண்க]

எம்ஞான குரவன் அருளிய நன்னெறி கைப்பிடித் தொழுகுபவன்; திருமூலர் திருமந்திரம் நெறிநிற்குமுன்மை தருகிறது.

தூநெறி கண்டசுவடு நடுவெழும்
பூநெறி கண்டது பொன்னகமாய் நிற்கும்
மேனெறி கண்டது வெண்மதி மேதினி
நீனெறி கண்டுள நின்மல னாகுமே. (10-1864)

நெறிநின்று தம் வேலையை சிவதொண்டாகவே யாற்ற ஐம்புலனுந் தாமே ஓடுங்க நிஷ்காமிய கருமமே கைவருமியல்பினனாய் வாழ அனைத்துஞ் சிவன் செயல் எனும் பொதுநடம் காண (175) சினத்தை வென்று (841) மூலர் கூறிய உண்மை விளங்க சத்தியம் தவறாது பொறுமை சாந்தம் விளங்கும் "சும்மா இருக்கும் சொரூபமே அறிவு

சொரூபமாக'' விளங்கு மகம் தண்ணளி விளங்க நிட்டை கூடி சிற் றம்பலதரிசனத்தில் நித்தியா - நித்திய என்னுமுண்மையை யறிந்து தரிசனத்தில் காணும் ஆறுபடிக்கு அப்பால் யுவனலோகத்தில் தத்து வாதீதஞ்சய் வாழும் தன்மையை யுணர்ந்தோன். பாசபந்தக் கயிறு எரிந்தபின் இன்பமும் துன்பமும் காணன். அவன் அவர்களைத் தாண் டினவன் (பிருகருண உபநிட. 4-4-22 — 227 இல்) காண்க:

திங்க டோறும் திருவக லாத
உங்கள் மனைக்கே யுவப்புடன் போந்து
நற்சிந் தனையும் நல்ல சமயமும்
அற்புதமான போற்றித்திரு வகவலும்
விற்பன மாக விளங்கு யோகமும்
சொற் பொருட் சுவைசேர் சூடாலை சரிதமும்
இன்னும் பற்பல விணியகட் டுரைகளும்
கொண்டுடன் மகிழ்ந்து கும்பிடு மிவளை
வாரி யெடுமின் மடிமீது வைம்மின்
சீரிய வாயாற் செந்தமிழ் பாடுமின்
பாலுந் தேனும் பாகும் பருப்பும்
நாலுங் கலந்து நன்ரு யூட்டுமின்
பட்டாடை சுற்றுமின் பலபணி புனைமின்
மட்டார் நறுமலர் மாலை சூட்டுமின்
எட்டாப் பேரின்ப மெய்தி
இட்டார் பெரியோர் எனவாழ் வீரே.

[முதல் 7 வரிகளும் தரும்] அழகுடன் வரும் உம்முடைய குழந்தை போன்றவனை, தாய் தம் குழந்தையை எவ்வகையாக அன்புடன் வர வேற்பாளோ அவ்வாறு அப்பொருட்களைத் தரும் முறைவனை, அகத் தினில் கண்டு (சிவலிங்க வடிவாக விளங்குபவனை) அவனை அபிஷே கித்து (அட்டாமாமலர் ஞானப் பூசைக்குரிய மலர் 243) தேனும் பாலும், பருப்புங் கொண்டு பூசியுங்கள் (248) ஞானப் பூசைக்குரிய மலர் எட்டும் மற்றும் புனை முதலிய அட்டமாமலர் கொண்டு (243) அழகுடன் பாடித் தோத்திரஞ் செய்து அழியாப் பேரின்பப் பேறு எய்துமின்

கட்டளைக் கலித்துறை

பாவலர் நாவலர் உள்ளங் களிக்கப் பவவருடம்
தேவரு மெச்சச் சிவனருள் மார்கழி சேர்ந்துதித்தான்
சிவன்சிவனென்றறிந்து தொண்டாற்றச் சிவதொண்டனும்
காவல் நமக்கிவன் கட்டுரை யல்லாற் கதியிலையே.

ஆன்மா பெரிது (பிருஹரண உபநிட 4-4-22) (பாட்டு 217 இல்) சிவனே சிவனுண் அனைத்து மவனே (என்பது காண்) சிவதொண்டன் எழுதுவோரும், வர்சிப்போரும், என்றும் நற்சிந்தனை எனும் நல் வாக்கு அகத்தே இன்பந்தர, வேறோர் நினைவிலும் மனம் அலையாது, காவல் காப்போன்.

48 அம்மானை

தரவு கொச்சகம்

252. அம்மையு மப்பனுமாய் நின்றுரா ரம்மானை
இம்மை மறுமைக் கிறைவர்கா ணம்மானை
தம்மையறிந் தார்தலை யாவரோ அம்மானை
செம்மை மனமுண்டானுற் சேர்வர் தலையிடத்தில்
உம்மை யங்கே காணமுடியாதா மம்மானை
இந்திரசா லங்கனவென்று முன்னோரிவ் வுலகைத்
தந்திரமாய்ச் சொன்ன சார்பென்ன வம்மானை
சார்புகெட ஒழுகும் தன்மையருக் கல்லால்
ஆருமறி யார்களந்த ரகசியத்தை அம்மானை

நீரில் எழுதிய எழுத்துப்போல் இவ்வுலக வாழ்வு இந்திர சாலங் கனவென்று முன்னோர் சொன்ன சார்பென்ன வென்றால் உடம்பினை இயக்கும் ஆவி தனித்து நிற்கும் தன்மையற்றது. ஒருபொருளுடன் சார்ந்து நிற்குந் தன்மையேயுள்ளது இருள் மலச் சார்புடன் கனவு லகப் பொருளுடன் கட்டுண்டு கிடப்பதும், சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் இறைவனை யறிந்து தியானமும் அருளும் திருக்களிற்றுப் படியார் (34) தருவதைக்காண்:

சார் புணர்ந்து சார்புகெடவொழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம் — சார்பு
கெட வொழுகின் நல்ல சமாதியுமாம் கேதப்
பட வருவதில்லை வினைப்பற்று.

சார்புகெட வொழுகி வினைப்பற்று சதிறேனுமில்லாமல் மும்மல மும் விட்டு நீங்க சுமமா இருக்கும் அறிவு சொரூபமாக விளங்கும் அகம் நிட்டை கூடி தில்லைத்தரிசனங் காணும் ஆருமறியா ரகசியம்: ஈசுவரனுடைய ரகசியத்தையெல்லாம் அறிவானவன் அம்மையுமப்ப னுமாய் நின்றுளைக்காண்பான், இம்மைக்கும் மறுமைக்கும் இறைவனே அந்தச் சோதிதரிசனம்: வேறு என்ன எமக்கு தம்மையறிந்த தவத்தி னோர் தரும் உண்மை அப்பாற்பட்ட திருவைந்தெழுத்துச் ஜோதியில் ஒன்றுமற்ற ஆனந்தமே அப்பனுமில்லை அம்மையுமில்லை உலகுமில்லை கனவுமில்லை வெறும் சச்சிதானந்தமே அது.

49 சொல்லாய் எனக்கேற்ற சொல்

253. எந்தையே! எந்தையே! என்றேத்து மெய்யடியார்
சிந்தை குடிகொண்ட தெய்வமே! — முந்துங்
கருணைத் திருவுருவே! கண்ணிறைந்த இன்பே!
தருணமிஃ தாளாய் நீ தான்.

எந்தையே! அமுதம் போன்ற கருணைமழை பொழியும் என் அப்பனே! மெய்யடியார்கள் உள்ளமெனும் திங்களுங் கங்கையுஞ் சடையிற் தங்கிய கோலத்தை சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனைதோறும் என் சிந்தை குடிகொண்ட கருணைக்கடலே! அறிவு சொரூபமாக விளங்கும் அகத்தே எல்லையற்ற பேரின்ப உணர்ச்சி தருபவனே! இன்ப துன்பமற்ற அறிவு சொரூபமாக விளங்கும் அகம் என்றும் கண்ணிறைந்த பேரின்பமே தருவது. உன்னுடைய நிட்டையெங்கே? உன்னை எப்போ காணுவேன். என்னை ஆண்டருளி நிட்டைகூடி. உன் தரிசனம் தரலாகாதா. (1)

254. தானந் தவமிரண்டுஞ் சற்றுமிலாப் பாவியேன்
ஞான முளேனும்போல் நடிக்கின்றேன் — வானில்
வளர்பிறையைச் செஞ்சடையில் வைத்த பிரானே!
தளரவிடா தாளாய்நீ தான்.

அறவழி நின்று ஒழுகும் முறையொன்று மறியாப் பேதை: பேதை மனம் கலங்குகிறதே; குரங்கையொத்த மனமானது அங்குமிங்கும் மகிழ்கிறதே; ஞானவுணர்ச்சியுடையேன்போல் நடிக்கின்றேன் உன்னை அண்டின மெய்யன்பர்கட்கு அருள் கொடுக்கும் இளம்பிறை சடையிலணிந்த எம்பெருமானே! இளம்பிறை வளரும் தன்மையுடையதே! என்னுடைய ஆவல் வளரச் செய்து உன்கருணைக் கடல் மழை பொழிய அகம் குழைந்து மெய்யரும்பி அறிவு சொரூபமாகவே அகம் விளங்காதோ அவ்வண்ணம் உம்முடன் குழையும் அகம் அவிழ்ந்தே கசித்தமாய்! தளராது நீடருள் நெறியாம் பராநந்தியைத் தரிசிக்க அருளாயோ? (2)

255. தானை தன்மை தனையறிந்த மாதவர்கள்
வானதி மாயையிலை வாடுவரோ — தேனுறும்
கொன்றைச் சடைமுடியாய்! கோலவேற்றூர்தியாய்!
என்றுமெனை யாளாய்நீ யிங்கு.

பற்றற்று பாசபந்தக் கயிறு எரித்தபின் மும்மெனனமோ அவன்பால் தோன்ற (254) நிட்டை கூடியவன் சிற்றம்பல தரிசனங் கண்டு தான் உடம்பல்ல ஆத்மாவே தான் எனும் உண்மை விளங்க வாழும்

மெய்யடியார்கள் பின்னும் மாயையினால் உண்டாகும் எண்ணங்களும் சங்கற்பமும் உண்டாக்குவாரோ (115) கானல் பூ, கொன்றைமாலையணிந்த இறைவனே! படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய தொழில்களுக்கு உற்பத்தித் தேவர்களாய் விளங்கும் பிரமா விஷ்ணு உருத்திரன் எனும் மும் மூர்த்திகளையும் அறிந்து பஞ்சாட்சர மந்திரத்தை இடைவிடாது உபதேசித்தும் தேவாரங்களை ஓதியும் திரிதோஷமிறக்கும் அந்த அழகு பொருந்திய ஓர் ஊர்தியாகக் கொண்டவனே என்றும் உனது புகழையே பாடி உயிர்விட்டு நீங்கும் பொழுதும் உன்னுடைய நாமமே கொண்டு செல்ல அருள் தாராய்.

தாயுமானவர் "அவனே தேவர் மூவர்க்கும் ஐந்தொழிற்கும் இறைவன் ஆருயிர்கள் அனைத்திற்கும் பதி" எனும் உண்மைகள் தருகிறார்

மறைமுழக் கொலிப்பத் தானே வரதமோ டபயக் கைகள்
முறைமையின் ஒங்க நாதம் முரசெனக் கறங்க எங்கும்
குறைவிலா வணங் றைந்து கோதிலா நடனஞ் செய்வான்
இறையவன் எனலாம் யார்க்கும் இதயசம மதமீதல்லால்
(தாயுமானவர் தேன்முகம் 5) (3)

256. ஆளான அன்பர் அகநிறைந்த பாக்கியமே
சூளா மணியே துரந்தரனே! -- மீளா
அடிமைநர னன்றே அறியார்போல் விட்டுப்
படர்தல் முறையோ பகர்.

மலப்பிணிப்பால் கட்டுப்பட்டு அலையாமல் முப்புரமும் எரிந்து திரிமூர்த்தியறிந்து வாஞ்சிமாயையும் விட்டகலத் (255) திரிதோஷமிறக்க (115) திருவருள் நிறைந்து விளங்கும் மெய்யன்பர் தம் அறிவு சொரூபமாக விளங்கும் அகத்தே நீக்கமற மிக நிறைந்து விளங்கும் துலக்கப்படாத மணிபோன்றவனே, இயற்கையாகப் பாசங்களினீங்குந்தன்மையுடையோனே முடிவிலாற்றலுடையோனே பேரருள் உடையோனே துரந்தரனே, உம்மை நான்ஒரு கணப்பொழுதும் விட்டு நீங்கா அடிமையல்லவோ, களவுபடாத ஓர் காலம் [காலவரையறையைக் ..... என்னும் பாட்டையும் (53) இல காண்] விளங்க என்றும் நலஞ் சுழியா இன்பமே தரும் சூளாமணிபோன்ற அகம் (55 கலஞ் சுழிக்குங் கருங்கடல் சூழ்] விளங்கவே எளியவனே அடிமை கொண்டவனே! திரும்பவும் வினைப்பயன் என்னும் முடிவிலா அம்பலத்தே படர எனை விடுதல் முறையோ.

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடைமன்னிய மன்னே

சிறைபெரு நீர்போல் சிந்தை வாய்ப்பாயுந்
திருப்பெருந்துறையுறை சிவனே
இறைவனே நீ என்உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக்கேனே.

[கோயிற்றிருப்பதி 5] (4)

257. பகருவார் நெஞ்சம் பதைக்குமோ பாரில்
நிகரில் இறைவநெடி தெய்த்தேன் — பகருற்றேன்
உண்டோ வுலகத் துறுதெய்வம் நீயல்லால்
உண்டோ துணைவேறிங் கோது.

நெடி தெய்த்தேன் = நெடிது × எய்த்தேன்
எய்த்தல் = அறிதல், பணிதல், சேருதல்
நெடி தெய்த்தேன் = பலபிறவிகளாக நீண்டகாலம் உம்மைப்பணிந்து ஒன்று சேர்ந்து நின்றேன். அத்தகைய அகம் (256) பின்னும் பஞ்ச மந்திர ஜபத்தாலும் தேவாரபாராயணத்தாலும் உம்புகழைத்தரும் புராணங்களை வாசிப்பதாலும் என் நெஞ்சம் உள்ளுருகி, உரையுணர் விறந்து தம்மை உணர்பவர் உணர்வினூடே கரையிலா இன்ப வெள்ளங்காட்டிடும் முகில்போன்றவனே, அவனே உள்ளத்தே தேறித் தெளிவாய்த்தோர் அமுதினைக்காண்பதால் பதைக்குமோ? அறிவுக்கறி வாய் பூரணமாய் அகண்டானந்தமயமாகிப் பிறிவற்றிருக்கும் பெருங் கருணைப் பெம்மானே நீ யல்லால் வேறுதுணை இங்கு எனக்குண்டோ சொல்:

ஒப்புனக்கில்லா வொருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறிலியேற்கு
விழுமிய தளித்த தோரன்பே
செப்புதற் கரியசெழுஞ் சுடர்மூர்த்தி
செல்வமே சிவபெருமானே
எப்பிடத் துன்னைச் சிக்கனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

(திருவாசகம் பிடித்த பத்து 5) (5)

258. ஓதுவார் நெஞ்சில் உதிக்கும் பரஞ்சுடரே!
மாதுசேர்பாகா! ம்றைநான்கும் — ஓதுமிலா
உன்புகழை ஓதினே னுன்னடியான் யானுமிரு
என்பிழையுட் கொள்ளே லினி.

ஆருயிர்களின் மலக்குற்றங்களை யகற்றும் பேரருள் வாய்ந்த குற்றமில்லாத ஐந்தொழிற் பெருங் கூத்தினை இடையருது புரிந்தருளும்

மாதுசேர்பாக! அறம் பொருளின்பம் வீடு எனும் நான்கினையும் ஆலமர் செல்வமாய் அந்நால்வர்க்கும் அருளிச் செய்த பண்டைத் தமிழ் நான்கும். ஓதுகிலா மறை நான்கும் உன்னைத் தரும் இயல்பில்லாதன; அவற்றின் உண்மையை முறைவடிவாம் ஆகமமுறை நின்றுழுகியே காணலாம். உன்புகழை — அப்பர் சுவாமிகள் திருக்குறுந்தொகையில் (தம் உள்ளத்தே) நின்றுடும் அமுதினை தேறலை தெளியை தெளிவாய்த்தோர் ஊறலை'' என்று ஓதுவதுபோல் நானும் நெடுநாள் அன்பு பூண்ட உன் அடியான் ஒதினேன் உன்குவார் அகத்தினில் ஊறும் அளவிலா இன்பத்தேனே (257) கோடி சூரியப்பிரகாச ஒளி போன்று விளங்கும் சுடர்க்குன்றே! யான் இனி களவுபடா ஓர் காலமே என்றும் விளங்க (53) பிழை செய்யேன் (6) (1)

259. இனியவனே! யெவ்வுயிர்க்கு மீசனே! ஆரும்
பனிமொழியாள் பாகனே! மாயோன் — நனிவருந்த
நீண்ட சுடராகி நின்றாய் நினைவேனை
ஆண்டருள வேண்டும் அறி.

ஏர்தரும் ஏழுலகேத்த எவ்வுருவுந் தன்னுருவாய் செயலையும் பொருளையும் போல் இணைபிரியாத சத்தியும் சிவமுமாக விளங்கும் பனி மொழியாள் பாகனே! எவ்வுயிர்க்கும் ஈசனே! அழியா இன்ப மழை பொழிபவனே! அயனும் மாலும் மனம் வருந்த ஆகாயமும் பூமியும் அளாவியே ஓர் சிவலிங்க வடிவான சோதிப் பிழம்பாக நின்றவனே (புள்ளானும் 246) என்னை ஆண்டருள் புரியவேண்டும். (7)

260. அறிவுக் கறிவாகி நின்றாய்! அறிஞர்
பிறிவறவுன் னுள்நிற்பர் பெம்மான் — நெறியறியேன்
பொல்லாப் புலைநாயேன் போற்றும் வகையறியேன்
சொல்லாய் எனக்கேற்ற சொல்.

உடலை இயக்குவது உயிர்; உயிராக இயங்குவதும் தன்னை அறிவதும் அறிவு சொரூபமான சிவன்; ஐம்புலன் கட்டற்ற உள்ளம் பாசபந்தக்கயிறு எரிந்து பின் மும்மௌனமாக அறிவு சொரூபமாக விளங்கும்; அறியா அறிவில் அழிந்ததை சித்தமாய் ஒன்றுஞ் செறியாச் செறிவே எனும் சிவம்; அதைத் தம் அகத்தே காணும் அறிஞர்.

சொல்லொழியப் பொருளொழியக் காரணமெல்லாஞ்
சேர்ந்தொழிய வுணர்வொழியத் துலங்காநனா
அல்லொழியப் பகலொழிய நடுவேநின்ற
ஆனந்த அனுபவமே அதீத வாழ்வே''

என்று இராமலிங்க சுவாமிகள் விளக்குவது போல, பிறிவறத்; தாமும் பெருமானும் பிறிவற்று, ஒருபொருளாய்க் காட்சி தருபவனே அவன்! இவ்வுண்மை தரும் நெறிஉடையேன் யான். ஒருவன் வளர்க்கும் நாய் வேறு நெறி அறியாது; அவன் பாதத்தின் கீழ் விழ்ந்து கிடக்கும் இயல்புடையது அந்த நாயினுங் கீழ் பட்ட நிலையில் கிடக்கும் புலையநாயேன் போற்றுதற்கு வேறோர் வழியறியேன்: அன்புடையீர், கருணையே வுருவான கடவுளே! உனையடைய ''எனக்கேற்ற சொல் சொல்லாய்''! எம்பெருமானே. (8)

261. சொல்விற் கலந்த சுவையறியாப் பாவியேன்
அல்லும் பகலும் அரற்றுகின்றேன்—தொல்லுலகில்
வாராயோ என்முன்னே வந்து வறுமைபிணி
தீராயோ வாய்திறந்து செப்பு.

சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பே சத்திக்கும் சிவனுக்கும் மிடையிலுண்டு. பண்ணுக்கு அதன் இசைகளே ருசியைக் கொடுப்பது ஓர் ராகத்துக்குச் சுரம் பெருக்கப் பெருக்க இனிய சுவையை நாம் காணுவோம். சொல்வடிவான அம்பிகையின் சுவையை அனுபவிப்பதே பேரின்ப உலகு நாதத்தின் மேல் பொதுநடம் (175) காண்பவர்க்கே பண்ணின் ஓசையும் சுரத்தின் இனிமையும் விளங்கும்.

பொதுநடம் புரியும் இறைவனே சிவன் செயலின் உண்மை ருபியே (91) நம் அகக் கண்ணுள் கண்டு, ''ஞானத்திரளாய் விளங்கும் இறைவன், அல்ல அடியார் மேல் ஊனத்திரளை நீக்கும் உண்மைப்பொருளானவன், எம் அகத்தே நீக்கமற அகல் நிறைவாக விளங்க அவனை நாம் கண்டு பேரின்பக்கடலில் ஆழ்ந்து கிடக்காமல், பலவும் அல்லும் பகலுமரற்றி என்ன பயன்? உன்னைக்காணுதை வறுமைப் பிணி துன்புறுத்தும் எனியேனை மேலுந் துன்புறுத்தாமல் முன் வந்து ''எனக்கேற்ற சொல் சொல்லாயோ'' (9)

262. செப்புந் தரமோ சிவனேநின் சீரடியார்
அப்பிலுப் பொப்பான ஆக்கத்தை—இப்புவியில்
என்னையு மவ்வா றினிநீ கலப்பாயேல்
உன்னைத் தடுப்பவரா ரோது.

அப்பியம் = தேவர்க்கிடும் அவிசு, அவிப்பாகம் உன்னுடைய மெய்யன்பர் ஜீவன் முத்தர்களாக விளங்குபவர் ஆறுறு தத்துவத்துக்கும் அப்பாற்பட்டவர். தேவாதி தேவனுக்கிடும் அவிப்பாகம் போன்றவர்களுடைய பேரன்பு, ''நற்றுணைப் பேடையோடாடி நாரை'' வருமன்பு, சத்தியுஞ் சிவமுமான அன்பு: செப்புந்தரமோ, சொற்க

ளால் சொல்லவொண்ணாத இயல்புடையது. [சொல்லொழியப் பொரு ளொழிய எனும் இராமலிங்க சுவாமிகள் பாட்டை 260) இக்காண்க.]

மேலே கூறிய அன்பு வடிவமாக நீயும் நானும் ஒன்றுபட, நீ இயன்றுழல் உன்னைத்தடுக்க வருவாரார்.

எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன் அடியார்க்கு
இங்கே யென்றருள்புரியும் எம்பெருமான்.
(சம்பந்தர். 2-0-64) (10)

50 ஐயனே சற்குருநாதா

இராகம்—சஹானா தாளம்—ஆதி

பல்லவி

263. ஐயனே சற்குரு நாதா—உனை
யண்டிவந் தேனருள் தாதா
துய்யனே சொற்பிர போதா—உனைத்
தோத்திரஞ் செய்தேன்பொற் பாதா (ஐய)

உத்தம குணங்களையுடையோனே எண்குணங்களையுடையவன்; சொல்=சொல்வடிவான அம்பிகை. பிரபோதம்=அறிவு, தெளிதல்: சொல்வடிவான அம்பிகை (261) நாதவடிவாக எப்பொருளிலும் வியாபியாக நீக்கமற அகல் நிறைவாக விளங்கு பவளும், அவற்றை இறைவன் தன் அறிவு கொண்டு இயக்கியும் அறிந்தும் அப்பாலாக நின்று விளங்கும் சொற்பிரபோதன். பொன்னம்பல தரிசனங் கொடுக்குந் திருவடிசேவையை வேண்டும் பொற்பாதா.

சரணங்கள்

264. ஈயாத புல்லரைக் கூடி—நானும்
இடர்ப்பட் டேன்வெகு கோடி
ஓயாம லுன்புகழ் பாடி—நானும்
ஓடிவந் தேனுனைத் தேடி (ஐய)

புல்லர்=கீழ்மக்கள் வேடர் அறிவிலார், புல்லியோர் அறவழி நில்லாத அறிவிலிகள்; சும்மா இருக்கும் சொரூபமாக அறிவுவடி வாக மும்மலனஞ் சாதிக்கும் அகம் நிட்டைகூடும் இடம். அதே இறைவன் பாதாரவிந்தத்துக்கு கொண்டு செல்லும் பெருந்துறைப் பெருந்தோணி; செல்லப்பா சுவாமியார் அவற்றைஉள்ளே'தேரெடா' என்று கூறுகிறார். தன்னை இறைவனுக்கு ஈதல் என்றே அறவழி நின்று பெருந்தோணி பற்றுதலைக் கூறுவர். முன் ஈயாமல் உலகினில்

ஈடுபட்டு பலகோடி இடர்ப்பட்டுப் பின் உனைத்தேடி அறவழி நின்றொழுகி உன் வீட்டுக்குச் செல்லும் தேர்போல்?] ஞானகுரவன் முன் சென்று] உனைத்தேடி நின்றேன். அவனும் ''தேரடா உள்'' என்றான்: (1)

265. ஆதார மாறையுந் தாண்டி—அருள்
அம்பலத் தேநின்று வேண்டி
சூதான மனந்தினந் தாண்டி—நானும்
தொடர்ந்துவந் தேனினைத் தாண்டி (ஐய)

இத்தேகத்திலுள்ள பரமபுருஷனைவன் சாகஷி, அனுமதிப்பவன், தாங்குபவன், அனுபவிப்பவன், மஹேஸ்வரன், பரமாத்மன் இப்படியெல்லாம் இயம்பப்படுகிறான் (கைத13-22)

ஜனன மரண ஸம்சாரத்துக்கு அப்பால் செல்லும் வழியை கிருஷ்ணா பார்த்தனுக்கு உபதேசிக்கிறார்:

சாக்ஷியாகி நாடகமேடையாகிய உலகில் நின்று பற்றற்ற மெய்யன்பர் நாடகத்தைப் பார்த்துச் சிரிப்பர். பின் நர்டக ஆசிரியருடன் சேர்ந்து திருத்தும் முறையோ என்னும் விதத்தில் அனுமதிப்பர். நாடகத்திலிவ்வரும் பிழைகளையும் வடிவையும் தாங்குபவனாகிறான். நாடகம் முழுவதையும் தாங்குபவனாக உலகியல் உபிர் அனைத்தின் நன்மையில் (முன்பாட்டு ஈதல் விளக்கம்) ஈடுபடுகிறான். அடுத்தபடியாக 'நாடக' ருசியில் தன்னைக்கண்டு பேரானந்த உணர்ச்சியை அனுபவிக்கிறான். சும்மா இருக்கும் சொரூபமாக விளங்கும் அறிவு சொரூபமான அகம் இன்பதுன்பம் இரண்டையும் 'சிவன் செயல்' எனும் ஞானக்கிளியால் சுட்டெறிக்க பேரின்ப உணர்ச்சியை யடைகிறது. அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் உலகினை மகேஸ்வரன் என்னும் ரூபம், வினைப்பயன் என்னும் அம்பலத்தே நடக்கும் நாடக ஆசிரியன், அருவுருவாம் மகேஸ்வரனைக் தன்னைக் காண்கிறான் மும்மலமும் வேவச்செய்தே பரமாத்மனை அடுத்தபடியில் தன்னைக்காண்கிறான்; (2—735) காண்

இந்தசாகஷி, அனுமதிப்பவன், தாங்குபவன், அனுபவிப்பவன், மகேஸ்வரன், பரமாத்மன், எனக்காணும் ஆறு நிலைகள்; ஆதார மாறையுந் தாண்டி போதாஞசாரியர் சோத்தனைக் கருளும் அருள் அம்பலத்தே நின்று வினைப்பயன் என்னும் அம்பலமும் மும்மலமும் முற்றச் செற்றபின் - மருத்துவன் போன்று ஞானகுரவன் மாண வனைத் தேர்ச்சியடையும் வண்ணம், மறைப்பாற்றல் வடிவாக நின்றருளும் பயிற்சிச் சாதனைகளில், பாதாரவிந்தத்தில் படுத்தக் கிடக்கும் நாய்போல், எஜமானனை இறைவன் திருவடியினை

மறவாதும், மறந்தாலும் இறைவன் திருக்கூத்து எனும் உண்மையைக் களவுபடா ஓர் காலம் (53) இலும் ஆதாரமான பாட்டு ''கால வரை யறையைக்...'' என்பதாலு முணர்ந்தும், ''கலஞ்சுழிக்குங் கருங்கடல் சூழ்..'' என்னும் பாட்டாலும் விளங்கும் ''நலஞ்சுழியா இன்பம் (55) எனும் ஞானப்பொருளையும் கண்டு அழியா இன்பம் பருக சூதான மனம் தினந்தினம் தூண்டி நானும் பரம்பொருளைத் தொடர்ந்தே இடைவிடாது, ஐந்தொழிலுங் குனித்தருளுமையனை நீ என்னைக் கைவிட்டாலும் நான் உன்னை மறக்காமல், தொடர்ந்து வந்தேன் எம்பெருமானே, (2)

51 அன்னைப் பத்து

266. மண்ணையும் விண்ணையும் மற்றுள யாவையும்
எண்ணுமுன் னேயாக்கும் அன்னே யென்னும்
எண்ணுமுன் னேயாக்கும் என்போல வந்தவஃ
தென்ன அதிசயம் அன்னே யென்னும்.

''என் பிரகிருதியை அருளுடையதாகச் செய்து சுதந்திரமில்லாது அப்பிரகிருதியின் வசமாயிருக்கும் இவ்வுயிர்த்திரள் யாவற்றையும் திரும்பத்திரும்ப நான் தோற்றுவிக்கிறேன்''

(கீதை 9-8)

உயிரிலபொருள் உயிருள்பொருள் எல்லாவற்றிலும் ஓசைவடிவாக விளங்கும் சக்தி அம்பிகையும் அவற்றை வியாபித்து நின்றும் அகல்நிறைவாக எங்கும் விளங்கியும் தன்னொளி கொண்டு இயக்கும் சொக்கநாதனும் எம் அகத்தே யானும் அதனுள் அடங்கும் ஒரே 'பரமாத்மன்' எனும் ரூபமாகக்கண்டே பரசிவ வணக்கம் செய்யும் வழக்கம் உண்டு. [சிவானந்தலஹரிசு (-) பாட்டு] (குறியாக குறியினில் 195) வசிக்க யான் என்னை அங்கே தாய்பார்வதியில் ஒடுங்கக்காணுவது போலவே மண்ணும் விண்ணும் மற்றுள யாவும் அவளுள்ளே ஒடுங்கும்.

உழிதரு காலங் கனலும் புனலொடு மண்ணும் விண்ணும்
இழிதரு காலம் எக்காலம் வருவது வந்ததற் பின்
உழிதரு கால் அத்த உன்னடியேன் செய்த வல்வினையைக்
கழிதரு காலமுமாய் அவை காத்தெம்மைக் காப்பவனே.

(திருவாசகம் திருச்சதகம் 8) (1)

267. கஞ்சனும் மாயனும் காணாக் கடவுளர்
சஞ்சலந் தீர்ப்பரரல் அன்னே யென்னும்
சஞ்சலந் தீர்த்தென்னைத் தானாகச் செய்தனர்
வஞ்சகந் தீர்ந்தது அன்னே யென்னும்.

லக்ஷ்மி நாயகனை கஞ்சனும் சரஸ்வதி நாயகனை அயனும் தத்தம் செல்வச்செருக்கும் கல்விச்செருக்குங் கொண்டு மும்மலப் பிணிப்பாய பெண்ணைசை மண்ணைசை பொன்னைசை கொண்ட அகங்காரம் தம்மனத்தைக் கலக்கப்பேயினல் ஏவப்பட்டு பன்றி வடிவமாக பூமியைக் கிழித்துக்கொண்டும் அன்னப் பறவையாக ஆகாயத்தைத் தாண்டிக் கொண்டும் பூமியையும் ஆகாயத்தையும் அளாவிக் கொண்டு நின்ற லிங்கவடிவான ஜோதிப்பிழம்பின் அடியையுங் காண முயன்றனர். ஆதியந்த மற்ற திருவைந்தெழுத்தும் ஜோதியை அடியும்முடியுங்காண்பார் யார்? அலைந்து திரும்பினர்; (150) செருக்கடங்கினர் படைத்தற்கடவுளரும் காத்தற்கடவுளரும் அழித்தற் கடவுளருமான அதகதிகுரிய எண்ணங்கள் காம் (Virtual Desies) எம்மனத்தில் தோன்றியும் பின் எம்மை மண் பெண் பொன்னைசைகளாக(Conerete desires) மும்மல்ப் பிணிப் பென்னும் கர்மத்துக்கிடாகாமல் திருமூர்த்தியறிந்தும், நம்மைப் பாதுகாக்க பஞ்சாட்சர மந்திரத்தை ஓதியும் சிவபூசை செய்தும், அன்புநிறைந்த தேவார திருவாசகங்களைச் சிந்தைகுழைய ஓதியும் வேறும் புகழ்மாலை பாடியும் தெளிந்த சித்தத்தில் திரிதோஷமிறக்குப (115) விழிநீர் பெருக கருணையேவுருவான கடவுள் சித்தத்தில் உதபமாக, சஞ்சலந்தீர்த் தென்னையாளும் இறைவன்உள்ளத்தே குடிகொள்வன், அவனையே வேண்டி வேண்டியழ, அறியா அறிவில் அவிழ்ந்ததக சித்தமாய் (195) ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம், எனும் தானுமே எழுந்தருள தன்னையறிய, சஞ்சலந் தீர்த்தென்னை யாண்டான்; வஞ்சகம் தீர்ந்தது அன்னையே.

அரியய னித்திரன் சந்திராதித்த ரமரரெல்லாம்
உரியநின் கொற்றக் கடைதலை யாருணங் காக்கிடந்தார்
புரிதரு புன்சடைப் போக முனிவர் புலம்புகின்றார்
எரிதரு செஞ்சடை யேகம்ப வென்னே திருக்குறிப்பே.

(4—99—7) (2)

268. எட்டு மிரண்டு மறியா வெனக்கொரு
பட்ட மளித்தனர் அன்னே யென்னும்
பட்ட மளித்திந்தப் பாரொடு விண்ணும்
இட்ட முளதென்றூர் அன்னே யென்னும்.

இறைவன் எண்குணங்கள்:- பிறவின்மை (பிறப்பில்லாதவன்); இறவின்மை (முடிவில்லாதவன்); பற்றின்மை (பாசங்களால் கட்டுப்படாதவன்) பெயரின்மை (குறிப்பிட்ட பெயரொன்றுமில்லாதவன்); உவமையின்மை (வர்ணனைகளால் மட்டுப்படாமை); ஒருவினையின்மை (நல்வினை தீவினையெனு மலப்பில்லாமை); குறைவிலறிவுடமை (சர்வஞான முடமை); குடிமுதல் (கோத்திரம்) இன்மை என்பன பழந்

தமிழர் 'நன்முயற்ந்த நிமிர் சடை முழுமுதல்வன் பண்பெட்டுமாம் வேறும் முற்றறிவு (சர்வஞ்ஞத்துவம் — எல்லாமறிபவர்); வரம்பிலின்பம் (பூரணமான சந்தோஷமுடமை); இயற்கையுணர்வு (ஆஞதிபோதம் — நிராமயான்மா - ஆதியாகவே எல்லாப் பொருட்களிலும் அறிவுணர்ச்சியாக இயங்குந்தன்மை)' தன்வயம் (சுதந்திரம் - தானுகவ இயங்குந்தன்மை); குறைவிலாற்றல் (அளவில்லாத ஆற்றலுடமை)ஃ வரம்பிலாற்றல் (ஆதியந்தமற்றது); தூயவுடம்பு (பாசபந்தமற்ற உடம்பையே இருப்பிடமாகக் கொள்பவர்) இயல்பாகவே பாசங்களில்லாமை எனுமெண்குணங்களுமாம்.

எட்டுக்கொ லாமவ ரீறில பெருங்குணம்
எட்டுக்கொ லாமவர் சூடுமின மலர்
எட்டுக்கொ லாமவர் தோளிணை யாவன
எட்டுக்கொ லந்திசை யாக்கின தாமே. (4—13—8)

அட்டமாமலரும் ஞனப்பூசைக்குரிய எட்டையும் (244) இல் காண்க;

சத்தியுஞ் சிவமுமாகுந் தன்மை பெண்ணும் ஆணுமாகிய உருவமிரண்டும்; ஆடியபாதம் ஊன்றுபாதம் கொண்ட உருவம்;

இரண்டு கொலா மிமையோர் தொழு பாதம்
இரண்டுகொ லாலமிலங் குங்குழை பெண்ணொண்
இரண்டுகொ லாமுரு வஞ்சிறு மான்மழு
இரண்டுகொ லாமவ ரெய்தின தாமே (4-18-2)

சரியை கிரியை என்னுமுறை கொண்டு வணங்கும் முறைகளில் மேல் கூறிய எட்டுமிரண்டு மறியா எளியனேன் குழந்தை தன் தாயைப் பசி வந்த போது அடைவது போலும், ஒருவன் வளர்த்த அவன் நாய் ஓடி அவன் காலடியில் படுத்தல் போலும் தன் அறியா அறிவில் அவிழ்ந்தேகச் சித்தமாய் (267) கிடக்கத் தன்னை அறிய நிட்டை கூடியே சிற்றம்பல தரிசனங் கண்ட மெய்யன்பனை என்தனக்கு 'சிவயோகியர்' எனும் பட்டமளித்தனர். உடன் கூடவே உலகில், உயிரில் பொருள் உயிருள் பொருள் யாவற்றிலும் தன்னையே காணும் இயல்புடையோனை மண்ணும் விண்ணும் இட்டமுடன் எதிரு மென்னுள் அன்னை யென்னும் (13)

269. சிவாய நமவென்று சிந்திக்கச் சொல்லியென்
அபாய மறுத்தனர் அன்னை யென்னும்
அபாய மறுத்தென்னை யாண்டுகொண் டாரவர்
உபாயத்தாற் காணெணர் அன்னை யென்னும்.

(சிவ)நாமம் சொல்லுவோம் நமனை வெல்லுவோம்'' (240) என்னுமுண்மை விளங்கவே சிவாய நமவென்று சிந்திக்க அபாயமற்றவனென் அன்னே! அவ்வண்ணம் அபாய மறுத்தென்னை, ஒன்றுய இரண்டாய் ஒரு மூன்றுய் நிற்பவன் என்னுட் கலந்தனன். சுட்டுப்பொருளினலும் ஐம்புலனுணர்ச்சியினல் உண்டாய உபாயங்களாலும் காணமுடியாது அறிவு சொரூபமாக என்னுட் கலந்தனன் அவன் என் அன்னே யென்னும்-

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச் வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே (4-11-10)

270. விருப்பு வெறுப்பினை விட்டிட வேசொல்லிக்
கருப்புகா மற்கதத்தார் அன்னே யென்னும்
கருப்புகா மற்காத்துக் கங்குல் பகலற்ற
இருப்பை யளித்தவர் அன்னே யென்னும்.

என்னையே சிந்திப்பவராய் எந்திச் சனங்கள் பரிவுடன் என்னை விட வேறென்றிலும் நாட்டமில்லாதவராய் என்னை உபாசிக்கிறார்களோ அந்நிலை பெற்ற பக்தர்களுடைய யோக க்ஷேமத்தை நான் தாங்குகிறேன். பாசபந்தக் கயிறு எரிந்தபின் மும்மலமும் வெந்தபின் இறைவனுடைய கருணைக்காற்று மெய்யன்பினை, பாய்விரித்து வைத்திருக்கும் படகைக் காற்றுத் தள்ளிச் செல்வது போன்று (ஸ்ரீ இராமாக்கிருஷ்ணர் 175), தள்ளிச் சென்று இறைவன் பாதாரவிந்தத்தை யடையச் செய்யும்; அந்த மெய்யன்பர் பிறப்புக்கு அப்பால் பட்டவராவர். கருப்புகாமல் காத்து எம்மை இரவு பகலற்ற ஏகாந்த அறிவு வெளியாகிய பரவெளியில் (167) திருவைந்தெழுத்துச் சோதியில் கலக்க வைத்தார் அன்னே யென்னும் (5)

271. நாமறி யோமெனும் நல்ல திருமொழி
நாமறி யச்செய்தார் அன்னே யென்னும்
நாமறி யச்செய்து நாமே நீயென்று
சேம மளித்தன ரன்னே யென்னும்.

முழுமுதல்வனும் பரமசிவன் இத்தன்மையர் இவ்வண்ணத்தார் எனும் வர்ணனைகளால் சட்டுப்படுத்த ஏலாதவர் குணங்களுக்கு (எட்டுமிரண்டு 268 இலகாண்க) அப்பால்பட்டவர்; எனுமுண்மை விளங்க நாமறியோம் என்னும் அறிவுப் பெருவெளியில் அவரை அவருடன் ஒன்றுய் கலந்து நிற்கும் திருமொழியாகிய ஓங்காரரூபத்

தில் கலந்து நின்றும் அழியா இன்பம் பருகச் செய்தா ரன்னே யென்னும்; அவ்வண்ணம் அறிந்து திருவைந்தெழுத்துச் ஜோதியில் நான்கலந்து(270)நிற்க அவன்நாமே நீயென்று சேமமளித்தனன் அன்னே யென்னும்.

உன்னைற் கரியசீர் உத்தர மங்கையர்
மன்னுவ தென்நெஞ்சில் அன்னே யென்னும்
மன்னுவ தென்நெஞ்சில் மாலயன் காண்கிலா
என்ன அதிசயம் அன்னே யென்னும்
(திருவாசகம் அன்னைப்பத்து 6) (6)

272. ஆரறி வாரென அன்றுசொன் னமொழி
ஆரறி யவல்லார் அன்னே யென்னும்
ஆரறி யவல்ல ராயினு மன்பர்கள்
சீரறி வார்திண்ணம் அன்னே யென்னும்.

விஞ்ஞானிகள் விஞ்ஞானஉணர்வினல் நுண்வெளியில் காணப்படும் பொருட்களையே அறியமுடியும்; அப்பாற்பட்ட அறிவுப்பெருவெளியில் காணப்படும் எம்பெருமான் சொரூப நிலையை தம்மறிவினல் மட்டுமே கண்டறியலாம். மும் மௌனஞ் சாதித்தே அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் (267) அவனை அறிவு சொரூபமாகவே விளங்கும் அகத்தில்காணலாம்: இருஉனக்கண்களுமுறங்க மூக்கட்கருணைப் பிரானைக் காணலாம் எனு முண்மையினை

"எண்ணுத தெண்ணிய நெஞ்சேதுயரொழி என்னிரண்டு
கண்ணை உறங்குக என்னுளை முக்கட் கருணைப்பிரான்
தண்ணுர் கருணை மவுனத்தினல் முத்தி சாதிக்கலாம்
நண்ணுத தொன்றில்லை யெல்லாமுழு நமக்குளதே"

என்னும் பாயப்புலி 13 இல) தாயுமானவர் தருகிறார் காண்க; ஆரறிவாரென அன்று சொன்ன அறிவுசொரூபத்தில் தம்மறிவினல் காணும் எம்பிரானை முன் (267) கூறிய பிரகாரம் நிட்டை கூடியும் உணர்ந்தும் பேரின்பமாகிய அழியா இன்பம்தரும் உண்மையினை அவருடைய மெய்யன்பர்களாகிய நாம் அவனுடைய நிழலில் விற்றிருக்கும் உண்மை அழியா இன்பமே திண்ணம் அன்னே என்னும் (7)

273. என்னை யறிவித் தெனக்கருள் செய்தவன்
என்னிலும் வேறலன் அன்னே யென்னும்
என்னிலும் வேறலன் எல்லாம் வல்லவன்
மண்ணினில் வந்தனன் அன்னே யென்னும்.

என்னை எனக்கறிவித்தவன் (267; 269) மற்றும் பாட்டுக்கள் வாசிக்க என்னிலும் வேறலன் நாமே நீயென்று சேமமளித்தனன் (271) அன்னையென்னும்; சர்வவல்லமைகளும் (268) பொருந்திய எம் பெருமான் என்சிவகுருவாக மண்ணினில் எழுந்தருளி வந்தெனை ஆண்டனன் அன்னையென்னும்

உள்ளத் தொடுங்கும் புறத்துளும் நாளெனுங்
கள்ளத் தலைவன் கமழ்சடை நந்தியும்
வள்ளற் பெருமை வழக்கஞ்செய் வார்கள்தம்
அள்ளற் கடலை அறுத்து நின்றானே.

(திருமந்திரம்)

நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீ எனை ஆட்கொண்டாய்
மாயப்பிறவி உன்வசமே வைத்திட் டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன்நானேதான் எனை ஏதோ இங் கதிகாரங்
காயத் திடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.
(திருவாசகம் குழைத்தபத்து 8) (8)

274. வாக்கால் மனத்தால் தொடர்வரி தானவன்
வாக்கால் திடம்பெற்றேன் அன்னை யென்னும்
வரக்கால் திடம்பெற்றேன் வாணி ளாசையைத்
தீக்கிரை யாக்கினன் அன்னை யென்னும்.

[விளக்கம் 272 வாசிக்க] நுண்வெளியில் காணப்படும் பொருட்களையும் செயல்களையும நாங்கள் சூக்குமசரீரமான மனத்திரை கண்டும். உணர்ந்தும் மனத்தால் நினைத்தும் வாக்கால் வர்ணிக்கவும் கூடும் அப்பால்பட்ட அறிவு சொரூபமாக விளங்கும் அறிவுவடிவான பொருளை நாம் வாக்காலும் மனத்தாலும் காணமுடியாது.

அவ்வண்ணமான எம்பெருமானை அவன் நமக்குத் தந்த ஒரு மொழியால் நம் அறிவுப் பெருவெளியில் கண்டு இன்பம் அனுபவித்தோம் (271) அந்த அழியா இன்பம் பருகியே என்றும் சீவன்முத்தனாக சிவித்தே ஈற்றில் அழியாப் பெருவெளியில் அழியா ஒளியில் என்னுடைய ஒளி ஒடுங்கிற்று. உண்மை வருமாறு

வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே

(திருமந்திரம் 168)

என்னுடைய வாணாளாசை இறைவன் பாதம் அடைந்து பிறப்பிறப்பில்லாமல் ஒடுங்கவேண்டு மென்பதே. அதுகைவர ஆசை கொண்ட மனம் கரைந்து உடம்பும் யாவும் தீக்கிரையானது. என்னில் மிகுதி ஒன்றுமில்லையே அன்னே யென்னும். இறைவனையடைய வேணுமெனு மாற்றல் இறைவனையடைய, ஆற்றல் மனம் யாவுமே மறையும் மாயை. தீக்கிரையாக்கினன் என்கிறார்,

முப்பாழும் பாழாய் முதற்பாழும் சூனியமாய்
அப்பாழும் பாழாய் அன்பு செய்வ தெக்காலம்

(பத்திரகிரியார் 114) (9)

275. எல்லாஞ் சிவன்செயல் எல்லாஞ் சிவன்வடி
வெல்லா மவனன்றோ அன்னே யென்னும்
எல்லா மவன்வடி வெங்கு மவனென்றால்
பொல்லாப்பிங் கேதடி அன்னே யென்னும்.

எல்லாம் அவனேயாம், எல்லாம் அவன் செயலே கல்லாய் மனிதர் கவலையேன்; எல்லா ரூபமுமவனென்றால் நாதத்தின்கேல் பொதுநடங் கண்டால் அன்னதானமும் கொலை பாதகமும் ஒரே சிவன் செயல் எனும் வடிவாகக் கண்டால், பொல்லாப்பிங்கேதடி என் அம்மே! ஒரு பொல்லாப்புமில்லை. பேதமில்லதோர் கற்பளித்த பெருவெள்ளமே! சிவானந்த வெள்ளம்!

ஒன்றுமற நில்லென்று உணர்த்தியநம் மோனகுரு
தன்றுணைத்தா நீடூழி தாமவாழ்க - என்றென்றே
திக்கனைத்துங் கைகுவிக்குஞ் சின்மயராந் தன்மையர்க்கே
கைக்குவரு மின்பக் கனி.

(தாயுமானவர் உடல் பொய்யுதவு 19) (10)

52 எழில் நல்லைவாசன்

இராகம்—இந்தோளம், தாளம்—ஆதி

பல்லவி

276. எங்கள் குருநாதன் எழில்நல்லை வாசன்
இங்கும் அங்கும் எங்கும் பிரகாசன்

அநுபல்லவி

மங்கள கரமான வாக்யப்ர சாதன்
மாறாத மௌன தியானப்ர வேசன் (எங்)

சரணங்கள்

அன்பர்ச காயன் ஆனந்த சாகரன்
அல்லும் பகலும்நல்லை வீதியிற் சேகரன்
என்பிழை யாவும் பொறுத்தெனை யாண்டவன்
இரவும் பகலுமென்றன் மனத்தினில் தாண்டவன்
(எங்)

வஞ்சம் பொருமைகோபம் வைத்திடும் மாந்தர்க்கும்
அஞ்சாதே யென்றருளை யீந்திடுஞ் சுதந்திரன்
கஞ்ச மலர்ப்பதத்தைக் கனவிலும் மறவோர்க்குப்
பஞ்சாமிர் தம்போனெஞ்சிற் பண்புட னினிப்பவன்
(எங்)

உரை:- எங்கள் குருநாதன் நல்லைவாசன் உள்ளும் புறமும் அவன் ஆவி திருநடனம் புரிந்த வண்ணம் இறைவன் அழகையே, திங்கள் கங்கை சூடிய சடையும் புலிக்கப் புயங்களுமாக, எங்கும் பிரகாசமாக நல்லை வீதியில் தரிசனம் கொடுப்பவன்;

என்றும் மங்களகரமான வார்த்தைகள்; எப்பவோ முடிந்த காரியம் ஒரு பொல்லாப்புமில்லை எனும் பலவும் என்றும் இறைவனின் உணர்வை ஊட்டும், அறந்தரும், மங்களகரமானதும் அறிந்து, உண்மை விளங்க மும்மொளனமே சாதித்தும் தியானமும் தருவன.

மெய்யன்பர்களை என்றும் தாய் போல் குழந்தையாக தன்னுள் கண்டும் அதற்கிணங்க அன்புசெலுத்தி ஆதரிப்பவன் அறிவுப் பெருவெளியில் நின்றும் வீதியில் நின்றும் தம்உண்மைகளைச் ஜோதியிலுணர்ந்தும் எளியனேனை, எம்மை ஒன்றும் கேளாதே என்தேவையை உணர்ந்து அருள்புரிபவன்; அவனே என்மனம் முழுதுங் குடிகொண்டவன்.

பாம்பை ஆபரணமாகக் கொண்டவன் வஞ்சகம் பொருமை கோபம் தம்முள் உள்ளவர்களும், முன்வரில் அவர்க்கும் நல்ல வரம் கொடுப்பவன். இனிய வார்த்தைகளை பகர்வான்.

"ஆதிஅந்தம் காட்டாமல் அம்பரம்போலே நிறைந்த
நீதில் அருட்கடலைச் சேருநாள் எந்நாளோ"
(தாயுமானவர் எந்நாட்கண்ணி அருளியல்பு 3)

பொய்தவித்த நெஞ்சன் அருட் பொற்பறிந்து திக்கனைத்தும்
கைதவிதது நிற்ப தெந்தக்காலம் பராபரமே.
(தாயுமானவர் பராபரக்கண்ணி 292)

53 ஞானகுரவன்

கலிவிருத்தம்

277. ஆர கத்தினுஞ் சென்றவ ருண்கிலர்
ஏர கத்தம ரேந்தலை யொப்பவர்
தார கப்பொருள் தந்த தலைவனூர்
நீர கத்தினர் நெஞ்சங் குடிகொண்டார்.

ஏரகத்தமரேந்தலை = ஏரகத்து + அமர் + ஏந்தலை; சுப்பிரமணியத்தலங்கள் ஆறில் ஒன்று ஏரகம். ''ஏரகவெற்பெனு மற்புதமிக்க சுவாமிமலை'' திருப்புகழுடையார். இக்காலத்தில் இத்தலத்தை சுவாமிமலை யென்றழைப்பர். தாரகம் = பிரணவம்; தாரகப்பிரமனம் பிரணவசொரூபமான பரப்பிரமம். நீரகத்தினர் = நீர் + அகத்தினர் அன்பு சிவமாய் அமர்ந்திருந்தாரே' எனும் வரி நீரகத்தினரை விளக்குகிறது.

தனது சிவகுரு செல்லப்பாச் சுவாமியாரைப் பற்றியே முழுவதும் பாடுகிறார். அவர் தன்னுடைய உணவை தானே சமைத்து உண்பவர். வேறு இல்லங்களுக்குச் சென்று உண்ணாதவர். பார்வதியின் இளையமகன் முருகன், குழந்தை. அவன் தாயின் விருப்பத்திற்கு இணங்கவே நடப்பவன் இயற்கைவடிவினளே அம்மை. எப்பொருளிலும் வியாப்பியமாக நாதவொலியாக விளங்குபவள். அவளின் நாதவொலியை விளக்குபவனே முருகன். குழந்தைக்கு ஆசைகளுண்டு; தீங்கற்ற ஆசைகளுஞ் செயலகளுமே அவனை உலகினுக்கு அறிவிக்கும் அன்னை பார்வதிக்கு இணக்கமாகவே நடந்து கொள்வான். வயது கூட அவன் அறிவும் வளரும். அறிவு வளர அவன் இயற்கை வடிவான அம்மையை அனுசரித்து கொல்லா விரதத்தை அனுஷ்டிக்க முயல்வான். தாயின் சொல்லைத் தட்டாதே சீவிப்பதே கொல்லா விரதம். கொல்லாமை என்பதை விளக்க பகவத்கீதையில் புறஞ் சொல்லாமை, தீங்கிழையாமை, பிறர் பொருள் நாடாமை என்று பல சொல்வார்கள். ஒருங்கு சேர்த்து தாய், பார்வதி, இயற்கை,, (முன்வினையின் பயனாக இறைவனால் அருளப்பட்டது எதுவோ அதுவே நாதவொலியாக இயற்கை உலகினில் நடக்கிறது) என்ன முருகனுக்கு உள்ளத்தே கிடந்து அருள் புரிவாளோ அதையே குழந்தை முருகன் செய்வான்; முருகன் கொல்லா விரதத்தையே மேற்கொண்டவன். உள்ளத்தே தூய்மை விளங்கும்; பார்வதியே உருவெடுப்பாள், ஏர்க் கொடி ஆன்மாக்களை இரட்சிப்பதற்கு அறிகுறி. ஆனபடியால் ஏரகம் ஆன்மாக்களை இரட்சிக்கும் சுப்பிரமணியரையே தலைவனாகக் கொண்ட தலம். இவற்றை விளக்கியே சுவாமிகள் தன் சிவகுருவை ஏரகத்தார் ஏந்தல், என்று வர்ணிக்கிறார்.

உள்ளம் தூய்மையாக அம்மை பார்வதிக்கே இளம் முருகனை சாதகன் தன்னை அர்ப்பணஞ் செய்ய அவன் அறிவு வளர்த்து அவன் உலகினில் மாயை யெனுங் கண்ணுடியில் காணும் பொருட்களைப் பொருட்படுத்தாது அவற்றில் நாதவொலியாக விளங்கும் அம்மையைக் கண்டு தரிசித்துப் அவற்றை அப்பாற்பட்டவனைக நின்று இயக்கும் சொக்கநாதனையுங் கண்டு வணங்கியும் அவற்றில் இன்புற்றிருப்பான். தாயுமானவர் ''துட்ட இருளாங்களனையைக் களைந்து பின் பார்த்தேன் ஆங்கே ஐயன்களையன்றி வேறொன்றுங் கண்டிலன் தோழி'' என்று இவ்வித நிலையில் உண்டாகும் உணர்வை அறியத் தருகிறார்; சிவகுருவின் உதவியால் அப்பியாசங்கூட அறிவு வளர அவனுடைய உள்ளமே நாதவொலியாக விளங்கும் அம்மையாகவும், அவற்றை இயக்கும் சொக்கனுதனுமாகவும் நெற்றிக்கண்ணுடன், ஞானக்கண்ணுடன் ஒருங்கே முக்கட் கருணைப் பிராணுக சிவலிங்க வடிவாக விளங்கும் இவற்றை விளக்கியே 'தாரகப் பொருள் தந்த தலைவனுர், என்று தம் சிவகுருவானசெல்லப்பாச் சுவாமியாரை அறிவிக்கிறார்.

உலகினில் சஞ்சரிக்கும்போது மாயையில் ஈடுபடாதவர் ஆலில் உள்ளத்தே கருணையே வடிவினர். கங்கை இமயமலையினின்று பெருகுவதுபோல் இறைவனுடைய சடையினின்று கங்கை பெருகுகிறது. உள்ளத்தே விளங்கும் சித்தாகாசத்தினின்று கருணை வெள்ளம் பெருகுகிறது: வற்றுத கருணை வெள்ளம்ம அவ்வெள்ளம்; நீரகத்தினர் நெஞ்சங் குடிகொண்டார்'' என்று முடிக்கிறார். (1)

278. சிரித்து நல்லூர்த் தெருவிற் றிரிபவர்
வெறித்த பார்வையர் வேடம் விரும்பிலர்
கறுத்த மேனியர் கந்தைத் துணியினர்
எரித்த னர்பவ மினியெனக் கில்லையே.

இங்கே தன் சிவகுரு தன்னுடைய முப்புரங்களையு மெரிக்க அருளினர்: இனிப்பிறப்பில்லை: பிறவிக்கடலுக் கப்பால்பட எனக்கு அருள் புரிந்தனர். சிற்றின்பம் சுவைத்தால் வினையின் பயனல் பிறவி எடுக்க நேரிடும். ஆகையால் சிற்றின்பத்தை நஞ்சு, மோட்ச வீட்டுக்கு மாருனது என்று கொள்வர். தேவர்களும் அசுரர்களும் பாற்கடலாகிய உலகியல் வாழ்க்கையைக் கடைந்தபோது நஞ்சு எழுந்ததாம் அதுதான் சிற்றின்ப வாழ்க்கை. எழுந்த நஞ்சை இறைவன் கண்டத்தில் வைத்து தண்டியார்களைக் காப்பாற்றினர் என்பது புராணம்: உணவைப் பிரசாதமாகக் கொள்ளல் உண்பதால்வரும் இன்பத்தையும் பாவத்தையும் குறைப்பதுபோல், நாம் செய்யும் செயல் அனைத்தும் அனுபவிக்கும் இன்பமும் துன்பமும் யாவும் சிவன் செயலே என நாம் கண்டால் இருவினைப் பயன் அழியும். அப்பியாசத்தால் சிவகுரு சீஷனின் முப்புரங்களையுமெரிக்க உதவுவார். இதே சுவாமிகள் கருத்து.

சாதாரணமாக என் ஒறுத்த வாழ்க்கையை அவர் ''கந்தைத்துணி யினர்'' எரித்தனர்,மானிட இயற்கைச்சூழல்தான்: அதில்தான் சுழன்று மாயும்போது கறுத்த மேனியர் எரித்தனர்: என்கிறார்; ஞானசம்பந் தர் இவற்றை விரிவாகக் கூறுகிறார் காண்க.

(க) ''பூவார் மலர் கொண்டடியார் தொழுவார் வானோர்கள்
மூவார் புரங்களெரித்தவன்று மூவர்க்கருள்செய்தார்'' சாதாரணம்

(உ) ''ஞானத்திரளாய் நின்ற பெருமானர் அல்ல அடியார் மேல்
உனத்திரளே நீக்குமதுவுமுண்மைப் பொருள் போலும்''

(ங) இழைத்த இடையாள் உமையாள் பங்க இமையோர் பெருமானர்
தழைத்த சடையார் விடையொன்றேறித் தரியார் புரமெய்தார்
பிழைத்த பிடியைக் காணுதோடிமறைப்பாற்றல்என்று பாடுகிறார்.

முதல் பாட்டில் சம்பந்தர் சாதாரணமாக வேலையைக் குறிக்கி றார். அடுத்த பாட்டில் ஞானத்திரளாய் நின்ற சிவகுரு இறைவனை மறந்து ஊன் உடம்பு எனும் இன்ப உணர்ச்சி இருக்கக் கண்டு அவற் றை நீக்க அருளினர் என்கிறார். சிவகுருவும் சீஷனும் சிவமும் சத்தி யுமாக நடக்கும் குணத்தில் தான் புரமெரிக்க அருள் புரிகிறவர் வேறுபாடு கண்ட சிவகுரு இங்கே தழைத்த சடையார் தரியார் புரமெய்தார் என்றும், பிழைத்த பிடியைக் காணுதோடி என்றும் சீஷ னைக் குறிக்கிறார். சாந்தமே உருவான சிவகுரு தன் சீஷன் வினைப் பயன் பயனுக இறைவனை மறக்க சீஷனை வலிந்திழுத்து அனுஷ்டான முறைக்குக் கொண்டு வந்து முப்புரமுமெரியச்செய்வார். (2)

279. மூண்ட வல்வினை முற்றுந் துறந்தவர்
ஆண்ட வர்க்கன்பு பூண்ட வகத்தினர்
தூண்டு சோதிச் சுடர்விடு தூய்மையர்
ஆண்டு கொண்டன ரன்றெனை நல்லையில்.

முன்தவப்பயனுக முப்புரங்களுமெரித்த பின்னரும் இப்பிறப்பில் இயற்கையின் தோற்றமாகத் தோன்றிய எண்ணங்களும் தொடர்பான சங்கற்பங்களும் இடர்கொடுப்பன குருவும் சீஷனும் ஒருங்குசேர்ந்த உள்ளத்தினராகவே 'சிவ சிவ' எனும் உண்மை கடைப்பிடித்தே ஆண்டவர்க் கன்பு பூண்ட அகத்தினராக மூண்ட வல்வினையையும் துறந்தவர். உதாரணமாக இருவரும் சேர்ந்து சாதஞ் சமைப்பார்கள் முடிவில் ஓர் தடியால் எல்லாவற்றையு முடைத்துவிட்டு ஒன்றுமுண் ணாது உலாத்தப் புறப்படுவார்கள்:

ஞானசம்பந்தரும் அதேபதிகத்தில் (பதிக எண் 69) பாட்டு (5)

உருவிற் றிகழு முமையாள் பங்க னிமையோர் பெருமானர்
செருவில் லொருகால் வளைய வூன்றிச் செந்தீ யெழுவித்தார்
பருவில் குறவர் புனத்தில் குவித்த பருமா மணிமுத்தம்

என்று பாடுகிறார்

ஆண்டவர்க் கன்பு பூண்ட வகத்தினர், அகம் சிவலிங்க வடிவாக விளங்குபவர், குருவும் சீஷனும் சிவமும் சக்தியுமாக விளங்குபவர்: ஞானசம்பந்தர் ''உருவிற்றிகழுமுமையாள் பங்க னிமையோர் பெருமானர்'' என்றழைக்கிறார். ஞானசம்பந்தர் தொடர்ந்து தூய்மையான அகத்தை ஆதாரமாகக் கொண்டு என்பதை விளக்கியே ''செருவில் லொருகால் வளைய வூன்றிச் 'செந்தீ யெழுவித்தார்' என்று கூறுகிறார். மேலுஞ் ''செந்தீ'' பருவில் வேடர்களுக்கு 'பருமா மணி முத்துக்கள்' 'இறைவன் சின்னங்கள்' அருள்புரிந்தது. சுவாமிகளும் ஒரே உண்மையை விளக்குகிறார். வல்வினைமுற்றும் வேவச் செய்த என் ஞானகுரவன் அருவாம் ரூபமாக எனையும் தன் உமையாளாகக் கொண்டு தூய்மையான அகத்தே தூண்டு ஜோதி எனக்கு அருளியே என்னையும் ஆண்டு கொண்டனர். என்று பாடுகிறார். (3)

280. பாதிச் சாமத்தின் பின்பள்ளி கொள்பவர்
வீதி யிற்செல்லும் வீணர்கள் தங்களைப்
பேதிக் கும்படி வேண்டியே பேசுவார்
சோதித் தேயெனைச் சும்மா விருத்தினர்.

முதல் பாட்டில் இளம் முருகனுக்கும் தாய் பார்வதிக்கும் இருந்த அன்பு நிலையை ஆராய்ந்தோம். அன்னை பார்வதியின் அன்பு மூன் ஜென்ம பயனாக எழுந்த தூய அருளேயாம்: அதை என்னுள் நின்றும் சும்மா இருத்தியும் நன்கு சோதித்தார்: ஆங்கிலத்திலும் (An idle mind is a devils workshop) என்று கூறுவார்கள். இங்கே சும்மா இருக்கும் மனம் உள்சென்று தன்னைத்தன்னுலறிய ஆவல் கொள்ளுமோ அல்லது புறத்தே வீணர் நட்பினை வேண்டியழுமோ வென்றுதான் சோதித்தனர். (Introspection) என்றே ஆங்கிலத்தில் கூறுவர் இவற்றை சுவாமிகளே ''சும்மா இருக்கும் நிலையை மும் மௌனத்தை'' வர்ணித்தே பின் 'முத்தி நல்குமே' எனும் பதிகத்தில்

''பிறப் பிறப் பில்லாப் பெருமானே நீ
மறப்பில்லாமல் 'மௌனஞ்' செய்நாளும்''. என்றும்
''சிந்தி சிந்தி சிந்தி சிவகதி
மந்திர மிதுவே மனத்திடை மதியே'' என்றும்பாடுகிறார்.

எங்கும் அவர் ஆசையற்ற உள்ளம் அலையற்ற உள்ளம் தூய்மையான அகம் சிவலிங்க வடிவாக விளங்கும் எனும் உண்மையையே தருகிறார். திரும்பவும்சம்பந்தர் அதேபதிகத்தில்(69)'திருவண்ணுமலை' இல்

கனைத்த மேதி காணுதாயன் கைம்மேற் குழலூத
அனைத்துஞ் சென்று திரளுஞ்சாரலண்ணுமலையாரே (6)
முந்தி யெழுந்த முழவினோசை முதுகல் வரைகண்மேல்
அந்திப் பிறை வந்தணையுஞ் சாரலண்ணுமலையாரே. (7)

திருஞானசம்பந்தர் இவ்வண்ணம் கூறுவதை யாராயுங்கள் வீண் எண்ணங்களின் பயனாக (Virtual Desres) என்று ஆங்கிலத்தில் கூறுவர்) தன்னைமறந்து கிடக்கும் ஆத்மாவை 'காணுதாயன் கைமேற் குழலூதியும்' (பாட்டு 6) 'முந்தியெழுந்த முழவினோசை' யாலும் (பாட்டு 7) இறைவன் கூவியழைக்கிறவன் என்று ஞானசம்பந்தர் கூறுகிறார்.

சுவாமிகளும் அதேபோல் செல்லப்பா சாமியார் தம்முடைய சீஷனுள் அயர்ந்து கிடக்கும் ஆத்மாவை கூவியழைத்த விதத்தையே வர்ணிக்கின்றார். அயர்ந்து கிடக்கும் உள்ளத்தே எண்ணங்கள் உற்பத்தியாவன இயற்கை. அவற்றைத்துரத்தியே ஞானசம்பந்தர் கூறின குழலோசை போல் வீதியிற் செல்லும் வீணாகானப் பேதிக்கும் படியே தம் ஓசைகளால் தம் சீஷனின் அகத்தே கிடக்கும் ஆத்மாவை கூவியழைப்பார். முன் ஜாமம் முழுவதும் 'முந்தியெழுந்த முழவினோசை' கொண்டே தம் சீஷனுடைய ஆத்மாவை கூவியழைப்பார். இம்மாதிரி கூவியழைத்த ஆத்மன் சும்மா இருக்கக் கண்டே, சோதித்தே வென்னே தூய்மையான அவ்வுள்ளத்தே தோன்றும் மௌனமான ஜோதிநிலையில் சும்மா இருக்கவைத்தார் என்று கூறுகிறார் சுவாமிகள். பின் 'சும்மா இரு கௌரி பாலா' என்றுங் கூறுவதையுங் காண். தூய வுருவினுல் மௌன ஜோதி வந்தடையுமானாலும், எண்ணங்கள் இயற்கை வடிவாக உற்பத்தியாகி மௌனத்தைக் கலைக்கும். வீதியிற் செல்லும் வீணர்கள் என்பதால் சீஷனுடைய உள்ளத்தே இயற்கை வடிவாகத் தோன்றும் வீண் எண்ணங்களையே குறிப்பிடுகிறார். அந்த எண்ணங்களைப் பேதிக்கும் படியே யென்று கொள்ளவேண்டும். இவ்வாறு பேதித்து அருளிய 'மௌன நிலை' 'சும்மா' யிருக்கும் நிலை, தழம்பாது நிலை நிற்கும் என்றும் அழியாது என்றே கொள்ளலாம். திருவாசகத்தில் திருப்பூவல்லி எனும் பதிகத்தில் 7, 8, 9, ம் பாட்டில் காண்க. (4)

281. ஏந்த வேனையு மென்னவோ மெத்தெனச்
சிந்தை தன்னிலே செப்பிக்கொ டேயவர்

வந்த பேருக்கு வாழ்வை யளிப்பவர்
என்தன் சிந்தையைக் கோயிலாக் கொண்டவர்.

'அண்ணுமலை'யை நினைத்துத் தொழுவார் பாவந்தீர்க்கும் நிமலருறை கோயில்' எனும் பொருளுடன்'

"எனைத்தோழி யடியாரேத்த விழையோர் பெருமானர்
நினைத்துத் தொழுவார் பாவந்தீர்க்த நிமலனுறை கோயில்
கனைத்த மேதி காணுதாயன் கைம்மேற் குழலூத
அனைத்துஞ் சென்று திரளுஞ் சாரலண்ணுமலையாரே"

எனும் பொருளுடன் ஞானசம்பந்தர் பாடுகிறார் காண்க.

செல்லப்பாச்சாமியாராக எழுந்தருளிய இறைவன் அண்டபிண்டத்திற்கு அப்பால் அதிநுட்ப நிலையில் ஒளிபிரணவப் பொருளான ஜோதிநிலையில் காணப்படும் உலகினையே தன் உருவமாகக் கொண்டு நின்று தன்னை நினைத்து தொழுவாரை வரவேற்பார். முருகனார் ஸ்ரீ ரமண அனுபூதி 11. 130 இல் அவற்றைக் குறிக்கின்றார்.

சும்மா விருந்து அதிசூக்குமமான சுயபுத்தியாற்றன் சொரூபச்
செம்மா னியல்பு தெரிந் திதயத்தே தினைத்தல் பிரமசுகம்
எம்மா நிலத்து மிருந்தரசாளும் இறைவர்க்கிறை வருந்தாம்
அம்மா பெரிதென் றனுபவங்கூர்ப அதன் புன்திவலைகளே.

இன்னிலையிலே நின்று ஞான குரவன் அடியார்க்கு அனுக்கிரகஞ் செய்பவர். தன்னை நினைத்துத் தொழுவார்கள் ஆத்மனை அவர் உள்ளத்தே சொரூப ரூபமாகவே நின்று "காணுதாயன் கைம்மேற் குழலூதுவது" போலூதியழைத்து, அவர்கள் அணைந்து நின்று நலம்பெற அருள்புரிபவர்: அண்ணுமலைபோ நிமலனுறை கோயிலாக விளங்குபவர். 'அந்நிமலனுறை கோயிலையே வீடாகக் கொண்ட இறை பொருளான ஞானகுரவனே என் சிந்தையைத் தன் கோயிலாகக் கொண்டவர் என்கிறார். 'நிமலனுறை கோயிலாகவே' தன் சிந்தையை 'ஆக்கினன்' என்றே பொருள் கொள்ளவேண்டும்: (5)

282. கோல மொன்றும் விரும்பிலன் கும்பிடச்
சால வன்புடன் தான்வரும் பத்தரைக்
கால னென்னைக் கறுத்துடன் சீறுவான்
சாலஞ் செய்தெனைத் தன்வய மாக்கினன்.

முன்பாட்டு விளக்கம்: காண்க. கோவடிவினதும் சொரூப ரூபமுமான உலகினில் மாறி மாறி நின்று என் உளம் புகுந்து எனை ஆதரிக்கும் என் ஞானகுரவன் எனைச் சோதனை செய்தே என்னை எந்நேரமும் பதவியை யேற்றும் சோதனைக்குள்ளாக்குவார்: உள்ளம்பதறி சஞ்சலத்துடன் என்னைச் சிவன்செயல், ஓம் எனும் உண்மை சொரூபத்தில் காணுதே சாலம் பண்ணும் பத்தரினமாக என்னைத் தான் கண்டால் அவர் கால னென்னைச் சீறுவார். இவற்றையே இங்கு கூறுகிறார். எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும் நன்னிய சீர் சங்கரன்தான் மறவாமை பொருள்' எனும் பொருளின் உண்மையே சொரூபமாக உள்ள அகமே சிறந்தது என்ற கருத்தையே கொள்கிறார். மாணிக்கவாசகர் கூறுவதைக் காண்

கட்டோ நிகளக்க மனத்தமுதாஞ் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனே கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரை நாம் உருவறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பி
(திருக் கோத்தும்ப ஏ)

இங்கே திருவடியை ஒட்டாத பாவித் தொழும்பரை நாம் உருவறியோம் என்று கூறுகிறார்.

பின் இணங்கி 'சிவ சிவ' எனும் வடிவமாகியே என்னைச் சாலம் பண்ணி என்னைத் தன்வசமாக்குவார் என்று பாடுகின்றார். ஒவ்வோர் பாட்டிலும் உயரும் ஒவ்வொரு படியையுமே காட்டுகிறார். (6)

283. ஆக்கி னெனைனை அண்மையிற் சென்றிடின்
தாக்கு வானெனைத் தாக்கற மில்லென
நோக்கு வானெனை நோக்கிப் பலசெயல்வான்
நோக்க மொன்றற நோக்கிய நோக்கமே.

தாக்குதல் = எதிர்த்தல் மிலேதல் = அணிதல், தரித்தல் தாக்கற மில்லென = தாக்குப்பொறுத்தவனென = வேலைக்குத் தகுந்தவனென. முன் பாட்டில் கூறியபடியே ஒவ்வொரு படியாக உயர்த்துங் காரணமுமாக செந்தீயெழுவித்து மூற்றுந்துறந்த ஞானியாக்கும் நோற்குடனே கசடு தோன்றும் நேரம் தாக்குவார், சாலம்பண்ணி தன்வசமாக்குவார், தாக்கற மிலலென நோக்குவார்: இவ்வண்ணம் பள்ளிக்கூட மாணவனுக்கு உபாத்தியாயர் கற்பிப்பது போன்று என்னையும் படிப்பிப்பார்: இவ்வண்ணம் என் உள்ளத்தே அண்டபிண்டத்திற்கு அப்பாற்பட்ட தாய தில்லையம்பல தரிசனத்தை எனக்குக் காட்டி என்னை உண்டாக்கினான். நான் வேண்டியதையே தந்தான்: அவனுடைய உதவி

யில்லாமல் யானே ஒரு மொழியின் உண்மை விளங்க உள்ளக் கலக்கமின்றி கலிவடிவினனெனவேயும் சொரூபலக்கண முடையோனேயும் உள்ளத்தே கண்டு கண்டு இன்புற்றிருப்பின், அவன் அண்மையிற் சென்றிடின் உடன் சோதனை செய்வான். சமைத்த உணவை அருந்துமுன் தடியால் எல்லாவற்றையு முடைத்துச் சஞ்சல முண்டாக்கியது போல் தாக்குவான்; நிலை தடுமாறும்படி ஏதுஞ் செய்வான் பின் குழப்பம் ஏதும் உண்டாகின தாக்கறமிலலென நோக்குவான தோக்கியே 'நான்' எனும் ஆணவ மலப்பணிப்புச் சற்றேனுமில்லாமல் எண்குணத்தான் என்னுள்ளே நிற்கும் உண்மையை சுடப்பொருளும் சிற்றறிவு மின்றியே நானறியும் வண்ணம் நோக்குவான். நோக்கியே தன் இதயத்துக்கும் என் இதயத்துக்கும் பல சொல்வான். இவ்வண்ணம் 'சுப்மா விரு கௌரிபாலா தாலோ, தாலேலோ என்னும் நிலையில் இருவரும் நின்று இன்புறுவோம் என்றே கூறுகின்றார். பட்டினத்தார் 11 31 இல்

பூதங்களற்றுப் பொறியற்றுச் சாரைம் புலன்களற்றுப்
பேதங் குணமற்றுப் பேராசை தானற்றுப் பின்முன்னற்றுக்
காதங் கரணங் களுமற்ற ஆனந்தக் காட்சியிலே
ஏதங் கழ்ந்திருப் பேன்இறை வாகச்சி ஏகம்பனே.

என்று பாடுகிறார்

(7)

284. பாவனை யொன்று பண்ணவும் விட்டிலன்
சேவனை யொன்று செய்யவும் விட்டிலன்
ஆவ தொன்று மறியவும் விட்டிலன்
தேவன் செய்திட்ட சித்திர மிட்டமே.

முற்பாட்டில் விளங்கின உண்மைகளே ஆதாரம். வேலையிலோ தொண்டிலோ 'நான்' எனும் எண்ணம் உதிக்கப் பாவனை செய்யவோ, சேவிக்கவோ என்னென்ன வேணுமென்று நினைக்கவோ எம் ஞானகுரவன் என்னுள் நின்று கண்டால் உடனே தாக்குவார். பின் அவரும் நானும் ஒன்றுகவே தொழாது தொழப் பெற்றேன் எனும் உண்மை விளங்கவே நடமாடுவோம். இவற்றை ஆதிசங்கரர் சிவானந்த லஹரி சு 66 இல் கூறுகிறார். ''சமபுவே! விளையாட்டிற்காக உலகமனைத்தையும் சிருஷ்டிக்கிறீர் ஜனங்கள் உமக்கு விளையாட்டுப் பிராணிகளைப் போன்றவர்கள். என்றாலும் செய்யப்பட்ட செயல் எது உண்டோ அதுவும் உம்முடைய பிரியத்திற்காகவே ஆகிறது. என்னை ஆட்டுவித்தலும் உம்முடைய அடியார்களின் சந்தோசத்திற்குக் கருவியாகிறது. இது நிச்சயம் அடிமைப் பிராணியாகிய என்னைக் காத்தல் உம்மால் செய்யவேண்டிய கடமையேயாம்.'' (மொழிபெயர்ப்)

ஆதி சங்கரரும் இதில் அடிமைப் பிராணிகளாக அன்பர், இளம் முருகன் தாயின் அன்பில் அடிமையாகித் தொழில் செய்வது போல் நடம் புரிவதையே தருகிறார்கள். 'நான்' எனும் எண்ணம் முளைகொள்ளாது காத்தல் வேண்டும் என்பதே அது. மேலும் நாம் செய்யும் செயலனைத்திற்கும் ஒரே பயன் ''பரமேஸ்வரனுடைய ப்ரீத்'' அதனால் தான் எந்தக் கருமத்தைத் தொடங்கினாலும் சங்கற்பத்தில் '' ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் என்று சொல்லும்படி மறையோர் நமக்குக் கற்பித்திருக்கின்றனர். ஸ்ரீ இராமகிருஷ்ணர் ''ஒருவன் ஒரு நாயை வளர்த்தால் அது அவன் காலடியில் கிடப்பதுபோல் நாம் நம்மை வளர்க்கும் இறைவனுடைய காலடியில் கிடக்கவேண்டும்.'' அப்பர்சுவாமிகள்

ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரோ
அடக்கு வித்தா லாரொருவ ரடங்காதாரோ
ஓட்டு வித்தா லாரொருவ ரோடாதாரோ
உருகி வித்தா லாரொருவ ருருகாதாரோ
பாட்டு வித்தா லாரொருவர் பாடாதாரோ
பணிவித்தா லாரொருவர் பணியாதாரோ
காட்டு வித்தா லாரொருவர் காணுதாரோ
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே (8)

285. இட்ட மிட்ட மிவன்பணி விடுவிலன்
இட்ட மென்ன அறியவும் விட்டிலன்
இட்ட சித்திக ளெய்தவும் விட்டிலன்
இட்ட மாக்கின னென்ன வியப்பிதே.

முன்கூறிய படியே குருநாதன் பணியையோ, அது என்ன வென்றே கருத்தென்னவென்றே அதனால் வருஞ் சித்திகளையோ உணர்த்தும் மறைகளையோ அனுபவங்களையோ நினைக்கவும் விட்டிலன் தாயுமானவர் இவற்றை விளங்கா நின்ற வேதகமே போதகமே விமலவாழ்வே நாதாந்தக் காட்சிப் பேறே'' என்று தருகிறார்; ''மறைகளின் உண்மையையும், மறைகளில் கூறியபடி பரீட்சித்து அறியும் அனுபவங்களையும், அப்போதகத்தால் வளரும் விமலவாழ்வும் — நான் எனும் ஆணவம் கெட்டு எண்குணத்தான் தோளுக நின்று செயல் புரிதல் — எல்லாம் ஒழித்தே சும்மாவே இருக்கும் அந்நிலை; விளக்க முடியாத உண்மைகளும் நிலைகளுமே இவை;

இன்னிலை, விளங்காநின்ற அந்நிலையை சங்கரர் சிவானந்த லஹரியில் (84) ''சிவ! பவ! ஸகல — புவன பந்தோ சச்சிதானந்த ஸிந்தோ ஸத்ய'' எனும் சொற்களால் கல்யாணம் செய்துவைக்கும் பெண்ணையும் புருஷனையும் மங்கலமாக ஆசீர்வதிப்பதுபோல் ஆசீர்

வதித்துத் தம்மை 'உலகனைத்திற்கும் உறவினரே (சச்சிதானந்த ஸித்தோ) சச்சிதானந்தக் கடலே ஸதயே தயையுடன் கூடியவரே உமக்குப் பார்வதியுடன் கூடப் பணிவிடைக்குப் பக்கத்திலிருக்க நற்குணங்கள் நிறைந்த என்னுடைய புத்தியாகிற கன்னிகையைத் தானம் செய்கிறேன். எனது இருதயமாகிற வீட்டில் எப்போது மிருப்பீராக'' என்று ஒப்புவிக்கிறார். ஒன்றுபட்ட உள்ளம்; பார்வதி இறைவனுடைய திருப்திக்காகப் பணிபுரிவாள்; அன்பன் பார்வதியாக விளங்கவேண்டும். இப்பதிக முதல் பகுதியில் முப்புரங்களையு மெரித்தலை ஞானகுரவன் தன்னுள் நின்று உதவினதையும், பிற்பகுதியில் நான் எனும் புத்தி, பக்தி எனும் உளத்தே மறைய உதவுவதையுமே காட்டுகிறார். முப்புரங்களும் வேவ, நிட்டைகூட சொரூபமாக உலகினைக் காணுகிறார். இங்கே தன்னுடைய சித்தாகாசத்தில் மனோமய கோசத்தில் தான் காணப்படுவது இந்நிலை. பின் திருவைந் தெழுத்துச் ஜோதியைப் பரமாகாசத்தில் தான் காணலாம். இவற்றிற்கு ஒப்பிடலாம் அந்த ஜீவன் முத்தருக வாழும் இவ்விரு பதவிகளையும் வரைகட்டிப் பிரிக்க ஏலாத நிலைகள் இவை:

முப்புரங்களும் எரிய நல்லூரில் சுவாமிகள் குருவின் உதவியுடன் ஜோதி நிலைகளில் தன்னைக் கண்டார். பின் குருவின் கட்டளைப்படி யாத்திரைகள் செய்தார். இங்கே தன் சீவியத்தில் முரண்பாடுகளுக்குள் புத்தியாகிய கன்னிகையை இறைவனுக்கு தானஞ் செய்து சித்த மௌனம் செய்வார்க் கெல்லாம் மௌனம் சுத்த மௌனம் தோன்ற பார்வதியாக நின்று உலகமாகிய இறைவனுக்கு அடிமை பூண்டார். இதை முப்பதமும்கடந்த ஞானபதமெனக் கொள்வர். பத்திரகிரியார் இதை விளக்குகிறார் காண்க.

முப்பாழும் பாழாய் முதற்பாழும் சூனியமாய்
அப்பாழும் பாழாய் அன்புசெய்வ தெக்காலம்,

286. வியக்க வொன்று மிலையென விட்டனன்
வியக்கும் மாந்தரைச் சேரவும் விட்டிலன்
தயக்க விட்டனன் தன்னடி யார்களை
ஞயக்க விட்டனன் ஞான குரவனே.

தயக்கம் = அசைவு ஞயம் = நயம் இனிமை

நான் அவரை வியந்து பேச ஒன்றுமேயில்லை; நினைவிலுமே அவர் தன்னை வியக்க விடுவதில்லை. அதட்டியே விடுவார்; வியந்து பேசும் மற்றும் அடியார்களுடன் கூடி யான் அவருடைய பெருமைகளை நினைக்கவும் விடார்; நினைந்து நினைந்துருகி அசைந்து தனிச் சரணும்

காதலுடனே அவரே என் உள்ளமாக நின்று நடக்கவே ஆக்கினன்: இது என்ன அதிசயம். முன்பாட்டுத் தொடர்பே இது: ஞானிகளின் நிலையை உணர்த்தும் ஓர் பாட்டு.

"குருபதத் தஞ்சலி கூப்பி யாதனத்தி னுறைந்து
கூருமற் கூறிய ஓர் மொழி யுள்ளத் திருத்திக்
கருவியெலா மொழித்துக் காண்பான் காட்சி யொழிந்து
காணுது கண்டு களியாது களித்து உவப்பாற்
பொருவரு நிட்கள சுத்த மேகமென விளங்கும்
போக்கு வரவில்லாத புனித பூரணத்தை
இருவகை வாசனையு மிழந்திருக்கும் அவன்
ஞானியினி யவர்க்குப் பிறவியு முண்டென விளம்பலாமோ"

(10)

54 அருமையான தெய்வம்

287. அண்ணன்மாரே தம்பிமாரே ஆச்சிமாரே கேளீர்
அருமையான தெய்வம்நாங்கள் அதையறிந்து
[வாழீர்.

எல்லாவடிவங்களும் முழுநிறைவாம் சிவபெருமானின் திருவுருவே. அந்த உண்மையையறிந்த நாங்கள் எல்லோரும் சிவபெருமானின் பல வடிவங்களே என அறிந்து வாழ்வீர்.

எவ்வடிவும் பூரணமாம் எந்தை யுருவென்றிசைந்த
அவ்வடிவுக் குள்ளே அடங்கு நாள் எந்நாளோ?

(தாயுமானவர் எந்நாட்கண்ணி 15—9) (1)

288. இன்னதன்மை என்றுநம்மை எடுத்துச்சொல்வா
[ருண்டோ
என்னபய மெங்களுக்கு எல்லாஞ்சிவ மன்றே?

நோயாளிக்கு எப்படித் தன்னுடைய நோயைப்பற்றியும் சிகிச்சை என்னவென்றுந் தெரியும். அதுபோல் எத்தகைய சிகிச்சையால் நாம் மாயையினின்றும் நீங்கலாம் என்று மெய்யன்பர் அறியார். என்ன தன்மையர், என்ன சிகிச்சை வேண்டும், அறியா எங்களுக்கு, நாம் வேண்டியழ திருவருளால் பக்குவமடைந்த எங்களுக்கு, வழி நிற்க சிவகுரு எழுந்தருளுவர். எல்லாந் திருவருளே எல்லாஞ் சிவமன்றே.

தானே சுபாவந் தலைப்படநின் ருன்ஞான
வானு னவரும் வருவாரோ பைங்கிளியே.

(தாயுமானவர் பைங்கிளிக்கண்ணி 57) (2)

289. அவனன்றி யோரணுவு மசையாதெனப் பெரியோர்
அன்றுசொன்ன நிறைமொழியை மறப்பதுவுஞ்
[சரியோ?

படைத்தற்கடவுளர் காத்தற்கடவுளர் அழித்தற்கடவுளர் ஆகிய மும்மூர்த்திகளும் முழுமுதல்வனும் இறைவனுல் ஏவப்பட்டு எத் தொழிலையுஞ் செய்கிருர்கள்; (267) எண்ணங்களுஞ் சங்கற்பங்களு மவனுடையதே

வேதங்களாட மிகு ஆகமமாடக்
கீதங்களாடக் கிளரண்டம் ஏழாடப்
பூதங்களாடப் புவன முழதாட
நாதங் கொண்டாடினன் ஞானனந்தக்கூத்தே.

(திருமந்திரம் (2729) (3)

293. அங்கிங்கெ ணாதபடி யெங்குஞ்சிவ மென்று
அறிந்தடங்கி யகிலத்திலே வாழ்வதுவே நன்று.

(மூன் பாட்டு விளக்கம் காண்க)

எவ் வ டி வு ம் பூரணமாம் எம்பிரானுருவென்றே மா மா ணை யை தரும் வெவ்வேறு வடிவங்களோ செயல்களிலோ இன்பமும் துன்பமும் அன்பும் துவேஷமும் நம்மனத்தில் உண்டாக்கிக் காமத்துக்கும் காம பலனுகிய இறப்புக்கும் பிறப்புக்கும் அடிமையாகி அலையாமல், திரி மூர்த்தி யறிந்து (115; 267) எண்ணங்களும் சங்கற்பங்களும் சிவன் செயலென்றே உணர்ந்தறிந்து பரிகாரமாக சிவகுருவழி நிற்க பஞ் சாட்சரமும் சிவபூசை முதலியன செய்தும் திரிதோஷமிறக்க (267) இறைவனிடமே ஒப்படைத்து மும்மெளனஞ் சாதித்து வாழ்வீர்;

அணுவுள் அவனும் அவனுள் அணுவும்
கணுவற நின்று கலப்ப துணரார்
இணையிலி யீச னவனெங்கு மாகித்
தணிவற நின்ருன் சராசரந்தானே

(திருமந்திரம் 2010) (4)

291. காணுங்கண்ணிற் கலந்தகண்ணே என்னுஞ்சிவ
[தொண்டர்
கருத்தைக்கண்டு வருத்தமற்று வாழ்தல்சிவ
[தொண்டு.

'எல்லாம் நினது செயல் என்றெண்ணும் எண்ணமும்நீ' என்று தாயுமானவர் கூறுவது போல் "காணுங்கண்ணில் கலந்த கண்ணே என்னுஞ் சிவதொண்டர் கருத்தைக் கண்டு வருத்தமற்று வாழ்தல் "என்னுமுண்மை நாம் அறிதலும் தாயுமானவர் "எண்ணமும் நீ என்பதுபோல் "அதுவும் சிவவடிவம்" என்றுணர்ந்து அதைச் செய், அதுவும் சிவதொண்டு. "அறவழி நின்று, சிவவடிவங் கண்டு, தொண்டு புரிதல் சிவதொண்டு" (1) (முன்கூறிய காணுங்கண்ணிற்.)

நாங்க எல்லோரும் சிவவடிவங்கள்; அறவழி நின்று சிவதொண்டு புரிதல் சிவகுருவை வேண்டல்; எல்லாவுருவத்தையும் இயக்குபவன் காணும் கண்ணிற்கலந்தவன்; அருட்கண்ணுடன் திருவருள் புரிபவனைக்கண்டு அவனுள் அடங்குதல்; அடங்கும் சிவதொண்டர் நாங்கள்; அந்த அருட்கண்ணைக் கண்டு அதனுள் அடங்கும் சிவதொண்டர் அருள்புரிந்த ஞானப்பொருட்களை ஆராய்தல், முழுமுதல்வன் அருள்புரிய ஆராய்ந்தறிந்த அவ்வறன் வழி நின்று வாழ்தல் சிவதொண்டு.

அறிவு சொரூபமாக விளங்கும் அகழடையாரே, ஞானக்கணபதியின் உருவமாக விளங்கும் மெய்யன்பர்கள்; துளைத்துத் துளைத்து அகப்பொருளை அறியுந்தன்மையனே ஞானக்கணபதி (தும்பிமுகன் அறுமுகவன் 121);

மடுப்படுக்குஞ் சுருதிப் பொருள் வல்லவர் வானுளோர்
அடுத்தடுத்துப் புகுந்தீண்டும் அந்தண் புகலியதே (2-122-10)
(ஞானசம்பந்தர்)

அண்டபிண்டங் காணேன் அகமும் புறமுமொன்றுகக்
கண்ட வெனவே நீ கலந்தகாலம் பராபரமே.
(தாயுமானவர் பராபரக்கண்ணி 279) (5)

292. அனைத்துமொன்று யிருக்குதென வறிந்தபெரி
யோர்கள்
அடியினணையை முடிதனிலே அணிந்துகொண்டேன்
சிறியேன்.

(முன்பாட்டு விளக்கமும் மேற்கோள் பாட்டுக்களும் காண்க)

எவன் உள்ளே அகமுடையவனே உள்ளே களியாட்ட முடையவனே உள்ளே ஒளியுடையவனே அந்தயோகி உயிர்வாழும் போதே பிரமமாய் பிரமத்தில் முத்தியையடைகிறான். கீதை (5-24)

அவனே ஜீவன் முத்தன். அருட்கண்ணைக் கண்டு அவற்றின் கருத்தை நன்காராய்ந்தறிந்த மூவர் முதலியோரால் பாடப்பட்ட முழுமுதல்வனை செம்மேனியனை, அனைத்து மொன்றுயிருக்குதென, அண்டபிண்டங்காணேன் அகமும் புறமும் ஒன்றுகக், காணும் பெரியோர்கள் அடியிணையை, இணையடியிணையை, ஒன்றுமறநில்லெனவுணர்த்திய நம்மேளனகுருவை நமக்குள் கண்டுகொண்டேன் சிறியேன்.

உள்ளம் உருவென்றும் உருவம் உள்ளமென்றும்
உள்ள பரிசறிந்தோரு மவர்கட்குப்
பள்ளமும் இல்லை திடரில்லை பாழில்லை
உள்ளமுமில்லை உருவில்லை தானன்றே.

திருமூலர் திருமந்திரம் (10-2461)

பாதி உடலங்கொண்டவன் 'ஹரனுடன் இணைந்த ஹரி' எனும் பதவியேயிது என்று ஆதிசங்கரர் சிவானந்தலகரி 82 இல் கூறுகிறார்.

"அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனுக்கே"

(அப்பாசுவாமிகள்) (6)

55 சற்குரு தாள்கள் வாழ்க

291. அத்துவா மார்க்கமாறும் அகற்றியே யடியனேனைத்
தத்துவா தீதனுக்குஞ் சற்குரு தாள்கள்வாழ்க.

பரம புருஷனவன் சாக்ஷி, அனுமதிப்பவன், தாங்குபவன், அனுபவிப்பவன், மகேஸ்வரன், பரமாத்மன், இப்படியெல்லாம் இயம்பப்படும் அத்துவா மார்க்கம் ஆறும் (265) தாண்டி பரமாத்மனுய் தத்துவங்கள் ஆறுறு தன்னுள் அடங்க (224) (முப்பத்தாறு கருவிகரணங்கள் (65)] தத்துவாதீதனுக்கும் ஞானகுரவனுய் எழுந்தருளிய நம்மிறைவனின் இணையடிகளை, சத்திசிவமாக விளங்கும் எம்பெருமானை போற்றுவாம். (இறைவனிடம் செல்லும் தோணி 301) உபதிரஷ்டா - அருகிலிருந்து காண்போன் அல்லது சாக்ஷி. உடலிலும் உள்ளத்திலும் நிகழுவதை மனத்தகத்து பரமாத்மன் சாக்ஷியாக நின்று பார்க்கிறான். அனுமந்தா - உலகியல் நாடகத்தில் ஆசிரியரின் வித்துவத்தன்மைகளையோ உணர்ச்சிகளையோ அறியாத அவ்விவேகி வேடிக்கை பார்த்துச் சிரிக்கிறவன், அனுமதிப்பவன் பார்த்தா நாடகத்தைப் பார்க்கவும், அனுமதிக்கவும் இயலலாம்

அதற்கு ஆகிற செலவைக் கொடுத்து அதை ஆதரிக்கிறவன் அதிலும்மிக்கான்; தாங்குபவன்.

மனிவிக்குக் கணவன் 'பத்தா' அதற்குமேல் அவன் இல்வாழ்க்கையை அனுபவிப்பவனைக இருக்கிறான்; சித்சொரூபியாகிய பரமபுருஷன் அப்பால்பட்டவனைக இருந்து நடிகர் நாடகத்திலுள்ள இன்பம் துன்பம் இல்லாமல் நாடகத்தில் சிருஷ்டித்த ஆசிரியர் காணும் இன்பத்தை அனுபவித்து பிரகிருதிக்கு 'போக்தா' வாக இருக்கிறார் சித்சொரூபியான பரமபுருஷன் அனுபவிப்பவன்.

மூக்குணங்களும் தன்னுள் அடங்க எண்குணங்களுந் தோன்ற, வினைப்பயனென்னுமம்பலத்தே முழுமுதல்வனும் முதல்வனே நாடகத்தைச் சீர்பெற ஆக்கும் இயல்பினையுடைய ஆசிரியனைக, அனைத்தையும் ஆளும் இயல்பினனுய் 'அருவுருவாய்' காணப்படுவன்-மகேஸ்வரன் மகேஸ்வரனைக இயற்கையில் தன்னைக்கண்டும் அப்பால்பட்டவனைக விளங்குபவன், அருவுருவாம் ரூபத்துக்கு அப்பால் இயற்கை இயல்புகள் தம்மை விட்டிறந்தமையாலும், முழுதுமுண்மையே எனும் சித்தாகாசத்தில் காணும் நாடகம் முழுதும் உண்மை என்பதாலும் இறைவனுளடங்கவே அழியாப் பொருளெனு முண்மை விளங்கும் உண்மையாலும் அவன் தில்லை அம்பலவாணனைகப் பரமாத்மனைக விளங்குபவன்.

(சித்பவானந்தர் கூறியதின் சாரம்) (கீதை 13—22)

(1)

294 ஆக்கைநீ யல்லைநீயோ ஆன்மாவென்
றெனக்குச்சொல்லித்
தீக்கைவைத் தாண்டுகொண்ட தேசிகன்
றிருத்தாள்வாழ்க.

நீ சடப்பொருளல்ல; நீ இந்தத்தேகமல்ல; நீ ஆத்மன்; என்னுடன் கூடிவாழ்ந்து ஆத்மசொரூபத்தை அடைவாய் என்று நம்மை ஆண்டு தம் இணையடிகளான சத்தி சிவம் ரூபத்தை நம் உள்ளத்தில் தாம் அங்கு நின்று பதியவைத்த சிவகுருவாக எழுந்தருளிய நம் இறைவனுக்குத் துதிகள்.

ஆமை தன் அவயவங்களை அடக்கிக்கொள்வது போல் பொருள்களிடமிருந்து பொறிகளை முழுதும் உள்ளிழுக்க வல்லவனுக்கு நிறை ஞானம் நிலைபெறுகிறது. (கீதை 2—58)

ஆபத்துக்களினின்றுந் தன்னைக் காத்துக் கொள்ள ஆமைமிக எளிதில் உறுப்புக்களை உள்ளே இழுத்துக் கொள்கிறது. இந்திரியங்களை ஆளும் அறிஞன் சித்சொரூபியானவன் அவைகளை அவ்வளவு எளிதில் உன்முகமாகத் திருப்புகிறான். வெளியுலக வியவகாரத்தில்

தொடர்பு அற்றவனுய் ஞானி பொறிவாயிலை அடைத்துவிட்டுச் சமாதியில் சுகித்திருக்க வல்லவனுகிறுன். அந்த ஞானிதான் ஆத்மன் உடம்பல்ல, என்றே வாழ்கின்றுன். (2)

295. இருந்துபா ரென்றெனக்கோர் இனியநல்
வாக்குத்தந்த
அருந்தவன் என்னும்வல்ல ஆசான்றன்
தாள்கள்வாழ்க.

(பாட்டு 293 உரைகாண்க) முன்பாட்டு தொடர ''சும்மா இருக்கும் சொரூபமே நீயே குருநாதனே'' எனுமுடையவராய் கருவி கரணங்களுந் தன்னுள் அடங்க ஞானியிருப்பது போல் 'சும்மா இருக்கச்சுக முதயமாமே' எனுமுண்மை விளங்க, சும்மா இரு கௌரி பாலா' என்று ஓர் இனிய நல்வாக்குத் தந்தவன், நம்முள்ளே அருவாய் நின்றும் சும்மா இருந்து சுகமனுபவிக்க அருள்புரிந்தவன், வல்ல ஆசான்றன் இணையடிகளைப் போற்றி செய்தலோம். சுவாமிகளே பாட்டு (195) இல் ''சொல்ல குடியாத பொருள் சொல்ல வருமாகில் சும்மா இருக்கின்ற சுகங்கிடைக்கு மாகில்'' என்று இந்நிலையினைக் குறிக்கிறார். (3)

296. ஈயாத புல்லர்தங்கள் இல்லத்திற் கேகாவண்ணம்
தாயாரைப் போல்வந்தாண்ட சற்குரு
தாள்கள்வாழ்க.

ஈதல் = தானமிடுதல்; அறவழி நிற்ப உதவிபுரிதல்
புல்லர் = அறிவிலிகள்; கீழ்மக்கள்.

சிவானந்தலஹரி சு (87) பக்தியொன்றே வேண்டப்படுகிறது, என்பதில் ''சம்புவே! உமது ஆகாரம் விஷம்; ஆபரணம் பாம்பு; ஆடை தோல்; வாகனமோ பெரிய காளைமாடு; எனக்த வேண்டியது எதை நீர் கொடுக்கப் போகிறீர்? என்ன இருக்கிறது. உம்முடைய திருவடித்தாமரையில் பக்தியொன்றையே கொடுத்தருள்வீராக
(மொழி பெயர்ப்பு)

மேலே கூறிய வாக்கியம் (உம்மிடம்) என்ன இருக்கிறது. நீர் எதைக் கொடுக்கப் போகிறீர்? உம்முடைய பக்தி ஒன்றையே கேட்க நீர் கொடுப்பீர் நீர் ஈயத்தக்க பொருள் உம்முடைய திருவடித்தாமரையில் பக்தி ஒன்றே. லக்ஷ்மிதேவியையே பணிப்பெண்ணுகவுடைய பகவானுடைய பண்பு ஜகத்துக்கெல்லாம் நாதனெனினும் தன்னில் தானே திருப்தியடைந்திருப்பது. தாம் தம்மையே ஈயாத அறிவிலிகள் உள்ளங்களுக்கு ஏகாமல், எம்மையே முழுவதும் இறைவன்

திருவடியில் ஒப்படைத்த எளியனேனின் உள்ளத்தே தாயினின் பெரிய அன்புடன் உன்குடிகொண்ட, சிவகுருவாக எழுந்தருளிய, திருத்தாள்களுக்கு வணக்கம்.

யாம் இரப்பவை பொன்றும் பொருளும் போகமுமல்ல; நின் பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும். (பாரிபாடல்)

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப் பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலன்ஓர் கைமாறே.

(திருவாசகம் கோயிற்றிருபதி 10) (4)

297. உன்மத்தன் போலேவந்தென் னுடல்பொரு
ளாவிமூன் றும்
தன்னத்தம் வாங்கிக்கொண்ட சற்குரு
தாள்கள்வாழ்க.

ஊமத்தமலர் மிகவும் குளிர்ச்சிதருவது. சிவபெருமான் மத்த மாமலரும் கொன்றையும் அணிவதால் ஊமத்தம் பித்து பிடித்த வர் என்பர். உன்மத்தன் போலே என் உள்ளங் குடிகொண்டவன் வைத்தபொருள் உடல் ஆவி மூன்றுந் தன் கைவசம் வாங்கிக் கொண்டான். (முன்பாட்டுவிளக்கம்)
பித்துப்பிடித்தவர் தம்மனத்தை தாயுமானவர் தருகிறார்.

ஐயனே யுனையன்றி யொரு தெய்வங்
கையினல் தொளவுங் கருதேன் கண்டாய்
பொய்யனுகிலும் பொய்யுரையேன் சுத்த
மெய்யனு முளக்கே வெளியாகுமே.

(பொன்னே மாதரை 45) (5)

298. ஊனுமாய் உயிருமாகி உள்ளுமாய்ப் புறம்புமாகி
நானுமாய் நீயுமாகி நடஞ்செயுந் திருத்தாள்வாழ்க.

மாணிக்கவாசகர் ஊனுமாய் உயிருமாகி, உணர்வாகி என்னுட் கலந்து என்பதுபோல் உடம்புமாகி, உயிருமாகியும் உள்ளத்தே அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் (195) உள்ளுமாய் புறம்பு

மாய் (அண்டபிண்டங்காணேன் 196) நானுமாகி நீயுமாகி (271) 'அகமும் புறமும் ஒன்றுகக் கண்ட என்னை நீ கலந்த காலம் பராபரமே' எனுமுண்மை விளக்குவதுபோல் கலந்த ஒரே பரம்பொருளாய் பொது நடம் செயும் சற்குருவாய் எழுந்தருளிய திருத்தாள் வாழ்க. (6)

299. எண்ணிய வண்ணம்வாழ எனக்குநல் லருளைத்தந்த
கண்ணிய முடையசெல்வன் கழலடி யென்றும்வாழ்க.

முதலாம்பாட்டில் ஆறு மார்க்கங்கள், படிகளையுந் தந்து, இரண்டில் ஆன்மாவென்று தீக்கை வைத்து சாக்ஷி என்றும், மூன்றில் அனுமதிப்பவனுக இருந்து பார் என்றும், நாலில் தன்னையே செலவுக்கென ஈந்தவனைப் பொது நடங்கண்டு தன்னை உலகினில் தாங்குவோனுகியும், ஐந்தில் உன்மத்தம் பித்துப் பிடித்தவன் போல் உடல்பொருள் ஆவிமூன்றும் உன்கைவசம் என்றும், சித்சொரூபியாக அனுபவிப்பவனுகவும், ஆறில் அண்ட பிண்டங்காணுது தானும் இறைவனும் மொன்றும் அருவுருவாம் ரூபமாய் மகேஸ்வரனுகியும் தன்னைக்காண அருள்தந்த சிவகுருவாக எழுந்தருளிய திருத்தாள் வாழ்க என்றார். இப்பாட்டில் ஆறும் மார்க்கமான பரமாத்மன் எனும் உண்மையை விளக்குகிறார்.

அண்டபிண்டங்காணுது உள்ளும் புறமும் ஒன்றுகி தானும் அதனுட்கலந்து, தன்னை அங்கே கண்டு பரமாத்மனுக அப்பால் பட்ட, வினைமுதலாம் முழுமுதலவன் லக்ஷ்மியைப் பணிப்பெண்ணுகக் கொண்டபோதிலும் தன்னில் திருப்தியடைந்தவனுய் உலகினை ஆள்பவன், தன்னில் திருப்தியடைந்தவன்: தாம் எண்ணிய எண்ணம் போல் இயற்கையே ரூபமான அம்மை, ஆற்றல் வடிவானவள், அருள்தரும் வண்ணம் நான் வாழ, எப்பொருளிலும் வியாபித்திருந்து அவற்றை இயக்கியும் அவற்றுள் அடங்காது அப்பால் பட்டவனுக விளங்கும் கண்ணியமுடைய செல்வன் சிவகுருவாக எழுந்தருளிய திருத்தாள் வாழ்க: இன்பம் துன்பம் புண்ணியம் பாவம் யாவற்றையும் தாண்டி அப்பாலாய் விளங்குபவனும், திங்களுங் கங்கையும் விளங்கும் கண்ணியமுடையவன்"

தாயுமானவர் இவற்றைத் தருகிறார் காண்க.

தனமேது கடுஞரகேது மேல்
சென்மமே தெனினீ தீண்டக் கடவதோ
என்ம னோரதம் எய்தும் படிக்கருள்
நன்மை கூர்முக்கண் நாதன் இருக்கவே,

300. ஏடவிழ் கோதைமாதர் எழில்கண்டு
மயங்காவண்ணம்
தாடலை தன்னில்வைத்த சற்குரு தாள்கள்வாழ்க.

ஏட+அவிழ்=ஏடவிழ் ஏட=தோழன் முன்னிலை. தோழன் முன்னிலை மட்டவிழ்ந்து மலரும் அழகுடைய பெண்களின் பார்வையினால் மயங்கா வண்ணம்; தாள்+தலை=தாடலை; தன்னில் தான் தலை வைத்த [தலை தன்னில் தான் வைத்த என்றுங் கொள்ளலாம்] சற்குரு தாழ்கள் வாழ்க; சும்மா இருக்கும் அறிவே வடிவான அகம் இறைவனிடம் நம்மைக் கொண்டுசெல்லும் தோணி [நிக்ஷடானுபூதியில் காண்க 303] அத்தகைய அகம் செயலற்றது. இயற்கைரூபமான பார்வதி தேவியின் இருப்பிடம். ஓசை வடிவாக விளங்குபவள் பார்வதிதேவி; சிவகுருவின் தாழ்களை, இறைவன் தாழ்களை உச்சிமேல் கொண்டே இப்பதவிகளை யடையலாம் (293) அப்பர் சுவாமிகள் ''மட்டுண்பார் மடந்தையர் வாட்கண்ணால் கட்டுண்பார்கள்'' என்றும், மாணிக்கவாசகர் ''கருங்குழலினர் கண்களால் ஏறுண்டு கலங்கியே கிடப்பேனை'' என்றும் ''ஏடவிழ் மாதர் எழில்கண்டு'' என்பதை ஒத்துப் பாடுவதைக் காண்க;

பொருந்தும் இப்பிறப் பிறப்பினை நினையாது பொய்களே புகன்றுபோய்க்
கருங்குழலினர் கண்களால் ஏறுண்டு கலங்கியே கிடப்பேனைத்
திருந்து சேவடிச் சிலம்பினை சிலம்பிடத் திருவொடும் அகலாதே
அருந்து ணைவனாய் ஆண்டுகொண் டருளிய அற்புதம் அறியேனே.
(அற்புதப்பத்து 1) (8)

301. ஐயமேன் காணுமென்றே அடியனேன் தன்னைநோக்கி
உய்யநல் லருளைத்தந்த உத்தமன் பாதம்வாழ்க.

'திடசித்தம் எனும் கொம்பரில் பக்தி எனும் கொடிபடர்ந்து ஞானம் எனும் பூத்துக் காயாகி முத்தியெனும் பழம்தரும்' என்று சிவானந்தலஹரி கூறுகிறது. (முன்பாட்டு விளக்கந் தொடர) சும்மா இருக்கும் அகம் இறைவனிடம் கொண்டு செல்லுந்தோணி. [மாணிக்கவாசகர் 'பெருந்துறைப் பெருந்தோணி' என்று இவற்றை திருக்கழுக்குன்றப் பதிகத்தில் தருகிறார்] சற்குரு எழுந்தருளி சும்மா இருக்கும் அகம் அறிவே வடிவான அகம்' தன்னுள் உண்டாக தன்னுள் நின்று அருளினன். உலகமாகிய மரத்தில் அரும்பாகவும் மலராகவும் காயாகவும் ஆய கனி உதிர்தல்போல் இவ்வுடம்பானது வீணுகபழுத்து பயனில்லாது அழிந்துபோக, இம் மானிடப் பிறப்பு பயனற்றதாகும். அவ்வாறு நிகழாமல் சற்குரு உதவிய திருத்தாழ்கள் நம்மை ஈடேறச் செய்தன அப்பர் சுவாமிகள் தருவதைக் காண்க;

அச்சமில்லை நெஞ்சேயரன் நாமங்கள்
நிச்ச லுங்கினை யாய்வினை போயறக்
சச்ச மாவிட முண்டகண் டாவென
வைச்ச மாநிதி யாவர்மாற் பேறரே. (5-60-2) (9)

302. ஒருமொழி யதனாலென்னை ஓவியம் போலவாக்கி
வருபயம் நீக்கியாண்ட வள்ளல்தம்
திருத்தாள்வாழ்க.

(பதி. 53. உரைகாண்க) தயக்க விட்டனன், ஞயக்க விட்டனன் ஞானகுரவனே என்சிறார் உரை காண்க. 'ஒரு மொழி' என்றும் ஊமை எழுத்து என்றும் சும்மா இருக்கும் அகமுடையான் தாம் வேலையற்று இயற்கை அம்மை அருளும வேலையையே சிவதொண்டாக எக்கோலத்திலும் இல்வாழ்விலும் சரி. பார்த்தனைப்போல் போர்முனையிலுஞ்சரி சிவத்தியானம் சிவபூசை முதலியவற்றிலுஞ் சரி அம்மைக்கு உதவியாக செய்யும் வேலையையே கூறுவர்: தாய்போல் என்னுள் நின்று அவ்வண்ணம் கர்மம் புரியாதே நிஷ்காமிய கர்மமே செய்து விடமுண்ட கண்டன் அருள்தர திருவினையுமற்று இறப்புப் பிறப்பு புண்ணியம் எனும் பயம் நீங்கி, யான் என்றுமழியா இன்பக் கடலில் வாழவைத்த வள்ளல் திருத்தாழ்கள் வாழ்க!
தாயுமானவர் தருவதைக் காண்க.

ஒருமொழியே பலமொழிக்கும் இடங் கொடுக்கும் அந்த
ஒரு மொழியே மலம் ஒழிக்கும் ஒழிக்குமென மொழிந்த
குரு மொழியே மலையிலக்கு மற்றை மொழியெல்லாம்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய்.
(17 நினைவொன்று 2) (10)

303. ஓமெனும் எழுத்தினுள்ளே உலகெலாம்
விளங்கக்காட்டி
நாமென்று சொல்லுகின்ற நற்றவன்
றிருத்தாள்வாழ்க.

(முன்பாட்டு விளக்கமும் தாயுமானவர் பாட்டும் காண்க). ஓமெனும் ஒரு மொழியே ஒப்பில்லாத உறுதிச் சொல். 'சிவ சிவ' எனும் செந்தமிழ்த் திருமாமறையே அது. அந்த ஒருசொல் 'ஓம்' வேதாகம நூல்களின் பொருளையும் புராணங்களின் உட்பொருளையும் தரும் அண்டபிண்டமனைத்துமாய் உள்ளும் புறம்புமொன்றாய் நின்று விளங்கும் யானாகிய வென்னை விளங்கி வெறுத்தானாய் விளங்கும். அதுவே அதன் உண்மை. அதனை எமக்கு விளங்க வெனக்குள் தாமே நின்று அருளீந்த நற்றவன் ஞானகுரவன் திருத்தாள்கள் வாழ்க.

ஒரு மொழியாலே சுருதியா கமநூ
லுயர் புரா ணமுமெலா மொழியும்
ஒருமொழி யாலே சரிதை நற் கிரியா
யோகபா வனையெலா மொழியும்
ஒரு மொழியா லே யண்டபூ தங்க
ளொடுங்கும் தன்னிலே தோன்றும்
ஒரு மொழி சும்மா விருத்தலாம் அதனுல்
ஒப்பிலாச் சிவபத மடைவார்.

(நிஷ்டானுபூதி. 2) (11)

304. ஒளவன நல்லிதன்னில் அழகிய ஆடல்காட்டிச்
செவ்விதி னுண்டுகொண்ட செல்வன்றன்
தாள்கள்வாழ்க.

நல்லி=பரமாகாசம், நல்லிப்பெருவெளி. நிஷ்டானுபூதியில்(முன் பாட்டில் காண்க) ஒரு மொழி சும்மா, இருத்தலாம் என்பதை ஆராய்ந்தால் சும்மா இருக்கும் அகமுடையான் (302) பார்வதி தேவிக்கு உதவியாகச் செயல் புரிபவன் இறைவன். அப்பால்பட்ட வனுக நின்று செயல் புரிபவனி இறைவனின் அழகிய ஆடல் இதுவே. ஞானகுரவன் நம்முன் நின்று சும்மா இருக்கும் அகம் விளங்க இறை வனின் அழகிய ஆடலை, நாடக மேடையில் (36) நாடகத்தைக் கண்டு இன்புறுவதுபோல், பற்றற்ற உள்ளத்தையுடையான் இன் பம் துன்பம் எனும் துவேஷமற்றுக் கண்டு (91) ஒப்பில்லாச் சிவப தமடைய அருள் தந்த சிவகுருவின் திருத்தாள்கள் வாழ்க. (12)

305. அஃகமுங் காசுந்தேடி அலைந்துநான் திரியாவண்ணம்
நஃகுதல் செய்தநல்ல நாதன்றன் வாழ்க! வாழ்க!

மரத்தில் காயாகவும் பின் கனி உதிர்வதுபோல் உடம்பு அகல பிறவி வீண் போகாமல் (301) மண் பொன் பெண் எனுமூவாசை யிலீடுபட்டு நான் அலையாமல் எனை மூன்பாட்டுக்களில் கூறிய பிர காரம் எம்மை ஆண்டு சிவபதமடைய அருள் தந்த எம் ஞானகுர வன் திருத்தாழ்கள் வாழ்க. மணிவாசகர் தருவதைக் காண்க.

சீரார் திருவடித் தண்சிலம்பு சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதாய் அடியேன் அகம் மகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடஞ்செய்
போரானைத்தம் பாடிப் பூவல்லி கொய்யாமோ.

(திருப்பூவல்லி 18) (13)

56 திருவடி வாழ்க

குறள்வெண்செந்துறை

306. அகரமுமாம் எழுத்துப்போல அனைத்தினுங்
கலந்துநின்றே
இகபரம் இரண்டுமீந்த எழிற்குரு திருத்தாள் வாழ்க

கி=க+இ+அ; க் எனும் மெய்யும் இ எனும் உயிரும் கூடி அ எனும் ஓசை; அவற்றை இயக்க கி எனும் உயிர்மெய் இயங்குகின்றது. ['அ' எனும் ஓசையே முதலில் தோன்றினதாக யேசுநாதர் கூறினர் என்று சுவாமி விவேகானந்தர் அமெரிக்கப் பிரசங்கத்தில் தெரிவித்தார். தண்ணீரைக் கொளுமாகாசம் சலாகாசமும் காற்று முதல் பிருதிவிப் பொருளடங்குமாகாசம் பிரிதிவியாகாசமும் ஒன்று சேர்ந்த ஆகாசம் நுண்வெளி ஆங்கிலத்தில் SpaceElectromgnetic field என்று தற்போதைய விஞ்ஞான உலகந்தருவது இந்த நுண்வெளியில் தான் ஓசை முன் தோன்றினது. இயற்கையின் முதற்றோற்றம் உயிரை இயக்கும் பொருள். எப்பொருளையும் இயக்குவது இது. இது எல்லாச் சமயத்துக்கும் பொது. ய, ந, ம எனும் எழுத்துக்கள் தரும் உண்மை இது. சி, வ எனும் உண்மை சைவத்துக்கே உரித்தானது.]

அ எனும் ஓசை எல்லா எழுத்துக்களையும் இயக்குவதுபோல் அந்த ஒளி வடிவில் இறைவன் எல்லாப் பொருளிலும் வியாபித்து ஓசை வடிவான அம்மையாக விளங்கியும் அப்பாலாக நின்று இயக்கியுமருளுபவன். சிவ எனும் மாமறை இவற்றின் உண்மைப்பொருளை திருவள்ளுவர்

''அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'' என்று இவற்றைத் தருகிறார்.

சும்மா இருக்கும் அகம் பொற்தோணியாக இறைவனிடம் அத்தகைய அசுமுடையாளைக் கொண்டு செல்லும் (301) 'சிவசிவ' எனும் மாமறை விளக்கும் திருத்தாள்களுக்கு இருப்பிடம் சும்மா இருக்கும் அகம்; பொன்னம்பலமாக விளங்கும் அகம் 'சிவசிவ' எனும் இறைவனின் செயலைக் கண்டு இன்புறும் அகம் நிஷ்காமிய கர்மம் புரிபவன்; சாந்தமும் பொறுமையும் விளங்க இவ்வுலகிலும், மேலும் 'சிவ சிவ' எனுமுண்மை மோட்சவீட்டை அளிப்பதாலும் இகபரம் இரண்டு மீந்த எழுச்சியைத் தரும். ஞானகுரவன் நம்முன் நின்று அருளிய திருத்தாள்கள் வாழ்க என்கிறார்: அ எனும் உயிரை ஓசை இயக்குவதுபோல் உயிர்க்குயிராம் நாதனுயிரை இயக்குபவன்;

307. ஆணுமாய்ப் பெண்ணுமாகி அன்னையும் பிதாவுமாகிக்
காணவே என்முன்வந்த கழலடி யென்றும் வாழ்க.

மூவராலும் மற்றும் இறைவன் புகழைப் பாடிய மெய்யன்பர் யாவராலும் உமாதேவியை இடப்பாகமாகவுடையார் என்றே கூறப் படுகிறது. மேலும் திருவிளையாடற்புராணம் திருமணப்படலத்தில் "போர்க்கோலங்கொண்டு எல்லாத் தேவரையுமெதிர்த்து வெற்றி கொண்டு திடசித்தத்துடன் தேவரையே வேண்டி நிற்க சிவன் காட்சி கொடுக்கத் தடாதகைப் பிராட்டியார் தன்னுடைய வலப்பாதியை எதிரில் கண்டாள். கண்டதும் அவளுடைய நடுவிலுள்ள ஒரு தனம் மறைந்தது என்று கூறப்படுகிறது. மேலும் ஒசை வடிவாக இயங்குபவள் பார்வதிதேவி. அப்பால் நின்று இயக்குபவன் சொக்கநாதன். உயிருள் பொருள் உயிரில் பொருள் எல்லாவற்றிலும் இவ்விரண்டும் பண்ணும் இசையும் போன்றும் நெருப்பும் சூடுமபோன்றும் வேறு பிரிக்கப்பட இயலாது விளங்கும் தன்மையை நாம் காணலாம்.

குழந்தை ஞானசம்பந்தருக்கு தந்தை தம்மை விட்டுக் குளத்தில் மூழ்கி மறைந்தபோது இறைவன் அம்மையுமப்பருமாகத் தோன்றி அம்மை பாலூட்டினாள். பல உதாரணங்களுடன் இவ்வாறு ஆணுமாகி பெண்ணுமாகி அன்னையும் பிதாவுமாகி தாம் காணவே தன் முன்வந்து தடாதகைப் பிராட்டிக்கு, ஞானசம்பந்தருக்கு, அருள் கொடுத்தது போன்று தமக்கும் அருள் கொடுத்த அந்த ஞானகுரவன் கழலடி வாழ்க" என்கிறார் தாயுமானவர் கூறுகிறார் காண்க:

அன்னை யப்பனென் ஆவித் துணையெனுந்
தன்னை யொப்பற்ற சற்குரு என்பதென்
என்னைப் பூரண இன்ப வெளிக்குள்ளே
துன்ன வைத்த சுடரெனத் தக்கதே.

(பொன்னைமாதரை 35)

திருமூலநாயனார் கூறுவது:

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே. —(10—1556) (2)

308 இருவினை நீக்கியெம்மை இன்பமாம்
நிலத்தில்வைக்கத்
திருவுருத் தாங்கிவந்த செல்வநின் திருத்தாள்
வாழ்க.

நிஷ்காம்ய கர்மம் புரிந்தால் இருவினையும் நீங்கும். சும்மா இருக்கும் சுகம் உதயமாகும். ''ஞானகுரவன்'' பதி 53—பாட்டு 7 இல் ''நோக்க மொன்றற நோக்கிய நோக்கமே'' என்று சும்மா இருக்கும் நிலைக்குமுன் தம்முள் நின்று தம்மை நிலைநிறுத்தி அருளிய சிலவற்றை அடுத்த மூன்று பாட்டுக்களுள்ளுந்தருகிறார். காண்க. அவ்வாறே இருவினை நீக்கி இன்பமாம் நிலத்தில் வைத்த அழியாத செல்வம் போன்றவனே உம்முடைய திருத்தாள்கள் வாழ்க என்கிறார்; திருஞானசம்பந்தர் இருவினையும் நீக்கிப் பிச்சைக்கென்றே மண்டை ஓடு அங்கைத் தீயராவ் ஏந்தி ஆணவமலத்துடன் மும்மலமு நீக்கியாண்டான் என்று பாடுகிறார் காண்க:

வினையாயின தீர்த்தருளேபுரியும் விகிர்தன் விரிகொன்றை
நனையார் முடிமேன் மதியஞ்சூடு நம்பா னலமல்கு
தனையார் கமல மலர்மேலுறைவான் றலையோடனலேந்தும்
எனையாளுடையா னுமையாளொரு மீங்கோய் மலையாரே (1-70-7)

309. ஈன்றிடு தந்தைதாயோ டெய்திய சுற்றமாகித்
தோன்றிய குருவுமான துணைவநின் திருத்தாள்
[வாழ்க.

உலகத்தில் பெற்றெடுத்த தாய் உலகமாதாவுக்குச் சரியென்று கூறுகிறார். பெற்றதாய் தகப்பன் மற்றும் சுற்றமுமாய் தமக்கு அருள் குரு பெருந்துணையாக நின்றே சிவபதம் அடைய அருளினன்; அவனுடைய திருக்கரங்கள் வாழ்க.

''அப்பர் சுவாமிகள் (6-95-1) தனித்திருத்தாண்டகத்தில் அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ என்று பாடுகிறார் காண்க. மேலும் அப்பர் சுவாமிகளே பற்றற்றவர்க்கு பொருளும். சுற்றமுமாகி நிற்பர் என்று பாடுகிறார் காண்க:

பொருளிலெடு நற்சுற்றமும் பற்றிலர்க்
கருளுநன்மை தந்தாய் வரும்பொருள்
சுருள்கொள் செஞ்சடைக் கச்சியேகம்பம்
இருள்கெடச் சென்றுகை தொழுதேத்துமே (5—47—6) (4)

310. உணர்ந்தார்க்கு முணரவொண்ணை ஒருவனே
என்போல்வந்து
குணங்காட்டி ஆண்டுகொண்ட குருவின்சீர்ப் பாதம்
வாழ்க.

உள்ளபடியே உள்ளது என உணர்ந்தேன்: கள்ளமனம் போயொளிக்க சித்த மௌனம் செயல் வாக்கெல்லாம் மௌனம்தோன்ற நிட்டைகூடி தில்லைத் தரிசனத்தில் நானும் நீயுமொன்றுகச் ஜோதியில் கலந்தோம். ஆனல் உன்னுடன் கலந்து நின்றும் உம்மை முழுதும் நாம் அறிய வொண்ணு அகிலாண்ட ஜோதியே நீ. எண்ணில் பலகோடி உயிர்கள் அத்தனையிலும் அருட்கண்ணுக விளங்குபவனே கால வரையற்றவனே! உம்மை எவ்வாறு நாம் உணரமுடியும். நீயே என் சிவகுருவாக எம்முன் எழுந்தருளி இயல்பாகவே பாசங்களிவீங்கும் தன்மை, பேரருளுடைமை, முடிலிலாற்றலுடைமை முதலிய எண்குணங்களையும் நம்முள் நாமே நின்று போதஞ்சிரியராய் அருள் காட்டி (பாட்டுகள் 283, 284, 285, 286 ல் காண்க) எமையாண்டு தம்மைப்போல் எம்மையும் ஆக்கிய எள் ஞானகுரவனின் சிருடைய தாள்கள் வாழ்க. (5)

311. ஊசிமே னுனியினின் றே உக்கிர தவத்தையாற்றும்
மாசில்மா தவருங்காணு மலர்ப்பதம் மனத்தில்
[வாழ்க.

உடல் செவ்வியற்று மெலியவும் எலும்புகள் நெகிழ்ந்து உருகவும் இருகண்களின்றும் இன்பக்கண்ணீர் ஊற்றுக்கள் திறந்தாலொத்துப் பெருக்கெடுத்தோடவும், இரும்பாலாகிய ஊசி காந்தத்தின் முன்னிலையில் அசைந்து அதனை நண்ணி நீங்காது பொருந்தி உறைவது போல், உக்கிரதவத்தையாற்றி, உம்முடைய குற்றமற்ற பெருந்த கைமையுடைய மன்னரும் புறத்தேயலைந்து காணுத, அந்தமலர் பதத்தை நண்ணி மனமுருகிக் கரைய மனம்புத்தி சித்தம் ஒன்றுகவே, ஊசிகாந்தக்கல்லுடன் பொருந்தி நிற்பதுபோல், பொருந்தி உம்முடைய பேரானந்தத் திருவடியில் ஆழ்ந்து கிடக்கவே.

விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா ஆங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமியருள்
காந்தம் கண்ட பசாசத் தவையதே

(சிவஞானபோதம் நூற்பா 5)

பாசம் = இரும்பு.
உச்சிமே னுனியினின் றே உக்கிர தவம் — திருமூலநாயனார் கூறுகிறார்

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனவிற் பொரிய வறுப்பினும்
அன்போடுருகி அகங்குழை வார்க்கனறி
என்போல் மணியினை எய்தவொண்ணுதே (10 — 259) (6)

312. என்னைநீ வேருயெண்ணி இடர்ப்பட
வேண்டாமென்று
தன்னைத்தந் தாண்டுகொண்ட சற்குரு தாள்கள்
வாழ்க.

சிறந்த கண்ணுள் கலந்து ஒளிதரு மொளியே உள்ளத்துள்ளே நின்றருளும் ஞானப்பொருளாய் விளங்கும் முழுமுதல்வனே, திருவருட் பரவெளியாகிய திருச்சிற்றம்பலத்தின் கண்ணின்று கூத்தியற்றும் பொன்னம்பலவாணனே நாதத்தின்மேல் பொது நடம் அருள்தரும் தில்லைக்கூத்தா என்னை நீ வேருக எண்ணியிடர்ப்பட வேண்டாம், யானுகிய வென்னை விழுங்கி வெறுத்தானுய் நின்ற தற்பரமே, என்னையே உம்மிடம் நான் ஒப்படைக்க என்னையாண்டு அருள்தந்த சற்குருதாள்கள் வாழ்க.

"எனக்குள் நீ என்றும் இயற்கையாப் பின்னும்
உனக்குள் நான் என்ற உறுதிசொல்வ தெந்நாளே"

என்று தாயுமானவர் கூறுகிறார். (என்நாட்டக்கண்ணி அறிஞர் உரை 13) (7)

313. ஏதுமொன் றறநில்லென்றே யெனக்குநல்
லருளைத்தந்த
நீதிலாத் தேசிகன்றன் திருவடி வாழ்க! வாழ்க!

திருவடியின்கண் சாரும் மெய்ப்புணர்ப்பு நிலையில் அது என்றும் இது என்றும் கூறும் சொல்லும் நிலை தோன்றிலை தனிப்பொருளென்று சொல்லு மொருபொருளாம் ஐயம் தோன்றும்; ஆதலால் ஏகனேகனுய் எங்கும் வியாபியாய் விளங்குபவனே (சனகர் சனற்குமரர் முதலியோரும் சுகர் முதலிய முனிவர்களும் திருவடியுணர்வாகவே வாழ்ந்தாரென்னுமுண்மை நம்முள்ளும் விளங்க) என்றும் வேறுபாடற்ற திருவடியுணர்வில் வாழ அருள் தந்த ஞானகுரவன் கழல்கள் வாழ்க.

அது வென்றுல் எதுவெனவொன் றடுக்குஞ் சங்கை
ஆதலினுல் அதுவென்னலும் அறவேவிட்டு
மதுவுண்ட வண்டெனவுஞ் சனகாதி
மன்னவர்கள் சுகர் முதலோர் வாழ்ந்தாரென்றும்
பதியிந்த நிலையெனவும் என்னையாண்ட
படிக்கு நிரு விகற்பத்தாற் பரமானந்த
கதிகண்டு கொள்ளவும்நின் அருள்கூரிந்தக்
கதியன்றி யுறங்கேன்மேற் கருமம் பாரேன்.

தாயுமானவர் - சிதம்பரரகசியம் 23 (8)

57 நாம் என்ன செய்யவேண்டும்

314. சிவநாம மைந்தெழுத்துஞ் சிந்தித்திட வேண்டும்
சிந்தித்திட வேண்டும்
சிவதொண்டன் தொண்டுசெய்ய முந்திவிட
வேண்டும்
தவநெறியில் வழுவாமல் தான்வளர வேண்டும்
தான் வளர வேண்டும்
தந்தைதாய் சுற்றத்தைத் தழுவிக்
கொள்ளவேண்டும்.
(2)

ந, ம, சி, வாய ஐந்தெழுத்தின் உண்மைகளை உணர்வினுள் உணர்ந்து (1) அவற்றைச் செபிப்பதால் நம்மனதும் எண்ணங்களும் தூய்மையடையும். எண்ணங்களே பின் செயல்களுக்குத் தோற்றுவாயாக வருவன (*Virtuel desires cause concre desires and cause action*) எச்செயலையுந் தொண்டு புரிதலாக சிவனுக்கே அர்ப்பணமாகச் செய்வதே நிஷ்காமிய கர்மம், கர்மபலன் கருதாதே கர்மம் புரிதல் வளர வளர ஈற்றில் சும்மா இருக்கும் அகந்தோன்றும். கோபம், குரோதம், இச்சை' அவா, பொய், களவு முதலியன அகற்றி நடுநெறி நின்று செயல் புரிந்து தாமாகவே பஞ்சப்புலன்களும் நான் எனும் ஆணவமும் தன்னுள் அடங்கவேண்டும். தவநெறியில் வளர வேண்டும். தாயை உலகமாதாவாகிய அம்மையென்றே தொண்டு செய்ய வேண்டும்.
தந்தை தாய் சுற்றத்தைப் பேண வேண்டும், (1)

315. ஐந்தாண்டு விழாவதனைக் கொண்டாட வேண்டும்
கொண்டாட வேண்டும்
அவரவரின் விருப்பப்படி பொருளுதவ வேண்டும்
மந்தார மல்லிகையால் மாலை கட்டவேண்டும்
மாலை கட்ட வேண்டும்
வந்தசிவ தொண்டனுக்கு வாழ்த்தியிட வேண்டும்.
(2)

316. கொஞ்சங்கொஞ்ச மாய்மனத்தை யடக்கிக்கொள்ள
வேண்டும், அடக்கிக் கொள்ள வேண்டும்
குருநாதன் திருவடியைக் கும்பிட்டிட வேண்டும்
அஞ்சி யஞ்சிப் பாவத்தை யகற்றி விடவேண்டும்
அகற்றிவிட வேண்டும்
ஆர்மீதும் அன்பாக இருந்துவிட வேண்டும்.

(பாட்டு 314 உரை காண்க) ஐம்புலன்களும் ஆணவமும் தாமாகவே சிவதொண்டு புரிய, நிஷ்காமிய கருமமாகவே எச்செயலும் புரிய தம்முள் ஒடுங்கும். மனத்தில் சாந்தம் நிலவும். திங்களும் கங்கையும் சடையில் தரித்தவள் அருள் புரிய மனமொடுங்கும். சும்மா இருக்கும் அகம் தோன்றும். 'சிவ சிவ' எனும் உண்மையை உணர்வினால் உணர்ந்தறியலாம். குருநாதன் திருவடியைக் கும்பிட்டிட வேண்டும். தாமாகவே பாவமும் புண்ணியமும் மனத்தை விட்டகலும் கருணையும் அன்பும் எப்பொருளிலும் தோன்றும். (3)

317. அளவுக்குப் போசனத்தை யருந்திவிட வேண்டும்
அருந்திவிட வேண்டும்
அறிவடைய எப்பொழுதும் வருந்தி விடவேண்டும்
இளமையிலே வித்தைதனைக் கற்று விடவேண்டும்
கற்று விடவேண்டும்
ஈயாத மனிதர்பற்றை யகற்றிவிட வேண்டும்.

கோபம் குரோதம் வஞ்சகம் சூது பொய் அவா இவற்றை அகற்றித் துன்பத்தை இறைவனுடைய அருள் என்று மோனத்துக்கு வித்தாகக் கொண்டு சும்மா இருக்கப் பழக வேண்டும். அளவுக்கு மிஞ்சிய போசனத்தையோ பணத்தையோ நாம் கோரவொண்ணாது. அது அவா குரோதம் கர்மம் முதலியன தருவது ஒன்றும் பதியாத மனத்தே வித்தைதனைக் கற்றுணர்ந்து அதே மனத்தில் பதியவைத்துக் தேர்ச்சியடைதல் நன்று. அவா இச்சை அதிக பணம் சேர்த்தல் என்றும் தர்மத்திற்கு மாறுக நிற்கும் குணங்கள்; தர்மம், தமக்குத் தேவையான பொருளை வைத்துக்கொண்டு மிகுதியை தானதருமம் செய்யவேண்டும்: அதே நல்வாழ்க்கைக்கு அடிகோலும்.

318. குடிப்பிறந்தா ரோடுறவு கொண்டு விடவேண்டும்
கொண்டு விடவேண்டும்
குறைவில்லை யென்றுசொல்லிக் குதூகலிக்க வேண்டும்
உடன்பிறந்தார் சுற்றத்தாரை ஓம்பிவிட வேண்டும்
ஓம்பிவிட வேண்டும்
உள்ளும்பு றம்புமொன்றாய் வாழ்ந்து விடவேண்டும்.

உள்ளது போதும், அதிகம் பொருளோ போசனமோ விரும்பாது மனத்தில் உள்ளதில் திருப்தியடைதல் வேண்டும்: லக்ஷ்மிபோல பணிப்பெண்ணைக் கொண்ட போதிலும் இறைவன் தன்னில் திருப்தி கொண்டவர் வஞ்சகம் சூது இல்லாமல் மனதும் பரிசுத்தமாக இருத்தல் வேண்டும். (5)

319. தன்னை மறந்தருளில் தான்நிலைக்க வேண்டும்
தான்நிலைக்க வேண்டும்
சந்தேகம் வாராமல் தான்தொலைக்க வேண்டும்
பின்னையாசான் பெருமைதன்னைப் பேசிவிட
வேண்டும், பேசிவிட வேண்டும்
பித்தனென்ற பிறர்வசையை வீசிவிட வேண்டும்.

முன்பாட்டுக்கள் தொடர சரியை கிரியை யோகம் எனும் முறைகளினூல் கட்டுண்டு ஐம்புலன்களும் ஆணவமும் தன்னுள் அடங்க முடியிலாதிறதுடைய இயல்பாகவே பாசங்களினீங்குந்தன்மை முதலிய எண்குணங்களுடன் தான் எனும் தற்பரம் தோன்றும் தான் நிலைக்கும். களவுபடா இருதயம் (53) நலஞ்சுழியா இன்பம் (55) தரும் என்றும் நிலையுள்ள களங்கமற்ற பேரானந்தம் நிலவும். சந்தேகம் வராமல் தான் எனும் நிலையுள்ள பேரானந்தம் தரும் தற்பரம் நிலைக்கும். அருள் புரிந்த குருவின் பெருமை தன்னைப் பேசவேண்டுமோ. சரியை கிரியை யோகம் வழிநின்று உதவியதும் ஆசான் தன்னுள் நின்று அருளிய ஒரு மொழியே பயன்தருவது. உலகோர் பித்தனென்றுல் யார் கவனிப்பது.

(1) யோகத்தில் நிலைபெற்று பற்று அற்று வெற்றி தோல்விகளைச் சமமாகக் கொண்டு கருமம் செய் நடுவுநிலை யோகம் என்று சொல்லப்படுகின்றது. (கீதை 2 — 48)

(2) மனநடுவு பெற்றவன் நன்மை தீமை இரண்டையும் இம்மையில் துறக்கிறான். ஆகையால் நீ யோகத்தைச் சார்ந்திடு திறமையுடன் செயல்புரிதல் யோகம். (கீதை 2-50)

(3) சரியையின் தொழிலினுலுஞ் சற்கிரியையினும் யோகம்
புரிதரு முயற்சியானும் வொருந்தொணு தென்பர்மேலோர்
உரியதே சிகனுரைக்கும் ஒருமொழி யுண்மைபாலே
அரியமெய்ஞ் ஞானவீடிங் கடைவது திண்ணமாமே, (1)

58 எங்கனை யாள் குருநாதா

ராகம்-சஹானு தாளம்-ஆதி

பல்லவி

எங்கனை யாள்குரு நாதா—நின்
இணையடிபணிந் திடவரந் தாதா

சரணங்கள்

320. செந்நெலும் கன்னலும் செறியும்நல் லூராய்
செல்லப்ப னென்னுந் திருப்பெயர்க் குரியாய்
அன்னைபி தாக்குரு தெய்வமு மாயுய்
அண்டிவந் தேனினை யனுதினங் காப்பாய். (எங்)

''ஓமெனும் எழுத்தினுள்ளே உலகெலாம் ஒடுங்கக் காட்டி'' (303) என்று சுவாமிகளே கூறுகிறார். உரை காண்: இணையடி, சத்தியுஞ் சிவமுமாக விளங்கும் இறைவன் திருத்தாள்கள்; சும்மா இருக்கும் அகம் பொன்னம்பலமாக விளங்குந் தரிசனங் கண்டு நாம் பரசிவ வணக்கம் செய்கிறோம் (சிவலஹரி(1) - (1) பாட்டு) இங்கும் அந்தப் பரசிவ வணக்கமே ''குருநாதா இணையடி பணியவரம்தா'' என்பது.

சரணங்கள்

செந்நெலும் கரும்புஞ் செறிந்து வளர் வயலும் சோலையுந் தங்கும் நல்லூரில் அனுக்கிரகந் தரும் நல்லைப்பதிக்ரசே! செல்லப்பனெனும் பெயருடன் உருத்தாங்கி அன்னையப்பனென் ஆவித்துணையெனுந் தன்னை யொப்பற்ற சற்குரு'' என்று தாயுமானவர் கூறும் உண்மை விளங்க எழுந்தருளிய முழுமுதற் பரம்பொருளே! எளியனேன் வேறுதுணையேதுமின்றி அனுதினமும் முழுமனத்துடன் உனைத் தொழுதேத்துகிறேன்; உனை நானும் விட்டகலுகேன், நீயும் எனை விட்டகலாது என்னுள் நின்று என்னைக்காத்தருள்வாய்; ஐம்புலன்களும் சந்தேகமும் என்னுடன் வாது செய்யாது காத்தருள்புரியாய். (1)

321. உல்லாச மானை நடையுடை யோனே
உன்போ லொருவர் உலகினிற் கிடையார்
எல்லாம் வல்லவர் செயலையா ரறிவா
ரேத்தி யேத்தித் தொழவெனைக் குறியாய். (எங்)

எல்லாம் வல்ல இறைவன் எல்லாம்தாமே செய்பவர் என்பதைச் சுந்தரர் (7-56-8)இல் கூறுகிறார். ''நிலையில்லாத பொருட்கள்மேல் செல்லுகின்ற மனத்தோடு ஒற்றித்து நின்று அதன்வழியே செல்லும் அறிவாய் நிற்பவனும், பின்னர் அம்மனத்தின் செயலைக் கெடுத்து அறிவை ஒருநெறிப்படுத்துபவனும், காற்றுந் தீயும் முதலிய கருவி கரணக்களாய் (65) நின்று உடம்பாகிய காரியத்தைப் பண்ணுபவனும், பின்னர் அதனையழிப்பவனும், உயிர்கள் வருந்துமாறு அவற்றையடையற்பாலனவாய் வினைகளைக் கூட்டுவிக்கின்றவனும், பின்னர் அவ்வினைகளை யழிப்பவனுமிவை யெல்லாஞ் செய்வதற்கு மூங்கிலை யொத்த தோள்களையுடைய உமையம்மையைத் துணைகொள்பவனும்'' எனும் பொருள்களால் தருகிறார்.

மாய மாய மனங்கெடுப் பானை
மனத்து ளேமதியாயிருப் பானைக்
காய மாயமு மாக்குவிப் பானைக்
காற்று மாய்க்கன லாய்க்கழிப்பானை
ஓயு மாறுறு நோய்புணர்ப் பானை
ஒல்லை வல்வினை கள்கெடுப் பானை
வேய்கொள் தோளுமை பாகனை நீடூர்
வேந்த னைப்பணி யாவிடலாமே. (7-568)

சுந்தரர் தரும் உண்மைகள் விளங்கவே வல்லவனும் செயல் புரி பவனும் உன்னுளே நின்று உலகினுக்கு அருள் காட்டிச் செயல் புரி விக்கவும், செயல் புரியவும் முழுமுதல்வனுய் விளங்குபவனே; நீ உல லாசமான நடையுடையோனுய் விளங்குகின்றுய். அனைத்து மாய் விளங்குபவனே உன்னையொத்தவர் யார் உளர்? உம்மை ஏத்தியேத் தித் தொழ எனக்குள்ளே நின்று நின்குறிப்பால் அருள்புரியாய். (2)

322. பித்த னென்றுபலர் பேசிய திறத்தாய்
பெற்றி பிறரா லறியொணுத் தரத்தாய்
அத்தனே யுனக்கே யபய மபயம்
ஆருக்கு மினிமே லெனக்கென்ன பயம். (எங்)

முழுமுதல்வனும் அருட்டுறைப் பெருமான் சுந்தரரை நோக்கி "முன்பெனைப் பித்தன் என்றே மொழிந்தனை. ஆதலால் என் பெயர் 'பித்தன்' என்றே பாடுவாய்" (பெரி. புரா: தடுத் 72) எ சுந்த ரரும் "பித்தாப் பிறைசூடி' என்று பாடினர். சித்தாந்தக் கலைமணி வித்துவான் அருணைவடிவேல் முதலியார் "பேரருள் உடையவன், பேரருள் பித்தொடு ஒத்தலின் பித்து' எனப்படும். எனவே சிவபெ ருமானுக்கே 'பித்தன்' எனும் பெயர் உரித்தாயிற்று" என்று தரு கிறர். உனது பேரருளுடைமை இயல்பாகவே பாசங்களினின்குந்தன்மை முதலிய எண்குணங்களும் விளங்கும் உன் பெருமையை உணர்வினலு ணர்ந்தறிந்தும் உமைவந்தடைந்தவரல்லால் மற்று யார் அறிவார்கள் எம் முழுமுதல்வனே உனக்கபயம். உனைவந்தடைந்தோர்க்கு உல கினில் என்ன பயம். நீயே சர்வ வல்லமை யுடையோனுய் விளங்கு பவனே சர்வதத்துவாதிபதி எல்லாஞ் செய்பவனே.

ஆரால மென்ன யமட்டவொண் ணுதினி
சீரார் பிரான் வந்தென் சிந்தை புகுந்தனன்
சீராடிநான் அங்கே திரிவ தல்லால்
யார்பாடுஞ் சாராவறிவு றிந்தேனே. (3)

323. ஒருபொல் லாப்பும் இல்லையென் றுரைத்தோய்
உண்மை முழுதும் என்றெனக் குரைத்தோய்
கருத்தினுட் கருத்தாய் விளங்குங்கண் மணியே
காமக் குரோதம் அற்றவர்க் கணியே. (எங்)

சொல்லுக்கும் அறிவுக்கும் எட்டாததாகிய, உணர்வினூடே உணர்வினுல் உணர்ந்தறிந்து அறிவுப்பொருளாக எம்முள்ளத்தே மும் மௌனந் தோன்றுமிடத்து அறியப்படும் மெய்ப்பொருளே; பற்றற் றவர் உள்ளத்தே செயலற்று அறிவே வடிவாக விளங்கும் இதயத்தே ஆத்மஜ்ஞ விளங்கும் கண்மணியே; ஆருயிர்தன்னை நானென்றும் உயிர்க்குயிராம் நாதனை நீ யென்றும் இருதன்மை நாடாதே நடுநிலை யில் சும்மா இருக்கும் மௌனம் எய்த நீயே உண்மைநிலை, எல்லா மெய்ப்பொருளைக் காட்டியருள் தந்து ஒரு பொல்லாப்புமில்லை யென்று பொதுநடங் காண்பித்த எம் முழுமுதல்வனே, தில்லைச்சிற்றம்பல மென்னும் பொன்மன்றில் அன்னைகாணத் திருக்கூத்தியற்றி அனைத் துயிர்களையும் திருத்தொழில் ஐந்தினுள் காட்டியருளி, அதனை நடப் பித்தருளும் முழுமுதல்வனும், எம் அறிவுப் பெருவெளியில் உண்மை முழுதும் நீயென நாம் காண அருள் தந்தவனே உனக்கு வணக்கம்.

உரையுணர் விறந்து தம்மை உணர்பவர் உணர்வினூடே
கரையிலா இன்ப வெள்ளங் காட்டிடும் முகிலே மாருப்
பரையெனுங் கிரணஞ் சூழ்ந்த பானுவே நின்னைப் பற்றித்
திரையிலா நீர்போல் சித்தந் தெளிவனே சிறியனேனே.

(தாயுமானவர் ஆசையெனும் 14)

59 பெருமானைப் பார்த்துநின் றுடுமயிலே

இராகம் — ஆனந்தபைரவி

ஆடுமயிலே பணிந்தாடுமயிலே
ஆண்டவனைக் கண்டுதெளிந்தாடுமயிலே.

324. வீடுநமக் கெப்போதும் சொந்த மென்றே
வீணைசைப் படுவதெல்லாம் பந்த மென்றே
கூடுவிட் டுயிர்போமுன் கும்பிட்டுக் கொண்டே
குழைந்து குழைந்துநின் றுடுமயிலே, (ஆடுமயிலே)

திருவானந்தர் (சிவதத்வம் விளக்கம்) கூறுகிறார். திருக்கயிலாய கிரியில் பார்வதி சமேதராய் பரமசிவன் வீற்றிருக்கிறார். மனைவாழ்க் கையின் பொறுப்பு பேறு பண்பு அனைத்தும் ஆங்கு ஒன்று சேர்ந்து

மிளிர்கின்றன. பேறுகளில் தலையாயது மக்கட்பேறு. அறிவுக்கே அழகு கொடுப்பவன் ஞானக்கணபதி, மூத்தவன். துடியாட்டமுஞ் செயலுமே விளங்குமாற்றல் வடிவானவன். இளையவன், முருகன். தந்தையின் அண்மையில் கணபதியும் அன்னையருகில் முருகனும், கணபதிமூஷிகமும், முருகன் அண்மையில் மயிலும் (1) தந்தையின் மேனியில் நெளிந்து நெளிந்தாடும் பாம்பும் காளைவாகனமும், அம்மையின் துடியாட்டத்துக்கு இயல்பான சிங்க வாகனமும் ஒருங்கே குடும்ப வாழ்க்கையின் அழகிய பண்பை விளக்குவதே.

தந்தை தன்னொளி கொண்டே செயல் புரிபவன்; அம்மை தம் கணவன் ஒளிகொண்டே இயங்குபவள்: சூரியனுஞ் சந்திரனுமென்பர்; நெற்றிக்கண்ணுல் காமனை யெரித்தாரென்பது விளங்க ஊனக்கண்ணுறங்க ஞானக்கண்ணுதயமாகும். மூன்றுவது கண். முக்கண்ணனே எம்மிறைவன். இருட்டில் பாம்புபோல் தோன்றும் கயிறு, வெளிச்சத்தில் கயிறுதான். ஞானக்கண் உதயமாக காமாதிகுணமெல்லாங் கட்டவிழ (192) மாயை நீங்க உலகினை முழுது உண்மை யென்னும் அம்மையுமப்பருமாகத் தரிசிக்கலாம். பண்பும் சிறப்பும் தரும் வாழ்க்கையில் ஞானக்கண் உதயமாக "ஆண்டவனைக் கண்டு ஆடுமயிலே" என்கிறார் (207) புத்தியாகிய கன்னிகையை பார்வதியுடன்கூட இறைவனுக்குத் தொண்டுபுரிய அர்ப்பணஞ் செய்து 'பணிந்தாடு' என்கிறார்.

மோட்சவீடு நம்முடையது. ஆன்மாவின் இயல்பு செயலற்றிருப்பது. இறைவனிடஞ் செல்வதெதனியல்பு, மாயை என்னும் இருட்டில் பாம்பு வடிவாகத் தோன்றின கயிறு, உலகம் வெளிச்சத்தில், மீண்டும் அழியா இன்பந்தரும் அம்மையுமப்பருமாக, அழகான உலகமாகக் காட்சியளிக்கும். வீணைசைகளை விட்டு, இந்த உடம்பை விட்டுயிர் போமுன், காமாதி குணமெல்லாங் கட்டவிழ, இறைவனின் கருணைவெள்ளம் பெருக சும்மா இருக்கும் சொருபந் தோன்ற, அம்மை பார்வதிபோல் செயல்புரிபவள் போல் விளங்க குழந்தை முருகனுந் தாயும் போல் குழைந்து குழைந்து பண்புடன் வாழ்க்கையை நடத்து; மாணிக்கவாசகர் குழைந்து குழைந்து ஆடுவதை விளக்குகிறார்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்குஅப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை மின்னன்ப ரல்லார்தோள சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்குஇப் பரிசேஎமக் கெங்கோன் கூல்குதியேல்
எங்கெழி லென்ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்.

(திருவெம்பாவை 19) (1)

325. பொறிவழி போம்மனத்தை அடக்கிக் கொண்டே
பூரண நிட்டையிலே மடக்கிக் கொண்டே
அறிவறி யாமையிரண்டும் நாமல்ல வென்றே
ஆனந்தமாய்ப் பணிந்தெழுந் தாடுமயிலே
(ஆடுமயிலே)

(முன்விளக்கம், பரமசிவனைச் சுற்றிக்கொண்டு நெளிந்து நெளிந்து தாடும் பாம்பு ஐம்புலன்களையும், அவை உண்டாக்கும் ஆணவத்தையுங் குறிக்கிறது. காமாதி குணமெல்லாம் கட்டவிழ கருணை வெள்ளம் பெருக, சும்மா இருக்கும் அகம் தாமாகத் தோன்ற தாணுவே எழுந்தருளும் (192) நிட்டைகூடித் தில்லைத்தரிசனங் கண்டால் நம்மைக் கட்டியிருக்கும் பாசபந்தக் கயிறு எரிந்துவிடும். பின் வாழ்க்கையில் எரிந்தகயிறு, கயிறு வடிவமாகக் காணப்பட்டாலும் கட்டுந்தன்மை யற்றது. கயிறு காண்கிறேம். உலகியலில் வாழ்ந்தாலும் கட்டுந்தன்மை யற்ற கயிறுபோல் மாயையில் கட்டுண்ணுமல் கர்மம் புரியாது, வாழ்தலால் ''அறிவறியாமை இரண்டும் நாமல்ல வென்றே'' என்கிறார்.

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனுர்க்குப் போற்றவிக் காட்டினேமே. (4-76-4)
(2)

326. எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணிக் கொண்டே
இரந்திரந் தைந்தெழுத்தைப் பன்னிக் கொண்டே
ஒளவியம்பொ ருமைகோபம் அகற்றிக் கொண்டே
ஆண்டவனைக் கண்டுதெளிந் தாடுமயிலே.
(ஆடுமயிலே)

கிருஷ்ணபகவான்: அர்ஜுனு, தன்னையே உவமையாகக்கொண்டு இன்பத்தையும் துன்பத்தையும் எங்கும் ஒப்பக் காண்பவன் பரமயோகியெனக் கருதப் படுகிறான். [கீதை 6—32] தன் உடலிலே உள்ள உறுப்புக்கள் ஒன்றுகவே இன்பமும் துன்பமும் அனுபவிப்பதை யுணர்கிறான் மனிதன்; அம்மையப்பர் எனும் உலகின் உறுப்புக்களே உயிர்கள் யாவும். காலில் புண் வந்து வருந்தினால் கை சந்தோஷமடைவதில்லை. அதுபோல் எவ்வுயிருந் தன்னுயிர்போல் நினைந்து இறைவனும் தானும் ஒன்றுகக் காணுமந்நிலையில் ந, ம, சி, வ, ய எனும் திருவைந்தெழுத்தின் உண்மைகளை நம்வாழ்க்கையில் விளங்க வைக்கும் வழிநின்று காமாதி குணமெல்லாங்கட்டவிழ [எரிந்த கயிறு

கட்டுந்தன்மையற்றது (328) ஆண்டவனுக்குக் கீழ்படிந்து வாழ்க என்றும் அவனே மறவாதே. களவுபடா இருதயம் என்றும் பொன் னம்பலமாக விளங்க (53) என்றுமழியா இன்பம், பேரானந்தம் விளங்க, வாழ்க்கையில் ஈடுபடு; தெளிந்தாடு, சந்தேகம் வாராது ஆடுமயிலே. ''காலவரையறையை'' என்னுந்தேவாரம் 53இலும், கலஞ்சுழிக்கும் கருங்கடலும் . . . . '' என்பதை 55 இலும் காண்க] கிருஷ்ணபகவான்; பார்த்தா, அவனுக்கு இம்மையிலோ மறுமை யிலோ அழிவென்பதில்லை. நலஞ்செய்வோன் எவனும் நலிவுறுதல் இல்லையப்பா. (கீதை 6—40) (3)

327. ஒருபொல்லாப்பு மில்லையென்ற புத்தியைக் கெட்டே
ஓம்சிவாய நமவெனச் செபித்துக் கொண்டே
குருநாதன் திருவடியைக் கும்பிட்டுக் கொண்டே
கூடிக்க ளித்துநின் ருடுமயிலே. (ஆடுமயிலே)

மெய்யன்பர்களுடைய வாழ்க்கையில் பக்தனுடைய பிறவிச் சுமையை இறைவனே தாங்கிக் கொள்கிறார். அவனுக்கு ஒருபோ தும் ஒருபொல்லாப்பும் நேருவது கிடையாது; விடமுண்ட கண்டன் அருள்புரிபவன். சிற்றின்பத்தை அவன் நாடான்; இன்பமும் துன் பமும் ஒரே வகைத்தாய், அறிவே வடிவான அவன் இதயத்தே பேரானந்தமாக விளங்குவது. (முன்பாட்டு விளக்கம்) ந, ம சி, வ, ய, எனும் உண்மைகளே தாம் தாம் உட்கொண்டே இறைவன் வழி நின்று இறைவனே சுமைதாங்க அவன்வாழ்க்கை நடத்துவான்; உலகினரும் அவனைக்கண்டு இன்பத்துடன் வாழ்வார்கள். சிவன் முத் தனுகை வாழும் அவன், தன்னையும் உலகையும் வேறுகக் காணுதே, சிவிக்கும் முறையில் கூடிக்களித்து நின்றுடுமயிலே. [தாமும் காவித் துணி தரிக்காமல் அறிவறியாமை இரண்டும் நாமல்ல வென்றே கூடிக்களித்து நின்று வாழ்ந்து மயில் ஆடுவதுபோன்ற காட்சி தந்தார்] பக்தனுடைய வாழ்க்கைச் சுமையை இறைவனே தாங்குகிறார். சங்கரர் [சிவானந்தலஹரி சு 11] பிரமச்சாரியாகவோ கிருஹஸ்த னுகவோ ஸந்நியாசியாகவோ சடைதரித்த வானப்பிரஸ்தனுகவோ இவர்களல்லாத எவனே ஒரு மனிதனுகவோ ஒருவன் இருக்கட்டும், பரமசிவனே! அதனுலென்ன உண்டாகும்? பசுபதியே! எவனுடைய இருதய கமலம் உம்முடைய வசப்பட்டிருக்குமோ அவனுக்கு வசப் பட்டவராக நீர் ஆகிவிடுகிறீர். சம்புவே, பிறவிச் சுமையையும் தாங்குகிறீர். (மொழி பெயர்ப்பு)

ஒருமனிதனுடைய எண்ணத்துக்கும் நோக்கத்துக்கும் தக்கபடி அவனுக்குச் சன்மானம் கிடைக்கிறது. ஈசுவரன் பக்தர்கள் விரும்பு வனவற்றை யெல்லாம் கொடுக்கும் கற்பக விருக்ஷம் போன்றவன் (4) (ஸ்ரீ. இராமகிருஷ்ணர் உபதேசம்)

328. தேசகாலம் யாவையும் மறந்து நின்றே
சிறுபிள்ளையைப் போலமனம் சிறந்து கொண்டே
பேசவுமறி யாமற்பேய்க் கோலங் கொண்டே
பெருமானைப் பார்த்துநின் ருடுமயிலே. (ஆடுமயிலே)

பக்தன் பிறவிச்சுமையை இறைவனிடம் ஒப்படைக்கிறான். பிள்ளையின் தேவையை புனர்ந்த தாய் பிள்ளையைக் கவனிக்கிறாள். முன் தொடக்கத்தில் தாம் உண்டாக்கிய அப்பழக்கம் நாளடைவில் இயற்கை ரூபமாக அமைந்து பக்தன் சிறுபிள்ளை கூத்துவினையாடுவது போன்று அம்மையுடன் கூத்துவினையாடுவான். சும்மா இருக்கும் அகம் வேண்டும் பரமசிவன் எனும் எண்ணங்கள் நூதனமாக இருக்கும். அவன் முருகனைப்போல் அம்மையின் குழந்தை, விளையாடுவான். குழந்தை பசித்தால் தாயைப் பார்த்து அழுவான் வேண்டுவன வெல்லாந் தாய் கொடுப்பாள் (330) பெருமான் நினைவல்லாமல் வேறு நினைவின்றி, எங்கு இருக்கிறோம், இரவு வரப்போகிறது பாம்புவரப்போகிறது என்ற எண்ணங்களில்லாமல், அவன் குழந்தையெனும் சிருஞ் சிறப்புடனும் வாழ்வான். சித்பவானந்தர் சினிமாப் படம்திரையில்காண்பிக்கப்படுகிறது. திரைமுழுவதிலும்படமிருக்கிறது. உள்ளத்தே தோன்றும் சித்தாகாசம் ஐந்தெழுத்துச் ஜோதியில் பரமாகாசமாகும். இத்திரையின்மேல் உலகியல் வாழ்க்கைச் சித்திரத்தைப் பக்தன்காண்கிறான்: மாயை உலகை மெய்யென நினைப்பவர்கள் சாதாரணமனிதர். காலஎல்லையும் தேசஎல்லையுமற்றது பரமாகாசத்தில் தோன்றும் படம். குழந்தை தாயையே காண்கின்றான்:

"காணும தொழிந்தேன் நின்திருப்பாதங் கண்டு கண்களிகூரப்
பேணும தொழிந்தேன் பிதற்றும் தொழிந்தேன் பின்னை எம்பெருமானே
தாணுவே அழிந்தேன் நின்னினைந்துருகுந் தன்மைஎன் புன்மைகளால்
காணும தொழிந்தேன் நீயினி வரினுங் காணவும் நாணுவனே.
(திருவாசகம் எண்ணப்பதிகம் 5) (5)

60 சிவநாமஞ் சொல்லித் தெளியோமோ

இராகம்—செஞ்சுருட்டி தாளம்—ஆதி

பல்லவி

சிவநாமஞ் சொல்லித் தெளியோமோ
திருவடி கண்டு களியோமோ. (சிவ)

329. உவமை கடந்தவின்பம் எமக்குள்ளே யுண்டு
ஓகோ வுணர்ந்து செய்சிவ தொண்டு. (சிவ)

'சிவ சிவ' எனுந் தமிழ் மாமறை தரும் உண்மைரூபம் (138) விளங்க வைக்கும் சும்மா இருக்கும் அகம் இயல்பாகவே தோன்ற ந; ம, சி, வ, ய எனும் ஐந்தெழுத்தையும் அவற்றின் உண்மைகளை (1) உணர்ந்து அவற்றை உணர்ந்தவாறே செபிப்போமாகில், காமாதி குணமெல்லாங் கட்டவிழ இறைவன் கருணைவெள்ளம் பெருகச் சும்மா இருக்கும் அகம் தோன்றும். ஐயன்களையே எங்கும் வியாபித்திருக்கும் பரசிவ வடிவமான உலகமாதாபிதாவை நம் அகத்தினுள் காணலாம். திருவடிகண்டு களிப்போம் நாம் எல்லோரும்.

(முன் விளக்கம்) ந, ம, சி, வ, ய எனும் உண்மை விளங்க வாழ்தல் சிவதொண்டு (329) காமாதி குணங்களெல்லாம் கட்டவிழ பற்றற்ற அகமுடையான் சும்மா இருந்தே செயல் புரிதல் நிஷ்காமிய கர்மம் புரிதல். தொண்டு செய்கிறோம் என்று காமிய கர்மம் புரிந்தால் அது சிவதொண்டல்ல; வினைப்பயன் விளைவிக்கும்; பயனற்றது. நிஷ்காமிய கர்மமாகச் செய்யும் சிவதொண்டு பரசிவ வடிவ அம்மையப்பர் உள்ளத்தே தோன்ற அருள் தரும்; என்றும் அழியா இன்பம், பேரின்பம் பெருகும். அறிவே வடிவான அகம் தோன்றும்; அறிவே வடிவானது ஆன்மா ஆனந்தமே அதன் இயல்பு.

மாணிக்கவாசகர் மாயவாழ்க்கையை விட்டு பரசிவ அம்மையப்பர் தரிசனங்கண்டு அழியாப் பேரின்பம் பெருக என்று பாடுகிறார்.

மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி மதித்திடாவகை நல்கினன்
வேயதோளுமை பங்கன் எங்கள் திருப்பெருந்துறை மேவினன்
காயத்துள்ளமு தூறவூறநீ கண்டு கொள்ளென்று காட்டிய
சேயமாமலர்ச் சேவடிக்கணங்கள் சென்னி மன்னித்திகழுமே.

(சென்னிப்பத்து 5) (1)

330. தத்துவம் யாவுஞ் சடமென அறிவோம்
சத்தியம் ஆன்மா நித்தியம் உய்வோம். (சிவ)

சைதன்னியம் ஜடம் ஆகிய இரண்டு தத்துவங்களையுடையது இயற்கை. அறிவும் ஆனந்தமும் சைதன்னியத்தைச் சேர்ந்தவைகள்; எது உணர்கிறதோ மகிழ்கிறதோ அது சைதன்னியம். எந்த உடலின் மூலம், கருவிகரணங்கள் மூலம் உணர்வு மிளிர்கின்றதோ அந்தக் கருவிக்குச் 'சடம்' என்று பெயர்; உயிரும் மெய்யுங் இணங்கியிருப்பது வாழ்க்கை; உயிர்த்தத்துவம் சிவம்; உலகத் தத்துவம் சக்தி; உடலில்லாது உயிர்தன்னை விதவிதமாக விளக்காது. உயிரற்ற உடல் செயலற்றது. உயிரும் மெய்யும் கொள்ளும் கூட்டுறவால் இயற்கைத்

திட்டம் நிறைவேறுகிறது. சிவதத்துவம் ஆனந்தம்; சக்தி தத்துவம். உடல் சம்பந்தமானவை உடலும் உயிரும் சேர்ந்தே இயற்கைத் திட்டம்; இரண்டு தத்துவங்களுக்கும் வேறுபாடுகள் இயற்கையில் இல்லை;

சடப்பொருளுக்க இயற்கைத் திட்டமும் தத்துவங்களுமுண்டு. சைதன்னியப் பொருளான ஆன்மா செயலற்றது; என்றும் மகிழ்வுறுதல், அழியா ஆனந்தத்தில் ஆழ்ந்து சிடத்தல், அதே அதனியல்பு (2

331. அறிவறி யாமை யிரண்டும்நீ லியல்
அரிய தத்துவம் தெரிவது தொல்லை. (சிவ)

காமாதி குணமெலாஞ் கட்டவிழ, பாசபந்தக்கயிறு எரிய தில்லைத் தரிசனங்கண்டுபின் ஜிவன் முத்தனாக 'எரிந்த' பாசபந்தக் கயிற்றுடன் உலகினில் வாழ்க்கை, சாதாரண மனிதருடன் கூடி வாழ்தலை (328) (330) அறிவறியாமை இரண்டும் நாமல்ல, என்று ஓர் உதாரணமாகக் காணலாம். உடலும் உயிரும் கொள்ளுங் கூட்டுறவால் நிறைவேறும் இயற்கைத்திட்டமே தத்துவ ஆராய்ச்சி (333) தருமுண்மை. அது தொல்லை. அதைவிட்டுச் சும்மா இருக்க அருள்வேண்டி நிட்டை கூடுவோம் என்கிறார்.

ஆரிருந்தென் ஆர்போய்என் ஆரமுதமாம் நின்னருளின்
சீரிருந்தால் உய்வேன் சிவமே பராபரமே.
(தாயுமானவர் பராபரக்கண்ணி 120) (3)

332 பொறிவழி மனத்தைப் போகாமற் கொல்வோம்
பூரண மான நிட்டை யிற் செல்வோம். (சிவ)

உலகியல் பொருட்களில் பற்றுக்கொண்டுழல்தல் சிறுபுலன் எனப் படும். அத்தகைய புலன் விருப்பமாகிய சிறுமையிற்பட்டு உழன்று துன்பப்படாமல் புலன்வழிச் செல்லும் மனத்தை ஐந்தெழுத்தை ஓதியும் அதன்வழி உண்மைகளை அறியும் வழிநின்று சிவதொண்டு புரியச் செய்வோம். காமக்குரோத பொய் வஞ்சகம் முதலியவற்றிலும் கூடிய அகங்காரவழி மனங் கொள்ளாமல் தடுப்போம்; சும்மா இருக்கும் அகம் தோன்றும்; அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் 'சிவம்' எனும் உண்மைகாணும் நிட்டை கூடுவோம். (195)
(குறியாக்குறியினில் திருமந்திரங்காண்க 195) (4)

333. விருப்பும் வெறுப்பும் வீணெனக் குறிப்போம்
வேதாந்த சித்தாந்தஞ் சமமெனத் தெரிப்போம் (சிவ)

'விருப்பு வெறுப்பற்றனவும், ஆத்மவசப்பட்டனவும் ஆகிய இந்திரியங்களால் விஷயங்களில் உலவுகின்ற மனவேந்தன் மனத்தெளிவடைகிறான்.
(கீதை 2—64)

இவற்றிற்கு ஆதாரமாயுள்ள சிலவற்றைக் காண்க. பொருள்களை நினைப்பதால் பற்றுண்டாகின்றது; பற்று ஆசையாகப் பரிணமிக்கின்றது ஆசை சினமாகவடிவெடுக்கிறது. (கீதை 2 - 62)

சினத்தால் மனக்குழப்பம்; குழப்பத்தால் நினைவின்மை; நினைவு நாசத்தால் புத்திநாசம்; புத்திநாசத்தால் ஆள் அழிகிறான் (கீதை -63) இவ்வுண்மைகள் விளங்கவே மேலும் மறைமுடிவாம் வேதாந்தமும் முறைமுடிவாம் சித்தாந்தமும் மருத்துவன் அருளும் பள்ளிவகுப்புப் போன்றமைந்தன் வாதலின் அவைவேறானவையன்று; அவைசமமான ஒரு உண்மையையே தருவன. முப்பத்தாறு தத்துவங்களுங் கடந்த நிட்டையையே நல்குவன (197)

334. நன்றியை நாங்கள் மறந்திட மாட்டோம்
நரடெங்குஞ் சென்று சிவதொண்டு செய்வோம். (சிவ)

கருணைப் பெருங்கடலான முழுமுதல்வன் திருவுளங்கொண்டே விஷயப்பற்றுக்கள் நீங்கிய மனம் அடங்கி, சும்மா இருக்கும் அகமும். நிட்டையும் தில்லைத்தரிசனமும் நாம் கண்டோம். பெருங்கருணையாளன் அருள்புரிந்த நன்மையை ஒருபோதும் மறந்திடமாட்டோம்: களவுபடா இருதயம் வேண்டும்; ஆணவம் விட்டு நீங்கவேண்டும்; பிச்சை எடுத்துண்டும், சிவதொண்டு புரிந்தும் மனைதப் பூரணமாச்சுவோம்,

[''ஞானத்திரளாய்'' எனும் சம்பந்தர் தேவாரம் 54 இல் காண்க

335. உத்தம நட்பை ஒருநாளும் பிரியோம்
ஓய்சி வாய நமவென் றுரைப்போம். (சிவ)

இறைவன் நாமத்தை ஒருநாளும் மறந்து சீவிக்கமாட்டோம்: ஸ்ரீ: இராமகிருஷ்ணர்; காதால் பகவான் நாமத்தைக் கேட்டபொழுதெல்லாம் அவருக்குச் சமாதி வந்தது. இந்த உண்மையைக் கடைப்பிடித்து வாழ்வோம். ஒருபொருளை, ஒவ்வொரு கணமும் உணர்வினில் உணர்ந்துணர்ந்து செபித்தலால் அப்பொருளை அணுகி அடையலாம். சம்பந்தர் ''நினைத்துத் தொழுவார் பாவந்தீர்ப்பவனும், மேதினைக் காணுத அயன் குழலாத அனைத்தும் ஒன்று சேரும் என்றும் பாடுகிறார்.

எனைத்தோரூழி யடியாரேத்த விமையோர் பெருமானர்
நினைத்துத் தொழுவார் பாவந்தீர்க்கு நிமலருறைகோயில்
கனைத்தமேதி காணுதாயன் கைம்மேற்குழலாத
அனைத்துஞ்சென்று திரளுஞ்சார லண்ணுமலையாரே

(1-69-6)

336. அனைத்துஞ் சிவன்செய லென்னநா மெண்ணுவோம்
ஆனைமாக்க ளிடத்தில் அன்புநாம் பண்ணுவோம் (சிவ)

ஒவ்வொரு வினுடியும் எல்லா இடங்களிலும் ஏனைய உயிரனைத்துள்ளும் அதன் அறிவு சொரூபமான இறைவனை, எண்ணில் பல கோடி உயிர்கள் எத்தனையோ அத்தனையிலும் அருட்கண்ணுக விளங்குபவனை, நாம் உள்ளும் புறம்புமாக எம்மகத்தேயும் நின்றுயாளுகிய என்னை விழுங்கி வெறுத்தானுய் விளங்குபவனை, நம்முள்ளத்தே கண்டுகளிப்போம்; அன்புடன் எவ்வுயிரையும் நோக்குவோம் (329)

ஒன்றுமற நில்லென் றுணர்த்தியநம் மோனகுரு
தன்துணைத்தாள் நீடுழி தாம்வாழ்க—என்றென்றே
திக்கனைத்துங் கைகுவிக்குஞ் சின்மயராந் தன்மையர்க்கே
கைக்குவரும் இன்பக் களி.

[தாயுமானவர் உடல்பொய்யுறவு 19]

337. குருவடி யொருபோதுங் கும்பிட மறவோம்
கூடாத கூட்டத்திற் கூடியரம் அறியோம். (சிவ)

சும்மா இருக்கும் சொரூபமே நல்லைப்பதிக்கரசே என்றழைத்த சுவாமிகள் உள்ளத்தே ஞானகுரவனுக உருத்தாங்கிய நல்லைப்பதிக் கரசே நின்று செயல்புரிந்தார். சும்மா இருக்கும் அகத்தே பரசிவமான அம்மையப்பரே காட்சி அருளினர் (மூன்பாட்டு விளக்கம்) இந்தக் குருவடி தினமும் மறவாமல் தொழுவோம். மறந்தாலும் அவன்திருவருளால் தூமாயையே அப்படி மறக்கச் செய்து பின் இறைவனுந்தானு மொன்று சேர்தல் என்று விளக்க ''ஏனைத்தோ ரூழி யடியா ரேத்த . . .'' எனும் சம்பந்தர் தேவாரம் (338) இல் காண்க. [அவர்வாழ்க்கையில் ஏதும் நடந்தால் சிவன் செயல் நாம் ஒன்றுமறியோம்'' என்றே கூறுவார்]

சும்மா விருப்பே சொரூபமா வுள்ளொளிரென்
னம்மா னருட்சீ ரனுபூதி யாலறிந்து
அம்மானுக்கேற்ற வருமை வழிபாடே
சும்மா விருந்தே தொழாது தொழப்பெற்றேனே.

(முருகனர் ஸ்ரீ. ரமண அனுபூதி 1 - 24)

338. இன்பமே யல்லாமற் றுன்பம் நமக்கில்லை
ஈசனை மறந்தால் வந்திடுந் தொல்லை. (சிவ)

(முன் பாட்டு விளக்கம் தொடர்) பரிவு வடிவான அம்மை யப்பரை ஜோதியில் கண்டும் பின்தம் மனத்தில் நாளடைவில் நின்ற பழக்கத்தால் அழியா இன்பத்துடன் ஒவ்வொரு விழுடியிலும் அது தாமாகவே உருவமைத்து இன்பம் பெருக்கெடுக்க [சும்மா இருப்பே எனும்பாட்டு முன்பாட்டுவிளக்கம் காண்க] இன்பமே என்றாளுந் துன்பமில்லை என்று வாழ்வார். ஈசனைமறந்தால் தொல்லைவரும், அதன்பயனாக அவனைக் கூவியழைப்பார். அங்ஙனத்தியன் மாயையைச் சுட்டெரிப்பான்.

61 எல்லாமவன் செயலே

வெண்பா

339. எல்லா மவனேயா மெல்லா மவன்செயலே
கல்லாய் மனிதா கவலையேன்—நில்லாயோ
நீள நினையாய் நினைந்து நினைந்துருகி
வாழ நினையாய் மதி.

பிருஹதாரணிய உப. இல் இந்த ஆத்மாவே ஸர்வேஸ்வரன்: உண்டாயவற்றிற் கெல்லாம் அதிபதி; எல்லாப் பொருள்களையும் பரிபாலிப்பவர். இவ்வுலகங்கள் பிரிந்து போகாமல் சேர்த்துப் பிடிக்கும் கரைபோன்றிருப்பவர்.'' (4-4-22) அதுபோல்'' எல்லாப் பொருட்களிலும் அவனே வியாபித்திருக்கிறான். எண்ணில் பலகோடி உயிர்கள் அத்தனையிலும் அருட்கண்ணாக விளைமுதலாம் முதல்வன் நின்று செயல் புரிகிறான். மும்மூர்திகளாயும் படைத்தற்கடவுள் காத்தற்கடவுள் அழித்தற்கடவுளர் ஆகவும் நின்று செயல்புரிபவன். ஆகையால் புத்திக்கப்பால் பட்டஇந்த இறைவன் தொழிலை நினைந்து கவலை கொள்ளாதே. உபநிடதம் கூறுகிறதே. உலகங்கள் பிரிந்து போகாவண்ணம் சேர்த்துப்பிடிக்கும்' என்றும், வேதாப்பியாசத்தால் பிரம்ம நாட்டமுடையவர்கள் யஜ்ஞத்தாலும் தானத்தாலும் தவத்தாலும் உபவாஸத்தாலும் நாடுகிறார்கள்'' என்பதால் கவலைகொள்வதை நீ நிறுத்தி, நீளநினைந்து உபவாஸத்தாலும் மற்றும் வகைகளாலும் அவனை அடையும் வழி நின்று வாழ்ந்து உய்யக்கடவாய் அதே. உப. சிலர் ஸந்நியாஸிகளாய்க் கிழம்புகிறார்கள் என்றும் கூறுகிறது:

[உப. 4-4-22 ஐ. 227. பபட்டில் காண்க]

340. மதிக்கு மதியீ மதிசூடு வானை
மதிக்கு முதற்கு மரணம்—உதிக்குமோ

மார்க்கண்ட னுக்காய் மறலிபட்ட பாட்டினைப்
பார்க்கிலுனக் கென்ன பயம்.

மதி = அறிவு; அறிவுப் பொருளானதே ஆன்மா; அறிவே வடிவான அகம் மதி = வணங்கல்; மதிசூடுவான் = பிறைசூடி;

அறிவே வடிவான அகம்தோன்ற, ஆன்மா தன் இயல்பைக் காண அதற்கு வணக்கம் கொடுச்கும் நீ, பொன்னம்பலமாக விளங்கும் அவ்வகத்தினுள்ளே நடனம் புரியும் பொன்னம்பலவாணனை சித்தாகாசத்தினுள் கண்டு தரிசித்த உனக்கு மரணபயம் ஏன்? சிவபூசை செய்து கொண்டிருந்த மார்க்கண்டேயனை யணுகின நமன் சிவமெருமான் காலால் உதைபட்டு இறந்தான். மார்க்கண்டேயன் மரணத்தைக் கடந்தவன். நீயும் பிறவிக் கடலை விட்டு நீங்குவாய்;

மார்க்கண்டர்க்காக மறலிபட்ட பாட்டை யுன்னிப் பார்க்கின்
அனபர்க் கென்னபயம் காண் பராபரமே

(தாயுமானவர்)

எவனுடையமனது உமுடைய திருவடித்தாமரையின் சேவையை நாடுகிறதோ அவனுக்கு இங்கு அடையமுடியாதது என்ன? பவானீ பதியே! மார்பில் உதைக்கு அஞ்சி யமன் ஓடிவிடுகிறான்;

(மொழிபெயர்ப்பு சிவானந்தலஹரி, சு. 65)

341. பயமுண்டோ பஞ்சப் பொறிவழிபோ காற்க்கு
நயமுண்டோ நாட்டமுண்டோ நாடில்—
அயலுண்டோ
என்ன குறைதானுண் டெங்கெழிலென்
ஞாயிறுதான்
சொன்னே னதுவே சுகம்.

[முன்பாட்டு விளக்கம் தொடர] ஐம்புலன்களும் அவைதரும் ஆணவப்பேயும் நம்மைமாயையுலகில் ஏவி அலைக்காமல் இறைவன் பால் ஐம்புலன்களையுஞ் செலுத்தி, ''தலையே நீ வணங்காய்,'' ''கண்காள் காண்மின்களோ,'' கைகாள் கூப்பித்தொழீர்'' என்னும் திருநாவுக்கரசர் (4-9) ஒன்பதாம் பதிகத்தில் தரும் வரிகளால் உண்டாகும் உண்மைகள் விளங்கவே எம் முழுமுதல்வனையே கட்டித் தொழுது வணங்குவோமாகில் எங்களுக்கு உலகில் என்ன பயமுண்டு (335) பாசபந்தக்கயிறு எரிந்தவர்க்கு உலகில் என்ன உண்டு? என்ன நயங்காணுவார்கள் என்ன நாட்டமுண்டு? உலகினில் ஒன்றுமில்லை

''நாட்டமூன்றுடைய செந்நிறமணியே'' என்று தாயுமானவர் கூறுவது போல், ''அன்பறிவாற்றல்கள் எனப்படும் இச்சை ஞானம் கிரியை ஆகிய மூன்று நாட்டங்களும் மூன்று திருக்கண்களாகக் கொண்டு ஞாயிறுபோன்று திகழும் குறைவிலா முழுமுதல்வனே! உம்மை நாடின் என்ன குறையுண்டு நமக்கு. என்றுமழியாப் பேரின்பமே எந்நாளு முண்டு. அதுவே சுகம்.

342. சுகதுக்கம் ஒன்றுமுனக் கில்லைநீ தூயோன்
அகநெகவே யாண்டவனை யந்தி—மிகுசந்தி
ஏத்தித் துதித்துநீ எல்லார்க்கும் நன்மைசெய்
போற்றிப் புகழ்ந்து புறம்.

பாசபந்தமற்று திருவடி சேவை புரிந்து அறிவில் முதிர்ந்தவனே, உலக உயிரினத்துள்ளும் வினையின் நிகழ்வால் விளையும் வினைப் பயனை யனுசரித்து நிற்பதால் உன்னை நல்வினை தீவினை இன்பம் துன்பம் தீண்டா; பாசபந்தக் கயிறெரிந்த தூயோன்நீ. நீ அடைந்த பதவி குறையாமல் எந்நாளும் மூன்று நேரமும் அவன் புகழைப் பாடி ஏத்தித்தொழு. எஞ்சியிருக்கும் ஆகாமியம் சஞ்சிதம் நான் எனுமானவப்பேய், உனை அறவே விட்டகல எங்குந்திரிந்து உலகினி ற்குத் தொண்டுசெய் பாசபந்தக் கயிறு எரிந்த ஜீவன் முத்தனமாயை யுலகு தீண்டுமியல்பற்றது. எஞ்சிய வினை தானேயகலும்;

343. புறத்தி லலையாதே பேசனவற்றை யெண்ணி
அறத்தை மறவாதே யாண்டான்—திறத்தையே
சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனை தீதனைய்
அந்தி பகலறியா தாழ்.

பிரம்மா விஷ்ணு நான் எனுமகந்தை குடிகொண்டவர்களாய், இறைவனையுணந்தவர்களாயிருந்தும், புறத்தேயலைந்த, அவர் முன் சிவலிங்கவடிவான ஜோதிப்பிழம்பு தோன்ற அவற்றின் அடியையும் முடியையுங் காணாது திரும்பினர். [இவற்றையே நானெனும் ஆண வப்பேய் பிடித்துப் புறத்தே அலையும் அன்பர்க்கு எடுத்துக்காட்டாக வர்ணிப்பர்] உலகநன்மை எங்குஞ்சென்று செய்யும்போது, அறத்தை மறவாதே. ஆண்டவன் நாடகத்தின் புத்திக்கப்பாற்பட்ட விசித் திரங்களில் உனமறந்தலையாதே; பூசைசெய்ய மறவாதே; இறைவன் கருணையாளன், தன்னுடைய பக்தனுக்கு வழிமுதல்; அவன் வழி நின்று அருள்தரச் சிவதொண்டுசெய். அவன் திறத்தை, நாடகத் தின் திறனைக்கண்டு இன்புற்றுச் சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனை தீதனைய் நிடசித்தம் என்னும் கொம்பரில் பக்திஎழும் கொடியை

வளர். எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ, அத்தனையிலும் அருட்கண்ணுக விளங்குபவனே இறைவன். அந்த இறைவனின் பக்தி பெரிது. அதைவளர். பாலர்போல அன்னையைத் தழுவு. பாசபந்தக் கயிறு எரிந்த அன்பர் உள்ளத்தே பக்தி எனும் சங்கிலியைத் தருகிறார் சிவ. லஹரி. 96 இல். திரிபுரஸம்ஹாரம் செய்தவரே! தைரியம் எனும் அங்குசத்தால் அடக்கப்பட்ட என்னுடைய மனதாகிற மதம்பிடித்த யானையை பக்தியெனும் சங்கிலியினால் வேகமாக இழுத்து உமது திருவடியாகிற கட்டுத்தறியில் அறிவாகிற யந்திரங்களினால் கட்டியருளும். [சிவலஹரி. சு. 9] இன்பதுன்பம் இரண்டும் அறிவே வடிவான அகத்தில் சமமுகப் பேரானந்தமாக நுகர்தல் வேண்டும்; நான்எனும் ஆணவம் கெடும்; பக்திவளரும்.

62 இறைஞ்சவா என்மனமே

344. கும்பிடுவார் நன்மனத்தைக் கோயிலாய்க்
கொண்டருளும்
எம்பெருமான் திருவடியை இறைஞ்சவா
என்மனமே.

ஐம்புலன்களையும் இறைவன்பால் ஓடுக்கு; 'தலையே நீ வணங்காய்' கண்காள் காண்மின்களோ,' 'செவிகாள் கேண்மின்களோ,' 'மூக்கே நீ முகராய்' 'வாயே வாழ்த்து' கண்டாய்' நெஞ்சே நீ நினையாய்' [1, 2, . . . 10[முதலிய பத்துப் பாட்டுக்கள் கொண்டும் [4-9- 1, 2, . . . 10] அப்பர்சுவாமிகள் தம் நன்மனத்தைக் கோயிலாகப் பாடியது போல், நாமும் எம்மனத்தை நினக்கு ஒப்புவிப்பதாகிய பலியாக நல்கினேம். இருவினைகள் என்று சொல்லப்படும் துன்பத்தை விளைக்கின்ற கொடிய ஆவிகள் விட்டகல; அருள்நிலை என்று சொல்லப்படும் நான்காம் நிலையாகிய துரியமேலாம் வெளியில் விளங்குகின்ற அமைதி வடிவான தெய்வமே நின்திருவடிக்கு மீளா ஆளாகித் தொண்டொழுதும் வண்ணம் உம்மைக்கும்பிடும் அன்பர்க்குப் பேரருள் புரிவீராக.

துள்ளுமறி யாமனது பலிகொடுத் தேன்கர்ம
துட்டதே வதைகளில்லை
துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே
தொழும்பன் அன் பபிடேகநீர்
உள்ளுறையி லென்னுவி னைவேத்தியம் ப்ராணன்
ஒங்குமதி தூபதீபம் . . . "

(என்று தாயுமானவர் கூறுகிறார்)

'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவர்' (5 – 2 –1)
நினைந்தேன், நினைவெய்தலும் வஞ்ச ஆறுகள் வற்றின (5 – 44 – 4)
(1)

345. எல்லாமா யல்லவுமா யிருக்குந் திருவடியைச்
சொல்லாமற் சொல்லித் துதிக்கவா என்மனமே.

அருள்நிலையென்று சொல்லப்படும் நான்காம் நிலையாகிய துரிய மேலாம் வெளியிலே விளங்குகின்ற அமைதி வடிவான தெய்வமே [முன்பாட்டு விளக்கம்] மௌனகுருவாக எழுந்தருளி அருள்தரும் திருவடிப்பேறே! யாவும் அழியா இன்பமான பேரின்ப உணர்வினை அருளுவதற்கு வாயிலாக நிற்பது மோன மென்றறிந்து அம்மோனநிலையிலேயே என்றும் நின்று பேச்சடங்கிய மோனமே மிகப் பேரின்பப் பேரறிவு, திருவருளும் அதுவே. திருவருளினுள் அடக்கமாகவுள்ள அடியேனுமதுவே, வான் முதலாகச் சொல்லப்படும் ஐம்பூதங்களின் இயக்கங்களுமதுவே, மனம்தான்றி இயங்குவதுமதுவே, இத்தகைய மெய்ம்மையினைத் திருவருளாலுணர்ந்தறிந்து சொல்லாமற் சொல்லி மோன நிலைநின்று துதிக்க எம்பெருமான் கோயிலாக விளங்கும் மனமே அருள்தருக. (2)

346. எங்கேநீ அங்கேநான் என்ற திருமொழியை
இங்கேயான் கண்டேத்த இயைந்துவா என்மனமே.

அடியேன் மனதில் உயிர்க்குயிராக விளங்கும் ஒருவனே! எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ, அத்தனையிலும் உயிர்க்குயிராம் நாதனைகவினங்குபவனே! உள்ளும் புறம்பு மொன்றுக அகல் நிறைவாக என்னுள்ளத்தே உற்றுறையும் பேரறிவே! அகல்நிறைவாக என்னுள் நாம் காணும் ஒருவனே, உயிர்க்குயிராம் நாதனுக எவ் வுயிரிலும் விளங்குபவன்.
(முன்பாட்டு விளக்கம்) மோனகுருவாக எழுந்தருளி அருள்தரும் திருவடிப்பேறே! யாவும் அழியா இன்பம் தரும் [என்று தொடர்ந்து காண்க] சொல்லித்துதிக்க வாமனமே. (3)

347. ஒன்று யிரண்டா யொருமூன்றாய் நின்றவனை
நன்றாய்த் தொழுதிறைஞ்ச நயந்துவா என்மனமே.

'சிவ சிவ' என்னும் மாமறை தரும் பொருள் (138) தோன்றுமிடம் நின்திருவடிப்பேருகிய மோனநிலையே. அம்மையு மப்பருமாகத் தோன்றும் இச்சொருபநிலையே. அம்மையு மப்பருமாகத் தோன்றும் இச்சொருபநிலை ஈற்றில் ஐந்தெழுத்துச் சோதியாகிய பரமசிவனுக விளங்கும்; ஓசைவடிவாக விளங்கும் அம்மை; சூரியனுடைய ஒளி

எப்பொருளையுந் தன்னுடைய ஒளிகொண்டு பிரகாசிக்கப் பண்ணுவதுபோல சூரியபகவானைக விளங்கும் இறைவன் அப்பால் நின்று எவ்வுயிரையுமிபங்க வைக்கும் உயிர்க்குயிராம் நாதன்; கேவலடிவான இவ்வுலகினை கண்டுதரிசிக்க அருள்தரும் ஞானக்கண், நெற்றிக்கண்; மன்மதனை எரித்ததாம். ஊனக்கண்ணுறப்கவே [ஐம்புலனும் இறைவன்பாற் செல்ல (347)[ஞானக்கண் தோன்றும். முக்கண் எந்தை, ஒரு மூன்றுப் விளங்குபவன். மோனதருவாக எழுந்தருளும் எம் பெருமான் திருவடியே முக்கட்பெருமானையும், 'சிவசிவ' எனுமம் மையு மப்பருமாயும் பரமசிவனுமாயும் விளங்கும் பதவிகளை முறையே நாம் அடைந்து வணங்கித் துதிக்க என்மனமே அருள்வாயாக; [ஒன்றுய் இரண்டாய் 154 உரை காண்க]

எண்ணுத தெண்ணிய வெஞ்சே துயரெழி என்னிரண்டு
கண்ணே உறங்குக என்னுளை முக்கட் கருணைப்பிரான்
தண்ணார் கருணை மௌனத்தி னல்முத்தி சாதிக்கலாம்
நண்ணுத தொன்றில்லை யெல்லா நலமு நமக்குளவே
[தாயுமானர் பாயப்புலி 13] (4)

348. பற்றற்றார் பற்றும் பரம குருவருளை
மற்றுப்பற் றின்றி வணங்கவா என்மனமே.

(347) இல் விளக்கம் தரும் பத்துப்பாட்டுக்களுங் கொண்டு சாந்தமும் மோனநிலையுமடைந்து (348); 349) உரைகள் தரும்வண்ணம் போற்றித்தொழ வாமனமே.

(350)இல் "எண்ணுத தெண்ணிய" என்றதையும் காண்க. (5)

349. மனவாசகங் கடந்த மாருக் கருணையினைத்
தினமும் பணிந்தேத்தச் சீக்கிரம்வா என்மனமே.

விஞ்ஞான உலகந்தரும் நுண்வெளியில் தோன்றும் ஐம்புலன் உணர்வுதரும் பொருட்களை நாம் மனத்தாலும் வாக்காலும் உலகினர்க்கறிவிக்கலாம். அறிவுப் பெருவெளியில் மோனநிலைபடைந்த அத்தின்கண் தோன்றும் கருணை மழை பொழியுங் கருணையாளன் அறிவினுலுணர்தலேயன்றிமனவாசகத்தால் விபரிக்க வெண்ணுதவன் அக்கருணையாளனை என்றும் நிலைநிற்கும் மோனநிலைபடைந்து, வேறு நினைவு மனத்தில் தோன்றிப் புறத்தேபலையாது, அவனையே எங்கும் வியாபித்து காலவெல்லையற்று விளங்குபவனை, வணங்கவா என்மனமே. (எல்லாம் அவனேயாம் 342 காண்க) (6)

350. காதலிக்கு மெய்யடியார் கருத்திற்கருத் தாயிருக்கும்
நாதனைநான் கண்டுதொழ நடந்துவா என்மனமே.

(முன்பாட்டு விளக்கம் தொடர) மோனநிலையடைந்து 'சிவசிவ எனும் மாமறைதரும் அம்மையப்பரை, கருத்திற் கருத்தாயிருக்கும் பரமசிவனை ஐந்தெழுத்துச் ஜோதியில் நாம்கண்டு வணங்க வா என்மனமே.

காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதநான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னுமம் நமச்சிவாயவே. (3-49-1) (7)

351. அண்டபிண் டமெல்லா மடக்கி யொருவடிவாய்
நின்றவனைக் காண நீவராராய் என்மனமே.

(முன்பாட்டுவிளக்கம்) மோனநிலையடைய அகம் சிவலிங்கமாக விளங்க நிட்டைகூட பொன்னம்பலத்தின்கண் கூத்தியற்றும் தில்லைக் கூத்தனை அண்டபிண்டமெல்லா மடக்கி யொருவடிவாய் அறிவுப் பொருளாய் அறிவுப் பெருவெளியில் நாம்கண்டு தரிசிக்க வா மனமே

உன்னுமனங் கர்ப்பூர வுண்டைபோ லேகரைய
மின்னும் ஆனந்த விளக்கே பராபரமே (259)
அண்டபிண்டங் காணேன் அகமும் புறமும் ஒன்றுக்
கண்ட என்னை நீகலந்த காலம் பராபரமே
தாயுமானவர் பராபரக்கண்ணி (279) (8)

352. நீயேநா னென்று நேர்நேராய்ச் சொன்னவனைப்
பேயேன் வணங்கவென்பின் வாராயோ என்மனமே

(முன்பாட்டுவிளக்கம்) அறிவுப் பெருவெளியில் எங்கும் வியாபித்து விளங்கும் இறைவன் அகல்நிறைவாக எம் இருதயத்தே உள்ளும் புறம்பு மொன்றுக (354இல் அண்டபிண்ட என்னும் பாட்டு காண்) 'சிவசிவ' என்னும் மாமறை தரும் அம்மையப்பராய்க் கண்டு தரிசித்து, மோனமாகிய பேசா நிலையில் தேன்போன்று மிக்கசுவையுடையதாய் இனித்து உள்ளம் உருகும் வண்ணம் பேரின்பக் கடலானது எவ்வுயிரையும் தன்னுயிராய் காணுமன்நிலையில் நாம் வணங்க வென்பின் வாமனமே.

நீயேநான் என்று நிலைப்பும் மறப்புமறத்
தாயே அனைய அருள்தந்தாய் பராபரமே.
(தாயுமானவர் பராபரக்கண்ணி 377) (9)

353. முழுதுமுண்மை யென்ற முனிவன் திருவடியைத்
தொழுது வணங்கச் சுறுக்காய்வா என்மனமே.

[பாட்டு (60; 61) காண்) மோன நின் அருளால் உலகனைத்தும் அறிவுப்பெருவெளியில் ஓங்காரவடிவான அகிலாண்டமும் ஓசைவடிவான அம்மையும் அப்பால் நின்று இயங்கும் தன்னொளிகொண்டு விளங்குபவனுமான இறைவனுமொன்றுகவே பரமசிவனுக ஐந்தெழுத்துச் சோதியில் நாம்கண்டு வணங்கச் சுறுக்காய் வாமனமே. ஒப். பொருள்கள் எல்லாம் கட்புலனுக நுண்மை நிலையின் அருவமாகவும், கட்புலனுய் உறுப்பு விளங்காப் பிழம்பு நிலையில் அருவுருவமாகவும், உறுப்பு விளங்கு நிலையில் உருவமாகவும் காணப்படும் சிவபெருமான் இம் முத்திற நிலைகளையுங் கடந்த முழு முதல்வன்; தானுக நிற்கும் பெரும்பொருள்.'' எனும் பொருளுடன்

''அருவுருவம் எல்லாம் அகன்றதுவா யான
பொருளெமக்கு வந்து புலப்படுவ தெந்நாளோ.

[தாயுமானவர் எந்நாட்கண்ணி பொருளியல்பு தருகிறர் காண்க. (10)

354. பத்தும் படிப்போர்கள் கேட்போர்கள் பாரின்மிசை உத்தமராய் வாழ்வா ருறுதியிதே என்மனமே.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

எனுந் திருவள்ளுவர் தரும் உண்மை விளங்கப் படித்து பொருளை ஆராய்ந்துணர்விலுணர்ந்தறிந்து அப்பியசித்தலால் முழுது மூன்மையெனுமிறைவன் பாதம் நல்குவர். (11)

63 நல்லைக் குருமணியே போற்றி

அறுசீரடியாசிரிய விருத்தம்

355. அன்பு நெறியு மருணெறியு மறியாதேனை நயந்து வந்தே
இன்ப நெறியிற் புகுத்திவிட்ட எந்தாய் நல்லைப் பதிக்கரசே
துன்ப மறியேன் சுகமறியேன் தொல்லை வினையும் யானறியேன்
முன்பு மறியேன் பின்பறியேன் முழுதுமுன்மை யெனுமுனியே.

குழந்தை முருகன் தாயுடன் இணங்கியே செயல்புரிவான். அவன் ஊர்தி அழகுடன் ஆடும் மயில். ''முருகா முருகா'' என்ற அழைத்த வள்ளியின் இருதயத்தே முருகன் நின்று முருகனே வள்ளி

யாகச் செயல் புரிந்தான் என்று கந்தப்புராண உரையில் பண்டித மணி கணபதிப்பிள்ளை தருகிறார். வள்ளியின் அன்பொழுகும் மோன நிலையைக் குறிக்கின்றது. ஞானசம்பந்தர் மூன்று வயதிலேயே மோனநிலையெய்தி 'சிவசிவ' எனும் மாமறை தரும் அம்மையப்பர் ரூபத்தைக் கண்டு தரிசித்துப் பாடினராம்.

அதுபோல் சுவாமிகளும்: சடத்தை மெய்யென நம்பி ஐம்புலன்கள் தரும் உலகவாழ்க்கையிலீடுபட்டிருந்த எளியனேனை தன்னுட் கண்டு திருவருளினுல் நந்து என்னுள் எழுந்தருளி அன்பொழுக அழியா இன்பம் தரும் பொன்னம்பலவாணனே இளையமகன் ஆற்றல் வடிவான நல்லைபதிக்கரசாக எம் நிட்டையில் அருளினன்; அழியாப் பேரின்ப மடைந்தேன். இருவினைகளும் விட்டகன்றன; சுகந்துக்கம் இரண்டும் விட்டகன்றது. எங்கும் வியாபித்திருக்கும் கால வெல்லையற்ற முழுமுதலாம் இவபெருமான! முழுதுமுண்மைபென விளங்குபவனே: ஞானப்பொருளாய் நின்றருள் புரிபவனே. (1)

356. முனியே! முனிவர் முழுமுதலே! மூர்க்கனேனை
ஆண்டு கொண்ட
தனியே! தன்னெப்பா ரில்லாத் தலைவா! சகமீ
ரேழுக்கும்
இனியாய்! என்னை நீங்கா இறைவா! நல்லைக்
குருமணியே!
புனிதா போற்றி! புண்ணியர்கள் நண்ணும்
பொருளே போற்றி!

ஞானப்பொருள் வடிவமானவனே! சும்மா இருக்கும் சொரூபமே முனிவர் முழுமுதலாக எழுந்தருளி எளியனேனை ஆண்டு கொண்ட தன்னெப்பில்லாத் தலைவனே! அண்டபிண்டமனைத்து மொன்றுய்விளங்கும் சித்துப்பொருளே! மோனமே என்றும் அன்பும் பேரானந்தமும் பெருகச்செய்ய எல்லாமே அவனுடைய சித்துமயமாக விளங்க இன்பம் மேலும் மேலும் அமிர்தம் போல வாரிக்கொட்ட அந்நிலையை விட்டு நீங்கா இன்பநெறியில் தன்னை என்னுள் நின்று அறியச்செய்யும் பேரின்பப் பெருங்கடலே! நல்லைக் குருமணியே! திருவருளால் உன்னை வந்தடையும் புண்ணியர்களுள் ஒருவனே யான்; உன்னை வணங்குகிறேன்.

சித்துளுஞ் சடமும் சிவத்தைவிட இல்லைஎன்ற
நித்தன் பரமகுரு நேசத்தாற் — சுத்தநிலை
பெற்றேமே நெஞ்சே பெரும்பிறவி சாராமல்
கற்றேமே மோனக்கரு.

[தாயுமனவர் உடல் பொய்யுறவு 83.] (2)

எண்சீரடியாசிரிய விருத்தம்

357. போற்றியொரு பொல்லாப்பு மில்லை யென்ற
பூங்கழல்க ளிரண்டைபோற் றி புவியுள் ளோர்கள்
ஏற்றுகின்ற திருவடிக ளென்றும் போற்றி
எளியேனை யாண்டுகொண்ட கருணை போற்றி
சாற்றரிய மலர்ச்சோலை தயங்கு கின்ற
தண்புனல்சேர் நல்லூரிற் குருவாய் வந்து
வீற்றிருந்தென் வினைதீர்த்த விமலா வுன்னை
வேறுக எண்ணுதற்கு விதியு முண்டோ.

வேறுக எண்ணுதற்கு விதியுமுண்டோ [சாற்றரிய என்பதை முதற் கொள்க.] சொல்லமுடியாத அழகுடைய சோலை சூழ் நல்லூரில் குருவாய் எழுந்தருளியவனே! என் இருதயத்தே மோன நிலை எய்த அருள் புரிந்தவனே; என்று மழியாப் பேரின்பம் பெருக உலகினில் உள்ளோர் போற்றித் தொழும் மோன குருவே, வணக்கம். எளியனேனை யாண்டு (359) எனக்குப் பாசபந்தக்கயிறு அறும் வண்ணம் என்னுள் நின்று தாமே இயங்கி சும்மா இருக்கும் நிலை தோன்ற அருள் தந்து மோனநிலை எய்திய என் இருதயத்தே உலகமும் தானும் ஒன்றுகவே நிற்கும் 'சிவ சிவ' எனும் மாமறை தரும் நிலையினை, தாமாகவே நின்றுணர்வு தந்தவனே! உன்னை வேறுக நல்லைப் பதிக்கரசை வேறுக எண்ணுதற்கு வழியுமுண்டோ? (3)

358. உண்டோதா னுனைப்போல ஒருவ ரிந்த
உலகத்தில் உறுதிதந்தோ ருணர்ந்து பார்க்கில்
எண்டோள ணவாய்நீ என்னை யுன்னை
எவர்பிரித்துச் சொல்லவல்லார் எந்தாய்! எந்தாய்!
வண்டோதை குறையாத வளஞ்சேர் நல்லைக்
குருமணியே! மவுனத்தின் வைப்பே! யுன்னைக்
கண்டோர்க்குங் குறையுண்டோகலந்து கொண்டேன்
கள்ளுண்ட வண்டுபோ லாயி னேனே.

தேனீ பாடுவது போன்று உன்னுடைய ஓசை எப்பொருளிலும் வியாபித்தியங்கும் முழுதுமுண்மை எனும் இன்பமும் பெரும் பேரின் பமும் தரும் மோனநிறைவே வடிவான நல்லைக் குருமணியே! நல்லைப் பதிக்கரசே உருத்தாங்கி எழுந்தருளியருள் கொடுப்பவனே!

என் இதயத்தே உன்போல் நின்று அருள் தந்தவர் ஒருவரில்லை. மோனநிலை எய்திய என்மனத்தே இன்பம் பெருக அழியாப் பேரின் பம் நிட்டை அருள்தர 'சிவ சிவ' எனும் மாமறை தரும் அம்மை

யப்பர் எம்முள்ளத்தே எண்டோள் வீசிநின்றாடுந் தில்லைக் கூத்தனைய் காட்சிதந்தனன். நல்லைக் குருமணியாகவே அவன் என் உள்ளத்தே நின்று அவனும் நானும் ஒன்றுன அந்தச் ஜோதியில் நான் கலந்து கொண்டேன். தில்லைத்தரிசனங் கண்டார்க்குக் குறையேதுமுண்டோ; (4)

359. ஆயுநான் மறைதேடி யறியா வுன்னை
யாரறிவா ரரும்பொன்னே மணியே முத்தே
மாயவுட லுண்மையென மதித்து வாடி
மயங்காம லடியேனை நல்லூர் தன்னில்
தோயுமருட் குருவாகிச் சொரூபங் காட்டிச்
சுகம்பெறவே யிருத்தி வைத்தா யினியெனக்கு
வாயுமுண்டோ வணங்குதற்கு வழிவே றுண்டோ
வள்ளலே யுள்ளதைநீ வழுத்து வாயே.

ஆயல் = ஆராய்தறிதல்; சிந்தித்தல்.

நான்கு மறைகளையும் வாசித்துக் கற்றுணர்ந்தாலும் உன்னை வைதாரா. மறைகளின் உண்மை விளக்கும் அகம்நூல் முறை நின்று ஏத்தித் தொழுதே உன்னை அறியும் வழிநிற்கலாம். சடப்பொருள் உண்மையென்று ஐம்புலன்வழிச் செல்லாது என்னை நல்லூர் தன்னில் சிவகுருவாய் எழுந்தருளி (360; 361) மோன நிலை எய்த வைத்து சுகமுதயமாகவே நிட்டைகூடி தில்லையம்பலவாணனைத் தரிசிக்க அருள் தந்தவனே; உன்னை வாழ்த்துதற்கு வாயுண்டோ, போற்றுதற்கு வேறுவழியுண்டோ, சும்மா இருந்தே உன்னுள் காணும் இன்பத் தேனைப் பருகுவதல்லால் வேறு வழி ஏது. (5)

64 சொல்லு சிவமே

360 சொல்லு சிவமே சொல்லு சிவமே
சுகம்பெற மார்க்க மொன்று சொல்லுசிவமே
வெல்லும் பகையொழியச் சொல்லு சிவமே
வேறுபொரு ளில்லையென்று சொல்லு சிவமே
அல்லும் பகலுமறச் சொல்லு சிவமே
அன்பே சிவமென்று சொல்லு சிவமே
கல்லுங் கரையக்கவி சொல்லு சிவமே
காயமே கோயிலென்று சொல்லு சிவமே.

அறிவுப் பொருளே ஆன்மா. ஆன்மா செயலற்றது. மகிழ்தல், அழியா இன்பம் அனுபவித்தலே, அதனியல்பு. மனம் மாயாகாரியப் பொருள். 'சத்திவடிவாக இயங்கும் ஆத்மனின் இயல்பால் உடம்பும் உத்தமன் கோயிலாக விளங்கும்' என்று சிவஞான சித்தியார் தருவதைக் காண்க;

மாயைதான் மலத்தைப்பற்றி வருவதோர் வடிவமாகும்
ஆய ஆணவம கன்ற அறிவொடு தொழிலே ஆர்க்தம்
நாயகன் எல்லா ஞானத்தொழின்முதல் நண்ணலாலே
காயமோ மாயையன்று என்பது சத்திதன்னுல்.

[சிவஞானசித்தியார் 1-2-13]

இவ்வாறு மாயாகாரியப் பொருளான (159) மனத்தை கொஞ் சங் கொஞ்சமாக மடக்கி இறைவன்பால், அப்பர் சுவாமிகள் (347) தரும் பாட்டுக்களைக் கொண்டும் வேறும் வழிகளாலும், ஒடுங்கப் பண்ணவும்; காமாதி குணமெல்லாம் கட்டவிழ (192) சும்மா இருக்கும் சுகம் உதயமாகும்; மோனநிலை எய்த என்று மழியாப் பேரின்பமே ஊறும். அல்லல், பகை, காமம், கோபம் முதலிய தாமச குணங்கள் விட்டகலும்; இதே, திருமூலர் தரும் 'அஞ்சு மடக்கி அறிவு', 'மோனநிலை' எனும் அருமையான வழி. ஒளிக்கொளியைக் கொடுக்கின்ற ஒருவன் (194) அறிவொடு தொழிலே ஆர்க்கும் நாயகன் (சிவஞானசித்தியார் மேலே காண்) அவனருளாலே தோன்ற, இரவு பகலற்ற அவன்தானே தோன்றுவன். அன்பே வடிவானவன் (149). அன்பருக்கன்பான மெய்யன் (149). அவனே என் இதயத்தே நின்று கல்லுங்கரைய மேலே கூறியவாறு அன்பொழுக்கவி சொல்லுவான்; காயமோ மாயையன்று; உத்தமன் கோயில்; ஆத்மன் முடிவிலாற்றலுடையவனும் பேரருளுடையவனுமாகிய சத்திவடிவாக நின்று அருளுபவன். அவனைக் கூவி அழை என்சிவமே; அறிவே வடிவான அகமே! நாயகனைச் சத்தி தன்னுல் தன்னுள் கொண்ட அகமே 'குறியாக் குறியினில் என்பதை (195) காண்க. (1)

361. அல்லலற்று வாழலழி சொல்லு சிவமே
அகம்பீர மாஸ்மியென்று சொல்லு சிவமே
எல்லவர்ச்கு நல்லனென்று சொல்லு சிவமே
எல்லாஞ் சிவன் செயலாய்ச் சொல்லு சிவமே
நில்லாதிவ் வாழ்வென்று செசல்லு சிவமே
நீயுநானு மொன்றென்று சொல்லு சிவமே
பொல்லாப்பிங் கில்லையென்று சொல்லுசிவமே
புத்தடியோம் நாங்களென்று சொல்லு சிவமே.

நல்லொழுக்கம் (1) பொய்மையாங்களையைக் களைதல் (2) பொறை எனும் நீரைப் பாய்ச்சல் (3) மெய்மையாம் உளவைச் செய்தல் (4) அருளவாவிருப்பெனும் வித்தை இடுதல் (5) பக்திக் கொடியை திடசித்தம் எனும் மரக்கொப்பில் படர வளர்த்தல் முதலியனவற்றை முறையேயும் ஒருங்கேயும் அனுசரித்தலால் முக்கண்ணன் இதயத்தே தானுகவே (4-76-2) எழுந்தருளுபவன்; மோனகுருவே இதயத்தில் தோன்றுவன்;

மோனகுருவை அகத்தே தோன்ற வைத்து அல்லல், அருவினை பொய்யகங்காரம் முதலிய கெட்ட நாற்றம் நம்மை விட்டு நீங்க எல்லாமவனேயாம், 'தில்லைக் கூத்தன்' எல்லாமவன்செயலே எனும் பொன்னம்பலவாணனைக் கண்டு இன்புற்றிருப்போம் நாம். பாம்பே இறைவனின் ஆபரணம்; பகைவரையும் உறவோனாகக் காண்பவன்; ''துயக்கறுத்து கயக்க வைத்த அடியார் முன்னே'' என்று மாணிக்க வாசகர் கழுக்குன்றப் பதிகத்தில் தருகிறார். கீள்மக்களு முறவோராக வாழ வழி இம் மோனநிலை தரும் 'தில்லைத்தரிசனமே'

''கடத்தை மண்ணென லுடைந்தபோ தோவிந்தக் கருமச்
சடத்தைப் பொய்யெனல் இறந்தபோ தோசொலத் தருமம்''

என்று தாயுமானவர் [ஆசையெனும் 31 இல்] கூறுவதைக் காணுங்கள். அழிந்துபோகும் உடம்பு; இவ்வுடம்பை உயிர்விட்டு நீங்குமுன் பொன்னம்பலவாணனைத் தரிசித்தும் சிவன் முத்தனாக உத்தம நட்புக் கொண்டே (338) அவனும் நானும் வேறு காணாத வகைத் தாய் அனைத்துயிரிலும் அருட்கண்ணாக விளங்குபவனே எம்மாத்மன். என்னிதயத்தே இயங்குபவன், எனுமுண்மை இயல்பாகவே நாம் காணத் திருவருள் புரிபவனே! பொல்லாப்பிங்கில்லை; இன்பமேயல்லாமல் துன்பம் நமக்கில்லை (340); ''நான் என்னையே கொடுக்கிறேன், நீ உன்னையே கொடு; சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமானே, எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய் யானிதற்கிலனோர் கைம்மாறே'' மாணிக்கவாசகர்; தருவதுபோல் ''சச்சிதானந்தமே'' நாங்கள் என்று சொல்லு சிவமே. (2)

362. கொல்லாமை பெரிதென்று சொல்லு சிவமே
கூசாமல் எவர்முன்னுஞ் செல்லு சிவமே
நல்லோர் நடுவிருக்கச் சொல்லு சிவமே
நானே யனைத்துமென்று சொல்லு சிவமே
உல்லாச மாயெங்குஞ் செல்லு சிவமே
உண்மை முழுதுமென்று சொல்லு சிவமே
கல்லார்க்குங் கதியென்று சொல்லுசிவமே
கட்டி மனத்தையாளச் சொல்லு சிவமே.

[பாட்டு (364) விளக்கம் காண்க.]

மெய்ம்மையாம் உளவைச்செய்து திடசித்தம் எனும் கொம்பரில் பக்தி எனும் கொடி வளரச்செய்து மோனநிலை எய்திய அகத்துள், இன்பம் ஊற புத்தியெனுங் கன்னிகையை யடிமை கொண்ட சத்திவடிவான பார்வதிதேவி செயல்புரிய, ''கொல்லாமை'' எனும் விரதமே பெரிது; கொல்லாமை யெனும் விரதம் பூண்ட அகமுடையான் எல்லாஞ் செய்ய வல்லவன்; சர்வதத்துவாதிபதியே யவன்;

லஷ்மியைப் பணிப்பெண்ணாகக் கொண்டவன்; கூசாமல் எவர் முன்னும் செல்லலாம்; நல்லோர்க்கு நடுநாயமாக விளகுபவன்; உல்லாசமாயெங்கும் திரிபவன் (384) மனம் புத்திசித்தம் மூன்றும் தன்னுள டங்கவே சத்திவடிவான பார்வதிதேவி செயல் புரிபவள்; ஒருமொழி எனும் உண்மை தருபவளே பார்வதிதேவி; ஒரு மொழியே பலமொழிக்கு மிடங்கொடுங்குமென்னு முண்மை விளங்க அவன் கல்லார்க்கும் கற்றவர்க்கும், தமை வந்தடைந்த மெய்யன்பர்கட்கு, பார்வதி தேவியே அடிமைகொண்டு செயல்புரியு மெய்யன்பர்கட்கு, அவனே எல்லாம்; எவ்வுயிரிலும் அருட்கண்ணாக விளங்குபவனே, ஆத்மனாகவென்னுள் விளங்குபவன் பார்வதிதேவியாகச் செயல்புரிபவன்; முழுது முண்மையே அவன். இருவைந் தெழுத்துச் ஜோதியில் எல்லாவற்றையும் ஒடுக்கி தானும் அதனுளடங்கக் காணுபவன். (303; 165.) திருமூலர் 'சிவம்' எனும் பதத்தை உணர்த்துகிறார்.

குறியாக் குறியினில் கூடாத கூட்டத்து
அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய்
நெறியாம் பராநந்தி நீடருள் ஒன்றுஞ்
செறியாச் செறிவே சிவமென லாமே.

(திருமந்திரம் 2591) (3)

65 நல்லூர் வீதியில்

இராகம்—பிலஹரி தாளம்—ரூபகம்

பல்லவி

எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே.

அனுபல்லவி

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்தஇடம்
அதுவாத லாலே அதிசயம் மெத்த உண்டு (எந்நாளும்)

சரணங்கள்

363. வேதாந்த சித்தாந்தம் கற்றதனா லென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினா லென்ன
வீதியில் வந்தொரு க்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே.

(எந்நாளும்)

ஆசான் செல்லப்பன், ஞானகுரவன் அருள்புரிந்ததனாலே இயல்பாகவே திருவருள் கூடும், சாந்தம் மன அடக்கம் முதலியன உதயமாகும். நல்லூர் வீதி.

ஊர் = பொருந்திய; திருஞானசம்பந்தர் மூன்றாந்திருமுறையில் (3-125-1 இல) கல்லூர், பல்லூர், சொல்லூர் நல்லூர் பெருமணம் என்று பாடுதலையும், கல் + ஊர், பல் + ஊர், சொல் + ஊர் என்றும் பொருள் கொள்ளுதலையுங் காண்க.

வீதி=சுவாமி உலகினர்க்கு அருள்தர, தம்மை காண்பிக்கும் நோக்கத்துடன் வீதிவழியே உலாவி பின்னும் கோயிலுக்குள் செல்லுவார். எப்பொருளிலும் வியாபியாயிருக்கும் இறைவன், பூவாகி, காயாகி, கனியாகி, வித்தாகி, பின்வித்து முளைத்தலும் பூவும், காயும், கனியுங் கொடுத்தலையும் இறைவனே வீதிவழியே செல்லு முண்மையினைக் காட்டலாம். மாணிக்கவாசகர் திருவெம்பாவை முதல் பாட்டில் ''மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய் வீதி வாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மைமறந்து'' என்று பாடுகிறார்: ''மோனம் எய்திய உள்ளத்தில் அவனுடைய திருவடிப்பேறு அடைந்தவர்கள் இறைவன் ஒவ்வோர் பொருளிலும் ஓசை வடிவாக'' பூவாக, காயாக, கனியாக வித்தாக அந்த அழகு கொடுக்கும் சித்திரத்தை மெய்யன்பன், மோன மெய்திய அகத்தே இறைவனே தம் அருட் கண்ணுல் நின்று இயக்குதலைக் காண்கின்றான். தில்லைத் தரிசனங் கண்ட மெய்யன்பன். கண்டு என்றுமழியாப் பேரின்பத்தை யடைந்து விம்மி விம்மி அழுகிறான்'' என்று பொருள் தருவது.

வேதாந்த சித்தாந்தங்களை வெறுமனே படித்தும் தற்கித்தும், 'இது பொருள், இது பொருள், என்று வாதாடி ஒரு பயனுமில்லை:

''இந்த ஆத்ம ஞானத்தைப் பற்றிய நிச்சய புத்தி தர்க்கத்தால் அடைய ஒண்ணுதது. (கட உப).

பல நூல்களைப் படிப்பதால் பகவத் பிரேமை உண்டாகிவிடுமோ (ஸ்ரீ. இராமகிருஷ்ணர்)

ஐம்புலனு மிறைவன்பால் செலுத்தி ஒடுங்கிய மனம் இறைவனை வேண்டி அழ கருணைக்கடலான எம்பெருமான் கருணைமழை பொழிய சும்மா இருக்கும் அகம் தோன்றும். முருகா! முருகா! என்றழைத்த வள்ளியின் இருதயத்தே முருகனே வள்ளியாகச் செயல் புரிந்தான்: அவ்வாறே நல்லைப்பதிக்கரசே! நல்லைப்பதிக்கரசே! என்று மோன மெய்திய மெய்யன்பன் கூவியழைத்து அவ்வீதிவழி நின்றருள்இறைவனை ஒவ்வோர் வீதியிலும் வினையின் விளைவால் விளையும் வினையின் பயனை எப்பொருளிலும் எவ்வுயிரிலும் மியங்குதலைக்கண்டு அவனுடைய சொல்லுக்கும் புத்திக்கும் அப்பாற்பட்ட சித்திரத்தின் பெருமையைக் கண்டு அழியா இன்பக்கடலில் ஆழ்ந்தால், மோனகுருவே அகத்தே எழுந்தருளினால், அல்லல் ஏது, துன்பம் ஏது, இன்பம் ஏது? சித்திரத்தைக் கண்டு, நடனத்தின் மேல் பொது நடனங் கண்டு இன்புறுவதல்லால் வேறு என்னகதி.

364. சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணர்
பத்திசெய் உத்தமர் பரவும் நல்லூரில்
நித்தியம் வந்து பார்த்தால் முத்திநிச் சயமே.
(எந்நாளும்)

(முன் பாட்டு விளக்கம் தொடர) மோன மெய்திய அகம் தோன்ற திருவடிப்பேறு அடைந்த மெய்யன்பர் அகத்தே உண்மை முழுதுமுண்மை யெனும் வழி நின்று பொறுமை, சாந்தம் மன அடக்கம் என்றுந்திகழ விடமுண்டகண்டன் திருவருளால் சிற்றின்பத்தை ஒறுத்து பாசபந்த மறுத்த இருத.த்தே மோனமெய்திய அகத்தினராய், நல்லூரில், நலம் பொருந்திய அகத்தினராய் இறைவனின் தில்லைக் கூத்தையே எல்லா ஊரிலும், [பல்லூர் என்று திருஞான சம்பந்தர் தருவதைக் காண்க (3-125-1)] எல்லா வீதியிலுங் கண்டு, சித்திரத்தில் இவ்புற்றிருந்தால், திடசித்தம் எனும் கொம்பரில், இறைவனின் சித்திரத்தில், பக்தியெனும் கொடி படர்ந்தால், முக்தி எனும் பழம் நிச்சயமே.

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவினின்
றின்புறு மெந்தை யிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே.
திருஞானசம்பந்தர் (3-125-3)

பரவ வரமருள்

365. மரகத மயில்மேல் வருமுருகா
அரகர சிவசிவ அறுமுகவா
சரவண பவனே சண்முகனே
வரந்தர வாவா என்முன்னே
அரவணி சிவனு ரருள்பாலா
பரவ வரமருள் பரமதயாளா.

[முன் பாட்டு விளக்கம் காண்க[

முருகன் அம்மை பார்வதியிள் இளைய ஞமந்தன். தாயின் இயல்பு கொண்டே செயல் புரிபவன். மோனமெய்திய அகத்தினர் முருகனைப் போல், புத்தியாகிய கன்னிகையை அம்மை சிறைகொள்ள, அம்மையே செயல்புரிதலைக்கண்டு பேரானந்தக் கடலில் (367) ஆழ்ந்து கிடப்பர்; எப்பொருளிலும் எவ்வீதியிலும், பல்லூரிலும் [3-125-1] இறை

வனையே பரசிவ வணக்கமாக [சிவானந்தலஹரிசு 1] (பாட்டு 1 இல் காண்க.) சிவசக்தி ஐக்கிய வடிவினர்க்கு, அரகர சிவசிவ அறுமுகவா (1) மயில் அழகாக ஆடுவது போல் வாழ்க்கையில் அழகுபட விளங்குபவனே! சரவணப் பொய்கை தரும் குளிர்ச்சியும் அறுமுகவன் தரும் வனக்காட்சியும் விளங்க வைக்கும் சண்முகா! மோன குருவாக எழுந்தருளி, வரம்தா; என முன்னேவா; மகாவிஷ்ணு சிவனின் உடலில் பாகங் கொண்டவன்; அத்தகைய மெய்ப்புணர்ப்பு விளங்க நின்று அருள் தரும் சிவனரின் மைந்தனே! அவ்வழகுடன் எளியனேன் 'சிவ சிவ' எனும் மாமறை தரும் சிவசக்தி ரூபமுடைய எம்பெருமானே, எம் மோனமெய்திய அகத்தே தொழுதேத்த, தயவு பொங்கும் பரம! வரமருள்வாய்,

ஏறுமயில் ஏறிவினை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்த முகம் ஒன்றே
வள்ளியைம ணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீஅருளல் வேண்டும்
ஆதியரு ணைசலம் அமர்ந்தபெரு மாளே.

ஓவ்வோர் வரியிலும் காணும் ஞானப்பொருளே உணர்ந்தறிக ஒருங்கே காணும் உருவமே ஆறுமுகவன், சண்முகன் அழக.

66 நடந்து போவோம்

இராகம் — பைரவி தாளம் — ரூபகம்

பல்லவி

366. நல்லைப் பதிக்கு நேராய்
நடந்து போவோம் நாமெல்லாம் வாரீர் சீராய்

அநுபல்லவி

அல்லற்றுயர் தருமூழ் மெல்ல
அகன்றுபோம் நீவா (நல்லை)
கல்லொத்திடு மனங் கணத்தில்
கரைந்துபோம் விரைந்து வா (நல்லை)
நில்லன் பொடுநினைந்து நினைந்து
நீநான் அறநின்று மகிழ்ந்து (நல்லை)

சரணம்

செல்லப் பனைத்தினம் சேவிக்கும் நற்றவன்
செல்வச் சிவயோக நாதனுக் குற்றவன்
தில்லையம் பலம்சே விக்கும்பொற் பாதன்
தித்தித் தகுதகு கிடதோம்
தளங்கு தரிகிட கிடதோம்
தித்தித்தா திமிதிமி யென
நிர்த்தஞ் செய் மயி லேறிய
சத்திதான் தரு மைந்தன் வாழ் (நல்லை)

உரை: குழந்தை முருகன் தாய் பார்வதியின் இயல்பு கொண்டே செயல் புரியும் இயல்பினையுடையவன் சும்மா இருக்கும் அகம், மும் மௌனமுடைய அகம், பார்வதியின் வீடு. அந்தக் குழந்தை முருகனுடைய இருப்பிடமான நல்லைப் பதிக்கு சும்மா இருக்கும் அகம், பெற, நடந்து போவோம் வாரீர்.

அந்த உண்மைநெறி யில்லாத உயிர்வாழ்க்கையைத் தரும் இருவினையும் மெல்ல மெல்ல விட்டு நீங்கும். மூவாசையினால் உண்டான மட்டுப்படா மயக்கத்தினால் ஆக்கப்பட்ட கல்லைப் போன்ற மனம் அறவழிநின்று, முருகனை நினைந்து, அழும், வா, முருகன்மேல் ஏகபத்தி கொண்டு நில்; உன்னை மறந்து பாடு: சரணம்: சிவயோகன், முருகன் இருப்பிடமான, சும்மா இருக்கும் அகம் பெற்ற செல்வன். செல்லப்பனைக உருத்தாங்கிய முருகனைச் சேவிப்பவன் சும்மா இருக்கும் அகம் பொன்னம்பலம். அங்கே முருகனே கூத்து விளையாடுபவன்: தித்தித் தகுதக கிடதோம் என முருகன் பார்வதியின் மனத்துக் கிசைந்து ஆடுவான். அறநெறி நின்று வாழும் மெய்யன்பர், மயிலாடுவது போல் பார்வதி தந்த முருகன் அகங்கொண்டு வாழ்வார், பற்றற்ற நிலையில் சும்மா இருப்பார்.

67 வீரமாமயில் ஏறும் வேலவ

இராகம் — கரகரப்பிரியா தாளம் — ரூபகம்:

பல்லவி

367. வீர மாமயில் ஏறும் வேலவ — விளங்கு
கௌரி பாலகா — வா

அநுபல்லவி

கானக் குறத்தி மகிழும் பாதா — காக்கும்
கடவுள் துதிக்கும் நாதா. (வீர)

சரணம்

எனக்கும் உனக்கும் பேத மேனே
எடுத்துச் சொன்னால் போதும் போமோ
மனக்கும் சோலை நல்லூர் வாசா
வணங்கும் யோக சுவாமி நேசா. (வீர)

உரை: பக்திக்கொடி திடசித்தமெனும் மரக்கொம்பரில் படர்ந்து முத்தி எனும் பழந்தரும். திடசித்தம் வீரமா மயில் போலும் மெய்யன்பர் வாழ்வில் காணலாம். பார்வதியின் இளையமகன் வேலவன் வேலினை குத்திக்குத்தி மட்டுப்படா மயக்கந்தீர, மும்மலப் பிணிப்பை அகற்றியே, மயிலாடுவதுபோல் பார்வதியின் இயற்கை வடிவொடு, அறநெறி நின்று வாழ்பவர் மெய்யன்பர். சித்தின் பத்தை உண்ணுது நிற்றலே அறநெறி; துன்பத்தைப் பேரானந்தத் தெள்ளமுதாகக் கொள்ளும் கானல் வாழ்வே அறநெறி. கானல் வாழ்க்கையே சானல் குறத்தி, பார்வதியின் ஓசை; அவள் துதி செய்யும் இறைவன் பாத நடனம்.

சரணம் :சிவன்செயல் போதனைசிரியரே! நீர் தரும் சிகிச்சையை நன்குணர்ந்த உமது நேசன் யோசசுவாமி உம்முடைய சிகிச்சையை தாம் உணர்ந்தவாறே எடுத்துச் சொன்னால் போதனையில் தவறுண்டாமோ. இல்லை; இல்லை களவுபடா இருதயமும் நலஞ்சுழியா இன்பமுமே கிடைக்கும் (55). நல்ல வாசனையுடைய பூக்கள் மலரும் சோலை தங்கிய நல்லூரில் சும்மா இருக்கும் சுகம்பெற, மும்மௌன முடைய அகமே வீடாகவுடைய இளமுருகன் அன்புடன் வாழ அருள் வேண்டும்.

68 எனக்கின்பமே வா

இராகம் — தோடி தாளம் —திஸ்ரம்

பல்லவி

எனக்கின்பமே — வா

அநுபல்லவி

ஏரகம் பழனிப்பதி இலங்குங் கந்தசுவாமி நாதா
(எனக்கின்பமே)

சரணம்

368. இரவும் பகலும் ஏத்தித் தொழும்
ஏழை யடியார்க் கிரங்கு வாய் நீ
எழிலார் நல்லூர் வாழும் வாசனே
ஏத்தும் யோக சுவாமி நேசனே. (எனக்கின்பமே)

மோனகுருவே எழுந்தருள பார்வதிதேவியே அருள்தர ஆற்ற லுடைய அகத்தினராய் நல்லூர் வாழும் வாசனே! எளிய மெய் யன்பர் உள்ளத்தே நின்று தில்லைக் கூத்தனைத் தரிசிக்க வரமருள் பவனே! சிவயோகசுவாமி, மோனமே உருவான அகத்தே நின்று நித்தியா நித்தம் தொழுதேத்தும் தில்லைக் கூத்தனே!

69 நல்லூரான் திருவடி

369. நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி கிளியே
இரவு பகல் காணேனெடி

மூவாசையும் அழிந்துபோக, கர்மாதி குணமெல்லாங் கட்டவிள கருணையே உருவான கடவுள் எழுந்தருள சும்மா இருக்கும் அகம் தோன்றும் நிட்டை கூடி அனைத்துயிரும் தானும் உள்ளும் புறப்பு மொன்றுகவே இயற்கை அன்னையாக அவளுடைய இனிய மைந்தன் வடிவாகக் காட்சிதருவன் அதனைச் சிந்தித்துச் சிந்தனைதீதனை நிட்டை கூடிய இருதயத்தே இரவும் பகலும் இல்லாத தில்லைத் தரிசனத்தில் உலகினையும் என்னையும் மறந்து கிடப்பேனெடிகிளியே (1)

370. ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான் மறந்து போவேனேடி — கிளியே
நல்லூரான் தஞ்சமெடி

ஆன்மா அறிவு வடிவானது. மூவாசையுங் கொண்ட ஆறு தத்துவங்களாலுங் கட்டப்பட்டது மனம்; சூக்கும சரீரமும், அவற் றுடன் உண்டாக்கப்பட்ட எண்ணங்களும் (Virtual Desires) வளர்ந்து ஐம்புலன்களையும் அந்தக்கரணங்களையும் உண்டாக்கினன். அனுபவிக் கும் இன்ப துன்பங்களுக்காக ஸ்தூல சரீரமும் மாயை காரணமாக இறைவனால் உண்டாக்கப்பட்டன. மாயை எனுங்களையை நீக்கினால் அறிவு சொரூபமான ஆன்மா ஆதலினால், 'மீதான வெற்பு என்று சுவாமிகள் கூறுவதுபோல், எஞ்சும். (127)

தாயுமானவர் தருவதைக் காண்க:

வினையும் சிவானந்த பூமி — அந்த
வெட்டவெளி நண்ணித் துட்ட இருளாங்
கனையைக் கனைந்துபின் பார்த்தேன் — ஐயன்
கனையன்றி வேறொன்றுங் கண்டிலன் தோழி.

கீதையில் ஆன்மா பாவங்கள் விலக பிரம்மமாகவே தோன்றும் என்கிறார்.

''இவ்வாறு எப்போதும் தன்னை ஒருமுகப்படுத்திப் பாவந்தேய்ந்த யோகியானவன் எளிதில் பிரம்மத்துடன் ஒன்றியதால் உண்டாகும் எல்லையில்லாத ஆனந்தத்தை யனுபவிக்கிறான். (கீதை 6-28). (2)

371. தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி — கிளியே
கவலையெல்லாம் போகுமெடி.

ஐம்புலன்களும் ஓடுங்கி பாசபந்தக் கயிறு எரிந்து தில்லைத்தரி சனங்காணும் தேவர், மற்றும் சிவனடியார்கள், எஞ்சிய ''நான்'' எனும் ஆணவமலப்பிணிப்பால் கட்டுண்டு, புறத்தில் அலைவர் (346). அவ்வண்ணம் அலையாதே பாதுகாப்பவன் நல்லூரான் திருவடிகள். உலகெங்குஞ் சென்று பிச்சையெடுத்து உண்பர். அவ்வாறு மனதாகிய யானையை உமது திருவடியாகிற கட்டுத்தறியில் அறிவாகிற யந்திரங்களினால் கட்டியருளுவன் நல்லூரான்.

(சிவலஹரி. சு. 96 ஐ 346 இல் காண்க)

வாராய்நெஞ் சேபுன்றன துன்மார்க்கம் யாவையும் வைத்துக் கட்டிங்
காராய் அடிக்கடி சுற்றுகிற்றுயுன் அவலமதிக்
கோராயிரம் புத்தி சொன்னாலும் ஓர்கிலை ஓகெடுவாய்
பாரா யுனைக் கொல்லுவேன்வெல்லு வேன் அருட் பாங்குகொண்டே

(தாயுமானவர் பாய்ப்புலி 50) (3)

372. எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் — கிளியே
காவல் அறிந்திடடி.

செருப்புத் தைப்பவன்போல் கூலித் தொழிலைச் செய்தாலென்ன நித்தமும் கோயில் சென்று கும்பிட்டுப் பின்னர் புனிதமான வேலை செய்தாலென், காட்டிலோ குகைக்குள் இருந்தோ ஊசிமேனுனிமேல் கொண்ட தவஞ் செய்தாலென் யாதும் திருவருளின் திருக்குறிப்பால் நிகழ்வனவேயன்றி மற்றில்லை. இவ்வாறு எப்போதும் இடையறாது எண்ணித் திருவடி நினைவில் பொருந்தும் தூயோர்பால் பிறவிக்கு வித்தாகும் மதம்பிடித்த யானை போன்ற மனம் தொழில் செய்யுமோ? அடங்கிவிடும். (4)

373. பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி — கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி.

நாட்களாக ஒன்றும் புசிக்காது உடம்பு மெலிந்து மவ்வறுமைப் பிணிவந்தடைந்தாலென், கடுநோயினால் பீடிக்கப்பட்டிவ் வுடம்பு புண்பட்டு வருந்தினாலென் கடுங்காற்றும் மழையும் வந்து உலகினை யழித்தும், வெப்பத்தால் கடுநோய்கள் கொண்டுலகு வருந்தினாலென், புத்தியாகிய கன்னிகையை பார்வதியுடன் கூடத் தொண்டுசெய்ய அர்ப்பணஞ் செய்த எமக்கு ஓர் துன்பமுமில்லை, இன்பமுமில்லை, அச்சமுமில்லை. அம்மையின் மைந்தன் ஆறுமுகன் அருள் வெள்ளம் எங்களுக்கு என்றும் பொன்னுத்துணையெடி கிளியே. (5)

374. சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாட்டைந்தும்
பூமியிற் சொன்னானெடி — கிளியே
பொல்லாங்கு தீருமெடி.

''கற்க கசடறக் கற்பவை'' என்னுங் குறளை 357இல் காண்க. யோகசுவாமிகள் அருளிய நன்மொழிகளின் கருத்தை ஆராய்ந் துணர்வினால் உணர்ந்தறிந்து அதன் வழிநின்று உணர்விறந்த அம் மோன நிலையெய்தியே நல்லூரான் திருவடியின் அருட்பேறடை வார். திண்ணம். (6)

70 வருக முருக

இராகம் — கீர்வாணி தாளம் — திஸ்ரம்

பல்லவி

வருக முருக பரமகுருவே
வரதா குகனே

அநுபல்லவி

அரிமருகா தருணமிதே
தாரும் உமது சரணபாதம் (வருக)

சரணம்

375. பரவுவார்க் கருளுவாய் நீ
பரம சுகந் தரு பானு
சசியோக வதி தரு புதல்விதனை

மணந்த குமார சுவாமி
மனமுவந்து மலையிலேறிவர
சிவயோக சுவாமி நீடு வாழ்க வாழ்க்
வையம் வாழ்க (வருக)

அரி = ஒளி; சிவன். அரிகரன் = சங்கரநாராயணன் = விஷ்ணுவும் சிவனுங்கூடிய மூர்த்தி வளளி அரிகரனின் மகளாகவும் முருகனை மருமகனாகவும் கொள்வர் குளிர்ச்சி தரும் சந்திரனையும், கருணை வெள்ளம் பெருகும் கங்கையும் அருளும் சரணபாதம் தாரும் முருகா [345; 346 காண்க.] எங்கும் வியாபித்திருக்கும் அம்மையைப்பரை அகல் நிறைவாய் எம்முள்ளத்தே உள்ளும் புறம்பு மொன்றாகக் கண்டு களிக்கவும் நல்லூர் வீதியில் நித்தியா நித்தம் கும்பிட்டு (366) பரம சிவனையே என்று மழியாப் பேரின்பக்கடலில் ஆழ்ந்து தரிசிக்க வருக முருக; பரமகுருவே. பானு = அரசன்; சூரியன்: ஒளி சந்திரகலையும் கங்கையும் சிவனுக்கும் அம்மைக்கும் ஒருங்கே பொருந்தியதாதலால் சிவயோகவதி என்று அம்மையாரையும், மகளே மணந்த குமாரசுவாமியாகவும் கூறுகிறார். அழதடன், உள்வீதியில் அகத்தே கும்பிட்டு அனுதினமும் அறநெறி விளங்க வாழ மயிலேறி வந்து அருள்தா; யோக சுவாமி வாழ்க; வையம் வாழ்க.

71 நல்லூர் வாசனே

இராகம் — பியாகடை தாளம் — ஆதி

பல்லவி

நல்லூர் வாசனே நம வேலவா
நாராயணண் மருகா வரஸ்ரீ முருகா

அநுபல்லவி

வேதோப தேசநீவிபு வேதிய
வித்தியாதர விமலா கந்தா குமர (நல்லூர்)

சரணம்

376. சித்திர மயிலேறு சந்த்ரா சத்தி தருமன்
தந்த்ரா முலே நோகல காரெனு
அத்தமில்லா ஸ்வர ஞானமு நீதரு
யோக சுவாமி வந்தனு சுலோக முவந்தருள்
(நல்லூர்)

நாராயணன் விடமுண்ட கண்டன் சிற்றின்பத்தை ஒறுத்து இன்பமும் துன்பமும் சமனுகக்கண்டு அறிவே வடிவான அகத்தில் மோனகுரு எழுந்தருள இறைவன் சித்திரத்தைக் கண்டு பேரானந்தங் கொள்பவன். முருகனும் வள்ளியும் ஒன்றுபட்ட அகத்தினராய்த்தில்லைத் தரிசனமும் கண்டு பின் மனமெனும் யானையைக் கட்டி (374) முப்பதமுங்கடந்த நாராயணன் விளங்கும் முருகனே வள்ளியாகச் செயல் புரிந்தாள். நாராயணன் மருகா, ஸ்ரீ. முருகா என்றழைக்கிறார் சுவாமிகள் விபு = பண்டிதன்; கடவுள் விபுதர் = அறிஞர்

கந்தா, முருகா, நீ வேதத்தின் உண்மைகளை ஆகம வழி நின்று ஓழுக அருள் தரும் வேதோபதேச விபுதன் வழிநின்று பாவந் தேய்ந்து வள்ளிபோல் நாராயண வடிவங் காட்டும் விதியாதர விமலன்.

ஜீவன் முத்தனுகப் பணிந்தாடும் மயில் போன்று இறைவன் சித்திரித்த நாடகத்தில் திறம்பட நடிக்கும் பராசத்தியின் தர்மன் அறநெறி சற்றும் பிசகாதவன்; இந்திரன்போன்ற கருமேகம் கருணை மழை பொழியுங் காராம்பசு. அத்தகைய தந்திராசும் முலை கொடுக்க நீ கொடுக்கும் அத்தமில்லா ஞானப்பொருளுக்கு போக சுவாமி கொடுக்கும் வந்தனு சுலோகம் அருள் புரியும் நல்லூர் வாசன்.

72 வறுமைப் பிணிக்கு மருந்து

இராகம் — சங்ராபரணம் தாளம் — ரூபகம்

377. வறுமைப் பிணிக்கு மருந்தொன் றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே.

தொன்மை மலப்பிணிப்பாம் மூலநோயை ஆருயிர்களினின்றும் அவ்வாருயிர்களைக் கொன்றே விடுவித்தற் பொருட்டே பெருந்தண்ணளி வாய்ந்த சிவபெருமான், தொன்மையேயுள்ள வினை மாயையினின்றும் முறையே வினைத்தன்மை யினையும் உடலுறுப்பு உலகம் உண்பொருள்களையும் படைத்து, அவ்வுயிர்களுடன் பொருத்தியருளினன்; இதுவே படைப்பு. வறுமையுடையார் நோயுடையார் பசியுடையார் முதலியோர்கட்கு அவரவர்க்கு வேண்டுவன அவரவரே முயன்று தேடிப்பெற்றுக்கொள்ளக் கண்ணோட்டமுடைய ''தமக்கென முயலா நோன்முட் பிறர்க்கென முயலுநருண்மை'' காட்டும் பெற்றி வாய்ந்து துணைநிற்கும் சிவகுரு செய்கையோடு மொக்கும் மல நீக்கத்திற்கும் நல்நோக்கத்திற்கும் துணை நிற்கும் படி முதல்வனுற்

படைத்தளிக்கப்பட்ட மாயாகாரியமாகிய இவ்வுடலும் நிலையில்லாத பொய்யுறவாகும் அப்படியானால் நிலைத்த உறவாக நீங்காத் துணையாக சிவகுருவாக உருத்தாங்கி எழுந்தருளும் அத்தன்மைவாய்ந்த திருவருளே, அதை அருளும் நல்லூர் முருகனே, அனைவர்க்கும் நினைவரிய உண்மைத் துணையாகும். அந்த ''நல்லூர் முருகனே'' வறுமைப் பிணிக்கும் மாயைமலப் பிணிப்பும் அவற்றுடன்கூடிய வினைத்தன்மை பசி, நோய் முதலிய வறுமைப் பிணிகளுக்கும் நல்லமருந்து. முன் அதை அருந்திய அறிவுடையார் தண்ணளிவாய்ந்த நல்லூரான் திருவருளால் மலப்பிணிப்பினின்றும் நீக்கம் பெற்று அவனடி சேர்ந்து வாழ்ந்தார்கள்; பசி, நோய். தொன்மை வல்வினை எல்லாமே ஒருங்கே நீங்க என்றும் அழியா இன்பக்கடலில் ஆழ்ந்தார்கள்.

முருகனை வேண்டி விழிநீர் ஆறுகப் பெருக அழுதால் சிவகுரு எழுந்தருளி வழிநிற்பன். அவன்வழிநின்று பாசபந்தக்கயிறு, அறவே மோனநிலையை எய்துவன். அதுவே நிலைத்த உறவாகும். அவன் பாதத்தை யடையச் செய்யும் உறவு.

தாயுமானவர் இவற்றைத் தருகிறார் காண்க:

உடல்பொய் யுறவாயின் உண்மை யுறவாரச்
கடவாரார் தண்ணருளே கண்டாய் —திடமுடனே
உற்றுப்பார் மோனன் ஒருசொல்லே உண்மைநன்றாய்ப்
பற்றிப்பார் மற்றவெல்லாம் பாழ்.

[28: உடல்பொய்யுறவு .1.] (1)

378. வாசம் பொருந்திய மாமலர்ச் சோலையில்
வந்து குயில் கூவும்
மற்ற மாதரும் நாடகமாதரும்
வந்து மகிழ்ந்து வணங்கிடுவார்.

தேவர்கள் அசுரர்களுடன் சமாதானஞ் செய்து கொண்டு அமிர்தம் வேண்டி நின்று பாற்கடலைக் கடைந்தார்கள். மாயாகாரிய உலகே பால்கடல்; ஆறுறு தத்துவங்களுங் கூடிய உடலம் மந்திரமலையாகக் கொள்ளப்படும் மத்து. ஐம்புலன்களும் அந்தக்கரணங்களுங் கொண்ட கயிறு வாசுகி எனும் பாம்பு. பால்கடலாகிய உலகியல் வாழ்க்கையைக் கடைந்தபோது எழுந்தது சிற்றின்பம் எனும் மரணம் பிறப்பைக் கொடுக்கும் விடம். தேவர்கள் இவ்விடத்தைக் கண்டோடினர்கள். ஐம்புலன்களும் அந்தக்கரணங்களும் இறைவன் பால் செலுத்தி (147) பக்தி எனும் கொடி படர வைத்து தத்துவங்கள் ஒடுங்கிய மனம் மத்தாகவும் உலகியல் வாழ்க்கையின் உண்மை யுறவுகாட்டும் வேதத்தைக் கடலாகவுங் கொண்டே புத்திமான்கள்

அறிஞர் கடைய (பின்) எழுந்தது கற்பகமும், காமதேனுவும், சிந்தாமணியும், அமிர்தமும், லக்ஷ்மி தேவியும், தொடர்ந்தே தோன்ற அவற்றை விலத்தி உடன் சென்ற வெண்ணெய் போன்ற உமாநாதன், உண்மைப் பொருளான எம்பெருமான், சிவபெருமான் தோன்றுவான்.

பாசபந்தக் கயிறு அறுந்த அகத்தினராய் நல்லூரான் கிருபை ய வேண்டி விழிநீர் பெருக்கி நின்ற ூல் அகம் சிவலிங்க வடிவாக ஒன்றுபட்ட மோனநிலை தோன்றவே நிட்டை கூடும். அறிஞர் கடைந்தெடுத்தபோது தோன்றிய கற்பகம் முதலிய புஸ்பங்களும் மொட்டுப் போன்ற மலர்களுங் கொண்ட நல்லூர் (1—125 —1) வெளியில், சித்தாகாசத்தின்கண் இறைவன் ஒளி ஞானப்பொக்கிஷங்களான உண்மைகளை மனத்தின் கண் கொட்டுப். லக்ஷ்மி, சரஸ்வதிகளாகிய விஷ்ணுபிரமாவினுடைய சத்திகளும் வந்து காட்சி தருவார்கள். என்றும் அழியா இன்பக்கடலான பேரின்பக்கடலாகவே என்றும் விளங்குவார்கள். மாணிக்கவாசகர்: இறைவன் ஒளி தரும் ஞானப்பொக்கிஷங்களை உணர்த்துகிறார் காண்க; அப்பால் சிவபெருமானுமென்கிறார்

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி யொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்கு
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப் பெருந்துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே.

(திருப்பள்ளியெழுச்சி 3) (2)

379. வீதிக்கு வீதி வெளிச்சமும் அங்கே
வீற்றிருந் தர்டவர்கள்
சோதிப் பிரகாச வேலனைக் கொண்டாடிச
துதிப்பதைப் பார்த்திடுவோம்.

இறைவனையடையும் வழிகள் பல உள. ஒவ்வொர் வழியிலும் அம்மை பார்வதி தேவியே ஈற்றில் காட்சிதருபவள் அவள் ஒவ்வோர் வழிக்கு மேற்றவாறே ஆயிரமாயிரம் முகங் கொண்டவள் என்று கூறுவர். இவ்வாறு ஒவ்வோர் வீதி (366, 367) வழிகும்பிட்டு வழிநிற்பார்கள் ஒளிகொண்டு பிரகாசிக்கும் வீதிகள் சனகர், சனற்குமரர், சனந்தனர், சனதனர் நால்வர்க்கும் வழிநின்று வழிகாட்டினர் ஞானசம்மந்தர் முதலிய நால்வர், அறுபத்துமூவர், ஆழ்வாராதிகள்

என்னும் பலகூடியே கோடாகோடி இவர் என்று தாயுமானவர் கூறுகிறார். ஒவ்வோர் வீதியிலும் வெளிச்சமும், பலமெய்யன்பர் கூடியே வெளிச்சத்தில் இறைவனைத் தேடி விழிநீர்ப் பெருக ஆனந்தங் கொண்டாடுவதுங் காணலாம். வேலன் தன்னுடைய வேலினாலே ஒவ்வோர் வீதியிலும் அவரவர் தகுதிக்கும் வினைக்கும் ஏற்றவாறு சிகிச்சை புரிய வேலினால் குத்திப் பிணிகாட்டி மருத்துவனாக நின்று பிணி நீக்கி பதவிஉயர்த்தி வழிநின்று அருள் கொடுப்பான்.

சிவபெருமானையடைந்த சீவன்முத்தன் மோனமே உருவாக வீற்றிருந்து இவ்வாடல் பாடல்களையும் இறைவன் சித்திரத்தையும் கண்டு இன்பந்தனைக்க சும்மா இருப்பான்.

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாந்
திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த பறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப்பேராய்
கழுக்குன்றத்துச்சியாய கடவுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூப்புகலூர் மேவிய புண்ணீயனே. (6 – 99—7)

அப்பர் மறுமாற்றத் திருத்தாண்டகம். (3)

73 நல்லூர் முருகன்

இராகம் — தோடி தாளம் — ஆதி

பல்லவி

நல்லையில் வாசா ஞானப்பிரகாசா

அனுபல்லவி

நல்லதெய்வானை வள்ளியம்மை சமேதா
நரர்சுரர் மணி ஞானபண்டி தாபரா (நல்லை)

சரணம்

380. நான் உன்னை நம்பினேன் நல்குரவு பிணி
நலியாமல் மெலியாமல் அருள்தந்து ஆளுவாய்
தேனுந்து வேங்கையாய்த் தினைப்புனம் நின்றனை
ஸ்ரீ ராமன் மருகனே முருகனே கிருபாகரா (நல்லை)

நல்லையில் வீற்றிருக்கும் முருகா ஞானப் பொக்கிஷமாக (381) விளங்குபவனே!

முன்சத்தியாக நின்றருள் காட்டிய தெய்வானையையும், பின் வேட்டுவ மகளிரான வள்ளியம்மை, வேங்கை மரமாக உன்னை தன்னிதயத்தே திடசித்தமாகக் கொண்ட பச்தியுடன் உலவந்த டைந்து உனைமணந்த வள்ளியம்மையையு மொருங்கே சத்திகளாகக் கொண்ட முருகா, மானிடரும் தேவர்களும் பணிந்தேத்தித் தொழும் ஞானப்பொக்கிஷமே, பராபரமே.

தான் உன்னை நம்பி வந்தேன்: ஒஞ்சிக்காதும் வஞ்சிக்காதும் என்பிணிதீர மருந்து (380) தந்துபிணி நீங்கும் அருள்தந்து ஆரூ வாய்: இன்பத்தேன் கொட்டும் மோனநிலை (347; 348) எய்திய வள்ளியின் அகத்தினில் பாசபந்தக் கயிறு எரியச் செய்யும் பக்திக் கொடி சுற்றி ஏறும் திடசித்தம் எனும் வேங்கை மரமாக நின்ற ஸ்ரீ இராமன் மருகனே! முருகனே! மலைபோலும் கிருபை உடை யோனே. மோனநிலையும் வேங்கைத்திட சித்தமும் தினைப்புனங் காத்த வள்ளியை முருகனை மணம் புணர அருள் கொடுத்ததே.

74 வேலைத்தூக்கி விளையாடுந் தெய்வம்

இராகம் — எதுகுல காம்போதி தாளம் — மிசிரம்

பல்லவி

வேலைத்தூக்கிவிளை யாடுந் தெய்வமே யென்
வினைப்பகைதீர் தெய்வமே

அனுபல்லவி

381. காலைத்தூக்கி யாடும் கண்ணுதல் தந்த
கதிர்காமத் தையனே கழலடி நம்பி வந்தேன்
(வேலை)

சரணம்

எங்கெங்குந் திருமுகம் எங்கெங்குந் திருவிழி
எங்கெங்குந் திருச்செவி எங்கெங்குந் திருக்கரம்
எங்கெங்குந் திருவடி எங்கேநீ அங்கேநான்
ஈசனேக திர்காம வாசனே முருகேசா (வேலை)

'ஸ்ரீ லங்கா,' அல்லது 'சிங்கள' அல்லது 'சிலோன்' எனப் படும் தீவானது அதன் கேந்திரமாக விளங்கும் துறைமுகத்தின் வழியாகச் சென்ற உலகத் தலைவர் பலரின் நன்மதிப்பைப் பெற்று இந்து சமுத்திரத்தின் 'நிலத்தீவு' எனத் திகழ்கின்றது. இங்கே தென்பாகத்தில் மாணிக்க கங்கை எனும் நதியின் கரையில் அமை யப்பெற்ற 'கதிர்காம' ஆலயமானது 'அரோஹரா' சத்தத்தோடு, வேகத்தோடு செல்லும் 'ஆத்மீகசங்கோத்ரியாக' விளங்குகின்றது.

பரம்பரையாக யாத்திரிக ஸ்தலங்களைப் பற்றி புராணம் அல்லது சரித்திர சம்பந்தமான கதைகள் இருப்பது போன்று 'கதிர்காம' ஸ்தலத்தைப் பற்றியும் ஒரு கதையுண்டு. பக்த கோடிகளைப் பொறுத்த மட்டில் 'கதிர்காம க்ஷேத்திரம்' ஒரு தெய்வீக ஸ்தலமென்றே பல்லாயிரம் ஆண்டுகளாகக் கருதப்பட்டு அவர்களுடைய இருதயங்களில் இடம் பெற்றது. இந்துக்களுக்குரிய ஸ்கந்தபுராணத்திலும் இத்தலத்தைப் பற்றியகதை இடம்பெற்றுள்ளது.

தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையே கொடிய யுத்தம் நடைபெற்றது. அசுரர்களுடைய அரசன் பத்மாசூரன் வெற்றி கொண்டு இலங்கையைத் தலைநகராகக் கொண்டு ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆண்டுவந்தான். இந்திரன் வருணன் வாயு முதலிய தேவர்களையும் சிறைப்பிடித்தும் பணியாளர்களாக்கி உலகினைத் துன்புறுத்தினன். தேவர்கள் முழுமுதலாம் சிவபெருமானை வணங்கி உதவி வேண்டி நின்றனர். சிவபெருமானும் தம்போல் பராக்கியமுள்ள தம்மகன் 'கார்த்திகேயனை' போருக்கு அனுப்பினன். திருச்செந்தூரில் நின்று தூது அனுப்பிய கார்த்திகேயன், இணங்காது கண்ட சூரனை எதிர்த்துப் போர்புரிந்தனன் தன்தாய் அன்பளிப்பாகக் கொடுத்த வேலை விடுத்தனன். வேலினால் துளைக்கப்பட்டு அல்லலுற்ற சூரன், சரண்புகுந்து உயிர்ப்பிச்சை கேட்டனன். கார்த்திகேயரும் அவனைத் தன் மயில்வாகனமாகக் கொண்டனர்.

கதிர்காம வாசன் கார்த்திகேயன் வேலைத்தூக்கி விளையாட, ஆடல்புரிய, அருள்தர மெய்யன்பன் அகத்தைத் துளைத்தே 'அழிந்து போகுமிவ்வுடம்பு, சிற்றின்பம் அழியாத் தொல்லை தருவது' எனும் உண்மைகளை அவள் இருதயத்தில் பதியவைக்கிறது. ஐம்புலன்களையும் இறைவனிடம் செலுத்த (317) பாசபந்தக் கயிறு அற வினைப் பகை தீரும்.

ஓசை வடிவினன் நாதமாக விளங்குபவள் அம்மை, இறைவன் சத்தி; கொடுத்த அன்பளிப்பே வேலும் அதைக் கொண்டு சூரனை வதைத்து, மெய்யன்பனை, மயில்வாகனமாக்கிய (379) கார்த்திகேயன்; காலைத்தூக்கி யாடும் கண்ணுதல் திருக்கையில் நடனம் புரிபவன்; அவன் நடனம் உலகியல் நாடகம், அம்மை பார்வதி.

நக்கீரர் ''முருகா' என்றழைத்தால் ஐந்து முகங்கொண்ட சிவபெருமான் அஞ்சாதே என்று திருவிளையாடல் தரிசனம் தரும் ஆறுமுகனையும் வேலையும் அருள் புரிவன்'' என்று தருகிறார்.

அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் — நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும்
முருகா வென்றேது வார் முன்.

ஞானக் கணபதி போன்று கார்த்திகேயன் அனுப்பிய வேல் துளைக்கத் துளைக்க உள்ளத்தே உள்ள அஞ்ஞான இருள் விட்டகலும்; பேரருளுடைய எண் குணத்தான் அருள்தர காலத்தூக்கியாடுபவன் கண்ணுதல் தரும் உலகியல் நடனத்தைப் பாசபந்தம் அறுந்து மோனமெய்திய (347) அகத்தே, சிவம் தோன்று மகத்தினராய்க், காண்பான். படைத்தல், காத்தல், அழித்தல், வித்தியாதேகம், அருள்முகம் எனும் ஐந்து தொழில்களையும் விளக்கும் ஐந்துமுகம் எப்பொருளிலும் காணலாம்; முக்கண்ணனுக விளங்குபவனே அவன்; தன்னொளி கொண்டு இயக்குபவனின் முகமும், ஞானக்கண்ணும், நடனம் காண்பிக்கும் ஆடல் தரும் செவி, கரம், கால் முதலியனவும் ஒடுங்கவே மோனமெய்திய அகத்தே திருவடி தோன்றும் (347); தொடர்ந்தே தில்லைக்கூத்தனைத் தரிசித்தே ஒன்றாய், இரண்டாய் ஒரு மூன்றாய் நின்றனை (350), எங்கே நீ அங்கே நான் எனும் முக்கண்ணனை நாம் காண, அருள்தரும் ஈசன், அவள் அருள் புரிந்து வேலுடன் கூத்தியற்றும் கார்த்திகேயனே கதிர்காம வாசனே, முருகேசனே!

தொல்லை யெல்லாம் கடந்த பதம் தந்திடும் ஷண்முகா
தோத்தரித்தோம் எங்கள் முன்னே வந்திடாய் ஷண்முகா
சுல்லையொத்த மனமுருகக் கருணைசெய் ஷண்முகா
கல்லெனச் சிலம்பொலிக்க ஓடிவா ஷண்முகா (வேல்)

(சாது. ஸ்ரீ. முருகதாஸ்)

75 வேலனைக் கொண்டாடுவோம்

இராகம் — கானடா தாளம் — ஏகம்

பல்லவி

வேலனைக் கொண்டாடுவோம்
வேறு தெய்வம் நாடிடோம்

அநுபல்லவி

காலனைக் காலா லுதைத்தோன்
பாலனுக்கே நாமடியோம் (வேலனை)

சரணங்கள்

382. கோலா கலா மயிலின் ஏறும்
குழந்தை வேலன் பாலர் நாங்களே (வேலனை)
ஞாலமுள்ள நாளும் யோகநாதன் சொன்ன
சொல்லைக் கொண்டு
காலையிலும் மாலையிலும் கழலடியே
போற்றிடுவோம் (வேலனை)

வேலனைக்கொண்டு துளைத்துத் துளைத்து நம்மைப் பீடித்திருக்கும் மலப்பிணியையகற்றியே அஞ்ஞான இருள் நீங்கத் துய்ய அகமுடையோராய் மோன நிலை எய்தியே திருவடிப்பேறு பெற்றுய்வோம் (347). வேறுநினைவொன்றின்றியே நிட்டையை நாடிநிற்போம்.

நிட்டைகூடித் தில்லைத் தரிசனம் கண்டு பிறவிக்கப்பால் செல்லுறுவோம். மார்க்கண்டனுக்கு அபயம் கொடுத்து இயம பயம் நீக்கியாண்ட முழுமுதலாம் சிவபெருமானின் பாலன் முருகனுக்கே நாமடியோம்.

அழகுதரும் பார்வதியின் நடம் வழிநின்று நல்லறம் கைப் பிடித்து என்றும் அவனை மறவாதே எவ்வுயிருந் தன்னுயிர்போல் எப்பொருளிலும் வியாபித்திருந்து அருட்கண்ணுக விளங்குபவன் குழந்தை வேலன் பாலர் நாங்களே; உலகினை நீத்து இறைவன் பாதாரவிந்தம் சேர்ந்து நம்முடைய ஒளி பேரொளியாகிய இறை எனும் ஒளி, திருஐந்தெழுத்துச் ஜோதிஅதில் நாம் ஒடுங்கும் வரை, ஞாலத்துள் இந்த ஆன்மா தனிமாயா காரியப் பொருளாக விளங்குவரை யோக நாதன் பாடிய நற்சிந்தனை எனும் பாட்டுக்கள் கொண்டு அவனுடைய திருவடித்தாமரையைப் போற்றி ஏத்தி காலையும் மாலையும் தொழுது அவன் திருவடிப்பேறு அடைவோமாக.

76 நல்லூரான் கிருபை வேண்டும்

383. நல்லூரான் கிருபை வேண்டும் — வேறென்ன வேண்டும்
நமைப்பிரி யாரெனை நம்பிட வேண்டும்
(நல்லூரான் கிருபை வேண்டும் வேறென்ன வேண்டும்)

[மூன்பாட்டு விளக்கம் தொடர]. சுவாமிகள் (359இல்) "முனியே! முனிவர் முழுமுதலே! மூர்க்கனேனை ஆண்டு கொண்ட தனியே! தன்னைப்பாரில்லாத் தலைவா! சகமீரேழுக்கும் இனியாய்! என்னை நீங்கா இறைவா! நல்லைக்குருமணியே" என்று தம் கிருபாகர மூர்த்தியை கூவியழைக்கிறார். "நித்தியா நித்தம் மோனமெய்திய அகத்தே பார்வதிதேவியின் இனிய மைந்தன், தாயின் ஆற்றல் வடிவாக இயங்குபவன். முருகன், நின்று நல்லூரானே யோகசுவாமிகளாக கர்மம் புரிவான்" என்கிறார். "முருகனே வள்ளியாக நின்று செயல்புரிந்தான்" என்று கந்தப் புராண உரையில் பண்டிதர் கணபதிப்பிள்ளை தருவதைக் காண்க. (1)

384. எல்லாரிடத்தும் அவள் இருப்பதைக் காண வேண்டும்
கொல்லாமை கள்ளாமை கோபத்தை நீக்கவேண்டும்
(நல்லூரான் கிருபை வேண்டும் — வேறென்ன வேண்டும்)

உயிரில் உயிருள் பொருட்கள் எல்லாவற்றிலும் அவன் தன்னொளி கொண்டு இயங்குபவன். [247; பிரகிர; உப. 4 4-22 காண்க]; கொல்லா விரதம் (365) அறவழி நின்று ஒழுக, நிஷ்காமிய கர்மம் புரிய, பாசபந்தக் கயிறு அறுந்து மோனமெய்திய அகத்தே, களவு, பொய், கோபம், வஞ்சகம் எல்லாத் தாமச குணங்களும் விட்டு நீங்கும்; அதிகம், இராஜதமும் விட்டு நீங்க சாத்வீகமே குடி கொள்ளும். (2)

385. சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருக்கவேண்டும்
அல்லும் பகலுமவன் அடியினையே தொழவேண்டும்
[நல்லூரான் கிருபைவேண்டும் — வேறென்ன வேண்டும்]

நுண்வெளி (159) யில் தோன்றும் பொருட்களை மனத்தாலும் சொல்லாலும் வர்ணிக்கலாம். அறிவுப் பெருவெளியிற் தோன்றும் அறிவே வடிவான அதைத் தற்மறிவால் கண்டுணரலாம், முக்குணமும் பாழாகப்போக எண்குணத்தானே இவ்வுடம்பைக் கோயிலாகக் கொண்டு நிற்க அல்லும் பகலும் அவனையே பரசிவரூபமாக (145; 176;), சத்திசிவமாக, எல்லாரிடத்தும் (387) அவனைக்கண்டு, தொழ வேண்டும். (3)

386. உல்லாசமாக உலகிற் றிரிய வேண்டும்
ஓப்சிவாய நமவென ஓதிக்கொள்ள வேண்டும்
[நல்லூரான் கிருபை வேண்டும் — வேறென்ன வேண்டும்]

மெய்யன்பன் தன்னையே இறைவனிடம் ஒப்புக் கொடுக்க, இறைவனும் மெய்யன்பன் உள்ளத்தைத் தம்வீடாகக் கொள்ள, இறைவனே செயல் புரியு முண்மை விளங்க (386) சும்மா இருக்கும் நிலையை உணர்ந்தறிந்த அறிஞன் உல்லாசமாக உலகிற் திரிவான்: திருவைந்தெழுத்தும் தம் உள்ளத்தே உணர்ந்தறிந்து (240) அதன் உண்மை கடைப்பிடித்து வாழ்வோம், ஐந்தெழுத்தைச் செபிப்போம் நித்தமும். (4)

387. பல்லோர் புகழ் நல்லூர்ச் செல்லப்பன் பாதத்தை
பக்தியாய்க் கும்பிட்டுப் பாடிட வேண்டும்
[நல்லூரான் கிருபை வேண்டும்—வேறென்ன வேண்டும்[

அடியேனை ஆட்கொண்டருளத் திருமேனி கொண்டருளிவந்த மெய்ஞ்ஞான குரவனைத் தாய்தந்தை தாங்கும் உயிர்த்துணை தனக் குத்தானே நிகராகிய முழுமுதல்வனும் சிவபெருமானேப்போன்று தனிக்குரு, பல்லோராலும் புகழப்பட்ட பெருஞ் சுடரை நாம் பாடித் தொழுதேத்துமோமாக

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே.
திருமூலர் திருமந்திரம். (10—1556) (5)

388. சொல்லும் யோகசுவாமி தோத்திரப் பாடலை
எல்லோரும் கேட்டு மகிழ்ந்திட வேண்டும்
[நல்லூரான் கிருபை வேண்டும் — வேறென்ன வேண்டும்]

சுவாமிகள் பாடிய தோத்திரங்களை சுவையுடன் பாடியும், ஞானப் பொருட்களை உணர்ந்தறிந்தும் உரையுணர்விறந்ததோ ருணர்விலை யறிந்து என்று மழியா இன்பக்கடலில் ஆழ்வோமாக. (6)

77 சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருத்தடா

389. நல்லூர் ஆட்டக்காரா நீ செய்யடா ஓர் மாயம்
அல்லும் பகலுமற்று அதுவும் இதுவுமற்றுச்
சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருத்தடா
எல்லையில்லா இன்பம் என்னை விழுங்கவேண்டும்
சொல்லை அழுதமாக்கி உல்லாச மாய்த்திரிய
வில்லை முறியடித்து வெற்றிமுரசு கொட்டடா
கல்லை ஒத்தமனம் கரைய அருள்தாடா
இல்லை யென்ற சொல்லை இல்லாமல் ஆக்கடா
முழுதும் உண்மை யென்று முனிவன் சொன்ன
வரக்கு
எழுத முடியுமோ என்னைக் காப்பாயடா
பத்துவரியும் படிப்போர் கேட்போ ரெல்லாம்
முத்தர் ஆகுவார் முழுது முண்மையே

ஓசைவடிவாக, சொல்வடிவாக விளங்குபவன் பார்வதி ஆடிய பாதத்தை விளக்கும் உண்மைப் பொருள். இளைய மைந்தன் நல்லூர் முருகன் தாயின் இயல்பு கொண்டு இயங்குபவன். இறைவனின் நடம் காண்பிப்பவன். சும்மா இருக்கும் அகம் தோன்ற மோனகுருவே எழுந்தருளி அருள்புரிய நல்லூர் முருகனே செயலாற்றுபவன். தேனுந்து வேங்கையாய்த் தினைப்புனம் காக்க வள்ளிக்கு அருளின முருகன் (383) திடசித்தமெனும் வேங்கைமரம் இன்பம்

பெருகும் பக்திக் கொடியைத் தாங்கினது. முத்தி எனும் பழம் தருவது. அல்லும் பகலுமற்ற அதுவுதுவுமற்ற பேரின்பம் தரும் தில்லைத் தரிசனமே முத்திப்பழம். சீவன்முத்தனாக நீயேநானென்னுஞ் சொல்லு முண்மை விளங்க (225); (224). வாழ்ந்து உல்லாசமாய் திரிய (324) அருள்தாடா. எரிந்த பாசபந்தக்கயிறு கட்டுந்தன்மை யற்றது. மன்மதனின் வில்லு பொடி தூளாயிற்று. இன்பக்கனியே முத்திப் பழம்; இறைவனின் நாடக சித்திரத்தைக் கண்டு குழந்தை யின் மழலையையும் விளையாட்டையுந் தாய் எவ்வாறு கண்டு இன் புறுவானோ அவ்வாறு அழியா இன்பத்தில் ஆழ்ந்துகிட. குழந்தைக்கு என்ன பொருள் 'இல்லை'யென்று சொல்லுவாள். அத்தகைய முழுது முண்மை என்று (165); 303;) ஐந்தெழுத்துச் ஜோதியில் உலகும் யானுமொடுங்கவே காட்டிடடா; இந்தப் பத்து வரியும் படிப்போர் கேட்போர் (391; 307;) உரையிறந்த உணர்வினை லுணர்ந்தே அழியா மகிழ்ச்சிதரும் மோட்ச வீட்டையடைவோமே.

78 வேல் முருகா மால்மருகா

இராகம்—கமாஸ் தாளம்—ஆதி

பல்லவி

மாமயில் ஏறிவா — வா

அனுபல்லவி

வேல் முருகா மால் மருகா (மாமயி)

சரணம்

390. கோமானே குழந்தை வேலா
சீமானே திருவடி தஞ்சம்
காமாந்த காரம் அகலவும்
நாமெந்த நேரமும் புகழவும் (மாமயி)

கோமான் = அரசன்; குரு; குழந்தைவேலா குருமணியே! உம் முடைய திருவடி (347)க்கே சரண்புகுந்தேன். மோனமெய்தியதில்லைத் தரிசனங்கண்டு காமிய உலகு தரும் அச்சமும் அழிவும் பிறவிக்கட லும் விட்டகல நாம் எந்த நேரமும் சும்மா இருக்கும் சுகம் பெற்றே ஆனந்தமாக வாழவேண்டும். (1)

391. ஏகாந்த சித்தம் பெறவும்
யோகாந்த மார்க்கம் உறவும்
தேகாந்த காலந் தன்னில்
நீபோந்து காத்திடல் வேண்டும். (மாமயி)

அந்த வெட்டவெளியாகிய சித்தாகாசத்தின்கண் எண்ணில் பல கோடி உயிர்கள் எத்தனையோ அத்தனையிலும் அருட்கண்ணுக விளங்குபவன், உள்ளும் புறம்பும் ஒன்றுக விளங்குபவன், அழியா இன்பந் தர (392) சித்தமிசை குடிகொண்ட தெய்வம், சின்மயானந்த யோகானந்த மார்க்க உறவு கொண்ட பாலன்போலும் சீவன் முத்தனை தேகாந்த காலந்தன்னில் நீயும் நானும் ஒன்றப்பப் போந்து ஈற்றில் வெளியில் வெளிபோய் விரவியதும், அளியில் அளிபோய் அடங்கியருளவும், ஒளியில் ஒளிபோய் ஒடுங்கவும் கர்ப்பூரவுண்டை போலே மனமானது கரைந்திட என்னைக் காத்திடல் வேண்டும்.

79 சேவற் கொடியோன் திருவடியைச் சிந்திப்பீர்

வெண்பா

392 பாவம்போம் பொல்லாப் பழிபோகும் பாருலகிற்
சேவற் கொடியோன் றிருவடியைச் — சாமளவுஞ்
சிந்திப்பீர் செல்வஞ் செறியிலங்கை நன்னாட்டூர்
வந்திப்பீ ரென்றும் மகிழ்ந்து.

பத்மாசுரன் தோல்வியுற்று பிச்சை கேட்க அவனைத்தன் வாகனமான சேவலாக அமைத்துக் கொண்டவர் கதிர்காமத்து வேல்முருகன்; கதிர்காம வேல்முருகன் (394) திருவடியை மோனநிலை எய்தியே அடையலாம் (347) காமாதி குணமெலாம் கட்டவிள (192) நிஷ்காமிய கருமம் புரிய இருவினையும் இன்பம் துன்பம் பாவம் பழி எல்லாம் நம்மை விட்டகலும். நாம் தூயோனுக அவனுடைய திருவடிகளை 'சிவ சிவ' எனும் மாமறைதரும் ஒரு மொழியாம் உலகினை சிந்திப்போமாக. உள்ளபடியே யாதுமென உணர்வோம்; எல்லாம் சிவன்செயல் கள்ளமனம் போயொழிக்க சுத்த மௌனம் தோன்றும். இறைவனே செயல்புரிய ஆடல்புரியும் தில்லையம்பல வாணனையே சிந்திக்கலாம்; பதிவிரதை பிறதேசஞ் சென்று பிரிந்திருந்த தம்கணவனை அழைத்துச் சேவிப்பதுபோல் பொன்னம்பல வாணன் திருவடிகளை வந்திப்பீர், கட்டியிளுத்து வணங்கி மகிழ்வீர்

புண்ணிய பாவங்கள் பொருந்தா மெய்யன்ப ரெல்லாம்
நண்ணிய பேரின்ப சுகம் நானுனை வெந்நாளோ.
(தாயுமானவர் எந்நாட்கண்ணி. 10- ஆனந்த. இய.14) (1)

396 காமமுத லாறுங் கடிந்து கடிகமழுஞ்
சேமந் தருந்திவ்விய பாதத்தை — ஆமளவும்
போற்றிப் புகழுவீர் பொன்னிலங்கை நன்னாட்டூர்
ஈற்றிப் பிறக்க மருந்து.

அகங்காரம், பலம், இறுமாப்பு காமம் குரோதம் இவைகளை யுடையவர்கள் தங்கள் தேகத்திலும் பிறர்தேகத்திலும்முள்ள என்னை, வெறுத்து அவமதிக்கின்றனர். (கீதை. 16--18.

கைரியம் பொறை மனவுறுதி தூய்மை வஞ்சகமின்மை செருக் கின்மை ஆகிய இவைகள் தெய்வ சம்பத்துடன் பிறந்தவனுக்கு இயல்பாகின்றன, அர்ஜுனு. (கீதை 16—3) கீதை (18) இல் கூறிய பிரகாரம் கெட்டகுணங்களை ஆமளவுமடக்கிக் கீதை(3)இல் நற்குணங் களை கூடியளவு வளர்த்துவருவதால் நம் எண்ணங்கள் சுத்தமாகும் எண்ணங்களே காமம் தரும் இச்சைக்குக் காரணம். நல்லெண்ணங் கள் உதயமாகுமாஞல் அவற்றுடன் திருவருள் உதயமாகும்' அவன் திவ்ய பாதத்தையடையலாம். எண்ணங்களைப் பரிசுத்தமாக்குவதே மாற்றிப் பிறக்க மருந்து.

திருவடிகள் இரண்டின் இடையிலிருந்து பெருகும் அமிர்ததாரை யின் பிரவாகத்தால் ஐம்பூதங்களாலான உடலிலுள்ள நாடிகள் எல் லாவற்றையும் நினைப்பவளாய் பராசத்தி விளங்குகிருள்.

[ஸௌந்தர்ய லஹரி. 10]

படைத்தற்கடவுள் காத்தற்கடவுள் அழித்தற்கடவுளர் ஆகிய பிரம்மா விஷ்ணு முதலியோருடைய சக்திகளான சரஸ்வதி லக்ஷ்மி முதலியோரே திருமூர்த்தியறியச்செய்பவர். இவர்களின் எண்ணங் களே திருவருள் வடிவான அந்த அமிர்ததாரை சொட்டுச் சொட் டாக நாடிகள் வழியாகப் பெருக நல்லெண்ணங்கள் உதயமாகும் கெட்ட நாற்றம் நம்மை விட்டகலும். மாற்றிப்பிறக்க மருந்து.

உனது காம இச்சைகளை நன்முய் அடக்கிமாளப் பிரயத்தனப்படு. அதில் ஜயம்மடைந்தால் சரீரத்தில் ஒருவிதமாறுபாடு உண்டாகும். அதாவது இந்திரிய சக்திகளை ஆத்ம விஷயத்தில் பிரவர்த்திப்பிக்கும் 'மேதை' என்ற ஒருநாடி வளர்கிறது; இந்தமேதை நாடிவளர்ச்சி யடைந்த பிறகே ஆத்ம விஷயமான உயர்ந்த ஞானம் உண்டாகும்.

(ஸ்ரீ. இராமக்கிருஷ்ணர் உபதேசம்) (2)

397. புன்னுனிமேல் நீர்போல் நிலையாத பொய்யுடலை
என்னினிநீர் எண்ணி வருந்துவீர்—மண்ணுலகில்
ஆறுமுகன் பாதத்தை யன்பா யிலங்கையீர்
கூறுமதுவே குணம்.

புல்லுநுனிமேல் இரவில் தோன்றும் நீர்த்துளி வெய்யில்வர மறைந்து போகும் இயல்புடையது. அத்தகையதே இவ்வுடலும் அவற்றல் நாம் அனுபவிக்கும் இன்பமும் துன்பமும். ஆகையால் அதை இனிநீர், சுவைதருவது என்று எண்ணி மயங்காதீர்;

தாயுமானவர் ''கடத்தை மண்ணென வுடைந்தபோ தோ விந்தக் கருமச் சடத்தைப் பொய்யெனல் இறந்த போதோ சொல்லத் தருமம்'' என்றும் ''விடத்தை நல்லமிர்தாவுண்டு பொற் பொது வெளிக்கே நடத்தைகாட்டி எவ்வுயிரையும் நடப்பிக்கும் நலத்தோய்' என்று கூறுவதுபோல் மோனகுருவாக எழுந்தருளும் ஆறுமுகவன் திருவடிகளையே எண்ணி யெண்ணி விடமாகிய சிற்றின்பத்தைத் தரும் உலகியல் வாழ்க்கையை விலத்தி வாழுவீராக. (3)

398. இளமை நிலையா தெனவறிந்து வேலன்
பழமை தருமடியைப் பற்றும்—எழுமையும்
இன்பந் தருமே யிலங்கைமா நன்னாட்டூர்
அன்பிற் பணிவீ ரறிந்து.

இளமையில் நாம் சிற்றின்பத்தில் மாண்டுவிடுகிறோம் (14) மூப்புத் தொடரும் பின் என்பதை மறந்துவிடுகிறோம்.

பிறவியைக் கடலாகவும், செருக்கைச் சுறுமீனாகவும், இருவினைகளை அலையாகவும் மங்கையர் மயக்கத்தைச் சுழற்காற்றாகவும், ஆசையைக் காட்டாறாகவும் விலத்தி முதறிவைக் கப்பலாகவும் கொண்டு தாயுமானவர் திருவடி என்னும் கரையேறு முண்மைகள் விளங்கப் பாடுகிறார்.

சுவாமிகளும் இளமை தரும் சிற்றின்பத்தை உண்ண உதவும் செருக்கு, மங்கையர்மயக்கம், ஆசைகள் இவற்றை விலத்தி (39) மூன் புண்ணியத்தின் பயனாக விளையும் திருவருளைக் கைக்கொண்டு பிறதேசஞ் சென்ற கணவனைப் பதிவிரதையான பெண் கட்டித்தழுவி வரவேற்பது போன்று மோனநிலை தரும் எண்ணங்களை உண்டாக்கி இடையறாது சிந்திப்பதால் அழியா இன்பந்தரும் மோனநிலையை அடைவீர்.

பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
இறப்பு நீங்கியிங் கின்பம்வந் தெய்திடும்
சிறப்பர் சேறையுட் செந்நெறி யான்கழல்
மறப்ப தின்றி மனத்தினுள் வைக்கவே.

(5—77—3) (4)

399. அறிவுக் கறிவாகி யப்பாற்கப் பாலாய்ச்
செறியும் முருகன் திருத்தாள்—நெறியுடனே
பற்றிப் பணிந்திடுவீர் பல்கா விலங்கையீர்
வெற்றிதரு மென்றும் விளைவு.

மோனநிலை எய்திய அகம் அறிவுவடிவான ஆன்மாவின் இயல்புடையது அந்த இயல்பில் திழைத்துக் கிடந்து மகிழ்வுறுதலே ஆன்மாவின் இயல்பு. அந்த அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நெறியாம் பராநந்தி நீடருள் ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவமெனும் முருகன் திருத்தாள்களை நெறியுடனே பற்றி மோன நிலை எய்திவெற்றியுடன் விளங்கும் மோட்சவீடு தரும் நிட்டை கூடுவீர் (5)

400. வினையுமிச்சை யெல்லாம் வெறுத்தேயெஞ் ஞான்றும்
இனையோன் றிருப்பாத மேத்து—மழைபோற்
கருணை—வருமே கருதிலங்கை நாட்டூர்
தருண மிதுகண்டூர் தான்.

பாசபந்தக் கயிறு அறுந்த அகத்தே மோனகுரு எழுந்தருளுவர் எஞ்ஞான்றும் இன்பந்தரும் மோனம் கைகூடும் முருகன் கழல்கள் எஞ்ஞான்றும் இன்பம் தரும். இச்சைகளை வென்றே மோனமடையலாம் (395;396;) மோனத்தில் திழைத்திருந்தால் நிட்டைகூடும். அமிர்ததாரை பெருகும் (396) கருணையேயுருவான கடவுள் வருவார். (6)

80 நல்லூரைக் கும்பிடு

இராகம்—ஜோகினி தாளம்—ஆதி.

பல்லவி

401. நல்லூரைக் கும்பிட்டுநீ பாடு—அதனிலே
நாட்டினுள்ள பிணிகள் ஓடும்

அநுபல்லவி

செல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்த நாடு
தேங்கா யுடன்பழம் கொண்டுநீ செல்லு. (நல்லூர்)

சரணம்

வாடி உன்மனம் ஓடிஞலும் வருத்தங்கள்
கோடி கோடியாகக் கூடிஞலும்—குறைகள் வந்து
தேடி உன்னை மூடிஞலும்—செல்லப்பன் பாதம்
சிந்தித்தால் ஓடி ஓடிப்போமே.
பெண்டு பிள்ளைகளென்று பேதமை கொண்டுநீ
கண்ட கண்டஇடம் கலங்கிநீ திரியாதே. (நல்லூர்)

நல்லூரானைக் கும்பிட்டால், மயிலேறு முருகன். அருள்கொடுப்பவன். நல்லூரான் அருள்புரிந்தால் காமமுதலிய கெட்டகுணங்கள் விட்டகல (396) நல்லெண்ணங்கள் பொறைதூய்மை முதலியன [கிதை

8 –3) 393 இல் காண்க] தோன்றவே ''மாற்றிப் பிறக்க மருந்து'' (395) என்று சுவாமிகள் கூறுமுண்மை விளங்கவே நாட்டிலுள்ள பிணிகள் ஓடும். பெரியவர்களை வரவேற்க மங்களமான சாமான்களுடன் வரவேற்பது வழக்கம். மனதில் பக்தியும் அன்பும் வளரும்.

எவ்வளவு வருத்தங்களும் குறைகுற்றங்களும் நல்வினை தீவினையின் பயனாக வந்து மூடினாலும் ''எல்லாம் அவனேடி எல்லாம் அவன் செயலே'' எனும் 'சிவ சிவ' எனும் மாமறை தரும் இணையடிகளினுண்மையை செல்லப்பன் பாதம் சிந்தித்தால் எல்லாமே விட்டகலும், அப்பர் இவ்வுண்மையைத் தருகிறார் காண்க.

அல்லல் என்செயு மருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே. (5 –1 –4)

தேடிவைத்த செல்வமும் பெண்டு பிள்ளைகளென்று அறியாமைகளால் மனதை வதைக்காதே. ''தேடிவைத்த உடல், பொருள், ஆவி, மூன்றும் உன்கைவசம் ஒப்புவித்தேன்'' எனக்கும்பிடு.

80 A முருகா நீ வா

402. முருகா நீவா—முத்திக்கும் பத்திக்கும் சித்திக்கும் முழு வல்லவனே
உருகா மனமேன் தந்தாய் - திருமால்மருகா

உவந்துவந்து சிவந்த தாளிணை
உச்சியில் வைச்சிடு மெச்சிய வீரனே (முருகா)
அறுமா முகனே யரனார் மகனே
குறுமா முனிக்குப தேசஞ் சொன்ன
குருவே வருவாய் விரைவா யருள்வாய் (முருகா)

முருகன் பக்திக் கொடி படர்ந்து வளர்ந்தால் முத்திப்பழம் வந்தணையும். சித்திகளும் கைகூடும். கல்லைப்போன்ற மனம் கரைய வரம்தா. திருமால்மருகா மூவர் முதலிய பெய்யன்பர்கள் பல தோத்திரங்களாலும் பாக்களாலு மூன் இணையடிகளைப் பாடியும் தொழுதும் வணங்கினதால் செம்மை நிறம் கொண்டதே உம்முடைய திருத்தாள்கள்.

குறுமுனி = அகத்தியர்.

81 அறிமின் தெளிமின்

403. உவமானங் கடந்த கடவுள்—கேண்மின்
உள்ளத் திருக்க வூரெல்லாம் ஓடி
அவமானப் படுவதில் கண்ட லாபம்
அகிலத்தி லுண்டோ அறிமின் தெளிமின்
தவஞ் செய்து தன்னைத்தன் னுலே—கேளும்
தானு யறியும் சலாக்கியம் உண்டே
அவனிவ னென்றதை நீக்கி—யாவும்
அவனு யிருப்பதைத் தேக்கி
சிவனடி யாருடன் கூடி—உங்கள்
சித்தந் தெளிந்திட நாடி
சிவ சிவ என்று தினம் பாடி—உங்கள்
சித்தந் தெளிந்திடத் தேடி
கவனமாய்க் கருமத்தை ஆற்றி—கேளும்
காலையும் மாலையும் போற்றி
நவநவ மாய்வருஞ் சேதி—நாங்காண
நல்லூர்க்குப் போவோம்; போம்வியாதி.

உரை: பேச்சற்று மனத்துள்ளே திரைபோல் தோன்றும் பரவெளி நினைவாம் வேறுபாடற்றுக் கடந்த அருள்நிலையில் நின்றவர் திருவருளால் தேடும் மூன்று திருக்கண்களையுடைய சிவபெருமானே! அறிவாற்றல் நிறைந்துள்ள அகத்தே நாம்காணும் தன்மையதாய் திருவருளும் முடிவிலாற்ற லுடைமையும் பேரருளுடைமையும் நம்முள்ளே இருக்க வூரெல்லாம் ஓடி தேடி வூரார் நகைசெய்யவும் எம்மைப்பற்றி ஒரு தொடர்பு'மில்லாதன பலவற்றைப் பேசியுமேசியுமவமானப் படுவதில் நாம் கண்டலாபம் உலகினில் ஏதுமுண்டோ? மாணிக்கவாசகர் திருக்கழுக் குன்றப்பதிகத்தில் ''பேதமில்லதோர் கற்பளித்த பெருந்துறைப் பெருவெள்ளமே, ஏதமே பலபேசி ஏதிஞார் முன் எனை என்செய்தாய்?'' என்று பாடுவதைக் காண்க. இவற்றை நம் முள்ளத்தே உணர்வினிலே உணர்ந்தறிந்த. அந்த அறியா, சித்தமௌனியாய்த் தோன்றுமவ் வறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் தெளிமின்; பர வெளிநினைவாம் வேறுபாடற்ற ஏக சித்தமாய் அவனிவன் அதுஇது என்னும் எண்ணங்கள் சித்தத்திலு முதியாவண்ணம் நினைத்த அந்நிலை ஏகாந்தநிலை வூசினுனிமேல் நின்று கடுந்தவம் செய்து உலகம் யாவும் அவனே எனும் அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நெறியாம் பராநந்தி நீடருள் ஒன்றுஞ் செறியாச்

செறிவேசிவம் எனும் ஏகாந்த அந்நிலையில் தன்னைத் தன்னுலே அறியும் சலாக்கியம் உண்டே: ஆளுடைய பிள்ளையார் ஆளுடைய அரசு முதலிய தேவர்கள் அந்நிலையை எய்தி பராசத்தி உருவில் 'ஏகனனே கன்' எனும் உண்மைவிளங்க திருவருளே தாமே என்னு முண்மை யுடன் தன்னுள் தோன்றும் சித்த அலைகளும் பாட்டுக்களும் அவனே யாம் வேறில்லே' எனும் தோற்றமாக பல சிவனடியார் முன்னும் பின்னுந்தொடர கோடி சூரியப்பிரகாச வொளி போன்று தாம் விளங்கினவராய்த் தொண்டாற்றினர்கள்.

சுவாமிகளும் இந்நிலையை (பதி. 7 இல்) '' சித்திர மயிலேறு சந்த்ரா சக்தி தருமன் 'தந்திராமூலே' நோகல காரேனு அந்தமில்லா ஞானமு நீதரு யோகசுவாமி வந்தனு சுலோக முவந்தருள '' என்று தாமே பாடுகிறார் காண்க.

பல சிவனடியாருடன் கூடி சித்தந்தெளிந்திடநாடி பின் தெளிந் திடத்தேடி ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசு யோகசுவாமி கள், போன்று, கவனமாய் சித்திகளில் மாளாது குழந்தை தாயுடன் வினையாடுவது போல் உலக அம்மையப்பர், விடையேறியாக விளங் கும் சிவபெருமானையும் உமாதேவியாரையும், அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நாம் சித்தத்தில் கண்டு வினையாடுவதுபோல் கர்மம் புரிவோம், தொண்டாற்றுவோம், நாடகம்: விளையாட்டுப் பொருட்கள் உலகம்; சிறுபிள்ளைகளே ஆளுடைய பிள்ளையார், யோக சுவாமியார், ஆளுடைய அரசு; தாய் சிவபெருமானும் உமாதேவி யாரும்: சித்துக்களும் தொண்டும் பிள்ளையின் விளையாட்டு: இதே தியானத்துடன் நல்லூருக்குப்போவோம். நவநவ சொல்லுக்கடங்காத அழகுடன் விளங்கும் சித்துக்களையும் தொண்டுகளையும் —சேஷி —நாம் காணுவோம். போம்வியாதி; அகிலத்தில் நாம் கண்ட அவமானம், பேதம் போம், போம்.

82 ஈசனே நல்லூர் வாசனே

இராகம்—கமாஸ் தாளம்—ஆதி

பல்லவி

ஈசனே நல்லூர் வாசனே
இனிய வேல்முருகா உனைநம்பினேன் வரவா

சரணங்கள்

404. பண்ணினேர் மொழியாள் பாலசுப்பிர மணியா
எண்ணும் எண்ணமெல்லாம் நண்ணும் வண்ணம்
வரவா (ஈசனே)

தாசனை யோகசுவாமி சாற்றும் பாவைக்
கேட்டுக் கிருபைகூர்ந்து வாட்டந்தீர்க்க வாவா
(ஈசனே)

பாலசுப்பிரமணியன் குழந்தை முருகன் தாய் பார்வதிதேவியின் இளையமைந்தன். அவன்தரயினுடைய ஆற்றல் வடிவாகவே இயங்குபவன். அவனை, அவனுடைய திருவருளையே வேண்டி நிற்க, மோன நிலையெய்திய யோகசுவாமி, எண்ணிய எண்ணமெல்லாம் திருவருளேயானதன்மையே; ஆகையால் தாயின்மடிமீது இருந்து விளையாடும் பிள்ளைபோல் உலகினில் விளையாடித் தொண்டாற்ற (403) இருவருள் தரும் பாலசுப்பிரமணியா வாவா: தாசன் யோகசுவாமி சாற்றும் பாக்களுக்கிசைந்து கிருபைகூர்ந்து பேரானந்த இன்பமேயுருவாக, தாம் உலகினில் வாழ வாவா, அருள்தாதா.
தாசன் = ஞானி; ஊளியக்காரன்.

சாற்றுதல் = மலர்மாலைகள் போன்று சமர்ப்பிக்கும் பாக்கள்.

83 குழந்தை வேலன்

பல்லவி

குழந்தை வேலா குமரகுரு பர அரகர சிவசிவ.

சரணங்கள்

405. குன்றுங் குன்றுஞ்சென் றெங்கும் அடிபட நடமிடு
(குழந்தைவேலா)

தொழுந் தெய்வமும்நீ சுற்றமும்நீ துணைநீ துன்ப
இன்பமும்நீ. (குழந்தைவேலா)

கொன்றுங் கொன்றுங் கொன்றும் விதிமுறை
நின்றும் நின்றும் நின்றும் வெருவுறச்
சென்றுஞ் சென்றுந் திசைதிசை வலம்வரு
(குழந்தைவேல)

எழுந்து என்னிடம் விரைந்து வந்து இடர்களைந்து
காத்திட வருவாய் (குழந்தைவேலா)

கண்டுங் கண்டுங் கண்டுங் கனமுறை
வென்றும் வென்றும் வென்றும் விபுதர்கள்
பொன்றும் பொன்றும் படிவலமிடம் நடமிடு
(குழந்தைவேலா)

அளந்து யாவரும் அறிந்திட அரியநின்
செழுந் திருப்பத மலரடி தந்திடு (குழந்தைவேலா)

அஞ்சும் அஞ்சும் அஞ்சும்படி
நெஞ்சும் நெஞ்சும் கெஞ்சக் கிரிபடத்
துஞ்சும் துஞ்சும் அசுரர்கள் துகள்படத்
தஞ்சம் தஞ்சம் என நடமிடு (குழந்தைவேலா)

பழந்தமிழர்கள் பரிந்து செந்தமிழ்
அறைந்து சிந்தை நொந்து உருகவந்திடு
(குழந்தைவேலா)

வளைந்த சூரர்கள் தளங்கெடக்கிரி உடைந்து
போகவே சிவந்த வேல்விடு (குழந்தைவேலா)

(தொடரும்)

உரை: குன்று = மகாமேரு, பகவதம்; உலகியல் வாழ்வு எனுங் குன்று; அழகுபடமயில் ஆடுவதுபோல் முருகனின் இபல்பு கொண்டு நாம் எத்தகைய வாழ்விலும் தெய்வீக அழகு, சூரிய வெளிச்சம் போன்று ஒளி காட்டும், வழிநிற்கும் அழகுடன் நடமாட குழந்தை வேலவா, அருள்தாதா. மெய்யடியார்களுடைய தூய உள்ளத்தின்கண் மிக்கோங்கிப் பொருந்த தாயுமானவனெவனும் பெருமானே அடியேனுக்கு வெளிப்படத் தோன்றும் தாய் தந்தையர் நீர எனனுயிர் ஈடேறத்துணைபுரிய வந்த உயிரினுக்குயிராம் துணையும் நீயே; உள்ளத்துத் தோன்றும் கவலைகளும் மகிழ்ச்சிகளும் நீயே; உலகம் எனும் உச்சியில் வேலுடன் காட்சிதரும் வேல்முருகா:

நன்னெறிகடைப்பிடித்துத் 'தெய்வீக மனுஷன்' என்று உலகினர் சாற்றும் வாழ்வில் திருவருள் வலதாக புன்மை தீர்த்தாட் கொள்ளும் எம்பெருமான் அருள்தர, துன்பமும் துயருஞ்சூழ 'சிவசிவ' எனும் மாமறை தரும் 'ஓம்' எனும் உண்மைவிளங்க, பாசபந்தக் கயிறு அறுந்து மோன மெய்திய அகத்தினராய், குழந்தை முருகன் ஆற்றல் கொண்டு செயல் புரிபவனுய், நன்னெறி தீ நெறி எனும் வித்தியாசம் அற்றவனுய்ச் 'சும்மா தானமரும்' நிலையிதுவே யென்று வெற்றியுடன் உலகினில் கொன்றும் விதிமுறை மிளிர நடம் புரிய எத்தகைய தொழிலிலும் (முன்வரிகள் விளக்கம்) அழகுபட வாழ வா வா அருள்தா. சஞ்சலம் எனும் வேதனை தீர்த்தாட் கொள்ள வா (53). சஞ்சலந்தீர்த்தாட் கொள்பவனே! பலமுறை களவுபட்டு (53) ['கலவரையறையை' எனும்பாட்டை 53இல்காண்க] திருவருளைக் கண்டுணர்ந்து, என்றும் அழியா இன்பந்தரும், நலஞ்சுழியா

இன்பம் (55) தி ருவருள்கூடியே தேங்க அனுபவவுணர்ச்சியுடன் பெரும் அறிஞனுய் எவ்வழியிலும் (முன்விளக்கம்) தாயின் மடிமீதின் விளை யாடும் குழந்தை போன்று நடமிட (குளந்தை வேலவா) தாயின் ஆற்றல் வடிவாக இயங்கும் பெரியோன். அவனேயோ அவனுடைய செயல்களேயோ, யார் அளந்து, இவ்வளவு அவனுல் இயலும், இது இயலாது என்று, கணக்கிட முயலும். இறைவனுடைய மலரடியை யார் கணக்கிடுவர். வஞ்சகம்பிடித்த அசுரர்கள் அஞ்சிஓடவும் அவன் உன்னுடைய பேரருள் மிகுந்து விளங்கவும் நடமாட அருள்தாராய் உன்னுடைய பழவடியார்கள் தம்முடைய பழமை உணர்வு, திரு வருள் வலதாகத் தெளிந்து விளங்க தமிழ்ப்பாக்களே பல முறை உணர்விறந்தே ஓத ஓத முழுமுதல்வனும் சர்வதத்வாதிபதியாகிய நீ, விதிமுறை விலகி, வளைந்து துன்புறுத்தும் சூரர்களுடைய நிலை கெட்டுத்தளரவும் மெய்யடியார்களுக்கு மோட்சவீடு அருளும் சிவந்த வேலுடன் வந்து அருள்தாராய் குழந்தைவேலா.

கிருஷ்ணபகவான்: பார்த்தா, அவனுக்கு இம்மையிலோ மறுமை யிலோ அழிவென்பதில்லே. நலஞ்செய்வோன் எவனும் நலிவுறுதல் இல்லேயப்பா. (கீதை 6—40)

(முன் தொர்)

எங்குஞ் சங்குமுழங்கச் சிந்துகலங்கப் பூதர்நடுங்கத்
திதவர்கள் பரிவோடு அரகரசிவசிவ எனும்கடல்
ஒலிபோல் நீலக்கோல மாமயில் மீது
நிறுநிறு எனநெஞ்சம் அஞ்ச வஞ்சகர்கெஞ்ச
அஞ்சல் அஞ்சல் அஞ்சல் எனவரு(குழந்தைவேலா)

உரை: (முன்விளக்கம் தொடர)

மோனகுரு இருதயத்தே எழுந்தருள அறிவு சொரூபமாகவே அகம் விளங்கும்; ஞானப்பொருட்களே குவியல் குவியலாக கும்மா இருக்கும் அந்த அகத்தே உதயமாகும். இவ்வுணர்வினே ஞானசம்பந்தர் இரு வண்ணமலைப் பதிகத்தில் தருகிறூர்.

உருவிற் றிகழு முமையாள்பங்க ரிமையோர்பெருமானூர்
செருவில் லொருகால் வளையவூன்றிச் செந்தீயெழுவித்தார்
பருவிற்குறவர் புனத்திற்குவித்த பருமாமணிமுத்தம்
அருவித்திரளோ டிழியஞ்சார லண்ணுமலையாரே (1—69—5)

இந்தப் புனத்திற் குவித்த பருமாமணி முத்தம் போன்ற ஞானப் பொக்கிஷங்கள் சங்குநாதம் போன்று உமையம்மை திருவருளாலே எங்கும் ஒலிக்க, எப்பொருளிலு மொலிக்க, மெய்யடியார்கள் காண் பார். இவ்வாறு 'அரகரசிவசிவ' எனும் ஒலிகிழம்ப ஞானஒளியே சூரியனுடைய பிரகாசம் போன்று ஜோதியாய் ஒலிப்ப அறிவிலிகள் நடுநடுங்க கோலமயில் ஆடுவதுபோல் வாழ்வில் (முன்வினைகள் விளக்கம்) அழகுபட அஞ்சாதே அஞ்சாதே என்று வாவா (குழந்தைவேலா)

84. முத்தனென வாழ முயல்

நேரிசை வெண்பா

406. உருக்கு மொழியால் உளங்கொள்ளே கொண்டு
கருக்குழியிற் சேராமல் காத்தான் — திருக்குழாம்
காலியும் மாலியுங் கைதொழுது போற்றுநல்ல
வேலோன் பதியில் விரைந்து.

பண்டை வினைக்கீடாகப் பிறந்திறந்துழலும் சுழற்சியுட் பட்டு முன்று அலையாமல் குன்றின் உச்சியில் (405) வேலுடன் காட்சிதரும் முருகன் பதிக்கு விரைந்து சென்று காலியும் மாலியும் உணர்விறந்து துணர்வினூடே நின்று எல்லாம் அவன் நினைவாகவே பாடித் தொழுதேத்த, மோனமெய்நியே அவனில் நிற்க, போற்றித் தொழு. (1)

407. விரைமலரைத் தூவியே மெய்விதிர்த்துத் தொண்டர்
நிரையாய் நினைப்பறவே நின்று — கரையில்லா
ஆனந்தங் கொண்டே அவனேநான் என்றுநிதம்
ஞானந்தாற் சொன்னூர் நயந்து.

விரை வாசனை. = வாசனை பொருந்திய பூக்களை அவன் முன்னே தூவி அன்பினால் உளங்குளிரவும் வேர்த்து ஆறாக ஓடும் வேர்வையுங் கண்ணீரும் ஒன்றாகவே தேகத்தை நனைக்க உன் முன்னே, நிரையாக தம்மை மறந்து நின்று போற்றித் துதிப்பார்கள். அன்பு ததும்ப மெய்மறந்து நின்றார்கள். தாயின் மடியிலிருந்தும் குழந்தைபோன்று ஒன்றுபட்ட உள்ளத்தினராய் வேறோர் நினைவுமின்றி அவனே நான் எனும் உணர்வுடன் வேலோன் முன்னிலையில் நின்றார்கள்; அறிவு வடிவான அகம் ஞானசொரூபமாகவே விளங்க, தம்மை மறந்து நின்று என்புருகப் பாடினார்கள். வெறி வேட்கை எனும் பெருங் கடற்குள் மூழ்கி இறவா என்றும் அழியா நிலைபேறான பேரின்பம் அருள்புரிவோனே, வணக்கம். (2)

408. நயப்பார் மிகவியப்பார் நாமறியோம் என்றே
பயப்பா டுடன்பாதம் வீழ்ந்து — சுயபுத்தி
அற்றவராய்ச் சோர்வுமிக அப்பனே யென்றழுவார்
மற்றிரண் டறியார் மனத்து.

'சிவ சிவ' எனும் மாமறை தரும் பொருளை, அப்பொருளை உண்ணின்றுணர்த்தும் புத்திக்கும் மனத்துக்கு மப்பாற்பட்டவனாக நின்று தானேதனிச் சொரூபமான அந்த ஒருவனை நயந்து பாடுவார், மிகவியந்து பாடுவார்; நாம் ஒன்று மறியோமே, இறைவா! எவ்வித

நினைவினலும் நினைக்கவோ மட்டிப்படுத்தவோ முடியாத அகண்ட தத்துவமான உன்னை எவ்வண்ணம் காணுவேன்! எம் முழு முதல்வனே! மூவாமருந்தே. புத்திக்கப்பால் பட்டவனே! கருமேகம்போல் விரிந்து நின்று உன்பாதம் வீழ்ந்து வணங்குவோர்க்கு கருணைமழை கொட்டுபவனே! வேறேர் துணையில்லை யென்றெழும் அன்பர்க்கு உறுதுணையாய் விளங்குபவனே! வேலோனே! (3)

409. மனத்துயரம் மாற்ற மருந்துண்டோ விங்கு
முனைத்துவருஞ் சூரர் முடியத் தனித்தவேல்
உண்டே துணையென்றோர்ந் தும்பர்சிறை மீட்டவனைக்
கண்டே களிக்கக் கருது.

உலகியற் பொருட்களில் நாம் கொண்டுள்ள பற்றுக்களையும் துணையையும், அவனறிவினலே விட்டகன்று, உன்னையும் வந்தடையாதே மிக வருந்தும் மனத்துயரம் மாற்ற மருந்துமுண்டோ? உலகினில் வரும் சூரர் போன்று அடங்கா மதம்பிடித்த யானையை யொத்த இந்த மனத்தை (374) பக்தியெனும் சங்கிலியினல், வேகமாக, தனிப் பெருமையுடன் விளங்கும் வேலோன் திருவடியாகிற கட்டுத்தறியில், ஞானம் எனும் தம்மறிவினல் கட்டி, அகங்காரம் என்னும் அகப்பேய் விட்டல ஆனந்தக் கண்ணீர் பெருக மனங் குழைந்து நிட்டை கூடியே உன்னை என்றும் விட்டு நீங்காதே அடையப்பெற்றேமே என்றனர். (4)

410. கருத்தி லிருக்குங் கதிர்காமத் தோனே
வருத்தமுற் றேன்தேடுகின்றாய் — திருத்தியுன்
சித்தமிசை நித்தம் திகழொழியைக் கண்டுருகி
முத்தனென வாழ முயல்.

(முன்பாட்டு விளக்கம்) உள்ளத்தே நின்றும் வினையின்பயனைத் தன்னையே மயக்கும் மனக்குரங்கின் வருத்தந் தீர்க்க (409)த் தேடுகின்ற அந்தச் சூரிய வெளிச்சம் போன்றவனே உன் மதம்பிடித்த மனத்தைத் திருத்தி (409) பேரொளி கொண்டு சோதியாக விளங்குபவனே என்றும் விட்டு நீங்காதே சித்தமிசை கண்டுருகி என்றும் மொழியாப் பேரின்பக் கடலில் (346) சீவன்முத்தனாக வாழ்ந்து தேகாந்த காலந்தன்னில் நீபோந்து காத்திடல் வேண்டுமென வாழ் (393). (5)

85. கூவு குயிலே

411. கூவு குயிலே பறந்து கூவு குயிலே
கும்பிடுவார் மனத்தானைக் கூவுகுயிலே

அலையில்லாது அசைவற்றிருக்கும் கடல்போன்று, மாயாகாரிய உலகப் பொருட்களில் ஓடும் மனமே, அலையற்று உன்னில் ஒடுங் காயோ! அவ்வசைவு தீர்ந்து ஓடுங்கும் மனமே உள்ளத்தில் ஒடுங்க அகம் என்பார்கள். அங்கேதான் உன் நாதனைக் காணலாம். கூவி அந்த நாதனை அழை. (1)

412. நம்பிக்கை யாய்ப்பறந்து கூவுகுயிலே
நாங்கள் சிவ மென்றுசொல்லிக் கூவுகுயிலே.

(முன்விளக்கம் தொடர) பாசபந்தக் கயிறு அற மனமும் புத்தி யும் அகத்தே ஒடுங்க அகம் தோன்றும். அங்கே குழைந்து குழைந்து உருகித் தழைக்க அறிவே வடிவான சும்மா இருக்கும் அகம் தோன் றும்; அந்த அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் ஒன்றுஞ் செறி யாச் செறிவே சிவம் (365); என்று சொல்லி மனத்தகத்தானை, நாதனை கூவு குயிலே. (2)

413. ஆதியந்தம் இல்லையென்று கூவுகுயிலே
அளந்தறிய வொண்ணுதென்று கூவுகுயிலே.

விளக்கம் (408) காண்க]: பிறப்பும் இறப்பும் இல்லாததே ஆன்மா; ஆன்மா அழியாப் பொருள். பிறப்பும் மூப்பும் இறப்பு மில்லாத அத்தன்மையதாகிய 'சிவம்' (முன்விளக்கம்) எனும் பேரா னந்தத் தெள்ளமுதாக விளங்கும் குயிலே! நீ காலவரையற்றவன், உயிர்க்குயிராம் நாதன்; எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனைக்கும் அருட்கண்ணாக விளங்குபவன் அந்த உயிர்க்குயிராம் நாதனைக் கூவுகுயிலே. (3)

414. நீதி நெறியைச் சென்று கூவுகுயிலே
நித்தியம்நாம் என்று செரல்லிக் கூவுகுயிலே.

கொல்லாமை பெரிதென்னும் அறநெறி நின்று (365). பேத மற்று உரையிளந்து வுணர்வினுள் ஏகாந்தமாய் பொதுநடம் காண் பிக்கும் கடவுளே (403) நாம், நித்தியம்; இறப்பு பிறப்பு, மாறு தல் தேய்தல் அற்று, மாயாகாரிய மனத்துக்கு அப்பாலாய் விளங் கும் நித்தியப் பொருளென்று சொல்லிக் கூவுகுயிலே. பிரமத்தை நாமும் மார்க்கத்தில் நாட்டப்பட்ட மனம் சிறந்த பாதைக்கருகில் நாட்டப்பட்ட கூடாரம் போன்றது. (சிவானந்த லஹரி. சு. 21).

முறை பிறழாத எந்தத் திடத்தால் மனது, பிராணன், இந்திரி யங்கள் முதலியவற்றின் தொழில்கள் யோகத்தால் காக்கப்படுகின் றனவோ அந்தத் திடம் (த்ருதி) ஸாத்வீகமாம். (கீதை 18-33). (4)

415. ஊரும் பேரும் இல்லையென்று கூவு குயிலே
ஒருபொல்லாப்பு மில்லையென்று கூவு குயிலே.

பிறப்பின்மையால் தனக்கென ஓர் ஊருமில்லான், பேருமில்லான், மாயாகாரிய மனத்துக்கு அப்பால் விளங்குந் தன்மையால் இன்பமோ, துன்பமோ, நன்மையோ தீமையோ எனும் கர்மபயன் அற்றவன்; அவனைக் கூவு குயிலே.

வேட்டைப் புலப்புலையர் மேவாத வண்ண மனக்
காட்டைத் திருத்திக் கரைகாண்ப தெந்நாளோ
தாயுமானவர் (எந்நாட். மதத்துவமுறை 9) (5)

416. ஆருமறி யாரென்று கூவு குயிலே
அகம் புறமும் இல்லையென்று கூவு குயிலே.

''அண்ட பிண்டங் காணேன் அகமும் புறமுமொன்றுக்
கண்ட என்னை நீ கலந்த காலம் பராபரமே''

என்று தாயுமானவர் பராபரக் கண்ணீ. (79) இல் தருவதுபோன்று அவன் அண்டத்துக்கும் பிண்டத்துக்கும் அப்பாலாய் அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் ஒன்றுஞ் செறியாய்ச் செறிவாய் (365) சிவமென விளங்குபவன்; யாராலுமறியுந்தன்மை யற்றவன்; கால எல்லையோ தேச எல்லையோ இல்லாமல் அகமும் புறமும் ஒன்றுக, அவனுக எங்கும் எப்பொருளிலும் வியாபித்திருப்பவனை கூவு குயிலே. (6)

417. ஐம்பூதம் நாமல்லவென்று கூவுகுயிலே
ஐம்பொறிநா மல்லவென்று கூவுகுயிலே.

திருவருட் பெருவெளியின்கண் ஐம்பெரும் பூதங்களும் அவற்றின் கருவிகரணங்களான ஐம்பொறிகளும் அந்தக் கரணங்களு முட்பட்டுக் கொண்ட ஆறு தத்துவங்களும் அடக்கமுறும் முழு முதல்வனே; தத்துவங்கள் யாவும் உன்னுள் அடங்குவன; ஆனால் நீ அவற்றிற்கு அப்பால்பட்டவன்; அவற்றுல் கட்டுப்படாதவன். தன் னொளி கொண்டு எல்லாவற்றையுந் தாமே இயக்குபவர்.

அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

(திருக்குறள் - 1). (7)

418. ஆன்மாவே நாமென்று கூவு குயிலே
அங்குமிங் கும்பறந்து கூவு குயிலே

பாசபந்தக் கயிறு அறுந்து மோனம் எய்திய அகம் சும்மா இருக்கும். செயலற்றது. மனப் மாயாகாரியப் பொருள்; ஆறு தத்துவங்களாலும் உண்டாக்கப்படுவது அழிந்து போகுந் தன்மையது. அழியாததும் மாற்றமில்லாததும் மோனம் எய்திய அகத்தே காணப்படுவது ஆன்மா. அறிவே வடிவானது. இந்த ஆத்மா பெரிது. (உப: 4 - - 2 -; - 227). (8)

419. மான் புடனே பறந்து கூவு குயிலே
மரணம் பிறப் பில்லையென்று கூவு குயிலே

[முன்பாட்டு (உப. 4-4-22) - 227 இல் காண்க.]

செயலற்ற இந்த ஆத்மா அறிவே வடிவானது. அறிவுப் பரவெளியில் அறிவினால் காணப்படுவது. திருவருட் பரவெளியில் காணப்படுந்தன்மையினால் மரணம் பிறப்பில்லை. (333) இவ்வாத்மா ஒருபோதும் பிறப்பதுமில்லை இறப்பதுமில்லை. இது இல்லாதிருந்து பிறகு பிறந்ததல்ல; இது பிறவாதது இறவாதது தேயாதது வளராதது. காயம் கொல்லப்படுமிடத்தும் ஆத்மா கொல்லப்படுவதில்லை. (கீதை 2 - 20). (9)

420. நாமேநா மென்று சொல்லிக் கூவு குயிலே
நமக்குக் குறைவில்லையென்று கூவு குயிலே.

நாம் நித்தியம் அழிவற்ற ஆத்மா. நாம் இந்தத் தேகமல்ல; மாயாகாரிய மனமுமல்ல. அறிவுப் பரவெளியில் எங்கும் எப்பொருளிலும் வியாபித்திருக்கும் பரமாத்மனே உள்ளும் புறம்புமாக இந்த உடம்பினுள்ளும் தற்பரனாக விளங்குபவன். அவனே நாம்; நாமே அவன். நமக்குக் குறைவில்லை. [முன்பாட்டுகீதை (2-20)காண்க]. (10)

421. போமே போம் வினையென்று கூவு குயிலே
புண்ணிசம் போல் பாவமென்று கூவு குயிலே

ஆன்மா செயலற்றது; கொல்லப்படுவதுமில்லை கொல்லுவதுமில்லை; [கீதை (2 - 20) 119இல் காண்க]. மாயா காரியமனத்துக்கும் உடம்புக்குமே புரியது தத்துவங்களால் உண்டாகும் நல்வினை தீவினை. அனைத்துஞ் சிவன் செயலெனும் ஆன்மாவினின்றும் வினை நீங்கப்படுகிறது. (339); சிவமே யாம் (365). அது (11)

422. நல்லோரான் வீதியிற் போய்க் கூவு குயிலே
நல்ல தொண்டர் நாமென்று கூவு குயிலே,

மோனம் எய்திய அகம் சிவலிங்க வடிவாம். நிட்டை கூடும் அகம் அதுவே. அத்தகைய அகம் 'பெருந்துறைப் பெருந்தோணி' என்று மாணிக்கவாசகர் கழுக்குன்றப் பதிகம் 4-ம் பாட்டில் தருகிறார்.

அந்த நல்லூரான் வீதியில் போய்க் கூவுகுயிலே நல்ல தொண்டர் நாம்; சிவதெண்டு புரிந்தே அகம் பெருந்தோணியாகி, பின்னும் தொண்டாற்றியே (356) தேதகாந்த காலந் தன்னில் நீ போந்து காத்திடல் வேண்டும். 393). (12)

86. கிளிக் கண்ணி

423. ஆன்மா ஒருபோதும் — கிளியே
அழியாதது நாங்கள்
வீண்பாவம் விட்டிடடி — கிளியே
விளங்கு நல்லூர் தெரியுதடி.

ஞானசம்பந்தர். (3-125-1) கல்லூர், பல்லூர், தொல்லூர், நல்லூர் என்ற சொற்களுடன் கல்லுப்போன்ற மனம் பொருந்திய (பெருமணம்), பலதலங்கள், சொல்வடிவான அம்மை விளங்கும் ஏகதேசம், மோட்சவீடு அழிக்கும் நன்மை பொருந்திய பெருமணம், என்னும் பொருட்களுடன் நாலுவரிகளையுந் தொடங்குகிறார் காண்க. சுவாமிகளும் மோட்ச வீடு நம் அகத்தே காணும் மோனகுருவே உருவாக, அகம்தோன்ற, மோட்சவீடு ''விளங்கு நல்லூர்'' (அகம்) தெரியுதடி என்று பாடுகிறார். மேலும் (3-125-4) ''தல்லியலார் தொழு நல்லூர்ப் பெருமணம்' என்றும் அதற்கு ''கடந்த ஞானிகளுக்கே இல்லறத்தார் நடத்தும் மனை வாழ்க்கை 'வீதியில்' சிறுமியர்கள் செய்து விளையாடும்'' என்று முத்து மாணிக்கவாசகர் பொருள்தரவும் காண்க. 'மனைவாழ்க்கை' வீதியில் என்கிறார்.

ஆன்மா அழியாதது. (419). நாங்கள் தேகமல்ல; ஆத்மா; வீணாக நாங்கள் மாயாகாரியப் பொருளாகிய தத்துவங்களால் உண்டாக்கப்பட்ட தேகம் என்றும் பாவம் புண்ணியம் எல்லாம் நம் முடையது என்கிறோம். அந்த வீண்பாவம் வேண்டாம். [கீதை 2-20) பாட்டு 41 காண்க] மோனம் எய்திய அகத்தே சிவலிங்க வடிவான ''அகம் தோன்ற மோட்சவீடு விளங்கும் நல்லூர் தெரியுதடி.'' என்கிறார். (1)

424. காண்பானும் காட்சியும் போய்க் — கிளியே
கண்டபல பொருளும் விட்டு
மாண்பாகச் சிந்தையிலே கிளியே
வடிவேலைப் போற்றிடடி

உண்பார்க்கு உண்பிப்பாரும், ஒதுவார்க்கு ஒதுவிப்பாரும் உழைப் பார்க்கு உழைப்பிப்பாரும், உணர்வார்க்கு உணர்விப்பாரும், பயில் வார்க்குப் பயில்விப்பாரும் இடத்தாலும் காலத்தாலும் செயலாலும் கலப்பால் உடனுயிருப்பினும் பொருட்டன்மையாலும் பயனெய்தும் பண்பினாலும் வேறுகின்றனர்.

ஒளியுடைக் கண்களுக்கு, ஞாயிறு, ஒளிவிளக்க மெய்துமாறு தன்னொளியை வேறறக்கலப்பித்து வீறுபெறக் காட்டினும், கண் ணொளி வேறுநின்றே காணும். உயிரறிவும் உயிர்க்குயிராம் நாதன றிவும் உடனின்று, நாதனறிவு சிவகுருவாக உருத்தாங்கி உணர்த் தினும், உயிரறிவு வேறு நின்றேகாணும்.

மேலேகூறிய உண்மைகள் விளக்க மோனமெய்தி, நாடகமேடை யில் நின்று நடிக்குந்தன்மையராய், இறைவன் சித்திரித்த காட்சி களை விட்டு, சித்திரமெழுதிய இறைவனையே காண்போம். பின் உயிர் காண்பானாக நின்றே காணும் தன்மையையும் விட்டு, அறியா அறிவில் அவிழ்ந்ததாக சித்தமாய் ஒன்றுகநின்று கண்டும், பின் திரு வைந்தெழுத்துச் ஜோதியில், உலகமும் காண பானும் காட்சியுமாகிய, தற்பரன் சிற்பரன் முதலிய காட்சிகளைக் கடந்து, பேரொளியில் ஒடுங்கிட வேலனைக் கும்பிடடி என்கிறார். (2)

425. ஊணைபொருளும் ஒழியுமடி — கிளியே
உலகமெலாம் அறியுமடி
சேண்பொலியுந் திருவடியைக் — கிளியே
சிந்தையிலே போற்றிடடி.

உலகமும், உடம்பும் மாயாகாரியப் பொருட்கள்; அழிந்துபோகும். சேண் = ஆகாயம்; சேணை = அறிவு; ஞானம்.

ஆகாயம்போன்று அளவுகடந்த ஞானம் விளங்கும் திருவடியை மோனமெய்திய அகத்தினராய் (347) சிந்தை தெளிய சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனைதனையப் போற்றிசெய்குவாய்.

[(424) விளக்கங்காண்க]. (3)

426. சங்கோசை கேட்குதடி கிளியே
தாளமேள முழங்குதடி
எங்கெங்கும் வெளிச்சமடி — கிளியே
ஏந்திழாய் நடந்துவாடி.

மோனகுருவே அகத்தே எழுந்தருள, அறிவே வடிவான அகம், ஞானஉணர்ச்சி ததும்ப சங்தநாதம்போன்று அறிவுப்பெருவெளியில் ஓசையிட்டே நிற்கும். [(405) பிற்பகுதி 'எங்குஞ்சங்குமுழங்க' என்பதன் பொருள் காண்க] எங்கெங்கும், எல்லா வீதியிலும் (423) சனகர், சனற்குமரர் முதலியோர் சென்று வழிகாட்டிய எல்லா வீதிகளிலும் வெளிச்சம், ஞான வெளிச்சம் பிரகாசிக்கு தெடி (வீதிக்கு வீதி வெளிச்சம் 382) பெண்ணே நீசெல்லும் வீதிவழி நடந்து வாடி.

ஆன்மாவைப் பெண்ணென்றும், உணர்வினுள் நின்று உணர்வினை அருளும் உயிர்க்குயிராம் நாதனை (423) புருடன் என்றும் அழைப்பர். [இப்பதிகத்தில் ஆன்மாவே. கிளி. முன்பதிகத்தில் குயிலே ஆன்மா]

(4)

427. சண்பக மரத்தடியிற்—கிளியே
சாதுக்களின் கூட்டமடி
மண்போட்டால் மண்விழாதே—கிளியே
மனிதரெல்லாம் கூடிக்கொண்டார்.

சண்பகப்பூ கிடைத்தலரிது. இறைவனுக்குச் சாத்துவார்கள். சண்பக மரத்தடியில் சாதுக்கள் கூட்டம்; அவர்கள் கூட்டம் ஒன்று கூடியே இறைவனைக் கூவியழைக்கிறார். கூட்டம் பெரிது வாழ்த்தொலியின் பெருமையையும் குறிக்கிறது. (5)

428. மாறிப் பொறிவழிபோய்க்—கிளியே
மாறுட்டம் கொள்ளாதே
ஆறி நடந்துவாடி—கிளியே
அதிசயங்கள் மெத்தவடி.

உன் இயல்புக்கு மாறுக ஐம்புலேடர் வசயில் அகப்பட்டு அலையாதே; பின்உன் பிழைகளெல்லாம் விலே விலேவிக்க மனம் கொள்ளாத கலக்கத்துடன் தயங்குவாய். இளமையிலேயே பொறியைந்தையும் இறைவன்பால் செலுத்தி சிற்றின்ப வாழ்க்கையை ஒறுத்திடுவாய் (140). ஐம்புலன்களையும் இறைவ.. பால் செலுத்தி பாசபந்தக் கயிறுகட்டவிள சும்மா இருக்கும் அகம்தோன்ற கருவையே உருவான கடவுளேவேண்டு (192) அறிவே வடிவான அகம் ஞான வளர்ச்சிதரும் (426) அதிசயங்கள் பல; ஞான ஒளிதரும் கண்டு மகிழ்வுறுவாய். (6)

429. தேர் முட்டிப் படிமேலே —கிளியே
செல்லப்ப னென்ற சீமான்
ஆர்வமுடன் இருக்கிருண்டி—கிளியே
அங்குபோவோம் வந்திடடி.

இறைவன் தன்னுடைய தேர்மீது வீதியிற் சென்று எல்லோருக்கும் காட்சிதருகிறவன். ஒவ்வோர்வீதியிலும் (423); [366 காண்க]; ஆடவர்கள் நின்று ஜோதிப்பிரகாசனே வீதிவரும்போது தரிசிப்பார்கள் அந்தத்தேருக்கு ஏறும் படியில் செல்லப்பன் இருக்கிறான்டி கிளியே; மிக ஆர்வமுடன் மெய்யன்பர்களே வரவேற்று உடன் நின்று உணர்வினுள் இறைவனே உணர்த்தி மேலே செல்லும் வழிநின்று வழிகாட்டுவனடி கிளியே. அங்கு போய்ச் சேர்ந்து அவனே வணங்கி அவனுடைய அருளைப்பெற்றிடடி. (7)

430. கிட்ட நெருங்கையிலே —கிளியே!
கிடுகிடென்று நடுங்குதடி
முட்டாளைப் போலேயவன்—கிளியே!
முகமும் விளங்குதடி.

மண் பெண் பொன் ஆசைகளினால் கட்டுண்டு தளரும் மானிடர் அவனுக்குக்கிட்டப் புகின் ஏசுவான். ஆகையிலே அவன் தன்னை அணுவோரை குறுக்கிட்டு விசாரணைகள் பல உள்ளே செய்வான். உன்னுடைய மனம் பரிசுத்தமற்ற தாயின் நடுங்கும்; தூயமனம் ஒடுங்கும். பரிசுத்தமான நெஞ்சுடையாரை அவன் அன்புடனழைப்பான், உள்ளே நின்று விசாரித்து நெறிதவறின் ஏசுந்தன்மைபால் முட்டாள்போல் தோன்றுவான். (8)

431. பித்தனெனப் பலபேரும் —கிளியே!
பேசிப்பேசி இகழ்வார்கள்
எத்தினாலும் அவன்மனமோ—கிளியே!
எள்ளளவுங் கலங்காதே.

அவன் வினவுந்தன்மையிலும் அற்றவர்களை உதறித்துரத்துந் தன்மையிலும் முட்டாள் போன்றவன். பித்துப் பிடித்தவன் என்றே கூறுவர். தேனுந்து வேங்கைமரம் போன்று வள்ளியின் இதயத்தே முருகன் நின்றான். இவனுடைய இருதயமும் வைரமரமே. பரிசுத்தமற்ற நெஞ்சுடையாரைப் பக்கத்தால் செல்லும் போதும் வைவான் துரத்துவான். அஞ்சான் உன்மத்தம் பித்துப்பிடித்தவன். (9)

432. பத்தியுடன் வந்திடடி —கிளியே!
பார்த்தவுடன் அஞ்சாதே
வித்தகஞ்சேர் திருவடியில்—கிளியே!
விழுந்துநீ கும்பிடடி.

திடசித்தம் எனும் கொம்பரிலே பக்தி எனும் கொடி படர்ந்தே முக்தி எனும் பழம் தரும். திடசித்தத்துடனே செல்லப்பனெனும் சிவதருவாக உருத்தாங்கி எழுந்தருளிய முழுமுதல்வனும் சிவபெருமானில் ஏகபக்தியுடன் நீ கடைப்பிடித்து நிற்கும் வழிநின்று எவ்விதத்துன்பம் நேரினும் அஞ்சாதே திடமுடன் நடந்துவா. தாயுமானவர் இந்நிலையை உணர்த்தத்தருவது:-''உலகியலில் கொண்டுள்ள பற்று முற்றுமற 'சிவசிவ' எனும் மாமறை தரும், ஏகாந்த சித்தத்திற் திகழும், முழுமுதல்வனையே, 'எல்லாம் சிவன்செயலே' எனும் உண்மை அன்பினுடன் பற்றிக் கொண்டால் திருவருள் கொண்டு விளங்கும் பேரின்பம் எத்தகையதோ'' எனும் பொருள்தர.

''பற்றிய பற்றற உள்ளே—தன்னைப்
பற்றச் சொன்னன் பற்றிப்பார்த்த இடத்தே
பெற்றதை ஏதென்று சொல்வேன்—சற்றும
பேசாத காரியம் பேசினன் தோழி - சங்கர

(ஆனந்தக்களிப்பு.3)

இவ்வண்ணம் 'எல்லாம் சிவன்செயல்' எனும் உண்மை அன்புடன் நீ கைப்பிடித்து நிற்கும் வழிநின்று, ஈற்றில் பேரின்பம்தரும் துன்பங்கள் நேரிட அஞ்சாமல் நாடகஆசிரியராக வித்தகனர் சித்திரிக்கும் திருவடியை முழு அன்புடன் பணிந்தேத்தி ''அவன் செயலேயாவும்'' எனும் வித்தகஞ்சேர் திருவடியில் விழுந்து கும்பிடடி. (10)

433. நாமறியோ மென்றுசொல்லிக் கிளியே!
நகைசெய்வான் நாணுதே
தாமதம் பண்ணுதே—கிளியே!
சடுதியாய்க் கும்பிடடி.

செல்லப்பனென உருத்தாங்கி நிற்கும் முழுமுதல்வன் சிவன், செயல்' எனும் உண்மை விளங்குபவன், நீ வேண்டி அழும் நேரம் 'நாமறியோம்' என்று நகைசெய்வான். நாணுதே, வெட்கமுறுதே, ''எல்லாம் அவனே எங்கும் அவனேடி'' என்று சொல்லிச் சடுதியாய்க் கும்பிடடி (432) களவுபடா இருதயம் (53). (11)

434. கோணுத சிந்தையுடன்—கிளியே!
கும்பிட்டு நின்றிடடி
வீணன ஆசையெல்லாம்—கிளியே!
விட்டோடும் வெற்றியடி.

திடசித்தம் எனும் கொம்பரில "எல்லாம் அவனேடி எங்கும் அவனேடி" எனும் சிவசிவ எனும் மாமறை தரும் உண்மை அன்புடன் பக்தி எனும் கொடியை கோணாத வளரச் செய்து கும்பிடு நின்றிடடி. ஐம்புலவேடர் தரும் இச்சைகளும் ஆசைகளும் தாமே உன்னை விட்டகலும். வெற்றியுடன் ஆனந்தக் களிப்புடன் விளங்குவாய்; (12)

435. ஆரறிவா ரென்றுசொல்லிக் —கிளியே!
அதட்டுவான் அஞ்சாதே
பாரறிந்த பித்தனடி—கிளியே!
பட்சமுடன் பணிந்துநட.

செல்லப்பனென உருத்தாங்கி நிற்கும் முழுமுதலாம் சிவபெருமான் நாம்வேண்டி அழும்நேரம் 'ஆரறிவார்', ஏதும் இருவருளால் நடப்பது' என்று சொல்லி அதட்டுவான். அஞ்சாதே, சஞ்சலங் கொள்ளாதே; உன்னிருதயத்தே நீ காணும் முழுமுதல்வன், 'அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நெறியாம் நீடருள் பராநந்த ஒன்றுஞ்செறியாச் செறிவே சிவமெனும் முழுமுதல்வன், பாரறிந்த உன்மத்தம் பிடித்த பித்தன்; ஆகையால் திடசித்தத்துடன் பக்தியெனும் கட்டுத்தறியில் மனத்தைக் கட்டிப் பட்சமுடன் பணிந்துநட; (13)

436. கண்டார் நகைப்பரெனக்—கிளியே!
கண்மணிநீ அஞ்சாதே
பண்டார வேடமடி—கிளியே!
பாடிப் பணிந்திடடி.

நீ கொண்டு நிற்கும் அன்பு நெறியும் உன்மத்தம் பித்தையும் கண்ட ஊரார் நகைசெய்வார். புத்தபிரான் இறைவன் திருவருளால் அவனுடைய தரிசனங்கண்டபின் தன்னுடைய தேசத்தைப் பார்க்க ஒருபோது திரும்பினர்; ஓர்மடத்தில் இரவில் தங்கியும் பகலில் பிச்சை எடுத்து உண்டும் வந்தனர். கேள்வியுற்ற தந்தையாசிய அரசன் அங்கு சென்று "என்சந்ததியில் ஒருவரும் பிச்சை எடுத்துண்ணவில்லையே" என்றார். புத்தபிரான் "ஆனால் என்சந்ததியில் எல்லோரும் பிச்சை எடுத்தே உண்டார்கள்" என்று பதிலளித்தார். அதேபிச்சை எடுத்து உண்ணும் பண்டார வேடமடி; விழிநீர் பெருக நெஞ்சி அழுது உன்னைக் நெஞ்சிப் பிச்சையெடுத்து இருதயத்தே உலகத்த கருணை வெள்ளம் பெருக்கெடுக்க பாடிப் பணிந்தேத்து அவனை. (14)

437. ஒண்டொடியே வந்திடடி—கிளியே!
உள்வீதிக்கும் போவமடி.

வண்டிவண்டி யாயிளநீர்—கிளியே!
வந்து குவியுதடி.

வானப்பிரஸ்தனுயோ, சிவான்மா பரமான்மாவோடு ஒன்று தற்கு அடிப்படையாகும் சர்வசங்க பரித்தியாகம்' எனும் சந்நியாசி யாகவோ ஒண்டோடியாய் வந்திடடி கிளியே, உள் வீதிக்குப் போவோம். மோனமெய்திய அகம் சிவலிங்க வடிவாக, சிவமாகத் தன்னைக்காணும் (435) பண்டாரவேடம் பூண்டு, பிச்சையெடுத்து அகங்காரத்தைச் சுட்டெரித்து (436) நின்ரூல் சந்நியாசியாக உள் வீதிக்குச் செல்லலாம். நிட்டை கூடலாம் திங்களுங் கங்கையும் அணிந்த சடையோனைத் தரிசிக்கலாம். (15)

438. வகைவகையாய்ப் பச்சரிசி –கிளியே!
வாழைக்குலை தேங்காய்கள்
உவகையுடன் கொண்டுவந்து – கிளியே!
உதவுகிறூர் பார்த்திடடி.

அகம் ஒன்று பட்டு வேறூர் நினைவுமின்றி நிட்டை கூடிஞல் பின்னும் திருவருளினுல் பருமாமணிமுத்தம் என்று ஞானசம்பந்தர் (1-69-5) தம் ஞானமணி முத்துக்களைத் தருவது போன்ற மொட்டுமலர்களை இறையருள் கொண்டு உன்முன் குவிக்கும். (அதே 69 பதிகத்தைப் படியுங்கள்) இவையாவும் கொண்டு அவன் பணிகொள்ளும் முறை [8 திருச்சதகம் 46]

கொள்ளுங் கில்லேனை அன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அருமலர்க் கொன்றையான்
நள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல் நின்ற எந்தையே (16)

439. கர்ப்பூரப் பெட்டிகளும்—கிளியே!
கட்டுக்கட்டாய்க் கரும்புகளும்
பொற்பூவும் சந்தனமும்—கிளியே!
பொலியுதடி வீதியெல்லாம்.

முன்பாட்டு விளக்கம் தொடரவே. நிட்டை கூடி எள்ளில் எண்ணெய்போல் பரவான்மாவாக எப்பொருளிலும் வியாபித்திருக்கும் சிவத்தை சைதன்யப் பொருளான உலகினை, மீஞட்சிசமேத சொக்கநாதனை, நிட்டையில் கண்டு தரிசிக்க சிவ சின்னங்கள் - கர்ப்பூரம் போன்றவையும் இனிப்பும் குளிர்ச்சியுந்தரும் கரும்புக்கட்டுகளும், அழகுடைய பூக்களும், சந்தனமும் — நிட்டையிலே குவியும். (17)

440. கண்டாயோ கார்மயிலே—கிளியே!
கந்தன்விளை யாட்டுக்களை
மண்டலங்கள் நடுங்குமடி கிளியே!
மணியோசை கேட்குதடி.

உன்னைக்காணும் நினைவில் அசையாது நிற்கும் நிலையில் மண்டலங்கள் நடுங்கும், உலகில் நாம் கொண்டுள்ள எண்ணங்களெல்லாம் தடுமாறவும் ஏக்கமுறவுமே, கந்தன், வித்தகனர் அருளும் பூக்கள், சந்தனம் போன்று அருளுதையமாகும் ஞானப்பொருட்கள் வழிநின்றுதவ, அவனுடைய கூத்தைக் கண்டனையோ, கதவுதிறபடும் நிலை கிட்டுதடி:

தாயுமானவர் இன்நிலையைக் குறிக்கிறார் காண்க:

நிற்கும் நன்னிலை நிற்கப் பெற்றார் அருள்
வர்க்க மன்றி மனிதரன் றேஐயா
துர்க்குணக் கடற் சோங்கன்ன பாவியேற்
கெற்குணங்கண் டென்பெயர் சொல்வதே.

'மண்டலங்கள் நடுங்குமடி' என்று தருகிறார். (18)

441. பந்திபந்தி யாயிருந்து —கிளியே!
பார்ப்பார்க ளெல்லாரும்
விந்தைசேர் மந்திரத்தைக்—கிளியே!
விளம்புகின்றார் கேட்டிடடி.

தரிசனங்கிட்டும் நேரம் வரதனை ஆதரிப்பார் ஐந்தெழுத்து மந்திரத்தை தன்னிதயத்தே மன்னி உற்சாகம் காட்டுவது போல் காட்சிதருவான், கந்தன் திருவருளே எல்லாம்.

(19)

442. பச்சைப் பசுங்கிளியே—கிளியே!
பார்த்தாயோ கதவுகளை
அச்சமின்றி மூடிவிட்டார்—கிளியே!
அபிடேகம் ஆகுதடி.

இந்த அதிசயமான அந்நிலை; கதவுகள் மூடியிருக்கக் காண்கிறேன். கதவுதிறந்தால் உன்னைத்தரிசிக்கலாம். ஆனால் என்னை என்னை கிளியே. தரிசனங் கொடுக்குமுன் அகம் சிவலிங்க வடிவாக விளங்குதல் அபிஷேகமாகும்; அதைத் திருமூலர் குறிக்கிறார் காண்க:

உரையற்ற தொன்றை உரைசெய்யு மும்மர்கள்
கரையற்ற தென்றைக் கரைகாணலாகுமோ
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற்றிருந்தான் புரிசடை யோனே. (10—2915)

அப்பர் சுவாமிகள் தருவதைக் காண்க:

துறக்கப் படாத வுடலைத் துறந்துவெந் தூதுவரோ
டிறப்ப னிறந்தால் இரு விசும்பேறு வனேறிவந்து
பிறப்பன் பிறந்தாற் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோ வென்னுள்ளங்கி ந்து மறுகிடுமே.

(4-113-7) (20)

443. ஏக மனதாகிக்—கிளியே!
எல்லாரும் நிற்கையிலே
வேகமுடன் கதவுகளைக்—கிளியே!
வேதியர்கள் திறந்துவிட்டார்.

ஆசான் அருளிய அருமறையின் வண்ணம் நின்று சிவநினை வல்லாது வேறு உலகியல் நினைவொன்றும் நினையாமல் நிற்போம் ஆயின் அவ்விடமே நிலையான அருளகமாகிய பொருளிடம் என்பர். ஏகமனதாகி ஆறுறுதத்துவங்களு மொன்று சேர்ந்து நின்ற அந்நிலையில் மேலாம் நிட்டை வந்து பொருந்தும் வேகமுடன் கதவுகளைக் கிளியே வேதியர் திறந்துவிட்டார் உள்ளே அவனைத் தரிசிக்கலானேன். (21)

444. அஞ்சடுக்குத் தீபமுதல்—கிளியே!
அடுக்கடுக்காய்த் தீபமெல்லாம்
அந்தணர்கள் காட்டுகிறார்—கிளியே!
அன்புடனே கும்பிடடி.

பரசிவான்மாவாக விளங்கும் தீபஒளிகள் ஒன்றுகூடியே ஒரு ஜோதி விளக்காக அந்தணரான இறைவன் திருவருளால் கடந்த மேலாம் நிட்டையில் நாம் காணுவோம். பரசிவ ஆன்மாவாக, தடத்தப்பொருளாய் நாம் நந்தி தரிசனத்தில் கண்டதையே இப்போ கர்ப்பூரவுண்டை கரைவதுபோல் அம்மனங் கரைய நாம் காணுவது; பரசிவான்மரவான சைதன்னியப்பொருள், சொரூபமான அம்மையின் வடிவமே, அந்தச் ஜோதிரூபம். முன்கண்டது "Cosmic soul" இப்போ காண்பது "Cosmic Consciousness. (22)

445. அங்கையிலே பூவெடுத்துக் கிளியே!
அந்தணர்கள் ஆசீர்வாதம்
சங்கையின்றிச் சொல்லுகிறார்—கிளியே!
சண்முகனை வேண்டிடடி.

தில்லையம்பல தரிசனங்காணவே அந்தணனை இறைவன் ஞானப்பொருட்களை, புஷ்பங்களாகப் போட்டு ஆசீர்வதிப்பான். அந்த ஞானப்பொருட்களைக் கொண்டு சண்முகனைக்கும்பிடு. (23)

446. திருநீறுஞ் சந்தனமும்—கிளியே!
தீர்த்தம்பரி மாறுகிறார்
செங்கமல மடமாதே—கிளியே!
சேவித்துநீ வேண்டியணி.

நீறு பூசிய பொன்மேனி பொலிந்து தோன்றும். அஞ்ஞான இருள் விட்டு நீங்கியதே, அதனுண்மை. பாசபந்தக்கயிறு எரிந்து விட்டது. பேரானந்தமெனும் தேவாமிர்தம் நமக்குக் கிடைத்தது. அந்தணனை இறைவன் பரிமாறினன். சாந்தமும் பரசிவரின்மாக்களில் கருணையுமே உண்டானது. (24)

447. அர்த்தசாமப் பூசைக்குநாம்—கிளியே!
ஆரணங்கே நிற்பமென்றுல்
மெத்தநேர மாகுமடி—கிளியே!
வீட்டிலேயா ளில்லையடி.

காலத்தைப்போக்காமல் மோட்சவீட்டுக்குப் போவோம். (25)

448. விரைவாய் நடந்துவாடி—கிளியே!
வீணர்தங் கூட்டமடி
மாரிக்கால மானதனுல்—கிளியே!
மாகவன மாய்நடடி.

கருணை மழை கொட்டவே வீணர் கூடுவர்; சித்துக்களும் உண்டு கவனமாக வாழ்க்கையை நடத்துவாயாக (403) (26)

449. ஓடாதே வழுக்குமடி—கிளியே!
உரைத்திடடி ஐந்தெழுத்தை
வாடாதே வீட்டுவாசல்—கிளியே!
வந்தோமே திறந்திடடி.

ஜீவன்முத்தனாக வழுக்காமல், சித்திகளில் மனஞ்சிதறி வழுக்காமல் ஐந்தெழுத்தை மன்னியே பக்தியெனும் கயிற்றினால் மதம் பிடித்த மனதைக்கட்டி நான் எனும் அகங்காரம் துகள்பட, விட்டு வாசல் பக்குவமாய் அடைந்து, பிறப்பை அறுத்து தேகத்தை விட்டிடுவாய் கிளியே. ''வெளியில் வெளிபோய்'' எனும் மூவர் பாட்டு 274 இல் காண்க; (27)

87 கிழமை வணக்கம்

450. தாயினு மன்பு தழைத்த குருவே தயாபரனே
தீயினு மிக்க திருமேனி யும்நின் திருவடியும்
நாயினு மிக்க கடையேனை ஆள நலமுடனே
ஞாயிறு தோறும் வருவாய்நல் லூரில்வாழ் நாயகமே

தீதான் பரிசுத்தமாயிருப்பதுமல்லாமல் தூய்மையாக்கும் குணமும் உடையதே. செம்மேனியுடையது அங்கைத்தீயன் என்றும் சிவபெருமானையழைப்பர். அண்டினோரைத் துய்பிக்கும் குணத்துடன் பேரருளுடைமை முதலிய எண்குணத்தான் திருவடியும், பால் நினைந்தூட்டும் தாயினுஞ்சாலப் பரிவுடைய தனக்குத்தானே நிகராகிய உயிர்த்துணையுமெனவும் எழுந்தருளிய குருவே! உருத்தாங்கி கருணை மழை பொன்று மழைபொழியும் தயாபரமூர்த்தியே! ஒருவன் வளர்த்த நாய் எஜமானின் காலடியிற் படுத்துக்கிடப்பதே அதனுடைய ஆற்றல், அத்தகைய நாயினுங் கடையேன் அன்புடனே உனை அண்டி நிற்க என்னை ஆண்டு அருள்புரியும் வண்ணம் கருணையே உருவாகி ஞாயிறு தோறும் ஆறுமுகமான பொருள் தருபவனே; வருவாய் நல்லூரில், எம்மகத்தே.

451. அங்கையிற் போதுகொண் டெப்போதும் போற்றும் அடியவர்கள்
தங்குறை தீர்க்கும் தயாநிதி யேசத்தி வேல்முருகா
பங்கய னைக்குட்டி முன்சிறை வைத்திட்ட பாலகனே
திங்கட் கிழமை வருவாய்நல் லூரில்வாழ் தேசிகனே.

பாசபந்தக் கயிறு அறுந்த மெய்யன்பர் உனைப்போற்றும் போது களவுபடா இருதயம் பொன்னம்பலமாக (53) விளங்க, உடன் செய்யும் வினையை அங்கைத்தீ, 'இருட்டிலும் நீயே செயல் புரிபவன், எனும் உண்மை, கொண்டு, சுட்டெரித்து என்றுந் தூய்மையுடையோனாய் (55) கூறுமடியார் வினைதீர்க்கு முகமுடன் விளங்கும் சக்தி வேல் முருகா! பிரமனைக் குட்டிச் சிறைப்பிடித்த குழந்தை முருகா! திங்கட்கிழமை தோறும் நல்லூரில் நம்அகத்தே எழுந்தருளி அருள் புரிவாயாக; (2)

452. ஒவ்வா தனசொல்லி ஊரூர்கள் தோறும்
உலைந்தலையும்
இவ்வீணற் காக்க இனிவரு வாயிள வேல்முருகா
தெய்வானை வள்ளி தினமும் அணிசெய்யுஞ் சேவகனே
செவ்வாய்க் கிழமை வருவாய்நல் லூரினிற்
றேசிகனே.

வினைப்பயனெனு மம்பலத்தே வீணமுதலாம் முதல்வன், முழு முதல்வன் உயிரில் பொருள் உயிருள் பொருள் எப்பொருளிலும் வியாபித்திருந்து இயங்குகிறான் எனும் உண்மையை உலகெங்கும்மறந்து வீண்வாது பேசி உலைந்தலையுமிவ் வீணன்; பாசபந்தக் கயிறு அறுத்த வள்ளியின் இருதயத்தே முருகனே நின்று, முருகனே வள்ளியாகச் செயல் புரிந்த உண்மையைக் காட்டுந் தெளிந்த சிந்தையுடன் உன்னை வேண்டி நிற்க, தெய்வானையும் வள்ளியும் உன்னுடைய அழகுமிகுந்த சத்திகளாக விளங்குபவனே! இளமுருகோனே; அவ்வண்ணம் தூய்மை வாய்ந்த வீணனைக் காக்கச் செவ்வாய்க்கிழமை நல்லூரில் அவன் அகத்தே வருவாய், வந்து அருள் புரிவாய் இளமுருகோனே! (3)

453. பதமலர் போற்று மடியவர் தம்மைப் பரிவுடனே
இதமுடன் காக்குங் குருமணி யேயெழில் சேர்முருகா
சதமுனை யன்றி ஒருவரு மில்லையித் தாரணியிற்
புதனெனும் வாரம் வருவாய்நல் லூரில்வாழ்
புண்ணி யனே.

தாமரை போன்றும் அகம், பாசபந்தக் கயிறு அறுந்து சும்மா இருக்குமகமுடையார்; மெய்யன்பர்கள்; மோன குருவாக எழுந்தருளும் அகமுடையானே! கருணையே உருவான கடவுள், தாயினுமினிய அன்புடனே நின்று அருளும் உயிர்த்துணைவனே, சிவகுருவே, குருவாக உருத்தாங்கி எழுந்தருளிய முருகா! தன்னை வந்தடைந்த மெய்யன் பரை மூடிவிலாற்றலுடைமை எனும் எழில் கொண்டு உள்நின்று காப் பவனே! ஓர் விநாடிதானும் வேறுதுணையின்றி உலகினில் உன்னையே தஞ்சமென்று நாடின எளியேனைக்காக்க நல்லூரில் வாழ், அறிவே வடிவான அகத்தே வாழும் புண்ணியனே புதனெனும் வாரம் வரு வாய், அருள்தருவாய். (4)

454. தயாநிதி யேயென்று தாள்போற்றும் அன்பர்
தமக்குவரும்
வியாதி வறுமை விலக்கு மருந்தே விழுப்பொருளே
தியான நிலையி லுனைக்கண்டு தேறித் தெளிவதற்கு
வியாழக் கிழமை வருவாய்நல் லூரில்வாழ்
வேலவனே.

(முன்பாட்டு விளக்கம் தொடர) சும்மா இருக்கும் அகம் மோனமெய்திய அகத்தே மோனகுருவே எழுந்தருளி நின்று செயல் புரியுமகமுடையோன், கருணையே உருவான கடவுள், அவனுடைய திருத்தாள்களே உண்மை யன்புடனே சேவிக்க அவர்களுடைய வறுமையையும் பிணியையும் நீக்குபவனே! தண்ணெளி கொண்டு விளங்கும் ஜோதிவடிவானவனே! பற்றற்ற மனமானது உன்னுடைய திருவடித் தாமரையில் ஒடுங்கி உன்தியானத்தில் கிடக்கும் மோனமே உருவான அகத்தின்கண் நீயே எல்லாம் செய்பவன்; நீயென்றும் நானென்றும் இருநிலை கிடையாதே யென்று தேறித்தெளிந்த சிந்தையிலுறைவோனே வியாழக்கிழமை வருவாய் வந்து சிந்தையிலுறைந்து அருள் தருவாய்: (5)

455. புள்ளிக் கலாப மயிலேறும் வேலவ புண்ணியனே
தெள்ளித் தெளிந்தவர் சித்தத்தி லூறும்
தெளியமுதே
வள்ளிக் குகந்தவ னேமுரு காமற வாமலனே
வெள்ளிக் கிழமை வருவாய்நல் லூரில்வாழ்
வேலவனே.

அழகு பொருந்திய மயில் தன்னுடைய அழகுகர ஆடுவதுபோன்று நல்வாழ்க்கை நடத்தும் மெய்யன்பர் அகத்தே நின்று வள்ளிக்கருள் புரிந்த வண்ணமே செயல்புரிந்து மயில் ஆடும் அழகினைக் கொடுக்கும் வேலவனே, புண்ணியனே! நீயும் நானும் வேறு என்னும் வேறுபாடற்ற அந்நிலையில் எல்லாம் முழுமுதல்வனே; அன்றி ஒன்றில்லை இன்றி நீயில்லை எனும் முண்மையை அவனே முழுதுமுண்மையானவன், எனத் தெள்ளித் தெளிந்தவர் உள்ளத்தே போதருசிரியர் எனும் மருத்துவனன இறைவன் அருள்புரிய, ஊற்றெடுத்த தெள்ளமுதே; வள்ளியின், மோனமே உருவான அகத்தே, முருகனே வள்ளியாகச் செயல் புரிந்தான் எனும் தெளியமுதம் ஊற்றெடுத்துப் பெருக அருள் கொடுத்த தன்மைபோல் வெள்ளிக்கிழமை நல்லூரில், என் தூய்மையான அகத்தே வருவாய்: (6)

456. இனியே தெனக்குன் னருள்வரு மோவென
வேங்கிமனம்
தனியே யிருந்து வருந்து தையோசத்தி வேல்முருகா
கனியே கனியி ரசமே அடியனேன் கண்களிக்கச்
சனிவாரம் தன்னில் வருவாய்நல் லூரில்வாழ்
சண்முகனே.

வேல் முருகோனே! சண்முகனே! அடியேன் பலநாள் விண்ணப்பித்தும் நீர் இரங்காமையால் எளியனேற்கு நின் திருவருள் இனி எப்பொழுது வாய்க்குமோ என எண்ணி என்மனம் தனியேயிருந்து பதைக்குதையோ ஒன்றுபட்ட உள்ளம், நீவேறு நான்வேறு எனும்

வேறுபாடற்ற அந்நிலையில் இன்று நல்ல நலத்துடனும் உறுதியுடனும் வாழும் அடியேன் இறவாது நாளையும் இவ்வாறு நலத்துடன் வாழ்வாரென எண்ண உறுதிப்பாடில்லையோ? பக்தியெனும் கொடியில் பழுத்த முத்தியெனும் கனியே! அதுதரும் பேரானந்தத் தெள்ளமுதமே! அகத்தே ஊறும் அழியா இன்பம் என்னை ஒருங்கே மூடி எனைமறந்து கிடக்க சனிவாரம் தன்னில் வருவாய் நல்லூரில் வாழ்சண்முகனே! (7)

88 நல்ல மலர்

நேரிசை வெண்பா (அந்தாதித் தொடை)

457. நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்லமனத்தோடு நாம்பணிந்தால் —நல்லமயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி.

ஞான பூசைக்குரிய அட்டமாமலருடன் (244) நம் நெஞ்சினுள்ளிருக்கும் இறைவனைப் போற்றித் தொழுது பூசை செய்து தூயமனமானது அகத்தே ஒடுங்க நாம் பணிந்தால் முருகனே நம்முன்னின்று நம்வாழ்க்கை நல் வாழ்க்கையாக முருகனின் மயில்ஆடுவது போல் நல்லழகுதரநாம் உலகினில் இனிது வாழமுருகன்அருள்புரிவான் (455) அவ்வண்ணம் நாம்வாழ நம்முள் நின்று முடிவிலாற்றலுடைமை எனும் எழுச்சியை நமக்கு அருளுபவன் முருகன். எல்லாம் அவனேடி எங்கும் அவனேடி, என்று சிந்தை தெளிந்து தேறி உவக்குமே: (1)

458. தெளியுமே நின் சிந்தை செல்வனருள் பொங்கி
வழியுமே தானவர்கள் வானோர் —ஒழிவின்றி
வந்து வணங்கும் வளஞ்சேரும் நல்லூரிற்
கந்தவெனச் சொல்லிக் கருது.

''எல்லாம் அவனேடி எங்கும் அவனேடி'' என்று நாதத்தின் மேல் பொது நடங்காட்டுந்தில்லைக் கூத்தனையே கண்டு சிந்தை தெளிந்திட அவன் திருவருளே வேண்டி நிற்போம் (175) நித்தம் நித்தம் அகம் மோனமெய்த நல்லூர்க் 'கந்த' வென சிந்தித்து சிந்தித்து எல்லாத்துறையிலும் எல்லாவிதியிலு மவனையே பொதுநடம் புரியும் 'மயிலேறு கந்தனையே' திடமுடன் ஒப்புக் கொண்டு பக்தி எனும் கொடியை வளர்: (2)

459. கருத்திற் கருத்தா யிருக்கும் கழற்றாள்
விருத்தர்களும் பாலர்களும் வேண்டிப் —பெருத்த
மயிலிவரும் வேலா! விமலா வெனச்சொற்
பயிலவறு மெங்கள் பவம்.

(முன்பாட்டு விளக்கம் காண்க) சிந்தித்துச் சிந்தித்து எத்துறையிலும் சிந்தனுதீதனுகி அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தனுகி தன்னையே மறந்து புத்திக்கப்பால் பட்ட அந்நிலையில், மோனமெய்திகந்தனே உண்ணின்று செயல்புரியும் விமலனுக எவரேனும் வாழமயிலேறு முருகன் அருள்தர சிவயோக வாழ்வு நாம் வாழ்ந்து நான் எனும் ஆணவ மலப்பிணிப்பு எம்மை விட்டு நீங்க புன்மை தீர்த்தாண்ட விமலன் அருளுவன். (4)

460. பவம்நீங்கும் பன்னிருகை வேலா வெனவே
தவமோங்குஞ் சாந்தம் பொறுமை—சிவமாம்
மலமு மடங்குமே மாசனைத்துந் தீருமே
சினமு மடங்குமே தேர்.

வேல்கொண்டு குத்தி புன்மைதவிர்த்து பவம் நீங்கும் கரங்களையுடைய வேலவ! 'சிவசிவ' எனும்மாமறை தரும் திருமந்திரத்தினுல் நற்றவம் ஓங்கிவளர காமாதி குணமெலாங் கட்டவிள வல்வினைதொல்வினை எல்லாமே விட்டுநீங்க சாந்தமும் பொறுமையும் ஒன்றுசேர்ந்து விளங்கும் தவஞானங் கைவர மும்மௌனம் வந்தடைய மோனகுருவே எழுந்தருளிச் செயல்புரியும் அகத்தினராய் விளங்குவாய் என அறிகுதி உன்அறிவினுலே. (4)

461. தேரடியிற் சென்று தரிசித்தாற் போதுமெனப்
பாரறியச் சொன்ன பழங்கதையை—நீரறிய
மாட்டீரோ நின்று மனங்கசிந்து பாடீரோ
நாட்டீரே கேளீர் நலம்.

தேர் இறைவனுடைய வண்டி. அந்தத்தேரில் நாம் ஏறிச்சென்ருல் இறைவனுடன் ஒன்றுபட்டு வாழலாம் (429). மோனங் கைவர (460) மோனகுருவே எழுந்தருளிச் செயல்புரியும் உண்மை விளங்கும் அறிவினராய் அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் (348) வேறூர் நினைவுமின்றி தன்னை மறந்து திருவைந்தெழுத்தை மன்னியோ புகழ்மாலைகளைப் பாடியோ ஒன்றுஞ்செறியாச் செறிவு (சிவம்) எனும் அந்நிலையில் கிடந்தால் போதுமெனச் சொன்ன வேதநூல் வாக்கியத்தை நீரறியீரோ? பிருகதாரணியகோ உப (4-4-7) காண்க. "எங்ஙனம் பாம்புச் சட்டை புற்றருகில் விடப்பட்டு உயிரற்றுக் கிடக்குமோ(முத்தனுடைய)இச்சரீரமும் கிடக்கும் அப்பொழுது இவன் சரீரமில்லாதவனுய் பிராணனுகவே பிரம்மமாகவே தேஜோவடிவினனுகவே ஆய்விடுகிறன். இங்ஙனம் உபதேசிக்கப் பெற்ற) அடியேன் தேவரீருக்கு ஆயிரம் பசுக்களைத் தருகிறேன்" என்றூர் வைதேக ஜனகர். (மொழிபெயர்ப்பு) (5)

462. நலமறிய மாட்டாமல் நானென்று சொல்லிப்
பலபேசும் பாவி! பணிவோர்—நிலவுலகில்
நல்லூரெனும் பதியை நாடித் தரிசித்தாற்
பல்லூழி வாழலாம் பார்.

(முன் பாட்டில் சொன்ன) இந்த உண்மையை யறியாமல் ஐம்புல வேடர் ஏவ, தன்னைமறந்து நானெனும் ஆணவமலம் ஊட்டித்தள்ள ஏதிலார் முன் பேதமே பலபேசும் பாவி! அந்தப் பெரும் உண்மையை உணர்வினுல் நன்குணரும் மெய்யன்பராய், இம்மாயா உலகினில் தாயின் ஆற்றல் வடிவினனுய் முருகனே மோனகுருவாக எழுந்தருளிக் இருபை புரியும் நல்லகத்தினராய், நல்லூர்ப்பதியை முத்தியடையவேணும் எனுமிச்சை, பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை எனும் மூன்று நாட்டங்களுடன் நாடித்தரிசித்தால் பலகாலும் இறைவனுடைய பாதாரவிந்தத்தில் வாழலாம் பார். (6)

463. பாராயோ வென்னைநீ பார்த்துக் கவலையெலாந்
தீராயோ செய்ய திருவேலா—வாராயோ
மாமயிலேறி மகிழ்ந்து வரந்தந்து
சேமமுடன் காப்பாய் சிறப்பு.

(முன்பாட்டுத்தரும் உண்மை விளங்கும் அகத்தினராய் வேலனைக் கூவியழைத்து நின்று] தாயின் ஆற்றல் வடிவினராய் மெய்யன்பர் அகத்தில் நின்று இருபைபுரியும் முருகா, வேலவனே! என்மேல் கிருபை பூராயோ! என்கவலையெலாந்தீர என் மூன்று நாட்டங்களான முத்திபழம், முடிவிலாற்றலுடைமை பேரருளுடைமை எனும் ஆசைகளைப் பூர்த்தி செய்து 'மாமயிலேறி விளையாடும்' காட்சியை என் அகத்தின்கண், அறியா அறிவில் அமிழ்ந்தேக சித்தமாய் என்னை மறந்து கிடக்கும் அவ்வகத்தின்கண், விளங்க, என்னுடைய ஆத்மா மகிழ்வுற நீயென்னைக் காப்பதல்லவோ முருகா உனக்குச் சிறப்பு: (7)

464. சிறப்புக் குறைவிடமே தேவர் பெரும
மறக்குறத்தி வள்ளி மணாள!—நிறக்கொடிகள்
ஆடும் அழகுடைய நல்லூர் வாழ் ஆண்டவனே
நீடும் அருள்தருவாய் நீ.

முருகன் ஆற்றல் வடிவானவள்: கணபதி அறிவு சொரூபமாக விளங்குபவன். முருகனின் வாகனம் அழகாக ஆடும் மயில்; கணபதியின் வாகனம் மூஷிகம்; துளைத்துத் துளைத்து ஞானப் பொருட்களை ஆராய்பவன். சிறப்புடன் வாழும் வாழ்வைக்குறிக்கும் அழகுடனாடும் மயில்; தேவர் சிறைமீட்ட கதிர்காமக் கார்த்திகேயன். (384); தேவர்

பெரும! முருகா முருகா என்றழைத்த வள்ளியின் இருதயத்தே; முருகனே வள்ளியாக நின்று செயல்புரிந்தான்; வள்ளியின் மணாளன் தேனுந்து வேங்கையாக வள்ளியின் இதயத்தில் நின்றான் (383) வள்ளி தெய்வானை சமேதா (383). அழகுடைய ஆடல், இல்வாழ்க்கை பலநிறங்களுடையது; முருகனுடைய கொடி; கணபதி ஞானி அறிவு சொரூபம் வெள்ளைக்கொடி; அம்மை 'சிங்கக் கொடி' சிவபெருமான் "ஏற்றுயர் கொடியுடையாய்" (மாணிக்கவாசகர்) நாம் நீடு மயிலாடுவது போல் உன்னுடைய கிருபையுடன் வாழ அருள்வாய். (8)

465. நீயே நானென்று நினைக்கு மடியார்க்குத்
தாயே எனப்பெரியோர் தாம்வணங்கும்—நீயே
துணையல்லால் வேறு துணையொன்றுங் காணேன்
இணையில்லா நல்லூரா வின்று

[முன்விளக்கம் 462; 463 காண்க] (தொடர) மோனகுருவே இதயத்தே தோன்ற முருகனே தாயின் ஆற்றல் வடிவாகச் செயல்புபவன்; முருகனே வள்ளியாகச் செயல்புரிய முருகனும் வள்ளியும் ஒன்றுபட்டு முருகனே வள்ளிக்கணவனாக அருள் புரிந்தது போல மெய்யன்பன் இருதயத்தே தாய்போல் நின்று அமிர்தினை ஊட்டும் முருகா! நீயல்லால் வேறுதுணையில்வுலகிலுண்டோ? நீயேயனைத்துமாய் நின்று, தேசவெல்லையோ காலவெல்லையோ இல்லாமல், நிகரற்ற இணையில்லாத் துணையாக விளங்குவோனே நல்லூரானே! (9)

466. இன்றிருளை நீக்கி யெழுந்த கதிரவன்போல்
அன்றென் னகவிருளைத் தீர்ப்பதற்குக்—குன்றுபோல்
வந்தா னொருவன் வளஞ்சேரும் நல்லூரில்
தந்தா னருளெனக்குத் தான்.

சூரியன் காலையில் எழுந்து இருட்டைநீக்கி வெளிச்சத்தை உலகுக்குக் கொடுப்பதுபோல் அன்று செல்லப்பனாக வருத்தாங்கி எனது அகத்தே கிடந்த மலப்பிணிப்பை நீக்க உலகியல் வாழ்க்கைக் குன்றின்மேல் நின்று நல்லூரில் வந்து அருள் தந்தனன். (10)

89 குரு மருந்து

467. அருமருந்தொரு குருமருந்து
அடியார் கண்டு களிக்கும் மருந்து. (அரு)

இருவினையைப் போக்கும் மருந்து
இன்ப நிலையில் நிறுத்தும் மருந்து. (அரு

ஒருபொல் லாப்புமில்லை என்ற மருந்து
இம்மைம றுமைக்கும் ஏற்ற மருந்து. (அரு)
திருவார் நல்லூரில் வாழும் மருந்து
தேவாதி தேவருங் காணு மருந்து. (அரு)

ஆருயிர்கள் உய்யும்பொருட்டுத் திருவருளால் மாயையின் காரிய மாக அவ்வுயிர்களுக்கு அளிக்கப்பட்டுப் பொருந்தியுள்ள உலகம் அனைத் தும் நிலையில்லாதது. வினையின் நிகழ்வால் விளையும் வினைப்பயன் எனும் அம்பலத்தே வினைமுதலாம் முதல்வனால் அளிக்கப் பட்டுப் பொருந்தியுள்ள உலகம் மாறிமாறி இறப்பும் பிறப்பும் எனும் படு குழியில் தள்ளும் இருவினையின் மலப்பிணிப்பு;

'சிவ சிவ' எனும் மாமறை தரும் உண்மையைக் கைப் பிடி தி தொழுகுவோரே அம்மலப்பிணிப்பை நீக்க முயல் வர். தேரடியிற் சென் று தரிசித்தாற் போதுமென பாரறியச் சொன்ன பழங்கதை (461) யை நீரறியீரோ என்ற உண்மையை ஆராய்ந்தறிய செல்லப் பனெனுஞ் சிவதரு அந்தத் தேரடிப்படியில் இருக்கிறான்; நல்லூர் முருகனே சிவகுருவாக எழுந்தருளி வந்து உலகுக்கு அருள் புரிகிறான் என்ற உண்மையை அறியாம் அவன் திருவருளால் தம்மை அண் டினவரை இருவினையும் நீக்கியாண்டருள் புரிபவன். காமாதி குண மெலாங் கட்டவிழ கருணையே உருவான கடவுள் அருள்புரிய தாமாக எழுந்தருளும் 'தாணு' தோன்ற அருளுபவன் (192) மோனகுருவே எழுந்தருளி அருள்தருபவன். ''அறியா அறிவில் அவிழ்ந்தேகச் சித்த மாய் நெறியாம் பராநந்தி நீடருள் ஒன்றுஞ் செறியாக் செறிவே-சிவம்'' எனும் நன்நிலையில் நிறுத்தி நிற்க அருள்புரிபவன். (283) இம்மையில் மயிலேறி விளையாடுமுகம்' தரும் வாழ்வும், மறுமையில் மோட்சவீடும் அளிப்பவன், நானெனும் அகங்காரங் கொண்ட பிரமா விஷ்ணு இந்திரன் முதலியோர் கண்ட மருந்து;

90 இந்த ஆன்மா நித்தியம்

இராகம்—நடனபைரவி தாளம்—ஆதி

பல்லவி

அந்த வாக்கும் பொய்த்துப் போமோ
ஆசான் நல்லூர் வீதியி லருளிய.

அநுபல்லவி

இந்த ஆன்மா நித்திய மென்ற (அந்த)

சரணங்கள்

468. மங்கைய ராடவர் மைந்தர்கள் கூடி
மகிழ்ந்தும் புகழ்ந்தும் வரதனைத் தேடி
வந்தனை புரிய வருவார் கோடி
செந்தமிழ் நாவலன் செல்லப்பன் சொன்ன. (அந்த)

செந்தமிழ் நாவலன் செல்லப்பன் சொன்ன அந்த இந்த ஆன்மா அழியாப் பொருள். [பிருகதாரண்ய உப. (4-4-22) பாட்டு (342)] உடம்பு மாயாகாரியப் பொருள் [(467) முதிபதிவிளக்கம் காண்க] செல்லப்பனெனும் செந்தமிழ் நாவலன் தேரடிப்படியில் இருக்கிறான்: தேரடியிற் சென்று தரிசித்தாற் போதும் (461) தேர் இறைவன் வாகனம்; சும்மா இருக்கும் அகமே இறைவன் இருப்பிடம், சும்மா இருக்கும் அகம் தோன்றில் இறைவன் அவ்வீட்டைநாடி வருவான்; அந்தவாக்கைச் சொன்ன செல்லப்பன் இருக்கும் தேரடிப்படியை நாடி சிவ சிவ எனும் மாமறைதரும் சிவசக்தி தோன்றுமிடம், திருவடிப்பேறு, அடைய மங்கையரும் ஆடவரும் கோடிமைந்தர் களும் கூடி அந்த வரதன் இருப்பிடமான தேரடியைநாடி, சும்மா இருக்கும் அகம்பெற அருளும் வரதனை வந்தனை புரிய வருவார்கள்

469. தேங்கா யிளநீர் தீங்கனி கொண்டு
திருவடித் தொண்டு செய்வதைக் கண்டு
ஐம்புல னடங்கி நின்றவ ருண்டு
ஆரறி வாரென ஆசான் சொன்ன. (அந்த)

ஐம்புலனும் இறைவனுக்குத் தெண்டு புரிதல் ஒடுங்கி தன்னுள் அடங்குவதேயன்றி அற்றுப்போகா (347) தேங்காய் இளநீர் பழங் களுடன் சென்று சிவதொண்டு புரிதலால் இவைனிடம் ஐம்புலனும் ஒடுங்கும்: பாசபந்தக் கயிறு அற சும்மாஇருக்கும் அகம் தோன்றும்: (முன்பாட்டு விளக்கம்) திருவடிப்பேறு அடையலாம்; திருமூலர் திரு வடிப்பேறு அடையும் சிவலோக வழியைக் குறிக்கிறார் காண்க.

திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே (10—188)

470. கௌரிம னோகரி ஆனந் தாச்சி
கமல ஆச்சிசெல் லாச்சி ஐவரும்
உவந்து சேவடி கும்பிடு முத்தமன்
தவத்தைச் செய்திடத் தந்திடு மருளே. (அந்த)

கௌரி = துர்க்கை; அகோர முகமுடையாள். கமலாச்சி - பிரமா வின் சக்தி; - படைத்தல் தொழில் செய்பவர் பிரம்மா. ஆனந்தாச்சி- ஆனந்தவல்லி, உமை, ஞானச்சி, ஆனந்த நடனம் புரியும் சிவபெரு மான் உமையாள் பங்கன், இன்மையோர் பெருமானர்.

செல்லாச்சி = செல்வி, திருநிறைந்தவள், லக்ஷ்மி, விஷ்ணுவின் சக்தி மனோகரி = மகேஸ்வரி; மகேஸ்வரன் சக்தி; மனமணி லிங்கமாகத் தோன்றும் சக்தி; வாமன முகமுடையாள்.

இறைவன் தொழில்: படைத்தல், காத்தல், அழித்தல், மறைத் தல், அருளல்.

கடவுளர்: பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன்; சக்திகள்: கமலாச்சி சரஸ்வதி (2) செல்லாச்சி, லக்ஷ்மி; (3) கௌரி துர்க்கை (4) மனோகரி, மகேஸ்வரி, மனோன்மணி (5) ஆனந்தாச்சி ஞானச்சி, மீனாட்சி, உமை;

வினையின் நிகழ்வால் வினையும் வினைப்பயன் எனும் அம்பலத்தே வினைமுதலாம் முதல்வன் முழுமுதல்வன் செயல்புரிபவன் (467 விளக் கம் முற்பாகம் காண்க) ஆருயிர்களின் வினைப்பயனுக்கு ஏற்றவாறு பொருந்திய வாழ்வு. படைத்தல் காத்தல் அழித்தல் என மூன்று தேவ மாரையும் தொழுது வணங்கினால் கருணைகூட நாம் இறைவனுக்குப் பணிந்து அணைத்தும் அவனேயாம் அவன் செயலே எனும் 'சிவ சிவ' எனும் மாமறையின் பொருளை உணர்ச்சிவாம். இருவருள்கூட மனோ ரியையும் ஞானச்சி ஆனந்தாச்சியையும் உணர்ந்தே நிட்டை கூடு வோம். தடத்தப் பொருளான மனோன்மணியையும் பின் ஞானச்சி யான சொரூபரூபத்தையும் காண உத்தமன் அருள் புரிவான்;

91 நல்லைப் பதிக் கரசே

471. நல்லைப் பதிக்கரசே! நல்லைப் பதிக்கரசே!
நல்ல வழிகாட்டி நாயேனை யாண்டிடடா.

நல்லையம்பதியில் எழுந்தருளியிருக்கும் முருகனே உருத்தாங்கி, திருவருள் ஞானஞ் சிறந்தருள் கொழிக்கும் குருவடிவான குறை விலா நிறைவே! நின்ற ஒன்றே, நின்மலவடிவே, குன்றுப்பொருளே குணப் பெருங் கடலே, ஆதியும் அந்தமுமிலா ஆனந்தமயமான ஜோதியே! இவ்வுண்மைகள் அதும்பும் குருவடிவும் முருகனும் ஒன்றே இரண்டோ என வேறுபடச் சொல்லாணை அவனை வேண்டுவோம் நாம்.

பத்தரருந்தும் பரமசுகம் யானருந்த
எத்தனை நாள் செல்லும் இயம்பாய் பராபரமே.

(தாயுமானவர் பராபரக் கண்ணி 270)

472. கல்லே நிகர்த்தமனங் கரையவருள் தந்திடடா
எல்லேயில்லா வின்பத்தே யெனையிருத்தி
[வைத்திடடா.

கல்லுப் போன்ற மனம். ஐம்புலவேடர் தரும் மாயை மலப்பி ணிப்பினல் உண்டான கட்டு நெகிழ்தலற்று இருட்டு மிகக் கொடி தானதாக உனேநினேந்து மனம் கரியாது கல்லுப்போல் மாயையில் ஈடுபட்டுக் கிடக்கிறதே. திருவருள் உண்டானுல் உனேநினேப்பேன். நினேந்துருகுவேன். நோயாளியை ஆஸ்பத்திரியில் விட்டு மருத்துவன் சிகிச்சை செய்தே நோயை மாற்றலாம். நோயாளி நோயை எவ் வண்ணம் உணர்வான். நோயாளி மருத்துவனிடம் சிகிச்சைக்குச் செல்ல வேண்டும். செல்லப்பனே மருத்துவனக எழுந்தருளிச் சிகிச் சை செய்வான் (167) அருமருந்தொருகுரு மருந்து அடியார் கண்டு களிக்கும் மருந்து. (2)

473. ஆன்மாவை நித்தியமென் றறியவரந் தந்திடடா
வீண்பா வனேயெல்லாம் விலக்க வருள்தாடா.

மானிடமக்கள் சிற்றிடையார், செம்பொன், ஆடை, வீடும் மற்றும் சுற்றம் என்னும் மாயாகாரியப் பொருட்களே எல்லாம் நிலையுள்ளன வென்று வீண்பாவனே செய்து ஐம்புல வேடர் வலையில் சிக்குண்டு கர்மம் புரியாமலும் முன்கூறிய அம்மாயகாரியப் பொருட்களே விட்டு நீங்கும் நேரத்தில் எழுங்கண்ணீர் ஆறு போல் பெருகி ஓடுந்துயரத் தில் மாண்டு துன்புறுமலும், புவை நிலையில்லாதன என ஒப்புக் கொள்ள வேண்டும்.

உலகியல் நாடகத்தைச் சித்திரிக்கும் வினே முதலாம் முதல்வன் முழுமுதல்வனேயே நாம் உண்மைப் பொருளென நம்பவேண்டும். "உணர்த்து முனேநாடாதே உணர்ந்தவையை நாடியே இழுக்குறு மென் ஏழமைதான் என்னே என்னே" என்று தாயுமானவர் கூறுகிறார். தன்னெளி கொண்டு எல்லாவற்றையும் இயக்குபவனும் அவற்றுல் கட்டுப்படாதே அப்பால் எப்பொருளிலும் வியர்பித்து நின்று இயங் குபவனே உண்மைப் பொருள் உயிர்க்குயிராம் நாதன்; ஓங்கார, சொரூபம் (61) உயிர்க்குயிராம் நாதன் உணர்த்த உயிர் தன்னேய றியும் (373)

அருளது சத்தியாகும் அரன்தனக் கருளையின்றித்
தெருள் சிவம்இல்லே அந்தச்சிவமின்றிச் சத்தியில்லே
மருளினே அருளால் வாட்டி மன்னுயிர்க்களிப்பன் கண்கட்
கிருளினே ஒளியால் ஓட்டும் இரவியைபோல ஈசன்
இரவி = சூரியன் (சிவஞானசித்தியார் 5—2-8) (3)

474. மாயப் பிணியகல மருந்தெனக்குத் தந்திடடா
காயங் குலையுமுன்னர் காண வருள்தாடா.

திருவருளே நினையாது ஐம்புலவேடர் வலையில் சிக்குண்டு எனக்கே முதன்மையும் உரிமையும் உண்டெனக் கொண்டு அறியாமையெனும் பேய்பிடித்துக் கிடப்பேனை, அதைமாற்றி மருளினை அருளால் வாட்டி. இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல் எக்காலத்திலும் என் உள்ளத்தின்கண் ஒளிதிரள நின்று தேவரீருடைய பெருந்தண்ணளியால் கருணையினை உள்ளன்புடன் தெள்ளத் தெளிய எடுத்துப் பொழிந்து நானும் நீயும் ஒன்றுபட்ட அந்நிலையில் உன்னையே கண்டுங் களித்தும் இம்மாயா உடலம் விட்டு நீங்குமுன் உன்னைக் கண்டு இன்புற அருள்தா.

தேகய்யா தேனுமொரு சித்திபெறச் சீவன்முத்தி
ஆகுநெறி நல்லநெறி ஐயா பராபரமே.

(தாயுமானவர் பராபரக் கண்ணி 357) (4)

475. சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டிடடா
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிடடா.

சுவாமி விவேகானந்தர் அமெரிக்கப் பிரசங்கத்தில் உலகம் 'அ' எனும் சத்தத்தினின்றே தோடங்கிற்றென்று யேசுநாதர் கூறியதாகச் சொன்னார்; விஞ்ஞானிகள் கண்டுள்ள சலாகாசம் பிருதுவி ஆகாசம் இரண்டும் ஒன்று சேர்ந்த நுண்வெளி (*Electro magnetic-field*) யே இந்தச் சத்தம் தோன்றுமிடம். (519)

இதற்கு அப்பாற்பட்டதே அறிவுப்பெருவெளி. இந்த அறிவுப் பெருவெளியில்தான் அறிவே வடிவான ஆன்மாவைக் காணலாம். 159 வினையின் நிகழ்வால் வினையும் வினைப்பயன் எனும் அம்பலத்தே வினை முதலாம் முதல்வன் எப்பொருளிலும் வியாபித்து நின்று படைத்தல் காத்தல் அளித்தல் மறைத்தல் அருளல் எனும் ஐந்தொழிலிலும் அவ்வுயிரினத்தையும் அவரவர்க்கு ஏற்றவாறு பொருத்தி வைப்பன். இது அருவுருவாம் ரூபம்; பொற்றூண் (25) வினைப்பயன் என்னும் அம்பலமும் வினைமுதலாம் முதல்வனும் அருவாம் ரூபம் பொன்னம்பலம் (25) உலகினில் நாம் காணும் இறைவன் நடனம் உருவம்;

உருவமாக நடனத்தை உலகினில் காண்கின்றோம். உலகம் நாடகமேடை இறைவன் சித்திரக்காரன்; மெய்யன்பன் சாகஷி அனுமதிப்பவன், தாங்குபவன் எனும் ஆறுநிலைகளிலும் நின்று (265) நாடகமேடையில் நடக்கும் நாடகத்தை தரிசிக்கிறான். இதில் சாகஷி ஆமோதிப்பவன், தாங்குபவன், அனுபவிப்பவன் எனும் நான்கு நிலைகளிலும் உருவ

மாக நடராசனைத் தரிசிக்கிறோம். ஐந்தாம் நிலையாகிய,, மகேஸ்வரன் சதாசிவன்'' அருவுருவாம் ரூபம் பொற்றூண்; இதை ஆகாசத்தில் கண்டும் மனதில் உருவமைத்தும் சித்தாகாசத்தில் அறிவினால் அறிகிறோம். சித்தாகாசத்தில் அறிவினால் காணுதலே தியானம். திருமூலர் 'தானத்துள்ளே சதாசிவனுயிடும், என்று குறிக்கிறார். சத்தத் துள்ளே சதாசிவனுயிடும் என்கிறார் சுவாமிகள். தாளம் = எழுத்து, ஓம் அருவுருவாம் சதாசிவன் அறிவுப் பெருவெளியில (159) வளர வளர தெள்ளித் தெளித்த உள்ளத்தே, தேறலைத் தெளிவைத் தெளிவாய்த் தோர் ஊறலான பரசிவ அம்மையும், சொக்கனுதனும், ஞானக்கண் ணுடனே முக்கட் கருணைப்பிராணுக காட்சி தருவர். இது சொரூபம். அகம் மோனநிலை எய்தியே மோனகுரு எழுந்தருள சிவலிங்க வடி வாகக்' காட்சிதரும். சித்தத்தினுள்ளே சிவலிங்கம் என்கிறார் சுவாமிகள். கக் காட்சிதருவர். திருமூலர் தானத்துள்ளே சதாசிவனுயிடும் ஞானத் துள்ளே நற்சிவமாதலால் என்கிறார்; (5)

476. எல்லா ரையுமீச னிடத்திலே காட்டிடடா
எல்லா ரிடத்திலும் ஈசனைக் காட்டிடடா.

உடலும் உயிரும் உண்மையில் வேறேயாயினும் கலப்பினல் ஒன்று பட்டு அவ்வுயிர்க்த உடலின் வேறு தான் என்னும் எண்ணம் தோன்றுவதில்லை. அதுபோல் முதல்வனும் உயிரும் ஒன்று பட்டு உயிர் முதல்வனுள் ளடங்கி தான்வேறு என்னும் எண்ணம் இல்லாத படி இன்புற்றிருக்கும். வள்ளி தன் சாதனையில் நினைப்புளங்காக்கும் வேலையில், வள்ளி முருகனின் இயல்பு கொண்டு செயல்புரிந்தான்: இடையிடையே அவளையறியாமல் ஐம்புலவேடர் ஆட்கொள்ளுவர். இந்நிலையை 'வள்ளி முருகனுகச்' செயல்புரிந்தாள் என்றும் ஈற்றில் வள்ளி முழுமையுமே தன்னையும் முருகனையும் ஒன்றுகக் கண்டாள்; முருகனே வள்ளியாகச் செயல் புரிந்தாள் என்றும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை உரையில் தருகிறார். உயிர் முதலவனுள் ளடங்கித் தான்வேறு எனும் எண்ணம் அற்ற அந்நிலை ''எல்லோ ரையுமீசனிடத்தில்'' என்றும் 'எல்லாரிடத்திலும் ஈசனை' என்று வேறுபாடற்ற அந்நிலையையுங் குறிக்கிறார்.

அன்றி ஒன்றில்லை இன்றி நீயில்லை எனும் உண்மையேயது. தன் ஒளி கொண்டு இயக்கும் இறைவனே பொருட்களை இயக்கி ஆண் டருளுவன். பொருட்களில்லையேல் இறைவனொளியையுங் காண இயலாது. எங்கு இறைவன் அங்கு பொருட்கள். வேறற்ற அந்நிலை;

எல்லோருமீசனைக் கண்டு வணங்குதல் எல்லாரையுமீசனைக் கண்டு அன்றி ஒன்றில்லை என்று குறிக்கிறார். முருகனே வள்ளியாகச் செயல் புரிந்தான் என்னும் பொருள்.

தாயுமானவர் வேறுபாடற்ற நிலையைத் தருகிறார்:

"என்னையுந் தன்னையும் வேறு – உள்ளது
தென்னுத வண்ணம் இரண்டற நிற்கச்
சொன்னது மோரு சொல்லே – அந்தச்
சொல்லால் விளைந்த சுகத்தைஎன் சொல்வேன் – சங்கர.

(ஆனந்தக்களிப்பு. 14) (6)

477. கொல்லா வரமெனக்குக் குவலயத்தில் வேணுமடா
எல்லா ரிடத்துமன் பாய் இருப்பதெனக் கிச்சையடா

மோனகுருவே இதயத்தே எழுந்தருள பார்வதி தேவியே என் இருதயத்தே நின்று செயல்புரிவாள். வள்ளிமுருகனைச் செயல் புரிந்தாள். கர்மம்செய்யாமல் தன்னைப்பாது காப்பதே கொல்லா விரதம்: நிஷ்காமிய கர்மம் புரிதலே கொல்லா விரதம் இறைவனிட்ட சித்திரத்தை நாடகமேடையில் தரிசித்தும் ஆமோதித்தும், தாங்குவோனுகவும் அனுபவிப்பவனுகவும் அவனிடந்தன்னை ஒப்புவித்து அவன் கட்டளைப்படியே செயல்புரிதல்; இருவினையுந் தன்னை வந்தனையாது செயல்புரிதல் அறவழி நிற்றல் (43) முன்பாட்டு எல்லாரிடத்திலு மீசனைக்கண்டு எல்லாரிடத்து மன்பாயிருத்தலே அழியா இன்பம். (476) (7)

478. என்றும் மறவா வரமெனக்கு வேணுமடா
குன்றுபோ னிற்கக் குருவே வரந்தாடா.

சித்தத்தினுள்ளே இவலிங்கம் விளங்க இறைவனும் தானும் ஒன்று பட்டு தான் சிவபெருமானுடங்கி வேறுபாடற்ற அந்நிலையில், முருகனே வள்ளியாக நின்ற அந்நிலையில், 'நல்லூப்பதிக்கரசே யோக சுவாமிகளாகச் செயல் புரியும் அந்நிலையில், வாழவேணுமெடா, கைலாசமலையுச்சி போன்று பக்திமலையுச்சி ஞானமலையுச்சி யோகமலையுச்சி எனும் வாழ்க்கைக் குன்று உச்சியில், ஜீவன் முத்தனுக என்றும், இவ்வுடம்பு ஸதூலசரீரமும் மனமும் கர்ப்பூரவுண்டைபோல் எச்சமின்றிக் கரையவும் என்னுடைய உயிர், ஒளி இறைவனுடைய ஒளியுடன் கலக்கும் வரை, என்றும் வாழ வரந்தாடா. 'குன்றுருவ வேல் லாங்கி நின்றமுகம்' என்று அருணகிரிநாதர் இவ்வாழ்க்கையை அறுமுகவன் அருளும் வாழ்க்கையைக் குறிக்கிறார். (8)

92 பார்மீதி லென்ன பயம்

479. தையலார் மையலிற் முன்மயங்கும் மாந்தர்காள்
வையமெல்லா மாள மருந்துண்டே—ஐயன்முள்
காலையொடு மாலை கடல்சூ ழிலங்கையீர்
சாலவே போற்றுவீர் தான்.

மண் பெண் பொன்னெனும் மாயாகாரியப் பொருட்கள் அவரவர் வினைப்பயனுக்கு ஏற்றவாறு தம்மை வந்தடைதற்கென, உயிர்களுடன் பொருத்தி வைக்கப் பட்டுள்ளன. அவ்வண்ணம் அவற்றைப் பொருத்தி வைத்த இறைவனை மறந்து மாமாயையில் அழிந்து வீழ்ந்து, தாம் இந்த மாயாகாரியமான நீர்க்குமிழி போலும் உடம்பு நாம் என்றுமழியாப் பொருளான ஆன்மா என்பதை மறந்து கிடக்கும் மாந்தர்காள் கேளுங்கள். எம்மை எம் வினைப்பயனுக் கேற்றவாறு பொருத்திவைத்த இறைவனே சர்வதத்வாதிபதி, முழுமுதல்வன்; முழுது முண்ணமையானவன்! அவன் திருவருளே வேண்டி நின்றால் அவன் கருணைகூர்ந்து நம்முன்னின்று நம் பாசபந்தங்களை யறுத்து எம்மையுந் தன்னையும் வேறுபட நினையாது நிற்கும் நிலையருளுவன்; பாசபந்தக்கயிறு அறுந்து சும்மா இருக்கும் அகமே அவனிருப்பிடம்; அதே அவன் திருவடிகள். காலையும் மாலையும் அவனைப் போற்றி ஏத்தித்தொழுது வணங்கிப் பூசைசெய்து அவன் தாள் அடைவீர்;

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழ்குருவி
உயயுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவாரூர் பெறுவார் அச்சோவே.

மாணிக்கவாசகர் திருவாசகம் (1)

480. செல்வச் செருக்கினற் நீவினையை யாற்றுவீர்
அல்லற் கடற்குள்ளே ஆழ்ந்திடுவீர் —வல்லபரன்
தந்தமுரு கன்குளைப் பற்றீ நிலங்கையீர்
அந்தமிலா வானந்த மாம்.

நிலையற்ற கறவைமாடு பிள்ளைகள், சிற்றிடையார் அழகிய பொன்னுடை தேடிக் குவித்த பொருள் எல்லாவற்றிலும் முன்டான செல்வச் செருக்கினால் நானெனும் ஆணவமலம் நம்மை ஆள ஐம்புல வேடர் தூண்ட கோடாகோடி வினை ஆற்றுவீர்; அதனால் வினையும் துன்பம் இன்பம் எனும் அல்லற்கடலுள் ஆழ்ந்து கிடப்பீர்.

நான் ஆன்மா இந்த நீர்க்குமிழி போன்ற பொருட்களெல்லாம் அழிந்துபோவன; ஆன்மா அழியாப்பொருள்; ஆனந்தமே அதனியல்பு; என்றும் மகிழ்வுறுதலே அதனியற்கை;

வல்லபரன் தந்த முருகன் தானே நித்த நித்தம் தொழுதேத்த எல்லாத்துறையிலும் அவனே நாம் கண்டு தெரண்டு செய்ய ஒவ்வொரு வழியிலும், வீதியிலும் அவனுடைய ஒளிவீசம் அறிவுப் பெருவெளியை நாம் கண்டு (382) ஆனந்தங் கொண்டாடுவோம்;

வையக மாதர் சுகத்தையும் பொன்னையும் மாயைமல
மெய்யையும் மெய்யென்று நின்னடியார்தம் விவேகத்தையும்
ஐயமில் வீட்டையும் மெய்ந்நூலையும் பொய்யதாக எண்ணும்
பொய்யர்தம் நட்பை விடுவதென்றோ பரிபூரணமே
(தாயுமா.பாயப்புலி) (2)

481. நில்லாத செல்வத்தை நேராகப் பெற்றக்கால்
இல்லாத வர்க்கீந்தே யீசன்முள் – நல்லாய்த்
தொழுவார்க்குண் டோகுறைதான் தொல்லிலங்கை
[நாட்டூர்
எழுபிறப்பு மேமாப்போம் யாம்.

(முன்பாட்டு விளக்கம் காண்க): பொருட்கள் எல்லாம் வினைப் பயனுக்கு ஒப்ப உயிர்கட்கு இறைவனே வந்தடைதற்குத் துணையாக நமக்கு அளிக்கப்பட்டது (முன்பாட்டு) செல்வமனைத்தும் நீர்க்குமிழி போல் அழியுந்தன்மை யுடையது; திருவருளுக்கு ஒப்பாகப் பெற்ற அந்தச் செல்வமனைத்தையும் அறவழி நின்றெழுகிய வண்ணம் தேவைப்பட்டவர்க்குக் கொடுத்தால் 'அறம் மேம்படும்' என்கிறார்: பசித்தோர்க்கு உணவு கொடுத்தல் தர்மம். பசிதீர்க்க வேறுவழி யில்லாத தன்மையினால் அதை நல்லறம்; நல்லறம் கொல்லாவிரதம்: ஆகையால் அறம் மேம்படும் பாசபந்தக்கயிறு அறும் மனம் ஒடுங்கும் நந்நிலை தோன்றும். (3)

482. பொல்லாப் புழுமலியும் புன்குரம்பை யாமுடலை
நல்லோர் நயப்பரோ நாடோறும் – கொல்லாமற்
கூர்வேலன் பாதங் குறிப்பீ ரிலங்கையீர்
பார்மீதி லென்ன பயம்.

வெண்ணீராகிய சுக்கிலமும், செந்நீராகிய இரத்தமும் பெருகி சிவந்த புழுக்கள் முதலியன தோன்றுதற்கு இடமான முடை நாற்றமுடைய இவ்வுடம்பு எவ்வளவு காலம் இன்பந்தரும். அதை முன்னரே உணர்ந்து வாழ்நாட்களெலாவீண்போகவிடாமல் வேலன் திருத்தாள்களைப்

போக்குவீர். ஒருசொல்லா லுணர்ந்தறிந்தது போல், சிவசிவ'என்னும் மாமறைதரும் உண்மை வழிநின்று வாழ்ந்து (479) போன குரு எழுந்தருளும் அகத்தினராய் அவன் பாதாரவிந்தமடைவீர்; அடையப்பெற்றால் பார்மீதிலென்னபயம். மரணபயம் நீங்கும். (4)

93 நல்லூரான் கிருபை வேண்டும் II

இராகம்—கருட்டி காளம்—ஆதி

பல்லவி

நல்லூரான் கிருபை வேண்டும்--நாம் எந்நாளும் பாடவேண்டும்—வேறென்ன வேண்டும்.

அநுபல்லவி

சொல்லும் பொருளுமற்றுச்-சும்மா விருக்கவேண்டும் தூய குருவின்பாதம் துணையாகக் கொள்ளவேண்டும் (நல்லூ)

சரணங்கள்

483. அல்லும் பகலுஞ்சிவ நாமத்தைச் சொல்லவேண்டும்
ஆசை மூன்றையும் அடியோடு கொல்லவேண்டும்
கண்டு கண்டுமனங் குளிர்ந்திட வேண்டும்
காமக் குரோத மோகத்தைத் தீர்க்கவேண்டும்.
(நல்லூ)

நமசிவய எனும் ஐந்தெழுத்துத் தரும் உண்மை விளங்க வாழ்க்கை நடத்தியே (1)காமம், குரோதம் முதலிய காமாதி குணமெலாம் கட்டவிழ,(192)தாமசகுணமும் ராஜதகுணமும் விட்டுநீங்க சாத்வி ககுணத்தில் சாக்ஷியாகவும், ஆமோதிப்பவனாகவும், தாங்குவோனாகவும், அனுபவிப்பவனாகவும், இறைவனுடைய சித்திரத்திறமையினை உலகியல் நாடகமேடையில் நின்று அறிவினாலுணர்ந்தறிந்து இன்புற்று மனம் பூரணமான உலகியல் பொருட்களில் அன்புடன் இருவைந்தெழுத்தை ஓதிஓதி மனம்ஒடுங்கி வாழவேண்டும் (1)

484. பொறிவழி போய்மனம் அலையாமை வேண்டும்
பூரண மான நிட்டையும் வேண்டும்
எல்லா ரிடத்துமன்பு செலுத்தவேண்டும்
எழில்பெறுஞ் சுழுமுனை வழிச்செல்ல வேண்டும்.
(நல்லூ)

(முன்பாட்டு விளக்கம் தொடர) மண் பெண் பொன் எனும் மூவாசையும் ஒடுக்கி மாயாகாரியம் பொருட்கள் நீர்க்குமிழி போன்று அழிந்து போகுமெனநம்பி ஐம்புலன்களையும் முழுமுதலாம் சிவபெருமானில் ''வாயே வாழ்த்து கண்டாய்'' ,,கைகாள் கூப்பித் தொழீர்'' எனும் தேவாரங்களால் ஒன்றுபட்டுணர்த்து பாடி (347) தேறித் தெளிந்த உள்ளம் கரைத்துருகி(483) மன்னுயிர்யாவுந்தன்னுயிர்போல் அன்புபூண்டு மோனகுரு எழுந்தருளிச் செயல்புரியவேரூர் நீங்கவுமின்றி (475) ஒடுங்கியமனம் பிராணன்எனும் காற்று எழுச்சியுடன் மேல்செல்லாது கீழ்நோக்கிச் சென்று சுழுமுனை வழி நின்று நிட்டை கூடவேண்டும். (2)

94. நல்லூர்த் தேரடியில் நான் கண்டேன்

நேரிசை வெண்பா

485. பழம்பாக்கு வெற்றிலை பச்சரிசி தேங்காய்
இளநீர்தே னேந்தி யெழிலார்—அளவிலா
மங்கையரு மாடவரு மல்குநல்லூர்த் தேரடியில்
எங்குருவைக் கண்டே னினிது.

நல்லைப் பதியில் எழுந்தருளியிருக்கும் முருகனுக்கு நைவேத்தியப் பொருட்களாக பழம் பாக்குப் பச்சரிசி தேன் முதலியன ஏந்திய வண்ணம், முருகன் திருவருளால் ஆன்மாவின் இயல்பு வடிவான ஆனந்தம் எழிற்கொடுக்க. ஆன்மாவின் மகிழ்வுறுந்தன்மையே பொங்கி வளர, ஏராளமான ஆடவரும் மங்கையரும் கூடும் அந்தத் தேரடியில் என் ஞானகுரவனை நான் கண்டு, இனிமை தரும் ஓசை நம்முட் சென்று, உள்ளம் பூரித்தேன். (1)

486. காரார் குயில்பாடக் கார்வண்டு பண்பாட
ஆராத காதல டியரெலாஞ் -சீரராகச்
சென்னியிலே கைகுவித்தார் தேரடியிற் றேசிகனை
என்னையவன் பார்த்தா னினிது.

அருள் நிறைந்த கோயில்களிலும் திருவருள் ஞானம் சிறந்தருள் கொழிக்கும் ஞானிகளின்னிலையிலும் ஓர் வெளிச்சம் உண்டு; உலகியல் இன்பதுன்பங்களை மறந்து அவரை அணுகில் சில நிமிஷங்களுக்கேனும் அந்த ஞானியின் வெளிச்சம் அவரை அணுகும் அடியார்களுக்கு ஆன்மாவின் இயல்பான ஆனந்தத்தைக் கொடுக்கும். சுடரொளி கொடுக்கும் அந்தச் சிறு நேரம் ஞான உணர்ச்சியான குயில் கூவுதல் தேன்வண்டு பாடுதல் முதலியனவற்றை அவர்கள் உணர்

வர். இம்மகிழ்வுறும் அடியார்கள் உச்சிமேற் கைகூப்பினராய் தேரடியில் எம் ஞானகுரவனைச் சூழ்ந்து நின்று வணங்கினர். என்னை அவன் கவனித்து உள்ளே இனிது நோக்கினன். திருவருள் பெற்றேன் யான். (அடுத்த பாட்டு உரை காண்க) (2)

487. இன்றைக்கோ நாளைக்கோ இன்னுநாட் [சென்றிடுமோ
என்றடியா ரேத்து மினியவொலி—நன்றுடைய
நல்லூரிற் றேரடியில் நான்கண்டு போற்றினேன்
சொல்லுந் தரமோ சுகம்.

நன்னெறியிற் குறிக்கப்படும் நற்செய்கையாகிய தடமுறை ஒழுக்கமாகிய சீலத்தையும் அதனல் பெறப்படும் நோன்பு தவம் முதலிய நல்லொழுக்கங்களையும் எனியேன் நனவிலும் கனவிலுமாகிலும் தூய உள்ளத்தே கொண்டும், நல்லூர் முருகன் கூறுமடியார்கள் வினைதீர்க்குமுகம் நோக்கி; இன்று வருமோ நாளை வருமோ இன்னு நாட்சென்றிடுமோ என்று மெய்யடியார்கள் கூடி நின்று தம்மகத்தே தேசிகன் அருளும் ஒளி விளங்க (486) [ஸ்ரீ இராமகிருஷ்ணர் கூறும் "மாடாக்குளி விளக்கின் ஒளி, கொண்டு] சிறிது நேரமாகிலும் ஆன்மா தன்னைக் காணும் அகத்தினில் தேரடியில், ஓசையிடும் ஒலி பெரிதும் மெய்யன்பர் அகத்தே ஆனந்த நிறைவாம் ஜோதியாய் விளங்கும், சூழ என் ஞானகுரவனே, நல்லைப்பதிக்கரசே உருத்தாங்கி எழுந்தருளி அருள்தரும் எம்குரவனே, நான் கண்டேன். கண்டு மகிழ்வுறும் ஆன்மாவுடன் துதித்தேன்; பின்னே அவன் தரப்போகும் பேரானந்தத்தில் ஒரு துளியை அன்று கண்டேன். (அடுத்த பாட்டு விளக்கக் காண்க) (488, 489;) ஆன்மா சிவதருவின் ஒளி கொண்டு அறிதலைக் காண்க;

அறிந்திடும் ஆன்மா ஒன்றை ஒன்றினுல் அறிதலானும்
அறிந்தவை மறத்தலானும் அறிவிக்க அறிதலானும்
அறிந்திடுந் தன்னையுந்தான் அறியாமை யானுந்தானே
அறிந்திடும் அறிவன் அன்றும் அறிவிக்க அறிவன் அன்றே.

சிவஞானசித்தியார் (5-1-2) (3)

488. ஞாலன் வலிதொலையக் காலெடுத்தான் றந்தருளும்
பாலன்வாழ் நல்லைப் பழம்பதியிற்—கோலமுடன்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரென் றறிவா யடா.

நல்லைப்பதிக்கரசே உருத்தாங்கி எழுந்தருளின தேசிகன், வள்ளியின் அகத்தில் வேங்கைமரமாக நின்றுன் பிறப்பறுக்கும் மருந்து போலும் குழந்தை முருகன் தேசிகனுக, முன்னும் தம்மடியார்களுக்கு அருள்கொடுத்துப் பழமை வாய்ந்த நல்லூர்ப் பதியில், மாடாக்குளி விளக்குப்போன்று நம் அகத்தே தோன்றி நமனின் வலியைக் கெடுக்கும் நோக்கங் கொண்டவனுய் ஒளிகொடுப்ப, நான்கண்டு தெரிசித்தேன்; பேசாது நேசமொடு பெரும் பொருளையே உன்கு மௌனியாய் எந்த நாளிலும் உனக்கெனவோர் உரிமையு முதன்மையுங் கொண்டு ஒரு செயலுஞ் செய்து கொள்ளுவதற்குரிய அறிவில்லாத நோயாளியே நீ; உன்னுடைய உயிரும் உடலும் வினைப்பயனும் மற்றும் யாவுமாகிய உடைமையும் எல்லாமும் எம்முடையதே எனும் உண்மைகளையும் என்னையும் நீ அறிவாயடா. என்றே அவர் அறிவுறுத்தினர்; சிவகுருவின் மெய்மை பின்வருமாறு

சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மை செய்
தத்தனே நல்கருள் காணு அதிமுடர்
பொய்த்தகு கண்ணுன் நமரென்பர் புண்ணியர்
அத்தன் இவனென்ன நடிபணி வாரே. (10--1553) (4)

489. உவமை கடந்தவின்ப மெல்லார்க்கு மூண்டு
தவஞ்செய்வார் தாமறிவார் தப்பார்—சிவனருளை
நோக்கென்றுன் நோக்க நொடியளவி லேயின்பம்
தேக்கிற்றென் சிந்தை தெளிந்து.

ஆவி அகத்தவமாகிய யோகநிலையுங் கடந்து மூதறிவாகிய உணர்வு நிலையில் உடையானுடன் இடையின்றி இயைந்து நிற்றலாகிய நிலை இரவு பகலில்லா இன்பவேனி நிலை, இந்நிலையில் ஆவி உடம்போடிருப்பினும் அவ்வுடம்பின் தொடர்பின்றியிருக்கும். இவ்வுவமை கடந்த இன்ப மெல்லார்க்கு முண்டு; இதையடையும் நோக்கத்துடன் தவஞ் செய்தவர் இந்நிலையைத் தப்பாதே அடைவர்; அந்நிலைக்கறிகுறியாக சிறிது நேரமாகிலும் இரவு பகலற்ற இன்ப நிலையில் நீ நிற்ப 'நோக்கென்றுன் சிவனருளை'; உண்ணின்றே அவன், 'உனக்கெனவோர் உரிமையு முதன்மையுங் கிடையாதே; உயிரும் உடலும் உடைமையும் எல்லாமும் தன்னுடையதே எனும் திருவருள் நிலைநின்றே,' அவன் நோக்கென்றுன். அவனையே நோக்கினேன்; நொடியளவில் என்சிந்தை தெளிந்தது; முன்கூறிய உண்மைகள் விளங்கவே தாயின் மடியிற் குழந்தை தாயின் அறிவு கொண்டு இயங்குவது போன்று என் சிந்தை தெளிந்தது. உள்ளங்களிகூர இன்ப வெள்ளம் உள்ளத்தே பெருகிற்று; ஆன்மாவின் இயல்பான இன்பமேயது.

செவ்வி வாராமுன்னும் செவ்வி வந்த பின்னும் உள்ள நிலைமை வருமாறு. ''கன்னிகை யொருத்தி சிற்றின்பம் வேம்பென்னினும் கைக்கொள்வள். பக்குவத்தில் கணவனருள் பெறின் முன்னே சொன்னவாறென்னைக் கருதி நகையாவள்; உண்மை உணர்ந்துவப்பள்; இது வருமாறு:-

தற்பர மல்ல சதாசிவன் தானல்ல
நிட்கள மல்ல சகள நிலையல்ல
அற்புதமாகி யநுபோகக் காமம் போற்
கற்பனை யின்றிக் கலந்து நின்றானே (10 -2903)
(திருமூலர்) (5)

95. ஓலாட்டு

490. அன்பே யுருவா யமர்ந்த வடியவருக்
கின்பந் தருமுதல்வ! இறைவநீ கண்வளராய்.

எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனைக்கும் அருட் கண்ணுக விளங்கும் இறைவனே, யாதுகிய வென்னை விழுங்கி வெறுத் தானுய் என்னுள்ளும் விளங்குபவன்; எப்பொருளிலும் வியாபித்திருக் கும் இறைவனிடம் அன்புபூண்டு தொண்டு புரியும் அடியவர்க்கின்பம் தரும் முழுமுதல்வ. (149) என் இருதயத்தே நான் என்றும் மறவா வண்ணம் நீ கண்வளராய்.

கண்ணப்பர் அன்பே யுருவாயிருந்த ஓர் மெய்யன்பர். அவர் தான் சடித்து ருசிபார்த்த கனியுடன் கூடிய இறைச்சியைப் படைத்தும், தான் வாயில் எடுத்து வந்த நீரால் அபிஷேகித்தும், செருப்புற்ற காலால் முன் தாம் போட்ட பூக்களைத் துப்பரவு செய்தும், தம் குடும்பியில் இட்டு வந்த பூக்களால் பூசனை செய்தும், திருக்காளத் தியப்பனைப் பூசித்து வணங்கினர். இறைவனும் அவருடைய அன்பைச் சோதிக்க, தம் கண்களையே இறைவனுக்குக் கொடுத்தார். அன்பு மேம்பட்டதென அவனைத் தன்னுடன் ஏற்றுக்கொண்டார். தாய் பிள்ளையுடன் பூண்ட அன்பே அந்த அன்பு. மாணிக்க வாசகர் அவற் றைத் தருகிறார்: காண்க:

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல் விளங்கச்
செருப்புற்ற சீரடிவாய்க் கலசம் ஐனமுதம்
விருப்புற்று வேடனர் சேடறிய மெய்துளிர்ந்தங்
கருள் பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ.
(திருவாசகம் திருத்தோணோக்கம் (3) (5)

ஆகமவிதி கடந்த, அன்பே வடிவான பூசை. காட்டில் வாழ்ந்த வேடன் பக்த சிரேஷ்டனனன். (1)

491. ஆருயிர்கள் தோறும் அதுவதுவாய்த்
[தோன்றிநிற்கும்
பேருருவே! இன்பப் பெருக்கேநீ கண்வளராய்.

எண்ணில் கோடி உயிர்கள் அத்தனைக்கும் அருட்கண்ணே! (முன் பாட்டு விளக்கம்) எப்பொருளிலும் வியாபித்திருக்கும் (380) முழு முதல்வனே, தாயின் அன்பு போன்று அழியா இன்பமாய் இருத யத்தே தோன்றுஞ் ஜோதியே! அந்த கண்வளராய். பன்றிக் குட்டி களுக்குத் தாயாகவும் வள்ளிக்கு முருகனாகவும் நின்று அதுவதுவாய்த் தோன்றும் பேருருவே! பேரொளியாய் விளங்குபவனே!

யானைகளுள் ஐராவதம் மக்களுள் வேந்தன், மரங்கள் எல்லா வற்றுள்ளும் அரசமரம், தேவரிஷிகளுள் நாரதர், சித்தர்களுள் கபிலமுனி, சேனைத்தலைவர்களுள் முருகக்கடவுள் என்னும் பலவாக கீதை (10—25; 26; 27: 28:) ல் கூறுகிறார்;

அவ்வுயிர் போல் எவ்வுயிரும் ஆனபிரான் தன்னடியை
எவ்வுயிரு மென்று பணி யாஞ்செய்வ தெந்நாளோ.
தாயுமானவர். எந்நாட்கண்ணி (13—14) (2)

492. இல்லையென்று சொல்லுவார் இல்லத்திற்
[செல்லாமல்
நல்ல வருள்தந்த நல்லூரா! கண்வளராய்.

அறநெறி நின்று வாழ்வாரே தர்மம் செய்பவர். உணவில் வைத் திருக்கும் பற்றுப் போகப் பிரியத்துக்கு அறிகுறியாகும்; நாவாசையை அடக்காதவன் மற்ற ஆசைகளை அடக்க இயலாது; உண்பதையே கடவுள் ஆராதனையாகச் செய்து பழகப்பழக போகமானது போக மாக மாறிவிடுகிறது. எதைத் தானமாகக் கொடுக்கிறோமோ அதை ஈசுவர அர்ப்பணமாகச் செய். ஈதல் அறம் எனப்படுகிறது. 'பிட்டு நேர்பட மண்சுமந்த பித்தனே' சிவபெருமான் தமக்குப் போதியளவு பண்ட்தை வைத்துக் கொண்டு மிகுதியைத் தர்மத்துக்குக் கொடுக்க வேண்டும்; எதைச் செய்தாலும் இறைவனுக்கென்றே அர்ப்பணமாகச் செயல் புரிந்தும், உண்பதை இறைவனுக்கு ஆராதனை செய்து உண்டும், எஞ்சியதைப் பசித்தோர்க்குக் கொடுத்தும் வாழ்தல் அறம். அறவழி நில்லாதார் இல்லத்துக்குச் செல்லாமல் நல்லருள் நீயே என்னுள் நின்று வழிகாட்டியருளும் நல்லூரா என் இதயத்தே கண்வளராய். (3)

493. இனிய வருள்சொரிந் திடர்நீக்கி யாண்டருளுந்
தனிமுதலே! எங்கள் தயாபரனே! கண்வளராய்.

இன்னும் நான் அவனைக் காணேனே; இன்று வருமோ நாளை வருமோ என்னும் ஆவல்; விழிநீர் பெருக நினைந்து நினைந்து, முதல் ஞானகுரவனைக் கண்ட பொழுது கிடைத்த அந்த அளவு கடந்த இன்பம் (489). எப்போ இடைக்குமென நினைந்துருகி ஆவலுடன் எதிர்பார்க்கும் அந்நிலை; பிறதேசஞ் சென்ற கணவனைக் காணுத மனைவி தவிக்கும் அந்நிலை; புயல்காற்றும் மழையும் சடுதியாகத் தோன்றித் தோணியைக் கரைக்கு வந்து சேராவண்ணம் அலைக்க மீன்பிடிக்கச் சென்ற கணவனைக் காணுது தவிக்கும் மனைவியின் மன நிலை; இம்மன நிலையையொத்த மெய்யன்பனின் இடர்தீர்க்க வல்லவன் தனிமுதலாம் முழு முதல்வன், கருணைமழை பொழியும் சிவபெருமானே. கருணை மழை பொழிந்தால் பாசபந்தக் கயிறு கட்டவிழ தாமாக எழுந்தருளுந் தாணுவே அவனருளால் தோன்றி மெய்யன்பன் சஞ்சலந் தீர்ப்பான். அந்த இடர் நீக்கும் கருணைமுகில் போன்ற எந்தையே என்னிதயத்தே கண்வளராய்.

அப்பர்சுவாமிகள், மருணீக்கியார், திருவதிகைக் கடவுளை முதன் முதலில் நோக்கிய பொழுது தம்மை அறியாதே திருவாயினின்றுந் தோன்றிய மொழி தம் உள்ளத்தில் பொருளாக இருந்த துன்பத்தை நீக்கல் வேண்டும் என்பது; அதைக் காண்க.

கூற்றுயினை வாறு விலக்க லீர்
கொடுமை பல செய்தன நான் அறியேன்
ஏற்றுய்அடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றுதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டானத்துறை யம்மானே.

"என் வயிற்றின் உள்ளடியில் தன்னைத் தோற்றுமல் குடரோடு துடக்குண்டுமுடக்கியிடலால் ஆற்றுமல் வருந்துகின்றேன்," என்கிறார். (4)

494. ஈன்றருளு மாயெமக் கெந்தையுமாய்க் குருபரனாய்ச்
சான்றுர் நெறிகாட்டுந் தற்பரனே! கண்வளராய்.

ஈன்றுள் மாதினியார் தாய்; எந்தை புகழனார் தந்தை அப்பருக்கு உடன் தோன்றினராய் திலகவதியாராய் நின்ற இறைவன் திருநீற்றைக் கொடுத்து சமண நெறியிலிருந்த தம்பியாரைப் பின்னும் சைவநெறிக்குட் புகுத்தி திருவீரட்டானனைக் காண்பித்தவுடனே சூலை நீங்கியது; (493) தற்பரனைக் கண்டார் போலும் (2, 18).

சுவாமிகளும் இங்கே தந்தையுமாகித் தாயுமாகித் தம்ஞானகுரவனுகவும் உருத்தாங்கிநின்ற, நல்லைப்பதிக்கரசு அருள்புரிய, தானுதோன்றினது (493); உன்னு மனம் நிட்டைகூடிய அகத்தின், அருவுருவாம் தற்பரமாய் அறிவுப் பெருவெளியில் காட்சியளித்தனன்; வேறேர் நிலைவுமின்றி முக்கட் கருணைப்பிரானே உருவமைக்க சிவகுருவாக எழுந்தருளும் சான்றுராக அப்பருக்கு திலகவதியாரும், சுவாமிகளுக்குச் செல்லப்பா சுவாமியாரும், நெறிகாட்டினர்;

அப்பர் சுவாமிகள் "மூன்றுயுலகம் படைத்துகந்த திருப்பாதிரிப் புலியூர் தோன்றுத்துணை"யென பரசிவமான உலகினை அறிவுப் பெருவெளியில் அறிவித்ததைக் குறிக்கிறார் காண்க.

ஈன்றளு மாயெனக் கெந்தையு மாயுடன் றேன்றினராய்
மூன்று யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
என்று னிமையவர்க் கன்பன் றிருப்பா திருப்புலியூர்த்
தோன்றுத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே. (5)

495. உன்னை மறப்பேனே உயிர்நான் தரிப்பேனே
என்னை மறப்பாயோ ஈசனே! கண்வளராய்.

(முன்விளக்கம் தொடர) நிட்டைகூடும் இயல்புடையதாய் வேறேர் நினைவுமின்றி ஒன்றுபட்டு தற்பரனைக் காணும் உலகையும், அம்மையையும் அப்பரையும், பரசிவமான உலகினை, அறிவுப் பெருவெளியில் உணர்வினலுணர்ந்தறிந்த மெய்யன்பன், முழுமுதல்வனும் சிவபெருமானின் திருவருளுண்டானுல், உன்னை மறப்பேனே உயிர் நான் தரிப்பேனே என்னை மறப்பாயோ ஈசனே என்கிறான்; மேலாம் நிட்டையில் நானும் நீயும் ஒன்றுய் சொரூபமாகக்காண என் இதயத்தே கண்வளராய்.

திருமூலர் இந்நிலையை உணர்த்துகிறார்.

ஒன்றினின் றுள்ளே யுணர்ந்தேன் பராபரம்
ஒன்றினின் றுள்ளே யுணர்ந்தேன் சிவகதி
ஒன்றினின் றுள்ளே யுணர்ந்தேன் உணர்வினை
ஒன்றினின் றேபல வூழிகண் டேனே (1-2912)

தாயுமானவர் தருவதைக் காண்க.

தனியி ருந்தருட் சகசமே பொருந்திடத் தமியேன்
இனியி ரங்குதல் கடனிது சமயமென் னிதயக்
கனிவும் அப்படி யாயின தாதலாற் கருணைப்
புனித நீயறி யாதொன் றுள்ளதோ புகலாய்
எனக்கெனச் செயல் 13); (6)

496. ஊனுய் உயிராய் உளத்திற் சுவையளிக்குந்
தேனுய்த் தெவிட்டாத தெள்ளமுதே! கண்வளராய்

திருத்துந் தன்மையில் திருத்தமாய்த் திகழும் சிறப்புப் பொருந்திய திருவடித் தாமரைக்குச் செவ்விய அன்பு செய்யப் பொருந்து நாளாய் ஊனும் உயிரும் அன்பு நெறியில் தெவிட்டாத தேனெழுகும் சிந்தையராய், தேறலாய்த் தெளிவாய்த் தெளிவாய்த்தோர் ஊறலாய்என் இதயத்தே கண்வளராய்.

தாயுமானவர் தருவதைக் காண்க.

கண்ணி னுள்மணி யென்னவே தொழ் அன்பர் கருத்துள்
நண்ணு கின்றநின் அருளெனக் கெந்தநாள் நணுகும்
மண்ணும் விண்ணும் மற்றுள்ளன பூதமும் மாருப்
பெண்ணும் ஆணுமாய் அல்லவாய் நிற்கின்ற பெரியோய்.
(எனக்கெனைச் செயல் 23). (7)

497. எல்லாமா யல்லவுமா யிருக்கும் பராபரனே
நல்லூரில் வாழ்வே நாயகமே கண்வளராய்

உயிரில் உயிருள் பொருள் எல்லாவற்றிலும் நாதமாக விளங்கும் அம்மையும், அப்பால்பட்டவனுக நின்று இயங்கி அல்லவுமாயிருப்பவன் பராபரன். முழுமுதல்வன் எல்லாவற்றிலும் நீக்கமற வியாபித்திருக்கிறுன் எல்லாப் பொருட்களும் அவனுள் அடங்கும். ஆனுல் அவனை அப்பால்பட்டவன்; அவற்றுல் கட்டுப்படாதவன்; அல்லவுமாயிருக்கும் பராபரன் (பிரக உப: 4-4-21) (பாட்டு 227). நல்லூரில் எம் ஞானகுரவனுக உருத்தாங்கி எழுந்தருளியருள் கொடுக்கும் பரசிவ அம்மையும் அப்பரும் தம் இனிய மைந்தனுக விளங்கும் நல்லைப்பதிக்கரசே! என்இதயத்தே கண்வளராய். (8)

498. ஏகனனேக னிறைவனடி வாழ்கவெனும்
ஆகமத்தி னுட்பொருளே யையனே கண்வளராய்.

முன்பாட்டுக்களில்) அருவுருவாம் நிலையில் விளங்கும் பரசிவ அம்மையையும் அப்பனையும் உருவமைத்து பின் உணர்வினுல் உணர்ந்தறிந்து அறிவுப் பெருவெளியில் எல்லாமாயல்லவுமாயிருக்கும் பரசிவ அம்மையப்பரைத், தேறலைத் தெளிவதி தெளிவாய்த்தோர் ஊறலை, மேலாம்நிட்டைகூடிச் சித்தாகாசத்தின்கண் மீளுட்சி அம்பாள் சொக்கனுதனென சிற்றம்பல தரிசனத்தில் காண்பன் அநேகபொருட்களாக விளங்கின அம்மையப்பர் ஜோதியான ஒரு பொருளாக; தேசவெல்லையோ காலவெல்லையோ யற்று, உள்ளத்தே சித்தாகாசத்தில்

பெய்யன்பன் காண்பான். திருமூலர் ''தானத்துள்ளே சதாசிவனுயி டும் ஞானத்துள்ளே நற்சிவமாதலால்'' என்று இரண்டையும் பிரித் துத் தருகிறார். (475). மறை முடிவாம் வேதாந்தமும் முறை முடி வாம் சித்தாந்தமும் தரும் ஞானப் பொருளே நற்சிவன்; என் இதயத்தே கண்வளராய்.

அப்பர் சுவாமிகள் ''காடொடு நாடுமலையுங் கைதொழுதாடா ஐந்தொழிற் கூத்து நிறைந்த சிவமூர்த்தி தரிசனமும, (பின்) ஆடல மர்ந்துறைகின்ற ஐயாறுதருகின்ற தில்லைத் தரிசனத்தையும்'' தருகி றார் காண்க.

ஏடு மதிக்கண்ணியானே யேந்திழை யாளொடும் பாடிக்
காடொடு நாடுமலையுங் கைதொழு தாடா வருவேன்
ஆட லமர்ந்துறை கின்ற ஐயா றடைகின்ற போது
பேடை மயிலொடுங் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறியாதன கண்டேன். (4-3-5)
(9)

499. ஐயமே னென்றுரைத்த வாசான் திருவாக்கை
வைய முய்யத் தந்தருளும் வாழ்வேநீ கண்வளராய்.

'ஐயமேன்' என்றுரைத்த ஆசான் திருவாக்கை வையம் உய்யத் தந்தருளும் வாழ்வே, முறை முடிவாம் சித்தாந்த வாழ்வே'' என்று பிரித்துப் பொருள் கொள்க. தில்லைத் தரிசனம் முறைமுடிவாம் வாழ்வு அழித்த தரிசனம் திடம் தந்தது. ஆவலுடன் தேடிக் கண்டுணர்ந்த முழுமுதல்வனின் தரிசனம். பாசபந்தக் கயிறு எரிந் தது. பேரின்ப நிலையை அடைந்தாயிற்று; என்றுமழியா இன்பம். ஐயமேன். தாயுமானவர் இவற்றைத் தருகிறார் காண்க. ''திருவடி யுணர்வு கைவர நின்திருவடித் துய்ப்பில் ஐயம் சிறிதுமின்றி உன்னையே உணர்வினில் உணர்வார்க்கு உள்ளங்கை நெல்லிக்கனி யெனத் திகழும் மெய்யனே'' என

ஐய மற்ற அதிவரு ணர்க் கெலாங்
கையில் ஆமல கக்கனி யாகிய
மெய்ய னேஇந்த மேதினி மீதுழல்
பொய்ய னேற்குப் புகலிடம் எங்குனே.
(பொன்னே மாதரை. 31.) (10)

500. ஒருமொழியா லென்ற னுள்ள முவக்கவைத்த
திருவேயென் செல்வமே தெய்வமே கண்வளராய்.

செம்பொருட்டுணிவாகிய சித்தாந்த (489) ப் பெருமொழியாம்: 'சிவசிவ' எனும் ஒரு மொழியே (61 உணர்வினூடே உணர்ந்தறிய பல ஞானப் பொருட்களைத் தருவன (2:6) அந்த ஓர் சொல்லு அல்லும் பகலும் என் அறிவாகி நிற்க, உள்ளம் உவக்கத் தேனுந்து கொன்றையங் கண்ணியான் என் சிந்தை குடிகொண்டான்: ஒவ்வோர் பொருளிலும் அவனுடைய சித்திரத்தைக் கண்டு, சொல்லும் பொருளும் அற்ற அவனுடைய திறனே உணராமலே அறிவினாலே அறிந்து இன்புற்று அழியா இன்பம் பெருக்கெடுக்கத் திகழும் திருவேயென் தெய்வமே கண்வளராய். (11)

501. ஓம்நமசி வாயவென வுருவேற வேசெபிப்பார்
வீம்பிடம்பம் மேவுவரோ மெய்ப்பொருளே
[கண்வளராய்.

நான் ஞானவான் கல்விமான் எனும் அகங்காரங் கொண்ட மனம் புறத்தேயுலகும் சித்திகளிலும் வாதனைகளிலும் மாண்டுபோகும்; அந்த மனத்தை பக்தியெனும் கொடியை திடசித்தம் எனும் கொம்பில் படரவைத்தே திருவடியாகிய கட்டுத்தறியில் அறிவாகிற யந்திரங்களினால் கட்டியருளும். [பாட்டு 346;374 இல் காண்க]. ''சிவாய,'' ''நமசிவாய'' என (338) உருவேறவே செபித்தே பக்திக் கொடியை வளர்க்கலாம். வீம்பிடம்பம் அழிந்து போக மெய்ப் பொருளே கண்வளராய்! (12)

502. ஓளவியம் பேசி யழியாமல் வையகத்திற்
றெய்வம்போல் வாழச் செய்வாய்நீ கண்வளராய்.

(முன்பாட்டு விளக்கம் தொடர) ஆணவம் ஓளவியம் இவை மனத்துக்குச் சஞ்சலத்தைக் கொடுக்கிறது; சிவனும் சக்தியும் பாலும் வெள்ளை நிறமும் போன்றது; நூலும் சீலையும் போன்றது; எனும் தர்க்கம் மனதைப் புறத்தே யலையவிட்டுக் கர்மத்தை புண்டாக்குவது. தாயின் மடியில் விளையாடும் குழந்தை போல பரசிவ அம்மையை தில்லைத் தரிசனத்தில் கண்ட மீனாட்சியம்மை சொக்க நாதனே என்றுந் தியானித்தே, பிள்ளை தாயின் இயல்பு கொண்டே செயல் புரிபவன், தாமும் அவ்வாறு வாழ வேண்டும். தெய்வம் போல் வாழவேண்டும்: (117).

தாயுமானவர் தருவதைக் காண்க.

கற்றதுங் கேட்டதுந் தானே ஏதுக்காகக்
கடபடமென் றுருட்டுதற்கோ கலலால் எம்மான்
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு
குணங் குறியற் றின்பநிட்டை கூடவன்றே.

தாயுமானவர். (13)

96 வேல் வேல்

503. அன்புடனே ஐந்தெழுத்தைச் சொல்லு வேல் வேல்
ஆசா னடிக்கீழ் அமர்ந்துநீ நில்லு
கொஞ்சங்கொஞ்ச மாய்மனதை வெல்லு-வேல் வேல்
கூடாத கூட்டத்தை விட்டுநீ செல்லு

ந, ம, சி, வ, ய என்னும் ஐந்தெழுத்துந் தரும் பொருளை (1) நன்கு உணர்ந்து அவ்வுணர்வை நம்வாழ்க்கையில் அனுசரித்து நாம் வாழவேண்டும். வாழ்க்கைப்பயனாக பாசபந்தக்கயிறு அறும் மனம் ஒடுங்கும். வேலினால் துளைத்து மாயாகாரிய உடம்பு, இரவில் புல் நுனிமேல் தோன்றும் நீர் வீடியசூரியனுடைய ஒளி தோன்ற மறை வது போன்று, அழிந்து போகும் பொருள்; நீ அந்த உடம்பல்ல நீ என்றும் ஆனந்தமயமான ஆன்மா; அழியாப்பொருள். இவ்வாறு பல ஞானப்பொருட்களை திருவருளுடன் கூடிய வேல் அருளுவன். [வேலோனை உருவமைத்து நல்லியம்பதியில் கோலியே எழுந்தருள வைத்திருக்கிறார்கள்] ஆசானடி திருவடியின் திருவருளினால் பாசபந் தக்கயிறு அறுந்து அடங்கிய மனத்துடன் வீண்பாவனையான மாயை உலகை, கூடாத கூட்டத்தை விட்டு ஆசான் திருவடி நிழலில் வாழ்வாயாக. (1)

504. வஞ்சியர் ஆசையைத் தள்ளு—வேல் வேல்
வாணுள் ஆசையைப் பேணுமல் கொள்ளு
சஞ்சலம் வந்தால் வரட்டும்—வேல் வேல்
சற்றும் அலையாமல் சாந்தத்தில் கட்டு.

வீண்பாவனை உலகை நம்பி தமோ குணத்தில் அலையும் வஞ்சர் உங்களை அண்டினாலும் அவர்களுடைய பொருளையோ சஞ்சலங் கொடுக்கும் பொய்வாழ்வையோ நம்பாதே: இறைவன் திருவருளே மாணிக்கவாசகர் எங்கொங்கை நின் அன்பரல்லார் தோள் சேரற்க என்று கூறுவதுபோல் உன்னைப்பாதுகாக்கும்; பிறவித் தொடரை வளர்க்க மாயையில் அலையாமல், இறைவனை அடையவே பெற்ற உடம்பில் நாடின் பக்தனுடைய மூன்று நாட்டங்களையே கொள்ளு (444); பக்தியுடனே வாழ், சஞ்சலம் வந்தால் அஞ்சாதே (432): வித்தகஞ்சேர் திருவடியில் (432) இறைவனுடைய சித்திரத்தில் ஆனந்தங் கொண்டாடி (382) ஆன்மாவின் இயற்கை அழகான அழியா இன்பத்தில் வாழ்வாயாக. இறைவனுடைய திருவருள் வழி நின்றால் சஞ்சலந்தீரும். (2)

505. அஞ்சுபூதமும் நீயல்ல நம்பு—வேல் வேல்
ஐம்பொறி ஐம்புலனும் நீயல்ல நம்பு
வெஞ்சினம்நெஞ்சில் வாராமல் காப்பாய்-வேல் வேல்
வேறு பொருளில்லா நிட்டையில் சேர்ப்பாய்.

[முன் பாட்டு விளக்கம் தொடரவே] மாயர்காரிய உடம்பல்ல நீ; ஐப்புலனும் நித்தியா நித்திய இறைவன் திருவருள் வாழ்க்கையில் நிற்க, நாளடைவில் உள்ளம் இறைவன்பால் செல்லும்; உன்னுடைய அன்பைச் சோதிக்க நாமறியாம் எனநகை செய்வான் (433) சுஞ்சலங்கொள்ளாதே கோபங் கொள்ளாதே, புறத்தில் அலையாதே வித்தகனுர் சித்திரத்தில் மகிழ்ந்து (432) உன்னைமறந்து வேறோர் நினைவு மின்றி எல்லாம் அவனேயாம் எல்லாம் அவன்சித்திரமே எனும் அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாம் நிட்டையில் ஆழ்ந்து கிடப்பாய். (3)

506. பஞ்சம் படைவந்த போது—வேல் வேல்
பரமன் திருப்பெயர் தப்பாமல் ஓது
நஞ்சைப்போல் பிறன்பொருள் எண்ணு—வேல் வேல்
நாங்கள் சிவமென நாளும்நீ நண்ணு.

தமோ குணம் வாராமல் உறுபிணியும் வறுமையும் பசியும் வந்த போதிலும் உருவேறவே பஞ்ச மந்திரத்தை ஓதவேண்டும்; அதன்திருவடிக்கீழ் வாழவேண்டும். வேறோர் நினைவுமின்றி வித்தகனுர் சித்திரத்தில் மகிழ்வுற்று மனம் ஓங்க "அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நெறியாம் பராநந்தி நீடருள் ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம்" எனும் அரிய நிலையில் காலையும் மாலையும் நீ அழியா இன்பத்துடன் உன்னைக்கண்டு வாழ்வாய். (1)

507. கஞ்ச மலர்ப்பதம் வாழ்க—வேல் வேல்
கருணைநிறைந்த பெரியோர்கள் வாழ்க
இந்திரன் முதலியோர் வாழ்க—வேல் வேல்
இவ்வுலகி லுள்ளோர் யாவரும் வாழ்க.

[முன்பாட்டுத் தொடர] நிட்டைகூடி அவனேயே கண்டும், அன்றி ஒன்றில்லை இன்றிநீயில்லை எனும் உண்மை விளங்க அவனுடைய திருவடி நிழலில் என்றும் வாழ்ந்தால் உலகம் ஓங்கிவாழும். மாரி காலமழை போன்று கருணைமழை (447) எல்லோர் உள்ளத்திலும் செறித்து விளங்கும். அந்தணர் தேவர்கள் அரசன் இந்திரன் முதலியோர் இன்பத்துடன் வாழ்வார்கள். திருஞானசம்பந்தர் வாழ்த்துகிறார் காண்க.

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. (3—54—1)

(5)

97 எங்குந் திருக்கூத்து

508. அங்குமிங்கும் எங்குந்திருக் கூத்து — அடடா
அதையறிதல் பத்தரைப்பொன் மாற்று

(முன் பதிகம் விளக்கம் காண்க) மாற்று விடாத பொன்போலும் வித்தகன்சேர் திருவடிக்கீழ் (432) இறைவனுடைய நிழலில் வீற்றி ருந்து பலதுறையிலும் பலவீதியிலும் (423) ஜோதிப்பிரகாசனைக் கண்டு மங்கைகரும் ஆடவரும் மகிழ்வுறுதலைக் கண்டு (382) எங்கும் திருக்கூத்து என இன்புற்றிருப்பாய்; (1)

509. பொங்கி வரும் காமமே கூற்று — அடடா
புலன் வழியிற் போகாமல் தேற்று.

மாடு, மக்கள், சிற்றிடையார், பொன்னுடை, மாடவீடு மற்றும் சுற்றமனைத்தும் மாயாகாரியப் பொருட்கள், புன்நுனிமேல் நீர் போல் மறையுந் தன்மையுடையது. அவற்றினுலுண்டாகும் ஆசை, ஐம்புல வேடர் தருங்காம வேட்கை, அலையே காமிய கர்மத்தையும் தொட ரும்; இறப்பையும் பிறப்பையும் கூற்றுவனையுந் தரும். ஆகையால் ஐம்புல வேடர் கையிலகப்படாமல் தப்பு. (2)

510. இடைபிங்க லையிரண்டும் சேர்த்து — அடடா
எழிலான சுழுமுனைக்குள் ஏற்று.

[பாட்டு 508 விளக்கப் தொடர] இறைவனுடைய நடனத்தைக் கண்டு சாகஷி, ஆமோதிப்போன், தாங்குவோன், அனுபவிப்பவன் எனும் முன் நாலு பதங்களையும் அத்துவாமார்க்கம் ஆறிலும் (299) நடைமுறையில் தரிசித்துப் பாசபந்தக் கயிறு கட்டவிழ கருணையே உருவான கடவுள் எழுந்தருள, தாமாக எழுந்தருளும் தாணு தோன்ற (192) மோனநிலை எய்திய அகத்தினராய் மனம் ஒடுங்க மூச்சுக் காற்று வழி நிற்கும். என்றும் நீங்காப் புகலிடமாகிய அருள் நிலையில் புகுந் தால் மூச்சுக் காற்று இடைபிங்கலை எனும் நாடிவழி செல்வன, ஒருங்கு சேர்ந்து யோகமுனை நிற்கும். சுகர் முதலிய பெரியோர் நன் னிலையென்று சொல்லும் அன்னிலையில் ஒடுங்கியே காற்று சுழுமுனைக் குள் செல்லும். (3)

511. மடைதிறந்தாற் போலவரும் ஊற்று—அடடா
மனமாயை சாராதெனைச் சாற்று.

[முன் விளக்கந் தொடர்ந்தே] நிலையான அருளகமான பொருளிடத்தில் நிற்ப மூச்சுக் காற்று ஒடுங்கிச் சுழுமுனைக்குள் செல்ல அருள் வடிவானது ஊக்கித் தட்டித்தரும். மடை திறந்தாற் போல வரும் ஊற்று. நிட்டைகூடியவர் மனத்தின்கண் பாசபந்தக்கயிறு உலகினர்க்குக்கயிறுக காணப்படினுங் கட்டுந்தன்மையற்றது. மீண்டும் வீடென்றும் மக்கள் உறவென்றும் மாயா காரியமாகிய உடலின் தொடர்புகள் யாவும் அவனை வந்தணுகாது. (4)

512. பொங்கிவரும் அமிர்தத்தை யுண்டு—அடடா
பூரண நிட்டையிற்சேர் நன்று.

அந்நிலையில் நிற்பவர் உள்ளத்தே ஞானத்திரளாய் நின்ற பெருமான், தேவாமிர்தம் எனும் ஞானப் பொருட்களையும் ஞானவாழ்வையும் அருளுவர். அந்நிலையே ஜனகர் ஜனற்குமரர் முதலியோர் மிகமகிழ்ந்து நாடியநிலை. எல்லாவுலகமும் வலியவந்து ஏவல்செய்யும். உள்ளும் புறம்பும் ஒன்றுகவிளங்க, சித்தாகாசம் பரமாகாசம் இரண்டும் வேறுபடாது தோன்றும் பரவெளிமேல், உயிரில் பொருள் உயிருள் பொருள் எல்லாம் கானல் நீர் போல் மறையுந் தன்மை விளங்க மீதான அந்த ஜோதியில் தன்னை என்றுங் கண்டு மகிழ்வுற்று இன்புற்றிருப்பாயாக. (5)

513. மங்கள கரமாக வாழ்த்து—அடடா
மௌன நிலையிலே ஆழ்த்து.

கூடுதலும் குறைதலும் இல்லாமல் விடிகின்ற காலைப் பொழுது போன்று திருவருளின் தோற்றம் தோய்ந்துள்ள திருவடியுணர்வு கைவந்த மௌனநிலையிலே ஆழ்ந்துகிட. இரும்போ கல்லோ மரமோ என்னும் நெஞ்சை கனல்மேல் இட்டமெழுகாகவுருக்கும் இன்பவெள்ளமாகக், கரும்போ கர்க்கண்டோ சீனி சருக்கரையோ தேனே என்று மங்களகரமாக வாழ்த்து. (6)

514. சங்கரன் திருப்பாதம் போற்று....அடடா
சாயுச்சியப் பதவியில் ஏற்று.

தலைவன் மெய்யன்பர்கட்கு அன்பாகக் காணப்படும் மெய்ப்பொருளானவன் மூழு முதற்றலைவன்; பேரின்பமவுன அருட்குருவாக எழுந்தருளி எழியேனுடைய முடியின்கண் தன் திருவடியினைச் சூட்டியருளினன். என்னையும் உலகம் கடவுளென வணங்கவும், யானும்

உலகினை கடவுளை வாழ்த்தவும் அந்த முழு முதல்வரும் இறைவன் தண்ணருள் தந்தனன்: மடைதிறந்தாற்போல் கருணை மழை பொழியலாயிற்று. பரசிவ உலக மாதர பிதாவும் எளியேனும் வேறென நினைவிலோ கனவிலோ எண்ணுத அந்தச் சாயுச்சியப் பதிவியை யானடைந்தேன் என்பதே உண்மை.

என்னையுந் தன்னையும் வேறு—உள்ளத்
தெண்ணுத வண்ணம் இரண்டற நிற்கச்
சொன்னது மோரு சொல்லே—அந்தச்
சொல்லால் விளைந்த சுகத்தை என் சொல்வேன்சங்கர.

(தாயுமானவர் ஆனந்தக்களிப்பு. 14) (7)

515. நல்லூரான் திருப்பாதம் காப்பு—அடடா
நமக்குக்குறை வில்லைநல்ல வாக்கு.

(முன்பாட்டு விளக்கம் காண்க) சங்கரன் திருப்பாதம் போற்றி சாயுச்சிய பதவியே நல்வாழ்வு. நல்லூர் முருகன் மறக்குறத்தி மணாளன் (464) ஹரி நாராயணன் மருகன் முருகன் (378) நல்லூர் முருகன் திருப்பாதம் மோனமெய்திய அகம்: சாயுச்சியபதவி அடைந்து நல்லூர் முருகனி திருபையுடன் என்றும் மறவாது வாழும் மெய்யன்பனுக்கு என்ன குறையுண்டு. அன்று ஆண்மா நித்தியம் என்று ஆசான் சொன்ன வாக்கு (168) சாயுச்சிய பதவி அடைந்த மெய்யன்பன் கூவும் அந்த வாக்குக்கு என்ன குறைவுண்டு. (8)

516. சொல்ல முடியாத தீர்ப்பு—அடடா
சுவாமி கிருபையுனக் காப்பு.

(முன்பாட்டு விளக்கம் காண்க) நல்லைப் பதிக்கரசனே உனக்குக் கிருபை கூர்ந்து என்றும் உள்ளங்குடி கொண்டு, முருகனும் நீயும் இரண்டெனச் சொல்லொணு நிலையில் சாயுச்சியப் பதவியடைந்த அந்நிலையில் உலகம் உன்னைக் கடவுளென்று வணங்கவும், நீ உலகை பரசிவ அம்மையப்பனுகக் கண்டு சிவதொண்டு செய்து, அவ்வுலகம் உன்னை வாழ்த்தவும், நல்லூர் முருகன் உனக்கு நல்ல தீர்ப்பு அளித்தனன், என்று ஞானகுரவன் செல்லப்பா சுவாமியாரையே வணங்குகிறார். (9)

98. பரமனை எங்கும் பார்

517. பார்பார் பரமனை எங்கும்
பதைவாதேசுகம் இதயத்தில் தங்கும்
ஆர்தான் உனக்குநிகர் ஆவார்
ஐயப்படாதேதெய்வம் உன்னிடம் உண்டு.

[முன் பதிகம் (516) பொருளைத் தொடர] (செல்லப்பா சுவாமியார் சாயுச்சியப் பதவியடைந்த அந்நிலையில் பரசிவ மாதாபிதாவையும் தன்னையும் ஒன்றெனச் சாயுச்சியப் பதவியடைந்தபோது இறைவன் தீர்ப்பெனக் கவனிக்க;) எப்பொருளிலும் அப்பாற்பட்டவனை நின்று வினையின் நிகழ்வால் விளையும் வினைப்பயன் எனும் அம்பலத்தே வினைமுதலாம் முதல்வன் எங்கும் வியாபித்திருந்து இயங்கும் அப்பரமனையே எங்கும் காண்பாயாக. நாதவடிவாக விளங்கும் அம்மையும் அப்பால் நின்று தன்னொளி கொண்டு இயக்கும் அப்பரும் பரமசிவான்மா, பரசிவ அம்மை அப்பராகக் காட்சிதருவர். வறுமைப் பிணி வந்தாலும் உறுநோயால் வருந்தினாலும் பதையாதே. பொது நடம் காண்பிக்கும் இறைவன் தம் திருவருளைத் தருவன் இதயத்தில் மோனகுருவே எழுந்தருள அழியா இன்பம் தேக்கும். திடமுடன் ஒப்புக்கொள் இறைவன் உன்னுடைய உடம்பைத் தன்னுடைய வீடாக ஏற்றுக் கொண்டான். ஆர்தான் உனக்கு நிகராவார்.

(1)

518. ஒருபொல்லாப்பு மில்லையென்ற வாக்கு
உணர்ந்துணர்ந் தின்பத்தில் தேக்கு
கருமத்தில் கையைநீ வைத்துக்
கடமையைப் பயமின்றி ஆக்கு.

எழுத்துக்களுள் நான் அகரம், கூட்டுறவுச் சொற்களுள் இரு சொற் கூட்டு ஒயாக்காலம் நானே எங்கும் பரந்திருந்து வினைப் பயனை வழங்குபவன் நானே. (கீதை. 10-33);

அனைத்தையும் அழிக்கும் மரணம் நான். செல்வர்களின் வளர் செல்வம் நான். பெண்மைகளுள் நான் புகழ், திரு, சொல்நினைவு அறிவு திண்மை பொறையாக இருக்கிறேன். (கீதை 10-34). பரசிவ ஆன்மா, பரசிவமாதா பிதாவாகக் கண்ட உலகு உன்னை நேசிக்கும். ஆசான் ஒரு பொல்லாப்புமில்லை என்று சொன்ன வாக்கை உணர்ந்து அழியா இன்பத்தில் என்றும் வாழ்வாயாக. அறிவே வடிவான அகம்: இறைவனே எல்லாம் செய்பவன் (கீதை) நீ கர்மபலன் கருதாது உன் வேலையைச் செய்; கர்மபலன் உன்னைச் சாராது.

(2)

519. உண்மை முழுதுமென்று சாற்று
உனக்கொரு குறைவில்லை ஏற்று
கண்ணை இமைகாக்கு மதுபோல்
காப்பதுவேயுன் கடமை இனிமேல்.

வாலறிவுப் பேரொளிப் பிழம்பாய் அறிவை மறைத்திடும் ஆணவ வல்லிருட் கூட்டத்தைக் கொள்ளையிடும் திருச்சிற்றம்பலமென்னும் தூவெளியே; வேறுபாடுகளற்றுக் கிடக்கும் நுண்வெளி 'அ' எனும் சத்தம் தோன்றுமிடமென யேசுநாதர் கூறிய அந்த நுண்வெளி,

மனத்தினாலும் சொற்களாலும் விபரிக்கக்கூடிய அந்த மாயாகாரிய நுண்வெளி; அந்த மாயாகாரிய நுண்வெளிக்கும் அப்பால் அறிவுப் பெருவெளியில் வாலறிவுப் பேரொளிப் பிழம்பாய் காட்சிதருபவனே, மாறுபாடற்று உண்மையாக விளங்குஞ் ஜோதியே, ஞானிகளாலும் நால்வராலும் மீதான வெற்பென அழைக்கப்படும் பொருளே "எங்கும் பரந்திருந்து விளைப்பயனே வழங்குபவன்". (கீதை முன் பாட்டில் காண்க). இவை விளங்கவே நீ திருவருள் ரூபமாக எண்ணங் களுக்கு இடமாக இருப்பவன்; எல்லா உயிர்களையும் கண்ணே இமை காப்பதுபோல் காத்தருள்வாய். (3)

520. வீம்பிடும்பை ஆங்காரம் விட்டு
வேதாந்த நெறியினைக் கட்டு
ஓம்சிவாயநம என்று செபிப்பாய்
உள்ளத்திற் கள்ளத்தை அவிப்பாய்.

நீ இறைவனைத் திருச்சிற்றம்பல தரிசனத்தில் கண்டு பாச பந்தக் கயிறு எரிந்தபோதிலும் உன் மனம் மதம்பிடித்த யானையை யொத்தது. வீம்பும் நான் எனும் ஆங்காரத்துடனும் அலையும்: அத்வைத பரமனை நீகண்டு ஆங்காரத்தை ஒழி. பக்தி எனும் கொடியை திடசித்தம் எனும் கொம்பிலே, ஐந்தெழுத்தை உரு வேறவே செபித்துப் படர வளர். பரசிவ ஆன்மா, பரசிவ மாதா பிதாவாக உலகையும் உன்னையும் ஒன்றுதக் கண்டு சாயுச்சியப் பதவி யையடை. உள்ளத்தில் கள்ளம் விடாதே. (4)

521. நல்லூரான் திருவடியைப் பாடு
நாமேநாம் என்றுசொல்லி நாடு
கல்லுங் கரையக்கவி சொல்லு
காமக் குரோதத்தை வெல்லு.

சாயுச்சியப் பதவியடைந்த (முன்பாட்டு விளக்கம்) அந்நிலை நல்லூரான் திருவடி (515) யைப் பாடித் தொழுதேத்து. பரசிவ மாதா பிதாவும் நானும் ஒன்றெனக் கண்டோம். கல்லுங் கரைய பக்திவளர். (510). (5)

99. செழுமலர்த் திருவடி

இராகம் — காம்போதி. தாளம் — ஆதி.

பல்லவி

செழுமலர்த் திருவடி தரிசிக்கலாம்
வாராய் தீய மனமே.

அநுபல்லவி

தொழுமடியார் பழவினைகள் கழுவித்தள்ளி
துரியநிலை அருளவல்ல நல்லை நாதன்.) (செழுமலர்)

சரணங்கள்

522. முழுது முண்மையென முனிமுன் சொன்னமொழி
மோகந் தீர்க்குமதை முற்றிலும் நம்பி
அடுத்து வந்தவெனை ஆதரித் தாண்டுகொள்
அம்புவி மீது நம்பினேனே. (செழுமலர்)

செவ்வி பொருந்திய திருச்சிற்றம்பலமென்னும் மரணம் பிறப்பை ஒழிக்கும் நற்நிலையைக் கொடுக்கும் மலர்ப்பாதமாகிய மோனநிலை எய்த மனமே உன்னுடைய காமக் குரோத முதலிய தமோகுணங்களை விட்டு நன்னெறியாம் சாத்விகத்தில் மோனங் கைவர வாழ்தி. 'சிவசிவ' எனும் மாமறை தரும் உண்மை விளங்க வாழ்ந்து மும்புரங்களையும் எரி (51). மும்புரமுமெரிய பாசபந்தக் கயிறு எரிந்த மனம் ஒடுங்கும். வேறோர் நினைவு மின்றி நிட்டை கூடு. துரிய நிலையில் பரசிவான்மாவை சைதன்ய ஜோதிரூபத்தில் காண நல்லூர் முருகன் தாள்களைக் கும்பிடு. சரணங்கள் முழுது முண்மையென (519) ஆசான் சொல்லப்பட் சொன்ன மொழி உன்னுடைய காமக் குரோத தமோகுணத்தை மாற்றிப் பிறக்க வைக்கும் (396), நன்னெறி நின்று துரியநிலை அடைய அருள் புரிந்து என்னை ஆண்டு கொள் நல்லை முருகோனே. பரசிவான்மாவாக விளங்கும் முருகோனே (1)

523. அடியவர் குடியா ஆளும் அரனே
அரகர சிவசிவ சங்கர சம்போ
அழுதுந் தொழுதுமடி பாடி யரற்றி
அதிவேக மாயோடி வாராய். (செழுமலர்)

திருத்தில்லைச் சிற்றம்பல தரிசனங்கண்ட மெய்யன்பர்கள் பர சிவான்மாவும் தானு மொன்றுன நிலையில் நிற்க அருளும் முழு முதல்வனே; மரண பயத்தை நீக்கி 'சிவசிவ' எனும் மாமறை தரும் பரசிவ அம்மையப்பரான சங்கரனே. விழி நீர் பெருக உன்னை ஏத்தித் தொழுது உன்புகழைப் பாடிவணங்குவேன், வேகமுடன் வந்து என்னைக் காத்தருள்வாய் நம்வேகமும் இறைவன் வேகமும் (194) ஸ்ரீ இராமகிருஷ்ணர். (2)

524. அன்பே சிவமென வறிவா ரவல மவனியி லடையார்
தன்போ லெவரையும் நினைவார் சாந்தம் பொறுமை
யுடையார்
துன்பே கவலை பிணிகள் தொடரா திவர்களை நாளும்
பொன்போ லிலங்கையில் யோகன் பொற்பத
மென்றுந் துணையே.

எவ்வுயிரிலும் அவ்வுயிராய், அவ்வுயிரை அறிவிக்கும் உயிர்க்குயிராம் நாதனுக விளங்கும் இறைவனும் மெய்யன்பனு மொன்றுபட்டு வேரொணு அந்திலேயில் எவ்வுயிரையும் தன்னுயிர்போல் அன்பாய் காணும் அடியவர் இவ்வுலகில் சஞ்சலமடையார். துன்பமும், சுவலையும் அடையான். பிணிகள் விட்டு நீங்கும். அறிவுப்பெரு வெளியில் அறிவுப் பேரொளிப்பிழம்பாம் வாலறிவனையே காண்பவன் அவன். யோக சுவாமிகள் பொற்பதம் அவனுக்கு என்றும் அழியாப் பேரின்பத்தைக் கொடுக்கும்; சிற்றின்பம் துன்பம் இரண்டும் இல்லாதவன் அவன்.

100 நல்ல மருந்து

இராகம்—மோகனம் தாளம்—ரூபகம்

நல்ல மருந்தொரு குருமருந்தை நான்
நல்லூரிற் கண்டேனே. (நல்ல)

525. எல்லையில் லாப்பிணி தீர்க்கு மருந்து
இம்மை மறுமைக்கு மேற்ற மருந்து
இல்லை யெனுது கொடுக்கும் மருந்து
ஏழை யடியார்க் கிரங்கு மருந்து. (நல்ல)

தொன்மை மலப்பிணிப்பாம் மூலநோயை ஆருயிர்களின்றும் அவ்வுயிர்களோக் கொண்டே விடுவிப்பதன் பொருட்டே பெருந்தண்ணளி வாய்ந்த சிவபெருமான் தொன்மையே யுள்ள வினை மாயையினை றும் முறையே வினைத்தன்மையினையும் உடலுறுப்பு உலகம் உண்பொருள் களையும் படைத்து அவ்வுயிர்களுடன் பொருத்தியருளினன். அப்படைப்பாலுண்டான பிணி பசி முதலியவற்றினின்றும் நீக்குதற்கு இம் மாயாகாரிய உடலும் நிலையில்லாததென உணர்ந்தறிவதே உண்மை உணர்வாகும். அவ்வுண்மை (380) உணர்வை நாம் நல்லூர்த் தேரடியில் ஆசான் செல்லப்பன் (486) என்னை இனிது பார்த்தபோது கண்டேன்.

பிறப்பு மரணம் என்னும் எல்லையில்லாப் பிணியை, காலன்வலி தொலையக் காலெடுத்தோட (488) அவன் அருள்தந்தனன். உண்மை முழுதுமென்று 519) ஒரு சொல்லுத் தங்குறிப்பினால் அருளினன்: திருவருள் கைகூர இம்மையில் 'அவன் கடவுளாக வாழ்கிறான்' என்று உலகம் போற்றவும் ஏவல்செய்யவும், மறுமையின்ப மாகிய மோட்சவீடு, மரணம் பிறப்புக்கு அப்பால் பட்டவனுகவும், வாழ அருள் தந்தனன். தண்ணளி வாய்ந்த சிவபெருமான் படைப்பு எனும் தொழிலை (மேலே காண்க) ஏழை அடியார்களினின்றும் மாயை மலப் பிணிப்பை விடுவிக்கவே ஏற்றுக்கொண்டான்.

526. வல்லவன் செல்லப்பன் தந்த மருந்து
வாழ்த்துங் கணபதிக்கு வந்த மருந்து
புல்லர்கள் கண்டும் புசியா மருந்து
புண்ணியர் யோகர் புசிக்கு மருந்து. (நலிலை)

வல்லவன் செல்லப்பன் தோடியிற்கண்ட போது சிவனருளை நோக்கென்றான்; நோக்க நொடியளவிலின்பந் தேக்கிற்று (489). அறிவு சொரூபமே அந்தப் பேரொளிப் பிழம்பு (519) அறிவுசொரூபமாகவே விளங்குபவன் ஞானக்கணபதி. திருவருள் கூடிய யோகர் புசிக்கும் இம்மருந்தை அறிவிலிகள் கண்டும் புசியார்கள்.

101 சரவணபவ குக

பல்லவி

யோககுருநாதன் திருமலர்ப் பாதன்
தெரிசனம் நினைமனமே தினமே.

அநுபல்லவி

தவநிலை யோர்கள் பணியும் பொற்பாதன்
சரவண பவகுக சண்முக நாதன். (யோக)

சரணம்

527. அன்பர்க ளிடர்தம்மை அகற்றுஞ் சுசீலன்
அம்மை வள்ளிதெய் வானைமகிழ் லோலன்
என்பிழை யாவும் பொறுத்தருள் சீலன்
இன்பமெந் நாளுந்தரு சுந்தரப் பாலன். (யோக)

யோகசுவாமிகள் தம்குருநாதன் செல்லப்பாச் சுவாமியாரை தேரடியில் முதற்கண்டு தரிசித்தபோது "சிவனருளை நோக்கென்றான்" நோக்க நொடியளவிலேயின்பம் தேக்கிற்றென் சிந்தை தெளிந்து" (489). என்று தருகிறார். சுவாமிகளும் அவரை உற்றுநோக்க ஞானகுரவனும் உண்ணின்று அவரை மேலே தூக்கிச் சென்றே "உவமை கடந்த இன்பத்தே" நிட்டை கூடிய சுவாமிகள் தம்மைக் காண அருளினன். வேறேர் நினைவுமின்றி குருவும் சீஷனும் ஒன்று கூடியே சிவனருளை நோக்கினர். யோககுருநாதன் திருமலர்ப் பாதம் தெரிசனம் தினமும் நினைமனமே.

சாக்ஷி, ஆமோதிப்பவன், தாங்குபவன், அனுபவிப்பவன் என்னுமாறு மார்க்கங்களுள்ளும் தம்மைக் கண்டு தூக்கி மேலே சென்று யோகநிலையடையும் நோக்கத்துடன் (489) தவநிலை நிற்கும் மெய்யன்பர்கள் அன்புடனும் ஆவலுடனும் வேண்டி நிற்கும் அந்தப்

பொற்பாதம் ;மயிலேறி விளையாடும் முருகன் தரும் சாந்தம் பொறுமை விளங்கும் சரவணப் பொய்கை போலும் பொற்பாதம்; இவை விளங்க வாழ்வு எத்துறையிலு மளிப்பவனே சண்முகநாதன்.

மெய்யன்பர்கள் சண்முகன் அருளுடன் வாழ்ந்து (மேலேகாண்) குருநாதன் பொற்பாதன் இடர் தீர்த்தாண்டருளும் 493) திருத்தில்லைத் தரிசனத்தில் பரசிவான்மா விளங்கும் அம்மையப்பர் சைதன்யப் பொருளாக விளங்கும் ஜோதியில் என் பிழையாவும் பொறுத்து நம்மைக்காக்கும் அம்மை வள்ளி தெய்வானை சமேத (383) வேலோனைக் கொண்டாடிடுவோம் (382) சிவயோக வாழ்வு தரும் சுந்தரப் பாலன்.

102 ஈசனே நல்லை வாசனே

பல்லவி

ஈசனே நல்லை வாசனே
கதிரேசனே முருகேசனே

அநுபல்லவி

நேசமாய் உன்திரு வாச மலரடி
நித்தம் மனச் சுத்தத்தொடு
பத்திசெய்து பாடிப் பணிந்தோம். (ஈசனே)

சரணம்

528. குமரேசனே சர்வேசனே
கோடி சூர்யப் பிரகாசனே
குஞ்சரி தெய்வானை வந்தடிதொழு குகனே
நற்றவர் அகனே சற்குருவே நீதஞ்சம்
ஓடியெம் மனம் உழலுதே
உமைபாலனே தண்டைக் காலனே
ஒருநொடியில் வந்திடர் களைந்திடாய்
உத்தமர்தஞ் சித்தத்தில் தித்திக்குந் தெள்ளமுதே.
(ஈசனே)

ஒரு யந்திரம் பல சில்லுக்களைச் சுழற்றுவது போல் முருகேசன் சிவயோக வாழ்வு அழகுபட வாழப் பலதுறைகளிலும் தம் ஒளி பல திசைகளிலுஞ் சென்று இயக்கும் ஒளிக் கதிர்களையுடைய கதிரேசனே; நித்தியா நித்தம் பரசிவான்மா அம்மையும் அப்பருமான உலகம் நம்மை நேசமொடு பார்க்க நாம் முருகேசனே எவ்வுயிரும் அவ்வுயிர்போல் எண்ணி ஆருயிர்கள் தோறும் (491) அன்பு செய்து பாடிப் பணிந்தோம்.

உயிரில் பொருள் உயிருள் பொருள் எண்ணில் பலகோடி உயிர்கள் அத்தனையிலும் அருட்கண்ணுக ஒளிதிகழும் எம்பெருமானே, அம்மையின் இயல்புடன் எப்பொருளிலும் நடம் புரியும் குமரேசனே, முருகோனே, கோடி சூரியப் பிரகாச வொளியுடன் விளங்குபவனே; வள்ளியம்மையைப் போன்று சிவயோக வாழ்வு அழகுபட உன் குஞ்சரி போன்ற தெய்வானை சீரும் சிறப்புடனும் தொழுதேத்தும் முருகோனே! வள்ளி தேனுந்து வங்கை உளங் கொண்டவன் (383) நற்றவம் புரியும் உத்தமர் (299) சித்தத்தில் சிவலிங்கமாக விளங்குபவனே (475) மனம் நெஞ்சலத்துடன் உழலுதே உன்னைத் தொழுது வணங்குகிறேன். பொதுநடம் காட்டும் தண்டையுஞ் சிலம்புடனும் வந்து இடர்தீர்த்து (493) எம்மை யாண்டருள் புரிவீராக. கதிரே சனே முருகேசா.

103. பெரியதிற் பெரியது ஆன்மா

529. பெரியதிற் பெரியது சிறியதிற் சிறியது
அரியதில் அரியது ஆன்மா அதுதான்
ஒன்றென இரண்டென ஓதவொண் ணாதது
நன்றெனத் தீதென நாடவொண் ணாதது
என்று மிருந்த படியே யிருப்பது
என்று மெம்மை விட்டுப் பிரியாதது
இன்பம் படைப்பது துன்பந் துடைப்பது
முன்னிலைச் சுட்டு முகியா திருப்பது
ஆவது மழிவதும் அற்ற மெய்ப்பொருள்
தேவரும் முனிவருந் தேடியுங் காண்கிலர்
அப்படி யுள்ளது அடியேன் மனத்திலும்
செப்படி வித்தை செய்து நிற்குமே.

இந்த ஆன்மா "அழிக்கப்படுவதில்லை, பற்றில்லாதது பற்றப் படுவதில்லை; சுட்டுப்படாதது ஆகையாற் துன்பத்திற் குட்படுவ தில்லை. துன்புறுவதுமில்லை. புண்ணியத்தையும் பாவத்தையும் இவன் தாண்டுகிறான்." பிருக. உப. (4-4-22) பாட்டு 227 இல் காண்க). இன்பம் படைப்பது துளபந்துடைப்பது. நன்றெனத் தீதென நாட வொண்ணாதது; என்றும் இருந்தபடியே யிருப்பது.

[பிருக. உப. 4-4-25] இந்த ஆத்மா பெரியவர், பிறப்பில்லா தவர், மூப்பில்லாதவர், இறவாதவர், அழியாதவர், பயமில்லாத பிரம்மம் பிரம்மமே பயமில்லாதது; இங்ஙனம் அறிந்து பிரம்ம மாகிறான்.

முன்னிலைச் சுட்டு முளையா திருப்பது, ஆவதும் அழிவதும் அற்ற மெய்ப் பொருள் தேவரும் முனிவரும் காண்கிலர், அப்படியே யுள்ளது அடியேன் மனத்திலும் செப்படி வித்தை செய்து நிற்கிறது; அதை பிரம்மமாகவறிந்தே காண்கின்றேன்.

பெரியதிற் பெரியது சிறியதிற் சிறியது. அரியதில் அரியது. (மேலே. உப. 4-4-77) பாட்டு 461 காண்க.] வேறும் பிருக உப. (4-3-22;30); (4-4-4). காண்க.

104. கடவுள் வாழ்த்து

குறள் வெண்பா

530. அருவா யுருவா யருவுருவாய் நிற்கும்
ஒருவனே தெய்வ முணர்.

உருவமாம் நடேசர் தரிசனத்தை, எப்பொருளிலும் வியாபியாய் நிற்பவனே, சாக்ஷி ஆமோதிப்பவன் தாங்குவோன் அனுபவிப்பவனுகவும் காண்கிறேம் (489); அருவுருவாம் சதாசிவனையும் மகேஸ்வரனையும் காண்கிறேம்; பொற்றூண் என்று இவற்றை அறிவர். சிவன்மாபரசிவ அம்மையுமப்பருமாக வினையின் நிகழ்வால் விளையும் வினைப்பயன் எனுமம்பலத்தே வினைமுதலாம் முதல்வன் சொக்கனைதன், தன்னொளி கொண்டு எப்பொருளிலும் இயங்குபவனும் முதல்வனொளிகொண்டு ஓசைவடிவாக இயங்கும் அம்மையையும் சைதன்யப் பொருளாக பொன்னம்பலத்திற்கண் திகழ்சிற்றம்பலத் தரிசனம் காட்சிதருவர். இது அருவாம் பொன்னம்பலம்; பரமசிவன். இம் மூன்றும், அருவாம் பொன்னம்பலவாணன், அருவுருவாம் பொற்றூண் சதாசிவன் மகேஸ்வரன், உருவாம் நடேசர். சாட்சி, ஆமோதிப்பவன் தாங்குவோன், அனுபவிப்பவன் எனும் இவ்வாறு ஆதாரத்தாலும் முழுமுதல்வனே உணர்ந்தறி. (1)

531. அந்தமு மாதியு மில்லா வொருவனே
சிந்தையிலும் நிற்குந் தெரி.

[முன்விளக்கம் தொடர] மாயாகாரியப் பொருட்களாக நாம் காணும் ரூபங்களை, நாம் சகுணபிரமமாக, உருவாம் நடேசராக தரிசிக்கிறேம். அருவுருவாம் சதாசிவனை, சத்தத்துள்ளே சதாசிவன் சித்தத்துள்ளே சிவலிங்கமாக அருவாம் ரூபமாகக் காண்கிறேம்; ஞானத்துள்ளே, சித்தத்துள்ளே நாம் காணும் முக்கட்பெருமான், இருவினைதொழுத்துச் ஜோதியில் ஆதியுமந்தமு மில்லாத அந்த முழுமுதல்வன். கோடி சூரியப்பிரகாச வொளி கொண்டவன். "ஒரு நொடியளவில் இன்பம் தேக்கிற்று என் சிந்தை தெளிந்து (489)" (2)

532. ஆருயிர் தோறு மதுவதுவாய் நின்றருளுஞ்
சீருடையா னேயெங்கள் தேவு.

எப்பொருளிலும் வியாபித்திருக்கும் வினைமுதலாம் முதல்வன் வினைத்தன்மையினையும் உடலுறுப்பு முதலியவையும் அவ்வுயிர்களுடன் பொருந்தியருளினன். இதுவே படைப்பு. மெய்யன்பர் வேண்டும் பொழுது திருவருள் கொண்டு சிவபெருமான் சிவகுருவாக எழுந்தருளி மலநீக்கத்துக்கு ஏதுவாகிய வழிவகையை அவரவர் நோக்கத்திற்கேற்றவாறு திருவருள் வடிவாகப் பொருத்திவைப்பன் (380).

பள்ளி வகுப்பும் ஏணிப்படியும் மேனிலை எய்துவதற்கு வேண்டத்தக்க இன்றியமையாத வழிகளாகும்: ஒவ்வொன்றும் அதனதன் நிலைமையில் இன்றியமையாச் சிறப்புடையனவேயாகும். பிணக்கிலாது 'சிவசிவ' எனும் மாமறை தரும் சிறப்பு வாய்ந்த அப்பொருளுடன் இணக்கங் கொள்ளின் அவ்வுயிர் மேனிலை எய்தி இன்புறும். ஆசான் ஒருவனே மாணவரனைவர்கட்கும் அவரவர் அறிவு நிலைகட்கு ஏற்பப் பாடங்களைக் கற்பித்து வந்து மேனிலையாக்குவன். அவனே எங்கள் தேவு மாணிக்கவாசகர் தருவதைக் காண்க.

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்த மேவியசீர்
இருந்தவா றெண்ணீ ஏசறு நினைந்திட்
டென்னுடை யெம்பிரான் என்றென்
றருந்தவா நினைந்தே ஆதரித் தழைத்தால்
அலைகடல் அதனுளே நினறு
பொருந்தவா கயிலை புதுநெறி இதுகாண்
போதராய் எனறரு ளாயே. (அருட்பத்து 10) (3)

533. இருப்பு நெருப்புப்போ லெவ்வுயிரி னுள்ளும்
இருக்கு மிறைவன் இயம்பு.

இருப்பு = மீந்திருப்பவை; நெருப்பு = அட்டமூர்த்தங்களிலொன்றானது; சூரியன். பாவந்தேய்ந்த ஆன்மா ஆத்மன், பரமாத்மன் என அழைக்கப்படும் (373). மெய்யன்பன் சாக்ஷி. ஆமோதிப்பவன், தாங்குவோன் அனுபவிப்பவன், மகேஸ்வரன் சதாசிவன் எனும் அத்வைத மார்க்க மாறுந்தாண்டி, ஈற்றில் மீதான திருவைந் தெழுத்துச் ஜ்ஜோதியில் தன்னைக் காண்கிறான். இந்தப் பரமாத்மனே இருப்பு; மீதான ஒளி வடிவினன் சூரியன். ஆருயிர் தோறும் அதுவதுவாய் நின்று அருளும் சீருடையான். ''மீதான வெற்புடைய நாடு'' என்று (85) எங்கள் வளநாட்டில் தருகிறார். (4)

534. இல்லையுண் டென்னு மியல்புடையான் காணவனே
தொல்லையுளர் னென்று துணி.

(முன்பாட்டு விளக்கம் தொடர) எல்லாரிடத்தும் ஈசனைக் காட்டிடடா எல்லாரையுமீசனிடத்துக் காட்டிடடா (476) என்னும் பொருள் விளங்க நலஞ்சுழியா இன்பம் பெருக (55) காட்சி தருபவனே முழு முதல்வன். ஐம்புல வேடர் வகையிலகப்பட்டு நான் எனும் ஆணவ மூனைப்பு மாயை, இறைவனுடைய வெளிச்சத்தை மறைக்க, இறை வனை மறந்து நிற்பன்; தன்பால் முதன்மை, சுதந்திரம், ஏறிட் டுக் கொண்டு திரியுங்காலம் முழுமுதல்வன் பின்னின்றருள்வன் (53). இருட்டு மறைந்து முதல்வன் முதன்மையும் அடியேன் அடிமையுமா கக் கொண்டு திரியுங் காலம் முதல்வன் முதன்மையும் கொண்டு முன் னின்றருள்வன். ''இல்லை யுண்டென்னு மியல்புடையான்'' என்று சுவாமிகள் தருகிறார். கந்தப் புராணத்தில் ''வள்ளி முநகனுகச் செயல் புரிந்தான்'' என்றும், பிரிக்கப்படா அந்நிலையை ''முருகனே வள்ளி யாக நின்று செயல்புரிந்தான்'' என்றும் தருகிறார். ''இல்லையுண்டென் னும்இயல்புடையான் தொல்லையுளான்'' களவுபடும் இருதயம் (51) என்று கூறுகிறார்.

(5)

535. இம்மை மறுமைக் கிறைவ னெருவனெனத்
தம்மையுணர்ந் தார்சொன்னூர் தாம்.

(முன் இரண்டு பாட்டு விளக்கம் காண்) களவுபடா இருதயம் பொன்னம்பலமாக விளங்க உலகம் அடியேனைக் கடவுளென மதிக்க வும், நான் பரசிவ அம்மையப்பரான உலகை என்னுயிர்போல் நேசிக் கவும் இம்மையின்பம் தரும்; மோட்சவீடே பெறும் பேறுக மறுமை யின்பமும் வந்து சேரும்: இதை உணர்ந்தார் தன்னையே யுணர்ந்த வர். யானும் உலகும் வேறென நினையா ஒன்றுபட்ட அந்நிலையில் தன்னைக் காண்பவர். நிட்டை

(6)

536. கல்லார்கற் றூர்க்குங் கடவுளொன் றுண்டென்று
நல்லா ருரைத்தார் நடு.

இறைவன் நூல் எனப்படும் செந்தமிழ்த்திருமாமறை திருமாமுறை எனும் வேதாகமங்களைக் கற்றுணர்ந்தோரும், இந்நூல்களைக் கல்லாத போதிலும் உலகநூல்களைக்கற்றதனல் உண்டாகும் அறிவுடையோரும் ஐம்புலவேடர்கையிலகப்படாதும் ஆணவ மூனைப்புக் கொண்டு மனம லையாதும் ஒடுங்கிய மனத்தவரான (533; 534;) நல்லோர் தம்மைத்

தாமே யுணர்ந்தறிந்தோர் பற்றற்றுச் சும்மா இருக்கும் அந்நிலையில் கடவுள் ஒன்றுண்டு என்று சொன்னார்காண். தாயுமானவர் 'கல்லாத போதிலும் மெய்யடியார்கள் உணர்த்தியருளும் உறுதி மொழியினால் உனையடையலாம்'' என்று கூறுகிறார் காண்க.

'கல்லாதேன் ஆனாலுங் கற்றுணர்ந்த மெய்யடியார்
சொல்லாலே நின்னைத் தொடர்ந்தேன் பராபரமே''
(பராபரக் கண்ணி. (383) (7)

537. பிறப்பிறப் பில்லாப் பெருமானே யெங்கள்
சிறப்புடைத் தெய்வமெனத் தேர்.

சும்மா இருப்பே சொரூபமாக (முன்விளக்கங்கள் காண்க) நிட்டைகூடியே திருத்தில்லைத் தரிசனங்கண்டு இறைவனும் தானும் ஒன்றென்னும் அந்நிலையில் வாழ்பவனே சீவன் முத்தன்; அவனே பிறப்பிறப்பில்லாத முழுமுதல்வனுடன் ஒன்று சேர்ந்து வாழ்பவன். அவனே பரசிவ ஆன்மாவான பரசிவ அம்மையப்பரென்னும் சிறப்புடைத் தெய்வத்துடன் ஒன்றுபட்டுச் சீவிப்பவன். (8)

538. அறிவுக் கறிவாகி யங்குமிங்கு மெங்கும்
செறியுமொன் றேயெமக்குத் தேவு.

ஆருயிர் தோறும் அதுவதுவாய் நின்று (532) அருளுபவன், எவ்வுயிர்க்குமினிய ஈசன், சுட்டுப் பொருளுக்கும் சிற்றறிவுக்கும் அப்பாற்பட்டவன், அறிவுவடிவானவன், அறிவுக்கறிவாகி எவ்வுயிரிலும் எப்பொருளிலும் நீக்கமற எங்கும் வியாபித்து (260) சிறப்புடைய பரசிவ அம்மையப்பராக அறிவுவடிவாக எல்லாருள்ளத்திலும் விளங்குபவன். அவனே சிறப்புடைத் தெய்வம். (9)

539. பெருமை சிறுமையில்லாப் பெம்மானே எங்கள்
அருமை யுடையதெய்வ மாம்.

மனம் மதம்பிடித்த யானையை யொத்தது. பக்தியெனும் கயிற்றால் திருவடியெனும் கட்டுத்தறியில் பெருமையும் மதமும் பிடிக்காது கட்டியே இறைவனை யடையலாம். அயனும் மாலும் ஆணவ மூனைப்புக் கொண்டு புறத்தேயலைந்து இறைவனைக் காணாது அலைந்தார் முடிவிலாற்றலுடைமையே, திடசித்தம் எனும் கொம்பரில் பக்திக் கொடியை வளரச் செய்யும்; முருகன் வள்ளியின் இருதயத்தே தேனூந்து வேங்கைபோல் நின்றான். பெருமை சிறுமையில்லாப் பெருமானே எங்கள் தெய்வம்.

பெருமைக் கேயிறு மாந்து பிதற்றிய
கருமிக் கைய கதியுமுண் டாங்கொலோ
அருமைச் சீரன்பர்க் கன்னை யொப்பாகவே
வருமப் பேரொளி யேயுன்ம ருந்தமே. (தாயுமானவர்.) (10)

105 வான் சிறப்பு

குறள் வெண்பா

540. மண்ணெடு விண்ணு மறிகடலு மாயுமே
நண்ணுந்தண் ணீரின்றே ஞாடு.

மறிகடல்=அலையற்ற கடல்; அமைதியாயுள்ள கடல்;

[திரு ஔவையார் அரசனை ''வரம்புயர'' என்று வாழ்த்தினார். பொருள் தருகையில் ''வரம்புயர, நீருயர, நெல்லுயர, குடியுயரக் கோனுயர'' என்று கூறினார்] அதுபோலவே கருணைமழை நாட்டில் குறையின் பூமியிலும் தெய்வலோகத்திலும் அறம் குறையும். மக்களுந் தேவர்களும் அறவழி நிலலா தொழிவர். தர்மம் குன்றவே காமக் குரோத பொய் களவு கொலை முதலிய தாமசகுணவினைவு பொருட்கள் கூடும். குரோதமும் விரோதமும் கூடவே, மனச்சஞ் சலமும் புசல்காற்றுப் போன்றும் அலைகளை மனத்தில் எஞ்ஞான்றும் தோற்றுவிக்க, சாந்தம் பொறுமை மனவொடுக்கம் விட்டகல 'மறி கடல்' மாண்டுபோம். புசல்காற்றும் பெரும் அலைகளும் தோணி களையுங் கப்பல்களையுமலைத்து மோதும்.

அப்பர்சுவாமிகள் இந்நிலையை உணர்த்துகிறார் காண்க.

மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகடலோடும் போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணை
துனையுனு முணர்வைநல்கா யொற்றியூருடையகோவே (1)

541. அறத்தோடு பூசை அழிந்தொழிந்து போமே
புறத்துமழை பெய்யா வெனின்.

உணவில் நாம் வைக்கும் பற்றுப் போகப் பிரியத்துக்கு அறிகுறி யாகும். நாவாசையை யடக்காதவன் மற்ற ஆசைகளை அடக்க இயலாது. உண்பதையே கடவுள் ஆராதனையாகச் செய்து பழகப் பழக போகமானது மோகமாக மாறிவிடுகிறது. (492(தமக்குப் போதியளவு வைத்துக் கொண்டு, மிகுதியைத் தர்மத்துக்கு ஈசுவர

அர்ப்பணமாகக் கொடுத்தலே புறத்துமழை. பரசிவான்மா, பரசிவ அம்மையப்பரும் நானுமொன்றுபட்டு நாம் காணும் அந்நிலையே புறத்துமழை பெய்ய உதவும். அறம், புறத்து மழை பெய்யாவெனின் அறத்தோடு பூசை குன்றும். (2)

542. வான மருளா வழங்காது விட்டக்கால்
தானந் தவமிரண்டும் தாழும்.

[வானம் அருளா வழங்காது என்று பிரித்துக்கொள்க]

[முன்பாட்டு விளக்கம் தொடர] தனக்குத் தேவையானதை எடுத்துக்கொண்டு மிகுதியை ஈசுவர அர்ப்பணமாகக் கொடுப்பதே (541) அறம்; ஈதல் அந்நிலை, பரசிவான்மா, பரசிவ அம்மையப்பரும் தானு மொன்றுபடக் காணுமந்நிலையே வானம் அருளா வழங்கும் நிலை. அறவழி நிற்பவன் இல்லறம் துறவறம் இரண்டுக்கும் உதவி நிற்பவன். திருவருள் வடிவான அவ்வருள் கிடைக்காது போனால் அறம், தர்மம் குன்ற இல்லறம் துறவறம் இரண்டும் குன்றி மாயையின் மறைப்புத்தன்மை கூடும். (3)

543. தண்ணீர்க் கடவுளித் தாரணியைக் காய்ந்திட்டால்
என்னீர்மைத் தாமுலக மிஃது.

நாம் இறைவனை நோக்கி ஒரு அடிவைப்பின் இறைவன் எம்மை நோக்கி இரண்டடி வைப்பான் என ஸ்ரீ இராமகிருஷ்ண பகவான் கூறுவது போல் திருவருள் வடிவான கருணைமழையே மக்களுக்குத் துணை. அப்பர் சுவாமிகள் இறைவனின் கருணையை இணையடி நீழலை வர்ணிக்கிறார் காண்க:-

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிளவேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை யிணையடிநீழலே (5-90-1)

அச்சமின்மை, மனத்தூய்மை, ஞானத்திலும் யோகத்திலும் நிலைபெறுதல், தானம் புறக்கரணங்களை அடக்குதல், யஜ்ஞம், சாஸ்திரங்களை யோதுதல், தவம், நேர்மை, அஹிம்ஸை, உண்மை, சினமின்மை, துறவு, அமைதி, கோள்சொல்லாமை, உயிர்களிடம் தயை, பிறர்பொருள்நயவாமை, மிருதுத்தன்மை, நாணம், மனவுறுதி, தைரியம், பிறர்குற்றம் பொறுத்தல், தளராமை, சுத்தம், வஞ்சனை செய்யாமை, செருக்கின்மை எனுமிவையெல்லாம் தெய்வ சம்பத்துடன் பிறந்தவனுக்கு இயல்பான நற்குணங்கள் (கீதை 16-1-3) தெய்வ ஸம்பத்துடன் பிறவாத அவனுக்கு, தண்ணீர்க் கட

வுள் அவனைக் காய்ந்திட்டால், மேல் கீதையில் கூறியவை யொன்றும் இடையாவிடில் என்ன உலகினில் அவனுக்குண்டு, வெறுங் கானல் காடே யுலகம்; இறைவனின் அருள்மழை பெய்யா தொழிலின் கானல் காடே உலகம். (4)

544. மழையென்னு மன்னவன் மன்னுயிர்கா வாக்கால்
விழையும் பசிநோய் விரைந்து.

[முன்பாட்டு விளக்கம் காண்க] இறைவனுடைய கருணை மழை திருவருள் கிடைக்காவிடில் ஒருவனுக்குக் கானல் காடேயிவ்வுலகம்: வறுமையும் பிணியுமே அவனுடைய சீவியம். (543) (5)

545. மாரி யுலகை மறந்துபோ யிற்றென்னுற்
காரியமு முண்டோ கழறு.

சரஸ்வதி நாயகன் அயனும், லக்ஷ்மி நாயகன் மாலும் செருக்குற்று மாயை முனைந்து நிற்கும் வேளையில் சிவபெருமான் சிவலிங்க வடிவான பிழம்பாக அவர் முன் காட்சியளித்தார். அவர்கள் அதன் அடியையும் முடியையும் காண எத்தனித்துத் தோல்வியுற்றனர் அலைந்தனர். திருவருள் மழை பொழியுங்காலத்தும் ஆணவமுனைப் பால் இறைவனை நாம் மறந்தால், திருவருள் ஒடி ஒளித்தால், நாம் கைக்கொண்ட காரியம் கைவராது, திருவருள் மறைந்து நிற்கும். ஆணவமுனைப்பால் இறைவனை மறந்தால், திருவருள் கொழிக்குங் காலத்தும், திருவருள் மறைக்க நாம் எடுத்த காரியம் பாழாய்ப் போகும்; (6)

546. ஆறு குளமேரி மழகுபெறு மோமாரி
மாறுபடு மாயின் மதி.

புத்தியாகிய வாய்க்காலில் சிவானந்த வெள்ளம் பெருகவும் உயர்ந்த நீர்நிலையாகிய சித்தத்தில் சிவானந்த வெள்ளந் தேங்கவும், பக்தியெனும் கொடி அழகுபட ஓங்கி வளரும்; அதுவே முத்தி எனும் பழம் தரும். அல்லாது ஆணவ முனைப்பால் இறைவனை மறந்தால் திருவருள் மறைத்து நிற்ப இறைவனைக் காணுது தயங்குவர் (545) இதுவே மாரி மாறுபடும் காலம். (7)

547. விரிந்த வறிவுடைய வேதியரென் செய்வார்
சொரிந்துவிடா தாயின்வான் சொல்.

முன் திருவருள் வலதாய் அர்ஜுனன், சாக்கிய நாயனார், வேறு சில ஞானிகளும் விரிந்த அறிவுடையவர்களாகவே உலகினை நோக்கினர். அர்ச்சுனன் தவம் செய்தபோது வேடனைப் பரமசிவன் அவன் முன் தோன்றினார். மூளைத்த போரில் அர்ச்சுனன் வில்லால் இறைவனுக்கு அடிக்க, அவர் மேலே எழும்ப, அவன் இறைவனை

யுணர்ந்தறிந்து காலைக்கட்டிப்பிடித்துக் கொண்டான். சாக்கிய நாயனாரும் சமணருக்குப் பயந்து கல்லாலே சிவலிங்கத்தைப் பூஜித்துப் பரகதியடைந்தார். திருவருள் கொண்ட இறைவன் அர்ச்சுனனையும் சாக்கிய நாயனாரையும், விரிந்த அறிவுடையவர், வெளித் தோற்றமாகக் கைவில்லாலடித்தும் கல்லாலெறிந்த போதிலும், உள் அன்புடன் நேசித்த வகையால் காப்பாற்றினர்; திருவருள் கைகூடிற்று. (8)

548. பொன்னும் பொருளு மிருந்தாவ தென்னைசொல்
மன்னு மழைகுறைந்தால் மற்று.

லக்ஷ்மி நாயகன், இந்திரன் முதலியோர் பணச் செருக்கால் நானெனும் ஆணவமுனைப்பால் இறைவனை மறந்தார்கள். திருவருள் மறைந்து போக காரியங் கைகூடாது அலைந்தனர். [545; 546] (9)

549. மன்னுதவ மாமகமு மாயுமே வையகத்திற்
துன்னுமழை பொய்ப்பிற் றுணி.

உக்கிர தவஞ்செய்து தில்லைச்சிற்றம்பல தரிசனம் பெற்ற போதிலும் மதம்பிடித்த பெரியதுமான மனதாகிறயானை அடக்க முடியாத போக்குடன் சித்திகளையும் ஆணவ முனைப்பையும் நாடும். நாடின் திருவருள் மறையும். அயன்மால் அலைந்தனர். மனதை நயமாகப் பக்தியெனும் கயிற்றால் கட்டி அசைவில்லாத நிலைக்களத்திற்கு, குழந்தை, பார்வதியாகிற தாயின் மடியில் அசைவற்று நிம்மதியுடன் விளையாடுவது போல் செயலாற்றும் நிலைக்களத்திற்குக் கெட்டியாகப் பிடித்துக் கூட்டிச் செல்வீராக.

ஓராயிரம் புத்தி சொன்னாலும் ஓர்கிலை ஓகெடுவாய்
பாராயுனைக் கொல்லுவேன் வெல்லுவேன் அருட்பாங்கு கொண்டே
(தாயுமானவர்) (10)

106 நீத்தார் பெருமை

குறள் வெண்பா

550. அகலிகைகல் லானா ளருமுனிசா பத்தால்
மகபதியுந் துன்புற்றான் மான்று.

ஐம்புலவேடரி வலையில் சிக்குண்டு காமநோய்வளர அறிவு குறையும்: கேட்டாலும், உணர்வின்றிக் காமக்குரோத பொய்களவு கொலை முதலிய தாமசகுணத்துக்குரிய செயல்களைச் செய்யக், காமநோய் அதிகரித்த பெண்ணை புருஷனை, கூசான். அறிவிழந்த அந்நிலையில் தகாதன வெல்லாஞ் செய்வான். திருவள்ளுவர் "யான் மறைத்தாலும் எனக்கு அடங்காமல் காமநோய் அதிகரிக்கிறது" என்னும் பொருளுடன்.

மறைப்பேன்மன் யான்இ:தோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும்" குறள் (117 – 1)

இந்திரன் இக்காம நோயினால் பீடிக்கம்பட்டு முனிவர் பெண் அகலிகையை விரும்பி முனிவரை ஏமாற்றி அவளுடன் இன்புற்றிருந் தான் அதையறிந்த முனிவர் சாபத்தால் அகலிகை கல்லானாள்: அரசனுக்கும் "அவனுடைய ஆயிரங்கண்களும் அவனுக்கு யோனி களாகக் காணப்படும்" என்று சாபமிட்டார். (1)

551. அஞ்சு மடக்கு மறிஞரே யிவ்வுலகிற்
சஞ்சலத்தை வென்றுயர்வார் தாம்.

தலையே நீ வணங்காய், கண்காள் காண்மின்களோ, கைகாள் கூப் பித்தொழீர் என்னும் மற்றும் அப்பர் சுவாமிகள் 4-ம் திருமுறை 9 ம் பதிகத்தில் தரும் பாட்டுக்களால் ஐம்புலன்களையும் இறைவன் பாற் செலுத்தியும், வேறுவழிச்செல்லவிடாது தடுத்தும் (347): திருவடித் தொண்டு புரிந்தும் (469) அறவழி நின்று அறம்மேம்பட (477) மனம் ஒடுங்க நிட்டைகூடியே இறைவன் பாதத்தை யடைந் தவரே மாயைதருஞ் சஞ்சலத்தை, வறுமைப்பிணி நோய், பிறப்பு இறப்பு எனும் சஞ்சலத்தை, வென்றுயர்வர். (2)

552. அறவோ ரெனப்படுவா ராரென்றால் வையத்
துறவோரே யாமென்று சொல்.

முன்பாட்டு விளக்கம் தொடர) கொல்லாவிரதம் மேற்கொண்டு அறவழி நின்றால் (477) அறவோரென்பர். அவரே ஈதல் பொறை மனமடக்க வுடையராய் விளங்குவர்: வைத்த பொருள் உடல் ஆவி மூன்றும் உன்கைவசந்தர நீ வாங்கிக் கொண்டு 'சிவசிவ' எனும் மாமறை தரும் உண்மை என்வாழ்வில் விளங்க, ஓம் எனும் ஊமை எழுத்து இதயத்தே உருவெடுக்கும். சித்தமௌனம் செயல் வாக் கெலாம் மௌனம் சுத்தமௌனம் தோன்றும். மோனகுருவே எழுந்தருளுவர். பார்வதி தேவியோ இருதயத்தே நின்று செயலாற் றக் கொல்லாவிரதம் மேற்கொள்வர்; துறவோரே யாம். (3)

553. தண்ணீர் குளிருமோ தழலுஞ் சுடுமோதான்
மண்ணிற் றுறந்தோர்க்கு மற்று.

[முன்பாட்டுத் தொடர] ஐம்புலனும் ஒடுங்கப் பாசபந்தக் கயிறு அவிழச் சுத்த மௌனம் செயல்வாக்கெலாம் மௌனம், சுத்தமௌ னம் தோன்ற சும்மா இருக்கும் சுகம் உதயமாகும். அறிவே வடி வான அகம் தோன்றும். அறிவே வடிவானது ஆன்மா. ஆன்மா

என்றும் மகிழ்வுறுதல். இன்பம் துன்பம் இவை மாயையுடம்பின் குணங்கள். தண்ணீர் குளிருதலும் நெருப்புச் சுடுதலும் மாயையின் குணங்கள். அறிவேவடிவான ஆன்மா; என்றும் மகிழ்வுறுதலே அதனியற்கை. மாயையின் குணங்கள் அதைச்சாரா. (4)

554. மாசற்ற நெஞ்சுடைய மாதவர்தா மண்ணைகத்தே
ஆசற்ற நற்றுறவோ ராம்.

அகம் சிவலிங்க வடிவாக விளங்கும் மாதவத்தோர் பாசபந்தக் கயிறு எரிந்துபோன மாசற்றோர். அத்தகைமை வாய்ந்தவரை பின்னும் பாசபந்தங்கள் தீங்கிழைக்காது. எரிந்தகயிறு கட்டுந்தன்மை அற்றது. அத்தகைய மாசற்ற உள்ளமுடையாரே மண்ணுலகில் ஆசா பாசமற்ற நல்லுறவோர். இறைவனருளையே வேண்டிநிற்கும் உறவு. இறைவன் பாதாரவிந்தத்தைச் சென்றடையும் உறவு. மாயாகாரிய உலகு தம்மாயையினுலே தீண்டாத நல்லுறவு திருவருள் வடிவான உறவு. (5)

555. வேண்டுதல் வேண்டாமை யில்லா விழுமியோர்
மாண்ட துறவோர் மதி.

பாசபந்தக் கயிறு எரிந்த மாதவர் பற்றற்ற அந்நிலையில் இறைவன் திருவருளையே வேண்டிச் சிவிப்பர். குழந்தைதன் தாயின் மடியில் சஞ்சலமற்று வேண்டுதல் வேண்டாமையற்று தாயின்இயல்பு கொண்டே விளையாடுதல் போன்று சிவன்முத்தனை துறவோன் மாயாகாரியப் பொருளானஉலகினில் வேண்டுதல் வேண்டாமை யற்று தாய்பார்வதியின் முடிவிலாற்றலுடைமையுடனும் பேரருளுடைமை யுடனும் சிவிப்பான். (6)

556. எண்ணமெலாம் விட்டுவிட் டேகாந்த மோனநிலை
நண்ணுமவ ரேதுறந்தோர் நாடு.

பாசபந்தக்கயிறு எரிந்த மாதவத்தோர்க்கு எண்ணங்கள் ஏது ஆங்காங்கு தோன்று மெண்ணங்கள் அந்த அந்த இடத்துக்கே உரியது நானெனு மாணவ முனைப்பு அவனை வந்தணையாது. பார்வதி தேவியின் இயல்பு கொண்டே அவன் செயலாற்றுவான். மோன குருவே எழுந்தருளியிருந்து பரசிவான்மா பரசிவ அம்மையப்பர் உளங்கொண்டே ஏகாந்த நிலையில் கருமத்தையாற்றுவார்; (7)

557. இரவு பகலற்றதனி யேகாந்தக் காட்சி
விரவுமவ ரேபெரியோர் மேவு.

அகம் சிவலிங்க வடிவாக விளங்க நிட்டை கூடுவர். பரசிவ அம்மையப்பரான உலகு சைதன்யப் பொருளாக அறிவு வடிவான உள்ளத்தே சித்தாகாசத்தின்கண் திகழ்சிற்றம்பல மெனுஞ் ஜோதி

யில் ஆழ்ந்து கிடக்கும் பக்தனுக்குக் காட்சிதரும். எங்கும் அவனே யாம்; எல்லாம் அவனேயாம்; அன்றி ஒன்றில்லை இன்றி நீயில்லை எனும் உண்மை விளங்கவே அறிவே வடிவான அகத்தில் அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் ஒன்றுஞ் செறியாச் செறிவில் அவன் இரவுபகலற்ற தனிஏகாந்தக் காட்சியில் கிடப்பான். சர்வ தத்துவாதிபதியாகிய இறைவனுமவனு மொன்று பட்டே அவன் அந்த இரவுபகலற்ற நிலையில் கிடப்பான். (8)

558. தத்துவ மெல்லாஞ் சடமென்று தாங்கண்ட
வித்தகரே சித்தர் விரும்பு.

மனம், சூக்கும சரீரம், சடப்பொருள், மாயாகாரியப் பொருள் மாயாகாரிய மனமே தத்துவங்களுக்குக் காரணமும் காரியமும். ஐம் புலன்களுக்குள் வசப்பட்டு மலப்பிணிப்பால் கட்டுண்டு சூக்கும சரீரம். ஸ்தூல சரீரமெனும் தேகமெடுத்தே இருவினையையுமனுபவித்து மலப்பிணிப்பை விட்டகலும். உடம்பு ஆறு தத்துவங்களாலுங் கட்டுப்பட்டது, ஐம்புலனுந் தன்னுள் ஒடுங்க (551) சிவதொண்டு புரிந்து பாசபந்தக்கயிறு அற மனமொடுங்கும் தத்துவங்கள் ஒடுங்கவே புருடன் தத்துவாதீதனாக, இறைவனே தாமாக நின்று செயல்புரிவான்; பொதுநடம் காண்பான்; பொதுநடம் புரியுமியல்புடைய வித்தகனாராக விளங்கும் சித்தர் குலமே அவன். (9)

559. காமமுத லாறுங் கலைந்த பெரியோரே
சேமமுடன் வாழ்வார் சிறந்து.

கிருஷ்ணபகவான் கூறுகிறார். "யாருடைய பொறிகள் புலன்களினின்று பிரிக்கப்பட்டிருக்கின்றனவோ அவனது அறிவு நிலைபெற்றுள்ளது. (கீதை. 2—68)

பொறிபுலன்கள் தம்முள் ஒடுங்க பாசபந்தமற்றவனே சிற்றம்பல தரிசனங் காண்பவன். அவனே பரசிவ அம்மையப்பரான உலகை தம்மறிவால் தாமாகவே கண்டு ஒன்றுபட்ட அந்நிலையில் எவ்வுயிருந் தன்னுயிர்போல் அறிந்துணர்ந்து சிவிப்பன். அவனே பெரியோனாகச் சேமமுடன் வாழ்வான். காமாதி குணமாறும், அகங்காரம், வன்மை. செருக்கு, காமம், குரோதம், உடைமை முதலியவைகளாம். (கீதை 18—53) பாட்டு 561 இல் காண்க. (10)

107. இல்வாழ்க்கை

குறள் வெண்பா

560. இல்லாளுந் தானு மிசைந்தெனினுய் வாழ்வதே
நல்லாறென் பார்பெரியோர் நாடு.

''கல்லாலமரத்து நிழலில் வீற்றிருந்தருளி ஒப்பில்லாத சனகர், சனற்குமாரர் சனந்தனர் சனாதனர் என்று சொல்லப்படும் நால் வர்க்கும் முழுமுதல்வனும் நீ உண்மையாம் முத்திறப் புணர்ப்பினை உணர்த்தியருளியதும் அறிவடையாளக்கைப் புணர்ப்பென்றுல் வாய்ச் சொல்லால் சொல்லப்படுமோ? ....'' என்னும் பொருளுடன் தாயு மானவர்:

''கல்லாலின் நீழல்தனில் ஒருநால் வர்க்குங்
கடவுளீள் உணர்த்துவதுங் கைகாட் டென்றுல்
சொல்லாலே சொல்லப்படுமோ சொல்லுந் தன்மை
துரும்புபற்றிக் கடல் கடக்குந் துணிபே யன்றே.''

என்று பாடுகிறார். சனகர் சீதையின் பிதாவாகிய மிதிலையரசன். சிறப்புடன் இல்வாழ்க்கை நடத்தியே இறைவனடி சேர்ந்தார். இல் வாழ்வான், பிரமச்சாரி, வானப்பிரஸ்தன, சந்நியாசியாகிய முன் கூறிய நால்வரும் இறைவனடி சேர்ந்தார். சனகர்இல்லறம் கைப் பிடித் தொழுகினர்; மற்றும் மூவரும் துறவறம்.

கல்லால் இலையும் நிழலுமில்லாமரம். சிவானந்த வெள்ளம் இரு தயத்தில் தேங்கவும் உண்மை கடைப்பிடித்தே ஒழுகும் நிலையில் சிற்றின்பத்தைக் கண்டத்தில் வைத்து உண்ணுதும், அறிவே வடிவான அகத்தே, இறைவன் சித்திரத் திறமையை, அனுபவிப்பவன் உண் மையில் அனுபவித்தே அந்த என்றும் அழியாப் பேரின்பத்தை உணர்ந்தறிவான். அவ்வாறு கல்லால மரநிழலில் இல்லாளுந் தானும் நெறிநின்றொழுகி, வைத்த களதனமேடை மாடகூடம், மாடுமக்கள் சிற்றிடையார் எல்லாமே அவனுடையது என்னுமுண்மை விளங்கவே மும்மௌனஞ் சாதித்து வாழும் அந்நிலையில் நல்லாறே, நல்லவழியே இல்லறம். வாழ்வில் நிகழுங் காற்றுப் புயலுக்கு தன்னுடைய இல் லாள் துணைநிற்பின் இல்லறம் இன்பந்தரும் சுகவாழ்வாகும்:

''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.'' (திருக்குறள் 1 – 5) (1)

561. ஏனைய வறங்களினு மேலைப் புடையதே
யீனமில் லாவில் லறம்.

(முன்பாட்டு விளக்கம் காண்க) ''வைத்த பொருள் உடல் ஆவி மூன்றும் உன்கைவசம்'' என்று எல்லாச் செயலும் ஈஸ்வர அர்ப் பணமாக நல்லறங் கைப்பிடித்து நின்று நிஷ்காமிய கர்மம் புரிவ தால் இல்லறம் எல்லாமார்க்கங்களிலும் மேம்பட்டு விளங்கும்.

கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்குச் சொன்னதாவது. ''அகங் காரம், வன்மை, செருக்கு, காமம், குரோதம், உடைமை ஆகிய வைகளை நீத்து மமகாரமற்று சாந்தமாயிருப்பபவன் பிரம்ம மாதற் குத் தகுந்தவன்'' (கீதை 18-53) கீதையில் கூறிய காமமாறும் களைந்து வாழும் இல்வாழ்வு மேம்பட்டது. (2)

562. தானந் தவமிரண்டுந் தாழற்ற வல்லது
ஞானவற மென்னலாம் நன்கு.

ஆருயிர் தன்னுடம்பகத்தே நின்று திருவருளால் தான் உடம் புக்கு வேறென்றும், தான் அறிவுப் பொருளென்றும், அதுவே தன் வடிவமென்றும், (ஆன்மா 332; 333 காண்க) உறுதியாக நினைந்து உருகி நெஞ்சங் கனிந்து சிவனுடன் ஒன்றி ஊனக்கண்ணுறங்க அகத் தவமோங்கும்; காமமாறுங் களைந்த சரியை கிரியை என் னும் முறைகடைப்பிடித்து மும்மௌனஞ் சாதித்து அறவழி நின்று (492) நல்வாழ்க்கை கைபிடிக்கின்; அவற்றை ஞானமெனலாம். சம்பந்தரு டைய நற்றவத்து மனக்கருத்தை உணர்த்துகிறார் காண்க:

''ஞான போனகர் எதிர்தொழு தெழுந்தாற் றவத்து
மானியார்மனச் கருத்துமுற் றியதென மதிததே
பானலங்கண்கள் கீர்மல்கப் பவளவாய் குழறி
யானும் என்பதியும் செய்த தவமென்கொல் என்றார்.
(12—சம்பந்தர்—572) (3)

563. அரனு முமையு மறநெறி நின்றூர்
பெறலரிய தொன்றிதெனப் பேசு

பாவந் தேய்ந்த ஆன்மா பரமாத்மனுக விளங்கும், திருத்தில்லைச் சிற்றம்பல தரிசனம் பெற்று, திருவலந்தெழுத்துச் ஜோதியில் தன் னையும் இறைவனையுங் கண்டு பின் சீவன் முத்தனுக உலகில் மெய் யன்பன் வாழும் அந்நிலையில், தாம் சத்தியும் இறைவன் சிவனு மாக ஒன்றுபடும் நிலையில், குழந்தை தாயின் மடியில் இருந்து சஞ்சலமற்று விளையாடுவதுபோல் சிவதொண்டு புரிவது அரிதிலு மரிது. அப்பர் சுவாமிகள் ''நற்றுணைப் பேடையோடாடி நாரை வருவன கண்டேன்'' என்றும் ''பேடை மயிலோடுங் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்'' என்றும் 4-ம் திருமுறை 9-ம் பதிகம் 10 பாட் டிலும் சத்தியும் சிவமுமாகத் தாம் தம்மையும் இறைவனையுங் கண் டபாவனையை வர்ணிக்கிறார். சுவாமிகளும் அந்நிலையை ''சங்கரன் திருப்பாதம் போற்று சாயுச்சியப் பதவியில் ஏற்று'' (514) என்றும் ''சொல்லமுடியாத தீர்ப்பு சுவாமி திருபை யுனக்காப்பு'' (516) என்றும் தருகிறார் காண்க: (4)

564. பேசரிய சீர்ச்சனக னேனைப் பெரியோர்கள்
நேசமுட னின்னிலைநின் றூர்.

சீரும் சிறப்பும் வாய்ந்த சனகர் இல்லறவாழ்க்கையை அறவழி நின்று சிவபதமடைந்தார் (560). மிதிலை நகரில் செங்கோல் மன்னனாக சிவயோகவாழ்வு கொண்டு, தன்னுடையமகன் சீதை இராமருடைய மனைவியாக கடுந்தவம் புரிந்து கற்பின் மகிமையை உலகினில் நிலைநாட்டவும், வேறும் பெரியோர்கள் கனம்பண்ணவும் வாழ்ந்தார். (5)

565. இல்லறத்தில் நின்றெளிரும் ஏந்திழைநல்
லாளொருத்தி
நில்லென்றுள் சூரியனை நேர்.

சீதை, கண்ணகி போலும் கற்பிற் சிறந்த பெண்கள் தம் இல்லற வாழ்க்கையை செவ்வனே நடாத்தி சூரியனைப் போல் ஒளிதிகழும் இறைவன் போல் இறைவனுடன் ஒன்றுபட்டு வாழ்ந்தவர்கள். சாவித்திரி தம் கணவனுடைய உயிரைக் கவர்ந்து கொண்டுபோக வந்த யமதர்மராஜனை நேரேகண்டு வாதித்து கணவனுடைய உயிரைத் திரும்பியும் பெற்றனள். ஓர் சந்நியாஸி பிச்சை எடுத்து வருகையில் மரத்தின்மேலிருந்த கொக்கு ஒன்று எச்சம் அவர் தலையில் போட்டது. சந்நியாஸி மேலே உற்று நோக்க கொக்கு எரிந்து சாம்பலானது. பின் ஓர் இல்லத்தில் சென்று பிச்சைக்குக் காந்திருந்தார். கணவனுக்குத் தொண்டு புரிந்து கொண்டிருந்த பெண் நேரம் பிந்தினபிணக்கில் ''கொக்கென்றெண்ணினையோ கொங்கணவா'' என்று வைதாள். சந்நியாஸியும் மனங்கலங்கி தனக்கு அருள் தரவேண்டுமென 'வியாதர்' எனும் இல்லறச் சிறப்புடையோனிடம் அவரை உபதேசம் பெற அனுப்பினள். இத்தகைய சிறப்புடைய கற்பரசியிற் பலர் பாரத நாட்டைச் சிறப்பித்தனர். (6)

566. இல்லற மென்பதி யார்க்கும் துணையதனால்
நல்லற மென்னலாம் நாம்.

[விளக்கம் 560 காண்க] இல்வாழ்வான் தென்புலத்தார், தேவர்கள், விருந்தினர், சுற்றத்தார் முதலியவர்க்கும், துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும் என்னும் மூவர்க்கும், மாணவநிலை, மனைத்தவநிலை, துறவுநிலை என்று கூறப்படும் மூவகை நிலையினர்க்கும் எல்லார்க்கும் நல்லதுணை (திருவள்ளுவர்) வேறும். திருக்குறள் 5 இல்வாழ்க்கை எனும் பதிகம் வாசிக்க: (7)

567. கொல்லார்பொய் சொல்லார் குறிப்பறியு
மில்லறத்தார்
எல்லார்க்கு மேலென் றிசை.

கொல்லா விரதமே (365) மேற்கொண்டும் பிறவுயிர்களுக்குத் தீங்குதரும் சொற்களைச் சொல்லாமலும் (566) இல் கூறியவர்க்கும் தேவையானதை அவர் குறிப்பறிந்து நின்று சேவை புரிதலால் இல்லறம் நல்லறம் எனப்படும். ஈதல் ஏற்றலிலும் மகிமையுடையது என்று திருவள்ளுவர் குறிக்கிறார். (8)

568. இன்சொற் றவரு நிழுக்குரையா வில்லறத்தார்
பொன்பெற் றுயர்வார் புகழ்.

என்றும் இன்பந்தருஞ் சொற்களையே பேசி, யாகாவார் ஆயினும் நாகாக்க என்னும் வள்ளுவர் தரும் உண்மை விளங்க மற்றவர்க்குத் தீங்கிழைக்கும் சொற்கள் உரையாத இல்லறத்தார் எங்கும் மதிப்பும் பொருளும் பெறுவர்.

'சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்'' (திருக்குறள். 18—3) (9)

569. மொறிவென்றூர் தாமும் பொருவரோ நல்ல
நெறியில் லறத்தாரை நேர்.

பாசபந்தக் கயிறு எரிந்து இறைவனடி சேர்ந்தாரும் முன்கூறிய நெறிகள் அனைத்தும் கைப்பிடித்து எல்லார்க்குந் துணையாகச் சிலிக்கும் இல்லறத்தவரைப் பொருதிக் குற்றம் பிடிப்பரோ. (10)

108 போற்றித் தெளி

குறள் வெண்பா

570. அறிவுடைய ரெல்லா முடைய ரெனவே
செறிவுபெறச் சொன்னூர் தெளி.

மூதறிவாளன் முழுமுதலாம் சிவபெருமானின் மெய்ப்புணர்ப்டாம் குறியாசக் குறியினில் கூடாத கூட்டத்து அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நெறியாம் பெருநந்தி நீடருள் ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம் எனும் உண்மை உரையிறந்தவுணரினை (365) அறியச் சொன்னூர்; அதே அறிவுப் பெருவெளியில் நாம் கண்ட கற்பனை கடந்த கடவுள்; (159)

அறிவை அறிவது வேயாகும் பொருளென்று
உறுதிசொன்ன உண்மையினை ஒருநாள் எந்நாளோ

[தாயுமா - எங்நாட் கண்ணி—5-14]

முருகன் திருவருள் பெற்ற அருணகிரிநாதர் அருளிய திருப்புகழில் ''அறிவை யறிவது பொருள்'' எனச் சொல்லுகிறார் காண்க.(1)

571. அலையு மனத்தை யடக்கிய பெரியோர்
தொலையாப் பிறவிதொலைத் தார்.

ஆசானருளிய அருமறையின் வண்ணம் சிவநினைவல்லாது வேறு உலகியல் நினைவொன்றும் நினையாமல் நிற்கின் அவ்விடமே நிலையான அருளகம் சிவம் (570; 315) அறியும் அறிவே பொருள்; தொடர்ந்தே அறியும் தில்லைச் சிற்றம்பலம் தில்லைத் தரிசனங் கண்ட பெரியோருடைய எரிந்த பாசபந்தக் கயிறு. அவர் உலகியல் வாழ்க்கை தடத்துகையில் கட்டுந் தன்மையற்றது. சிவபதமடைவர். (2)

572. ஆவ தழிவதுதா னுன்மாவுக் கில்லையெனச்
சேவடி போற்றித் தெளி.

மாயார்காரிய உடம்பு நீர்க்குமிளிபோல் அழியுந்தன்மையுடையது; ஆன்மா சைதன்யப் பொருள் (333). பேதமற்றது (160) குணம் குறியற்ற ஆத்மனே ஆன்மா (186). என்றும் மகிழ்வுறுதலே அதனியல்பு. (332). இந்த ஆன்மா பெரிது; பிருகதாரண்ய உபநிடதம் (4 4-22) (227இல் காண்க). (3)

573. இல்லையென் னுமலே யிட்டிங்கு வாழ்பவர்க்
கெல்லையில்பே ரின்ப மெழும்.

தனக்குப் போதுமானதை வைத்துக் கொண்டு மிகுதியை ஈஸ்வரதாளமாகக் கொடுப்பது அறம். (492) சாப்பிடும் உணவை இறைவனுக் கர்ப்பணஞ் செய்தே உண்பர்; கொல்லா விரதம் பூண்டோர் (477). பாசபந்தக் கயிறு அறுந்துபோக மனம் அடங்கும்; நிட்டை கூடுவர்; தில்லைத் தரிசனங் காண்டர்; ஜீவன் முத்தனுக பரசிவான்மாவாகிய அம்பையப்பரும் தானும், தாயும் குழந்தையுமாக இவ்வுலகத்தில் வாழ்வர். தாய் குழந்தைக்கு எதைக் கொடுக்கவும் வாங்கவும் மறுப்பர்; இல்லையென்னும் சொல்லில்லாமல் (392) வாழ்வர்; மாணிக்க வாசகர் அந்த பிறவிக் கடலுக்கு அப்பாற்பட்ட பேரின்ப உணர்ச்சியைத் தருகிறார் காண்க.

"அறவையேன் மனமே கோயிலாக் கொண்டான்
டளவிலா ஆனந்தம் அருளிப்
பிறவி வேரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியஎம் பொருளே....." (பிடித்தபத்து 5) (4)

574. ஈசனை யெல்லையில் லாத விறைவனை
வாச மலர்தூய் வணங்கு.

எண்ணில் கோடி உயிர்கள் எத்தனையோ அத்தனைக்கும் அருட்சுனை விளங்கும் பராபரன். உயிரில் பொருள் உயிருள் பொருள் எத்தனையோ அத்தனையிலும் அதுவதுவாய் விளங்கும் மெய்ப்பொருளே, பரசிவஅப்பையப்பரை யெல்லையில்லா இறைவனே (268)

அறவழி நின்றெழுகி மனமடங்க (492) கொள்ளா விரதம் பூண்டு (477) நிட்டை கூடி வாசமலர் தூவிவணங்கு; தில்லைச் சிற்றம்பல தரிசனங் காண்பாய்.

அண்ட பகி ரண்டம் அறியாத நின்வடிவைக்
கண்டவரைக் கண்டாற் கதியாம் பராபரமே
தாயுமா. பராபரக் கண்ணி (323) (5)

575. உலகு முயிருமா யொன்றி நிறையுங்
குலதெய்வத் தைக்கும் பிடு.

(முன் விளக்கம் காண்க) ஆருயிர்தோறும் அதுவதுவாய் எப் பொருளிலும் நீக்கமற நிறைந்து நிற்கும் பரசிவ அம்மையப்பரே மாயையினின்றும் விலக்கப்பட்ட உலகு. சிவான்மா, தனி உயிர் ஆன்மாவாக விளங்குபவன். பரசிவான்மாவே உலகு. தில்லைச் சிற் றம்பலத்தில் உலகும் உயிரும் ஒன்றுகி அந்தச் சோதியில் தன்னையும் பரமசிவனையும் ஒன்றுய்க் காண்கிறான்; அவனே முழுமுதல்வன். பின் னும் தாயின் மடிமீது விளையாடுங் குழந்தைபோல் அவன் தாயின் ஆற்றலுடன் சஞ்சலமற்று செயலாற்றுவான் உலகுமுயிருமொன்று யிருக்கும் குல தெய்வத்தைக் கும்பிடுகிறான். [514; 516]. மாணிக்கவாசகர் திருவம்மானை (12) இல் தருகிறார் காண்க.

மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்கும் தானையாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம் நஞ்சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய், (6)

576. ஊட்டி வளர்க்க வொருவ னிருக்கவே
வாட்ட முனக் கேனே மகிழ்.

அவன் திருவடிகளையே என்றும் எத்தகைய ஆர்வத்துடனும் அன் புடனும் உரையிறந்த உணர்வினால் உணர்வினாடே உணர்ந்தறிகி றார்களோ அத்தகைய வெளிச்சமாயும் அன்புடனும் மெய்யன்பர் உள்ளத்துள்ளோ அவன் நின்று இருவினைக்கிடாக வரும் சிற்றின் பத்தை நுகருதற்கேதுவாய வினைத்தன்மையினின்றும் மெய்யன்பரை நீக்கியாண்டும், திரிமூர்த்தியறியவும் திரிதோஷமிறக்கவும் [115; 267] அருளுவன். வினைத்தன்மையினின்றும் நீங்கிய மெய்யன்பன் உள்ளத்தே விழிநீர் பெருக, முழுமுதலாம் முதல்வனை அவன் வேண் டியழவும் அவனுக்கு அந்த அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய்க் கிடந்து அவனைக் காணவும் அருள்புரிவன். மாணிக்கவாசகர் 'எத்த னுகிவந்தில்புகுவான்' என்று

'பத்தர் சூழப் பராபரன் பாரில்வந்து பார்ப்பானெனைச்
சித்தர் சூழச் சிவபிரான் தில்லைமூதூர் நடஞ்செய்வான்
எத்தனைகிவந் திற்புகுந்தெமை ஆளுங்கொண்ட டெம்பணிகொள்வான்
வைத்த மாமலர்ச் சேவடிக்கண் நம்சென்னி மன்னி மலருமே''

என்னும் சென்னிப்பத்து (4) இல் தருகிறார் காண்க. (7)

577. எழுதவே யொண்ணு விறைவ னடியைத்
தெழுவார் மனந்தூ யவர்.

மலம் மாயாகாரியப் பொருள் நுண்வெளியிற் தோன்றுவது [159 வரி கற்பனைகடந்த கடவுள் காண்க]. ஆன்மா, மனம் மாயையினின்றும் நீக்கமுற்று மாயை மறைய ஆன்மா தன்னை ஆத்மனைக் காணும். இந்த ஆன்மா ஆத்மன் அறிவுப் பொருள். அறிவுப் பெருவெளியாகிய சித்தாகாசம் பரமாகாசத்தின்கண் காணப்படும் பொருள். நுண்வெளியில் காணப்படும் பொருட்களை மனத்தாலும் வாக்காலும் சுட்டுப்பொருளாக ஐம்புலனுணர்வினால் கண்டு விபரிக்கலாம். அறிவுப் பெருவெளியில் காணும் பொருளை அறிவினால் கண்டின்புறலாம். எழுதவொண்ணாப் பொருள்:

வாக்கும் மனமும் மவுனமுற எந்தை நின்னை
நோக்கும் மவுனமிந்த நூலறிவில் உண்டாமோ.

தாயுமானவர் பலவகைக் கண்ணி: (13). (8)

578. ஏக னேகனு யுற்றவெம் மீசனைத்
தேகம்போ முன்னார்த் தொழு.

மாயையினின்றும் விலக்கப்பட்ட ஆன்மா ஆத்மன், பரமாத்மன் [373] [அதில் விளையுஞ் சிவானந்தபூமி எனும் பாட்டுக்காண்க] ஆருயிர்தோறும் அதுவதுவாய் நிற்கும் அந்தப் பரமாத்மனுந் தானுமொன்றுகவே' திலைத்தரிசனத்தில் மெய்யன்பன் காண்கிறான். சாயுச்சிய பதவியடைந்த அந்நிலையில் (514) தன்னையும் உலகையும் பரமாத்மனைக் கண்டு இன்புற்று வாழ்கிறான். இம் மாயாகாரியவுடம்பு ஆன்மா கர்மம் புரிந்து இருவினையினின்றும் நீக்கம்பெற அவசியமானது. வினைநீக்கத்துப் பொருட்டே இறைவன் ஆருயிர்களை அவரவர் வினைக்குப் பொருந்தியவாறு பொருந்தி வைத்தனன்: அதேபடைப்பு: (380). ஆகையால் இன்னுமோர் தேகமெடுக்காமல், இந்தத் தேகத்திலேயே அவனுடைய பாதாரவிந்தத்தையடையத் தொழுதெழு. எங்கும் பரவிநிற்கும் எம்பெருமான் என்பதைத் தாயுமானவர்

"எட்டுத் திசைக் கீழ்மேல் எங்தம் பெருகிவரும்
வெட்டவெளி விண்ணுற்றின் மெய்தோய்வ தெந்நாளோ"

தாயுமானவர். எந்நாட்கண்ணி (8—4)

"எங்கும் பரந்து நிற்கும் ஆத்மனே" சிவஞானமுனிவர் விளக்குகிறார்:

"எவ்விடத்தும் இறையடியை யின்றியமைந் தொன்றை
யறிந்தியற்றி யிடாவுயிர்கள் ஈசன் தானுஞ்
செவ்விதினில் உளம்புதந்து செய்தியெலாம் உணர்ந்து
சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்பன
இவ்வுயிர்கள் தோற்றும்போ தவனியின்றித் தோற்று
இயற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கும்
அவ்வுயிர்போல் நினறிடுவன் ஆதலான நாம்
அரனடியை யகன்றுநிற்ப தெங்கே யாமே"

சிவஞானசித்தியார் (11... ..1-1) (9)

579. ஐயப் படாத வகத்தின ரெல்லார்க்குந்
தெய்வத்தா லெய்துந் திடம்.

நின்திருவடித்துய்ப்பில் ஐயம் சிறிதுமின்றி இன்புற்றுக் கொண்டிருக்கும் திருவடியுணர்வு திருவருளால் கைவர மெய்யடியார் அனைவர்க்கும் தம் அகத்தினூடே வேறுபாடுகள் ஏதுமின்றி நின்னையே உணர்வினில் உணர்ந்து கொண்டிருக்கும் ஒண்மையர்க் கெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனியெனத் திகழும் திடமான மெய்ப் பொருளே. திடசித்தம் எனும் கொப்பரிலே பக்திக்கொடி வளர ஈனும் முக்தி எனும் பழமே. எண் குணத்தான் முடிவிலாற்றலுடைமையும் பேரருளுடைமையும் மற்றும் அருள் தருவன.

தாயுமானவர் திடமுடைய கடவுளைத் தருகிறார் காண்க:

ஐயமற்ற அதிவருணர்க் கெலாங்
கையில் ஆமல கக்கனி யாகிய
மெய்யனே இந்த மேதினி மீதுழல்
பொய்ய னேற்குப் புகலிடம் எங்ஙனே.

(பொன்னை மாதரை: 31). (10)

580. ஒன்பதுவாய்த் தோற்பை யுடைவதற்கு முன்னரே
யன்பா லவனை யணை.

புல்நுனிமேல் நீர், சூரியன் எழ அழியுந்தன்மையுடையது. அத்தகையதே தசையும் எலும்பும் ஒன்பது வாசலுமுடைய தோல்பையினுலே மூடப்பட்டிருக்கும் இவ்வுடலம். தாயுமானவர் இவ்வுடம்பு எவ்வளவு சீக்கிரம் முடிந்து போகும் என்பதை,

நித்தியமொன் றில்லாத நீர்க்குமிழி போன்றவுடற்
கித்தனைதான் துன்பமுண்டோ என்னே பராபரமே.

பராபரக்கண்ணி 180

கூறுகிறார் காண்க: அத்தகைய நிலையற்ற இவ்வுடலம் முடியுமுன்னரே புன்புலால் யாக்கை புரைபுரை கனியப் பொன்னெடுங் கோயிலாய் புகுந்தென் என்பெலாம் உருக்கி எளியையாய் யாளும் ஈசனை, மாசிலா மணியை, காதலாகிக் கசிந்து, நீர்மல்கிப் போற்றித் தொழுது, வணங்கி, அவன் பாதமடைவீர் அன்பர்களே: (11)

581. ஓடும் புளியம் பழமும்போ லீங்குநீ
பீடுடனே வாழ்க பிழைத்து.

பாசபந்தக்கயிறு எரிந்துபோகத் தில்லைத் தரிசனங் கண்ட மெய்யன்பன் இவ்வுலகில் மீண்டும், ஓடும் புளியம்பழமும் போல் சாயுச்சியப் பதவியென்னும் (514) நற்நிலையில் உலகம் அவனைக் கடவுள் என வணங்கவும், அவன் அவ்வம்மையப்பர் வடிவாக விளங்கும் உலகினுக்குத் தொண்டு புரிந்தும் வாழ்வான்: அவனும் இறைவனுக நின்று எப்பொருளையும் வினையின் நிகழ்வால் விளையும், வினைப்பயனுக் கேற்றவாறு நடாத்தியும், அவற்றுள் தாம் கட்டுப்படாதும் வாழ்வான்; ஓடும் புளியம்பழமும் போல் வாழ்வான்; தாயுமானவர் அகம் புறமாய் சிவபெருமான் இயங்குந் தன்மையை

"சடத்துளுயிர் போலெமக்குத் தானுயிராய் ஞானம்
நடத்து முறைகண்டு பணி நாம்விடுவ தெந்நாளோ

என்று தருகிறார் காண்க: (எந்நாட்கண்ணி: 8—17). (12)

582. ஒளவியஞ் செல்வ மனைத்து மழிக்குமே
கவ்வியரன் பாதங் கருது.

ஒளவுதல் = அங்கலாய்த்து விழுதல்; ஒளவியம்: தேவர்கட்குச் செய்யுஞ் சடங்கு; ஒளவை = தேவப்பெண்; ஒளஷவை நோன்பு = செவ்வாய் நோன்பு. (முன்பாட்டு விளக்கம் தொடர). பஞ்சபுலனைந்தின் வழி அலைந்து அங்கலாய்த்த மனமுடைய அன்பர்கள் தாம் சேகரித்த ஆன்மலாபத்தையுஞ் செல்வத்தையும் ஒருங்கே இழந்து விடுவார்கள். பக்தி எனும் கயிற்றினுலே கட்டுத்தறியாகிய திருவடிகளில் யானையைப்போல் மதம் பிடித்தும் குரங்குபோல் எங்குந்தாவும், அங்கலாய்த்த மனத்தைக் கவ்வி அறிவு எனும் யந்திரத்தினுல் கட்டியருளும் ஆதிசங்கரர் சிவானந்த லஹரியில் தருகிறார் காண்க. (சு. 96) திரிபுரஸம்ஹாரம் செய்தவரே! தைரியம் எனும் அங்குசத்தால் அடக்கப்பட்ட என்னுடைய மனதாகிற யானையை பக்திஎனும் சங்கிலியினுல் வேகமாக இழுத்து உமது திருவடியாகிற கட்டுத்தறியில் அறிவாகிற யந்திரங்களினுல் கட்டியருளும் (மொழி பெயர்ப்பு). (13)

583. அக்கினறு மாலை யணியுமெந் தேவனைப்
பக்குவத்தி னேடு பணி.

அக்கு = உருத்திராக்கம்; எலும்பு அப்பர் சுவாமிகள் (6 30-2) இல்

"அக்தலாம் அரையினன் காண் அடியார்க் கென்றும்
ஆரமுதாய் அண்ணிக்கும் ஐயன்காண்" என்று

இவ்வுடம்பு மாயாகாரியப் பொருள்; முடை நாற்றந்தரும் தசையும் வெண்ணீரும் எலும்புக் கோர்வையும் தோற்பையினால் மூடப்பட்டது. அழிந்து போகுந் தன்மையைக்காட்ட எலும்பு மாலையை இறைவன் சூடியிருப்பான். ஞானபகவானே விளங்குமத் தேவனை செவ்விதமாய்த் தோத்திரித்துப் பக்தியினால் மனத்தை அவன் திருப்பாதத்தில் கட்டு (582).

"அக்கிருந்த வாரமு மாடரவு மாமையும்
தொக்கிருந்த மார்பினனன்" (ஞானசம்பந்தர் 2-42-1) காண்க: (14)

584. கங்கையொடு திங்கள் புனைந்த கடவுளை
மங்கைபங் காளனை வாழ்த்து.

இமய மலையிலிருந்து வெள்ளம் பெருக்கெடுத்து கங்காநதியாக வோடி கீழே தரையிலிருக்கும் மக்களுக்கு அதிகம் நெல்விளைவதற்கும், குடிதண்ணீராகவும், போக்கு வரத்துக்கும் மின்சார உற்பத்திக்கும் வேறும் பல துணைக்கருவிகளாக உதவிபுரியும். அதுபோலவே இமயம் போன்ற பார்வதி சமேதரான சொக்கனுதனுடைய சடா முடியினின்றும் கங்கையாறு கருணை வெள்ளமாக மெய்யன்பர்கட்கு பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை முதலிய எண்குணங்களும் வழிநின்று அருள் தருவன்; இளமதி குளிர்ச்சியையும் வளருந் தன்மையையுங் குறிக்கும். (15)

585. அங்கிங் கெனுமக லகண்டமாய் நின்றவப்
புங்கவன் பாதமலர் போற்று.

வெளிப்பட்டும் மறந்தும் உள்ளதாகிய அண்டங்களுள், தொலை விலுள்ளது. நிலவுலகம் கீழுலகம் ஆகியன அண்மையிலுள்ளது, என்று சுட்டிக் கூறுத வண்ணம் எவ்விடத்திலும் பேரொளியாய் முழுநிறை வாம் பரமசிவனே பிரகாசிப்பவன்; அவன் திருவருளைப்பெற அவனுடைய பாதங்களைப் போற்று:

"அங்கிங் கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியாகி
அருளொடு நிறைந்த தெதுதன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும்படிக் கிச்சை வைத்துயிர்க் குயிராய்த் தழைத்ததெது"

என்று தாயுமானவர் முதல் பாட்டில் தருகிறார் காண்க. (16)

586. சங்கரன் தாளிணை தாம்பணி வாரெய்தும்
இன்பமும் வீடு மெளிது.

சத்தியும் சிவமுமாய் விளங்கும் முழுமுதல்வனும் சிவபெருமான் (268) எப்பொருளிலும் அருட்கண்ணுக விளங்குபவன்; அவனைப், பிள்ளை தாயொடு சஞ்சலமற்று விளையாடுவதுபோல் ஆடிப்பாடிப் போற்றி உலகினில் அன்புடன் வாழும் சாயுச்சியப் பதவியடைந்த மெய்யன்பனுக்கு என்றுமழியாப் பேரின்பமும் மோட்சவீடும் எளிதில் கிடைக்கிறது; (17)

587. எமன்வரும் முன்னரே யெம்மான்றன் பாதம்
தமவெனக் கொள்வாரஞ் சார்.

உலகத்தவரே இவ்வுடம்பானது நீர்க்குமிழி போன்றது. இளமையிலும் மூப்புவந்த போதும் உயிர்விட்டு நீங்கலாம். நடுவனுகிய எமன் இன்றும் வருவான், நாளையும் வருவான்; என்றுவருவானென எண்ணவோ முடியாது. ஆகையால் நொடிப் பொழுதேனும் வீணுக் காமல் [மார்க்கண்டேயருடைய உயிரைக்கவர்ந்து போகவந்த இயமனை உதைத்த] அந்த முழுமுதல்வனும் சிவபெருமானை அடைய திருவடி பூசை செய்வார், பாதஞ்சேர்வர்; நமனையுமஞ்சார் (343) (18)

588. இடபந் தனிலேறு மீசனைத் தேவர்
தொடரவொண் ணுனைத் தொழு.

திருகபாணனுக ஆன்மாக்களை ரட்சிக்கும் ரூபமே அந்த இடபாரூடராக நாம்காணும் பரசிவான்மாவான அம்மையுமப்பர் காட்சி தரும் ரூபம். குழந்தையுள்ளமே சம்பந்தருக்குப் முன் திருவருள் வலதாக அம்மையையுமப்பரையு மிடபாரூடராகக் காண வருளியது; பாசபந்தக் கயிறு அறுந்த அறிவுடையவராகவே அவதரித்தார்; நாமும் பாசபந்தக் கயிறு அறுந்துபோக அவன் நினைவேயன்றி வேறோர் நினைவுமின்றி விழிநீர்பெருக அவனை நினைப்பின் இருட்சார்பாம் மாயை மருளினிற் பட்டார் அறியவொண்ணுத மோன நிலையே எழுந்தருளும்; மோனகுருவே யந்தத்தேவு. இயல்பும் முழுமையுமாகிய மெய்யுணர்வாம் வாலறிவே வடிவாய்த் தேடப்படும் பொருள், நிறைந்த திருவருள் வெளியேயது. திருவடிப் பேறுகிய நல்விதையேயது. அவ்வண்ணம் வந்து காட்சிதரும் திருவடிப்பேறுகிய நல்விதை நிட்டைகூடிய அசத்தே, சிற்றம்பல தரிசனங் கொடுக்கும். (19)

589. இணங்கிவாழ் மாந்தர்க ளின்பவீ டாள்வார்
பணம்பொரு ளெல்லாம் படைத்து.

பாசபந்தக் கயிறு அறுந்து பற்றற்ற நிலையில் தமக்குத்தேவை யானதை வைத்துக்கொண்டும் மிகுதியை ஈசுவர அர்ப்பணமாகத் தர்மஞ் செய்தும் அம்மையப்பரான எம்பெருமானே என்றுந் தொழு பவன் நடுவுநிலை பெற்றவன்: அவர்களே இணங்கி வாழ்மாந்தர், அவன் இன்பத்தில் பெருஞ் சந்தோஷங் காட்டாமலும் துன்பத்தில் வருந்தாமலும் பகைவரையும் உறவோரையும் சமநிலையில் கண்டு உலக நாடக மேடையில் நடிப்பவனாக தன்னைக்காண்போன். அவன் போக்தா [299] அனுபவிப்பவன். அவர்கள் என்றும் இன்பமே காண்பார்; பணம் பொருள் உற்றூர் உறவினர் என்றும் அவர்களைச் சார்ந்துநிற்கும்;

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். (திருக்குறள் 629)
இன்னுமை இன்பம் எனக் கொளின் ஆகுந்தன்
ஒண்ணுர் விழையுஞ் சிறப்பு (குறள் 630) (20)

590. தத்து பரிநரி யாகச் சமைத்தரனை
நித்தமு மேத்துக நேர்ந்து.

ஐம்புலன் மற்றும் அந்தக்கரணம் முதலிய தத்துவங்களை அடக் குதல் இயலாத காரியம். மனுஷன் என்றும் கர்மம் புரியவேண்டும்; கர்மம் புரியாமல் இருக்க இயலாது. ஆகையால் செய்யுங்கர்மத்தை நிஷ்காமிய கர்மமாக ஈசுவரனுக்கே அர்ப்பணமாகச் செய்வதால் கர்மபலன் கிடையாது. ஐம்புலனும் அவயவங்களும் இறைவனுக்கே; 'தலையே நீ வணங்காய்' என்பது போன்ற பாடல்களால் தோத்திரித் தும், ஈதல் எனும் கொடைபிறனும் சமநிலையடைய வேண்டும்; இவற்றால் இறைவனுடைய திருவருளுடன் தத்துவங்களைப் புருஷன் தன்னுளடங்கப் பெற, தத்துவங்கள் மனதையும் ஆன்மாவையும் இறைவனிடங் கொண்டுசெல்லும் பரியாகின்றன;

வினையும் வினையின் நிகழ்வால் வினைப்பயன் எனுமம்பலத்தே வினைத்தன்மையாகிய ஆணவமலம் ஐம்புலனையும் தத்துவங்களையும் நரிகளாக்கி, ஆன்மாவை ஏமாற்றி தீங்கிழைக்கும் கர்மம் புரியவும்; ஆகையால் தத்துவங்களையும் அவயவங்களையும் ஒவ்வோர் விநாடி யும் இறைவனுக்கே ''கைகாள் கூப்பித்தொழீர்'' என்பது போன்ற தொண்டில் ஈடுபடுத்தவும். குரங்கையொத்த மனம் ஒவ்வோர் பொரு ளிலும் பாய்ந்து பாய்ந்து வஞ்சனை செய்யாது பத்தி எனும் சங்கிலி யினால் இறைவனுடைய திருவடிகளில் கட்டவேண்டும்.

தத்துவப் பேயோடே தலையடித்துக் கொள்ளாமல்
வைத்தவருள் மோனவள்ளலையே — நித்தமன்பு
பூணக்கருது நெஞ்சு போற்றக்கர மெழும்பும்
காணத் துடிக்கு மிருகண்,

(தாயுமானவர் உடல்பொய்யுறவு 29) (21)

591. நன்மையுந் தீமையும் நாடாத நாதனைச்
சொன்னவர் தாமேதூ யோர்.

இது இன்பம், இது நன்மை, இது தீமை இது துன்பம் என்பது ஆன்மாவைப் பீடிப்பதில்லை. ஆன்மாவின் இயல்பு ஆனந்தம் (332) அது சைதன்யப் பொருள் (333) ஆன்மா பேதமற்றது (160) இந்த ஆன்மா பெரிது (பிருக. உபநிட 4-4-22) (227 இல் காண்க) உடம்பு மாயாகாரியப் பொருளே நன்மை, தீமை இவற்றைச் சார்ந்தது: தாமே தூயோனையும் தம்மை யடைந்தவரைத் தூய்மையாக்கும் குணமும் இறைவனுடைய எண்குணங்களிலொன்று. அப்படிச்சொன்ன எண்குணத்தானை யென்றும் நாடு.

நன்றெனவும் தீதெனவும் எனக்கிங்குண்டோ
நானுகி நீயிருந்த நியாயஞ் சற்றே
இன்றெனக்கு வெளியானுல் எல்லாம் வல்ல
இறைவா நின் அடியருடன் இருந்து வாழ்வேன்.

(தாயுமானவர்) (22)

592. பந்தஞ்செய் பாசமே பாறிடும் வண்ணநீ
அந்தமில் லாதவற் போற்று.

மாயாகாரியப் பொருட்களான மாடு, மக்கள் அனைத்துமான, மண், பெண், பொன், பாசபந்தக் கூட்டம், தத்துவங்கள் ஆறும், இவைதரும்மயக்கத்தால் மனத்தைப் பீடித்து, கர்மத்தில் ஈடுபடச்செய்வன, அத்தகைய தத்துவங்கள் மனத்தை இறைவன்பால் கொண்டு செல்லும் வகைத்தாய் அப்பர் சுவாமிகள் 'கண்காள் காண்மின்களோ' கைகாள் கூப்பித்தொழீர்'' எனும் அப்பர் 4—9 பதிகத்தில்'' நம்மை ஞேர் செல்கதியைக் காட்டிடப் போற்றியியம்பிய திருவங்கமாலை'' போலும், வேறுபல பாட்டுக்கள் கொண்டும் முழுமுதல்வனும் எம்பிரானை போற்றித் தொழுதும் வணங்கிப் பூசை செய்தும் பாசபந்தக் கயிறு அறுந்து போகும். மனம் வேறோர் நினைவுமின்றி என்றென்றும் அவன் நினைவே கொண்டு பேணுணுத அன்பு பரசிவான்மாவாகிய அம்மையப்பர்பால் பூண்டொழுகி, முக்குணமும் பாழாய்ப்போக பேரருளுடைமை முடிவிலாற்றலுடைமை இயல்பாகவே பாசங்களினீங்குந் தன்மை முதலிய எண்குணங்கள் கொண்ட தண்ணளி வாய்ந்த அவன் நம்மை நோக்கி விரைந்துவர நிட்டை கூடுவோமாக: தில்லைச்சிற்றம் பல தரிசனத்தில் ஆழ்ந்து கிடப்போமாக; மரணம் பிறப்பெனுங் கடலைக் கடப்போமாக.

பாச சாலங்கள் எல்லாம் பற்றுவிட ஞானவைவான்
வீசு நாள் எந்நாள் விளம்பாய் பராபரமே.

[தாயுமானவர் பராபரக்கண்ணி 176) (23)

593. மன்றுள்ளே யாடுமெம் மாமணி தன்னைநீ
என்றும் மனத்து ளிருத்து.

[முன்பாட்டு விளக்கம் தொடர] பாசபந்தங்கள் அறுந்து நிட்டை கூடியே தில்லைச் சிற்றம்பலமெனும் சமாதியில் ஆழ்ந்து கிடப்பான் மெய்யன்பன். சாஷி, ஆமோதிப்பவன், தாங்குபவன், அனுபவிப்பவன் எனும் நான்கு நிலைகளிலும் மெய்யன்பன் தன்னைக்கண்டு நாடக மேடையில், வினையின் நிகழ்வால் விளையும் வினைப்பயனெனுமம்பலத்தே, வினைமுதலாம் (380) முதல்வன் முழுமுதல்வன், நாடகம் சித்திரிப்போன், எழுதியிந்த நாடகத்தை நாடகாசிரியரான இறைவனுக்குத் திருப்தியாக மெய்யன்பன், நடிப்பான். [265, 293;] மகேஸ்வரன் சதாசிவன் எனும் அருவுருவாம் ரூபத்தை தடத்தப் பொருளாக கண்டனுபவித்ததை அருவுருவமாக சுட்டுப்பொருளாக உணர்விலை லிந்த உண்மை வடிவினை. அருள் ரூபத்தை, தண்ணளிவாய்ந்த இறைவன் கருணையினாலே அறிவினால் காணும் அருள் வடிவினை (120) நிட்டைகூடி மனம் கரைய .....

உன்னுமனங் கர்ப்பூரவுண்டை போலே கரைய
மின்னும் ஆனந்த விளக்கே பராபரமே,, (பராபரக் கண்ணி 259) இல்

தாயுமானவர் விளக்குவது போல் தில்லைச்சிற்றம்பலம் எனும் ஜோதி விளக்கில் அவனைக் காணலாம். அந்தச் ஜோதியில் அறிவு வடிவான பரசிவான்மாவாக அம்மையப்பரான முக்கட் கருணைப் பிராணைக் காணலாம். தாயுமானவர்

"அண்டபிண்டங் காணேன் அகமும் புறமுமொன்றுக்
கண்டனன்னை நீகலந்த காலம் பராபரமே"

(பராபரக் கண்ணி 279)

என்று கூறுவதுபோல் அருவுருவாம் சதாசிவனுக உணர்ந்தறிந்த அண்டமும் பிண்டமும் விட்டுநீங்கச் சைதன்யப் பொருளான ஜோதி வடிவான அறிவுரூபத்தை அறிவினால் காணலாம். அந்த மன்றுளாடிய மாமணிதன்னை சுட்டுப்பொருளாக நினைந்தும் உணர்ந்தும் அறிந்தும் அறிவினாலே அறிந்தும் சிந்தித்தும் சிந்தனைதீதனாய் என்றும் வாழ்க; சதாசிவ அருவுருவம் உணர்விலைறிந்த ரூபம், விகாரரூபம், விகாரரூபம்; அண்டபிண்டம் மறைந்து அறிவு வடிவான இன்பமாய் விளங்குதலை தாயுமானவர் தருகிறார் காண்க.

உரையிறந்துளத் துள்ள விகாரமாந்
திரைகடந்தவர் தேடுமுக் கட்பிரான்
பரைநிறைந்த பரப்பெங்ங்ன் அங்ஙனே
கரைகடந்தின்ப மாகக் கலப்பனே.

(பொன்னேமாதனை 52)

மேலும் சொல்லமுடியாத பொருளான அக்காட்சியின்பத்தைத் தருகிறார் தாயுமானவர் காண்க.

கண்ட கண்ணுக்குக் காட்டும் கதிரெனப்
பண்டும் இன்றுமென் பால்நின் றுணர்த்திடும்
அண்ட னேயுனக் கோர்பதினாயிரந்
தெண்டன் என்பொய்மை தீர்த்திடல் வேண்டுமே

(பொன்னேமாதரை 64) (24)

594. இயக்கர் முனிவர்க ளேத்து மவனை
வியக்கவாழ்த் திற்பெறுவர் விண்.

இயக்கர் பதினெட்டுத் தேவகணங்களுள் ஒருவகையார். இவர்கள் இயல்பாகவே திருவருள் வலதாக இயற்கைவடிவின அம்மையின் ஆற்றல் கொண்டு செயல்புரிவர். இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்குந் தன்மை முடிவிலாற்றலுடைமை பேரருளுடைமை வரம்பிலின்பம் முதலிய எண்குணங்களும் இறைவன் திருவருளால் தம் முள் கொண்டவர்கள்: வேறும், முனிவர் இயல்பாகவே ஞானப்பொருள் ஜோதியாக விளங்கும் ஜோதி அகத்தினர், ஞானவான்கள். சாயுச்சிய பதவியடைந்த இவர்கள் தாம்வாழும் அந்நிலையில் அவரவர்க்கு அவரவர் வினைப் பயனுக்கு ஏற்றவாறு, வினைமுதலாம் முதல்வனும் தாமும் ஒன்றுபட்டே, பொருத்தி வைத்தும் (படைப்பு 380) தம் ஒளி கொண்டு அவ்வுலகை அப்பாற்பட்டு நின்று இயக்கியும், நல்லறிவை மக்களுக்கு உபதேசஞ் செய்தும் அருள்புரிவர். இயற்கை இயல்பு கொண்டு வாழும் இயக்கர், வேறும் உலகினை இயக்கும் முனிவர் (முன்விளக்கம்) இவ்விரு வகைத்தினரும் எவ்வண்ணம் இறைவனைத் தொழுகிறார்களோ அவ்வண்ணம் தொழுது திருவடி சேவைபுரிந்தால் நாமும் மோட்சவீடு அடையலாம்.

ஆணவமலம் பீடித்த பிரம்மா விஷ்ணுவை மயக்கியும், இயக்கர் வானவரை நயந்தும், இறைவன் நோக்கினன் எனுமுண்மைதர அப்பர் சுவாமிகள்

"இயக்கர் கின்னர ரிந்திரன் தானவர்
நயக்க நின்றவன் நான்முகன் ஆழியான
மயக்க மெய்தவன் மாலெரி யாயினுன்
வியக்கும் தன்மையி னேனை விகிர்தனே (5—97—25) (25)

595. அரவுசேர் மேனியெம் மண்ண லடியைப்
பரவுவார் சேர்வர் பரம்.

ஐம்புலன்களை ஐந்தலைநாகமாகக் கொண்டும் அந்த ஐம்பொறி களும் ஆறுறு தத்துவங்களுமாகத் தன்னுள் அடங்கப் பெற்றவராய், அந்தப்பாம்பு அவருடன் சேர்ந்து ஆடல்புரிய விளங்குபவர் எம் இறை வன். பகைவர் பாம்பாக விளங்கவும் அந்தப்பாம்பை ஆபரணமாக வுமுடையான். அத்தகைய இறைவனைப் போல் மெய்யன்பரும் தாம் உலகினில் வாழ அறிவு வடிவாக விளங்கும் ஆத்மனே சொரூபமாக, நாம் நம்மைப் போற்றித் தொழுது வாழ்வோம். (முன் பாட்டு விளக் கம் காண்க) (26)

596. அலகிலாச் சோதியை யன்போடு பாடின்
உலகிற் பெறுவ ருயர்வு.

[பாட்டு 593 விளக்கம் தொடர] சிற்றம்பல தரிசனமாக மெய் யன்பன் காணும் அந்தச் ஜோதி, மனோமயகோசத்திலும் விஞ்ஞான மயகோசத்திலும் உலகியற்கை வடிவான அம்மையப்பர், களேவடிவும் ஜோதியுமாக, இன்பமளிக்கும் ரூபமாம். பின் ஆனந்தமய கோசத் தில் வெறும் ஆதியந்தமற்ற திருவைந் தெழுத்துச் ஜோதியே காண லாம்; ஒரு முனைப்புமில்லாத வெறும் ஆனந்தமே. இந்த அலகிலாச் சோதியில் ஆழ்ந்து கிடந்த, அந்த ஆணவமும் நீங்கப்பெற்ற மனமு டைய சாயுச்சிய பதவியடைந்த [355, 356, 514, 516] மெய்யன் பர், முப்பதமுங்கடந்த ஞானபதமே தலப்பயனைப் பெறுவர். அவரே தாம் தம் கடமை முடிந்த அந்த நாளில் ஒளியில் ஒளிபோய் ஒடுங்க உலகினை நீத்து மகாசமாதியடைவர். ஸ்தூல சரீரம் அழியும்போது மறு உயிர்கள் போன்று இவர்களுடைய சூக்குமை சரீரம் என் னேர் உடம்பெடுப்பது கிடையாது; சூக்கும சரீரமும், வெளியில் வெளி போய்விரவவும், அளியில் அளிபோய் அடங்கவும் முடிவடையும் (374 (394: காண்க) (27)

597. வண்டார்க்குங் கொன்றையம் வார்சடை யோனடித்
தண்டா மரையே சரண்.

வண்டுகள் பரிடி ஆடும் கொன்றை மலர்கள் அலங்கரிக்கின்ற சடை யுடைய எம்பெருமானுடைய தண்ணளிவாய்ந்த தாமரை போலும் மலர்ப்பாதத்தில் சரண்புகுவோமே.

கொன்றைமலர் சிறிதாயும், கல்லால மரம்போன்று வெயில் வெப்பம் மிகுதியான இடத்திலும் காணப்படும் மலர். அறிவு வடி வாக விளங்கும் அகத்தே ஞானப்பொருள் மொட்டு மொட்டாக ஊறுமாம். வளர வளர மொட்டுகள் விரிந்த பொருட்களை அகத்தே தோற்றுவிக்க ஞானப்பொருளாகவே அகம் தோன்றும். பொது

நடம்புரியும் இறைவனையங்கே காணலாம். ஞானசம்பந்தர் ஞானப் பொருளே வடிவாக இறைவன் மெய்யன்பனை உண்டாக்குவான் என

"ஞானத்திரளாய் நின்ற பெருமானல்ல வடியார் மேல்
ஊனத்திரளை நீக்குமதுவு முண்மைப் பொருள் போலும்
ஏனத்திரளோ டினமான்கரடி மிழியு மிரவின்கண்
ஆனைத்திரள்வந் தணையுஞ்சார லண்ணுமலையாரே" (1-69-3)

எனும் தேவாரத்தாலும், மற்றும் இப்பதிகப் பாட்டுகளாலும் உணர்த்துகிறார். எஞ்சியிருந்த வினையை எரித்துப் பெரிய வில்லுடைய வேடன் போலும் மெய்யன்பன், பருமாமணி முத்தம் போலும் ஞானமுத்துக்களைக் குவித்தலை

உருவிற் றிகழு முமையாள் பங்க ரிமையோர் பெருமானர்
செருவி லொருகால் வளையவூன்றி செந்தீ யெழுவித்தார்
பருவிற் குறவர் புனத்திற் குவித்த பருமாமணி முத்தம்
அருவித்திரளோ டிழியுஞ்சார லண்ணுமலையாரே. (11-69-5)

ஞானப் பொருள் வளர வளர கொன்றைவார் சடையோன் பாதம் சரண் புகுவோமாக. (28)

598. அழகாரு மம்புலியுங் கொன்றையு மங்கை
அழலும் புனைவோ னரண்.

அழகாரும் அம்புலியும் கொன்றையும் அம்+கை + அழலும் புனைவோன்: திங்களும் கங்கையும், கொன்றை மாலையும், அன்று செய்யும் வினையை அன்றே எரித்து, அஞ்ஞான இருள்சூழ் களவுபடுங் காலந் தோன்றினும் உடன் 'தூமாயை' எனுமுணர்வினல் உடனெரித்து அஞ்ஞான இருள் நீங்கப் பெற்று (53; 55;) அழியாப் பேரின்பம் பெருக சாயுச்சிய பதவியடைந்த மெய்யன்பன் வாழ்வன்; (29)

599. அளவில் மதந்தோறு மாங்காங்கே நின்று
விளைவோ னெமக்குத் துணை.

அளவில் மதம் தோன்றும் அங்காங்கே நின்று களவு படுங்காலம் அஞ்ஞான இருளை நீக்கி, ஞானப் பொருளாய் நலஞ்சூழியா இன்பமாய் விளைவோன் எமக்குத் துணை.

ஜீவன் முத்தனாக வாழும் நிலையில் சித்திகள் தோன்றும்; மனம் மதம் பிடித்த யானைபோல் அடங்காது எழும் (365) (558). பக்தி எனும் சங்கிலியினல் மதம் பிடித்த யானையை யொத்த மனத்தை திருவடிப் பேறு எனும் கட்டுத்தறியில் கட்டுவோமாக [514; 516] [582] ஞானத்திரள் (597) தோன்றும். அவ்வறிவே சொரூபமான யந்திரங்களினல் இறுகக்கட்ட வேண்டும்: முக்தியெனும் பழம் ஈனும். (30)

600. அறம்பொரு ளின்பமும் வீடு மளிக்கும்
பரனே நினைந்தென்றும் பாடு.

அறம் பொருள் இன்பமும் வீடும் அளிக்கும்
பரனே நினைந்து என்றும் பாடு.

அறம்—நல்ல வழி நிற்போன் 43; 492; கொல்லாவிரதம் (477) காண்க. பொருள்=மெய்ப்பொருள். ஞானத்திரளாய் விளங்கும் அகம் (597) இன்பம் என்றுமழியாப் பேரின்பமும் மோட்சவீடும் அளிக்கும்; ஈற்றில் ஸ்தூல சரீரமும் சூக்குமசரீரமும் அழிந்து போக (596) ஒளியானது இறைவனுடைய ஒளியில் ஒடுங்கும். (596) (31)

601. அன்னத்தோ டாடை யளிக்கு மொருவனை
இன்னனெ னவுணர்ந்தோர் யார்.

வினையின் நிகழ்வால் விளையும் வினைப்பயன் எனும் அம்பலத்தே வினைமுதலாம் முதல்வன் முழுமுதல்வன்; அவரவர் வினைப்பயனுக்குப் பொருந்தியவாறு பொருத்தி வைப்பவன்; ஆன்மாக்களை வினையினின்று நீக்கியாளும் நோக்கமே அவன் உடையான்; படைப்பு (380) வேண்டுவார்க்கு வேண்டுவதே ஈயும் தண்ணளிவாய்ந்த கடவுளே வேண்டுவதைக கொடுப்பவன்.

மாணிக்கவாசகர் தருவதைக்காண்க.

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டிஎன்னைப் பணி-
கொண்டாய்
வேண்டி நீயாதருள் செய்தாய் யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவு முன்தன் விருப்பன்றே.
(குழைத்தபத்து 6) (32)

109 நானுமவனே நீயுமவனே

602. ஊனு மவனே உயிரு மவனே
நானு மவனே நீயு மவனே
கோனு மவனே குருவு மவனே
மானும் வார்த்தை பிறிதறி யேனே.

ஆண்டாள் அடிமையாம் அகப்பண்பில் வெவ்வேறு பொருட்களும் முதன்மையெனக் கினைத்து முனைப்பதற்கு ஏது எதுமின்றும். அடி மரம் ஒன்றுய்க் கினை பலவாய்க் காணப்படினும், கினை அனைத்தும் அடி மரம் எனப் பெயர் பெறுதல் இன்று. ஒருவனும் ஆசானுள் மாணவர் பலரும் அடங்கிவிடுவர். அங்ஙனம் அடங்கிவிடுவதால் மாணவர் பயனிழந்து அழிந்து பட்டுப் போனர் என்பதின்று; அடங்கி ஒன்றுய்

அளவிலாப் பயன் துய்க்கின்றூர் என்பது உண்மை. அதுபோல் ஆருயிர் தம்மை நானெனவும், தம்மை இறைவன்பால் கொண்டு செல்லும் உடம்பை வேறுன உடம்பெனவும், மும்மலப் பிணிப்பால் கட்டுண்டு கிடக்கும் உயிரை வேறென்றும், அவ்வுயிர் தம்மை மூடிக்கிடக்கும் மும்மலமும் நீங்கப்பெற தாமே விளங்கும் உயிர்க்குயிராம் பேருயிராம் சிவபெருமானே வேறென்றும் நினையாமல், அரசாளுங் கோனும் பதவி நீங்கப் பெற்று மும்மலமும் நீங்கப்பெற அவனேயாம், எம்மை இறைவன் வழி நின்று தூக்கிச் செல்லும் குருவும் அவனேயாம், எல்லாம் ஒரு பொருளான பரம் பொருளே. மாணவர் போல் ஒவ்வோர் வடிவொடு வேறுபட்ட உணர்வுடன் வாழ்ந்தாலும் ஒரே வகுப்பும் ஆசானும் என்றே தம்மைக் கண்டு இன்பம் துய்ப்பர். (1)

603. அறியும் பொருளும் அறிபடு பொருளும்
செறியும் பொருளும் செறியாப் பொருளும்
குறியுங் குணமு மற்ற கோவென
அறிவா ரீண்டு பிறவா ராமே.

ஆருயிர் தம்மை மூடியிருக்கும் மும்மலமு நீங்கப்பெற அதுவே தம்மை உயிர்க்குயிராம் சிவபெருமானுக ஒன்றுபட்ட நிலையில்காணும்: அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நெறியாம் நீடருள் பெருநந்தி ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம் (365) அறிவே வடிவான அகம் சிவலிங்க வடிவாக விளங்கும்; மும்மெளனஞ் சாதிக்கும் அகமே அது. அறிவே வடிவாம் செறியும் பொருள், ஆன்மா பேதமற்றது என்னுந்தன்மையால், செயலற்றது, புண்ணிய பாவமற்றது, ஒன்று செறியாச் செறிவு குறியுங் குணமுமற்றது. (186, 160,) அவ்வான்மாவை ஆத்மனுக ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவமெனும் உண்மையை அறிபவர் மீண்டும் பிறவார்; (2)

110 உயிர்வருக்கக் குறள்

604. அன்புடை யோர்பா லறமெல்லா முண்டாகு
மின்பமவர்க் கென்றென் றிசை.

ஆருயிர்தோறும் அதுவதுவாய் நின்றொளிரு மெம்பெருமான் பரசிவான்மா அம்மையப்பரைத் தாமெனவே கண்டமெய்யன்பர்கள் தம்மறிவால் கண்டமெய்யன்பர்க்கு முழுமுதல்வனுன எம்பெருமானே [149 காண்க] அறம்பொருள் இன்பம் வீடு எல்லாமே என்றுமழியாப் பேரின்பமாக அளிப்பன் [600, 602, 603] [திருமூலர் திருமந்திரம் ''அன்புசிவம் இரண்டென்பர்.....'' (149) இல் காண்க] (1)

605. ஆராய்ந்து நற்கருமம் ஆற்று மியல்பினர்
ஊரார்க்கு நல்ல உறவு.

அடியேன் ஐம்பொறிகளின் வழிச்செல்லாமல் நின்திருவருள் வழி நிள்று கொல்லா விரதம் மேற்கொண்டு (477) ஈசுவர அர்ப்பணமாகவே உலக சேவை நிஷ்காமிய காமமாகச் செய்யின் சிவ னெனு நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மானுகிய செம்பொருளே அருள் புரிவன்: பரசிவான்மாவாகிய அம்மையப்பர் நல்லுறவாம் உலகினை யும் அருளுவன் (2)

606. இட்டுண்டு வாழ்வார் இருக்கு மிடந்தோறும்
அட்டுண்ணுர் மற்றையவ ராம்.

தனக்கென உணவு சமைப்பதால் கர்மம் கர்மபலனுண்டாக்கும்: இறைவனுக்கென்றே எப்பதார்த்தங்களையும் உண்டாக்கி இறைவனுக் குப் படைத்து உண்பதால் கர்மம் கர்மபலன் தாராது. கண்ணப்பன் இறைச்சியையும் இறைவனுக்கே படைத்தான்; பக்திசிரேஷ்டனைன் காட்டில் வாழ்ந்த வேடனில் இட்டுண்பதே அந்தப் பக்தியை வளர்த் தது. நாவாசை மிகவுங் கொடிது. எல்லா ஆசைகளும் அவற்றுடன் மூளப்பன; நான் எனுமானவ முனைப்பும் ஏழ, ஐம்புலவேடர் கையில் அகப்படும் அல்லாதார் தானெனும் ஆணவ முனைப்பாலும் தனக் கெனும் ஆசை குடிகொண்டும் அலைவர். (3)

607. ஈவாரே எல்லாம் உடையாரஃ தில்லாதார்
போவார் நரகம் புகுந்து.

(முன்பாட்டு விளக்கம் தொடர) தனக்குப் போதுமான பொருளை வைத்துக் கொண்டு மிகுதியை ஈசுவர அர்ப்பணமாகத் தர்மம் செய் தும் (492) கொல்லா விரதம் பூண்டு (477) முன் திருவருள் வழிவாக தம்முளி எழும் கர்மத்தைச் சும்மா இருக்கு மகாமடையான், மும் மௌனஞ் சாதித்து மெய்யன்பனாக விளங்கும் அறிவாளன், எல்லா முடையான், அறம் பொருளின்பம் வீடு எல்லாமுடையான், அல்லா தார், (முன்பாட்டு விளக்கம்) போய் நரகடைவர் (4)

608. உள்ளமே கோயில் உயிரே சிவலிங்கம்
வள்ளலுக் கென்றே வழுத்து.

ஓயாது ஒன்று விட்டு ஒன்று பற்றி உழலும் இயல்பு வாய்ந்த மன மானது, இருவினைகள் என்று சொல்லப்படும் துன்பத்தை விளைக்கின்ற ஆவிகள் வலைகளிலகப்பட்டு அலையாமல், அவயவங்கள் எல்லாமும் ''கைகாள் கூப்பித்தொழீர்'' ''கண்காள் காண்மின்களோ'' போலும் மற்றும் அப்பர் தரும் பாட்டுக்களினுல் ஐம்புலன்களும் இறைவன்பால் ஒடுங்க அந்தப் பாசபந்தக் கயிறு அறுந்த மனம் உள்ளத்தே ஒடுங்கும்: வினையின் நிகழ்வால் விளையும் வினைப்பயனெனும் அம்பலத்தே வினை முதலாம் முதல்வன், எம்பெருமான், தன்னொளி கொண்டு அப்பாற்

பட்டவுடன நின்று இயக்க இயங்கும் ஆருயிர்கள் யாவும் அவன் கட்டளைப்படியே இயங்க, உள்ளபடியே யாவும் என நாம் உணர்வோம்; கள்ள மனம் போயொளிக்கும், சித்தமவுனம் செயல் வாக்கெலாம் மவுனம், சுத்த மௌனம் என்பால் தோன்றும்.

கொல்லாமை எனும் விரதம் பூண்டு அறவழி நிற்பவன் (முன் பாட்டு விளக்கம் காண்] மனமும் தூய்மையடைந்து உள்ளத்தே ஒடுங்க வேறோர் நினைவின்றி என்றென்றும் 'சிவன்' எனும் நாமமுடைய அவனையே நினைவுபூண்டு நிற்பின் நிட்டை கூடும்; அகம் சிவலிங்க வடிவாக விளங்கும்; விளைமுதலாம் முதல்வன் எம்பெருமானும், ஓசைவடிவாக விளங்கும் சொல்வடிவானவள் அம்மையும், ஞானக் கண்ணும் முக்கட்கருணைப்பிராணனசிவலிங்கவடிவாம். தொழுது வணங்கும் உடம்பில் காணும் உள்ளமே, அடங்கிய மனம் ஒடுங்கும் உள்ளமே. அதன் இருப்பிடம். அப்பர் சுவாமிகள் இதை உணர்த்துகிறார் காண்க:

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணிவிளக்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீரமைய வாட்டிப்
பூசனை ஈசனுர்க்குப் போற்றவிக் காட்டினேமே. (5)

609. ஊரார் சிறக்க உவப்பவரை எஞ்ஞான்றும்
பாரார் புகழ்வர் பணிந்து.

பரசிவான்மா அம்மையப்பர் என்றும் மெய்யன்பனுடைய உள்ளத்தைத் தம் கோயிலாகக் கொண்டு, அவன் உள்ளத்தே சிவலிங்க வடிவாக எம்பெருமான் உறைந்து விளங்கின், ஊராரும் அவனும் ஒன்றுபட்டே, சிவன் முத்தனைச் சீவிப்பவன் தாயின் மடிமீது சஞ்சலமற்று விளையாடுங் குழந்தை போல், அவனும் உலகும் ஒன்றை ஒன்று வஞ்சகமும் சஞ்சலமுமற்று நோக்கியும் உடன் கூடியும் வாழ்ந்து இன்புறுவர். அதில் ஐயம்சற்றுங் கிடையாது. (6)

610. எள்ளப் படாரறிஞர் எப்பொழுதும் நல்லறமே
கொள்ளப் படுவார் குறித்து.

திருமாமறை முறைகளாகிய செந்தமிழ் வேதாகமங்களென்னும் சிரிய இறைநூல்களைத் திருவருளால் ஆராய்ந்துணர்ந்து அதன் படியொழுகி உன்திருவடியினைப் பிரியாவண்ணம் அணைந்து உயர்வற உயர்ந்து வியத்தகு திருவடியின்பத்தை நுகர்ந்து கொண்டிருக்கும் மெய்யன்பர்கள் தம்மறிவு கொண்டு என்றும் இறைவனைப் போற்றித் தொழுதும், பூசை செய்தும் கொல்லா விரதம் பூண்டும், ஈதல் எனும் நல்லறம் கைப்பிடித்தொழுகி அறவோனுகியும், நல்லறமே குறித்து

வாழ்வார். பிறன்பொருள் நாடார், வஞ்சகம் பொருமை சூது கைக் கொள்ளார், என்றும் அகத்தூய்மை புறத்தூய்மை கைப்பிடி தொழு குவார். தண்ணளி வாய்ந்த அவன் திருவருள் கொண்டு எல்லாஞ் செய்வர். (7)

611. ஏவாது செய்பவரை இம்மை மறுமைக்கும்
மூவா மருந்தா மொழி.

அறிஞர் ஏவவும் அவர் குறிப்பறிந்து அறவழி நிற்பதிலும், முன் திருவருளால் இறைவனே தம்முள் நின்று செயல்புரியும் உண்மை விளங்க, அறவழி நிற்பவன் பெரிது. அவன் ஜீவன் முத்தனாக விளங் குவன். இம்மைக்கும் மறுமைக்கும் அவன் தம்முள் பரசிவான்மா வாக விளங்கும் உலகினைத் தாமாகவே உணர்ந்தறிந்து தொண்டு செய்வான். அவனே வறுமைப்பிணிக்கொரு மூவாமருந்து. (380, 525) (8)

612. ஐயம் புகாஅ ரறத்தைக் கடைப்பிடிப்பார்
தெய்வமொன் றென்பார் தெரிந்து.

திடசித்தம் எனும் கொம்பரில் பக்தி எனும் கொடிபடர்ந்தால் முக்தி எனும் பழம் தரும். சிவனெனும் நாமமே அந்த இறைவன்: எல்லாச் சமயத்தவராலுங் கைக்கொள்ளப்பட்டவனே அவன். ஐயம் புகாது (579) நல்லறம் கைப்பிடித்து (492) பரசிவான்மாவாகிய அம்மையப்பரையே தெய்வமென உணர்ந்து கொண்டு செய்து வணங் குபவனுடைய கடவுள் எச்சமயத்தவர்க்கும் பொது. (9)

613. ஒன்பது வாயில் உடையவிக் கோவிலிலே
அன்புடனே நிற்பா னரன்.

கண்கள் இரண்டு, காது இரண்டு, மூக்குத்துவாரம் இரண்டு, மல வாசல், சலவாசல், வாய் எல்லாமாய் ஒன்பது வாசலுடைய தோற் பையால் மூடிக்கிடக்கும் (580) இவ்வுடம்பைத் தம் கோயிலாக எம் மிறைவன் கொள்வன் (608); அவன் பரசிவான்மாவான அம்மையப் பரே உருவாகிச், சிவன் முத்தனுடைய உடம்பையே தம் மூடம்பாக (604) க் கொண்ட, அன்பே சிவமாய் அமர்ந்திருக்குந் தெய்வம் (149). (10)

614. ஓதும் பொருளும் உடலும் உயிருமெலாம்
மாதொருபா கற்கே வழங்கு.

(முன்பாட்டு விளக்கம் தொடர) பரசிவான்மா அம்மையப்பரே தாயாக, தாயின்மடியில் சஞ்சலமற்றிருக்கும் குழந்தை போல் விளையாடுபவனே, ஜீவன்முத்தன். அன்புடனே உலகினைக் காப்பாற்று பவனும் ஞானப்பொருளாய் ஞானக்கண்ணுடன் விளங்கும் முக்கட் கருணைப் பிராணனவனும் அவனே. முக்கட்கருணைப்பிரானே, சூரிய

னையுஞ் சந்திரனையும், உயிரையும், உடம்பையும், சொக்கனுதனையும், அம்மையையும், இருகண்களாகவும், ஞானக்கண்ணன நெற்றிக்கண்ணை மூன்றாங் கண்ணுகவுமுடையான். ''சந்திரகலை, பாம்பு, கங்கை மற்றும் சிவசின்னங்கள் அம்மைக்கும் அப்பருக்கும் பொது. (சிவானந்தலஹரி) மாதொருபாகற்கே எல்லாம் உடைத்து (11)

615. ஒளவை உறுவை அரியதிரு வள்ளுவரைத்
தெய்வமெனப் போற்றுதலே சீர்.

ஒரு குறிப்பால் தம்மை, அம்மை சத்தியாக விளங்குபவனை, உணர்த்தும் ஒளவைப் பிராட்டியை, திருக்குறள் எனும் தலைசிறந்த நூலாசிரியரான வள்ளுவரைத் தெய்வமெனப் போற்றுதலே மெய்யன்பருடைய உலகு. 'அகரமுதல' என்பதால் எல்லாச் சமயத்துக்கும் பொதுவான '' 'அ' எனும் 'ஓசையே' இறைபொருளாக விருந்து எப்பொருட்களையுமியக்குந் தன்மையுடையது'' எனும் பரசிவ வணக்கத்துடனே திருக்குறளைத் தொடங்குகிறார் வள்ளுவநாயனார். (12)

111. திருவுந்தியார் 1

616. அருவாகி நின்றவன் ஆசானுய் நல்லூரில்
திருவருள் செய்தானென் றுந்தீபற
சிவன் சிவனென் றுந்தீபற.

ஸ்ரீ நடராசன் உருவமாக கோயில்களில் அமைக்கப்பட்டும் உயிரில் பொருள் உயிருள் பொருள் யாவுமாக உலகினில் விளங்குபவனைக் காண்கிறோம். பூவாகவும் காயாகவும் கனியாகவும் ஓசைவடிவான வன் சொல்வடிவானவன் அம்பிகையும், அவற்றை இயக்கும் இறை ஒளியாக விளங்கும் அருவுருவாக விளங்கும் சதாசிவனையும் உணர் வினால் உணர்ந்தறிகிறோம். இதைப் பொற்றூண் என்பர். (25) வினையின் நிகழ்வால் வினையும் வினைப்பயன் எனும் அம்பலத்தே வினை முதலாம் முதல்வன், தன்னொளி கொண்டுஇயக்குபவன், இயங்குபவனே ஓசைவடிவான மீனாட்சி. ஆருயிர்களை அவரவர் வினைப்பயனுக்கு ஏற்றவாறு பொருத்திவைப்பவனே நம்மிறைவன். இறைவனும் பொன்னம்பலமாக விளங்கும் வினைப்பயனெனும் அம்பலமும் (530) அருவாம் ரூபம். நம்மிறைவன் சிவகுருவாக உருத்தாங்கிச் செல்லப்பனெனும் நாமம் பூண்டு நல்லூரில் எருந்தருளி எமக்கு அருள் புரிந்தனன். தேரடியில் நான் கண்டு தரிசித்த போது சிவனருளை நோக்கென்றான், நோக்க, நொடியளவிலே யின்பம் தேக்கிற்றென் சிந்தை தெளிந்து (489) உவமை கடந்த வின்பமே தந்தான். அல்லும் பகலும் ஒன்றாகி, பேரொளி போன்ற அவனொளியே அந்த ஒளி. உயிர் நொடியளவில் பாவந்தேய்ந்து ஆத்மஞானத் தோன்றிற்று (603). சிவனே சிவனுய் தோன்றினது. (227). (1)

617. ஆசைநி களத்தினை வேரோ டறுத்தவன்
பேசப் பெரியானென் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற.

மண்ணுலக ஆசையாகிய மண் பெண், பொன் எனும் மூவாசை எனும் சுழி பொருந்திய பிறவிப் பெருங் கடலுள் அடியேன் ஆழ்ந்து விடாமல் என் ஆசான் அக்கடலை நீந்துதற்குரிய தன் திருவடிப் புணையைத் தந்து உடனே ஒரு நொடியளவில் சீவனே சிவனெனும் உண்மையுங் காட்டி, பின் என் அனுபவத்தாலே அவனே நானெனு முண்மையறிய வைத்து பேசப் பெரியோனை என் ஆசானுக்கு ஆயிரம் நமஸ்காரங்கள். அவன் திருவருளாலே பிறப்பை யறுத்தேனென்றுந் தீபற; தாயுமானவர் தருவதைக் காண்க.

"ஆசைச் சுழற்கடலில் ஆழாமல் ஐயாநின்
நேசப் புணைத்தாள் நிறுத்தினை ஆகாதோ"
ஆகாதோ என்கண்ணி (12). (2)

618. இல்லையுண் டென்று இயம்பவொண் ணுதவன்
நல்லூரில் வந்தானென் றுந்தீபற
நானே யவனென் றுந்தீபற.

ஊழ்வினைப் பழக்கத்தால் மனம் ஒன்று விட்டொன்று பற்றி நினைக்கும்; அம்மனம் இவ்வுலகத்தில் வழி வழியாக; எவற்றுடனுஞ் சேரும் திருவடி மெய்யுணர்வின்கண் நினைத்துத் திகழ்வோர் சிவனடியாராம் பெரியராவர். அவர் சார்பினைத் திருவருளால் பெற்று விளக்க மெய்திச் சுட்டியுணரப்படும் இல்லையுண்டென்னும் பொருட்களனைத்தும் நிலையில்லாத பொய்ப் பொருட்களென உணர்வினலு ணர்ந்தறிந்து அவற்றின் கண்ணுள்ள பற்றினை விட்டு நீங்கி திருவடி மெய்ப்புணர்ப்பாம் புணையைத் தந்தவன் நல்லூரில் வந்தான். அந்த ஐயமற்ற அதிவருணர்க் கெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனியெனத் திகழும் மெய்யன் (579). [அதில் தாயுமானவர் 'ஐயமற்ற அதிவருணர் ..'' எனும் பாட்டுக் காண்க] ''நானே அவன்'' எனு முண்மையையும் அவன் திருவருளால் கண்டேன். (616).

தாயுமானவர் ஐயவாதனையைப் பற்றித் தருவதைக் காண்க.

ஐயவாதனைப் பழக்கமே மனமினை வதுதான்
வையமீதினிற் பரம்பரை யாதினும் மருவும்
மெய்யில் நின்றெனிர் பெரியவர் சார்புற்று விளங்கிப்
பொய்ய தென்பதை யொருவிமெய் யுணருதல் போதம்.
தாயுமானவர் ஆசையெனும் (29) (3)

619. ஈர்த்தென்னை யாண்டவன் எழிலாரும் நல்லூரிற்
காத்தெமை யாண்டானென் றுந்தீபற
கருணைக் கடலென் றுந்தீபற.

முன் என்னை தேரடியில் கண்டபோது ஒருநொடியளவில் அளவு கடந்த இன்பந்தேக்கி பின்னும் ஐயமற்ற அதிவருணர்க் கெல்லாம் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் திகழும் மெய்யன்பன் எனும் நிலையை தம்மறிவாலுணர்ந்தறிய நம்முன் தாமும் ஒன்றுகவே நின்றுணர்த்தி வைத்த கருணையுருவான கடவுளே நல்லூரில் எழுந்தருளியவன்; என் ஆசான் என்றுந்தீபற. ஈற்றில் சாயுச்சிய பதவியடைந்தபோது (514). சொல்ல முடியாத தீர்ப்பு நமக்கு அளித்தனன் (516). (4)

620. உளவறிந் தெல்லாம் உன்செய லென்பார்க்கு
அளவில்லா ஆனந்தனென் றுந்தீபற
ஆசை ஒழிந்ததென் றுந்தீபற.

மெய்ந்நூல்களின் உள்ளம் போன்று காணப்படும் உண்மைகளை நின்திருவருளால் உணர்ந்து உலகிடைக் காணப்படும் எவ்வகைச் செயலும் நின் திருவருட் செயலாமென, வினையின் நிகழ்வால் விளையும் வினைப்பயனெனு மம்பலத்தே வினைமுதலாம் முதல்வனின் செயலாமென, உணர்ந்த மெய்யுணர்வினர்க்கு அளவில்லாப் பேரின்பப் பெரும் பேற்றை அளித்தருளின கருணையே யுருவான ஆனந்தமா கடலே! உன்னுடைய கடல்போலும் ஆனந்தத்துக்கு உலகியலின்பம் ஒருதுளிநீர் போலாகுமே அத்தகைய சிற்றின்ப ஆசைகளெல்லாம் ஒழிந்தனவே தாயுமானவர் தருகிறார் காண்க.

உளவறிந் தெலாம் நின்செய லாமென வுணர்ந்தோர்க்
களவிலானந்தம் அளித்தனை அறிவிலாப் புன்மைக்
களவு நாயினேற் கிவ்வணம் அமைத்தனை கருத்துத்
தளரும் தன்மையிங் காரொடு புகலுவேன் தக்கோய்

(தாயுமானவர் (25) எனக்கெனச் செயல் 2) (5)

621. ஊரும் பேரும் இல்லான் உவந்தெனைத்
தாயுய்வந் தாண்டானென் றுந்தீபற
சஞ்சலந் தீர்ந்ததென் றுந்தீபற.

பிறப்பின்மையால் தனக்கென ஓர் ஊரில்லாதவர் பெயருமில்லாதவர். தாயுமானவர் ''ஊருமிலார் பேருமிலார் உற்றோர் பெற்றோருடனே யாருமிலார்'' என்று கூறுகிறார். ''பூதங்கள் தோறும் நின்றுயெனில்'' என்று மாணிக்கவாசகர் கூறுவதுபோல் ''ஆருயிர்தோறு மதுபதுவாய் நின்றெளிந்த எம்பெருமான் நான் முன் வேண்டியழுத

காரணத்தாலோ, என்னை, நல்லூரில் தானாக ஆசானாக எழுந்தருளி வந்து, அருள் தந்து என்னை ஆண்டான், சஞ்சலந்தீர்த்தென்னை திடந் தந்து சாயுச்சிய பதவியடைய வைத்துப்பிறப்பை யறுக்க அருளினன்

622. எல்லா வுலகமு மான பரம்பொருள்
நல்லூரில் வந்தானென் றுந்தீபற
நாமறி யோமென்ற ருன் உந்தீபற.

வையத்தின்கண் நிகழ்வன யாவும் சிவன் திருவருட்செயலே என்று அருளால் உணர்ந்தும், எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனைக்கும் அருட்கண்ணாக விளங்கும் பரம்பொருள் என்னானாக உருத்தாங்கி நல்லூரில் வந்தானென்றுந்தீபற. இறைவன் நவநவமாய் வருஞ்சோதி (403) நாமறியோம். சிவ சிவ என்று தினம்பாடி கவன மாய்க் கருமத்தை யாற்றி அவனைநாம் காணுவோம் (403) (7)

623. ஏட்டி லெழுதிக் காட்டவொண் ணாதவன்
நாட்டிற் குருவாணன் உந்தீபற
நமக்குக்குறை வில்லையென் றுந்தீபற.

யாண்டும் எவ்வகைத்தும் தனக்கொப்புப் பிறிதில்லை யென்று நமக்குணர்த்தியருளியும், தானும் நானும் புணர்ந்து நிற்கும் அந்த நிர் விகற்ப சமாதியில் நிர்க்குண பிரமமாக விளங்குபவன், நிலைப்பாலோ சொற்களாலோ எழுதிக் காட்டவொண்ணாதவன், இந்த மண்ணுலகில் நல்லூரில், நம் ஞானகுரவனாக உருத்தாங்கி வந்து என்னை, அருள் தந்து ஆண்டனன் என்றுந்தீபற. நானும் அவன் திருவருளால் பிறப்பறுத் தேன், எனக்குக் குறை ஒன்றுமில்லை. அவனும் நானும் பிரிவற்றிருக்கும் நிலையை, என்னுடைய ஒளிபோய் பேரொளியாகிய அவனுடன் ஒடுங் கும் நிலையை, நானடைந்தேன் என்றுந்தீபற. (8)

624. ஐம்புல னைந்தையும் ஆட்கொள்ள வல்லவன்
அன்பன்நல் லூரானென் றுந்தீபற
ஐயமொன் றில்லையென் றுந்தீபற.

ஐவரென்று சொல்லப்படுகின்ற பொறிகளாகிய கொடிய வேடர் களை முற்றும் ஒழிய க் குரங்குப்பிடியாய் எவ்விதத் துன்பத்திலும் என்னை விட்டுவிடாமல், தானும் என்னுள் என்றென்றும் நின்று, அருள் தந்து வழிகாட்டிய மெய்யன்பன், நல்லூரான்னென்றுந்தீபற. ஐயவாதனை (518) ஒன்றுமில்லாது என்னைத் தானும் நானுமொன் றென்னும் திடம் தந்தென்னையாண்டான் என்றுந்தீபற. (9)

625. ஒப்புயர் வற்றவன் எப்போது மினியவன்
அப்பன்நல் லூரானென் றுந்தீபற
ஆட்சேபம் இல்லையென் றுந்தீபற.

மகாதேவன், கௌரியின் பிரியன், உவமை முதலிய எல்லா அலங்காரங்களுடன் கூடியதாயும், பாம்பை ஆபரணமாகக் கொண்டவராயும், புலித்தோலாடை வாகனமோ பெரிய காளைமாடு ஆகியனவுடையவராயும் விளங்குபவன். உன்னுடைய பலனுடன் இராமன் சமுத்திரத்தில் அணைகட்டினான், அகஸ்தியமுனிவர் கைத்தலத்தால் மலையை யமுக்கினர், மனம் செல்லக்கூடிய இடமெங்கும் எப்பொருளிலும் நீர் நீக்கமற வியாபித்திருக்கிறீர், உம்முடைய எண்குணங்களும் போற்றத்தக்கது. அத்தகைய ஒப்புயர்வற்ற என்றும் கருணையே உருவான எம்மிறைவனே நல்லூரில் ஆசானாக உருத்தாங்கி எழுந்தனன், திடந்தந்து என்னை ஆட்கொண்டவன்; (10)

625. ஓங்கா ரத்தின் உட்பொரு ளானவன்
ஆங்காரம் தீர்த்தானென் றுந்தீபற
அழிந்தது மாயையென் றுந்தீபற.

மனம் போகுமிடமெங்கும் எப்பொருளிலும் அருட்கண்ணாக விளங்கும் எம்பெருமானே, தானத்துள்ளே சதாசிவன்; ஓம் எனும் உண்மையாக யாவும் உலகும் ஒன்றாய் விளங்கும் [165, 303] அந்த ஓங்காரத்தின் உட்பொருளே ஞானப்பொருளான நற்சிவன்; என்னுடைய நான் எனும் ஆணவ முனைப்பை நீக்கியாண்டு அருள் தந்தனன்; மாயை விட்டு நீங்க, அறிவை அறிவாலறிந்தேன்; பிறப்பறுத்தேன். (475) (11)

627. ஒளவிய நெஞ்சத்தால் அறியவொண் ணுதவன்
செவ்வியருள் தந்தானென் றுந்தீபற
செல்லப்ப தேசிகனென் றுந்தீபற.

ஐவரென்று சொல்லப்படும் பொறிகளாகிய கொடிய வேடர்களால் தூண்டப்பட்டு அங்கும் இங்கும் அங்கலாய்த்த மனத்தவரால் அறியவொண்ணுதவன், நாளோலும் அவ்வேடர்களை, இறைவனிடம் உள்ளத்தைக் கொண்டு செல்லும் நற்பரியாகச் சமைத்து, அவன் திருவருள் கொண்டு அவனையடையச் செய்த செவ்விய தூய்மையான மனத்தகத்தானே, நமஸ்காரம் செய்வோம். என்னுள் நின்று, தூய்மையானவன், தன்னை அணைந்தவரையும் துய்ப்பிக்கும் ஞானகுரவன், செல்லப்பனெனுந் தேசிகன், அவ்வண்ணம் ஞானவருள் தந்து, என்னைக் காப்பாற்றினன்.

"நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன மதுரையெல்லாம் பிச்சதேற்றும்பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய வரிய பரஞ்சோதி செய்வ தொன்றும் அறியேனே"
(மாணிக்கவாசகர் ஆனந்தமாலை 7) (12)

112 திருவுந்தியார் II

628. சிவனடி யார்கள் சீராய் வளர்க்கும்
சிவதொண்டன் வந்தானென் றுந்தீபற
சிவமே நாமென் றுந்தீபற.

'சிவதொண்டன்' என்று வாசித்த நேயர்களாகிய சிவதொண்டர் களையும், அவர் சிறப்புடன் ஆதரிக்கும் பத்திரிகையையுங் குறிக்கிறார்: (பதிகம் 2. காண்க) அறவழி நிற்றலே சிவதொண்டு (291) அறவழி நிற்பவன் (492) இருந்த இடத்தினில் எல்லாம் பார்ப்போம். பொருந் திய வண்ணம் நாம் வாழ்வோம் (16) வினைமுதலாம் முதல்வன் ஆரு யிர் அனைத்தையும் அவரவர் வினைப்பயனுக் கேற்றவாறு பொருத்தி வைக்கப் பொருந்தியவாறே நாம் அறவழி; கொல்லாவிரதம் பூண்டு நின்று சிவதொண்டு செய்து சிவமே நாமென்று காணும் தொண்டர் நாம் என்றுந்தீபற. மாணிக்கவாசகர் பிரார்த்தனைப் பத்தில் ''நீ என்னை ஆட்கொண்டபோது உன்னுடைய தொண்டர்களுடன் கூடி நாமும் சிவமாகிக் களிப்புற்றிருந்தேன்'' என்று பாடுகிறார் காண்க:

கலந்து நின்னடியா ரோடன்று வாளாகளித் திருந்தேன்
புலர்ந்து போனகாலங் கள்புகுந்து நின்றதிடர் பின்னுள்
உலர்ந்து போனேன் உடையானே உலவா இன்பச் சுடர்காண்பான்
அலந்து போனேன் அருள்செய்யாய் ஆர்வங்கூர அடியேற்கே

பிரார்த்தனைப்பத்து (1) (1)

629. பவவரு டத்துப் பன்னுமார் கழிமதி
சிவதொண்டன் வந்தானென் றுந்தீபற
தீவினை யில்லையென் றுந்தீபற.

(2)

உலகில் வாசகநேயர் மூலம் 'தூநெறி கண்ட சுவடு நடுவெழும்' என்ற திருமூலர் தரும் உண்மை விளங்க சிவதொண்டர் அறவழி நின்று வாழவும், தர்மம் ஓங்கி வளரவும் பத்திரிகை பவவருடத்து மார்கழியில் இறைவன் திருவருளால் தொடங்கிற்று; தர்மம் வளரவே ''வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனு மோங்குக ஆழ்க தீயதெல்லாமர நாமமே சூழ்கவையக முந்துயர் தீர்கவே'' என்னும் தேவாரத்தால் நாம் அறிவதுபோல் தீவினை குறைய அறம் பெருகும், குடியுயரும் கோனுயரும், என்றுந்தீபற. (2)

630. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றான் வந்தானென் றுந்தீபற
நித்தியா னந்தனென் றுந்தீபற.

'செய்யுங்கர்மத்தை இறைவனுக் கர்ப்பணமாகச்செய்' என்கிறார். நிஷ்காமிய கர்மமேயது. காமிய கர்மம் இருவினைக் கீடாக்கும். சிவ தொண்டனருளும் தெய்வ அறிவு கொண்டு தொண்டர்கள் ஐம்பொறி களின் வழிச்செல்லாமல் நின் திருவருள் வழிநின்று அறவழி நின்று (492) கொல்லா விரதம் பூண்டு (477) சும்மா இருக்கும் அகமுடை யானுகி, மாயையுலகு எனும் பொய்யுலகு மனத்தை விட்டகல, இளமை இன்பமாகிய சிற்றின்பம் விட்டகல, (140) உள்ளம் பெருங் கோயிலாகவும், உயிர் சிவலிங்க வடிவாக விளங்கவும் (608) அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் என்றும் மகிழ்வுறும் ஆன்மா (332) அழியா இன்பக் கடலில் ஆழ்ந்து கிடக்கும் என்றுந்தீபற. தாயுமா னவர் ஐம்பொறிகளைக் கொண்டு சேவை செய்தல்எனும் பொருளுடன்

"ஐவரோடுங் கூடாமல் அந்தரங்க சேவைதந்த
தெய்வ அறிவே சிவமே பராபரமே" (பராபரக் கண்ணி 252) இல்
தெய்வ அறிவு சிவமாக ஒன்று பட்டு விளங்கும் என்கிறார். (3)

631. மனத்துக்கண் மாசிலா மாதவத் தோர்தம்
இனத்தவன் வந்தானென் றுந்தீபற
ஈடேறி னேமென் றுந்தீபற.

[முன்பாட்டு விளக்கம் தொடர] ஐம்பொறிகள் இறைவன்பால் செல்ல நிஷ்காமிய கர்மம் புரிந்து அறவழி நின்று கொல்லாவிரதம் பூண்ட மாசிலாத பெருந்தவத்தினையுடைய அறிஞர் உள்ளம் 'அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நெறியாம் நீடருள் நந்தி ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம் (365) எனும் இனத்தவன் மனத்துள் வந்தான்' என்றுந்தீபற; உள்ளம் பெருங்கோயில் உயிர் சிவலிங்க வடிவாக விளங்க (608) நிட்டை கூடியே தில்லைத் தரிசனங் கண்டேம் ஈடேறினேம்" என்றுந்தீபற.

தாயுமானவர் இறைவன் தண்ணளி வாய்ந்த உள்ளம் என்று பாடுகிறார்.

"சந்ததமும் நின்கருணை சாற்றுவதல்லால் வேறு
சிந்தை யறியேன் உன்தன் சித்தம் பராபரமே"

(பராபரக் கண்ணி: 255)

ஈடேறின உள்ளம் குழந்தையும் தாயுமாக இறைவனுடன் விளையாடும் இயல்புடையது என்கிறார்: (4)

632. அறவாழி அந்தணன் ருள்சேர்ந்த தொண்டன்
பிறவா னிறவானென் றுந்தீபற
பிரமமே நாமென் றுந்தீபற.

[முன்பாட்டு விளக்கம் தொடர] நெறி நின்று நிட்டை கூடியே தில்லைத்தரிசனம் கண்ட தொண்டன் இறைவனுடைய திருவடிப்பேறு பெற்றவன். அவன் ஜீவன் முத்தனாக சாயுச்சிய பதவியடைந்தவனாக (514) தாயின் மடிமீது விளையாடுங் குழந்தைபோல் உலகத்தோருடன் கூடி அன்புடன் வாழ்ந்து பிறப்பறுத்து சொல்லமுடியாத எம் பெருமான் தீர்ப்பாக (516) இறைவனும் தாமும் ஒன்றுபட்டு பிரமமே நாமென்று வாழ்வான். (5)

113 திருவுந்தியார் III

633. உண்டில்லை யென்று சொல்லவொண் ணாதவன்
எங்கள்பெரு மானென் றுந்தீபற
எல்லா மவனென் றுந்தீபற.

வாழ்வினைப் பழக்கத்தால் மனம் அலைகின்றது. அலையாத மனம் இவ்வுலகில் வழிவழியாக எவற்றுடனுஞ் சேரும் திருவடி மெய்யுணர்வின்கண் திகழும் சிவனடியார் சார்பினைப் பெற்று, பொது நடம் புரியும் ஸ்ரீ நடராசன் கருணைவெள்ளம் பெருக எல்லாம் அவன் செயலே, எல்லாம் அவனேயாம் எனுமுண்மை விளங்க, சுட்டியுணரப் படும். 'இல்லை உண்டு' என்னும் மாயாகாரியப் பொருட்கள் நிலையில்லாதன எனும் சாதனை கைக்கொண்டு (618), அவற்றின் பற்று நீங்க 'உண்மை முழுதும்' எனும் எம்பெருமானே (519) நிலையுள்ள பொருள் என்றுந்தீபற. அன்றி ஒன்றில்லை இன்றி நீயில்லை; ஏகனானேகன் (578) (சிவஞானசித்தியார் பாட்டுங்காண்) எல்லாருமீசனிடத்தில் காண், எல்லாரிடத்திலு மீசனைக் காண் எனும் பொருள் விளங்க (476) எல்லாருமவனே என்றுந்தீபற: (1)

634. காண்பான் காட்சி காட்சிப் பொருளுமாய்த்
தோன்றுத் துணையா முந்தீபற
சுரிகுழல் பங்கனென் றுந்தீபற.

பாவந்தோய்ந்த ஆன்மா ஆத்மனாக விளங்கும் (373) ஆன்மாவே மாயையிருள் நீங்க, அஞ்ஞான இருள் தம்மைவிட்டு நீங்க தானே ஆத்மன் என்று உணரும்; தானும் இறைவனும் ஒன்றுபடும் நிலையைத் தில்லைத் தரிசனத்தில் கண்டு, திழைத்து உலகும் தானும் பரசிவான்மாவாகிய அம்மையப்பர் எனும் சோதியில் கண்டின்புறும் பரசிவ வணக்கஞ் செய்து (494) அவனே சொல் வடிவான, நாதவடிவான, அம்மையை இடப்பாகமாகக் கொண்டவன், என்றுந்தீபற. (2)

635. புன்னகை யாலே புரமூன் றெரித்தவன்
என்னைவந் தாண்டானென் றுந்தீபற
எனக்கொரு குறைவில்லை யுந்தீபற.

[முப்புரமெரித்த புராணக்கதை (13) இல் காண்க] தாரகாக்ஷன் கமலாக்ஷன் வித்யுன்மாலி என்ற மூன்று அசுரர்களும், தம் இரும்பாலும், வெள்ளியாலும், பொன்னாலும் செய்யப்பட்ட மூன்று அதிசய பட்டினங்கள், ஆகாயத்தில் பறக்கும் பட்டினங்களில் வாழ்ந்தார்கள்: தண்ணளி வாய்ந்த எம்பெருமான் தேவர்களின் வேண்டுகோளுக் கிணங்கி, நாலுவேதங்களாகிய குதிரைமீது ஒருகாலும், சேற்றில் புதைத்த தேராகிய பூமியைத் தூக்கி நின்ற விருஷப உருவமான விஷ்ணு பிரானில் ஒருகாலுமாக, நின்று மூன்று பட்டினங்களையும் உற்று நோக்கினராம். மூன்றும் ஒன்றுசேரப் புன்னகை என்னும் ஒரு அம்பால் மூன்றையும் ஒரே க்ஷணப் பொழுதில் எரித்தனராம் (13): திருமூலர் இவற்றை விளக்கத்தருகிறார் காண்க.

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே. (திருமந்திரம் 343)

சித்தத்திலிருந்து புத்தி சக்தியைத் தூண்டும் பரஞ்சோதியாகத் தியானித்து புத்தியாகிய கன்னிகையை பார்வதியுடன் கூட இறைவனுக்குத் தொண்டு செய்ய நான் அர்ப்பணஞ் செய்தேன்: மும்மலமும் என்னை விட்டு நீங்கின. முப்புரஞ் செற்றனன்:

"அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நெறியாம் நீடருள்
பராநந்தி ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம்" (மூலர்)

"சித்தமறியாதபடி சித்தத்தினின்றிலகு திவ்விய தேஜோமயத்தை"
(தாயுமானவர்)

முப்புரமு மெரியவே ஆணவமலம் விட்டு நீங்க முப்பதமுங் கடந்து ஞானபதமடைந்த மெய்யன்பனுக்கு (355; 356;) ஒரு குறைவுமில்லை: (3)

636. எல்லை யிலாக்கருணை யுடைய எம்பிரான்
நல்லை நகரானென் றுந்தீபற
நாமறியோ மென்ரு னுந்தீபற.

தொழுமடியார் பழவினைகள் கழுவித்தள்ளி துரியநிலை அருளவல்ல தண்ணளி வாய்ந்த கருணைமுகில் போலும் முழுமுதல்வன் எம்பெருமான், நல்லையம்பதியில் வீற்றிருக்கும் எம்பிரான் (522) என்றுந்தீபற. அவனே முழுது முண்மையானவன், எப்பொருளிலும் உயிரில்பொருள் உயிருள் பொருள் எப்பொருளிலும் அருட்கண்ணைக விளங்கும் மெய்ப்பொருளானவன், இனிமேல் விளைவ தொன்றறிகிலேன், நாமறியோமென்ரு ன், உந்தீபற: (4)

637. மாமது ரைத்தெரு வளையல்கொண்டு வந்தான்
சோமசுந் தரனென் றுந்தீபற
சுன்னகத் தானென் றுந்தீபற.

(திருவிளையாடல் புராணம் வளையல் விற்றபடலம்) தேவதாரு வனத்துள் இருடிகளுடைய கன்னியர்களின் கற்பைக் காட்டி அழகிய பிக்ஷாடனராகிய சிவவேடத்துடன் எழுந்தருளி வந்து எதிர் கொண்டார் எம்பெருமான். பிக்ஷாடன மூர்த்தியுடைய பேரழகைக் கண்டு வளர்ந்த காமத்தால் பரவசங்களாய் நின்றார்கள். சிவபெருமான் அவர்களை ''இவ்வாறே மோகிப்பித்துக் கருமமே கருத்தா'' என்று மீமாஞ்சகர்களுடைய செயலை உலகத்தார்களுக்கு உணர்த்தி மறைந்தருளினார். சாபத்தினால் பின் மதுரையில் பிறந்த வைசியப் பெண்களைக் காப்பாற்றும் வண்ணம் பின்னும் அழகிய வளையல் விற்கும் வணிகராக எழுந்தருளி வந்து அவர்களுடைய கைகளைத் தீண்டி வளையல்களை இட்டு அவர்களுடைய சாபத்தை நீக்கியருளினார். எம்பிரான் அந்தப் பெண்களுக்கு இடபாரூடராகக் காட்சியளித்தனர். (விபரமாகப் புத்தகத்தில் காண்க) இவ்வண்ணம் சோமசுந்தரக் கடவுள் உருத்தாங்கி எழுந்தருளினன். சுன்னம் = பூச்சியம்., சுன்னை = பூச்சியநிலை. ''சோமசுந்தரன் பாதங்காணுவோம் சும்மா இருக்கின்ற சூட்சம் பேணுவோம்'' என்று சும்மா இருக்கும் நிலையைத்தருகிறார்சுவாமிகள்: ''மௌனியாய்ச் சும்மா விருக்க நெறிகூட்டினை'' என்றும், ''சித்த மௌனஞ் செயல்வாக்கு எலாம் மௌனஞ் சுத்த மௌனம் என்பால் தோன்றின் பராபரமே'' என்றுந்தாயுமானவர் தருகிறார். மேலும் திருமூலர் ''வெளியில் வெளிபோய் விரவிய வாறும் அளியில் அளிபோய் அடங்கிய வாறும் ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறுந் தெளியும் அவரே சிவசித்தர் தாமே'' என்று எல்லாம் ஒடுங்கும் நிலையைக் குறிக்கிறார். இந்தச் சூனிய நிலையில் நாம் தரிசிக்கும் நம்மிறைவன் சுன்னகத்தா னென்றுந்தீபற. (5)

638. குருந்த மரத்தடியில் குருவாக வந்தவன்
இருந்தபடி இருந்தானென் றுந்தீபற
இமையோர்கள் தேவனென் றுந்தீபற.

பக்குவமடைந்த மெய்யன்பர்க்கு அருள்காட்டும் நம்மிறைவன் மாணிக்கவாசகருக்குக் குருந்த மரத்தடியில் தம்சிவனடியார் பலர் மத்தியில் சிவகுருவாக எழுந்தருளிவந்து ஆட்கொண்டவர். அறிஞராய் பேரறிவுடன் ஞானவுணர்ச்சியுடன் தோன்றிய மாணிக்கவாசகருக்கு அறிவுவளரப்பண்ணி மெய்ஞ்ஞானவுணர்ச்சி ததும்ப எழுந்தருளின தேவர்க்குத் தேவனாய் விளங்கும் இமையோர் தேவன் என்றுந்தீபற.

திருஞானசம்பந்தர் தம் ஞானவுணர்ச்சி ததும்ப, ஞானவுணர்ச்சியினால் முப்புரஞ் செற்றமை காண்பிக்க ஞானத்திரளாய் நின்ற பெருமான் (1-69-3) என்றும், ''இழைத்த விடையான் உமையாள் பங்கன் இமையோர் பெருமானூர் (1-69-4) என்றும், (இரண்டுபாட்டையும் 54 இல் காண்க) உருவில் திகழும் உமையாள் பங்கன் இமையோர் பெருமானூர்'' (1-69-5) பாட்டை 51 இலுங் காண்க) என்றும், ''இமையோர் பெருமானூர்'' அறிவு வளர்ச்சியினாலே தம்மை, சும்மா இருக்கும் நிலையடையச் செய்து, முப்புரஞ் செற்றமை, காண்பிக்கிறார். (6)

சும்மா இருக்கும் நிலையில் ஆற்றல் வடிவான அம்மையே செயல்புரிய, எல்லாம் அவன்செயலாக, இருந்தபடியே இருந்தான் என்றுந்தீபற.

639. மாமனுய் வந்து வழக்குரைத் தானெங்கள்
சோமசுந் தரனென் றுந்தீபற
சோதி சொரூபனென் றுந்தீபற.

உள்ளபடியே யாதுமென வுணர்ந்த பக்தன், புத்தியாகிய வாய்க்கால் வழியே சிவானந்த வெள்ளம் பெருக (12) ''வைத்த பொருள் உடல் ஆவி மூன்றும் உன்கைவசம்'' என்று தாயுமானவர் கூறுவது போல், மும்மலனஞ் சாதித்து உன்மத்தம் பித்துப் பிடித்தவர் போல் மூடபக்தியுடன் இறைவன் வழிநின்று சிவிப்பவர் பலருண்டு; அவர்களில் தனபதி என்னும் செட்டியாரும் அவருடைய தங்கையும் இருவர் உண்டு. தங்கைமகன் தனபதியின் மருமகனே தனபதிக்குப் பிள்ளையில்லாதபடியால் அவனுடைய பொருளுக்கு உருத்தானவன். தனபதி அவற்றைக் கொடுத்து விட்டுத்தான் தவஞ்செய்யக் காட்டுக்குப் போனன். தாயத்தார் வலிமையோடு அவற்றை யெல்லாங் கவர்ந்தார்கள். வழக்கில் தருமசபை முன் சோமசுந்தரன் மாமன் தனபதிபோல் உருத்தாங்கி வழக்குரைத்து பொருளை மீண்டும் மருகனுக்குக் கொடுத்தான் (123) அம்புவியில் மாமனுய் வழக்குரைத்த தெய்வம், சோமசுந்தரன். ஈற்றில் பக்தன் அறியா அறிவில் அவிழ்ந்தேகசித்தமாய் நிட்டைகூடியே ஜோதியில் தன்னைக்காணும் சோமசுந்தரன் மீனாட்சியம்மை ரூபமேயது. (7)

640. வாணிச்சிக் காக மண்சுமந் தடிபட்டான்
பாணினிக் கருள்செய்தான் உந்தீபற
பரம்பொரு ளாமென் றுந்தீபற.

வைகையாறு பெருக்கெடுத்து ஊரை யழிக்காமல் கரையை யடைக்க ஒவ்வோர் குடிக்கும் ஒருபங்கு அளந்து விடப்பட்டது. முன் பாட்டில் கூறிய உண்மை தரும், பித்துக்கொண்ட பக்தியுடன் விளங்கிய, வந்தி எனும் பிட்டு வாணி ஒருத்தி, பிள்ளை, புருஷன், மற்றும் சுற்றம் ஒன்றும் இல்லாமல், தான் விற்கும் பிட்டை முன் ஒருபங்கை

சோமசுந்தரனுக்கே நைவேத்தியமாசப் படைத்தும், பின் மிகுதியை விற்றும் தன் ஜீவியத்தை நடாத்தி வந்தாள். அவளுக்கும் அளந்து விடப்பட்ட பங்கை அடைக்கச் சோமசுந்தரக் கடவுளே உருத்தாங்கி கூலியாளாக, மண்வெட்டியுங் கூடையுங் கொண்டு அவள் பங்கை ஏற்றுக் கொண்டார். வந்தி, தான் விற்கும் பிட்டையே கூலியாகத் தருகிறேன் என்றாள். கூலியாள் ''தாயே பெரும் பசியால வருந்து கிறேன்; உதிர்ந்த பிட்டையெல்லாம் இடுவாயாயின் அவற்றை உண்டு இளைப்பாறி பின் உனக்கு அளந்து விடப்பட்ட பங்கை அடைப்பேன்'' என்றார்; ''பிட்டு நேர் பட மண்சுமந்த பெருந்துறைப் பித்தன்'' தனக்குக் கொடுக்கப்பட்ட பிட்டை உண்டு பின் ஆற்றங்கரையை அடைந்து ''தான் வந்தியின் கூலியாள்'' எனப் பதிவு செய்தார். ''உல்லாசமான நடையுடையோனே'' (324) வேலைசெய்வதும் ஆற்றில் நீந்துவதும் உதிர்ந்த பிட்டைப் போய்உண்பதுமாய் 'மன்மதன்' போல் அழகுவாய்ந்த கூலியாள் உலாவினான்; மற்றும் கரையடை பட்டது. இப்பங்குஅடைபடாது கிடந்தது: அரசனுடைய ஏவலா ளர்கள் முறையிட அரசனே நேரில் வந்து கண்டு விளவினன். பித் தனைப்போல் நிற்கும் கூலியாளைப் பொற்பிரம்பால் அடித்தான். ஒரு கூடைமண் கொட்ட வரம்பு உயர்ந்து மற்றும் கரைபோல் காணப் பட்டது: அவர்மறைந்தார், அடி எம்பெருமானுக்கு விளங்கும் உயிரில் பொருள் உயிருள்பொருள் எல்லார் முதுகிலும் பட்டது. (திருவிளை யாடல் புராணத்தில் காண்க) ''பாணினி'' எனும் முனிவர் நாலா யிரம் வருஷங்களுக்கு முன்னர் 'காந்தார' தேசத்தில் 'சலாது' நகரத்தில் பிறந்து வித்தியாப்பியாசஞ் செய்து வருகையில், மந்த மதியுடையராகக் காணப்பட்டமையின், குருவாலும், சகபாடிகளாலும், அவமதிக்கப்பட்டு தள்ளப்பட்டு, மனம் வருந்தி இமயமலை நோக்கிச் சென்று தவம் கிடந்து அருள் பெற்று ''இறைவனுடைய அருளினால் சகல சாஸ்திரங்களுக்கும் மூல சாஸ்திரமாகிய 'மாகேஸ்வர சூத்தி ரோபதேசம்' பெற்றுக் கலையெல்லாம் வல்லவரானார்'' உலகியற் பொருட்களை யெல்லாம் முற்றுமுணர்ந்துறிந்தார். பரசிவ வணக்கத் தாலே தந்தை பெயர் பாணினி; தாயின் பெயர் சாகுனி. அவர் மாகேஸ் வர சூத்திரங்களை ஆதாரமாய்க் கொண்டு 'சமஸ்கிருத வியாகரணப் பாணினியம்' எனும் நூலைச் செய்தார். எட்டு அத்தியாயங்களும் மூவாயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறு சூத்திரங்களையு முடைத்தாயிற்று. பாணினி தாம் செய்த வியாகரணத்தைக் காஷ்மீர தேசத்தரசனாகிய காநிஷ்க மகாராஜன் சபையில் அரங்கேற்றித் தன்னை முன்னே அவமதித்த புலவர்களையெல்லாம் வெற்றிகொண் டார். முற்றுமுணர்ந்த பெரிய பண்டிதரென்று திசையெல்லாம் புகழ் பறந்தது. இவரின் திருவுருவைச் சிலையில்லமைத்தும் பிரதிஷ்டை செய்து பூஜித்தும் வந்தவன் காநிஷ்க ராஜன் (மதுரைப் பேரகரா தியில் முற்றுங்காணலாம்)

(8)

641. தக்கன் வேள்வி தகர்த்தவன் கூடற்
சொக்க நாதனென் றுந்தீபற
சுகமே சொரூபமென் றுந்தீபற.

தக்கது சிறிதும் அறியாத தக்கனது வேள்வியில் அவன் ஐம்புல வேடர் கையிலகப்பட்டு நான் எனும் ஆணவ முனைப்பும் கொண்டு தண்ணளி வாய்ந்த எம்பெருமானை மறந்து தானே உலகுயிர்யாவு மென மதங் கொண்டு செய்த வேள்வியில் எழுந்த 'எச்சன்' இந்திரன் தோளை நெரித்தும், சூரியன் பல்லும், அக்கினி கையும், பகன் எனும் மற்றொரு சூரியன் கண்ணும் இழக்கச் செய்தனன். சந்திரனைக் காலால் தேய்த்தனன். தண்ணளியில்லாத தக்கன் வேள்வி எச்சன், எச்சன் தலையையரிந்து தண்ணளி வாய்ந்த எம்பெருமான் எல்லார்க்கும் கருணை பெருக்கி இன்புறச் செய்தார். ''சும்மா இருக்கும் சுகம் உதயமாகும்: சொரூபம் சொக்கநாதனே தண்ணளி வாய்ந்த எம்பெருமான் என்றுந் தீபற:

''தக்கன் செய் பெருவேள்வி தகர்த்தா யென்றும்''
அப்பர் சுவாமிகள் (6-31-10) (9)

642. சுந்தரற் குத்தூது பரவைபாற் சென்றவன்
கந்தனைத் தந்தானென் றுந்தீபற
கருணைக் கடலென் றுந்தீபற.

சுந்தரமூர்த்தி நாயனார், உழவாரத் திருப்பணி அப்பர் சுவாமிகளாலே செய்யப்பட்ட திருவதிகையில் திருவடி சூட்டப் பெற்று, அப்பால் சென்று தில்லையில் புகுந்து தில்லைத்தரிசனங் கண்டார். இறைவன் அருள் புரிய, அவ்வாறே திருவாரூர் சென்று, தம்பிரான் தோழராக சாயுச்சிய பதவியடைந்த நிலையில் வாழ்வாராயினர். அந்நாளில் பரவையார் அவரைக் கண்டும், பின் நினைந்தும், வருந்தினர். சுந்தரர். இறைவன் அருளை வேண்டி நிற்க, இறைவன் சோதிலிங்கம் வடிவாக பரவையார்பாற் சென்று கூட்டி வைத்தார். இவற்றைச் சுவாமிகளே அடுத்து வரும் (655) இல் ''சுந்தரர்க்குப் பெண் கொடுத்த ஜோதிலிங்கம்'' என்று தருகிறார். அந்தச் சொக்கலிங்கப் பெருமான் நல்லூர்க் கந்தனை நமக்கு அருள்புரிந்தனன். கந்தனும் வள்ளிக்கு அருள் கொடுத்தவன். கருணைக்கடல் போன்றவன். முருகனே வள்ளியாகச் செயல் புரிந்தனன்; வள்ளியை மணம் புரிந்தனன்; (10)

114 திருவுந்தியார் - 4

643. ஆதியு மந்தமு மில்லா வொருவன்
ஆதியு மந்தமு மானனென் றுந்தீபற
அவனென் குருவென் றுந்தீபற.

ஆதியு மந்தமு மில்லா திருவைந் தெழுத்துச் ஜோதியாக விளங் கும் மெய்ப்பொருளானவனே!, ஆருயிர் தோறும் அதுவதுவாய் நின்று (532) அருட்கண்ணுக விளங்கும் வினைமுதலாம் முழுமுதல்வன்; வினை யின் நிகழ்வால் விளையும் வினைப்பயன் எனும் அம்பலத்தே வினைமுத லாம் முதல்வன் முழுமுதல்வன், ஆருயிர் தன்னை அவரவர் வினைப்ப யனுக் கேற்றவாறு அவர்களுடைய மலத்தை நீக்கியருள் புரியும் வண்ணம் பொருத்தி வைப்பன்; அதே படைப்பு (380) அவ்வாறு ஆதியுமந்தமு முள்ள மானிடனுக உருத்தாங்கி எழுந்தருளிய ஆதியு மந்தமு மில்லா எம்பெருமானே (373) செல்லப்பெனனும் நாமம் பூண்டு நல்லூரில் எழுந்தருளிய அடியேனின் சிவகுரு வென்றுந்தீபற. (1)

644. ஒருரு வானுன் ஈருரு வானவன்
ஆருரு வானுனென் றுந்தீபற
ஆரறி வாரென் றுந்தீபற.

[முன்பாட்டு விளக்கம் தொடர] ஆருயிர் தோறும் அதுவதுவாய் நின்று அருள்புரியும் தண்ணளி வாய்ந்த கருணையாளன் (532) எண் ணில் பல கோடி உயிர்கள் எத்தனையோ அத்தனைக்கும் கண்ணிற் கலந்த அருட்கண்ணுக விளங்கும் பராபரன், நாதமாக விளங்கும் அம்மையும் அப்பாற் பட்டவனுக இயக்கியும் புண்ணியம் பாவம் இவற் றுல் பாதிக்கப்படாமலும் தண்ணளி கொண்டு இயங்கும் முழுமுதல் வனும் எம்பெருமானும் பரசிவான்மா (575) வாகிய அம்மையப்பரா கச் சொக்கனுதனும், மீனாட்சியுமான ஈருருத் தாங்கினவன். ஆருயிர் தோறும் அதுவதுவாய் ஆருருவானவன் அம்மையுமப்பனு மாக ஈருருவானவன் மெய்ப்பொருளான ஒருருவான பரம் பொருளே; மாணிக்கவாசகர் ''மலங்கினேன் கண்ணில் நீரை மாற்றி மலங்கெ டுத்த பெருந்துறை விளங்கினேன் வினைக்கேடனேன் 'இனிமேல் வினை வதறிந்திலேன்'' என்று ''தண்ணளி வாய்ந்த கருணையாளன் (634) எம்முடைய வினைநீக்க வினைப்பயனுக் கேற்றவாறு வாழ்வில் பொருத்தி வைத்து (380) எம்முடைய மலங்கெடுத்த பெருந்துறைப் பெருமானே! இனிமேல் விளைவதறிந்திலேன்'' என்று பாடுகிறார். சுவாமிகளும் அதே பொருளே ''ஆரறிவாரென்றுந்தீபற'' என்கிறார் (435). (2)

645. ஐஞ்சு பூதமும் படைத்த வொருவன்
ஐஞ்சுபூதமு மானுனென் றுந்தீபற
அஞ்சுவதுயாது மில்லையென் றுந்தீபற.

சுவாமி விவேகானந்தர் அமெரிக்கப் பிரசங்கத்தில் யேசுநாதர் 'அ' எனும் சத்தத்திலிருந்தே உலகம் உற்பத்தியாயிற்று என்று சொன்னதாகக் கூறினர். சுவாமிகளும் சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டிடடா (475) என்று அருவுருவாம் சதாசிவம் ஐஞ்சு பூதமும்

படைத்த பொருள் அந்தக் கரணங்களாலறியப் படும் தத்துவப் பொருள் என்கிறார்; அவனே மெய்ப்பொருளாக விளங்குபவன் (643, 644) ஐஞ்ச பூதமும் படைத்தவன் ஐஞ்சு பூதமுமானவன் (முன் விளக்கம்) ஐஞ்சு பூதமும் அவனிலே ஒடுங்கும். ஐம்புலனடங்கத் திருவடித் தொண்டு செய்தும் (469) மேலும் அப்பர் தரும் பாட்டுக்களால் (592) நம்மிறைவனைத் தொழுது ஐம்புலனும் இறைவன்பால் செலுத்தி (347) அஞ்சுமடக்கா அறிவு (52, 64) என்னும் திருமூலர் தரும் உண்மை விளங்கத் தத்துவங்கள் யாவும் இறைவனிடம் ஒடுங்கித் தத்துவாதீ தனவான் புருஷன், அஞ்சுவது யாதுமில்லை. (3)

646. ஐஞ்சு மாறு மான பராபரன்
ஐஞ்சு மாறு மானனென் றுந்தீபற
ஐய மில்லையென் றுந்தீபற.

அப்பர் சுவாமிகள் 4-ம் திருமுறையில் 18-ம் பதிகத்தில் ஐஞ்சும் ஆறும் தருகிறார்:

"அஞ்சுகொ லாமவராடர வின்படம்
அஞ்சுகொ லாமவர் வெல்புல னுவன
அஞ்சுகொ லாமவர் காயப்பட் டான்கணை
அஞ்சுகொ லாமவ ராடின தாமே. (4-18-5)

ஆறுகொ லாமவ ரங்கம் படைத்தன
ஆறுகொ லாமவர் தம்மக னார்முகம்
ஆறுகொ லாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாஞ்சுவை யாக்கின தாமே. (4-18-6)

[ஐம்புலன்கள் முன் பாட்டு விளக்கங் காண்க]

முத்து மாணிக்கவாசக முதலியார் உரை தருகையில், ஆறு அங்கம் "நன்முயற்ந்த...சரிரண்டின் ஆறுணர்ந்த ஒரு முதுநூல்" (புறம்166) (1) சிக்கை - வேதங்களை எடுத்தல் படுத்தல் முதலிய இசை வேறு பாட்டால் உச்சரிக்குமாறு உணர்த்துவது. (2) கற்ப சூத்திரம்-வேதங் களிற் கூறும் கருமங்களை அநுட்டிக்கும் முறைமை உணர்த்துவது; (3) விபாகரணம்-வேதங்களின் எழுத்துச் சொற்பொருளியல்பு உணர்த்துவது. (4) நிருத்தம்-வேதங்களின் சொற்பொருள் உணர் விப்பது. (5) சந்தோ விசிதி-வேத மந்திரங்களிற் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரும் அவற்றிற்கு எழுத்து இனைத்து என்றலும் உணர்த்துவது. (6) சோதிடம் - வேதத்திற் சொல்லப்படும் கருமங்கள் செய்தற்குரிய கால விசேடங்களை உணர்த்துவது

பாட்டு (645) இல் விளக்கிய வாறே ஐஞ்ச மாறு மான பரா பரன் ஐஞ்சு மாறு முண்டாக்கினவன்; அஞ்சு மாறு மாய் விளங் குபவன், ஆறுறு தத்துவங்களும் தன்னுள் அடங்கத் தத்துவாதித னாய் விளங்கும் புருஷன் (192), தத்துபரி நாரியாகச் சமைத்தான்

(590); திரிமூர்த்தியறியச் செய்தும் திரிதோஷ மிறக்கவு மருள் புரிப வன் (115;267); எல்லாம் அவன் திருவருளே (635; ஐயம் சற்றும் இல்லை. திடந் தந்தான் எம்பெருமான் (579). ''வேதத்தின் அந்த மும்...'' என்னும் மூலர் பாட்டு (55)இல் காண்க. (4)

647. நீள நினையு மடியார் நெஞ்சில்
வாழ விரும்புவனென் றுந்தீபற
வரம்பு கடந்தானென் றுந்தீபற.

மணிவாசகப் பெருமான் ''இன்றெனக் கருளி'' என் தொடங்கும் பாட்டு (7) கோயிற்றிருப்பதிகத்தில் தரும் உண்மை விளங்க எல்லாம் அவனேயாம், எல்லாம் அவன் செயலே, எங்கும் அவனேயாம், எங் கும் அவனேடி, என்று நினைத்துருகி அவன் நினைவில் வாழ்ந்து அஞ் ஞான இருள் விட்டு நீங்க, மூப்புரமும் செற்று தில்லைத் தரிசனங் கண்ட மெய்யன்பர் உள்ளத்தே அவன் குடியிருப்பான். (493) அவ் வாறு இடர் நீக்கி யாண்டருளிய இறைவன் தம் வீடாகக் கொண்ட மெய்யன்பன் தோழனாக சாயுச்சிய பதவியடைந்த நிலையில் (514; 516) வாழ்வில் உலகியல்பு எனும் ஐம்பொறிகளின் வரம்பு கடந்து பாசபந்தக் கயிறு எரித்தவனாக வாழ்வான். (5)

648. மாற்றறி யாத பசும்பொன் மேனியன்
தோற்றம்யாவு மானனென் றுந்தீபற
துடியிடை பங்கனென் றுந்தீபற.

மூவராலும் மற்றும் மெய்யன்பராலும் பாடப்பட்டதாலும் வேறும், செம்மேனியுடையான், மாற்றறியாத பசும்பொன் மேனி யன்; அழகு வாய்ந்தவன்; குறைவு சற்று மிலாதவன்; சிவன் எனும் நாமம், தான் துய்மை யாயிருப்பது மல்லாமல் தம்மையடைந்த வரையும் துய்ப்பிக்குந் தன்மையுடையவராய் விளங்குவதால் உரித் தாயுள்ள நாமம், அவரைச் 'செம்மேனி எம்பிரான்' என்றழைக்கச் செய்வது எனும் பொருள் தர தாயுமானவர் செம்பொன் மேனிச் செழுஞ்சுடரே' என்று பாடுகிறார். உயிரில் பொருள் உயிருள் பொருள் யாவுமாய் விளங்குபவன் உமையாள் பங்கன் என்றுந் தீபற. (6)

115 திருவுந்தியார் - 5

649. எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கும் நிறைந்தவன்
உள்ளத்தைக் கொள்ளை கொண்டானென் றுந்தீபற
ஒருபொல்லாப்பு மில்லையென் றுந்தீபற.

எள்ளினுக்குள் எண்ணெய் உள்ளும் வெளியுமாய் எங்கணும் நீக்கமற நிறைந்திருப்பது போன்று, உலகுயிர்கள் எல்லாவற்றிலும் நீக்கமறப் பெருநிறைவாய் நிறைந்து விளங்கும் தண்ணளிவாய்ந்த

உண்மை முழுதுமான எம்பெருமான், சித்தமௌனம் செயல் வாக் கெல்லாம் மௌனம் சுத்தமௌனமே உருவாக அமைந்த என் உள் ளத்தைத், தன்வீடாக்கிக் கொண்டான். பரசிவான்மாவாக விளங்கும் அம்மையப்பரும் நானும் ஒன்றுபட்டுள்ளேம். தாயின்மடிமீது விளை யாடும் குழந்தைபோல், நானும் உலகும் ஒன்றேடொன்று ஒன்றுபட்டு வாழும் நிலையை யடைந்தேன். ஒருவர்க்கொருவர் தீங்கினைக்கேளாது ஒரு பொல்லாப்புமின்றி;

650. ஒன்றிரண் டென்று ஓதவொண் ணுதவன்
ஒன்றிரண்டாய் வந்தானென் றுந்தீபற
உணர்வுக் கெட்டானென் றுந்தீபற.

ஒன்றென்று சொல்லப்படுந் தன்மையும், இரண்டென்று சொல் லப்படுந் தன்மையும் இல்லாததாகி, சொல்லுதற்கும் எண்ணுதற்கும் நுண்வெளியில் மனத்தில் தோன்றும் உருவமைப்பு ஒன்றும் உண்டா காமல் எள்ளில் எண்ணெய் போல் நீக்கமற எப்பொருளிலும் வியா பித்திலங்கும் ஜோதிவடிவான முழுமுதல்வனும் எம்பெருமான், அந்தக் கரணங்களால் உணர்ந்தறியப்படும் சுட்டுப் பொருளாகக் காணப் படா, உரையிறந்தறிவினால் அறியப்படும் அறிவுப்பெருவெளியில் காணப்படும் (159 கற்பனைகடந்த) ஜோதிவடிவான கடவுள் (593) (280); அவனே ஒன்றிரண்டாய் எண்ணில் பல கோடி உயிர்கள் எத் தனையோ அத்தனைக்கும் அருட்கண்ணுக விளங்கும் பராபரம். ஒன்றிரண்டென்று ஓதவொண்ணுதவன் உரையிறந்தறியப்படும் பொருள்.

ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று
நன்றன்று தீதன்று நானென்று—நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவு மன்று
தலையன் றடியன்று தான் (திருக்களிற்றுப்படியார்) (58) (1)

651. அஞ்செழுத் துள்ளே யனைத்தையுங் காட்டியென்
நெஞ்சம் புகுந்தானென் றுந்தீபற
நித்தியா னந்தனென் றுந்தீபற

திருமாமறை மூல மந்திரமாகிய தனித்தமிழ்த் திருவைந்தெழுத் தின் உண்மைப் பொருளான சிவபெருமானை (1) சிவன் எனும் நாம முடையானை (306; 365) அனைத்தையும் அதனுள்ளே திருவருளால் காட்டி (222) அவன் திருவருளால் அனைத்தையும் அடியேனின் நெஞ்சத்தின்கண் நன்முகப் பதியவைத்து அதனுடன் இரண்டற அந்தத் திருவைந்தெழுத்தை உருவேறவே ஜெபிப்பதால் ஒன்முகி, அவனேயாகி அறிவே வடிவான அறிவுப்பொருளான அவனுகி, ஆரு யிர் தோறும் அதுவதுவாகி நின்றொளிரும் பரசிவான்மாவே அவனும் நானும் உந்தீபற;

"அஞ்செழுத்தின் உண்மை அதுவான அப்பொருளை
நெஞ்செழுத்தி ஒன்றுகி நிற்குநாள் எந்நாளோ"
(தாயுமானவர் எந்நாட்கண்ணி 15-13) (3)

652. கண்ணுக்குக் கண்ணு யிருக்கும் பராபரன்
எண்ணுக் கடங்கானென் றுந்தீபற
எல்லா மவனென் றுந்தீபற.

உடம்பை இயக்குவது உயிர்; உயிரை அறிவிப்பது இறைவன் ஒளி. காணுந்தன்மை வாய்ந்தகண் ஒருபொருளைக் கண்ட விடத்து உடனுய் நின்று காட்டித் துணைபுரியுங் கதிரவனை யொத்துத் தொன்று தொட்டு முற்காலத்திலும் இப்பொழுதும் அடியேன்பால், எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனைக்குங் கண்ணிற் கலந்த அருட்கண்ணுக, ஆதியு மந்தமுமற்றவனும், காலவெல்லையோ தேசவெல்லையோ இல்லாது, அறிவுப் பரவெளி எங்கும் (331) பரவி பரமாகாசத்திரையில் அறியத்தரும் முத்திறப் புணர்ப்பாம் பேரானந்தப் பரம்பொருளே உந்தீபற.

உணர்வார்க்கு உணர்விப்பாரும், பயில்வார்க்குப் பயில்விப்பாரும், இடத்தாலும் காலத்தாலும் செயலாலுப் கலப்பால் உடனுயிருப்பினும், பொருட்டன்மையாலும், பயனெய்துந் தன்மையாலும் வேறுகின்றனர். ஒளியுடைக் கண்களுக்கு ஞாயிறு ஒளிவிளக்க மெய்துமாறு, தன்னெளியை வேறறக் கலப்பித்து வீறுபெறக் காட்டினும், கண்ணெளி வேருய்நின்றே காணும். இதுபோல் உயிரறிவும் உயிர்க்குயிராம் உடையானறிவும் உடனின்று, உடையானறிவுணர்த்தினும் உயிரறிவு வேறு நின்றே காணும். இறைவன் காட்டுமருளும் அத்தகையதே. கண்ணுக்குக் கண்ணுயிருக்கும் பராபரன்.

"காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காணவுள் ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே"
(சிவஞானபோதம் 11) (4)

653. வேறு யுடனுய் விளங்கும் பராபரன்
ஆறுதல் தந்தானென் றுந்தீபற,
அம்மை யப்பனென் றுந்தீபற.

[முன் விளக்கம் உணர்வார்க்கு உணர்விப்பாரும். காண்க]

ஒளியுடைக் கண்களுக்கு ஞாயிறு ஒளிவிளக்க மெய்துமாறு தன்னெளியை வேறறக் கலப்பித்துக் காட்டினும், கண்ணெளி வேருய் நின்றே காணுவதுபோல், உயிரறிவும் உயிர்க்குயிராம் நாதனறிவும்

உடனின்று நாதனறிவு உணர்த்தினும், உயிரறிவு வேறுய் நின்றே காணும். இறைவன், பரசிவான்மாவாக விளங்கும் அம்மையப்பரான தண்ணளிவாய்ந்த முழுமுதல்வனும் எம்மிறைவன் எம்பொருட்டுக் காட்டும் அருளும் தற்பயன் குறித்தன்று; அடியேன்போல் அவனே வேண்டிநிற்கும் உயிர்களின் நற்பயன் கருதியே. அவ்வண்ணம் நின்று அருள்தந்து தாயும் பிள்ளையும் போன்று உலகினில் ஆறுதலாய் இன்புற்றிருக்க வேறுயுமுடனையும் நின்று உதவினன்.

"கண்ணெளி விளக் களித்துக் காட்டிடு மென்னிற முன்னம்
கண்ணெளி ஒன்று மின்றும் விளக்கொளி கலந்தவாற்றைக்
கண்ணெளி அகல நின்றே கண்டிடும் வேறு காணுக்
கண்ணெளி விளக்கின் ஜோதி கலந்திடும் கருத்தொன் றன்றே"
(சிவப்பிரகாசம் 58) (5)

654. மறவாமல் போற்றும் மாதவர்கள் மண்ணில்
பிறவா நிறவாரென் றுந்தீபற
பேயோ டாடியென் றுந்தீபற.

மண் பெண் பொன் ஆசையெனும் மூவாசையிலும் அகப்பட்டு ஐம் புலவேடர் கையில் பேய்பிடித்தவன் போல் அங்கும் இங்கும் உணர் வற்று உழன்று திரியாதே, அலையில்லாது அசைவற்றிருக்கும் கடல் போன்று, பேயைபோத்த இந்த மாயாகாரிய உலகப் பொருள்களில் ஓடும் மன அசைவு தீர்ந்து, தெளிந்தவிடத்து, எந்நாள் உனக்கடிமை யாந நானோ விழிநீர் பெருக உன்னை மறவாதே யென்றென்றும், தெளிந்துருகும் பொன்போலச் செகத்தை யெல்லாங் கரையவே கனிந்துருக்கும் மனத்தராய் சிவன் எனும் நாமம் என்றும் மறவாமல் நினைந்துருகும் மெய்யடியார் பிறவாநிறவார், பிறவிக் கடலுக்கப்பாற் பட்டவர் உந்தீபற.

உலகியலின்பத்தை அடைதற்கு உறுதுணையாக நிற்கும் காதல ருக்குள் பிரிவு ஏற்படின் மறவா நினைவோடிருந்து கூடுங் காலத்தை எதிர் நோக்குவதல்லாது, மறப்பதனால் ஏற்படும் உயிர் நீக்கத்தினை மேற்கொள்ளார். அதுபோன்றதே ஆசானை மறவாமல் பேரின்பநாளை எதிர்நோக்கி இருப்பது. (6)

மறப்பின் என்னுவன் மற்கொல் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம சுடும். (குறள் 1207).

116. குருலிங்கம்

655. சுந்தரற்குப் பெண்கொடுத்த சோதிலிங்கம்
துரைசுவாமி தனையீன்ற சொக்கலிங்கம்
கந்தரத்தில் கடுநஞ்சை வைத்தலிங்கம்
கருதுவார் தங்கருத்தில் வாழும்லிங்கம்

அந்தரத்தில் மால்விடைமேல் வந்தலிங்கம்
அழுதபிள்ளை தனக்குப்பால் அளித்தலிங்கம்
இந்தவளஞ் சேரிலங்கை வந்தலிங்கம்
எனையாண்ட குருலிங்கம் என்றுங்காப்பே

திருவடிப் பேறுபெற்று பின் தில்லையிற் புகுத்து சிற்றம்பல தரிசனஞ் செய்து இறைவனே உண்ணின்று திருவாரூர்ச் செல்லும் படிஏவ, அங்குச் சென்று எம்பிரான் தோழனுய் வாழும் நாளில் (642) பரவையாரைச் சந்தித்தார். பரவையாரும் வள்ளி முருகனே வேண்டியது பேல் சுந்தரரை வேண்டி நின்ருள். மும்மொளனஞ் சாதித்து நின்ற பரவையாருக்கு அகம் சிவலிங்க வடிவாக அருள் செய்த ஜோதிலிங்கம், சொக்கலிங்கம் சுந்தரர்க்குத் தோழியாகச் செய்தார். கந்தரம் = மது. மதுவையருந்துவது போல் சிற்றின் பத்தை வெறிபிடித்தவர் போல் அநுதிப் பிறவிக் கடலில் மாண்டு கிடப்பர் பெரும்பான்மையர். பால்கடலைக் கடைந்தபோது எழுந்த சிற்றின்பமாகிய நஞ்சை இறைவனே உண்டு மிடற்றில் வைத்திருந்தார் (140). சிற்றின்ப வாழ்வில் கடு நஞ்சை வைத்த எம்பெருமான், தன்னை நினைந்துருகுவார் மனத்தில் நின்று அருள் புரிபவர், திருவருளினுல் திருமாலே விடையாகக் கொண்டு செல்ல முப்புரங்களும் செற்ற பின் விழிநீர்பெருக்க அருள் கொடுத்துப் பாதுகாத்த லிங்கம். இந்த வளஞ்சேர் இலங்கையில் நல்லையில் செல்லப்பன் எனும் உருத்தாங்கி வந்து எனையாண்டு அருள் தந்த லிங்கம்.

117. சும்மா இருந்தேனடி - குதம்பாய்

656. ஓங்கார மேடையின் மேலேறி நின்றேன்
ஒன்றையுங் காணேனடி குதம்பாய்
ஒன்றையுங் காணேனடி.

பாச பந்தக் கயிறு அறுந்து மனம் ஒடுங்க இறைவனையே நினைந்து நினைந்துருகி விழிநீர் பெருக அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நெறியாம் நீடருள் நந்தி ஒன்றுஞ் செறியாச் செறிவு எனும் நிலையில், மவுனகுரு அளித்த பேச்சடங்கிய மோனமே மிகப் பேரின்பப் பேரறிவு திருவருளுமதுவே. இந்நிலையில் ஏறி நின்றேனடி அங்கே உலகங்கள் அனைத்தையும் நுண்ணிய அணுவளவுங் கெடாதபடி மீநுண்மை எனப்படும் பரமாணுவின்கண (*Electromagnetic field - Spaces-*) ஆற்றல் வடிவாக ஒடுக்கி வைத்தருள உலகியற் பொருட்களில் பேதமொன்றையுங் காணேனடி; எல்லாம் பொது நடம் காண்பிக்கும் இறைவனடி. (1)

657. தூங்காமல் தூங்குஞ் சுகம்வந்து வாய்த்தது
சும்மா விருந்தேனடி - குதம்பாய்
சும்மா விருந்தேனடி.

(முன்விளக்கம் தொடர) சும்மா இருக்கும் அந்நிலையில் நான் நின்றேன். திருவருளுமதுவே; இத்திருவருளினுள் அடக்கமாக தூங்குஞ் சுகமாக என்னைக் காணும் அடியேனும் அதுவே. வான் முதலாகச் சொல்லப்படும் ஐம்பூதங்களும் நான் தூங்காமல் உணர்ந்தறியும் பொருட்களும் அதுவே; நுண்ணிய அணுவளவுங் கெடாதபடி மீநுண்மை எனப்படும் பரமாணுவின்கண் (*Space - Electromagnetic-field*) ஆற்றல் வடிவாக ஒடுக்கி வைத்தருள உலகியற் பொருட்களில் பேதமின்றிக் காணப்படும் பொதுநடம், தூங்காமல் தூங்கும் நிலை அதுவே. (2)

658. ஆங்காரம் போச்சுது ஆனந்தம் போச்சுது
அவனேநா னேனடி—குதம்பாய்
அவனேநா னேனடி.

[முன்விளக்கம் தொடர] உலகியற் பொருட்களில் பேதமின்றி மீநுண்மை எனப்படும் பரமாணுவின்கண் (*Space - Ebctro - magnetic field*) ஆற்றல் வடிவாக ஒடுங்கும் வான்முதலாகச் சொல்லப்படும் ஐம்பூதங்களும் காணப்பட, உலகும் நானும் திருவருள் வடிவாகவே அறியா அறிவில் அழிந்தேக சித்தமாய் நெறியாம் நீடருள் நந்தி ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம் (355) எனும் நிலையில் அடியேனும் உலகம் ஒன்றுகவே மோனம் நிறைபவே பரம்பொருளாகக் காணப்படும். திருவடியின்கண் ஆருயிர் திருவருளுணர்த்தியவாறே மோனகுருவே எழுந்தருள உணர்ந்து கலந்து பிரிவறப்புணர்ந்தபின் அவ்வுயிர்க்கு அப்பேரின்பமே யன்றி பிறிதொன்றுந் தோன்றாது. ஆங்காரம் போச்சுது, உடன் உண்டாகும் ஆனந்தம் போச்சுது. எல்லாம் அவனுடன் பிரிவறப் புணர்ந்து நிற்கும் பேரானந்தமாச்சுது. (3)

659. நீங்காத நின்மல நிட்டை பலித்தது
நீநா னில்லையடி - குதம்பாய்
நீநா னில்லையடி

மோனநிலை எய்திய (முன் விளக்கம் தொடர) மெய்யன்பன் நிட்டைகூடியே தில்லைத்தரிசனம் காணுவான் (292). தத்துவாதீதமாக விளங்குவான். (முன்விளக்கம்) அவனும் நானும் பிரிவறப் புணர்ந்து அந்தச் ஜோதியில் பாசபந்தக்கயிறு எரிந்தே நின்மலமாக திருவருள் வடிவாகக் காண்போம். (4)

660. ஒன்றென இரண்டென ஓதமு டியாமல்
ஓவிய மானேனடி—குதம்பாய்
ஓவிய மானேனடி.

எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனைக்கும் அருட் கண்ணாக விளங்கும் எம்பெருமான் நந்திதரிசனத்தில் பிரிவறப் புணர்ந்து நிறுவுண்மை எனப்படும் பரமாணுவாகித் தடத்தப் பொருளாக உலகும் அடியேனும் ஒன்றுகவே பரசிவான்மாவாக விளங்கும் பொருளாவோம். உன்னு மனங் கர்ப்பூரவுண்டைபோலே கரைய ஜோதியில் சைதன்யப் பொருளான, ஒன்றுன, நின்மல, பாசபந் தக்கயிறு எரிந்த, அம்மையப்பர் தரிசனமேயாம், எல்லாம் பேரானந் தப் பேரின்பப் பேறே. பின் உலகியல் வாழ்க்கைக்கு சிற்றின்ப உணர் வுக்குச் செல்ல முடியாத தரிசனமேயது. (650). (5)

661. நன்றெனத் தீதென நவில முடியாத
நாதன்ருள் சேர்ந்தேனடி—குதம்பாய்
நாதன்ருள் சேர்ந்தேனடி.

நிறுவுண்மை எனப்படும் பரமாணுவின்கண், ஆற்றல் வடிவாக ஒடுங்கும் உலகும் அடியேனும், நந்தி தரிசனத்தில் பிரிவறப் புணர்ந்து நிற்கும் நிலையில், பேரின்பப் பேறையன்றி வேருென்றுந் தோற்றுது. (658) நன்மையுமில்லத் தீமையுமில்லை; பாவமுமில்லை; புண்ணியமு மில்லை; திருவருட்தரிசனம், ஜோதியில் தன்னைக்கண்டும் மீளா அந் நிலையில் அதனுண்மையே நிலைபேருக ளிளங்கும் நிலை. அறுந்த பாசபந்தக் கயிறு எரிந்துவிட்டது. கட்டுந்தன்மை முற்றும் இழந்தது: (6)

662. கண்ணுக்குக் கண்ணு யிருக்கின்ற கர்த்தனைக்
கண்டு களித்தேனடி—குதம்பாய்
கண்டு களித்தேனடி.

உடம்மை இயக்குவது உயிர், உயிரை அறிவிப்பது இறைவன் ஒளி. (விளக்கம் 652 கரண்க). பலகோடி ஆருயிர்கட்கு அருட்கண் ணுக நின்று உணர்விப்பாரும், பயில்வார்க்குப் பயில்விப்பாரும் இடத் தாலும் காலத்தாலும் செயலாலும் கலப்பால் உடனுயிருப்பினும், பொருட்டன்மையால் பயனெய்துந் தன்மையாலும் வேருகின்ற னர். (652), கண்ணுக்கு ஞாயிறு ஒளிவிளக்க மெய்துமாறு தன் னொளி கொண்டு வீறுபெறக் காட்டினும், கண்ணொளி வேருய் நின்று காணும்: அதுபோல் உயிரறிவும், உயிர்க்குயிராம் உடையானறிவுக்கு வேருய் நின்று காணும். அவ்வாறே அறிவுப் பரவெளியெங்கும் பரவிப் பரமாகாசத்திரையில் அறியத்தரும் அந்த முத்திறப் புணர்ப்பாம் பேரானந்தப் பரப்பொருளை (652): ஆருயிர் உடனுயும் வேருகவும்

நின்று காணும். அடியேனும் அவ்வாறே, அடியேனின் அறிவு கொண்டும், உயிர்க்குயிராம் உடையானறிவு கொண்டும் திருவருள் வடிவாக உடனுயும் வேறாகவும் தம்மைக் காண்பித்துங் கதிரவனை பொத்த பரம்பொருளைக் கண்டுகளித்தேன். (652; 653 இல் காணும் பாட்டுக்களும் காண்க). (7)

663. அண்டமும் பிண்டமும் ஒன்றே இரண்டோவென்
றறியா திருந்தேனடி குதம்பாய்
அறியா திருந்தேனடி.

[விளக்கம் 656; 657 காண்க]; அறியா அறிவில் அமிழ்ந்தே தசித்துமாய் நெறியாம் நீடருள் நந்தி ஒன்றுஞ் செறியாச் செறிவு எனும் நிலையில் உலகங்கள் அனைத்தையும் நுண்ணிய அணுவளவும் கெடாதபடி மீநுண்மை எனப்படும் பரமாணுவின்கண் (*Space Electromagnetic field*) ஆற்றல் வடிவாக ஒடுக்கி வைத்தருள அவற்றையும் உலகையும் தூங்காமல் துவ்நம் நிலையில் 617) அண்டமும் பிண்டமும் ஒன்றோ இரண்டோ என்றறியா திருந்தேனடி. (8)

664. ஆதார மாறும் அவத்தையோ ரைந்தும்
அடியோடு போச்சுதடி — குதம்பாய்
அடியோடு போச்சுதடி.

நிட்டையில் கருவிகரணங்கள் ஒடுங்க உயிர் தன்னைக் காணும் ஐந்து நிலைகள், ஐந்து அவஸ்தைகள் (65) நனவுலகம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் எனும் ஐந்து இடங்களிலும் நின்று உலகைக் காணும். சொப்பனம் சுழுத்தி நிலைகளில் தூங்காமல் தூங்கும் நிலையில் நந்தி தரிசனமும், துரியம் துரியாதீதம் எனும் நிலையில் ஜோதியில் தில்லைத்தரிசனமும் கண்டின்புற்றேன்.

சாக்ஷி, ஆமோர்திப்பவன் தாங்குவோன் அநுபவிப்பவன், மகேஸ்வரன் சதாசிவன், பரமேஸ்வரன் எனும் ஆறு ஆதாரமும் (293 — 299) தாண்டி, அப்பாலே ஜீவன் முத்தனைத் நம்பிரான் தோழனை, முப்பதழுங்கடந்த ஞானபதத்தில் (355; 356) சாயுச்சிய பதவியடைந்து (514; 516) உலகத் அடிமைபனும் தாயுங் குழந்தையும் போலும் விளையாட்டாயிற்று. (9)

665. பாதாரவிந்தத்தைக் காணுமற் கண்டு
பணியாமற் பணிந்தேனடி — குதம்பாய்
பணியாமற் பணிந்தேனடி.

[முன்பாட்டு விளக்கம் தொடர] மோனகுருவே எழுந்தருள நிட்டைகூடி ஆதாரம் ஆறும் அவித்தை யைந்துந் தாண்டி தம்பிரான் தோழனை சாயுச்சிய பதவியடைந்த ஜீவன் முத்தனை சிந்தை

யவிழ்ந்தவிழ்ந்து சின்மயமா நின்னடிக்கே பணிந்தேத்தும் பொன்மய மாய் (403) இரவுபகலற்ற ஏகாந்த சித்தமாய் (394) அவனைப் பணிந்தேனடி. பாதாரவிந்தத்தைக் காணும் நிலையைக் குறிக்கும் சிலவற்றைக் காண்க.

1. முக்குணமும்போன இடந்தெரியாதே எண்குணத்தான் நிறிபான்.

2. நாதவடிவென்பர், சத்தப்பிரமவாதி ஓசையாகிய சத்தமானது மயக்கத்தினால் உலகமாமெனவும், அறியாதார் பொருளும் ஓசை, யாகிய சத்தத்திற்கு உண்டென்று எண்ணுவது மெய்யென்று மெனவும், ஓசையே (1) கடவுளெனவும் பொருள் வேறுக ஒன் றில்லையென அறியும் அறிவே வீட்டின்பமெனக்கூறி நாதமே முதல் என்பர்: இவ்வுண்மையை

உரையான தும்மையினால் உலகாம்
புரையோ ருணரும் பொருள்பொய் யிதனை
விரையா துணரும் அது வீடெனவே
வரையா துரைவா திவருத் தனனே

(சிவஞானசித்தியார் பரபக்கம் 208)

(1) தேன் வண்டுகள் கீதம்பாடும் ஓசை (2) வித்துமயமென் பர். விந்துவினின்று நாதமெய்களும் செவியோசையாகிய வைகரி முதலிய ஓசைகள் நான்கும், அவ்விந்துவின் கீழ்ப்பட்ட மோகினி என்று சொல்லப்படும் தூவாமாயையும், அத்தூவாமாயையினின்றும் பாரிய திரிபாய்த் தோன்றும் மூலப்பகுதியும், குணமுதலிய மெய்களும் ஆகி யவற்றிற்கெல்லாம் விந்துவாகிய தூமாயை காரணமாயிருப்பதால் விந்துவே முதல் என்பர். இவ்வுண்மையை விளக்க

விந்துவின் மாயையாகி மாயையின் அவ்வியத்தம்
வந்திடும் விந்துத் தன்பால் வைகரி யாதி மாயை
முந்திடும் அராகம் ஆதி முக்குணம் ஆதிமூலந்
தந்திடுஞ் சிவனவன்றன் சந்நிதி தன்னின் நின்றே.

(சிவஞானசித்தியார்) (10)

118 குதம்பாய் 1

666. அன்பே சிவமாகக் கண்ட பெரியோர்க்குத்
துன்பங்க ளேதுமுண்டோ — குதம்பாய்
துன்பங்க ளேதுமுண்டோ.

எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனைக்கும் அருட் கண்ணைக் விளங்குந் தண்ணளி வாய்ந்த எம்பெருமான், பரசிவான்மா அம்மையுமப்பராக விளங்கும், அறிவுப்பொருளாக நாம் காணும் நிலையில், நாமும் அறிவுவடிவான அந்த மோனமெய்நி மோனகுரு

எழுத்தருளிய அறிவே வடிவான ஆன்மாவாய் அகம் விளங்கினவராய் பரசிவவணக்கஞ் செய்கிறேம். அகம் மோனமெய்தி நாம் ஆன்மா எனும் நிலையில் உலகை அம்மையப்பரான பரசிவான்மா வாகக் கண்டு வணக்கஞ் செய்கிறேம். தீயினைக் கண்ட மெழுகுபோல் ஓவாதுள்ளுருகவும் இடையறாது மெய்வருந்தி இடையறாது விழிநீர் பெருகவும் அம்மையப்பரை, இறைவனே வேண்டியழுது கண்ணப்பர் போன்றும் பக்தியுடன் வணங்கி அன்பே சிவமாகக் கண்ட பெரியோர் மோன நிலை எய்திய பெரியோரே. தம்அறிவால் உலகைப் பேத மின்றிப் பொதுநடம் புரியுங் கூத்தனாகவே காண்பார் (681) (658;) (149) காண்க. (1)

667. ஆதி யந்த மான்மாவுக் கில்லையென்ற
சேதி தெரிந்ததடி—குதம்பாய்
சேதி தெரிந்ததடி.

ஆதியு மந்தமுமில்லா திருவைந் தெழுத்துஞ் ஜோதிபாக விளங்கும் எம்மிறைவனே பாவம் தேய்ந்த ஆன்மா (373). சிவான்மா அஞ்ஞான இருள் விட்டு நீங்கிய கலைவடிவாக விளங்கும் சைதன்யப்பொருள் (333). பரசிவான்மாவே அம்மையப்பர். பாவந்தேய்ந்த ஆன்மா - இந்த ஆத்மா பெரிது [பிருஹ. உபநி (4-4-22) 227] சும்மா இருக்கும் அகம் அறிவுவடிவான அகம்தான் ஆன்மா; உடம்பல்ல என்று தம் அறிவினுல் அறிகிறது. (2)

668. இல்லை யுண்டென்று சொல்லவொண் ணாதவன்
எல்லார்க்கு மீசனடி—குதம்பாய்
எல்லார்க்கு மீசனடி.

[விளக்கம் (633) காண்] பாசபந்தக்கயிறு அறுந்த மனம் ஒடுங்கும்; அலையாத மனம் எவற்றுடனுஞ் சேரும் திருவடி மெய்யுணர்வின் கண் திகழும் சிவனடியார் சார்பினைப் பெற்று அண்டமும் பிண்டமும் வேறுகக்காணாது (663) பொதுநடம் புரியும் இறைவனையே காணும். பேதமில்லை (160) (658) முத்திறப் புணர்ப்பாம் பேரின்ப நிலையை எய்திய ஆன்மா, ஆத்மன், சிவான்மா, பரசிவான்மா, அம்மையப்பர் எல்லார்க்கும் ஈசனடி. (3)

669. ஈசன் ஒருவ னெண்ணிப் பணிவார்க்குப்
பாசந்தா னுண்டோடி—குதம்பாய்
பாசந்தா னுண்டோடி.

பாவந்தேய்ந்த ஆன்மா ஆத்மன். (373). சிவான்மா தனித்து விளங்கும். பரசிவான்மா எப்பொருளிலும் நீக்கமற நிறைந்து விளங்கும் அம்மையப்பரே; அன்பே வடிவான மெய்யன்பன் அம்மையப்

பரான உலகினையும் தன்னையும் ஒன்றுகவே காண்கிறான்; (57) (63) (312; 313) காண்க. பொது நடம்புரியும் இறைவனுந் தானுமொன் றுகக் காண்போனுக்கு, வேறுபடக்காணும் பாசபந்தம் உண்டாகாது. நாடக மேடையில் இறைவன் சித்திரத்தைக் கண்டின்புறுவான். (4)

670. உண்மை முழுதுமென் றேத்திப் பணிவோர்க்கு
விண்ணுணம் ஏதுக்கடி—குதம்பாய்
விண்ணுணம் ஏதுக்கடி.

உயிரில் பொருள் உயிருள் பொருள் எப்பொருளிலும் நீக்கமற நிறைந்து விளங்கும் எம்பெருமானையே கண்டும், வேறொன்றுங் காணாது அவனையே உண்மைமுழுதுமென விளங்கும் மெய்ப்பொருளான அவ னையே யெங்கும் கண்டும், விகாரத்தை உண்டாக்கும் மாயையும், மாயையால் உண்டாகும் பேதமும் காணாத மெய்யன்பன், இன்பம், துன்பம் பாவம், புண்ணியம், யான், என்னுடையது எனும் விண்ணு ணங் காணான். (5)

671. ஊரும் பேரு மில்லா ஒருவருக்குச்
சீருஞ் சிறப்புமென்ன—குதம்பாய்
சீருஞ் சிறப்புமென்ன.

(முன் விளக்கம் தொடர) எப்பொருளிலும் வியாபித்திருந்து நீக்கமற நிறைந்து விளங்கும் நம்மிறைவன் இன்னபொருன், இன்ன ஊர் எனும் பேதமற்றவன். ஒன்றிரண்டென ஓதவொண்ணாதவன், பேரானந்தப் பெருவெள்ளமே உருவானவன் (660). அவனுக்கு வித்தி யாசம், தனிப்பொருள் காணும் சீர் சிறப்பு வளர்தல் தேய்தல் ஒன்றுமே கிடையாது. (பிருக. உப. 4-4-22) [327 இல் காண்க]. (6)

672. எங்களை விட்டுப் பிரியாத இறைவற்குப்
பொங்கல் புழுக்கலென்ன —குதம்பாய்
பொங்கல் புழுக்கலென்ன.

பாசபந்தக் கயிறு எரிந்து சீவன் முத்தனைத் தம்பிரான் தோழ னாக, என்றும் விட்டுப்பிரியாது தம்மையும் இறைவனையும் ஒன்றாகக் காணும் பக்தன், வெளி ஆராதனைகளில் தம்மனதைப் புறத்தே யலையவிடான்; பாசபந்தக் கயிறு எரிந்துவிட்டது (7)

673. ஏதும் அவன்செய லென்று துதிப்பவர்க்குப்
போதுதா னேதுக்கடி—குதம்பாய்
போதுதா னேதுக்கடி.

சும்மா இருக்கும் அகம் விளங்கவே மும்மௌனஞ் சாதிக்கும் மெய்யன்பன் 'எல்லாம் அவன்செயலே' 'எங்கும் அவனேயாம்' என்பதைய யுணர்வான். பார்த்தாசாகஷி, ஆமோதிப்பவன், தாங்குவோன், அனுபவிப்பவன் போத்த என்னும் நிலைகளில் (293 - 290) நின்று நிஷ்காமிய கர்மங்கள் புரிவான். புத்தியாகிய கன்னிகையை அவன் இறைவனுக்கே பார்வதியுடன் கூடநின்று தொண்டுசெய்ய அர்ப்பணஞ் செய்தவன். இறைவனே அவனுடைய கர்மங்களை ஆற்றுகையில் அவனுக்கு நல்லது செய்கிறான், தீயது செய்கிறான்: பாவஞ் செய்கிறான் புண்ணியஞ் செய்கிறான், என்பதே கிடையாது. கொல்லாவிரதம் பூண்டு அறவழி நிற்பவனே அந்த மெய்யன்பன். ஒழுக்கம், நல்லொழுக்கம் என்பதே அவனுக்குக் கிடையாதே.

திருமூலர் தூநெறி என்று ஒழுக்கமுடையாள் என்று தொடங்கி நின்மலனுய் நிஷ்காமிய கர்மம் புரிபவன் 'நீ நெறி கண்டுளம்' என்று நெறியைக்கவனிக்காதவன் என்கிறார்.

தூநெறி கண்ட சுவடு நடுவெழும்
பூநெறி கண்டது பொன்னகமாய் நிற்கும்
மேனெறி கண்ட வெண்மதி மேதினி
நீனெறி கண்டுள நின்மல னுகுமே (திருமந்திரம். 1864) (8)

674. ஐம்புலன் தன்னை வென்ற பெரியோர்க்கு
நம்பிக்கை வேண்டுமோடி — குதம்பாய்
நம்பிக்கை வேண்டுமோடி.

ஐம்புலன் வழிச் செல்லாமல் நின்னருள் வழிச்செல்லுமாறு மும்மௌனஞ் சாதிக்கும் மெய்யன்பனை மோனகுருவே எழுந்தருளி வழி நிற்க சிவனடியார் சார்பினைக் கொண்டு அறன் வழி நிற்க இறைவனே பொறுப்பேற்றுச் செயல் புரிகிறான். வழி நின்று அருள்காட்டி முத்தி நல்குபவன் (329). வேறு என்ன வேண்டும். 'அந்தரங்க' சேவை என்கிறார் தாயுமானவர்:

ஐவரோடுங் கூடாமல் அந்தரங்க சேவைதந்த
தெய்வ அறிவே சிவமே பராபரமே. (பராபரக்கண்ணி 252) (9)

675. ஒன்றுகக் கண்ட வுணர்வுடை யோருக்கு
மன்றுட்ட மேதுக்கடி — குதம்பாய்
மன்றுட்ட மேதுக்கடி.

உணர்விப்பானும் உணர்பவனும் உணரப்படும் பொருளும் வேறுயும் ஒன்றுயும் நாம் காண்கின்றோம். உயிரறிவு கொண்டு உயிர் உயிர்க்குயிராம் உடையானையும், உலகமாய் வேறுய் விளங்கும் அம்மையப்பரையும், உடையானறிவு அறிவிக்க எல்லாம் ஒன்றுகவே காண்கின்றது; (652 அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நெறியாம்

நீடருள் நந்தி ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம் (365) நந்தி தரிசனத்தில் அருவுருவாம் சதாசிவனைக் காண்கிறான். தன்னை, உலகினை, ஒன்றாகக் காண்கின்றான். (18) சிதம்பரஞ் சென்ற நந்தனை, நந்தி மறைத்து நில்லைத்தரிசனங்காண வருந்தினனும். சிவபெருமான், சற்றே விலகி நில் நந்தி,(19) என்று கட்டளையிட நந்திவிலக அந்தச் ஜோதி வடிவான நில்லைத்தரிசனத்தில் ஆழ்ந்தான். நந்தன் காண்பான்; நந்திகாணப்படும் உலகு; இறைவன் அறிவிப்பவன். மூன்றையும் ஒன்றாகத் தரிசனங் கண்டால் எவரையென்ன மன்றாட வேண்டும். (10)

676. ஓம்நி வாய நமவென்று சொல்லுவோர்
தாம்சிவ மாவரடி—குதம்பாய்
தாம்சிவ மாவரடி.

சிவாயநம வென்று உருவேறவே (1)செபிப்பதால் அந்தப் பொருள் முன் உணர்வாயும் பின் அறிவாயும் உள்ளத்தே செறிந்து விளங்கும். அறிவுவடிவாகவே நம் ஆன்மா ஈற்றில் விளங்கும்: மாயையும் அஞ்ஞான இருளும் உள்ளத்தை விட்டு நீங்கும். நாட்டம் எனப்படும் சிந்தை கனிந்து கரைந்து பேரறிவு மயமாகிய அவன் திருவடி நீழலை வந்தடைந்து அவனருளால் பேரின்பப் பெருநிலையடையும்.

சிந்தை அவிழ்ந் தவிழ்ந்து சின்மயமா நின்னடிக்கே
வந்தவர்க்கே இன்ப நிலை வாய்க்கும் பராபரமே.
(தாயுமானவர் பராபரக்கண்ணி 75) (11)

677. ஒளவிய மில்லா அறிவை யுடையவர்
தெய்வம் போல் வாழ்வரடி—குதம்பாய்
தெய்வம் போல் வாழ்வரடி.

பாசபந்தக் கயிறு அறுந்து ஐம்புலனு மாணவமும் நம்முள் அடங்க, தத்துவங்கள் யாவும் புருடனில் அடங்கினால் அவன் ஒளவிய மில்லா அறிவுடையான். அவன் தெய்வமேயாவான்: தம்பிரான் தோழனாக வாழ்வான் (514; 516) (664). (12)

678 அஃகமும் காசுந் தேடிடில் ஞானிகள்
நஃகுதல் செய்வாரடி – குதம்பாய்
நஃகுதல் செய்வாரடி.

அஃகம் = விலைப்பொருள்; நஃதல் = ந + அஃகுதல்
ந = இன்மைப் பொருள் அஃகுதல் = சுருங்குதல்

உலகியற் பொருட்களும் காசுந்தேடாமல் இருப்பின் ஞானிகள் தம் ஞானவளர்ச்சியும் அறிவு வளர்ச்சியுங் குறையாது விளங்குவர். ஞானபதங் கூடிய முதிர்ந்த அறிவுடையோராய்த் திகழ்வர். (13)

119. குதம்பாய் 2

679. எள்ளுக்கு ணெண்ணெய்போ லெங்கு மிருப்பவன்
எங்க ளிறைவனடி — குதம்பாய்
எங்க ளிறைவனடி.

எள்ளினுக்குள் எண்ணெய் உள்ளும் வெளியுமாய் எங்கணும் நீக்க மற நிறைந்திருப்பது போன்று உலகுயிர்கள் எல்லாவற்றிலும் நீக்க மறப் பெருநிறைவாய் நிறைந்து நிற்கும் ஒன்றும் சிவபெருமானே எங்கள் இறைவனடி (649).

கொள்ளுங் கில்லென அன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அருமலர்க் கொன்றையான்
கள்ளுங் கீழளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே
திருவாசகம் திருச்சதகம் (46): (1)

680. உள்ளவுள்ள மெல்ல மெல்ல வெளியாகும்
உறுதி யாயிரடி — குதம்பாய்
உறுதி யாயிரடி.

உலகியல் நிகழ்ச்சிகளனைத்தும் திருவாணையின் வழி நடக்கின்றன. உள்ளபடியே யாதுமென வுணர்ந்தேன். திருவருள் வழிநிற்க, அனைத்தும் தாமே, வினையின் நிகழ்வால் விளையும் விளைப்பயன் எனும் அம்பலத்தே, வினை முதலாம் முதல்வன் திருவருள்கூட ஆருயிர் அனைத்திற்கும் அவரவர் வினைப்பயனுக்கு ஏற்றவாறு பொருத்திவைக்கப் பட்ட நிகழ்ச்சிகள் அந்த அந்தக்காலத்தே நிகழ்வன: உள்ள உள்ள மெல்ல மெல்ல வெளியாகும். தாயுமானவர் 'உள்ளபடியே யாதுமென வுணர்ந்தேன்' என்கிறார். (2)

681. வெள்ளம் பள்ளத்தை நாடுமது போல்
விமலனு மாவனடி — குதம்பாய்
விமலனு மாவனடி.

[முன் பாட்டு விளக்கங்காண்க.] வினையின் நிகழ்வால் விளையும் வினைப்பயனெனு மம்பலத்தே வினைமுதலாம் முதல்வன் ஆருயிர்களை அவரவர் வினைப்பயனுக்கு ஏற்றவாறு, அவர்களுடைய வினைத்தன்மையினின்றும் அவ்வாருயிர்தன்னை நீக்கியாண்டருள் புரியும் வண்ணம், பொருத்தி வைப்பன். இதே (380) படைப்பு. வெள்ளம் பள்ளத்தை நாடி ஓடுவது போல், ஆருயிர்களின் வினைத்தன்மையினை நீக்கி யாண்

டருள் புரியும் விமலன் அவரவர்க்கு ஏற்றவாறு பொருத்திய நிகழ்ச்சிகளே அந்தஅந்தக் காலத்தே நிகழ்விப்பான். அதே அருவாம் விமலனுருவடி. தண்ணளிவாய்ந்து இடர் நீக்கியாண்டருள் புரியும் (498) எம்பெருமானடி. (8)

682. துள்ளித் திரியும் மனத்தை யடக்கினால்
துரிய மடைந்திடலாம் — குதம்பாய்
துரிய மடைந்திடலாம்.

பாசபந்தக் கயிறு அறுத்த மனம் அடங்கும் அவ்வழி காண்க; யாவர்க்கும் யாண்டும் நற்செயல்களே நிகழ்ந்தாகுதல் ஆகிய நியமத் தன்மையினையும், துன்பம் பயக்கும் தீச்செயல்களாகிய பொல்லாங்குகளே நீக்கலெனப்படும் இயமத்தன்மையினையும், இருக்கை முதலான வகைகளின் வேறுபாடுகளையும் ஆழ்ந்தெண்ணுக. செம்மையாக வெண்ணி நெஞ்சத்தாமரையின் இருக்கைமேல் நிலைபெற்றுத் திகழ்கின்ற அசபா மந்திரத்தின் அளவிடற்கரிய நலமையின் தன்மையினையும் நன்குணர்க. வளர்கின்ற மூலத்திடத்துள்ள குண்டலியாற்றலைப் படர்ந்து பரவிப் பணிந்து இன்புற வணங்கு; துள்ளித்திரியும் அந்தமனம், துன்பம் பயக்கும் வினைத் தன்மை நீங்கித் துரியத்தே இருக்கை மேல் நிலைபெற்றுத் திகழும்.

இயமம்; "பொய் கொலை களவே காமம் பொருணசை
இவ்வகை ஐந்து மடக்கிய தியமம்"

(பொருணசை = பொருள் ஆசை)

நியமம்: "பெற்றதற் குவத்தல் பிழம்புநனி வெறுத்தல்
கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை
பூசனைப் பெரும்பய மாசாற் களித்தலொடு
நயனுடை மரபி னியம மைந்தே"

வளிநிலை: 'உந்தியொடு புணர்ந்த இருவகை வளியுந்
தந்த மியக்கந் தடுப்பது வளிநிலை"

(தந்தம் - இயக்கம் தடுப்பது)

தொகைநிலை: "பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமல் ஒரு வழிப்படுப்பது தொகை நிலையாமே"

பொறைநிலை: "மனத்தினை யொருவழி நிறுப்பது பொறைநிலை"

நினைவு: "நிறுத்திய வம்மன நிலைதிரி யாமற்
குறித்த பொருளொடு கொளுத்த னினைவே"

சமாதி: "அங்ஙனம் குறித்த பொருளொடு
தான் பிறனுகாத் தலையது சமாதி"

மேலும் திருஞானசம்பந்தர் கூறுவதைக் காண்க.

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கிலே யேற்றி நனபுலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன் அஞ்செழுத் துமே. (4)

683. எங்கெங்கு சென்றாலு மங்கங்கு மீசன்
இருப்பதைக் கண்டிடடி — குதம்பாய்
இருப்பதைக் கண்டிடடி.

ஆருயிர்கள் கட்டு நிலையில் இருவினைத்தொழில்களை ஈட்டலுந் துய்த்தலும் செய்து மீட்டறுத்தற் பொருட்டு [679; 680; 681 காண்க. முதல்வன் அவ்வுயிர்களினுள் மறைந்து நின்றருள்வன். அம்முறையில் ஆருயிர்கள் எனக்குள் நீயென்று நிற்கும் நிற்கைபோல் மீட்டு நிலையில் திருவடித்துய்ப்பின் பொருட்டு அவ்வுயிர்களைத் தன்னுளடக்கித்தான் முன்னருள்வன் சிவன். (5)

684. தேங்காயி ளிளநீர் சேர்ந்திடுந் தன்மைபோல்
தெய்வ மிருக்குதடி — குதம்பாய்
தெய்வ மிருக்குதடி.

பாலில் நெய்கலந்திருப்பதுபோல் இறைவன் ஆருயிர்களில் எங்கும் வியாபித்து நீக்கமற நிறைந்திருப்பான் என்பார்கள் (683). தேங்காய் இளநீராகவே தோன்றிப் பின் இளநீருந் தேங்காயுமாகி ஈற்றில் இளநீர் முற்றும் வற்றித் தேங்காயே காணப்படும். அதுபோல் ஐம்பூதங்களாலும் உண்டாக்கப்பட்டு ஐம்பொறிகளாலும் அந்தக் கரணங்களாலும் ஆக்கப்பட்ட ஆறு தத்துவங்களாலும் உண்டாக்கப்பட்டதே உடம்பும் உயிரும் ஒன்று சேர்ந்த மனிதன். இறைவன் திருவாணைவழி நின்று திருவருட்பேறு அடைய ஐம்புலன்களும் ஒடுங்க ஆறு தத்துவங்களும் தம்முள்ளடங்கிய எண்குணத்தான். பல சித்துக்களும் உடையனாகிய புருடன் தோன்றுகிறான். குண்டலி ஆற்றல், குண்டலினி சக்தி தோன்றுகிறது. அதே ஐம்புலனும் ஒன்று சேர்ந்து தத்துவங்கள் தம்முள் அடங்கிய தத்துவாதீதனுடைய சித்து வல்லமையை யுண்டாக்கும் சக்தி. இதில் மனம் பிடித்தலியாதே பக்தி எனும் சங்கிலியினால் மனம் எனும் யானையை வேகமாக இழுத்து உமது கட்டுத்தறியாகிய திருவடிகளில் அறிவாகிய யந்திரங்களினால் கட்டியருளவேண்டுமென்று கேட்டான் பக்தன்.

'கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள பெருமான்.''

(மாணிக்கவாசகர் சிவபுராணம் வரி 46—48)

''கன்னல் கறந்த பாலொடு நெய்கலந்தாற் போல் = முலைக்காம் பிலிருந்து விழும் பால்த் துளிகளில் நெய் எவ்வாறு கலந்திருக்கின்ற தோ அவ்வாறே பக்தனுடைய சிந்தனையில் அறிவு வடிவான இறைவன் நின்று பிறப்பறுப்பான். இளம் இளநீரில் தேங்காய் எங்கேயிருக்கின் றது. பின்பே இளநீர் தேங்காயாக மாறியது. உடன் கறந்த பாலிலும் சத்து பின் வெண்ணெய்யாக மாறியது. ஆறு தத்துவங்களும் பின் குண்டலி சக்தியாக மாறுகிறது. (6)

120 சிவதொண்டன் வாழ்த்து

வெண்பா

685. செல்வச் சிவதொண்டன் சீரடியார் தங்கள்
நல்லமனக் கோயில்கொள் நாளிதுவால் - எல்லவரும்
தீர்த்தங்க ளாடித் திரிகரணம் தூய்மைசெய்மின்
பார்த்தவிட மெங்கும் பரம்.

துன்விக் திரியும் மனத்தை யடக்கினால் (698). உள்ளம் கோயி லாகவும், உயிர் சிவலிங்கமாக வுண்டாகும் (608). திரிகரணமா கிய மனம் வாக்குக் காயம் மூன்றும் இயமம் நியமம் முதலியவற் றால் சுத்தப்படுத்தி இருவகை வலிபுந் தடுத்து வலிநிலை கொண்டு பொறியுணர் வெல்லாம் ஒருவழிப் படுத்துக தூய்மை செய்த மனத்தை யொருவழி நிறுத்தி பொறைநிலை யெய்து. நிறுத்திய அம்மனம் குறித்த பொருளொடு கொளுத்த நினைவெய்தி, திருவருளும் யானு கிய வெண்ணை விழுங்கத் தானுந் தற்பரனுகப் பிறனுகாது சமாதி யில் ஆருயிர்தோறும் அதுவதுவாய் நின்றெரிநம் பரம் பொருளையே காண்போமாக.

அகவல்

686. ஓமெனுந் தாரகம் ஒண்முடி சுமந்து
நாமெலாஞ் சிவனடி யாரென நவின்று
ஆரறி வாரென வாசான் தந்த
சீரிய மந்திரஞ் சிந்தைபிற் செபித்துச்
சிவநெறி வழுவாச் சிவதொண்ட னென்பான்
பவவரு டத்துப் பன்னுமார் கழிமதி
எவரு முவப்ப யாழ்ப்பா ணத்தில்
வண்ணை மாநகர் வைத்திய நாதன்
தண்ணருளாலே தானவ தரித்தான்.

(தொடரும்)

உரை தாரகம் = ஆதாரம்; பிரணவம் ஓங்காரமேடை (656); ஓங்காரமேடைமீது பண்புடன் விளங்கும் உள்ளம் ஞான அறிவு ததும்ப நாமெல்லோருஞ் சிவனடியார் என்று கூறுக, மாணிக்கவாசகர் பொருள்விரிவுற அருள்புரியும் ''மலங்கினேன் கண்ணில் நீரை மாற்றி மலங்கெடுத்த பெருந்துறை விளங்கினேன் வினைக்கேடனேன் இனி மேல் விளைவதறிந்திலேன்'' எனும் பொருளை உணர்த்தியே எங்கள் ஆசான் செல்லப்பன் தந்த ''ஆறிவார்'' (எப்பவோ முடிந்த காரியம் — வினையின் நிகழ்வாம் விளையும் வினைப்பயனெனு மம்பலத்தே விளைமுதலாம் முதல்வன் ஆருயிர்கட்கு அவரவர் வினைப்பயனுக்கு ஏற்றவாறு வினைநீக்கத்துக்கு (681) பொருத்தி வைத்த நிகழ்ச்சிகளை) ''ஆறிவார்'' எனும் மந்திரத்தை உளங்கொள்கை அவன் திருவருளின்உண்மை விளங்க வண்ணை வைத்தியநாதன் தண்ணருளாலே பவ வருடம் மார்கழிமாதம் யாழ்ப்பாணத்தில் அவதரித்தான்.

இன்னவன்,
வயதிற் சிறியன் மதியிற் பெரியன்
நியதி மார்க்க நிலையைக் கடவான்
சாந்தம் பொறுமை தயவுதன் னடக்கம்
வாய்ந்தவ னன்ப ரிதயமா மலரில்
ஏய்ந்தவன் போடு மினிது வளர்ந்தவன்
ஐந்தா மாண்டகன் முறும் பருவம்
சுந்தர நடையுடன் துலங்கு முங்கள்
மங்களம் பொலியும் மாளிகை தனக்குத்
திங்கள் தோறுஞ் சிறப்புடன் வருவான்
அங்கவன் றன்னை யார்வமொ டணைத்துத்
துங்கநீ றணிந்து சொர்ணத்தா லாய
பூம்பட் டாடை பொலிவுறப் புனைந்துடுத்து
ஆம்பொருள் வழங்கி யகமகிழ் வித்து
நாம் சிவமென்று,
நாத கீத வாத்தியம் முழங்கக்
காத லாற்கசிந் தாடல்நங் கடனே

கலிவிருத்தம்

687. தார கத்தனி மந்திர மோதியே
பார கத்திற் பணிசெய் சிவதொண்டன்
ஏர கத்தடி யாரக மேகுவான்
நீர கத்துட னேர்பெறு திங்களில்

உரை: நியதி - மார்க்கம் நிலை - நியமம் [682] இல் காண்க; மாதந்தோறும் வருபவன் அவனை ஆவலுடன் வரவேற்று அதற்குத் தேவையான பொருள் உதவுதல் எம்டனே தேகஞ் சுத்தி செய்து தூயபட்டாடை உடுத்து 'ஓம்' எனும் மந்திரம் உபாசித்து சிவாய நம என்று நூற்றெட்டுத்தரம் அல்லது பதினெந்து நூற்றெட்டுத் தரம் ஜெபித்து இறைவனை அவன் தரும் வழி நின்றழுகியும் கடவுளைப் பணிந்தேத்துவோம். சுப்பிரமணியத் தலத்தில் எழுந்தருளி கும் எம்பெருமானைப் போற்றித் தொழுவோம்.

121 சிவதொண்டன் சீர்

வெண்பா

688. நாற்றிசை யுஞ்சென்று நல்ல சிவதொண்டன்
ஏற்றிவரு மீச னிணையடியைப் — போற்றிச்
சிவனடியார் நாமென்று திங்கடொறுஞ் சொல்லு
மவனை மறவா தகம்.

துன்னித்திரியும் மனத்தை யடக்கவேண்டும் (682) மனம் அடங்க பொறைநிலை எய்தி சும்மா திருக்கும். எல்லாத் திசையுஞ் சென்று தம் கடனைவாற்றி வருஞ் சிவதொண்டன் தன் அன்பர் யாவரும் சும்மா இருக்கும் அகம் உடையராய் திருவைந்தெழுத்தை ஓதி சிவனடியார் நாமென்று மாதந்தோறும் வருஞ் சிவதொண்டனை மறவாது பெற்று அவர் தரும் உண்மை வழிநிற்றலே தவம்.

689. அகந்தூய்மை வேண்டுமுய ரைந்தெழுத்தை நெஞ்சி
லுகந்துரைக்க வேண்டுமொழி யாமற் — சகந்தனிலே
வேள்வியும் வேண்டுமோ வேறுய்க் கடவுளுண்டோ
தாழ்வுண்டோ தொண்டர் தமக்கு.

'ஆறறிவார்' என்று ஆசான் சொன்னமந்திரத்தை (647) ஓதி ஓதி எல்லாம் 'சிவன்செயலே' என்பார்; வினைமுதலாம் முதல்வன் அருள் புரிந்தபடியே வினைநீக்கி இடர்நீக்கியாளும் (193) எம்பெருமான் அருள் வேண்டும்; ஞானப்பூசைக்குரிய அட்டமாமலர் கொண்டு (244). நித்தம் சிவதொண்டன் கூறும் வழிநின்று தோத்திரஞ் செய்தல் வேண்டும். அகம் தூய்மையடைய வேண்டும் திருவைந்தெழுத்தை ஓதி ஓதி [விளக்கம் (1) காண்க.] அனைத்தும் அதனுள் காண்க. (222); அதனுண்மை விளங்கவே ஜெபிக்கும் பொருளாகவே, மனம் அடங்கிப் பொறைநிலை எய்தி சமாதியில் கொழுத்த நினைவாய் விளங்கும் அப்பொருளும் தானும் வேறுகக் காணாது அப்பொருளாகவே விளங்க ஓடுங்கிய மனம் ஓங்கார மேடைமீது

பொலிந்து விளங்கும், வேறும் வேள்வியுங் கடவுளுமுண்டோ சகந் தனில். தொண்டர்க்கு என்ன குறைதானுண்டு? ஓங்காரமேடைமீது (656) பாங்காக வீற்றிருங்கள். தாயுமானவர் மனந்தூய்மையாக்கிக் கொழுத்த நினைவுப்பொருளாய் விளங்கும் உண்மையைத் தருகிறார்.

எனக் கெனச்செயல் வேறில்லை யாவுமிங் கொருநின்
தனக் கெனத்ததும் உடல்பொரு ளாவியுந் தந்தேன்
மனத்த கத்துள அழுக்கெலாம் மாற்றியெம் பிரான்நீ
நினைத்த தெப்படி யப்படி அருளுதல் நீதம்.

தாயுமானவர். (25 – 1).

690. தானனை சற்குருவைத் தான்போற் றிடுஞ்செல்வக்
கோனுஞ் சிவதொண்டன் கொண்டுவருந் — தேனூர்ந்த
கட்டுரையைக் கண்டு களிக்குஞ் சிவனடியார்
நட்பே நலனளிக்கும் நாடு.

தன்னைச்சிவம் என்றறிந்த (403; 29) (267) சற்குருவைப்போற்று வோம் உலகுக்குத்தானனதன்மை, அறிவுப்பொருளான ஆன்மா பர சிவான்மா அம்மையப்பரான உலகம் என்றும், வினைத்தன்மையினின் றும் நீங்கிய ஆன்மா; தன்னை (681) ஆத்மனாகக் காணும் நிலையை, தம் கட்டுரைகளால் போதிக்குங் கோனுஞ் சிவதொண்டன் கொண்டு வரும் ஞானப் பொருட்களைக் கண்டு களிக்கும் சிவனடியார் நட்பே நலனளிக்கும் நாடு. மாணிக்கவாசகர் தாம் அருள் பெற்ற பெருந் துறையைப் போற்றுகிறார்:

வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்துலகம ஏத்தத் தகுவாருஞ் — சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி ஏதும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி ஏத்தும் நமர்.

691. நாடுவார் நாட்டிலே நல்ல மழைபெய்யுந்
தேடுவார் சிந்தையிலே தித்திக்கும் — பாடுவார்
பாவமெல்லாம் போக்கும் பரஞான மாக்குமே
சீவன்சிவ மென்று தெளி.

சிவபெருமானை நாடி, செங்கோல் செலுத்தும் அரசன் ஆணை யின் கீழ் மக்கள் நன்னெறி விளங்க வாழ்வாராயின் மாதம் மும்மாரி பெய்யும் என்று முற்று முணர்ந்தோர் கூறுவர். (பாட்டு 689: விளக்கம் காண்க). மனம் அடங்கி அவனையே வேண்டி திருவைந்

தெழுத்தை ஓதி அதன் உண்மைப் பொருளானவனையே அகநெகிழ்ச் சிந்தித்தால் மனத்தகத்துள் அழுக்கெலாம் மாற்றி பெம்பிரான், ஞானப்பொருளாய் நின்றவன், உண்மைப் பொருளான தன்னையே யறிவிப்பான். ஆன்மாவே அஞ்ஞான இருள்விட்டு நீங்கத் தானே சிவம் என்று அறியும். தன்னைத்தானே யறியும்,

693. தெளியவழி காட்டுஞ் சிவதொண்ட னென்பார்
பொழியுங் கவிமாரி போதம் —வெளியாக்கி
வேதாந்தஞ் சித்தாந்தம் வேறல்ல வென்றுலகில்
நாதாந்தங் காட்டும் நமக்கு.

அஞ்ஞான இருள் நம்மை விட்டு நீங்க, சிவதொண்டன் தரும் கவிகளைப், பொருளையுணர்ந்து பாடுங்கள் (357). பொருளை யுணர்தலே பொருள். அறிவை அறிவாலேதானறியலாம். உணவை அருந்தினவனுக்கே ருசி தெரியும். பசிதீரும். திருவைத்தெழுத்தினுண்மை விளங்கிச் செபிப்பதால் அவனேயாவன் (689). மறைமுடிவாம் வேதாந்தமும் முறை முடிவாம் சித்தாந்தமும் ஒரே தெய்வம்; சிவனெனுந் தெய்வம் போற்றி ஏத்தி சித்தாந்த முறை வழி பூசித்தறிவினலறியலாம் (14; 121); நெறிநின்றுர் மனம் ஒடுங்க நாதாந்தக் காட்சிப் பேறடைவார். ஒடுங்கிய மனம் தூய்மையாய் பொறை நிலை நிற்கும், சமாதி அடையும்., வீடு பேறடையும். தாயுமானவர் தருகிறுர்: இல்வாழ்வான் நெறி நின்று வாழ்ந்து ஈற்றில் நாதாந்தக் காட்சிப்பேறு, 'வீடு' அடைதல் எனும் பொருள் தருகிறுர்,

மாடுமக்கள் சிற்றிடையார் செம்பொன் ஆடை
வைத்த கனதனமேடை மாட கூடம்
வீடு மென்பால் தொடர்ச்சியோ இடைவிடாமல்
மிகுகதி வீடன்றே விளங்கல் வேண்டும்.

[41. பெற்றவட்கே 9—மற்றும் 10, 11 ங் காண்க]
[நாலாம் வரி 'வீடு' மோட்சவீடு]

122 சிவதொண்டன் சீர் தெரிமின்

நிலையிலாசிரியப்பா

693. அன்பே சிவமெனு மான்றோர் வாக்கை
யென்பே யுருக வெடுத்தெடுத் தோதும்
சிவதொண்ட னென்னுஞ் சிறுனைக் குழந்தை
சிவபெரு மான்றன் திருவரு ளாலே
எவரு முவப்ப யாழ்ப்பா ணத்திற்
பவவரு டத்துப் பன்னுமார் கழிமதி
அவதரித் தானவன் றனையனை வோருங்

கவனமாய்க் கண்ணே இமைகாப் பதுபோல்
வளர்த்து வந்தார் வருடமா றளவுந்
தளர்ச்சி யென்பது தானறி யாதே
பலன்கரு தாது பணியாற் றுதலே
நலந்தரு கரும யோகமென் றடியார்
அறிந்தே யாற்றின ராத லாலே
அடியே னவர்தம் மழகிய பொன்னடி
முடிமிசைச் சூடினன் முழுது முண்மையே.

ஆருயிர் தோறும் அதுவதுவாயிருக்கும் மெய்ப்பொருளானவனே, பரிவான்மாவாக விளங்கும் அம்மையப்பரை, சும்மா இருக்கும் அகம் சிவலிங்கவடிவாக விளங்கத் தன்னையும் அந்த அம்மையப்பராக விளங்கும் உலகையும் ஒன்றுகக் காண்போம், தன்னுயிர் போல் மன்னுயிரு : என்று காத்து, அன்பே சிவமெனும் உண்மை விளங்கச் சீவிக்கும் வழிநிற்கும் சிவதொண்டன் எனுஞ் சின்னக் குழந்தை அவதரித்தான்.

தளர்ச்சி யென்பது தானறியாது என்னிலையிலும் எக்கோலத்திலும் கர்ம பலன் கருதாதே நிஷ்காமிய கர்மம் சிருடன் விளங்க இளந் தொண்டன் இறைவன் ஆணைப்படி நின்று பணியாற்றினன். ஆனபடியால் ''அவருடைய பொன்னடியை'' ''முழுதுமுண்மை'' எனும் சிவதொண்டனை ஓங்கார மேடை மீது (656) பண்புடன் விளங்குபவனை, மெய்ப் பொருளென வணங்குவோம்.

123 சிவதொண்டனைத் தொழுமின்

வெண்பா

694. பலவருடம் மார்கழியிற் பார்தனிலே யெங்கள்
சிவனருளால் வந்துசிவ தொண்டன் — இவனையுடன்
ஏந்தி யெடுத்தணைத்தா ரின்போ டடியார்கள்
சாந்திஓம் சாந்திதத் சத்.

திங்களுங் கங்கையுஞ் சடையிற் தரித்தோன் உண்மை முழுதுமானவன் ஓம் எனும் திருமர்மறை தரும் உண்மைப் பொருளானவன் (696); 698; காண்க).

695. கண்ணேயிமை காப்பதுபோற் காத்த வடியவர்க்கு
வண்ணவா ழீசன் வரந்தருவான் — திண்ணமிது
சேருங்க ளொன்றுய்ச் சிவசிவா வென்றுகளி
கூருங்க ளெல்லாங் கொடுத்து.

சிவனடியார்கள் எல்லோரும் ஒன்று கூடி 'சிவ சிவ' எனும் மாமறைதரும் உண்மை விளங்க (138) சொல்வடிவான அம்மையையும் தன்னொளி கொண்டு அப்பால் நின்று இயக்கும் இறைவனையும், பரசிவான்மாவாகத் தொழுது வணங்கி எல்லாருங் கூடி ஆனந்தங் கொண்டாடுவோம்.

696. கொடுத்தார்க்கு முண்டோ குறைதா னவரை
யடுத்தார்க்கு முண்டோ வடுக்கல் — எடுத்தான்
தலைபத்துந் தத்தளிக்கச் செய்த சிவனைத்
தலையால் வணங்குந் தமர்க்கு.

லங்காபுரியைத் தன் தலைப்பட்டணமாகக் கொண்டுபல தேசங்களையாண்டான் இராவணேஸ்வரன். அவனுடைய தாயார் கைலாசத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானையும் உமாதேவியாரையும், காலையும் மாலையும் வணங்க வேண்டும் என்று வேண்டினள். அரக்கர் கோனும் இசைந்து போய் கயிலைமலையைத் தன் அம்பால் குத்திப் பேர்த்தான்; சிவபெருமான் 'தன் பெருவிரலை' ஊன்றினராம். அரக்கனுடைய பத்துத் தலையுந் தத்தளித்தனவாம்; ஓடினன். சுந்தரர் கூறுகிறார்.

பற்றி வரையை பெடுத்த அரக்கன் இற்று முரியவிரலால் அடர்த்தார்
எற்றும் வினைகள் தீர்ப்பார் ஒதம் ஒற்றுத்திரைவாய் ஒற்றி யூரே. (7-91-9)

697. ஆறு வருடமவ னன்புடனே செய்ததொண்டு
கூறுந் தரமோ குவலயத்திற் — றேறீர்
எழுமின் விழிமினெல்லா மீசன் செயலாய்த்
தொழுமி னதுவே சுகம்.

ஆருயிர் தோறும் அதுவதுவாய் நின்றொளிரும் எம்பெருமான், சிவனடியார்கள் யாவரும் வேண்டிய பிரகாரம். அவருடைய வினையின் நிகழ்வால் சிவதொண்டன் வழிகாட்டும் வழி நின்று, அவர் திருவடிப்பேறு அடையும் வண்ணம் வினைமுதலாம் முதல்வன் ஆணையிட்டபடியால், ஈசன் செயலாய்த் தொழுமின்; அதுவே சுகம்.

124 சிவதொண்டர்க்கு விடுத்த வேண்டுகோள்

அகவல்

698. இளம்பிறை சூடிய எந்தை பெருமான்
வரம்பெறுந் திருவடி வாழ்த்தி வணங்கி
அன்னை தந்தை யாசா னடியார்
என்னு மிவர்களை யிணையடி பணிந்தே
ஒருபொல் லாப்பு மில்லையென் றோதிய
குருபரன் திருவடி கும்பிட்டுக் கொண்டிங்

கறஞ்செய விரும்பென ஔவைப் பிராட்டி
சிறந்த மொழியை நினைந்து சிந்தையிற்
சிவதொண்டன் பணிக்குத் துணைசெயுந் தொண்டர்
எவர்க்கும் யாமீண் டியம்புதுங் கேண்மோ!
அடியார் பலரிவ் வாண்டே ழளவும்
மிடியறக் காசு மிகவு மனுப்பினர்
அந்தநா ளடியார் தொகையோ குறைவாய்
வந்ததா லடியோம் வாளா விருந்தனம்
இனிமே லெவரும்,
வருடந் தொறுமூன்று ரூபா வழங்கிற்
கருமங் கடைப்பிடித் தாற்றுதுங் காண்க.

இளம்பிறை குளிர்ச்சி கொடுப்பதும் வளருந் தன்மையு முடையது: அறிவு வடிவான எம்பெருமானே சித்தாகாசத்தே சும்மா இருக்கும் அசத்தினராய் கண்டுந், தேறித் தெளிந்து பேரானந்தம் பெருகவும், அறியா அறிவில் அலிழ்ந்தேக சித்தமாய் (394) நெறியாம் நீடருள் திருவடிப்பேறு எனும் நந்தி தரிசனம் அருளும், மூத்தோரும் அறிஞரும் ஒன்று சேர்ந்து விளங்கும் பரசிவான்மாவான அம்மையப்பரைத் தரிசித்தும்; பரசிவ வணக்கஞ் செய்தும், (சிவானந்தலஹரி சூ 1. காண்க). இவையாவுந் தரும் சிவகுருவின் பாதங்களை நமஸ்கரித்து அறவழி நின்றுழுக (493). ஔவை சொன்மொழி அறஞ் செயவிரும்பு உச்சிமேற் கொண்டு சிவதொண்டன் பணிக்குத் துணை புரிய ஏழு வருஷமும் துணைபுரிந்தது. உம்கடமை யாற்றினீர்.

வெண்பா

699. போது மளவும் பொருளீந்த மெய்யடியீர்
ஏதுங் குறைவே யிலைநீங்கள் — ஓதுமென்
சிந்தை களிகூரச் சிவதொண்டு செய்வதற்குத்
தந்திடுவீர் மூன்றுரூபா தான்.

125. வாழ்க சிவனடி

700. வாழ்க சிவனடி வாழ்க சிவனடி
வாழ்க சிவதொண்டன்.

சிவதொண்டன் வழிநின்று, அருள் புரியும் திருவடிப்பேறு அடையப் பெறுவோம். சிவதொண்டன் நேயர் சிவனடியார் எல்லோரும்; சிவதொண்டன் என்றும் சிவதொண்டில் (291) சித்தியடையட்டும்.

701. பல்வினை போக்கி நல்லருள் ஆக்கிப்
பல்குக சிவதொண்டன்.

ஆருயிர்களை அவரவர் இருவினையினின்றும் இடர் நீக்கி யாண்டருள் புரிதலே (493) தண்ணளி வாய்ந்த எம்பெருமானின் படைப்புத் தொழிலின் (380) நோக்கம். அவ்வண்ணம் சிவதொண்டன் நேயர்கள் சிவனடியார்கள் சிவதொண்டன் வழி நின்றருள் புரியும் நெறிநின்று, அறவழி நின்று இருவினையும் மும்மலமும் போக்கி திருவருள் கைகூடத் தொண்டாற்றுங்கள்.

702. பாழ் செயும் மாயா காரியம் அகலப் பணிசெய் சிவதொண்டன்.

நஞ்சனைய காமவேட்கையிலழுந்தியும் மாயாகாரிய உடம்பு நிலைத்தென நினைந்து, நானெனும் ஆணவ முனைப்புக்கொண்டு மண்பெண்பொன் எனும் மூவாசை வழிப்பட்டு அலையாமல், அறவழி நின்று சிவதொண்டு செய்து (291) பணியாற்றி முப்பாழும் விட்டகல திருவடிப்பேறு அடைவீராக.

703. பக்தர்கள் எல்லாம் பாட ஆடப் பரவுஞ் சிவதொண்டன்.

நற்சிந்தனையெனும் நல்லமிர்தினைப் பொருளுணர்ந்து அதன்வழி சிவதொண்டு செய்தும் அறவழிநின்றும் பொருளுணர்ந்து, பாடிப் பாடி அந்நினைவே கொழுத்து விளங்க அப்பொருளேயாகி, பொறை நிலையடைந்து சமாதியில் அப்பொருளான சிவனேயாய் பரவுஞ் சிவதொண்டு.

704. ஊழ்வினை போக உள்ளொளி ஓங்க உயர்க சிவதொண்டன்

[விளக்கம் (701) காண்க]. இருவினையும் மும்மலமும் விட்டு நீங்க அறவழி நின்று புத்தியாகிய வாய்க்கால் வழியே சிவானந்த வெள்ளம் பெருக உயர்ந்த நீர் நிலையாகிய உள்ளத்தே சிவலிங்கம் தோன்றும். சிவதொண்டன் உள்ளம் கோயிலாகவும், உயிர் சிவலிங்கமாகவும் (608) அருள் புரிவன் தண்ணளி வாய்ந்த எம்பெருமான்.

705. உண்மை முழுவதும் என்றுரை செய்யும் ஒருவன் கழல்வாழ்க

உயிரில் பொருள் உயிருள் பொருள் எப்பொருளிலும் எங்கும் நீக்கமற நிறைந்து அவற்றின் அருட்கண்ணாக விளங்கும் முழுமுதல்வனும் தண்ணளி வாய்ந்த எம்பெருமான் அருள் தந்து நாமெல்லோரும் அவனுடைய திருவடிப்பேறு அடைவோமாக.

126 உறுதி மொழியிதனை அறிவீரே

706. சிவதொண்டன் நிலையத்திற் சேரீர்
தியானஞ் செய்துகடைத் தேறீர்
மவுனமாய் யிருந்திடப் பாறீர்
மந்திர மிதுவெனக் குறியீர்,

பேச்சற்ற அந்நிலையே மவுனம். மவுனகுரு அருளிய மோனமே பேரின்பப் பேரறிவு. மனம் அடங்கி பொறிநிலையெய்தி நினைத்த பொருளுந்தானும் ஒன்றுகி நிற்கும் நிலையே சமாதி. ஆசைகளும் இல்லை. மனத்தில் தோன்றும் அலைகளும் இல்லை. தோன்றின்இருக்கும் அழுக்குகளைக் கழுவிப் பின் சும்மா இருக்கும்; அறிவு வடிவாக விளங்குவதே ஆன்மா என்றும் மகிழ்வுதலே அதனியல்பு. அந்த மோனமே பேரின்பப் பேரறிவு. திருவருள் கைகூடியே மோனநிலை யடையலாம். திருவருளில் அடக்கமாகவுள்ள அடியேனும் அதுவே; ஆன்மாவே. வான் முதலாம் ஐம்பூதங்களின் இயக்கங்களும் அதுவே, ஓங்கார மேடையில் காணப்படும் பாங்கான வாழ்வே 656) இறைவனே தன்னருள் கொண்டு செய்யும் தொழில்களே; மவுனமாயிருக்கும் அடியேனை இருவினையுஞ் சேராது உலகினில் நாம் காணும் இயற்கை வடிவே. ''சும்மா இரு''

''சுகக் கடல் பொங்கச் சொல்லுணர்வு அடங்கச்
சும்மா பொருந்திடு அந்த அருணைசலா''
(ரமணமகரிஷி. அக்ஷரமணமாலை 31).

தூங்காமல் தூங்குஞ் சுகம்வந்து வாய்த்தது
'சும்மா விருந்தேனடி — குதம்பாய், சும்மாவிருந்தேனடி
நற்சிந்தனை (657). (விளக்கம் காண்க).

துள்ளித் திரியும் மனத்தை யடக்கினால்
துரிய மடைந்திடலாம் — குதம்பாய்
(நற்சிந்தனை 682). விளக்கம்

707. அவனிவ னெரென அறியீரோ
ஆன்மா நித்தியம் தெரியீரோ
உவமை கடந்தவின்பம் உள்ளீரோ
உண்மை முழுதுமெனக் கொள்ளீரோ

சிவபெருமானை அவனென்றும் ஆருயிர்களை இவன் என்றும் குறிக்கும் குறிப்பு யாண்டும் பயிலப்பட்டுள்ளது. [சிவஞானசித்தியார் உணரத்தருவது ''அவனிவனுய் நின்றமுறை ஏகனுகி, அரன்பணியில் நின்றிடவும் அகலும் குற்றம்''] அதை உணரவே 'அவனிவனுர்' ஆருயிர் தோறும் அதுவதுவாய் நின்றுளிரும் எம்பெருமானும் அவன் அருட் கண்ணுக நின்று இயக்கும் எண்ணில் பலகோடி உயிர்

கள் எத்தனையோ அத்தனையும், சிவபெருமான் எனும் மெய்ப் பொருளும், மாயாகாரியப் பொருளாய் அவனுலே நின்றுணரத்தரும் உலகமும், அவனிவனுரென அறியீரோ? ஆன்மா, சிவான்மா, மாயா மயக்கம் நீங்கிய உயிர், அறிவுப் பொருள் (332; 333) நித்தியமானது. சும்மாஇருக்குஞ் சுகம் கிடைக்க மும்மலனஞ் சாதிக்கும் சாதகன் அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் ஒடுங்கி நிட்டை கூடுவன். தில்லைத் தரிசனங் காண்பான். இன்பக் கடலில் ஆழ்ந்து கிடப்பான். யோகசுவாமியார் தாம் தம் சிவகுருவை முதல் தேரடியில் கண்ட போது ''சிவனருளே நோக்கென்றுன்'' நோக்க நொடியளவிலே யின்பம் தேக்கிற்று; 'உவமை கடந்த வின்பம்'' என்று தருகிறூர் (489) அந்த மெய்ப்பொருளானவன் தரிசனமே 'முழுது முண்மை' எனும் பொருள்; மாயை நீங்கிய பரசிவான்மாவாகிய அம்மையப்பரைத் தான் தரிசிக்கிறேம். அறிவுப் பொருளே அறிவினுலே காண்கிறேம் ['பரசிவவணக்கம்' சிவானந்தலஹரி சு 1. இல் காண்க].

708. ஐம்பொறி வழியினிற் செல்லாதீர்
ஐம்புலன் தன்னை வெல்வீரே
வெம்பகை தன்னை விடுவீரே
வேதாந்த சித்தாந்தந் தொடுவீரே.

ஐம்பொறிகளின் வழிச் செல்லாமலும், மனத்தின் ஒரு நிலையாகிய தரக்கி யெண்ணும் சித்தமும், நினைந்து ஐயுறும் மனமும், முனைந்து எனை முற்பட எழும் ஆங்காரமும், கொள்ளவும் தள்ளவும் வினைக்கிடாக ஆய்ந்து உறுதி செய்யும் புத்தியும் என்று சொல்லப்படும் அந்தக் கரணங்கள் நான்கும் ஒவ்வாதன செய்விக்கும் பேய்கள் உம்மைப் பீடித்து ஆட்டாமல், துள்ளும் மனத்தை இயமம் நியம இவை பொறைநிலை சமாதி (682) என்னும் வேதாந்த சித்தாந்த முறை நின்றடக்குங்கள். அடங்கி பொறைநிலை எய்தி சமாதி எய்தி, அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நந்தி தரிசித்து நிட்டைகூடி தில்லைத் தரிசனத்தில் ஆழ்ந்து கிடந்து இன்பம் அனுபவிப்பீர்.

709. ஒருபொல்லாப்பு மில்லை யுணர்வீரே
ஓம்சிவாய நமவெனத் தெழுவீரே
உருகியுருகி இன்பம் பெறுவீரே
உறுதி மொழியிதனை அறிவீரே.

[முன் விளக்கம் தொடர] தில்லைத் தரிசனங் கண்டு சிவன் முத்தனுக, மதம் பிடித்த யானையாகிய மனத்தைக் கட்டி (692) ஆணவ மலம் நீங்க 'சிவாயநம' என்றுஞ் செபித்தே சாயுச்சிய பதவியடைந்த மெய்யன்பன் (5 4) மூப்பதமுங் கடந்த ஞானபதமடைந்து (355)

356) யானும் உலகும் ஒன்றுபட்டு (348; 349) தாயின் மடிமீது வினையாடும் குழந்தைபோல் சஞ்சலமற்ற அன்புடன் உலகில் வாழும் சீவன் முத்தன் ஒரு பொல்லாப்புங் காணுன். (516 தாய் குழந்தைக்கு ஒரு பொல்லாப்புஞ் செய்யாள். குழந்தையும் அவ்வாறே.

127. செல்வக் குருநாதா

710. செல்வக் குருநாதா ! செல்வக் குருநாதா
சிந்தைதடு மாறுதெடா! திருவருளைத் தந்திடெடா.

முதல் முறை உனைக் கண்ட பொழுது என் மனத்தில் உண்டாகிய சமாதி நிலை எய்தவும் (489), உவமைகடந்த இன்பம் நாம் பெறவும் உன் திருவருள் வேண்டும். மனம் அடங்கி நிட்டைகூட வேண்டும்.

711. அல்லலெல்லாம் நீக்கி யாளாக்க வேண்டுமெடா
எல்லையில்லா வின்பத்திலே யெனையிருத்தி
வைத்திடெடா.

உள்ளத்தை ஒவ்வாது துன்புறுத்தும் மாயாகாரிய மயக்கம் என்னை விட்டு நீங்க உன்னருள் வேண்டும். அஞ்ஞான இருள்விட்டு நீங்கச் 'சிவன்செயல்' என்னுந் திருமாமறை தரும் 'சிவசிவ' எனும் மந்திரம் பொருளுணர்ந்து, உருவேறவே ஜெபிக்க உன் திருவருள் வேண்டும். துள்ளித் திரியும் மனம் அடங்க இயமம், நியமம் எனும் சித்தாந்த முறை (682) நான் வழுவாது நிற்கத் திருவருள் வேண்டும். நிட்டைகூடித் தில்லைத் தரிசனத்தில் பேரின்பப் பேறு அடைய திருவருள் வேண்டும்.

712. கல்லை நிகர்த்தமனங் கரையவரந் தந்திடெடா
தொல்லைவினை நீக்கிச் சுகமெனக்கே யீந்திடெடா.

ஊழ்வினைப் பழக்கத்தால் மாடுமக்கள் சிற்றிடையார் செம்பொன் ஞை. வீடு எனும் நிலையற்ற பொருட்களையெல்லாம் நிலையுள்ளது என்றெண்ணி உன்னுடைய நாமத்தைச் சிறிது மெண்ணுத கல்லை யொத்த மனம் உன்னை நினைக்க அருள் வேண்டும். காணப்படும் வடிவங்கள் அனைத்தும் உண்ணின்றியக்கும் நின் திருவருள் வடிவமெனக் கருதி எப்பொருளையும் அருட்கண்ணுக நோக்கும் உம்முடைய அருளீந்து அப்பொருள் எல்லாவற்றிலும் திருவருள் வடிவாக விளங்கும் உன்னையே காண அருள்தந்திடவேண்டும். சாக்ஷி, ஆமோதிப்பவன், தாங்குவோன் அனுபவிப்பவன் எனும் நாலு நிலைகளிலும்

நின்று உன்னை உணர்ந்தறிய வரம் வேண்டும். நாடக மேடையில், நாடக ஆசிரியரான வினைமுதலாம் முதல்வன் [படைப்பு 380] எழுதிய நாடகத்தை செவ்விதமாக நடித்துத் திறமை காட்ட அருள் வேண்டும்.

713. நீயேநா னென்னும் நிச்சயத்தைக் காட்டிடெடா
பேயேபோல் நானிருந்து பிரமைகொள்ள
வைத்திடெடா.

(முன் விளக்கம் தொடர] எப்பொருளும் நீயெனவே கண்டும் இன்புற்றும் நானும் அதனுள் அடங்கவே நந்தி தரிசனங்கண்ட மெய்யன்பன் சீவன் முத்தனை (709) என்னையும் உலகையும் ஒன்றுகவே அவனிவனென்னுதே மெய்ப்பொருளாகக் காண அருள் தாடா உன்மத்தம் பிடித்தே உன்னைக்காண அருள்தாடா.

714. அங்குமிங்கு மோடி யலைந்து திரிகிறேன்டா
எங்குமுனைக் காண வெனக்குவரந் தந்திடெடா

ஊழ்வினைப் பழக்கத்தால் மனம் ஒரு நிலைவாயிருந்து உன்னைக் காண விடாமல், பல தொழில்களிலும் பலபக்கங்களிலும் ஓடி அலையும் அம்மனத்தை, ஒருவழிப்படுத்தி எங்கணும் பரவெளி நிறைந்திருப்பது போன்று எவ்விடத்தும் எத்தொழிலை நோக்கினும் எவ்வுயிரிலும் அவ்வுயிராய் அங்காங்கே நின்றருள்வதும் நின்திருவருளே, எனும் உண்மை என்னுள்ளத்தே சிறந்து விளங்க அருள்தாடா.

715. வலைப்பட்ட மான்போல் மயக்கமிக வாகுதெடா
சிலைப்பட்ட பாண்டம்போற் சித்தஞ் சிதறுதெடா.

அறியாமை யாகிய அகவிருளை ஓர் வீடாக்கி பின்னலைப் போல எளியேனுடைய அறிவினைச் சுருங்கச் செய்யும் இம்மாயாகாரிய உலகம், சிற்றிடையார், செம்பொன்னுடை மாடு மக்கள் வீடு இவற்றின் மாயை மயக்கம், யந்திரத்தில் சுழன்று கொண்டிருக்கும் பில்லுப்போல், என் சிந்தையை ஒருவழிப்படவிடாது தாலத்துக்குக் காலம் சிதறடிக்கிறதெடா. ஞானத்திரளாய் நின்ற பெருமான் அல்ல அடியார்மேல் ஞானத்திரளை நீக்கும் மெய்ப்பொருளானவன், அந்தந்த நேரங்களில் தன்திருவருளினால் உண்மையை யுணரச் செய்து காப்பாற்ற வேண்டுமே.

716. எனக்குள்ளே நீயிருக்கும் எழிலைத்தான் காட்டிடெடா
உனக்குள்ளே நானிருக்கு முண்மையிலே
மாட்டிடெடா.

ஆருயிர்கள் கட்டுநிலையில் இருவினைத் தொழில்களை ஈட்டலுந் துய்த்தலுஞ் செய்து, கட்டறுத்தற் பொருட்டு முதல்வன் அவ்வுயிர்களினுள் மறைந்து நின்றருள்வன் அம்முறையில் ஆருயிர் தனக்குள் முதல்வன் இருக்கிறான் என்றும், ஒட்டுநிலையில் திருவடித்துய்ப்பின் ஆருயிரனைத்தும் பரசிவான்மாவாகிய அம்மையப்பரில் ஒடுங்குந் தன்மையிலும், ஒன்றுமறநிற்கும் ஐந்தெழுத்துச் ஜோதியில் எல்லாம் ஒடுங்கி, அவனேயாய் விளங்குவதாலும், உனக்குள் நானிருக்கு முண்மையிலே மாட்டிடெடா என்கிறார். தாயுமானவர் தருவதைக் காண்க.

எனக்குள் நீஎன்றும் இயற்கையாப் பின்னும்
உனக்குள் நான் என்ற உறுதிகொள்வ தெந்நாளோ.
என்னாட் கண்ணி 13 அறிஞர் உரை. 13.

717. பேசாத மந்திரத்தின் பெருமைநீ தந்திடெடா
ஆசர பிசாசை யகற்றவழி காட்டிடெடா.

சித்த மௌனம் செயல் வாக்கெல்லாம் மௌனம் சுத்த மௌனம் என்பால் தோன்ற சும்மா இருக்குஞ் சுகம் உதயமாக மோன குருவே எழுந்தருள அகஞ் சிவலிங்கமாக விளங்கும் பேசாத மந்திரத்தின் பொருளே அது. நிட்டை கூடியே தில்லைத் தரிசனங் கண்டால் பாச பந்தக் கயிறு எரிந்துவிடும். ஆசாபிசாசுவிட்டு நீங்கும்,

1. "குறியாக் குறியினிற் கூடாத கூட்டத்து" [365 இல் காண்க].
2. "குறியுங் குணழமறக் கூடாத கூட்டத்து
அறிவறிவாய் நின்றுவிட ஆங்கே — பிரிவறவுஞ்
சும்மா விருத்திச் சுகங்கொடுத்த மோனநின்பாற்
கைம்மாறு நான் ஒழிதல் காண்."

தாயுமானவர் உடல் பொய்யுறவு 80.

718 என்னெ டுடன்பிறந்தா ரெல்லோரும் மாண்டார்கள்
உன்னுறவே யல்லாம லோருறவு மில்லையெடா

ஆன்மா ஐம்புல வேடர் கூடிய அந்தக் கரணமும் ஒன்று சேர்ந்த ஒன்பது சேதனங்களுடனே பிறப்பெடுத்தது. அந்த உடன் பிறந்தாரெல்லாருங் கூடியே புருடனுண்டாகி அவர்கள் தனித்தியங்கும் தொழில் புரியாதே மாண்டார்கள். புருடனை நான் திருவைந்தெழுத்தை ஓதியுஞ் சும்மா இருந்தும் உன்னுறவல்லால் வேறுறவு காணேன்;

"முப்பாழும் பாழாய் முதற்பாழும் சூனியமாய்
அப்பாழும் பாழாய் அன்புசெய்வ தெக்காலம்"

பத்திரகிரியார்; 114.

வெண்பா

719. ஒருநேரம் நெல்லரிசி யூணை அருந்தின்
வருமோ வறுமைபிணி மாந்தீர் — கருதுவீர்
காயத்தைத் தேற்றிக் கடவுள் திருவடியில்
நேயத்தை வைப்பீர் நிறைந்து.

128 உன நீனைவல்லால் இல்லை

இராகம் — காபி. தாளம் — ஆதி

பல்லவி

உன்நினை வல்லால் இல்லை
உயிர்த்துணை வோனே — உம்பர் கோனே

அநுபல்லவி

அன்னைபிதாக் குருநீயே
அண்டினேன் வன்மமேனே — வினைதானே (உன்நினை)

சரணங்கள்

720. பொன்னனம் பலவாணனே
புலவர்தம் பெருமானே
கன்னலே கட்டித்தேனே
கனிரசமே யெம்மானே (உன்நினை)

அடியேனை யாட்கொண்டருளத் திருமேனி கொண்டெழுந்தருளி வந்த தண்ணளி வாய்ந்த எம்பெருமானே! ஆருயிர் தன்னில் உள்ளின்று இயக்குந் தன்மையினால் அவ்வப் பொருட்களில் இருப்பவன், அனைத்துயிரிலும் அருட்கண்ணுக நின்று அப்பாற்பட்டவனுக அப்பொருட்களின் இருவினையினாலும் பாதிக்கப்படாதே இயக்குந்தன்மையினாலே ஏகனுக தேவர்கோனுக விளங்குபவனே சிற்றுயிர்க்கு உயிர்த்துணையாக நின்று இயங்குவன்.

உலகியல் வாழ்க்கைக்கு உதவியாக வழிநின்று உதவிபுரியும் தாயும் தந்தையுமாகவும், திருவருள் வடிவாக எம்பெருமானின் வழி நின்று உன்னைவந்தடைய வழிகாட்டியருளும் ஞானகுருவாகவும், நின் றருள்புரிய உன்னை வந்தணைந்தேன்; ஆனால் வினைப்பயன் என்னை விட்டு நீங்காத காரணத்தாலோ என்னை என் வல்நெஞ்சம் இன்னும் உருக வில்லையே; ஆதலால் தண்ணளி வாய்ந்தவனே! உன்கருணை வெள்ளம் பெருக வேண்டும்.

உன்னை முற்றுமுணர்ந்து நீயே எப்பொருளிலும் ஒட்டி நின்று அவற்றின் இருவினையும் சாராமே ஏகனுகவும் தனித்தும் உள்ளும் புறம்பாகவும்நின்றுஇயங்குகிறீர்அத்தன்மையினால் அவற்றை உணர்விக்

கும் ஞானக்கண், வினைப்பயன் எனும் அம்பலத்தையும் நீ இருவினையுஞ் சாராமே அப்பால் நின்று இயக்குவதையும், அந்த உணர்வினால் வந்தவினையும் மோட்சவீடு பொன்னம்பலத்தையும், பொன்னம்பல வாணனையும், புலவர்தம் பெருமானையும், தண்ணளிவாய்ந்த கற்கண்டோ கட்டித்தேனோ கனிரசமோ எனும் சுவையளிக்கும் ஏகனேகன் மெய்ப்பொருளான எம்பெருமானையும் அறியத் தருகிறீர்.

721. என்னகச் சோதியே
இனியுன் பரிகதியே
இன்பசா கரமோன
னெனும்வடிவே னென்கோனே. (உன்நினை)

சும்மா இருக்கும் அகம் உதயமாக, அகம் சிவலிங்க வடிவாக விளங்கிற்று. முக்கண் எம்பிரான் சோதிவடிவான, தில்லைத் தரிசனங் கொடுக்கும் பொன்னம்பலவாணனே கூத்தியற்றும் உண்மையை ஞானக்கண் அருள்புரிகின்றது. உலகமேடையில் நாடகாசிரியரான வினைமுதலாம் முதல்வன் எழுதிய நாடகத்தை (380) இறைவனுக்குத் திருப்திகரமாக நடிப்பதே, பணிசெய்வதே, நிஷ்காமியகர்மம் புரிவதே எம்கடன். அதே, சும்மா இருக்கும் சுகம். பொன்னம்பல வாணன் அருள் புரியும் கட்டித்தேன் போன்ற பேரானந்தத் தெள்ளமுதம்.

722. புன்னெறி செல்லும் பொல்லாப்
புந்தியை வென்றுமேலாம்
நன்னெறி செல்லவைத்து
நமக்கருள்தா எங்கோனே (உன்நினை)

புண்மை தரும் புண்ணியச் செயல்களைச் செய்தும், சிற்றின்ப உணர்ச்சி தரும் எழிலுடைய உள்ளம் பூரிக்கவும், அவற்றை உண்டாக்கும் புத்தியும், நானெனும் ஆணவமும் அடங்கவைக்க; புத்தியாகிய வாய்க்கால் வழியே சிவானந்த வெள்ளம் பெருக; பார்வதி தேவியே, மூடிவிலாற்றலுடைய இயற்கைவடிவானவள் செயல்புரிய நாம் பணி செய்ய 'நீ நெறி கண்டுள்ளம் நின்மலனுகுமே' எனும் ரூபம் எங்கும் பிரகாசிக்க.

723. உரையற்ற வூமர்போலாய்
உள்ளமு வந்துமேலாம்
தரைதனில் யோகசுவாமி
தாள்கடைத் தேற, ஈடேற (உன்நினை)

நின்மலனுய் உள்ளம் பிரகாசிக்க உரையிறந்த அன்பர் உள்ளத்தே சித்தமவுனஞ் செயல்வாக்கெல்லாம் மவுனம் சுத்தமவுனந் தோன்றும் ஏத்திக்குந் தாளுகி அன்பர் உள்ளத்தே யூறித் தித்திக்கும் கரை யிறந்த இன்பக் கடல்போன்ற தண்ணளி வாய்ந்தவன் உண்மை முழுது மான எம்பெருமானின் திருவருள், என்றும் யோகசுவாமி தரை தனில் கடைத்தேற ஈடேற, கொழிப்பான். அவன் நினைவேயன்றி வேறு நினைவே கிடையாது.

129 ஒழுக்கம் விழுப்பந்தரும் தம்பிமாரே

724. ஒழுக்கம் விழுப்பந்தருந் தம்பிமாரே
ஓமென்று சிந்தைசெய்வீர் தம்பிமாரே
அழுக்கா றவாவெகுளி தம்பிமாரே
ஆன்மாவைப் பந்திக்குந் தம்பிமாரே
வழுக்கி விழுந்தாலுந் தம்பிமாரே
மலரடியைச் சிந்தைசெய்வீர் தம்பிமாரே
பழுத்த வடியருடன் தம்பிமாரே
பாடிப் படியவேண்டும் தம்பிமாரே
மூப்புவந் தடையமுன்னே தம்பிமாரே
முழுதும் அறியவேண்டுந் தம்பிமாரே.

அஞ்சாமை, உள்ளத்தூய்மை, ஞானத்திலும் யோகத்திலும் நிலைத்திருத்தல், ஈகை, பொறிகளை யடக்குதல். யாகம், சாஸ்திரம் படித்தல் தபசு, நேர்மை, தீங்கிழையாமை, உண்மை, சினமின்மை, துறவு, அமைதி, கோள் சொல்லாமை, உயிர்களிடத்து இரக்கம், பிறர் பொருளை விரும்பாமை, இனிமை, நாணம், மனம்சலியாமை, தைரியம், பொறை, மனவுறுதி, தூய்மை, வஞ்சகமின்மை, செருக் கின்மை ஆகிய இவைகள் தெய்வ சம்பத்துடன் பிறந்தவனுக்கு இயல்பாகின்றன, அர்ஜுனு. கீதை [16—1-3]

இவைகள் இயல்பாக அமைந்துள்ள மெய்யன்பன் நல்லொழுக் கமுடையவன். 'ஓம்' எனும் உண்மைப் பொருளை [226; 656;] உணர்விலுணர்ந் தறிந்து சிந்தை செய்து கொழுத்து விளங்கும் நினைவாலே, பொறைநிலையெய்திசமாதியடைவன். ஓம் எனும் உண்மைப் பொருளாகவே தம் அகம் விளங்கவும்; அழுக்காறவா வெகுளி முத லியன, ஆன்மாவாக விளங்கும் அகத்தைத் தள்ளிக் கீழே விழுத்து மாதலால், மனதைப் பக்தி எனும் சங்கிலியினுலே திருவடிப்பேறு எனும் கட்டுத்தறியில் அறிவு எனும் யந்திரத்தினுல் வேகமாக இழுத் துக் கட்டுங்கள்.

முன்னராகவே திருவடியுணர்வைப் பெற்று பக்தி எனும் கொடி திடசித்தம் எனும் கொம்பரிலே படர்ந்து முக்தி எனும் பழத்தைத் தரும் அருந்திப் பால்பசுவாக விளங்கும் பழவடியார்களுடன் கூடி ஒரேமனதாய் 'ஓம் சிவாய நம' எனச் சிந்தித்தும் திருமுறைகளை ஓதியும் இறைவனைப் பணிந்தேத்து எடுத்த இந்த உடம்பு அழிந்து போக முன்னரே உண்மை முழுதுமென ஓதும் பாதார விந்தத்தை யடைய (300) வேண்டும்.

724 தொடர்

நாப்பி...க்கப் பொய்யுரைத்துத் தம்பிமாரே
நாட்டிற்பொருள் தேடவேண்டாந் தம்பிமாரே
ஆதியந்தம் நமக்கில்லைத் தம்பிமாரே
ஆன்மாவே நாங்கள்காணும் தம்பிமாரே
ஓதி யுணரவேண்டுந் தம்பிமாரே
உய்யவழி யதுகாணுந் தம்பிமாரே
சாதி சமயபேதந் தம்பிமாரே
சங்கற்ப மென்றறிவீர் தம்பிமாரே
வாழிவாழி சிவன்நாமந் தம்பிமாரே
மனசாரச் சொல்லுங்கள் தம்பிமாரே
வாழிசிவ னடியார்கள் தம்பிமாரே
மன்னவனுஞ் செங்கோலுந் தம்பிமாரே.

நிலையில்லாது சென்று கொண்டிருக்கும் உலகமே பெரிதெனக் கொண்டு நாவானது குழறு குழறென்று பொய்யும் மெய்யும் இடை விடாது சொல்லியும், அழுக்காறு அவா முதலியவற்றால் மனமும் கட்டுப்பட்டு, உலைந்து அலைந்து நாம் பணந்தேடி என்னபயன். அதை ஒழித்து விடவும். ஆதியும் அந்தமுமில்லாத அறிவுப்பொருளே நாம்; நாம் ஆன்மா; இந்தமாயா காரிய உடம்பல்ல; திருவைந் தெழுத்தை, அதன்பொருளை நன்குணர்ந்து, சிந்தித்தும் ஓதியுணர்ந் தும், வேறு நினைவொன்று மின்றி அந்நினைவாகவே நாம் பொறை நிலையெனும் உய்யும்வழி நின்று திருவடிப்பேறு அடையவேண்டும்.

சாதி சமய பேதமெல்லாம் தொடர்பான எண்ணங்கள்; அந்த வாதனையிலும் பேதவிபரீதங்களிலுமீடுபடாமல் எல்லாப் பொருட் களிலும் உள்ளும் புறம்புமாக நீக்கமற நிறைந்து விளங்கும் தண் ணளிவாய்ந்த எம்பெருமானின் நாமம், 'சிவ சிவ' எனும் மாமறை தரும் உண்மையை, உணர்ந்துணர்ந்து ஜெபிப்போமாக; ஈடேறுவோ மாக. அவ்வண்ணம் சிவநாமம் என்றும் தியானித்து சிவனை மற வாதே வாழும் சிவனடியார்கள் வாழ்க; மன்னவனுஞ் செங்கோலும் வாழ்க.

பொய்யனைத்தையும் விட்டவா புந்தியுள்
மெய்யனைச் சுடர்வெண்மழு வேந்திய
கையனைக் கச்சியேகம்பம் மேவிய
ஐயனைத் தொழுவார்க்கில்லை யல்லலே.

அப்பர். (5-48-9).

130 மலர்

725. மரத்திலே மலராத வாசமலர்
வாசவனும் வைத்து வளர்த்தமலர்
சிரத்திலே எப்போதுஞ் சேரும்மலர்
தீயமணம் வாராமல் காக்கும்மலர்
கரத்திலே நாமெடுத்துக் காணும்மலர்
கதிக்குவழி யிதுவென்னக் காட்டும்மலர்
வரமென்னுங் கொடியிலே பூத்தமலர்
வாணிளெல்லாம் வாடாத மாமலரே.

மலர்மேல் அண்ணல்=பிரமன். இருதயக் கமலத்திலே, சித்தத்திலே எண்ணங்கள் உற்பத்தியாவன; எண்ணங்களே படைப்புக் கடவுளர்க்கு ஆதாரம். 'சிவாயநம' எனும் எண்ணங்கள் உண்டாகி வளர்தலே இறைவனடி; சும்மா இருக்கும் அகம் பாசபந்தக் கயிறு அறுந்து சும்மா இருக்கும் நிலையில் இறைவனிடந் தன்னை ஒப்படைத்தும், 'சிவாய நம' எனும் பொருள் தானே எழுந்தருள சிந்தித்துச் சிந்தித்து எண்ணம் மலர்ந்து சும்மா இருத்தலே அகந்தோன்றுமிடம்;

மரத்திலே மலராது இருதயகமலத்தில் மலரும் மலர்; இந்திரன் தன்னுடைய ஆசைகளை அறுத்து இருதய கமலத்தே ஒடுங்கிய உயிர்க் காற்று கீழ்நோக்கிச் சென்று குண்டலி சக்தியுண்டாக்கி சித்திகளைத் தர அவற்றை மலரவைத்த மலர்; எண்ணங்கள் யாவும் எப்போதும் மனத்திலே தோன்றுவன; இறைவனுடைய நாமம், 'சிவாய நம' எனும் எண்ணங்கள் மலர மலர தீயகுணம் உயிரை வந்தணுகாது காக்கும் மலர். உள்ளத்திலே சுட்டுப்பொருளாக நாம் உணர்ந்தும் வளர்ந்தபின் அறிவுப்பெருவெளியில் அறிவாலே அறிவுப்பொருளாக நாம் காணும் மலர்; அகம் இறைவனிருப்பிடம்; சும்மா இருக்கும் அகம் தோன்ற, அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நாம் நிட்டை கூடும் வழிநிற்போம்; பக்தி எனும் கொடி திட சித்தமெனும் கொம்பரில் படர்ந்து முக்தி எனும் பழம் ஈனும் அவ்வரத்தை, நாம் சும்மா

இருக்கும் அகத்தினராய், சிவாய நம வென இறைவனைப் பிரார்த்தித்து வேண்டலாம். இந்தச் சிவானந்த வெள்ளம் பெருகும் புத்தியாகிய வாய்க்கால் என்றும் சிவனிடம் ஒப்படைக்கப்பட ஒரு போதும் வாடாதேமலர்ந்து மலர்ந்து முத்தி எனும் பழம் தரும்.

131 கண்டபத்து

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா

726. பொறிவழியே போய்ப்புகுந்து புலம்பித் திரிவேனை
நெறிவழியே நிறுத்தி நீயேநா னென்றுரைத்த
பெரியவனைப் பித்தனெனப் பிறர்பேசும் பெருமானைச்
செறிபொழில்சூழ் நல்லூரகார்த் தேரடியிற்—
கண்டேனே

ஐம்புலன்களும் அந்தக்கரணங்களுங் கொண்டுள்ள ஒன்பது சேதனங்களினால் உண்டாக்கப் பட்ட ஆறு று தத்துவங்களும் தன் வழி நின்று ஆண்டடிமை கொள்ளுஞ் சிற்றின்பவலைக்குள் அகப்பட்டு நரகிடைப்புக்குப் பிறவிக்கடலிலே மாண்டு கிடப்பேனை; தண்ணளி வாய்ந்த எம்பெருமான் திருவருளினால், தவஞ்செய்வார் தப்பாதே தரமறியும் சிவனருளை நோக்கென்றூர், நோக்கிய அக்கணமே உவமைகடந்தவின்பம் என் சித்தந் தெளியத் தேக்கி (489) எனை ஆண்டும்; துள்ளித்திரியும் மனத்தை இயமம் நியமமென்பன கொண்டு அடங்க, நெறிநின்று பொறை நிலை எய்தி தவவழி நின்றுசமாதியடைந்தும்; வேறுநினைவின்றி அவன், தன்னை நோக்கிய நொடிப்பொழுதில் இன்பந்தேக்கிய அவன் நினைவே கொழுத்த நினைவு கொள்ள (68); அந்தப்பெரியவனே உன் மத்தம் பித்துப் பிடித்து தன்னுடன் இணக்கமிலாதாரை ஏசிக் கலைக்குந் தன்மையன் பித்தனென அந்த இணக்கமிலாத பிறரால் அழைக்கப்படுபவனை; தவப்பயனின் பலனை உள்ளத்தே சும்மா இருக்குஞ் சுகம்பெற எழுந்தருளிய தாணு எனும் மொட்டு, காலன் வலி தொலைக்கும் எம்பெருமான் கருணையினால், விரிந்து சிவலிங்க வடிவான அகமுடையாராகத் திகழும் அடியார் கூட்டம் சூழ, நீயே நானென்றுரைத்த அந்த எம்மாசான் செல்லப்பனை தேரடியில் கண்டேனே.

பித்த னென்றுனை உலகவர் பகர்வதோர் காரணம் இதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் திருவருட் கூடிடும் உபாயம தறியாமே
செத்துப் போய்அரு நரகிடை வீழ்வதற் கொருப்படு கின்றேனை
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டேடேனே

மாணிக்கவாசகர்: அதிசயப்பத்து: 4: (1)

727. தந்தைதாய் மைந்தர் தமர்தார மென்றடியேன்
பந்தத்துட் பட்டுப் பாழாகப் போகாமே
சிந்தை தெளிவித்துச் சீரடியார் நடுவைத்த
எந்தை பெருமானே யிலங்குநல்லை கண்டேனே.

அருந்தவமிருந்து இறைவன் திருவடியைப் பொருந்த வழிபட்டுப் பெற்று வளர்க்கும் தந்தையும் தாயும், விருப்பு நீங்கா உறவினரும், காதன்மிக்க வாழ்க்கைத் துணைவியரும் இன்பம் பெருக்கும் மக்களும் என்று சொல்லப்படும், மாயாகாரியப் பொருட்கள் தரும் அங்கலாய்ப்பும் இருவினையும் மும்மலமும் உண்டாக்கும், வாழ்க்கையிலீடுபட்டு மாண்டுபோகாமே; இவையாவும்நீர்மேல் குமிழிபோல் அழியுந்தன்மை வாய்ந்தது; வாழ்வுந் தாழ்வும் ஆகிய எல்லாக் காலங்களிலும் ஒத்த வுள்ளத்தோடு சமனெனத் தெளிந்து; மாயாகாரிய வெளியையும் தன்னுள் அடக்கி என்றும் ஒரு படித்தாய் இரவு பகலில்லாத திருவருட் பெருவெள்ளத்துள் மூழ்கி யான் எனது என்னுஞ் செருக்கற்று; இறைவன் எனும் நாடகாசிரியர், வினைமுதலாம் முதல்வன், எழுதிய நாடகத்தை உலகமாகிய நாடகமேடையில் அவனுடைய திருப்திகரமே மேற்கொண்டு திறமுடன் நடித்து; சிந்தை தெளிந்து சும்மா இருக்கும் சுகம் அறிந்து; சும்மாவேயிருக்கும் தன் சீரடியார் நடுவைத்த, தந்தை தாய் இறைவன் மூன்றும் ஒன்றுய் உருத்தாங்கியே எழுந்தருளிய எஞ்ஞான குரவனே, காலன் வலிதொலைத்து இலங்கும் கந்தன், அருள் புரியும் நல்லையம்பதியிற் கண்டேனே.

தந்தை தாய்தமர் மகவெனும் அவையெலாஞ் சகத்தில்
பந்தமாம் என்றே அருமறை வாயினுற் பகர்ந்த
எந்தை நீஎன்ன இன்னமவ் வல்லலில் இருத்தில்
சிந்தை தான்தெளிந் தெவ்வணம் உய்வணஞ் செப்பாய்.
தாயுமானவர். எனக்கெனச் செயல் 10. (2)

728. தேகமே மெய்யென்று சிதடனுய்த் திரிவேனை
மோக மறுத்தாண்ட முழுமுதலை மொய்குழலாள்
பாகம் மறைத்துப் பரிந்துவந்த பாக்கியத்தை
நாக மலர்சொரியும் நல்லைநகர்க் கண்டேனே.

வாழ்க்கைக்கு வேண்டிய இடமும் பொருளும் வேண்டுமென எண்ணி ஆசைவயப்பட்டு அலக்கணுற்று அலையும் பாழான நெஞ்சமுடன் நிலை குலைந்து மெய்தளர்ந்து கிடப்பேனை மோகமறுத்தாண்டான்; திருமூலர் தரும் வரிகளில் மோகம் அறுத்தாண்டதைக் காண்க.

ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்
ஆசைப்படப்பட ஆய்வருந்துன்பங்கள்
ஆசைவிடவிட ஆனந்தமாமே. (10 — 2570)

ஆசையென்பது பற்றப்படும் பொருளைப் பற்றவேண்டுமென உள்ளத் தெழும் பெருவேட்கை, அவ் வேட்கை அப்பொருளைப் பற்றினால் நீங்கிவிடும்; பற்றுவிடில் பெருந்துன்பமாகவே இருந்து கொண்டிருக்கும். அதனால் 'ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்' எனும் மறை மொழி பிறந்தது. ஆதலின் திருவடிசேவை, இறைபணி செவ்வனே செய்யின் இறைவன் பாதஞ் சேரலாம்.

உயிரில் பொருள் உயிருள் பொருள் எப்பொருளிலும் அவற்றைக் காண்பிக்குந் தன்மையாலும், அப்பால் நின்று அவற்றால் பாதிக்கப் படாதே இயக்குந் தன்மையினாலும் அருட்கண்ணாக விளங்கும் விஸ்ணு முதலாம் முதல்வன் முழு முதல்வன் [படைப்பு 180] அப்பொருட்களில் உண்ணின்று இயங்குந்தன்மையில் உமையம்மை வடிவாக, ஓசை வடிவானவளாக காட்சிதருகிறான். எவ்வுயிரிலும் ஆங்காங்கே அவ்வுயிராய், செறிந்து விளங்கும் ஓசை வடிவினளாய் மொய்குழலாள் மாயாகாரியப் பொருட்களில் உண்ணின்றியக்குந் தன்மையினால் காணப்படுகிறான். திருவடி சேவை புரிந்து இறைவனருள் பெற மோகமறுத்தாண்டான் கருணை வெள்ளம் பெருக்க ஆருயிர் தோறும் அதுவதுவாய் நின்றொளிரும் எம்பெருமானையே, ஓசைவடிவாக மாயாகாரியக் காட்சி தரும் விகாரத்தைக் காணுதே எல்லாம் ஒடுங்கியே தத்துவாதீதனாக விளங்கும் எம்பெருமானை. மொய் குழலாள் பாகம் மறைத்துப் பரிந்து வந்த பாக்கியத்தைக் கண்டேன். உயிர்ப்படங்குதலாகிய துரியாதீதற்கு இடம் மூலம், இவ்விடத்து ஒன்பது சேதனங்களாலாகிய ஆறு தத்துவங்களும், மாயா காரிய ஓசை வடிவாக விளங்கும் தத்துவங்கள் ஒடுங்க, உயிர்க்காற்று, சித்தம் (எண்ணம்), ஆளாகிய புருடனும் ஒருங்கு சேர்ந்தே ஆளாகிய புருடனாக செயலற்றுக் காணப்படுவன். (66) இந்த ஐந்தெழுத்துச் ஜோதியில் இறைவனுந் தானும் ஒன்றுபட்டுக் கண்ட மெய்யன்பன் ஜீவன் முத்தனாக, தத்துவாதீதனாக, தம்பிரான் தோழனாகச் (664) சீவிப்பான்.

தத்துவாதீதனான தம்பிரான் தோழனாக (664) தத்துவங்கள் எல்லாம் அடங்கிய நாகம்போல் குண்டலிசக்தி எம்பிரானுடைய ஆபரணமாக அவன்பூண்டிருக்கும் பாம்பு. உலகுக்கு ஞானப் பொருட்களையும் சித்துக்களையும் மலர்போலச் சொரிந்து அழகுதர நல்லியம் பதியில் நான் அவனைக் கண்டேன். (3)

729. இருவினையான் மதிமயங்கி யிடர்ப்பட்டுக்
கிடப்பேனைக்
கருணையினு லாண்டுகொள்ளக் கடவுடிரு
வுளங்கொண்டு
அருள்மேனி தாங்கி யவனியிலே வந்தானைத்
திருவாழும் நல்லூநகர்த் தேரடியிற் கண்டேனே.

(மாயை மயக்கம் முன்பாட்டு விளக்கம்) ஊற்வினைப் பழக்கத் தால் (முன்பாட்டுத்தரும்) ஐம்புல வேடர் கையிலகப்பட்டு மாண்டு கிடப்பேனை அந்த எல்லையில்லாப் பேரின்பந் தருங் கருணையாளன் (636). இடர் தீர்த்தெனை யாண்டருள (493) திருவுளங் கொண்டான்; பாசபந்தக் கயிறு அற சும்மா இருக்குஞ் சுகம் உதயமாக சத்தத் துள்ளே சதாசிவன் (475) எனும் அருவுருவாம் அருள் ரூபம் மனத்தே தோன்றவும், வேறு நினைவொன்றுமின்றியே அந்நினைவாயே நிற்ப நிட்டைகூடும்; அகம் சிவலிங்க வடிவாகத் தோன்றவே முன் அருள் ரூபமாகத் தோன்றிய நந்தி மறையத் தில்லைத் தரிசனத்தில் அரு வாம் அருள்ரூபம் ஜோதியில் அறிவுப் பெருவெளியில் சொரூப மாகக் காணப்படும். அந்த அருண்மேனி தாங்கிச் சிவகுருவே உள்ளத்தே நின்று நானுமவனுமொன்றுபட்ட அந்நிலையில், இந்தப் பேரானந்தப் பெரும் பொருளை எமக்கு நல்லூநகர்த் தேரடியில் தந்தான். (4)

730. காட்டிலே காளியுடன் கூத்தாடுங் கண்ணுதலோன்
நாட்டிலே ஞான குருவாய் நயந்துவந்து
மீட்டா னவன்றன் விரையார் மலரடியை
மாட்சிமைசேர் நல்லூத்தேர் மாணடியிற்
கண்டேனே.

[பாட்டு 728 மாயையின் ரூபங்கள் காண்க]: ஆருயிர் தோறும் கண்ணுக்குக் கண்ணுக விளங்கும் எம்பெருமான் அப்பொருளை உண் ணின்று இயக்குந் தன்மையினால் அவனே உள்நிற்கின்றான்; மாயைக் காட்டிலே மறைந்துநின்று மாயையின் சக்திபலம் கொண்டும் ஆட அவன்தான் இயற்கை வடிவாகக் கூத்தாடுகிறான். 'காளி சிவபெரு மானின் தலையிலே காலையூன்றி ஆடுகிறாள்' என்று சித்பவானந்தர் அதனை வர்ணிக்கிறார். 'சிவ' எனும் மாமறை தரும் 'அறிவு சொரு பத்தை' மறைத்தும் மாயையின் வடிவம் பலம் கொண்டும் ஆடுகி றான் என்பதே அவர் கருத்து. அதே ஐம்புல வேடர்களையும் அவர் தம்மறிவினால் ஆண்டு தம்முள் அடங்க, பாசபந்தக் கயிறு அறத் தத்துவங்கள் எல்லாந் தம்முன் அடங்கினவராய், தத்துவாதீதராய் நரியெல்லாம் நற்பரியாக (590) மாயக்காடு ஞானத்தீயினாலே சுட்

டெரிக்கப்பட்டு தத்துவங்களைக் கொண்டு ஞானப் பொருட்களும் சித்துக்களும் வளர்ந்து நாகமலர் சொரியும் (728) சோலை விளங்கும் நாடாக அவர் சமைத்தார், எம் ஞானகுரவன். அந்த நல்லூத் தேரடியில் மாண்பளிக்கும் வித்தகன் ஞானகுரவனாக எழுந்தருளி வந்து எம் மாயைக் காட்டைச் சுட்டெரித்து, தத்துவங்களெல்லாம நம்முள்ளடங்கத் தத்துவாதீதனாகத் தில்லைத்தரிசனங்கண்ட நான், வளரவும் தத்துவங்கள் எல்லாம் நாகமலர் சொரியவும் (728) நம்முள் நின்று அருளீந்த அவனை நான் கண்டேன். (5)

731. மாலயனுந் தேடி யறியா மலரடிகள்
கோல வருட்குருவாய்க் குவலயத்தி லேபோந்து
சாலப் பெரும்பகையைத் தானீக்கி யாண்டானை
ஞாலம் புகழுநல்லைத் தேரடியிற் கண்டேனே.

சிவவிங்க வடிவான ஒரு ஜோதி வடிவம் அயன்மால் முன்தோன்றினதாம் (246) அவர்கள் அவற்றின் அடியையும் முடியையுந்தேடி அலைந்து திரும்பினர். அவ்வாறே தில்லைத் தரிசன ஜோதிசொரூபத்தைக்கண்ட அடியேனும் சித்துவல்லமையும், குண்டலி சக்தியும் 'நான்' எனும் ஆணவ முனைப்பை உண்டாக்கி ஆணவ மலப்பிடிப்பினால் புறத்தே அலைந்து (346) உலகைப் பகைப்பிடியாவண்ணம், எம்மிறைவன் ஞானகுரவனாக எழுந்தருளியவன். பக்தி எனும் சங்கிலியினாலே மதம்பிடித்த யானையைப் போன்ற அம்மனத்தை வேகமாக இழுத்துத் தமது மலரடிகள் என்னுங் கட்டுத்தறியில் (582) அறிவாகிய யந்திரங்களினால் கட்ட என்னுள் தாமே நின்று அருளினன். ஐம்புலவேடர்களும் ஆன்மாவும் ஒன்றை யொன்றும், ஐம்புலவேடர்கையிலகப்பட்ட மாந்தர் ஒருவரோடொருவரும் சாலவிரிந்த உலகில் பகைபிடிப்பர், அது போன்று அடியேனும் பகைப்பிடிக்காது தத்துவாதீதனாக ஆணவமலமு நீங்கக் குழந்தையுந் தாயும் போல் உலகும் யானும், சாயுச்சிய பதவியடைந்து (514) சஞ்சலமற்று உலகமாதா அம்மையப்பருடைய மடிமீது விளையாடும் குழந்தையாக என்னுள் தாமே நின்று அருளீந்தனன். அந்த ஞானகுரவனை உலகு புகழும் நல்லைத்தேரடியிற் கண்டேன். ''சிவத்தியான மாகிய அம்புக் கூட்டங்களாவ் பாபங்களாகிய சத்துருக்களை அறவே ஒழித்து வெற்றியுடன் விளங்கும் புத்திமான்களிற் சிறந்தவன்'' என்று சிவானந்தலகரி க. 71 இல் ஆதிசங்கரர் தருகிறார் காண்க. (6)

732. நானுரென் னுள்ளமா ரெனநாடு மெய்யடியார்
தானுக நின்றருள்செய் சங்கரனே தாரணியிற்
கோனுக வந்தாண்டான் குளிரார் திருவடியைத்
தேனுர் பொழில்நல்லைத் தேரடியிற் கண்டேனே.

உடம்புளே உத்தமன் கோயில் கொண்டாள் எனுமுணர்வு உள்ளத்தே ததும்ப ஞானமதின் ஞான நிட்டையுடையோருக்கு நன்மையொடு தீமையிலே நாடுவதொன்றில்லை சீலமில்லை தவமில்லை விரதமோ டாசச்சிரமச் செயலில்லை சித்தமலமில்லை கோலமில்லை புலனில்லை கரணம் இல்லை குணமுமில்லை எனுமிவ் வழகுடன் திகழும் பாலன்போல் வாழும் மெய்ப்படியார் உள்ளம் சிவன் கோயில் உயிர் சிவலிங்கம். அங்கே ஆருயிர்கள் அனைத்திற்கும் பேருயிராகிய சிவ பெருமானின் கண்ணுதல் எனப்படும் திருவுள்ளக் குறிப்பு அடிப்படையாகும். அவ்வண்ணமே மெய்யடியார்தம் உள்ளத்தே அடிப்படையாகும் குறிப்பாகவே கண்ணுதல் தானுக நின்றருள் செய் சங்கரன், ஆருயிர்கள் அனைத்திற்கும் பேருயிராகிய சிவபெருமான், உலகினிற்கோனுக, வள்ளியின் இருதயத்தே முருகனுக உருத்தாங்கி தேனுந்து வேங்கைபோல் நின்றவன் (383),; நாகமலர் சொரியும் (723) தேனூர் பொழில் நல்லைத் தேரடியில் எனைவந்தாண்ட ஞான குரவன் தண்ணளி கொண்டு இடர் நீக்கியாண்டருளும் (493) குளிராார் திருவடியை நான் கண்டேன்.

மண்ணுல கிற்பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல் தொண்ட னேன்இன்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும் பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித் தான்மலை உத்தமனே

யானை = வெள்ளையானை; பால் பசு, முத்திப்பழம்.

சுந்தரர், (7–100–5) (7)

733. எட்டு மிரண்டு மறியா வெனக்குநல்ல
பட்ட மளிக்கப் பரிந்துவந்த மெய்ப்பொருளை
வட்டஞ்சூழ்ந் தடிபரவும் மங்கைமார் கொண்டாடுஞ்
சிட்டர்வாழ் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே.

அப்பர்சுவாமிகள்.

"எட்டுக் கொலாமவ ரீறில் பெருங்குணம்
எட்டுக் கொலாமவர் தூடு மினமலர்
எட்டுக் கொலா மவர் தோளிணை யாவன
எட்டுக் கொலா ந்திசை யாக்கின தாமே. (4-18-8)

எண்குணம்:- பிறவின்மை, இறவின்மை, (இறப்பிறப்பு இல்லாதவன்), பற்றின்மை, பெயரின்மை, உவமையின்மை, ஒருவினையின்மை, இறைவிலறிவுடைமை, குடிமுதன் (கோத்திரம்) இன்மை என்பது பழந்தமிழர் (405) 'நன்முயற்ந்த நீள் நிமிர்சடை மூழுமுதல்வன் பண்பெட்டும் வழங்கினர்; மேலும் முற்றறிவு (சர்வஞ்ஞத்துவம்)' வரப்யிலின்பம், இயற்கையுணர்வு, தன்வயம், முடிவிலாற்றலுடைமை.

பேரருளுடைமை, குறைவிலாற்றல், தூய உடம்பு இயல்பாகவே பாசங்களீனீங்கலுந் தன்மை என்றலு முண்டு. ஞானப் பூசைக்குரிய அட்டமாமலர் (244); எண்டோள்வீசி நின்றருடும் பிரான்; எட்டுத் திசை தானுய் லீழிம்மிழலையே என்பவற்றாலுணர்க. அப்பர் சுவாமி களே இரண்டு பாதம், உருவம் பெண், ஆண் என்று பாடுகிறார். இவை யாவும் கற்றுமறியாத பேதையேன் யான்? எம்பெருமானைப் பஞ்சாங்க நமஸ்காரம் செய்யும் பெண்கள் சுற்றிக் கும்பிட்டு வரும் அந்தத் தேரடிப் படியில் இருந்தவர், எம்ஞானகுரவன்; என்னை முதல் கண்டபொழுதே என்னுள் அளவு கடந்த இன்பந்தேகியென யாண்டவன், ஆருயிர்கள் அனைத்திற்கும் பேருயிராகிய சிவபெருமானின் கண்ணுதல் என ப் ப டு ம் திருவுள்ளக் குறிப்பு அடிப்படையாகக் கொண்டு இடர் நீக்கியாண்டருளிய (493) தண்ணளிவாய்ந்த முழுது முண்மையென்ற எம்பெருமான்எனைப்பிறப்பிலியாக்கினன்சாயுச்சியனன் பதவியடையவைத்து (514) சொல்ல முடியாத தீர்ப்பு 516) சுவாமி கிருபையுனக்காச்சு என்றவன் யோக குருநாதன். திருமலர்ப்பாதன் (527) புண்ணியன் சிவயோகன் எனும் பலவாக எமையுலகுக்கு ஈந்த மெய்ப்பொருளாளனைத் தேரடியில் கண்டேன். (8)

734. என்னையன்றி வேறொன்று மில்லை யெனச்சொன்ன
அன்னையினு மன்புடைய வாசா னவனிதனிற்
கன்னலொடு செந்நெல் கமுகு கதலிபலா
மன்னுநல்லை மாநகரிற் றேரடியிற் கண்டேனே.

ஆருயிர்கட்கு இருவினைக் கீடாகவும் மலப்பசைக் கீடாகவும் நேரிடும் வெவ்வேறு நிலைகள் அளவிறந்தன; அவை யாவற்றினுள் ளும் தோன்றி மறைந்து அவ்வுயிர்க் குயிராம் நாதன் நீங்காது நின்றருள பேரின்பப்பெருநிலையாகினேன் அடியேன் தன்னினத்தைவிட்டுப் பிரிந்த திகைப் பெய்திச் செய்வகை யறியாது அல்லலுறும் மானைப்போல் வருந்தாவண்ணம் திருவடிப்பேரின்பப்பெருவாழ்வை தந் தான்பெற்றெடுத்த தாய்தந்தையர் உலகவாழ்வை எவ்வண்ணம்அன்பு டன் வழிநின்று காட்டிவைப்பாரோ, அவர் சுயநலம் சிறிது கொண்டே வாழ்வளிப்பவராதலால், அத்தகைய தாய் தந்தையரினுடைய அன் பினுங் கூடிய சுயநலஞ் சற்றுமிலாப் பேரன்புடனே என்ஞானகுரவன் அப்பெருவாழ்வை எனக்களித்தனன்; அறம் பெருக பெருவாழ்வு எம் ஞானகுரவன் அருள்புரிய கரும்பும் செந்நெலும், கமுகு பலா முதலிய சோலைகள் செழித்தோங்கு நல்லைமா நகரில் அந்தப் பேரானந்தத் திருவடிப் பேறெனும் பெருவாழ்வை அவனிதனில் அடியேனுக்களித்த எம்பெருமானைத் தேரடியிற் கண்டேன். (9

735. இரவு பகலற்ற ஏகாந்த வீட்டிலெனைப்
பரவிப் பணியவைத்த பரமன் குருவாகிச்

சரண கமலமலர் தலைதனிலே வைத்தவனைக்
குரவு மலர்குறையாக் குளிர்நல்லை கண்டேனே.

நின்திருவடியினை மறப்பதாகிய இரவும், மறந்து நினைப்பதாகிய பகலும் இல்லாத ஒரே நினைப்பாகும் ஐந்தாம் நிலையாகிய திருவடிச் சார்பாம் சிவச்செறிவில் குழந்தை தாயாகிய அம்மையப்பரெனு முலகில் சஞ்சலமற்று நினைப்புமற்று பேரானந்தப் பேரறிவில் அவிழ்ந் தேக சித்தமாய் பணியாமற் பரவிப்பணிய வைத்த முழுமுதல்வனும் எம்பெருமான் குருவாக எழுந்தருளவந்து அருள் தந்தனன்; துரியா தீத நிலையிலே சமாதியடைந்து திருவைந் தெழுத்துச் ஜோதியில் நின் றதுபோலே உலகினிலும் தாயும் குழந்தையும் போல் ஏகாந்தநிலையில் ஏகாந்த சித்தமாய் வாழவைத்தனன். 10)

எத்தகைய சிற்றுயிர்க்கும் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்று அவ்வவற்றை இயக்கி யருள்பவன் அவனேயாம்; அததொடர்பு நினைந்து அடியேனையும் கருணைகூர்ந்து இயக்கி திருவருள் கொண்டு காப்பாற்றி தன்னுடைய பொற்பாதம் என்தலைமேல் வைத்தவனை; அவ்வண்ணமே அனைத்துயிர்க்கும் நல்லவரம் வழங்க ஒரு குறைவு மிலாது செழித்தோங்கி அறிவு வளர சாந்தம் பொறை நிரவ; சந்திரனை யுடைய சடாமுடிபோன்று விளங்கும் நல்லூரில் அவனைக் கண்டேனே; (10)

132 உனைக்கூறும் வகையென்னே

736. பொன்னுனுய் மணியானுய்பொருளானுய்பிறவானுய்
என்னுனு யென்னுனு யிறையானு யெனப்பலவாய்ச்
சொன்னுரன் றியின்னுன் எனச்சொன்னு நிலையுலகில்
அன்னுயுன் னையன்றி யினிப்பின்னுர் துணைபேசே.

உலகினில் நாம் தேடிக்குவிக்கும் பொன்னும் மணியும் பொரு ளும் மற்றும் தந்தை தாய் தமர் தாரம் மாடு மக்கள் சுற்றம் எல்லாப் பொருட்களுக்கும் ஒப்பாக (1) அப்பொருட்களும் அடியேனு டைய மாயகாரிய இவ்வுடம்பும் மாறி மாறி உருவம் எடுப்பது; (2) அவ்வுருவங்களெல்லாம் அவற்றுள் நின்று இயங்கும் இறைவன் ஓசை வடிவினராக எப்பொருளிலும் வியாபித்திருப்பவன்; (3) இருவினையுஞ் சாராமே அப்பால் நின்று வினைமுதலாம் முதல்வன் இயக்க இயங்கும் தன்மையன. (4) அவரவர் வினைப்பயனுக்கு ஏற்றவாறு இறைவன் பொருத்தி வைத்தபடியே நிகழ்ச்சிகள் நிழ்கவன; (5) எண்ணங்கள் தோன்றியபடியே படைத்தற் கடவுளராகிய பிரமா அருவாம் வடி வினர் அவ்வவ் வெண்ணங்களுக்கு ஏற்றவாறு அவ்வவ் வெண்ணங்கள் பஞ்சப்பொறிகளும் பஞ்சபூதங்களும் அந்தக்கரணங்களாலும், அவைக்கேற்ற காலவரையில் பொன்னே மணியே பொருளோ

பூவையரோ எனும் பொருட்களுடன் தொடர்பான ஆசைகளாகப் பூர்த்தியடையும். பாசபந்தத்துட்பட்ட ஆன்மா இவற்றையெல்லாம் அந்தந்தக்காலம் அனுபவிக்கின்றது. பிரம்மா விஷ்ணு உருத்திரன் எனும் மூன்று தேவர்களும் படைத்தல் காத்தல் அழித்தல் எனும் மூன்று தொழில்களையும் அவரவர் காலவரையில் செய்துவருகின்றனர்;

இவையாவையும் தம்தம் வேலைகளையும், நான் என்னுடையது எனும் வீண்பேச்சு விட்டு, எல்லாம் இறைவன் சித்தத்தின்படியே என்றறி. அவன் சித்திரித்தபடிமுன்வினையின் பிரகாரம்எனும் உண்மை விளங்க, சிவன்செயலின் உண்மை விளங்க, அவனை நாம் வேண்ட அவன் எம்மைப் பணிகொள்வான். பின்னும் அவன் இன்னார் இன்னார் என நான் அறியேன். எல்லாவற்றையும் இயக்கும் உன்னையன்றி வேறு துணையெனக்கில்லையே என்கிறார். மாணிக்கவாசக சுவாமிகள். இவற்றை விளக்கியே பாடுகிறார்.

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப்
பணிகொண்டாய்
வேண்டி நீயாதருள் செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்தன் விருப்பன்றே.
(குழைத்தபத்து. 6) (1)

737. நீரானுய் நிலனுனுய் வளியானுய் விசும்பானுய்
காரானுய் கடலானுய் மதியானுய் கதிரானுய்
ஊரானு யுடலானுய் உலகானுய் பலவானுய்
பேராயி ரம்மானுய் எனப்பேசார் பிறர்தானே.

[முன்பாட்டு விளக்கங்காண்க; 380 தைக்காண்க] ஐவகையாகச் சொல்லப்படும் நிலம், நீர், வளி, ஆகாயம், தீ எனும் நுண்ணிய நிலையாகிய பூதங்களாயும், பருமை நிலையாகிய பூதகாரியங்கள் எனப்படும். சூரியன் சந்திரன் மழை கடல் உடம்பு முதலியனவாயும், இவையனைத்தும் ஒன்றுகூடி விளங்கும் உலகமாயும், உயிரில்பொருள் உயிருள்பொருள் எண்ணில் பலகோடி எத்தனையோ அத்தனையுமாயும் அவற்றின் அருட்கண்ணுக விளங்குபவன் எம்பெருமான். அவற்றுடன் இயங்கியும் இருவினையுஞ் சாராமே அப்பால் நின்று இயக்கியுந் திருவருள் அவரவர் வினைப்பயனுக் கேற்றவாறு கொழிப்பவன்; அவற்றை உணர்ந்தறிந்து பேசாதவர் அவரையறியாத பிறர்தானே: (2)

738. பெரிதானுய் சிறிதானுய் பிழையானுய் பித்தானுய்
அரியானுய் அயனுனுய் அருளானுய் மருளானுய்
எரியானுய் இரவானுய் பகலானுய் எல்லாமாய்த்
தெரியாதே நின்றுயே யுனைக்கூறும் வகையென்னே

பெரிதாகக் காணப்படும் அண்டங்கள் அளவில்லாதன அமைத் தருளினை; பெரியதிற் பெரியது ஆன்மா சிறியதிற் சிறியது ஆன்மா; [ப்ருகிருட உபநிட: 4-4-22]. அத்தகைய ஆன்மாவாக விளங்கு பவன் நீயே; சரி, பிழை, புண்ணியம், பாவம் இருவினைகள் மும் மலமுமாய் விளங்குபவனும், அவற்றைத்தரும் மருளும் மாமாயையு மானாய்; அண்டங்கள் அனைத்துள்ளும் வாழும் அனைத்துயிர்கட்கும் வேண்டும் உடல்களையும் படைத்து அவ்வுயிர்களை அவ்வுடல்களுடன் பொருத்தியருளும் அயனுமானாய்; காத்தல் அழித்தல் தொழில் புரியும் மற்றுந்தேவருமானாய்; உனைக்காணுதே வருந்தும் இரவாயும், வருந்தி யழைத்து உனைக்காணத் தண்ணளிவாய்ந்த எம்பெருமான் திருவுளங் கொள்ளவும், உன்னைக்கண்டு இன்புறும் பகலாயும் நீ நின்று அருள் புரிகின்றனை. இவையெல்லாமாய் நீ மறைபொருளாய் ஒவ்வொன்றி லும் உண்ணின்று இயக்கியும், அதன் ஓசைவடிவாகத்திகழும் சுரிகுழலாளாக இயங்கியும், இவை யாவற்றிலும் ஒன்றுகத்திகழும் எம்பெருமான் மறைபொருளாய் ஒன்றுயும் பலவாயும் நிற்கின்றுயே; அவ்வண்ணம் நிற்கும் உன்னைக்கூறும் வகையென்னே; (3)

739. மண்ணுனுய் விண்ணுனுய் மதியானுய் ரவியானுய்
கண்ணுனுய் ஒளியானுய் காட்சியெல்லாம் நீயானுய்
பெண்ணுனுய் ஆணுனுய் பேதமென்றும் நீயானுய்
என்னுனுய் என்னுனுய் என்பதல்லால்
என்சொல்கேன்.

மண்முதல் விண்ணீருகக் காணப்படும் பொருட்களாயும் சூரிய சந் திரர்களாயும் ஊனக்கண்ணுல் உலகியற் பொருட்களைத்தனித்தும் உலக மாயுங் காணுங் காட்சிப் பொருளுமாயும் அவற்றைக் காணும் ஒளியு மானாய்; உண்ணின்று காணும் கண்ணொளியாயும், பொருட்டன்மை யினல் வேறுபட்டு விளங்கும் சூரியனின் ஒளியாயும் நீ நின்று அருள் புரிகின்றாய், அவ்வாறே உயிரொளியும் உயிர்க்குயிராம் உடையா ளொளியும் உடனையும் வேறுயும் காணப்படுகின்றன. உயிரில் நின்று இயங்கும் ஒளி ஆன்மா; உடையான் ஒளிஇறைவன். ஒன்றுபட்டே பெண்ணுருவாய் அம்மையாகவும், இயக்கும் ஆணாய் முழுமுதற் சிவ பெருமானுகவும் ஒன்றுபட்ட பரமாத்மனுக விளங்குபவனே என்னுனாய் என்னுனாய் என்று அடியேன் கூறப்படும் மெய்ப்பொருளாகவும் விளங் குபவனே எம் இறைவன். (4)

133. பொன்னடியைப் போற்றுதுமே

தரவு கொச்சகக் கலிப்பா

740. இன்றுகி நாளையா யிருப்பானே யெப்பொழுதும்
நன்றுக நினைவார்கள் நாடார்கள் பிறபொருளை

அன்ருலின் கீழிருந்தங் கறமுரைத்த பெருமானைப்
பொன்ருத மலர்தூவிப் பொன்னடியைப்
போற்றுதுமே.

காரிய வடிவமாகக் காணப்படும் இவ்வுலகம் திருவருளாகிய னுல் காரணமாயையினின்றும் தோற்றுவிக்கப்பட்டது: இன்று, நம் எண்ணங்களினின்றுந் தோன்றிய காரணமாயையினின்றும், பிரமனுல் தோற்றுவிக்கப்பட்ட காரண வடிவமான இவ்வுலகம், நாளை ஒடுங் குங் காலத்து தோன்றும் பொருள் வடிவம் நீங்கி ஆற்றல் வடிவா கத் தோற்றமுருத ஓசைவடிவான அம்மையாக, அறிவுப் பெரு வெளியில் ஒடுங்கும். இந்நிலைவே தம் உள்ளத்தே செறிந்து விளங்க மனமடங்கிப் பொறைநிலையெய்தி மெய்ப்பொருளான சிவபெருமா னைத் தம் நினைவிற் கொண்டும், அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்த மாய் நெறியாம் நந்தி நீடருள் ஒன்றுஞ் செறியார்ச் செறிவே சிவம் என்னும் நிலையில் அருவுருவாம் அருள்ரூபம் காணலாம்:

கல்லாலமரத்தடியில் - [தாயுமானவர் - காய் இலையுதிர்ந்த கனி சருகுபுனல்மண்டிய கடும்பசி தணக்கடைத்து, மழை முகில்கள் படி கின்ற மலைக் குகையிற் தங்கி கருங்கல்போல் அசையாது கண்மூடி நெடிதிருந்தும் தீயினிடை வைகியும் தேகங்கள் என் என்பெலும் பாய்த் தெரிய நின்றும் - என்ற வறுமை பிணியால் வருந்தி அவனைக்கூவ] வீற்றிருந்தருளி ஒப்பில்லாத சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனுதனர் என்று சொல்லப்படும் நாலிவர்க்கும் முதல்வ னுகிய நீ உண்மையாம் முத்திறப் புணர்ப்பினை உணர்த்தியருளினை அறிவடையாளகப் புணர்ப்பென்ருல் வாய்ச் சொல்லால் சொல்லமுடி யாத அப்பொருளை நம் முள்தாமே நின்று உணர்த்தியருளியவை எரிந்த பாசபந்தக் கயிறுகட்டுந்தன்மையற்றது; பக்தி எனும் கொடி படர திடசித்தத்துடன் ஆணவம் முனைக்காமல் ஒடுங்கிய அகமுடை யார், என்றுங் கல்லால மர நிழலிலிருந்தே, என்றுங் குறையாத அன்புடன [தாயுமானவர் முன்விளக்கம்] இறைவனுடைய பொன் னடியை, பிறவிக்கடலினின்றும் நீக்கியருளும், மோட்சலீடு தரும், பொன்போன்ற திருவடிகளைப் போற்றித் தொழுவோமே. (1)

741. என்னரசை யாரமுதை யெந்தையெம் பெருமானை
முன்னரசை மூவர்களும் வணங்கிநின்ற மூர்த்திதனைத்
தன்னரசைத் தானுன தத்துவனைத் தயாபரனைச்
சொன்னவர்க ளினிவந்து தோன்ருர்க ளிதுதிண்ணம்

[முன்பாட்டுத் தொடர்] மனமடங்கி அருள் ரூபம் உதயமாக, வேறு நினைவின்றி அவன் நினைவாக கல்லாலமர நிழல்தனில் நின்று வருந்தி வேண்டியழுது நிட்டைகூடியே அருள்மேவி தாங்கிய அவனை

அறிவுப் பெருவெளியில் தில்லைத் தரிசனத்தில் கண்ட என்னரசை, அமுதம் போன்றுனை, தாய்தந்தைபோன்ற எம்பெருமானை, ஆதியந்த மில்லாத அந்தத்தேவர்கோனை; பிரமச்சாரியான சனற்குமாரர், இல்வாழ்வான் சனகர், வானப்பிரஸ்தன் சனந்தனர் ஆகிய மூவராலும் வணங்கப்பட்ட அவனை-வினையின் நிகழ்வால் வினையும் வினைப்பயனெனு மம்பலத்தே ஆருயிர்களை அவரவர் வினைப்பயனுக் கேற்ற உடம்பிலே பொருத்தி வைக்கும் எம்பெருமானை; படைத்தற் கடவுள் காத்தற் கடவுள் அழித்தற் கடவுள் இம்மூவர்க்கும் கோனுக விளங்கும் திரிமூர்த்திதனை; திரிமூர்த்திதனை நாம் வணங்கி நம் எண்ணங்கள் காரணமாக, மாயாகாரிய உலகந் தோன்றுதே, அவனைத் திரிதோஷ மிறக்கும் வண்ணம் வேண்டி (267; 115;), திருவடிபூசையும் இறை பணியுஞ் செவ்விதி செய்து வணங்கித் தொழுதேத்தி, எம்மிதயத்தே தத்துவாதீதனை எம்மிறைவனைக் கண்டு, தொழுது தண்ணளி வாய்ந்த எம்பெருமானை வணங்கிச் சாயுச்சிய பதவியடைந் (514) தால் அவர் பின்னும் இவ்வுலகில் வந்து பிறவார்கள். (2)

742. பூதங்க ளைந்தாகிப் போக்குவர வில்லானை
நாதமொலாங் கடந்துநின்ற நம்பனை நாடோறும்
வேதமுறை தவறுமை லர்ச்சிப்பார் வியனுலகில்
பாதமலர் காண்பார்கள் பணிவார்கள் பிறவாரே.

ஐவயைாகச் சொல்லப்படும் நுண்ணிய நிலையாகிய நிலம், நீர், நெருப்புக் காற்று ஆகாய மெனப்படும் பூதங்களைந்தாயும், பருமை நிலையாகிய பூதகாரியங்களான உயிரில் பொருள் உயிருள் பொருள் பலவாயும் விளங்குகிறாய் நீ; ஒடுங்குங் காலத்தில் தோன்றும் பொருள் வடிவம் நீங்கி ஆற்றல் வடிவாக தோற்றமுறுத ஓசைவடிவான அம்மையாகிறாய், இருவினையும் சாராமே அப்பால் நின்று எப்பொருளையும் இயக்கும் வினைமுதலாம், முழு முதல்வன் மெய்ப் பொருளான எம்பெருமான் தண்ணளிவாய்ந்தவன் (601) நாடோறும் வேதமுதலிய மறை நூல்களில் சொல்லப்படும் முறைகளை அநுசரித்து இறைநூலெனப்படும் வழிபாட்டு நூல்களாகிய ஆகமங்களில் சொல்லப்படும் முறைப்படி ஒழுகியும் பணிசெய்தும் திருவடி பூசை செய்தும் முழு முதல்வனுஞ் சிவபெருமானைத் தொழுதேத்தி வணங்குபவர் என்றென்றும் மார்க்கண்டேயரைப் போல் சோதிவடிவான அகமுடையாராக விளங்கிப் பணிசெய்து அவள் பாதாரவிந்தம் அடைவார்கள் திண்ணம். (3)

743. என்பிழைகள் பொறுப்பானை யெங்குமா யிருப்பானை
அன்பிலரை யடையானை அஞ்செழுத்துப்
பொருளானை

நன்மலர்கொண் டேந்நாளும் நாட்கழித்தல்
நலமென்றே
சொன்னவர்தந் திருப்பாதம் தொழுவேனே
எந்நாளும்.

அடியேனுடைய சிற்றறிவும் அடியேன்பாலுள்ள மாயாகாரியப் பொருட்களும் எம்முள் நின்று நம்மை ஐம்புல வேடர் வலைக்குள் அடைக்க அதன் பொருளாக வுண்டான எண்ணங்களும் ஆணவ மூனைப்பும் புத்தியாகியதுங் கொண்ட அந்தக் கரணங்களும் நம்மைத் தூண்ட, நாம் பிழைகள் பல செய்வது வழக்கம். ஞானத்திரளாய் நின்ற பெருமான் அல்ல அடியார் மேல் அத்தகைய ஊனத்திரளை நீக்குந் தூய்மையாளன். எப்பொருளிலும் வியாபித்திருக்கும் எம் பெருமான் சிற்றுயிர்களைக் காப்பாற்றுந் தன்மையுடை யான்; என் பிழைகளைப் பொறுத்து சற்றும் அன்பிலாத கல்நெஞ்சமுடையான், அவனை நினைந்துருகுந் தன்மை சற்றுமில்லாத என்னை அஞ்செழுத் தின் உண்மையினை நமக்கு விளங்கச் செய்தனன், அதன் நினைவே கொழுத்து விளங்க அதனைச் ஜெபித்துத் திருவடி பூசை நன்மலர் கொண்டு செய்தும்; ஞானப் பூசைக்குரிய எண்மலர் கொண்டு திரு வைந்தெழுத்திணுண்மையை விளங்கி இடைவிடாது ஜெபித்தும் அதன் பொருளாகவே ஈற்றில் நாம் நம்மைக் காணத் தண்ணளி வாய்ந்த எம்பெருமான் எந்நாளும் எமக்கருள் தருவான். (4)

744. மந்திரமாய்த் தந்திரமாய் மருந்தாகி விருந்தாகி
எந்திரமாய் என்றுனையாய் எல்லாமா யல்லவுமாய்ச்
சந்திரனுய்ச் சூரியனுய்ச் சரமசரம் யாவுமாய்
எந்தைபிரா னிருந்தநிலை கண்டார்கள் பிறவாரே.

மந்திரம் = வழிபாட்டிற்குரிய சொல்; தந்திரம் = வழிபாட்டு நூல் [கிரியாபாதம்]:

மந்திரமுந் தந்திரமுந் தாமே போலும்
அறங்காட்டி அந்தணர்க் கன்றுல நீழல்
அறமருளிச் செய்த அரனுர் (6 - 2 - 3)
(ஞானசம்பந்தர்).

எந்திரம் = இயந்திரம்: சூத்திரம்; மந்திரச்சக்கரம்: இவை நூலில் சொல்லப்படும் வழிநின்றுமுகி, சொல்லப்படும் முறைதவ ருது திருவடி பூசை செய்தும் திருவைந் தெழுத்துப் போன்ற மந்தி ரங்களை உரையுணர்ந்தறிந்து சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனைதனைச் ஜெபிக்கும் பொருளாகவே, மெய்ப் பொருளான உன்னையே, அங்கே கண்டும் இன்புற்றும்; மலப்பிணிப்பு எனும் நோய்தீர்க்க மருத்துவ னை என்ஞான குரவன், தாமே அந்த மெய்ப்பொருளானவனுய்,

நீக்கிமருந்தாகி மலப்பிணிப்பினின்றும் எம்மை யாண்டருளி; பேரானந்தப் பெருவெள்ளம் பெருக, விழிநீர் பெருகி நாம் என்றும் அழியா இன்பக்கடலில் ஆழ்ந்து அவனே எம் வேகத்தைக் கெடுத்தாண்டருந்தாகியும்; வேறோர் நினைவுமின்றி அந்த ஐந்தெழுத்து மந்திரத்தையே ஓதஓத அது மந்திர சக்கரம் போல் இன்பந்தரும் விருந்தான நிட்டையில் நம்மை ஆழ்த்தியும், அருள்புரியக் கண்டேன். அந்த பாவசமாதியில் அவனையே என் துணையாகவும், எப்பொருளிலும் சரம் அசரம் எல்லாவற்றிலும் நின்அநுட் கண்ணுக விளகிதும் எம் பெருமானே! சூரியன் சந்திரன் முதலியோராகவும் விளங்குவோனே அந்த நிட்டையிலே சிற்றம்பல தரிசனமாகக் கண்ட மெய்யன்பர் பிறவாரே. (5)

745. பிறவார்கள் இறவார்கள் பிறிதொன்ரு லயராார்கள்
கரவார்கள் உழலார்கள் கண்டதிலே மனம்வையார்
அறநெறியில் வழுவரார்கள் அன்பர்பணி மறவார்கள்
பிறவொன்று மறியார்கள் பிரியாத சிந்தையரே.

[முதல் வரியை ஈற்றில் கொண்டு பொருள் கொள்க]

ஆரா இயற்கை அவா ஆதலின், அவற்றுள் மனம்புக, யாண்டும் வரம்பில்லாத அவ்வவாவின் வலைக்குள், பஞ்சப்புல வேடர் வலைக்குள் அகப்பட்டு பந்தத்துட்பட்டு இருவினைக் கீடாகி பிறவிக்கடலில் உழல்வார்கள்; ஐம்பொறிகளும் கொடிய வேடர்; கண்டால், நுகர்ந்தால், ருசித்தால் அவர்கள் தொடர்ந்து எண்ணங்களைத் தோற்றுவிப்பார்கள்; மும்மூர்த்திகளாகிய பிரமாவிஷ்ணு உருத்திரன் எனும் கடவுளர்க்கு வேலை கொடுப்பார்கள்; (741; 267;) ஆதலின் இறைபணி செய்தும், திருவடி பூசை செய்தும் திருவைந் தெழுத்தை ஓதியும் அறநெறி நின்றொழுக (492;177). கொல்லா விரதம் பூண்டு; மெய்யடியார்கள் தம்பணிமறவாதே என்றும் அவர்கள் பணிசெய்து; வேறென்றும் நினையாதே திருவைந்தெழுத்தையே ஓதி உணர்ந்து சிந்தித்துச் சிந்தனைதனையே வேறென்றும் நினையாதே அவன் நினைவாயே நின்றுநிட்டைகூடி, தில்லைத்தரிசனத்தில் ஆழ்ந்துகிடந்து ஜீவன் முத்தனுகிப் புவனியில் பிறந்து; வேறென்றிலும் அயராமல் அவன் பக்தியிலே சாயுச்சிய பதவியடைந்து என்றும் அழியா இன்பக்கடலில் (514 வாழ்ந்து பிறப்பையறுப்பர். (6)

746. ஈரவார் சடையானை இளமதியை யணிந்தானை
மாரனைக் கரய்ந்தானை மங்கையிடம் வைத்தானைத்
தாரமரும் மார்பானைச் சங்கரனைத் தாணுவை
ஆர்வமொடு துதிப்பார்கள் ஆனந்தம் பெறுவரரே.

ஆற்றைச் சடையிலிருந்து பரசிவான்மாவான உலகினுக்குப் பணியாற்ற ஓடிச் செல்ல திருவருள் கொழிக்கும் நம்மிறைவன் என்றும் வளருந் தன்மையினையுடைய இளம்பிறையைச் சடையிலும் கொன்றைக் கண்ணிமாலையை மார்பிலும் அணிந்துள்ளான்; கொன்றை விரிந்து ஜோதியாகுந் தன்மையுடையது. கொன்றை கல்லாலமர நீழல் போன்றது (740 தாயுமானவர்); திருவடி பூசையில் அசையாது நின்று இறைவனுடைய திருவடிகளிலிணைந்து கிடந்த மார்க்கண்டேயனுயிரைக் கவரச் சென்ற இயமதர்ம இராசனைத் தம் காலாலுதைத்துத் தம்மெய்யன்பனைக் காப்பாற்றினர் நம்மிறைவன்; [343 சிவானந்தலஹரி 65-ம் 'மார்க்கண்ட' எனுந்தாயுமானவர் தேவாரமுங்காண்க]; கங்கையும் பிறையுஞ் சடையில் தரித்த எம்மிறைவன், எந்நிலையிலு மெக்கோலத்திலுஞ் சங்கரன் தாள் மறவாமையே பொருள் எனும் மெய்ப்பொருளானவன்; பரசிவான்மாவாக விளங்கும் சிவபெருமான் உமையை இடப்பாகமாகவுடையான் சும்மா இருக்கும் அகம் சிவலிங்கவடிவாக, சிவபெருமானும் உமையாளும் மார்க்கண்டேயனுக்கு அருள்கொடுத்த தாணுவாகக கண்டு, அந்தச் ஜோதியில் மாண்டுகிடந்து துதிப்பார்கள்; என்றும் மார்க்கண்டேயனைப் போல் பதினறு வயதாய் விளங்கும் அழியா இன்பக்கடலில் வாழ்வார்கள்; (7)

747. என்னுயிருக் குயிரானை யெரியேந்து மியல்பானை
மன்னுயிர்க ளெல்லாமாய் மருவிநின்ற திறலானைப்
பொன்னெடு மெய்ப்பொருளானைப் போக்குவர
வில்லானை
உன்னுபவ ருலகுத்தி னினிப்பிறப்ப தொழிந்தாரே.

ஒளியுடைக் கண்ணுக்கு ஞாயிறு ஒளிவிளக்க மெய்துமாறு தன்னொளியை வேறறக் கலப்பித்து உருவமெய்தக் காட்டினும், கண்ணொளி வேறுநின்றே காணும்; அவ்வாறே உயிரறிவும் உயிர்க்குயிராம் உடையானறிவும் உடனின்று உணர்த்தினும் உயிரறிவு வேறுய் நின்றே காணும்; இறைவன் காட்டு மருளும் உயிர்களின் (652) நற்பயன் கருதியே. அவன் அருளைப்பெற ஞானக்கினியாலே அஞ்ஞான இருளைச் சுட்டெரிக்க வேண்டும்; எரியேந்து மியல்பான்.

காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம் போல்
காணவுள் ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் சேருமே

(சிவஞானபோதம் 11)

இறைவன் தூய்மையானவன்; அவ்வண்ணம் தம்மை அடைந்த ஆன்மாவையும் தூய்மையாக்க, அது சிவான்மாவாக விளங்கும்; அந்த ஆன்மா மற்றும் ஆன்மாக்களைத் தூய்மையாகக் கண்டு பர

சிவான்மாவான உலகினைக் காணும். (575). உருவ வழிபாட்டினர்க்குக் கூத்தப் பெருமானும், அருவுருவ வழிபாட்டினர்க்குப் பொற்றூண் (25) எனப்படுஞ் சிவக்கொழுந்தும், அருவவழி பாட்டினர்க்குத் திருச்சிற்றம்பலமாகிய அறிவுப் பெருவெளியுமாம் (25). மார்க்கண்டேயர் கண்டது போல் (746) மன்னுயிர்களெல்லாமாய் பரசிவான்மாவான அம்மையப்பரை, மூக்குட்பிரானை, மூன்றுவது நிலையான சிற்றம்பலமாகிய அறிவுப் பெருவெளியில், தாணுவெனும் உள்ளச் சோதியில் பொன்போலும் மோட்சவீடளிக்கும் மெய்ப்பொருளானை, கூத்தப்பெருமானுகவும்; 'உன்னு மனங்கர்ப்பூரவுண்டை போலே கரையு மின்னுமானந்த விளக்கே'' எனும் இரண்டாம் மூன்றும் நிலைகளில் சிற்றபல தரிசனமாகக் காண்பார் பிறப்பிறப்பற்றவரே. (8)

748. மருவாருந் தாராளை வானவர்கள் பெருமானைத்
திருவாரும்மார்பானைச்சிவக்கொழுந்தைச் சின்மயனை
அருவானை யுருவானை அங்குமிங்கு முள்ளானைக்
குருவாய்க்கோ ணுனைக் கண்டுள்ளம் குளிர்ந்தேனே

கொன்றைமாலை மார்பில் மருவி நிற்க. (746) உள்ளுஞ் ஜோதியாய் விளங்குபவனை, தேவர்களெல்லாம் போற்றியேத்தித் தொழும் பெருமானை, பஞ்ச நமஸ்காரத் தொல்முறையை தேவபூசை செய்து உருவாம கூத்தப் பெருமானும், அருவுருவாம் பொற்றூண் (25) தரும் சிவக்கொழுந்தை, அறிவுப் பெருவெளியில் சிற்றம்பல தரிசனமான அருவானையும் அடியேன் கண்டேனே.

அவ்வண்ணம் அங்கும் இங்கும எங்கும், எண்ணில் பல கோடி உயிர்கள் எத்தனையோ அத்தனைக்கும் அருட்கண்ணுக விளங்குபவனை, அவனே நான்வேண்டிப் பணிந்தவாறே என் சிவகுருவாகவும், மெய்ப்பொருளாய் எப்பொருட்கும் ஈசனுய் கோனுகவும் வினங்குபவனை, தண்ணளி கொண்டு, எம்மைக் காத்தருளிய ஜோதியிலே கண்டு, அழியா இன்பமடைந்தேனே. (9)

749. இப்பிறவி தீர்ப்பானை இனிப்பிறவா தருள்வானை
எப்பிறப்பும் என்னேடே யுடனுக இருந்தானை
ஒப்பில்லா ஒருவனுய் ஊழியெல்லாம் நின்றானைச்
செப்புமவ ரினிப்பிறப்போ டிறப்பினையே சேராரே.

அடியேனுடைய உயிர்க்குயிராம் நாதன், எம்மையுடையான் எத்தனையோ பிறவிகளாக என்னேடுகூட எம்மையுடையானுக நின்றவன்; நமக்கருள் கொடுத்த தண்ணளிவாய்ந்த ஒப்பில்லாத மேலான உண்மைமுழுதுமென, எங்கெங்கும் எல்லாக் காலத்திலும், கால வெல்லையோ தேசவெல்லையோ இல்லாது எப்பொருளிலும் வியா

பித்து நீக்கமற எங்கும் நிறைந்து, ஒன்றுயும் பலவாயும் நின்றவன்: ஐவகையாம் மன்றத்தின் கண்ணும் திருக்கூத்தருளும் சிவபெருமான் அத்திருக் கூத்தினைப் பொன்னம்பலத்தின்கண் காட்டியருளி; அடியேன் திரும்பவும் பிறவாமே காத்தருளும் எம்பெருமானே; அவனை உணர் வினால் உணர்ந்தறியும் திருவைந்தெழுத்தை உணர்ந்துணர்ந்து சிந்தை தெளியத் சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனைதனையச் ஜெபிப்பார்கள்; அப்பொருளேயாகி இப்பிறப்பு இறப்புக்களாகிய உலகியற் கூத்தை ஒழிப்பாரே.

திருவ ருள்தெய்வச் செல்வி மலைமகள்
உருவி ருக்கின்ற மேனி யொருபரங்
குருவை முக்கணெங் கோவைப் பணிநெஞ்சே
கருவி ருக்கின்ற கன்மம்இங் கில்லையே.

தாயுமானவர், பொன்னைமாதரை: (48): (10)

134 உண்மை முழுதும்

வெண்பா

750. உண்மை முழுதுமென ஓது மொருமொழியால்
என்னை மறந்தேன் இடரகன்றேன் — பின்னையிங்
காச்ச ரியங்காணேன் அண்டபிண்ட மெல்லாமே
போச்சுதொன் முகப் புகழ்,

எங்கும் நிறைவெற்று விளங்கும் முழு நிறைவாகிய மெய்யுணர் வாய்த் திகழ்ந்து எல்லையற்ற பெருவடிவாய் யாண்டும் உருவுடைப் பொருள் போல் போக்கும் வரவும் உள்ளதென்னும் இயல்பு இல்ல தாய் மாறாது திகழ்ந்து கொண்டிருக்கும் பெரும் பொருளே; எண்ணில் பல கோடி உயிர்கள் எத்தனையோ அத்தனைக்கும் அருட்சுண்ணக விளங்கும் மெய்ப்பொருளானவனே; தோற்றமுறுது, உயிரில் பொருள் உயிருள் பொருள் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்து அதன் ஒளை வடிவான அம்மையாகவும்; வினைமுதலாம் முதல்வன் வினைப்பய னென்னும் அம்பலத்தே ஆருயிர்களை அவரவர் வினைப் பயனுக்கேற்ற வாறு உடலுடன் பொருத்தி வைத்து இருவினையுஞ் சாராமே தாமே உடனின்றும் வேறுயும் அவற்றை இயக்கும் முழுதும் உண்மையான வனே; காலவெல்லையோ தேசவெல்லையோ இல்லாது போக்கும் வரவும் இல்லாது இரவுபகலற்று விளங்கும் மெய்ப்பொருளானவனே; 'ஓம்' என்னும் ஒரு மொழியுண்மையால் [165; 303] நிலைந்து நிலைந் துருகி விழிநீர் பெருக எல்லாமும் நானும் ஒன்றுய் அவனேயாகி என்னை மறந்தேன். இடர்தீர்த்தென்னை யாளும் எம்பிரான் என்னையாண்ட குரு தந்தனன்; அறியா அறிவில் அழிந்தேக சித்தமாய் நிட்டை

கூடி அவனெனுஞ் சிற்றம்பல ஜோதியில் என்னை யிழந்தேன்; இடர கன்றேன். தாயுமானவர் "அண்ட பிண்டங் காணேன் அகமும் புற மும் ஒன்றுக் கண்ட என்னை நீ கலந்த காலம் பராபரமே" என்று கூறுவதுபோல் அண்டமும் பிண்டமும் எல்லாம் போச்சுது; எல்லாம் புகழ்பெறு ஜோதியே (*Existence Bliss Absolute*). (1)

751. ஆறுங் குளனும் அருவரையுஞ் சோலைகளுஞ்
சேரு மிலங்கைச் சிவனடியீர் — கூறுஞ்
சிவதொண் டனைக்காக்கச் சிந்தைவேண் டாவோ
அவற்குத் துணையா ரறை.

இலங்கைச் சிவனடியீர் உங்களுக்கு ஞானவார்த்தைகளும் ஓம் எனும் உண்மைநினையும் (750) கூறும் சிவதொண்டனுக்குச் சிந்தை செய்யவேண்டாவோ; அவனுக்குத் துணை வேண்டும்; அதை உணர்ந்து அறன்வழி நின்று சிவதொண்டு செய்யவேண்டுமே. அவன் வழிநிற்க வேண்டுமே. பொருளும் வேண்டுமே. (291). (2)

752. கன்னலொடு செந்நெல் கதலி கமுகுபலா
மன்னு மிலங்கைவாழ் மாந்தர்காள் — இன்னுஞ்
சிவதொண்டன் தொண்டிலுளஞ் செல்லாதிருந்தால்
அவனையோம்பு வாரா ரறை.

முன்பாட்டில் கூறியபடியே சிவதொண்டனை வாசித்து அறன்வழி நிற்பது உம்முடைய கடமை. பொருள் உதவி புரிந்து சிவதொண் டனைக் காத்து அவன் வழிநிற்றலே பெருந் தொண்டு, அவனையார் வேண்டுவார்; (3)

753. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்கலென
நல்லிளமை முன்னுள் நவின்றனளாற் — செல்வச்
சிவனடியீர் தொண்டதனைச் செய்யத் தவறீர்
கவனஞ் செலுத்துவீர் காப்பு.

செல்வத்தினுடைய மதிப்பு அதற்கு ஏற்ற தர்மம் செய்வதால் கூடும். கோயில், பாடசாலை, அனுதைகளில்லம், தர்ம ஆச்சிரமம் முதலியன செல்வர்களுடைய செல்வத்தின் நன்மதிப்பாலேயே சிறப் படைகின்றன. முன்னுள் ஔவை சொன்ன மொழி மறவாமல் சிவ தொண்டனுக்குச் செய்ய வேண்டிய தொண்டை யாற்றுவீர். (4)

135. திருவம்மானை 1

ஐயடித்தரவு கொச்சகக்கலிப்பா

754. அரியயனுந் தேடி யறியாத் திருப்பாதம்
பெரியபுவ னத்திடையே பேயேனை யாண்ட
உரிமை நினைந்துருகி யுள்ளத் துவகைபொங்க
இருவிழியும் நீரிறைப்ப விரவுபக லேத்தி
அரியதிருப் புகழையே அறையுதுங்கா ணம்மானாய்

பாசபந்தக் கயிறு அறுமே இயமம் நியமம் எனும் கிரியாபாதப் பயிற்சியினால் பழக்கப்பட்ட மனம். ஊழ்வினைப் பழக்கமாய் உலகியற் பொருட்களில் அங்கலாய்த்து அலையும் அம்மனம் பொருட்களை விட்டு அறவழிநின்று ஒடுங்கும்; 'உள்ளபடியே யாதும்' என உணரும்; 'சித்த மௌனம் செயல்வாக்கெலாம் மௌனம் சுத்தமௌனம்' உள்ளத்தே தோன்றும். தாயுமானவர் ''வைத்த பொருள் உடல் ஆவி மூன்றும் உன் கைவசம் நான் தர நீ வாங்கிக் கொண்டு சித்த மிசை புகுந்ததுதான் மெய்யோ பொய்யோ'' என்கிறார். 'சிவன் செயல்' அல்லது 'சிவசிவ' எனும் மாமறை தரும் 'ஓம்' எனும் உண்மைப்பொருளுக்கு, எல்லாவற்றையும் ஒப்படைக்க, 'சுத்த மௌனம்' என்பால் தோன்றியது 'மெய்யோ பொய்யோ' என்கிறார். மாணிக்கவாசகர் இவற்றை ''பூணொணாததோர் அன்பு பூண்டு நாள்தோறும் போற்ற பேணொணாத பெருந்துறைப் பெருந்தோணி பற்றியே காணொணாத திருக்கோலம் காட்டினாய்'' என்று 'சுத்த மௌனம்' முதல் தோன்றி; பின் இறைவனுடைய 'திருக்கோலத்தை' நிட்டைகூடிக் கண்டேன் என்று திருக்கழுக் குன்றப் பதிகத்தில் பாடுகிறார். மால் அயன் காணாத திருப்பாதம்.

மேலும் தாயுமானவர் தருவதைக் காண்க.

எண்ணாத தெண்ணிய நெஞ்சே துயரொழி என்னிரண்டு
கண்ணே உறங்குக என்னாணை முக்கட் கருணைப்பிரான்
தண்ணார் கருணை மவுனத்தி னால்முத்தி சாதிக்கலாம்
நண்ணாத தொன்றில்லை யெல்லா நலமு நமக்குளவே.

[பாயப்புலி 13]

இந்த 'மும்மௌனம்' தோன்றிச் சிற்றம்பல தரிசனங் கண்டும் பின் வாழ்வில் தத்துவங்கள் யாவும் ஒடுங்கி உயிர்க் காற்றுடன் கூடி குண்டலியாற்றலாக மூலமிடமாக வளருந்தன்மையது; இது சக்தி வாய்ந்தது; இதைப்பணிந்து திருவடிப்பேறு எனும் பக்தி நிலையில் பக்தி எனுஞ் சங்கிலியினால் கட்டவேண்டும். மும்மௌனமடைந்த அயனும் மாலும், தம் அகத்துள்ளே 'சிவலிங்க வடிவாக

'முக்கண் எம்பிரான்' ஜோதிப் பிழம்பாகக் காட்சி கொடுக்க, அதன் காரணத்தால் 'நான்' எனும் ஆணவ முனைப்புக்கொள்ள மனம் புறத்தே அலைந்தது. மௌனம் கலைந்தது. திருப்பாதங் காணது மயங்கினர்.

அரி அயனுந்தேடிக் காணுமல் மயங்கி வருந்தின அந்தத் திருப்பாதம் அடியேனை நிட்டை கூடி சிற்றம்பல தரிசனங் கண்டபின் புவன லோகத்தில் ஜீவன் முத்தனாக நான் வாழும் அந்நிலையிலும் என்னை யாண்டது. என்னுடைய மதம் பிடித்த யானைபோன்ற மனத்தினை பக்தியெனுஞ் சங்கிலியினால் திருவடிப்பேறு எனுங் கட்டுத் தறியில் அறிவு எனும் யந்திரத்தினால் கட்டிப்பின்னும்பின்னும்அந்தச்ஜோதியில் நான் அவனுடன் கலந்து திருவடிப்பேறடைந்தேன். அரி அயனைப் பிடித்தலைத்த ஆணவ முனைப்பு வராமல் இறைவன் திருவருள் எனைக் காப்பாற்றின உரிமையை நினைந்து நினைந்துருகி இரு கண்களும் நீர் பெருக வேண்டியழுதேன் ஆணவமலம் மனத்தைப்பிடிக்காது காப்பாற்றிய எமது முழு முதல்வன் அரிய திருப்புகழையே திரும்பவும் திரும்பவும் விரித்து விளம்பியே இரவும்பகலும்பாடிப்பாடிஅகந்தழைந்தேன் 'எல்லாந் திருவருள்' எனும் அறிவினாலே அஞ்ஞான இருள் விட்டு நீங்கவும் 'நான்' எனும் ஆணவமலம் நீங்கிற்று; சுத்தமௌனம் எனும் நிலையில் நிட்டைகூடி என்றும் ஜோதியில் அவனுடன் ஒன்றுபடும் திருவடிப்பேறு எனுமரிய நிலை எம்மை விட்டு நீங்காதிருக்க இறைவன் திருவருள் கொழிப்பானாக. (1)

755. ஆட வெடுத்த அடித்தா மரைபரவி
வேடம் பொலிய விரைந்துவந்த மெய்யடியார்
தாடலைமேற் கொண்டு சற்குருவைப் போற்றி
நாடறிய வென்னை நல்லதொண்டு செய்யவைத்த
கேடறியாத் திருவடியே கிளத்துதுங்காணம்மானாய்.

[முன்விளக்கம் தொடர] மும்மௌனம் பூண்டு கருவி கரணங்கள் எல்லாம் ஒடுங்க, நெஞ்சமிடமாக, உயிர்க் காதிருகிய பிராணனும், எண்ணமாகிய சித்தமும் ஆளாகிய புருடனும் மூன்றும் இயங்கும். பேருறக்கமெனப்படும் துரியமிடமாக, உயிர்க்காற்றும் ஆளும் இயங்கும். நெஞ்சத் தாமரைமீது நின்ற மூன்றினுள்ளும் எண்ணங்கள் மறைய, குண்டலியாற்றல் பரவிப்படர்ந்து மூலத்திடத்துள், நாலாமிடமாகிய துரியத்தில் உயிர்க் காற்றும் ஆளும் நிலைத்து நின்று, முன் தாமரைபோலும் நெஞ்சத்துத் தோன்றிய அருள்ரூபம் மாறி தோற்றமுருது, ஆருயிர்தோறும் ஓசைவடிவாக நின்றியங்கும் அம்மை [120; 61; 616], —நந்தி தரிசனமாக நாம் கண்ட உலகம் மறைந்து ஜோதிவடிவாகத் தோன்றும்; தில்லை நடனத்தை, நீக்கமற நிறைந்து விளங்கும். அம்மை தன்னை, வேடம் பொலிய வந்த சிற்றம்பல தரிசனத்தை நாம் மேற்கொண்டு; தாயுமானவர்

''அக்குண்டலி யாற்றலின் அருளினால் வரம்பின்றி வளர்கின்ற பேரொளிவண்ணமாகிய மூலத்தீயினொடு மோன மந்திர முறைமையினால் வெற்றி மிகுந்துவரும் அமிழ்தத்தையுடைய திங்கள் மண்டலத்துக்குள்ளே அடியேனுடைய அறிவினைச் செலுத்தி நிலைபெற்ற அவ்வமிழ்த வடிவமாய் ஓங்கி வெற்றிமிதந்து வருகின்ற சித்தர்களுடைய நாலாம் நிலையாகிய போகநிலை எய்தி அறிவுப்படியினை தில்லைத் தரிசனம் காண்பனே'' எனும் பொருளுடன் ''யவனருளினால் எல்லையற்றுவளர் சோதிமூல அனல் எங்கள் மோனமனு முறையிலே வயமிகுந்து வரும் அமிர்த மண்டல மதிக்குளே மதியை வைத்து நாள் வாய்மடுத்தமிர்தவாரியைப் பருகி மன்னுமாரமிர்த வடிவமாய்ச் செயமிகுந்துவரு சித்தயோக நிலைபெற்று ஞானநெறி அடைவனே'' என்று மூன்றும் நிலை, நெஞ்சத்து உறக்கம் எனும் நிலை, நந்தி. அருள் ரூபம் காணும் நிலையிலிருந்து, நாலாம் நிலையாகிய துரியத்தே ஆடல் காணும் நிலைக்குச் சென்றதை விரித்து விளக்குகிறார்.

சுவாமிகள்: தில்லைத் தரிசனத்தை எண்ணம் ஒடுங்கிய நாலாம் நிலையாகிய துரியத்தில் அறிவுப் பெருவெளியில் நாம் கண்டும், புவனத்தில் ஜீவன் முத்தனாக அவதரித்து, சற்குருவைப் போற்றி ஆணவமலம் மனத்தைப் பீடிக்காது நம்மைக் காப்பாற்றிய (754) திருவருளைப்போற்றுவோம், சாயுச்சியபதவியடைந்து(514)தாயும் பிள்ளையும் போல் அம்மையப்பராகிய உலகும் நானும் சஞ்சலமற்ற உலகுடன் குழைந்து வாழவும் தொண்டாற்றவும் சித்தர்களுடைய, யோக நிலையில் எழுந்து விளங்கும் திருவடிப் பேரருளும் ஞானவுணர்ச்சியே; எண்குணமாக வென்னுள்ளத்துதித்து வளர்ந்து விளங்கும் ஜோதியே; கிளத்தல் = எழுதல்; சொல்லல். கிளத்தி = சரஸ்வதி. (2)

755. பாதிமதி சூடிப் பவளம்போன் மேனியிலே
பூதி யணிந்து புதுக்கொன்றைப் பூச்சூடிப்
பாதியுரு பெண்ணுகிப் பல்கோடி பூதகணம்
வீதியிலே சூழ விளையாடும் மெய்ப்பொருளே
ஆதி பகவனேயே யன்புசெய்வோ மம்மானுய்.

பாதிமதி' இளம்பிறை வளருந்தன்மையுடையது; பவளம் போன் மேனி செம்மேனி; கல்லால நீழல்தனில் இருந்து அறவழி நின்று கொல்லா விரதம் பூண்ட மெய்யன்பர்கள் மும்மலமும் அழிந்து போகச் சேவிப்பதால் சிவந்தமேனி, செம்மேனி, எம்பிரான்; மோட்ச வீட்டையடையச் செய்யும் தன்னருளி வாய்ந்த முழுமுதல்வன்: சுடலையிலே எரிந்த சாம்பலைப்பூசியும், விபூதியணிந்தும் அஞ்ஞான இருள்விட்டு நீங்கிய பொடிபூசி; மாயைக் காட்டை அடையாளமாகவே சாணத்தைச் சுட்டெரித்த சாம்பலை, அல்லது உடலைச்சுட்ட சுடலைச் சாம்பலையணிந்து அஞ்ஞான இருள் சுட்டெரித்து அறிவே

வடிவாக விளங்கும் அகமுடையார் சிவனடியார்; புதுக்கொன்றை, கண்ணி; கண்ணி விரிந்து மலர்கிறது. மார்பிலே கண்ணிமாலை யணிவதால் அகம் சிவலிங்க வடிவாகத் தடத்தப் பொருளாக மூன்றும் நிலை நெஞ்சத்தில் காணப்படுவது; சைதன்யப் பொருளாகப் பின் மலர்ந்து துரியத்தில் நாலாமிடத்தில் ஜோதியாகக் காட்சியளிப்பது;

பூதகாரியங்களான உயிரில் பொருள் உயிருள் பொருள், எண்ணில் பலகோடி எத்தனையோ அத்தனையும், அவரவர் வினைப்பயனுக்கேற்றவாறு வினை முதலாம் முதல்வனால் எத்தனையோ விதமான உடல்களில் பொருத்தி வைக்கப்பட்டு, அந்தந்த உடலுக்கேற்ற தொழிலில் ஈடுபட்டு, இருவினையையும் கூட்டியும் குறைத்தும் பல வீதியிலும் காட்சி (382) யளிக்கிறார்கள்: பூதகாரியங்களான எப்பொருளும் நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் எனும் நுண்ணிய நிலையாகிய பூதங்களைந்தாயும் தோன்றும் பொருள் நீங்கி ஆற்றல் வடிவாக தோற்றமூருத ஓசைவடிவாக அம்மையாகவும் காட்சி தருவன (74?): வினைமுதலாம் முதல்வன் எல்லாப் பொருட்களிலும் உண்ணின்றும் வேருகவும் தன்னொளி கொண்டு இருவினையுஞ் சாராமே இயங்குபவன், இவனே உண்மை முழுதுமென விளங்கும் மெய்ப்பொருளானவன், ஓசைவடிவான பெண்ணுருவைப் பாகமாகக் கொண்டவன்; உருவில் திகழும் உமையாள் பங்கன் ஆதிபகவன்; அவனுக்கே அன்பு செய்வோம்:

திருஞான சம்பந்தர் பூதகணம் புடைசூழ பூமியும், நுண்பொருளாகி விண்ணும், நாதமாக அம்மையும் என்று பாடுகிறார்.

பூதமும்பல்கண மும்புடைசூழப்
பூமியும் விண்ணு முடன்பொருந்தக்
கீதமும்வெம் மையுமாகிச்
சீரொடு நின்றவெஞ் செல்வர்
ஓதமுங் கானலுஞ் சூழ்தரு வேலை
யுள்ளங் கலந்திசை யாலெழுந்து
வேதமும் வேள்வியு மோவா
வேட்களந் னகராரே (1-39-3) (3)

757. விடையேறு மெய்ப்பொருளை விண்ணோர் பெருமானைக்
கடையேனை யாண்டுகொண்ட கருணைத்திருவுருவைத்
தடையேது மில்லாத தத்துவனைத் தாளை
அடியேனை னம்புலனு மறியாத வித்தகனைப்
படிமீதிற் பாடிப் பணியுதுங்கா ணம்மானுய்.

[முன்பாட்டுக்கள் மூன்றும் காண்க] எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனைக்கும் அருட்கண்ணைக விளங்கும் எம்பெருமான் எப்பொருளையும் உண்ணின்றும் வேருகவும் நின்று இயங்குந்

தன்மையால் விடையேறி என்றழைக்கப்படுகிறார். பூதகார்யங்களில் மெய்ப்பொருளாக உண்ணின்று இயக்குபவன் நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் எனும் நுண்ணிய பூதங்களைந்தானவன், தோன்றும் பொருள் தன்மை நீங்கி தோற்றமுறுத ஓசைவடிவின (756) அம்மையைப் பாகமாகக் கொண்ட மெய்ப்பொருளானவன் விடையேறு விண்ணோர் பெருமான்; முடிவிலாற்றலுடைமையும் பேரருளுடைமையும் தம்மையடைந்தோரைத் தூய்மையாக்குந் தன்மையுமுடையவன், எளியேன் தன்னை முடிவிலாற்றலுடன், இருவிழியும் நீர்பெருக வேண்டி அழ தண்ணளி வாய்ந்தவன் கருணைத் திருவுளங் கொண்டு அறிவே வடிவாகவிளங்கும் என் அகத்தே, பாதியுரு பெண்ணுகிப் பல்கோடி பூதகணம் வீதியிலே சூழ வினையாடும் மெய்ப்பொருளானவன் [756-ம் கீழே பாட்டு 1-39-3 காண்க] திருவுருவைக் காண வரந்தந்தனன்; தத்துவாதீதனுக, புவனலோகத்திலே சாயுச்சிய பதவியடைந்து விளங்கும் அடியேனுக்குக் கருணைத் திருவுளங் கொண்டு பல வீதியிலும் (382) பல்கோடி பூதகணங்கள் வினையாடும் வித்தகனுரான அம்மைபோலும் உலகினையும் தன்னையும் தாயும் பிள்ளையும் போல் (755) சஞ்சலமற்றுக் குழைந்து குழைந்து வாழவும் அவனை மறவாதும் போற்றித் தொழுது வணங்கவும் கருணைபுரிவீர். சாயுச்சிய பதவியில்தான் அந்தத் திருவைந் தெழுத்துச் சோதியில் 'வெறும் ஆனந்தமே' என்று இருப்பதுபோல், வாழ்விலும் நாளடைவில் ஐம்புலனுமறியாதே குழந்தை தாயின் மடிமீது வெறும் ஆனந்தமாக வினையாடுவதையே 'ஐம்புலனுமறியாத வித்தகன்' என்கிறார்.

தாயுமானவர் இவற்றைத் தருகிறார் காண்க.

என்னையுன்னை இன்னதிது என்னுமல் நிற்குநிலை
தன்னையரு ளென்றே தருணத்தில் — அன்னைபெற்ற
பிள்ளைக்குஞ் சொல்லாத பெற்றிகண்டாய் ஐயனே
உள்ளத்தின் உள்ளே உணர்

[உடல் பொய்யுறவு 60] (4)

758. வேதம் வகுத்தானை வேதத்தி னுட்பொருளைப்
பாதந் தொழுவார்கள் பாக்கியத்தைப் பச்சைமால்
பேதந் தவிர்த்தாண்ட பிஞ்ஞகனைப் பிறப்பிலியை
மாதவி புன்னை மௌவல் வளர்ந்தோங்கு நல்லூரில்
பாதம் பரவிநாம் பாடுதுங்கா ணம்மானுய்.

விழுமிய முழுமுதல்வன் திருவாக்கைத் திருக்குறிப்பின்வழி வேதாவாக நின்ற நான்முகன் மறையோதியும் பிறர்க்கு ஓதுவிக்குந் தொழிலுடையான்; மறையோனெனவும் வழங்கப்படுவன். மறை முடிவாம் வேதாந்தமும், முறை முடிவாம் சித்தாந்தமும் தரும் மெய்ப்பொருளான சிவபெருமானின் சிற்பரவியோமம் எனப்படும் திருச்சிற்றம்

பலமாகிய அறிவுப் பெருவெளியே அவனே வேதத்தினுட் பொருளாகக் காட்டுகிறது. அறிவுப் பெருவெளியாக விளங்கும் அகம், திருப்பாதமாக, பெருந்துறைப் பெருந்தோணியாகக், கொண்டு இந விழியும் நீர்பெருக அழுது தொழுதேத்தி வணங்கும் மெய்ப்பொருளானவனே; மருத்துவனுக்கே தெரியும் நோயாளியின் நோயையும் அதற்கு வேண்டிய மருந்தும்; அதுபோல் சிவகுருவாக விளங்கும் இறைவனே எண்ணங்களைத் தோற்றுவித்து கருணை கூர்ந்து அறவழிநிற்க கொல்லாவிரதம் பூண்டு மும்மலமு நீக்கியாண்டருளுவன்; திருவருளால் சிகிச்சைக்குச் தேவையான எண்ணங்கள் தோற்றுமிடமே பச்சைமால்; காக்குங் கடவுள் தோற்றமுறுவார். இறைவன் வேதாவாக எழுதிய நாடகத்தை (380) அவன் திருப்திக்கு ஏற்றவாறு நடித்தலே எம் கடமை; அரசனாக நடிப்பவனும் சக்கிலியனாக நடிப்பவனும் ஒரே தன்மையராய் நாடகாசிரியர் முன் காணப்படுவர். ஆதலின் பேதமில்லாதே செல்வந்தரையும் ஏழையையும் ஒரே தன்மையாக வழிகாட்டி, அறமுரைத்து பிறப்பிறப்புக்கு அப்பால் செல்ல அருளும் பிஞ்ஞகனே பிறப்பிலியை; காலவ மனிவியான அஷ்டகன் முதலியோரைப் பெற்றெடுத்த மாதவியின் கருவிலுற்பத்தியாய் அழகுடன் விளங்கும் தாமரை மலர்போன்ற, எம் ஞானகுரவனுய் எழுந்தருளி ஞாலம் புகழ வளர்ந்தோங்குபவனே நல்லூரில், நன்மையே தரும் அறிவுப் பெருவெளியாக விளங்கும் அகத்தில், வேதத்தினுட் பொருளாக (முன்விளக்கம்) விளங்குபவனே பரவிப் பாடித் துதிப்போமே.

(5)

759. உயிருக் குயிராகி யுள்குவா ருள்ளத்தே
பயிலுந் திருவுருவைப் பற்றற்றூர்க் குறுதுணையைக்
கயிலைப் பதியானைக் காளகண்டங் கொண்டவனை
மயிலைப் பொருவுமையாண் மருவுதிருப் பாதியனைத்
துயிலை யறநீக்கித் தோத்திரிப்போ மம்மானுய்.

உயிர்க் குயிராம் நாதனை (35) (747) எம்முள்ளத்தே தோற்றப்பட்டு நமக்குத் தண்ணளி வாய்ந்தவன். "மருத்துவனாக எழுந்தருளிய திருவுருவை; (758; 757) பாசபந்தக்கயிறு அறுந்து சிற்றின்பத்தை உண்ணுதே சண்டத்தில் வைத்த இறைவனே நிஷ்காமிய கர்மம் புரிந்து இருவினையுஞ் சாராது நின்று முருகனுடைய மயிலாடுவதுபோல் சிவயோக வாழ்வில் (34), கல்லால் நீழலில் உமையாள்போல் செருவில் ஒருகால் வனையவுன்றி செந்தீ எழுவித்து எஞ்சிய வினையையுட் சுட்டெரித்தவன், இறைவனுடைய துயிலை நீக்கி, திருவாணையின்வழி கருணை வெள்ளம் பெருக, என்றும் குறையாத வன்புடன் அவனேயாய் (511) வாழ அவனைப் போற்றுவோமே (758).

தாயுமானவர் கூறுவதைக் காண்க.

என்னையுந் தன்னையும் வேறு — உள்ளத்
தெண்ணுத வண்ணம் இரண்டற நிற்கச்
சொன்னதுமோ ஒருசொல்லே — அந்தச்
சொல்லால் விளைந்த சுகத்தைஎன் சொல்வேன் — (சங்கர)

(ஆனந்தக்களிப்பு 14) (6)

136 திருவம்மானை 11

760. அங்குமிங்கு மாக வலைந்து திரிவேனைத்
தங்குங் கருணையினாற் முழுண்டு கொண்டான்
எங்கள் குருநாதன் எழிலார் திருவடியை
இங்குநாம் பாடி யின்புறுவோ மம்மானைய்.

மனமாகிய குரங்கின் கையில் எளியேன் பூ மா லை போன்று அல்லலுறுமல் அடியேனை ஆட்கொண்டருளுஞ் சிவபெருமானின் தண் ணளிவாய்ந்த கருணையினால் என்றும் அழியாத கருணையும் ஆற்ற லும் நிறைந்த பேரானந்தம் அதுபவி வழிய எனையாண்டு கொண் டான். தாயுமானவர் இவ்வுண்மையை விளக்குகிறார் காண்க.

"மனமான வானரக்கைம் மாலையாக் காமல்
எனையாள் அடிகளடி எய்துநாள் எந்நாளோ" (6-5)
"வேட்டைப் புலப்புலையர் மேவாத வண்ணமனக்
காட்டைத் திருத்திக் கரைகாண்ப தெந்நாளோ" (6-6)

எந்நாட்கண்ணி. [6-5, 6]

அடங்கியமனம் ஒடுங்க சும்மா இருக்கும் அகம் எழிற்சி மிகுந்த திருவடிப்பேறு. சிற்றப்ப தரிசனந்தரும் நிட்டை கூட அருளும் அகம்; அந்தப் பெருந்தோணி மாணிக்கவாசகருக்கு பெருந்துறையில் கொடுக்கப்பட்ட பெருந்தோணி. எங்கள் சுவாமிகளுக்கும் ஞானகுர வனுல் அவரைத்தேரடியில் முதல் சந்தித்தபோது கொடுக்கப்பட்ட உவமை கடந்த இன்பந்தேக்கிய தோணி (489); அத்திருவடியை இங்குநாம் பாடி இன்புறுவோமே. (1)

761. ஆருமறி யாம லந்தரங்க மாயருளைச்
சேரும் படிசெய்த செல்வக் குருநாதன்
ஊரும்பே ருமறியா வொருவன் கழல்பாடி
நீரும்பூவுங் கொண்டுநிதம் போற்றுதுங்கா
ணம்மானைய்.

கூடிநின்றவர் மனத்தில் ஒரு வித்தியாசமுங்காணுமல், பிறதே சஞ்சென்று திரும்பிய கணவனை மிகவுமாவலுடன் காத்திருந்த மனை வியின் உள்ளத்தே எவ்வாறு தன் அன்பைச் செலுத்துவானை அவ் வண்ணமே எம்ஞானகுரவன் என்னைச்சந்தித்தபொழுது ''நாம் அன்பு பூண்டோம்; என்னை நீ யாரென்றறிவாய்;'' என்று சொல்ல நான் அவனை உற்று நோக்கினேன்; ''நோக்க (489) உவமை கடந்த இன்பம் தேக்கிற்று'' ''காலன்வலி தொலையக் காலெடுத்தான்'' (488) நமக கீந்த ''அந்தரங்க மாயஅருள்.''

எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனையிலும் அருட்கண்ணுக விளங்கும் எம்பெருமானை, இன்னர், என்னபேர், எந்தவூர்'' என்று யார்அவரைச் சுட்டுப்பொருளாக வரைகட்டிக் காண்பிக்கக்கூடும்; ஊரும் பெருமிலார் நம்மிறைவன்; அத்தகைய முழுமுதல்வனும் எம்பெருமானின் கழலடிகளை காலையும் மாலையும் தண்ணீரும் பூவுங்கொண்டு போற்றித் தொழுவோமே. மாணிக்கவா சகசுவாமிகளும்

''முத்தனே முதல்வா முக்கண முனிவா
மொட்டரு மலர் பறித்திறைஞ்சிப்
பக்தியாய் நினைந்து பரவுவர் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ் - சித்தனே'' என்றுபாடுகிறார்
(அருட்பத்து. 8) (2)

762. இருவினையின் கட்டழித்து எல்லாஞ்சிவன் செயலாய்க்
கருதும் படிவைத்த கருணைநிறை ஆசான்றன்
திருவடியைப் பாடிநாம் சிந்தித்துச் சிந்தித்து
உருகி யுருகி யுணருவோ மம்மானைப்

பிறந்து பிறந்து இறந்து இறந்து மீண்டும் பிறக்கும் பெற்றி யுடைய வினைப்பாசக் கட்டவிழ்த்து; 'சிவசிவ எனும் மாமறைதரும் உண்மையை விளக்கும் 'சிவன்செயல்' எனும் மந்திரத்தினுல் அஞ் ஞான இருளைச் சுட்டெரித்து; 'உள்ளபடியே உள்ளது' எப்பவோ முடிந்தகாரியம்' எனும் சொற்களால் 'ஓம்' எனும் மெய்ப்பொருளை (126, 656) நன்குணர்ந்தறிந்துப்;பின் 'சிவன் செயல்' எனும் உண்மை விளக்கும் ஐந்தெழுத்தின் உண்மையை உணர்ந்துஞ் சிந்தித்தும் சிந்த னைதனைய் அந்த உண்மைப் பொருளையே கருதி அறிவுப் பெருவெளி யில் அதனைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் பெருகி அந்த உணர்ச்சிதனும் பும் அறியா அறிவில் அவிழ்ந்து இடப்போமாக; (3)

763. ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை குருநாதன்
கூர்த்த திருநயனக் கொள்கையிற் பாவமெல்லாம்
தீர்த்தா னவன்றன் திருவடியை நாம்பாடித்
தோத்திரித் தென்றும் புகழ்பெறுவோ மம்மானைப்

[முன் பாட்டுத் தொடர்] பாசபந்தக் கயிறு அற மனம் அடங்க அகம் ஒடுங்க 'திருவைந்தெழுத்தையே' ஓதியும் உணர்ந்தும் சிந்தித்துச் சிந்தனைதனைய் அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நான் கிடக்க எனையாட்கொண்ட எம்பெருமான் எந்தை குருநாதன் முப்புரமெரிய வைத்தான். அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய், சித்தத்திலிருந்து புத்திசக்தியைத் தூண்டும் பரஞ்சோதியைத் தியர்னிக்க உன்னின்று அருளினன். திருமூலர் இவற்றை உணர்ந்துகிறூர் காண்க:

"அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பார்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மலகாரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே"

அறிவை அறிவினுலே தானறியலாம், பிணக்கிலாத 'சிவன் செயல்' எனும் உண்மைப் பொருளானவனே எம்பெருமான்; உள்ளபடியே யாதுமென உணர்ந்து கள்ளமனம் போயொளிக்கச் சித்தமௌனஞ் செயல் வாக்கெல்லாம் மௌனம் சுத்த மௌனம் என்பால் தோன்ற சிவன் செயலின் உண்மை முழுதுமெனும் உண்மையை நாம் காணுவோம். அவ்வண்ணமே அவன் திருவடியை தேவாரங்களைப் பாடியும், ஐந்தெழுத்தை ஓதியும் புகழுவோம். (4)

764. உன்மத் தங்கொண் டொருவனைப் போற்றேன்றி
சின்னத் தனமான வார்த்தைகளைச் செப்பியென்றன்
கன்மனசை முற்றுய்க் கரைத்த குருநாதன்
என்னத்த னிணையடியை ஏத்துவோ மம்மானுய்,

பித்துப் பிடித்தவனைப்போல் சாலவன்புடன் தான் வரும் பத்தரைப் பார்த்துப் பார்த்து (282) ஏசுவான். என்னையும் பாவனையொன்றும் பண்ணவிட்டிலன்; பாவனைபண்ணலோ வேறும்சால மாந்தருடன் சேர்ந்துவிட்டாலோ ஏதுமிலாது ஏசுவார். பாவனையெல்லாம் விட்ட யான், வேறேர் நினைவு மில்லாத யான், முற்றுப் பிணக்கிலாத உண்மைப் பொருளான 'சிவன் செயல்' எனும் எம்பிரானுக்கே உன்மத்தம் பித்துப் பிடித்தே (763) முப்புரமுஞ் செற்றேன். முப்புரமுஞ் செற்ற என்னுடைய மனசு உலகுயிர் அனைத்தையும் உற்று நோக்கிற்று. மாடு மக்கள் சிற்றிடையார் செம்பொன் ஆடை எனும் என்னுடைய பொருட்கள் என்றும் நான் எனும் ஆணவமும் விட்டு நீங்கிற்று. பாசத்தினுல் பிறருக்குக்கருணையில்லாத மனம், அன்பு மேலிடக் கரைந்து, உலகும் யானும் நாயும் குழந்தையும்போல் ஒரு வரையொருவர் நேசித்தோம் (759). அம்மையப்பரைப் போற்றுவோம். (5)

137. அபயப் பத்து.

தரவு கொச்சகக் கலிப்பா

765. அப்பனே ஆருயிரே யன்பேயென் ஞதரவே
ஒப்பிலா வொன்றே ஊழியெலா மானவனே
வைப்பிலா வாழ்வே மவுனமணிப் பெட்டகமே
இப்புவியெ லாம்புகழு மிலங்கைநக ரீச்சுரனே.

ஆருயிர்கட்குத் தந்தையாகவும், தாயாகவும், என்னுயிரை இயக்கும் அறிவாகவும், அவற்றிற்த ஒளிகொடுத்து உடனின்றும் வேறுபாடாக நின்றுமியங்கும் உடையானறிவாக விளங்கும் உயிர்க்குயிராம் நாதனே; முழுமுதல்வனும் எம்பிரானே, எம்முடன் கூடியே தொடர்ந்து கிடக்கும் மும்மலப் பிணிப்பாலும் அவற்றின் காரணகாரியமான தத்துவங்களாலும் ஆளப்பட்ட அடியேன், இக்கொடிய விடத்தினும் மயங்கிக் கிடக்கிறேனே; படைத்தல் காத்தல் அழித்தற் கடவுளர்களாகிய அம்மும்மூர்த்திகளாலுமே இவை உண்டாக்கப்படுகின்றன, இந்த மும்மூர்த்திகளுக்கும் தலைவனுகவும் ஆதியுமந்தமுமாகவும் விளங்குபவனே! முழுமுதல்வனே! நீயே இவை யாபேருக்கும் கோற்றத்துக்கு இடமான எண்ணங்கள் எண்ணங்கள் தோன்றுமிடம் நீயே; உன்னுடைய திருவாணைவழி நின்றே எண்ணங்கள் காரணமாக மாயாகாரிய இவ்வுலகம் மும்மூர்த்திகளாலும் ஆளப்படுகின்றது; திருமூர்த்திகளையுமியவும் திரிதோஷமிறக்கவும் நீயே என்னுண்ணின்று, உடையானறிவு கொண்டு, என்னுதரவே நீயே திருவாணை வழிநின்று (25 ; 267; 115) மும்மூர்த்திகளுக்குந் தலைவனுக அருளும் ஊழியெலாமானவனே! ஒப்பிலாவொன்றே நீர் அருள் புரிவீர். எண்ணங்களும் சங்கற்பமும் உம்முடையனாகவே விளங்கும்; 'சிவ சிவ' எனும் மாமறைதரும் 'சிவன் செயல்'' எனும் உண்மையே எல்லாவற்றிற்தும் காரணம்: அதே இவ்விடத்தைத் தீர்க்கும் மருந்து, மும்மலப்பிணிப்புக்கும் அரிய மருந்து என்மதிக்கு இரங்குவீர் (774) தாயுமானவர் ''அப்பனென்றும் அன்னையென்றும் ஆரியனென்றும் உனையே செப்புவதும் உன்னிலையின் சீர்காண் பராபரமே என்று பராபரக் கண்ணி (282) இலும்; சுந்தரர் ''எந்தையை எந்தை தந்தை பிரானை ஏதமர்யிவ் விடந்தீர்க்க வல்லானை முந்தையராகிய மூவரின் மிக்க மூர்த்தியை முதல் காண்பரியானைக்...,, (7-57-7). என்றும் தருகிறார்கள்.

சிவகுருவுந் தானுமொன்றுபட்ட அந்நிலையில் சித்தமவுனம் செயல்வாக்கெலாம் மவுனம் சுத்தமவுனம் என்பால் தோன்ற மௌன குருவே எழுந்தருளிக் காட்சிதரும் மலப்பிணிப் பொன்றுமிலாத (முன் விளக்கம்) மவுனமணிப் பெட்டகமே! இலங்கையுமுலகும் புகழ

விளங்குங் கோனே; இலங்கையில் வாழும் ஆருயிர் தோறும் அதுவதுவாய் நிற்கும் ஈசனே! என்ஞானகுரவனே! செல்லப்பனே! தையல் தனக்குப் பாதி உடல் கொடுத்தாய் (773). (1)

766. ஆறுபிறை கொன்றைதும்பை யரவு சடையாட
நீறுபொலி மேனி நின்றெழிலைக் காட்டிவிட
மாறுபடு மரக்கன் மலரடியின் கீழ்க்கிடக்க
ஆறுபொலி யிலங்கை யாண்டவனே நினக்கபயம்.

இமயமலையில் ஊற்றெடுத்து என்றுங் குறையாது பெருகி காசி முதலிய தலங்களைச் சிறப்பித்தும் ஊருக்குஞ் செழிப்புக் கொடுக்கும் கங்கா நதிபோன்று, பெரியவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் எனும் வித்தியாசமின்றி திரிலோகக் குடும்பினருக விளங்குமிறைவன் சடாமுடியினின்றும் பெருகுங் கருணை வெள்ளம் மக்களுக்குப் பேரருளும் பேரின்பவாழ்வும் அளிப்பது. கொன்றை வெப்பம் மிகுந்த வறட்சி நிலத்தில் காணப்படுவது; கல்லால் நீழலில் இருக்கும் மக்கள் தம் அன்பினால் 'சிவன்செயல்' எனும் மருந்து கொண்டு பிணிநீக்கி அறிவு மலர அவற்றைக் கொன்றைக் கண்ணியாகவும் மலராகவும் மார்பிலுஞ் சடையிலு மணிந்துகொள்வர்; தும்பைப் போரில் வெற்றிபெற்று அணியும்மாலை. ஐம்புல வேடர்களையும் வென்று, காட்டிலுள்ளநரியை நற்பரியாக்கி உலகுக்குச் சேவை செய்ய, ஐந்தலை நாகத்தை வென்று அடக்கித் தலையிலும், சடையிலும் மார்பிலும் தும்பையரவு அழகுடனுட; இறைவன் மாயையைச் சுட்டெரிக்கும் அறிதறியாக மாயாகாரியப் பொருளான இவ்வுடம்பைச் சுட்டெரிக்கும் சுடலைச் சாம்பலை யணிந்திருக்கும் நீறுபூசிய பொன் மேனிதுலங்கு மெம்பெருமான்; பசுவின் சாணியை, மாயையைச் சுட்டெரித்த திருநீறு பூசியவன்; மலப் பிணிப்பைச் சுட்டெரித்து முப்புரமுமெரிந்த பின் பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை இயல்பாகவே பாசங்களினீங்குந்தன்மை முதலிய எண்குணங்களும் (733) எழிற்சியுடன் தோன்றி மாயையே உருவெடுத்தாற்போன்றுகாணப்படும் முயலவனெனுமரக்கன் அடங்கி ஒடுங்கி, மும்மலனமே உருவான உம்முடைய பாதமலர்க்கீழ் கிடக்க; தத்துவங்கள் ஆறு லும் ஒடுங்கியே! நெஞ்சத்தில் (சுழுத்தி எனும் மூன்றும் நிலையில்) எண்ணம் உயிர்க் காற்று ஆள் எனும் மூன்றும் நாலாம் நிலையாகிய துரியத்தில் குண்டலி ஆறு உயிர்க்காற்றும் ஆளும் இரண்டும் விளங்க ஒடுங்க சித்திகளைப் பெற்று (65; 755) உலகையும் இலங்கையையு மாளுந்தன்மையுடைய எங்கள் பிரான், ஆறு பொலி இலங்கை யாண்டவனே, எம்ஞான குரவனே செல்லப்பனே!

(2)

767. இருநிலனுய்த் தீயா யிரவி மதியாகி
வருபுனலாய்மாருதமாய்மறிகடலாய் மன்னுயிராய்க்
குருவாகிச் சீடனுய்க் கூறவொண் ணுச்சுடராய்
மருவிதிற் கும்மிலங்கை மணியே யுனக்கபயம்

பருந்தன்மையுடைய இம்மாயாகாரிய மண்ணுலகாகியும், அவற்றை உண்டாக்கும் நுண்பொருளாகிய நிலம் நீர் நெருப்பு வாயு ஆகாசமாகியவற்றுல் ஆக்கப்பட்ட விண்ணுலகாகியும்; மும்மலப் பிணிப்பை 'சிவன் செயல்' எனும் உண்மையாலே சுட்டொரிப்பவன் (765 766;) 'ஞானச் சுடர் விளக்காய்' நின்ற எம்பெருமானே! அத்தத் 'தீயாக முப்புரமுமெரிப்பவன்; [உருவிற் திகழும் (1-69-5) ஞானத் திரளாய் நின்ற (1-69-3) 597 இல் காண்க]. ஞானத்தீயாக முப்புர முமெரிப்பவனே, ஆடல் காட்டும் அம்மையாகவும் தன்னெளி கொண்டு ஆடுபவனை சொக்கனுகவும், சந்திரனுஞ் சூரியனுகவும் விளங்குபவனே எம் மிறைவன்; இவ்வுண்மையைக் காட்ட முக்கண்ணனே, ஞானக்கண், சந்திரன், சூரியன், எனும் மூன்றுமாக, மார்க்கண்டேயர் சிவலிக்கத்தில் தரிசித்து, இயமனை வென்றவர்; திருவடிப்பேறு அடையப்பெற்று கங்கைசடை (766) யுடையோனுய் வருபுனலாய் விளங்குபவன்; ஐம்புலன்களையும் வென்று தும்பையரவு சடையாட (766) மனமடங்கி, காற்று அடங்கி, அலையற்ற கடல், மறிகடல் போல் மௌனமே உருவான உள்ளத்தினராய் நின்ற செல்லப்பனே! நீயே அத்தனைய உள்ளத்தை யுடைய ஆருயிராய், என்னைப்போல் சீஷனையும், உடனின்றுணர்த்தும் சிவகுருவாய், சொற்களால் விளக்கவோ புத்தியினுலே நினைக்கவோ, முடியாது அப்பாற் பட்டவனை 'சிவசிவ' எனும் மாமறை தரும் 'சிவன் செயல்' எனு முண்மை வடிவானவன்; ''பொல்லா வினைகளறுப்பாய் நீயே புகழ்ச் சேவடி யெம்மேல் வைத்தாய் நீயே நல்லாரை நன்மை யறிவாய் நீயே ஞானச் சுடர் விளக்காய் நின்றுய் நீயே'' என்னு முண்மைப் பொருளாக விளங்குபவன்; இலையில்லாமாய் என்னுடன் உண்ணின்றும் பொருட் தன்மையில் வேறுகக் காணப்படுவதால் வேறுக நின்றும், உலகுக்கும் இலங்கைக்கும் மாணிக்கக் கல்லுப்போல் அழகும் ஒளியுங் காட்டும் இலங்கை மாமணியே செல்லப்பனே! உனக்கபயம்;

(2)

768. ஈரவார் செஞ்சடையாய் எழிலார் மழுப்படையாய்
பாரமார் கொம்மைமுலைப் பாவை யிடமுடையாய்
கோரமார் கொல்புலியைக் கொன்றுடுத்த கொற்ற
வனே
ஆரமுதே நல்லிலங்கை யாண்டவனே யுனக்கபயம்

கல்லால நீழலில் கடுந்தவம் புரிவதால் [755; 311] பரிசுத்தமான உள்ளம், கருணையே உருவாகி பகைவர் உறவோர் எனும் வித்தியாசமில்லாமல் திரிலோகக் குடும்பினருக்கு கருணை பெருக்கும் உள்ளத்தினராய்; செஞ்சடையிலிருந்து கங்காநதிபோன்ற கருணை வெள்ளம் பெருக ஈரவார் செஞ்சடையனுய் விளங்கும் பெருமான் (766) ஞானத்திரளாய் நின்ற பெருமான் அல்ல அடியார்மேல் ஊனைத்திரளை நீக்கு முன்மைப் பொருளானவன்; எஞ்சியிருக்கும் மலப்பிணிப்பை, யான் எனும் ஆணவத்தை சுட்டெரிக்கக் களவுபடுங்காலம் (53) ஞானத்திரளாய் நிற்பவன் உருவில் திகழும் உமையாள் பங்கன் செருவில் ஒருகால் வலைய வுன்றிச் செந்தீ எழுவித்தார்: எஞ்சிய வினையை எரித்தார். ஈரவார் செஞ்சடையார், உமைபங்கன், உயிர்களின் நன்மையைக் கருதியே வினைத்தன்மை நீங்கும் வண்ணம் உயிர்களை உடல்களுடன் பொருத்தி வைப்பவன் (380; 738;) படைப்பு; ஆடல்புரியும் ஓசைவடிவினளான அம்மை தண்ணளி வாய்ந்த ஈரவார் சடையானுடைய பாகமாக விளங்குபவள், பால்சுரக்கும் பாரமார் கொம்மை முலைப் பாவையாக விளங்குகிருள்.

திலைத்தரிசனங்கண்ட அன்பர்க்கு பாசபந்தக் கயிறு எரிந்து விட்டது. மீண்டும் கட்டுந் தன்மையற்றது. சித்துவல்லமை கொடுக்கும் குண்டலி ஆறு ஆங்கே ஆணவப் பேயை உண்டாக்குகிறது. ஆறு பொலி ஆண்டவன் (766). அந்தப் புலியைக் கொன்று அதன் தோலை உடையாகக் கொள்பவன் நம்மிறைவன்; ஆறுபொலி ஆண்டவன் கொல் புலித்தோலை உடுத்து புலியாகக் காணப்பட்டாலும், பால் பசுவாக முத்திப் பழத்தை ஈனும் பக்குவுடையவன் (741) மாதவி புன்னை பொலவல் (758) உலகுக்கு தாய்போல் அன்பளிப்பவனை பரசிவான்மா அம்மையப்பராக விளங்கும் உலகுக்குத் தொண்டு செய்யும் ஆரமுதே நல்ல இலங்கைக்கு அரசனை விளங்குஞ் செல்லப்பனே! உனக்கபயம்:

(4)

769. உயிரெல்லா மாகியு மாகாத வுன்பெருமை
பயிலப் படும்விதமோ பாரளத்தோன் காணரிய
உயிருண் சுடர்மணியே உம்பர்பணி மெய்ப்பொருளே
மயில்குயில் பயிலிலங்கை மாமணியே யானபயம்

சுவாமி விவேகானந்தர் அமெரிக்கப் பிரசங்கத்தில் 'அ' எனுஞ் சத்தத்திலிருந்தே உலகந் தோன்றியதாக யேசுநாதர் கூறின ஒரு உண்மைபற்றிப் பேசினர். நுண்வெளியில் நுண்வடிவமான நிலம் நீர் தேயு காற்று ஆகாசமுமாய் நீதிரிந்து நுண்வடிவாய காரணமாயையினின்றும் பருவடிவாய்க் காரியமாய உலகு உடல் உலகியற் பொருள் எண்ணில் பலகோடி அத்தனையுமாகியும், இருவினையும் சாராமே

அப்பால் நின்றியக்குந் தன்மையினுல் வேருகவுங் காணப்படும் எம் இறைவன். கண்ணெளி சூரியனுடைய ஒளி கொண்டு பொருட்களை உருவமைக்கும் (747) அவ்வண்ணம் இறைவனெளி கொண்டு உயிரியங் கும் சூரியன் வேறுபொருளாக விளங்குவது போல் இறைவனும் வேறு பொருளாகவும் விளங்குவன் (652) உன்பெருமையை, சுடர்விளக்கின் மகிமையை (767) யார் கூறமுடியும்; தாயுமானவர் பராபரக்கண்ணி (211 ல் ''சிவோகம் பாவிக்கும் அத்தால் சிவனுமாவர்'' எனுந் திருவருள் உண்மைப்படி தம்முடம்பைச் சிவமெய்யாகக் கண்டசுகரா கிய சிவமுனிவர் தம் தந்தை வியாசர் தள்ளாப் பருவத்து மெள்ள ஓடித் தம்மையழைத்த போது எல்லாவற்றையுஞ் சிவனெனவே கண் டிருந்தமையால் தந்தையினழைப்பினுக்கு 'ஏன்' என்று கூற அச் சொல் எங்கிருந்தும் உண்டாவதைக் கண்டார் ''எனும் பொருளுடன்

''அங்கமே நின்வடிவமானசுகர் கூப்பிடநீ
எங்கும் ஏன் எனென்ற தென்னே பராபரமே''

என்று உன் பெருமையை விளக்குகிறார் காண்க.

ஆடுமயிலே ஆண்டவனைப் பணிந்தாடு மயிலே (327). கூவுகுயிலே (381) அகஞ் சிவலிங்க வடிவாக விளங்க ஆன்மா ஆத்மனுக இறைவ னெளி கொண்டு விளங்க அறிவுப் பெருவெளியில் ஞானப் பொருளுதய மாகும்; அழகாக ஆடும் மயில் ஆண்டவனுக்குப் பணிந்து, சீவன்முத் தனுக தாயின் மடிமீது குழந்தை விளையாடுவது போல், சித்துக்கள் வல்லனுப் தாயாகிய உலகுக்குத் தொண்டு புரியும் இலங்கை மாம ணியே! செல்லப்பனே உனக்கபயம்; (5)

770. ஊருமில்லாய் பேருமில்லாய் உற்றூர்பெற் றோருமில் லாய்
சீருஞ் சிறப்புமுள்ளாய் செக்கர்வான் மேனியனே
ஆரும் புகலரிய ஆற்றல்விடை யேறுமையா
காருந் தொழுமிலங்கைக் கடவுளே யுனக்கபயம்

[ஆற்றல்விடை ஏறு உமையாக ஆருந்தொழும்]

நுண்வெளியில நிலம் நீர் நெருப்புக் காற்று ஆகாயம் ஆகிய ஐம் பூதங்களாகியும் அவற்றின் காரணகாரியப் பொருட்களாகிய உயிரில் பொருள் உயிருள் பொருள் எண்ணில் பலகோடி (769) எத்தனையோ அத்தனைக்குப் அருட்கண்ணுக விளங்கும் முழுமுதல்வனும் மெய்ப்பொரு ளானவனே! நீர் உயிர்களில் உண்ணின்று இயங்கினாலும் அப்பாற் பட்டவனுக வேறு பொருளாகவே இருவினையுஞ் சாராமே இயங் தம் தன்மையினுல் மாயையுலகினுல் பீடிக்கப்படாதவன். இன்ன தன்மை இன்னவுருவம் என்றே கிடையாது. ஆதியுமந்தமுமில்லா அரும் பெருஞ்

சோதியே உன் அந்தமே செந்தளிர்கள்; ஆதியந்தமில்லாதவன்; ஊரும் பேருமில்லாய் உற்றூர் பெற்றோருமில்லாய் யேசுநாதர் கூறிய அந்த 'அ' எனுஞ் சத்தம் தோன்றிய ஆகாயமே செவ்வான், வான் பொருளான நுண்பொருள் ஆகாயமே (*Electromagnetic field*) விண்ணுலகமே மனத்தினுலே நாம் காணப்படும் இறைவன் தோன்றுமிடம். அருவுநவாம் சதாசிவன், நந்திதரிசனம் நாம் காணுமிடம்; சுழுத்தி இதயந்தனில் மனமுமெண்ணங்களுஞ் சித்தத்தில் ஒடுங்கச் சித்தம் ஆள் உயிர்க்காற்று அடங்கிய அந்நிலையில், செவ்வானுருவில் அவனைக் காணலாம். சீரும் சிறப்புமுடைய செக்கர் வான் மேனியன்: எப்பொருளிலுஞ் செறிந்து விளங்குகிறான், *'On analysis we get the Electromagnetic fild)*

அப்பாலே அறிவுப் பெருவெளியில் 'ஆடவெடுத்த அடித்தாமரை பரவி' (755) கல்லால் நீழல் தனில் [755 தாயுமானவர் கல்லால் நீழல் காண்க] முடிவிலாற்றலுடையோனைக ஆரும் புகலரிய ஆற்றல் எனும் ஊர்தி ஏறி, உமையின் ஆடல், தில்லைத்தரிசனங் காண என்னுண்ணின்று திருவருள் புரிந்தும் தானே இயங்கியும் நான் தொழுதேத்திய வண்ணம் அருள் புரியும் செல்லப்பனே! இலங்கைக்குக் கடவுளாக எழுந்தருளிபவனே! தாயுமானவர் கூறுவதைக் காண்க.

ஊரும் பேருமிலார் உற்றூர்பெற்றருடனே
யாருமிலார் என்னை அறிவாரோ பைங்கிளியே

[44 பைங்கிளிக் கண்ணி 8]

அருவுருவம் அகன்று அப்பால் நடனங் காண்பதைத் தாயுமானவர் தருகிறார் காண்க,

"அருவுருவம் எல்லாம் அகன்றதுவாயான
பொருளெமக்கு வந்து புலப்படுவதெந்நாளோ"

[எந்நாட்கண்ணி 9 பொருளியல்பு 10]

என்று முடிவிலாற்றலுடைமையின் தன்மையை அறியத்தருகிறார்.

(6)

771. எல்லாஞ் செயவல்ல விறைவனே யென்குருவே
நல்லார் தொழுதேத்தும் ஞானமணிப் பூடணமே
கொல்லா நெறிநின்ற குரவர்தொழும் மெய்ப்–
பொருளே
எல்லா வளமுஞ்சே ரிலங்கைமன்னே யுனக்கபயம்

இயமம் நியமம் பொறை எனும் (682) கிரியாபாதம் முறையே அநுசரித்து பாசபந்தக் கயிறு அற, மனமடங்க அறவழி நின்று (492) கொல்லா விரதம் பூண்டு (477) தாயுமானவர் போன்று கல்லால் மர நீழல் தனில் ஊசி நுனிமேல் உக்கிர தவம் (755) புரியும் தவத்தி

னுேர்க்கு; அவர் ''அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நெறியாம் நீடருள் நந்தி ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம்'' எனும் அருவுருவாம் சதாசிவனைக் கண்டும்; பின் அறிவுப்பெருவெளியில் சித்தாகாசத்தின் கண் ''அந்த ஆட எடுத்த அடித் தாமரை பரவி பாதமலராகி தில்லைத் தரிசனமாகிய தன் இடப்பாகம் விளங்கும் உமையம்மையின் சொல் வடிவான நாதவொலி துலங்கும் வேடம் பொலிய''; அந்த மெய்ப்பொருளானவனைச் சித்துக்களில் மதம் பிடித்த யானை போலும் ஆணவமலப் பிணிப்பினுல், அயன்மால்போல் புறத்தே (754) அலைந்து காணுணுதழியாமல் அந்தப் பாதமலர் விரிய, பக்தி எனும் கொடியினுல் திடசித்தத்துடன் அறிவு எனும் யந்திரத்தினுல் திருவடிப் பேறில் தம்மைக் கட்டும் நல்லோர்; என்றும் மறவாத தொழுதேத்தும் ஞானமணிப் பூடணமே! செல்லப்பனே! செல்லப்பனுக உருத்தாங்கி எழுந்தருளிய எல்லாஞ் செயவல்ல சர்வதத்வாதிபதியே; என் ஞானகுரவனே! நெறி நின்று உலகயின்பத்தில் தூநெறிகண்ட சுவடு நடுவெழும் எனுமுண்மை கைப்பிடித்தும்; பூநெறிகண்டுளம் பொன்னகமாய் நிற்கும் எனும் உண்மை விளங்க உலகச் சேவை செய்து இருவினையும் நீங்கி விளங்கும் அறிவாளிகளும்; பகைவரையும் உறவினராகக் கையாளும் பொது நடங் காணுந் தவத்தினரும்; அப்பாற் பட்டவராய ஞான குரவன் போன்று விளங்கும் நிர்மலனை அன்பு பூண்ட சாயுச்சியபதவியடைந்த மெய்யன்பர்களும்; எல்லாத்தகுதியினரும் ஒன்று சேர்ந்த மூர்த்திகளுக்கும் மூர்த்தியாக விளங்கும் இலங்கை மன்னனே செல்லப்பனே அபயம். (7)

772. ஏக னனேகனென்று மிமயமலை வாசனென்றும்
மோகமார் தக்கனைமுன் முடித்த முதல்வனென்றும்
பேரகமார் பூண்முலையாள் பொருந்திய பாகனென்
—றும்
யோகநாதன் பணியிலங்கை நாதா வுனக்கபயம்

[முன்பாட்டு விளக்கம் தொடர்ந்தே] அறிவுப் பெருவெளியில் சித்தாகாசத்தின் கண் ஆடாடுத்த அடித்தாமரை பரவிப் பாதமலர் விரிந்து விளங்குந் தில்லைத்தரிசனம்; முன் கொண்டுள்ள போகவுணர்சியானதின் காரியப் பொருளான நாதவொலியை மனேமய கோசத்திலும், மனம் கரைந்து மறைய விஞ்ஞானமய கோசத்திலும், போகமருளும் கருணை வெள்ளஞ் சுரக்கும் முலைகளையுடைய அம்மையை இடப்பாகங்கொண்ட வினைமுதல்வனும் முழுமுதல்வன்; பூண்முலையாள் சுரக்குங் கருணை வெள்ளம் பெருகத்தாம் அநுபவித்த இன்பத்தை ''நான் கண்டேன்'' எனும் ஆணவமலப் பிணிப்பினுல் பீடிக்கப்பட்ட 'தக்கன்' தன்குண்டலியாறு பெருக சித்துவல்லமை தேங்க அதில் மோகங்கொண்ட அவனை முடித்த எம்மிறைவன்; அங்கைத்தீயன் அவ்

வாறு உண்டாகும் மோகத்தை உடனே எரிக்குந் தன்மையாளன்; அவன் அஞ்ஞான இருள் விட்டு நீங்கப் போகமலையுச்சி, யோகமலையுச்சி, ஞானமலையுச்சியாகிய கைலாசமலை விளங்கும் இமயமலையே எம்மிறைவனிருப்பிடம்: அனேகருக்கு ஆருயிர் தோறும் உண்ணின்று அதுவதுவாய் விளங்குபவன்; அத்தகைய இறைவன், பொருட்டன்மையில் அவன் வேறுபாடாக விளங்குந் தன்மையை யுணர, இருவினையுஞ் சாராமே அப்பால் நின்று விளங்கும் திருவைந் தெழுத்துச் சோதியில் ஆனந்தமய கோசத்தில் ஏகருக்கு கடக்கும் அந்நிலையை உணரலாம். அதற்கு ஒப்பாக அந்த நின்மல ஞானி சாயுச்சிய பதவியடைந்து (514) உலகுந்தானும் தாயுங் குழந்தையும் போலச் சஞ்சலமற்று வாழ்ந்து நாளடைவில் வேறோர் நினைவுமின்றியே உலகன்னையுந் தானும் ஒரே உயிராக ஏகருக வாழும் இயற்கை வடிவினருக்குக் காணலாம். அவனே இமயமலைவாசன்: அத்தகைய இமயமலைவாசருக இலங்கையில் உலகுக்குப் பணிசெய்த செல்லப்பனே யோகநாதன் பணிகொண்டு போற்றித் தொழுதேத்துபவனே, அபயம்: அப்பர் சுவாமிகள் இவற்றைக் கூறுகிறார் காண்க.

ஆயிர நதிகண் மொய்த்த வலைகட லமுதம்வாங்கி
ஆயிர மசுரர்வாழு மணிமதின் மூன்றும்வேவ
ஆயிரந் தோளுமட்டித் தாடிய வசைவுதீர
ஆயிர மடியும் வைத்த வடிகளா ரூரனீரே. (4-53-10)

[ஆயிரம் பாற்கடல் கடைந்த (381) வாழ்க்கையிலும் கொடுக்கும் அழியாச் சிவன் செயலின் பேரானந்தம்; ஆயிரக்கணக்கான ஆணவமலப்பிணிப்பு தோன்றுமிடங்களை எரித்தும்; ஆயிரக் கணக்கான வகையில் இறைவனைத் தாயும் பிள்ளையும் போல் உலகுக்குத் தொண்டு புரிந்தும்; ஆயிரம் வகையில் ஏகருக (முன்னிணக்கம்) உலகில் வாழ்ந்தார்.]

சேக்கிழார் சுவாமிகள், அப்பர் இந்தப் பாட்டைப் பாடிய அந்நிலையை உணர்த்துகிறார் காண்க.

"கையார்ந்த திருத்தொண்டு செய்து பெருங் காதலொடுஞ்
செய்யாரின் றேயெல்லாச் செந்தமிழமா லையுப்பாடி
மையார்ந்த மிடற்றர்திரு மயானத்தை வலங்கொண்டு
மெய்யார்வ முறத்தொழுது விருப்பினொடு மேவுநாள்"
"சீர்வளரு மதிற்கச்சி நகர்த்திருமேற் றளிமுதலா
நீர்மருவுஞ் சடைமுடியார் நிலவியுறை யாலயங்கள்
ஆர்வமுறப் பணிந்தேத்தி யாய்ந்ததமிழ்ச் சொன்மலராற்
சார்வுறுமா லகள்சாத்தித் தகுந்தொண்டு செய்திருந்தார்.

ஏகருக இமயமலை வாசருக (செல்லப்பனைப் போன்று) இருந்தே பாடினர் என்று சேக்கிழார் தருகிறார். (8)

773. ஐயம் புகுந்துமுனிவர் ஆணவத்தை முன்னழித்தாய்
தையல் தனக்குந்தன் பாதி யுடல்கொடுத்தாய்
வெய்ய மதஞகம் வெந்துவிழ நீவிழித்தாய்
தெய்வமே யிலங்கைநகர்ச் சிவனே யுனக்கபயம்.

(முன்பாட்டு விளக்கந் தொடர) சாயுச்சிய பதவியடைந்தும் புன்மையாளராய்ச் சீவிக்கும் நிலையில் ஓர் ஆணவப்பேய் முனிவனைப் பிடிப்பது வழக்கம். நாரதரைப் பற்றிய ஓர் சிறுகதை: நாரதர் ''சாதாரண ஓர் கூலியாள் காலை ஒரு முறை மாலை ஒரு முறை கடவுளைப் போற்றினால் போதுமா'' என்று ஆணவங் கொண்ட போது இறைவன் அவரிடம் ''ஓர் குடம் நீரைக் கொண்டு சற்றும் நீர் சிந்தாமல் இறைவனுடைய ஆலயத்தை வலம் வந்து அபிஷேகஞ் செய்'' யென்றார். அப்படியே அவர் வலம் வந்தபோது நீர் சிந்தாமல் பாதுகாப்பதே யெண்ணமாகவும், இறைவனைச் சிந்தனை செய்வதை மறந்தும் நிந்தனைக்காளாகினர். இறைவனும் அவனுடைய புன்மை தரும் ஆணவத்தை அகற்றினர். செல்லப்பனும் சுவாமிகளுடைய அத்தகைய ஆணவத்தை, 'கதிர்காம யாத்திரை செய்து பிச்சையெடுத்துண்' என்று சொல்லி ஆணவப்பேய் பீடிக்காது காப்பாற்றினர். அதைக் காண்க. அப்பர் சுவாமிகள் எவ்வாறு கடவுள் பணிகொண்டு ''கடவுளே பணி செய்வதாக'' விளங்கும் அந்நிலையை ஆர்வமுறப் பணிந்தேத்தி யாய்ந்த தமிழ்ச் சொன்மலராற் சார்வு மாலைகள் சாத்தித் தகுந்தொண்டு செய்திருந்தார்'' என்று சேக்கிழார் தருகிறார். யோக சுவாமிகளும் அந்நிலையை ''தையல் தனக்குந்தன் பாதியுடல் கொடுத்தாய்'' என்கிறார். அயன்மால் தக்கன் முதலியோரைப் பீடித்தலைத்த அந்த மதநாகம் உன்னையும் (என்னையும்) பீடிக்கும்பாது நீ விழித்து, மும்மூர்த்திகளுக்குந் தலைவனாக விளங்கும் எண்ணங்களே (*Virtual Desires*) அதற்குக் காரணமென அறிந்து திரிதோஷமிறக்க இறைவனிடமே ஒப்படைத்து, பக்திக் கொடியினால் மனத்தைக்கட்டி இலங்கை நகர்ச் சிவனே, செல்லப்பனே, உனக்கு அபயம் புகுந்தேன், காப்பாற்றவும், என்கிறார். பட்டினத்தார் இவற்றைத் தருவதைக் காண்க.

ஆறுண்டு தோப்புண் டணிவீதி யம்பலந் தானுமுண்டு
நீறுண்டு கந்தை நெடுங்கோ வணமுண்டு நித்தநித்தம்
மாறுண் டுலாவி மயங்குநெஞ் சேமனை தோறுஞ்சென்று
சோறுண்டு தூங்கிப்பின் சும்மா விருக்கச்சு கமுண்டே.
பட்டினத்தார் 9—16 (9)

774. ஒன்பதுவாய்த் தோற்பைக்கா யிரவு பகலுழலும்
என்மதிக் கின்னு மிரங்காமல் நீயிருந்தால்

என்செய்வே னென்குருவே யெவர்க்குநா
னெடுத்துரைப்பேன்
சொன்னம் பயிலிலங்கைச் சோதீ யுனக்கபயம்.

இவ்வுடம்பு மாயாகாரியப் பொருள்; கண்களிரண்டு, மூக்குத் துவாரமிரண்டு, காதிரண்டு, வாய், மலவாசல், சலவாசல் ஆகிய இவ்வொன்பது வாசல்களையுடைய தோலால் மூடப்பட்ட எலும்புந் தசையுமுள்ள மாயாகாரியப் பொருள். புல்நுனிமேல் நீர்போல் இவ்வுடலத்தின் இன்பவாழ்வு அழியுந்தன்மையுடையது. இந்த உடம்பு அழிந்து போகும் என்பதைக் குறித்துத் தாயுமானவர் ''கடத்தை மண்ணென லுடைந்தபோ தோவிந்தக் கருமச் சடத்தைப் பொய்யெனல் இறந்தபோ தோசொல்லத் தருமம்'' என்று விரித்துக் கூறுகிறார். இந்த மாயாகாரிய உடம்புக்காக இரவும் பகலு முழலாமல் என் மதியை எனக்கிரங்க நின் திருவருள் ஆணைவழி நின்று தண்ணளிவாய்ந்த எம்பெருமானின் கருணை வெள்ளம் பெருக; என் கல்நெஞ்சம், ஊழ்வினையின் பயனுக உருகாது கல்லுப்போலி ருக்குமிவ் நெஞ்சம், பிணக்கிலாத எம்பெருமானின் சிவன செயல் எனும் மெய்ப் பொருளான வுண்மையைக் கண்டுருகி உன்னை வேண் டிக் கண்ணீர் பெருக்காதோ? என் குருவே! தாயுமானவர் தனக் குதவி, அருள் புரிந்த மதியைப் புகழுகிறார் காண்க.

''விதியை யும்விதித் தென்ன விதித்திட்ட
மதியை யும்விதித் தம்மதி மாயையில்
பதிய வைத்த பசுபதி நின்னருள்
கதியை எப்படிக் கண்டு களிப்பதே''

என்று முன்வேண்டிய பிரகாரம் இறைவன் ஆணையின்வழி என்மதி எனக்கு எம்மைச் சிவபதமடைய அருள் தந்தது என்று பாடுகிறார்.

அவ்வாறே யோகசுவாமிகளும் தம் குருவை வேண்டியழுகிறார்: தம்முடைய மதிதனக்கிரங்கி, ஞானகுரவன் உண்ணின்று திருவாணை வழி இயக்க, மதி தம்மைத் தூக்கிச் சென்று சிவபதமடையச் செய் யும். ஆகையால் இறைவன் ஆணைவழி மதி எம்மைக் கொண்டு சென்று சிவபதமடையச் செய்ய, மயிலாடுவதுபோல், நாம் வாழ இலங்கைச் சோதியாகிய செல்லப்பனே அபயம். (10)

138 நீயென்னை ஆளாயோ

775. சோதிப் பிழம்பே சுரிகுழலாள் தன்கணவா
ஆதிப் பொருளே யறியாமை யால்மிகவும்
பாதிக்கப் பட்டேன் பரனே யினியுனது
நீதிக் கழல்காட்டி நீயென்னை யாளாயோ.

[முன் அபயப் பத்தின் பொருள் தொடர] பாசபந்தக் கயிறு எரிந்தும் தில்லைத் தரிசனத்தில் அயன்மால் முன், சிவலிங்க வடிவாகச் சோதிப் பிழம்பாக நீ நின்றது போல், அடியேனின் முன் நிற்கும் சோதியே! எவ்வுயிரிலும்நீ ஓசைவடிவாக ஆருயிர் தோறுமதுவதுவாய் நின்றொளிரு மெம்பெருமான் அனேகனெக விளங்குபவனே! ஏகனெகச் (772) சோதிப் பிழம்பாக அம்மையாகவும் சொக்கனதனுகவும் ஓரே சிவலிங்கச்சோதி வடிவான முக்கண்ணன். சூரியன் சந்திரன் ஞானக்கண் என்னும் முக் கண்ணும் விளங்கும் சுரிகுழலாள் கணவ (773) ஆதிப்பொருளே! மீதாகப் பின் தோன்றும், நிலைகுலையாது ஆனந்தமய கோசத்தில் காட்சி தரும், திருவைந்தெழுத்துச் சோதியே (Absolute Consciousness

ஊழ்வினையின் பழக்கத்தால் மாயாகாரியப் பொருட்களிலுண்டா கும் புல்நுனிமேலின்ப வாழ்வில் அடிக்கடி சூரங்கை யொத்த என் மனந்தாவிப் பிடித்துக் கொள்கின்றதே; இம்மாயா மயக்கத்தால் அறி யாமை எனுமஞ்ஞானத்தால் நித்தநித்தம் துன்புறுத்தப் பட்டு அசை கிறேனே; என்குருவே! என்செய்வேன்! வினை மூதலாம் முதல்வன் (380! 770; 769;) முழு முதல்வனும் நீ எல்லா உலகுக்குங் கர்த்தா வாக விளங்குபவனே! மருத்துவன் வைத்தியசாலைக்குள் நுழைந்த நோ யாளியை மலப்பிணிப் பெனும் நோயைத் தீர்ப்பதற்கு தேவையான மருந்து (454; 525;) கொடுத்து நோயை மாற்றியே வெளியேற உத் தரவு கொடுப்பான்; அவ்வாறே என் குருவே! வாடி மிகவருந்தும் எனக்கு சுரிகுழலாளுடைய உருவமைப்பு (380) (770) இவற்றின் நீதியைப் புகட்டி என்னை ஆண்டருளாயோ. 'உள்ளபடியே உள்ளது' எனும் உண்மையைப் புகட்டும் 'சிவ சிவ' எனும் மாமறை தரும் 'சிவன் செயல்' எனும் மெய்ப்பொருளானவனே நீ! (1)

776. ஆளான மெய்யடியா ரகங்கோயில் கொண்டவனே!
கேளாயோ வின்னுங் கிருபையுனக் கில்லையோ?
பாழாகப் போகாமற் காப்பதுன்றன் பாரமையா
வாளா விருந்தாற் பழியுனக்கு வந்திடுமே.

பாசபந்தக் கயிறு அறுந்து மனம் அடங்கி சித்த மௌனஞ் செயல் வாக்கெலாம் மௌனம் சுத்த மௌனம் தோன்றிய மெய்யடியார் தம் உள்ளத்தே மனம் ஒடுங்க 'அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்த மாய் நெறியாம் நீடருள் நந்தி ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம், எனும் அகத்தினராய் உள்ளங்கோயில் உயிர்சிவலிங்க வடிவாக (60) விளங்க அவற்றை யூளும் உயிர்க்குயிராமநாதனே! [முன்பாட்டு விளக்கந் தொடர] எளியனேனுடைய அல்லலையும் சஞ்சலங்களையும் நான் விண்ணப்பித்துள்ள அத்தனையுங் கண்ணுற்று அதற்கு ஏற்ற சிகிச்சை செய்து காப்பாற்றுவது முழுமுதல்வனும் உன்னுடைய கட மையல்லவா. நான் மாயையின் வலையிற் சிக்குண்டு மாண்டுபோக

விடுவதனக்கேர்க்குமோ? மாண்டுபோக விடாமல் அல்லலுறும் நேரம் நோயையறிந்து ஞானத்திரளாய் நிற்கும் எம் பெருமானே ஊனத்திரளான அந்த மலப்பிணிப்பு நேரைய, அந்த நோயினை வருந்தும் மெய்யடியாருள்ளத்தினின்றும் நீக்கியருளல் உன்கடமையல்லவா? தண்ணளி வாய்ந்த எம்பெருமானே அருள்புரியவேண்டும். (2)

777. வந்துன் னடியடைந்த மெய்யடியார் வருத்தமெல்லாம்
வெந்துபோம் வண்ணம் மிகுகருணை நீயளித்தி
யந்தமொழி கேட்டு அடியேனு முன்னடிக்கீழ்
வந்தேன் கருணை வழங்காய்நீ வான்பொருளே

விண்ணுலகில் (787) விண்ணோர் பெருமானாக (757) விளங்கும் மெய்ப்பொருளே! வான் பொருளே] வந்துன் பாதமலரடைந்த (754) மெய்யடியாரு (755) டைய அஞ்ஞான இருள் அவரைப் பீடிக்கும் இரவிலும், தோன்றும் பிணியை நீக்கச் 'சிவ சிவ' எனும் மாமறை தரும் 'சிவன் செயல்' எனும் மெய்ப்பொருளை, நீ தண்ணளி வாய்ந்த எம்பெருமானே உண்ணின்று உன்திருவாணை, திருவருள் எனுங்கருணை வெள்ளப் பெருக்கிலை களவுபடாத காலம் (53) (55) (ஓம்) எனும் உண்மைப் பொருளே! உள்ளபடியே உள்ளது! ஒரு பொல்லாப்பிங்கில்லை! எல்லாஞ் சிவன் செயல்! அவனே பிணக்கிலாத மெய்ப்பொருளானவன்! பேதமற்றவன்! எங்கும் அவனேடி! எல்லாம் அவனேடி! இவ்வுண்மைகள் அஞ்ஞான இருளை விட்டு நீங்கும் வண்ணம் நீர் கருணை புரிய வேண்டும் (776) தண்ணளி வாய்ந்த முழுமுதல்வனும் எம்பெருமானே கருணை புரிவீர்.! (3)

139 அபயமைந்து

778. அருந்தவர் நெஞ்சில் ருசிக்குங் கரும்பே யருளே–
பெருவாழ்வே
பொருந்திய பூரண சந்த்ரோ தயமே புண்ணியர்
புகழ்கோவே
அருந்துயர் தீர்க்கும் மருந்தே அந்தண ராகுதி
வெகுமழலே
திருந்திய விலங்கை பொருந்திய திருவே சிவமே
யுனக்கபயம்

இயமம் நியமம் பொறை (682) முதலிய கிரியாபாத முறைகள் கைக்கொண்டும் நிஷ்காமிய கர்மமே மிகநேசமுடன் புரிந்தும் மனம் ஒரு வழிப்பட்டு, எடுத்த அந்த ஒரு பொருளே 'சிவ சிவ' எனும் மாமறை தரும் 'சிவன் செயல்' எனும் மெய்ப்பொருளானவனைக் காணும் பல வீதிகளில் (382; 423;) மெய்யடியார் தம்மைக் காணும்

அந்த வீதியில் தாம் கொண்டுள்ள எண்ணம் கொழுத்து விளங்க (682); கல்லால நீழல் தனில் வீற்றிருந்து [தாயுமானவர் கல்லால்(755) ஊசி நுனிமேல் உக்கிர தவம் புரியும் அருந்தவர் நெஞ்சில் ருசிக்கும் கரும்பே; இறைவன் நாடகாசிரியராக எழுதிக் கொடுத்த நாடகம் (படைப்பு 380) அந்த நாடகமேடையாகிய உலகில் நடிக்கும் நடிகர் தமக்கு ஆசிரியனால் கொடுக்கப் பட்ட அங்கத்தைத் திறனுடன் நடிப்பதில் நடிகனுக்கு ஓர் ருசியுண்டாவது வழக்கம்; அதுபோலவேதாம் ருசிகண்ட வாழ்க்கையின் வீதியில் (முன் விளக்கம்) கல்லால நிழல் தனில் வீற்றிருந்து தவம் புரிவதால் அந்த வீதியில் நாம் கண்ட எண்ணம் மும்மூர்த்திகளுக்கும் மூர்த்தியாக (741; 765;) விளங்கும் எம்மிறையனே அருந்தவர் நெஞ்சில் கரும்புபோல் ருசிக்கும் திருவருளே பெருவாழ்வே!

ஆருயிர்களை அவரவர் வினைப்பயனுக் கேற்றவாறு வாழ்வில் உடலத்தில் மும்மூர்த்திகளுக்கும் மூர்த்தியான இறைவன், பொருத்தி வைக்க, அந்த வீதியில் நிறம்பட நடிப்பதால் இறைவனுடைய ஒளி கொண்டு விளங்குஞ் சந்திரன் போல் துலங்கும் மெய்யடியார் ருசித்து ருசித்துப் (முன்விளக்கம்) புகழும் அரசனே! உனக்காண வருந்தும் அடியவர்களுடைய வறுமைப் பிணியைத் திருவருள் கொண்டு அருள் காட்டி ருசிதரும் கரும்புபோல் அப்பிணியைத் தீர்க்கும் மருந்தே; அருந்தவர்களாகிய அந்தணர் ஓமகுண்டத்தில் நெய் அதிகம் ஊற்றுவதால், கல்லால நீழல்தனில் உக்கிரதவம் பெருக்குவதால், நெஞ்சில் தோன்றும் அழல்போலும் ஜோதி ஒளிகொண்டு பெருஞ் ஜோதியாக உன்னுடைய திருவருளால் பிரகாசிக்க உண்ணின்று திருவருள் புரியும் இலங்கைச் சிவமே உனக்கபயம்;

ஆகுதி = ஓமாக்கினி நெய்விடுதல்; ஓமபலி (1)

779. மதிதவழ் சடையாய் மழவிடை யுடையாய்
மாசில்லாமணியே
கதியென அடைவார் எதிர்வரு படைகள் காணுதே
யோட்டும்
அதிபுக முடையாய் அம்பிகை யாளை யிடமா
யுடையவனே
நதியுட னடவி தடவிய விலங்கை நம்பா
வுனக்கபயம்.

மழ = குழந்தை; புக = புகுதலைச் செய்ய; அடவி = காடு; சோலை; உருவில் திகழும் உமையாள் (769) நீதிக்கழலாக (775) விளங்கும் உருவமுள்ள உமையாள்பங்க, சந்திரன்போல்இறைவனுடையஒளி கொண்டு துலங்குபவள் சடாமுடியாகிய உள்ளத்தே என்றும் குளிர்ச்சியைக் கொடுக்குமியல்பினையுடைய, மதிதவழ் சடையுடையோனே!

முருகன் இயற்கை ஆற்றல் வடிவாக அன்னை உளங்கொண்டே செயல் புரிபவன்; முருகனே (121) அன்னை உமாதேவியாரின், இளங்கன்று, மழவிடை ஊர்தியாகக் காட்சி தருபவன், மா சில்லாமணி; அத்தகைய முருகனே வள்ளிக் கணவனாகக் காட்சிதருபவன்; முருகனே கதியென அவனை அடைந்த வள்ளியின் இதயத்தே தேனூறும் வேங்கை (383) மரம்போல் திடசித்தம் எனுங் கொம்பரிலே பக்திக் கொடி படர, மதம்பிடித்த யானைபோலும் மனத்தையும் ஆணவ முனைப்பையும், அவ்வாணவ முனைப்பும் கூடியே தோன்றும் ஐம்புல வேடர்களையும் வேறும்பல எதிர்வருபடைகளையும் வென்று; முத்தி எனும் பழத்தை அருந்திய வள்ளி, முருகனே வள்ளியாகச் செயல் புரிந்தனன். அவ்வாறே குண்டலி ஆறுதோன்ற சித்திகள் உண்டாகும் வல்லமை தோன்றும்; மதம்பிடித்த யானைபோன்ற ஆணவ முனைப்புத் தோன்றும்; வேறும்பல எதிர்வருபடைகள் காணுதோட இளங்கன்றே ஊர்தியாகக் கொண்ட, முருகன் எழில் கொண்ட, அன்னை அம்பிகை முக்தி எனும் பழமாக, வள்ளியின் இதயத்தே தேனூறும் வேங்கை போன்றுநின்றனன், திடசித்தமெனுங் கொம்பரில் படர்ந்த பக்திக் கொடியில் காட்சிதரும் உமைபங்கா! ஆறுகளும் காடும் சோலைகளும் மலிந்து விளங்கும்; இலங்கைக்குச் செழிப்புக் கொடுக்கும் நம்பனே! உனக்கபயம்; (2)

780. பொன்னு ருடலிற் பொடியைப் பூசிப் பொலியும்
புங்கவனே
என்னு ருயிரே யெல்லாம் வல்ல இறைவா
எனக்கூவி
முன்னுள் முறைசெய் முனிவன் தன்னை யோம்பிய
முழுமுதலே
விண்ணுட் டாரும் விரும்பிய இலங்கை விமலா
வுனக்கபயம்.

இறைவன் செம்பொன் மேனியன் (769) அத்தகைய பொன் போலும் மேனியிலே, எலும்புகளையும் உடலையும் சுட்டெரித்த சாம்பலை மாயையெனும் அஞ்ஞான இருளைச் சுட்டெரித்த பொடியாகக் கொண்டும், பசுவின் சாணத்தை ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலப் பிணிப்பான சாணமாகக் கொண்டு அவற்றைச் சுட்டெரித்த சாம்பலை அந்தப் பொன்மேனியிலே நிறையப் பூசி, நீறு பூசிய பொன்மேனி பொலிந்து தோன்றும் பரிசுத்தமானவனே! தூய்மையானவனே! ஆருயிர்தோறுமதுவதுவாய் நின்றொளிரும் உயிர்க்குயிராம் நாதனே வினைமுதலாம் முதல்வன் முழுமுதல்வன் (380) சர்வவல்லமையுடைய எம்பெருமானே! இவ்வாறு திருவருளால் முன்னுள், தன்னை தன்னு

டம்பிலே முனிவனுன உத்தமனே குடிகொண்டான் என்று போற்றி செய்து வணங்கிய முழுமுதல்வனே! சும்மா இருக்குமகமுடையாரரய், அணுவில் அவனும், அவனில் அணுவும் கணுவறநின்று கலப்பதுணர இணையிலியீசன், கீளவடிவாக சராசரமெங்குமாகித் தணிவற நிற்கப் போற்றி ஏத்தித் தொழும் விண்ணுடாரும் (757) ஆவலுடனும் பக்தியுடனும் வேண்டி வணங்கும்; நின்மலனுன இலங்கைச் சோதியே உணக்கபயம். (3)

781. சூலப் படையாய் சுண்ணப் பொடியாய் துடிக்கை
யுடையாளே
காலக் கடையாய் கோலக் கொடியாய் கங்கைச்
சடையானே
நீலக் கொடிபோல் மடவா ளுமையாள் நேசிக்
கும்பொருளே.
கோலக் குவடு சூழ மிலங்கைக் குழகா
வுளக்கபயம்.

சிவன் செயல் போதனுசிரியரான நம்மிறைவன் நாம் அவனைச் 'சிவசிவ' எனும் மாமறைதரும் 'சிவன் செயல்' எனும் மெய்ப் பொருளானவனுக நாம் பொறை நிலையினனுய் அவனை நாம் கண்டுணரும் விதியில் (778) கொழுத்து விளங்கும் நினைவரிக் கரும்பு போல் திருவருளுருசிக்கும்வரை சோதிப்பான், மழுப்படையான்(768) சூலப்படையோன்; அஞ்ஞான இருளைச் சுட்டெரித்த சாம்பலைப் பூசிய பொடிபூசி (780) சுண்ணப்பொடியாய்; படைத்தல் காத்தல் அழித்தல் கடவுளரான மும்மூர்த்திகளுக்கும் மூர்த்தியாக, முதல்வனுக விளங்கும் வினைமுதலாம் முதல்வன் முழுமுதல்வன், வினைப்பயனுக் கேற்றவாறு ஆருயிர்களைப் பொருத்திவைத்து உலகினை இயக்குபவன்; அவன் மான் மழு துடி இவற்றைத் தம் கையில் அடையாளங்களாக வுடையான். மான் ஆன்மாவையும் துடி அவற்றைத் தொழிலில் (முன்விளக்கம் படைப்பு காண்.) துண்டும் ஒளிபரப்பும் கருவியாகவும் கொண்டு ஆருயிர்களை வினை நீக்கத்துக்கு ஏவுவன். அவன் திருவருள் புரிந்து அவனையடைந்த மெய்யன்பர்க்குக் காலக்கடையாய் விளங்குபவன்; துடி, மழுவாயுதங்கள் புல்நுனிமேலின்ப வாழ்வையும், சுக்கிலமும் வெண்ணீரும் உடைய நிலையற்ற உடம்பின் கொடுமையையுங் காட்டுநர் கோலக் கொடியாய்; கங்கைச் சடையுடையோனே (584); ஆகாயத்தில் எவ்வளவு தூரம் சூரியன் ஒளி செல்கிறதோ தெரியாத தூரத்தைக் காட்டுவது நீல நிறம். அவ்வாறே கடலிலும் தண்ணீருள் ஒளி எவ்வளவு தூரஞ் செல்லுகிறதோ அதைக் காட்டுவது நீல நிறம். அம்மையின் உலகியல் வாழ்க்கை

யெனு மாடலே, எத்தனை பிறப்போ எத்தனை யிறப்போ எத்தனை பிறவிகளோ எவ்வளவு காலமோ எனுந் தூரத்தைக் காட்டுவதே நீலக்கொடி. அத்தகைய நீலக்கொடி மடவாளுமையும் பங்கனு மினை பிரியாதே காணப்படுந் தன்மையில் உடையான் நேசமுடன் விளங்கும் எம்பெருமானே; பல வீதிகளிலும் அவ்வவ் வீதிகளின் தெப்பமாகத் தோணியாக உன்னை வந்தடைவார் சூழும் இலங்கைச் சிவபெருமானே உனக்கபயம்.

குவடு = வாழ்க்கை எனும் மலை; வீதி; கோலம் = தெப்பம்;

துங்கமழு மானுடையாய் சூலப் படையுடையாய்
திங்களணி செஞ்சடையாய் சேவுடையாய் — மங்கையொரு
பாலுடையாய் செங்கட்பணியாய் என்சென்னியின்மேல்
காலுடையாய் நீயே கதி.

(தாயுமானவர்: (உடல் பொய்யுறவு) 48) (4)

782. பூக்கை கொண்டு போற்று மடியார் புறத்தே யலையாதே
காக்கும் பொருளே கதிசேர் விடத்தாய் கண்ணன் கமலத்தான்
ஏக்க மொழிப்பீர் எழில்சேர் சுடராய்ப் படர்ந்த பரஞ்சோதி
பூக்கும் பொழில்சே ரிலங்கை வாழும் புனிதா வுனக்கபயம்.

பூவுந் தண்ணீரு மிறைத்து எம்பெருமானே, காலையும் மாலையும் போற்றி ஏத்தித் தொழுவதால் இறைவன் பாதத்தை நண்ணும் மெய்யடியார், ஆணவ முனைப்புக் கொண்டும், 'சிவசிவ' எனும் மாமறை தரும் 'சிவன் செயல்' எனும் மெய்ப்பொருளானவன், பிணக்கிலாத 'உள்ளபடியே உள்ளது எல்லாம்' எனும் உண்மை வடிவினனே உன் திருவருளால் தம்அகத்தே காண, புறத்தே அலையாது காத்து, திருவருள் புரியும், தண்ணொளி கொண்டு எப்பொருளையும் இயக்கும் சிவப்பிரகாச வொளியே! ஆயிரங் கண்களையுடைய இந்திரன், பிரமன் முதலியோருடைய ஏக்கத்தை ஒழித்து, தம்மகத்தே தன்னைக்காண திருவருள் புரிந்து தண்ணளி வாய்ந்த எம்பெருமான், எண்ணில் பலகோடி உயிர்கள் அத்தனையிலும் அருட்கண்ணைக விளங்கும் கோடி சிவப்பிரகாச வொளிபோன்றவனே, எல்லாருடைய உள்ளத்தேயும் உம்முடைய திருவடி (754) அருள்பெற்று, அந்தப் பாதமலர் மலர்ந்து, பொன்மலராய் விரிந்து, சோலைகள்போல் அறிஞர் கூட்டம் பெருகும் இலங்கையில் மங்கைபங்கனை விளங்தும் புனிதா (773) அபயம். (5)

140 நூதன மொன்றுமில்லை

ஆசிரிய விருத்தம்

783. ஆவதோ ஒன்றும் இல்லை அழிவதோ ஒன்று மில்லை
நோவதேன் பிறர்தம் மாட்டு நூதனம் ஒன்று மில்லை
தேவனே வேண்டி நின்றூல் சீவனே சிவனுய்த் தோன்றும்
பூவலந் தன்னில் மீண்டும் பிறப்பரோ புகலு வாயே

உண்மை அறிவின்பப் பெருவாழ்வர்ம் முதல்வனே! 'சிவசிவ' எனும் மாமறை தரும் 'சிவன் செயல்' எனும் மெய்ப்பொருளான வனே! நின்திருவருள் ஆணையால் மாயாகாரியப் பொருட்களாம் உலகுடல் உண்பொருள் அனைத்தையும் ஆருயிர்களின் பொருட்டுப் படைப்பீர், அவற்றை ஒரு நொடிப்பொழுதில் துடைத்தும் அருளுவை. வினைமுதலாம் முதல்வன் முழுமுதல்வன் எழுதிய நாடகத்தை நடிகர் களாகிய மெய்யடியார் திறனுடன் நடிப்பதே அவனுக்குத் திருப்தி. நாடகத்தில் வீடு இடிந்து அழிந்து போகலாம். வீடு கட்டலாம்; நாடக மேடையில் தான் எல்லாம் நடப்பது. உண்மைப் பொருள் 'சிவன் செயல்' எனும் மெய்ப்பொருளான இறைவனே. ஆதலின் ஆவது ஒன்றுமில்லை அழிவது ஒன்றுமில்லை. நாடகத்தில் நடிகர்கள் ஒருவரையொருவர் குறை குற்றங் கூறுவதுண் டிடையாதே. மாணிக்க வாசகர் ''ஏதமே பலபேச ஏதிலார்முன் எனைஎன் செய்தாய்'' என்று இவற்றைத் தருகிறார். பலவீதிகளிலும், பலதுறைகளிலும் 'சிவன் செயலின்' உண்மைப் பொருளை, மெய்ப்பொருளானவனையே வேண்டி நின்றூல் அருந்தவர் நெஞ்சில் ருசிக்குங் கரும்பு, பொருந்திய பூரண சந்திரோதயமே (778) பாவந்தேயந்த ஆன்மா ஆத்மனுக (373) சிவனே சிவனுய்த் தோன்றும்; மீனாட்சி அம்பாளைத் தில்லைத் தரிசனத்தில் கண்டவர்கள் மீண்டும் பிறவார் இறவார்.

மாணிக்கவாசகர் இவற்றைத் தருகிறார் காண்க

பேதம் இல்லதோர் கற்பளித்த பெருந்துறைப் பெருவெள்ளமே
ஏதமேபல பேச நீஎனை ஏதிலார்முனம் என்செய்தாய்
சாதல் சாதல்பொல் லாமையற்ற தனிச்சரண் சரணெனக்
காதலால் உனைஓத நீவந்து காட்டிஎய் கழுக்குன்றிலே. (1)

784. புகல்வதற் கொன்று மில்லை புண்ணிய பாவ மில்லை
இகல்கிசயும் மனத்தை வென்றே யீசனே வேண்டி நின்றூல்
நிகருனக் கியாரு மில்லை நீயிதை யறிந்து மண்ணில்
இகலுடன் வாழு வாயே இதுதிட மறிகு வாயே.

இயமம் நியமம் எனும் சிரியாபாதப் பயிற்சியினால் பொறைநிலை எய்திய மனத்தனுய், தனக்குத் தொடர்பாயுள்ள அறிவே ஞாயிறு போன்று மனத்தின்கண் கொழுத்து விளங்க மௌன குருவே எழுந்தருளிச் செயல் புரிவதால், பொருந்திய சந்திரோதயமே உள்ளத்தில் தோன்றுவதால் (778) இருவினையும் அவற்றுடன் தோன்றும் புண்ணிய பாவமும் விட்டு நீங்கும்; முக்கட் செல்வனே உள்ளத்தே எழுந்தருளியிருந்தால் பிறப்பினைத் தரும் இருவினையும் புண்ணிய பாவமும் விட்டு நீங்கும். மார்க்கண்டேயனைப் போல் இயமனைவென்றால் உனக்கொப்பாவார் யாருளர். உணவை அருந்தினால் தான் அதன் ருசி தெரியும்; அதுபோல் நூல் அறிவு உண்மையறிவல்ல; தன்னைத் தானே யறிந்த மெய்யன்பர் மார்க்கண்டேயரைப் போல் இயமனை வென்றவர் தம்மறிவினாலே ஆத்மனை அறிந்தவரே உண்மையறிவாளர். அவர்கள் இவ்வுலகில் ஐம்புலனையும் வென்று தும்பையரவு சடையாடச் (766) சிவபெருமான் காட்சி தருவதுபோல் இந்த மெய்யன்பரும் ஐம்புலனையும் வென்று தத்துவாதீதனாக வாழ்வார்.

(2)

785. அறிகுதி யறிவி னாலே யறிகுதி தன்னை யென்றுன்
பிறிவற நின்று பார்த்தாற் பிரமமே நீயும் நானும்
குறிகுண மொன்று மின்று கூடுதல் பிரித லின்று
செறிதரு முயிர்க ளென்று செப்புதற் கொன்று மின்றே.

[முன்பாட்டு விளக்கந் தொடர] பொறை நிலையெய்திய மனம் ஒடுங்க தொடர்பாயுள்ள அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய், தன்னையே நெறியாம் நீடருள் நந்தி ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம் எனும் அறிவே வடிவான ஆன்மாவாகச் சிவன்கோயிலாக விளங்கும் அகத்தே கண்டு; இந்த உடம்பும் அவற்றுடன் கூடிய மாயா காரியப் பொருட்களுஞ் சுற்றமும் தரும் சிற்றின்பம் புல் நுனிமேல் நீர் போல் முழுமுதல்வனால் ஆக்கப்பட்டு ஒரு நொடிப் பொழுதில் துடைக்கப்படுந் தன்மையுடையது (260) என்று அறிந்தும்; ஆதலால் மெய்ப்பொருளான தன்னை அறிவு வடிவான சிவலிங்க வடிவாக சிவன்கோயிலான தம் அகத்தே குறிகுண மொன்றுமில்லாத ஒரே ஐக்கிய வடிவான ஆத்மனாகக் கண்டு; என்றும் அழியா இன்பத்தில் அந்த எண்ணில் பலகோடி உயிர்கள் அத்தனையிலும் விளங்கும்: உயிர்க்குயிராம் நாதனும் 'பிரம்மமே நீயும் நானும்' என்று செப்புக:

(3)

786. இன்றென நாளை யென்றே எண்ணுதற் கிடனே
வில்லை
அன்றுசெய் வினையி னாலே அவனியிற் பிறந்தோ
மென்று

கன்றினைப் பிரிந்த கற்றாக் கடுப்பவே கதறு
கின்றோம்
மன்றினின் றாடு மீசன் மலரடி வழுத்து வோமே.

முழுமுதல்வனாம் தண்ணளி வாய்ந்த எம்பெருமானே! உம்முடைய பெருந்தண்ணளிக்கு உரிமை பெறுநாள் எந்நாளோ? எண்ணி, எண்ணி எந்நெஞ்சம் இடையறாது என்னை வாட்டுதே! ஐயனே அந்நாள் நான் முன் செய்த வினையின் பயனாக இப்பிறவிக் காளானேன்; இளங்கன்றைப் பிரிந்ததாய்ப் பசுப்போல் கதறியழுகிறேனே; கற்றா = இளங்கன்றுப்பசு. நெஞ்சு தடுமாறுகிறதே; பேரின்பப் பெரும் பேறான தில்லைமன்றிலாடு மீசனைத் தரிசிக்க 'வாவா' என்று மாணவனைச் சிவகுரு உண்ணின்றழைக்க, மாணவன் போல், கண்ணீர் பெருக உடல்நிலைப் பண்பாகிய. ஐயோ என்று கதறியும் அப்பனே என்னுடைய உடலும் ஆவியும் உடைமையும் எல்லாமும் ஒப்புவித்தேன். என்னை யாண்டருள்வீர் என்றும் அவனை வேண்டியழுவோமே, பணிந்தேத்துவோமே.

(4)

787. வழுத்துதற் கொன்று மில்லை மாரனை நெற்றிக்
கண்ணாற்
கொளுத்திய குழகன் றன்னைக் கும்பிட்டுக் கூற்றை
முன்னர்
விழுத்திய பரிசு கண்டே வேறொரு நினைப்பு மின்றி
வழுத்தியைந் தெழுத்தை நெஞ்சில் வஞ்சக மற்று
வாழ்வீர்.

தாரகாஸுரன் தேவர்களை இம்சித்து வருகையில் அவர்கள் அவ்வசுரனைக் கொல்லுவதற்கு சிவபெருமானை வேண்டி அணுகினர். அவரோ கண்மூடி நீண்ட நிஷ்டையிலிருந்தார். நிஷ்டையைக் கலைக்க தேவர்கள் மன்மதனை ஏவினார்கள்; மன்மதனுடைய சேஷ்டையால் சிவன் நெற்றிக்கண்ணைத் திறந்தார். அகக்கண்ணூடாகக் கிளம்பிய ஸ்வாலை மன்மதனை எரித்து விட்டது, சிற்றின்பத்தைக் கொடுத்துப் பிறவிக் கடலில் வீழ்த்தும் மாரனான மன்மதனை நெற்றிக் கண்ணாற் சுட்டெரித்தார். அறிவே வடிவான அகம் (786) சிற்றின்ப வாழ்வைப் புறக்கணித்தது. மார்க்கண்டேயருக்காக யமனை உதைத்தார் (746); இவ்வுண்மைகள் விளங்க அகஞ் சிவன்கோயிலாகவும், ஆன்மா ஆத்மனாகவும் (783) கொண்டு சிற்றின்ப வாழ்வைப் புறக்கணித்தும், காலையும் மாலையும் மார்க்கண்டேயனைப் போல் சிவபூசை செய்தும் இறைவனைப் போற்றி ஏத்தித் தொழுதும் திருவைந்தெழுத்தை உருவேறவே செபிப்பதாலும் அப்பொருளாக ஆகுந் தன்மையினால் இறைவன் பாதமடைவது திண்ணம்.

(5)

வெண்பா

788. அச்சம் ஒழியும் அவமிருத்துத் தானெழியும்
இச்சை யொழியும் இடுக்கணெடு — பச்சைமலை
உச்சியினின் றுருமுழகு மோங்கிலங்கை
நன்னாட்டார்
நித்தியரா மென்றுணர்வீர் நீர்.

(முன்பாட்டில் கூறிய வண்ணம்) மார்க்கண்டேயனைப் போல் இறைவன் பாதமடைந்து நித்தம் இறைவனைப் பூசித்து வணங்கும் இலங்கை நன்னாட்டார் உங்களுக்கு அச்சம் ஒழியும், இயம பயமில்லை, அவா முதலிய ஐம்புல வேடர்களின் கட்டு எரிந்து விடும், சஞ்சல மற்று வாழும் அவருடைய அறிவின் இருப்பிடமான திங்கள் மண்டலத்தினின்று அமிர்தஞ் சொரிய ஞானக்கண் திறக்கும்; நித்தியரா மென்று வாழ்வீர். இலங்கை மலை உச்சியிலிருந்து ஆறு பாய்ந்து ஓடும் இலங்கை நந்நாட்டார் என்றுங் கொள்ளலாம்.

141. கூவாய் குயிலே

789. காட்டகத்தே வாழுங் கருங்குயிலே! கேளாய்
பாட்டகத்தே நின்றுருக்கும் பரமன் கருணையினால்
நாட்டகத்தே நம்போல நல்லூரில் வந்தானெம்
ஏட்டகத்தே எழுந்தருளும் வண்ணம்வரக் கூவாயே.

ஆன்மா தொன்மையிலேயே மலப்பிணிப்புற்றுக் கிடக்குந் தன்மையில் முழுமுதல்வனும் எம்பிரானுமே வினைப்பயனுக்கேற்ற உடலத்தில் பொருத்திவைக்க; அவ்வினையின் பயனுகவே ஐம்புல வேடர் கையில் சிக்குண்டு அவ்வைம்புல வேடர்களால் ஆக்கப்பட்ட கோபம் பொருமை சூது இன்னுச்சொல் பகை முதலிய கொடிய மிருகங்கள் சஞ்சரிக்கும் மாயக்காட்டில் மண் பெண் பொன் எனும் மூவாசையாலே உண்டாக்கப்படும் கோபம் குரோதம் சஞ்சலம் ஆணவ முனைப்பு முதலிய காமிய கர்ம ஏவலாளர்களால் கருமை நிறங் கொடுக்கப்படக் கறுத்து விளங்கும் கருங்குயிலே போலும் ஆன்மாவே! கேளாய் — தாயுமானவர் 'கருமையாகிய ஆணவமலத்தால் அமைந்துள்ள' என்று பாடுகிறார் காண்க:

"காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண்ணிலாக்
குழவியைப் போற் கட்டுண்டிருந்த எமை"

என்கிறார்.

சூரியன் ஒளி உலகப் பொருட்களைக் கண்ணொளியுடன் கூடிநின்று காண்பிக்குந் தன்மையுடையது. அவ்வாறே உயிர்க்குயிராம் நாதன், உடையான் அறிவும் உயிரில் நின்று (747) ஒளியைக் கொடுக்குந் தன்மையுடையது. வினைமுதலாம் முதல்வனே தண்ணளி வாய்ந்த எம்பிரானுகவுண்ணின்று அறிவுகொடுத்து வழிகாட்டுவன்; தாய் விளையாட்டுப் பொருட்களுடன் விளையாடிக் கொண்டிருக்கும் சிறு வனைக் கூவியழைத்தால் அவன் ஓடிவருவது வழக்கம். அதுபோலவே நம்முன் முன்வினைப்பயனை திருவருள் வடிவான பரமன் கருணையை, கூவி நாம் நம் மனம் உருகப் பாடியும் போற்றி செய்தும், தண்ணளி வாய்ந்தவனுடைய கருணை வெள்ளம் பெருக உரிமை பெறுகிறோம்; அத்தகைய திருவருள் வடிவான கருணையை மாயாகாரியப் பொருட்களில் ஈடுபட்டு மறந்துகிடக்கும் ஆன்மா வந்தடையும் பொருட்டு பாடியுந் தொழுதேத்தியும் வேண்டுக. பரமன் கருணை வெள்ளம் தம் அகத்தே நின்று பெருக அக்கருணையினல் ஐம்புலன்களும் அந்தக் கரணங்களும் தம்முள் ஒடுங்க, வெற்றியுடன் விளங்கும் மெய்யன்பர் வாழும் நாட்டில், நம்போல் நல்லவர் உள்ளத்தே பொன்மலர்கள் விரியும் சோலைகள் சூழும் நாட்டகத்தே (623) செய்பயிர் விளையும் நாடாகிய அகத்தே, வந்தான்; அவன் எம் சரீரத்தில் இருக்கும் அகத்தே வரும் வண்ணம் கூவி அழை குயிலே. ஏடு = சரீரம்;

காட்டகத்தே = அகத்தே மாயக்காடு; பாட்டகத்தே = பாடி அகம் உண்டாக்கல்

நாட்டகத்தே = செய்பயிர் வளரும் நாடாகிய அகம்; = ஏட்டகத்தே சரீரத்திலுள்ள அகம்.

மாணிக்கவாசகர் இவற்றை ஒப்பப் பாடுகிறார் காண்க,

இனபந் தருவன் குயிலே ஏழுலகும்முழு தாளி
அன்பன் அழுதளித்தூறும் ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரிமேல்வரு வானை
கொம்பின் மிழற்றுங் குயிலே கோகழி நாதனைக் கூவாய்.
[குயிற்பத்து 6.] (1)

790. அஞ்சுகங்காள் நாகணவாய் அழகான
மயிற்குலங்காள்
மிஞ்சும் விரிபொழில்வாழ் வித்தாரப் பூங்குயிலே!
பஞ்சின் அடிமடவாள் பாகர் பகர்நல்லூர்
வந்தா னவனை வரும்வண்ணங் கூவாயே,

அஞ்சுகம் = கிளி; நாகணவாய் — ஓர் இசைபாடும் புள்;

எண்ணங்கள் தோன்றுமிடம் நீயே! எண்ணங்கள் மண் பெண் பொன் எனும் மூவாசையாலு முண்டாக்கப்படுகின்றன. அவை படைத்தல் காத்தல் அழித்தல் எனும் மும்மூர்த்திகளாலும் விகாரப்பட்ட செயல்களாக ஆளப்படுவன; மூவர்க்கும் மூர்த்தியாக (755) விளங்கும் முழுமுதல்வனே எல்லாவற்றிற்குந் தலைவனை வித்தகனாராக விளங்குபவன். அவன் உண்ணின்று இயக்க கிளிபோல ஆன்மாக்களும், நாகணவாய்ப் புள்போல் இசைபாடி இறைவனே வேண்டுபவரும், முருகன் எழில்கொண்டு சிவயோக வாழ்வில் மயிலாடுவது போல் அழகுடன் (769) வாழும் மெய்யன்பர்களும் ஒருமித்து மிகவும் பெருகி அதிகமாக சித்தம்மூர்களில் ஓங்கி வளர அக்கூட்டங்கள் 'பொன் மலர் விரிந்து அழகுடன் பொலியுஞ் சோலைகள் போல் விளங்கும் நந்நாட்டீர், அவற்றை உண்ணின்று தம் மொளிகொண்டு இயக்கும் உயிர்க்குயிராம் நாதனே, வித்தகஞ்சேர் திருவடியே (432) வித்தாரப் பூங்குயிலே! (முன்கூறிய) மெய்யன்பர் எல்லாரும் பொறைநிலை எய்தியவறிஞர்; சும்மா இருக்கும் அகமுடையார், அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நெறியாம் நீடருள் நந்தி ஒன்றுஞ் செறிபாச் செறிவே சிவம் எனும் ஏகாந்த சித்தமாய் ஓடுங்கி நிட்டைகூடி அடித்தாமரை பரவி (755) அம்மையின் ஆடல், தில்லைத்தரிசனத்தில் கண்டு; அவளை இடப்பாகமாகக் கொண்ட பரமாத்மனை சிவபெருமானை ஐந்தெழுத்துச் சோதியில் நல்லவருடைய மோனமெய்திய அகத்தே காண்பர்; அவனை மறக்காதே என்றும் வரும் வண்ணம் கூவாய் குயிலே: (1)

791. பூப்பொலியுங் கொம்பரில்வாழ் பூங்குயிலே! நீகேளாய்
காப்பொலிகள் ஓவாக் களிதூங்கும் நல்லூரில்
நாப்பொலிவு தோன்ற வந்தாண்டான் நீயவனை
வாய்ப்பொலிவு தோன்ற வரும்வண்ணங் கூவாயே.

[முன்பாட்டு விரிபொழில் வாழ்வித்தார பூங்குயில் விளக்கம் தொடர.]

பக்தர் கூட்டம் பெருகி மகிமையுடன், எம் ஞானகுரவரானவர் முருகன் எழில் கொண்டு பக்தர் கூட்டத்தைத் தம் எண் குணங்களும் விளங்கத் தாங்கும் கொம்பர் போன்று அருளும், ஏகனேகனாக விளங்கும் பூங்குயிலே! நீ கேளாய்! இயமம் நியமம் பொறை நிலை எய்த அருள மனம் ஒடுங்கும்; தொடர்பாகிய எண்ணமே கொழுத்து விளங்கும் வேறோர் நினைவுமின்றி அதே நினைவாக தெய்வ வணக்கப் பாட்டுக்கள் அம்மெய்யன்பர் அகத்தே ''சின்னங்கள் கேட்கச் சிவனென்றே வாய்திறப்பாய்'' எனும் மாணிக்கவாசகர் தரும் உண்மை விளங்க, என்றுமழியாப் பேரின்ப உணர்ச்சி பெருகச்

செய்யும், அந்த அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் சின்னங்களை பாட்டுக்களைப் பாடிய நாவுக்கு உபகாரமாக அந்த மெய்யன்பன் உள்ளத்தைத் தம் வீடாகக் கொண்டான்; அவனுடைய நாமங்களைப் பேசும் வாய்க்குப் பொலிவு தோன்ற இணக்கிலாத இன்பமே வரும் என்கிறார் மாணிக்கவாசகர். அவ்வாறே அவ்வாய்க்கு உபகாரமாக அவனை வரும் வண்ணங் கூவாய் என்கிறார்.

மாணிக்கவாசகர் வாழ்வுறுதலும் பிறப்பறுத்துப் பேரின்ப வாழ்வுறுதலும் இரண்டும் வாயால் வாழ்த்தும் பயன் என்று

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம் உயர்ந்து தம்மையெல்லாம் தொழவேண்டிச்
சூழ்த்து மதுகரமுரலும் தாரோயை நாயடியேன்
பாழ்த்த பிறப்பறுத் திடுவான் யானும் உன்னைப் பரவுவனே"

என்று (திருச்சதகம் 18) இல் பாடுகிறார். (3)

792. தேனுந்து சோலைத் திருமனையில் வாழ்குயிலே
மானும் மழுவும் மறைத்துவந்து நல்லூரில்
நானும் அடியவரும் நன்கு களிசிறக்கப்
பேணும் குருபரனைப் பிரியமுடன் வரக்கூவாய்.

பொன்மலர்கள், மோட்சவீடு தரும் பொன்மலர்கள், என்று மொழியாப் பேரின்பமே தரும் மனையாகிய சோலையில் விரிய,; அங்கே வாழும் குயிலே நானும் மற்றும் மெய்யன்பரும் மிகவும் இன்புற்றிருக்க; ஆன்மாவைக் காட்டும் மானும்; அந்த ஆன்மாவை இச்சிற்றின்ப வாழ்வினின்றும் பாதுகாப்பதற்கும் பேரானந்தப் பெருவாழ்வாம் மோட்சவீட்டை யளிப்பதற்கும் 'சிவன் செயல்' எனும் உண்மையைப் போதிக்கும் போதஞாசிரியரான நம்மிறைவன் பாவிக்கும் உயர்வும் சிறப்பும் தூய்மையும் வாய்ந்த மழுப்படை (768) யை; அந்த ஆன்மா பக்குவமடைந்து சிவன்கோயிலாக விளங்கும் அகத்தினராய் (791) [மேலே சோலையின் விளக்கம் காண்] அந்த மழுப் படையை மறைத்து வந்த நல்லூரில், நல்லகத்தில், நாம் புகழ்ந்து பாடியும் போற்றி ஏத்தித் தொழுதும், பேணும் குருபரனை என்றும் பிரியாது இருந்து அருள்தரக் கூவாய். (4)

793. காதலாற் பாடிக் கசிந்துருகும் பூங்குயிலே
தீதெலாம் நீக்கச் சிவபெருமான் என்போலப்
பூதலத்தில் நல்லூரிற் போந்தான் அவனையிங்கு
நீதேடி எங்கும் நினைத்துவரக் கூவாயே.

ஒருதாய் தன் சிறு குழந்தை, பேசவோ தாம் வேண்டியதை அறிவிக்கவோ முடியாத அந்தச் சிறு குழந்தையை எவ்வாறு அது வேண்டியதை யுணர்ந்து அதைப் பாடியும் தொட்டிலிலாட்டியும் நித்திரையாக்குவாளோ; இளங்கன்றைக் காணுத தாய்ப்பசு எத்த கைய காதலுடன் அ தை எதிர்பார்க்குமோ, அத்தகைய காதலு ட்ன் (786) பாடியும் பூசித்தும் எம்பெருமானைத் தேடும் பூங்குயிலே, உலகினில் தர்ம மானிடனைத் தொண்டு செய்து உலகிளில் மூடிக் கிடக்கும் மாமாயையையும் அதனால் உண்டாய துன்பங்களையும் நீக்கி உலகுக்கு அருள்புரிய என்னைப்போலச் சிவபெருமான் இந்த உலகத் தில் நல்லூரில் உருத்தாங்கி வந்தனன்; பூங்குயிலே அவனை நீ இந்த இல்லத்தே, நல்லவர் அகத்தே தேடி, அவனுடைய ஒளி எண்ணில் பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனையிலும் அருட்கண்ணுக விளங்கும் அவனை, பரசிவான்மா அம்மையப்பராய் வரக்கூவுவாய் (575), 735). ''சரம் அசரம் எப்பொர்ருளிலும் அவனே இருக்கிறான் எனுமுண்மை தம்முள்ளத்தே கொண்டு நின்ற சுகரை அவருடைய வயதுமுதிர்ந்த தந்தை வியாசர் கூவியழைத்தபோது அவர் ''ஏன்'' என்றார். அந்தச் சத்தம் ''ஏன்'' உயிரில் உயிருள் பொருள் எல்லா வற்றிலிருந்தும் கிளம்பியதுபோல் தோன்றிற்று. (5)

142 இறைவா உனக்கபயம்

794. என்னையெனக் கென்னுலே காட்டிவைத்த இறைவா
எல்லாஞ்செய வல்லவனே என்றன் பெருமானே
அன்னையினும் அப்பனினும் அன்புமிக்க அரனே
ஆன்மாவுக் கான்மாவே யாதியந்தம் இல்லானே
தென்னைபனை சேரிலங்கைத் திருவேயென் செல்வமே
தேவாதி தேவனே சிறியே னுனக்கபயம்.

உயிர்க்குயிராம் நாதன் தன்னொளி கொண்டு விளங்குபவன்; அவன் உண்ணின்று உயிர்களை அறிவிப்பவன். சூரியன் ஒளி கண் ணொளியுடன் கூடியிருந்து பொருட்களை உருவமைப்பது போன்று இறைவனும் எப்பொருளிலும் வியாபித்திருந்து இயங்குகிறவன்; அவனே உயிர்க்குயிராம் நாதன், ஆன்மாவுக் கான்மாவாக ஆதியந் தமில்லாது விளங்குபவன்; ஊரும் பேருமிலான் உற்றூர் பெற்றூர் யாரு மிலான்; எப்பொருளிலுமப்பால் நின்று இயக்குபவன்.

பாசபந்தக் கயிறு அற மனமடங்கும்; ஒடுங்கிய மனம் தொடர் பாயுள்ள எண்ணமே கொழுத்து வினங்க, மூதறிவாம் சிவபெருமா னின் திருவடியுணர்வாம் மோனகுரு தம்மகத்துள் தண்ணளி வாய்ந்த அவன் கருணையினால் எழுந்தருளுபவன்; தன்னை முழுவதும் அன்னைக்கு

ஒப்புவிப்பான். அன்னையே செயல்புரிவாள். அவன் சர்வதத்துவாதி பதி. எல்லாஞ் செயவல்ல வினை முதலாம் முதல்வன், முழுமுதல் வனே அன்னையை இடப்பாகமாகக் கொண்டவன். நிட்களகூடித் தில்லைத் தரிசனத்தில் அவனே யே காண்கிறோம். தென்னவனை அடர்ந்து விளங்கும் இலங்கையில் இறைவனாக விளங்கும் மும்மூர்த்தி களுக்கும் மூர்த்தியாக விளங்குபவன், உருத்தாங்கிச் செல்லப்பனாக வந்தான்; இறைவனே அபயம்;

143 உன்றன் அடைக்கலமே

அறுசீராசிரிய விருத்தம்

795. தித்திக்கும் அமுதே தேனே பாலே
தீங்கரும்பின் சுவையே
பத்திக்கும் அடியார்க் கருள்புரி பரனே
பண்ணுர்மொழி பங்கா
அத்திக் கருளிய ஆடகத் தரசே
அன்னே யருளாளா
முத்திக்கு வித்தே மூவர் முதல்வா
முன்னிற்பா யடைக்கலமே.

படைத்தற் கடவுளர் காத்தல் அழித்தல் கடவுளரான பிரமா விஷ்ணு உருத்திரனாகிய மும்மூர்த்திகளும் எண்ணங்களாய முதல்வன் ஆணையின் வழிநின்று தொழில் புரிவர் (741; 765); எண்ணங்களா கிய முதல்வனே காரண கர்த்தா; வினைமுதலாம் முதல்வனே ஆரு யிர்களை வினைப்பயனுக் கேற்ற வுடலத்துடன் பொருத்தி வைப்பவன்; மும்மலனமே கொண்டு மூவர் முதல்வனுக்கு அடைக்கலம் புகுந் தால் அம்மையே செயல் புரிவாள்; பாசபந்தக் கயிறு அறுந்த உள் ளத்தே மனம் ஒடுங்கும் ஆட எடுத்த அடித்தாமரை பரவி ஆடல்புரியும் (755) பண்ணுர் மொழி பங்கன் காட்சி தருவன், பண்ணும் ஓசையும் பிரிக்கப்படாத பொருட்களே; அவ்வாறே சக்தியும் சிவனும். குழந்தை யின் விளையாட்டில் தாய் எவ்வளவு இன்பங் காணுவாளோ அவ்வாறே தில்லை நடனங் கண்டு சாயுச்சிய பதவியடைந்த மெய்யன்பன் (514) அம்மையப்பர் ரூபமாகக் காணும் உலகினை நேசிப்பான். பரசிவான் மாவே அம்மையப்பர் (575) வடிவாக விளங்குபவர். அத்தி =தெய்வ யானை; தெய்வயானைக்கு அருள் கொடுத்தவன்; தம்மை பக்தியுடன் அடைந்த சீவன்முத்தர், தையல் தனக்குத் தன்பாதியுடல் கொடுத்த அப்பனுடன், ஒன்றுபட்டு வாழும் நிலையில் (773) உலகியல் ஆடல் தித்திக்கும் அமுதே தேனே பாலே தீங்கரும்பின் சுவையே.

796. சீரார் மேனி யுடையாய் விடையாய்
தில்லைப் பதிக்கரசே
பாரார் விண்ணோர் பரவும் பரனே
பஞ்சாட் சரப்பொருளே
காரார் குழலாள் உமையின் கணவா
கறைசேர் கண்டத்தாய்
நீரா யுருகி நிற்க வருள்வாய்
நிமலாவுன்றன் அடைக்கலமே.

உயிரில் பொருள் உயிருள் பொருள் எல்லாவற்றிலும் வியாபித்துச் சீருடன் விளங்கும் மேனியன் (780) [அணுவுள் அவனும் காண்] அருவுருவாம் சதாசிவனுக விளங்குபவனே! ஆன்மாக்களை ஊர்தியாகக் கொண்டு அருள் கொடுப்பவனே; போர்விடை, வெள்விடை பால் பசுவாய் விளங்கித் தில்லையம்பலத்தில் கூத்தியற்றும் நடராசனே! விண்ணுட்டார் (780) பரவி ஏத்தித் தொழுது வணங்கித் தில்லைத் தரிசனத்திலும், ஆதியந்தமற்ற திருவைந்தெழுத்துச் ஜோதியாய் ஆனந்தமய கோசத்திலும் காணும் மெய்ப்பொருளானவனே! பரமாகாசத்தின்கண் காட்சிதரும் சுருகுழல் பங்கா (635) தையல்தனை இடப்பாகமாகக் கொண்ட (773) உமையின் கணவா. உலகியல் வாழ்க்கையாகிய பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் கடைந்த பொழுது முதல் எழுந்தது இளமையின்பம், சிற்றின்பம் (140). இது பிறப்பை இறப்பைக் கொடுக்கும் நஞ்சு; தேவர்கள் பயந்தோட இறைவனுக, நிஷ்காமிய கருமம் புரிபவன் அவற்றை இன்பமாய் அனுபவிக்காமல், கொல்லா விரதம் மேற்கொண்டு (477) ஜீரணிக்க விடாமல் கண்டத்தில் வைத்துக் கறைக் கண்டனுக விளங்கினன் செம்மேனி எம்பிரான்; நெருப்பைக் கண்ட மெழுகுபோல் ஆருயிர்களுக்கு உருகுந்தன்மையாளன். தண்ணளி வாய்ந்த எம்பிரான் கருணை கூர்ந்து அருள் புரிந்து தன்னையடையச் செய்யும் நிமலன்; நிமலா உனக்கபயம்; (2)

797. நீரூர் மேனி யுடையாய் சடையாய்
நெற்றிக் கண்ணு நின்மலனே
ஆரூர் சுவையே அமுதே தேனே
அன்பே யருளாளா
மாறுக்காத லுடைய அடியார்
மனத்தாய் மகாதேவா
தேறுச் சிந்தை தெளியச் செய்வாய்
சிவனேயுன்றன் அடைக்கலமே.

நெற்றிக் கண்ணால் அறிவேஸ்வாலேயாகப் பறக்க அவ்வழலால் மும்மலமும் மாயையுஞ் சுட்டெரித்த நீற்றை நின்மலனாக நிறையப் பூசி அஞ்ஞான இருள் விட்டகலும் நின்மலனுய் தண்ணளி வாய்ந்த எண்குணத்தனுய் விளங்கும் அகத்தில் எம்பெருமான் குடியிருப்பன்; திங்களுங் கங்கையுஞ் சடையிலுடையோனுய் திங்கள் மண்டலத்தினின்றும் உச்சியினின்றூறூடும் 788)மெய்ஞ்ஞானி அன்பே பெருக அமுதம் தேன்போலும் பருமாமணி முத்தங்களான ஞானப் பொருட்களே உண்டு இன்பம் பெருக. வேறோர் எண்ணமுமின்றி இறைவனுடைய காதலுடனே மகாதேவா மகாதேவா என்றரற்றியே தெளிந்த சிந்தையில், தேறலே தெளிவைத் தெளிவாய்த்தோர் ஊறலே நம் உள்ளத்தே கண்டு, என் சிவமே உனக் கடைக்கலமே என்போமே; (3)

798. சிவத்தியானஞ் செய் செய் செய்
சிவமே யாமெனல் மெய் மெய் மெய்
அவனி யனைத்தும் பொய் பொய் பொய்
அதனை யறிந்து நீ உய் உய் உய்.

இயமம் நியமம் ஆகிய கிரியா பாதங் கடைப்பிடித்துப் பரிசுத்த மான மனம் பொறை நிலையெய்தி; பாசபந்தக் கயிறு அறுத்த உள்ளத்தே ஒடுங்க, உள்ளபடியே உள்ளது, என உணரக் கள்ள மனம் போயொளிக்க; மனத்தின்கண் தோன்றும் அழுக்கு உள்ளத்தைப் பாதிக்காது விட்டகல; எண்ணில் பல கோடி உயிர்கள், அத்தனையிலும் உயிர்க்குயிராம் நாதனுக விளங்கும் எம்பிரான் ஞானகரன், யானெனிய என்னை விழுங்கி நான் எனும் ஆணவமுனைப்பு பொன்னகமாயிருக்கும் (முன்விளக்க) என்னகத்தை விட்டகல, வெறுத்தானை தேறலே(797) ஊறலைத் தற்பரத்தை, நானும் அவனும் ஒன்றுய் விளங்கும் பரமாத்மனை முழு முதல்வனுஞ் சிவபெருமானை எம் உள்ளத்தே காணலாம்;

அந்த அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் ஏகாந்த நிலையெய்தித் தொடர்பாயுள்ள எண்ணமே கொழுத்து விளங்கச் சிவத்தியானஞ் செய் செய் செய்; உள்ளத்தே காணும் அந்த ஊறல் பரமாத்மனே யாம் அது மெய் மெய் மெய்; புல்நுனிமேல் நீர் போல் ஒரு நொடிப் பொழுதில் நீ துடை அழியும் அந்த சிற்றின்ப வாழ்வு தரும் அவனியனைத்தும் பொய், பொய்: அதனையறிந்தே தெளிந்த சிந்தையராய், என்றும் அழியாப் பேரானந்த இன்பப் பொருளான சிவபெருமானையே, தையல் தனக்குத் தன்பாதியுடல் கொடுத்த (773) முழுமுதல்வனையே உளங்கொண்டு உய் உய் உய்;

144 ஒற்றுமை யிந்த வுளரிடை ஓங்குக

பண்—கௌசிகம் இராகம்—பைரவி

799. திங்கள் தங்கிய சென்னியர் தீமிளிர்
அங்கை யாளரெம் ஆருயி ரானவர்
எங்கு மானவர் எம்மிடர் தீர்ப்பவர்
மங்குல் வாழுமி லங்கைவாழ் வானதே.

உயிரில் உயிருள் பொருட்களான சரம் அசரம் எப்பொருளி லும் அணுவுள் அவனும் அவனுள் அணுவுமாக நுண்பொருளான நிலநீர் நெருப்புக்காற்று ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களாய், நுண் வெளியாகிய ஆகாசத்தில் [Electro - magnetic field - space] எங்கும் பரவிச் சிருடன் நிறைந்து விளங்கும் உயிர்க்குயிராம் நாதன்; குளிர்ச் சியைத் தரும் சந்திரனைத் தலையிலணிந்துள்ளார்; அன்று செய்யும் வினையை, இரவு வந்து இறைவனை மறக்காமலும், பகல் போலும் இறைவன் சந்நிதியில் இன்புறுமலும், அன்றே ஞானச்சுவாலையால் சுட்டெரித்து இரவு பகலற்ற காட்சி தரும் தீமிளிர் அங்கையாளர்; இரவு பகலற்று என்றுஞ் சிவன் சந்நிதானத்தில் ஒரு பொல்லாப்பு மில்லை எல்லாஞ் சிவன் செயல், எங்கும் அவனேடி எனும் உண்மை கள் விளங்க எம்மிடர் தீர்ப்பவர்; என்றும் இரவு பகலற்ற அந்த கோடி சூரியவொளி கொண்டு விளங்கும் சிவப்பிரகாசவொளி போலும் ஜோதியை உள்ளத்தே கொண்டு எங்கும் அதையே நினைத்துக் கண்டு வர (793) எங்கும் ஒரே வாழ்வே; (1)

800. எள்ளும் எண்ணெயும் போலவி சைந்துள்ளான்
தெள்ளும் மாமறை தந்த திருவினன்
கொள்ளு மன்பருளங் கோயிலாய்க் கொண்டுளன்
புள்ளு லாவுமி லங்கையிற் போந்ததே.

எள்ளில் எண்ணெய் எங்கும் பரவி யிருக்கின்றது; வித்துப் போல் நடுவிலோ அல்லது கோதுபோல் சுற்றியோ யிருக்கவில்லை. அது போலவே இறைவன் உயிர்க்குயிராம் நாதன் அணுவுள் அவனும் அவனுள் அணுவுமாகச் (799) சிருஞ் சிறப்பும் விளங்க ஒவ்வொரு பொருளிலும் வியாபித்திருக்கிறான். மறை நான்கும் தெளிவித் தெள்ளி அழுக்கு நீங்கி, தான் தூய்மையாக விருப்பதுமல்லாமல் அண்டினரையுந் தூய்மைபாக்குந் தன்மையுடையோனை தூய்மை யாளன்; பக்தியுடன் தன்னை நினைக்கும் (799) மெய்யன்பருள்ளத்தே முக்கண்ணன் (767) கோயில் கொண்டவன்; அணுவுள் அவனும் அவனுள் அணுவுமாகச் சிருடன் வியாபித்திருக்கும் உயிர்க்குயிராம்

நாதனும் தானும் ஒன்றுபட்டே (799) பரமாத்மனாக விளங்கினன், தான் எப்பொருளிலுந் தன்னைக் கண்ட சுகர்போன்றும் (793), எப் பொருளிலும் ''புன் புலால் யாக்கை புரை புரை கனியப் பொன் னெடுங் கோயிலாப் புகுந்தென் என்பெலாம் உருக்கி எளியையாய் யாண்ட ஈசனே'' என்று மாணிக்கவாசகர் தன்னை உயிர்க்குயிராம் நாதனுக் ஒவ்வொரு பொருளிலும் வியாபித்திருப்பதை உணர்த்து வதுபோலும்; சிவபெருமான் செல்லப்பனென உருத்தாங்கி இலங்கை யில் போந்து ஒவ்வொரு பொருளிலும் எல்லா அங்கங்களிலும், எல்லா அணுக்களிலுந் தன்னைக் கண்டும் புள்ளுப்போலுலாவி யின்புற்றும் அருள் கொடுத்தனன்; (2)

801. வேத கீதத்தன் விண்ணவர் தம்பிரான்
சாத லோடு பிறத்தலுஞ் சார்கிலான்
காத லாற்றொழு வார்தங் கருத்துளான்
தாது போலுமி லங்கைத் தலைவனே.

அணுவுள் அவனும் அவனுள் அணுவுமாகச் சரம் அசரம் எப் பொருளிலும் ஈசனைக் கண்டு தாமும் அப்பொருளாகவே (799) உணர்ந்து தமிழ்மாமறையான 'சிவசிவ' எனும் கீதத்தை இடை விடாதே செபிப்பதால் அப்பொருளே யாகித் தம்பிரானாகவே விளங் கும் விண்ணவர் பெருமானனைன்; பிறவிக்கடலுக் கப்பாற்பட்டவன்; பொறை எய்திய (198) அன்பர் உள்ளத்தே தொடர்பாயுள்ள எண்ணங் கொழுத்து விளங்க விழிநீர் பெருகப் பெருங்காதலுடனே அவனை வேண்டி அழ (793) அவன் கொண்ட எண்ணத்தையே முக் கண் எம்பிரானாகத் தாம் அருள் புரிபவன்; தாது, வித்து, எப் பொருளுக்கும் மூல காரணமாக விளங்குவது; இலங்கையில் உற்பத்தி எல்லாவற்றிற்கும், சமய விருத்தியோ, பொருள் விருத்தியோ அரச விருத்தியோ எல்லாவற்றிற்கும் வித்தாக விளங்கும் இலங்கைத் தலை வனே, செல்லப்பனாக உருத்தாங்கி எழுந்தருளிய எம் இறைவன்.

[செல்லப்பன் அருவாக நின்று இபக்க சுவாமிகளே மகாத்மா காந்தி நேரூஜி முதலானோர் வியந்து பேசிய பகிஷ்காரத்தை யாழ்ப் பாணத்தில் நடத்த, அந்த எண்ணத்தை உண்டாக்கினவர்; சேர் துரைசாமி, நீதிமன்னர் அப்பார் மற்றும் மாவட்டத் தலைவர்கள் அவருடன் கலந்து பேசுவதும் அவருடைய புத்திமதி கேட்பதும் வழக்கம்.] (3)

802. மாதம் மும்முறை மாரிவி ளங்குக
மாத வர்மனம் நாளும் மகிழுக
பாத கம்பழி பாவம் தொலைகுக
தீத கல்சிவ நாமஞ் சிறக்கவே.

தர்மம் குறையாது விளங்கும் நாடு பொலிந்து விளங்கும். அங்கே மாதம் மூன்று முறையாகுதல் மழை பெய்தலால் பயிர்கள் ஓங்கி வளரும்; விளைவு கூடும். வெப்பம் குறைவாயிருக்கும். பசிதாகம் ஊரில் குறைவாயிருக்கும். ஆதலால் மக்கள் என்றும் மகிழ்வுடன் இறைவன் பணியாற்றி வருவார்கள். நற்குணம் ஓங்கி நாடெங்கும் பரவும்; நடுவு நிலைதவறுத மாந்தர் நாட்டில் தலைசிறந்து விளங்கப் பாபிகள் ஒளித்திடுவர். பாதகம், பழி, பொய் சொல்லல் வஞ்சகம் பொறுமை கோபம் கொலை முதலிய பாவச் செயல்கள் குறைந்து விளங்கும். நற்குணமுடையோர் தலைமையில் கமம் வியாபாரம், செழிக்க அரசனுஞ் செங்கோல் செலுத்தி வருவான்; எல்லாச் செயல்களுக்கும் தலைவனுயும் வறுமைக்கு மருந்தாகவும் நிற்பவன் எம்பிரான்; அவனுடைய நாமத்தை திருவைந் தெழுத்தை ஓதி, யுணர்ந்தோதி சிந்தை தெளிந்தவரே சிறப்புடையராவர்; (4)

803. ஒற்றுமை யிந்த ஊரிடை யோங்குக
மற்றும் நற்குணம் முற்றும் ஆகுக
கற்றுங் கேட்டுங் கழலடி போற்றுக
நற்றவம் இந்த நாட்டில் விளங்குக.

நடுவுநிற்கும் மாந்தர் ஊரில் பெருக; ஒற்றுமை நிலவும்; மற்றும் நற்குணங்களான அஞ்சாமை, உள்ளத் தூய்மை, ஞானத்திலும் யோகத்திலும் நிலைத்திருந்தல், ஈகை பொறிகளையடக்குதல் யாகம் தபசு நேர்மை முதலியன (கீதை 16 - 1; 2; 3;) சிறந்து விளங்க நாடு செழிக்கும்; தேவாரந் திருவாசகம் திருமூலர் மந்திரம் முதலியன பாடியும் பாடக் கேட்டும் மனம் பரிசுத்தமாகுக; அகம் தூய்மையாக இயமம் நியமம் பொறை முதலிய (682) கிரியாபாதமுறைகையாளுதலால் ஒடுங்கிய மனம் கழலடி சேரும்; சிவன் கோயிலாக விளங்கும்; அகத்தே உயிர் சிவலிங்க வடிவாக விளங்க முக்கண்ணன் கருணைபுரிவான்; நற்றவம் ஓங்கி வளரும்; (5)

804. யோகநாதன் உரைத்த விசைத்தமிழ்
தாக மாகவே தான்புகல் வார்தமக் (கு)
ஆக வேண்டிய யாவுமாம் அந்தியில்
யோக நாதன் அடிமலர் உய்வரே.

யோகநாதன் பாடிய இப்பாட்டுக்களின் பொருளை உணர்ந்தறிந்தும் சிந்தித்தும், சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனைதனைப் (357) உளந் தூய்மையாய் ஈற்றில் சிந்திக்கும் அப்பொருளேயாய் விளங்குக, (800) அகம் ஒடுங்கி சித்தமௌனஞ் செயல் வாக்கெல்லாம் மௌனம் சுத்த

மௌனம் தோன்றும், இறைவனிடங் கொண்டு செல்லுந்தேர்; யோக நாதன் திருவடி தரிசனங் கண்டு சிவன்கோயிலாக விளங்கும் அகத்தே சிவலிங்க வடிவான உயிரையுங் கண்டு உய்வரே (608). (6)

145. நமச்சிவாயப் பதிகம்.

805. பச்சைமாமயி லோடுபூங்குயில் பாட்டறுவின
வண்டுகள்
மொச்சுபூம்பொழில் முளரிசேர்பொய்கை
மோதியாறுகள் பாய்ந்திட
வைச்சமாநிதி யிருமருங்கும் வயங்கிலங்கை
வளநகர்
அச்சனேயுனை நான்மறக்கினும் அறையுநா
நமச்சிவாயவே

சங்கீதம் பாடுபவர்கள் திறமையுடன் பாடப்பழகுவார்கள். தேர்ச்சியடைந்த வித்துவான் ஓசைகளைப் பொருத்தமாகத் தானேயமைத்து நல்ல பண் இசைப்பான். அவ்வாறே அறிவுவளர்ச்சியும் அறிஞர் கூறிய ஞானப் பொருட்களை ஒருவர் எடுத்துக் காட்ட அவற்றைத் தம் வாழ்க்கையில் அநுபவத்தில் அறிந்துணரலாம். அறிவு முதிர்ந்தால் ஞானப் பொருட்களைத் தாமே அறிந்துணரலாம். தேர்ச்சியடைந்தவன், அறிவே வடிவான அகமுடையோனுய் திங்கள் மண்டலத்தினின்றும் அமிர்தம் போல் ஞானப்பொருள் இதயத்தே கொட்ட அது ஊறலாகத் தோன்றும். மாணிக்கவாசகர் இவற்றை ''கூவின பூங்குயில் கூவின கோழி குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்'' என்று தருகிறார். சுவாமிகள் வளரும் பராயத்தைக் காட்டப் 'பச்சை' என்று கூறி பச்சை மாமயிலோடு பூங்குயில் பாட்டறுவின வண்டுகள் மொச்சு பூம்பொழில் என்றும் மேலும் தருகிறார். தேன் வண்டுகளின் மொச்சையைப் போல் ஞானியின் கருணை ஒளி இன்பங் கொடுக்கும். முளரி = தாமரை;

ஞானியின் உச்சியினின்றேடும் பொய்கை (788) தாமரை போலும் அகத்தே ஒருங்கே கூடியமைய ஒவ்வொரு வீதியிலும் துறையிலும், சுவாமிகள், ஞானசம்பந்தர் அப்பர் முதலியோர் தாம் பாடிய தேவாரம் திருவாசகம் நற்சிந்தனை எனும் பாக்களில் உருவமைத்துத் தந்த, நவமணிபோலும் சுவைதரும் அகப் பொருட்களை, உருவமைப்பான். அத்தகைய கோடி சூரியப்பிரகாச வொளிகொண்ட நவமணிபோலும் கடவுள் பணி தம் அகத்திடை வைக்கப்பட்டதாய் இலங்கைக்கு ஒளி கொடுக்கும் அப்பனே நான் உன்னை மறக்கினும், என்னுடைய நா என்றும் மறவாதே ''சிவாயநம சிவாயநம'' என்று அரற்றுமே. வேறுவிதமாயும் பொருள் கொள்ளலாம்;

பச்சை நிற மயிலும் பூங்குயிலும், தேன் எடுக்கும் வண்டுகளுடைய மொச்சை பரவி விளங்கும் சோலைகளும், தாமரை படர்ந்த சிற்றூறுகள் ஒன்று சேர்ந்து பெரியாறுகளாகப் பாய்ந்தோட இரண்டு சமுத்திரத்துக்குமிடையே வைத்த இலங்கை நகருக்கு ஒளி கொடுக்கும் அப்பனே நான் உனை மறக்கினும், என்னுடைய நா மறவாதே ''சிவாயநம, சிவாயநம''வென்று அரற்றுமே. (1)

806. இச்சையானவை செய்துபூமியில் இடர்க்கடலுள்
அழுந்திநான்
பச்சைமேனியன் பரவுபூங்கழல் பாடியாட
மறந்திட்டேன்
கொச்சைமக்களைக் கூடியேபல கொடுமையானவை
செய்திட்டேன்
நச்சைவாவுனை நான்மறக்கினும் நவிலுநா
நமச்சிவாயவே.

நச்சு = ஆசைப்பட்ட பொருள்; கொச்சை = கீழ்மை. நான் ஆசைப்பட்ட மெய்ப்பொருளானவனே, வினைமுதலாம் முழுமுதல்வனே! நான் உன்னைமறந்து, சிற்றின்ப உணர்வைத் தந்து ஐம்புலவேடர்கையில் அகப்படவும் ஆணவ முனைப்பும் கொண்டு, முன்வினையின் பயனாக இருவினையெனு மிடருக்குள் அழுந்தாமே, இடர்தீர்த்துத் தம் பூங்கழல் காட்டி, அழியா இன்பத்தைத் தரும் தண்ணளிவாய்ந்தவனே (493) பச்சைமேனியனைப் பாடியாடப் போற்றியேத்தித்தொழ மறந்திட்டேன்; கீழ்மக்களுடன் கூடி ஐம்புலவேடர்களின் கையில் அகப்பட்ட தன்மையினால் இருவினைக்கீடாகப் பல கொடுமைகள் செய்திட்டேன்; நான் மிகவும் ஆவலுடன் தேடி வேண்டி நிற்கும் மெய்ப்பொருளானவனே! நான் உனை (முன்விளக்கம்) ஊழ்வினையின் பயனாக மறந்தாலும் திருவருள் ஆணையினாலேயென் நா ''சிவாயநம, சிவாயநம'' என்றே யரற்றுமே. (2)

807. காலைவேளை எழுந்திடேன்நல்ல கடிகொள்மாமலர்
பறித்திடேன்
ஆலயந்தொழுதேத்திடேன்நல்ல அடியார்தங்களைப்
போற்றிடேன்
மூலமந்திர மோதிடேன்நல்ல முத்திபெற்றிட
நச்சிடேன்
ஆலவார்வுனை நான்மறக்கினும் அரற்றுநா
நமச்சிவாயவே.

அதிகாலையெழுந்து தேகத்தைச் சுத்திசெய்து நறுமணங் கொண்ட பூக்களைப் பறிப்பதுங் கிடையாது; கோயிலுக்குச் சென்று அங்கே எழுந்தருளியிருக்கும் இறைவனை வணங்கவும் மாட்டேன்; நல்லறிவுடைய மெய்யன்பருடன் கூடவும் மாட்டேன்; அவர்களைப் புகழ்ந்து பாடவோ பேசவோ மாட்டேன்; ஒரு சிவகுருவையடைந்து அவர்தரும் மூலமந்திரத்தைச் செபிக்கமாட்டேன்; முத்தியடைவதற்கு ஆசைப்படேன்; பாற்கடல் நஞ்சை யுண்ட ஆலவாயனை நான் ஊழ்வினையின் பயனாக மறந்தாலும், திருவருள் ஆணையினாலே என்னுடைய நா "சிவாயநம, சிவாயநம" என்று அரற்றுமே.

808. அஞ்செழுத்தை வழுத்திடேன்கெட்ட
அவாவழுக்கா றறுத்திடேன்
கொஞ்சமேனுமென் நெஞ்சிலன்பு கொள்கிலே
னஞ்சை வெல்கிலேன்
துஞ்சவேவந்து தோன்றினேனெரு துணையுங்
காண்கிலேன் தெய்வமே
வஞ்சனேனுனை நான்மறக்கினும் வழுத்துநா
நமச்சிவாயவே.

ந, ம, சி, வ, ய எனும் எழுத்துக்கள் தரும் பொருளை (1 இல் காண்க). உணர்ந்தறிய மாட்டேன்; அளவுக்குப் பொருட்களை வேண்டவும் உணவு உண்ணவும் மாட்டேன்; பெறக்கூடிய அளவுக்குமேல் பொருட்களில் ஆசைப்படுவேன்; பொய், களவு, வஞ்சகம், பொறாமை, இன்னாச்சொல் இவைகளில் இணங்கி வாழ்வேன்; ஊழ்வினையின் பயனாக நான் கர்மம் புரிகிறேன்; இருவினைக்கீடாகி துன்புறுவேன் எனும் எண்ணம் காண்பதே கிடையாது; கடவுளை நினைப்பதுங் கிடையாது, ஐம்புலன்கள் தருஞ் சிற்றின்பவாழ்வில் இறைவனை மறந்தேன். மண் பெண் பொன் எனும் மூவாசையையுந் தரும் ஐம்புலன்களை அடக்கவோ இறைவன்பால் செலுத்தவோ நினைக்கவேமாட்டேன்; பிணியும் மரணமும் வந்து இடர்ப்படுவேனெனும் சஞ்சலத்துடனே என்றும் வாழ நான் பிறந்தேன் என் தெய்வமே முன்வினையின் பயனாக இவ்வாறு இடர்ப்படினும் என்னுடைய நா என்றென்றும் "சிவாயநம சிவாயநம" என்றே அரற்றும். (4)

809. பொய்யைமெய்யென நம்புவேன் புறங்கூறுவேன்
புலாலுண்ணுவேன்
நயமற்றவர் பேசுவேன்நல்ல வார்த்தையொன்று
முரைத்திடேன்.

உய்யவேவழி ஒன்றுங்காண்கிலேன் உதவிதந்தெனை
யாளுவாய்
தெய்வமேயுனை நான்மறக்கினுஞ் செப்புநா
நமச்சிவாயவே.

புல்நுனிமேல் நீர்போல் ஒரு நொடிப்பொழுதில் அழிந்துபோகும் இன்பவாழ்வை மெய்யென நம்புவேன்; அதற்கு வேண்டிய நேரம் பொன்னைப் பெண்ணை மண்ணைப் பாதுகாப்பதற்காகப் புறங்கூறுவேன்; நாவின் இச்சை தீர்க்கப் புலாலுண்ணுவேன்; துன்புறுத்துவோரை வைது வீண்சண்டையிடுவேன்; ஏதும் வேண்டிநிற்கின் பொய்யுரைத்தும், மற்றும் வேளையில் வீண்வார்த்தையே பேசுவேன்; இறைவனை யடையவோ நினைக்கவோ ஒரு நொடிப்பொழுதும் எண்ணவேயில்லை; இறைவனையடையும் வழி ஒரு சின்னமுங் காண்கிலேன் என் தெய்வமே! எனையாண்டு நல் எண்ணங்களை, மும்மூர்த்திகளுக்கும் மூர்த்தியாக விளங்குபவனே, நீதந்து எனை ஆளுவாய் முன் ஊழ்வினைப்பயனாக நான் உனை மறந்து கிடப்பினும் எனது நா ''சிவாயநம சிவாயநம'' எனச் செப்புமே. (5)

810. மெய்யரும்பி விதிர்விதிர்க்கிலன் மேல்வினைவ
தறிகிலேன்
கைதொழுதுநின் பாதபங்கயம் கசிந்துநான்தினம்
தொழுகிலேன்
பொய்யனேன்மலக் கூடுகாத்துப் புலம்பியேதிரி
கின்றனன்
ஐயனேயுனை நான்மறக்கினும் அறையுநா
நமச்சிவாயவே.

ஓர் குழந்தை தன் தாயைச் சனக்கூட்டத்தில் கைநெகிழவிட்டால் அது தன் தாயை நினைந்து நினைந்து தேகம் வேர்வைகொட்ட அழும்; அவ்வாறு நான் என் தாயாகிய இறைவனை நினைந்து அழுவதுமில்லை; தேகம்சஞ்சலத்தால் வேர்க்கிறதுமில்லை. குழந்தை தாயை மறந்து விளையாட்டுப் பொருட்களுடன் விளையாடுவது போல் சிற்றின்ப வாழ்வைத்தரும் மாயையில் மயங்கி இனி விளைவதறியாது கிடக்கிறேன்; வெண்ணீரும் சுக்கிலமும் இரத்தமும் பெருகி வழிந்தோடும் மலமும் முதலியனவற்றால் முடைநாற்றமெடுக்கின்ற இவ்வுடலத்தை மெய்யென்றும் அவ்வுடம்பு அனுபவிக்கும் இன்பம் அழிந்துபோம் என்பதையும் மறந்து இந்தப் பொய் வாழ்க்கையில் பொய்யனேன் ஆணவங் கன்மம் மாயை யென்னும் மும்மலமாகிய சேற்றில் வெறுப்பினையடையாது மயங்கி அலைகிறேனே. என்னை இடர் நீக்கி ஆளுந்தன்மையுடைய அப்பனே உனை நான் மறக்கினும் என்னுடைய நா ''சிவாயநம சிவாயநம'' என்று அரற்றுமே. (6)

811. ஆறுதல்பெற அடியர்பாற்சென் றவர்பணிவிடை
ஆற்றிலேன்
மறுகொள்புலன் வழியிற்சென்று மயங்கினேன்
மயங்காமலே
தேறுதல்தர என்னிடம்வரச் சித்தமில்லையோ
தெய்வமே
கூறனேயுமை நான்மறக்கினுங் கூறுநா
நமச்சிவாயவே.

ஒரு பெண் தன் கணவனுக்குப் பணிவிடை செய்து அவனுடைய அன்பைப் பெற்றுக் கொள்கிறாள். அவ்வாறே சீடனும் குருவுக்குப் பணிவிடை செய்கிறான். நாமும் மெய்யன்பர்க்குப் பணிவிடை செய்து அன்பைப் பெறுவதால் அவர் நமக்கு வருந்துயரை நீக்குவார்; வேறும் உலகியற் பொருட்களில் வேட்டையாடுகின்ற ஐம்புல வேடர் கள் வலையில் சிக்கின எளியனேனின் மனமெனுங் காட்டைத் திருத்தி; அந்த (730) மாயக் காட்டிலே காளியுடன் கூத்தாடுங் கண்ணுத லான என் ஆன்மா, அழிந்துபோம் இவ்வுடலையும் நீர்க்குமிழிபோல் வாழ்க்கையையும் பொய்யென்று என்றும் அழியாப் பேரின்ப வாழ்வு தரும் சிவகுருவின் உதவிகொண்டு மனமாகிய காட்டைத் திருத்தி, நாடாக்கி; இறைவன் கருணை வெள்ளம் பெருக திருவடிப் பேறு அடைந்து ஆறுதல்பெற சித்தமிரங்கவில்லையோ தெய்வமே, தாயு மானவர் இவற்றை உணர்த்துகிறார் காண்க:

வேட்டைப் புலப்புலையர் மேவாத வண்ணமனக்
காட்டைத் திருத்திக் கரைகாண்ப தெந்நாளோ
[எந்நாட்கண்ணி தத்வமுறை 6]

பலகோடி உயிர்களிலும் உயிர்க்குயிராம் நாதனாக நின்று இயக் கும் கூத்தனே உனை நான் என் முன்வினையின் பயனாக மறக்கினும் என்னுடைய நா என்றென்றும் 'சிவாயநம' வென்றே அரற்றும்.
(7)

812. அப்பர்சுந்தரர் மாணிக்கர்தமக் கருளருளிய அத்தனே
முப்புரமெரி செய்தமூர்த்தியே மூவர்போற்றும்
முதல்வனே
ஒப்பிலாதவொ ருவனேயுமை பாகனேயுறு
துணைவனே
அப்பனேயுனை நான்மறக்கினு மரற்றுநா
நமச்சிவாயவே.

தனை வந்தடைந்த மெய்யன்பருடைய வேகத்தைத் தீர்ககவோர் சிவகுருவாக எம் இறைவன் எழுந்தருளி அருள்கொடுப்பவர்: அப்பர் சுவாமிகளுக்கு அவர் சகோதரி திலகவதியார் மூலமும், சுந்தரர்க்கு அவருடைய திருமணப்பந்தலுக்கு ஓர் வயோதிகப் பிராமணராகவும், மாணிக்கருக்குத் திருப்பெருந்துறையில் அந்தணராகவும் இறைவனே அருவாக நின்றும் உருத்தாங்கியும் அருள் புரிந்தனர். அவர்களுடைய மும்மலப் பிணிப்பையும் நீக்கியாண்டருளினர். அப்பருக்குச் சூலநோயைக் கொடுத்து அதை நீக்கியும்; சுந்தரர்க்கு 'நீ என் அடிமை' என்று ஓர் ஓலையைக் காட்டி ஆணவ முனைப்பையும் மாயையுலகையும் காட்டியும் உலகியல் வாழ்க்கையை துறக்கச் செய்தீர்; மாணிக்கருக்கு அவர் குதிரை வேண்டக் கொண்டு சென்ற பாண்டியனுடைய பணத்தைத் தருமத்தில் செலவு செய்தும் நான் எனும் ஆணவம் நீக்க புத்திக்கப்பாற்பட்ட இறைவன் செயலைக் காட்டினீர் 'முப்புரமாவது மும்மல காரியம் அப்புரமெய்தமை யாரறிவாரே'' என்றும், தொடக்கத்தில் ''அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன் முப்புரஞ் செற்றனன்'' என்றும், திருமூலர் திருமந்திரம் (343) இல் தருவதுபோல் இறைபணிசெய்து மூவரும் முப்புரஞ் செற்றனர். படைத்தல் காத்தல் அழித்தல் கடவுளராகிய பிரமா விஷ்ணு உருத்திரன் எனும் மும்மூர்த்திகளும் வினைப்பயனெனு மம்பலத்தே வினை முதலாம் முதல்வனால் ஏவப்பட்டே அம் மும்மூர்த்திகளுஞ் செயல் புரியுமுண்மையை யறிந்த அப்பர் சுந்தரர் மாணிக்கர் மூவரும் மும்மூர்த்திகளுக்கும் முதல்வனை முழுமுதல்வனுக்கே மும்மௌனம் பூண்ட அகத்தினராய் தம்மை ஒப்புவித்தனர். தம்புத்தியாகிய கன்னிகையை உமையுடன் கூடியே உமைபாகனுக்குத் தொண்டு செய்ய அந்த உறுதுணைவனை எம்பெருமானிடம் ஒப்படைத்தனர். அந்த ஒப்பிலா வொன்றே உமைபாகனே உறுதுணைவனே. நான் உணமறக்கினும் என்னுடைய நா என்றும் 'சிவாயநம' என்று அரற்றுமே. (8)

813. ஓடுகங்கை யுடன்மதிகொன்றை யுரகம்வைத்த
சடையனே
பாடுவார்பசி நோய்வறுமை பகைத்திடா வண்ணம்
அருள்செய்வாய்
தேடுவார்தங்கள் இதயமாமலர் தினமும்
வாழ்ந்திடு தெய்வமே
நாடினேனுனை நான்மறக்கினும் நவிலுநா
நமச்சிவாயவே.

கருணை வெள்ளத்தைக் குறிக்கும் கங்கையாறும்; அவற்றுடன் குளிர்ச்சியைக் கொடுக்குஞ் சந்திரனும்; கல்லால நீழல்போலும் வெப்பம் மிருந்தும், குளிர்ச்சியும் வெள்ளமும் இல்லாது மலரும் கொன்றைப் பூவையும்; ஐம்பொறிகளை வென்றதைக் குறிக்கும் தும் பையரவும் (176) சடையுடையோன்; தம்மைநினைந்து பாடித் தொழு தேத்தும் மெய்யன்பர் பசியினுலோ, நோயினுலோ வறுமையினுலோ பாதிக்கப்பட்டு வருந்தாமல் அருள்புரியுந் தண்ணளி வாய்ந்தவன்; தம்மை நாடி வேகமுடன் வேண்டும் அடியர் உள்ளத்தே என்றும் ஞான உணர்ச்சி ததும்பும்' என்றென்றும் அவனுணர்வே ஜோதியாக விளங்கும், அகத்தினராய் வாழ அருளுந் தெய்வமே உனை நாடிவந் தேன்; இருட்டில் உனை மறந்தாலும் என் நா என்றும் 'சிவாயநம' என்று அரற்றுமே: உரகம் = பாம்பு. (9)

814. பாலன்மார்க் கண்டன் பரிந்துவேண்டிடப் பாய்ந்து
வந்திட்ட கூற்றன்தன்
காலனைகொடுங் காமன்மேனி தழலெழச் செய்த
கர்த்தனே
மாலயன்முன்னர் மாப்பெருஞ்சோதி வடிவமாய்
நின்ற மறையவா
ஞாலமுனை நான்மறக்கினும் நவிலுநா
நமச்சிவாயவே.

முன் மார்க்கண்டேயனுடைய உயிரைக் கவர வந்த இயமனைக் கொன்றவனே (787); நெற்றிக்கண்ணுல் மன்மதனைக் கொளுத்திய குழு கா (787) அயன்மாலு முன் ஓர் சிவலிங்க வடிவான ஆதியந்தமற்ற அடிமுடியில்லாத ஜோதிவடிவமாய் நின்றவா. [246] இருநிலனுய், மண்ணும் விண்ணுமாகி விளங்குபவனே (746) நான் உனைமறக்கினும் என் நா 'சிவாயநம' என்று அரற்றுமே: (10)

146 ஏன்றுகொள் ஏழையேனை

815. விரும்புவார் விரும்புமுன்னம் விரைந்துவந்
தருள்செய்வானைக்
குரும்பைநேர் கொங்கை யாடன் கூறனைக்
கூற்றைக் காய்ந்து
பெரும்பயன் விளையாநின்ற பெம்மானைப்
பிறப்பில்லானை
அரும்புமா மலர்கொய் தேத்தி யடியினை பணிவார்
வாழ்வார்.

உய்யநெறி வேண்டுவார் அனைவர்களாலும் விரும்பப்படும் சீலம் நோன்பு செறிவு அறிவு என்னும் நன்னெறி நாற்படியும், மெய்யன்பன் ஓரடி முன் வைத்தால் அவ்விறைவன் இரண்டடி அவனெயடையச் சென்று வரவேற்று ஒன்றன்மேல் ஒன்றுய்ப் பெருகி வளர்ந்து முதிர அருள் புரிவானை; இளம்பிறை வளருந்தன்மையுடையது; அதுபோல் குரும்பை முலை தம்மை யடைந்த மெய்யன்பர்க்கு விரைந்து அருள் சொரிய முதிர்ந்து கருணை வெள்ளஞ் சுரக்கும் மோகமார் பூண்முலை யாளாய் (772) ஆற்றல் விடையேறும் (769) அம்மை விளங்குவள்; மார்க்கண்டேயர் தம் முன் வினையின் பயனுக இறைவன் கருணை வெள்ளம் பெருக குரும்பை முலை முதிர்ந்து பால்சுரக்க தண்ணளி வாய்ந்த எம்பெருமான் அவர் வேண்டுங்காலம் காலனைக் காய்ந்து அவரை என்றும் பதினுறு வயதுடன் சீவிக்க அருளினன் சோதி ரூபத்தைத் தம் அகத்தே சிவலிங்க வடிவாகக் கண்டும் புவனலோகத் தில் ஜீவன் முத்தனுக வாழ்ந்தும் (746) பிறப்பை யறுத்தான்; அவன் உயிரைக் கவரவந்த காலனை அந்த ஜோதி ரூபம் விழுங்கி விட்டது; அவருடைய இயமன் மறைந்தான்.

இப்பிறப்பிறப்பற்ற வாழ்வாம் பெரும் பயனை அருள் புரிந்த மெய்ப்பொருளான தண்ணளி வாய்ந்தவனை; குரும்பை போலும் அநம்புமலர் முலையாளனம் தோன்றுமகம்; கொண்டு பாடித் தொழுதேத்த சத்தி சிவமாக உலகினைக் காணும் அகத்தினராய் அம்மையின் ஆடலைக் கண்டு இணையடி பணிவர்; அந்த மெய் யன்பர் என்று மழியாப் பேரானந்தப் பெருவாழ்வில் என்றென்று மின்புற்றிருப்பர். (1)

816. பணிபவர் நெஞ்சி னுனே பலபல கோலத்தானே
அணிக்கணி யாகிநிற்கு மாதியே யமரர் கோவே
மணியணி கண்டத்தானே மாற்றறியாத பொன்னே
இனியுனை மறந்துய்வேனே ஏன்றுகொள்
ஏழையேனை.

உன் திருவருளினுல் எல்லாப் பொருட்களிலும், ஆருயிர்களை வினைத்தன்மையினின்றும் நீக்கும் வண்ணம், பலபல கோலத்தாய் கல ந்து நிற்பவனே; உன்னை மிகவும் ஆவலுடன் வேண்டி நிற்கும் மெய் யன்பர் அகத்தே தோன்றும் ஞானச் சுடரான சோதிமணி விளக்குக்கு பேரழகு கொடுக்கும் ஒளி விளக்கான தனிச்சுடரே! உலகியற் பொருட் கள் செயல்புரியும் வண்ணம் படைத்தல் காத்தல் அழித்தல் கடவுள ராய் விளங்கும் அந்தப் பிரமா விஷ்ணு உருத்திரன் எனும் மூன்று தேவர்களுக்கும், முதலாய் நிற்கும் மூர்த்தியே! கோவே; மெய்யன்

பர்க்கு எடுத்துக் காட்டாக சிற்றின்பத்தை இன்பமாயுண்டு பிறவிக் கடலுக்குள் ஆழ்ந்து விடாமல் நிஷ்காமிய கர்மமாகவே செய்து இருவினையுஞ் சாராதே பிறவிக்கடலைக் கடப்பதற்கு முயலும் வண்ணம், அந்தச் சிற்றின்பமாகிய நஞ்சைக் கண்டத்தில் வைத்திருக்கும் மணிக்கண்டனே, தனிச்சுடராய் எங்கும் வியாபித்திருக்கும் ஆதியு மந்தமுமற்ற ஒப்பில்லாத மாற்றறியாத பொன்னே; அழுக்கிருந் தால் சுட்டெரிக்கத் தோற்றம் மாறும்; ஆதலால் அழுக்கில்லாது தனிச்சுடராய் விளங்குபவன்; பொன்னே; அடியேன் உன்னை எவ் வண்ணம் மறந்துய்ய முடியும், தண்ணளி வாய்ந்தவனே, என்னை ஆதரித்து உன்கழல் காட்டியருளுவை, ஏன்றுகொள் = ஆதரிக்கை. (2)

817. பொன்னெத்த மேனியானே பூங்குழல் பாகத்தானே
அன்னத்தா னரிகா ணுனே ஆவியோடாக்கை
யெல்லாம்
வண்ணத்த திருவடிக்கீழ் வைத்தனன் வருந்தா
வண்ணம்
எண்ணத்தா ளிணைகள் தந்தே யேன்றுகொள்
ஏழையேனை.

[முன்பாட்டுத் தொடர]. பொன்போலும் செம்மேனியன் (769) ஆடல் பொலிந்து விளங்கும் உமையம்மையை இடப்பாகமாகவுடை யவனே; உம்மை வந்தடையும் பொருட்டு நீர் அருளின சீரும் சிறப்புந் தரும் உமையின் ஆடலின் பொருளான கருணை வெள்ளமாம் நாம் நமனைக் காணுதருள் புரிபவனே! எளியனேன் என்னுடைய உடல் பொருள் ஆவி மூன்றும உன் கைவசம் ஒப்புவித்தேனே; அம்மையின் ஆடல் வடிவாக எப்பொருளும் நீயேயாய் விளங்கும் ஐயனே! உனை யன்றி வேறு துணையேது? புத்திக்கு அப்பாற் பட்டதே மெய்ப் பொருளானவன். ஸ்ரீ இராமக்கிருஷ்ணரும்மதையே கூறுகிறார். அம் மையின் ஆடலே கருணையாளனுடைய அன்பளிப்பு. உன்னுடைய மெய்யன்பன் உனைக்காணுமல் வருந்தா வண்ணம் அம்மையின் ஆடலி தில்லைத் தரிசனங், காட்டி ஆளுவீர். (3)

147. நமச்சிவாயப் பத்து

818. அடியவர் மனத்தைநீங்கா அப்பனே கருணைவாழ்வே
வடிவுடை மழுமானேந்தும் வள்ளலே நமச்சிவாய

உயிரில் பொருள் உயிருள் பொருள் அனைத்திலும் அருட்கண்ணைக விளங்கும் எம்மிறைவன் வினைமுதலாம் முழுமுதல்வன் உயிர்களை அவர வர் வினைப்பயனுக் கேற்ற தொழில் புரியும் உடம்பில் பொருத்தி வைத்து அவருக்கேற்றவாறு மதியையும் தேவமாயையில் பதியவைத்து

அவன் உண்ணின்று இயக்க உயிர்கள் வாழ்க்கையில் ஈடுபடுவர்; ஆன்மாவை மானுருபில் கையிலேந்தியவர், அவ்வான்மாவை வினைத்தன்மையினின்று நீக்கும் பொருட்டு அவருடைய மதியாக நின்று நீக்கும் தொழிலிலீடுபடுத்தும் மழுப்படையையும் கையிலுடையார். அருட்கடலே அருள்கூர்ந்து எம்மைப் பாதுகாக்கும் தண்ணளி வாய்ந்த எம்பெருமானே நமச்சிவாய; (1)

819. ஆக்கையே கோயிலாக வகஞ்சிவ லிங்கமாக
நீக்கமற் றெங்கும்நிற்கும் நிமலனே நமச்சிவாய.

அறிவு, நான் நித்தியமான ஆன்மா [332; 333] இந்த நீர்க்குமிழிபோலும் ஒரு நொடிப் பொழுதில் மறைந்துபோகும் சிற்றின்ப வாழ்வைத்தரும் மாயாகாரியவுடம்பல்ல; இந்த ஞான உணர்ச்சி இருதயத்தே உருவெடுக்க வினை நீக்கத்துக்கே இந்த உடம்பு எனக்குத் தண்ணளிவாய்ந்தவனற் கொடுக்கப்பட்டது: எனும் உண்மை, 'சிவ சிவ' எனும் மாமறைதரும் 'சிவன் செயல்' எனும் மெய்ப்பொருளானவனே சாக்ஷி, ஆமோதிப்பவன், தாங்குவோன், அநுபவிப்பவன் எனும் முதல் தான்கு நிலைகளிலும் [293; 294; 295; 296] தம் அநுபவத்தால் கண்ட மெய்யன்பன் அறநெறியில் நின்று (492) கொல்லா விரதம் பூண்டவன் (477); அவனுடைய ஆன்மா பாவந் தேய்ந்து ஆத்மஜ்ஞ விளங்கும்; (373). மெய்யன்பனுடைய உடம்பு சிவன்கோயிலாகவும், அவன் உயிர் முக்கட்பிராணனை சிவலிங்கமாகவும், விளங்கும்; (608). அவனுடைய அகம் பாசபந்தக் கயிறு அறுந்து ஒடுங்கிய அகம்; அந்த அகத்தே மூன்றும் நிலையாகிய நெஞ்சில் எண்ணம் எனும் சித்தமும், உயிர்க் காற்று எனும் பிராணனும், ஆளாகிய புருடனும் மூன்றும் ஒடுங்கி நிற்கும் [65]. நின்மலஜ்ஞ விளங்கும் எம்பெருமானே உருத்தாங்கி ஆக்கையே கோயிலாக அகஞ் சிவலிங்கமாக நீக்கமற அனைத்துயிரிலும் (769) உயிரெல்லாமாகியும் ஆகாமலும் சுகமுனிவர் கண்ட உண்மை விளங்க நிற்கும் எம்பெருமானே நமச்சிவாய;

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யிசனுர்க்குப் போற்றிவிக் காட்டினேமே (4-76-4) (2)

820. இணையடி பணிவார்தம்மை யின்பவீ டடையச்
செய்யுந்
துணைவனே சோதிவெற்பே தூயனே நமச்சிவாய.

(முன்பாட்டு விளக்கம் காண்க).

பாசபந்தக் கயிறு அற மனம் அடங்க உள்ளந் தூய்மையாய் விளங்க ஆன்மா சிவான்மாவாக விளங்கும். தன்னையும் எண்ணில் பல கோடி உயிரனேத்தையும் உயிர்க்குயிராம் நாதனே உண்ணின்று, வினைப்பயனுக் கேற்றவாறு தண்ணளி வாய்ந்தவனுல் கொடுக்கப் பட்டு அந்தத் தேவமாயையில் பதியவைத்த மதிகொண்டு வினைநீக்கி எமையாண்டருள இயங்குகிருன் (769). மெய்யன்பன் அந்த உலகினை விண்ணுலகமாக பரசிவான்மாவாகக் காண்கிருன். (575): (780), இவ்வண்ணம் விண்ணேர் பெருமானை

அணுவுள் அவனும் அவனுள் அணுவும்
கணுவற நின்று கலப்ப துணரார்
இணையிலி யீச னவனெங்கு மாகித்
தணிவற நின்ருன் சரா சரந்தானே. (10 - 2010)

எனுமுண்மைப்படி ஞர்னபூசைக்குரிய (244) அட்டமாமலர் கொண்டு போற்றித் தொழுது பூசை செய்து வணங்குவார் தம்மை பேரானந் தப் பேருன தில்லைச் சிற்றம்பல நடன தரிசனமும் ஆனந்த மயகோ சத்தில் ஜோதி வெற்பான திருவைந்தெழுத்துச் ஜோதியும் வந்தடை யும். அந்த ஐந்தெழுத்துச் ஜோதியாக விளங்கும் எம்பெருமானே ஆதியந்தமற்றவனே நமச்சிவாய. (3)

821. ஈசனே யெம்மைநீங்கா இறைவனே யிமையோர் போற்றும்
வாசமார் கமலபாதா வள்ளலே நமச்சிவாய

[முன்பாட்டு விளக்கந் தொடர] அவனுள் அணுவும் அணுவுள் அவனுமாக அந்த நுண்வெளி (159 வரி 5) யில் விண்ணவர் பெரு மானுக (787) விண்ணேர் பரவியேத்தும் தூயனே ஜோதி வெற்பே (818) என்ன ஜீவன் முத்தனுக அம்மையப்பருலகில் பரசிவவணக் கம் செய்யும் அடியேன் ''சிவாயநம நமசிவாயநம'' வென்றே எந் நேரமும் செபிப்பேன். (4)

822. உள்குவாருள்ளத்தெல்லாம் உடனிருந்தறியுந் தேவே
கள்ளுலாங் குழலாள்பாகா கடவுளே நமச்சிவாய.

திருவைந்தெழுத்துச் ஜோதியில் ஆழ்ந்து கிடந்து பின்ஜீவன் முத்தனுக அம்மையப்பராக உலகில் விளங்கும் விண்ணேர் பெருமானை (821) ''சிவாயநம சிவாயநம'' வென்றே எந்நேரமும் போற்றி யேத்தித் தொழுவோம்; திடசித்தம் எனும் கொம்பரிலே பக்தி எனும் கொடிபடர வைத்து, அந்தக் கயிற்ருல் அறிவு எனும் யந்திரத்தி னுல் திருவடிப்பேறு எனும் ஆடல் காட்டும் உமையாள் பங்கனுடன் கட்டவேண்டும். அங்கைத் தீயனுக விளங்கும் எம்பெருமான் எந்நிலை யிலும் எக்கோலத்திலும் சங்கரன் தாளே மறவாமல் விளங்க இரவு

பகலற்ற உன்ஜோதியான 'சிவன் செயலே'- ஒளிவிளக் காகக் கண்டும் அழியாப் பேரானந்தப் பெருங்கடலில் ஆழ்ந்து கிடந்தும் அடியேன் 'சிவாயநம சிவாயநம' வென்றே தொழுவேன் (5)

823. ஊமைபோ லிருந்தேயுண்மை யுணருவார்
தங்கட்கெல்லாம்
தாய்மைபோ லருளைச்செய்யுஞ் சங்கரா
நமச்சிவாய.

எப்பொருளிலும் வியாபித்திருக்கும் எம்பெருமானே யென்னை யும் ஆண்டருளி எம்முன் நின்றே இருவினையுஞ் சாராமே ஒரேயந் திரமாய், தேச எல்லையோ கால எல்லையோ இல்லாது இயங்குபவன், எம் பரமாத்மன். நாமும் திருவைந்தெழுத்துச் சோதியில் ஆழ்ந்து கிடந்தும், எம்லாம் இழந்த ஆனந்தமய கோசத்தில் சமாதியிலிருந்து கீழிறங்கி விஞ்ஞானமய கோசத்தில் தன்னை யுணர்ந்தறியுமிடத்தில், உலகியற் பொருட்களை தம்மறிவால் இறைவன் திருவருள்வலதாய் உணர்ந்தறியலாம். பின் அன்னமயகோசத்தில் அந்த உண்மைப் பொருளெல்லாம் தம் உணர்வினில் தோன்றும். மனமும் உள்ளமும் மௌன விரதம் பூண்ட அடியாருக்குச் சும்மா இருக்கும். அவன் குழந்தைபோல் உலகாகிய அம்மையப்பருக்குத் தொண்டு செய்வான். தாயின் மடிமீது விளையாடுங்குழந்தை போல் அவனும் உமையாள் பங்கனும் சஞ்சலமற்று வாழ தாயினுஞ் சாலப் பரிந்து அருளும் சங்கரனே நமச்சிவாய. பாவசமாதியில் ஆழ்ந்து கிடந்தும், உண் மையை திருவருளால் உணர்ந்தறிந்தும் பின் ஜீவன் முத்தனுக ஊமை போலிருந்தே உணர, தாய்போல் அருள்புரிபவன் சங்கரன். (6)

824. எண்ணுவா ரெண்ணந் தோன்று மிடமெனப்
பெரியோருன்னைத்
திண்ணமாய்ச் சொல்லும்நல்ல தெய்வமே
நமச்சிவாய.

படைத்தல் காத்தல் அழித்தற் கடவுளராகிய மும் மூர்த்திகளும், முதல்வனும் எம்பெருமானால் ஏவப்பட்டுத் தம் தொழிலைச் செய் பவர்கள், விளைப்பயன் உண்டாக்குவது இச்சை; மண் பொன் பெண் எனும் மூவாசைகளும் 'எண்ணங்களையே' உண்டாக்குவன. அந்த எண் ணங்களே காரணகர்த்தாவான முதல்வனை (795) விளங்குபவன்; மும் மூர்த்திகளுக்கும் முன்னிற்கும்மூர்த்தி, முதல்வன்; தம்மறிவினாலே தம்மைச் ஜோதிருபத்திலும் பின் சாயுச்சியபதவி யடைந்த அடியா ராகவும் (823) கண்டு ''தன்னையறிந்த'' அறிஞர் திடமுடன் ''முழு

முதல்வனும் எம்பிரானே வினையின் காரண கர்த்தாவாக விளங்கும் எண்ணங்கள் தோன்றுமிடம்'' என்று கூறுவர். எண்ணுவார் எண்ண மெல்லாந் தோன்றுமிடம் நீயென்றே ஊமைபோலிருந்தே உண்மை யெலாம் உணருந் (823) தங்கட்குத் தாய்போல், திரிதோஷமிறக்க அருளுஞ் சங்கரா நமச்சிவாய: (7)

825. ஏகம்ப மேவியந்த ஏந்திழை கலக்கந்தீர்த்த
ஏகனே யெல்லாம்வல்ல எந்தையே நமச்சிவாய.

ஏந்திழை = பெண் மடந்தை; ஏகம்பம் = காஞ்சிபுரத்திலுள்ள ஓர் சிவஸ்தலம்; சுவாமி ஏகாம்பரநாதர் அம்மை காமாக்ஷி. கயிலா யத்தினின்றும் இங்கு எழுந்தருளிய இறைவி இறைவனே எய்துதற் பொருட்டுத் தவஞ் செய்தனர்; எண்ணன்கு அறங்களையும் வழுவா தியற்றினர். கம்பையாற்றில் ஒற்றைமாமரத்தடியில் மணலால் சிவலிங்கஞ் செய்து வழிபட்டனர். இறைவன் அருளால் நீர் கடுகி வரக் கம்பித்து இறைவனைத் தழுவினர். வளைத்தழும்பும் முலைத் தழும்பும் இறைவன் தன் மேனியில் ஏற்றனர் என்பது புராண வரலாறு. கம்பித்தல் = நடுங்கல்.

சிவலிங்க வடிவாக அம்மையார் பூசித்து வணங்கினர். தாயுமா னவர் சிவலிங்க வடிவாக முக்கட்பிரானைத் தரிசித்து முத்தியடைய லாம் என்று கூறுகிறார்; காண்க.

எண்ணுத தெண்ணிய நெஞ்சே துயரொழி என்னிரண்டு
கண்ணே உறங்குக என்னுள முக்கட் கருணைப்பிரான்
தண்ணார் கருணை மவுனத்தி னல்முத்தி சாதிக்கலாம்
நண்ணுத தொன்றில்லை யெல்லா நலமு நமக்குளவே.

சுந்தரரும் தருவதைக் காண்க:

அந்தமில் புகழாள் உமைநங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
சற்றைவார் சடைக்கம்பன் எம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே. (7-61-2)

ஏகம்பம் சென்று அந்த மடந்தைக்கு அருள் கொடுத்து கலக்கந்தீர்த் தாண்டருளிய ஏகனனேகனே நமச்சிவயாய: (8)

826. ஐயந்தீர்த் தடியேன்றன்னை யன்றுநல் லூரிலாண்ட
துய்யனே தூரியவெற்பே சுந்தரா நமச்சிவாய.

அன்று நல்லூர்த் தேரடியில் நான் என் ஞானகுரவனைக் கண் டேன்; காலன் வலிதொலையக் காலெடுத்தான் தந்தருளும் பாலன் வாழ் நல்லூப்பதியில் (478) அவனைத் தரிசிக்கத் தன்னை உன்னை

ஆரென்றறிவாயடா'' என்றார். உடனே அறியவும் வைத்தார்; ''சிவனருளே நோக்கென்றார்''. நோக்கநொடியளவிலே ''என் சிந்தை தெளிந்து உவமை கடந்த வின்பந் தேக்கிற்று''. மேலும்''தவஞ் செய்வார் தாமறிவார் தப்பார்'' என்று மேலுந் தம் ஐயந்தீர தம் ஞானகுரவன் தேரடியில் தமக்கு முதன் நாள் குறிப்பாலும் ஒரு சொல்லாலு முண்மையை யறிவித்துத் தம் ஐயமெலாந்தீர அருள் செய்தனன். சுந்தரரான செல்லப்பன் எவ்வளவு அழகாக ஒரு நொடியில் ஐயந் தீர்த்தான்; எவ்வளவு துரியமாக வேலை செய்தனன் என்பதை நீங்களே உணர்ந்தறியலாம்; (9)

827. ஒன்பதுவாய்த் தோற்பை தன்னில் உயிரடங்கி
நிற்கநல்ல
அன்புசெய் தெய்வமேயென் அமுதமே
நமச்சிவாய.

இந்த உடம்பு ஒன்பதுவாயுடைய தோற்பையால் மூடப்பட்டது (774). இறைவனுல் அவரவர் வினைப்பயனுக்கேற்றவாறு தொழில் புரிய தொழிலுக்கேற்ற வுடம்பையும் மதியையும் அந்த உயிருடன் பொருத்தி வைத்து உண்ணின்று இயக்குவான் நம் வினை முதலாம் முழுமுதல்வன். இடர் நீக்கி யாண்டருள்வதே அவனுடைய (493) நோக்கம். இந்த ஆன்மா சைதன்யப் பொருள். (333); அது மலப் பிணிப்பினுல் இருவினையின் பயனுக மூடப்பட்டு சூக்குமசரீரத்திலும், அந்தச் சூக்கும சரீரமும் மாறி மாறித் தோன்றி வேறு வேறு ஸ்தூல சரீரத்திலும் வினைப்பயனுக் கேற்றவாறு பொருத்தப்படுகின்றது. இப் பொழுது இருக்கும் உடம்பு கர்மம் புரிந்து வேறுங் கர்மம் புரியப் பயனற்றுல் வேறு உடம்புக்கு மாற்றப்படுகிறது அதே இறப்பும் பிறப்பும். சூக்கும சரீரமும் ஸ்தூல சரீரமும் மாறி மாறியே அமைக்கப்படுகின்றது;

மாறி மாறி உடம்பெடுப்பது எனும் பிறப்பிறப்பெனுங் கடலினின்றும் நம்மை விடுவிப்பதே இடர்நீக்கி யாளுமீசனுடைய நோக்கம்; எம்முடைய ஆன்மாவைப் பிடித்திருக்கும் மலப்பிணிப்பினின்றும் நம்மை நீக்குவதே வாழ்வின் நோக்கம். பாவந் தேய்ந்த ஆன்மா ஆத்மனுக ஒளிங்கும் (373); மலப்பிணிப்பு நீங்கிய ஆன்மாவை சூக்கும சரீரமான மாயையும் அழிந்துபோக, அவற்றைப் பீடிக்க ஒன்றுமில்லாது அவனுடைய ஒளி இறைவனுடைய ஒளியுடனொடுங்குகிறது. ஸ்ரீ இராமகிருஷ்ணர் இதை உணர்த்தத் தருவதைக் காண்க. ,,தண்ணீரில் கரையுந் தன்மையுடைய ஒரு சட்டியில் நீரை நிறைத்துத் தண்ணீரில் வைத்தால் சட்டிகரையும் வரை சட்டியிலுள்ள நீர் தளும்பாகக் காணப்படும். சட்டி கரைய இரண்டு நீரும்

ஒன்றுய்க் கலந்திருக்கும்; ஒன்றுபடும்; அவ்வண்ணமே இந்த உயிரென்னும் ஆவியும்; இறைவன் ஒளியுடன் ஒன்றுபடும். சுவாமிகளே முன்னும் ''வாஞளாசையைத் தீக்கிரை யாக்கினன்'' என்று (274) தருசிறார்; திருமூலர் இவ்வுண்மையைத் தருகிறார் காண்க.

வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறுந்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே. (10–168)

மார்க்கண்டேயர் சிவலிங்கத்தைப் பூசித்து அந்த சிவலிங்க வடிவாக 'முக்கண்ணனுகவே' தம் அகம், 'உயிர்'மாற அவர் சிவபதமடைந்தார்; ஏகம்பமேவி அந்த ஏந்திழையை (825) அவ்வாறே பாதுகாத்தார். அவ்வாறே தம் உயிரும் இந்த உடம்பிலேயே சிவலிங்க வடிவாக அமைந்து போக அன்புசெய் திதய்வமே; என்கிறார். இதற்கு ஒப்பாக

எந்தவுட லேனும் எடுத்த வுடல் நல்லதென்று
சிந்தை செய்யவந்த திறஞ் செப்பாய் பராபரமே.
(தாயுமானவர்)

எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும்தன் அடியார்க்கு
இங்கே யென் றருள்புரியும் எம்பெருமான்.
(சம்பந்தர் 2-40-6) (10)

148 நமச்சிவாய மாலை

828. சிவநெறிச் செல்வர்தங்கள் சிந்தையே கோயில் கொண்ட
உவமையில் லாதவொன்றே உமைபங்கா நமச்சிவாய.

பாசபந்தக் கயிறு அற அறநெறி நிற்பவரே சிவநெறிச் செல்வர் (492). அவர் மௌனமே உருவான அகமுடையாராய் கொல்லா விரதம் பூண்டு (477) இறைவன் பாதஞ் சேர்வது திண்ணம் என நிற்பர். அவர்கள் சிந்தை தெளிய எல்லாஞ் சிவன் செயல், எங்கும் அவனேடி, எல்லாம் அவனேடி என்று நிற்பர். உவமை கடந்த இன்பந்தேக்க (489) அவன் அறிவே வடிவான சிந்தையில் அம்மையின் ஆடலையும் அப்பாலே நின்றியங்கும் உமைபங்கரையுந் தரிசிப்பவன்; (822) உமைபங்கா நமச்சிவாய; (1)

829. தேகம்நீ யல்லவென்ற திடமெனக் கருளிப்பொல்லா
மோகத்தை முனிந்தாட் கொண்ட முதல்வனே
நமச்சிவாய.

தேகம் நீயல்ல நீயான்மா. நெறிநின்ற உடம்பில் உயிர் சிவலிங்க வடிவாக விளங்க அவனேயடையும் (819); நீர்க்குமிழி போலும் சிற்றின்பத்தை ஒறுத்து (819) மோகத்தை முனிந்தாட் கொண்டே உயிர் சிவலிங்க வடிவாக விளங்க முக்கட் கருணைப்பிரானே நம் உடம்பைக் கோயில் கொள்வான்; முக்கட் கருணைப்பிரானை முதல்வனே நமச்சிவாய. (2)

830. தத்துவந் தொண்ணூற்றுறுஞ் சடமெனக் காட்டி
யென்னைத்
தத்துவா தீதனுக்குந் தாணுவே நமச்சிவாய.

மெய்யெனப்படும் தத்துவங்களின் காரியமான தாத்துவிகங்கள் அறுபது; புறக்கருவிகள் எனப்படும் தத்துவங்கள் முப்பத்தாறு எனப்படும்; தத்துவங்களை (கீழே காண்க). எல்லாம் மனத்திலுலே பொருட்களை அணுவாக பிருதுவி, அப்பு, தேயு, வாயு ஆகாயம் எனும் நுண் பொருளான பஞ்சபூதங்களும், அவற்றை யுணர்ந்தறியும் ஸ்பத, ஸ்பரிச, ரச, ரூப ஸ்கந்த எனும் ஐபுலன்களாலும் அந்தக் கரணங்களான மனம், புத்தி சித்தம் அகங்காரம் என்பனவற்றாலும் ஆக்கப்பட்டே உணர்ந்தறியப்பட்டன. சடப்பொருளான மனத்திலுலே சடப்பொருட்களையே உணர்ந்தறியலாம். சும்மா இருக்கும் அகந்தோன்ற அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய் நெறியாம் நீடருள் நந்தி ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம் எனும் ஏகாந்த நிலையெய்தி நிட்டை கூடுவர் ஐந்தாம் நிலையில் உயிர் காற்றுகிய பிராணனும், எண்ணமாகிய சித்தமும் ஆளாகிய புருடனும் ஒன்று கூடியே ஆளாகிய புருடனைத் தன்னை ஆனந்தமய கோசத்தில் இழந்தும், செயலற்று மூலத்திற்கிடக்கும், (65): அவனே தத்துவங்கள் தொண்ணூற்றுறுந் தன்னுள் அடங்க புவனியில் பிறந்து தத்துவாதீதனான ஜீவன் முத்தனைச் சிவிப்பன்.

தூமாயை மெய்கள் 5, தூவாமாயை மெய்கள் 7 பகுதிமாயை மெய்கள் இருபத்துநான்கு ஆக மெய்கள் முப்பத்தாறு. பகுதிமெய் மூலப்பகுதி, புத்தி, அகங்காரம், மனம், தன்மாத்திரை 5, அறிதற் கருவி 5, செய்தற்கருவி 5 பூதம் ஐந்து, ஆக இருபத்து நான்கு: இம் முப்பத்தாறும் புறக்கருவிகள் எனப்படும் (65இல் காண்க). மெய்யெனப்படும் தத்துவங்களின் காரியமான தாத்துவிகங்கள் அறுபது:

நிலம்—மயிர், தோல், எலும்பு, நரம்பு, தசை 5.
நீர்—நீர், குருதி, மூளை, கொழுப்பு, வெண்ணீர் 5.
தீ—ஊண், உறக்கம், உட்கு, உடனுறைவு, மடி? [Energy] 5.
வளி—ஓடல், இருத்தல், நடத்தல், கிடத்தல், தத்தல் 5.
வெளி—வெகுளி, இவறன்மை, மயக்கம், செருக்கு, பொருமை 5.
செய்கருவி-பேசல், நடத்தல், உழைத்தல், கழித்தல், மகப்பெறல் 5.
அறிவுவளி - உயிர்க்காற்று, மலக்காற்று, தொழிற்காற்று, ஒலிக்காற்று, நிரவுகாற்று 5.
தொழில்வளி - தும்மற்காற்று, விழிக்காற்று, கொட்டாவிக் காற்று, இமைக்காற்று, வீங்கற் காற்று 5.
நாடி - இடப்பால் நரம்பு, வலப்பால் நரம்பு, நடுநரம்பு, இடக் கண் நரம்பு, வலச்செவி நரம்பு, இடச்செவி நரம்பு, வலக் கண் நரம்பு, உள்நாக்கு நரம்பு, கருவாய் நரம்பு, எருவாய்நரம்பு 10.
ஓசை-நுண்ணோசை, நினைவோசை, மிடற்றோசை, செவியோசை 4.
மூப்பற்று—பொருட்பற்று, புதல்வர்ப்பற்று, உலகப்பற்று 3:
மூக்குணம்—அமைதி, ஆட்சி, அழுந்தல் 3:
ஆகத் தாத்துவிகம்அறுபது (3) 60

831. புலன்வழிச் செல்லும் பொல்லாப் புந்தியை நீக்கியாண்ட
விமலனே விண்ணோர் போற்றும் வித்தக
நமச்சிவாய.

[முன்பாட்டு விளக்கங் காண்க]. ஐம்புலன்களாலும் அந்தக் கரணங்களாலும் ஒன்றுசேர்ந்தே உண்டாக்கப்பட்ட புறக்கருவிகளான மூப்பத்தாறும் ஒடுங்கியே (65) (830) நிட்டைகூடி தொண்ணூற்றுறு தத்துவங்களும் ஒன்றுபட்ட ஆள்ாக விளங்கும் தத்துவாதீதன்; புவன லோகத்தில் பிறந்து (830) புந்தியை நீக்கியாண்ட விமலனாகவும்; தையல் தனக்குத் தன்பாதியுடல் கொடுத்த (773) வித்தகனாகவும், தாமும் வினைப்பயனெனுமப்பலத்தே வினைமுதலாம் முழு முதல்வனாக விளங்கும் எம்பெருமானும், ஒன்றுபட்டு வாழும் அந்நிலையில், வித்த கஞ்சேர் இறைவனுக்கு "சிவாயநம சிவாயநம" என்று கூறுவோம்.(4)

832. ஆதார மாறுந்தாண்டி யப்பாலே சென்ற பேர்க்குப்
பாதார விந்தமீந்த பரமனே நமச்சிவாய.

பாசபந்தக்கயிறு அற அடங்கிய மனத்தராய் இறைவன் நாட கத்தை நாடகமேடையில் சாந்தமுடன் பற்றற்றவராய் நடிப் பன் சாஷி, அநுமதிப்பவன், தாங்குவோன், அநுபவிப்பவன்

மகேஸ்வரன் சதாசிவன், பரமேஸ்வரன் ஆகிய (293 - 299). ஆறு நிலைகளிலும் தம்மைக்கண்டு) அருவுருவாம் சதாசிவன், ஆடல் காட்டும் உமையாள் பங்கா பரமேஸ்வரனே ஜோதி ரூபத்திலுங் கண்ட பின் சிவன் முத்தனாகச் சாயுச்சிய பதவியில் தத்துவாதிதனாக (830; 831) தையல் தனக்குத் தன் பாதியுடல் கொடுத்த (773) முழு முதல்வனும் எம்பெருமானே நமச்சிவாய; (5)

833. சூதான வெளியிலென்னைச் சுகம்பெற
நிறுத்திவைத்த
வேதனே விண்ணோர் போற்றும் வேந்தனே
நமச்சிவாய,

சும்மா இருக்கும் அகத்தே சித்த மௌனம் செயல்வாக்கெல் லாம் மௌனம் சுத்தமௌனம் தோன்றும். அந்த நிலையில் தன்னை முழுவதும் இழந்த வள்ளி, இயற்கையின் ஆற்றல் வடிவாகவே செயல் புரிவான்: 'முருகனே வள்ளியாக' என்று அவளுடைய ஐப்புலன் களும் எரிந்தும், மீண்டுங் கட்டுந்தன்மையற்று வள்ளி, முருகன் கணபதி யாகிய (121) பார்வதிதேவியின் மைந்தர்கன், பார்வதியின் ஆற்றல் வடி (868)வுகொண்டு செயல்புரிவதுபோல், செயலாற்றினாள். அந் நிலையில் நுண்வெளியிலும், பரமாகாச வெளியிலும் எல்லையற்ற அவ் வெளியில் இறைவனுந் தானுமொன்றுபட்டு ஏகனனேகனாகக் காண் கிறான். பாவசமாதியில் பரமாகாசத்தில் ஜோதியிலும், நுண்வெளி யில் விண்ணோர் பெருமானாகவும் (780) தம்மையும் இறைவனையும் மொன்றாகக் காண்கிறான். ஏகனாக விளங்குபவன் வேறு பொருளைக் காணஇயலாதே: ஆதலின் சூதான. மாறிமாறித் தோன்றுந் தன்மையுடைய வெளியில், தனித்திருந்து ஏகாதிபத்தியம் உடையவ னாக சர்வவல்லமை, சர்வவியாபகம், முற்றுமுணருந்தன்மை முதலிய பெருங்குணங்கள் பொருந்தினராய், உலகியற்கையை உணர்ந்தறிந் தும் வேதனாக அவற்றின் உண்மை விளங்கத் தொண்டு செய்தும், அறிஞர் போற்றித் தொழும் வேந்தனே நமச்சிவாய. (6)

834. தேடிநான் காணும் வண்ணந் திருக்கோலங்
காட்டியென்னைக்
கூடியே யடிமைகொண்ட கொற்றவா நமச்சிவாய.

முதல் தேரடியில் தேசிகனைக் கண்டபோது சிவனருளை நோக் கென்றான்; நோக்க நொடியளவிலேயின்பம் தேக்கிற் றென் சிந்தை தெளிந்து (489) என்கிறார். இறைவன் தன் திருக்கோலத்தைக் காட்டினான். அதே (489) இல் ''உவமை கடந்த வின்பம் எல்லார்க்கு மூண்டு தவஞ் செய்வார் தாமறிவர் தப்பார்'' என்று கூறி என்னை அடிமை கொண்டருளினன் என்கிறார். மேலும்

"ஆக்கி னானெனை அண்மையிற் சென்றிடின்
தாக்குவா னெனைத் தாக்கற மில்லென
நோக்கு வானெனை நோக்கிப்பல சொல்வான்
நோக்க மென்றற நோக்கிய நோக்கே"

(2 3) என்றும் தருகிறார் காண்க. அவ்வண்ணமே எம்மை ஆக்கினான் என்கிறார். ஞான குரவனாக எழுந்தருளிய தவத்தோனே நமச்சிவாய, (7)

835. நாடியோ ரிரண்டினாலும் நடந்திடும் வாசிதன்னை
நீடிய சுழுமுனைக்குள் நிறுவினாய் நமச்சிவாய.

பாசபந்தக் கயிறு அற மனமடங்கும் சித்த மௌனஞ் செயல் வாக்கெல்லாம் மௌனம் சுத்தமௌனம் தோன்ற மெய்யன்பன் பிராணாயாமஞ் செய்வன் இரண்டு துவாரம் வழியாகச் செல்லுங் காற்று அடங்கிக் கீழ் நோக்கிச் செல்லும் சுழுமுனைக்குள் தண்ணளி வாய்ந்த எம்பிரான் திருவருளினால் சென்று அடங்கிக்கிடக்கும்; திருவருள் புரிந்த தண்ணளி வாய்ந்த எம்பிரானே நமச்சிவாய; (8)

836. காலைநீ தூக்கியாடுங் காட்சியைக் கண்டபேர்கள்
வேலைசூழ் நிலத்தில்வந்து வீழ்வரோ நமச்சிவாய

(மூன் விளக்கம் தொடர) சுழுத்தி எனும் மூன்றாம் நிலையில் (65) நெஞ்சத்தில் எண்ணமாகிய சித்தமும், உயிர்க்காற்றாகிய பிராணனும் ஆளாகிய புருடனும் மூன்றும் நின்று அறிவு தரும். நாலாம் நிலையாகிய துரியத்தில் எண்ணமும் ஒடுங்க, உயிர்க் காற்றாகிய பிராணனும் ஆளாகிய புருடனும் எஞ்சிக் கிடக்கும். மூலத்துக்குச் செல்லும் உயிர்க்காற்றினால் மூலத்தீ, பேரறிவு எழும்ப அது திங்கள் மண்டலத்தே சென்று அறிவுப் பெருவெளியில் முன்கண்ட அருவுருவாம் சதாசிவனை "உன்னுமனங் கர்ப்பூரவுண்டை போலே கரையமின்னு மானந்த விளக்கே பராபரமே" என்று தாயுமானவர் கூறு முண்மை விளங்க அறிவே வடிவான தில்லைத்தரிசனங் காண்பான்; சுவாமிகள் முன்னமும் "ஆடவெடுத்த அடித்தாமரை பரவி (755) வேடம் பொலிய வந்த" "ஆடகத் தரசே" (795) என்று தருகிறார் காண்க. 'ஓசைவடிவானவள்' எப்பொருளிலும் ஓசை வடிவாகவே ஆடும் சத்தியும் இயக்கும் சிவனுமாக "அணுவுள் அவனும் அவனுள் அணுவுங் கணுவற நின்று கலப்பதுணரார் இணையிலி யீசனவனெங்குமாகித் தணிவற நின்றான் சராசரந்தானே" எனும் திருமூலர் வாக்கியங்களால் அந்தச் 'ஜோதி வெற்பில்' அம்மையின் ஆடலை நாம் உணரலாம். அந்த ஆடலைக் கண்ட ஞானி பின்னும் பாசபந்தக் கயிறு உண்டாகி உலகினில் மாயை வாழ்க்கையில் ஈடுபடுவரோ? இல்லை; எரிந்த பாசபந்தக் கயிறு கட்டுந்தன்மையற்றது; அவர் மீண்டும் மாயையினால் கட்டுண்ணார்; திருவருள் புரிபவனுக்கு நமச்சிவாய; (9)

837. காயமே கோயிலாகக் கண்டிடும் மாந்தருக்குத்
தாயகம் நீயேயன்றே சங்கரா நமச்சிவாய.

[முன் விளக்கம் தொடர] தில்லைத்தரிசனம் கண்ட மெய்யன்பன் பின் தத்துவாதீதனாக தத்துவம் தொண்ணூற்றுறுந் தன்னுள் அடங்க (830)ச் சிவன் முத்தனாக புவியினில் பிறந்து சரியுச்சிய பதவியடைந் தவனுய் அம்மையப்பரான உலகும் தானும் ஒன்றாகவே கண்டு தாயின் மடிமீது விளையாடும் குழந்தை போலச் சஞ்சலமற்று (829) இனிது வாழ்வான்: எந்நிலையிலும் எக்கோலத்திலும் சிவன் செயலின் உண் மையைத் தரும் தாயகமாக விளங்கும் சங்கரா நமச்சிவாய. (10)

149 திருத்தாண்டகம் 1

838. தேனுந்து முக்கனித்தீஞ் சுவையர் போலும்
சிவகாமி யம்மையிடப் பாகர் போலும்
வானுந் திசையெட்டு மானார் போலும்
மறிகடலு மதிகதிரு மானார் போலும்
தானும்நானு மொன்று யிருப்பார் போலும்
சாதலொடு பிறத்தலுந் தவிர்ந்தார் போலும்
மானும் மழுவுந் தரித்தார் போலும்
மன்னியெம் முள்ளத்தி னுண்ணின் றாரே.

(பொருள் கொள்க) வானுந் திசையெட்டுமானார், மறிகடலு மதிகதிருமானர் சிவகாமி யம்மையிடப்பாகர்; தேனுந்து முக்கனித் தீஞ்சுவையர்; தானும் நானும் ஒன்றுயிருப்பார்; சாதலொடு பிறத் தலுந் தவிர்த்தார்; என. எண்ணி பலகோடி உயிர்கள் எத்தனையோ அத்தனையிலும் அருட்கண்ணாக, எட்டுத்திசைகளிலும் பரவி நிற்கும் எம்பெருமான் மண்ணுலகும் விண்ணுலகும் (796) ஒன்றல் விளங்குப வனர்; திரையற்ற கடல்போல் விளங்கும் உள்ளத்தே சித்தாகாசத் தின்கண் அறிவுக் கதிர்களைப்பரவும் சுடரொளியான கதிரவன், எப் பொருட்களையும், உயிரில் பொருள் உயிருள் பொருள் எப்பொருளி லும் அதன் ஒளியுடன் கதிரவன் ஒளி, உயிர்க்குயிராம் நாதனுடைய ஒளி துணைநின்று இயங்க, அந்த ஓசை வடிவான ஆடல் உமை யம்மையை இடப்பாகமாகக் கொண்டார்; திரையற்ற கடல் போலும் உள்ளம் மௌனமே உருவானது; ஆசைகளும் ஐம்புலன்களும் எரிந்து விட்டது. இறைவனுடைய சித்திரத்தை உலகமாகிய நாடக மேடை யில் கண்டு அழியா இன்பம் அடையும் உள்ளமே அந்த மெய்யன்பனை எளியேனுள்ளம். தேன்போல் இனியசுவைதரும் முக்கனி போன்றதே அதனுடைய கனிவு; அந்தத் தில்லைத்தரிசனங்கண்ட எளியேனும்

அம்மையப்பரான இறைவனும் ஒன்றுபட்ட 'ஜோதிருபமே'; சிவ காமி இடப்பாகமாக மானும் மழுவுங் கையிலேந்தி (792) ஆன்மாக்களை இரட்சிக்குந் தன்மையராய், சாதலுடன் பிறப்பும் அற்றவராய் விளங்குந் தண்ணளி வாய்ந்த அப்பன்; எளியனுடைய மும் மௌனமே உருவான அகத்தை தம்வீடாக ஏற்றுக்கொண்டான் அவன்; (1)

839. ஆயிரந் திருநாம முடையார் போலும்
அஞ்செழுத்து மெட்டெழுத்து மானார் போலும்
தீயினும் மேனி சிறந்தார் போலும்
சென்னிமிசைக் கங்கையினைச் செறித்தார்—போலும்
தாயினும் நனிமிக்க வினியார் போலும்
சாமகா னப்பிரிய முடையார் போலும்
நாயினுங் கடையேனை யாண்டார் போலும்
நன்மையொடு தீமையொன்று மில்லார் தாமே.

இயமம் நியமம் முதலியன அநுசரித்து பொறைநிலை யெய்திய மனம், 'உள்ளபடியே உள்ளது' எப்பவோ முடிந்த காரியர், உலகம்; வினை முதலாம் முழுமுதல்வனுல் ஆருயிர்களை அவரவர் வினைப் பயனுக்கேற்றவாறு உடலில் பொருத்தி வைத்து பொருத்தமான மதியையும் அவ்வுடலத்தில் பொருத்தி, நிகழ்ச்சிகளைத்தாமே உண்ணின்று இயக்குவர்;சூரியன் ஒளி கண்ணெளியுடன் கூடிநின்று பொருட்களைத் தம் வெளிச்சத்தில் உருவமைப்பது போன்று, உயிரினுடைய ஒளியுடன் கூடியே அவ்வுயிர்களை அவரவர் தொழிலில் இயங்கச்செய்பவர்; வேறும், மருத்துவன் தம்மிடஞ் சிகிச்சைக்கு வந்த நோயாளிக்கோ உபாத்தியாயர் தம்மிடம் கல்வி பயிலவந்த மாணவனுக்கோ அவரவர்க்குத் தேவையான மருந்தையோ, கல்வியையோ கொடுப்பது வழக்கம். மாணவன் என்ன கல்வியில் தேர்ச்சியடைவானென்பதை உபாத்தியாயருக்கே தெரியும். சிவகுருவின் உதவியுடன் அவ்வண்ணம் பொறைநிலை யெய்திய மனம் அந்நிலையில் ஏகாழ்ந்து விளங்கும். ஆங்ஙனம் குறித்த பொருளோடுதான் பிறஞகாத் தகையது சமாதி. சிவஞான முனிவர் கூறுவதைக் காண்க.

அருவினி லுருவந் தோன்றி அங்காங்கி பாவமாகி
உருவினி லுருவ மாயே உதித்திடும் உலகமெல்லாம்
பெருகிடும் சுருங்கும் பேதா யேதமோ டபேதமாகும்
ஒருவனே யெல்லா மாகி அல்லவாய் உடனுமாவன்.

சிவஞான சித்தியார் (க.க உள)

முதல்வன் ஆணையினால் நிகழும் இவ்வுலகியல் நிகழ்ச்சி ஆருயிர்களின் மலப்பிணிப்பால் நேர்ந்துள்ள பெருந்துன்பத்தினைப் போக்கித் தன் திருவடியாகிய அளவில் பேரின்பினை அவ்வுயிர்கள் துய்த்தற் பொருட்டேயாம். அவ்வுண்மையை வருமாறுணர்க.

ஏற்ற இவை அரனருளின் திருவினையாட்டாக
இயம்புவர்கள் அணுக்களிடர்க் கடல்நின்றும் எடுத்தே
ஊற்றமிக அருள் புரிதல் ஏதுவாக
உரைசெய்வர் ஒடுக்கம் இங்குப் பொழித்தல் மற்றைத்
தோற்றமல பாகம்வரக் காத்தல் போகம்
துய்ப்பித்தல் திரோதாயி நிறுத்த லாகும்
போற்றவரும் அருள் அருளே அன்றிமற்றுப்
புகன்ற வையும் அருளொளியப் புகலொணாதே.

(சிவப்பிரகாசம் 18)

அவ்வண்ணம் பொறைநிலை யெய்திக் கொழுத்து விளங்கும் 'நினைவு' தொடர்பாயுள்ள ''குறியாக் குறியினிற் கூடாத கூட்டத்து அறியாஅறிவில் அவிழ்ந்தேகசித்தமாய்நெறியாம்பாராநந்திநீடருள்ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம் எனலாமே'' என்று திருமூலர் தரும் உண்மை விளங்க அவரவர் நினைவுக்குத் தொடர்பாயுள்ள 'சிவம்' 'நாமத்துடன் முகம்' அவன் திருவருளுடன் தோன்றும். ய, ந, ம எனும் எழுத்துக்கள் தரும் உண்மை விளங்கப் பொறைநிலை யெய்திய நினைவில் சமாதியடைந்தும், 'சிவ' எனும் எழுத்துக்கள் தரும் உண்மை விளங்க (765) எக்கோலத்திலும் சிவன் செயல் எனும் உண்மை விளங்கும்; 'சிவம்' தோன்ற பலபல முகங்களும் தோன்றும்: அஞ்செழுத்துப் பொருளான ஆயிரநாமமுடையார் எண்குணத்தான், ஞானபூசைக்குரிய அட்டமாமலர் கொண்டு அடையப்பெற்று விளங்குபவன்; எட்டுத் தோள்களையுடையவன்: அறிவே சுவாலையாக விளங்கும் உருவினராய் தீயினும் சிறந்த மேனியுடையான்.(844.)

அவன் திருவருளால் எல்லாந் தோன்றும்: முன் வினையின் பயனே மதியைக் கூட்டி வைத்தவன்: ''சென்னிமிசைக் கங்கையைச் செறிந்தார் போலும்,'' சுந்தரர்'' கங்கை ஆயிர முகமுடையாளைச் சூடினாய்''என்று முன் சமாதியடைந்து கண்டபரவையாரை ஒருமுகமாகவும் அத்தொடர்புடைய 'சிவம்' எனக் கண்டும் பின் எண்ணுமோர் 'முகம்'படைத்த சிவமாகச் 'சங்கிலியாரையும்' மணம்புரிய அருளிய பலவகையாகிய முகமுடையானே ஒற்றியூருடையான் என்று பாடுகிறார் காண்க.

கூடினுய்மலே மங்கையை நினையாய்
கங்கை யாயிர முகமுடை யாளெச்
சூடினுய் என்று சொல்லிய புக்கால்
தொழுப்பனே னுக்குஞ் சொல்லுமாமே
வாடி நீயிருந்தென் செய்தி மனமே
வருந்தி யானுற்ற வல்வினைக் கஞ்சி
ஓடி னுல்இனி யாவதொன் றுண்டே
ஒற்றி யூரெனு ஊருறைவானே (7-54-8)

யோகசுவாமிகளே ''போகமார் பூண்முலையாள் பொருந்திய பாகன் ஏக னேகனென்று மிமயமலே வாசனென்றும்'' (772) இலங்கை நாதா என்றும் செல்லப்பன் எனும் ஞானகுரவனே வணங்குகிறார் காண்க. அப்பர் சுவாமிகள் அவ்வுண்மையை விளக்க ''ஆயிர நதிகண்மொய்த்த'' என்றும், சேக்கிழார் ஒருமுகப்பட்ட அப்பர் மன நிலையை விளக்க ''கையார்ந்த திருத்தொண்டு'' என்றும் தருகிறார்கள் (772 இல் காண்க). இவை யாவும் திருவருள் ஆணையால் நிகழ்வன. தாயினும் இனியான், நாடக மேடையில் ''வினையின் நிகழ்வால் விளையும் வினைப்பயன்'' எனும் ஆளத்துக்கு நடனம் புரிவதில் ஆசை கொண்டவன், நாயினுங் கடையேனை ஆட்கொண்டவ்வாறு யாண்டருளி, நன்மையுந் தீமையுமில்லாத ஆயிரமுகமும் ஒரே முக முடையானுக்கினன்.

இத்தகைய திருத்தாண்டகத்தை புக்க திருத்தாண்டகம் என்று தாண்டவமணி திருநாவுக்கரசர் (அப்பர்) கூறுகிறார். புக்கமையைக் கூறும் திருத்தாண்டகம், ''நின்ற திருத்தாண்டகம்'' நிலையில் இன்பம் பெருக்கி பேரானந்தம் அனுபவிப்பது ('*Existence Bliss Absolute*') அப்பர் சுவாமிகள் ''திருச்சடை சேர்த்தியே பண்ணுமாகவே பாடும் நீர் எண்ணும் ஆயிரம் நாமம்'' என்று பாடுகிறார்.

வண்ணமாக முறுக்கிய வாசிகை
திண்ணமாகத் திருச்சடைச் சேர்த்தியே
பண்ணுமாகவே பாடும் பழனத்தான்
எண்ணும் நீர் அவையிர நாமமே. (5-35-3) (2)

840. எல்லாஞ் செயவல்ல சித்தர் போலும்
ஏக மனேகமாய் நின்றார் போலும்
இல்லார்க்குங் கற்றார்க்கு மருள்வார் போலும்
காமனையுங் காலனையுங் காய்ந்தார் போலும்

சொல்லாலே சும்மாவிருக்க வைத்தார் போலும்
சுருதிமுத லாகமங்கள் காணார் போலும்
எல்லாமா யல்லவுமா யிருந்தார் போலும்
என்னிதயம் நீங்காத விறைவர் தாமே.

மன்மதன் இறைவனை யணைந்து அவரைத்தம் பாசபந்தக் கயிற்றால் உண்டான மாயவலையில் கட்டமுயன்றபோது ஊனக்கண்ணிரண்டும் மூடியிருந்த எம்பெருமான் தன் ஞானக்கண்ணாகிய நெற்றிக் கண்ணைத் திறக்க அதற்கூடாக வெளிச்சென்ற அறிவுத்தீச் சுவாலையானது மன்மதனைப் பொடி சாம்பலாக எரித்தது; மார்க்கண்டேயனுயிரைக் கவரவந்த காலனை, இயமனை, அவர் நித்தம் பூசித்து வந்த சிவலிங்கப்பெருமான், அவருடைய இதயத்தே சிவலிங்க வடிவாக அமைந்துள்ளவன், அந்த இயமனைக் காலால் காய்ந்தார்(746); ஒப்பில்லாத ஒரு சொல் 'சிவசிவ' எனுந் தமிழ் மாமறை தரும் 'ஓம்' எனும் ஒருசொல்; அதே 'சிவன்செயல்' எனும் மெய்ப்பொருளானவன்; (9, 765) எப்பொருளிலும் வியாபியாக இயங்கியும் எல்லாமாயும் அவற்றின் இருவினையாலும் பாதிக்கப்படாதே அலைமாயமிருப்பவர்(839) ஓசைவடிவான அம்மையையும் அவளைத் தம் இடப்பாகமாகக் கொண்ட உயிர்க்குயிராம் நாதனையும் சிவலிங்கப் பெருமானைத் தம்மகத்தேகண்ட மெய்யன்பன் ஊனை எழுத்து 'ஒரு சொல்லே' அகத்தே கண்டு சும்மா இருப்பவன்; நிஷ்காமிய கர்மம் புரிபவன்; தனக்கென ஓர்கர்மமும் புரியாதவன்; முருகனே வள்ளியாக வள்ளி கர்மம் புரிந்து முருகன்கழல் சேர்ந்தாள்; சுருதி ஆகமநூல்கள் போதிக்கும் உண்மைகளை, யெல்லாவற்றையும்தம் அறிவுப்பெருவெளியில் கண்டுணர்பவர்; ஞானசம்பந்தர் தருப "பருவில் குறவர் புனத்திற் குவித்த பருமாமணிமுத்தம்" எனப்படும் 'ஞானப் பொருட்குவியல்' தம் அகத்தே ஊறு பொருளாகக் கண்டவர்; தேறலைத் தெளிவைத் தெளிவாய்த்தேர் ஊறலைத் தம்முள்ளத்தே கனட அம்மெய்யன்பர்; வேதாகமங்களைக் கற்றுணர வேண்டும், கல்லாது மூடராவார் எனும் தப்பிதம் வேருடன் மறையும்: கல்லார்க்கும் கற்றூர்க்கும் வேதகீதத்தனை விண்ணவர் தம்பிரான் அவர் அகத்தே (801) நின்று சுருதி ஆகம நூல் தாம் வேண்டி நில்லாதே, காணுதே, வேதனுக(833) விளங்குபவன்; அத்தன்மையனுய்தையல் தனக்குத் தன்பாதியுடலை கொடுத்த வேதன்(773) குண்டலி ஆறு மூலத்தியை எழுப்ப அவனே சர்வதத்துவாதிபதியாக, சித்து வல்லமையுடன் விளங்கும் எம்பிரானுக விளங்குவான்.

நிஷ்டானுபூதியில் ஒருமொழியின் உண்மைகளைக்காண
ஒருமொழி யாலே சுருதியா கமநூ
லுயர்புரா ணமுமெலா மொழியும்
ஒருமொழி யாலே சரிதைநற் கிரியா
போகபா வனையெலா மொழியும்
ஒருமொழி யாலேயண்டபூ தங்க
ளொடுங்கிடும் தன்னிலே தோன்றும்
'ஒருமொழி சும்மா விருத்தலாம்' அதனுல்
ஒப்பிலாச் சிவபத மடைவார்.

(3)

841. சிரித்துப் புரமூன்றுஞ் செற்றூர் போலும்
திருவெல்லா மொருங்கே திரண்டார் போலும்
அரிக்கு மயனுக்கு மெட்டார் போலும்
ஆவ தழிவ தில்லார் போலும்
கரிக்குரு விக்கரு ளீந்தார் போலும்
காட்டானைத் தோலுரித்து மகிழ்ந்தார் போலும்
மரித்தல் பிறத்த லில்லார் போலும்
மன்னியெம் முள்ளத்தி னுண்ணின் றூரே.

நாடக மேடையில் இறைவன் எழுதிய உலகியல் நாடகத்தைத் திறம்பட நடிக்கும் மெய்யன்பன் சாக்ஷி ஆமோதிப்பவன் தாங்கு வோன் அநுபவிப்பவன் எனும் முதன் நான்கு பதவிகளான ஆறு படிகளிலும் (293) நன்கு திறம்படத் தம்மைக் காட்டும் பாசபந்தக் கயிறுஅற மாயையுலகையும் தம்வினைப்பயனையும் உற்றுநோக்கி, 'சிவசிவ' எனும் மாமறைதரும் 'சிவன்செயல்' எனும் மெய்ப் பொருளானவன் (765) தம் உள்ளத்தே தோன்றச் சிரித்தார்; மாயையும் பாசபந்தக் கயிறும் இருவினையும் மாண்டுபோயின; முப்புரமுஞ் செற்றனர் (812). புத்தியாகிய வாய்க்கால் வழியே சிவானந்த வெள்ளம் பெருக முக்குணமும் பாழாக இறைவன் எண்குணங்கள் ஒருங்கே திரண்ட மோனகுரு இருதயத்தே உருவெடுக்கத் தில்லைத் தரிசனங் கண்ட மெய்யன்பன் தோற்றுவான். பிரமா விஷ்ணு தம் பெருமையில் தம்மை மறந்து நானெனும் ஆணவத்தினுல் அவனைப் புறத்தே காண அன்னப் பறவையாகவும் பன்றி உருவமாகவும் அலைந்து காணுது திரும்பினர். (150; 246). இந்த அயன்மால் ஆணவமலம் பிடித்து அவர்கள் காட்டானை போல, மாயக்காட்டின் யானைபோல் விளங்க; அவர்களைப் பிடித்த ஆணவம் எரிய பக்தியெனும் கொடியைத் திட

சித்தம் எனும் கொம்பரில் படரவைத்தும் 'சிவன்செயல்' எனும் அறிவு (765) கொண்டு, அந்த யந்திரத்தினுலே ஆணவம் எனும் யானையைத் தோலுரித்தும், பக்தி எனும் கயிற்றினுல் திருவடிப்பேறு எனும் மலர்ந்த எம்பெருமான் பாதங்களில் கட்டி, மகிழ்ந்தார் போலும்;

காட்டானைக்கு நேர்விரோதமானது கரிக்குருவி. புராணம் கரிக் குருவி ஒன்று எல்லாப் பறவைகளாலுந் துன்புறுத்தப்பட்டு இரத்தஞ் சொரியக் காட்டோரமாக ஒருவழியில் மரத்தின்மேல் தனித்திருந் தது ஒரு சந்நியாசி கீழே இருந்தவர், சிலருக்கு 'மதுரை, சொக்க லிங்கம், பொற்றுமரை வாவி, இம்மூன்றும் தலச் சிறப்பும், மூர்த் தச் சிறப்பும் தீர்த்தச் சிறப்பும் முறையே யுடையனவாய் விளங்கும், மதுரை சோமசுந்தரப் பெருமான் மிகவும் சிறப்பு வாய்ந்தவர்'' என்று போதித்தார். கரிக்குருவி உடனே மதுரைச் சொக்கநாதனைத் தரிசித்து மார்க்கண்டேயர் பெற்ற மிருத்தியுஞ்சய மந்திரத்தை உப தேசிக்கப் பெற்றது. ''பறவைகளுக்கெல்லாம் வலியையாகக் கடவாய்'' என்றும் வரம் பெற்று வாழ்ந்தது.

இவ்வாறு அம்மையப்பரைத் தம் தாயாகக் கண்டு தாயுங் குழந் தையும்போல் உலகினையுந் தன்னையுங் கண்டு பிறப்பை யொழிக்கும் எம்பெருமான் உள்ளங் கொண்டாரே. (4)

842. மண்தீகால் வானமெலா மானுர் போலும்
மாசில்லாச் சோதியாய் நின்ருர் போலும்
கண்முதலா மிந்திரிய மானுர் போலும்
காண்பவனுங் காட்சியு மானுர் போலும்
எண்ணில் சமயங்க ளானுர் போலும்
என்னையென்னு லறிவித்த இறைவர் போலும்
மண்ணிலிலிப் பிறவாமற் காத்தார் போலும்
மன்னியெம் முள்ளத்தி னுண்ணின் ருரே.

கண்முதற் பொருட்களான மாயாகாரியப் பருநிலைப் பொருட்க ளாம் மண்ணுலகக் காட்சியும்; நுண்வெளியில் நுண்பொருளான நிலம் நீர் தீ கால் வானமெலா மாயும் நீ அந்த அருவுருவாம் சதா சிவனுய், அணுவுள் அவனும் அவனுள் அணுவும் கணுவற நின்று கலப்பதுணரார் இங்கேயிலியீசனுய், ஞானத்துள்ளே அறிவுப் பெரு வெளியில் உன்னுணங் கர்ப்பூரவுண்டைபோலே கரைய மின்னும் ஆனந்த விளக்கே பராபரமே என்னும் நற்சிவனும் ஜோதியாயும் நின்ருய்; மெய்யன்பன் அகத்தே சித்தாகாசத்தே தோன்றும் ஜோதி யில் காண்பானுகிய எளியேனும் அம்மையப்பராகிய உலகும் ஜோதி யில் ஒன்றுபட்டே (819; 798) காட்சிதருவன்; சொல்லுதற் கரிய

நெறிகளாகிய சமயங்களெல்லாம் தாங்கள் தாங்கள் கைக்கொண்ட தெய்வமே தெய்வமென்று வல்வழக்கிட்டு நிலைநிறுத்தி நிற்பர். அவ்வவை எல்லாவற்றிற்கும், மும்மூர்த்திகளுக்கும் மூர்த்தியாக விளங்கும், எண்ணங்கள் தாம் நீயே யென்றும், நின்றாய்; இவையெல்லாம் நீயே யென்றும் (முன்விளக்கம்) என்னுள் நின்றியங்கும் ஆத்மனே அனைத்துயிரிலும் உயிர்க்குயிராம் நாதனாக அவ்வுயிராய் நீயே விளங்குகின்றாய்; தாயுமானவர் இவற்றை எந்நாட் கண்ணி (15 - 14)இல்

"அவ்வுயிர்போல் எவ்வுயிரும் ஆனபிரான் தன்னடிமை
எவ்வுயிரு மென்று பணியாளு செய்வ தெந்நாளோ?

எனப்பாடுகிறார். என்னை யென்னுள் அறிவித்த எம்பெருமான், அவ்வுயிர்போல், தன்னடிமை எவ்வுயிருமென்று பணி செய்து பிறப்பறுத்தேன் யான்; யானும் அம்மையப்பராகிய இவ்வுலகும் குழந்தையும் தாயும் போல வாழ்ந்து பிறப்பறுத்தேன்; அவனே அந்த நாதனே என் உள்ளங் குடிகொண்டான். (5)

843. மந்திரமுந் தந்திரமும் ஆனார் போலும்
மறைநான்குஞ் சிவாகமமும் ஆனார் போலும்
சந்திரனுஞ் சூரியனும் ஆனார் போலும்
தந்தைதாய் தமர்மைந்தர் ஆனார் போலும்
இந்திரனுந் தேவர்களும் ஆனார் போலும்
இருடிகணஞ் சிவகுழாம் ஆனார் போலும்
வெந்திறலும் விளையாட்டும் ஆனார் போலும்
விரிபொழில்சூழ் யாழ்ப்பாணங் கோயி லாரே.

மந்திரம் = சிவகுருவால் கொடுக்கப்படும் ஒரு சொல்; இறைவனால் கொடுக்கப்படும் சொல்; தந்திரம் = வழிபாட்டுக்குரியநூல்· மந்திரமும், வழிபாட்டு முறைநூல்களாகிய ஆகமங்களும், மறை நான்கும் ஆனார் போலும்; "ஓம்" எனும் ஒரு 'சொல்' உண்மையை உண்ணின்று விளக்கியே எப்பொருளாயும் விளங்குபவர். "ஒரு மொழியே பல மொழிக்கு மிடங்கொடுக்கும்" என்று தாயுமானவர் இவற்றைக் கூறுகிறார். மந்திரமுந் தந்திரமுந் தாமே போலும்" என்றும் திருநாவுக்கரசரும் (6- 2 - 3)இல் கூறுகிறார். சூரியன், சந்திரன், தாய் தந்தை தமர் மைந்தர், இந்திரன் பிரமா விஷ்ணு உருத்திரன் முதலிய தேவர்கள் எல்லாமாயும் நீயே தோன்றுபவன்; நீயே இவையெல்லாமாய் விளங்குகின்றாய் எனுமுண்மை விளங்கத் "தானத்துள்ளே சதாசிவனுயிடும்" எனும் 'ஓம்' எனும் உண்மையைத் தருகிறார். (842); ஞானத்துள்ளே, அறிவுப் பெருவெளியாகிய சித்தாகாசத்தின்கண், வெந்திறலுடன் நுண்பொருளாக "அணுவுள் அவனும்

அவனுள் அணுவும் கணுவற நின்று கலப்பதுணரார்,'' அருவுருவாம் சதாசிவன் என்றும், நற்சிவமாம் ஜோதியில் ''இணையிலியீசனெங்கு மாகித் தணிவறநின்றுன்'' என்பதும் நீயே. இவற்றுல் தில்லை நடனங் காட்டினர். நடனங் காணும் இருடிகுழமும் சிவகுழாமும், அவரே உண்ணின்று இயக்குந் தன்மையாலும், பின் ஒன்றுகுந் தன்மையாலும் அவரேயானர்; அவரே செல்லப்பாச் சுவாமியாராக உருத்தாங்கி எழுந்தருளி யாழ்ப்பாணத்தைத் தம் கோயிலாக்கொண்டார்.

(6)

844. பொன்போலுந் திருமேனி யுடையார் போலும்
பூதகணஞ் சூழ வருவார் போலும்
மின்போலும் இடையுமையாள் பாகர் போலும்
விடையேறிப் பலிகொள்ளும் விகிதர் போலும்
என்போலும் அடியார்மேல் அன்பர் போலும்
எப்பொருளுந் தாமாய் இருப்பர் போலும்
அன்பில்லார் தம்மை யடையார் போலும்
அணிபொழில்சூழ் இலங்கைநகர் அத்த ஞரே.

மனத்தினில் மாசாகிய வஞ்சனையும் அழுக்காறும், பொய்களவு கொலை முதலிய தாமச குணங்கள், மேலிட்ட மானிடராய் ஊழ்வினையின் பயனைச் சற்றும் இறைவனை நினையாதே அலையும் அன்பில்லாரை இறைவனுந்தான் கவனியாதிருப்பர் போலும்; தம்பால் அன்புபூண்டு நிஷ்காமிய கர்மமே செய்தும் என்போல் 'சிவசிவ' எனும் மாமறை தரும் 'சிவன்செயல்' எனும் மெய்ப்பொருளான வனை (765) நன்குணர்ந்த மெய்யன்பர் உள்ளமே தம் ஊர்தியாகக் கொண்டு சிவதொண்டாகவே (291; 492) அன்பர் பணிகொள்ள விடையேறிப் பலிகொள்ளும் விகிதர் போலும்; உயிரில் பொருள் உயிருள் பொருள் எப்பொருளையும் தாமே உண்ணின்று, உடலையும் வேருயும் இயங்குந் தன்மையராய் எப்பொருளுந் தாமாய் இருப்பர்போலும்; மெய்யன்பன் அகத்தே அந்த உலகியற் பொருட்களெல்லாம் பருநிலையாகிய பொருட்தன்மை நீங்கி நுண்பொருளாகிய நிலம் நீர் தீ கால் வான் முதலிய ஐம்பூதங்களுமாகி ''அணுவுள் அவனும் அவனுள் அணுவும் கணுவற நின்று கலப்ப துணரார்'' எனும் பொருள் தரும் சுவை பொருந்திய ஆடல் காட்டும் விகிர்தனர் போலும் அந்த மெய்யன்பன் உள்ளத்தே ஞானக்கதிர் பரப்பும் சூரியன் உதயமாக, அவ்வெளிச்சத்தால், செம்மேனி யெம்பிரானை பொன்போலும் மேனியுடையான், பூதகணஞ் சூழ எழுந்தருளுவன் போலும்; ஆடல் காட்டும் விகிர்தனர், ஓசைவடிவினளான அம்மையின் திருநடனம், தில்லை நடனம் காட்டியே, மலரும் பூக்கள் பரவும் பொழில் சூழ் இலங்கை நகர் அப்பனே, என் உள்ளங் கொண்டார்.

(7)

150 திருத்தாண்டகம் II

845. இருநிலமே டிரவிமதி யாயி னுன்காண்
என்னிதயம் நீங்காத இறைய வன்காண்
அரும்பொன்காண் அம்மைகாண் அப்பன் முன்காண்
அன்றுமின்று மென்றுமப் படியுள் ளான்காண்
தருமமே யுருவாகச் சமைந்த வன்காண்
தன்னைப்பா ரில்லாத தத்து வன்காண்
அருவன்கா ணுருவன்கா ணருவுருவ மாய
அன்பன்கா ணவனுயிருக் குயிரா னானே.

முன் பாடிய ஏழு பாட்டுக்களும் புக்கு திருத்தாண்டகம் தில்லையில் புகுதலைக் குறிக்கிறதாம்: 'உன்னுமனங் கர்ப்பூரவுண்டை போலே கரைய மின்னும் ஆனந்த விளக்கே' என்று தாயுமானவர் கூறுவதை அடுத்து, 'மனத்தினில் அருள்ரூபம் எனப்படும் அருவுருவாம் சதாசிவன், நந்தி என்றும் பலவகைத்தாயும் அழைக்கப்படும் கலைவடிவான உலகுந்தாணுவ்ஒன்றுபட்ட, அவற்றையேதம்மனமெனக் கொண்டும், அந்த மனம் அறிவுப் பெருவெளியில் சித்தாகாசத்தின் கண் கரைய, ஆனந்த அறிவே ஜோதியாக விளங்கும் தில்லை நடனங் காணலாம் என்றே பொருள் கொள்ளலாம். அத்தத் திருத்தாண்டவனுடைய நடனத்தை விபரமாய் புக்குதிருத்தாண்டகத்தில் கூறுவர். பின்னும் ஆனந்தமய கோசத்தில் திருவைந்தெழுத்துச் ஜோதி எனும் வெறும் அறிவுப் பெருவெளியாம் ஜோதியில் ஒன்றுமற்றே புருடன் (65) கிடப்பதாக ஸ்ரீ இராமகிருஷ்ணர் தருகிறார். மீண்டும் மனம் உயிர்த்து மு கண்ட தாண்டவனே பாசபந்தக் கயிறு எரிந்த நிலையில் விஞ்ஞானமய கோசத்தில் கண்டு பேரானந்தங் கொண்டாடும் நிலையை உணர்த்துவதே நின்ற திருத்தாண்டகம் என்று கொள்ளலாம். இந்த நிலையை ஆங்கிலத்தில் (*Existence Bliss Absolute*) என்றே கூறலாம்.

தாண்டகவேந்தர் திருநாவுக்கரசர் ஆருந் திருமுறையில் தாண்டகமே பாடியுள்ளார். அவர் (6-2-1) இரண்டாம் பதிகத்தில் புக்க திருத்தாண்டகம்என்னும் தலையங்கத்தில் முதல் பாட்டுகடைசி இரண்டு வரிகளிலும் ''பொங்கு வெண்ணீறணிந்து பூதஞ் சூழப் புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே'' என்று முதல் பாட்டை முடிக்கிறார். யோகசுவாமிகளும் அதேபோல, ''பொன்போலுந் திருமேனியுடையார் போலும் பூதகணஞ்சூழ வருவார்போலும் மின்போலும் இடையுமையாள்பாகர் போலும் விடையேறிப் பலிகொள்ளுஞ் விகிதர் போலும்'' என்று அவற்றைக் குறித்துப் பாடுகிறார் (844) காண்க; இருவரும் தில்லை நடனத்தில் புகுதலைக் குறிக்கிறார்கள்.

அப்பர் சுவாமிகளே(6-94-1)நின்ற திருத்தாண்டகம் என்னுந் தலையங்கத்தில் முதலாம் பாட்டில் ''இருநிலனாய்த்தீயாகி நீருமாகி' என்று தொடங்கி பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி நெருநலையாய் இன்றுகி நாளையாகி நிமிர் புன்சடைகள் நின்றவாறே'' என்கிறார். யோகசுவாமிகளும் இத்திருத்தாண்டகம் முதல் பாட்டில் ''இருநிலனே டிரவிமதியாயினன்'' என்று தொடங்கி

''தன்னெப்பா ரில்லாத தத்துவன்காண் அருவன்காணுருவன்கா
ணருவுருவமாய அன்பன் காணவனுயிருக் குயிராஞனே''

என்று முடிக்கிறார். இருவரும் முன் தம்மனத்தின் கண்ணின்ற உருவம் திருப்பி அமைந்து தாமேயாகி உயிருக்குயிர் கொடுத்துத் தாமேயாகி, ஐம்பூதம், சூரியன், சந்திரன் முதலியன அமைந்த உலகத்தை யமைக்கிறார்கள்.

அருணை வடிவேல் முதலியாரும் ''இறைவன் உலகமாய் நின்ற நிலையினை வகுத்துக் கூறுதலின் இத்திருப்பதிகம் நின்ற திருத்தாண்டகம் எனப் பெயர் பெற்றது'' என்கிறார் ''புக்குதிருத்தாண்டகம் புக்கமையைக் கூறுந் திருத்தாண்டகம்'' என்றும் முன் கூறியுள்ளார்-

உயிரில் பொருள் உயிருள் பொருள் எப்பொருளிலும் உயிர்க்குயிராம் நாதனே உண்ணின்றும் வேறுகவும் இயங்குகிறான். ஈற்றில் ஐம்பூதங்களாலுண்டாய உடம்பும் 'அவனே யென்னு' முணர்ச்சிததும் பவே 'எல்லாமா யல்லவுமாய்' என்று துதிப்பார்கள். திருமூலர் ''அணுவுள் அவனும் அவனுள் அணுவும் கணுவற நின்று கலப்பது ணரார் இணையிலியீசன்'' என்று தருகிறார். இந் நுண்பொருளாய ஐம்பூதம் அந்தக்கரணங்கள் கொண்ட இரு நிலனையும், சூரியனுகிய உயிர்க்குயிராம் நாதனையும், அவனுடைய ஒளி கொண்டு இயங்கும் சத்திவடிவானஉலகு, சந்திரனையும், ஒன்று பட்ட அந்த ''மின்போலும் இடையுமையாள் பாகர், விடையேறிப் பலிகொள்ளும் விகிர்தர்'',(844) மறைந்த உணர்ச்சிகள் பின்னும் உயிர் பெற்றுத் தோனறக் காணப்படுகிறார் (705) அந்த அறிவு வடிவான ஜோதி என்னிதயத்தைவிட்டு நீங்காது; பொன்னெத்த அம்மையப்பரான உலகமே அந்த உலகம். அன்றும் இன்றும் என்றும் தாயின் மடிமீது சஞ்சலமற்று வாழும் குழந்தைபோலே தம்மைக் காண்கிறார். அதே பொருளையே அப்பர் சுவாமிகளும் (6—94—1) இல்

''இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமான னாயெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிருகி
ஆகாச மாயட்ட மூர்த்தியாகி

பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
'பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி'
நெருநலையாய் இன்றுகி நாளையாகி
நிமிர் புன்சடை யடிகள் நின்றவாறே''

என்றும் 'அருநிலைய திங்கள்' என்றும் அளவில்லாத சந்திரன், ஆடல் புரியும் அம்மை என்றும், சொக்கனுதனை ஞாயிறு என்றுங் கொண்டு, பாடியுள்ளார்.

அறவழிநின்று தர்மம் புரிந்து (492) 'நான்' எனும் ஆணவ முனைப்பை வேருடனே சுட்டெரித்தவன்; தொல்லை வல்வினை மலையி டுக்குள்ளாக மறுபக்கம் சென்றவேர் போன்றது; அதைத் திடசித் தம் எனுங் கொம்பரில் படர்ந்த பக்தி எனுங் கொடியைக் கயிறுக வும், 'சிவசிவ' எனும் மாமறை தரும் 'சிவன் செயல்' என்னும் உண்மைப் பொருளானவன் (765), அறிவு, எனும் யந்திரத்திலுலும் இறைவனுடைய பாதங்களில் கட்டிவைக்க வேண்டும். அத்தகைய முப்பதமுங் கடந்த ஞானபதம் (356) அடைந்த தத்துவாதீதன் காண்; பொன்னம்பலத்தே வினைப்பயனெனும் அருவாம் ருபமாக வும், அருவுருவாம்சதாசிவனுகவும்பொற்றாணுகவும்உருவமாம்கூத்தப் பெருமானுகவும் எப்பொருளிலும் வியாபித்திருக்கும் நம்மிறைவனை, அம்மையப்பரை (இப்பாட்டில் முன் கூறிய முழுமையும் ஒன்றே யமைய) எம் முன்னே உயிர்க்குயிராம் நாதனையே காண். (1)

846. பெருமான்காண் பிறப்பிறப்பில் லாத வன்காண்
பேச்சிறந்த பெரியான்காண் பெருமுடியு மடியுங்
கருமாலும் நான்முகனு மறியா தான்காண்
கங்கைமதி யணிந்தான்காண் கசிந்து போற்றும்
திருவாளர் சித்தத்துட் டித்திப் பான்காண்
திருவரையை யெடுத்ததிற லரக்கன் றன்னைப்
பெருவிரலா லடர்த்தபின் னருள்செய் தான்காண்
பிஞ்ஞகன்காண் பிரியாதென் னுள்ளத் தானே.

தேசவெல்லையோ காலவெல்லையோ இல்லாது எப்பொருளிலும் எக்காலத்தும் வியாபித்திருப்பதால் பிறப்பிறப்பில்லாத பெருமான் காண்; பிராணவாயு நெஞ்சத்துள் ஒடுங்க உயிராக்காற்றுகிய பிராண னும், சித்தமாகிய எண்ணமும் ஆளாகிய புருடனும் மூன்றுமே, வெளியுலகம் மறைய, தன்னகத்தே ஒடுங்கும் நந்நிலை; [முதல்வரி தரும் அந்நிலை தொடர] பேச்சற்ற நந்நிலை; பிரமா அன்னப்பறவை யாகப் பறந்தும், விஷ்ணு பன்றிரூபமாக நிலத்தைத் துளைத்துச் சென்றுங் காணுணுத (849) பெருமுடியும் அடியும் உடைய ஜோதி யாகவும் மெய்யன்பன் அகத்தே தோன்றியும் அவனுல் காணப்

படும் அந்நிலை; 'மெய்யன்பன்' பொன்மேனியுடையான் என்றும் ஆணவ முனைப்புடைய மனம் அடங்காத குணத்தை விளக்க 'கரு' மாலும் என்றுந் தருகிறார். இங்கள் கங்கை யுடையோனுய் (584) மெய்யன்பனுடைய அகத்தே இத்திப்பான் காண்; இவங்கை மன்னன் இராவணன் கயிலாய மலையை பெடுக்கப் பேர்த்தபோது பெருவிரலா லூன்றி அவன் தத்தளிக்கவும், அவன் மதமடங்கியபின் அவனுக்கு அருள்காட்டி அவனுள்ளத்திலேயே கயிலாயநாதன், தையல் தனக் குப் பாதியுடல் கொடுத்த (773) அந்த இமயமலை வாசன் உள்ளே நின்று நடனம் புரிதலைக்காட்டினன். அந்தப் பிறப்பிலியாகி விளங்கும் எம்பெருமானே யென்னுள்ளங் குடிகொண்டான். (2)

847. நம்பன்காண் நரியெல்லாம் பரிசெய் தான்காண்
ஞாலமுதற் றத்துவங் களாயி னான்காண்
செம்பொனம் பலத்திலே யாடு வான்காண்
திகழ்சூலப் படையன்காண் திருநீற் றான்காண்
உம்பரெல்லாம் போற்றவிடை யூரு வான்காண்
ஒருவன்காண் உள்ளத்தி னுள்ளே நின்ற
இப்பருளார் காதலிக்கு மெளியனர்க் கென்று
மெளியான்கா ணவனென்ற னிதயத் தானே.

மாயக் காட்டினில் ஐம்புல வேடரும் வேட்டையில் ஈடுபட்டு நிற்றின்ப வாழ்வில் இன்புற்றிருக்க, அந்த நரிபோலும் இந்திரியக் கள்வரை அடக்கி இறைவன் தொண்டில் ஈடுபடுத்த அவர்கள் தாமா கவே இறைவனிடம் தம்மைக் கொண்டு செல்லும் குதிரைகளாக (730) அவனே நயந்து வந்தான் காண்; அறநிலை நின்று தர்மம் புரிய அம்மையப்பரான உலகமும் அவற்றையாளும் தத்துவங்களுங் கொண்டே தத்துவாதீதனுக விளங்குவான் காண்; தில்லை நடனம் செம்பொன்னம்பலத்தே யாடுவான் காண்; (முன்விளக்கம்). சூலப் படை (768) யான்காண்; அஞ்ஞான இருள் நீங்க மாயையைப் பொடியாகச் சுட்டெரித்த நீற்றை உடம்புமுழுவதும் பூசியே, ஒவ் வொரு அங்கமும் சிவன் செயலின் உண்மை விளங்க முக்குணமும் பாழாக எண்குணத்தானுக விளங்குவான் காண்; அறிஞர்களாகிய அடியாருள்ளத்தே அவனே மதியாக நின்று இறைவன் தொண்டில் ஈடுபடுத்தி அவர்கள் அவனைப் போற்றித் தொழ அருளுவன் காண்; அருவுருவாம் சதாசிவனை உம்பர் தொழுதேத்த உருவாம் கூத்தப் பெருமானைத் தொழுதேத்தும் இம்பர், கோயில்களிலும் தம் இல்லங் களிலும் தம் சிலைகள் கொண்டும் படங்கள் கொண்டும் பூசித்துத் தொழும் அவர் உள்ளத்தே அவருடைய காதற் பொருளாக விளங் கும் எளியார்க் கெளியனுகிய எம்பெருமானே என் உள்ளங் கொண் டான். (3)

848. பண்ணவன்கா ணிசையவன்காண் பரவு வார்கள்
கண்ணவன்காண் கங்களள வேடத் தான்காண்
எண்ணவன்காண் எழுத்தவன்காண் எங்கு மான
விண்ணவன்காண் விளக்குமதிச் சென்னி யன்காண்
பெண்ணவன்காண் ஆணவன்காண் பெருமான்
தாண்காண்
மண்ணவன்காண் மாருதம்வா னுயி ரன்காண்
அண்ணமையன்காண் சேய்மையன்காண் அன்று
மின்றும்
உண்மையன்காண் என்னுயிருக் குயிரா னானே.

நாடக மேடையில் நடிகர்களுடைய நடனத்தை ரசித்தால் உலகியல் வாழ்க்கையில் உமையாள் ஓசைவடிவான நடனத்தை ஓரளவு உணர்ந்தறியலாம். இந்த ஓசையையே இசையாகக் கொண்டு தம் பாட்டுக்குப் பண்ணமைக்கிறார் இறைவன் (795), நாடக மேடையில் நாடகத்தை ரசிப்பதுபோல், பாசபந்தக் கயிறு எரிந்த மெய்யடியார், தம் ஊனக்கண்ணிரண்டு முறங்க ஞானக்கண் டிறக்க, அந்த ஞானக் கண்ணூடாகவே இறைவன் நாடகத்தை, ஓசைவடிவான அம்மையையும் பண்ணியற்றிப் பாடும் இறைவனையுங் கண்டு பரவி ஏத்துவார்கள். எல்லாம் வகுத்தவன் வினைமுதலாம் முழுமுதல்வனே; எலும்புக் கூட்டையே தலையிலணிந்தவன், நடனம் புரிபவன்; மரணம் பிறப்பு இறப்பு துன்பம் இன்பம் இவற்றைக் காட்டுவன இவை, [கங்காளம் = எலும்புக் கூடு]. எண்ணும் எழுத்தும் அவனே; விண்ணுலகமும் விண்ணவனும் அவனே (796). சடாமுடியில் சந்திரனையுடையார் (584); அம்மைவடிவாகவும் உலகினை இயக்கும் இறைவனையும் எங்கும் வியாபித்திருக்கும் பெருமானேயவன். விண்ணுலகில் அணுக்களாகவும் அவற்றில் விளங்கும். இறைவனாகவும், நுண்பொருட்களாகவும், பருநிலையில் மண்ணுலகில் உயிரில் பொருள் உயிருள் பொருள் எல்லாமாயும், அவற்றில் மாருதம் போன்ற நடன ஓசையுமாயுள்ளான் காண். மோட்ச வீட்டை யளிப்பதும் அஞ்ஞான இருள் நீங்கி செம்மேனியுடையானும், அன்றும் இன்றும் என்றும் ஒரே படித்தாய் உண்மை முழுதுமாய், எம்முள்ளேயே அவன் என்றுமிருப்பதால், அண்ணமையனும் விளங்கும் எம்பெருமானே, என்னுயிர்க் குயிரானேயவன். (4)

849. வடிவுசேர் மழுவேந்தி யாடு வான்காண்
மாணிக்க வாசகனுக் கருள்செய் தான்காண்
கடிகமழுங் கொன்றையங் கண்ணி யன்காண்
கரும்புதரு சுவையெனக்குக் காட்டி னான்காண்

படிபுகழும் பாசுபத வேடத் தான்காண்
பகலோ டிராவறியாப் பண்பி னான்காண்
நெடியமா லயன்றேட நீண்டு நின்ற
நிறைசோதிப் பிழம்பன்காண் நெஞ்சுள் ளானே.

படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் எனும் ஐந் தொழிலும், எண்குணமும் எல்லாமும் ஒருங்கே இழைத்தும் சேர்த் தும் செயல்புரியும் மழுப்படை. அதன் வடிவை வர்ணிக்க முயலுதல் பயனில்லை. உலகியல் நாடகத்தில் இன்புறும், பாசபந்தக் கயிறு எரிந்த மெய்யன்பன், இறைவனுடைய வடிவுசேர் மழுவேந்தியாடும் ஆடலில் இன்புறுகிறான். மாணிக்கவாசகருக்கு அருள் கொடுத்தவன்; வெப்பம் மிகுந்த நிலங்களிலும் பூக்கும் கொன்றை; அந்தக் கண் ணியைக் கல்லால நீழலில் உண்டான மௌனமே உருவான அக முடையானுக்கு ஒப்பிடலாம். அந்தக் கண்ணி மலர்வது போல் மெய்யன்பனுடைய அகம், மாணிக்கவாசகருடைய அகம் மலர்ந்தது போல், ஜோதிரூபத்தைத் தரிசிக்கும். ஜோதியில் தன்னைக் கண்ட எளியேன் இறைவன் ஆடலைக் கண்டு, தித்திக்குங் கரும்புபோல் அனைத ருசிக்க, அருளினன்; இயமம் நியமம் கையாண்டு பொறை நிலையெய்தி இன்புறுவன். தொடர்பாயுள்ள பொருளில் கொழுத்து விளங்கும் நினைவில் இன்புற்றும் நிட்டைகூடியே தில்லைத்தரிசனங் கண்டும் இன்புறுவன். பின் பாசபந்தக் கயிறு எரிந்து கட்டுந்தன்மை யற்றதாய் உலகியல் வாழ்க்கையில் அம்மையப்பரான உலகும் அவ னும் ஒன்று பட்டுத் தாயும் குழந்தையும் போலின்புறுவன். மாயை மயக்கத்தில் இறைவனை மறந்துற் றிரவில் சூரியனைக் காணுதிருப்பது போன்றும், பின் ஞான உணர்ச்சி ததும்பி 'சிவன் செயலே' எல்லாம் எனும் உண்மை கண்டு, பகலில் தாமிருப்பதென எண்ணுமலும், என்றும் ஒருபடித்தாய் பாசபந்தக் கயிறு எரிந்தும் மாயை மயக்காதும் என்றும் சூரியனுடைய வெளிச்சத்தில் பகலோடிரவறியாப் பண்பினன் காண்; அதில் ஓர் இன்பங் கண்டும்; அயனுக்கும் மாலுக்கும் முன் தோன்றிய சிவலிங்க வடிவமான ஜோதிப்பிழம்பம் ஆதியும் அந்த முமற்றது; அதில் ஓர் இன்பங்கண்டும்; எந்நிலையிலும் எக்கோலத்தி லும் ''சிவன் செயல்'' எனும் மெய்ப்பொருளானவனே அவன்; அவனே பாசுபதம் பெற்றவன். ஒவ்வொரு படியிலும் இன்பம் அநுப விப்பவன். அவனே, ஆதியுமந்தமுமில்லா சிவலிங்க வடிவான ஜோதிப் பிழம்பானவன், மார்க்கண்டனைப் பிறப்பிலியாக்கிய ஜோதிப்பிழம்ப மானவன், என் நெஞ்சுள்ளானே. (5)

151. திருத்தாண்டகம் வேறு

850. நீறணிந்த திருமேனி பொலிந்து தோன்றும்
நெற்றிமேற் கண்தோன்றும் மதியந் தோன்றும்
ஆறணிந்த சடைதோன்றும் அம்மை தோன்றும்
அரைக்கசைத்த புலியாடை அசைந்து தோன்றும்
ஏறமர்ந்த எழில்தோன்றும் இசையுந் தோன்றும்
எடுத்ததிருப் பதந்தோன்றும் மழுமான்
தோன்றும்
பேறளிக்குந் திருக்கரத்தின் பெருமை தோன்றும்
பிரியாமல் என்னையாள் பெருமா னுர்க்கே.

[முன் விளக்கம் காண்க]. நீறணிந்த செம்மேனி: நெற்றிமேல் ஞானக்கண்; கங்கையுந் திங்களும் சடையில்; அரையில், தில்லைத் தரிசனத்தின் பின் தோன்றும் ஆணவமுனைப்பைச் சுட்டெரித்து, அந்தப் புலியின்தோலை அணிந்துள்ளார்!(168)இசையும் பண்ணும் போன்று அம்மையின் நடனந் தோன்றும்; எல்லா உயிர்களிலும் அம்மையின் ஓசை வடிவமான நடனம். வினைமுதலாம் முதல்வன் உண்ணின்று வினைப்பயனுக் கேற்றவாறு தொழிலில் தாமே இயக்கியும் அம்மை வடிவாக இயங்கியும் அருளுவர். விடையேறியாகத் தானே ஏறமர்ந்த எழிலையும், அதனுல் உண்டான ஓசைவடிவின் நடனத்தையும் தம் அறிவினுல் காண்பிப்பார். மழுப்படையும், வடிவும், ஆன்மாவும், தோன்றும்; (849); தில்லைத் தரிசனத்தின் பின் பாசபந்தக்கயிறு களிந்தும் கட்டுந்தன்மையற்றதாய் அவனே செயல் புரியுந் தன்மையுடைய (இப்பாட்டில் முன்கூறிய எல்லாம் ஒருமித்துக் கூறியே) கரங்கள் அந்தச் சாயுச்சிய பதவியடைந்து தாயும் குழந்தையும் போல் சஞ்சலமற்றுலகினில் தொண்டு புரியுந் தன்மையைக் காட்டுவது. (1)

851. கறுத்திருண்ட கண்டத்தின் பெருமை தோன்றும்
கதிகாட்டுங் கண்ணிணைகள் கலந்து தோன்றும்
செறுத்தவர்தம் புரமட்ட சிரிப்புத் தோன்றும்
தேவர்கணம் சூழ்ந்திருக்கும் சிறப்புத் தோன்றும்
ஒறுத்தவர்த மென்பெல்லா முடம்பிற் றோன்றும்
ஒளிதோன்றும் ஓங்கார வாசி தோன்றும்
சிறுத்தவிடை யுமையாளோர் பாகந் தோன்றும்
சிவசிவா சிவன்சிவ னெனைக் கண்டேனே.

கறைக் கண்டன் (381; 140). முப்புரங்களையும் உற்றுநோக்கும் புன்சிரிப்புக் கொண்ட கண்கள் (635). தொடர்ந்தே இன்பத்தை ஒறுத்தும் துன்பத்தில் பேரானந்தங்கண்டும், இறைவனின் சித்திரம் அழியா இன்பந்தர கரும்புபோல் ருசிக்க; என்பெலாம் உருகி புரமட்ட சிரிப்பு முப்புரமுமெரிந்த உண்மை காட்டும்; பாசபந்தக் கயிறு எரிந்த தன்மையும் அறிவே வடிவான உள்ளத்தினராய் காணப்படும் உம்பர் (347) சூழ; அந்த ஆனந்தத்திலே, தையல் தனக்குப் பாதியுடல் கொடுத்த (773) எம்பெருமான், அம்மையப்பராகத் தோன்றும் உலகும் தாமும் ஞானக் கண்ணுடனே விளங்கும் ஓங்கார வாசியுமாகக் காணப்படுவர்; உமையின் நடனம், ஆனந்தமயகோசத்தில் ஐந்தெழுத்துச் ஜோதியில் தன்னைக் கண்டபின், தன்னுருவைத் தாமே அமைக்கக் கண்டும்: என்னுயிர்க்குயிராலே என் சீவனெனவுங் கண்டேனே. (2)

852. ஆறணிந்த திருச்சடையா யமரர் கோவே
அங்குமிங்கு மெங்குநீ அரசே ஐயா
நீறணிந்த திருக்கோல முடையாய் நின்னை
நேரிழையாள் பாகமாய்க் காணப் பெற்றால்
தாரணியிற் பிறவியென்னுந் தளைகள் போமே
சாயுச்சிய பதவியுந்தான் தப்பா தெய்தும்
ஆரறிய வல்லாருன் பெருமை தன்னை
அப்பனே ஆருயிரே ஆளு வாயே.

திங்கள் கங்கை சடையில் அணிந்த உம்பர்கோன் (847). வினை முதலாம் முழுமுதல்வனே. எப்பொருளிலும் வியாபித்திருக்கிறாய். அஞ்ஞானத்தைச் சுட்டெரித்த நீறு பூசிய பொன்மேனி; திருநடனத்தைக் கண்டும் பாசபந்தக் கயிறு எரிந்தும் பின் ஜீவன் முத்தனாக உலகில் நடிப்பவன் பாசபந்தக் கயிறு கட்டுத் தன்மையற்றதாக சர்வதத்துவாதிபதியான அம்மையின் ஆற்றல் கொண்டே குழந்தை முருகன்போல் உலகினில் தோன்று செய்வதால் பிறப் பிறப் பெங்கே? சாயுச்சிய பதவியடைந்த மெய்யன்பன் தையல் தனக்குத் தன் பாதியுடல் கொடுத்த (773) விகிர்தனர்போல் வாழ்வான்.

அப்படியான அருளும் வல்லமையும் பேரருளுடைமை முதலிய எண்குணங்களும் கொண்ட அப்பனே! உயிர்க்குயிராம் நாதனே! நீயே என்னை என்றும் ஆளுவாயே. (திருக்கோச் சிற்றம்பல தரிசனத்தின் பின் தோன்றிய இன்பச் சுவையை விளக்குந் தன்மையால் நின்ற திருத்தாண்டகமே. இவை.) (3)

152 திருத்தாண்டகம் III

853. பாரொடு விண்ணுய்ப் பரந்தான் கண்டாய்
பாவிப்பார் பாவம் அறுப்பான் கண்டாய்
நீரொடு மதிசூடி நின்றான் கண்டாய்
நேரிழையாள் ஒருபாகங் கொண்டான் கண்டாய்
காரொடு நேர்பொருவும் கண்டன் கண்டாய்
கருதுவார் கருத்தினி லிருப்பான் கண்டாய்
சீரொடுசேர் திரையிலங்கை வாழ்வான் கண்டாய்
சிவனென்னும் பெயருடைய செல்வன் றானே.

பருநிலையில் உயிரில் பொருள் உயிருள் பொருள் எல்லாமாய் விளங்கும் மண்ணுலகாயும்; நுண்வெளியில் (*Electromagnetic field*) நுண் பொருளான மண், நீர், தீ, கால் வான் ஆய ஐம்பூதங் களும் அவற்றுடன் தொடர்பான அந்தக் கரணங்களும், மெய்த்தத் துவம் தாத்துவாக்கங்களுமாய (830) தொண்ணூற்றாறும் எல்லாமாய் உட்பட உம்பர் போற்றித் தொழும் விண்ணோர் (796) பெருமா னுய்; ''அணுவுள் அவனும் அவனுள் அணுவும் கணுவற நின்று கலப்பதுணரார் இணையிலியீசன்'' என்றும் திருமூலர் குறிப்பிடும் எம் பெருமான் கண்டாய்; 'சிவசிவ' எனும் மாமறை தரும் 'சிவன் செயல்' எனும் மெய்ப்பொருளே! உலகமாகிய நாடகமேடையில் நடிகர்கள், தம் அம்ஸங்களில் பாசபந்தமின்றி, இறைவனின் சித்தி ரத்திலும் தாம் நடிக்கும் நடிப்பின் திறமையிலும் இன்புறுவர்; சாக்ஷி ஆமோதிப்பவன், தாங்குதவோன் அநுபவிப்பவன் சதாசிவன் எனும் முதல் ஐந்து படிகளிலும் (293; 299) தம்மை முறை பிழை யாதே அநுஷ்டித்துக் கண்டு, எந்நிலையிலும் எக்கோலத்தும் பகலோடி ரவற்ற (849) சங்கரன்தாளே மறவாமை மெய்ப்பொருள் என்பவர் தம் பாவம் அறுப்பான் கண்டாய்; மாணிக்கவாசகர் 'என்வினை யொத்தபின்' திருவினைக்குமப்பாலாய் நிற்பவன், என்று தருகிறார் காண்க; 'சிவசிவ' எனும் நாமங்களையே அவரும் குறிக்கிறார்.

"வினைகிலாதபெ ருந்துறைப்பெரு மானுன் நாமங்கள் பேசுவார்க் கிணைக்கிலாததோர் இன்பமேவரும் துன்பமேதுடைத் தெம்பிரான் உணைக்கிலாததோர் வித்துமேல்வினையாமல் என்வினை யொத்தபின் கணைக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினுய்கழுக் குன்றிலே.

(கழுக்குன்றப் பதிகம் 1)

திங்களுங் கங்கையுஞ் சடையிலணிந்தவன்; ஓசைவடியான அம்மையில் ஆடலும் அப்பாலாக நின்று இயக்கும் சொக்கநாதனும்; தில்லை நடனமுங்கண்டாய்; சிற்றின்பத்தை இன்பமா யனுபவிக்காது அறவழிநின்று தர்மமே யெனுமுண்மை (492) விளங்க நிஷ்காமிய கர்மம் புரிந்து சிற்றின்பவுணர்ச்சியும் நிஷகாமிய கர்மமும் ஒன்றோடொன்று நேர்பொருவுதல் போல், பொன்மேனியும் கறைக்கண்டமும் நேர்பொருவ நின்றருள் கண்டாய்; மெய்யன்பன் உள்ளத்தே நிறுத்திய வம்மனநிலை திரியாதே குறித்த 'சிவசிவ' எனும் மாமறைதரும் 'சிவன் செயல்' எனும் மெய்ப்பொருள் கொழுத்த நினைவாய் அங்ஙனங் குறித்த பொருளொடுதான் பிறழாது அச்சமாதியில் விளங்குவான் கண்டாய்; காலவெல்லையோ தேசவெல்லையோ வற்ற பரமாகாசத்திரையே (*Unlimitted Space and time, Infinite*) இலங்கையாகக் கொண்டு எப்பொருளிலும் நீக்கமற நிறைந்து சீருடன் பொலிந்து விளங்குவான் கண்டாய்; 'சீவன்' [சிவசிவ எனும் முன் காண்க] இவன் எனும் பெயருடைய செல்வன்றனே. (1)

854. பத்திசெய்யும் உத்தமர்தம் மனத்தான் கண்டாய்
பண்டுகடல் நஞ்சுண்ட கண்டன் கண்டாய்
நித்தியனுய் நின்மலனுய் நிற்பான் கண்டாய்
நினைந்துருகும் அடியவரை யாள்வான் கண்டாய்
தித்திக்கும் தேனெடுபா லானான் கண்டாய்
செழுவரையை வில்லாக வளைத்தான் கண்டாய்
எத்திசையும் புகழிலங்கை வாழ்வான் கண்டாய்
என்னையென்றும் பிரியாத செல்வன் றனே.

திடசித்தம் எனும் கொம்பில் பக்தி எனும் கொடியைப் படரவைத்தால் முத்தி எனும் பழம் ஈனும்; அத்தகைய உத்தமர்தம் மனத்தினில் கொழுத்த நினைவாய் அங்ஙனங் குறித்த மெய்ப்பொருளொடு தான்பிறழாது சமாதியில் விளங்கும் மனத்தான் கண்டாய்; கடல் நஞ்சுண்ட கறைக் கண்டன்; ஆதியந்தமற்றவன் இருவினையுஞ் சாராமே 853) நிற்பவன்; நினைந்துருகும் ('கொழுத்து' முன்வரிகள்) அடியவரை சமாதியில் அப்பொருளேயாகி யாள்வான் கண்டாய்; இறைவன் நாடகத்தை ருசிக்கும் நடிகர்களும், குழந்தையின் விளையாட்டை ருசிக்கும் தாயும் இவற்றை ஒப்பன; உலகியல் வாழ்க்கையை பசுபதம் எனும் மால்வரையாக, மேருமலையாகக் கொண்டவர். பக்திக்கொடி எனுங் கயிற்றினால் திருவருள் ஆணைவழி நின்று வளைத்துக் கட்டினான் கண்டாய்; ''பசுபதமலையை வில்லாக வளைத்தும் 'சிவன் செயல்' என்னும் மெய்ப்பொருளை அம்பாகக் கொண்டும் எய்து மூப்புரஞ் செற்றனன்; அவ்வாறு பசுத்தன்மை நீங்கிய பசுக்கள் தலைவனை இறைவனைப் பற்றிவிடலாம்'' எனமூலர் தருகிறார் காண்க

பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாச மூன்றுண்டு
பசுத்தன்மை நிக்கியப் பாசம் அறுத்தாற்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே (10 - 2406)

(முன்பாட்டு கடைசி வரிகள் காண்க) எப்பொருளிலும் எல்லாத் திசையிலும் இலங்கையிற் சீரொடு பொலிந்து விளங்கும் எம்பெருமானே என்னை யென்றும் பிரியாதே என்னுள்ளங் குடிகொண்டவன்;

855. கல்லானை கன்னலுண்ணச் செய்தான் கண்டாய்
கயிலாயம் எடுத்தவனை நெரித்தான் கண்டாய்
எல்லாமா யல்லவுமா யிருப்பான் கண்டாய்
என்னையொரு கணமேனும் பிரியான் கண்டாய்
சொல்லாலே துதிப்பவர்தந் துணைவன் கண்டாய்
தொல்லைநாட் செழுஞ்சுடராய் நின்றான் கண்டாய்
செல்லாரு மிலங்கையிலே வாழ்வான் கண்டாய்
சிவனென்னும் பெயருடைய செல்வன் றானே.

ஒன்றுங் கல்லாதும் அறிவில்லாதும் கடவுள் என்பதுணராதும் இருக்கும் மூடரையும் சிவன் செயலினுண்மையை முன்வினையின் பயனுகவுணர வைத்தும் அது கற்கண்டுபோல் ருசிக்கவுஞ் செய்தான்; ஒன்றும் படிக்காத ஓர் வழிப்போக்கன் தனியே காட்டில், மிருகங் கிலக்க ஓடிச் சென்று, ஒரு மரத்திலேறி உட்கார்ந்தான். வழிப் போக்கர் தம்மைக்கண்டு கூப்பிடும் வண்ணம் இலைகளைப் பிடுங்கி இடைவிடாது கீழே சொரிந்தனன்; கீழே ஒரு சிவலிங்கம் இருந்த தென்றும் அவன் முத்தியடைந்தான் என்பதும் புராணக் கதை. வினைப்பயனுல் அவனுக்கு 'சிவன் செயல்' எனும் மெய்ப்பொருள் கன்னல்போல் ருசித்திருக்க வேண்டும். கயிலாய மலையை எடுத்த இராவணனுடைய தோள்களை நெரித்தான்; எப்பொருளிலும் நீக்கமற நிறைந்து விளங்குபவன் எல்லாமாயும் இருவினையுஞ் சாராமல் அப் பாலே வெறுஞ் ஜோதிவடிவில் நிற்குந்தன்மையில் அல்லவுமாயு மிருப்பான் (*Absolute conscionsness*) கண்டாய்; நுண்பொருளான ஐம்பூதமும் மற்றும் அணுக்களிலும் அவனை அருவுருவாம் சதாசிவ னுயோ அல்லது அதற்கு முன்படிகளான அநுபவிப்பவன் ஆமோதிப் பவனெனும் படிகளில் (293) அவனைக் கண்டு தரிசிப்பவர் உள்ளத்தே, திருவருள் ஆணையால் தண்ணளிவாய்ந்த எம்பெருமானே உண்ணின்று,

மெய்யன்பனுக்கு வழிகாட்டி அருள் புரிவன் கண்டாய்; தொந்தரவு துன்பம் வருங்கால் அவனே இடர்நீக்கி, சிவன் செயலின் உண்மையை விளங்கச் செய்து, மெய்ப்பொருளான அவனே அருள் புரிவான் கண்டாய்; 'சிவசிவ' எனும் மாமறை தரும் 'சிவன் செயல்' எனும் அந்த மெய்ப்பொருளான 'சிவன்' எப்பொருளிலும் இலங்கையில் (853) விளங்குபவன் என் உள்ளம் என்றும் நீங்காது குடிகொண்டான்;

856. நிற்பனவும் நடப்பனவு மானாய் நீயே
நீங்காதென் னுயிருக்கோ ருயிரும் நீயே
பற்பலவாஞ் சமயமெலா மானாய் நீயே
பழவடியா ரடிக்குடியாய் நின்றாய் நீயே
கற்பனைக ளெல்லமா யல்லாய் நீயே
கங்குல்பக லறியாத கடவுள் நீயே
அற்புதமே யற்புதமே யென்னி னல்லால்
அடியேன்யா னென்சொல்லி யேத்து கேனே.

உயிரில் பொருட்களான நிற்பனவும், உயிருள் பொருட்களான நடப்பனவுமானாய் நீயே; என்னை என்றும் விட்டு நீங்கா உயிர்க் குயிராம் நாதனே என்று ஆன்மாவே தன்னைக் கூவியழைக்கிறது; உடம்பை இயக்குவது உயிர், உயிருள் உண்ணின்றும் வேறுகவும் இயங்குவது உயிர்க் குயிராம் நாதன்; மும்மலமும் நீங்கப் பெற்ற ஆன்மா ஆத்மனாக விளங்கும் உயிர்க்குயிராம் நாதனே; எல்லாச் சமயங்களும் ஆறுகள் சமுத்திரத்தில் ஒடுங்குவதுபோன்று எல்லாச் சமயங்களினின்றும் உயிர் ஒரே கடவுளிடம் ஒடுங்கும்; பல பிறவிகளாய் இறைவனையே வேண்டி நின்ற மெய்யன்பன் இதயத்தே திருவருள் ஆணையாக முன்கண்ட அநுபவவுணர்ச்சியெல்லாம் இப்பிறப்பில் வீட்டுக்கு அத்திவாரமாயும் அரைகுறையாய்க்கட்டிய வீடுமாயும் நின்று அவனை யடைய வழிநிற்கும் மதியாகி நின்று அவனை யாண்டு அருள்புரிவன்; துறி ஒன்றுமில்லாத கடவுளை யடைய நாம் கொண்டுள்ள ஓர் எண்ணத்தையே கற்பனைபாக்கி அது கொழுத்து விளங்கும் நினைவாகி, அப்பொருளுந் தானும் வேறுபடா நந்நிலை சமாதியாகி; அத்தகைய ஆயிர நாமமுடையாராகிக் கற்பனை யெல்லாமாயல்லாயும் நீயே நின்றாய்; [(772)இல் ஆயிர நநிகள் (4-53-10) காண்க]; பகலோடிரவ தியாத (849) பண்பினன் கண்டாய்; புத்திக்கு அப்பாற்பட்ட எல்லாம் அவனடி எல்லாம் அவன் செயலே எனும் மெய்ப்பொருளானவனே அற்புதமே யென்னு முண்மைப் பொருள் நீயே; எளியேனும் 'யானே அவனென்று' சொல்லி ஏத்துவனே.

857. கண்ணுக்குக் கண்ணுகி நின்றுய் நீயே
காமனையுங் கண்ணழலா லெரித்தாய் நீயே
விண்ணுக்கும் விளங்கொளியாய் நின்றுய் நீயே
வேதாந்தத் துட்பொருளு மானுய் நீயே
பண்ணுக்கோ ரிசையாகி நின்றுய் நீயே
பற்றற்றூர் பரவுகின்ற பொருளும் நீயே
எண்ணெழுத்துச் சொல்லாகி நிற்பாய் நீயே
என்னரசே யென்சொல்லி யேத்து கேனே.

சூரியனுடைய ஒளி கண்ணொளியுடன் கூடிப் பொருட்களை உருவமைப்பது போன்று உயிர்க்குயிராம் நர்தனுடைய ஒளி உயிருடன் (652) உண்ணின்று உயிரில் பொருட்கள் உயிருட் பொருட்கள் எல்லாவற்றையு மியக்குந்தன்மையுடையது; மன்மதனை நெற்றிக் கண்ணு லெரித்தாய்; (746; 840). எப்பொருளிலும் அணுவுள் அவனும் அவனுள் அணுவுமாகக் கலப்பதுணரார் அருவுருவாம் சதாசிவனைத் தரிசிப்பவர் தமக்கும், திருவருள் ஆணையாக அவனே, ''இணையிலி யீசனவனெங்குமாகித் தணிவற நின்றுன் சராசரந்தானே'' என்னும் உண்மை விளங்க உண்ணின்று உடனுகச் சதாசிவனைக் காட்டுபவன்; வேத்தில் சொல்லப்பட்ட உண்மைகளை ஆகமங்களில் சொல்லப்படும் முறை வடிவாகப் போற்றி ஏத்தித் தொழுவதால் உள்ளத்தே தோன்றும் அம் மெய்ப் பொருளாம் மகேஸ்வரன் சதாசிவன் நீயே; இசைகள் கொண்டு பண் இயற்றுவது போன்று சிவான்மாவின் பற்றற்ற இசைவடிவான இயற்கை ஒளி ஒன்று சேர்ந்து பரசிவான்மாவாக விளங்கும் ஓசைவடிவான அம்மை நீயே; சிவான்மாவான ஒளி ஒன்று சேர்ந்தே பண்ணவனுய் மெய்ப்பொருளைக் காட்டுவது; பற்றற்ற உம்பருக்குக் கண்ணுக்குக் கண்ணுகி (மூன்வரிகள் காண்க). ஒளி காட்டுபவன் நீயே; ஒவ்வொரு உயிரிலும் உண்ணின்றியக்கியே ஒருருவான சிவான்மாவாயும், எழுத்துக்கள் சொற்கள் உண்டாக்குவது போன்றும் சொல்வடிவான அம்பிகையாயும் விளங்குபவன் நீயே. எம்பெருமானே, எப்பொருளிலும் வியாபித்திருந்தும் இயக்கியும் ஆண்டருளும் கோனே, என்னரசே, உன்னை ஏத்தித் தொழுவேனே?

153. எல்லாம் நீயே

858. அப்பனும் அம்மையும் நீயே அரிய சகோதரர் நீயே
ஒப்பில் மனைவியும் நீயே ஒதரும் மைந்தரும் நீயே
செப்பில் அரசரும் நீயே தேவாதி தேவரும் நீயே
இப்புவி யெல்லாம் நீயே என்னை யாண்டதும் நீயே.

ஆருயிர்களை அவரவர் வினைப்பயனுக் கேற்றவாறு உடலத்தில் பொருத்தி வைத்தும் வினைப்பயனுக் கேற்றவாறு தொழிலில் ஈடு படுத்தியும் வைப்பன்; இறைவன்; ஆருயிர்கள் தம்மை வந்தணையும் வண்ணம் ஆருயிர் தம்மில் கொண்டுள்ள கருணையினுலேயே இவ்வாறு தொழிலில் ஈடுபடுத்துவர் (880, 889) அந்தப்படைப்பை உலகியல் வாழ்க்கையை அறிவிப்பது ஒரு சொல் 'ஓம்'; வினைப்பயனுக்கேற்ற அப்பனும் அம்மையும் நீயே அவையாகப் பொருத்தி வைத்தும்! [(774 இல் இவ்விதியையும் காண்க] அவ்வாறே மற்றும் சகோதரர் மனைவி மைந்தர் எல்லாமே நீ "ஓம்" எனும் உண்மை விளங்க அமைந்துள் ளாய். உலகை ஆளும் அரசனும் நீயே; மும் மூர்த்திகளுக்கும் மூர்த் தியாக விளங்குபவனும் நீயே; காயினும் நனிமிக்கவினியார், எளி யேனுக்கு அருள்புரியும் தண்ணளிவாய்ந்த எம்பெருமான், எப்பொரு ளிலும் வியாபித்திருக்கும் முழுமுதல்வனும் எம்பெருமான் என் னை யாண்டருள்வன்;

859. ஆறு வைத்ததும் நீயே அம்பிகை பாகனும் நீயே
கூறும் வேதமும் நீயே குற்றங் குணமெல்லாம் நீயே
நீறு பூசினேன் நீயே நெற்றிமேற் கண்ணனும் நீயே
பேறு பெற்றவன் நீயே பின்னென்னை யாண்டதும்-
நீயே

திங்களுங் கங்கையுஞ் சடையிற் தரித்தோன்; ஆடல் புரியும் அம்மையை இடப்பாகமாக வுடையாய் நீயே; வேதன்(833) வேதத் தினுட்பொருள் (857) நீயே; எண்ணங்களாவன உண்டாகும் இடம் நீயே; எண்ணங்கள் தாமே மூவாசைக்கு மிடமாய் படைத்தல் காத் தல் அழித்தல் கடவுளரான பிரமா விஷ்ணு உருத்திரன் முதலிய மும்மூர்த்திகளுக்கும் மூர்த்தியாக விளங்கும் வினை முதலாம் முழு முதல்வனே; ஆதலால் குறிகுணங்களும் குற்றங்களாய் விளங்கும் இருவினையும் உம்மாலேதான் ஆக்கப்படுவது; பின் மெய்யன்பன் வேண்டுகோள் அழிப்பவனும் நீயே; இருவினையாகிய அஞ்ஞானத்தை நெற்றிக்கண்ணுடாக எழும் அறிவு ஸ்வாலையாலே எரித்து. அந்தப் பசுவின் சாணமாகிய மலத்தை எரித்த நீறைத் தேகம் முழுவதும் பூசி, நீறுபூசிய பொன்மேனி விளங்க நிற்பவன் நீயே; நீறு பூசிய பொன்மேனி விளங்க, அகஞ் சிவலிங்க வடிவாக விளங்க மலர்ந்து விளங்கும் பெறுபேறு சிவபதமும் நீயே; என்னையாண்டு சிவபதமரு ளியதும் நீயே.

860. இந்திர னுதியோர் நீயே இருடிகணங்களும் நீயே
சந்திரன் சூரியன் நீயே தாணுவாய் நின்றதும் நீயே
மந்திர தந்திரம் நீயே மறுமையும் இம்மையும் நீயே
சுந்தர மாவதும் நீயே துணையா யிருப்பதும் நீயே

படைத்தற் கடவுளரான பிரமா விஷ்ணு உருத்திரனும், தேவர் கோன் இந்திரன் முதலிய தேவர்களும், நீயே; மந்திரத்தை ஜெபிப் பதாலும் தந்திரம் எனும் வழிபாட்டு முறைநூல் வழி நின்றும் இறை வனே யடையலாம். எண்ணங்களான மந்திரமும் வழிபாட்டு முறை களும் நீயே: இன்மை இன்பம் நீயே: பிறவிக்கடலுக்கு அப்பாற் பட்டவனுக விளங்கும் மறுமையின்பமும் நீயே; பாசபந்தக் கயிறு அற காமாதி குணமெல்லாங் கட்டவிழ கருணையே உருவான கடவுள் அருள் புரிய தாமாக எழுந்தருளுந் தாணு, சும்மா இருக்கும் அகம் தோன்ற, அங்கே மோனகுருவாக எழுந்தருளியவனும் நீயே; மோன குரு எழுந்தருளிய அகத்தே ஆடல் புரியும் அம்பிகையுஞ் சொக்ச னுதனுய் நின்று தன்னொளிகொண்டு இயக்கும் சூரியனும் நீயே(767) மதுரையில் மீனாட்சியம்மை சொக்கனுதனுய் நின்று ஆடல் அழகு கொடுப்பவனும் சுந்தரமாவதும் நீயே; தண்ணளி வாய்ந்தவனுகத் துணை புரிபவனும் (601) நீயே.

851. ஈறில் லாதவன் நீயே எந்தை பெருமானும் நீயே
மாறில் லாதவன் நீயே மனத்திலி ருப்பதும் நீயே
கூறில் லாதவன் நீயே கொள்கை களெல்லாம் நீயே
தேறித் தெரிவதும் நீயே திருத்த மாவதும் நீயே.

வினைமுதலாம் முழுமுதல்வன் மும்மூர்த்திகளுக்கும் மூர்த்தியாக வினங்கும் எண்ணங்கள் தோன்றுமிடம் நீயே(859 ; ஆதியும் அந்த மும் இல்லான்; தந்தையும் தாயுமாக நிற்பவன்; நம் எண்ணங்கள் நம்மிஷ்டப்படியே மும்மூர்த்திகளையும் உண்டாக்கி அவர் வேண்டிய வாறு இருவினையையு முண்டாக்கி அவ்வினைப்'பயனுக் கேற்றவாறு நாம் தொழிலிலீடு படுவதால் (380) எமக்கு மாறில்லாதவன் நீயே; மனத்திலிருக்கு மெண்ணங்களும் நீயே; இருவினையுஞ் சாராமல் அப் பாலாய் நிற்பதால் கூறில்லாதவன்; (முன் உடனுய் நின்று இயங்கின வன் இங்கே வேறுக நின்றியங்குபவன்;) தண்ணளி வாய்ந்தவன் அருள் புரியத்தோன்றிய கொள்கைகளும் நீயாகவே நின்று, அஞ்ஞான இருள் நீங்க தேறித்தெளிந்து தெளிவாய்த்தோர் ஊறலாய் (809) த் தெரிவதும் நீயே; அந்தத் திருத்தமாம் தேறலூறல் தரும் பெறு பேறும் நீயே;

862. உண்மையும் இன்மையும் நீயே ஊனும் உயிர்களும்-நீயே
அண்மையும் சேய்மையும் நீயே அன்பா யிருப்பதும்-நீயே
பண்ணு மிசையும் நீயே பாட்டிற் பொலிவதும்-நீயே
எண்ணு மெழுத்தும் நீயே என்றுணை யாவதும்-நீயே.

'ஓம்' எனும் உண்மைப் பொருளாக விளங்கும் முழுமுதல்வனும். நீர்க்குமிழி போன்று அழிந்து அழிந்து தோன்றும் மாயாகாரியப் பொருள்களாயும் நிற்பது நீயே; உடலுய் அண்மையில் உண்ணின்றும், தண்ணளிவாய்ந்த எம்பெருமானுய் அன்புடன் கருணை வெள்ளம் பெருக்கியும் தம்மைத் தூய்மையாக்குவதுமல்லாமல் அண்டினுரையுந் தூய்மையாக்கும் சேய்மையும் நீயே; இசைகள் பலகூடியமைந்தே பண்ணையுண்டாக்கியும் பொலிவு காட்டுவது போன்று, உயிரில் பொருள் உயிருள் பொருள் எல்லாவற்றிலும் உடனின்றும் வேருகவும் ஆடல்புரியும் முழுதும் உண்மையென மீளுட்சி சொக்கனுதனுக, ஆடலுக்கும் பொலிவு கொடுப்பதும் நீயே; சிற்றின்பத்துக்கோ பேரின்பத்துக்கோ திருவருளே துணை; ஓசைகள் எழுத்துக்கும், எழுத்துக்கள் சொல்லுக்கும் முதல் கருவியாயிருப்பது போன்று நீயே நாதமாக இயங்கும் சிவான்மாவுக்கும் நின்று சிவான்மாவான ஒளி ஒன்று சேர்ந்தே சொல்வடிவான அம்பிகை பரசிவான்மாவுந் தோன்றும்; நீயேயெல்லாம்; எனக்குத் துணைநின்று பெறுபேறு அடையப் பண்ணுபவனும் நீயே.

863. ஊதிய மாவதும் நீயே உயிருக் குறுதுணை நீயே
நீதி யதிபதி நீயே நேற்றின் முவதும் நீயே
ஓதி யுணர்வதும் நீயே உத்தமர் சித்தமும் நீயே
சாதி சமயமும் நீயே தானென்னே யாண்டதும் நீயே.

மாயாகாரியப் பொருட்களான ஊதியமாயும், மெய்யன்பர் உள்ளத்தே தேறல் ஊறலாகத் தேறித்தெரிவதும் (861) நீயே; உயிர்க்குயிராம் நாதனே உயிருக்குறு துணையாய் நீங்காதென்னுயிருக்கோர் உயிரும் (856) நீயே; பிரம்மா விஷ்ணு உருத்திரன் முதலிய மும்மூர்த்திகளுக்கும் முதல்வனும் வினைமுதலாம் முழுமுதல்வனே நீதியதிபதி; நேற்றின்முகும் காலனுய் நேற்றும் இன்றும் நாளையும் நிகழ்ச்சிகள் நிகழ்விப்பவன் (380) நீயே; வேதங்களின் உண்மையை ஓதி உணர்ந்து அறியப்படும் வேதத்தினுட் பொருளும் நீயே; அப்பொருளே தெள்ளும் மாமறை தந்த திருவினன் (800) உள்ளங் குடிகொண்ட உத்தமர் சித்தமும் நீயே; பல சமய உண்மைகளையுந் தெள்ளித் தெள்ளி உண்மைகளை யாராய்ந்து அவன் தந்த தேறல் ஊறலான மெய்ப்பொருளும் நீயே: யானுகிய வென்னை விழுங்கி வெறுந்தானுய் நின்ற தற்பரமும் நீயே.

864. எல்லாப் பொருள்களும் நீயே ஏந்திழை பங்கனும்-நீயே
வல்லமை யுள்ளதும் நீயே வாழ்நாட்க ளாவதும்-நீயே
பல்லோர் புகழ்வதும் நீயே பரிமேல் வந்ததும் நீயே
நல்லோர் உள்ளமும் நீயே நாலு யிருப்பதும் நீயே.

மாயாகாரியப் பொருட்களெல்லாம் நீயே; அவை நிலையற்றவை உண்மை முழுதுமாய் எல்லாப் பொருட்களிலும் ஒசை வடிவாக இயங்கும் ஆடல் அம்மையை இடப்பாகமாகவுடைய சிவபெருமானும் நீயே; சர்வவல்லமை முதலிய எண் குணங்களாய் விளங்குபவன் நீயே; நிலையில்லாததும் நீர்க்குமிழி போன்று மாயாகாரியப் பொருட்களின், அவரவர் வினைப்பயனுக் கேற்றவாறு பொருத்தி வைத்த வாழ்நாட்களாவதும் நீயே; எல்லாராலும் புகழ்ந்து பாடியேத்தித் தொழப்படுபவனும், நரியெல்லாவற்றையும் நற்பரியாக்கி தும்பையரவு சடையாட (847, 766) நற்பரிமேல் தத்துவாதீதனாய் விளங்குபவனும் நீயே; தத்துவாதீதன் குடிகொண்டிருக்கும் சித்தமும் நீயே, அந்தச் சித்தத்தே உயிருக்கோருயிராயிருப்பதும் நீயே.

865. ஏற்றில் வருவது நீயே என்புக லாவது நீயே
கூற்றை யுதைத்தது நீயே குருவாய் வருவது நீயே
சாற்ற வரியது நீயே தானு யிருப்பது நீயே
போற்ற வரியது நீயே புத்தியி லுள்ளதும் நீயே

நுண்பொருட்களான ஐம்பூதங்களும் மற்றுங் கருவிகரணங்களாலுண்டாக்கப்பட்ட மாயாகாரியப் பொருட்களேயே தம் ஊர்தியாகக் கொண்டு அவர்களே ஈடேற வைக்கும் நன்மை கருதியே, உண்ணின்று அவற்றை இயக்குவதும் நீயே; ஐம்பூதங்களுங் கருவி கரணங்களுங் கொண்ட என்புகலாவதுந் தசைகளாவதும் நீயே;

''புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி ஏளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே.....

என்று (பிடித்தபத்து 10) இல் மாணிக்கவாசகர் தருவதைக் காண்க.

சிவலிங்க ஜோதிப்பிழம்பமாக மார்க்கண்டேயருடைய அகத்தே தோன்றிய முக்கட்கருணைப் பிரானுடைய தண்ணர் கருணை மௌனத்தினால் மார்க்கண்டேயர் முத்தி சாதிக்க வல்லராய்ப் பிறப்பிலியானர்; பாசக்கயிற்றுடன் வந்த கூற்றை முக்கட் கருணைப்பிரான் காலாலுதைத்து வீழ்த்தினர்; நல்லைப்பதிக்கரசே செல்லப்பாச் சுவாமியாராக உருத்தாங்கி எழுந்தருளிய யோகசுவாமிகளுடைய சிவகுரு, மற்ற அடியார்க்கும் அவ்வாறே; குறிகுணமற்றதுமாய் ஆதியந்தமற்றதுமாய் அறிவுப்பெரு வெளியில் தம் அறிவாலே காணப்படும் அம்மெய்ப்பொருளை, எவ்வாறு சுட்டுப் பொருளாக சொற்களால் மாயாகாரிய மனத்தால் உணர்ந்தறிந்து விபரிக்க முடியும்? அறிவே வடிவான ஆன்மா மாயையினின்றும் விடுபட்டுப் பாவந்தேய ஆத்மனாய் தானுயிருப்பதும் நீயே; [தவஞ் செய்து தன்னைத் தன்னுலே தானுய

றியும் (403) சலாக்கியம் காண்க] அறிவுப் பெருவெளியில் தம்மறிவி னல் காணப்படும் ஆத்மனை எவ்வாறு சுட்டுப் பொருளாகக் கண்டு போற்றுவது? இறைவனுடைய திருவருளே வேண்டி விழிநீர் பெருகப் பாடியாடி அழுவதேயன்றி வேறு என் செய்யலாம்? புத்திக்கு அப்பாற் பட்ட ''அந்த ஒன்றை'' நினைந்து நினைந்து புத்தியாகிய வாய்க்கால் வழியே சிவானந்த வெள்ளம் பெருக உன்னையே வேண்டிநிற்கலாம்.

866. ஐயங் கொடுப்பது நீயே ஐயம் ஏற்பதும் நீயே
வையக மெல்லாம் நீயே வாணுதல் கணவனும் நீயே
பையர வணிவது நீயே பரவ வினியது நீயே
செய்ய மேனியன் நீயே சித்தத்தி லுள்ளதும் நீயே.

தில்லைத் தரிசனங்கண்டு பாசபந்தக் கயிறு எரிந்தும் குண்டலி ஆறு சித்து வல்லமைதர ஆணவ முனைப்புக் கொள்ளாமல் ஐயம் புகுவோ ரும்: (773) ஐம்புல வேடராலுண்டாகும் நானெனும் ஆணவ முனைப் புக் கொள்ளாமல் ஐயம் புகுவோரும், நீயே; அறவழி நின்று கொல்லா விரதம் பூணும் மெய்யன்பர் உள்ளத்தும் நீயே நிற்கின்றாய்; (477;) [864 இல் எப்பொருளும் நீயே ஏந்திழை பங்கனும் நீயே காண்க] உலகில் எப்பொருளிலும் நீயே உண்ணின்று இயங்குகிறாய்; ஓசைவடி வாக இயங்கும் அம்மை, வாணுதல், கணவனும் நீயே; ஐம்பொறி களையும் தன்னுளடக்கி தும்பை யரவு சடையாட வணிவதும் நீயே (766) தும்பையரவு சடையாட அடங்கிய மனம் அகத்தே ஒடுங்க சாகஷி, ஆமோதிப்பவன் அனுபவிப்பவன் தாங்குவோன் மகேஸ்வரன் என்னும் அத்வாமார்க்கங்களில், எம்மிறைவனே எம்மிதயத்தே உம்மைக் கண்டு தரிசிக்க, இனியவனே நீ என்றும் அழியாப் பேரின்ப உணர்ச்சி தருபவனே நீ; அத்தகை மெய்யன்பன் அகம் பரிசுத்தமான கோயிலாகவும் அங்கே சிவலிங்க வடிவாக விளங்கும் உயிரும் (608) நீயே; ஆத்மனே (819); அந்தச் சித்தத்தே விளங்குபவன் நீயே.

867. ஒன்று யிருப்பதும் நீயே ஊர்பேரில் லாததும் நீயே
நன்று யிருப்பதும் நீயே நாளை யாவதும் நீயே
குன்றுங் கடலும் நீயே குவலய மெல்லாம் நீயே
மன்றுள் நிற்பதும் நீயே மாசில் லாததும் நீயே.

குன்று கடல், சரம் அசரம், எப்பொருளும் நீயேயாய் விளங்கு பவனே; தூநெறி கண்ட சுவடு நடுவெழ, பூநெறி கண்ட அகம் பொன்னகமாய் நிற்க, மேனெறி கண்டே பகைவரையும் உறவோ ராகக் கண்டும், பாம்பை ஆபரணமாகக் கொண்ட சிவபெருமானைப் போல், நலமிக்கவனுயிருப்பதும் நீயே, விண்முதலாம் முழுமுதல்வன் இட்ட சித்திரப்படி நிகழும் நிகழ்ச்சிகளாய், நாளையாவதும் நீயே;

ஓசைவடிவாக எப்பொருளுமாய், ஆடல் அம்மையாகி மன்றுளாடும் மாமணி, நீயே; மாசில்லாமாமணி நீயே; மன்றுளாடும் மாசில்லா, அந்த ஊரும் பெருமில்லாது ஆதியும் அந்தமுமில்லா மாமேரு என்னும் குன்றெத்த ஆடலம்மையை இடப்பாகமாகவுள்ள ருழமுதல்வன், என்னையுந் தன்னையு மொன்னுகக் காணுபவன் நீயே; அவனே ஒரு பொருளாக விளங்குபவன்.

868. ஒமெனும் ஒண்பொருள் நீயே உருவ மற்றதும்நீயே
ஆமென நிற்பதும் நீயே அல்ல வென்பதும் நீயே
தாமத மற்றதும் நீயே சத்திய முள்ளதும் நீயே
சேம முள்ளதும் நீயே சீவர்க ளெல்லாம் நீயே.

பாசபந்தக் கயிறு அற காமாதி குணமெல்லாங் கட்டவிழ கருணையே உருவான கடவுள் வந்து அருள்தர தாமாக எழுந்தருளுந் தாணு அகத்தே தோன்ற மார்க்கண்டேயர் உள்ளத்தே தோன்றிய முக்கட் கருணைப்பிரான் காட்சி தருவன்; அந்த அறிவே வடிவான உருவமற்ற ஒண்பொருள் நீயே; மார்க்கண்டேயருக்குப் போல் 'ஆம்' என நிற்பதும் நீயே; (865); அயன்மால் இருவருக்கும், ஆணவ முனைப்புக் கொள்ளவும் அஞ்ஞான இருளாகக் காணுைத அல்ல என்றும் நிற்பது நீயே; உண்ணின்று இயக்கும் எம்பெருமான் அண்மையிலுள்ளான்; அஞ்ஞான இருள் நீங்க, தாமதமற்று உடன் நீயே நானென்று நிற்பவன்; பொறை நிலையெய்தி அந்தத் தொடர்பாயுள்ள எண்ணமே கொழுத்து விளங்கும் நினைவாக. நினைவில் கொண்ட பொருளுந் தானும் பிறனுகா சமாதியில், சத்திய உண்மைப் பொருள் நீயே; பரசிவான்மாவான உலகுந்தானு மொன்றுபட்டுச் சாயுச்சிய பதவியடைந்த நந்நிலையில் தாயின் மடிமீது குழந்தைபோல் சஞ்சலமற்று உலகினில் சேமமுடன் வாழ்வதும் நீயே; பரசிவான்மாவான சீவர்களெல்லாம் நீயே.

869. ஒளவிய மற்றதும் நீயே ஐந்தெழுத் தானதும் நீயே
நவ்வி யுடையதும் நீயே நானுய் நிற்பதும் நீயே
செவ்விய மனமெலாம் நீயே சிந்தையில் நிற்பதும் நீயே.
கிவ்விய மாவதும் நீயே சீடனுங் குருவும் நீயே.

மூவாசையால் தூண்டப்பட்டு அங்கலாய்ப்போ ஆயலோ அற்றவனுப் சமநிலையெய்தி நிற்பவன் நீயே; சிவயநம எனும் ஐந்தெழுத்துப் பொருளாய் விளங்குபவன் நீயே; நல்விதியுடைத்தாய் மௌனமே யுருவாகி ஆடல் அம்மை இடப்பாகமாகவுள்ள எம்பிரான் நீயே; யானுகிய என்னை விழுங்கி வெறுத்தானுக எவ்வுயிர்க்கும் தானுக விளங்குபவன் நீயே; புத்திக்கு அப்பாற்பட்ட 'ஒன்றைக்,

கண்டமனம் ஒடுங்கி இறைவனில் அடங்கிப் புத்தியாகிய வாய்க்கால் வழியே சிவானந்த வெள்ளம் பெருகச் 'செவ்விய' மனமெலாம் நீயே; தெளிந்த சிந்தையில் தேறல் ஊறலாக நிற்பவன் நீயே; செறிந்து விளங்கும் சிவன் என்னும் பொருளும் நீயே; குருவுஞ் சிடனும் நீயே!

154. அன்பில்லேன்

870. அன்பில்லேன் பொறுமையில்லேன் அடியார்தம்
உறவுமில்லேன்
என்புருகப் பாடுகில்லேன் என்னையுமோர்
பொருட்படுத்தி
மண்ணுலகில் மானிடனுய் மறைந்துவந்து
வழிகாட்டி
இன்னல் தவிர்த் தாண்டுகொண்டான் எழிலாரு
மிலங்கையிலே.

உயிர் எனும் ஆவிக்குரிய அன்பறிவாற்றல்கள் மூன்றுள் அன்பின் பெருக்கம் பலவகை; அவற்றுள் இறைவன் சித்திரித்த உலகியல் நாடகச் சித்திரத்திலும் அந்த அம்மையின் நடனத்திலும் என்றும் அழியா இன்பம், பேரின்பமே பெரிதும் புகழத்தக்கது. அந்த அழியாப் பேரின்பம் வந்தடையவில்லையே என்று சஞ்சலமுற்று சற்று நேரத்திலே சிற்றின்பத்தை நாடுகின்றதே எளியேன் மனம்; மற்றும் அடியவர்களுடன் சேர்ந்து நின்று அவர்களுடைய மனத்துடன், குரங்கையொத்த என்மனம் உடன்கூடி அந்தப் பேரின்ப உணர்ச்சியை வேண்டி நிற்கின்றதுமில்லையே, என் மனம் சிற்றின்ப உணர்ச்சிப் பெருவேட்கை மிகுந்ததால் உன் அன்பையுண்டு, தேனுண்ட வண்டு போல் உன்னை நினைந்து என்புருக, கல்லையொத்த என்மனமுருக, பாடுவதுஞ் செய்கில்லேன். தாயுமானவர் ''என்புருகாமல் கல்மனம் தம்மை வாட்டுதே' என்று பாடுகிறார் காண்க; ''கல்லேனும் ஐயவொரு காலத்தில் உருகுமென் கல்நெஞ்சம் உருகவிலையே கருணைக் கிரங்காத வன்மையையும் நான்முகன் கற்பிக்கவொரு கடவுளோ வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும் பெருவழக்குக் கிழுக்கு முண்டோ'' என்று (சுகவாரி 3 இல்) பாடுகிறார்.

அத்தகைய நிலையில் நான் வாடிவருந்தி நிற்கும் நாளில் திருவருட் பெருவெளியாகிய வானமாய் நின்று பேரின்பப் பெருமழையாய்த் தண்ணருள் புரிந்திறங்கி அடியேனை வாழ்வித்தருள. மண்ணுலகில் இலங்கையில் செல்லப்பன் எனும் நாமமுடைய ஓர் மானிடனுய், உம்முடைய எண்குணங்கள், தன்வயத்தனுதல், தூயவுடம்பின

ஞதல், முற்று முணர்தல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை முதலியனவும், உம்முடைய தொழில்கள் படைத்தல், காத்தல், அழித்தல் முதலியனவும், சருவஞ்ஞத்துவம், சருவகற்பிதத்துவம், எல்லா நலமுமுளனுதல், எங்கும் வியாபகனுதல், எவற்றிற்கும் காரண மாதல் முதலிய மற்றுங் குணங்களையும் ஓர் மானிட உருவத்தில் மறைந்து வந்து உடம்பெடுத்து, [ஈசுரன் குணங்களும் மற்றும், மதுரைப் பேரகராதி இரண்டாம் பாகத்தில் காணலாம்]. வழிகாட்டி அருள் புரிந்தனை; அடியேன்பால் இரக்கங் கொண்டு நின் திருவடி யின்ப வெள்ளமாக வந்து நல்லூர்ப்பதியில் தேரடியில் தேசிகன் எனைக் கண்டு ''ஆரென் றறிவாயடா'' என்று (488) என்னுட் புகுந்து ''உவமை கடந்த வின்பம் எல்லார்க்கு முண்டு'' (489) என்று உணர்ணின் றின்பவெள்ளம் பெருக்கி பிறப் பிறப் பென்னும் இன்னல் தவிர்த்தென்னை யாண்டு கொண்டான் எம்பெருமான்.

871. குணமில்லா மூர்க்கரொடுங் கூடியே திரிகின்ற
மணமில்லா முருக்கமலர் அனையேனை மகிழ்ந்துவந்து
தினையளவு போதினிலே சிவமாக்கி யாண்டுகொண்ட
இணைபில்லா இறையவனை இலங்கைநகர் கண்டேனே.

இவ்வுலகின்கண் கொடிய பிறப்பிற்கு ஏதுவாகிய பொறுக்க முடியாத பெருங்குற்றங்கள் நிறைந்துள்ள தொழில்களுள். நம் மனத்தை ஒவ்வோர் நொடிப்பொழுதும் ஏவி சற்றேனும் இறைவனை நினைந்துருகிப் பேரின்பவுணர்ச்சி எனும் எழில் காட்டாமல், என் மனத்தை முழுவதுமாண்டு கொண்ட ஐம்புல வேடருடன், ஐக்கிய நட்புப் பூண்டு மனம் புத்தி சித்தம் எனும் அந்தக் கரணங்களும் அவர்களுடைய ஆளுகையில் அமர, நானெனும் ஆணவமுனைப்புக் கொண்ட எளியேன்; இவ்வுலகத்தினைப் புதிதுபோற் காட்டி எவ்வுல கமோ வென்று நினைக்கும்படி செய்யும் பெண்களை மருவி நுகரும் சிற்றின்பத்தினை மிகப் பெரிய பேரின்பமலையாகிய மேருமலை போன்று தோற்றுவிக்கும்; ஒவ்வொரு நாளும் தீய அறிவுகளையே உண்டாக்கி முன்புள்ளதாகிய நல்லறிவுகள் எல்லாவற்றையும் கொள்ளையிட்டுக் கண்கட்டு என்று சொல்லப்படும் இந்திரஞாலம் பொருந்தும்படி ஒரு கூட்டத்தினை அமைத்து ஆடும்; மணமில்லா முருக்கமலர் மலா வது போன்றதே இவ்வாழ்வு.

இவ்வாழ்வில் அலைந்து திரியும் எளியனேனையும் காலன் வலி தொலையக் காலெடுத்தான் தந்தருளும் பாலன் (488) மகிழ்வுற வாழ்வளிக்க, நொடியளவு போதினில் அவன், என் ஞானகுரவன், உண்ணின்று என்னை நோக்க நானுஞ் சிவனருளை நோக்க (489), உவமை கடந்த வின்பம் என் உள்ளத்தே தேங்க, மோனமெய்திய என்னகத்தே ''அறியா அறிவில் அலிழ்ந்தேக சித்தமாய் நெறியாம் நீடருள் நந்தி ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம்'' என்னும் 'திரு

வடிப்பேறு,' என்னையடையச் செய்து என்னை ஆண்டு கொண்ட தண்ணளி வாய்ந்த எம்பெருமானே, என் ஞான குருவனுகை உருத் தாங்கி எழுந்தருளி வந்தவனே, இலங்கை நகர்க் கண்டேனே:

872. என்னையெனக் கென்னுலே அறிவித்த
வெம்பெருமான்
அன்னையினும் மிகவினிய ஞருயிருக் குறுதுணைவன்
பொன்னைநிகர் மேனிபான் பூங்கமலத்
திருத்தாளான்
தென்னைபனை சேரிலங்கை மாநகரிற் கண்டேனே.

ஆனமா அறிவுப் பொருள்: மும்மலப்பிணிப்பும் மாயையென்னும் அஞ்ஞானத்தா லுண்டாக்கப்பட்ட மாயாகாரிய மனத்தினுலே மூடப் பட்ட உயிர், உடம்பெடுக்கிறது. பாவந்தேய்ந்த ஆன்மா ஆத்மஞான விளங்கும். மாயாகாரிய மனத்தினுலே அறிவுப்பொருளாகிய ஆன்மா வையறிய இயலாது. திருவருளினுலே அறிவே வடிவான ஆன்மாவை, தம்மறிவினுலேதான் காணலாம். மனம் ஒரு வேலையில்லாதும் சும்மா இருக்கவேண்டும்; பாசபந்தக் கயிறு அறவேண்டும்; ஐம்புலன்களும் ஒடுங்க மனம் அலையற்ற கடல்போல் அமைதி நிலவி ஒடுங்க, சும்மா இருக்கும் அகம் தோன்றும். அதே அறிவின் இருப்பிடம். ஆன்மா தன்னையறியும்.

பொறை நிலையெய்திய நந்நிலையில் 'சிவசிவ' எனும் 'சிவன் செயல்' எனும் மெய்ப்பொருளே கொழுத்து விளங்கும் நினைவாக, அந்நினைவே தொடர்பாயுள்ள சமாதியில் ''அறியா அறிவில் அவிழ்ந் தேக சித்தமாய் நெறியாம் நீடருள் நந்தி ஒன்றுஞ் செறியாச் செறிவே சிவம்'' எனும் நந்நிலை எய்தி, அறிவே வடிவான ஆன்மா தன்னைத் தன்னறிவினுலே கண்டு, அதில் திளைத்துக் கிடக்கும்.

[சிவகுரு செல்லப்பா சுவாமியார் தினையளவு போதினிலே ஆண்ட ருளிய உண்மையை (871) ஈற்றில் காண்க,] அன்னையினும் மிக வினி யான் ஆருயிருக் குறுதுணைவன் (883); (747; (856) மும்மலமு வேவச் செய்து அந்நீற்றுரல் தேகம் முழுவதும் பூசி நீறு பூசிய பொன் மேனி (766) விளங்கவும், தன்னை யறிந்த சிவலிங்க வடிவாக விளங் கும் அகமுடையான், மலர்ந்து விரிந்த தாமரை போலும் இரு தயத்தே, தோன்றும் அருள் ரூபம், நந்தி, திங்கள் மண்டலத்தில் அறிவுப் பெருவெளியில் ஆடலம்மையாக, தில்லை நடனங் காண்பான்; உண்ணின்று ஆடல் காட்டிய என் ஞானகுரவனே, தென்னை பனை செறிந்து விளங்கும் இலங்கை நகரில் கண்டேனே.

873. நஞ்சை வென்ற கண்டத்தான் நால்வேதம்
நவில்வாயான்
பஞ்சைவென்ற மெல்லடியாள் பாவையுமை
பாகத்தான்

அஞ்சைவென்ற வடியார்கள் அகங்கோயில்
கொண்டபிரான்
மஞ்சைவென்ற மலிபொழிலும் இலங்கைநகர்
கண்டேனே.

உலகியல் வாழ்க்கையில் எழும் சிற்றின்பம் எனும் நஞ்சை (140) இன்பமாகக் கண்டு உண்ணுதும், 'சிவசிவ' எனும் மாமறைதரும் 'சிவன் செயல்' எனும் மெய்ப்பொருளான அவனுடைய திருவருள் என்றும் இன்பமுந் துன்பமுங் காணுது அவனுடைய சித்திரத்தின் இனிமையைக் கண்டே அதில் இன்புற்றும், எம்பெருமான் தம் உள் ளத்தே கோயிம் கொண்ட மெய்யன்பன், அத்தச் சிற்றின்பமாகிய நஞ்சு, சீரணித்து இருவினையுந் தாராது, அதைத் தம் கண்டத்தே அறிகுறியாக வைத்திருப்பான்; அவனே நஞ்சை வென்ற கண்டத் தான் (796) கல்லால் நீழல் தனில் (755) நால்வர்க்கு அறம் உரைத்த முழுமுதல்வனும் எம்பெருமான் [தாயுமானவருடைய ''கல்லாலின் நிழலில்'' எனும் தேவாரம் (560) இல் காண்க]; பஞ்சு போலும் மெதுமையுடைய அகம்; கல்லால் நீழல் தனில் பொறுமையே யுரு வாகத் தியாகஞ் செய்யும் மெய்யன்பனுடைய பஞ்சு போலுமகம்; அத்தகைய பஞ்சை வென்ற மென்மையான பூங்கமலப் பொற்பா தத்தே, மலர்ந்த தாமரை போலும் ஆடல் அம்மையை (872) இடப் பாகமாகவுடைய எம்பிரான்; ஐம்புல வேடர்களையும் தம்முள் அடங் கச் செய்து அகங் கோயிலாக, உயிர் சிவலிங்கமாக விளங்கும் எம்பிரான் (608); சிவபெருமானே இமயமலை வாசன் என்றே அழைப் பர்; கைலையங்கிரி அவனுடைய இல்லம்; அதே அழகும் சயன சுக முங் கொடுக்கும் அமைதி நிலவிய மலைகள் பொலிந்து விளங்கும் இலங்கைமா நகரில், ஞானகுரவனாக எம்பெருமானே, எனக்கு அருள் புரிந்து நடனங் காட்டினன்.

874. ஆவதொன்று மறிகில்லேன் அந்திசந்தி
தொழுகில்லேன்
சாவதையுங் கருதுகிலேன் சஞ்சலமே மிகவுள்ளேன்
போவதுவும் வருவதுவும் இல்லாத புண்ணியனே
தேவர்குழு(உத்) தொழுதேத்துஞ் சீரிலங்கை
கண்டேனே.

எம்பிரானே வாழ்நாட்களாகவும் விளங்குபவன் (864); புத்திக்கு அப்பாற்பட்ட உன்னை ஆரறிவார்; மாணிக்கவாசகரே கழுக்குன்றப் பதிகத்தில் தருவதைக் காண்க. ''மயங்கினேன் கண்ணில் நீரைமாற்றி மலங்கெடுத்த பெருந்துறை விளங்கினேன் வினைக்கேடனேன் இனி மேல் வினைவதறிகிலேன்'' என்று 'ஆவதொன்று மறிகில்லேன்;

என்கிறார். அந்தி சந்தி இறைவனே உன்னை வணங்கவும் மாட்டேன்; மாயாகாரிய இவ்வுடம்பு நீர்க்குமிழி போன்று முடிவடையும்; சாவதையும் நான் நினைக்கிறேனில்லை; மூவாசையும் ஐம்புலன்களும் மனத்தினில் அலைகளையும், அவற்றால் உண்டாகும் சஞ்சலமுமே மிகவுள்ளேன்; சாதல் பிறத்தல் இல்லாது, ஆதியுமந்தமுமில்லாது, எப்பொருளிலும் ஓசைவடிவாக ஆடல் அம்மையாக உண்ணின்று இயங்கியும், அப்பாற்பட்டவளாக நின்று இயக்கியும் ஆடல் காட்டும் எம் பெருமானே, நீயே பரசிவான்மாவான சத்தி சிவம் ரூபமாக, பரசிவ வணக்கஞ் செய்யும் [பாட்டு (1) ல் சிவானந்த லஹரிசு. 1: காண்க.] தேவர் குழு, விண்ணோர் தொழுதேத்தும், பரவி ஏத்தும் ஜோதி (820); இலங்கையில் எம்ஞானகுரவனாக எழுந்தருளியவன்;

875. இடுவதுவோ சிறிதுமிலேன் எவர்மாட்டு
மன்புமிலேன்
சுடுவதுபோற் சொல்லவல்லேன் தூயோரைப்
பணிகில்லேன்
கெடுவதுவோ மிகவுள்ளேன் கேவலமாய்க்
கிடக்கின்றேன்
நடுவிகவா நாயகனே நம்மையான் வதுகடனே.

'சிவசிவ' எனும் மாமறை தரும் 'சிவன் செயல்' எனும் மெய்ப்பொருளான உமக்கு நான் 'என்னுடையது' என்று ஆணவ முனைப்புடன் உரிமை பாராட்டும் மாடுமக்கள், சிற்றிடையார், செம்பொன்னுடை, முதலியவற்றில் சிறிதேனும் இசைத்து கொடுப்பதில்லை; உன்னுடையதும் நீயே என்று விளங்கும் உலகியற் பொருட்களில் என்னுடைய நலன்கருதாது, சற்றும் அன்பில்லேன்; இதற்குமாறாக தாயுமானவர் ஐம்புலன்களையும் ஒடுக்கி எல்லாவற்றையு மிறைவனுக்கே ஒப்புவித்து

"வைத்தபொருள் உடலாவி மூன்றும் நின்கை
வசமெனவே யான்கொடுக்க வாங்கிக் கொண்டு
சித்தமிசைப் புகுந்ததுதான் மெய்யோ பொய்யோ
சிறியேற்கிங் குளவுரையாய் திகையா வண்ணம்"

என்று சிவன் செயலென்னும் மெய்ப்பொருளானவனுக்கே உடல் பொருள் ஆவி மூன்றுந் தியாகம் பண்ணினேன் என்று பாடுகிறார்;

கனிவு சற்று மில்லாத எல்லோருடைய மனத்தையும் புண்படுத்திவைது நான் அதில் இன்புறுவேன்; தூய்மையுடைய சிவனடியார்களுடன் இன்று கூடேன், அவருடைய சொற்கிணங்கேன்; ஒ யா து

ஒன்று விட்டொன்று பற்றி உழலும் இயல்பு வாய்ந்த மனமென்று சொல்லப்படும் துடிதுடிக்கும் மடமை பொருந்திய ஒன்று, நான் எனும் ஆணவமுனைப்புக் கொண்டே எம்மை அலைக்க ஐம்புல வேடர் கையில் அகப்பட்டுக் கெடுவதுவோ மிகவுள்ளேன்; உன்னுடைய மெய்யன்பர்கள் என்னைக் கண்டால் பயந்தோடும் நிலையில் கேவல மாய்க் கிடக்கின்றேன்; தூநெறி கண்ட சுவடு நடுவெழ, பூநெறி கண்டுளம் பொன்னகமாய் நிற்க, மேனெறி கண்டுளம் பகைவரையு முறவோராகக் கண்டும், பாம்பை ஆபரணமாகவும் கொண்ட தண் ணளிவாய்ந்த முழுதுமுண்மை யானவனே! என்னையுந் தன்னையு மொன்றுகத் தில்லை நடனத்தில் கண்ட மீதான ஜோதி வெற்பே நடுவிகவா நாயகனே! நம்மையாண்டு உம்முடைய பாதார விந்த மடையச் செய்வதுஉம் கடனே:

876. அன்பிலேன் இரக்கமில்லேன் அடியார்பால்
உறவுமில்லேன்
என்பெலா முருகநின்றிங் கேத்திடேன்
பாடேனந்தோ
துன்பமே மிகவுமுள்ளேன் சோதியே யமரரேறே
இன்பமே இலங்கைவாழும் இறைவனே
யெனையாள்வாய்.

[முன்பாட்டு விளக்கம் (முற்பகுதி)] இறைவனை எவ்வுயிரிலும் கண்டு அனைத்துயிர்களுடனும் வேறறக் கலந்து நிற்கும் முழுமுதல் வனின் அடிமை அவ்வுயிர்களெல்லாம் எனும் மெய்ம்மை யோர்ந்து அவைகட்கு நீங்கா அன்புபூண்டு பணி செய்கிலேன்; அவர்கள்பால் இரக்கமில்லேன்; தாயுமானவர் தருவதைக் காண்க:

அவ்வுயிர்போல் எவ்வுயிரும் ஆனபிரான் தன்னடிமை
எவ்வுயிரு மென்றுபணி யாஞ்செய்வ தெந்நாளோ?

என்று வருந்துகிறார், உன்னுடைய மெய்யன்பரான அடியருடன் கூடித் தொண்டு செய்கிலேன்; அவனை நினைந்து நினைந்துருக எலும் பும் நரம்பும் உருகிப் பாடித் தொழுதேத்துகிலேன்; [பாட்டு (870) விளக்கம் அன்பில்லேன் என்புருகப் பாடுகிலேன் காண்க] சஞ்சல முந் துன்பமும் மிகவுள்ளேன் [(876) கெடுவதுவே மிகவுள்ளேன் விளக்கங் காண்க:] மீதான ஜோதி வெற்பே, தேவர்கள் விண்ணோர் பரவி ஏத்தும் முழுமுதல்வனும் ஐந்தெழுத்துச் ஜோதியே! என்றும் அழியாப் பேரானந்தமே, இலங்கையில் ஞானகுரவனாக எழுந்தரு ளிய எம்பெருமானே எனையாளுவாயே.

877. ஆறணி சடையினனே அழகுசேர் மேனியானே
நீறணி நிமலா நெற்றிக் கண்ணனே நேரிலானே
ஏறமர் செல்வாவுன்னை ஏத்தியான் பாடமாட்டேன்
ஈறிலா வளங்கள்சேரும் இலங்கைமா நகருளானே.

திங்களுங் கங்கையுஞ் சடையிலணிந்தவனே; ஞானக் கண்ணென்னும் நெற்றிக் கண்ணூடாக எழும் அறிவு ஸ்வாலையாலே அஞ்ஞானமாகிய பசுவின் சாணத்தைச் சுட்டெரித்த வெண்ணீற்றைத் தேகம் முழுவதும் பூசி மும்மலமும் வேவச்செய்து, நீறணி நிமலனாக விளங்கும் நெற்றிக் கண்ணனே; நிமலனாக மோட்சவீடு அடையத் தகுதியுடையோனுய் பொன்மேனி யுடையவனாக விளங்குபவனே; அவனுடைய எண்குணங்களும் மற்றுஞ் சின்னங்களும் [870இல் 'மானிடனுப் மறைந்து வந்த' என்பதின் விளக்கங் காண்க.] வேறேர் ஒப்பிலாதவன் எனும் உண்மை காட்டுவன; ஆருயிர்களையே உன் ஊர்தியாகக் கொண்டு அவர்களை வினைத்தன்மையினின்றும் நீக்கியாண்டருள் புரியும்வண்ணம் உண்ணின்று இயக்குபவன் [865) 'ஈற்றில் வருவது' பொருள் காண்க.] எம்பெருமானே உன்னையான் போற்றித் தொழுது பாடமாட்டேனே, இலங்கையில் என்ஞானகுரவனாக எழுந்தருளிய எம்பெருமானே.

எல்லாஞ்சிவமே

அப்பனும் அம்மையுஞ் சிவமே
அரிய சகோதரருஞ் சிவமே
ஒப்பில் மனைவியுஞ் சிவமே
ஓதரும் மைந்தருஞ் சிவமே
செப்பில் அரசருஞ் சிவமே
தேவாதி தேவருஞ் சிவமே
இப்புவி யெல்லாஞ் சிவமே
என்னை யாண்டதுஞ் சிவமே




மங்களம் ஜெய மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
மூப்பொழுதுந் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத்தன்னு லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்குந்தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்









அரும் பொருள் அட்டவணை

அ

	பாட்டு எண்
அ' அருவாம் உருவர்னே	748
'அ' ஓசை நுண்வெளி	475
'அ' ஓசைமுதல் தோற்றம்	306
அகஞ் சிவலிங்கமாக	819
அக்குமாலே ஈந்த தேவன்	583
அங்கை அழல்	598
அங்குமிங்கு முள்ளானே குருவாய்	748
அங்கைத் தீயனைக உடனிருந்தறிபவன்	822
அஞ்சடுக்குத் தீபம் ஏகனநேகன்	444
அஞ்சுதல் சிவகுரு முதல் காணுதல்	432
அஞ்சுமடக்கா அறிவு	52; 64
அஞ்செழுத்துப் பொருளானே, ஒரு சொல்	743
அஞ்ஞான இரவு	775
அஞ்சுகங்கள் நாகணவாய் வித்தகனர்	790
அடித்தாமரை பரவி	755
அட்டமாமலர் ஞான பூசை	844
அணிக்கணியாய் நிற்கும் ஆதியே	816
அணுவுள் அவனும் விண்ணுடார்	780
அண்டபிண்ட அருள்ரூபங்கரைய	593
அண்டமும் பிண்டமும் ஓங்கார மேடை	663
அண்மையன் காண்	848
அத்திக்கருளிய ஆடகத்தரசே	795
அத்துவாமாக்கம் ஆறும்	299
அந்தணர்-ராகுதி வெகும் அழல்	718
அந்தணன் ஆசீர்வாதம் பூகொடு	444
அந்தணன் ஆசீர், திருநீறு தீர்த்தம்	445
அபிஷேகம் அகஞ் சிவலிங்கம்	442
அப்பனே ஆருயிரே	765
அம்மை, ஆற்றலே விடையேறி	769
அம்மை, கொம்மை முலைப்பாவை	768
அம்மை, தையல் தனக்குத்தன் பாதியுடல்	773
அம்மை மோகமார் பூண்முலையான்	772
அயனும் மாலும், திரிமூர்த்தி திரிதோஷ	267
அயன்மால் காண்பரிய பாதமலர்	754
அரக்கன் மலரடிக்கீழ்	766

அரவணி சிவபாலா 868
அரவு, சடையாட (தும்பை அரவு) 766
அரவுசேர் மேனியண்ணல் 595
அரனுறைதற்கிடமான நாடு 84
அரிகாணுனே 817
அரி மருகா 378
அருந்தவர் நெஞ்சில் கரும்பே 778
அரும்பு மாமலர் கொய்து பணிதல் 815
அருவனுருவனருவுருவன் 845; 530; 615
அருள்மேனி 593; 729
அருள்ரூபம் மனத்தில் தோன்றும் ரூபம் 120: 845
அலகிலாவிளையாட்டயர் 54; 55
அவஸ்தையைந்துந் தாண்டி தோழன் 664
அறவழி நிற்பவன் 43; 492
அறவழி கொல்லா விரதம் 477
அறிகுதி அறிவினலே தன்னை 784; 785
அறியாத பொருளை அறிதல் 187
அறிவறியாமை இரண்டும் நீயல்ல 328; 330
அறிவினுள் காணும் அறிவுரூபம் 593
அறிவுக்கறிவாகி பிறிவற 260
அறிவுக்கறிவாகி முருகன் தாள்கள் 399
அறிவுடையார் எல்லாமுடையர் 170
அறிவுப் பெருவெளி கற்பனை கடந்த 159
அறிவே வடிவு தில்லைத் தரிசனம் 836
அற்புதமே அற்புதமே நீயே 856
அன்பில்லேன் 870; 875
அன்பே சிவமாவது 149
அன்றும் இன்றும் ஒரு படித்தாய் 182

ஆ

ஆக்கையே கோயிலாக 819
ஆங்காரம் போச்சுது ஆனந்தம் போச்சுது 658
ஆடஎடுத்த அடித்தாமரை பரவி 755; 766
ஆடுமயிலே ஆண்டவனைக் கண்டு 327
ஆட்டக்காரன் நல்லூர் முருகன் 392
ஆணவமல நீக்கம் தரிசனத்தின் பின் 337; 546
ஆணவம் வெய்ய மதநாகம் 773
ஆதாரத்தாலே நிராதாரம் செல்லல் 225
ஆதாரம் ஆறுந் தாண்டி 265; 293
ஆதாரம் ஆறுந்தாண்டி தோழன் 664

ஆதிசேடன் 55
ஆதியந்தமில்லான் 769
ஆதியுமந்தமுமில்லான் ஆதியுமந்தமுமானுன் செல்லப்பன் 643
ஆமென நிற்பதும் அல்ல என்பதும் 868
ஆயிரமுகத்திலும் ஒற்றுமை காணல் 839
ஆரறிவார் திருவருளே எல்லாம் 435: 644
ஆருயிருக்குறுதுணைவன் 872
ஆருயிர் ஒன்றுபட்டு வாழ்தல் 602
ஆருயிர் தன்னை ஆத்மனுகக் காணல் 603
ஆருயிர் தோறும் அதுவதுவாய் 532
ஆருருவானவன் ஈருருவானுன் ஒருருவான 644
ஆலநீழலிலிருந்தறமுரைத்த 740
ஆவதோ அழிவதோ ஒன்றுமில்லை 783
ஆறந்தமானுர் ஆறந்தம் 55
ஆருர்சுவையே உச்சியாறு 766
ஆறுபிறைகொன்றை சடை 766
ஆறுபொலி இலங்கை ஆண்டவன் 766
ஆறுமுகவன் உருவமைப்பு 368
ஆன்மா ஆத்மன் குறிகுணமிலான் 186
ஆன்மா இயல்பு ஆனந்தம் 2; 332
ஆன்மா சைதன்னியப் பொருள் 338
ஆன்மா தன்னையேயறிதல் 872
ஆன்மா நீ (கடவுள்) 294
ஆன்மா பாவந் தேய்ந்தால் ஆத்மன் 373
ஆன்மா பேதமற்றது 160

இ

இகலுடன் மண்ணில் வாழ்தல் 784
இகல் செய்யும் மனத்தை வெல் 784
இடபாரூடர் 588
இடர்நீக்கியாண்டருளல் 493
இடுவதுவோ சிறிது மில்லேன் 875
இணங்கி வாழ்தல் - நடுவுநிலை 589
இணையடிகள் பரசிவான்மா 268
இணையடி பணிவார் தம்மை 819
இமையோர்கள் தேவன் 638
இம்பருளார் காதலிக்கும் பொருள் 847
இம்மாநிலத்தில் 16
இயக்கர் 594
இயமம் நியமம் பொறை 682

இரண்ய கர்ப்பன் - உயிர்கள் 62
இரவி மதியாகி தீயாகி 767
இராவணன் - இஞ்சிசூழுமிலங்கை 21
இருநிலனுய் 767
இருநிலனுய் இரவி மதியாகி 845
இருந்தபடியிருந்தான் 638
இருப்பு நெருப்புப் போலெவ்வுயிருள்ளும் 533
இருவினை கட்டழித்து - சிவன்செயலாய் 762
இலங்கை மாமணியே 767
இல்லையுண்டென்று சொல்லவொண்ணு 618
இல்லையென்ற சொல் மறைதல் 392
இல்லையென்று சொல்லுவார் 492
இல்லையென்னுமலே ஈதல் பேரின்பம் 57
இவ்வீணற்காக 452
இளமையின்பம் சிற்றின்பம் 140
இறைநூல் - அன்பினைந்திணை 44
இறைவனுக இயங்குவன் 581
இனியேதெனக்குன்னருள் 456
இன்பநெறிக்குள் புகுதல் மோனம் 358
இன்பப்பயிர் ஓங்கிவளர்நாடு 83
இன்றுகி நாளையாயிருப்பானை 740
இன்னல் தவிர்த்தாண்டான் 870

ஈ

ஈசனுக்குக் கிட்டவும் எட்டவும் 207
ஈயாதபுல்லர் 296
ஈரவார் சடையானை 746; 768
ஈர்த்தென்னையாட் கொண்ட 619; 763

உ

உக்கிரம் தவம், ஊசிமேனுனிமேல் 311
உச்சியினின்றுருகுழுகும் 788
உடம்பில் உபிரடங்குதல் 827
உடம்பு நெறிநின்று அவனையடைய 819
உடம்பு நெறிநின்று உயிர் சிவலிங்க 819
உடலம் எலும்புக் கோர்வை 583
உடனிருந்தறியும் அங்கைத்தீயன் 822
உண்டில்லையென்று சொல்ல வொண்ணு 833
உண்மை முழுதும் 519
உண்மையின்மையும் நீயே 862
உத்தம நட்பு அத்துவித இன்பம் 338

உத்தமர் சித்தமும் நீயே 863
உமாதேவி ஊன்பொலிந்த உடலவன் 56
உமை - ஆற்றல் விடையேறு 769
உமையாள் நேசிக்கும் பங்கன் 781
உம்பர் போற்ற விடையூருவான் 847
உயிரறிவும் உடையானறிவும் 747; 652
உயிருக்குறுதுணை நீயே 863
உயிருண் சுடர்மணி 769
உயிருண் சுடர்மணி சுகர் 'ஏன்' எனும் 769
உயிரெல்லாமாகியும் மாகாத 769
உயிர் இறைவனெளியுடனடங்கல் 827
உயிர்க்குயிராம் நாதன் 35
உயிர்க்குயிரானை 747
உலகம் நாடகமேடை 36
உலகுமுயிருமொன்றிநிறையும் 575
உல்லாசமான நடை 324
உவமானங் கடந்த கடவுள் 403
உவமை கடந்த வின்பம் 332; 489
உளவறிந்ததெல்லாம் உன்செபலென்பர் 620
உள்குவர்ருள்ளத்தில் நிற்பவன் 822
உள்குவாருள்ளத்தே பயிலுந்திருவுரு 759
உள்ள உள்ள மெல்ல மெல்ல வெளியாகு 680
உள்வீதிக்குப் போவோம் 497
உள்ளம் உயர்ந்த நிலை நந்தி 58
உள்ளம் கோயில் உயிர் சிவலிங்கம் 608
உறு தெய்வம் 257
உன்மத்தம் பிடித்த குருநாதன் 764

ஊ

ஊட்டி வளர்ப்பவன் இருக்க 576
ஊதியமாவதும் நீயே 863
ஊமை போலிருந்தே உண்மை உணர்தல் 823
ஊழியெல்லாம் ஒப்பில்லா ஒருவன் 749; 765
ஊருமில்லான் பேருமில்லான் 769
ஊர்பேரில்லாததும் நீயே 867
ஊன் உடல்களும் உயிர்களும் நீயே 862

எ

எங்கும் நினைத்துவரக் கூவாய் 793; 800
எண்குணத்தான் 168
எண்குணங்கள் 733

எண்ணங்கள் காரணகர்த்தரி 795
எண்ணங்கள் தோன்றுமிடம் நீயே 824
எண்ணங்கள் மும்மூர்த்திகளின் மூர்த்தி 765; 795
எண்ணில் சமயங்களாஞய் 842
எண்ணெழுத்துச் சொல்லாகி நிற்பாய் 857
எதிர்வஞ படைகள் காணுதே ஓட்டும் 779
எந்திரம் 744
எமன் வருமுன் திருவடிப்பேறு 587
எரியேந்துமியல்பினன் 747
எல்லா உலகுமான பரம்பொருள் 622
எல்லாரிடமுமீசன் எல்லாரையுமீசன் 476
எல்லாவளமுஞ்சேர் மன்னன் 771
எல்லையில்லா இறைவனே ஈசனே 574
எள்ளுக்குள் எண்ணெய் போல் 649
எள்ளும் எண்ணெயும் போல் இசைந் 800
எழில் - நைவேத்திய மேந்துங்கை 487
என்புகலாவது நீயே 865
என்புருகப் பாடுகிலேன் 870
என்போலும் அடியார் மேல் அன்பன் 844
என்போல் நின்றவன் 152
என்மனசைக் கரைத்தான் குரு 764
என்னரசை 741
என்னையெனக்கறிவித்தவன் 872
என்னேடே கூட எப்பிறப்பும் 749

ஏ

ஏகம்ப மேவி ஏந்திழை கலக்கந் தீர்த்த 825
ஏகனனேகன், சிவ. சித்தியார் 578
ஏகன் இமயமலைவாசன் 772
ஏகாந்த நிலை கருமத்தை ஆற்றி 403
ஏகாந்தநிலை உரையிறந்த உணர்வு 403
ஏகாந்தநிலை என்கைவசம் 221
ஏகாந்த சித்தம் 394
ஏகாந்த சித்தம் கிவனடியார் கூடி 403
ஏட்டகத்தே எழுந்தருள 769
ஏட்டிலெழுதிக் காட்டெ ாண்ணு 623
ஏர் ஊர்தி கோல ஏர் 255
ஏற்றில் வருவது நீயே 865

ஐ

ஐ சு மாறுமானவன் 646
ஐந்து பூதம்படைத்தவன் ஐம்பூதமுமானன் 645

ஐந்தெழுத்துள்ளனைத்தும் 651; 223; 869
ஐந்தெழுத்தோதி நமனை வெல்லல் 240; 787
ஐந்தெழுத்து விளக்கம் 1
ஐம்புலனுமறியாத வித்தகன் 757
ஐம்புலனடக்க திருவடித் தொண்டு 469
ஐம்புலனுமிறையிடஞ் செலுத்த 347
ஐயப்படாதவர்க்கு 579
ஐயமெலாந்தீர அன்று நல்லூரில் 826
ஐயம்புகுந்து ஆணவத்தை அழித்தல் 773
ஐயவாதனை 618

ஒ

ஒப்புயர்வற்றவன் 625
ஒளிக்கொளியைக் கொடுக்கின்ற 194
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கும் 274; 394; 596
ஒன்பது வாய்த் தோற்பை 774
ஒன்பது வாய்த் தோல்பைக்குள் உயிர் அடங்கல் 827
ஒன்றுய் இரண்டாய் மூன்றுய் 154; 350
ஒன்றென - என்னை நீ வேறுக 312; 313
ஒன்றென இரண்டென எண்ணவொண்ணு 650

ஓ

ஓங்காரமேடை 656
'ஓ' தரும் மைந்தர் மற்றும் 858
ஓதாமல் ஓதுவித்த ஒண்கழல் காட்டிவைத்த 84
ஓம் அகிலாண்ட ஓசை தொகை 61
ஓம் ஆமை எழுத்து 13
ஓம் எனும் உண்மையானும் 165; 303
ஓம் எனும் ஒன்பொருள் நீயே 868
ஓர் ஒரு சொல் அறிவாகி நின்றது 226

ஔ

ஔவிய நெஞ்சத்தால் அறியவொண்ணு 627

க

கங்காள வேடத்தன் 848
கங்கை ஆயிரமுடையான் 839
கங்கைச் சடையான் 766
கங்கையொடு திங்கள் புனைந்த 584
கட்டுநமன் கிட்டாரிய நாடு 85
கண்டதிலே மனம் வையார் 745

கண்ணப்பநாயனார் புராணம் 27
கண்ணேயிமை காப்பதுபோல் இறை 519
கண்ணுக்குக் கண்ணுகி 652
கண்ணுக்குக் கண்ணுகி நின்றாய் 857
கண்ணுதல் காட்டிலே காளியுடன் 730
கண்ணுதல் நாட்டிலே நயனகுரு 730
கதவுகள் திறந்தன - நிட்டை 443
கதிரேசனை முருகேசனைப் பணி 528
கந்தனைத் தந்தான் 642
கரவார்கள் உழவார்கள் இறவார்கள் 745
கரிக் குருவிக் குபதேசம் 841
கருங்குயில் 789
கருணை வாளன் எல்லையில்லாத 636
கருணை வாழ்வே - மழுப்படை 818
கருதுவார் கருத்தில் இருப்பான் 853
கருவிகரணங்கள் முப்பத்தைந்து 66
கல்லால் நீழல் தன்னில் 755
கல்லானைக் கன்னலுண்ணச் செய்தான் 855
கல்லெநிகர்த்த மனங்கரைய 472
களவுபடாததோர் காலம் 53
கறைசேர் கண்டத்தாய் 796
கனப்பொருள் - வாழ்வு 18
கன்றினைப் பிரிந்த கற்றுக் கதறுதல் 786
காட்சி உயிர்க்குயிராம் நாதன் 424
காட்டகத்தே 789
காட்டானை தோலுரித்து மகிழ்தல் 841
காண்பான் உயிர் தன்னை 424
காண்பான் காட்சி காட்சிப் பொருள் 634
காதலாற் பாடிக்கசிந்துருகும் குயில் 793
காப்பொலிகள் களிதூங்கும் நல்லூர் 791
காமனையுங் காலனையும் காய்ந்தார் 840; 746
காமாதி குணமெல்லாங் கட்டவிழ 192; 396
காமாதி குணமெல்லாங் கட்டவிழ வாழ்தல் 327
கார்மாந்த காரம் 393
காயமே கோயிலாக 837; 363
காரார் குழலாள் உமைகணவன் 796
கார்த்திகேயன் கதிர்காமம் 384
காலக்கடையாய் 781
காலன் வவிகுறைக்கும் மருந்து 488

காவல் நமக்கு - கர்த்தன் திருவடி 375
குணமில்லா மூர்க்கரொடுங் கூடி 871
குண்டலி ஆறு 766
குயில் கூவும், இறைவன் ஒளி 208; 381
குருநாதன் எழிலார் திருவடியை 760
குருநாதன், திணையளவு போதில் சிவமாதல் 871
குருநாதன் பாதமலர் 527
குருநாதன் பாவமெலாந் தீர்த்தான் 763
குருவாய் வருவது நீயே 865
குவலயமெல்லாம் நீயே 867
குளிரார் திருவடியை 732
குரும்பை நேர் கொங்கையாடன் 815
குன்று, எங்குஞ் சென்று நடமிடு 405
குன்று போல் நிற்க 478
கூடியே அடிமை கொண்ட 834
கூற்றைக் காய்ந்து பெரும் பயன்விளைய 815
கூற்றையுதைத்தது நீயே 865
கெடுவது - வேர் மிகவுள்ளேன் 875
கொடிகள் - முருகன் கணபதி சிவன் 464
கொல்புலியைக் கொன்றுடுத்த 768
கொல்லா நெறி நின்ற குரவர் 771
கொல்லாமை எனும் விரதம் 365
கொல்லா விரதம் 477
கொன்றை சடையுடையான் 597
கொன்றைக் கண்ணி விரிதல் 849
கொன்றை மாலை 766
கோலங்கள் ஐந்து 85
கோணது நாணது கும்பிடுதல் 434
கோலக்குவடு சூழ்குழகா 781
கோலக் கொடியாய் 781
கௌரி மகிஷாரி ஐவரும் 470

ச

சங்கரனைத் தாணுவை துதிப்பர் 746
சங்குமுழங்க எங்கும் அரகர 405
சந்திரோதயமே பொருந்திய 778
சத்தத்துள் சதாசிவன் அருவுரு 475
சத்திகள் ஐந்து தொழில் ஐந்து 470
சத்தியமென்பதும் தாமதமற்றதும் 868
சத்தியுஞ் சிவமும் 176

சத்தியுஞ் சிவமும் துணைப்பதம் 145
சரண கமலமலர் தலைதனில் வைத் 735
சாயுச்சிய பதவி 514; 756; 757
சாயுச்சிய பதவி சொல்ல முடியாத தீர்ப்பு 516
சாற்றவரியது நீயே 865
சான்றூர் நெறிகாட்டும் 494
சிசு உற்பத்தி - பூமி 62
சித்தத்துள் சிவலிங்கம் 475
சித்திகளைப் பெற்று ஆள்வன் 766
சித்திரமயிலேறு தர்மன் 379
சிரித்து முப்புரமுஞ் செற்றனர் 841
'சிவ சிவ' சிவன் செயலினுண்மை 765
சிவகுரு - ஸ்ரீ இராமகிருஷ்ணர் 77
சிவகுரு என்னை நீ அறிவாய் 488
சிவகுரு இன்பந்ததக்கல் 489
சிவகுரு - அம்மையப்பரை உருத்தாங்கி 138
'சிவ' சைவத்துக்-கே தனி உருத்து 306
சிவதத்துவம் 827
சிவ தொண்டு அறன்வழிநில் 291
சிவத்தியானம் 798
சிவநெறிச் செல்வர் 828
சிவபெருமான் என்போல் நல்லூரில் போந்தான் 793
சிவம் விளக்கம் 365
சிவம் சொல்லமுடியாத பொருள் 195;267
சிவ யோக வாழ்வு 34
சிவலிங்கத்தைப் பூசித்து ஒன்றுனர். 825
சிவனடியார் உள்ளமும் உயிரும் 732
சிவன்செயல் உண்மைப்பொருள் 91
'சிவாயநம' என்பார்க்கு அபாயமில்லை 269
சிவான்மா பரசிவான்மா 575
சீடனுங்குருவும் நீயே 869
சீரார் மேனியுடையானே 796
சிவபோதம் பரபோதம் ஞக்ளும் 60
சிவனே சிவனுய்த்தோன்றும் 26; 616; 227; 783
சிவன்முத்தன் 20; 5 ம் நிலை 577
சுடராய் கூறவொண்ணு 767
சுட்டுப் பொருளாக சதாசிவன் 593
சுட்டுப் பொருளாக சாக்ஷி முதலிய ஐந்தும் 593
சுண்ணப் பொடியாய் 781

சுந்தரர்க்குத் தூது சென்றவன் 642
சுமை தாங்குபவன் இறைவன் 329
சும்மா இருக்கச் சுகம் - சொரூபம் 641
சுரிகுழலாள் கணவா 775
சுரிகுழல் பங்கன் 635
சுருதி எல்லாம் ஓலமிடும் 84
சுன்னகத்தான் 637
சூக்கும சரீரமும் ஸ்தூலமும் மறைதல் 827
சூக்கும சரீரமும் ஸ்தூலமும் மாறிமாறி எடுத்தல் 827
சூதான வெளி - சுகம் பெற் 833
சூலப்படையாய் 781
செக்கர் வான்மேனியன் 769
செஞ்சடையானே 763
செஞ்சரணநிலவு விரிநாடு 87
செப்புவார், 'சிவசிவ', பிறவாரே 749
செல்லப்பன் இலங்கைச் சிவன் 773
செல்லப்பன் இலங்கைச்ஜோதி 774
செல்லப்பன் ஞானகுரவன் 429
செல்லப்பன் யோகநாதன் பணி 772
செல்வச் செருக்கு - இருவினை உண்டாக்கல் 480
சவ்விய மனமெல்லாம் நீயே 869
செழுவரையை வில்லாக வளைத்தவன் 854
சொல்லாமற் சொல்லித் துதித்தல் 348
சொல்லாலே துதிப்பவர் தம்துணைவன் 855
சொல்லிற் கலந்த சுவை - மாது 261
சொற்பதங்கடந்தோன் அறிவுப்பொருள் 159
சோதிவெற்பே துணைவனே 819

ஞ

ஞானகுரவன் காட்டிவைத்த நாடு 83
ஞானபூசைக்குரிய மலர் 244; 733
ஞானப்பொருள் வளர்தல் 597
ஞானமணிப் பூடணம் 771

த

தக்கனை, மோகமார் - முடித்தவன் 772
தக்கன் வேள்வி 641
தண்ணளிகொண்டன்னத்தோடாடை 601
தண்ணீர்க்கடவுள் 543
தத்துபரி நரியாகச் சமைத்தானே 590; 730
தத்துவம் உலகம் உயிர்உடம்பு 333

தத்துவப் தெரிவது தெரிவே 334
தத்துவம் தொண்ணூற்றாறும் 830
தத்துவாதீதன் 292
தந்திரம் 744
தந்திராமுலேகாரேனு 579
தம்பிரான் தோழன் 664
தருமமேயுருவாகச் சமைந்தான் 845
தவநிலையோர் பணியும் பொற்பாதம் 527
தற்பரன், கனிவடிவான உலகினை 18; 2
தன்னைத் தன்னுலறியும் சலாக்கியம் 403
தாதுபோலு மிலங்கைத் தலைவனே 801
தாயகம் நீயன்றே 837
தான்னை தத்துவனைத் தன்னரசை 741
திக்கெட்டும் பெருகி வளர் 84
திரிதோஷமிறக்கும் 267; 115
திரிமூர்த்தியறியும் 267; 115
திருக்கழல் 26
திருக்கோலங் காட்டி என்னை 834
திருத்தாண்டகம் அப்பர் புக்குநின்ற 845
திருத்தாண்டகம் யோகர் புக்கு நின்ற 845
திருத்தாண்டகம் புக்கு நின்ற 845
திருப்பாதம் சும்மா இருக்கும் அகம் 754
திருமுகம் அவரவர்க்கதுவது வாய் 121
திருமூர்த்தியறிதல் வானதி மாயையினால் 255
திருவடியே கிளத்துதுங் காண் 755
திருவருள் கைகூடுவது மவனே 738
திருவருளை நாடல் ஐம்புலன் வேட்கை 188
திருவரையை எடுத்த அரக்கன் 846
திருவாரும் மார்பானை 748
திருவெல்லாமொருங்கே திரண்டார் 841
திரை - இலங்கை சீரோடு வாழ்வான் 853
தில்லைத்தரிசனம் பொன்னம்பலம் 18; 19
தில்லைத்தரிசனம், மரணபயம் நீக்கம் 343
தில்லைத்தரிசனம் அறிவே வடிவம் 18; 836
தில்லை நடனம் 18; 85
தீதெல்லாம் நீங்க கூவியழை 793
தீமிளிர் அங்கையாளர் 79
தீயாகி இரவிமதியாகி 767
தீயினும் மிக்க திருமேனி 450

துடிக்கை யுடையானே 781
தும்பிழகன் வினயகன் 121
தும்பையரவு சடையாட 766
துன்பங்களைப் போக்கி நிற்கும் நாடு 83
தூங்காமல் தூங்குஞ் சுகம் 657
தூய்மையாக்கல் மனம், அகம் 798
தெய்வம் நீ சுற்றம் நீ துணை நீ குருவே 405
தெள்ளும் மாமறை தந்த திருவினன் 800
தேகாந்த காலம் 394
தேங்காயில் இளநீர் போல் 684
தேரடியில் தேசிகனைத் தரிசித்தேன் 461
தேர்முட்டிப்படி 429
தேவர்கள் ஐந்தும் தொழிலிந்தும் 470
தேவாதிதேவன் 2; 24
தேனூர் பொழில் நல்லித் தேரடியில் 732
தேனுந்து சோலைத்திருமனை வாழ் 792
தையல் தனக்குத் தன்பாதிபுடல் கொடுத்த 773; 772
தொல்லை நாட் செழுஞ் சுடர் 855
தோன்றுத்துணை 446

நு

நகை செய்வான் நாமறியோம் 433
நஞ்சை வென்ற கண்டத்தான் 873
நடராசன் சிவகாமியம்மை 202
நடிப்பில் சித்திரத்தில் இன்புறுதல் 38; 523
:டுவிகவா நாயகனே 875
நந்தி 18
நந்தி சற்றே விலகி நில் 19
நமக்குக் குறைவில்லை 623
நர சுரர் பணிஞான பண்டித 383
நரியெல்லாம் பரிசெய்தான் 847
நலஞ்சுழியா இன்பம் 55
நல்லூரில் பாதம் பரவி 758
நல்லூர்ப்பதியை நாடி தரிசிப்போம் 462
நல்லூர் மருந்தை அருந்தினர் வாழ்ந்தார் 380
நல்லூர் மலர்ச்சோலை 381
நல்லைகுலவு மலர் குறையாக்குளிர் 735
நல்லை நாகமலர் சொரியும் 728
நல்லை தேனூர் பொழில் 732
நல்விடையதும் நீயே 869

நவநவமாய் வருஞ்சோதி	403
நன்முயிருப்பதும் நீயே	867
நன்றென தீதென ஓத முடியா	661
நாகமலர் சொரியும் நல்லூ	723
நாட்டகத்தே நல்லூரில்	789
நாட்டில் குருவாளுன்	623
நாதப்பிரமம் உலகம்	61
நாதமே நாதாந்த வெளியே	13
நாதமெலாங் கடந்த நமன்	742
நாதாந்தக் காட்சிப் பேறு	13
நாமறியோமென்முன்	686
நாம் உள்ளும் புறம்பும் இறை	181
நாராயணன் மருகன் முருகன்	379
நால்வர் ஜனகர் முதலியோர்	65
நாளையாவதும் நீயே	867
நாளுன் நிற்பதும் நீயே	864
நானும் உயிர்க்குயிராம் நாதனும் ஒன்முய்	798
நிஷகாமிய கர்மம்	178
நிட்டை ஐந்து நிலைகள்	66
நிட்டை கருவிகரணங்கள்	66
நியமம் இயமம் பொறை	682
நிர்க்குண பிரமம் (ஸ்ரீ இராம)	30
நில்லாத நீர் நிற்கவைத்த தெய்வம்	120
நிற்பனவும் நடப்பனவுமாய்	853
நினைந்துருகும் அடியரை ஆள்	854
நினைந்துருகி வாழ் (பிருக உப 4-4-22)	342
நீக்கமற்ற எவ்வுயிரிலும் நிற்பவன்	819
நீங்கா தென்னுயிருக்கோருயிரே	856
நீதிக்கழல்	775
நீதிபதி நீயே	863
நீயும் நானும் ஒன்றென்	179
நீராயுருகி நிற்கவருளாய்	796
நீலகண்டனின் சொரூபம்	94
நீலக்கொடிபோல் உமைபங்கன்	781
நீரூர் மேனியுடையாய்	797
நீறுபொலி மேனி	766
நுண்பொருளான ஐம்பூதமாய்	842
நுண்வெளி (வரி 5)	159
நெற்றிக்கண்ணுல் கொளுத்திய குழகன்	787

நெற்றிக்கண் நேரவைத்த தெய்வம் 120
நேற்றின்றுவதும் நீயே 863

ப

பகலோடிரவறியாப் பண்பினன் 849
பக்தனுடைய மூன்று நாட்டங்கள் 444
பக்தி எனும் மனம் மெய்மையாம் உறவு 364
பக்தியுடன் வந்திடடி 432
பங்கையஜனக் குட்டி 451
பச்சைமலையுச்சியினின்றுருழுகும் 788
பச்சை மால் 758
பஞ்சை வென்ற மெல்லடியாள் 873
படிபுகழும் பாசுபத வேடத்தன் 840
படைப்பு, சிவகுரு உதவி 839
படைப்பு ,சிவம்" தொடர் 839
படைப்பு விளக்கமிலாதார் அவனையறியாதார் 737
படைப்பு வினைநீக்க 380
பட்டப்பகல் போலொளிரும் நடனம் 85
பண்ணவன் பரவுவார் கண்ணவன் 848
பண்ணூர் மொழி பங்கன் 795
பண்ணுக்கோர் இசையாகி நின்றான் 857
பண்டாரவேடம் புத்தபிரான் 436
பதமலர் போற்று மகம் 453
பதி செய்யு முத்தமர் மனத்தான் 854
பரசிவான்மா சிவான்மா 575
பரமசிவனுடைய குடும்பம் 327
பரமாகாசத்திரை எல்லையற்ற உலகு 331; 652
பரவவினியது நீயே 866
பராபரன் வேறுய் உடனுய் விளங்குபவன் 653
பரிமேல் வந்ததும் நீயே 864
பலவகையாகிய முகமுடையாள் 839
பவளம்போல் மேனியிலே 756
பழந்தமிழர் அறைந்து சூரர் தளர 405
பழவடியாரடிக்குடியாய் நின்றுய் 856
பற்றற்றூர் பரவும் ஒளி நீயே 857
பாசபந்தக் கயிறு அற அப்பர் பாட்டு 592
பாட்டகத்தே பரமன் கருணை 789
பாட்டிற் பொலிவதும் நீயே 862
பாணிநிக்கருள் கொடுத்தவன் 640
பாதசேவை 35

பாதியுரு பெண்ணுகி 756
பாரொடு விண்ணுய் பரந்தான் 853
பால்கடலைக் கடைதல் 381
பால்கடல் நஞ்சு 140
பாலிப்பார் பாவம் அறுப்பான் 853
பாழாகப் போகாமற் காப்பது உன்பாரம் 776
பித்தன் 325; 435
பித்தன், பிறவி நீக்கிய அத்தன் 136
பிரணவம் - ஓங்கார சொரூபம் 61
பிரமம் - ஞானமும் பிரபஞ்சமும் 203
பிரமமே நீயும் நானும் 785
பிழைகள் பொறுப்பானை 743
பிறப்பிறப்பில்லாப் பெருமான் 846
புக்கு திருத்தாண்டகம் 845
புண்ணியபாவம் நீங்கல் 784
புத்தியாகிய வாய்க்காலில் சிவானந்த வெள்ளம் 12
புத்தியிலுள்ளதும் நீயே 865
புந்தியை நீக்கியாண்ட விமலன் 831
புரமூன்றுஞ் செற்றனன் 841; 635
புருடனின் போர்வைகள் ஐந்து 65
புலித்தோலாடை 768
புல்நுனிமேல் நீர்போல் உடல் 397
புலிப்பார்வையொழி நாடு 86
புள்ளுலாவுமிலங்கை போந்தே 800
புறத்து மழை 541
புறத்தில் அலையாதே 346

பூ

பூக்கள் தேங்காய் பழங்குவிதல் 438
பூக்கும் பொழில் சேர்புனிதர் 786
பூங்கமலத் திருத்தாள்கள் 872
பூதகணஞ் சூழவருவார் 844
பூதகணஞ் சூழ விடையேறிப் பலிகொள்வர் 814
பூதகணம் வீதியிலே சூழ மெய்ப் பொருளை 756
பூதங்களைந்தாகிப் போக்குவரவில்லாத 742
பூதியணிந்து 756
பூரண நிலையடைந்தவர் விலகார் 155
பூபொலியுங் கொம்பரில் வாழ் 791
பெண்ணவன் ஆணவன் மண்ணவன் 848
பெருந்துறைப் பெருந்தோணி 301

பெருந்தோணி திருவடிப்பேறு 800
பேச்சிறந்த பெரியான் 846
பேதந்தவிர்ந்தாண்ட பிஞ்ஞகன் 758
பேதமற்றகடவுள் சித்தந்தெளிதல் 403
பேதம் போம் போம் வியாதி 403
பையரணிவது நீயே 866
பொடிபூசி 756; 780
பொதுநடம் முழுமுதல்வன் 326
பொதுநடம் அனைத்துஞ் சிவன் செயல் 389; 175; 199
பொல்லாப்பிங்கில்லை 518; 649
பொறுமையில்லேன் 870
பொறை இயமம் நியமம் 682
பொன்போலும் மேனியுடையாய் 844
பொன்முக மலர் தூவி 740
பொன்னம்பலம் பொற்றூண் 18; 25
பொன்னுலுய் இறையானுய் என்னுலுய் 786
பொன்னே மாற்றறியாத 816
போதுதாமுனதுக்கு தோழனுக்கு 673

ம

மகிழ்ந்து வந்து சிவமாக்கி 871
மங்குல் வாழும் இலங்கை வாழ்வானதே 799
மஞ்சை வென்ற மலைபொலியும் 878
மடவாள் பாகர் வித்தாரப் பூங்குயில் 790
மணமில்லா முருக்க மலர் 971
மணியோசை கதவு திறக்குமுன் 439; 440
மணியணிக் கண்டத்தானே 816
மண்சுமந்தடிபட்டான் 640
மதிக்கிரங்கல் 774
மதிதவழ்சடையாய் 779
மதியிலே ரவி சேர்ந்திட மெய்ப்பொருள் 63
மந்திரமும் தந்திரமுமானுய் 843
மந்திரம் 744
மயிலேறு வேலவன் - வாழ்வு 148
மயிலேறுவேலவன் சித்தத்திலூறு 455
மணிலைப் பொருவுமையாள் மருவு திருப்பான் 759
மயில்குயில்பயிலிலங்கை மாமணி 769
மரணம் பிறப்பறுக்குல் மருந்து 380, 325
மருவிநின்ற திறலானை உன்னுபவர் 747

மழவிடையுடையாயே கதி 779
மழுப்படையாய் 768
மழுமறைத்து வந்த நல்லூர் 792
மழைபொய்ப்பின் மன்னுதவம் மாயும் 549
மறவாமல் போற்றுதல் 654
மறிகடல் 540
மறைநான்கு மோதுகிலா 858
மனதைக்கட்டியாளுதல் மோனம் 365; 754
மனம் அடங்கல் பெருமான் கோயில் 347
மனம் அடங்கல் திருவடி மோனம் 348
மனம் அடங்கல் திருவடியில் கட்டு (சி. லஹ) 582
மனம் அருள் பங்கொண்ட 845
மனம் சூக்குமம் கரைந்து மறையும் 394
மனம் மதம்பிடித்த யானை 356; 754
மனம் மாயாகாரியப் பொருள் 159
மனம்குறிகுணமுள்ள பொருள் 186
மன்றுளார்டும் ஈசனைவழுத்துவோம் 786
மன்றுளாடும் மாமணி 593
மன்றுள் நிற்பதும் நீயே 867
மன்னவனுக மதுரையை யாண்டான் 820
மன்னுயிரெல்லாமாய் நின்ற திறலான் 747
மன்னுயிர்க்குச் சீடனுய் குருவாய் 767
மாசிலா மாதவத்தோர் இனத்தவன் 631
மாசில்லாச் ஜோதி 842
மாதவி புன்னை மௌவல் 758
மாதரும் நாடகமாதரும் 381
மாதுசேர் பாகன் 258
மாமதுரைத் தெருவில் வளையல் விற்றவன் 637
மாமயிலேறி மகிழ்ந்து காப்பாய் 463
மாமனுய் வழக்குரைத்தவன் அம்புவியில் 123; 639
மாயை தந்தை தாய் தமர்தாரம் 727
மாரனைக் காய்ந்தான் (மார்க்) 746; 840
மாரிக்கால கருணைமழை 447
மாரிமாறுபடுமாகில் ஆறுகுளமொழியும் 546
மாலும் நான்முகனுங் காணுணுத 246
மாலும் மலரோனுங் காணுத 150
மாறில்லாதவன் நீயே 861
மாற்றிப்பிறக்க மருந்து 396
மானிடனுய் மறந்து வந்து 870

முக்கட்கருணைப்பிரான் 120; 850
முக்கண்ணன் 767
முக்கண்ணன் இரவிமதிதீயாகி 765
முக்குணவிகாரம் தேவர்கள் 85
முக்குணமும் பிரதிநிதிகளும் 203
முதல்வன் புணர்ப்பால் உலகம் 57
முப்பதங்ககடந்த ஞானபதம் 355; 356
முப்புரமாவது மும்மலகாரியம் 51
முப்புரமுன் செற்றனன் யான் திருவருள் 763
முப்புரமெரித்த மூர்த்தியே 812; 841
முருகன் அறுமுகவன் 121
முருகன் மறக்குறத்தி மணாளன் 464
மூலப்பாலவயிடமுடையாய் 768
மூளிர்சேர் பொய்கை 805
மூனிவர் 504
மூனிவர் ஆணவத்தை அழித்தில 773
முன்னரசை 741
மூலத்தீ எழும் 836; 65
மூவர்களும் வணங்கி நின்ற மூர்த்தி 741; 765
மூவர் போற்றும் முதல்வனே 812
மூவர் முதல்வன் முத்திக்குளித்தே 795
மொச்சு பூம்பொழில் 805
மொய்குழலாள் பாகம் மறந்து வந்த 728
மோகம் முனிந்தாட்கொண்ட 829
மோனம் நல்லூரான் திருவடி 372; 423
மோனநிலை எய்தல் 348

வ

வஞ்சகப் பாபிகள் 139
வண்ணத் திருவடிக்கீழ் வைத்தல் 817
வருத்தமெலாம் வெந்துபோம் உன்னடிக்கீழ் 777
வருந்தாவண்ணம் தாளிணைகள் தர 817
வருபுனலாய் 767
வல்லமையுள்ளதும் நீயே 864
வழியறியாதடியேனுனக்குத் தஞ்சம் 87
வள்ளி தெய்வானை சமேதா 382
வறுமைப்பிணிக்கு மருந்து 380; 525
வறுமைப்பிணி நீங்கத் தியானம் 454
வாசமார் சுமல பாதா இமையோர் 820; 821
வாணளாசை தீக்கிரையானது 274

வாணுதல் கணவனும் நீயே 866
ளாய்ப்பொலிவு தோன்ற வந்தான் 791
வாழ்க வையகம் சுவாமி 378
வாழ்நாட்கள் ஆவதும் நீயே 864
விடையேறி வெள்விடை 199
விடையேறும் மெய்ப்பொருளே 767
விண்ணுட்டாரும் 780
விண்ணர்பரவி ஏத்தும் ஜோதிவெற்பே 820
விண்ணர் பரவும் பரனே 796
விண்ணுக்கும் விளக்கொளியாய் 857
விண்ணுலகம் 767
விண்ணுலகம் நாதாந்த வெளி 2
விண்ணோர் பெருமான் 757
விதிமுறை நின்று வொருவ கொன்றுங் 405
வித்தகஞ்சேர் திருவடி 432
வித்தாரப் பூங்குயில் 790
வித்யாதர விமலா கந்தா 379
விபுதர்கண்டும் கனமுறை வென்றும் 405
விமலன் வெள்ளம் பள்ளத்தை நாடும் 681
வியனுலகில் பாதமலர் காண்பார் 742
விருப்பும் வெறுப்பும் மாயை 336
வில்லேழுறியடித்தல் 392
விளங்கு நல்லூர் மோட்சம் 423
விஞயகன் தும்பிமுகன் 121
வீடு மோட்ச வீடு 448
வீண்பார்வனை - மாயவுலகு 473
வீதிகள் பல உள்ளது 382; 423
வீதிக்கு வீதி வெளிச்சம் 382
வீதியிலே பலகோடி பூதகணம் 756
வீதியிலே கும்பிட்டால் 366; 423
வீதியில் நித்தியா நித்தம் முக்தி 367
வீதியில் சோதிப்பிரகாசனை காணல் 382
வெட்டவெளி யாரேடும் நாடு 85
வெய்ய மதநாகம் வெந்துவிழ விழித்தான் 773
வேங்கை தேனுந்து தினைப்புனம் 383
வேதகீதத்தன் விண்ணவர் தம்பிரான் 801
வேதத்தினுட்பொருளே 758; 857
வேதம்வகுத்தானை வேதாவாகா 758
வேதமுடிவான மோனவித்தே 14
வேதமுறை தவருமல் அர்ச்சிப்பார் 142; 742
வேதனே 838
வேதாந்த சித்தாந்த தெய்வம் 14; 121
வேதாந்த சித்தாந்தங்களென்ரூல் என்ன 366
வேதோபதேசம் நீ 379
வேலனைக் கொண்டாடுதல் 382
வேல் துளைத்து மலம் நீக்கம் 534; 388
வேன்வி தகர்த்தவனே 415

மேற்கோள் அட்டவணை

அ

அகங்காரம் வன்மை (கீதை 18 - 53) 561
அகர முதல வெழுத்தெல் (குறள்) 306; 417
அங்கமே நின்வடிவமான (தாயு) 769
அசத்தறியாய் கேள் நீ 18
அச்சமில்லை நெஞ்சே (5-60-2) 301
அஞ்சுகொலா (4-18-5) 646
அஞ்சுமுகந் தோன்றில் (நக்கீரர்) 384
அஞ்செழுத்தின் உண்மை (தாயு) 651
அணுவுன் அவனும் (மூலர்) 290; 820; 5
அண்டபகிரண்டம் (தாயு) 574
அண்டபிண்டங் காணேன் (தாயு) 291; 196
அண்டியவர்க்கு (சிவ லஹரி 18) 174
அதுவென்றுல் எது (தாயு) 313
அந்தமில புகழாள் உமை (7-61-2) 825
அந்தரத்தே நின்றுடும் 128
அப்பணி செஞ்சடை (10-343) 57; 763; 635
அரவொலி ஆகமங்கள் 222
அருவினிலுருவந்தோன் (சித்தியார்) 839
அருவுருவம் எல்லாம் (தாயு) 770; 356
அருளது சத்தியாகும் (சித்தியார்) 473
அர்சுனு, தன்னையே (கீதை) (6-32) 329
அர்சுனு வேதங்கள் (கீதை) 2-45) 193
அல்லல் என் செயும் (5-1-4) 33; 401
அவ்வுயிர்போல் எவ்வுயி (தாயு) 491
அறவழி (கீதை (3-27-28, 30) 43
அவனறிந்து (குறள் 441) 90
அறிந்திடும் ஆன்மா (சித்தியார்) 487
அறிவை யறிவதுவே (தாயு) 574
அற்றூர் அழிபசி (குறள் 126) 90
அன்பருக் கன்பானமெய் 149
அன்பு சிவம் இரண்டென் 149; 27
அன்புறுசிந்தையர்
அன்னை அப்பனென் (தாயு) 307

ஆ

ஆசைச் சுழற் கடலில் (தாயு) 617
ஆசையறுமின்கள் 17; 40; 728
ஆண்டவனும் ஆன்மாவும் ஒன்று (உப நிட) 179
ஆதாரம் ஆறும் (கீதைசித்பவா) 13-22 293
ஆதியந்தங் காட்டாமல் (தாயு) 277; 33
ஆமை தன அவையவங்கள் (கீதை-2-58) 294
ஆயிர நதிகள் (4-53-10) 772
ஆரணங்கள் ஆகமங்கள் (தாயு) 241
ஆரானுமென்னையமட்ட 325
ஆரிருந்தென்ன ஆர்பேரியென்ன (தாயு) 334
ஆறாறு தத்துவத்தப்புறம் 224
ஆறு கொலா (4-18-6) 646

இ

இந்த ஆத்மஞான (கடஉப) 366
இந்த ஆத்மா பெரிது (பிருகதாருஉப (4-4-22) 222
இயக்கர் கின்னரர் (5-97-25) 5941
இயக்கிமரர் அறுபத்து (மாணிக்) 16

இயமம் நியமம் பொறை 682
இரண்டு கொலா (4-18-2) 267
ஹிருதயத்திலும்கிலாண்ட (இராமகிரு) 88
இருநிலனுய் தீயாகி நீருமாகி (6-94-1) 845
இருந்தார் சிவமாகி (மூலர்) 242; 29
இலங்கை மன்னன் எல்லர் வளமுஞ் 771
இல்லை தவறு (குறள்) 34
இவ்வாழ்வான் என்பான் (குறள் 560
இவ்வாத்மா ஒருபோதும் பிறப் (கீதை 2-20) 419
இவ்வாறு எப்போதும் (கீதை 6-28) 373
இழைத்த விடையர் 54
இளமதி வளர்சடை 122
இன்பத்துள் இன்பம் (குறள் 629) 589
இன்பந் தருவன் குயிலே (மாணிக்) 789
இன்னமை இன்பம் (குறள் 630) 589

ஈ

ஈசுவரன் கிட்டேயும் எட் (இராமகிரு) 203
ஈதல் இல்லவர்க்கு 481
ஈன்முளுமா யெமக் (4-94-1) 494

உ

உங்கையிற் பிள்ளை (மாணிக்) 317
உடம்பினை முன்னம் (மூலர்) 194; 114
உடல் பொய்யுறவா (தாயு) 380
உணர்த்துமுனை நாடாது (தாயு) 91; 24
உண்டுபோல் இன்றும் உலகை (தாயு) 91
உமாதேவியினுல் தழுவ (சி. லஹரி. 25) 218
உருவிற் திகழும் உமை (1-69-5) 597; 51; 405; 121
உரையன்ற தொன்றை (மூலர்) 442; 190
உரையிறந் துள்ளத்துள்ள (தாயு) 593
உரையுணர்விறந்த (தாயு) 326
உளவறிந்தெலாம் (தாயு) 620
உள்ளத்தொடுங்கும் (மூலர்) 273
உள்ளம் உருவென்றும் (மூலர்) 292; 116
உன்னற் கரியசீர் (மாணிக்) 271
உன்னையுகப்பன் குயிலே 216

ஊ

ஊரும் பேருமிலார் (தாயு) 770
ஊனிலுயிர்ப்பை (சம்பந்த) 682

எ

எங்கே எங்கே 41
எங்கேனும்யாதாகிப் (2-40 6) 827
எங்நனம் பாம்பு சட்டை (பிருக உப 4-4-7) 461
எட்டுக் கொலாமவ (4-18-8) 733; 267
எட்டுத் திசை கிழ்மேல் (தாயு) 578
எண்டோளனுவாய் 361
எண்ணுத தெண்ணிய (தாயு) 120; 272; 350
எண்ணில் பலகோடி உயிர் (தாயு) 91
எத்திக்குந் தானுகி (தாயு) 216, 22
எந்த உடலேனும் (தாயு) 827
எவனுடைய மனது (சிவ. லஹரி 55) 343
எவ்வடிவும் பூரணமாம் (தாயு) 287
எல்லா உயிர்களின் வித்து (கீதை 7-10) 227
எனக்குள் நீயென்றும் (தாயு) 716; 312

எனக்கெனச் செயல் (தாயு) 669
என்பேவிறகா இறைச்சி(மூலர்)311
என்னையுந் தன்னையும் (தாயு)
759; 476; 514
என்னையுன்னை இன்னதிதி (தாயு)
757
என்னை விடவேறொன் (9-22)
175

ஏ

ஏடுமதிக் கண்ணியானை
(4-3-5) 498
ஏறுமயிலேறி விளையாடு 368
ஏற்றஇவை அரனருளின்
(சிவப்பிர) 639

ஐ

ஐயமற்ற அதிவருணர் (தாயு)
499; 579
ஐயவாதனைப் பழக்கம் (தாயு)
618
ஐயனே உனையன்றி (தாயு) 297
ஐயா அருணகிரியப்பா 158
ஐவரோடுங் கூடாமல் (தாயு) 630

ஒ

ஒப்புனக்கில்வாவொரு
(மாணிக்) 257
ஒரு மனிதனுடைய
(ஸ்ரீ: இர: உப) 830
ஒரு மொழியாலே சுருதி (நிஷ்டா)
303; 226
ஒரு மொழியே பல மொழிக்கும்
(தாயு) 302; 61; 840:
ஒன்றன்றிரண்டன்
(களிற்றுப்படி) 650
ஒன்றி நின்றுள்ளே 10-2912) 495
ஒன்றுமற நில்லென்று (தாயு)
275; 338

ஓ

ஓம் தத் சத் பிரணவம்
(சித்பவா) 6

க

கங்குல் பகலறியாத கடவுள்
856
கங்கை யாடிலென் 71
கண்ட கண்ணுக்கு (தாயு) 593
கண்டுங் காணுணுத நான்
20
கண்ணிறைந்த மோனக் 151
கண்ணினுள் மணி (தாயு) 496
கண்ணுளி விளக் (சிவப்பிர) 653
கதிர்காமக் கதை 384
கரைந்து கரைந்துருகி 20
கர்மம் வீடு ஒன்றே (குறள்) 34
கர்மேந்திரியங்களால் (கீதை 3-7)
42
கலஞ்சுழிக்கும் கருங்கட 55
கலந்து நின்னடியார் (மாணிக்)
628
கல்லாதேனுலுங் (தாயு) 536
கல்லாலின் நீழல் தனில் (தாயு)
560; 69
கல்லால் நீழல் (தாயுமானவர்-
தருகை) 755
கறைக்கண்டன் பாற்கடலைக்
கடைந்த புராணம் 178
கற்க கசடறக் கற்ற (குறள்) 357
கற்பனை கடந்த ஜோதி 159
கற்பனைகளெல்லாமாய் 856
கற்புநிலைத்தைமாதர் 26
கற்றதுங்கேட்டதுங் (தாயு) 502
கன்மமேது கடுநரகேது (தாயு) 299

கா

காகம் உறவு கலந்துண்ண 11
காணுங் கண்ணுக்கு (சித்தியா)
652
காணும் தொழிந்தேன் (மாணிக்)
331
காதலாகிக் கசிந்துருகி (சம்பந்தர்)
244

காயமே கோயிலாக (4-76-4)
819; 608; 328
கூலவரையறையைக் 53
(கீதை 14-24-26) 30; 31

கு

குருவே சிவமான (மூலர்)
307: 390
குறியாக்குறியினில் (மூலர்)
195; 365
குறியுங் குணமுமற (தாயு)
717
குறைவிலா நிறைவே (மாணிக்)
256

கூ

கூடினுய் மலைமங்கையை
(7-54-8) 839
கூவின பூங்குயில் கூவின
(மாணி) 381
கூற்றுயினவாறு (அப்பர்) 493

கே

கேட்டலுடன் சிந்தித்தல்
(தாயு) 240

கை

கையார்ந்த திருத்தொண்டு
(சேக்) 772

கொ

கொல்லாமை 365
கொன்றுங்கில்லை 438

ச

சடத்துயிர் போலெமக்கு
(தாயு) 121; 581
சந்ததமும் நின்கருணை (தாயு)
631
சரியையின் தொழிலினி
(நிஷ்டா) 193

சா

சாக்கிரம நுதலினியிந்திரியம் 65
சாஷி ஆமோதிப்பவன்
(கீதை-13-22) 265

சி

சித்தமௌனம் செயல்வாக்
(தாயு) 24
சித்துஞ் சடமும் சிவத்தை
359
சிந்தை அவிழ்ந்த (தாயு) 676
சிரிப்பார் களிப்பார் 71
சிவசக்திவடிவம் (சி. லஹரி) 1
சிவசிவ என்கிலர் 112
சிவானந்த லஹரி சு. 52 120
சிவானந்த லஹரிசு. 764
சிவானந்த லஹரி சு. 74 40
சிவனேதியான சி. லஹரிசு
72 191
சிற்றின்பம் வெஃகி (குறள்) 568
சினந்தனையற்று பிரியமும் 135

சீ

சீரார் திருவடித்தின்
(மாணிக்) 804
சீர்வளருமதிற்கச்சி (சேக்) 772

சு

சுத்தசிவன் குருவாய் 172; 488
சுழுத்தி இதயந்தனிற் பிராணஞ்
65
சுற்றுவார் தொழுவார் 129

செ

செய்யுந் தவம் சற்றுமில்லா
217

சொ

சொரூபங் காட்டும் அருட்
(தாயு) 362
சொல்லொழியப் பொருளொ
(இராமலிங்) 269
சொற்றுணை வேதியன் (அப்பர்)
240

ஞா

ஞானத் திரளாய் நின்ற
(1-69-3) 597; 54

ஞான போனகர் எதிர்தொழ
(12-சம்-57) 562

த

தத்துவப்பேயோடே (தாயு)
590
தந்ததுன் தன்னை (மாணிக்)
296
தந்தை தாய் தமர் (தாயு) 727
தற்பரம் அல்ல சதாசிவ
(மூலர்) 489
தனியிருந் தருட்சகசமே (தாயு)
495
தன்மயஞ் சுபாபம்
தன்வயமின்றிக் கர்மம் (கீதை
3-5) 111

தா

தாயும் குழந்தையன்பு கிலஹரி
62
தானத்தினுள்ளே சதாசிவன்
5;198
தானே சுபாவந் தலைப்பட
(தாயு) 288
தானே திசையொடு 62

தி

திங்கள் தங்கிய சடை 223
திரிபுரஸம்காரஞ் செய்தவ
(சி: லஹரி 96) 346; 582
திருவடிகள் (அமிர்) 396
திருவடியே சிவமாவது (மூலர்)
469
திருவருள் ஞானம் 172
திருவருள் தெய்வச் செல்வி
(தாயு) 749
திரையில்லாக் கடல்போல
(தாயு)
190

து

துங்கமழு மானுடை (தாயு)
218 8;7
துள்ளுமறியாமனதுபலி (தாயு)
347
துறக்கப்படாதவுடலை
(4-113-7) 442

தூ

தூங்கி கண்டார் சிவலோக
74

தெ

தெய்வம் வேறுள 23

தே

தேவார்ந்த தேவனை
(6-99-7) 382

தை

தையலார் மையலிலே
(மாணிக்) 479

தொ

தொல்லையெல்லாம்
(முருகுதாஸ்) 384

தோ

தோடுடைய செவியன் 1

ந

நரியைக் குதிரைப்பரி (மாணிக்)
627
நல்லிசை ஞானசம்பந்தர் 187
நன்றெனவுந் தீதெனவும் 591

நா

நாயிற் கடையாய்க் கிடந்த
(மாணிக்) 273

நி

நித்தமாய் அருவாய் 2

நீ

நீ நாளும் நன்னெஞ்சே 64
நீயே நானென்றுரைத்த (தாயு)
355

நே

நேராகப் பெற்ற செல்வம் 481

ப

பகவானை நோக்கி நாம்
(இராமகிரு) 194

பக்தனுடைய படகு
(இராமக்கிரு) 175
பக்தி - கண்ணப்பர் (சி. லஹரி
63) 89
பக்தியே வேண்ட (சி. லஹரி
87) 296
பணிந்தும் கேட்டும் (கீதை 4-34)

பத்தரருந்தும் பரம் சுகம்
(தாயு) 471
பத்தர் சூழப் பராபரன்
(மாணிக்) 576
பல நூல்களைப் படிப்ப
(ஸ்ரீ இராமகிரு) 663
பற்றிய பற்றற (தாயு) 432
பற்றி வரையை யெடுத்த
(7-91-9) 696

பா

பாசகாலங்களெல்லாம் (தாயு)
592
பாராதி நீயாய் பகர்தல் (தாயு)
181
பாராதியண்டமெலாம் 2
பாரிடை ஐந்தாய்ப் பரந்
(மாணிக்) 200
பார்த்தா அவனுக்கு
(கீதை 6 40, 329
பார்த்தா வேறு எண்ண (கீதை
8-14) 194
பார்த்தா பெரிய பிரகிருதி
கீதை (14-3,4) 62
பாற்கடலைக் கடைந்த
(புராணம்) 178

பி

பிணக்கிலாத பெருமான்
(மாணிக்) 853
பித்தனென்று எனை உலக
(மாணிக்) 726
பிறப்பு மூப்பு உடல்புல் நுனி
மேல் நீர் போல் (5-77-3) 398
பிறையிளங் கண்ணி 145

பு

புண்ணிய பாவங்கள் (தாயு) 395
புழுமலியும் புன்குரம்பை
(தாயு) 482
புள்ளானும் நான்முகனும் 246

பெ

பெருநிலமாயண்ட (மூலர்) 63
பெருமைக்கே இறுமாந்து
(தாயு) 539
பெற்றேம் பிறவாமை (தாயு)
93

பே

பேசும் பொருளிலக்கித் 73

பொ

பொய்யனைத்தையும் (5-48-9)
724
பொருட்களை நினைத்தல்பற்று
(கீதை 2-62) 336
பொருந்தும் இப்பிறப்பிறப்
(மாணிக்) 300
பொருளினெடு நற்சுற்றமும்
(5-47-6) 309

ம

மண்ணுலகிற் பிறந்து (7-100-5)
732
மந்திரமதனில் பஞ்சமந்திரம் 14
மயங்குமாயம் 21
மலமில்லை மாசில்லை 18
மவுனத்தின் வைப்பே குருமணி
361
மறை தேடியறியாவுன்னை 362
மறைமுழக்கொலிப்ப (தாயு)
255
மனமெனுந் தோணிபற்றி
(4-462) 540
மன்னவனாகி மதுரையாண்ட
(புராண) 220

மன்னும் இருளே
(சிவஞானபோதம்) 62

மா

மாசில் வீணையும் (5-90-1)
543
மாடத்துளானவன் 120
மாடவீதி மன்னிலங்கை 21
மாடுமக்கள் சிற்றிடையார்
692; 132
மாப்பிணை தழுவிய மாதோர்
241; 269
மாமதுரைத் தெருவளையல்
(புராணம்) 637
மாமனுய் வழக்குரைத்த
(புராணம்) 123
மாயமாய மனங் (7-56-8) 324
மாயவாழ்க்கையை(மாணிக்) 332
மாயை தன்மலத்தை
(சித்தியார்) 363
மார்க்கண்டனுக்காக மறலி
(தாயு) 343
மாலும் மலரோனும்
(சி. லகரி 23) 159

மு

முத்தனே முதல்வா (மாணிக்)
761; 679; 133
முப்பாழும் பாழாய்
(பத்திரகிரியார்) 274; 718
முழுமுதலே ஐம்புலனுக்கும் 120
முறைபிறழுறுத (கீதை 18-33)
414

மே

மேதை நாடி (இராமகிருஷ்) 396
மேலே வேருள்ளதும் கீழே கிளை
(கீதை 15-1) 208

யா

யாகத்தில் மிஞ்சியதை (கீதை
(3-13-1 (1)
யாம் இரப்பவை அன்பும்
மூன்றும் (பரிபாடல்) 296
யாரிடமிருந்து (கீதை 12-15) 77

வ

வண்ணமாக முறுக்கிய (5-35-3)
839

வா

வாக்கும் மனமும் (தாயுமா)
577
வாராய் நெஞ்சே உன்தன்
(தாயு) 374
வாழ்க அந்தணர் (3-54-1)
507; 629
வானோர் மறை மாதவத்தோர்
120

வி

விதியையும் விதித்து (தாயு)
(தாயு) 774
விருப்பு வெறுப் பற்றனவும்
(கீதை 2-64) 336
விளங்கவெனக்குள்ளே (தாயு) 1
விளம்பியவுள்ளத்து(சிவஞனபோ)
31
விளையுஞ் சிவானந்த பூமி
(தாயு) 373
வினைதீர்த்த சிவகுரு 360
வினையாயின தீர்த்தருள (1-70-7)
308
வினையாற்றக் கடவார்ய்
(கீதை 2-47) 193

வீ

வீடினருலகினில் 242

வெ

வெளியாய இருளில் 33
வெளியில்வெளிபோய் (மூலர்)
274; 827

வே

வேட்டைப்புலப் (தாயு) 415; 811
வேண்டத்தக்க தறிவோய்
(மாணி) 601; 736
வேதங்களாடமித ஆக (மூலர்)
290
வேதத்தின் அந்தமும் மிக்க 55
வேதாந்தஞ் சித்தாந்தம்
(தாயு) 197

வை

வைத்ததேகம் வருந்த 162

வையகமாதர் சகத்தை
(தாயு) 480

பாட்டு அட்டவணை

அ

அஃகமும் காசுந்தேடி அலைந்து 201
அஃகமும் காசும்தேடிடில் 379
அகம்தூய்மை 385
அகரமாம் எழுத்துப்போல 202
அகலிகை கல்லானாள் 326
அக்கினது மாலை 339
அங்கிங்கெனுதபடி 192
அங்கிங்கெனுமலாண் 339
அங்குமிங்குமாக 426
அங்குமிங்குமெங்கும் திருக் 309
அங்குமிங்குமோடி 395
அங்கையிலே பூவெடுத்து 279
அங்கையிற் போது 280
அச்சமும் கோபமும் 87
அச்சமொழியும் 448
அஞ்சடுக்குத் தீபமுதல் 278
அஞ்சும் மூன்றும் 22
அஞ்சுகங்கான் நாகண 449
அஞ்சு பூதம் நீயல்ல 308
அஞ்சுமடக்கி 327
அஞ்செழுத்தாலே அனைத்தும் 89
அஞ்செழுத்தினை 37
அஞ்செழுத்துள்ளே (உந்தீபற) 150
,, (திருவுந்தி) 368
அஞ்செழுத்தை வழுத்திட 461
அஞ்செழுத்துள்ளே அனைத் தையும் 365
அடியவர் மனத்தை 467
அண்டசராசரம் 89
அண்ட சராசர மெல் 65
அண்டமும் பிண்டமும் ஒன்றே 374
அண்ட பிண்ட மெல்லாம் 227
அண்ணன்மாரே 191
அர்த்த சாமப் பூசைக்கு 279
அத்துவா மார்க்கமாறும் 194
அந்தமும் ஆதியும் அகன் 116
அந்தமும் ஆதியும் அறியாஞை 88
அந்தமும் ஆதியும் இல்லான் 47
அந்தமும் ஆதியும் இல்லா ஒரு 531
அந்த வாக்கும் 319
அப்பர் சுந்தரர் 463
அப்பனும் அம்மையும் 499
அப்பனே ஆருயிரே 429
அம்மையு மப்பனுமாய் 165
அம்மையப்பனை 110
அயனு மரியும் 128
அரகரவென்று தினம் 128
அர்த்தசாம 279
அரவுசேர் மேனியெம் 345
அரனு முமையு .. 331
அரியதிலரியது ஆன்மா 119
அரியயனுந் தேடியறியாத் 420
அருந்தவர் நெஞ்சில் நிகிக்கும் 440
அருமருந்தொரு 286
அருவாகி நின்றவன் 352
அருவாயுருவாயருவுரு 319
அலகில் உயிர்களை 91
அலையும் மனத்தை 333
அல்லலற்று வாழவழி 232
அல்லலெல்லாம் நீக்கி 394
அல்லும் பகலும் அறிவாகி 152
அவனிவனெ ரென் 391
அவனிவ னென்றதை 403
அவனின்றி யோரணுமசை 192
அழகாருமம்புலியும் 346
அளவில் மதந்தோறும் 346
அளவுக்குப் போசனத்தை 208
அறத்தேர்டு பூசை 233

அறம் பொருள் இன்பமும் 347
அந்தணன் அறவாழி 358
அறவோ ரெனப்படுவர் 327
அறிகுதி யறிவிலுலே 446
அறிவறியாமை 218
அறிவுக்கறிவாகி நின்றுய் 169
அறிவுக்கறிவாகி யங்கு 322
அறிவுக்கறிவாகி யப்பாற் 257
அறிவுடையார் எல்லா 338
அறியும் பொருளும் 348
அனைத்தும் ஒன்றுய் 193
அனைத்தும் சிவன் 120
அனைத்தும் சிவன் செயல் 220
அன்பர் பணி 71
அன்பிலேன் இரக்கமில்லேன் 511
அன்பிலேன் பொறுமையிலேன் 506
அன்பு சிவமெனல் 28
அன்பு சிவமென் 113
அன்புடனே ஐந்தெழுத்தை 307
அன்புடையோர் 348
அன்பு நெறியும் 228
அன்பே கடவுள் 90
அன்மே சிவமாகக் 875
அன்பே சிவனென அறிவார் 314
அன்பே சிவமென் 80
அன்பே சிவமெனு 387
அன்பேயுருவாய் 300
அன்னத்தோடாடை 347
அன்னை பிதாக் குருவாய் 69
அன்னை பிதாக் குருவாகி 96

ஆ

ஆக்கினுனெனை 187
ஆக்கை நீ யல்லை 195
ஆக்கையே கோயிலாக 468
ஆங்காரம் போச்சுது 372
ஆசை நிகளத்தினை 353
ஆட வெடுத்த 421
ஆடுபாம்பே பணிந் 48
ஆடு மயிலே 212
ஆடுவார் பாடுவார் 86
ஆணுமாய்ப் பெண்ணுமாகி 203
ஆதாரத்தாலே 151
ஆதாரமாறுந் 475
ஆதாரமாறும் அகத்தையே 374
ஆதாரமாறையும் 172
ஆதியந்த மான்மாவுக் 376
ஆதியந்த மில்லாத நாடெங்கள் 73
ஆதி அந்த மில்லையென்று 267
ஆதியந்த மில்லை என்றுன் 11
ஆதியு மந்தமு மில்லா 365
ஆதியுமில்லை 33
ஆதியும் அந்தமும் இல்லா 90
ஆயிரந் திருநாம 479
ஆயு நான் 231
ஆரகத்தினும் 181
ஆரறிபவ ரென்ன 130
ஆரறிவாரென அன்று 177
ஆரறிவாரென்று சொல்லிக் 275
ஆராய்ந்து நற்கருமம் 348
ஆருமறியாமல் 426
ஆருமறியா ரென்று 268
ஆருயிர்கள் தோறு 301
ஆருயிர் தோறு 320
ஆரையனே 155
ஆவது அழிவதுதான் 334
ஆவதொன்று 509
ஆவதோ ஒன்றுமில்லை 445
ஆளான அன்பர் 167
ஆளான மெய்யடியார் 439
ஆறணி சடையினனே 512
ஆறணிந்த திருச்சடையா 494

ஆறுகுளமேறி 325
ஆறுசூடிய 106
ஆறுதல் பெற 463
ஆறுபிறை கொன்றை 430
ஆறும் குளனும் 419
ஆறுவருடமவன் 389
ஆறு வைத்ததும் 389
ஆன்மா அழியா 46
ஆன்மா அழியாதென்று 240
ஆன்மா ஒருபோதும் 270
ஆன்மாவே நாமென்று 268
ஆன்மாவே நாமென்றும் 121
ஆன்மாவை 290
ஆறியாறி 62

இ

இச்சையானவை 460
இடபந்தனிலேறு 340
இடுவதுவோ சிறிது 510
இடைபிங்கலே 309
இடையிடையே 104
இட்டமிட்ட 189
இட்டுண்டு வாழ்வார் 349
இணக்க மாயிருந்து 127
இணங்கி வாழ் மாந்தர் 340
இணையடி பணிவார் 468
இப்பிறவி தீர்ப்பானே 417
இம்மைக்கும் 100
இம்மை மறுமை 321
இயக்கர் முனிவர்கள் 344
இரவு பகலற்ற ஏகாந்தம் 408
இரவு பகலற்ற தனி 328
இரவும் பகலுமற்ற 121
இராஜாதி ராஜன் 140
இருநிலனுய்த் 431
இருநிலனேடிரவி 487
இருந்த இடம் 74
இருந்து பார் என்றென 196
இருப்பு நெருப்பும் 320
இருவழியை 6
இருவினை நீக்கி 203
இருவினையான் 405
இருவினையின் கட்டழிந்து 427
இருளை நீக்கி 22
இல்லறத்தின் நின்றெளிரும் 332
இல்லற மென்பதியார்க்கும் 332
இல்லாளுந் தானுப் 329
இல்லை உண்டென்று 321
இல்லை உண்டென்று இயம்ப 353
இல்லை உண்டென்று சொல்ல 376
இல்லை யென்னுமலே 334
இல்லை என்று சொல்லுவார் 301
இளமை இன்பத்தில் 10
இளமை நிலையாதென 257
இளமையு மூப்பு 146
இளம் பிறை அணிந்த 146
இளம்பிறை சூடி 289
இளமை மூப்பிலான் 49
இளமையும் மூப்பும் 146
இனிய அருள் 302
இனியவனே 169
இனியேதெனக்குள் ... வருமோ 232
இன்சொற்றவறூர் 313
இன்பதுன்பம் 39
இன்பமே யல்லாமல் 220
இன்றுகி நாளையாய் 411
இன்றிருளை நீக்கி 286
இன்றென 446
இன்றைக்கோ நாளைக்கோ 298
இன்ன தன்மை என்று நம்மை 191

ஈ

ஈசனிணையடி 105
ஈசனே எம்மை நீங்கா 469

ஈசனே தில்லூர் 261
ஈசனே நல்லூ 317
ஈசன் ஒருவனெண்ணிப் 376
ஈசன் மேல் நேரமாய் 121
ஈசனே யெல்லியில் 334
ஈன்முளுமர்யெமக் 302
ஈயாத புல்லரைக் 171
ஈயாத புல்லர் தங்கள் 196
ஈரவார் சடை 50
ஈரவார் சடையானே 415
ஈரவர்ர் செஞ்சடையா 431
ஈர்த்தென்னே யாண்டவன் 354
ஈர்த்தென்னே யாட்கொண்ட 487
ஈவாரே எல்லாம் 349
ஈறில்லாதவன் 501
ஈன்றிடு தந்தை 204

உ

உணர்ந்தார்க்கு உணர்வரிய 115
உணர்ந்தார்க்கு முணர 204
உண்டில்லே என்று சொல்ல 359
உண்டோதானுனே 230
உண்மை முழுதுமென ஓது 418
உண்மை முழுது மென்றேத்தி 377
உண்மை முழுது மென்ற ஒரு 121
உண்மை முழுது மென்று சாற்று 312
உண்மை முழுவது மென்றுரை 391
உண்மையும் இன்மையும் 501
உத்தம நட்பை 219
உயிருக்குயிராகி 425
உயிரெல்லாமாகியும் 432
உருக்கு மொழியால் 265
உருகியுருகி யுணர்ந்தேன் 66
உருவேறவே செபிக்க 83
உரையற்ற 398
உலகெம் யாவையும் 51
உலகுமுயிருமாயொன்றி 335
உவமானம் கடந்த 260
உல்லாசமாக 252
உவமை கடந்த ..எல் 289
உவமை கடந்த விண்பம் 217
உளவறிந் தெல்லாம் 353
உள்குவாருள்ளத் 469
உள்ளமே கோயில் 349
உள்ள வுள்ள 380
உன் நினைவல்லால் இல்லே 397
உன்மத்தம் கொண்டு 428
உன்மத்தம் போலே 197
உன்னை மறப்பேனே 302

ஊ

ஊசிமேல் நுனி 205
ஊட்டி வளர்க்க 335
ஊன் பொருளு 271
ஊதியமாவதும் நீயே 502
ஊமை போலிருந்தே 470
ஊரார் சிறக்க 350
ஊருமில்லாய் பேருமில்லாய் 433
ஊரும் துணையில்லே 155
ஊரும் பேருமில்லா ஒரு பொருளே 122
ஊரும் பேருமில்லா ஒருவருக்குக் 377
ஊரும் பேருமிலான் உவந் 354
ஊரும் பேரும் இல்லையென்று 268
ஊரும் பேரும் இல்லான் 621
ஊழ்வினை போக 391
ஊனுய் உயிராய் உளத்திற் 304
ஊனுமவனேயிருமவனே 347
ஊனுமாய் உயிருமாகி 197

உளன் பொதிந்த 52

எ

எங்களை ஆள் குருநாதா 209
எங்களை விட்டுப் 377
எங்கள் குருநாதன் 179
எங்கும் ஈசனே 36
எங்கும் சிவனடியை 125
எங்கெங்கு சென்றாலும் 382
எங்கே நீ அங்கே நான் 283
எட்டு மிரண்டு மறியா
எனக்கொரு 174
எட்டு மிரண்டு மறியா
எனக்கு நல் 407
எண்ணமெலாம் 328
எண்ணிய எண்ணம் 198
எண்ணுவார் எண்ணந் 241
எத்தொழிலைச் 241
எந்த நேரமும் 105
எந்த வேளையும் 195
எந்தையே எந்தையே 166
எந்தையே எம்பெரு 155
எந்நாளும் நல்லூரை 234
எப்பவோ முடிவான 131
எல்லாஞ் செயவல்ல
இறைவனே 434
எல்லாஞ் செயவல்ல சித்தர் 481
எல்லா உலகமுமான 632
எல்லாப் பொருள்களும் 502
எல்லாமா யல்லவுமாய் 304
எல்லாமாய்
அல்லவுமாயிருக்கும் 225
எல்லாமென் 64
எல்லாம் அவனே 221
எல்லாம் சிவன் செயலே 44
எல்லாம் சிவன்செயல் 179
எல்லாம் செய 132
எல்லாரிடத் 251
எல்லா ருள்ளத்தினும் 85
எல்லாரையு 292
எல்லாவுல 355
எல்லார்க்கு மன்பு 85
எல்லையிலாக் கருணை 360
எவ்வுயிருந்
தன்னுயிர்போல் 214
எழுக புலருமுன் 30
எழுதவே யொண்ணு 336
எள்ளப்படா ரறிஞர் 350
எள்ளுக்கு ளெண்ணெய் 380
எள்ளுக்குள் எண்ணெய்
போல் 367
எள்ளும் எண்ணெய்யும்
போல 456
எள்ளு மெண்ணெய் 52
எனக்கின்பமே வா 239
எனக்கும் தனக்கும் 122
எனக்குள்ளே 395
என்பிழைகள் 413
என்பு பூண்டவன் 159
என்றும் மறவா 293
என்னகச்சோதியே 398
என்னரசை ஆரமுதை 412
என்னுயிருக்குயிரானே 416
என்னை நீ வேறு 206
என்னை யறிவித்தேன் 177
என்னையன்றி 408
என்னையெனக் 1
என்னையெனக்கென்னுலே 508
என்னையெனக் கென்னுலே 452
என்னேடு 396

ஏ

ஏகமனதாகிக் 278
ஏகம்ப மேவியந்த 471
ஏகனநேகனுயுற்ற 336
ஏகனநேகனிறைவனடி
வாழ்க 401
ஏகனனேகனென்றுமிமைய 435
ஏகாந்த 254
ஏடவிழ் கோதை 199

ஏட்டி லெழுதிக் 355
ஏதும் அவன் செயலென்று 377
ஏதும் சிவன் செயல் 122
ஏது மொன்றற 206
ஏவாது செய்பவரை 351
ஏழைபங்கன் 53
ஏறுவாம்பரி 106
ஏற்றில் வருவது 503
ஏனையவ நங்களினு 330

ஐ

ஐஞ்சு பூதமும் 365
ஐஞ்சு மாறுமான 366
ஐந்தாண்டு விழாவதனை 207
ஐம்புல னைந்தையும் 355
ஐம்புலன் தன்னை வென்ற 378
ஐம்பூதம் நாமல்ல வென்று கூவு 68
ஐம்பொறியை அடக் 42
ஐம்பொறி வழியினிற் 393
ஐயந் தீரடியேன் 471
ஐயப்படாத 337
ஐயமில்லா 58
ஐயமிலாம் 122
ஐயமேனென்றுரைத்த 205
ஐயமேன் காணு 199
ஐயங் கொடுப்பது 504
ஐயம்புகார் 351
ஐயம்புகுந்து 437
ஐயனே சற்குருநாதா 171

ஒ

ஒண்டொடியே 275
ஒப்புயர்வற்றவன் 355
ஒரு சொல்லா 64
ஒரு நேரம் நெல்லரிசி 397
ஒரு பொல்லாப்பு 215
ஒரு பொல்லாப்புமில்லை 212
ஒரு பொல்லாப்புமில்லை யுணர்வீர் 393
ஒரு பொல்லாப்பு மில்லையென்ற 186
ஒரு பொல்லாப்பு மில்லையென்ற வாக்கு 312
ஒரு மொழியதனு 200
ஒரு மொழியா லென்றன் 305
ஒருவனுலே உலகம் 54
ஒருவனே தெய்வமெனும் 123
ஒவ்வாதென சொல்லி 281
ஒழுக்கம் விழுப்பந்தரும் 399
ஒளிக் கொளியை 134
ஒற்றுமை யிந்தவூரிடை 458
ஒன்பது வாய்த் தோற்பைக் காவி 437
ஒன்பது வாயில் உடைய 351
ஒன்பதுவாய்த் தோற்பையு 337
ஒன்பதுவாய்த் தோற்பை தன்னில் 472
ஒன்றுகக் கண்ட 378
ஒன்று யிருப்பது 504
ஒன்றுய் இரண்டாயொரு 225
ஒன்றுய் இரண்டாய் ஒரு 115
ஒன்றிரண்டென்று 358
ஒன்றிலொன்று 38
ஒன்றென இரண்டென ஒத 373

ஓ

ஓங்காரத்தி 54
ஓங்காரத்தினுள்ளே 123
ஓங்காரத்தின் 356
ஓங்கார மேடையில் 391
ஓடாதே வழுக்குமடி 279
ஓடி யோடி 63
ஓடு கங்கையுடன் 464
ஓடும் புளியம்பழமும் 338
ஓதியோதி... வீரமே 43
ஓதியோதி தன்னையே 61

ஓதும் பொருளும் 351
ஓதுவார் நெஞ்சில் 168
ஓமெனும் ஒண்பொருள் 505
ஓமெனுந் தாரகம் 383
ஓமெனும் எழுத்தினுள்ளே உல 200
ஓம் சிவாயநமவென்று சொல்லு 379
ஓம் நமசிவாய வென உருவேற 306
ஓயாமல் உள்குவார் தம் 141
ஓருரு வானுன் ஈருரு 365

ஔ

ஔவை நல்லை 201
ஔவியம் செல்வம் 338
ஔவிய நெஞ்சத்தால் 356
ஔவிய மற்றதும் 505
ஔவிய மில்லாவறிவு 123
ஔவிய மில்லா அறிவை 379
ஔவியம் பேசி 306
ஔவை உறுவை 352

க

கங்கைச் சடை 124
கங்கையொடு 339
கசடுதீர்த்தறங் 19
கஞ்சனும் 173
கஞ்சமலர் 308
கட்டுநமன் 74
கண்டாயோ கார்மயிலே 227
கண்டார் நகை 275
கண்ணிறைந்த செல்வத்தை 114
கண்ணுக்கு அணிகலம் 81
கண்ணுக்குக் கண்ணுயிருக் 369
கண்ணுக்கு கண்ணுயிருக்கின்ற 373
கண்ணுக்குக் கண்ணுகி நின்றுய் 499
கண்ணைப் போலறங் 43
கண்ணையிமை 388
கமலநான்முகன் 161
கருத்தில் கருத்தாயிருக்கும் 283
கருத்திலிருக்கும் கதிர்காமத்தோனே 266
கருவூரில் வாராமை 84
கர்ப்பூரப் பெட்டிகளும் 276
கல்லார் கற்றூர்க்கும் 321
கல்லார்க்குங் கற்றவர்க்குங் 97
கல்லாதார் பாற் 26
கல்லை நிகர்த்த 290
கல்லை நிகர்ந்தமனங் 394
கல்லானே கன்னலுண்ணச் 497
கறுத்திருண்ட கண்டத்தின் 493
கன்னலொடு செந்நெல் 419
காட்டிலே காளியுடன் 405
காணுங் கண்ணிற் 193
காண்பான் காட்சி 359
காண்பானுங் காட்சியும் 270
காதலாற் பாடி 451
காதலிக்கு மெய்யடியார் 226
காமமுதலாறுங் கடிந்து 255
காமமுதலாறுங் களைந்து 329
காமாதிகுணமெல்லாம் 133
காயமே கோயிலாகக் கண்டிடும் 478
காயம் அழிந்து 45
காரார் குயில் 297
காலமுமில்லை 84
காலனைக் காலால் 385
காலன் வலி 298
காலைக் கட்டித் 59
காலையெழுந்திருந்து 66
காலை வேளை 460
கானக்குறத்தி 370
கிட்ட நெருங்கையிலே 273
குடிப்பிறந்தாரோடு 208
குணமில்லா மூர்க்கரொடுங் 507

கும்பிடுவார் நன்மனத்தை 224
குருந்த மரத்தடியில் 361
குருபாதம் 84
குருவடியொரு 210
குழந்தை வேலா 262
கூவுகுயிலே (1) 144
கூவுகுயிலே (2) 266
கையில் மலர் 159
கொச்சை மக்களைக் 111
கொஞ்சம் கொஞ்சமாய் 207
கொடுத்தார்க்கு 389
கொண்டுங் கொடுத்துங் 15
கொத்தார் குழலுமை 155
கொல்லாமை கள்ளாமை 84
கொல்லாமை
பெரிதென்று 233
கொல்லார்பொய் 332
கொல்லாவரமெனக்கு 293
கோணுத சிந்தையுடன் 274
கோலமாமலர் 112
கோலமொன்றும் 186
கோலாகல 385
கௌரி மனோகரி 285

ச

சங்கரன் தாளினை 340
சங்கரன் திருப்பாதம் 310
சங்கோசை 271
சண்பக மரத்தடியில் 272
சத்தி சிவமாகித் 116
சத்தி சிவமொன்றுன 125
சத்தியம் பொறுமை 236
சந்திரன் தவழ்தரும் 88
சாந்தம் உபசாந்தம் 24
சித்தத்தினுள்ளே சிவனை 291
சித்ததுள் தித்திக்கும் 115
சிந்தையிலன்பு 155
சிந்தையில் வெந்துயர் 148
சிரித்து நல்லார் 182
சிரித்து முப்புர 160
சிரித்துப் புரமூன்றுஞ் 483
சிவசிவ வென்றெந்த 17
சிவதொண்டு செய்வார் 141
சிவதொண்டனென்னும் 162
சிவதொண்டன் 392
சிவத்தியானஞ் 455
சிவத்தைக் கண்டிடார் 41
சிவத்தை நோக்கி 62
சிவநாமமைந்தெழுத்தும் 207
சிவநாமஞ் சொல்லி 216
சிவநெறிச் செல்வர் 473
சிவனடியார்கள் 357
சிவனடியாரை 163
சிவனடிக்கன்பு செய்குவர் 91
சீவன் சிவனென்று 145
சிவாயநமவென்று 175
சிறப்புக்குறைவிடமே 285
சிறப்புஞ் செல்வமும் 107
சினத்தைக் கொல்லுவோம் 158
சீரார் மேனியுடையாய் 158
சீருந்துணையில்லைச் 155
சீவன் சிவனெனல் 28
சீவன் சிவனென்று 152
சுகதுக்கம் 223
சுந்தரற்கு 364
சுந்தரர்க்குப் பெண் 370
சுவாமி 242
சுழுமுனைக்குள் 38
சூதான வெளியில் 476
சூலபாணியைத் 110
சூலப்படையாய் 443
செந்நெல்லும் கன்னலும் 823
செப்புந் தரமோ 170
செல்வக் குருநாதா 394
செல்வச் சிவதொண்டன் 283
செல்வச் செருக்கினுல் 294
செல்வர்க்கழகு 419
செழுமலர்த் திருவடி 313
சென்றன சென்றன 78

சொல் போலே 85
சொல்ல முடியாத தீர்ட்பு 311
சொல்ல முடியாத பொருள் 135
சொல்லாலே வாய்த்த 65
சொல்லாலே வருங் 44
சொல்லிற் கலந்த 170
சொல்லு சிவமே 231
சொல்லுப் பொரு 252
சோதிப்பழம் 438
சோமசுந்தரன் 158

த

தக்கன் வேள்வி 364
தண்ணீர்க் கடவுள் 324
தண்ணீரா குளிருமோ 327
தத்தாதித்தோம் 156
தத்துபரி 341
தத்துவந்தொண்ணூற்றுரு 474
தத்துவம் ஆறுறுப 133
தத்துவமெல்லாம் 329
தத்துவம் யாவுஞ் சடமென 217
தத்துவம்யாவுஞ் சடமென்று 151
தந்தைதாய் மைந்தர் 403
தயாநிதியே 281
தனக்குத்தானிகரான 111
தன்னை யறிந்தால் 32
தன்னை அறிந்துவிட்டால் 68
தன்னைத் தன்னுல் 18
தன்னை மறந்தருளில் 209
தன்னை யறிந்தோர்க்குத் 127
தன்னைப்பாரில்லாத 114
தாயினுமன்பு 280
தாரகத்தனி 384
தானந்தவமிரண்டுந்தா 331
தானந்தவமிரண்டுஞ் சம் 166
தானுன சற்குருவை 386
தானுன தன்மை 166
திக்குத் திகாந்தமெல்லாம் 7
திக்குத் திகாந்தமும் 149
திங்களும் கங்கையும் 124
திங்கள் தங்கிய 456
தித்திக்கும் அமுதே 453
தித்திக்கும் ஒரு 9
திருநீறும் சந்தன 82
திருநீறும் ஐந்தெழுத்தும் 446
துள்ளித்திரியும் 381
நூங்காமல் தூங்கும் 372
தெய்வமே யர்னென 112
தெய்வம் எல்லோர் 25
தெளியுமே நின் சிந்தை 282
தெளிய வழிகாட்டும் 387
தேகம் நீயல்ல வென்றுன் 3
தேகம் நீயல்ல வென்றதிட 424
தேகமே மெய்யென்று 403
தேங்காயிலிளநீர் சேர்ந்திடும் 382
தேங்காயிளநீர் 288
தேசகாலம் யாவையும் 216
தேசம் புகழுந் திரு 202
தேடாமல் தேடென்றுன் 8
தேடி நான் காணும் 476
தேடி நின்திருவடியே 153
தேடுவார் மாட்டுச் 27
தேரடியிற் சென்று 284
தேர்முட்டிப்படி 272
தேவர் சிறை 241
தேனுந்து கொன்றை 136
தேனுந்து சோலை 451
தேனுந்து முக்கனி 478
தேனும் பாலினுமினிய 162
தேன் சொரியுஞ் 145
தையலார் மையலிற் 294
தொண்டர் நாங்களே 14
தொந்தோமென் 137

ந

நஞ்சை 508
நமனு 126
நம்பன் 490

நம்பிக்கை 267
நம்பினபேர் 99
நயப்பார் 265
நரியை 57
நலமறிய 285
நல்ல மருந்தொரு 315
நல்லமலரெடுத்து 283
நல்லூரான் கிருபை நாம் 296
நல்லூரான் கிருபை வேண்டும் 251
நல்லூரான் திருப்பாதம் 311
நல்லூரான் திருவடியைப் பாடு 313
நல்லூரான் திருவடியை நான் 240
நல்லூரான் வீதியிற் போய் 269
நல்லூரைக் கும்பிட்டு 258
நல்லூர் ஆட்டக்காரா 253
நல்லூர்வாசனே 243
நல்லைப்பதிக்கு 237
நல்லைப்பதிக்கரசே 289
நல்லையில் வாசா 247
நல்லோரின் 85
நன்மையுந் தீமையும் நாடா 342
நன்மையுந் தீமையும் நங் 34
நன்றியை 210
நன்றென்றுத் தீதெனத் 373
நாடியோ 477
நாடுவார் 386
நாமஞ் 157
நாமறியோமெனச் சொலு 130
நாமறியோமெனும் 176
நாமறியோமென்று 274
நாமும் நாமாகி 127
நாமே நாமென்றுரை 12
நாமே நாமென்று 269
நாவலரும் 145
நாவுக் 144
நாற்றிசையுஞ் 385
நான்படும் 145
நானுரென் 406
நில்லன்பொடு நினைந்து 369
நில்லாத செல்வத்தை 295
நிற்பனவும் 498
நீங்காத 372
நீதிநெறியை 267
நீயே நான் என்று நேர் 227
நீயே நான் என்று 286
நீயே நான் என்னும் 395
நீராஞய நிலஞஞய் 410
நீலகண்டனை 112
நீளநினையும் 367
நீறணிநின்மலா 87
நீறணிந்த 493
நீரூர் மேனி 454
நீறுபூசிய 106
நெடிய மாலயன் 157

ப

பகருவார் நெஞ்சம் 168
பக்தர்கள் எல்லாம் 931
பச்சைப்பசுங்கிளியே 277
பச்சைமாமயிலொடு 459
பஞ்சம் படைவந்தாலும் 242
பஞ்சம் படைவந்த 308
பணிபவர் நெஞ்சினனே 466
பண்ணவன் 491
பண்டு செய்வினை 14
பண்டுமின்று 128
பதமலர் போற்று 281
பத்தி செய்யும் 496

பத்தியுடன் 273
பத்துப்பாட்டும் 153
பத்தும் படிப்போர்கள் 227
பந்தம் செய்பாசமே 342
பந்திபந்தியாயிருந்து 277
பயமுண்டோ 222
பல்லோர் புகழ் 252
பல்வினை போக்கி 390
பவம் நீக்கும் 284
பவவருடத்துப் 357
பவவருடம் மார்கழி 388
பழம்பாக்கு 297
பற்றற்றூர் பற்றும் 226
பாடல் பத்தும் படிப் 140
பாதாரவிந்தத்தை 374
பாதிச்சாமத்தின் 184
பாதிமதிகுடிப் பவ 422
பாராயோ வென்னை 285
பாரையனே கடைக்கண் 154
பாரொடு விண்ணுய் 495
பார் பார் பரமனை 311
பாலன் மார்க்கண்டன் 475
பாவம்போம் பொல்லாப் 255
பாவலர் நாவலர் 164
பாவனையொன்று 188
பாழ்செயும் மாயா 91
பித்தனென்று பலர் 211
பித்தனென்றவர்க 108
பித்தனெனப் பலபேரும் 273
பிறப்பிறப்பில்லா.....யெங் 322
பிறவார்கள் இறவார்கள் 415

பு

புகல்வதற்கொன்று 445
புலன்வழிச் செல்லும் 475
பள்ளிக்கலாப 282
புறத்திலலியாதே 223
புன்னகையாலே 359
புல் நுனிமேல் நீர் போல் 256
புன்னெறி 398

பூ

பூக்கை கொண்டு 444
பூதங்கள் ஐந்தாகி 413
பூதங்கள் ஐந்தான 139
பூப்பொலியுங் 450

பெ

பெரிதாளுய் 410
பெரியதிற் பெரியது 318
பெருமான் காண் 489
பெருமை சிறுமை 323

பே

பேசரிய சீர்சனக 332
பேசாத மந்திரத்தின் 396
பொங்கிவரும் அமிர் 310
பொங்கிவரும் காமமே 309
பொய்யை மெய்யென 461
பொல்லாப்புழுமலியுங் 295
பொழில் வாழும் 108
பொறியைந்தும் வென்ற 102
பொறிவழிபோம் 214
பொறி வழிபோய் 297
பொறிவழிமனத்தை 218
பொறிவழியே 46
பொறிவழியே போய் 402
பொறிவழியே போயலை 67
பொறிவாயிலைந்த 357
பொறிவென்றூர் 353
பொறுமையைப்புற 42
பொன்போலும் திருமேனி 486
பொன்போலும் மேனி 114
பொன்னுனுய் மனி 409

பொன்னாசை பெண்ணா 69
பொன்னாருடலிற் 442
பொன்னும் பொருளும் 326
பொன்னொத்த 467

போ

போக்குவரவில்லாத 45
போதுமளவும் 390
போமே போம்வினை 269
போற்றியொருபொல் 230

ம

மங்களகரமாக 310
மங்களகரமான 1 9
மங்கையராடவர் 288
மங்கையொரு 128
மடைதிறந்தாற் 310
மன்னனாய் விண் 411
மண்ணினாசை 56
மண்ணையும் விண் 173
மண்ணொடு விண் 323
மண்தீகால் 484
மண்புகுந்த 113
மதிக்கு மதீய் 221
மதிதவழ் சடையாய் 441
மத்தமாமலர் 109
மந்திரமாய்த்தந் 414
மந்திரமுந்தந்திரமும் 485
மரகதமயின் 236
மரத்திலேமல 401
மருவாருந் 417
மழையென்னும் 325
மறவாமல் போற்று 654
மனத்தில் வஞ்சகம் 109
மனத்துக்கண் 358
மனத்துயரம் மாற்ற 266
மனவாசகங் கடந்த 226
மன்னவனாகி 149
மன்னுதவ 326
மன்றுள்ளேயாடு 343

மா

மாசற்ற 328
மாண்டு போனவர் 109
மாண்புடனே 269
மாதம் மும்முறை 457
மாமதுரைத் 361
மாமயில் 254
மாமனாய் வந்து 362
மாயப்பிணியகல 291
மாரியுலகை 325
மாலயனும் 406
மாறிப்பொறிவழி 272
மாற்றறியாத 367
மானும் மழுவுங் 147

மு

முச்சந்திக்குப்பை 12
முத்திக்கு வழியை 95
முத்திக்கு வித்தான 115
முருகா நீ வா 259
முழுது முண்மையென 131
முழுது முண்மையென்ற 227
முனியே 229
மூண்ட வல்வினை 183
மூன்று மொன்றாய் 20
மெய்யரும்பி விதிர் 462

வ

வகை 276
வஞ்சியர் 307
வடிவுசேர் 491
வண்டார்க்குங் 345

ANNE'S R. C. SCHOOL MANIPAY

வந்திப்பார்	103	விருப்பும் வெறுப்பும்	218
வந்துண்ணடி	440	விருப்பு வெறுப்பிலை	176
வருகமுருக	242	விரைமலரை	265
வலிப்பட்டமான்	395	விரைவாய்நடந்து	279
வல்லவன் செல்	316	விளையுமிச்சை	258
வழிகள் இரண்டை	161	வீடுசேர்வதில்	107
வழுத்துதற்கு ஒன்று	447	வீதிக்குவீதி	246
வறுமைப்பிணி	244	வீம்பிடும்பை	363
வாக்கால்	178	வீரமாமயில்	238
வாசமலரடி	105	வெய்யபுவிப்பார்வை	76
வாசம் பொருந்திய	245	வெளியிலே யொளி	58
வாசியோகந்தேர்	5	வெள் விடைமேல்	138
வாணிச்சிக்காக	362	வெள்ளம் பள்	380
வார்தம் பேசி	63	வேண்டில் வேண்டாமை	55
வாயாரப்	147	வேண்டுதல் வேண்ட	328
வாழ்க சிவனடி	390	வேண்டுவார் வினை	107
வாழ்வும் அருளை	324	வேதகீதத்தன்	457
விஞ்சு பிறப்	77	வேதசாத்திரம்	35
விடத்தை	126	வேதமறியாத வொரு	137
விடையேறு	423	வேதம் வகுத்தானை	424
விண்ணணம்	70	வேதாந்த சித்தாந்தம் வேரும்	16
வித்தார விடையேறி	156	வேலனைக் கொண்டா	250
வியக்கவொன்று	190	வேலைத்தூக்கி	248
விரிந்தவறிவுடைய	325	வேள்படச் செய்த	111
விரும்புவார்	465	வேரும் உடலும்	359

ST. ANNE'S R. C. SCHOOL
MANIPAY

ANNE'S R. C. SCHOOL
MANIP-Y

ST. ANNE'S R. C. SCHOOL
MANIPAY